இந்திய அரசாங்கமும் அரசியலும்
(கி.பி. 1740–1947)

(முதற் பாகம்-கி.பி. 1740–1857)

(மேற்பட்டப்படிப்பிற்குரியது)

இல. தியாகராசன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—665

இந்திய அரசாங்கமும் அரசியலும்
(கி.பி. 1740–1947)

(முதற் பாகம்-கி.பி. 1740–1857)

(மேற்பட்டப்படிப்பிற்குரியது)

[திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது]

ஆசிரியர்

இல. தியாகராசன், எம்.ஏ.,
துணைப்பேராசிரியர், அரசியல் துறை,
I.A.S., I.P.S. போன்ற அனைத்திந்தியப் பணித்துறைகளுக்கான
முன் தேர்வுப் பயிற்சி நிலையம், சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — December, 1975

T.N.T.B.S. (C.P.) No. 665

© Government of Tamilnadu

GOVERNMENT AND POLITICS IN INDIA 1740 - 1947 (Part I, 1740 - 1857)

L. THIAGARAJAN

Price Rs. 15-25

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by
MEKALA ACHAGAM
13-B, Kandappa Gramani Street
Madras-600 007

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்விமொழியாக ஆக்கிப் பதினைந் தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய் துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப் பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும், சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'இந்திய அரசாங்கமும் அரசியலும்'** *கி.பி. 1740 – 1947* (முதற்பாகம்) என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **665**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **700** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும், கலையியற் பாடங் களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயிலவேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ் எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பக்கம்

பிரிவு 1—வரலாற்றுப் பின்னணி

1. வணிகத்துடன் அரசியலை உள்ளடக்கி இந்தியா விற்கு வந்த அந்நியர்கள் ... 1

2. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி (1600–1765) ... 38

3. பதினேழு, பதினெட்டாம் நூற்றுண்டுகளில் ஆங்கிலேயர் பெற்ற சலுகைகளும் இந்திய அரசியல் நிலவரமும் ... 75

4. பதினெட்டாம் நூற்றுண்டில் அமைந்திருந்த கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களின் அரசாங் கமும் ஆட்சியும் ... 96

பிரிவு 2—கம்பெனி ஆட்சியின் தோற்றம், அதன் அரசியல், இறைமை, ஆதிக்கம் ஆகியவற்றின் வளர்ச்சி

5. அரியாசனப் போர்களும் ஆங்கிலேயரின் ஆட்சிக் கான அடித்தளமும் ... 124

6. இராபர்ட் கிளைவ் செய்த ஆரம்பகால ஆட்சிச் சீர்திருத்தங்கள் ... 155

7. இராபர்ட் கிளைவின் இரட்டை அரசாங்க முறை ... 170

8. கிழக்கிந்தியக் கம்பெனியின் இறைமை, அரசியல் ஆதிக்கம் ஆகியவற்றின் வளர்ச்சி (1772–1857) ... 196

பக்கம்

பிரிவு 3—ஒழுங்குமுறைச் சட்டமும் வாரன் ஹேஸ்டிங்ஸின் அரசாங்கமும்

9. ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்டதற்கான காரணங்களும் சூழ்நிலைகளும் ... 266

10. ஒழுங்குமுறைச் சட்டத்தின் முக்கியக் கூறுகளும், அது நிறுவிய அரசாங்க ஆட்சிமுறையும் ... 293

11. ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் வெளிப்பட்ட தீமைகளும், அரசாங்கக் குறைபாடுகளும், பிற செய்திகளும் ... 313

12. ஒழுங்குமுறைச் சட்டத்திற்கான 1781ஆம் ஆண்டின் திருத்தச் சட்டம்-வங்கத்து நீதித் துறைச் சட்டம் ... 350

பிரிவு 4—கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின்மீது பிரிட்டிஷ் பாராளுமன்றம் படிப்படியாகச் செலுத்திய கட்டுப்பாடு

13. டுண்டாஸ், ஃபாக்ஸ் ஆகியோரின் இந்திய மசோதாக்கள் ... 358

14. பிட் இந்தியச் சட்டத்தின் கூறுகளும் அரசாங்க ஏற்பாடுகளும் ... 371

15. பிட் இந்தியச் சட்டத்தைப்பற்றிய ஒரு திறனாய்வும், அதன் செயற்பாட்டின்மூலம் வெளிப்பட்ட அரசாங்கச் செய்திகளும், முக்கியத்துவமும் ... 388

16. 1786 முதல் 1813 வரை இயற்றப்பட்ட சட்டங்களும் கம்பெனியின் இந்திய அரசாங்க, ஆட்சி அமைப்புகளில் செய்யப்பட்ட மாற்றங்களும் ... 415

பிரிவு 5—சாசனச் சட்டங்களும் கம்பெனி அரசாங்க முடிவின் துவக்கமும்

17. 1813ஆம் ஆண்டுச் சாசனச் சட்டமும் இந்திய அரசாங்கமும் ... 432

18. 1833ஆம் ஆண்டின் சாசனச் சட்டமும் அரசாங்க அதிகாரக் குவிப்பும் ... 449

19. 1853ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட சாசனச் சட்டமும் அரசாங்கச் செயற்பாடும் ... 474

பக்கம்

பிரிவு 6—கம்பெனியின் பிரிட்டிஷ் இந்திய அரசியல் முடிவும் அதிகார மாற்றமும்

20. கிழக்கிந்தியக் கம்பெனியின் நூற்றாண்டுக்கால அரசியல், மற்றும் ஆட்சி ஆகியவற்றின் முடிவும் மதிப்பீடும் ... 492

21. அரசாங்கப் பொறுப்பு கம்பெனியிடமிருந்து அரச நிறுவனத்திற்கு மாற்றப்படுதல்(1858ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டமும் அரசியாரின் பிரகடனமும்) ... 548

22. கம்பெனியின் இந்திய அரசாங்கம், ஆட்சிப்பொறி ஆகியவை 1857-ல் பெற்றிருந்த முடிவு நிலையும் வளர்ச்சித் தன்மையும் ... 574

23. இந்தியச் சுதேசி அரசுகளுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இடையே பேணப்பட்ட உறவு நிலைகள்-பொதுப்படையான கண்ணோட்டம் ... 587

24. அரசு பணித்துறைகள், செய்தித்தாள்கள் ஆகியவைபற்றிய கம்பெனி அரசாங்கத்தின் கொள்கை (சுருக்கக் குறிப்பு) ... 604

மேற்கோள் நூற்பட்டியல் ... 614

கலைச்சொற்கள் ... 616

பிரிவு 1

வரலாற்றுப் பின்னணி

1. வணிகத்துடன் அரசியலை உள்ளடக்கி இந்தியாவிற்கு வந்த அந்நியர்கள்

போர்த்துக்கீசியரின் இந்திய அரசியல் ஈடுபாடுகள், அரசாங்கம், ஆட்சி முறை, அவற்றின் முடிவு

அகிலம் போற்றும் சிறப்புகள் பலவற்றைக் கொண்டுள்ள நாடுகளுள் இந்திய நாடும் ஒன்றாகும். இந்நாட்டின் அரசுகள் தொன்மைக் காலம் முதற்கொண்டே மேனாடுகள் பலவற்றுடன் வர்த்தக, கலாசார மற்றும் அரசியல் உறவுகளைப் போற்றி வந்துள்ளன. சுமார் கி.பி. 12ஆம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரையிலான ஐந்நூறு ஆண்டுகளைத் தழுவிய இடைக் காலத்தில் இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்குமிடையே வர்த்தக உறவுகள் வலுப்பெற்றவையாய் இருந்தன. இந்தியப் பொருள்களுக்கு, குறிப்பாக அசைவ உணவுகளுக்குச் சுவையூட்டும் ஏலம், மிளகு, மிளகாய், இலவங்கம் போன்ற வாசனைப் பொருள்களுக்கு ஐரோப்பியச் சந்தைகளில் தேவை மிக அதிகமாக இருந்தது. இப் பொருள்களின் வர்த்தகத்தால் மிகுந்த வருவாயையும் இலாபத்தையும் வர்த்தகர்கள் பெற்றனர். ஆனால், இலாபகர மிக்கதாய் இருந்த வர்த்தகத்தைப் பெருஞ்செலவினங்களுடன் ஐரோப்பியர்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. 15ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கும் மேலை நாடுகளுக்குமிடையே வணிகக் காரியங்கள் நடைபெற மூன்று நீர்வழி அல்லது கடல் வழி வணிக மார்க்கங்கள் இருந்தன. அவை எகிப்தின் வழியாக ஐரோப்பாவை அடையும் மார்க்கம், ஆக்ஸஸ் மற்றும் காஸ்பியன், கருங்கடல் போன்றவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வடக்குவழி வணிக மார்க்கம், சிரியாவிலிருந்து மத்திய தரைக்

கடல் மூலம் ஐரோப்பாவை அடைந்த இடைப்பட்ட மார்க்கம் என்பவையாகும். இம்மூன்று வியாபார மார்க்கங்களும் துருக்கிப் பேரரசின் கட்டுப்பாட்டிற்கும், அதன் தீர்வை விதிப்புகளுக்கும் உட்பட்டவையாய் இருந்தன. எனவே, துருக்கியர்கள் விதித்த தீர்வைகளைச் செலுத்தியவண்ணமே மேற்கூறிய மார்க்கங்களின் மூலம் வியாபாரப் பொருள்களைச் சம்பந்தப்பட்ட வணிகர்கள் யாவரும் எடுத்துச் செல்லவேண்டியிருந்தது. தமது வர்த்தகத்தின் மீது சுமத்தப்பட்ட தீர்வைகள் பல முனைகளில் பளுவானவையாய் இருந்ததோடன்றி, ஐரோப்பியர்களுக்கும் துருக்கியர்களுக்கும் இடையே பகைமை உறவும் இன்னல் மிக்கதாய் இருந்தது. எனவே, ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்குமிடையிலான புதியதும், நேரடியானதுமான நீர்வழி மார்க்கத்தைக் கண்டுபிடிக்கும் தேவையும் முக்கியத்துவமும் யாவராலும் உணரப்பட்டன; முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. இம் முயற்சியில் ஈடுபட்ட ஐரோப்பியர்களில் ஸ்பானியரும், போர்த்துக்கீசியரும் முதலிடத்தைப் பெற்றனர். இவர்களுள் போர்த்துக்கீசியரே முதல் வெற்றியைக் கண்டனர். ஆப்பிரிக்கக் கடற்கரைப் பகுதியில் கால்லூன்றி, பின்னர் 1471-ல் பூமத்தியரேகையைக் கடந்தனர் போர்த்துக்கீசியர். இதற்குத் தேவையான ஆதரவையும் உதவியையும் இளவரசர் ஹென்ரி என்பவர் வழங்கினார். பார்த்தலோமிய டயஸ் என்பவர் நல்வழியைக் காட்டினார். இவைகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு, 1498ஆம் ஆண்டு மேத் திங்கள், பதினேழாம் நாளன்று இந்தியாவிற்கான புதியதொரு நீர்வழி மார்க்கத்தை வாஸ்கோடகாமா என்பவர் கண்டுபிடித்து முழுமையான வெற்றியை நிலைநாட்டினார்.

நன்னம்பிக்கை முனையின் வழியாக இந்தியாவிற்கு வந்து சேரும் வகையில் வாஸ்கோடகாமாவினால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய மார்க்கம் ஐரோப்பிய வல்லரசுகளை இந் நாட்டில் வணிகப் போட்டிகளை மேற்கொள்ளும்படி செய்தது. வணிகத்தின் காரணமாக இந்தியாவிற்கு வந்து, அதன் பயனாய் அரசியல் ஆதிக்கத்தைச் செலுத்தி இங்குத் தமது ஆட்சியை ஐரோப்பியர்கள் நிலைநிறுத்துவதற்கும் மூலகாரணமாய் அமைந்தது இப் புதிய நீர்வழி மார்க்கம் என்றால் அது மிகையாகாது. போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் என்று பலதரப்பட்ட வணிகர்கள், வியாபார நோக்கத்துடன் வர்த்தக நிலையங்களை இந்தியாவில் நிறுவினர். இவ் வணிக நிறுவனங்கள் பின்னர் அரசியல் மற்றும் ஆட்சி அதிகாரங்களின் இருப்பிடமாகவும், கிளைப்பிடமாகவும் உருமாற்றத்தைப் பெற்றன. ஆரம்ப காலத்தில் மேற்சொல்லப்பட்ட நான்கு வகை ஐரோப்பிய

வணிகர்களிடையே வியாபாரப் போட்டிகளும், வர்த்தகப் பூசல்களும் மலிந்திருந்தன. இறுதியில், ஆங்கிலேயரைத் தவிர மற்றவர்கள் தமது அரசியல் ஆதிக்கத்தை இழக்கவேண்டியிருந்தது. போர்த்துக்கீசியர்கள் டச்சுக்காரர்களாலும், டச்சுக்காரர்கள் பிரெஞ்சுக்காரர்களாலும், பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களாலும் இந்தியாவில் முறியடிக்கப்பட்ட அரசியல் கதையே மிகச் சுவையானது. கோவா, டாமன், டையூ போன்ற இடங்களில் போர்த்துக்கீசியரும், பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனும் போன்ற இடங்களில் பிரெஞ்சுக்காரர்களும் தமது செல்வாக்கைப் பெற்றிருந்தனர். ஆனால், ஆங்கிலேயர்களோ 1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள், பதினைந்தாம் நாளன்று இந் நாட்டைவிட்டுச் செல்லும்வரை இந்தியா முழுவதையும் ஆண்டனர். எனவே, இந்தியாவிற்கு ஐரோப்பியர்கள் வந்ததும், அவர்களிடையே நிலவிய போட்டி பூசல்களும், இறுதியாகப் பிரெஞ்சுக்காரர்களால் அமைக்க முடியாத ஒரு பேரரசை ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் அமைக்க முடிந்ததும் அரசியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளாகும். அச் செய்திகளைப்பற்றி அறிந்துகொள்ளும் வகையில், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினரைத் தவிர்த்துப் பிறருடைய இந்திய ஈடுபாடுகளை இவ் வதிகாரம் விளக்கும்.

போர்த்துக்கீசியரின் அரசியல் ஈடுபாடுகளும் ஆட்சி மறைவும்

வாஸ்கோடகாமாவினுல் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வர்த்தக மார்க்கம் ஐரோப்பிய வரலாற்றின்மீது உறுதியானதும் உடனடியானதுமான விளைவை ஏற்படுத்தியது. இதன் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதும்பொழுது, 'இந்தியாவுக்குச் செல்வதற்கெனக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கடல்மார்க்கம் பண்பாட்டு உலகத்தின் மீது ஏற்படுத்திய விளைவுகளைப்போல் வேறெந்தச் செயலும் இடைக்கால வரலாற்றில் ஏற்படுத்தி இருக்கவில்லை,'[1] என்று சர் டெனிஸன் ராஸ் எனும் அறிஞர் குறிப்பிடுகின்றார். 'இந்தியாவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையேயான உறவுகளில் புதியதொரு அத்தியாயத்தை ஆரம்பிக்கும் வகையில் வாஸ்கோடகாமாவின் கடல் மார்க்கம் அமைந்தது. அக் கடல்மார்க்கம் ஐரோப்பியர்களை முதலில் வணிகர்களாகவும், அடுத்துக் குடியேற்றவாதிகளாகவும், பின்னர் வல்லரசு ஏகாதிபத்தியவாதிகளாகவும் இந்திய மண்ணில் காலூன்றச் செய்தது,' என்று டாக்டர் ஈஸ்வரி பிரசாதும் குறிப்பிடுகின்றார். முன்னரே கூறியது போன்று இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களுள் ஆரம்பத்தில் வர்த்தக

1 Cambridge History of India, Vol V, p.p. 6-8.

நிலையங்களை ஏற்படுத்திய பின்னர், தமது வல்லாட்சியை இங்கு வேரூன்றச் செய்தும், அதற்கு வழியைக் காட்டியவர்களுள் போர்த்துக்கீசியர்களே முதன்மையானவர்களாவர். அவர்கள் கடலாதிக்கத்தை நூறு ஆண்டுக்காலம் பெற்றிருந்து இந்திய நாட்டில் திறமையுடனும் வலிமையுடனும் வணிகம் மற்றும் அரசியல் ஈடுபாடுகளைக் கொண்டிருந்தனர். இந்நிலை போர்ச்சுகல், ஸ்பெயின் நாட்டோடு இணைக்கப்பட்ட 1580ஆம் ஆண்டுவரை இருந்தது. அதன் பின்னர் போர்ச்சுகல் தன்னுடைய கிழக் கிந்தியப் பேரரசு தன்மையைப் படிப்படியாக இழக்கலாயிற்று. நமது நாட்டில் போர்த்துக்கீசியரின் ஈடுபாடுகள் 1961ஆம் ஆண்டு வரை இருந்து பின்னர் அவை ஒழிக்கப்பட்டன. போர்த்துக் கீசியர் இந்தியாவில் கொண்டிருந்த ஈடுபாடுகளைப் பற்றிய செய்திகள் பின்வருமாறு:

பார்த்தலோமிய டயஸ் என்பவர் காட்டியிருந்த வழியையும், தமக்குப் பிறர் நல்கிய உதவிகளையும் பயன்படுத்திக்கொண்டு, நன்னம்பிக்கை முனையைத் (Cape of the good hope) தாண்டி, இந்தியாவின் மேற்குக் கடற்கரையோரம், கள்ளிக்கோட்டைக்கு வாஸ்கோடகாமா வந்து சேர்ந்தபொழுது, இங்கு நிலவிய அரசியல் சூழ்நிலை போர்த்துக்கீசியருக்குச் சாதகம் பயப்பதாகவே இருந்தது. வாஸ்கோடகாமா காலடி வைத்த கள்ளிக்கோட்டை அப்பொழுது ஜமோரின் (Zamorin) எனும் பரம்பரை உரிமைப் பெயரைக்கொண்டிருந்த இந்துமத அரசரால் ஆளப்பட்டு வந்தது. கள்ளிக்கோட்டையைத் தவிரக் கொச்சி, கண்ணனூர், விசயநகரம் ஆகிய இடங்களும் இந்து மதத்தைச் சேர்ந்த அரசர்களால் ஆளப் பட்டு வந்தன. டில்லி, பீரார், பீடார், குஜராத், பீஜப்பூர், அகமதுநகர் ஆகிய இடங்கள் முஸ்லிம் அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இவற்றுள் இந்து மன்னர்களின் ஆளுகைக் குட்பட்டிருந்த கேரளக் கடற்கரைப் பிரதேசத்தில் வாஸ்கோட காமா காலடிவைத்ததால், அப் பிரதேச மன்னர்களின் ஆதரவு எடுத்த எடுப்பிலேயே போர்த்துக்கீசியருக்குக் கிட்டிற்று. மேலும், அதுகாறும் கடல் மார்க்கம் மூலம் இந்திய நாட்டின் வர்த்தக முற்றுரிமையை (Trade monopoly) முஸ்லிம் வர்த்தகர்களே பெற்றிருந்தனர். வாஸ்கோடகாமாவினால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வியாபார மார்க்கமும் (Trade Route), அவர் இந்து அரசர் களிடமிருந்து பெற்ற ஆதரவும் அம் முற்றுரிமைக்குச் சவால் விடுவதாய் அமைந்தன.

வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டையை அடைந்ததும் அதன் ஆட்சியாளரான ஜமோரினிடமிருந்து நல்லதொரு வரவேற்பைப் பெற்றார். பிற இந்து அரசர்களுடனும் சுமுகமான

வர்த்தக உறவை மேற்கொண்டார். எனினும் அவரது துணிவு களுக்கு அரேபியர்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். எனவே, 1499-ல் வாஸ்கோடகாமா லிஸ்பனுக்குத் திரும்பிச் சென்றார். இதனால், தாம் கண்டுபிடித்த புதிய கடல் மார்க்கத்தின் பயனை அனுபவிப்பதில் போர்த்துக்கீசியர் காலத்தை வீணாக்கி விடவில்லை. மாறாக, அவர்கள் தமது வியாபார முயற்சிகளையும், வணிகப் படையெழுச்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு கள்ளிக் கோட்டை, கொச்சி, கோவா, டாமன், டையூ ஆகிய இடங்களில் தம் வர்த்தகக் கம்பெனிகளையும், வணிக நிலையங்களையும் ஸ்தாபித்தனர். மேலும் இலங்கை, செங்கடலின் நுழைவாய்க்கு அருகில் உள்ள ஸ்காட்ரா தீவு (Scotra Island), பாரசீக வளைகுடா விலுள்ள ஆர்முஸ் (Ormus) மற்றும் தூரக் கிழக்கில் உள்ள மலாக்கா ஆகிய இடங்களையும் அவர்கள் பிடித்தனர். அரேபியர்கள், துருக்கியர்கள் ஆகியோரிடமிருந்துதான் அவர் களுக்கு எதிர்ப்பு இருந்தது.

அரேபியர்களாலும் துருக்கியர்களாலும் தம்மீது ஏவப் பட்டிருந்த கடும்போட்டியையும் இன்னல்களையும் போர்த்துக் கீசியர் பெற்றிருந்தபோதிலும், அவர்கள் தங்களது நிலையான வணிக நிலையங்களை நிறுவுவதற்குச் சாதகமான சூழ்நிலை நம் நாட்டில் அமைந்திருந்தது. மலையாளக் கடற்கரையோரம் அமைந் திருந்த இந்திய அரசுகள் யாவும் தம்முள் பகைமை கொண்டிருந்த சிற்றரசுகளாக இருந்தன. அவர்களிடையே ஒற்றுமை இல்லை. அந்நியர்களின் வருகையினால் ஏற்பட்ட ஆபத்தை அவற்றின் அரசர்கள் உணரவில்லை. மாறாக, ஒருவர் காலை மற்றவர் வாரிவிடும் வகையில் போட்டியும், பொறாமையும் கொண்டவர் களாய்த் தமக்குத் தாமே அழிவுக்குழியைத் தோண்டிக்கொண்ட நிலையில் இருந்தனர். கொச்சிக்கும் கள்ளிக்கோட்டைக்கும் இடைப் பட்டிருந்த கேரள நாடு தனது மக்களுக்குத் தேவையான வாழ்க்கைப் பொருள்களை உற்பத்தி செய்து விநியோகிக்க முடியாதபடி செழிப்பற்று இருந்தது. எனவே, பற்றாக்குறை நிலவிய காரணத்தால் ஏற்றமிகு வர்த்தகத்தைப் பெரும் இலாபத் துடன் போர்த்துக்கீசியர் மேற்கொள்ள முடிந்தது. உள்நாட்டுப் பூசல்களிலேயே உழன்று கொண்டிருந்த சுதேசி சிற்றரசுகளில் ஒன்றேனும் அந்நியரான போர்த்துக்கீசியரின் வருகையையும், அவர்களுடைய ஸ்தாபனங்களையும் தடுத்து நிறுத்தக்கூடிய வலிமையைக் கொண்டிருக்கவில்லை; அதற்கான முயற்சிகளையும் அவர்கள் முனைப்பாக மேற்கொள்ளவில்லை. இவை யாவற்றையும் விடக் கடலாதிக்கத்தைப் பெற்றிருந்த போர்த்துக்கீசியர் வலிமை

மிக்க போர்க்கப்பல்களையும் பெற்றிருந்தனர். எனவே சுதேசி அரசுகள் ஒருகால் போர்த்துக்கீசியரோடு பொருதிருப்பின், தோல்வியையே கண்டிருக்கும்.

இப்படிப் பல சூழ்நிலைகள் போர்த்துக்கீசியருக்குச் சாதகமாக அமைந்திருந்த காரணத்தினால் அவர்கள் முக்கியமானதும் தெளிவானதுமான மூன்று குறிக்கோள்களுடன் இந்தியாவிற்கு வந்தனர். முதலாவதாக, போர்த்துக்கீசியருக்கென்றும் ஸ்பானி யர்களுக்கென்றும் வர்த்தகம் புரிவதற்கான நாடுகளை வரையறை செய்து போப் ஆண்டவர் கொடுத்திருந்தார். இதன்படி கீழை நாடுகள் போர்த்துக்கீசியருக்கென்று ஒதுக்கப்பட்டன. இவ்வாறு தமக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருந்த இடங்களில் இந்திய நாட்டைப் போர்த்துக்கீசியர் மையக்கேந்திரமாய்க் கொண்டு பொருளீட்டம் செய்யும் குறிக்கோளைக் கொண்டிருந்தனர். இரண்டாவதாக, வர்த்தகம் மட்டமன்றிப் பிறவழிகளின் மூலமும் தங்களது செல்வங்களைப் பெருக்கிக்கொண்டு, இந்தியாவில் தமது பேரரசை நிறுவவேண்டுமென்ற உள்நோக்கத்தைக் கொண்டிருந் தனர். மூன்றாவதாக, அவர்கள் பிரசாரத்தின்மூலமோ, அது பலனளிக்கவில்லையென்றால் கத்தி முனையில் போரிட்டோ இந்திய மக்களைக் கிறித்துவர்களாக (christians) மதமாற்றம் செய்யவேண்டு மென்னும் குறிக்கோளைக் கொண்டிருந்தனர். இம் மூன்று குறிக்கோள்களுக்கிடையிலும் முனைப்பாகக் காணப்படும் முக்கியச் செய்தி ஒன்று உள்ளது. அஃதாவது, மேற்கூறிய குறிக் கோள்களை ஈடேற்றிக்கொள்வதில் அவர்கள் அடைந்த வெற்றி யானது, தம்மைத் தவிர்த்த பிற ஐரோப்பியர்களையும் இந்தியா வைப் பற்றி எண்ணிப் பார்க்கவும், உன்னிப்பாகச் செயல்களை மேற் கொள்ளவும் செய்தது ஆகும். 1740ஆம் ஆண்டில் இந்தியாவில் அமையவிருந்த அரசியல் முக்கியத்துவத்திற்குப் பிரெஞ்சுக்காரர் களுடன் ஆங்கிலேயரும் போட்டி மேற்கொண்டு, இறுதியாக ஆங்கிலேயர் நமது நாட்டில் தமது செல்வாக்கைப் பசுமரத்தாணி போல் பதிய வைத்ததற்குப் போர்த்துக்கீசியரின் குறிக்கோள்கள் ஈடேற்றம் கண்டது பெரிதும் துணைபுரிந்தது. ஏனெனில், போர்த்துக்கீசியர்கள் பதினாறும் நூற்றாண்டில் தமது முயற்சிகளில் தோல்வியைத் தழுவியிருப்பார்களாயின் 1740-ல் இந்திய நாட்டு அரசியல் வரலாற்றில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் நிறுவப்படுவது தாமதப்பட்டிருக்கலாம்; அல்லது அச் செயல் நடைபெற்றிருக்க முடியாததாகி, மராத்தியர்கள் அல்லது சீக்கியர்கள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியிருக்கக் கூடும். எனவேதான் போர்த்துக்

கீசியர் இந்தியாவிற்கு வந்ததில் இருந்த மூன்று குறிக்கோள்கள் அரசியல் ரீதியான முக்கியத்துவம் வாய்ந்தவையாய்க் கருதப் படுகின்றன.

மேற்கண்ட மூன்று குறிக்கோள்களையும் ஈடேற்றிக்கொள்வதில் போர்த்துக்கீசியர் மூன்று காலக் கட்டங்களைத் தாண்டவேண்டி யிருந்தது என்று கூறி அவைகளைப்பற்றிப் பின்வரும் செய்திகளை டாக்டர் ஈஸ்வரி பிரசாத் குறிப்பிடுகின்றார். 'போர்த்துக்கீசியர் கிழக்கத்திய நாடுகளில் அதிகாரச் சக்தியாக உருப்பெற்றதில் மூன்று தெளிவான காலக்கட்டங்கள் காணப்படுகின்றன. கி. பி. 1500 முதல் கி.பி. 1505 வரை, ஆண்டுக்கொருமுறை படைக்கலங் களுடன்கூடிய வியாபாரத் துணிவுகளையும், படையெடுப்புகளையும் அவர்கள் மேற்கொண்டது முதலாவது காலக்கட்டமாகும். கி. பி. 1505 முதல் 1509 வரை இந்தியப் பெருங்கடலின் மீது தமது ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கென அவர்கள் முக்கியமான செயல்களை மேற்கொண்டது இரண்டாவது காலக் கட்டமாகும். கி. பி. 1509-ல் தொடங்கிய பிற்பட்ட காலம், அவர்கள் நிலங்களைப் பிடித்து ஆக்கிரமித்துக் கொள்ளும் வகையில் காரியங்களை மேற்கொண்டது மூன்றும் கட்டமாகும்.'

மேற்சொல்லப்பட்ட மூன்று காலக் கட்டங்களுள் முதலாவது கட்டமான ஐந்து ஆண்டுக் காலத்தில் போர்த்துக்கீசியர் அரேபியர் களுடன் போர்களை மேற்கொண்டனர். அப்போது அரேபியர்கள் கள்ளிக்கோட்டை அரசரைப் போர்த்துக்கீசியருக்கு எதிராகத் தூண்டிவிட்டுத் தமது வர்த்தக முற்றுரிமையையும்,இந்தியப்பெருங் கடல் மீதான ஆதிக்கத்தையும் பாதுகாத்துக் கொள்வதில் முனைந்தனர். இதனால் போர்த்துக்கீசியர் கோட்டை கொத்தளங் களுடன் கூடிய பாதுகாப்பான வணிக நிறுவனங்களை ஸ்தாபித்துக் காக்க வேண்டியிருந்தது. ஆனால், அரேபியர்களும், கள்ளிக் கோட்டை ஜமோரினும் சேர்ந்து உருவாக்கிய எதிர்ப்பைப் போர்த்துக்கீசியர் எளிதாகச் சமாளிக்க முடியவில்லை. எனவே, அவர்கள் இந்தியக் குடிமக்களையும் தமது இராணுவத்துறைகளில் சேர்த்துக்கொண்டு ஐரோப்பியர்களின் கட்டுப்பாட்டின்கீழ் அரேபியர்களும் பிறரும் உருவாக்கிய எதிர்ப்பை முறியடிப் பதற்கான செயல்களை மேற்கொண்டனர். மேலும், சுதேசி அரசர் களிடையே நிலவிய உட்பூசல்களையும் போட்டி பொறாமைகளையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தேவையான சமயங்களிலெல்லாம், தேவையானவர்களைத் தம் பக்கம் இழுத்துக் கொண்டு போர்த்துக்கீசியர் தமது பலத்தைப் பெருக்கிக் கொண்டனர். இதனை ஒரு கொள்கையாகக்கொண்டு, சந்தர்ப்பச்

சூழ்நிலைகளுக்கேற்ப, கட்சி தாவி, அவர்கள் இறுதியாக மொஸாம்பிக் என்னுமிடத்தில் ஒரு கப்பல்தளத்தை (Naval base) ஸ்தாபித்தனர். கி. பி. 1500 முதல் கி. பி. 1505 வரை போர்த்துக்கீசியர் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஓர் அரசருக்கு எதிராக மற்ற அரசர்களை ஊக்குவித்தும், ஆதரித்தும் அவர்களது அரசுரிமைப் போரில் வெற்றி காண உதவிய கொள்கையும், அதன்பயனாக அவர்கள் இந்திய அரசர்களிடமிருந்து பெற்ற பலன்களும், சலுகைகளும், இந்தியக் குடிமக்களையும் நியமித்துக்கொண்டு தமது படைகளைப் பலமுள்ளதாக்கி அவைகளை ஐரோப்பியத் தளபதிகளின் கட்டளைகளின்கீழ்ச் செயல்பட வைத்ததும் ஆகிய செயல்கள் பிற்காலத்தில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினருக்கு இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசை ஸ்தாபிப்பதற்கு வழியைக் காட்டிப் பெருந்துணையைப் புரிந்தன. எனவே, 1740 முதல் 1947 வரை இந்தியாவில் நிலவிய அரசாங்கம் மற்றும் அரசியலுக்கு அடித்தளமாக அமைந்த செயல்கள் பலவற்றுள் போர்த்துக்கீசியர் நம் நாட்டிற்கு வந்து, தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி, பின்னர் பிற ஐரோப்பியர்களின் ஆதிக்கமும் அரசியல் செல்வாக்கும் எளிமையாக உள்ளே நுழைவதற்கு அவர்கள் அறிந்தோ அறியாமலோ உதவியது முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும்.

கி.பி. 1505 ஆம் ஆண்டுவாக்கில் அரேபியர்களை முறியடித்து, மலபார் கடற்கரைப் பிரதேசங்களைப் போர்த்துக்கீசியர் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர். மேலும், அவர்கள் இந்தியப் பெருங்கடலின்மீது ஆதிக்கம் கொண்டிருந்தவர்களாக உருப்பெற்றனர். எனினும், அவர்கள் தொடர்ந்து பாதுகாவலான வணிகத்தைக் கீழைநாடுகளுடன், குறிப்பாக இந்தியாவுடன் சரியாக மேற்கொள்ள முடியவில்லை. ஏனெனில், முஸ்லிம் வணிகர்கள் இந்தியப் பெருங்கடலின்மீது தமது கட்டுப்பாட்டை இழந்திருந்தபோதிலும், அவர்கள் செங்கடல் துறைமுகங்களிலும், மொஸாம்பிக் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரையிலும் தமது ஆதிக்கத்தைக் கொண்டிருந்தனர். எனவே, போர்த்துக்கீசிய மன்னர் இமானுவேல் போர்த்துக்கீசிய வணிகர்களின் ஸ்தாபனங்கள் ஸ்திரத் தன்மையைப்பெற்றுச் சட்ட ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டுச் செயல்படும் வகையில் தனது பிரதிநிதி ஒருவரைக் கொண்டிருக்க வேண்டுமென்றும், அவருடைய செயல்கள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் தமது இந்திய அக்கறைகளை வலுவுள்ளனவாக்க முடியுமென்றும் எண்ணினர். இதன் பயனாகப் போர்த்துக்கீசியரின் அரசியலும் ஆட்சி அதிகாரமும் விரிவடையுமென்றும் அவர் எண்ணினர். அதற்கான காரியங்களையும்

மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து போர்த்துக்கீசியரின் குறிக்கோள்கள் நிறைவேறியதற்கான இரண்டாவது காலக் கட்டம் ஆரம்பமாயிற்று.

எனவே, தமது குறிக்கோள்களை நிறைவேற்றும் முயற்சிகளில் இந்தியாவில் போர்த்துக்கீசிய வைஸ்ராய்களை நியமித்தது இரண்டாவது காலக் கட்டத்தைக் குறிக்கும். இக் காலக் கட்டத்தில் தான் போர்த்துக்கீசியரின் அதிகாரமும் ஆட்சிச் செல்வாக்கும் இந்தியாவில் பரவத்தொடங்கியது. மன்னர் இமானுவேலின் கொள்கையின்படி டி அல்மெய்டா (De Almeida) என்பவர் இந்தியாவில் போர்த்துக்கீசியரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த பகுதிகளின் வைஸ்ராயாக 1505 ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்டார். இவர் ஐந்தாண்டுக் காலம் அப் பதவியை வகித்தார். இவரது ஆட்சிக் காலத்தில் அரேபியர்களின் எதிர்ப்பு முற்றிலும் முறியடிக்கப்பட்டது. அவர்களுடைய ஆதிக்கமும் இந்தியாவிலிருந்து விரட்டப்பட்டது. அதனால் கேரளக் கடற்கரைப் பிரதேசம் போர்த்துக்கீசியரின் முனைப்பான ஆதிக்கத்திற்குட்பட்டது. எனினும் 'கடலாதிக்கக் கொள்கை ஒன்றே முக்கியமானதாய் மேற்கொள்ளப்படவேண்டும்; தமது ஆதிக்கத்திற்குட்பட்டுள்ள இடங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் மட்டுமே தமது ஆட்சி அதிகாரத்தைச் செம்மையாக்க வேண்டும்; நெடுந்தொலைவில் உள்ள இந்திய நாட்டில் தமது பேரரசு ஒன்றை நிறுவுவதற்கென எடுக்கப்படும் முயற்சிகள் பலனளிக்காது,' என்று டி அல்மெய்டா கூறி, வணிகத்தை மட்டும் போர்த்துக்கீசியர் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினார். இக் கோட்பாட்டின் அடிப்படையில் செயல்களையும் அவர் மேற்கொண்டார். எனினும், அவர் 1509-ல் ஜமோரினோடும், எகிப்தியர்களோடும் போரிட்டு வெற்றி கண்டார். இந்தியாவில் டையூ என்னும் இடம் 1509-ல் போர்த்துக்கீசியரால் கைப்பற்றப்பட்டது. மற்றபடி அல்மெய்டாவின் ஆட்சி, மன்னர் இமானுவேலின் கனவை நனவாக்கவில்லை. எனவே, இமானுவேல் 1509-ல் ஆல்புகர்க் என்பவரைத் தனது அடுத்த வைஸ்ராயாக நியமித்து இந்தியாவிற்கு அனுப்பினார்.

ஆல்புகர்க் (Albuquerque) 1509 முதல் 1515 வரை இங்குப் போர்த்துக்கீசிய ஆளுநராக இருந்தார். இவரது ஆட்சிக்காலத்தில் தான் போர் நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன. இதனால் எஞ்சியிருந்த முஸ்லிம் வர்த்தகர்களின் எதிர்ப்பும் முறியடிக்கப்பட்டு, நம்நாட்டில் போர்த்துக்கீசியரின் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதி விரிவடைந்தது. இவர் 1510-ல் கோவாவைப்

பிடித்து அதனைப் போர்த்துக்கீசியரின் இந்தியப் பகுதிகளின் தலை நகரமாக உருவாக்கினர். அதனால் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பிரதேசங்களைப் போர்த்துக்கீசியர் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர முடிந்தது. மேலும், இவரது ஆட்சிக் காலத்தில் செங்கடல் மற்றும் பாரசீகவளைகுடாவில் முஸ்லிம்கள் பெற்றிருந்த ஆதிக்கம் ஒடுக்கப்பட்டது. 1511-ல் மலாக்கா கைப்பற்றப்பட்டு அங்கு நிலையானதொரு அரசாங்கமும் நிறுவப்பட்டது. இவற்றின் மூலம் போர்த்துக்கீசியரும், அவர்களுக்குப் பிற்பட்டு வந்த பிற ஐரோப்பியர்களும் ஆசியக் கண்டத்தில் தமது ஆதிக்கத்தை விரிவாக்க முடிந்தது. தமது ஆளுகைக்குட்பட்டிருந்த இந்தியப் பிரதேசங்களைப் பொறுத்தவரை ஆல்புகர்க் பின்வரும் நான்கு குறி இலக்குகளைக் கொண்ட கொள்கையைப் பின்பற்றி ஆட்சியை நடத்தினர். இக் கொள்கையின்படி ஆல்புகர்க் போர்த்துக்கீசிய வர்த்தக நடவடிக்கைகளை எவ்விடையூறுமின்றி மேற்கொள்வதற்குத் துணைபுரியும் வகையில் அமைந்திருந்த இடங்களை எவ்வழியிலேனும் பிடித்து அவைகளைத் தமது நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்று விரும்பினர். சில மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அவைகளைக் குடியேற்றப் பிரதேசங்களாக ஆக்கி அங்குப் போர்த்துக்கீசியரும் இந்தியர்களும் கலப்பு மணம் புரிந்து வாழ வேண்டும் என்று எண்ணினர். இதன் மூலம் இந்தியர்களிடையே இரத்த உறவை உருவாக்கி, அவர்களின் எதிர்ப்பை அகற்றித் தமது அரசியல் ஆதிக்கத்தை வேரூன்றச் செய்துவிட முடியும் என்று திடமாய் நம்பினர். ஆனல், இது தோல்வியைத் தழுவிய செயலாகவே அமைந்தது. அடுத்து, போரிட்டுப் பிடிக்க முடியாத அல்லது குடியேற்றப் பிரதேசமாக (Colony) மாற்ற முடியாத இடங்களில் தமது கோட்டைகளைக் கட்டவேண்டுமென்று விரும்பி அதற்கேற்பக் காரியங்களை மேற்கொண்டார். இவ்வாறு கோட்டைகளைக்கூட எழுப்பமுடியாத இடங்களில் சுதேசி அரசர்களைத் தமது செல்வாக்கிற்குள்ளாக்கி, அவர்களைப் போர்த்துக்கீசிய மன்னரின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளச் செய்து, கப்பங்களைச் செலுத்துமாறு செய்யவேண்டுமென்று எண்ணினர். இப்படி வியாபார விருத்தி, ஆட்சி ஆதிக்கம் ஆகிய இரண்டையும் பெறும் வகையில் ஆல்புகர்க் மேற்கொண்ட கொள்கைகள் இறுதியில் வெற்றி பெறவில்லை. அவ் வெற்றிப் பயனைப் பெருமளவில் சுவைக்கும் பேறு பதினெட்டு, பத்தொன்பது ஆகிய நூற்றுண்டுகளில் ஆங்கிலேயர்களுக்குத்தான் கிட்டியது. எனினும், தமது ஆட்சி வரம்பிற்குட்பட்டிருந்த இந்தியப் பிரதேசங்களில் ஆல்புகர்க் நல்லதொரு நிர்வாகத்தை நிறுவியது மட்டுமின்றி, இந்து முஸ்லீம்கள் யாவரும் கோவாவில் குடியேறி, ஐரோப்பியர்களுடன் கலந்து வாழும் வகையில் யாவரையும்

ஊக்குவித்தார்; ஐரோப்பியர்கள் இந்தியப் பெண்டிரைத் திருமணம் புரிந்து கொள்ளும்படி உதவினார்; இந்து சமுதாயத்தில் ஊறிப்போயிருந்த 'சதி' அல்லது உடன்கட்டை ஏறுதல் போன்ற சம்பிரதாயங்களை ஒழிக்கவும் துணைபுரிந்தார்.[1]

இவர் இந்தியாவில் போர்த்துக்கீசியப் பேரரசுஉருவாவதற்கான அடித்தளத்தை நாட்டிவிட்டு 1515 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் பதினாறும் நாளன்று இறந்தார். இவருக்குப் பிறகு நினோ-டா-குன்கா (Nino-do-cunha) என்பவர் 1529-ல் ஆளுநராக வந்தார். இதற்கிடையில் டையூவைப் போர்த்துக்கீசியர் இழந்திருந்தனர். குன்கா பதவியேற்ற சமயம் மொகலாயப் பேரரசர் ஹுமாயூனுக்கும் குஜராத்தின் மன்னரான பகதூர்ஷாவிற்குமிடையே சண்டை சச்சரவுகள் நடந்தவண்ணமிருந்தன. குன்கா இவைகளைப் பயன்படுத்திக் கொண்டும், தனது அரசியல் சூழ்ச்சி, வலுக்கட்டாயம் ஆகியவற்றின் துணையைக்கொண்டும் 1534-ல் பஸ்ஸீனையும் (Bassein) 1537-ல் டையூவையும் வென்று கைப்பற்றினார். 1559-ல் டாமனும் போர்த்துக்கீசியர் வசம் வந்தது. குன்காவையடுத்து, அந்தோணியோ-டி-நொரான்கா (Antonio de Noronha) என்பவர் புகழ்பெற்ற போர்த்துக்கீசிய ஆளுநராக இருந்தார். இவர் 1571-ல் பதவிக்கு வந்தார். இவரது பதவிக் காலத்தில் போர்த்துக்கீசியருக்கும் மொகலாயப் பேரரசர்களுக்குமிடையே நல்லுறவு பலப்படுத்தப்பட்டது. இப்படிப் போர்த்துக்கீசியரின் செல்வாக்கும் அதிகாரமும் 1580 வரை வளர்ச்சியடைந்து பின்னர் வீழ்ச்சியடையத் தொடங்கிற்று.

1580-ல் ஸ்பெயினின் மன்னரான இரண்டாம் பிலிப் என்பவரால் போர்ச்சுகல் தோற்கடிக்கப்பட்டு அவருடைய அரசுடன் இணைக்கப்பட்டது. இதனால் போர்த்துக்கீசியரால் கீழைநாடுகளில் தோற்றுவிக்கப்பட்டிருந்த ஆட்சிப் பிரதேசங்களிலும் குழப்பங்கள் தோன்றின. போர்த்துக்கீசியரின் உடைமைகளை டச்சுக்காரர்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் போரிட்டுப் பெறலாயினர். டச்சுக்காரர்களிடமிருந்து பின்னர் அவை ஆங்கிலேயரிடம் கைமாறின. 1739-ல் மராத்திய அரசர்கள் பலமிழந்திருந்த போர்த்துக்கீசியரிடமிருந்து பஸ்ஸீனை மீட்டனர். போர்த்துக்கீசியருக்கு நட்பையும் உதவிகளையும் வழங்கி வந்த விசய நகரப் பேரரசு தலைக்கோட்டை யுத்தத்தின் விளைவாகச் சரிந்தது. இதன் காரணமாகவும் போர்த்துக்கீசியரின் ஆட்சியும் ஆதிக்கமும் வளரவோ, விரிவடையவோ முடியாது போயிற்று. இறுதியாக, 1740-க்குப் பிறகு

1 Gupta, A. Das, Malabar in Asian Trade, 1740—1800; p.p. 9—10.

கோவா, டாமன், டையூ எனும் மூன்று இடங்கள் மட்டுமே போர்த்துக்கீசியரின் ஆதிக்கத்திற்குட்பட்டவையாக இருந்தன. அவ் வாதிக்கம் 1961ஆம் ஆண்டுவரை இருந்தது. வரலாறு மற்றும் சமூக, பண்பாட்டு அடிப்படையில் கோவா, டாமன், டையூ ஆகிய மூன்று இடங்களும் இந்திய நாட்டின் ஓர் அங்க மாகவே இருந்துவந்துள்ளன. எனினும், சுதந்திர இந்திய அரசாங்கத்தின் சகிப்புத் தன்மையாலும், அந்நியநாட்டு விவகாரங் களில் தலையிடாது அவைகளுடன் நேச உறவை மேற்கொள்ளும் வெளிவிவகாரக் கொள்கையை இந்திய அரசு பின்பற்றி வந்தமை யாலும், போர்த்துக்கீசியர் தாமாக இந்நாட்டைவிட்டு வெளியேறி விடுவார்கள் என்று 1961ஆம் ஆண்டுவரை நம்பப்பட்டது. ஆனால், நாம் சுதந்திரத்தை அடைந்த பின்னரும், காலனி ஆதிக்கத்தின் அருவருப்பான உதாரணமாய்ப் போர்த்துக்கீசியர் தொடர்ந்து இந்தியத் துணைக்கண்டத்தில் இருந்தனர். மேலும் அப்பொழுது கோவா, டாமன், டையூ ஆகிய இடங்களை ஸ்பெயின் அரசு வேறு ஒரு நாட்டிற்கு உரிமை மாற்றத்தைச் செய்து கொடுக்கும்படியான சூழ்ச்சிக் காரியங்களை மேற்கொண்டது. இதனால் நேரவிருந்த ஆபத்தை உணர்ந்த சுதந்திர இந்திய அரசாங்கம் மேற்கூறிய மூன்று இடங்களையும் போர்த்துக்கீசியரின் ஆட்சிப்பிடிப்பிலிருந்து விடுவித்து மீட்கும் பணியில் ஈடுபட்டது. இப்பணி எளிதாக நடந்து முடியும் வகையில் கோவாவில் விடுதலை இயக்கமொன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனவே, சுதேசி மக்களின் ஆதரவுடன், தனது அயல்நாட்டுக் கொள்கைக்கு ஊறு ஏற்படாவண்ணம், குறைந்த அளவில் தேவையான இராணுவ நடவடிக்கையைப் பயன்படுத்திச் சுதந்திர இந்திய அரசாங்கம் கோவா, டாமன், டையூ ஆகிய மூன்று இடங்களையும் 1961ஆம், ஆண்டு டிசம்பர்த் திங்கள் 21ஆம் நாளன்று மீட்டது.

இப்படியொரு " அரசியல் வரலாற்றைப் பெற்றிருந்த போர்த்துக்கீசியரின் ஆட்சி பின்வரும் காரணங்களால் 18ஆம் நூற்றுண்டிற்கு முன்னரே படுகுழியில் தள்ளப்பட்டுவிட்டது எனலாம். நம் நாட்டில் மட்டுமன்றிப் பிறநாடுகளிலும் தம் குடியேற்றங்களை அமைத்திருந்த போர்த்துக்கீசியர் திறமை யற்றதும், சுதேசிமக்களைப் பழிவாங்கக் கூடியதுமான ஆட்சிக் கொள்கையை மதத்தோடு பிணைத்துப் பின்பற்றினர். அவர்கள் தம்மிடையே ஒற்றுமையும், ஒழுக்க சீலமும் இல்லாதவர்களாய்த் தமது சுயநலத்தின் காரணமாக இந்திய மக்களின் மனப்போக்கிற்கு எதிராக மதக்கொள்கையையும், பிறசீர்திருத்தங்களையும் மூர்க்கத் தனமாகப் புகுத்தினர். அதர்ம வழியில், அநியாயமாகப்

பொருளீட்டியது, விரும்பப்படாத கலப்படச் சமுதாயப் புது வழக்கங்களைப் புகுத்தியது போன்றவை போர்த்துக்கீசிய அரசியலுக்கும் ஆட்சிக்கும் தோல்வியைத் தேடித் தந்தன. இவற்றோடு 16, 17 ஆகிய நூற்றாண்டுகளில் ஆன்மபலம் கொண்டிருந்த மொகலாயப் பேரரசின் சக்தி, டச்சுக்காரர்கள் பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர் ஆகியோர் மேற்கொண்ட எதிர்ப்பு, போட்டி, தமது ஆதிக்கத்தை நிலைநாட்டத் தேவையான உதவிகளைத் தமது தாய்நாட்டிலிருந்து பெறமுடியா திருந்த நிலை, ஸ்பெயின் போர்ச்சுக்கலைப் போரில் வென்று தனது நாட்டின் ஒரு பகுதியாக இணைத்துக் கொண்டமை ஆகிய பல காரணிகள் போர்த்துக்கீசியரின் ஆதிக்கத்தையும் ஆட்சியையும் இறுதியாக வீழ்ச்சியுறச் செய்தன. இச் செய்திகள் யாவற்றையும் பின்னணியாகக் கொண்டு, போர்த்துக்கீசியரின் அரசாங்கம், ஆட்சிமுறை, அவற்றின் விளைவுகள் போன்றவை எவ்வாறு அமைந்திருந்தன என்பதைப் பின்வரும் செய்திகளின் துணையைக் கொண்டு அறிந்துகொள்ளலாம்.

போர்த்துக்கீசியரின் அரசாங்கம், ஆட்சிமுறை, அவற்றின் விளைவுகள்

சர் இ. டெனிசன் ராஸ் எனும் அறிஞர் கூறுவதுபோன்று, ‘போர்த்துக்கீசியரின் நூறு ஆண்டுக்கால வணிகச் சாதனை, அவர்கள் கீழைநாடுகளில் தமது பேரரசை நிறுவுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிக்கான அறிகுறி எதையும் அறிவிக்கவில்லை. அதற்கெனப் போர்த்துக்கீசியத் தலைவர்கள் எக் கட்டத்திலும் கடற்கரைப் பிரதேசங்களில் குறிப்பிட்டுச் சொல்லும்படி பெரும் போர்களையும் நடத்தவில்லை. உண்மையிலேயே அவர்கள் இராணுவ வலிமை பெற்றிருந்த எவ்வினத்தவருடனும் மோத வில்லை. நிர்வாகச் செயல்களின் மூலம் கடல் ஆதிக்கத்தைப் பெறுவதில் அவர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். அவர்களுடைய குறிக்கோள் எல்லாம் மிக முக்கியமான துறைமுகங்களைக் கைவசப் படுத்தி அவைகளைப் பாதுகாப்பதாகவே இருந்தது. இதனால் அவர்களுக்குத் தேவையானவர்களாய் இருந்தோர் வீரமிக்க சிப்பாய்களும், மாலுமிகளுமேயன்றி, ஆட்சியாளர்களும் நிர்வாகி களும் அல்லர். எனவே, மேற்கூறிய தமது குறிக்கோளை ஈடேற்றிக் கொள்வதில் அவர்கள் பெற்ற வெற்றிக்குக் காரண மாய் இருந்தது அவர்களுடைய தலைவர்கள் பெற்றிருந்த உயர் இராணுவத் தகுதிச் சிறப்புகளும், தனிப்பட்ட வீரமும், சகிப்புத் தன்மையுமே ஆகும். பேராபத்தைக் கொண்டவையாய் இருந்த போதிலும், பெரும் இலாபத்தைக் கொடுத்த காரணத்தினால்தான் போர்த்துக்கீசியர் கீழைநாடுகளில், குறிப்பாக இந்தியாவில்,

வாணிக உறவுகளை மேற்கொண்டனர்.'[1] இச் செய்திகளின் மூலம், போர்த்துக்கீசியர் எஞ்ஞான்றும் நிலைத்திருக்கக் கூடியதும், ஆட்சிஆதிக்கம் விரிவடையக் கூடியதுமான ஒருமித்த அரசாங்க அமைப்பைப் பெற்றிராது, தமது குறிக்கோள் ஈடேற்றம் அடைவதற்குத் துணைபுரியும் வகையில் தமது ஆட்சி அமைப்புகளையும் நிர்வாகக் காரியங்களையும் பெற்றிருந்தனர் என்பது வெளிப்படுகின்றது.

போர்த்துக்கீசியரின் இந்திய அரசாங்க முறையில் வைசிராய் அல்லது ஆளுநர் என்பவர் உயர்மட்ட அதிகாரியாய் இருந்தார். போர்த்துக்கீசிய ஆளுநர்கள் தமது கொள்கைகளிலும், மற்றப் பல விஷயங்களிலும் வேறுபாடுடைய கருத்துகளைக் கொண்டவர்களாய் இருந்தனர். வணிகச் செயல்களையும், கடலாதிக்கத்தையும் மேற்கொள்வதில் மிகுந்த அக்கறையைக் கொண்டு, தமது பேரரசு ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்ற அவாவை அவர்கள் கொண்டிருந்தனர். ஆனால், அதற்கான அரசியல் மற்றும் இராணுவச் செயல்களை அவர்கள் முனைப்பாக மேற்கொள்ளவில்லை. எனினும், தத்தம் பதவிக் காலங்களில், தமது ஆளுகைக்குட்பட்டிருந்த இந்தியப் பிரதேசங்களில் பின்வரும் செய்திகளுக்கேற்ப அரசாங்க முறையைக் கொண்டு ஆட்சிச் செயல்களை அவர்கள் மேற்கொண்டனர். தமது ஆட்சிக் காரியங்களுக்கான தலைநகரமாய்க் கோவாவைக் கொண்டு அவர்கள் காரியமாற்றினர். தமது ஆட்சிக் காலத்தில் தமது ஆட்சிப்பிரதேசங்களில் இருந்த நிலைமைகளுக்கேற்பச் சுதந்திரமாகச் செயல்படும் அதிகாரத்தைப் பெற்றிருந்த போதிலும், அவர்கள் போர்ச்சுகல் மன்னரின் ஆட்சிப் பிரதிநிதிகளாகத்தான் காரியங்களை மேற்கொண்டனர். எனவேதான், போர்த்துக்கீசிய இந்திய ஆளுநர்கள் தமது பேரரசரால் எவரும் எதிர்பார்க்காவண்ணம் பதவியில் அமர்த்தப்படக்கூடியதும், திடீரெனப் பதவியிலிருந்து திருப்பி யழைக்கப்படக்கூடியதுமான (Recall) நிலையில் இருந்தனர். இவைகளை மனத்திற்கொண்டு எண்ணிப் பார்க்கும்பொழுது போர்த்துக்கீசியர் வசம் இருந்த இந்தியப் பிரதேசங்களில் போர்ச்சுகல்லின் கோனாட்சிக்கு உட்பட்டிருந்த நிர்வாக வல்லாட்சியே இருந்தது; ஒருமித்ததோர் அரசாங்க அமைப்பு இருக்கவில்லை என்பது விளங்கும். எனினும் போர்த்துக்கீசிய ஆளுநர்கள் திறமையான ஆட்சியாளர்களாக விளங்கினர் என்பதில் ஐயமில்லை. போர்த்துக்கீசியஆட்சியாளர்கள் முகமதியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எப் பதவியையும் கொடுக்காமல், பதவியில் இருந்த அத்தகையோரை நீக்கிப் போர்த்துக்

1 The Cambridge History of India, Vol V, p. 17

கீசியர்களையே அலுவலர்களாக நியமித்து அவர்கள் மூலம் நிதி மற்றும் குற்றவியல் சம்பந்தமான பணிகளை மேற்கொண்டனர். இப் பணிகளை ஆற்றுவதில் அவர்களுக்குத் துணைபுரியும் பொருட்டு இந்துமத எழுத்தர்களைப் பணியில் அமர்த்திக்கொண்டனர். போர்த்துக்கீசியர் பேணிய இவ் வாட்சி முறையில், பிற்காலத்தில் ஆங்கிலேயர் இந்தியர்களை அரசாங்கப் பணியில் சேர்த்துக்கொள்வதற்கென்று வகுத்த 'ஆட்சியமைப்பில் இந்தியருக்கான இணைப்புக் கொள்கை' (Policy of Association) என்பதற்கு வழிகாட்டும் தத்துவம் காணப்படுகின்றது. இந்து மதத்தைச் சேர்ந்தவர்களை உடன்வைத்துக் காரியமாற்றும் ஆட்சி முறையைப் போர்த்துக்கீசியர் வகுத்திருந்ததால், அவர்களுக்குத் தேவையான கல்வி அறிவைப் புகட்ட பல பள்ளிகளையும் அவர்கள் நிறுவினர். இதன் மூலம் மேனாட்டுக் கலாசாரமும் இந்திய நாட்டுப் பண்பாடும் ஒன்று கலந்து நன்மை பயக்கக்கூடிய ஒரு ஆட்சிக் கொள்கையைப் போர்த்துக்கீசியர் வகுத்துச் செயல்படுத்தினர்.

இந்துக்கள் தமது கலாசாரத்தோடு கலந்துறவாடும் வகையில் கொள்கையை வகுத்துச் செயல்பட்ட போர்த்துக்கீசியர் இந்தியக் கிராம சமுதாயங்களில் நிலவிய அரசியலமைப்பு முறையை நிலைநிறுத்தி, நேர்மையான சீர்திருத்தங்கள் பலவற்றையும் மேற்கொண்டனர். இவற்றின் மூலம் தமக்கு எதிராக அரசியல் வெறுப்புணர்ச்சியும் எதிர்ப்பும் தோன்றுதிருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினர். இதற்கான ஆட்சிக் கொள்கையைச் செயல்படுத்தும் வகையிலேயே மதமாற்றம், கலப்புத் திருமணம் போன்றவற்றை ஊக்குவித்தும், 'சதி' போன்ற தீய சம்பிரதாயங்களையும் பழக்க வழக்கங்களையும் நீக்கியும் போர்த்துக்கீசியர் ஆட்சி புரிந்தனர். ஆனால் அரசியல் பெருநோக்குடனும், நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டிருந்த போர்த்துக்கீசியரின் ஆட்சிக் கொள்கை சுதேசி மக்களின் ஆதரவைச் சிறிதும் பெறவில்லை. ஏனெனில், இந்திய மக்கள் பழமைப்பற்றுள்ளர்களாக (Conservatives) இருந்ததோடன்றி, அந்நியக் கலாசாரத் திணிப்பின் மூலம் அந்நிய நாட்டவரின் ஆதிக்கத்திற்கு அடிமையாக விரும்பவில்லை. எனவேதான், போர்த்துக்கீசியரின் ஆட்சிக் கொள்கை வலுவிழந்து இறுதியில் தோல்வியைத் தழுவியது. மேல்நாட்டு முறைகளைத் தழுவி, முடிந்த வரையில் தமது அரசாங்கத்தைப் போர்த்துக்கீசியர் இங்கு நடத்திய போதும், இந்துக்களின் கிராமப் பஞ்சாயத்துக்கள், தலநிர்வாக முறைகள் (Local Administrative Systems) போன்றவற்றை ஒதுக்கவும், ஒடுக்கவும் முற்படவில்லை. மாறாக, அவைகளை அணுகாது, ஒதுங்கியிருந்தவண்ணம் அவர்கள் செயல்பட்டனர்.

இப்படிப் போர்த்துக்கீசியர் கையாண்ட கொள்கையையே காலத்தின் தேவைகளுக்கும் மாற்றங்களுக்கும் ஏற்ப, பிற ஐரோப்பியர்களும், குறிப்பாக ஆங்கிலேயர்களும் பிற்காலத்தில் பின்பற்றியும் செயல்படுத்தியும் போர்த்துக்கீசியர் நிறுவ முடியா திருந்த பேரரசை இந்தியாவில் நிறுவினர்.

போர்த்துக்கீசியர் தமது இந்தியப் பிரதேசங்களில் மேற் கொண்டிருந்த அரசாங்கத்தின் அமைப்பு முறை, அதன் மூலம் பணியற்றியோர் மற்றும் அவர்தம் ஆட்சிச்செயல்கள் போன்ற செய்திகளைக் குறித்துப் பேராசிரியர் டாட்வெல் வெகுவாக விவரித் துள்ளார். அவை பின்வருமாறு.[1] 1571 ஆம் ஆண்டுக்கு பிறகு போர்த்துக்கீசியர்களால் மொசாம்பிக், கோவா, மலாக்கா ஆகிய இடங்களில் தனிப்பட்ட அரசாங்கங்கள் அமைக்கப்பட்டன. போர்த்துக்கீசியரின் ஸ்தாபனங்கள், வர்த்தகம் ஆகியவற்றின்மீது பொதுவான கட்டுப்பாட்டைச் செலுத்தும் நிர்வாக அதிகாரங்கள் இந்தியாவின் வைசிராய் என்னும் அதிகாரியிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தன. இவர் போர்ச்சுகல் மன்னரால் நேரிடையாக நியமனம் செய்யப்பட்டார். இவருடைய பதவிநிலை பெருமதிப்பிற் குரியதாய் இருந்தது. அரச மரியாதைகளைப் பெறும் தகுதியை இவர் பெற்றிருந்தார். கோவாவின் கிறித்துவத் தலைமை மேற்றி ராணியாரைத் (Arch Bishop) தவிர வேறெவரும் இவருடன் சமநிலையில் அமர்ந்து உணவு உட்கொள்ள முடியாத வகையில் பேரந்தஸ்தைப் பெற்றிருந்தார். இவருடைய பதவிக்கு மரியாதை செலுத்தும் வண்ணம் இவருடன் பேசும் எவரும் தலைப்பாகை தரிக்கக்கூடாது. இவ் வதிகாரி சிவில் மற்றும் இராணுவ நிர்வாகம் பற்றிய அதிகாரங்களை முழுமையாகப் பெற்றிருந்தபோதிலும், அரசாங்கத்தின் மிக முக்கியமான செய்திகள் குறித்துத் தன்னுடைய ஆலோசனை மன்றத்தைக் (Council) கலந்து, அதன் அறிவுரைகளின் படி செயல்களை மேற்கொண்டார்.

போர்த்துக்கீசிய வைஸ்ராயின் ஆட்சிக்காலம் பொதுவாக மூன்று ஆண்டுகள் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. எனினும் ஒருசிலர் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் வரை பதவி யிலிருக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் தமது பதவிக் காலமான மூன்று ஆண்டுகளில் முதல் ஆண்டைத் தனது கடமை களைப் பற்றி அறிந்துகொள்வதிலும், இரண்டாவது ஆண்டைப் பொருள் சேர்ப்பதிலும், மூன்றாவது ஆண்டைத் தனது ஆளுகைக் குட்பட்டிருந்த சார்நிலை அரசாங்கங்களைச் (Subordinate Governments) சுற்றுலா மூலம் சோதித்து அவற்றின் ஆட்சியாளர்கள்,

1 Dodwell-Cambridge History of India. Vol V.

மக்கள் ஆகியோரிடமிருந்து வெகுமதிப் பொருள்களைப் பெறுவதிலும் செலவழித்தனர். மூன்றுண்டுகளைத் தழுவிய வைசிராயின் ஆட்சிக்காலம், அவருடைய ஆட்சித் திறமையை வெளிப்படுத்த முடியாத அளவிற்கு மிகக் குறுகியதாகும். எனினும், இதன் மூலம் கீழ்க்காணும் இரண்டு பலன்கள் ஏற்பட்டனவாகப் போர்த்துக்கீசிய அதிகாரிகள் நினைத்ததோடன்றி, அவர்களது ஆட்சி முறைகளிலிருந்த குறைபாடுகளை அவை நீக்கியதாகவும் கருதினர். அத்தகைய பலன்களுள் முதலாவது, தனது ஆளுகைக் குட்பட்டிருந்த இந்தியப் பிரதேசங்களில் மேற்கொள்ளப் பட்டிருந்த போர்த்துக்கீசியரின் அரசாங்கம் லிஸ்பன் அரசாங் கத்தை மிக நெருக்கமான நிலையில் சார்ந்திருக்கும்படி செய்தது. அவ்வாறில்லாதிருந்தால் மேற்சொன்ன நிலை தலைகீழாய் மாறியிருக்கும். அடுத்து, இத்தகைய அரசாங்க அமைப்பு முறையின் பயனுய், அரசாங்கம் சார்ந்திருந்த அல்லது பற்றியிருந்த பிரபுக்களின் எண்ணிக்கை உயர்ந்தது. அப் பிரபுக்கள் தமக்குக் கொடுக்கப்பட்டிருந்த காலவரம்பிற்குள் பொருள் சேர்த்துக் கொள்ள வாய்ப்பைப் பெற்றதோடன்றிப் பலதரப்பட்ட பதவி களையும் பெற்றனர்.

போர்த்துக்கீசியரின் இந்திய அரசாங்க அமைப்பில் வைசிராய்க்கு அடுத்த நிலையில் 'Vedorda Fazenda' எனும் அதிகாரி முக்கியமான வராய் இருந்தார். படைக்கலச்சாலை அல்லது படைக்கொட்டில், கப்பல் வந்தொதுங்கிச் சரக்கேற்றவும் இறக்கவும் அதனைப் பழுது பார்க்கவும் வாய்ப்பாக அமைந்த கப்பல் துறைகள், நாணயச்சாலை ஆகிய யாவும் மேற்கூறிய அதிகாரியின் நிர்வாகப் பொறுப்பின்கீழ் இருந்தன. இவரது பதவி மிகுந்த இலாபகரமானதாய் இருந்தது. ஏனெனில் அரசரின் கணக்கில் இந்தியாவிற்கு விற்பனைப் பொருள்களை விநியோகிக்கும் முழுமையான அதிகாரத்தை இவர் பெற்றிருந்தார். மேலும், கப்பல் துறைகளில் அப் பொருள்களைக் காப்பாற்றி வைப்பதற்குரிய சேமிப்பு இடங்களைக் கொடுக்கும் அதிகாரமும் இவரிடம் இருந்தது. எனவே, இவர் மூலம் நடை பெற்ற வர்த்தகச் செயல்களில் நூற்றுக்கு நூறு சத விகித இலாபம் கிடைத்தது.

மேற்கூறிய இரு உயர் அதிகாரிகளைத் தவிர ஒரு தலைமை நீதிபதியும் இருந்தார். 1544-க்குப் பிறகு பல நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இந் நீதிமன்றத்தில் நடைபெற்ற குற்றவியல் வழக்குகளில் (criminal cases) கொடுக்கப்

பட்ட தீர்ப்புகள் வைஸ்ராய் அல்லது ஆளுநரின் ஒப்புதலைப் பெறவேண்டு மென்ற நியதி இருந்தது. சிவில் வழக்குகளின் தீர்ப்புகளைப் பொறுத்தவரை, அவை தேவையான முக்கியத்துவம் வாய்ந்தவைகளாயிருப்பின், அவைகளை லிஸ்பனில் இருந்த தலைமை நீதிமன்றத்திற்கு மேல் முறையீட்டின்பேரில் (appeal) எடுத்துச் செல்ல வகை செய்யப்பட்டிருந்தது. இந் நீதிமன்றம் சாத்திய பூர்வமாகச் செயலாட்சிப் பிரிவினின்றும் (executive) சுதந்திரமாகச் செயல்படும் நிலை இருந்தது. எனினும் அதன் நீதிபதிகள் யாவரும் வயதில் சிறியவர்களாகவும், ஏழைகளாகவும் இருந்தனர். எனவே, அவர்கள் தமது செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளும் வேட்கையுடன் பணிகளை மேற்கொண்டனர்; அதிகாரத்தைப் பயன்படுத்தினர். இதனால் வழக்குகளை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டது. மேலும் நீதிமன்றங்களில் வழக்காடும் செயல் என்பது ஒருவரை ஏழ்மையாக்கி அழித்துவிடக் கூடிய அளவிற்குப் பெருஞ் செலவினம் மிக்கதாய் இருந்தது. இப்படிப் பல குறை பாடுகளைக் கொண்டிருந்த போர்த்துக்கீசியரின் இந்திய நீதி நிர்வாக முறையானது பணத்திற்கு ஆட்படுகிற தன்மையோடு பொது ஊழியப் பொறுப்பையும், செல்வாக்கையும் இழந்து, கைக் கூலி வாங்குகின்ற தீச் செயலுக்கு அடிமையுற்றிருந்தது.

போர்த்துக்கீசியரின் இந்தியப் பிரதேசங்களின் தலைநகரா யிருந்த கோவாவைப் பொறுத்தவரை, அந் நகரத்தின் நிர்வாகப் பொறுப்பு ஒரு மாநகராட்சி மன்றத்திடம் (Corporation) ஒப்படைக்கப்பட்டிருந்தது. இம் மன்றம் லிஸ்பனின் மாநகராட்சி மன்றம் பெற்றிருந்ததைப் போலவே அதிகாரங்களையும், சிறப் புரிமைகளையும் பெற்றிருந்தது. கொள்கை அளவில் கோவா மாநகர் மன்றத்தின் தலைவரான நகரத்தந்தை அல்லது மேயர் (Mayor), அதன் ஏனைய உறுப்பினர்கள், அதிகாரிகள் ஆகிய யாவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டு மாயினும், நடைமுறையில் அவர்கள் யாவரும் போர்ச்சுகலின் அரசராலோ அல்லது அவரது அனுமதியின்பேரில் கோவாவின் ஆளுநராலோ நியமனம் செய்யப்படும் மரபு பின்பற்றப்பட்டு வந்தது. இம் முறையில் இருந்த ஒரு பெரிய நன்மை என்னவெனில் கோவாவின் மாநகராட்சி மன்றம் போர்ச்சுகல் மன்னருக்கு நேரிடையாக அரசாங்கத்தின் குறைபாடுகளையும் அவற்றுக்குத் தீர்வு காணும் வழிவகைகளையும் விண்ணப்பத்தின் மூலம் தெரிவித்துக்கொள்ளும் உரிமையைப் பெற்றிருந்ததாகும். இத் தகைய அமைப்பு முறையினால் மக்களுக்கும் மன்னருக்கும் இடையே அரசியல் ரீதியான நேரிடைத் தொடர்பு மேற்கொள்ளப்படும் வாய்ப்பு இருந்தது.

கோவாவைத் தலைமையிடமாகக் கொண்டிருந்த போர்த்துக்கீசியரின் மைய அரசாங்கம் தனது ஆளுகையின்கீழ்ப் பல சார் நிலை அரசாங்கங்களையும் கொண்டிருந்தது. இச் சார்நிலை அரசாங்கம் ஒவ்வொன்றும் காப்டன் (Captain) எனப்படும் தலைவரை அதிகாரியாய்க்கொண்டு நிர்வாகிக்கப்பட்டன. மைய அரசாங்கத்தின் தலைவரான வைசிராயைப் போலவே இத் தலைவரும் தனது ஆட்சி அதிகாரத்திற்குட்பட்டிருந்த அரசாங்கத்தின் சிவில் மற்றும் இராணுவ ஸ்தாபனங்களின் தலைமை அதிகாரியாய் இருந்தார். இவரது ஆட்சிக் காரியங்களிலும் நடவடிக்கைகளிலும் கோவா அரசாங்கம் வெகுவாகத் தலையிடவில்லை. இதனால் சார்நிலை அரசாங்கங்கள் பெருமளவில் சுயாட்சித் தன்மையைப் பெற்று இயங்குபவையாய் இருந்தன. வைசிராய், காப்டன். ஏனைய அதிகாரிகள் ஆகியோரது ஊதியம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளில் ஒன்று பராமரிப்புப்படி (maintenance allowance), எனும் வாழ்க்கைப் பொருளுதவியாகும். இதற்கு 'மேன்டிமென்டோ' (Mantimento) என்றுபெயர். இது அவர்களின் உண்டி, உறையுள் ஆகிய செலவுகளுக்கென் ஒழுங்காகக் கொடுக்கப்பட்டதாகும். இரண்டாவது, 'பதவி ஊதியம்' எனப்படுவதாகும். இதற்கு 'ஆர்டநாடோ' (Ordenado) என்று பெயர். இஃது அவர்கள் வகித்த பதவியோடு இணைக்கப்பட்டிருந்த சம்பளமாகும். இதனை ஒரு சிறப்புக் கட்டளையின் மூலமாகவும், பெரும்பாலும் நிலுவைகளாகவும் (Arrears) அவர்கள் பெற்றனர். இவைகளையன்றி இடை ஆதாயங்களாகப் பல வருமானங்களையும் பல வழிகளில் அவர்கள் பெற்றனர். உதாரணமாக மலாக்கா அரசாங்கத்தின் தலைவர் ஆண்டொன்றுக்கு 300 பவுன்கள் பெற்றார். ஆனால் அவர் பெற்ற இடை ஆதாயங்களோ ஆண்டொன்றுக்கு 20,000 பவுன்களாகும். போர்த்துக்கீசிய அதிகாரிகளின் பொறுப்பின்கீழ் வர்த்தகக் கலங்களின் பிரயாண நிதி இருந்தமையால் அவர்கள் பெற்ற இடை ஆதாயங்களைத் தடுத்து நிறுத்த முடியாமல், அவைகளை அதிகார பூர்வமான ஊதியமாக ஏற்றுக் கொள்ளும் நிலை இருந்தது.

இந்தியாவைப்போல் நெடுந் தொலைவிலிருந்த நாட்டில், தான் கொண்டிருந்த நிறுவனங்களின்மீது தனது பயனுறுதி மிக்க கட்டுப்பாட்டைச் செலுத்தும் வகையில் லிஸ்பனிலிருந்த போர்த்துக்கீசியரின் தாயக அரசாங்கம் (Home Government) நல்லதோர் அமைப்பைப் பெற்றிருக்கவில்லை. தனது குடியேற்ற நாடுகளின் (Colonial Countries) செயல்களைப்பற்றிப் பொறுப்பேற்கும் வகையில் தனிப்பட்ட ஓர் ஆட்சி மன்றத்தையோ அல்லது அமைச்சரையோ லிஸ்பன் அரசாங்கம் வெகுகாலம் வரை பெற்றிருக்கவில்லை ; அவைகளின் ஒழுங்கான செயற்பாட்டைப்

பாதுகாக்கும் வகையில் எவ் வதிகாரிகளும் நியமிக்கப்படவில்லை. ஆனால், தன் இந்திய ஸ்தாபனங்களின் நிதி நிர்வாகப் பணிகளில் மேலாண்மை புரிவதற்கென ஒரு சில அதிகாரிகள் லிஸ்பனில் நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும், அவர்கள் போர்த்துக்கீசியக் குடியேற்ற நாடுகளை நிர்வகிப்பதற்குத் தேவையான படை வீரர்களைத் தருவித்தல், வியாபாரப் பொருள்களை வாங்கி விற்றல் ஆகிய செயல்களை மட்டுமே மேற்கொண்டனர். எனவே, தமது இந்திய அரசாங்கத்தின்மீது அவர்கள் எவ் வதிகாரத்தையும் செலுத்த முடியவில்லை. இந் நிலை 1604-ல் நீக்கப்பட்டுத் தமது இந்தியப் பிரதேசங்களின் விவகாரங்கள் பற்றிய பொறுப்பு ஓர் ஆட்சிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இம் மன்றம் ஒரு நிதி இலாகாவைப் போல் (Finance department) செயல்பட்டுப் போர்த்துக்கீசியக் குடியேற்ற நாடுகளின் நிர்வாகச் செயல்களை நடத்தியது. ஆனால், இத்தகையதொரு மாற்றம் செய்யப்பட்ட காலத்தில், போர்த்துக்கீசியர் இந்தியாவில் பெற்றிருந்த ஆதிக்கம் வீழ்ச்சியுறத் தொடங்கி, ஒழுங்கு முறைகளுக்கு உட்படுத்தப் படாது, வெகு தொலைவில் இருந்த தனது தலைமை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டுப் பிடியிலிருந்து தப்பி, ஆட்சிக் குழப்பங் களுக்கும் ஊழல்களுக்கும் இரையாயிற்று. இந் நிலை ஏறத்தாழ போர்த்துக்கீசியர் இந் நாட்டை விட்டு விரட்டப்பட்ட காலம் வரை நிலவிற்று எனலாம். எனினும், 1961-ல், தாம் இந் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டவரை போர்த்துக்கீசிய ஆட்சியாளர் களும், அதிகாரிகளும் காலத்தின் தேவைகளுக்கும், மாற்றங் களுக்கும் ஏற்பச் சுதேசி, நிறுவனங்களின் செயல்களில் கூடுமான வரை தலையிடாமலும், தேவையான அளவு இந்தியர்களைப் பணி களில் அமர்த்திக் கொண்டும் தமக்கே உரிய வர்த்தக, மதக்கொள் கைகளைப் பின்பற்றியும் பிற ஐரோப்பியர்களுக்கு, குறிப்பாக ஆங்கிலேயருக்கு வழிகாட்டிகளாக விளங்கினர். 1961ஆம் ஆண்டுவரை போர்த்துக்கீசியரின் இந்திய அரசாங்கம், தன் மதக் கொள்கைகள் மற்றும் பிரசாரங்கள் ஆகியவற்றின் காரணமாகக் கிறித்துவர்களை அதிகமாய்க் கொண்டு, கிறித்துவ மதத் தலைவர் களின் நிர்வாக மேற்பார்வையில் இயங்கும் நிலையில் இருந்தது.

இதுகாறும் நாம் அறிந்துள்ள செய்திகளுக்கேற்ப அமைக்கப் பட்டுச் செயல்பட்ட போர்த்துக்கீசியரின் இந்திய அரசாங்க முறை, அதன் ஆட்சிச் செயல்கள் ஆகியவற்றால் ஏற்பட்ட விளைவுகள் பலதரப்பட்டவையாய் இருந்தன. அவ் விளைவுகளின் அக்கறைக்கும் ஈர்ப்புக்கும் உள்ளான நிலையில் ஆங்கிலேயரின் இந்திய அரசாங்கமும் ஆட்சிச் செயல்களும் பிற்காலத்தில் அமைந்திருந்ததால், அவைகளைப்பற்றிப் பின்வருமாறு எடுத் துரைக்கலாம்.

'இந்தியாவில் போர்த்துக்கீசிய ஆட்சியின் விளைவுகளில் மிக முக்கியமானது, போர்த்துக்கீசியர் இங்கு வந்த பொழுது பெருங் குழப்பங்களுக்கு ஆளாகி அமைதியை இழந்திருந்த அரசுகளிடம் புதியதொரு அரசியல் கூறைப் (Political element) புகுத்தியதாகும். போர்த்துக்கீசியரின் வாயிலாகவே ஐரோப்பியர்கள் இந்திய அரசியலில் காலடி எடுத்து வைக்கமுடிந்தது. கூடுமானவரை குழப்பங்களை யகற்றி, அரசாங்கத்தையும் அரசியலையும் நடத்திச் செல்வதற்கான போக்கினை ஐரோப்பியர்களே பின்பற்றினர். போர்த்துக்கீசியர் ஏற்படுத்திக் கொடுத்த இவ் வாய்ப்பே பின்னர் இந்தியாவை ஆங்கிலேயர் பிரிட்டிஷ் பேரரசின்கீழ்க் கொணரச் செய்தது. போர்த்துக்கீசியர் இந்தியாவைத் துருக்கியர்களின் படையெடுப்பிலிருந்து காப்பாற்றியிருக்காவிடில் ஐரோப்பியச் சக்திகளின் தோற்றம் கண்டிப்பாக காலத்தால் தாமதப்பட்டு அல்லது தள்ளப்பட்டு இந்திய அரசியல் வரலாற்றையே மாற்றியமைத்திருக்கக் கூடும்.'

மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டி, அவர்களிடையே அரசியல், கலாசார, மத வேற்றுமைகளையும், போட்டிகளையும் அகற்றி, நல்லாட்சியைக் கொடுக்க முயல்வதே இன்றைய அரசுகளின் நோக்கமாகும். 'கூடி வாழ்ந்தால்தான் கோடி நன்மையைப் பெற முடியும்' என்ற அரசியல் உணர்வு இன்று ஒரு நாட்டின் தனிப்பட்ட அரசியலில் மட்டுமன்றிப், பன்னாட்டு அரசியலிலும் பேணப்படுகின்றது. ஆனால், அன்று போர்த்துக்கீசியர் இப்படிப்பட்ட ஒரு கொள்கையை மேற்கொள்ளவில்லை. அவர்கள் இந்திய அரசுகளிடையே நிலவிய பொறாமை, போட்டி, பூசல்களைத் தமது நன்மைக்கு அல்லது சுய நலத்திற்குப் பயன்படுத்திக்கொண்டனர். கட்சி வாதப் போக்கை அவர்கள் மேற்கொண்ட செயலானது பின்னர்ப் ஃபிரெஞ்சுக்காரர்களாலும் ஆங்கிலேயர்களாலும் இங்குக் கண் மூடித்தனமாகப் பின்பற்றப்பட்டது. பிற்கால ஐரோப்பியர்கள் இந்தியாவில் தமது ஆட்சி பலத்தையும் பரப்பையும் விரிவாக்கிக் கொள்வதற்குத் துணைபுரிந்த போர்த்துக்கீசியரின் ஆட்சிக் கொள்கை, ஆரம்பத்திலிருந்தே இங்கு ஒருவருக்கெதிராக மற்றவருடன் துணை நின்றும், உதவி புரிந்தும் அவற்றின் பயனைப் இறுதியில் தாமே பெரும் நன்மையைப் பெறுமாறு அமைந்திருந்தது. போர்த்துக்கீசியரின் ஆட்சியின் பயனாகச் சுதேசி இந்திய அரசுகள் தம்முள் கண்டதும், புரிந்து கொண்டதும் என்னவெனில் 'தாம் ஒரு போதும் ஒன்று சேர்ந்து செயல்பட முடியாது' என்ற உண்மையே யாகும். உதாரணமாகக் கள்ளிக்கோட்டை ஜமோரின், போர்த்துக்கீசியரின் சூழ்ச்சி அரசியலில் சிக்காமல், கொச்சி போன்ற கேரளக் கடற்கரை அரசுகளை

ஒன்று திரட்டி அந்நிய ஆதிக்கமும், சக்தியும் இங்குக் கால்கொள்ள முடியாதபடி செய்திருக்க முடியும். ஆனால், நடந்ததோ வேறு. இந் நாட்டின் அரசியல் தலைவிதி (Political fate) வேறு விதமாய் அமைந்திருந்தது. எனவேதான் போர்த்துக்கீசியர் ஆசை காட்டி மோசம் செய்வதை ஒரு கொள்கையாகவே உருவாக்கி விட்டுச் சென்றனர். இப்படி, இந்த ஆட்சியினால் ஏற்பட்ட விளைவு பின்னர் ஆங்கிலேயரால் வெகு தீவிரமாய்த் திணிக்கப்பட்டு, இன்றும் அச் சக்தி முற்றிலும் அகற்றப்படாவண்ணம் இந் நாட்டு அரசியலில் அமிழ்ந்துள்ளது. இது போர்த்துக்கீசிய ஆட்சியினால் தோன்றிய இரண்டாவது விளைவாகும்.

ஆட்சிக் கலையில் போற்றத் தக்க சாதனைகளைப் போர்த்துக்கீசியர் செய்யவில்லை யாயினும், அவர்களின் ஆட்சிப் பயனாய் இந்திய நாடு போர் முறைகளைப் பற்றிய புதிய செய்திகளையும், வழிவகைகளையும் கற்றுக்கொள்ள முடிந்தது. தொன்றுதொட்டு நால்வகைப் போர்ப்படைகளை மட்டும் அறிந்திருந்த இந்திய அரசுகளைப் பீரங்கி மற்றும் கப்பற் படைகளின் முக்கியத்துவத்தையும் உணரச் செய்தது போர்த்துக்கீசிய ஆட்சியினால் ஏற்பட்ட மற்றொரு விளைவாகும்.

நான்காவதாக, போர்த்துகீசியர் நம் நாட்டில் பெற்றிருந்த அரசியல் செல்வாக்கும், ஆதிக்க அக்கறையும் மலையாளக் கடற்கரைப் பிரதேசங்களில் பெருமளவில் பரவியிருந்தன. அவை இந்திய நாட்டின் மையப் பகுதிகளுக்குப் பரவ முடியவில்லை. போர்த்துக்கீசியர் விசயநகரப் பேரரசுடன் நட்பைக் கொண்டிருந்தபோதிலும், அவர்கள் அப் பேரரசுடன் தமது வணிக உறவை மட்டும் பலப்படுத்திக்கொண்டனர். ஆனால், அப் பேரரசு முஸ்லிம்களுடன் மேற்கொண்ட போர்களில் எவ் வுதவியையும் அவர்கள் வழங்கவில்லை. இவற்றைக் கருத்தில் கொண்டு சிந்திக்கும் பொழுது போர்த்துக்கீசியர் இந் நாட்டில் தமது நிலையையும், அக்கறையையும் மட்டும் பலப்படுத்திக் காப்பாற்றிக் கொள்வதில் நாட்டம் கொண்டிருந்தனர் என்பதும், தம் பீரங்கிக் கப்பல்களின் உதவியால் எப் பிரதேசங்களைப் பிறருக்கு இரையாகாவண்ணம் காப்பாற்றிக் கொள்ள முடியுமோ அவ் விடங்களில் மட்டும் கவனத்தைக் கொண்டவர்களாகவும், சமயோசிதம் போல் தேவையானவர்களிடம் உறவை வைத்துக்கொண்டு தமது அதிகார நிலையை வலுப்படுத்திக் கொண்டவர்களாகவும் இருந்தனர் என்பதும் நன்கு விளங்குகின்றன. இவை அரசியல், அரசு, ஆட்சி என்பவற்றில் சுயநலம் பேணப்படலாகாது; பொது நலமே பேணப்படவேண்டும் என்ற படிப்பினையைக் கொடுத்துள்ளன.

போர்த்துக்கீசியரின் ஆட்சியினால் இந்திய வர்த்தகம் போற்றிச் சொல்லும் வகையில் விரிவடைந்தது என்றும் கூற முடியாது. இந்தியப் பொருள்களுக்கு மேற்கு ஆப்பிரிக்கா, பிரேசில் போன்ற நாடுகளில் நல்ல கிராக்கியும் தேவையும் இருந்தது உண்மையே. எனினும், இதில் அந்நியரான போர்த்துக்கீசியரே அதிக இலாபத்தை அடைந்தனர். அதே சமயம் மிக்க விலைமதிப்புடைய ஐரோப்பிய ஆடம்பரப் பொருள்களுக்கு இந்தியப் பிரதேசங்களில் அதிக ஆதரவும், அங்காடியும் (market) கிடைக்கவில்லை. ஏனெனில், அவைகளை வாங்கக்கூடிய சக்தியை இந்தியர்கள் அன்று பெற்றிருக்க வில்லை. எனவே, நமது கைவிரலைக் கொண்டு நமது கண்ணையே குத்தச் சொல்வதைப்போல், அந்நியர்கள், மேலை நாடுகளுக்குத் தேவையான வாசனைப் பொருள்களையும் பிறவற்றையும் நம்மிடத் திலிருந்து பெற்று, அதன் வர்த்தகத்தின்மூலம் தமது செல்வத்தை அதிகரித்துக் கொண்டு, இவற்றிற்கெல்லாம் மூல காரணமாயிருந்த நம்மையே அடக்கி ஆளக்கூடிய விளைவைப் போர்த்துக்கீசிய ஆட்சி ஏற்படுத்தியது. ஆனால், போர்த்துகீசிய ஆட்சியினால் மேலை நாடு களுக்கும் இந்தியாவிற்குமிடையே இருந்த வணிக மார்க்கங்களைப் பிறரது கடற்கொள்ளைத் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றிய நல் விளைவு ஏற்பட்டது என்பதை நாம் மறுக்க முடியாது.

இந்தியப் பண்பாட்டிலும், கலாசாரத்திலும் போர்த்துக் கீசியர் தோற்றுவித்த சில மாற்றங்களும் சீர்திருத்தங்களும் அவர் களுடைய ஆட்சியின் பயனாய் ஏற்பட்ட விளைவுகளில் குறிப்பிடத் தக்கவையேயாகும். எனினும், அவர்கள் நினைத்ததைப் போலவும், விரும்பியதைப் போலவும் இந்திய நாடு கிறித்துவ உலகமாக மாறி விடவில்லை. தமது ஆட்சிக்கு உட்பட்டிருந்த பிரதேசங்களில் இந்தியர் பலரைக் கிறித்துவ மதத்திற்கு மாறுமாறு தூண்டி வெற்றி பெற்றபோதிலும், அதன் மூலம் கிறித்துவ மதத்தின் அடிப்படையில் அரசியல் சூழ்நிலைகளையும், சம்பிரதாயங்களையும் உருவாக்கிவிட முடியும் என்று போர்த்துக்கீசியர் மேற்கொண்ட முயற்சியில் தோல்வியையே தழுவினர். கிறித்துவ மதக் கொள்கைகள் இங்குக் காலூன்றிய போதிலும், இந்தியர்கள் தமது தனித்தன்மையை இழந்து விடவில்லை. எனவே தான் போர்த்துக் கீசியரின் தூண்டுதலால் மதம் மாறியவர்கள்கூடத் தம்மைக் 'கிறித்துவப் பிராமணர்கள்,' 'சத்திரியக் கிறித்துவர்கள்' என்று கூறிக்கொண்டனர் என்று அறிஞர்கள் பலர் எடுத்துக் காட்டி யுள்ளனர். எனினும், இன்று எல்லோருடைய பேராதரவிற்கும் உட்பட்டுள்ள கலப்புத் திருமணம், விதவைத் திருமணம், சதி ஒழிப்புப் போன்ற பலவற்றிற்குப் போர்த்துக்கீசியர்கள் பின்பற்றிய சீர்திருத்த முறைகள் வித்திட்டன என்று கூறலாம். ஆனால், இச்

சீர்திருத்தங்களை அவர்கள் செய்ய முனைந்த காலத்தில் நம் நாட்டு மக்கள் அவைகளுக்கு ஆதரவளிக்காது வெறுப்பைக் காட்டினர் என்பதையும் நாம் மனத்திற் கொள்ளவேண்டும். ஓரளவு அவர்கள் போர்த்துக்கீசிய மொழியைக் கோவா, டாமன், டையூ ஆகிய இடங்களில் புகுத்த முனைந்தபோதிலும், இறுதியில் அவர்கள் அதில் வெற்றியைக் காண முடியவில்லை. அன்றும் சரி, இன்றும் சரி கோவாவின் மக்கள் கொங்கணி மொழியைத்தான் பெரு வழக்கில் கொண்டிருந்தனர்; கொண்டுள்ளனர். ஆனால், தமது மொழியின் மூலம் பிற நாட்டு மக்களை ஆட்படுத்திவிட முடியும் என்ற பாடத்தை, படிப்பினையைப் போர்த்துக்கீசிய ஆட்சி பிறருக்குப் புகட்டியது என்பதில் ஐயமில்லை. இந்தியாவில் பிரிட்டிஷாரால் ஆங்கில மொழி புகுத்தப்பட்டு நிலைபெறு மிக்க இடத்தைப் பெற முடிந்தது போர்த்துக்கீசிய ஆட்சி கற்றுத் தந்த பாடமேயாகும். இப்படிப் பல விளைவுகளையும், படிப்பினைகளையும் நல்கிய போர்த்துக்கீசிய ஆட்சி இறுதியாக இந் நாட்டை விட்டு 1961ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் அகற்றப்பட்டது. பழைய போர்த்துக்கீசிய இந்தியப் பிரதேசங்கள் யாவும் இன்று இந்திய ஒன்றியத்தின் உட்பகுதிகளாக உயர் நிலையைப் பெற்றுள்ளன.

டச்சுக்காரர்களின் இந்திய ஈடுபாடுகள்

ஐரோப்பிய வரலாற்றில் காணப்படும் சிறப்புச் செய்திகளில் ஒன்று, பதினாறும் நூற்றாண்டு வரை பலதரப்பட்ட ஐரோப்பியர் கள் கிறித்துவ மதத்தின் அடிப்படையில் உலகப் பெருநோக்கைக் கொண்டிருந்ததாகும். ஆனால், பிற்காலத்தில் ஏற்பட்ட கிறித்துவச் சீர்திருத்த இயக்கத்தின் காரணமாக அவர்கள் கத்தோலிக்கக் கிறித்துவர்களென்றும், புராடஸ்டாண்டுகள் என்றும் பிரிவுண்டு பகைமை கொள்ளலாயினர். இதன் காரணமாகக் கத்தோலிக்க மதத்தைத் தழுவியிருந்த ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகளுக் கெதிராகப் புராடஸ்டாண்டுகளைக் (Protestants) கொண்டிருந்த டச்சுநாடு பகைமையைப் பாராட்டி வணிகம், காலனி ஆதிக்கம் ஆகிய துறைகளில் போட்டிகளை மேற்கொள்ளலாயிற்று. இதற்குத் துணைபுரிந்தாற்போல் பதினாறும் நூற்றாண்டின் இடைக்காலம் முதற்கொண்டே தமது கடலாதிக்கத்தை மட்டுமன்றி, வணிகம் மற்றும் அரசியல் செல்வாக்கையும் போர்த்துக்கீசியர் இழக்கத் தொடங்கினர். இச் சூழ்நிலைகளில் நெதர்லாந்து (Netherland) என்னும் டச்சுக்காரர்களின் அரசு, தன்னை ஆட்படுத்திக்கொண் டிருந்த ஸ்பெயின் தேசத்தின்மீது புரட்சி நடவடிக்கையை மேற் கொண்டது. 1580-ல் போர்ச்சுகல் ஸ்பெயின் நாட்டின் கீழ் வந்தது. இந்த இடைக்காலத்தில் டச்சுக்காரர்கள் தமது அரசியல் மற்றும் வணிகச் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளும் பணியி

ஈடுபட்டனர். ஆனால், அவர்களுடைய துணிவுகளுக்குப் போர்த்துக்கீசியரால் துன்பம் நேர்ந்தது. அவர்களுடைய கப்பல்கள் போர்த்துக்கீசியரால் பெரிதும் சேதப்படுத்தப்பட்டன. எனவே, இந்தியாவிற்குச் செல்வதற்கென ஆர்க்டிக் கடலின் வழியாகத் தனிப்பட்டதோர் மார்க்கத்தைக் கண்டு பிடிப்பதைவிட போர்த்துக்கீசியரின் முற்றுரிமைக்கு உட்பட்டிருந்த கடல் மார்க்கத்தைப் போரிட்டுப் பெற்றனர். பின்னர் என்கூஸன், ஆம்ஸ்டர்டாம் எனும் டச்சு நகரங்களில் இருந்த வர்த்தகர்கள் தத்தம் வணிக நிறுவனங்களை நிறுவினர். மேலும் ஒருமித்த முயற்சியின் மூலம் வணிகத்தையும், பொருளீட்டத்தையும் வளர்த்துக் கொள்ளும் வகையில் அவ் வணிக நிறுவனங்கள் யாவற்றையும் ஒரு குடையின்கீழ்க் கொண்டுவந்தனர். இதன் விளைவாகத் தோன்றியதே 'டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி' (Dutch East India Company) ஆகும். டச்சு அரசாங்கம் இவ் வணிக நிறுவனம் இந்தியாவில் இருபத்தோராண்டுக் காலம் வணிகம் செய்வதற்கான முற்றுரிமையைக் கொடுத்தது. டச்சு அரசாங்கத்தினால் அதற்கென ஒரு சாசனம் அல்லது பட்டயம் (Charter) கொடுக்கப்பட்டது. அச் சாசனத்தில் சொல்லப்பட்டிருந்த செய்திகளுக் கேற்பவே டச்சுக்காரர்களின் செயல்கள் பின்னர் அமைந்தன. அவ்வமயம் ஐக்கிய நெதர்லாந்தின் மாநிலங்களிடையே பொறுமையும், வர்த்தகப் பெருமக்களிடையே வலிவான போட்டிகளும் பெருகியிருந்தன. இப் போட்டிகள் யாவும் நாட்டுப் பற்றை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டவையே யென்றாலும், அவற்றால் நாடு பெறவிருந்த வணிக இலாபத்தை இழக்கக்கூடாது என்ற குறிக்கோள் அப் பட்டயத்தின் மூலம் தெளிவாக்கப்பட்டது. எனவே, போட்டியாளர்களிடையே சமரசத்தைத் தோற்றுவித்து, பலதரப்பட்ட வணிகர்களால் பெறப்படவும், தரப்படவும் இருந்த பலன்களை ஒன்றிப்பான ஒரு மையக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வரும் வகையில் பின்வரும் சில செய்திகள் மேற் கூறப்பட்ட சாசனத்தின் மூலம் தெளிவாக்கப்பட்டிருந்தன.

ஐக்கிய டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி தனி நோக்குடன் கூடும் ஆறு வணிகர் குழாம்களை (Chambers) பெற்றிருக்க வேண்டும் என்றும், அத்தகைய குழாம்கள் ஒவ்வொன்றும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வணிக நிலையங்கள் நிறுவப்பட்டிருந்த நகரங்கள் ஒவ்வொன்றிலும் (ஆறு நகரங்களில்) இயங்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருந்தன. தன் வணிகக் கிளை நிலையங்களின் செயல்களை மையப்படுத்திப் பொதுக் கட்டுப்பாட்டிற்கு ட்படுத்தும் வகையில் வணிகர் குழாம்களைப் பிரதிநிதிப் படுத்தும் உறுப்பினர்களாக, மொத்தத்தில் பதினேழு இயக்குநர்

களைக் கொண்ட ஒரு மன்றம் நியமிக்கப்பட்டது. டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி கையாள விரும்பிய கலங்களின் எண்ணிக்கை, பணியாட்களின் எண்ணிக்கை, அது மேற்கொள்ளவேண்டிய வர்த்தகப் பொருள்களின் அளவு, வணிகச் செயல்களை மேற்கொள்ளுவதில் உச்ச அதிகாரத்தைச் செயல்படுத்தும் அதிகாரிகள் மற்றும் அவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைப் பற்றிய பொதுக் கொள்கையை நிர்ணயிக்கும் பொறுப்பும் அதிகாரமும் கம்பெனியின் பதினேழு இயக்குநர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இப் பொதுக் கொள்கையைச் சார்ந்தே ஐக்கியக் கம்பெனியின் மூலதனத்தில், தாம் பெற்றிருந்த பங்குகளுக்கொப்ப, தத்தம் நடைமுறைச் செயல்களை வணிகக் குழாம்கள் நிர்ணயித்துக் கொள்ளவேண்டியிருந்தது. பதினேழு உறுப்பினர்களைக் கொண்டிருந்த இயக்குநரகம் நாளடைவில் அதிகாரம் மிக்கதோர் கார்ப்பரேஷனாக விரைவாகச் செயல்படத் தொடங்கியது. இக் கம்பெனியுடன் பல தனிப்பட்ட நபர்களும், இருப்பு உடைமையாளர்களும் (Stock Holders) தொடர்பினைப் பெற்றிருந்த போதிலும், அது மேற்கொண்ட மேலாண்மையில் அல்லது நிர்வாகத்தில் எப் பங்கினையும் அவர்கள் பெற்றிருக்க வில்லை. அவர்கள் தத்தம் நகரங்களிலிருந்த வணிகர் குழாம்களில் செல்வாக்கைப் பெற்றிருந்தனர். ஆனால் பதினேழு இயக்குநர்களைக் கொண்டிருந்த மைய நிறுவனத்தில் எவ் வரசியல் தலையீடும் இருக்கவில்லை. இதனால் கீழை நாடுகளில் வர்த்தகம் மட்டுமன்றிக் காலனி ஆதிக்கச் செயல்களைத் தனிப்பட்ட இயக்கத்துடன் மேற்கொள்ளும் வகையில் ஒரு வணிக நிலையமாக மட்டுமன்றி, ஓர் அரசியல் நிறுவனமாகவும், அக் கார்ப்பரேஷன் விரைவாக மாற்றத்தைப் பெற்றது. அவ் வணிகர் குழாம்களின் இயக்கத்திற்குட்பட்டிருந்த நிலையில் அக் கார்ப்பரேஷன் இருந்ததால் அதனால் நிர்ணயிக்கப்பட்ட கொள்கை தேசியக் கொள்கையாகவே அமைந்தது. எனவே, போர்த்துக்கீசிய இந்தியா போர்ச்சுகல் மன்னரின் உச்ச அதிகாரத்திற்கு உட்பட்டிருந்ததைப் போலவே, டச்சுக்காரர்களின் இந்தியாவும் வணிகச் சிறு குழு ஆட்சியினரின் நிர்வாக இயக்கத்தின் மூலம் டச்சு மன்னரின் அதிகாரத்திற்குட்பட்டு இருந்தது.

இப்படி ஒரு தேசீயச் சாசனத்தின் மூலம் செயல்படுவதற்கு முற்றுரிமை கொடுக்கப்பட்டிருந்த டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி, 'மிளகுத் தீவுகள்'[1] என்று அழைக்கப்படும் இந்தோனேஷியத் தீவுகளில் தனது கவனத்தைச் செலுத்தியது. டச்சுக் கிழக்கிந்தியக்

1. இதனை நறுமணத் தீவுகள் என்றும் கூறுவதுண்டு.

கம்பெனியினர் 1619ஆம் ஆண்டில் ஜாகர்த்தாவைப் பிடித்து, அங்கிருந்து ஏலம், இலவங்கம், மிளகு போன்ற பொருள்களின் மூலம் இலாபகரமான வர்த்தகத்தை மேற்கொண்டனர். பின்னர் சுமத்ரா, ஜாவா, மொலுக்கஸ் தீவுக் கூட்டங்கள் ஆகிய யாவற்றிலும் தங்களுடைய குடியேற்றங்களை (Settlements) ஸ்தாபித்தனர். 1641-ல் மலாக்காவைப் போர்த்துக்கீசியர்களிட மிருந்து பிடித்தனர். 1638 முதல் 1658 வரை தமது கீழை நாட்டு வணிக முற்றுரிமைக்கான பட்டயங்கள் புதுப்பித்துக் கொடுக்கப்பட்ட நிலையில் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியினர், சிங்களவர்களுடன் சேர்ந்துகொண்டு போர்த்துக்கீசியர்களை இலங்கையிலிருந்து விரட்டியடிக்கும் போராட்டத்தில் வெற்றி கண்டனர். இதன் மூலம் இலவங்கப்பட்டை மீதான போர்த்துக் கீசியரின் வர்த்தகமும் அதனால் பெறப்பட்ட அதிக இலாபமும் டச்சுக்காரர்களின் கைக்கு மாறின.

இந்தியாவைப் பொறுத்தவரை டச்சுக்காரர்கள் முதன் முதலில் தமது குடியேற்றத்தை 1605-ல் மசூலிப்பட்டினத்தில் அமைத்தனர். பின்னர் 1610-ல் சென்னைக்கு அடுத்த பழவேற்காடு (Pulicat) என்னுமிடத்தில் ஒரு குடியேற்றத்தை அமைத்தனர். 1613-ல் பழவேற்காட்டில் கோட்டை கொத்த ளங்களை அமைத்தனர். 1617ஆம் ஆண்டில் சூரத் என்னும் இடத்தில் தமது பண்டக சாலையை ஸ்தாபித்தனர். இதனைத் தொடர்ந்து புரோச், காம்பே, அகமதாபாத், பாட்னா, சின்சூரா, காஸிம் பஜார் போன்ற இடங்களிலும் தமது பண்டகசாலைகளை நிறுவினர். தென்னிந்தியாவில் 1658 முதல் 1663 வரை தூத்துக்குடி, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினம், கொல்லம், கொச்சி, கண்ணனூர் ஆகிய இடங்களில் தம் குடியேற்றங்களை நிறுவினர். இந்தியாவில் இவர்கள் போர்த்துக் கீசியர்களை ஆதிக்க மிழக்கச் செய்து, குறிப்பாகத் தென்னிந்தி யாவை விட்டு, அவர்கள் ஆதிக்கம் அகலும்படி செய்து, இறுதி யாகத் தமது தலைமை இடமாக நாகப்பட்டினத்தைக் கொண்டனர்.

மேற்சொன்ன நிலையில் டச்சுக்காரர்கள் தங்கள் ஆதிக்கத்தை வளர்த்து வந்த போதிலும் அவர்களுக்குப் பெரும் போட்டியாக ஆங்கிலேயர் நுழைந்தனர். நறுமணத் தீவுகளைப் பொறுத்தவரை ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட வர்த்தகப்போட்டி, டச்சுக்காரர் களின் செல்வாக்கை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் இந்தியாவில் டச்சுக்காரர்களால் ஆங்கிலேயர்களின் எதிர்ப்பை பச் சாமாளிக்க முடியவில்லை. உண்மையிலேயே சமநிலையை மேற்

கொள்ள முடியாத நிலையில் ஆங்கிலேயர்களின் வலிமைக்கு ஈடு கொடுக்க முடியாத வகையில் டச்சுக்காரர்களின் ஆதிக்கம் படிப் படியாக, ஆனால் உறுதியாக, வீழ்ந்த வண்ணமிருந்தது. மேலும் டச்சுக்காரர்கள்மீது தாங்க முடியாத ஆத்திரம் கொண்டு அவர் களின் ஆதிக்கத்தை எப்படியும் முறியடித்தே தீரவேண்டும் என்ற குரோதஉணர்ச்சியை ஆங்கிலேயர்கள் பெற்றிருந்தனர். டச்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர் மற்றும் ஜப்பானியர்களுக்கும் இடையே அம்பாய்னு என்னும் இடத்தில் நடந்த படுகொலை இக் குரோத உணர்ச்சியை மேலும் வளரச் செய்தது. இப் போரில் டச்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களையும், ஜப்பானியர்களையும் பெருமளவில் கொன்று குவித்தனர். இது 1623ஆம் ஆண்டு நடந்தது. இதனாலேயே ஆங்கிலேயர்கள் இந்தோனேஷியாவையும் தூரக்கிழக்கு நாடுகளையும் விட்டு இந்தியாவில் கவனத்தைச் செலுத்தி, டச்சுக்காரர்களை முறியடிக்கும் முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டு, முழுமையான வெற்றியையும் பெற்றனர். ஒன்றன்பின் ஒன்றாகத் தாம் ஆங்கிலேயர்களுக்கு எதிராக மேற்கொண்ட போர் களில் டச்சுக்காரர்கள் இந்தியாவில் தோல்வியைத் தழுவினர். டச்சுக்காரர்கள் 1759-ல் ஹுக்ளியில் தமது ஆதிக்கம் முறியடிக்கப் பட்டுப் பின்னர் 1781-ல் தமது தலைமையிடமான நாகப்பட்டினத் தையும் பிற இடங்களையும் ஆங்கிலேயரிடமும், ஃபிரஞ்சுக்கார ரிடமும் ஒப்படைத்து இந் நாட்டைவிட்டே சென்றுவிட்டனர்.

போர்த்துகீசியர்களைப் போலவே டச்சுக்காரர்களும் தமது ஆதிக் கத்திற்கு உட்பட்டிருந்த இந்தியக் குடியேற்றங்களில் உள்நாட்டு அரசியல் மற்றும் அரசாங்க முறைகளில் தலையிடாமல் ஆட்சிச் செயல்களை மேற்கொண்டனர். போர்த்துக்கீசியர் செய்ததைப் போல் இவர்கள் 1781ஆம் ஆண்டுவரை இந்திய நாட்டுச் சம்பிர தாயங்களிலோ, வழக்காறுகளிலோ, பழக்க வழக்கங்களிலோ எச் சீர்திருத்தங்களையும் தலையீடுகளையும் மேற்கொள்ளவில்லை. எனினும், இவர்களது ஆதிக்கம் வேரூன்றவில்லை. ஏனெனில், இவர்கள்மீது டச்சு அரசாங்கமோ, டச்சுக்கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநரகமோ, அல்லது ஆட்சி மன்றமோ பயனுறுதி மிக்க கட்டுப்பாட்டைச் செலுத்த முடியவில்லை. கட்டுப் பாட்டுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு சில உத்தரவுகள், கட்டளைகள் போன்றவற்றை இங்கிருந்தவர்கள் மதிக்கவில்லை. மாறாக மக்கள் வெறுக்கு மளவிற்கு ஊழல் மிகுந்த செயல்களையே அவர்கள் மேற் கொண்டனர். மேலும் போர்த்துக்கீசியர்களும், ஃபிரஞ்சுக்காரர் களும், ஆங்கிலேயர்களும் இந்தியச் சுதேசி அரசுகளிடமிருந்து பெற்றது போன்ற ஆதரவையும், பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி தனது தாய்நாட்டிலிருந்துபெற்ற உதவியைப் போன்ற உதவி

யையும் ஆதரவையும் டச்சுக்காரர்கள் பெறவில்லை. எனவேதான், டச்சுக்காரர்கள் வந்த சுவடு தெரியாமல் இந்தியாவை விட்டே சென்றுவிட்டனர்.

டச்சுக்காரர்களேயன்றி டேனர்களும் (Danes), ஆஸ்திரியர்களும், ஸ்வீடன் நாட்டவர்களும், இந்தியாவில் தமது தொழிற்சாலைகளை 18 ஆம் நூற்றுண்டில் நிறுவி ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் ஈடுகொடுக்க முடியாத நிலையில் விரைவில் இங்கிருந்து செல்லத் தொடங்கிவிட்டனர். 18 ஆம் நூற்றுண்டின் தொடக்க காலத்திலிருந்து, குறிப்பாக 1740 ஆம் ஆண்டு முதல், ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும், பிரிட்டிஷ்காரர்களுக்கும் இடையே நடந்த போட்டியில் இந்தியா சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. இவ் வாதிக்கப் போட்டியிலும்கூட இறுதி வெற்றி பிரிட்டிஷார்களுக்கே கிடைத்தது.

ஃபிரெஞ்சுக்காரர்களின் ஆரம்பக் கால இந்திய ஈடுபாடுகள்

ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் இந்தியர்களுக்கும் தோன்றிய உறவின் ஆரம்ப நிலையைப்பற்றிக் குறிப்பிடும் வகையில் ஹென்றி ஃபிராய்டிவாக்ஸ் என்பவர் '14ஆம் லூயி ஃபிரான்ஸ் தேசத்தை ஆண்ட வெகு காலத்திற்கு முன்பே, ஃபிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் காலடி வைத்திருந்தனர். 16ஆம் நூற்றுண்டின் மத்தியில் அஃதாவது போர்த்துக்கீசியர்கள் நன்னம்பிக்கை முனையின் வழியாகக் கேரளக் கடற்கரையை அடைந்த முப்பதாண்டுகளுக்குப் பின்னர், 1527ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஃபிரான்ஸைச் சேர்ந்த ரௌவன் வணிகர்களுக்குச் சொந்தமான ஒரு நார்மானியக் கப்பல் டையூவில் தென்பட்டது'[1] என்று கூறுகிறுர். பேராசிரியர் சர் பெர்ஸிவல் கிரிஃபித்ஸ் இதைப் பற்றிக் கூறும்பொழுது, 'ஏறத்தாழ 1527ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர்கள் இந்தியாவை வந்தடைவதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னதாகவே டையூவிற்கு ஒரு ஃபிரெஞ்சு வர்த்தகக் கப்பல் வந்தடைந்தது,'[2] என்று கூறுகின்றுர். இப்படிப் பதினாறும் நூற்றுண்டின் தொடக்க காலத்திலேயே இந்தியாவுடன் வணிக உறவைத் தொடங்கிவிட்டிருந்த ஃபிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் பெற்ற வளர்ச்சியை மூன்று காலக் கட்டங்களாகப் பகுக்கலாம். இதைப்பற்றிச் சர் பெர்ஸிவல் கிரிஃபித்ஸ் கூறும்பொழுது, "ஆரம்பகால முதற்கொண்டு 1715 வரை அடங்கிய காலம் முதற் கட்டமாகும். இக் காலத்தில் ஃபிரெஞ்சுக்காரர்கள் அமைதியான

1 Dodwell Constitutional History of India, p. 61.

2 Sir. Percival Griffiths. The British Impact on India p. 60.

முறையில் குடியேற்றங்களைத் தோற்றுவித்தனர். இக் காலப் பகுதியில் ஃபிரெஞ்சுக்காரர்களுக்குத் தலையாய எதிரிகளாக இருந்தவர்கள் டச்சுக்காரர்கள். 1715 முதல் 1740 வரையிலான காலப் பகுதியைப் ஃபிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய வணிகச் செயல்களைச் சீரமைத்து வர்த்தகத் தேர்ச்சியை மேற்கொண்ட காலம் எனலாம். இஃது இரண்டாம் காலக் கட்டமாகும். மூன்றாவது காலப் பிரிவு 1741-ல் தொடங்கி 1763-ல் முடிந்த 22 ஆண்டுகளைத் தழுவியதாகும். இம் மூன்றும் காலப் பிரிவில் ஃபிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயருடன் இராணுவப் போட்டிகளையும், போர்களையும் மேற்கொண்டு, இறுதியில் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு அடிபணிந்து தமது செல்வாக்கை முழுமையாக இழந்தனர்.'[1] இந் நூலின் குறிக்கோளைப் பொறுத்தவரை, 1741 முதல் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் மேற்கொண்ட பலதரப்பட்ட செயல்களும், நடவடிக்கைகளுமே முக்கியமானவையாய்க் கருதப்பட்டாலும், ஆரம்பகால முதற்கொண்டு, 1740 வரை ஃபிரெஞ்சுக்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட செயல்கள் புறக்கணிக்கப்பட முடியாதவையே. ஏனெனில், 1740 வரை ஃபிரெஞ்சுக்காரர்கள் மேற்கொண்ட துணிவுகள் இந் நூலின் பாடப்பகுதியின் முதல் பாதி வரையிலான பாடச்செய்திகளுக்கு அடித்தளத்தை நாட்டி, முக்கியத்துவத்தைக் கொடுப்பதாய் உள்ளன. எனவே, ஃபிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்க வரலாற்றுக் காலத்தில் அவர்கள் ஆங்கிலேயர்களுடனும், இந்தியச் சுதேசி அரசுகளுடனும் மேற்கொண்ட உறவுகள் மற்றும் போர் நடவடிக்கைகள் அரசியல் ஈடுபாடுகள் போன்றவற்றைக் காணப் புகுமுன், அவர்கள் முதல் இருகாலப் பிரிவுகளில் மேற்கொண்ட செயல்களையும், அவர்கள் எவ்வாறு எங்கெங்குத் தமது கால்களை ஊன்றி வர்த்தக நிலையங்களையும், குடியேற்றங்களையும் நிறுவிப் பின்னர், அவற்றின் பயனாய் பெரியதோர் அரசியல் சக்தியாய் உருவெடுத்தனர் என்பதையும் சிறிது சுருக்கமாக அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

முன்னரே கூறியது போன்று, ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்னரே கி.பி. 1527-ல் ஒரு ஃபிரெஞ்சு வணிகக் கப்பல் டையூவை வந்தடைந்தது. அதற்குப் பின்னர், ஃபிரெஞ்சுக்காரர்கள் தனிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு கீழைநாடுகளுடன் குறிப்பாக இந்தியாவுடன், வர்த்தக உறவை வளர்த்து வந்தனர். ஆனால், ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு ஆங்கிலேயர்கள் ஆரம்ப காலத்தில் பெற்றிருந்ததைப் போன்ற ஆர்வமும், அக்கறையும், திறமையும் இல்லை. ஆனால், மற்ற

[1] Sir. Percival Griffiths. The British Impact on India p. 60

ஐரோப்பியர்கள் கீழைநாடுகளுடனும், இந்தியாவுடனும் வர்த்தகத்தைப்பரப்பிப் பெரும் செல்வத்தைச் சம்பாதித்திருந்தனர். அவர்கள் பெற்ற இச் செல்வநிலையே பின்னர் ஃபிரெஞ்சு அரசாங்கத்தை இந்தியாவுடன் வணிகச்செயல்களை மேற்கொள்ளத் தூண்டியது. 17ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்குப் பிறகு ஃபிரெஞ்சு அரசாங்கத்தில் கால்பர்ட் (Colbert) என்பவர் அமைச்சராயிருந்தார். இவர் ஃபிரெஞ்சு அரசாங்கமும் கீழைநாடுகளுடன் வணிகத்தை மேற்கொண்டு செல்வத்தைப் பெறவேண்டும் என்ற ஆர்வத்தினால் உந்தப்பட்டு அதற்கெனப் பல முயற்சிகளை மேற்கொண்டார். இவர் மேற்கொண்ட முயற்சிகளில் முதன்மையானதும், முக்கியமானதும் 1664ஆம் ஆண்டில் இரண்டு வணிக நிறுவனங்களை ஸ்தாபித்ததாகும். அவ் வணிக நிறுவனங்கள் முறையே மேற்கிந்தியக் கம்பெனி (West India Company) என்றும், கிழக்கிந்தியக் கம்பெனி என்றும் பெயரிடப்பட்டன. இவற்றில் ஃபிரெஞ்சு மேற்கிந்தியக் கம்பெனி நாடு பிடித்து மக்களை மதமாற்றம் செய்வதைக் குறிக்கோளாய்க் கொண்டிருந்தது. ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியோ டச்சுக்காரர்களுடனும், ஆங்கிலேய வணிகர்களுடனும் போட்டிபோட்டு இந்தியாவில் வியாபாரத்தை மேற்கொண்டு செல்வத்தைச் சேகரிக்கும் குறிக்கோளைக் கொண்டிருந்தது.

ஆனால், பெர்ஸிவல் கிரிபிஃத்ஸ் எடுத்துக்காட்டியிருப்பது போல் ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டதற்கு முன் ஃபிரெஞ்சு அதிகாரிகள் பெருமளவில் விளம்பரங்களினால் மக்கள் அக் கம்பெனியில் பண முதலீட்டைச் செய்யும்படி தூண்டி வரவேற்றனர். ஆனால், நாட்டின் வணிக வகுப்பினரிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்கவில்லை. அதற்குப் பல காரணங்களும் இருந்தன. ஃபிரெஞ்சு மக்கள் அப்பொழுது தமது அரசாங்கத்தின் மீது போதிய நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை. எனவே, அரசின் அதிகாரிகள் மக்களிடமிருந்து தாம் எதிர்பார்த்த அளவிற்கு மூலதனத்தையும், ஆதரவையும் பெறமுடியவில்லை. மேலும், அரசாங்க அதிகாரிகளின் பிரசாரத்தை அவர்கள், 'தங்கள்மீது அதிகாரிகள் சுமத்த இருக்கும் வரிச்சுமைக்கு ஒரு உபாயமே' எனக் கருதிப் புறக்கணித்தனர். மேலும் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ஃபிரான்ஸிற்கும், ஸ்பெயினிற்கும் இடையேபெரும் போர்கள் நடந்த காலமாகும். ஸ்பெயினுடன் மேற் கொண்டபோரினால் ஃபிரெஞ்சு அரசாங்கம் பெரும் இழப்புகளுக்குஆளாகி இருந்தது. நொடித்திருந்த ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் கருவூலத்தை நிரப்ப உதவும் வகையில் ஏற்கெனவே பல வரிச் சுமைகளை வணிகர்கள் சுமந்திருந்ததால், அரசாங்க அதிகாரிகள்

வணிகர்களிடமிருந்து மூலதனத்தை வரவேற்க மேற்கொண்ட முயற்சிகளை அவர்கள் ஆதரிக்கும் நிலையில் இல்லை. கடல் கடந்து கலம் கட்டி, ஞாலம் புகழும் பொருளீட்டும் வணிகச் செயலை மேற்கொள்வதற்குத் தேவையான துணிச்சலையும், ஃபிரெஞ்சு வணிகர்கள்போதுமான அளவு பெற்றிருக்கவில்லை. பேராசிரியர் டாட்வெல் அவர்களும் மேற்கூறிய காரணங்களை எடுத்துக்காட்டியுள்ளார். அவற்றின் காரணமாக ஆரம்பகாலத்திலேயே அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்ற நிலையில் ஃபிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி இருந்த போதிலும், சம்பந்தப்பட்ட வணிக வகுப்பினரிடமிருந்து அக் கம்பெனிக்குத் தேவையான ஆதரவு கிடைக்கவில்லை. இதனை வலியுறுத்தும் வகையில், திருச்சபையின் கார்டினலாக இருந்த ரிசெல்யூ (Richelieu) என்பவர், 'தாம் நினைத்த மாத்திரத்திலேயே தமது முயற்சியின் பலன்களை நுகர விரும்பும் அவசரப் புத்தியைக் கொண்ட ஃபிரெஞ்சுக்காரர்கள் பெருங் கடற்பயணங்களைத் தழுவித் தீரமான செயல்களை ஆற்றிச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதற்குப் பொருத்த மற்றவர்களாக உள்ளனர்,' என்று அறிவித்தார். இவை எல்லாவற்றின் விளைவாக ஃபிரெஞ்சுக் கிழக்கிந்திய கம்பெனி, தான் எதிர்பார்த்த பதினைந்து மிலியன் லிவர்களுக்குப் (Livres) பதிலாக 2½ மிலியன்களையே திரட்ட முடிந்தது. ஃபிரெஞ்சு அரசர் 3 மிலியன் லிவர்களைப் ஃபிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனிக்கு முன் தொகையாகக் கொடுத்தார். இப்படி மக்களுடைய முழு ஆதரவைப் பெறுமல் ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி தோன்றியது.

மேற்சொல்லப்பட்ட சூழ்நிலையில் நிறுவப்பட்ட ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஆரம்பத்தில் இரண்டு பிரச்சினைகள் இருந்தன. அவையாவன: மடகாஸ்கர் தீவைத் தமது ஆதிக்கத்திற்குள்ளாக்கி அங்கிருந்து இந்தியாவுடன் வர்த்தகத்தை மேற்கொள்ளுதல் என்பது முதல் பிரச்சினையாகும். இக் குறிக்கோளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது பேராசிரியர் டாட்வெல், 'மடகாஸ்கரைத் தமது ஆதிக்கத்திற்குட்பட்ட காலனியாகக் கொள்வதன் மூலமே இந்தியாவுடன் நீண்டதோர் வணிகப் பயணத்தை மேற்கொள்ளுவதற்கு ஃபிரெஞ்சுக் கப்பல்களுக்கு நல்லதோர் துறைமுகம் கிடைக்கும்;எல்லாத்திசைகளிலும் ஃபிரெஞ்சுக் கம்பெனியின் கப்பல்கள் வணிகப் பொருள்களை விரைவுடன் எடுத்துச்செல்லவும் முடியும்,'[1] என்று குறிப்பிடுகின்றுர். கொள்கை அளவிலும், ஏட்டளவிலும் இது நல்லதொரு திட்டமாகவே இருந்தது. ஆனுல், நடைமுறையில் இம் மடகாஸ்கர் திட்டமானது பேரிடர்களைக் கொண்டதாய் இருந்தது. எனவே, கால்பர்ட்டினுல் இத் திட்டம்

1 Cambridge History of India, Volume V Chapter III

பின்னர் மாற்றப்பட்டு, இந்தியாவுடன் மட்டும் நேரடியான வர்த்தகத்தை மேற்கொள்வதில் அதி தீவிரமாகக் கவனம் செலுத்தப்பட்டது. இஃது இரண்டாம் பிரச்சினையாகும். இதன்படி பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் விவகாரங்கள் பின்வருமாறு அமைந்தன.

1644ஆம் ஆண்டில் வணிக வகுப்பினர்கள் ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியில் குறைந்த அளவு பங்குகளே பெற்றிருந்தனர். இவைகளை அதிகரிக்கும் வகையில் ஃபிரெஞ்சு அரசாங்கம் ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியே இந்தியாவுடன் நேரடியான முறையில் வர்த்தகத்தை மேற்கொள்ளும் என்று அறிவித்த போதிலும், இவ் வணிகத் துணிவிற்கு வணிக வகுப்பினர்கள் காட்டிய ஆதரவில் சிறிதும் முன்னேற்றம் இல்லை. அதற்கு மாறாக அவ் வாதரவு குறையத் தொடங்கியது. மேலும், 1665 ஆம் ஆண்டில் ஏற்கெனவே அரைமனத்துடன் பங்குகளைப் பெற்றிருந்த குறைந்த அளவிலான பங்குதாரர்களை இரண்டாவது தவணைத் தொகையையும், 1666–ல் மூன்றும் தவணையையும் கட்டும்படி அரசு வற்புறுத்தியது. அரசாங்கத்தின் இந்தக் கடுமையான போக்கிற்கு ஈடுகொடுக்க முடியாமல் இருந்த பங்குதாரர்கள் விலக வேண்டியிருந்தது. இதனால் ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி, ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் சாதாரணமானதோர் இலாகாவாக மாறலாயிற்று.

அரசாங்கத்தின் சாதாரணமான ஓர் இலாகாவைப்போல் மாற்றத்தைப் பெற்றிருந்த ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி தனது வணிகத் தொடர்பான செயல்களை மேற்கொள்ளத் தொடங்கிற்று. இதன்படி பெர்பெர் (Ber Ber) என்பவர் ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் ஏஜண்டாக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். இவர் மொகலாயப் பேரரசரா யிருந்த ஔரங்கசீபைச் சந்தித்து, சூரத் என்னுமிடத்தில் வணிகச் சாலையை ஃபிரெஞ்சுக்காரர்கள் நிறுவிக் கொள்வதற்கான சலுகைக் கட்டளை (Firman) ஒன்றைப் பெற்றார். இதன் பயனாகவே 1667 ஆம் ஆண்டு டிசம்பர்மாதம் சூரத் என்னுமிடத்தில் ஃபிரெஞ்சுக்காரர்களின் முதல் வர்த்தக நிலையம் நிறுவப்பட்டது. 1669ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மசூலிப்பட்டினத்தில் ஃபிரெஞ்சுக்காரர்கள் தங்களது இரண்டாவது வணிகச் சாலையை நிறுவினர். இவ் விரு வணிக நிலையங்களை நிர்வகித்துப் பயனுள்ள வணிகச் செயல்களை மேற்கொள்ளும் பொருட்டுப் ஃபிரான்சிஸ் கெரான் (Francis Caron) என்பவரைத் தலைமை இயக்குநராகப் ஃபிரெஞ்சு அரசாங்கம் நியமித்தது. ஃபிரான்ஸிஸ் கெரானின் தலைமையில் அவர் ஆலோசனைப்படி

1669ஆம் ஆண்டிலேயே ஃபிரெஞ்சு அரசாங்கம் டி-லா-ஹெய் (De-La-Haye) என்னும் தளபதியின்கீழ் வலிமையானதொரு கடற்படையை இந்தியக் கடல்களுக்கு அனுப்பி வைத்து, அதன் மூலம் தனது அதிகார நிலையையும், தகுதியையும் இங்குள்ள அரசர்களுக்குக் காட்டியது. இச் செயல் டச்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் அச்சமூட்டுவதாய் அமைந்தது. ஆனால், கடற்படைத் தளபதியான ஹெய்யிற்கும், தலைமை இயக்குநரான கெரானிற்கும் இடையே பெருத்த கருத்து வேற்றுமைகள் தோன்றின. இதனால் டச்சுக்காரர்களுக்கு எதிராக ஃபிரெஞ்சுப் படை தனது உண்மையான பலத்தை வெளிப்படுத்த முடியாமல் போய்விட்டது. இது டச்சுக்காரர்களின் ஆதிக்கம் ஒடுக்கப் படுவதற்குக் காரணமாய் இருந்தது. ஆனால், தேவையில்லாத இடத்தில், தேவையற்ற சமயத்தில் ஃபிரெஞ்சுப்படை கோல்கொண்டாவின் அரசுக்கு எதிராகத் தனது போர்த்திறமையைக் காட்டியது. மேலும், சென்னையிலுள்ள சாந்தோமைக் கோல்கொண்டா அரசரின் ஆதிக்கத்தினின்றும் பறித்து இரண்டு ஆண்டுகளுக்குத் தனது கையில் இருத்திக்கொண்டது. இப்படிப் போரிட்டேனும் நாட்டின் சில பகுதிகளை, தேவையான இடங்களை, முக்கியத்துவம் வாய்ந்த கடற்கரைப் பிரதேசங்களை, கப்பல் துறை முகங்களைப் பிடிக்கவேண்டு மென்ற தளபதி ஹெய்யின் கொள்கைக்குத் தலைமை இயக்குநரான கெரானின் ஆதரவு நல்ல முறையில் கிடைக்கவில்லை. எனவே, ஃபிரெஞ்சு அரசாங்கம் கெரானைப் பதவியிலிருந்து திருப்பி அழைத்துக்கொண்டு, ஃபிரான்ஸிஸ் மார்டின் (Francis Martin) என்பவரை ஆளுநராக நியமித்தது. 1672-ல் இந்தியாவிலிருந்த ஃபிரெஞ்சு வணிகச் சாலைகளின் ஆளுநராக நியமிக்கப்பட்ட ஃபிரான்ஸிஸ் மார்டின், தளபதி ஹெய்யிற்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் கொடுத்தார். எனினும், 17ஆம் நூற்றாண்டில் ஃபிரெஞ்சுக்காரர்கள் இந்தியச் சுதேசி அரசர்களுக்கு எதிராகத்தான் தமது வெற்றியை நிலைநாட்ட முடிந்ததே தவிர, அப்பொழுது இந்திய மண்ணில் ஆதிக்கத்தைக் கொண்டிருந்த டச்சுக்காரர்களை முறியடிக்கவே முடியவில்லை. எனினும், ஃபிரான்ஸிஸ் மார்டின் அரசியல் சூழ்ச்சிகளிலும் தந்திரங்களிலும் ஈடுபட்டார். அவற்றின்மூலம், இந்திய அரசர்களைத் தமது வலையில் சிக்கவைத்து, டச்சுக்காரர்களை ஆதிக்க மிழக்கச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டு ஓரளவு வெற்றியும் பெற்றார். இதன்படியே அவர் பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய இரு அரசுகளிடையே இருந்த அரசியல் பொறாமையைப் பயன்படுத்திக் கொண்டு, பீஜப்பூர் சுல்தானுக்கு எல்லா உதவியையும் செய்தார். அதற்கான பரிசாகப் பீஜப்பூர் சுல்தானின் ஆளுகைக்குட்பட்டிருந்த பாண்டிச்சேரி பிரதேசம் ஃபிரெஞ்சுக்காரர்களுக்குக்

கிடைத்தது. இப் பாண்டிச்சேரியே இறுதியாகப் ஃபிரெஞ்சுக் காரர்களின் தலைமையிடமாகவும், முதன்மைச் செயலக நிலைய மாகவும் அமைந்தது. பிற்காலத்தில் இங்கிருந்தே அவர்கள் மேற்கொண்டு தமது மற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதற்குப் பின்னர் நாற்பதாண்டுக் காலம் ஃபிரெஞ்சுக்காரர் களுக்கும், டச்சுக்காரர்களுக்கும் இடையே போட்டிகள் நடைபெற்றன. ஒரே நேரத்தில் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் சில சமயங்களில் இந்தியாவில் மட்டும் இப் போட்டிகள் மலிந் திருந்தன. இப் போட்டிகளின் காரணமாகவே ஃபிரெஞ்சுக் காரர்கள் 1693-ல் பாண்டிச்சேரியை டச்சுக்காரர்களிடம் இழந்தனர். ஆனால், ஃபிரான்ஸிஸ் மார்டின் இரண்டாம் முறையாக ஆளுநராக நியமனம் செய்யப்பட்டதன் காரணமாக, 1697 - ல் டச்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டு, ரிஸ்விக் உடன்படிக்கையின் பயனாக மீண்டும் பாண்டிச்சேரி ஃபிரெஞ்சுக்காரர்களுக்குக் கிடைத்தது. ஃபிரான்ஸிஸ் மார்டின் 1706ஆம் ஆண்டு வரை ஆளுநராயிருந்து இறந்தார்.

ஃபிரான்ஸிஸ் மார்டின் இறந்தபின் ஃபிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திற் குட்பட்டிருந்த இந்தியப் பகுதிகளில் பெருங்குழப்பம் தோன்றித் தாறுமாறான நிர்வாகம் நடைபெற்றது. இக் குழப்ப நிலை 1720ஆம் ஆண்டுவரை நிலவியிருந்தது. இக் குழப்பம் அதிக மாகி நிலைமை மேலும் மோசமாவதற்குத் துணைபுரியும் வகையில் ஃபிரெஞ்சு அரசாங்கத்தினால் திறமையற்ற ஆட்சியாளர்கள் அனுப்பப்பட்டனர். மேலும், ஃபிரான்ஸும், ஹாலந்தும் தொடர்ச் சியான போர்களை மேற்கொள்ள வேண்டியிருந்ததால், ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிதிகள் மற்றும் மூலதனங்கள் முடக் கத்திற் குள்ளாயின. இப் பெருங்குழப்ப நிலையை அகற்றித் தனது வர்த்தக வளர்ச்சியைக் காப்பாற்றிக்கொள்ளும் பணியில் ஈடுபடுத்திக்கொள்ளும் வகையில் ஜீன்லா (Jeanlaw) என்பவரால் ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி சீரமைக்கப்பட்டது. இச் சீரமைப்பிற்குப் பிறகு ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் கட்டுப்பாடு மிகவும் இறுக்கி அமைக்கப்பட்டது. 1720 முதல் 1735 வரை லெனாயர் (Lenoir) என்பவர் பாண்டிச்சேரியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவருக்குப் பின் டூமாஸ் (Dumas) என்பவர் ஆளுநராக 1742 வரை இருந்தார். சீரமைக்கப்பட்ட ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களில் ஆளுநரா யிருந்த மேற்கூறிய இருவரது காலத்தில் ஃபிரெஞ்சுக் கம்பெனி பெருஞ்செல்வாக்கைப் பெற்றது. 1721-இல் ஆப்பிரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலுள்ள மொரிஷஸ் (Mauritius) எனும்

வணிக, இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தீவை ஃபிரெஞ்சுக் காரர்கள் தம்வசமாக்கிக் கொண்டனர். 1724-ல் மாகியும், 1739-ல் காரைக்காலும் ஃபிரெஞ்சுக்காரர்கள் கைக்குக் கிட்டின. காரைக்கால் அப்பொழுது தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னரின் ஆட்சியின்கீழ் இருந்தது. இதனைப் பிரெஞ்சுக்காரர்கள் போரிட்டுப் பெற்றனர். டூமாஸ் 1200 ஃபிரெஞ்சு சிப்பாய்களையும் 6000 இந்தியப் படைவீரர்களையும் கொண்ட ஒரு படையை மேலை நாட்டுப் பாணியில் உருவாக்கிப் பயிற்சியளித்து வைத்திருந்த தாலேயே மேற்கூறிய இடங்களைப் பெற்றதோடன்றி, காஸிம் பஜார், சந்திரநாகூர், பாலாசோர் ஆகிய இடங்களிலும் தம் நிறுவனங்களை ஃபிரெஞ்சுக்காரர்கள் நிறுவமுடிந்தது. மொகலாய அதிகாரிகளிடமிருந்து தமக்கென நாணயங்களை அச்சடித்துக் கொள்ளும் உரிமையையும் டூமாஸ் பெற்றார். மேலும் டூமாஸ், டியூப்ளே என்பவருக்கு வழிகாட்டும் வகையில், கர்நாடகத்தின் உள்நாட்டு அரசியல் மற்றும் அரியாசனப் போர்களில் பங்கு கொண்டு சூழ்ச்சிச் செயல்களை மேற்கொண்டார். மராத்தியர்கள் ஆற்காடு நவாபின் இடங்களைத் தாக்கியபொழுது, அவர் தோஸ்த் அலியின் பக்கம் சாய்ந்து, அவரது மருமகனை சந்தா சாகிப்பிற்குத் தமது ஆதரவையும் பாதுகாப்பையும் கொடுத்தார். ஹைதராபாத் நிஜாம் மராத்தியர்களுக்கு எதிராக ஃபிரெஞ்சுக்காரர்கள் பின் பற்றிய கொள்கைக்காக அவருக்கு வெகுமதிகளைத் தந்தார். மொகலாயப் பேரரசர் முகமதுஷாவோ 'நவாப்' எனும் பட்டத்தை டூமாஸிற்குக் கொடுத்தார். அது மட்டுமன்றி அவரை ஒரு மன்சப்தாராகவும் நியமித்தார். ஃபிரெஞ்சுக்காரர்கள் வணிகத்தை மையமாகக் கொண்டு இப்படித் தேர்ச்சியான பல மாற்றங்களையும், வளர்ச்சியையும் பெற்றபோதிலும், 1740 வரை ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி வலிவுமிக்க கால்கோள்களை ஊன்றியிருந்த போதிலும், டியூப்ளே 1742-ல் ஆளுநராக நியமிக்கப்பட்டவுடன் பிரெஞ்சுக்காரர்களின் கொள்கை, முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் மாற்றத்திற் குட்பட்டது. நல்ல முறையில் வலுவாகக் காலுன்றி யிருந்த ஃபிரெஞ்சுக்காரர்கள் பல எதிர்ப்பு களை-இந்திய நாட்டுச் சுதேசி அரசர்களின் எதிர்ப்புகளை மட்டுமன்றி ஆங்கிலேயருடைய போட்டி எதிர்ப்புகளையும்-எதிர்நோக்கிச் சமாளிக்க வேண்டியிருந்தது, பின்னர், ஆங்கிலேயருக்கு இணையாகப் பல ஆண்டுகள் இங்கு அரசியல் மற்றும் போர் ஈடுபாடுகளை மேற் கொண்டு, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் செல்வாக்கிற்குட் படாமல், பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம் ஆகிய

இடங்களில் தங்கியிருந்த ஃபிரெஞ்சுக்காரர்கள் இந் நாடு சுதந்திரத்தைப் பெற்று ஒரு குடியரசாக (Republic) மாறிய பின், தாமாகவே இறுதியாக இந் நாட்டைவிட்டுச் சென்றனர். அவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம் ஆகிய இடங்கள் இன்று இந்திய மைய அரசின் யூனியன் பிரதேசங்களுள் (Union Territories) ஒன்ருக உள்ளன. இதற்கிடையில் ஃபிரெஞ்சுக்காரர்களையும், அவர்கள் கொண்டிருந்த இந்தியச் செல்வாக்கையும் எதிர்த்துப் போராடி, அவர்களை ஆதிக்கம் குன்றுமாறு செய்து, இந்திய அரசியலில் ஒரு பெருஞ்சக்தியாக ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி உருவெடுத்தது என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

2. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி (1600 - 1765)

கிழக்கிந்தியக் கம்பெனியின் தோற்றமும் அதன் ஆரம்ப கால அரசியல் அமைப்பின் வளர்ச்சியும்

உலகச் சிறப்பையும் புகழையும் பெற்றுள்ள நம் தாய்த் திரு நாட்டின் அரசியல் அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது அந்நியர்களான ஐரோப்பியர்கள், குறிப்பாக ஆங்கிலேயர்கள் தம் வணிக நிறுவனங்களையும் நிலையங்களையும் தோற்றுவித்துப் பின்னர், அரசியல் ஆதிக்கத்தை வேரூன்றச் செய்து, தமது பேரரசை இங்கு நிறுவியதாகும். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் ஆரம்ப காலத்தில் வணிகத்தையும், பின்னர் வணிகத்தோடு இயைந்திருந்த சூழ்ச்சி அரசியலையும், ஆட்சியையும் மேற்கொண்டு, தம் காரியங்கள் 1858ஆம் ஆண்டின் பெரும் பகுதி வரை தழைத்தோங்கி யிருக்குமாறு செய்தனர். ஏறத்தாழ இந்தியா முழுவதையும் தமது அரசியல் மற்றும் அரசாங்க ஆதிக் கத்தின்கீழ்க் கொண்டுவந்திருந்த கம்பெனியினரின் ஆட்சி, 1858ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் முதல் நாள் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் (Crown) நேரிடையான ஆளுகைப் பொறுப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றிற்குக் கைமாற்றம் செய்யப்பட்டது. பின்னர், 1947ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள் பதினைந்தாம் நாள் வரை பிரிட்டிஷ் ஆட்சி இங்கு நிலவியது. இப்படி, ஏறத்தாழ இரு நூற்றாண்டுகள் நமது இந்தியத் திருநாடு அந்நிய ஆதிக்கத் திற்கும் ஆட்சிக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கத் துணைபுரிந்தது ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியும் அதன் செயல்களுமாகும். இக் கம்பெனி 1600ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் கடைசி நாளன்று ஸ்தாபிக்கப்பட்டது. அந்த நாள், இந்தியாவில் புதிய தோர் அரசியல் சகாப்தத்தை உருவாக்குவதற்குக் கால் கோள் நாட்டப்பட்ட நாளாகக் கருதப்படலாம். ஆனால், இந்திய நாடு அந்நியரின் இறைமைக்கும் (Sovereignty), ஏகாதிபத்திய

வல்லாட்சிக்கும் பல்லாண்டுகள் உட்பட்டிருக்கும்படியான தலைவிதியை அறிந்தோ அறியாமலோ, முன் கூட்டியே நிர்ணயித்த நாளாக அதனைக் கருதலாம்.

எனினும், 'கெடுதலிலும் நல்லது இருக்கும்', 'நடப்பன வெல்லாம் நன்மைக்கே' எனும் ஆன்றோர் வாக்குகளுக்கொப்ப, இந் நாடு அரசியலிலும் அரசாங்க ஆட்சி முறைகளிலும் போக்கு களிலும் ஆங்கில நாட்டு அரசியலையும் ஆட்சிப் பாரம்பரியங் களையும் நிறுவனங்களையும் அந்த அந்நியர் ஆட்சியின்கீழ்ப் பெற வாய்ப்பிருந்தது. பலதரப்பட்ட போட்டி பொறாமைகள், சூழ்ச்சிச் சூறுவளிகள், ஏய்ப்பு ஏமாற்றங்கள் ஆகியவைகளுக்கு உட்பட வேண்டிய நிலை இந்திய மக்களுக்கு அந்நியர் ஆட்சியின்கீழ் இருந்த போதிலும், ஆங்கிலேயரால் பல சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டு, இந் நாடு என்றும் ஒன்றுபட்டு இருக்கும்படியான ஓர் ஐக்கிய நிலையைப் பெற்றது. இன்றைய இந்தியாவின் அரசியல் சூழல், அரசாங்க அமைப்பு முறை, ஆட்சி நிறுவனங்கள், நிர்வாகச் செயல் முறைகள், நடை முறைகள் போன்ற பலவற்றுக்கும் நல்ல தொரு பின்னணியை வளர்ச்சிமுறைக்கு உட்படுத்திக் கொடுத்த வர்கள் ஆங்கிலேயர் என்ற காரணத்தால், அவர்கள் இங்கு வந்து ஆட்சி புரிய வழி செய்து கொடுத்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தோற்றம், அமைப்பு, அதன் ஆரம்ப கால வளர்ச்சி போன்ற யாவும் நமக்கு முக்கியமாகும்.

கி.பி. 1600ஆம் ஆண்டில் இலண்டன் மாநகரில் இருந்த வணிகர்கள் பிரிட்டிஷ் பேரரசி முதலாம் எலிசபெத்திடமிருந்து ஓர் அரச பட்டயம் அல்லது சாசனத்தைப் (Charter) பெற்றனர். இப் பட்டயத்தின் பயனாகவே 'கிழக்கிந்தியத் தீவுகளில் (East Indies) வர்த்தகம் புரிவதற்கான இலண்டன் மாநகர வணிகர் களையும், ஓர் ஆளுநரையும் கொண்ட வணிக நிறுவனம்' என்ற பெயருடன் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டது. இவ் வணிக நிறுவனம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும் பகுதி வரை பெயரும் புகழும் பெற்று இயங்கியது. இந்தியாவுடன் வணிக, வர்த்தகச் செயல்களைமட்டும் மேற்கொள்வதற்கென நிறுவப்பட்ட இவ் வணிக நிறுவனம், தனது வணிகக் குறிக்கோளை 1765ஆம் ஆண்டுவரை பின்பற்றியது. பின்னர், பல சூழ்நிலை களில், பற்பல காரணங்களால் தனது வணிகக் குறிக்கோளோடு இடம் பிடித்து அரசோச்சும் காலனி ஆதிக்க நிறுவனமாகவும் அது மாறியது. இம் மாற்றச் செயல் மேற்கொண்டு நடைபெறு வதற்குத் துணைபுரிந்த காலம் 17, 18 நூற்றாண்டுகளாகும். எனவே, 1740 முதல் 1947 வரை இந்தியாவில் நிலவிய அரசாங்கம்,

அரசியல் பாடத் திட்டத்தில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டதற்கான சூழ்நிலைகள், அதன் ஆரம்பகால அரசியலமைப்பு (Constitution), மற்றும் வணிகச் செயல்களின் வளர்ச்சி, இறுதியாக அது ஏகாதிபத்திய வல்லரசுச் சக்தியாக மாறியது போன்ற யாவும் மிக முக்கியமானதோர் இடத்தை வகிக்கின்றன. அவைகளைப் பற்றிய முக்கியமான செய்திகளைப் பின்வரும் சில பக்கங்களில் காண முற்படுவோம்.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி தோன்றியதற்கான சூழ்நிலைகளும் அதன் தோற்றமும்

ஐரோப்பியக் கண்டம் உலக அரசியல் அரங்கிலும் வரலாற்றிலும் தனக்கென சிறப்பானதோர் இடத்தைப் பெற்று வந்துள்ளது. இந்த ஐரோப்பியக் கண்டத்திலிருந்துதான், தாம் இதுகாறும் கண்டறியாதிருந்த புதியதோர் உலகமான கீழை நாடுகளுக்குப் புதிய மார்க்கங்களின் (routes) மூலம் வந்து போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், ஃபிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் போன்றோர் தமது செல்வாக்கைப் பரப்பினர். இவர்களுள் ஆங்கிலேயர்களைப் பற்றிய இந்தியச் செய்திகளை, ஐரோப்பிய வரலாற்றில் நிகழ்ந்துள்ள சில நிகழ்ச்சிகளையும் மற்றும் பல செய்திகளையும் உடன்வைத்து நாம் அறியவேண்டியுள்ளது. அப்பொழுதுதான் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தோற்றத்திற்கான சூழ்நிலைகள் போன்றவற்றை நாம் நன்கு உணர முடியும்.

ஐரோப்பிய வரலாற்றில் பதினைந்தாம் நூற்றாண்டு சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்ததாய் உள்ளது. ஏனெனில், இந் நூற்றாண்டில்தான் தனிப்பட்டதும் சிறப்பு வாய்ந்ததுமான நடவடிக்கைகள் பலவற்றை ஐரோப்பியர்கள் மேற்கொண்டனர். இக் காலத்தில் அட்டாமன் துருக்கியர்கள் (Ottaman Turks), லீவன்ட் (Levant) எனப்படும் மத்திய தரைக் கடலின் கிழக்குக் கரைப் பகுதியைச் சுற்றியிருந்த இடங்களைத் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டிருந்தனர். மேலும், துருக்கியர்களும் ஐரோப்பியர்களும் நட்புறவைக் கொண்டிருக்கவில்லை. இதனால் ஐரோப்பியர்கள் கீழைநாடுகளுடன் கொண்டிருந்த வணிகம் பெருந்தடைகளுக்குள்ளாயிற்று. ஏனெனில், துருக்கியர்கள், ஐரோப்பாவையும் கீழை நாடான இந்தியாவையும் இணைக்கும் வணிக மார்க்கத்தில் அமைந்திருந்த மத்திய தரைக் கடலின் கிழக்குக் கரைப் பகுதிகளை மூடினர். எனவே, துருக்கியர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வராத, அவர்களின் பிரதேசங்களின் வழியாகச் செல்லாத, புதியதொரு கடல் மார்க்கத்தைக் (Sea route) கண்டுபிடிக்க வேண்டிய

கட்டாயத்திற்கு ஐரோப்பியர்கள் ஆளாயினர். இம் முயற்சியில் இன்னல்கள் பலவற்றை ஏற்று முதற் பெரும் வெற்றியைக் கண்டவர்கள் போர்த்துக்கீசியர்களே யாவர். வாஸ்கோடகாமாவின் முயற்சியினுல் நன்னம்பிக்கை முனையின் (Cape of the Good Hope) வழியாக இந்தியாவிற்குப் புதிய கடல் மார்க்கம் கண்டுபிடிக்கப்பட்ட தென்பது முன்னரே எடுத்தியம்பப்பட்டது. பின்னர், போர்த்துக்கீசியர்களை அடுத்து ஸ்பானியர்களும் கீழை நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பை மேற்கொண்டனர். இதனுல் போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய இரு நாடுகளுக்கு மிடையே போட்டிகளும் கலகங்களும் மூண்டன. இறுதியாக இவ் விருநாடுகளுக்கிடையே அமைதியைத் தோற்றுவிக்கும் வகையில் போப் பாண்டவர் தலையிட வேண்டியிருந்தது. ஏனெனில் அவ் விருநாடுகளும் போப்பாண்டவரின் உச்ச இறைமைக்கு உட்பட்டவையாயிருந்தன. எனவே, 1493ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆரும் அலெக்சாண்டர் எனும் போப்பாண்டவர் ஓர் ஆணையைப் (Papal bull) பிறப்பித்தார். இதன் மூலம் ஐரோப்பியர்கள் கண்டுபிடித்திருந்ததும் கிறித்துவ மதத்தைச் சார்ந்திராததுமான இடங்கள் போர்ச்சுகலுக்கும் ஸ்பெயினிற்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டன. மேலும், ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையோரப் பிரதேசங்களை 370 கூட்டுக்கழகங்களைக் (Leagues) கொண்டதாய் அமைத்து ஒரு கற்பனை எல்லைக் கோட்டை அறிவித்துப் போர்ச்சுகலுக்கும் ஸ்பெயினிற்குமிடையே வர்த்தகம் செய்வதற்குரிய நிலப் பரப்பாகப் போப்பாண்டவரின் ஆணை தெளிவாக்கியது. இதன்படி, மேற்சொல்லப்பட்ட கற்பனை எல்லைக் கோட்டிற்குக் கிழக்கே அமைந்திருந்த இடங்கள் போர்த்துகீசியர்களுக்கும் மேற்கில் அமைந்திருந்த இடங்கள் ஸ்பானியர்களுக்கும் வர்த்தகம் புரிவதற்கான இடங்கள் என்று ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. இவ் வேற்பாட்டிற்கொப்பவே போர்ச்சுகலும் ஸ்பெயினும் தம் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டன. பின்னர், மேற்சொல்லப்பட்ட ஆணை 1506, 1514 ஆகிய ஆண்டுகளில் முறையே இரண்டாம் ஜூலியஸ், பத்தாம் லியோ ஆகிய போப்பாண்டவர்களால் புதுப்பிக்கப்பட்டது. எனவே, பதினாரும் நூற்றாண்டு முழுவதும் கிழக்கத்தியக் கடல்களும், கடற்கரைப் பிரதேசங்களும் போர்த்துக்கீசியர்களின் கட்டுப்பாட்டிற்கும் செல்வாக்கிற்கும் உட்பட்டவையா யிருந்தன. மேலும், போப்பாண்டவர் ஏற்படுத்திக் கொடுத்திருந்த ஏற்பாட்டை மீறிப் போர்த்துக்கீசியர் அல்லாத வேறெந்தக் கிறித்துவ நாட்டினரும் கீழை நாடுகளுடன் வணிகத்தை மேற்கொள்ளும் துணிவைப் பெற்றிருக்கவில்லை.

ஆனால், பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய நிலைமையில் பல பெரிய மாற்றங்கள் தோன்றின. அவற்றுள் முக்கியமானது, எஞ்ஞான்றும் எல்லோரது பெருமதிப்பிற்கும் உட்பட்டிருந்த போப்பின் அதிகாரம் ஐரோப்பிய அரசுகள் பலவற்றால் உதாசீனம் செய்யப்பட்டு, மதிப்பை யிழக்கத் தொடங்கியதாகும். பேராசிரியர் ஜான் குந்தர் கூறுவது போன்று 'பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதி போப்பாண்டவரின் ஆதிக்கமும் அதிகாரமும் கிறித்துவ அரசர்களாலேயே புறக்கணிப்பட்ட காலமாகும்.'[1] இப்படிப்பட்ட ஒரு மாற்ற நிலை ஐரோப்பாவில் தோன்றியதற்குக் காரணங்கள் சில இருந்தன.

நெடுங்காலமாகவே இங்கிலாந்து தேசம், கீழைநாடுகளுடன் தொடர்புகளையும் வணிக உறவுகளையும் ஏற்படுத்திக் கொள்வதில் பேரார்வத்தைக் கொண்டிருந்தது. ஆனால், அவ் வார்வமும் வாய்ப்பும் ஈடேறுவதில் போப்பாண்டவரின் சமய ஆணை தடையாயிருந்தது. அதேசமயம் போர்த்துக்கீசியர்கள் கீழை நாட்டு வணிகத்தின் பயனைப் பெரும் பொருளீட்டினர். இது ஆங்கிலேயரின் ஆர்வத்தைத் தூண்டிவிட்டது. எனவே, ஆங்கிலேயர் இந்தியாவை அடைவதற்கான தமது கடல் மார்க்கத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியை முன்னிலும் முனைப்பாக மேற்கொண்டனர். அதேசமயம் இங்கிலாந்தில் மதச் சீர்த்திருத்த இயக்கம் (Reformation Movement) வெற்றி நடைபோட்டுக் கொண்டிருந்தது. இவ் வியக்கத்தின் காரணமாகப் போப்பாண்டவரின் அதிகாரமும் அரசியல் செல்வாக்கும் இங்கிலாந்து நாட்டில் பலவீனமடைந்து தேய்ந்து மறைய ஆரம்பித்தன. இதற்கிடையில், 1580ஆம் ஆண்டு போர்ச்சுகலுக்கும் ஸ்பெயினிற்கு மிடையே நடந்த போரில் போர்ச்சுக்கல் ஸ்பெயினின் வசமாயிற்று. பின்னர், ஸ்பெயினிற்கும் இங்கிலாந்துக்கு மிடையே நடந்த வரலாற்றுச் சிறப்பும் அரசியல் முக்கியத்துவமும் வாய்ந்த 'ஸ்பானிய ஆர்மெடா' எனும் கடற்படைப் போரில் (Spanish Armada) ஸ்பெயின் இங்கிலாந்து நாட்டிடம் தோல்வி கண்டது. ஸ்பானிய ஆர்மெடாவில் இங்கிலாந்து நாடு பெற்ற வெற்றி ஆங்கிலேயர் கீழை நாடுகளுடன் வணிகத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கொண்டிருந்த தணியாத தாகத்தைத் தணித்தது. அவர்களுடைய கனவு நனவாகும் தருணம் கனிந்தது. எனவே, 1591-ல் ரால்ஃப் ஃபிட்ச் (Rolf Fitch) எனும் ஆங்கில வணிகப் பெருமகன் இந்தியா, பர்மா ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வெற்றியுடன் திரும்பினார். அவர் இந்திய நாட்டில் பெற்ற

1 John Gunther, "Inside Europe."

அனுபவங்களை யாவரும் கிளர்ச்சி பெறும் வகையில் வருணித்தார். இதன் மூலம் 'கீழை நாடுகள் யாவும் செல்வம் கொழித்த நாடுகள், அவற்றுள் இந்தியநாடு பெருஞ் செல்வம் செழித்த நாடு,' என்ற உண்மையை ஆங்கிலேயர் உணர்ந்தனர். எனவே, ஆங்கிலநாட்டு வணிகர்கள் கீழை நாடுகளுடன் வணிகத்தை மேற்கொள்வதற்கெனத் தயாரித்திருந்த திட்டங்கள், மேற்சொல்லப்பட்ட சாதகச் சூழ்நிலைகளின் காரணமாக மலர்ந்து கனியலாயின.

தம் திட்டங்கள் கனிவுறும் வகையில் பெயரும் புகழும் பெற்றிருந்த இலண்டன் மாநகரத்து வசதி மிக்க வணிகர்களில் சிலர் 1599ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இருபத்திரண்டாம் நாள் ஃபவுண்டர்ஸ் ஹால் (Founders Hall) என்னும் இடத்தில் கூடினர். இக் கூட்டத்தின் முடிவில் அவர்கள் இந்தியாவுடன் வர்த்தகத்தை மேற்கொள்வது என்று முடிவெடுத்தனர். இதனை மையமாகக் கொண்டு ஒரு வணிக அமைப்பையும் ஸ்தாபித்தனர். இவ் வணிக அமைப்பு மேயர் பிரபு (Lord Mayor) என்பவரைத் தலைவராகக் கொண்டு, பல செய்திகளை விவாதித்து ஒரு கோரிக்கைத் திட்டத்தைத் தயாரித்தது. அக் கோரிக்கைத் திட்டத்தைப் பின்னர் அவர்கள் இங்கிலாந்தின் பேரரசிக்குச் சமர்ப்பித்துத் தம்மை ஒரு வணிக நிறுவனமாக அமைத்து, அதன் மூலம் கீழை நாடுகளுடன், குறிப்பாக இந்தியாவுடன் வர்த்தகத்தை மேற்கொள்ள அனுமதிக்குமாறு கோரினர். ஆரம்பத்தில் இக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளக்கூடிய விருப்பத்தைப் பேரரசி பெற்றிருக்கவில்லையென்றாலும், வணிகச் செல்வந்தர்களின் இந்திய வணிக ஈடுபாட்டை உணர்ந்து, 1600ஆம் ஆண்டின் கடைசி நாளன்று தனது பட்டயம் அல்லது சாசன ஆணையின் மூலம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்படத் துணைபுரிந்தார். பேரரசி முதலாம் எலிசபெத்தினால் பிறப்பிக்கப்பட்ட இப் பட்டயத்தில் பின்வரும் செய்திகள் அடங்கியிருந்தன.

பேரரசி முதலாம் எலிசபெத்தினால் வழங்கப்பட்ட பட்டயத்தில் கிழக்கிந்தியத் தீவுகளிலும் (East Indies), ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலும் அவற்றின் பிற பகுதிகளிலும் மற்றும் எல்லா வணிக இடங்களிலிருந்தும் நகரங்களிலிருந்தும் வர்த்தகத்தையும், வணிகத் தடங்களையும் மேற்கொள்ளவும், நிறுவிக்கொள்ளவும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. மேற்கூறிய இடங்கள் மட்டுமன்றி, மெகல்லன் நீர்ச்சந்தி வரை, அமெரிக்காவையும் உள்ளிட்டு வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான கம்பெனியின் வர்த்தக எல்லையும் தெளிவாக்கப்பட்டது. மேலும், இரண்டாண்டுக் கால முன்னறிவிப்பின் பேரில் அப்

பட்டயம் நிராகரிக்கப்படும் வகையில் முதல் பதினைந்தாண்டு களுக்கு வர்த்தகம் செய்யும் உரிமை கொடுக்கப்பட்டது '[1] மேலும், கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கப்படும் உரிமைகளும். சிறப்புச் சலுகைகளும் தவறான முறையில் பயன்படுத்தப்படக் கூடாது என்ற அடிப்படையில், கிழக்கிந்தியக் கம்பெனியைப் பற்றிய அடிப்படையான ஸ்தாபனச் செய்திகளையும், அது மேற் கொள்ளவிருக்கும் காரியங்களுக்கு அடிப்படையாய் அமைய வேண்டிய சட்ட திட்டங்களையும், நியதிகளையும், அதன் நிர்வாக சம்பந்தமான செய்திகளையும் உள்ளிட்ட கம்பெனியின் அடிப் படைச் சட்டத்தை அல்லது அரசியலமைப்பை (Constitution of the Company) அப் பட்டயம் தெளிவாக விளக்கியது.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியலமைப்பு

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புச் சலுகைகள் ஆகியவற்றை விளக்கி விவரணம் செய்து, அதன் அரசியலமைப்பை எலிசபெத் பேரரசியின் பட்டயம் பின் வருமாறு அறிவித்தது. இவ் வரசியலமைப்பின்படி கிழக்கிந்தியக் கம்பெனி ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு கம்பெனியாக அல்லது வணிக நிறுவனமாகச் (Regulated Company) செயல்பட வேண்டுமென்று கூறப்பட்டது. அஃது ஒரு கூட்டுப் பங்கு நிறுவனத்தைப்போல் (Joint Stock Company) செயல்படக் கூடாதென்பதைத் தன் உட்பொருளாய்க் கொண்டிருந்தது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு கம்பெனியாய்ச் செயல்பட வேண்டும் என்பதைப் பற்றிய முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறும் பொழுது S. C. இல்பெர்ட் என்னும் அறிஞர் பின்வரும் கருத்துக் களைத் தெரிவிக்கிறார். 'கிழக்கிந்தியக் கம்பெனியின் உறுப்பினர்கள் பொதுவான சில ஒழுங்கு முறைகளுக்கு (Regulations) உட்பட்ட வர்களாவர். அவர்களுக்குப் பொதுவான சில சிறப்புரிமைகள் உண்டு. அவற்றின்படி, ஒவ்வொருவரும் தத்தம் மூலதனத்தைக் கொண்டு வணிகத்தை மேற்கொள்ளலாம். அவர்களிடையே பங்குகளாகப் பிரிக்கப்பட்ட பொதுவான மூதல் கிடையாது '[2] என்பவையாம். இச் செய்திகளைக் கருத்திற் கொண்டு, கிழக் கிந்தியக் கம்பெனியின் அமைப்பை மனக்கண் முன் நிறுத்திப் பார்க்கும்போது அஃது ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனியைப் போலல் லாது செயல்பட வேண்டிய நிலை இருந்தது என்பது நமக்குப் புலப் படும். இதன்படி, கீழை நாடுகளுடன் மேற்கொள்ளும் ஒவ்வொரு வர்த்தக முயற்சிக்கும் கம்பெனியின் உறுப்பினர்கள் பொது

1 A. B. Keith. "A constitutional History of India". p.p. 2-3

2 S. C. Ilbert. "Government of India"

நோக்கின் அடிப்படையில் மூலதனத் தொகைகளை அளித்து, அவ் வணிக முயற்சிகளின் பயனாய்ப் பெறப்படும் இலாபத் தொகைகளை, அவர்கள் அளித்துள்ள மூலதன விகிதத்திற்கொப்பப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருந்தது. இதனால், கம்பெனியால் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள், தாம் பெற்றிருந்த அங்கத்தினர்களின் எண்ணிக்கையாலும், தனிப்பட்ட உறுப்பினர்கள் பெற்ற இலாபத் தொகைகளின் அளவாலும் வேறுபட்டவையாய் இருந்தன. ஆனால், பல வழிகளில் கிழக்கிந்தியக் கம்பெனியின் அமைப்பானது முழுதும் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு நிறுவனத்தைப்போல் அல்லாது செயல்பட வேண்டிய நிலையிலிருந்தது.

கம்பெனியின் எந்த அங்கத்தினரும் தம் தலைமை நிறுவனத்தைப் புறக்கணித்துத் தனிப்பட்ட வர்த்தகத்தை மேற்கொள்ளக்கூடா தென்று வலியுறுத்தப்பட்டது. ஓர் உறுப்பினர் மற்றவர்களுடன் ஒன்று சேர்ந்து ஒரு குறிப்பிட்ட வணிக முயற்சிக்குத் தனது தவணைத்தொகையைக் கொடுக்கவேண்டியிருந்தது. மேலும், கிழக்கிந்தியக் கம்பெனியால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு வணிகப் படையெழுச்சியும் அதன் ‘ தனிநபர்க் குழுக்களான இயக்குநர்களால்’ முன்கூட்டியே திட்டப்படுத்தி ஏற்பாடு செய்யப்படவேண்டு மென்றும் இருந்தது. இவ் வேற்பாட்டின் மூலம் இயக்குநர்களிடம் வணிகப் படையெழுச்சிகள் பற்றிய அதிகாரம் இருந்ததால், அவ் வேற்பாடும் அதிகாரமும் பின்னர்க் கிழக்கிந்தியக் கம்பெனி ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனியாய் எவ்வித ஆரவாரமும் இன்றி மாறிச் செயல்படுவதற்கான வித்தினைக் கொண்டிருந்தன. மேலும், இயக்குநர்களால் ஏற்பாடு செய்யப் பட்ட ஒரு வணிகப் படையெழுச்சிக்கும் மற்றொன்றிற்கும் எவ்வித மான சம்பந்தமும் இருக்கவில்லை. இதனால், முன்னரே கூறப் பட்டதற் கொப்ப, ஒவ்வொரு வணிகப் படையெழுச்சியின் பயனாய்க் கிடைத்த இலாபங்களை மூலதனப் பங்காளர்கள் தத்தம் முதலீடுகளுக் கொப்பப் பிரித்துக்கொண்டனர். அவ்வாறு பிரித்துக் கொண்ட தொகைகளும் வேறுபட்டு இருந்தன. எனவே, சட்ட முறைமைகளுக் குட்பட்ட ஓர் ஒழுங்குமுறைக் கம்பெனியாக ஆரம்பத்தில் அமைப்பைப் பெற்றிருந்த போதிலும் பின்னர்க் கிழக்கிந்தியக் கம்பெனி ஒரு கூட்டுப்பங்கு நிறுவனமாகச் செயல் படலாயிற்று.

பேராசிரியர் டாட்வெல் அவர்களும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அமைப்பு முறையைப்பற்றிக் கூறும்போது, அஃது எவ்வாறு ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட கம்பெனியாய்ப் புற அமைப்பைப் பெற்றும், நிதி நிர்வாகச் செயல்களில் கூட்டுப்பங்குக் கம்பெனியாய் அக அமைப்பைப் பெற்றும் இருந்தது என்பதைப்

பற்றிப் பின்வரும் செய்திகளைத் தனது நூலில் பதிய வைத்துள்ளார். "பதினாறும் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் கூட்டுப்பங்குக் கம்பெனி என்பதைப்பற்றிய கருத்து கனிவுற்றதாய் இருக்கவில்லை. பெருஞ் சலுகைகளையும் அருஞ் சிறப்புரிமைகளையும் பெற்றிருந்த பழங்காலத்துக் கம்பெனிகள் ஒழுங்கு முறைகளுக் குட்படுத்தப் பட்டிருந்த கம்பெனிகளாகவே இருந்தன. இக் கம்பெனிகளில் அங்கத்தினரல்லாத எவரும், அவைகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த வர்த்தகப் பிரிவில் எப் பங்கினையும் பெறமுடியாதிருந்தது. இத்தகைய பழங்காலத்துக் கம்பெனி தனது வர்த்தகத்தை எவ் வழியில் நடத்திக்கொள்ளவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் ஒழுங்கு முறைகளை வகுக்கும் அதிகாரம், அவ் வொழுங்கு முறைகளைச் செயலாக்கம் செய்வதற்கான அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம், தான் விதித்த தீர்வைகளை வசூலிப்போர்களை நியமிப்பதற்கான அதிகாரம் போன்ற அதிகாரங்களைப் பெற்றிருந்தது. ஆனால், இவ் வொழுங்குமுறை விதிகளின் எல்லைகளுக்குள் நின்றுதான் அக் கம்பெனியின் தனிப்பட்ட உறுப்பினர்கள் வர்த்தகம் செய்வதற்கான சுதந்திரத்தைப் பெற்றிருந்தனர். இப்படிப்பட்ட ஒரு கம்பெனியின் அங்கத்தினராக ஒரு வணிகர் வருவதற்கு, அல்லது நுட்பமுறையில் கம்பெனியின் சுதந்திரத் தன்மையைப் பெறுவதற்குப் பல வழிகள் இருந்தன. குறிப்பிட்ட ஒரு நுழைவுக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலமோ, அல்லது பரம்பரை உடைமை உரிமையின் பொருட்டு மரபுரிமையாக அடைவதன் மூலமோ ஒரு வணிகர் கம்பெனியின் உறுப்பினராக வரமுடியும். இச் செய்திகளுக் கொப்பவே தொடக்கத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் அமைப்பு ஓர் ஒழுங்குமுறைக் குட்படுத்தப்பட்டிருந்த கம்பெனியாய் அமைந்திருந்தது. ஆனால், அது பதினாறும் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலிருந்த கம்பெனிகளினின்றும் நிதி ஏற்பாடு பற்றிய தனது செய்திகளில் மாறுபட்டதாய் இருந்தது. தமது சொந்த மூலதனத்தைப் பயன்படுத்தித் தனிப்பட்ட உறுப்பினர்களால் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வர்த்தகம் நடத்தப்படவில்லை. ஆனால், அதன் உறுப்பினர்கள் வழங்கி யிருந்த மூலதனத்தைப் பயன்படுத்திக் கம்பெனியின் பணியாளர்களால் வர்த்தகம் நடத்தப்பட்டது. சுருங்கக்கூறின், கம்பெனியின் முறையான அமைப்பு (Formal organisation) ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு வணிக நிறுவனத்தின் அமைப்பை ஒத்திருக்க, அதனுடைய நிதி ஏற்பாடுகள் கூட்டுப் பங்குக் கம்பெனி யொன்றில் இருந்ததைப் போல் அமைந்திருந்தன. அதேசமயம், சிறியதும், துணிச்சல் மிக்கதுமான வணிகத் துணிவுகளுக்கு நிதியுதவி அளித்து, வர்த்தகத்தை இன்னலின்றி நடத்திக் கொள்வதற்கான எளியதொரு சாதனமாகவே கூட்டுப்பங்குக் கம்பெனி பதினேழாம் நூற்றாண்டின்

தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்டது. மேலும், சிறிய வணிகக் கடற்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் பயனாய்ப் பெறப்பட்ட இலாபத் தொகைகளையும், பிற பொருள்களையும் தம் மூலதனங்களுடன் பிரித்துக்கொண்டு. பின்னர், எதையும் செய்யாது ஒய்ந்துவிடும் வசதியானதொரு வழிமுறைச் செயலியாகக் கூட்டுப்பங்குக் கம்பெனி கையாளப்பட்டது. இப்படிப்பட்ட ஒத்த செய்திகளும் கருத்துகளுமே ஆங்கிலக் கம்பெனியின் ஆரம்ப கால நிதிச் செயற்பாடுகளையும் தழுவி யிருந்தன. முதலில் ஒரு சிறிய கடல்வழி வணிகப் பயணத்திற் கெனவும், பின்னர்க் காலத்தாலும், வர்த்தக எல்லையாலும் நீண்ட வணிகப் படையெழுச்சிகளை மேற்கொள்வதற்கு எனவும் கம்பெனியின் உறுப்பினர்கள் மூலதனங்களை அளிக்கும்படி வர வேற்கப்பட்டனர். மேலும், குறித்த குறிக்கோள் நிறைவேறிய வுடன் வணிகச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு, அவர் தம் மூலதனத்துடன் இலாபத்தொகைகள் பகிர்ந்தளிக்கப்படும் என்று விரிவான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. எனவே, ஆரம்ப நிலையிலேயே கூட்டுப் பங்குகள் மேலும் மேலும் ஆங்கிலக் கம்பெனிக்கு வந்து குவிந்தன. இவற்றால், ஆங்கிலக் கம்பெனி, ‘முன்னிலை மீட்சி’ (Restoration) தொடங்குவதற்கு முன்னரே, நிரந்தரமான ஒரு மூலதனத்தைப் பெற்றுக் கூட்டுப் பங்குக் கம்பெனியைப்போல் செயலாற்றியது.’

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆரம்ப காலத் தன்மை எவ்வாறு சர்ச்சைக்குரியதாக இருந்தபோதிலும், பேரரசி முதலாம் எலிசபெத்தினால் பிறப்பிக்கப்பட்ட பட்டயத்தில் கூறப்பட்டிருந்த கம்பெனியின் அமைப்பு, அதன் செயற்பாடுகள் போன்றவற்றில் எவர்களால், எப்படி, நிர்வகிக்கப்படும் என்னும் செய்திகள் தெளிவாக்கப்பட்டிருந்தன. அவற்றின்படி, கம்பெனியின் செயற் பாடுகளும் (Operations) நடவடிக்கைகளும் (Actions) ஓர் ஆளுநர் மூலமும் தனிநபர்க் குழுக்களாய்ச் செயல்படும் 24 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிறுவனத்தின் மூலமும் கட்டுப்பாடு செய்யப்பட வேண்டும் என்று வரையறை செய்யப்பட்டது. இக் கட்டுப்பாட்டு நிறுவனத்திடமே வர்த்தகப் பொருள்களைக் கப்பல்களின் மூலம் உலகில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு எடுத்துச் செல்வது; உள்நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களை விநியோகம் செய்வது போன்ற செயற்பாடுகளைக் கவனிப்பதற்கான அதிகாரம் கொடுக்கப்பட்டது. இந் நிறுவனத்தின் நிர்வாகச் செயல்களையும், பணிகளையும் எளிதாக்கவும் மேலும் செம்மையாக்கவும் ஓர் உதவி ஆளுநர், ஒரு செயலாளர், ஒரு பொருளாளர் ஆகியோர் பின்னர்

நியமிக்கப்பட்டனர். இக் கட்டுப்பாட்டு நிறுவனம், அதன் 24 உறுப்பினர்கள் பற்றிப் பேராசிரியர் A. B கீத் கூறும் பின்வரும் கருத்துகள் நம் கவனத்திற்கு உரியவையாகும்.

'ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் காரியங்களைப் பற்றிய நிர்வாகமும் கட்டுப்பாடும் ஜனநாயக நியதிக்கு உட்பட்டதாய் இருந்தன. அதன்படி கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஆண்டிற்கொரு முறை ஓர் ஆளுநரையும், 24 குழுக்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆளுநருக்கு உதவி புரிவதற்கென்த் தேர்ந்தெடுக்கப்படும் 24 குழுக்கள் தனி நபர்க் குழுக்களாகும். (இதன்படி, ஒவ்வொன்றும் ஓர் அங்கத்தின ரைக் கொண்டதாய் 24 குழுக்கள் இருந்தன. எனவே, குழுக்கள் என்பவை தனித்தனி நபர்களையே கொண்டவையாய் இருந்தன.) இக் குழு நபர்களே பின்னர்க் கம்பெனியின் இயக்குநர்களாகப் (Directors) பதவி நிலைபெற்று வணிகப் பயணங்களைப் பற்றிய இயக்க அதிகாரங்களைச் செயல்படுத்தினர். மேலும், அவர்கள் கம்பெனியின் உடைமைகள் யாவற்றையும் மேலாண்மை செய் வதற்கும் பொறுப்பளிக்கப்பட்டனர். இப்படிப் பொதுவாக ஆளுநருக்கும் 24 ஒரு நபர்க் குழுக்களுக்கும் கம்பெனியின் வணிக முயற்சிகளின் செயற்பாடுகளை மேலாண்மை செய்து நிர்வகிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இவ்வாறு அதிகாரம் அளிக்கப் பட்ட அவர்கள், எவ்வெப்பொழுது தேவையென்று கருதினார் களோ அவ்வப்பொழுது ஒரு பொதுக் கூட்டத்தைக் (General meeting) கூட்டி, அக் கூட்டத்தின் மூலம் முடிவுகளை எடுத்தனர். அம் முடிவுகள் கம்பெனியின் பங்குடைமையாளர்கள் யாவரையும் கட்டுப்படுத்துபவையாகும்.'

இந்த ஆளுநரையும், பிற்காலத்தில் இயக்குநர்கள் என்று அழைக்கப்படவிருந்த குழு நபர்கள் இருபத்து நான்கு பேர்களையும் கம்பெனியின் பங்குதாரர்கள் தேர்ந்தெடுத்தனர். இதற்கெனக் கம்பெனியின் பங்குதாரர்கள் கூடியபொழுது, அக் கூட்டம் 'உடைமையாளர்கள் மன்றம்' (Court of Proprietors) என்று அழைக்கப்பட்டது. இவ் வுடைமையாளர்களின் மன்றத்தின் அங்கத்தினர்களான கம்பெனியின் பங்குதாரர்கள் எவ்வளவு பங்கு களைப் பெற்றிருந்த போதிலும், அவர்களுக்குச் சமமான ஓட்டுரிமை வழங்கப்பட்டது. இப்படிக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிகச் செயல்களையும், வர்த்தக முறையான செயற்பாடுகளையும் மேலாண்மை செய்வதற்கென் ஓர் ஆட்சி நிறுவனம் (Administrative institution) அரச பட்டயத்தில் கூறப் பட்டிருந்தபோதிலும், அப் பட்டயத்திலேயே கம்பெனியின் முதல்

ஆளுநரும், 24 குழு நபர்களும் பெயர்கள் அறிவிக்கப்பட்டு, நியமனம் செய்யப்பட்டனர். தாமஸ் ஸ்மித் (Thomas Smith) என்பவர் கம்பெனியின் முதல் ஆளுநராக அரச பட்டயத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்டிருந்தார். எனினும், கம்பெனியின் முதல் ஆளுநரான ஸ்மித் மற்றும் 24 குழு நபர்களின் ஓராண்டுப் பதவிக் காலம் முடிந்தபின் புதுத் தேர்தல் நடந்தபோது, புதிய தொரு பழக்கம் புகுத்தப்பட்டது. அப் பழக்கத்தின்படி ஓட்டுரிமை பெற்றிருந்த பங்குதாரர்களில் பெரும்பான்மைப் பங்கைப் பெற்றிருந்தவர்கள் தமது பங்குகளின் எண்ணிக்கைக்கு ஈடாக வாக்குச் சீட்டுகளைப் பெறும் நோக்கத்துடனும், தமக்கு வேண்டிய வர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையிலும், தாம் பெற்றிருந்த பங்குகளைத் தமக்கு வேண்டியவர்களுக்கும் தமது நம்பிக்கைக்கு உரியவர்களுக்கும் தற்காலிகமாகப் பிரித்துக் கொடுத்து, அவர்களை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளக்கூடிய உரிமையைப் பெறுமாறு செய்து, தமது எண்ணத்தை ஈடேற்றிக் கொண்டனர். இதனால் எவ்வளவு பங்குகளைப் பெற்றிருந்தாலும், 'ஒருவருக்கு ஒரே வாக்குச் சீட்டு' என்றிருந்த நிலை மாறி, கம்பெனியின் பங்குதாரர் களின் எண்ணிக்கையும் உயர்ந்தது. கம்பெனி ஆரம்பிக்கப் பட்டிருந்த ஆரம்பக் கட்டத்தில் அதன் மொத்த உறுப்பினர் களாக 217 பேர் இருந்தனர். பின்னர், இவ் வெண்ணிக்கை பெருமளவில் உயர்ந்தது. இதனால் கம்பெனியின் பங்குகள் சூதாட்டப் பொருள்களாகக் கையாளப்படும் தகா நிலையும் தோன்றலாயிற்று. இஃது இவ்வாறிருக்கக் கம்பெனிக்குக் கொடுக் கப்பட்டிருந்த அதிகாரங்கள் எவை என்பதைச் சிறிது அறிவோம்.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் குறித்து A. B. கீத் பின்வரும் செய்திகளை அழகுபடக் கூறுகின்றார். 'கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சட்ட முறையானதும் கட்டுப்படுத்தப்பட்டதுமான அதிகாரங்கள் சில கொடுக்கப் பட்டன. அப்படிக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் யாவும், அக் காலத்தில் இங்கிலாந்திலிருந்த ஊராட்சி மன்றங்கள், வணிகக் கூட்டு நிறுவனங்கள் ஆகியவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரங்களின் அடிப்படையிலும், அளவிற்கொப்பவும் கொடுக்கப் பட்டன. அவற்றின்படி, கம்பெனியின் உறுப்பினர்கள் இங்கிலாந்து நாட்டின் டொமினியன்களிலோ (dominions) அல்லது வேறு சௌகரியமான இடங்களிலோ தாம் ஒரு மன்றமாகக்கூடிக் கம்பெனி யின் காரியங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காகத் தேவையான சட்டங்கள், அவசரச்சட்டங்கள் (ordinances), கட்டளைகள் (orders), சாசனங்கள் (charters) ஆகியவற்றை, இயற்றக்கூடிய அதிகாரமளிக் கப்பட்டனர். அப்படிச் செய்யப் பெறும் சட்டங்கள், பிறப்பிக்கப்

படும் அவசரச் சட்டங்கள் போன்ற யாவும் கம்பெனியின் நல்ல நிர்வாகத்திற்கு உடன்படுபவையாயும், பேரரசியின் பட்டயத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த குறிக்கோளான வர்த்தகம் மற்றும் வணிகப் போக்குவரத்து ஆகியவற்றின் தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உதவும் வகையிலும் அமையவேண்டு மெனவும் கூறப்பட்டது. மேலும் தன் தலைவர்கள், மாலுமிகள், அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் எதிர்காலத்தில் நியமிக்கப்படவிருக்கும் பணியாளர்கள் ஆகிய அனைவரையும் உள்ளிட்டு நல்லதொரு நிர்வாகத்தைச் சௌகரியமாக நடத்துவதற்கெனச் சட்டங்களைச் செய்யும் அதிகாரம் கம்பெனியின் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், அவர்கள் இயற்றிய சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் ஒழுங்கான முறையில் நிறைவேற்றுவதில் தவறிழைப்போர்மீது தேவையான அபராதத் தொகைகளை விதிப்பதற்கும், பொருத்தமான தண்டனைகளைக் கொடுக்கவும் அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. ஆனால், அவர்கள் இயற்றிய சட்டங்களும், அளிக்கும் தண்டனைகளும் நியாயமானவையாய் இருப்பதோடு, இங்கிலாந்து நாட்டின் சட்டங்கள் மற்றும் வழக்காறுகளுக்குப் புறம்பானவையாயிருத்தல் கூடாதென்றும் விளக்கம் செய்யப்பட்டிருந்தது.'[1] இவற்றின் மூலம் கம்பெனியின் நல்ல நிர்வாகமும், அதன் பணியாளர்கள் தகுந்த முறையில் கட்டுப்பாடு செய்யப்படுவதும் சாத்தியமாயின.

இந்த அதிகாரங்களின் தன்மையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமாயின் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் மேலை நாடுகளுடன், குறிப்பாக அமெரிக்கக் காலனிகளுடன் (American Colonies) வர்த்தகம் புரிந்து கொள்ள ஆங்கில நாட்டு வணிக நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரங்களையும் ஒப்பிட்டு நோக்குதல் அவசியமாகும். இதன்படி மற்ற வணிக நிலையங்களுக்கு இலண்டனில் வணிகக்குழு என்றழைக்கப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்ததைப் போலவே, சட்டங்களையும், அவசர உத்தரவுகளையும் இயற்றிக் காரியங்களை மேற்கொள்வதற்கான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. மேலும், மேலை நாடுகளில் செயற்பட்டு வந்த வணிக நிறுவனங்களுக்கு வணிகச் செயல்கள் மற்றும் அவைகளின் பணியாளர்களின் நிர்வாகம் பற்றிய செய்திகள் குறித்துச் சட்டங்களை இயற்ற மட்டுமன்றி, அவை தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டிருந்த இடங்களையும் நிர்வகித்துச் சட்டங்களை இயற்றிக் கொள்வதற்கான உறுதியான அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தன.

1. A. B. Keith. A constitutional history of India. Chapter I

ஆனால், வணிகத்தின் காரணமாக, ஒரு நாட்டில் ஓரிடத்திலோ அல்லது பல இடங்களிலோ ஆதிக்கத்தைச் செலுத்தி அங்குள்ளோரை அந்த ஆதிக்கத்திற்கு உட்படுத்தும்படி எச் சட்டத்தையும் இயற்றிக்கொள்ளக்கூடிய அதிகாரம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்படவில்லை. இதனால் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம் அன்றிருந்த சூழ்நிலைகளுக்குப் பொருந்தாத நிலையிலிருந்தது. எனினும், இக் குறை தீர்க்கப்படுவதற்குரிய ஒன்றாகவே இருந்தது. எனவே, மேற்சொன்ன குறையை நீக்கும் வகையில் இங்கிலாந்தின் அரச நிறுவனம் (crown) தேவையான சமயங்களிலெல்லாம் தனது தனிச் சிறப்புரிமையைப் பயன்படுத்திக் கம்பெனியின் காரியங்களை எளிமையாக்கியது. ஒவ்வொரு வணிகப் படையெழுச்சிக்கும் தலைமை தாங்கிய கப்பலின் ஜெனரலான (General) தலைவருக்குக் கொலை, கலகம் ஆகிய குற்றங்களைப் புரிவோர்க்குப் பொருத்தமான தண்டனையைக் கொடுக்கக் கூடிய அதிகாரமும் உரிமையும் வழங்கப்பட்டன. ஆனால், இராணுவச் சட்டத்தை (Military Act) எந்த அளவிற்கு அவர் செயல்படுத்தலாம் என்பது குறித்துத் தெளிவற்ற நிலை இருந்தது. இந்தக் குறைபாடு, பின்னர் 1609ஆம் ஆண்டில் முதலாம் ஜேம்ஸ் (James the First) மன்னரால் கம்பெனியின் பட்டயம் புதுப்பிக்கப்பட்ட பொழுது நிவர்த்தி செய்யப்பட்டது.*

தனக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களின்படி, கிழக்கிந்தியக் கம்பெனிக்கு, கிழக்கிந்தியத் தீவுகளில், குறிப்பாக இந்தியாவில், ஒரு வர்த்தக எல்லை கொடுக்கப்பட்டு அவ் வெல்லையில் வர்த்தகச் செயல்களை மேற்கொள்வதற்கான முற்றுரிமையும் வழங்கப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், இந்தியாவைப்போல் நெடுந் தொலைவிலிருந்த நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட கடல்வழி வர்த்தகம், ஐரோப்பிய நாடுகளின் போட்டிச் செயல்களின் காரணமாக இடர் மிக்கதாய் இருந்தது. மேலும் கடல்வழி வர்த்தகப் பாதைகளும் கடற் கொள்ளை (piracy) போன்ற ஆபத்துகளுக்கு இலக்காகி யிருந்தன. எனவேதான், கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வணிக முற்றுரிமையுடன் கூடிய அதிகாரங்கள் பல வழங்கப்பட்டன. அக் காலத்தில் உலக நாடுகளுக்கிடையே இன்று காணப்படுவதைப்போல் பன்னாட்டு இராச தந்திரம், பன்னாட்டுச் சட்டம் போன்றவையும் உருவாகி யிருக்கவில்லை. இத்தகு சூழ்நிலைகளில், பிறநாட்டுச் சுதேசி அரசர்களைச் சந்தித்து அவர்களிடமிருந்தும் வர்த்தகம் புரிவதற்கான பல சலுகைகளைப் பெறும் வகையில் பகட்டாரவாரத்

* A. B. Keith. A Constitutional History of India—p. 6

தையும் ஆடம்பரத்தையும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றிருக்க வேண்டியிருந்தது. எனவே, 1600ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வணிக முற்றுரிமையும், பிற அதிகாரங்களும் கொண்ட அமைப்பு வழங்கப்பட்டிருந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

கிழக்கிந்தியக் கம்பெனி ஆரம்பத்தில் பெற்றிருந்த வளர்ச்சியும், அதிகாரங்களும்

1600ஆம் ஆண்டின் கடைசி நாளில் ஒரு வணிக நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர், படிப்படியாக வணிக ஆதிக்கத்தைப் பெற்ற ஒரு சக்தியாக மாறி, 1765-ல் ஒரு அரசியல் சக்தியாக ஆட்சிப் பொறுப்பையும் மேற்கொள்ளக்கூடிய ஒரு நிறுவனமாக மாறிய காலம் வரை கிழக்கிந்தியக் கம்பெனியினர் வணிகர்களாகவே செயல்பட்டனர். எனவே, 1765 வரை கிழக்கிந்தியக் கம்பெனி எவ்வித அரசியல் செல்வாக்கையும் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டிருக்கவில்லை. ஆனால், மேற்கூறிய காலத்தைத் தழுவிய 165 ஆண்டுகளில் கம்பெனியினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாகவும், வேறு பல நிகழ்ச்சிகளின் காரணமாகவும் கம்பெனியினர் தமது வணிகச் செல்வாக்கைப் படிப்படியாக வளர்த்து, இறுதியாக அரசியல் மற்றும் ஆட்சி ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் இந்திய நாட்டின் பல்வேறு இடங்களில் வேரூன்றச் செய்தனர். 'இந்தியாவில் ஆங்கிலேயர் பெற்ற அதிகார வழியை வரலாற்று முறையாக இரு ஆதாரங்களின் மூலம் தெளிவுபடுத்தலாம். அவ் வதிகார வழி இருவழிப் பெரும் பான்மையைக் கொண்டதாய் இருந்தது. அவற்றில் ஒன்று, பிரிட்டிஷ் அரச நிறுவனம் மற்றும் பாராளுமன்றம் இணங்கிக் கொடுத்த அதிகாரங்கள்; மற்றொன்று மொகலாயப் பேரரசர் மற்றும் இந்தியச் சுதேசி அரசர்கள் வழங்கிய சலுகைகளும் ஆதரவுகளும் ஆகும்.'[1] இவற்றால் ஆரம்ப காலத்தில் வர்த்தகம் ஒன்றையே குறிக்கோளாய்க் கொண்டு இந்திய மண்ணை வந்தடைந்த கிழக்கிந்தியக் கம்பெனி, காலம் செல்லச் செல்ல, படிப்படியாக இட உரிமை பெற்ற சக்தியாக (territorial power) மாறி, அந் நிலை 1765-ல் பொதுவாக எவராலும் எளிதாக எதிர்க்கவோ, முறியடிக்கவோ முடியாத நிலைக்கு வளர்ந்தது. இவ் வளர்ச்சி ஏற்படக் கிழக்கிந்தியக் கம்பெனி பல வழிகளில் பெற்ற அதிகாரத்தைப் பற்றியும், அதனால் அதன் தன்மையும்,

[1] S. C. Ilbert - Govt. of India - Historical Survey - p. 7

இயல்பும் எம் மாற்றத்தைப் பெற்றன என்பது போன்ற செய்திகள் பற்றியும் அறிந்து கொள்ளவேண்டியது மிக இன்றியமையாத தாகும்.

பிரிட்டிஷ் அரச நிறுவனம், பாராளுமன்றம் ஆகியவற்றிடமிருந்து கிழக்கிந்தியக் கம்பெனி பெற்ற அதிகாரம்

இங்கிலாந்தின் பேரரசியான முதலாம் எலிசபெத் 1603ஆம் ஆண்டில் இறந்தார். கிழக்கிந்தியக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது முதல், முதலாம் எலிசபெத் இறந்த 1603ஆம் ஆண்டுவரையிலான மூன்று ஆண்டுக் காலத்தில் கம்பெனி அதிகச் செல்வாக்கைப் பெற்றிருந்தது; அதிகச் செல்வத்தையும் சம்பாதித்திருந்தது. முதலாம் எலிசபெத்தின் மறைவிற்குப் பிறகு முதலாம் ஜேம்ஸ் மன்னர் ஆட்சிக்கு வந்தார். அவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் செயல்களுக்குத் தமது முழு ஆதரவையும் கொடுக்கக்கூடிய சுதந்திர மனிதராய் இருந்தார். அவர் தனக்கெனத் தனித்தன்மை வாய்ந்த ஒரு கொடியை அரச அடையாளமாய்த் தாங்கிச் செல்லும் வகையில் கம்பெனிக்கு ஒரு தகுதியைக் கொடுத்தார். கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதிக ஆதரவைக் காட்டிய முதலாம் ஜேம்ஸ் மன்னர், கம்பெனியின் உறுப்பினர்களிடமும் மிக்க அந்தஸ்துடன்கூடிய செல்வாக்கைப் பெற்றிருந்தார். எனினும், அவரது செல்வாக்கு நிலையால் தாம் தமது, கம்பெனியின் அதிகாரிகளையும் பணியாளர்களையும் சுதந்திரமாகத் தேர்தல் நடத்தி, அல்லது உரிய முறையில் காரியங்களை மேற்கொண்டு பதவிகளில் நியமிப்பதில் இடையூறுகள் உண்டாகலாம் என்று கம்பெனியினர் கருதினர். மேலும், கம்பெனியின் உறுப்பினர்கள் தமது அதிகாரிகள் போன்ற யாவரும் அரசராலும் அவரது ஆட்சி மன்றத்தாலும் பொறுக்கி எடுக்கப்பட்டு நியமிக்கப்படுபவர் களாய் இருக்கக்கூடா தென்றும் விரும்பினர்; அப்படி நேருமாயின் தமது கம்பெனியின் அதிகாரிகள் அரச நிறுவனத்தின் எடுபிடியாட் களாகவும் ஆதரவாளர்களாகவும் செயல்படுவர் என்று எண்ணினர்; மேலும், அவர்கள் மூலம் கம்பெனி, அரசரின் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுவிடும் என்றும் அஞ்சினர். இதனால், அரசரின் போர்ச் செலவினங்களைக் கம்பெனி ஏற்குமாறு வற்புறுத்தப்படக்கூடும் என்றும் அவர்கள் கலக்கத்தைக் கொண் டனர். ஏனெனில், ஆங்கிலக் கம்பெனி ஆரம்பிக்கப்பட்ட அதே காலத்தில், ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி மேற்சொல்லப் பட்ட செய்திகளுக்கு இணையாக ஃபிரெஞ்சு அரசரின் தலையீட்டிற்கு ஆளாகித் தவியாய்த் தவித்தது. இத்தகு நிலை தமக்கும், தமது கம்பெனிக்கும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தால் ஏற்பட்டுவிடக் கூடாது என்று கம்பெனியினர் எச்சரிக்கையுடன் இருந்தனர். எனவே

தான், முதலாம் ஜேம்ஸ் மன்னர் தாமாக முன்வந்து கம்பெனிக்குக் காட்டிய ஆதரவைத் துணிச்சலுடன் நிராகரித்தனர். இதனால் முதலாம் ஜேம்ஸ் மன்னரும் கம்பெனியினரிடம் பகையுணர்ச்சியை மேற்கொள்ளவில்லை. மாறாக, அவர் 1609ஆம் ஆண்டு மேத் திங்கள் கடைசி நாளன்று, எக்காலமும் நிலை பெற்றிருக்கும் வகையில் கம்பெனியின் பட்டயத்தைப் புதுப்பித்தார். 'கம்பெனி யின் காரியங்களால் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தப்பட்டால் மூன்றாண்டுக்கால முன்னறிவிப்பின் பேரில் இப் பட்டயம் இரத்து செய்யப்பட்டுத் திரும்பப் பெறப் படும்' என்ற அரச நிறுவன உரிமை கம்பெனியின்மீது செலுத் தப்பட்டது. பின்னர், ஆறு ஆண்டுகள் கழித்து, அஃதாவது 1615ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் பதினைந்தாம் நாளன்று முதலாம் ஜேம்ஸ் மன்னர், கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கூடுதலான சில அதிகாரங்களைக் கொடுத்தார். இவற்றின்படி கிழக்கிந்தியக் கம்பெனி தனது நீண்ட வணிகப் படையெழுச்சிகளில் ஒழுங்கைப் பாதுகாத்துப் பரிபாலிக்கும் பொருட்டு இராணுவச் சட்டத்தைச் செயல்படுத்திக்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், 'கொலை போன்ற குற்றங்களில் அல்லது வழக்குகளில் தீர்ப்புகள் யாவும் ஜுரி (Jury) எனப்படும் நடுவர் குழுவினால் வழங் கப்பட வேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டது. மற்றப்படி ஏனைய வழக்குகளை விசாரணை செய்யும் பொருட்டுத் தேவையான ஆணைக் குழுக்களை (Commissions) நியமித்துக் கொள்ளக் கம்பெனிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. இவ்வாறு கம்பெனிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் கம்பெனியின் கப்பல்களில் பணி புரிவோர்களுக்கெனவும் குற்றம் புரிந்தோர்க்கெனவும் மேற் கொள்ளப்பட வேண்டிய அதிகாரங்களாயிருந்தன.

ஆனால், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியக் கடற்கரைப் பிரதேசங்களில் தன் வர்த்தக ஸ்தாபனங்களை நிறுவியவுடன் அவை களில் பணியாற்றியவர்களிடையே ஒழுங்கைப் பராமரிப்பதில் சில சட்டச் சிக்கல்களையும் அதிகாரப் பிரயோகத்தைப் பற்றிய குழப்பங்களையும் சமாளிக்க வேண்டியிருந்தது. ஏனெனில், இந்திய மக்களுடன் கம்பெனியினர் கொண்ட நடவடிக்கைகளும் ஈடுபாடு களும், கம்பெனிக்கும் இந்தியச் சுதேசி அரசர்களுக்கு மிடையே எவ்விதமான உடன்படிக்கையும் இல்லாதிருந்தமையின், இந்தியச் சுதேசி அரசுகளின் அதிகார எல்லைக்கும், சட்டமுறைகளுக்கும் உட்பட்டவையா யிருக்கவேண்டியிருந்தன. அதே சமயம், இந் நாட்டு சட்டமுறைகளுக்குள்ளேயே இந்துக்களுக்கென்றும் முஸ்லிம் களுக்கென்றும் தனித்தனிச் சட்டங்கள் இருந்தன. மேலும், அவை ஆங்கில நாட்டுச் சட்டத்திற்கு முரண்பட்டவையாய் இருந்தன.

எனவே, இந்திய மண்ணில் கம்பெனியினருக்கும் இந்தியக் குடி மக்களுக்கு மிடையே எழுந்த வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புகளை வழங்கியதில் சிக்கல்களும், பெருஞ்சச்சரவுகளும் தோன்றின. எனவே, மேற்சொல்லப்பட்ட குறைபாடு களையப்படவேண்டி யிருந்தது. இதனால் முதலாம் ஜேம்ஸ் மன்னர் 1623 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் கம்பெனியின் அதிகாரத்தை மேலும் விரிவாக்கினார். இதன்படி கம்பெனியின் ஆளுநர்களுக்கும் தலைமை அதிகாரிகளுக்கும் இந்திய மண்ணில் கம்பெனியின் பணியாளர்களை விசாரித்துத் தண்டிக்கும் வகையில் ஆணைக் குழுக்களை அமைத்துக் கொள்ள அதிகாரம் விரிவாக்கப்பட்டது. ஆனால், கொலைபோன்ற குற்றங்களுக்கு நடுவர்குழு (Jury) மூலம் தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று முன்னரே வழக்கத்திலிருந்த முறை மீண்டும் வலியுறுத்தி விரிவாக்கப்பட்டது. இப்படி நெடுந்தூரக் கடல் களின்மீது மட்டுமன்றி, இந்திய நிலத்திலும் தன் பணியாளர்களை நல்லமுறையில் பயனுறுதியுடன் பரிபாலித்துநிர்வகிக்கும் வகையில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதிகார விரிவு செய்து கொடுக்கப் பட்டது.* இப்படி அதிகார விரிவைக்கொண்டு வளர்ச்சி பெற்றிருந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி முதலாம் ஜேம்ஸிற்குப் பிறகு ஆட்சிப் பீடம் ஏறிய முதலாம் சார்லஸ் மன்னரின் காலத்தில் சில இன்னல்களுக்கு உள்ளாயிற்று.

முதலாம் ஜேம்ஸ் மன்னருக்குப் பின், அரியணையேறிய முதலாம் சார்லஸ் மன்னர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தனது ஆதரவைக் கொடுக்கவில்லை. இது கம்பெனிக்கு ஏற்பட்ட முதல் இடையூறாகும். இரண்டாவது, கிழக்கிந்தியக் கம்பெனி கிழக் கிந்தியத் தீவுகளில் டச்சுக்காரர்களின் வணிகப் போட்டியையும், பொறாமைச் செயல்களையும் சமாளிக்க முடியாமல் இன்னலுற் றிருந்தது. டச்சுக்காரர்களின் வணிகப் போட்டியின் காரணமாக ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதாயங்களும் பொருளீட் டங்களும் சீரழிந்தன. அதுமட்டுமன்றி, மலேயாத் தீவுகளிலிருந்து ஆங்கிலக் கம்பெனியினர் டச்சுக்காரர்களால் விரட்டப்பட்டனர். ஆங்கிலக் கம்பெனியினருக்கும் டச்சுக்காரர்களுக்கு மிடையே நிலவிய கடும் வணிகப் போட்டியும் குரோதமும், முடிவில் அம்பாய்னாப் படுகொலையில் (Amboyna massacre) முடிந்தது. இப் படுகொலை நடந்தது 1623 ஆம் ஆண்டிலாகும். 1623 ஆம் ஆண்டில், தமது அரசாங்கத்திற்கு எதிரான சதிச்செயல்களில் ஈடுபட்டனர் என்ற காரணத்தைக் காட்டி, அம்பாய்னா என்னும் இடத்தில் இருந்த ஆங்கிலேயர் யாவரையும் டச்சுக்காரர்கள் படு கொலை செய்தனர். இதனால் 'இதுகாறும் கம்பெனியிடம் கனிவற்ற

* A. B. Keith—A Constitutional History of India p. T.

போக்கைக் கொண்டிருந்த முதலாம் சார்லஸ் மன்னரும், இங்கிலாந்து நாட்டவரும் பேரதிர்ச்சியடைந்து, டச்சுக்காரர்கள் மீது கோபம் கொண்டனர். இதனால் டச்சு அரசும் இங்கிலாந்து அரசும் மேற்சொன்ன படுகொலையைப்பற்றி விசாரணை செய்யும் பொருட்டு விசாரணைக் குழுக்களை அமைத்தன. அக் குழுக்களின் விசாரணைகளின் முடிவில் டச்சுக்காரர்கள் அம்பாய்னாவில் மேற்கொண்ட கொலைச்செயல் அநியாயமானது என்று அறிவிக்கப் பட்டது. அவ் வறிவிப்பை டச்சு அரசு ஏற்றுக்கொண்டு, அப் படுகொலையில் இறந்தவர்களின் வாரிசுகளுக்கு நட்ட ஈட்டைத் தரும் வகையில் 3615 பவுன்களை இழப்புத் தொகையாகக் கொடுத்தது. ஒரு வகையில், மேற்சொல்லப்பட்ட அம்பாய்னாப் படுகொலை ஆங்கிலக் கம்பெனியின் செயல்களில் ஒரு திருப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது. அதன்படி, ஆங்கிலக் கம்பெனியினர் ஸ்பானியத் தீவுகளை விட்டு அகன்று, இந்தியாவின் பக்கம் தமது கவனத்தைத் திருப்பினர். இதனால், கீழை நாடுகளில், குறிப்பாக நம் நாட்டில், செல்வத்தையும் செல்வாக்கையும் விரைவில் அதிகமாய்ப் பெறக்கூடிய அதிர்ஷ்டம் ஆங்கிலேயர்க்கு வாய்த்தது. எனினும், அஃது எளிதாகவும் இருக்கவில்லை. ஏனெனில், முதலாம் சார்லஸ் மன்னர் போதிய ஆதரவை ஆங்கிலக் கம்பெனியினருக்கு அளிக்காமல் இருந்தார். S.C. இல்பர்ட் அவர்கள் கூறுவதுபோல் 'வெளி நாட்டில் அவமானத்திற்கும் இரக்கத்திற்கும் உரிய பல நிகழ்ச்சிகளை அரவணைத்திருந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி, தனது உள் நாட்டில் முதலாம் சார்லஸ் மன்னரிடமிருந்து எவ்வித அனுதாபத்தையும் ஆதரவையும் பெற முடியவில்லை. மாறாக, முதலாம் சர்லஸ் மன்னர் கம்பெனியிடம் தனது எதிர்ப்புப் போக்கையும் உணர்ச்சியையுமே வெளிப்படுத்தினார்.'[1] இவை யாவற்றிற்கும் மேலாக வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியது போல், முதலாம் சார்லஸ் மன்னரின் செய்கை ஒன்று ஆங்கிலக் கம்பெனிக்கு 1635-ல் பேரதிர்ச்சி கொடுத்தது. அஃதாவது, கிழக்கிந்தியக் கம்பெனிக் கெதிராக 1635-ல் சர். வில்லியம் கர்ட்டீன் என்பவருக்குக் கிழக்கிந்தியத் தீவுகளில் வர்த்தகம் புரிவதற்கான அனுமதியையும் உரிமத்தையும் (licence) முதலாம் சார்லஸ் மன்னர் வழங்கினார். இதன்படி சர். கர்ட்டீனின் தலைமையின்கீழ் அஸ்ஸாடா கம்பெனி (Assada Company) என்ற பெயருடன் வணிக நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டது. மேலும் அக் கம்பெனி கிழக்கிந்தியக் கம்பெனியுடன் போட்டியிட்டு வர்த்தகச் செயலை மேற்கொள்ளவும் ஆரம்பித்தது. இப்படி வெளி நாட்டுப் போட்டியாலும், உள் நாட்டில் அரச ஆதரவற்ற போக்கினால் தோன்றிய புதுப் போட்டியாலும், இலண்டன் மாநகர்

[1] S. C. Ilbert—Government of India.

வணிகர் குழுவாயிருந்த பழைய ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பல இன்னல்களுக் குள்ளாகியது. அந்த இன்னல்கள் ஆலிவர் கிராம்வெல் ஆட்சியில் தான் அகற்றப்பட்டன.

ஆலிவர் கிராம்வெல்லின் ஆட்சிக் காலத்தில், முதலாம் எலிசபெத் அரசியின் பட்டயத்தின்மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் செல்வாக்கும், செல்வ நிலையும் சீரடைந்தன. ஆலிவர் கிராம்வெல் கிழக்கிந்தியக் கம்பெனியின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்துத் தனது முழு ஆதரவைக் கொடுத்தார். அம்பாய்னுப் படுகொலையின் காரண மாகக் கிழக்கிந்தியக் கம்பெனி பேரிழப்பிற்கும், பெரு நட்டங் களுக்கும் ஆளாகியிருந்தது. அவைகளுக்கு ஈடாகக் கம்பெனியினர் டச்சுக்காரர்களிடமிருந்து பெற்றிருந்த நட்ட ஈட்டுத் தொகையான 3615 பவுன்கள் போதுமானவை யல்ல என்ற கருத்து ஆங்கிலேயர் மனத்தில் - குறிப்பாகக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் மனத்தில் பதிந்திருந்தது. எனவே, அவர்கள் மேற்கொண்டு அதிகமான நட்ட ஈட்டுத் தொகையை டச்சு அரசிடமிருந்து பெற்றே தீரவேண்டு மென்ற உறுதியைக் கொண்டிருந்தனர். இதற்கு மதிப்பளித்து ஆலிவர் கிராம்வெல் மேற்கொண்ட காரியங்கள் போற்றுதற் குரியவையா யிருந்தன. அவர், டச்சுக்காரர்களுடன் பொருது முடிவில் அவர்களை 1654 ஆம் ஆண்டில் 'வெஸ்ட் மினிஸ்டர் உடன்படிக்கை' (West minister agreement) எனும் ஒப்பந்த மொன்றில் கையொப்ப மிடச்செய்து, 85,000 பவுன்களை நட்ட ஈட்டுத் தொகையாகக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வாங்கிக் கொடுத்தார். அதே சமயம், கர்ட்டீனின் அஸ்ஸாடா கம்பெனி செல்வாக்கைப் பெற்றிருக்கவில்லை; அதனால், கிழக்கிந்தியக் கம்பெனி பெற்று வந்து போட்டியும் மறையவில்லை. எனவே, 1657-ல் ஆலிவர் கிராம்வெல் ஒரு பட்டயத்தின் மூலம் பழைய கிழக்கிந்தியக் கம்பெனி, அஸ்ஸாடா கம்பெனி ஆகிய இரண்டு நிறுவனங்களையும் ஒருங்கிணைத்தார்.

ஆலிவர் கிராம்வெல்லின் பட்டயத்தின் மூலம் புதியதொரு மாற்றத்தைப் பெற்ற கிழக்கிந்தியக் கம்பெனியில் 5 பவுன்களை நுழைவுக் கட்டணமாகச் (entrance fee) செலுத்துவதன் மூலமோ அல்லது கம்பெனியில் இருப்புத் தொகைக்காக நூறு பவுன்களைச் செலுத்துவதன் மூலமோ எவரும் உறுப்பினராக வரலாம் என்ற வாய்ப்பு நிலை உருவாகியிருந்தது. மேலும் அப் பட்டயம் 500 பவுன்களுக்குக் குறைவு படாத இருப்பைப் பெற்றிராத எவ் வுறுப்பினரும் ஓட்டுரிமையைப் பெற முடியாதென்றும், 1,000 பவுன் களுக்குக் குறையாத இருப்பைப் பெற்றிராவிடில் ஓர் அங்கத்தினர்

கம்பெனியின் தனி நபர்க் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாதென்றும் தெளிவாக்கியிருந்தது. கம்பெனியின் ஆளுநர் மற்றும் உதவி ஆளுநரின் பதவிக் காலம் இரண்டாண்டுகளென்றும் நிர்ணயிக்கப்பட்டது. இப்படிக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அமைப்பிற்கும், அதனுடைய செல்வாக்கின் வளர்ச்சிக்கும் துணைபுரியும் வகையில் பல சீர்திருத்தங்களை ஆலிவர் கிராம்வெல் செய்து கொடுத்திருந்த போதிலும் அவற்றிற்கெல்லாம் ஓர் உள்ளார்ந்த காரணம் இருக்கவே செய்தது. அக்காரணம் ஆலிவர் கிராம்வெல்லின் புகழுக்கு ஓர் இழுக்கையும் ஏற்படுத்தியது. அஃதாவது, கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து 50,000 பவுன்களை அரசிற்கெனக் கடன்தொகையாக அவர் பெற்றுக்கொண்டார். ஆனால், அத் தொகையை அவர் திருப்பித் தரவே இல்லை. இச் செய்கையின் மூலம் கம்பெனிக்கு நன்மையைச் செய்து, அதன் மூலம் இங்கிலாந்து நாட்டு அரசர்கள் தமது கருவூலத்திற்குத் (treasury) தேவையான தொகையினைப் பெறக்கூடிய அருவருப்பான பழக்கம் தோற்றுவிக்கப்படலாயிற்று.

1657-ல் ஆலிவர் கிராம்வெல் காலமானார். அவருக்குப்பின் இங்கிலாந்து நாட்டில் முன்னிலை மீட்சி (restoration) எனும் திருப்பம் ஏற்பட்டு, 1660-ல் இரண்டாம் சார்லஸ் திருப்பியழைக்கப்பட்டு மன்னராக்கப்பட்டார். இந் நிகழ்ச்சி கிழக்கிந்தியக் கம்பெனியின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்து பெரு முக்கியத்துவம் வாய்ந்த இரு மாற்றங்களைத் தோற்றுவித்தது. அவை, முறையே, கிழக்கிந்தியக் கம்பெனி செல்வச் செழிப்பைப் பெற்றதும், தனது வணிகத் தன்மையை மாற்றிக்கொண்டு இடங்களைப் பிடித்து ஆளக்கூடிய ஓர் அரசாங்கச் சக்தியாக மாறியதும் ஆகும். சுருங்கக் கூறின், இரண்டாம் சார்லஸ் மன்னரின் காலத்தில்தான் கிழக்கிந்தியக் கம்பெனி தனது வர்த்தகத் தன்மையிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு, இட இறைமை கொண்ட ஓர் அரசியல் சக்தியாக உருப்பெற்றது. இப்படி முக்கியத்துவம் வாய்ந்த மாற்றத்தைக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பெனி மேற்கொண்ட செயல்கள் பலவாகும். அவைகளுக்கு இரண்டாம் சார்லஸ் மன்னர் கொடுத்த ஆதரவும் அதிகமானதாகும்.

இரண்டாம் சார்லஸ் மன்னர் கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தேவையான சலுகைகளையும் சிறப்புரிமைகளையும் (privileges) எத் தயக்கமுமின்றி அனுமதித்தவண்ணம் இருந்தார். 1661ஆம் ஆண்டு முதல் 1683ஆம் ஆண்டு வரை ஐந்து பட்டயங்களைக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அவர் வழங்கிய செயலே இதற்குச் சான்று.

பகரும். எனினும், அவ் வைந்து பட்டயங்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட செய்திகளையும், பிறவற்றையும் அறிந்துகொள்ளு முன் கிழக்கிந்தியக் கம்பெனி எப்படி ஓர் அரசியல் மற்றும் அரசாங்க ஆட்சிச் சக்தியாகவும், இட இறைமையும் நில உரிமையும் கொண்டதொரு சக்தியாகவும் மாறக் கூடிய சூழ்நிலைகள் நிலவியிருந்தன என்பதை அறிந்து கொள்ளுதல் முக்கியமும், அவசியமுமாகும்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் அடிப்படையான வணிகத் தன்மை மாறுவதற்குக் காரணமாக இருந்த பல செய்திகளுள் மிக முக்கியமானது, 1669ஆம் ஆண்டில், இரண்டாம் சார்லஸ் மன்னர் பம்பாயைக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வணிகச் செயல்களை மேற்கொள்வதற் கென்று கொடுத்ததேயாகும். பதினேழாம் நூற்றாண்டு முழுவதும் அந்நிய நாடான இந்தியாவில், கிழக்கிந்தியக் கம்பெனியினர் வர்த்தகத்தை மேற்கொண்டதில் பல இன்னல்களுக் குள்ளாகி இருந்தனர். அவர்கள் இந்தியாவின் உள்நாட்டவர்களுடனும், வெளிநாட்டவர்களுடனும் அடிக்கடி போரிட வேண்டியிருந்தது. தமக்கென நில உரிமை பெற்ற இடங்களையும் அவர்கள் பிடிக்கவேண்டி யிருந்தது. ஏனெனில், பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் முகலாயப் பேரரசர்கள் சுங்கத்தீர்வைகளை 2லிருந்து $3\frac{1}{2}$ சதவிகிதமாக உயர்த்தினர். மொகலாய ஆட்சியின் செயலால் கிழக்கிந்தியக் கம்பெனி மொகலாயருடன் போரிட வேண்டி யிருந்தது. இப்படி இந்திய அரசியலில் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகமாக ஈடுபாடு கொள்ள ஆரம்பித்தவுடன், அது பெரும் பொறுப்புகளை ஏற்கவேண்டியதாயிற்று. அதனால் 'தனது ஆட்சிக்கால ஆரம்பத்திலேயே, 1760ஆம் ஆண்டில் இராபர்ட் கிளைவ் மொகலாயர்களின் போக்கின் காரணமாகத் தனது கம்பெனியின் வருவாய் குறைந்துவிடாமல் இருப்பதைக் குறிக்கோளாய்க் கொண்டு பல போர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியத்திற்கு ஆளாகி இருந்தார். உண்மையிலேயே, கம்பெனி மொகலாய அரசர் விதித்திருந்த தீர்வைகளைச் செலுத்த முடியாத நிலையில், அதிகமான பளுவைப் பெற்றிருந்தது. இதனால், இராபர்ட்கிளைவ் மூர்ஷிதாபாத் நவாபை அணுகிக் கம்பெனி முன்னரே அனுபவித்துக்கொண்டிருந்த வணிக உரிமையை ஏகபோகச் சிறப்புரிமையாகச் சில மாவட்டங்களில் ஏற்படுத்திக் கொடுக்குமாறு நிர்ப்பந்தித்தார். இப்படித்தான் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் தன்மை வளர்ந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் கிழக்கிந்தியக் கம்பெனியினர் வணிகத்தின் மூலமன்றித் தமது முழு ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்திருந்த இடங்கள் மற்றும் நிலங்கள் மூலமும்

இலாபங்களைப் பெற்றனர்.'[1] இப்படி, 'கம்பெனியினர் உரிமையுடன் பெற்றிருந்த வர்த்தகம் மற்றும் இந்திய இடங்கள் ஆகியவற்றிற்கிடையே பேணப்பட்டு வந்த உறவுநிலை, கணக்குமுறை ஆகியவற்றால் குழப்பங்கள் மிகுந்திருந்தன. எனவேதான், அக் குழப்பங்களை அகற்றும் வகையில் 1773ஆம் ஆண்டில் ஆணையர்கள் (Commissioners) நியமிக்கப்பட்டனர்'[2] என்று பேராசிரியர் இரத்தினசாமி அவர்களும் கூறுகின்றார்.

மேற்கூறப்பட்ட செய்திகளுக் கொப்ப இருந்த குழப்பநிலை 1765ஆம் ஆண்டு வரைதான் நிலவமுடிந்தது. ஏனெனில், 1765ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக முறையான அக்கறைச் செயல்கள் அதன் இடம் பிடிக்கும் உறுதியான நோக்கங்களால் மீறப்பட்டன. அஃதாவது, கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக அக்கறை, இந்தியாவில் இடங்களைப் பிடித்து அவற்றில் தனது இறைமையைச் (Sovereignty) செலுத்தும் மாற்றத்திற்குள்ளாயிற்று. கம்பெனி இப்படி வளர்ச்சி பெறவேண்டியிருந்ததை இங்கிலாந்தில் முன்னிலை மீட்சி நடைபெற்ற காலமான இரண்டாம் சார்லஸ் மன்னரின் ஆட்சிக்காலத்திலேயே யாவரும் உணர்ந்திருந்தனர். இதனாலும், சந்தர்ப்பச் சூழ்நிலைகள் உதவிய வகையினாலும், இரண்டாம் சார்லஸ் மன்னரின் ஆதரவு கம்பெனிக்கு அதிகமாய்க் கிடைத்தது. எனினும், சட்டமுறையானதும் (legal) அடிப்படையானதுமான சில பிரச்சினைகள் எழுந்து அவற்றிற்கான தீர்வுகளும் காணப்படவேண்டி யிருந்தது.

அரசியல் நிர்ணயச் சட்டத்தை யொட்டி இங்கிலாந்து நாட்டின் அரச இறைமையைச் சார்ந்தே எவ் வாட்சிச் செயல்களும் பிறவும் இன்றுபோல் அன்றும் மேற்கொள்ளப்பட்டன. இக் கோட்பாட்டிற்கு ஏற்பவே ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சில உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், குறித்த சில காரணங்களினால் அவைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த பட்டயம் அல்லது சாசனத்தை இரத்து செய்யும் அதிகாரத்தைப் பிரிட்டிஷ் அரச நிறுவனம் பெற்றிருந்தது. எனவே, சட்டரீதியாகக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பிரிட்டிஷ் அரச நிறுவனத்திற்கு இணையானதோர் இறைமை யமைப்பாகச் செயல்பட முடியாத நிலை இருந்தது. அதே சமயம், கம்பெனி இங்கு மேற்கொண்ட போர்கள் இந்தியச் சுதேசி

1 Edward Thompson and G. T Garrat, "Rise and fulfilment of British Rule in India".

2 M. Ruthnasamy "Some influences that made British Administrative System"—p. 4.

அரசர்களிடமிருந்து பெற்ற சலுகைகள், வெகுமதிகள் ஆகியவற்றின் மூலமாக இந்திய மண்ணின் பல இடங்கள் கம்பெனியின் பொறுப்பின்கீழ் வந்தன. அப்படிப்பட்ட இந்திய இடங்களைப் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் பெயரில்தான் கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வகிக்கவும் அரசாங்கத்தை நடத்தவும் வேண்டியிருந்தது. இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றமும் கிழக்கிந்தியக் கம்பெனியின் பொறுப்பின்கீழ் இருந்த இந்திய இடங்களைப்பற்றிய அரசியல் மற்றும் அரசாங்கக் காரியங்களில் தனது நேரிடையான கட்டுப்பாட்டை (control) 1773ஆம் ஆண்டு வரை செலுத்த முடியாமல் இருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி எல்லைக்குள்ளாகியிருந்த பிரிட்டிஷ் இந்தியா பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேரடியான நிர்வாகப் பொறுப்பின்கீழ் வருமாறு 1858ஆம் ஆண்டில்தான் அதிகார மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் 1773ஆம் ஆண்டு முதல் பிரிட்டிஷ் பாராளுமன்றம் படிப்படியாகத் தனது கட்டுப்பாட்டைக் கம்பெனியின் இந்தியக் காரியங்கள்மீது செலுத்தலாயிற்று. இவைகளுக்கெல்லாம் உடன்பட்டதாய்க் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் ஆதிக்கம் வளர்ந்த வண்ணம் இருந்தது. தனது ஆட்சி எல்லையும் பிறவும் வளர்ந்த நிலையில் இருந்தமையின் இங்கு நாணயச் சாலைகளை (mints) அமைத்து நாணயங்களைத் தயாரித்துக் கொள்ளக்கூடிய அனுமதியும் உறுதியும்கூடக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தேவையாயிருந்தது. அவை பின்னர் கைகூடவும் செய்தன. இப்படி வியத்தகு வளர்ச்சியும் பொறுப்பான பல காரியங்களை மேற்கொள்ளும்படியான நிலையும் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பதினேழாம் நூற்றாண்டின் மையப் பகுதிலேயே தோன்றிவிட்டன. அதனாலேயே மாறிவந்த சூழ்நிலைகளுக் கொப்பக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தேவையான அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டியிருந்தன. அப்படிக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனியின் தன்மை மாறவும் தொடங்கிற்று. இப்படி உறுதியானதொரு மாற்றத்தைத் தழுவி வளர்ச்சியை வெகு வேகமாய்ப் பெற்றுவந்த கம்பெனிக்கு, அதன் எதிர்காலத் தேவைகளை அறிந்து, அதற்குத் தேவையான ஆதரவையும் உற்சாகத்தையும் இரண்டாம் சார்லஸ் மன்னரின் பட்டயங்கள் கொடுத்தன.

இரண்டாம் சார்லஸ் மன்னரால் 1661-ல் வழங்கப்பட்ட பட்டயத்தின்படி கிழக்கிந்தியக் கம்பெனி பின்வரும் செய்திகளுக் கொப்பப் பல சலுகைகளையும் மாற்றங்களையும் பெற்றது. கிழக்கிந்தியக் கம்பெனி நிலையானதும் ஒழுங்கானதுமான கூட்டுப்பங்கின் அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டது. 500 பவுன்களின் மதிப்பைப் பெற்ற பங்குகளைக் கொண்டிருந்த ஒவ்வொருவருக்கும்

ஒரு வாக்குச் சீட்டு என்று கம்பெனியின் அங்கத்தினர்களுக்கு வாக்களிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. இப்படிச் சீரமைக்கப் பட்ட கிழக்கிந்தியக் கம்பெனி அரச பரம்பரையின் ஆதரவைப் பெருவாரியாய்ப் பெற்றது. இதற்குக் காரணமாயிருந்தது அப்பொழுது சிறந்த பொருளாதார நிபுணராயிருந்த சர். ஜொசையா சைல்ட் (Sir Josiah Child) என்பவரின் செல்வாக்கும் அக்கறையுமாகும். இவரது அக்கறைக்கு நெகிழ்ந்து கொடுத்த வகையில் இரண்டாம் சார்லஸ் மன்னர் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரங்களை விரிவாக்கினர். இச் செயல், கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் செயல்படுத்தி வந்த அதிகாரத்தை ஏற்புடைத்தாய்ச் செய்தது. அடுத்து, இப் பட்டயத்தின் மூலம் சாதாரண வணிகத் தொழிற்சாலைகளையும் நிலையங்களையும் நிறுவிக் கொள்வதற்கு மட்டுமன்றித் தேவையான கோட்டை கொத்தளங்களை உருவாக்கிக் கொள்வதற்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. மேலும் தங்களுடைய வணிகத் தொழிற்சாலைகளையும், நிலையங்களையும், பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான மனிதர்களையும், படைக்கலங்களையும், போர்க்கப்பல்களையும் அனுப்பிவைப்பதற்கான அதிகாரம் கிழக் கிந்தியக் கம்பெனியினருக்குக் கொடுக்கப்பட்டது. கோட்டைகளை அமைத்து அவைகளைப் பாதுகாக்கும் பொருட்டுத் தேவையான போர் ஆயுதங்களையும் பொருள்களையும் ஏற்றுமதித் தீர்வை (export duty) இல்லாமல் இந்தியாவிற்கு அனுப்பவும் கம்பெனி யினருக்கு அனுமதி வழங்கப்பட்டது, இங்கிலாந்திலிருந்து தேவை யான படைவீரர்களைத் தருவித்துக்கொள்ளக் கம்பெனியின் இந்திய அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. கம்பெனியினர் தம் படைத் தளபதிகளையும் அதிகாரிகளையும் சுதந்திரமாகத் தேர்ந் தெடுத்துக்கொண்டு, கம்பெனியின் முத்திரையுடன் (seal) கூடிய அதிகாரத்தின்கீழ் அவர்களுக்குப் பொறுப்பான கடமைகளை ஒப்படைக்கவும் இப் பட்டயம் வழிவகை செய்தது. கிறித்து வரல்லாத பிற ஐரோப்பிய வணிகர்களுடன் போர் மற்றும் சமரச நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கிழக்கிந்தியக் கம்பெனி யினருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. மேலும், தமது கோட்டை களில் ஆட்சி அதிகாரத்தையும் கட்டளைகளையும் செலுத்துவதற் கான அனுமதி கம்பெனியினருக்குக் கொடுக்கப்பட்டது. இதனுல் தமது கோட்டைகளைப் பரிபாலிப்பதற்கான ஆளுநர்களையும் (Governors) பிற அதிகாரிகளையும் நியமித்துக் கொள்வதற்குத் தடையற்ற அதிகாரத்தைக் கம்பெனியினர் பெற்றனர். இதனேடு நியாயத்திற்கும் சட்ட முறைமைக்கும் உட்பட்டுத் தமது பணியாளர்களை நிர்வகிப்பதற்கும், தவருன நடத்தைகளின்

காரணமாக அவர்களைத் தண்டிப்பதற்கும், தமது கட்டளைகளை மீறுவோர்க்கு அபராதம் விதிப்பதற்கும் கம்பெனியினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.'[1]

இவ்வாறு சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் நிறுவப்பட்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக நிலையங் களின் அரசியல் மற்றும் நீதி முறையான அதிகாரங்கள் விரிவாக்கப் பட்டு, அவற்றின் மூலம் கிழக்கிந்தியக் கம்பெனி இட உரிமையும் இறைமையும் பெற்றதொரு சக்தியாக மாறத் துணை செய்யப் பட்டது.

மேற்கூறிய பட்டயத்தைத் தொடர்ந்து, கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் மற்றும் நீதி முறையான அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கப்படும் வகையில், 1668ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27ஆம் நாளன்று இரண்டாம் சார்லஸ் மன்னரால் மற்றொரு சாசனம் வழங்கப்பட்டது. இச் சாசனத்தின்படி, இங்கிலாந்து நாட்டு அரசருக்குத் திருமணப் பரிசாக 1661ஆம் ஆண்டில் போர்ச்சுகலினால் (Portugal) கொடுக்கப்பட்டிருந்த பம்பாயில் (Bombay) வலிவானதொரு கோட்டையைக் கட்டிக் கொள்ளவும், தான் புதிதாகப் பிடித்திருந்த பிற இந்தியப் பிரதேசங்களை (Territories) காப்பாற்றிப் பராமரித்துக் கொள்ள வும் இறைமையுடன் (Sovereignty) கூடிய முழு அதிகாரங்கள் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டன. இதன் பயனாய்க் கம்பெனியாளர் இந் நாட்டில் தமது பொறுப்பின்கீழ் வந்திருந்த இடங்களில் வாழும் மக்கள்மீது வரி விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றனர். பம்பாய்த் தீவு, அதன் துறைமுகங்கள் ஆகிய வற்றைப் பொறுத்தவரை, அவை கம்பெனியின் முழு இறைமையின் கீழ் இருந்தமையால், அங்குச் சுதந்திரமாகச் சட்டங்களை இயற்றியும், அவசரச் சட்டங்களைப் (Ordinances) பிறப்பித்தும் அரசாங்க பரிபாலனத்தை நடத்திக் கொள்ளக் கம்பெனியினர் அனுமதிக்கப்பட்டனர். பின்னர், 1669ஆம் ஆண்டில் கிழக் கிந்தியக் கம்பெனியினர் நாணயங்களைப் பம்பாயில் அச்சிட்டுக் கொள்ள உரிமை கொடுக்கப்பட்டது. இப்படிப் பரிபூரண உரிமை யுடனும் சுதந்திரத்துடனும் பம்பாயில் காரியங்களை மேற்கொள் வதற்கு ஈடாகக் கம்பெனியினர் ஆண்டொன்றுக்குப் பத்துப் பவுன்களைப் பிரிட்டிஷ் அரசுக்குச் செலுத்தினர். இதற்கு உகந்தவாறு பம்பாய்த் தீவை இரண்டாம் சார்லஸ் மன்னர் குத்தகை ஏற்பாட்டின் மூலம் எக் குந்தகமுமின்றி மாற்றிக் கொடுத்தார். இதனால் 'சிவில் மற்றும் இராணுவ அரசாங்கத்தின்

[1] A. B. Keith 'A Constitutional History of India—p. 8.

அதிகாரங்களைப் பெற்றுச், சாதாரண ஒரு வணிக நிலையமாயிருந்த கிழக்கிந்தியக் கம்பெனி, இட இறைமை பெற்றதொரு சக்தியாக மாற வாய்ப்பு ஏற்பட்டது. அதன் மூலம் பம்பாயில் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் இறைமை நிலைநிறுத்தப்பட்டது.'[1]

1668ஆம் ஆண்டின் பட்டயத்திற்குப் பின், 1676ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள் ஐந்தாம் நாளன்று மற்றொரு பட்டயம் இரண்டாம் சார்லஸ் மன்னரால் வழங்கப்பட்டது. இப் பட்டயத்தின்படி கிழக்கிந்தியக் கம்பெனியின் பம்பாய்க் கோட்டையின் அதிகாரிகளுக்கு ரூபாய் (Rupee) அரை பைசா (Half Paisa) என்று நாணயங்களைத் தயாரித்துக் கிழக்கிந்தியத் தீவுகளில் செலாவணியை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப் பட்டது. சென்னையைப் பொறுத்தவரையில், அங்கு ஒரு நாணயச்சாலை கம்பெனியினால் முன்னதாகவே நிறுவப்பட்டிருந்தது. அதற்கான அதிகாரம் கம்பெனியின் இந்தியத் தலைமை அதிகாரியினால் கொடுக்கப்பட்டிருந்தது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் நிலை இந்தியாவில் இவ்வாறிருக்க, பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் டச்சுக்காரர்களின் கம்பெனி இங்குச் செல்வாக்கான நிலையில் இருந்தது. மேலும், அஃது ஒரு பேரரசைக் கீழை நாடுகளில் ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் தனது செயல்களை மேற்கொண்டவாறு இருந்தது. இவை யாவற்றையும் அப்பொழுது பிரிட்டிஷ் அரச நிறுவனத்துடன் மிகவும் செல்வாக்கான உறவைக் கொண்டிருந்தவரும், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைவராயிருந்தவருமான சர். ஜொசையா சைல்ட் கவனமாய் அறிந்து, தம்மவரும் இந்தியாவில் ஒரு பேரரசை நிறுவத் துணை புரியும் வகையில் ஆங்கிலக் கம்பெனியின் அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கப்படவேண்டுமென்று இரண்டாம் சார்லஸ் மன்னரைத் தூண்டினார். இத் தூண்டுதலுக்கு இணங்கி இரண்டாம் சார்லஸ் மன்னர் 1683ஆம் ஆண்டில் ஆகஸ்டுத் திங்கள் ஒன்பதாம் நாளன்று மற்றுமொரு பட்டயத்தைக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கினார்.

'1683ஆம் ஆண்டுப் பட்டயத்தின்படி, அப் பட்டயத்தில் குறிக்கப்பட்டிருந்த எல்லைக்குட்பட்டு ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் போர் தொடுக்கவும், சமாதானம் செய்து கொள்ளவும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. தேவையான அளவில் படைக் கலங்களைத் திரட்டிக்கொள்ளவும், தமது படைவீரர்களை

[1] A. B. Keith 'A Constitutional History of India—p. 10

நியமித்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளைக் கொடுக்கவும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. தமது கோட்டைகள், ஆளுகை இடங்கள், தோப்பு துரவுகள் மற்றும் பண்ணைகள் போன்ற யாவற்றையும் வெளிநாட்டுப் படையெடுப்பு, ஆக்கிரமிப்பு, உள்நாட்டுப் புரட்சி, கிளர்ச்சி ஆகியவற்றிலிருந்து காப்பாற்றும் பொருட்டு இராணுவச் சட்டத்தை நிறைவேற்றக் கூடிய அதிகாரமும் கம்பெனியினருக்குக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு கம்பெனிக்கு வழங்கப்பட்ட குறிப்பிடத் தக்க அதிகாரங்கள் யாவும் அரச நிறுவனத்தின் இறைமைக்கும், ஆய்விற்கும் உட்பட்டவையாகும் என்றும் தெளிவுறுத்தப்பட்டது. இப் பட்டயத்தின் மூலம் தெளிவாக்கப்பட்ட இன்றியமையாத மற்றொரு செய்தி யாதெனின், கம்பெனியினரால் பெறப்படும் அல்லது பிரிட்டிஷ் குடிமக்களால் பெறப்படும் உரிமை, இறைமை யாவும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்திற்காகப் பெறப்படுபவையே யன்றித் தமது சுய உரிமையின் அடிப்படையில் பெறப்படுபவை அல்ல என்பதாகும்'[1].

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் நீதி நிர்வாக ஏற்பாடுகள் குறித்தும் முக்கியமான முன்னேற்பாட்டுடன் கூடிய ஒரு வாசகமொன்றையும் 1683ஆம் ஆண்டுப் பட்டயம் கொண் டிருந்தது. ஏனெனில், கம்பெனியின் இந்திய நீதி நிர்வாகத்தை வலிவுறுமாறு செய்யப்பட வேண்டிய தேவை அப்பொழுது உணரப்பட்டிருந்தது. எனவே, இப் பட்டயம் சிவில் சட்டத்தில் வல்லுநர் ஒருவரையும் (expert in civil law), அவருக்குத் துணை புரிய இரு உதவியாளர்களையும் (assistants) கொண்ட ஒரு நீதி மன்றத்தைக் கம்பெனி அமைத்துக்கொள்ள வகை செய்தது. அந் நீதி மன்றம் ஒரு கப்பல் துறை நீதிமன்றமாய்ச் (Admiralty Court) செயல்படுமாறு அமைக்கப்பட்டது. அரச பட்டயத்திற்கு எதி ராகவும், அதில் சொல்லப்பட்டிருந்த செய்திகளுக்குப் புறம்பாகவும் கப்பல்களையும் வணிகப் பொருள்களையும் பறிமுதலாக்கும் வழக்குகள் மற்றும் கடல் வழி வணிகப் போக்குவரத்துப் பற்றிய வழக்குகள், நீள்கடல்களின்மீது செய்யப்படும் தடை மீறல்கள், இழப்புகள், தவறுகள் ஆகியவைபற்றிய வழக்குகள், இப் பட்ட யத்தின் எல்லைகளுக்குள் குறிக்கப்பட்டிருந்த செய்திகள் குறித்து எழும் வழக்குகள் ஆகிய யாவற்றையும் விசாரிக்கும் அதிகாரம் அந் நீதி மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டது. மேற்சொல்லப்பட்ட நீதி மன்றத்தின் நீதிபதி மற்றும் இரு உதவியாளர்கள் ஆகியோரை நியமனம் செய்யும் அதிகாரம் கம்பெனியின் தலைமை நிறுவனத்

1 A. B. Keith, A Constitutional History of India p. 10.

தினருக்குக் கொடுக்கப்பட்டது. இதன் ஒரு நீதிமன்றம் சூரத் (Surat) என்னும் இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, அதன் நீதிபதியாக டாக்டர் புனித ஜான் என்பவர் நியமனம் செய்யப்பட்டார்.

மேற்சொல்லப்பட்ட அதிகாரங்கள் யாவற்றையும் புதுப்பித்து உறுதிப்படுத்தும் வகையில் 1686ஆம் ஆண்டில் இரண்டாம் ஜேம்ஸ் மன்னரால் ஒரு பட்டயம் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கப் பட்டது. இதன் மூலம் கூடுதலான சில சலுகைகள் கம்பெனிக்கு அனுமதிக்கப்பட்டன. இவற்றின்படி, கடற்படைத் தளபதிகள் (Admirals) கடற்படைத் துணைத்தளபதிகள், கடற்படை அதிகாரிகள் போன்றோரை இப் பட்டயத்தில் குறிக்கப்பட்டிருந்த வரம்புகளுக் குட்பட்டுத் தமது கப்பல்களில் நியமனம் செய்யும் அதிகாரம் கம்பெனியினருக்கு உறுதிப்படுத்தப்பட்டது. மேற்சொல்லப்பட்ட அதிகாரிகளுக்குப் பிற நாட்டவரால் போட்டி, எதிர்ப்பு, தாக்குதல் கள் போன்றவை ஏற்படுமாயின் அவைகளை முறியடிப்பதற்குத் தேவையான கப்பற் படைகளைத் தருவித்துக்கொள்ளவும் அதிகாரம் அளிக்கப்பட்டது. மேலும் தத்தம் கோட்டைகளில், பட்டயத்தில் குறிக்கப்பட்டிருந்த வரம்புகளுக் குட்பட்டுச் சுதேசி அரசுகள் அச்சிட்டதைப் போலப் பல படிநிலை மதிப்புகளில் (denominations) நாணயங்களை அச்சிட்டுக் கொள்வதற்கும் பொதுவான அதிகாரம் கம்பெனியின் அரசினருக்குக் கொடுக்கப்பட்டது. 1687ஆம் ஆண்டில், அரசியலமைப்பு முறைக்குட்பட்டுக் கம்பெனியின் அரசாங்கத்தைத் தன் இந்தியப் பிரதேசங்களில் அமைத்துக் கொள்ள உரிமை வழங்கப்பட்டது. இதன்படி சென்னையில் தனியாட்சி உரிமையுடன்கூடிய நகராண்மைக் கழகம் நிறுவப் பட்டது. அப்பொழுது சென்னையிலிருந்த மேயர் நீதிமன்றம் (Mayor's Court) கம்பெனியின் அதிகார வரம்பிற்கு உட்படுத் தப்பட்டது. பேராசிரியர் A.B. கீத் அவர்கள் கூறுவதுபோல் 'சென்னையில் அரசியலமைப்பு முறைக் குட்பட்டதோர் அரசாங் கத்தை நிறுவக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்ட அனுமதி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில், அச் செயலே இட இறைமைத் தன்மை வாய்ந்ததாய்க் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கமும் ஆட்சியும் வளர்ச்சி யுறுவதற்கான தோற்றத்தைக் கொடுத்தது. மேலும், கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தேவையான முழுமையான அதிகாரங்கள் யாவற்றையும் இசைவுடன் கொடுக்கப் பிரிட்டிஷ் அரச நிறுவனம் தயாராய் இருந்தது என்பதையும் அச் செயல் அடிப்படையாய் எடுத்துக் காட்டுகின்றது.'[1] இப்படி அதிகாரங்கள் பலவாறாய்ப் பெருக்கிக் கொடுக்கப்பட்ட பொழுதிலும், கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சில இன்னல்கள்

1 A. B. Keith, A Constitutional History of India p. 11-12

ஏற்பட்டன. 1683 மற்றும் 1686ஆம் ஆண்டுகளின் பட்டயங்களின் கீழ் நீதித்துறைப் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருந்த அதிகாரி களுக்கு ஊதியங்கள் கொடுப்பது குறித்துச் சிக்கல்கள் எழுந்தன. இதனால் சென்னைக்கென ஒரு நகராண்மைச் சாசனத்தை (Municipal Charter) அனுமதிக்கும் அதிகாரத்தைக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மன்னர் வழங்கினார். இவ் வனுமதியின்படி கிழக்கிந்தியக் கம்பெனி அரசியல் தன்மையான இறைமையைப் பெறக்கூடிய புதுக் கொள்கையோடு வருவாய் ஆதாரங்களைத் தோற்றுவிப்பதைச் செயல்படுத்தும்படியான தன்மையைப் பெற்றது. இதனால் சென்னையின் வருமானங்கள் பெருமளவில் அதிகரிக்கும் என்று கருதப்பட்டது. மேலும், பரந்த நோக்கின் அடிப்படையில் சென்னையை ஒரு நகராட்சியாய் உருவாக்குவது கம்பெனியின் வரி விதிக்கும் அதிகாரத்தை எளிமையாக்கும் என்றும் எண்ணப் பட்டது.'[1] இப்படிப் பலதரமான அதிகாரங்களைப் பெற்றுத் தேர்ச்சி அடைந்திருந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வளர்ச்சி, இங்கிலாந்து நாட்டில் 1688ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாண்புறு புரட்சியினால் (Glorious Revolution) தடைப்படுத்தப் பட்டது.

இங்கிலாந்தில் தோன்றிய மாண்புறு புரட்சி அரசருக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையே நடந்த பெரும் போராட்ட மாகும். இப் போராட்டப் புரட்சியின் முடிவில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இறைமை நிலைநிறுத்தப்பட்டு, இதுவரை அரசரால் தன்னிச்சையாய்ச் செயல்படுத்தப்பட்டு வந்த முற் சலுகைகள் (prevogatives) யாவும் பாராளுமன்றத்தின் உரிமை களாக (privileges) மாறின. எனவே, 1688ஆம் ஆண்டின் புகழ் மிக்க பெரும் புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்து நாட்டில் நடை பெற்ற பல செயல்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் தொடர்ச்சி யான வளர்ச்சிக்குத் தடையாய்க் குறுக்கிட்டன. இப் புரட்சிக்குப் பிறகு விக்குக் கட்சியினர் (Whigs) இங்கிலாந்தில் அதிகாரத்திற்கு வந்தனர். அவர்கள் முற்றுரிமைக் கோட்பாட்டின் எதிர்ப்பாளர் களாயிருந்தனர் ஆதலின், கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக முற்றுரிமையை ஆதரிக்காமல் புதியதொரு வர்த்தக நிறுவனம் தோன்ற அனுமதித்தனர். அப் புதிய நிறுவனம் பழைய கிழக் கிந்தியக் கம்பெனிக்குப் பெருத்ததோர் தலைவலியைக் கொடுத்தது.

இங்கிலாந்தில் ஏற்பட்ட மாறுதல்கள் இவ்வாறிருக்க, அதே சமயம் இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கம் மொகலாயப் பேரரசுடன் மோதிய வண்ண மிருந்து ஒழுக்கச் சீர்

1 A. B. Keith, A Constitutional History of India p.p. 11-12.

கேட்டிற்கும், பொருளிழப்பிற்கும் ஆளானது. மேலும், கம்பெனியின் தலைவராயிருந்த சர். ஜொசையா சைல்டும் இதுநாள் வரை அரச நிறுவனத்திடம் தனது செல்வாக்கை ஏற்புடையதாகச் செய்திருந்ததைப் போல், மேலும் அதைச் செய்ய முடியாத நிலையிலிருந்தார். எனவே, கிழக்கிந்தியக் கம்பெனியின் நிலை வருத்தத்திற்கும், பரிதாபத்திற்கும் உரியதாய் மாறிற்று. இவைகளையெல்லாம் விடத் தாங்கொணுத பேரிடியைக் கம்பெனிக்குக் கொடுக்கும் வகையில் 1691ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பாராளு மன்றம் கிழக்கிந்தியத் தீவுகளோடு வணிகக் காரியங்களை நல்ல முறையில் ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனியே மேற்கொள்ள முடியும் எனவும், அத்தகைய கம்பெனி விஸ்தரிக்கப்பட வேண்டுமெனவும் முடிவெடுத்தது. இம் முடிவிற்கொப்பப் பழைய கிழக்கிந்தியக் கம்பெனியையும், அப்பொழுது புதிதாய்த் தோன்றியிருந்த கம்பெனியையும் ஐக்கியமாக்கிவிடலா மெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனுல், மேற்சொல்லப்பட்ட பாராளுமன்ற முடிவை சர். ஜொசையா சைல்டு கடுமையாக எதிர்த்தார். இதனுல், பாராளுமன்றத்துக்கும் பழைய கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் பகைமை தோன்றி, பாராளுமன்றம் கிழக்கிந்தியக் கம்பெனியின் செயல்களுக்கு மூன்றுண்டுக் காலக் கெடுவைக் கொடுத்து, அதன் பின் கம்பெனியின் காரியங்களுக்கு முற்றுப்புள்ளியை வைக்குமாறு பிரிட்டிஷ் அரசரைக் கேட்டுக்கொண்டது. மேலும், பழைய கிழக்கிந்தியக் கம்பெனி மேற்சொன்ன செய்திகளுக் கொப்பக் கலைக்கப்பட்ட பின்னர், அதன் இடத்தில் புதியதொரு கம்பெனியைத் தோற்றுவிப்பதற்கான ஒரு பட்டயத்தைப் பிறப்பிக்குமாறும் பாராளுமன்றம் அரச நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டது. ஆனுல், சர். ஜொசையா சைல்டு அவர்கள் சமயோசித புத்தியுடன் நடந்துகொண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கும், அதன் உயர் அதிகாரிகளுக்கும் பெரும் அளவில் பணத்தையும் நன்கொடைகளையும் கொடுத்து அவர்களைத் தனது வழியில் திருப்பினுர். மேலும், தனது பழைய கம்பெனிக்குப் புதியதொரு பட்டயத்தை அரச நிறுவனம் கொடுக்குமாறும் செய்தார். அப் பட்டயம் 1693ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்டது.

1693ஆம் ஆண்டுப் பட்டயத்தின்படி கம்பெனியின் பழைய அதிகாரங்களும் சலுகைகளும் உறுதிப்படுத்தப்பட்டதுடன், மேற்கொண்டு கூடுதலான சில அதிகாரங்களும் கொடுக்கப்பட்டன. அவற்றின்படி கம்பெனியின் மூலதனம் 7,44,000 பவுன்களாக உயர்த்தப்பட்டது. இதனுல் கம்பெனியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டது. தனிப்பட்ட முறையில் எவரும் 10,000 பவுன்களுக்குமேல் கம்பெனியின்

இருப்புத் தொகையாகச் செலுத்தக் கூடாது என்ற உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது. மேலும், கம்பெனியின் இருப்புத் தொகைக் கெனக் குறைந்தது 1,000 பவுன்களையேனும் செலுத்துவோருக்கே வாக்குரிமை இனி கொடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இவற்றால் கம்பெனியின் அமைப்பில் எந்த உறுப்பினரும் பத்து வாக்குச் சீட்டுகளுக்குமேல் பெறமுடியாத நிலை உருவாக்கப்பட்டது. மேலும், கம்பெனியின் நிர்வாக அதிகாரிகளாக வர விழைந்தோருக் கெனச் சில தகுதிகள், அவர்கள் பெற்றிருந்த இருப்புத் தொகை களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன. இவற்றின்படி, 4,000 பவுன்களையேனும் இருப்புத் தொகையாகக் கொண்டி ருந்தோரே கம்பெனியின் ஆளுநராகவும் துணை ஆளுநர்களாகவும் நியமனம் செய்யப்படுவதற்கு அருகதை யானவர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டது. கம்பெனியின் தனிநபர்க் குழுவாய் ஒருவர் அங்கம் வகிக்கவேண்டுமாயின் அவர் குறைந்தது 1,000 பவுன்களை இருப்புத் தொகையாய்க் கம்பெனிக்குச் செலுத்தியிருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இப்படிக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கப்பட்ட சலுகைகள் இருபத்தைந்து ஆண்டு களுக்குச் செயலில் இருக்கும் என்றாலும், மூன்றாண்டுக் கால முன்னறிவிப்பின் பேரில் அவை இரத்து செய்யப்படலா மென்றும் மேற்கூறிய பட்டயம் கூறியது. இவற்றின் அடிப்படையிலேயே கம்பெனியின் காரியங்கள் மேற்கொள்ளப்பட்டுச் செயற்பாட்டில் இருந்தன. இதைத் தொடர்ந்து 1694-ல் மற்றொரு சாசனம் கம்பெனிக்கு வழங்கப்பட்டது.

1694ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பட்டயம் பின்வரும் செய்திகளை வலியுறுத்தி, கம்பெனியின் ஆட்சி பலவீனம் அடையா மலிருக்க வழிவகை செய்தது. இவற்றின்படி கம்பெனியின் ஆளுநர், துணை ஆளுநர்கள் ஆகியோரின் பதவிக் காலம் இரண்டாண்டுகள் எனத் தீர்மானமாக நிர்ணயிக்கப்பட்டது. மேலும், கம்பெனியிலிருந்த பதவிகள் யாவும் கட்டாயச் சுழற்சி முறைக்கு உள்ளாக்கப்பட்டன.'[1] இக் கட்டாயச் சுழற்சி நியதியின் படி கம்பெனியின் இருபத்துநான்கு குழு உறுப்பினர்களில் எண்மர் ஒவ்வோர் ஆண்டும் பதவியிலிருந்து ஓய்வு பெறவேண்டு மென்று நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும், S.C. இல்பர்ட் எனும் அறிஞர் கூறுவதைப்போல், '1694ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கிழக் கிந்தியக் கம்பெனி அநுபவித்து வந்த சலுகைகளைக் குறைக்கும் வகையிலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் சட்டத்தினால் தடைப்படுத்தப்

[1] System of rotation.

பட்டாலொழிய இங்கிலாந்தின் குடிமக்கள் எவரும் கிழக்கிந்தியத் தீவுகளுடன் வர்த்தகம் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் கிழக்கிந்தியக் கம்பெனியினர் தேவையான அளவில் செல்வாக்கு வளத்தையும், வணிக வலிமையையும் பெற்றிருந்த காரணத்தால் மேற்சொல்லப்பட்ட தீர்மானம் செல்லாக்காசாக இருந்தது.'[1] எனவே, பிரிட்டிஷ் மக்கள் கீழைநாடுகளுடன் சுதந்திர மாய் வர்த்தகத்தை மேற்கொண்டு, கம்பெனியின் முற்றுரிமையை முழுமையாய்த் தகர்த்தெறிய 1813ஆம் ஆண்டுவரை காத்திருக்க வேண்டியிருந்தது.

1698ஆம் ஆண்டுப் பட்டயம் வழங்கப்பட்ட பின் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அமைப்பில் பின்வருமாறு சில மாற்றங்கள் செய்யப்பட்டன. இப் பட்டயத்தின் ஷரத்துகள் கம்பெனியின் பங்குதாரர்களின் தகுதிகளையும் வாக்களிக்கும் அதிகாரத்தையும் சம்பந்தப்படுத்தியதாய் இருந்தன. கம்பெனி யின் நல்ல நிர்வாகத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு, அன்றுவரை செயற்பாட்டிலிருந்த சில விதிகளை மாற்றி, அதன் மூலம் ஓட்டுரிமை பெற்றிருந்த பங்குதாரர்களின் தகுதிகளையும் பிற சலுகைகளையும் இப் பட்டயம் பின்வருமாறு நிர்ணயித்தது. முன்பு ஆயிரம் பவுன்களாயிருந்த இருப்புத் தொகையின் மதிப்பு தற்போது ஐந்நூறு பவுன்களாய்க் குறைக்கப்பட்டு, அந்த இருப்புத் தொகை மதிப்பின் அடிப்படையில் கம்பெனி உறுப்பினர்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது. அதேசமயம், எவ் வுறுப்பினருக்கும் ஐந்துக்கு மேற்பட்ட வாக்குச் சீட்டுகள் (votes) கிடையாதென்றும், உச்சவரம்பு விதிக்கப்பட்டது. மேலும், இனி 2,000 பவுன்களைத் தமது குறைந்தபட்ச இருப்புத் தொகையாகக் கொண்டோர் கம்பெனியின் தனிநபர்க் குழுவினராகும் தகுதியைப் பெறும் வகையில் விதிகளில் மாற்றம் செய்யப்பட்டது. மற்றப்படி கிழக் கிந்தியக் கம்பெனியின் ஏனைய அரசியலமைப்பு விதிகள் யாவும் பெரும்பாலும் மாற்றப்படாமல் இருந்தன. எனினும் புதிதாய் ஆரம்பிக்கப்பட்டிருந்த அஸ்ஸாடா கம்பெனியின் வளர்ச்சியாலும் போட்டியாலும், பழைய கிழக்கிந்தியக் கம்பெனி சிறிது இன்னல் களையும் ஏற்க வேண்டியிருந்தது.

1698ஆம் ஆண்டிற்குப் பிறகு பழைய கிழக்கிந்தியக் கம்பெனி, கர்ட்டீனின் அஸ்ஸாடா கம்பெனி ஆகிய இரண்டு நிறுவனங்களும் பிரிட்டிஷ் அரசிடமிருந்து சலுகைகளையும், அதிகாரங்களையும் எவ் விலைகொடுத்தேனும் பெறவேண்டுமென்ற நோக்கில் போட்டி

[1] S. C. Ilbert, Government of India.

யிடலாயின. அவை, அப்பொழுது நிதி நெருக்கடியயைக் கொண்டிருந்த பிரிட்டிஷ் அரசிற்குக் கடன் தொகைகளை வழங்க முற்பட்டன. இத்தகைய வாய்ப்பைப் பிரிட்டிஷ் அரசும் பயன் படுத்திக்கொள்ளத் தவறவில்லை. எனவே, அப்பொழுது பிரிட்டிஷ் அரசின் நிதியமைச்சராய், கருவூல வேந்தராயிருந்த மாண்டெகு பழைய கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்தும், அஸ்ஸாடா கம்பெனியிடமிருந்தும் முறையே 7,00,000 பவுன்களென்றும், 2,00,000 பவுன்களென்றும் கடன் தொகைகளைப் பெற்ருர். இக் கடன் தொகைகளுக்கு ஈடாக இரு கம்பெனிகளுக்கும் பாராளு மன்றத்தில் பொருத்தமான சட்டங்களை இயற்றுவதன் மூலம் வணிக முற்றுரிமையை வழங்குவதாய் மாண்டெகு வாக்குறுதியைக் கொடுத்தார். பின்னர்த் தமது வாக்குறுதியைக் காப்பாற்றும் வகையில், 1698ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் பத்தாண்டு வரலாற்றையும் வயதையும் பெற்றிருந்த அஸ்ஸாடா கம்பெனியைத் திருத்தி அமைப்பதற்கான முயற்சியை மாண்டெகு மேற்கொண்டார். இம் முயற்சியின் பயனுய் அமைக்கப்பட்டதே 'கிழக்கிந்தியத் தீவுகளில் வணிகம் புரிவதற்கான ஆங்கிலக் கம்பெனி' (The English Company Trading in the East-Indies) ஆகும். இப்படி மாற்றி யமைக்கப்பட்ட கர்ட்டீனின் அஸ்ஸாடா கம்பெனிக்குப் பழைய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கப் பட்டிருந்ததைப் போலவே அதிகாரங்களும் உரிமைச் சலுகைகளும் கொடுக்கப்பட்டன. இதனல் பழையதும் புதியதுமான இரு கம்பெனிகளும் தம் வளர்ச்சிக்கான செயல்களில் அக்கறை காட்டாமல் போட்டிகளையும் பொருமைச் செயல்களையும் மேற் கொள்ளலாயின.

ஆனல், புதிய கம்பெனி பெருமளவுத் தொகையைப் பிரிட்டிஷ் மன்னருக்குக் கடனுகக் கொடுத்திருந்ததால், அது கீழை நாடு களுடன் வணிகத்தை மேற்கொள்வதற்குத் தேவையான மூலதனத் தைப் பெற்றிருக்கவில்லை. அதேசமயம் பழைய கிழக்கிந்தியக் கம்பெனியோ நீண்ட அனுபவத்தையும், திறமையான அதிகாரி களையும், பணியாளர்களையும் பெற்றிருந்தது. எனவே, அது நல்ல முறையில் கோட்டை கொத்தளங்களுடன் கூடிய வணிகச் சாலை களையும் வணிக நிறுவனங்களையும் நிறுவி நல்ல நிலையில் இருந்தது. எனினும், புதிய கம்பெனியிடமிருந்து தோன்றிய போட்டியினலும், இரு கம்பெனிகளின் பணியாளர்களுக் கிடையே எழுந்த சச்சரவு களாலும் 1702ஆம் ஆண்டுவரை குழப்பமான நிலை நிலவியது. இப்படிப்பட்ட குழப்பமான நிலையின் காரணமாக இங்கிலாந்து நாட்டின் அரசிற்கே அச்சமும் துன்பநிலையும் தோன்றின. எனவே, இந்த இரு கம்பெனிகளையும் இணைக்கும் முயற்சி கொடாஃபின்

கோமானால் மேற்கொள்ளப்பட்டது. இவரது முயற்சியின் விளைவாக 1709ஆம் ஆண்டில் மேற்சொல்லப்பட்ட இரு கம்பெனி களும் ஐக்கியமாக்கப்பட்டு 'கிழக்கிந்தியத் தீவுகளில் வர்த்தகம் புரிவதற்கென அமைக்கப்பட்ட ஆங்கில வணிகர்களின் ஐக்கியக் கம்பெனி' எனப் பெயரிடப்பட்டது. எனினும் இவ்வாறு ஐக்கிய மாக்கப்பட்ட கம்பெனி பெருவழக்கின் காரணமாக 1858 ஆம் ஆண்டில் அது கலைக்கப் பட்டவரை பிரிட்டிஷ் அல்லது ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி என்றே அழைக்கப்படலாயிற்று.

இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசின் உயர் இறைமையைப் பசுமரத் தாணியைப் போல் பதியவைப்பதற்கு முன்னோடியான செயல்கள் பலவற்றை மேற்கொள்வதற்கென அறிந்தோ, அறியாமலோ அமைக்கப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனமும் அரசியலமைப்பும் பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பின்வரும் செய்திகளுக் கொப்ப இருந்தன. 1709ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலதன இருப்பு 2,000,000 பவுன்களாய் இருந்தது. இம் மூலதனத்தில் பங்குகளைப் பெற்றிருந்த யாவரும் கம்பெனியின் உறுப்பினர்களாய் இருந்தனர். குறைந்தது ஐந்நூறு பவுன்களைப் பங்காகக் கொண்டிருந்த ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்குச் சீட்டு கொடுக்கப்பட்டிருந்தது. மேலும், அப் பங்குதாரர்கள் கம்பெனியின் உடைமையாளர்கள் என்ற முறையில் உடைமையாளர் மன்றக் கூட்டங்களில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். கம்பெனியின் விவகாரங்கள் குறித்து இவர்கள் கூட்டத்தை நடத்திய பொழுது உடைமையாளர்களின் பொது மன்றம் (General Council of the Proprietors) என்ற நிறுவனமாய்க்கருதப்பட்டனர். இவ் வுடைமையாளர்கள் தங்களில் 24 பேர்களை இயக்குநர்களாய் ஒவ்வோராண்டும் தேர்ந்தெடுத் தனர். ஆனால் 2,000 பவுன்களை இருப்புப் பங்காகக் கொண்டிராத எவரையும் இயக்குநராகத் தேர்ந்தெடுக்கக்கூடாது என்ற விதி தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. 24 இயக்குநர்களில் குறைந்தது 13 பேர்களேனும் இல்லாத நிலையில் பொதுமன்றக் கூட்டம் கூட்டப்படலாகாது என்ற கட்டாயம் இருந்தது. மேலும், உடைமையாளர்களின் பொது மன்றம் ஆண்டொன்றுக்கு ஐந்து முறைகளேனும் கூடவேண்டும் என்று விதிமுறை இருந்தது. இறுதியாகக் கம்பெனியின் நிர்வாகம் குறித்து நடைமுறை யிலிருந்த பாராளுமன்றச் சட்டங்களுக்கொப்பத் துணைச் சட்டங்களை இயற்றிக்கொள்ளவும், அதற்கெனக் கம்பெனியின் உடைமையாளர்களைக் கொண்டதாய் ஒரு குழுவைத் தேர்ந் தெடுக்கவும் உடைமையாளர்களின் பொதுமன்றத்திற்கு அதிகார அனுமதி யளிக்கப்பட்டிருந்தது. மேற்சொல்லப்பட்ட குழுவினால்

தயாரிக்கப்படும் துணைச் சட்டங்களுக்குப் பாராளுமன்றத்தின் சட்டங்களுக்கு எத்துணைச் சக்தியும் அனுமதியும் இருந்ததோ அத்துணை அளவிற்குச் சக்தியும் அனுமதியும் இருந்தன. இப்படிப் பல முக்கியமானதும் அடிப்படையானதுமான அம்சங்களைக் கொண்டிருந்த கம்பெனியின் பட்டயம், இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியினால் இறைமையுடன் கூடிய அதிகாரங்கள் மேற் கொள்ளப்படுவதற்கான வழி வகைகளையும் தெளிவாக அறிவித் திருந்தது. இந்தியாவில் கோட்டை கொத்தளங்களையும், வணிகச் சாலைகளையும், தோப்பு துரவுகளையும் நிறுவித் தனது நிர்வாகத்திற்குத் தேவையான ஆளுநர்கள், அதிகாரிகள், படை வீரர்கள் ஆகியோரைத் தருவித்து நியமித்துக்கொள்ள பழைய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஸ்டூவர்ட் மன்னர்களால் (Stuarts) கொடுக்கப்பட்டிருந்த பழைய அதிகாரங்கள் யாவும் ஐக்கியக் கம்பெனிக்கு நிலைநிறுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன. மேலும் தேவையான நீதிமன்றங்களை நிறுவிக்கொள்வதற்கான அதிகார மும் அதற்குக் கொடுக்கப்பட்டது.'[1] இவ்வாறு கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதிகாரங்கள் பலவற்றைக் கொடுத்ததன் மூலம் அதனைத் தனது சார்புநிலை நிறுவனமாகக் கொண்டு பிரிட்டிஷ் அரச நிறுவனம் கம்பெனியை இந்தியாவில் சட்டங்களை இயற்றிச் செயல்படுமாறு செய்தது என்று கூறின் அது மிகைப்பட்ட கூற்றாகாது.

தனது ஆதிக்க நிலைக்கு ஆட்டங் கொடுக்காத வகையில் அடிப் படை தரப்பட்டிருந்த சமயத்தில்தான் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் மொகலாயப் பேரரசு வீழ்ச்சியுற்று வந்ததைச் சாதக மாக்கிக் கொண்டது. 1707-ல் மாமன்னர் ஔரங்கசீப் இறந்த பின் நம் நாடு வலிவானதோர் எதிர்ப்புச் சக்தியை இழந்தமை யால், அந்நியர்களின் தலையீட்டையும், போர்களையும், அரசியல் அரியாசனச் சூழ்ச்சிகளையும் எதிர்ப்பதற்குத் தேவையான சக்தியை பெற்றிருக்கவில்லை. இதுவும், இன்னோரன்ன பல செய்திகளும், சூழ்நிலைகளும் சாதகமாய் அமைந்த காரணத்தால்தான் ஐரோப் பியர்கள், குறிப்பாக ஆங்கிலேயர் இறுதியாகத் தமது ஆதிக்கத் தையும் அரசாங்க பரிபாலனத்தையும் நம் தாய் நாடாம் இந்திய நாட்டில் நிலை நாட்டினர் என்பதை நாம் நமது நினைவிற் கொள்ள வேண்டும்.

1709ஆம் ஆண்டு முதல் 1765ஆம் ஆண்டு வரையிலான ஐம்பத்தாறு ஆண்டுக் காலம் ஐக்கியமாக்கப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனியின் வரலாற்றில் குறிப்பிடத் தக்க காலமாகும்.

[1] A B. Keith, A Constitutional History of India, p. 17.

ஏனெனில் இக் காலத்தில்தான் கம்பெனியின் அதிகாரங்களும், தன்மையும், அரசியலும், அரசாங்க நிலையமும் வேரூன்றின. பிரிட்டிஷ் அரசிற்குத் தேவையான கடன்களைக் கிழக்கிந்தியக் கம்பெனி கொடுக்கக்கூடிய நிலையில் இருந்ததாலும், அதற்கு அதிக அளவிலான அதிகாரங்களும் சலுகைகளும் தேவையாயிருந்த தாலும், பிரிட்டிஷ் அரசாங்கம் எத் தயக்கமும் இன்றி 1711, 1730, 1740 ஆகிய ஆண்டுகளில் பல சட்டங்களை இயற்றிக் கம்பெனிக்குத் தேவையான சலுகைகளைக் கொடுத்த வண்ண மிருந்தது. இடங்களை விட்டுக்கொடுத்தல், ஆதாயப் பொருள் களைப் பகிர்ந்துகொள்ளுதல், இந்தியச் சிப்பாய்களை ஒழுங்கு படுத்துதல், புதிய இடங்களைப் பிடித்தல் போன்ற பல வகையான அதிகாரங்கள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் 1709, 1726, 1754, 1757, 1758 ஆகிய ஆண்டுகளில் பட்டயங்கள் மூலம் கிழக் கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டன. இதற்கிடையில், 1757ஆம் ஆண்டில் நடைபெற்ற பிளாசிப் போரில் (Battle of Plassey) இராபர்ட் கிளைவ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வெற்றி தேடிக் கொடுத்தார். இப்படி நடந்த பல்வேறு செயல்கள் கிழக் கிந்தியக் கம்பெனியின் செல்வாக்கையும் தகுதியையும் இங்கிலாந்து நாட்டின் அரசாங்கத்திடம் மிகவும் உயர்த்தின. இந்தியாவில் தனது சக்தியை வெளிப்படையாய் உணர்த்தும்படி மேற்சொல்லப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எனவே, முன்னரே கூறியதைப் போன்று, கம்பெனியிடமிருந்து அவ்வப் பொழுது பெரும் நிதியுதவிகளைப் பெற்றுவந்த பிரிட்டிஷ் அரசும் மனமுவந்து, இன உணர்ச்சியுடன் வலிவு மிக்க அதிகாரங்களையும், ஆதாய முற்சலுகைகளையும் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுத்தது. இப்படி அரச நிறுவனத்திடமிருந்தும் பாராளு மன்றத்திடமிருந்தும் அதிகாரங்களையும் சலுகைகளையும் அதிக மாய்ப் பெற்று, இந்தியாவில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு இறுதியாக இட இறைமையும் உரிமையும் கொண்ட ஒரு அரசாங்கமாக, போர்களைத் தழுவிய அரசியல் சக்தியாக 1765ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனி தன்னை மாற்றிக் கொண்டது. இதற்குத் துணைபுரியும் வகையில் இந்தியச் சுதேசி அரசுகளுடனும் ஏதேனும் ஒரு வழியில் கிழக்கிந்தியக் கம்பெனி சாதகமான உறவு நிலையை அவ்வப்போது ஏற்படுத்திக் கொண்டு, அவைகளிடமிருந்து அதிகாரங்களையும் அரசியல் ஆதாயங் களையும் பெற்ற வண்ணம் காரியங்களைச் செய்துவந்தது. வணிகத்தை வெளிப்படையாய்க் கொண்டு, அரசியல் மற்றும் அரசாங்க ஆதாயங்களையும் குறிக்கோளையும் உள்ளுக்குள் வைத்துக் கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனி 1765ஆம் ஆண்டில் உலகறியும் வகையில் உருமாற்ற நிலையைப் பெற்றது.

3. பதினேழு, பதினெட்டாம் நூற்றுண்டுகளில் ஆங்கிலேயர் பெற்ற சலுகைகளும் இந்திய அரசியல் நிலவரமும்

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் பெற்ற அதிகார ஆதிக்கத்திற்கும், செல்வாக்கிற்கும் இரண்டு மூல ஆதாரங்கள் இருந்தன என்று முன்னேர் அதிகாரத்தில் எடுத்துக் கூறப்பட்டு, அதன்படி முதல் மூல ஆதாரமான இங்கிலாந்து நாட்டின் அரச நிறுவனமும், பாராளு மன்றமும் கொடுத்த சலுகைகள் பலவற்றைக் கண்டுள்ளோம். கிழக்கிந்தியக் கம்பெனி யின் அதிகாரப் பாதை எவ்வாறு, பல பட்டயங்களின் மூலம் வகுத்துக் கொடுக்கப்பட்டது என்பதையும் அறிந்துள்ளோம். இந்தியாவில் தனது அதிகார ஆதிக்கத்தை நிறுவுவதற்கு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றிருந்த இரண்டாவது ஆதாரம் மொகலாயப் பேரரசர்களும் மற்ற சில இந்திய அரசர்களும் அதற்குக் கொடுத்த சலுகைகளும் உரிமைகளும் ஆகும். இந்தியச் சுதேசி அரசுகளிடமிருந்து பல சலுகைகளை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றதன்மூலம் அது தனது வியாபாரத் தளங்களையும், நிறுவனங்களையும் இங்கு ஆரம்பக் காலத்தில் அமைத்துப் பின்னர் தனது செல்வாக்கை வளர்த்து, இறுதியாக ஒரு பேரரசை நிறுவியது. எனவே, இந்தியச் சுதேசி அரசுகளிடமிருந்தும் அவற்றின் தலைவர்களிடமிருந்தும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்ற சலுகைகளைப்பற்றி இங்குக் கூறவேண்டியது மிக முக்கிய மாகும்.

A.B கீத் அவர்களின் கருத்துப்படி, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் இந்தியாவில் மொகலாயப் பேரரசரின் இறைமைக்கு உட்பட்டிருந்த சார்புப் பணியாளர்களிடமும், அதிகாரிகளிடமும்தான் தம் ஆரம்பக் காலத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். ஆனல், இந்த உறவுநிலை போர்த்துக்கீசியரின் தலையீடு அதிகமாக இருந்ததால் சீரடைந்து இருக்கவில்லை. அதனுல்

தாம் எதிர்பார்த்த அளவிற்குத் தகுந்த மரியாதைகளையும், உபசரணைகளையும் அவர்களிடமிருந்து ஆங்கிலேயர் பெற முடிய வில்லை. 1611ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் அரசராயிருந்த முதலாம் ஜேம்ஸ் இந்தியாவுடன் வர்த்தக உறவை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளும் ஆவலைப் பெற்றிருந்தார். எனவே, வில்லியம் ஹாகின்ஸ் (William Hawkins) என்பவரை மொகலாயப் பேரரசாயிருந்த ஜஹாங்கீரிடம் தூது அனுப்பினர். முதலில், ஹாகின்ஸ், ஆக்ராவில் தங்கியிருந்த பொழுது ஜஹாங்கீர் அவருக்கு அதிக ஆதரவைக் காட்டிய போதிலும், இறுதியாக முதலாம் ஜேம்ஸ் மன்னர் விரும்பியதைப் போல் ஒழுங்காக இந்தியாவில் வர்த்தகம் புரிவதற்கான அனுமதியை ஆங்கிலேயருக்கு அளிக்க மறுத்தார். எனினும், சூரத் என்னும் இடத்தில் ஆங்கிலேய வணிகர்களுக்கு வணிகம் புரிவதற்கான சலுகைகளை அதன் உள்ளூர் அதிகாரிகள் கொடுத்தனர். இச் சலுகைகள் பின்னர் மொகலாயப் பேரரசின் ஆணையின் மூலம் (firman) உறுதிப் படுத்தப்பட்டன. 1615-1619-ல் இங்கிலாந்தின் மன்னர், சர் தாமஸ்ரோ என்பவரை மொகலாயப் பேரரசரிடம் ஒரு வர்த்தக உடன்படிக்கையைச் செய்துகொள்ளும் பொருட்டு அனுப்பினர். ஆனால், இம் முயற்சியும் பயன் அளிக்கவில்லை. அப்பொழுது குஜராத்தில் மொகலாயப் பேரரசரின் வைசிராயாக இளவரசர் குர்ரம் இருந்தார். இவரிடமிருந்து சர். தாமஸ்ரோ உள் நாட்டுத் தலையீடு இல்லாத நிலையில் கம்பெனி தன் வணிக சாலைகளின் நடவடிக்கைகளை மேலாண்மை செய்வதற்கும், வர்த்தகம் புரிவதற்கும் அனுமதியைப் பெற்றார். இப்படித் தமது ஆரம்ப கால முயற்சிகளை எடுத்திருந்த சமயத்தில் ஆங்கிலக் கம்பெனியினர் போர்த்துக்கீசியருடனும், டச்சுக்காரருடனும் போரிட வேண்டியிருந்தது. எனவே, சர். தாமஸ்ரோ வங்காளத்திலோ அல்லது சிந்துவிலோ ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி வணிகத் தலங்களை நிறுவிக்கொள்வதற்கான உத்தர வைப் பெறமுடியவில்லை. மாறாக, சூரத், ஆக்ரா, அகமதாபாத், புரோச் என்னும் இடங்களிலேயே உள் நாட்டுத் தலைவர்கள் கொடுத்திருந்த அனுமதியின்பேரில் தன் வணிகச் செயல்களையும், நிறுவனங்களையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. சூரத்தில் இருந்த கம்பெனியின் வணிகச் சாலைகளின் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொள்ளும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. போர்த்துக்கீசியர்களின் செல்வாக்கும், அதிகாரமும் டச்சுக்காரர் களின் தாக்குதல்களால் பெரிதும் சரிய ஆரம்பித்து, மொகலாயப் பேரரசிடம் செல்வாக்கை இழக்க ஆரம்பித்தவுடன்தான் ஆங்கிலேயர்கள் முறையான சலுகைகள் பலவற்றை மொகலாயர் களிடமிருந்து பெற முடிந்தது. இஃது இவ்வாறு இருக்க 1635ஆம்

ஆண்டில் கோவாவிலிருந்த வைசிராய் (உள் நாட்டுத் தலைவர்) சூரத்திலிருந்து ஆங்கில வணிகச் சாலையின் தலைவருடன் ஓர் உடன் படிக்கையை ஏற்படுத்திக்கொண்டு, அங்கு ஆங்கிலேயர்கள் வணிகம் செய்துகொள்வதற்கு மேலும் அனுமதி அளித்தார். இவ் வுடன் படிக்கை, பின்னர்ப் போர்த்துக்கீசியர்களாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

ஆங்கிலேயர் சென்னையைப் பெறுதல்

ஆங்கிலேயர்கள் ஆரம்பக் காலத்திலிருந்து சூரத்தைத் தம் வணிகச்செயல்களுக்கான மைய இடமாகப் பெற்றிருந்த போதிலும், கிழக்கிந்தியக் கம்பெனி அங்கு முதலில் இட இறைமையையும், உரிமையையும் பெறவில்லை. கிழக்கிந்தியக் கம்பெனியின் செயற் பாடுகள் யாவும் மொகலாயப் பேரரசரின் இறைமைக்குட் பட்டிருந்த வட்டார அதிகாரிகளால் கொடுக்கப்பட்டிருந்த அனுமதியிலும், மொகலாயப் பேரரசின் ஏகாதிபத்திய இறைமைக்கு உடன்பட்ட நிலையிலுமே மேற்கொள்ளப்பட வேண்டி யிருந்தன. எனவே, இட உரிமையுடன் கூடிய உண்மையான அதிகாரத்தை ஆங்கிலேயர்கள் தென்னிந்திய இந்து இளவரசர் ஒருவரிடமிருந்துதான் பெற்றனர் என்பது நமக்கு வியப்பாக இருக்கலாம். டச்சுக்காரர்களின் உதாரணத்தைப் பின்பற்றி 1611-ல் கிழக்கிந்தியக் கம்பெனி கோல்கொண்டா அரசின் முக்கியத் துறைமுகமாயிருந்த மசூலிப்பட்டினத்தில் ஒரு வணிகத் தொழிற்சாலையை ஆரம்பித்து இருந்தனர். தென்னிந்தியாவில் இந்து மன்னர்கள் ஆண்ட நிலத்தில்தான் தம் வர்த்தகம் முனைப்பும் பயனுறுதியும் கொண்டதாய் அதிக பலன்களைக் கொடுத்தது என்பதை ஆங்கிலேயர் உணர்ந்தனர். எனவே, 1626-ல் பம்பாயிலுள்ள ஆர்மகோவான் (Armagaon) என்னும் இடத்தில் ஒருதுணை நிலையத்தை அமைத்தனர். இங்குத் தான் ஆங்கிலக் கம்பெனி முதன் முதலில் கோட்டை கொத்தளங்களுடன் கூடிய ஒரு வணிக நிலையத்தை அமைத்தது. ஆனால், அது ஆங்கிலேயர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை; அவர்கள் விரும்பிய பலனை விரும்பியபடி பெறவும் முடியவில்லை. அப்பொழுது சென்னைப் பகுதி, சந்திரகிரி மன்னருடைய இறைமைக் குட்பட்டுச் சென்னப்ப நாயக்கர் என்ப வரிடம் இருந்தது. சென்னப்ப நாயக்கரிடமிருந்து பெறப்பட்ட தால்தான் சென்னை எனப் பெயர் பெற்றது. வந்தவாசியின் தல நிர்வாகி சந்திரகிரி மன்னருக்குச் சார்நிலையில் இருந்தார். எனவே, 1639-ல் வந்தவாசியின் உள்நாட்டுத் தலைவராய் இருந்த இந்து இளவரசர் ஒருவரைக் கம்பெனியினர் அணுகினர். வந்தவாசியின் இளவரசர் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு உதவும் வகையில் தனது பொறுப்பின்கீழ் இருந்த சென்னையை நிர்வகிப்பதற்கான அதிகா

ாத்தை ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். அத்துடன் அங்கு ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டு நாணயத்தை அச்சிட்டுக் கொள்ளவும், தங்கசாலையை அமைத்துக் கொள்ளவும் கம்பெனிக்கு அதிகாரத்தைக் கொடுத்தார். இவற்றிற்கு ஈடாகக் கிழக்கிந்தியக் கம்பெனி வந்தவாசியின் உள்ளூர்த் தலைவருக்குத் தனது வருமானத்தில் ஐம்பது சதவிகிதத்தையும், சென்னைத் துறைமுகத்தில் விதிக்க இருந்த தீர்வையையும் கொடுக்கவேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அதனைக் கிழக்கிந்தியக் கம்பெனியும் ஏற்றுக் கொண்டது. பின்னர் 1640-ல் ஆர்மகோவாவை விட்டு ஆங்கிலேயர் சென்னைக்கு வந்தனர். ஆங்கிலேயர் 1641ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் புனித ஜார்ஜ் கோட்டையைக் கட்டி அதனைத் தம் சோழமண்டலக் கடற்கரையின் (Coramandal coast) தலைமையிடமாகக் கொண்டனர். 'இந்தக் கோட்டை நிறுவுவதற்கான இடம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த பிரான்ஸிஸ்டே, ஆண்ட்ருகோகன் என்னும் இருவரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, கி.பி. 1640-ல் தாமர்லா வெங்டாத்திரி நாயக்கரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டது. ஆரம்பத்தில் வணிகச் சாலை (factory) சதுரமான மதிற்சுவர்களின் மையத்தில் அமைந்திருந்தது. இவைகளைக் கி.பி. 1673-ல் டச்சுக்காரர்கள் வெளித் தொடர்பறுத்து வளைத்தார்கள். பிறகு 1711-ல் இப் பழைய கோட்டை இடிக்கப்பட்டுக் கோட்டைச் சதுக்கம் கட்டப்பட்டது. ஆஸ்பத்திரி, நாணய அச்சகம் (mint) முதலிய கட்டடங்கள் சேர்க்கப்பட்டன. கி.பி. 1758 டிசம்பர்த் திங்களுக்கும், 1760 பிப்ரவரித் திங்களுக்கும் இடையே இக் கோட்டை பிரெஞ்சுத் தளபதி கௌண்ட்-டி-லாலியால் பலமாகத் தாக்கப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கி.பி. 1769-ல் கோட்டையைப் புதுப்பிக்கும் பணி தொடங்கி, 1781-ல் சுமார் இப்போதுள்ள நிலையை அடைந்தது.'[1]

1645-47 ஆகிய ஆண்டுகளில் சென்னையைச் சுற்றியிருந்த இடங்களைக் கோல்கொண்டா அரசின் படைகள் தாக்கிப் பிடித்தன என்றாலும், இந்து அரசரால் கம்பெனிக்கு அனுமதிக்கப்பட்டிருந்த சலுகைகளைக் கோல்கொண்டா அரசர் தொடர்ந்து அனுமதித்தார். எனினும், சென்னைத் துறைமுகத்தில் விதிக்கப்பட்ட சுங்கத்தீர்வைகளைக் கோல்கொண்டா அரசரும், கிழக்கிந்தியக் கம்பெனியும் பகிர்ந்து கொண்டதில் தொல்லை ஏற்பட்டது. 1658-ல் முந்நூற்றைம்பது வராகன்களைக்[2] கிழக்கிந்தியக் கம்பெனி ஒவ்வோர் ஆண்டும் செலுத்தவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[1] புனித ஜார்ஜ் கோட்டையின் நுழை வாயிலுள்ள அறிவிப்புக்கல்லில் குறிக்கப்பட்டுள்ள செய்தி.

[2] வராகன் (Pagoda) என்பது பழைய தென்னிந்தியப் பொன் நாணயமாகும்.

1672-ல் கட்டுப்படுத்தப்படாத கட்டளை அதிகாரம், அரசாங்கம், நீதி நிர்வாகம் ஆகியவற்றைச் சென்னையில் நடத்திக்கொள்ள ஆங்கிலக் கம்பெனிக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. மேலும் ஆங்கிலக் கம்பெனி யன்றி வேறு எந்த உள்நாட்டு அதிகாரியும் அரசோச்சும் நிலை அகற்றப்பட்டது. எனவே, 1672ஆம் ஆண்டில் கோல்கொண்டா அரசருக்குக் கம்பெனி செலுத்த வேண்டிய தொகை ஆயிரத்து இருநூறு வராகன்களாக உயர்த்தப்பட்டு, அதிக அதிகாரங்கள் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டன. இப்படிக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு கொடுக்கப்பட்ட அனுமதி 1687-ல் கோல்கொண்டாவை ஔரங்கசீப் கைப்பற்றிய வரை இருந்தது பின்னர், பேரரசர் பருக்ஷியாரினால் 1693-ல் சென்னைக்கு அடுத்த மூன்று கிராமங்கள் மீதும், 1708-ல் மேலும் ஐந்து கிராமங்கள்மீதும் ஆங்கிலக் கம்பெனிக்கு இருந்த உரிமை உறுதிப்படுத்தப்பட்டது. இதற்குக் காரணமாய் இருந்தது ஜான் ஸர்மன் என்பவர் தூதுவராக வந்து எடுத்துக்கொண்ட முயற்சியே யாகும். மொகலாயப் பேரரசர் பருக்ஷியார் எத் தீர்வையையும் செலுத்தாத சிறப்புச் சலுகையுடன் ஹைதராபாத் மாநிலத்தில் ஆங்கிலக் கம்பெனி செயல்படுவதையும் அனுமதித்து நிலை நாட்டினார். ஆனால், சென்னைக்காக விடுபாட்டு வரியைக் கம்பெனியினர் செலுத்தவேண்டு மென்பது வலியுறுத்தப்பட்டது.

மொகலாயப் பேரரசர் பருக்ஷியாரின் அதிகாரம் சரியத் தொடங்கியதும், சென்னையை உட்கொண்டிருந்த கர்நாடகத்தில் அதன் நவாபு அதிகாரம் மிக்கவராய் இருந்தார். இக் கருநாடக நவாபு சட்டப்படி மொகலாயப் பேரரசின் பிரதிநிதியாய் இருந்த தக்காணச் சுபேதாருக்குக் கீழ்நிலையாளராகவே இருந்தார். ஆனால், செயல்முறையில், கர்நாடக நவாபு அதிகார மிக்கவராய் இருந்தார். எனவே, சென்னையின் ஆங்கிலக் கம்பெனி அவரது சார்புநிலை ஆட்சிப் பகுதியாகவே இருக்க வேண்டியிருந்தது. பின்னர், ஆங்கிலேயர்களுக்கும், ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் நடந்த கர்நாடகப் போரில் சென்னை ஃபிரெஞ்சுக்காரர்களால் கைப்பற்றப் பட்டது. 1748-ல் ஆங்கிலேயருக்கும். ஃபிரெஞ்சுக்காரருக்கும் ஏற்பட்ட உடன்பாட்டின் காரணமாகச் சென்னை திரும்பவும் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டது. 1752-ல் கிழக்கிந்தியக் கம்பெனியினர் கர்நாடக நவாபைக் கைப்பாவையாகக் கொண்டு விடுபாட்டு வரியைச் செலுத்துவதை நிறுத்திச் சென்னையையும் அதனைச் சுற்றியிருந்த தம் ஆளுகைக் குடியேற்றங்களையும் தம் இட இறைமைக்கும் உரிமைக்கும் உள்ளாக்கினர். மூன்றும் கர்நாடகப் போரின் முடிவிற்குப் பிறகு சென்னையும், அதனைச் சுற்றியிருந்த கிராமங்களும் தவிரப் பிற இந்தியப் பகுதிகள் மொகலாயப்

பேரரசரின் பெயரளவிலான இறைமையின்கீழ் அமைந்திருந்தன. இப்படிச் சென்னை மாகாணம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின்கீழ் இட உரிமைப் பொருளாக மாறியது.

ஆங்கிலக் கம்பெனியின் கல்கத்தாக் குடியேற்றமும் வளர்ச்சியும்

வங்காளத்தைப் பொறுத்தவரை கிழக்கிந்தியக் கம்பெனி 17ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை பயனுறுதி மிக்கதும் நிலையானதுமான இறைமையைப் பெறமுடியவில்லை. 1556ஆம் ஆண்டில் மன்னன் ஷாஷுஜா என்பவனிடமிருந்து வர்த்தகச் சலுகைகள் சிலவற்றைப் பெற்றது. அப்படிப் பெற்ற சலுகைகளை வங்காளத்தின்மீது தமது ஆட்சி இறைமையைக் கொண்டிருந்த மொகலாயப் பேரரசர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், அம் முயற்சிகளுக்கு எப் பலனும் கிட்டவில்லை, எனினும், 'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கேற்பக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் தளர்ச்சியடைந்து விடவில்லை. மொகலாயப் பேரரசரின் அனுமதியின் பேரில் வங்கத்தின் ஆளுநர் நடைமுறையிலிருந்த கம்பெனியின் சலுகைகளை 1678-ல் புதுப்பித்துக் கம்பெனியின் வணிகச் செயல்களுக்கு அனுமதியைக் கொடுத்தார். பின்னர் 1680-ல் கம்பெனியினர், பேரரசரிடமிருந்து ஓர் அரச உத்தரவு (firman) கிடைக்கப் பெற்றனர். எனினும், உள்ளூர் அதிகாரிகள் அதிகமாகத் தலையிட்டுக் கம்பெனியின் வர்த்தகச் செயலுக்குப் பல இடையூறுகளைத் தோற்றுவித்தனர். எனவே, கிழக்கிந்தியக் கம்பெனி மொகலாயர்களுடன் விரோத உணர்ச்சியைக் கொண்டு போர்ப் பிரகடனம் செய்யவேண்டி யிருந்தது. இப் பகைமை நிலை கம்பெனிக்கும், மொகலாய அரசாங்கத்திற்கும் இடையே 1690ஆம் ஆண்டுவரை நிலவியது. 1690ஆம் ஆண்டு பம்பாயிலிருந்த கம்பெனியின் அதிகாரிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பயனாய்க் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் மொகலாய அரசருக்கும் இடையே சமரசம் ஏற்பட்டது, அதன்படி கம்பெனி ஆண்டொன்றுக்கு மூவாயிரம் ரூபாய்களை மொகலாய அரசாங்கத்திற்குச் செலுத்த ஒப்புக்கொண்டதனால் கம்பெனிக்கு மொகலாய வல்லரசின் அனுமதி கொடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு முடிவு ஏற்பட்ட பிறகு 1690ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் சூதனுதி (Suthanathi) என்னும் இடத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி தனது குடியேற்றத்தை நிறுவியது. சூதனுதி என்னும் இந்த இடமே கல்கத்தாவாக எதிர்காலத்தில் வளர்ச்சியடைந்தது. சூதனுதியில் ஆங்கிலேயர் 1696ஆம் ஆண்டு வணிகச் சாலையைச் சுற்றி கோட்டைச் சுவர்களை எழுப்பினர். பின்னர், இரண்டாண்டுகள் கழித்துக், கம்பெனி மொகலாயப் பேரரசரிடமிருந்து சூதனுதி,

கல்கத்தா, கோவிந்த்பூர் என்னும் மூன்று கிராமங்களின் மீதான ஜமீன்தாரி உரிமைகளைப் பெற்றது. இதன்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனி அவ் விடங்களில் வரி வசூல் செய்து சிவில் மற்றும் நீதி நிர்வாகத்தை மேற்கொள்வதற்கான உரிமையைப் பெற்றது. இதற்கு ஈடாகக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆண்டொன்றுக்கு ஆயிரத்து இருநூறு ரூபாய்களைக் கொடுத்தது. கோட்டைச் சுவர்களுடன் நிறுவப்பட்ட வணிகச் சாலைக்கு வில்லியம் கோட்டை என்னும் பெயரிடப்பட்டது. இவ் வில்லியம் கோட்டையே 1700ஆம் ஆண்டு வங்க மாநிலத்தின் தலைமையிடமாக அமைந்தது. எனினும், 1698ஆம் ஆண்டில் இந்தியாவில் ஆங்கிலேயர்கள் பெற்றிருந்த உரிமைகள் நிலையற்றனவாயும் திருப்தியற்ற நிலையிலும் இருந்தன. மேலும், மொகலாயப் பேரரசர் ஔரங்கசீபின் தடுமாற்றச் சிந்தைப் போக்கு, கம்பெனியினரை அச்சுறுத்துவதாய் இருந்தது. ஔரங்கசீபினால் கல்கத்தாவின் கம்பெனியின் நலன் பாதிக்கப்படாமலிருக்கும் வகையிலும், மொகலாயப் பேரரசுடன் மிக ஒழுங்கானதும், வலுவானதுமான அடிப்படையில் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் வகையிலும் கம்பெனியின் இயக்குநர்கள் இங்கிலாந்து அரசாங்கத்தின் உத்தரவின்படி ஔரங்கசீபிற்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பினர். அத் தூதுக் குழுவிற்குச் சர் வில்லியம் நாரிஸ் என்பவர் சிறப்புத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். அரசரின் வெளிநாட்டு வணிக நலக் காவலர்களாக அல்லது தண்டலாளர்களாக அந்தஸ்து கொடுக்கப்பட்டுச் சர் வில்லியம் நாரிஸும் மற்றத் தூதுக்குழுவினரும் ஔரங்கசீபிடம் அனுப்பப்பட்டனர். வில்லியம் நாரிஸ் மொகலாயப் பேரரசரிடமிருந்து வணிகம் புரிவதற்கும், தம் இந்தியக் குடியேற்றங்களில் (settlements) சட்ட, நீதி நிர்வாகத்தை மேற்கொள்ளும் உரிமையை முறையணைந்த சலுகைகள் மூலம் பெறுவதற்கும் அக் குழு அனுப்பப்பட்டது. இம் முயற்சிகள் யாவும் 1688-க்குப் பிறகு அமைக்கப்பட்டிருந்த புதிய கம்பெனியினால் எடுக்கப்பட்ட முயற்சிகளாகும். ஆனால், கல்கத்தாவில் ஆங்கிலேயரின் அக்கறைகளை நிலைநாட்டியிருந்தது பழைய கிழக்கிந்தியக் கம்பெனியாகும். எனவே, புதிய கம்பெனியின் முயற்சிகள் மற்றும் சர் வில்லியம் நாரிஸின் தூதுக்குழுவின் துணிவுகள் ஆகியவை பழைய கம்பெனியினால் முறியடிக்கப்பட்டன. இதை முறியடிப்பதற்குப் பழைய கம்பெனியினர். இந்திய அரசையும் அதிகாரிகளையும் இலஞ்சம், அன்பளிப்பு ஆகியவைமூலம் சரிக்கட்டித் தமது அக்கறைச் செல்வாக்கை நிலைநாட்டினர். எனினும், மொகலாயப் பேரரசரின் இறைமைக் கூட்டுப்பட்டு விடுபடுவரியைச் செலுத்திய நிலையிலும், மொகலாய அதிகாரிகளின் அனுமதியின்பேரில் ஒரு

குறிப்பிட்ட அமைப்பில் நாணயங்களை அச்சிட ஏற்றுக்கொண்ட வகையிலும் கல்கத்தாவில் கிழக்கிந்தியக் கம்பெனி செயல்பட்டு வந்தது. சூதனுதி, கல்கத்தா, கோவிந்த்பூர் ஆகிய இடங்களின் மீது ஆளும் உரிமையைப் பெற்றிருந்த ஆங்கில வணிகர்கள் கம்பெனியின் நிமித்தம் அவ் விடங்களில் பணியாற்றி வந்த ஆங்கிலேயர்மீது ஆட்சி மற்றும் நீதி பரிபாலனத்தை அரச பட்டயங்களில் கூறப்பட்டிருந்த செய்திகளுக்கு ஏற்பவும், அவற்றிலிருந்து பெறப்பட்டிருந்த அதிகாரத்தின் துணைகொண்டும் நகரத்தந்தை எனும் மேயர் நீதிமன்றத்தின் மூலம் மேற்கொண்டனர். இந்திய மக்களைச் சார்ந்து எழுந்த சிவில் மற்றும் குற்றவியல் பற்றிய வழக்குகளும் அதிகாரங்களும் ஜமீன்தாரி நீதிமன்றங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், மரணதண்டனை போன்ற பெருந் தண்டனைகள் யாவும் மூர்ஷிதாபாத் நிஜாமினுல் உறுதிப் படுத்தப்படவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. இப்படித் தனது முழு ஜமீன்தாரி உரிமையின்கீழ் மேற்கூறிய மூன்று இடங்களைக் கொண்டிருந்த போதிலும், கல்கத்தாவில் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றிருந்த அதிகாரம் சில சமயங்களில், அது சென்னையில் பெற்றிருந்ததைப் போல் வலிமை பெற்றதாய் இருக்கவில்லை. எடுத்துக்காட்டாக, 1757ஆம் ஆண்டு வரை கல்கத்தாவில் நாணயங்களை அச்சிட்டுக் கொள்வதற்கான உரிமையைக் கம்பெனி பெற்றிருக்கவில்லை.

1707-ல் இந்தியாவில் ஔரங்கசீப் இறந்து விட்டிருந்த நேரத்தில் இங்கிலாந்தில் காழ்ப்புணர்ச்சியுடன் செயல்பட்டு வந்த இரு வணிகக் கம்பெனிகளும் ஒன்ருக இணைக்கப்பட்டிருந்தன. ஐக்கியப்படுத்தப்பட்டிருந்த கம்பெனியினுல் உடனடியாக எம் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு மொகலாயப் பேரரசரிடமிருந்து ஒழுங்கானதோர் உடன்படிக்கை பெறப்படவில்லை. 1714, 1717 ஆகிய ஆண்டுகளில்தான் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அப்பொழுது, பருக்ஷியார் என்பவர் மொகலாயப் பேரரசராயிருந்தார். அவரிடம் ஜான் ஸர்மன் (John Surman) என்பவரைப் பிரதிநிதியாகக் கொண்ட ஒரு தூதுக்குழு அனுப்பப் பட்டது. ஜான் ஸர்மன் மொகலாயப் பேரரசர் பருக்ஷியாரிடம் கலந்து உறவாடியும், விவாதித்தும் மூன்று அரச உத்தரவுகளைப் பெற்ருர். அவ் வுத்தரவுகள் முறையே அவரது ஆட்சி இறைமைக் குட்பட்டிருந்த குஜராத், ஹைதராபாத், வங்காளம் ஆகிய மாநிலங்களின் ஆட்சியாளர்களுக்கு அனுப்பப்பட்டன. இவற்றின் மூலம் நடைமுறையிலிருந்த சிறப்புச் சலுகைகள் கம்பெனிக்கு உறுதிப் படுத்தப்பட்டு, அதனுடைய அதிகாரம் மேலும் விரிவுபடுத்தப் பட்டது. ஆனுல், மைய அரசான மொகலாயப் பேரரசு மாநில

வட்டார அரசுகளால் பெரிதும் போற்றப்படும் நிலையில் இல்லா திருந்ததாலும், அது தனது முனைப்பான கட்டுப்பாட்டை வட்டார அரசுகள்மீது செலுத்தமுடியாதபடி பலம் குன்றியிருந்ததாலும், மேற்கூறப்பட்ட மூன்று அரச உத்தரவுகளால் எதிர்பார்க்கப்பட்ட பலன்களைக் கம்பெனி பெற முடியவில்லை. எனினும், கிழக்கிந்தியக் கம்பெனி வங்கத்தில் தனது ஆட்சி உரிமைக் குட்பட்டிருந்த இடங் களில் பழைய நிலையிலேயே ஆதிக்கத்தைச் செலுத்திச் செயல்களை மேற்கொண்டது.

மொகலாயப் பேரரசின் வீழ்ச்சி ஒரு விதத்தில் கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சாதகமாகவே அமைந்தது. எப்படியெனில், மாநில அரசுகளின் செயல்களில் தலையீடு இல்லாமலிருந்தது. அதனால் அவற்றில் பதவிப் போட்டியும், வாரிசுரிமைப் போர்களும், சதித்திட்டங்களும் மிகவும் மலிந்தன. அவற்றைக் கிழக்கிந்தியக் கம்பெனி சூழ்ச்சி முறையைக் கையாண்டு, தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, தன் செல்வாக்கை வங்காளத்தில் விரிவுபடுத்திக் கொண்டது. வங்கத்தில் நடந்த பதவிப் போட்டிகளிலும் போர் களிலும் சமயத்திற்கு ஏற்றாற்போல் தேவையான போட்டியாளர் களுக்கு உதவி, அவ் வுதவிக்கு ஈடாகப் பல சலுகைகளைக் கம்பெனி யினர் பெற்றனர். இப்படித்தான், பிளாசிப் போருக்கு முன்னர் வங்காள நவாபான சிராஜ்-உத்-தௌலாவைத் தோற்கடித்து, 1757ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அவரைக் கட்டாயத்தின் பேரில் முறையான ஓர் உடன்படிக்கையில் கையொப்பமிட வைத்தனர். இதன்மூலம் வங்கத்தில் கம்பெனியினரின் ஆதிக்கமும் கோட்டை கொத்தளங்களும் விரிவாக்கப்பட்டன. கம்பெனியார் அங்கு நாணயத்தை அச்சிடும் உரிமையையும் பெற்றனர். பிளாசிப் போருக்குப் பிறகு கம்பெனியினர் சிராஜ்-உத்-தௌலாவைப் பதவி யிலிருந்து நீக்கி மீர்ஜாபரை வங்கத்தின் நவாபாக நியமித்தனர். கம்பெனியினரின் கைப்பாவையாக இருந்த மீர்ஜாபர் கம்பெனிக்குத் தேவையான அதிகாரங்கள் யாவற்றையும் கொடுத்தார். கல்கத்தாவில் கம்பெனியின் இறைமை ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக மாறி, ஓர் இராணுவப் படையை அமைத்து நிர்வகித்துக்கொள்ளும் அளவிற்கு இட உரிமையும் கம்பெனிக்கு அளிக்கப்பட்டது. வங்கத்தின் புதிய நவாபு தனது ஆட்சிமன்றத்தில் கம்பெனியின் பிரதிநிதி ஒருவரை ஏற்றுக் கொள்ளும்படியான நிலையும் தோன்றியது. இதற்கிடையில் இருபத்துநான்கு பர்காணுக்கள் என்னும் மாவட்டமும், கிழக் கிந்தியக் கம்பெனியின் அதிகார எல்லைக்குள்ளாகியது. தன்னுடைய நிலையை உணர்ந்த மீர்ஜாபர் மேலும் கம்பெனியினர் விருப்பத்திற் கேற்ப ஆடக் கூடாது என்று கருதியதால் ஆங்கிலேயருடன்

போரிட்டார்; ஆனால், அதில் தோல்விகண்டார். இதில் வெற்றி கண்ட ஆங்கிலேயர் தமக்குகந்த மீர்காஸிம் என்பவரை வங்காள நவாப் ஆக்கி, மேற்கொண்டு அதிக அதிகாரங்களையும், இடங்களையும் வங்கத்தில் பெற்றனர். மீர்காஸிமின் காலத்தில்தான் பர்த்வான், மிட்னப்பூர், சிட்டகாங் என்னும் மூன்று மாவட்டங்களும் ஆங்கிலக் கம்பெனியினருக்கு இனமாகக் கொடுக்கப்பட்டன. இப்படிக் கல்கத்தாவிலும், மேற்கூறப்பட்ட பிற இடங்களிலும் கம்பெனியின் இறைமை முழு உருவம் பெற்றது. ஆனால், இவ்விறைமை மொகலாயப் பேரரசின் பெயரளவிலான இறைமைக்கு உட்பட்டதாய் இருந்தது. தமது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த வங்கத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுநராயிருந்த இராபர்ட் கிளைவினால் இரட்டை அரசாங்க முறை புகுத்தப்பட்டிருந்தது. இப்படித்தான் ஆங்கிலேயரின் அதிகாரமும் ஆதிக்கமும் இரு வழிப் பெரும் பாதைகளைக் கடந்து வந்து குறிப்பிட்டதொரு நிலையில் முற்றுப் பெற்றிருந்தது.

பம்பாயைப் பொறுத்தவரை எந்த விதமான இன்னலும் இடையூறும் இல்லாத நிலையில் கிழக்கிந்தியக் கம்பெனியினர் அதனைத் தமது அரசரிடமிருந்து பெற்றிருந்தனர். இரண்டாம் சார்லஸ் மன்னர் போர்ச்சுகலிடமிருந்து தமது சீதனமாகப் பெற்றிருந்த பம்பாயை ஆண்டொன்றுக்குப் பத்துப் பவுன்கள் என்ற கட்டணத்தின்பேரில் கம்பெனியினரின் நிர்வாகத்திற்குக் கொடுத்திருந்தார். எனவே, பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலேயே பம்பாய் எச் சர்ச்சைக்கும் இடமளிக்காத வகையில் பிரிட்டிஷ் பிரதேசமாக இருந்தது. கம்பெனி சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய மூன்று குடியேற்றங்களில் (early settlements) எப்படித் தனது இறைமைப் பரப்பின்கீழ்ப் பதினெட்டாம் நூற்றாண்டின் பெரும்பகுதி வரை அரசாங்கத்தை அமைத்திருந்தது என்பதைத் தனியே கண்டறியுமுன், பதினெட்டாம் நூற்றாண்டில் எத்தகைய அரசியல் நிலவரங்கள் இங்கே நிலவி, அவை எவ்வாறு அந்நியர்களின் இந்திய ஈடுபாடுகளுக்கும், ஆதாயங்களுக்கும் உதவின என்பதையும் இங்குக் காணவேண்டும்.

மொகலாயப் பேரரசின் சரிவும் சுயேச்சையான சிற்றரசுகளின் தோற்றமும்

1526-ல் பாபரால் அடிக்கல் நாட்டப்பட்டு உருவாக்கப்பட்ட மொகலாயப் பேரரசும், அதன் அரசியல் மற்றும் ஆட்சி முறைகளும் ஏற்றத் தாழ்வுகளைப் பெற்று 1707-க்குப் பின் பெருங்குழப்பங்களுக்குள்ளாயின. குழப்பங்கள் மலிந்திருக்கும் ஒரு நாட்டில் அந்நியர்கள் தலையிடுவதும், அங்கு அவர்களின் சூழ்ச்சி எளிதில்

புகுந்து வேரூன்றி விடுவதும் வரலாறு காட்டும் படிப்பினை களாகும். தொன்மைச் சிறப்பு மிக்க இந்திய வரலாறு இதற்கு விதிவிலக்கன்று. பதினெட்டு, பத்தொன்பது ஆகிய நூற்றாண்டு களில் இந்தியாவில் நிலவிய அரசியல் நிலவரங்கள் இதற்குச் சான்று பகர்வனவாகும். தான் வாழ்ந்த காலம் வரை சாம்ராச்சியப் புகழைப் பேணிப் பாதுகாத்த ஔரங்கசீப், தமது மறைவுக்குப் பின் மொகலாயப் பேரரசு சரிந்து வீழ்ச்சியுறுவதற்குக் காரணமாகு மாறு முன்னேக்கும், பின்விளைவின் நன்மைப் பயனுமற்ற காரியங்கள் பலவற்றைச் செய்துவிட்டு 1707-ல் இறந்தார். பேரறிஞர் ஸ்டான்லி லேன் பூல் (Stanley Lane pool) என்பவர் கூறுவதைப் போல் ஔரங்கசீப்பின் அதிகாரப் பேரொளி அவருடைய இறுதிக் காலத்தில் மங்கியதாய் இருந்தது. அவருடைய படைகள் தக்காணத்தில் (Deccan) பயனற்ற போர்களில் ஈடுபட்டு வலிமையற்றிருந்தன. அப் போர்கள் அவருடைய புகழை மிகவும் அழித்தன. அவருடைய முடிவுக் காலம் நெருங்க நெருங்க, அவரால் அடக்கி ஆளப்பட்டிருந்த அரசுகளும், அரசியல் சக்திகளும், குழுக் களும் அவருடைய ஆதிக்கத்திற்கு எதிராகத் தலைதூக்கிய வண்ணம் இருந்தன. அவருடைய ஆட்சிக் காலம் முடிவதற்கு முன்பாகவே அழிவிற்கான அடையாளங்கள் தென்பட்டு இந்திய நாடு பெருங் குழப்பங்களுக்கு உள்ளாகி யிருந்தது. தனக்கு நிகரான வலிமை படைத்த ஒருவரைத் தமது வழித்தோன்றலாக அவர் உருவாக்கி ஆட்சிப் பீடத்தில் அமர்த்தியிருந்தால்கூட, அவ் வழித் தோன்றல் புரையோடிக் கொண்டிருந்த இந்தியப் பேரரசைக் காப்பாற்றியிருக்க முடியாது. அந்த அளவிற்கு இந்தியப் பேரரசின் அரசியல் பெருமையும், ஆட்சிச் சிறப்பும் ஆட்டம் கண்டு உளுத்துப் போயிருந்தன. எனவே, மொகலாயப் பேரரசின் வீழ்ச்சி தடைப் படுத்தப்பட முடியாததாகவே இருந்தது. அவ் வீழ்ச்சியின் தொடக்கம் ஔரங்கசீப்பின் வாழ்வு முடிந்த வுடனேயே தொடங்கி விட்டது. இதனால் 1707-க்குப் பிறகு, அன்றைய உலக நாடுகளுள் எதுவும் பெற்றிராதபடி மிகப் பெரும்பரப்பையும், புகழையும் கொண்டிருந்த மொகலாயப் பேரரசு சடசடவெனச் சரிந்து சிதறுண்டது. அதன் சிதறல்கள் பல சுயேச்சையான சிற்றரசு களாக உருவெடுத்தன. ஆனல், அவைகளிடையே ஒற்றுமை நிலவ வில்லை. மொகலாயர்கள், சீக்கியர்கள், மராத்தியர்கள் போன்ற இனத்தவர்களிடையே வேற்றுமையும், பொறாமை போட்டிப் பூசல்களும் நிலவின. இதனால் மராத்தியர்கள், சீக்கியர்கள் போன்றோர் அமைத்திருந்த சாம்ராச்சியங்கள் தகர்க்கப்பட்டு, இந் நாடு முழுவதும் அந்நியரான ஆங்லேயர்களின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. ஆனல், இச் செயல் உடனடியாக நடந்துவிடவில்லை. அதற்கு ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகள் பிடித்தன. இதற்கு

இடையிலேதான் ஆங்கிலேயர் இந்திய அரசுகளிடமிருந்து சிறுகச் சிறுகப் பெரிய பல சலுகைகளைப் பெற்றனர்; அவற்றுடன் கலந்துறவாடியும், நேசித்தும், ஏமாற்றியும், பயமுறுத்தியும், தேவையான சமயங்களில் போரிட்டும் தமது ஆட்சிப் பிடிக்குள் விழுந்த இடங்களில் அரசாங்க, ஆட்சி முறைகளை அமைத்தனர்; இறுதியில் தமது ஆதிக்கத்தை நாடு முழுவதும் கால்கொள்ளுமாறு செய்தனர். கிளர்ந்தெழுந்த இந்து வீர வகுப்பினரின் எழுச்சியையும் அவர்கள் சந்திக்க வேண்டியவர்களாயினர்; இறுதியில் வெற்றியும் கண்டனர். இதற்கு ஆரம்பத்தில் துணை புரியுமாறு அமைந்த காரணங்கள் பல இருந்தன. அவற்றுள் முக்கியமானவை பிற்கால மொகலாயர்களின் அரசியல் சரிவு, சுயேச்சையான சிற்றரசுகளின் தோற்றம், அவை அந்நியர்களின் அக்கறைகளுக்கு ஆளாகியிருந்தமை போன்ற பலவாகும். நாதிர் ஷா, அகமது ஷா அப்தாலி போன்றோரின் படையெடுப்புகளுக்கு ஆளாகி, பெருஞ்சேதங்களுக்கும் குழப்பங்களுக்கும் இந் நாடு ஆளாகியிருந்த நிலையும் அவர்களுடைய வெற்றிக்குப் பெரிதும் துணை புரிந்தன.

ஔரங்கசீபிற்குப் பிறகு மொகலாயப் பேரரசில் பதினேரு பேரரசர்கள் அரசோச்சினர். அவர்கள் யாவரும் நன்னடத்தை நலிவின் சின்னங்களாகவும், ஆட்சித்திறமை அற்றவர்களாகவும், இராணுவ வலிமை அற்றவர்களாகவும், பிறரது சொல்லுக்கும் செயலுக்கும் அடிமையானவர்களாகவும், இன்ன பிற தீமைகளுக்கு ஆட்பட்டவர்களாகவும் இருந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் முகமதுஷா (1719-1748), இரண்டாம் ஷா ஆலம் (1759-1806), இரண்டாம் பகதூர் ஷா (1837-1857) ஆகியோராவர். தமது பதினெட்டாம் வயதில் அரியணை ஏறிய முகமது ஷா தமது அரசவைப் பிரபுக்களின் - குறிப்பாகச் சையது சகோதரர்கள் என்பவர்களின் கைப்பாவையாக இருந்தார். அரசியலையும் ஆட்சிக் கடமைகளையும் மறந்தவராகவும் திறமையற்றவராகவும் இருந்த முகமதுஷாவின் காலத்தில் சதித்திட்டங்களும், கிளர்ச்சிகளும், அந்நியப் படையெடுப்புகளும் தோன்றி, மொகலாயப் பேரரசு உருக்குலைந்தது. மேலும் தக்காணம், வங்காளம், அயோத்தி ஆகிய மாநிலங்கள் மொகலாயப் பேரரசின் மைய அரசாங்கப் பிடியிலிருந்து விடுபட்டு முழுமையான சுயேச்சை ஆட்சியைப் பெற்றன. மால்வா, குஜராத், பண்டேல்கண்ட் போன்றவைகளை அவற்றின் ஆளுநர்களே தம் வசமாக்கிக் கொண்டனர். ரோகில்லாப் பட்டாணியர்கள் (Rohillas) கங்கைக் கரையின் வடபகுதியில் தமக்கென ஒரு சுயேச்சையான அரசை உருவாக்கி 'ரோகில்கண்ட்' என்று அதற்குப் பெயரிட்டனர். ஆக்ராவைச் சுற்றியிருந்த ஜாத்துகளும் (Jats) மொகலாய அரசாங்

கத்தினின்று விடுபட்டுச் சுதந்திரத்தைப் பெற்றனர். இவைகளே யன்றி, மொகலாய ஆட்சிக்கு எதிராகச் சீக்கியர்களும், இராச புத்திரர்களும் அரசியல் எழுச்சியைக் கொண்டனர். இவ்வாறு பல சிக்கல்களுக்கும், அரசியல் குழப்பம் ஆட்சிச் சிதைவு ஆகியவை களுக்கும் மொகலாயப் பேரரசு இலக்காகிச் சரிவுப் பாதையில் சறுக்கி விழுந்தவண்ணம் இருந்தது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஐரோப்பியர்கள் - குறிப்பாக ஆங்கிலேயர்—மொகலாய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்படாதிருக்கும்படியான சுதந்திரக் குடியேற்றங்களை ஸ்தாபித்தனர். மேலும், பெர்சியர்கள் ஆப்கானியர்கள், நாதிர்ஷா ஆகியோரின் படையெடுப்புகளுக்கும் மொகலாயப் பேரரசு ஆட்பட்டுத் தனது அமைப்பாண்மையை இழந்தது. எனவே, முகமதுஷாவின் காலத்தில் அந்நியர்களின் ஆதிக்கமும் அதிகாரமும் இந்தியத் துணைக்கண்டத்தில் நுழைந்து, வேரூன்றிப் பரவும் வகையில் பிளவுபடுத்தும் சக்திகளைக் கொண்டதாய் மொகலாய அரசியலின் நிலை இருந்தது. முகமது ஷாவிற்குப் பின் அரசோச்சிய அகமதுஷா (1748-1754) இளமைக் கால இன்பக் கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்த காரணத்தால் இனியதோர் ஆட்சியை நடத்தமுடியவில்லை. இவரது காலத்தில் பிளவுப் போக்குகள் மொகலாயப் பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் தோன்றலாயின. மேலும், இவரது காலத்தில் அகமதுஷா அப்தாலியின் மிருகத்தனமான படையெடுப்புகள், இந்து முஸ்லிம் பிணக்குகள் போன்ற யாவும் அதிகமாய் இருந்தன. தனது அரசவையிலேயே விரோதக் குழுக்கள் வளர்ந்தவண்ணம் இருந்ததை அகமதுஷா உணர்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வில்லை. அதற்கான தைரியமும் திறமையும் அவரிடம் இருக்கவில்லை. மராத்தியர்கள் வேகமான வளர்ச்சியைப் பெற்றவண்ணம் இருந்தனர். இவை யாவும் மொகலாயப் பேரரசின் சரிவை மேலும் துரிதமாக்கின. அதனால் பின்னர் இரண்டாம் ஆலம்கீர் என்பவரது ஆட்சிக்காலத்தில் டில்லியைச் சுற்றியிருந்த நிலப் பரப்புகளை மட்டும் தனது ஆட்சிப் பகுதிகளாய்க்கொண்டு, சாதாரண ஒரு மாவட்டத்தைப்போல் சிறுத்துவிட்ட மொகலாயப் பேரரசு அகமதுஷா அப்தாலியின் நான்காவது படையெடுப்பிற்கு ஆளாகி மேலும் நலிவுற்றது.

1759 முதல் 1806 வரை கோலோச்சிய இரண்டாம் ஷா ஆலம் தமது அரசவைப் பிரபுக்களின் ஆதிக்கத்திற்கு அஞ்சியவராய் இருந்தார். எனவே, இவர் ஆரம்பத்தில் மராத்தியர்களின் உதவி யுடனும், பின்னர்ப் பிரிட்டிஷ்காரர்களின் தயவிலும் நாட்டை ஆண்டார். தாம் இறந்த 1806ஆம் ஆண்டுவரை இவர் பிரிட்டிஷ் காரர்களின் அடிமை அல்லது சிறைவாசிபோல் இருந்தார்.

இவரிடமிருந்துதான் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் 1765-ல் அலகாபாத் உடன்படிக்கை யொன்றின்மூலம் வங்கம், பீஹார், ஒரிஸா ஆகிய மாநிலங்களில் 'திவானி' என்னும் வரி வசூலிக்கும் உரிமையைப் பெற்றனர். இந் நிகழ்ச்சி இந்திய அரசியலிலும் அரசாங்கப் பாதையிலும் புதியதொரு திருப்பு முனையை ஏற்படுத்திக் கொடுத்தது. இதன்மூலம் அந்நியரான ஆங்கிலேயர் இந்திய நாட்டை ஆள்வதற்குப் பச்சைக்கொடி காட்டப்பட்டுவிட்டது எனலாம். இவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த இரண்டாம் அக்பர் 1837 வரை பெயரளவில் மட்டும் மன்னராய் விளங்கி, ஆங்கிலக் கம்பெனியின் ஆளுகை ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தார். இப்படித் தனது ஆன்ம பலத்தையும் உருவத் தையும் இழந்து, கூனிக் குறுகிப் போயிருந்த மொகலாயப் பேரரசும் அதன் அரச வம்சமும் இரண்டாம் பகதூர்ஷா என்பவரோடு மறையத் தொடங்கி, இறுதி வீழ்ச்சியையும் தழுவின. இரங்கூனில் சிறைவைக்கப்பட்டிருந்த நிலையில் இருந்த இவர் 1862-ல் இறந்த வுடன் மொகலாய அரசியலும் இந் நாட்டிலிருந்து மறைந்து விட்டது எனலாம்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகள் யாவும் மொகலாயப் பேரரசு எனும் அமைப்பு இரண்டாம் ஷா ஆலமின் காலத்திலேயே மறையத் தொடங்கிவிட்டது என்பதை நமக்கு அறிவிக்கின்றன. இவரது காலத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் சுதந்திரமாகச் செயல்படும் உணர்ச்சியைப் பலரும் பெற்றனர். அலகாபாத், அயோத்தி, இட்டாவா, ஷிகோபாத், ரோகில்கண்ட் ஆகிய யாவும் சுயேச்சையான ஆட்சியைப் பெற்றிருந்தன. வங்கநாடு முழுவதும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு அடிமையாகி இருந்தது. மராத் தியர்கள் நாட்டின் பல பகுதிகளை மீட்டிருந்தனர். பஞ்சாப், லாகூர், மூல்தான், ஜாய்நகர் போன்ற பல இடங்கள் சீக்கியர் களிடம் சிக்கியிருந்தன. மேலும், சிற்றரசர்கள் பலரும், மிட்டா மிராசுகளும் தனித்தன்மை கொண்ட சுயேச்சையான ஆட்சியைத் தம்முடைய இடங்களில் நிலைநிறுத்தி யிருந்தனர். மொகலாயப் பேரரசர்கள் நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை மறந்து, மக்களின் வெறுப்பைச் சம்பாதித்து, சுயநலத்தில் அக்கறை காட்டித் தமது தனிப்பட்ட வாழ்வில் மட்டுமன்றி, அரசியல் மற்றும் ஆட்சி வாழ்க்கையிலும் ஒழுக்க நெறியை உதாசீனம் செய்ததால், மொகலாயப் பேரரசு தனது வலிமை மிக்க அதிகாரத்தை இழந்து, சிதறிச் சீரழிந்து, இறுதியாக அந்நிய ஆட்சி யின்கீழ் வந்தது. வரலாற்றின்படி இவைகளை மட்டும் நாம் சுட்டிக் காட்டி ஆங்கிலேயரின் ஆதிக்கம் வேரூன்றி வளர்ந்தது என்று இறுதியாக்கிக் கூறமுடியாது. ஏனெனில், ஆங்கிலேயர் உள்நாட்டு

சக்திகள் பலவற்றை மட்டுமன்றி, வேறு சில அந்நியச் சக்திகளையும் இங்கு எதிர்த்துப் போராடி, முறியடித்து வெற்றிகாண வேண்டி யிருந்தது. மொகலாயப் பேரரசின் சிதைவிலிருந்து தோன்றிய சுயேச்சை அரசுகளுடனும் பிறவற்றோடும் ஆங்கிலேயர் அரசியல் பகடைக்காய்களை உருட்டி உயர்வைக் காணவேண்டியிருந்தது. அப்படிப்பட்ட அரசுகளாய் எழுச்சி பெற்றிருந்தவற்றுள் அயோத்தி, வங்காளம், பீகார், ஒரிசா, தக்காண அரசு எனப்பட்ட ஹைதராபாத் போன்றவை முக்கியமானவையாகும்.

அயோத்தியைப் பொறுத்தவரை அது 1720 முதல் சுயேச்சை யானதொரு மாநிலமாகச் செயல்படத் தொடங்கியது. மொகலாயப் பேரரசர்களால் அந் நிலையைத் தடுத்து நிறுத்த முடிய வில்லை. 1754 வரை முறையே சாதத்கான் என்பவரும், அவருக்குப் பின் சப்தர்ஜங் என்பவரும் இதன் ஆளுநர்களாக இருந்தனர். இவர்கள் அயோத்தியின் சுயேச்சையான மாநிலத் தன்மையைப் பேணினர். 1764-ல் ஷுஜா-உத்-தௌலா என்பவர் அயோத்தியின் ஆளுநரானார். இவர் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை முறியடிக்கும் பணியில் ஈடுபட்டுத் தோல்வியைக் கண்டார். 1816-ல் ஹேஸ்டிங்ஸ் பிரபு என்னும் வங்கத் தலைமை ஆளுநரின் சூழ்ச்சியான அரசியலுக்கு அயோத்தி இரையாயிற்று. இதனால் அதன் ஆளுநராய் இருந்த காஸி உத்தீன் என்பவர் மொகலாயப் பேரரசிற்கு எதிராகத் தம்மை அயோத்தியின் அரசராகப் பிரகடனப்படுத்திக்கொண் டார். 1816 முதல் 1856 வரை அயோத்தி ஆங்கிலேயரின் சூழ்ச்சி அரசியலுக்கு இரையாகி, ஒரு சிற்றரசாக ஆட்டம் காண்பித்துக் கொண்டிருந்தது. ஆங்கிலேயர் இந்த ஆட்டத்தைத் தமது அதிகார ஓட்டத்திற்குத் தேவையான வழிகளில் மிக நன்றாகப் பயன் படுத்திக்கொண்டனர். பின்னர் டல்ஹௌசி பிரபுவினால் 1856-ல் இறுதியாக அயோத்தி ஆங்கில ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப் பட்டது.

வங்கம், பீகார், ஒரிஸா ஆகியவை ஆரம்பத்தில் மொகலாயப் பேரரசின் சார்நிலை மாநிலங்களாக இருந்தன. இவை பதினெட் டாம் நூற்றாண்டில் நிலவிய சீரற்ற மொகலாய அரசியல் நிலவரத் தால் சுயேச்சையான, சுதந்திரமான நிர்வாகத்தை நடத்திக் கொள்ளும் தன்மையைப் பெற்றன. ஆங்கிலேயர் இதனையும், வங்கத்தில் நடந்த அரியாசனப் போர்களையும் நன்கு பயன்படுத்திக் கொண்டு இரண்டாம் ஷா ஆலமின் காலத்தில் மேற் கூறிய இடங் களில் திவானி உரிமையைப் பெற்றனர். பின்னர் 1757-ல் நடந்த பிளாசிப் போரில் வங்காள நவாபு தோற்கடிக்கப்பட்டு, வங்கமும் அதனைச் சார்ந்திருந்த பீகார், ஒரிஸா ஆகியவையும் ஆங்கிலக் கம்பெனியின் இறைமைக்கு உட்படுத்தப்பட்டன.

மொகலாயப் பேரரசின்கீழ், தக்காணம் ஆறு 'சுபாக்கள்' எனும் ஆட்சிப் பகுதிகளைக் கொண்டிருந்தது. இது நிஜாம் உல் முல்க் என்பவரின் முயற்சிகளாலும் நடவடிக்கைகளாலும் 1725-ல் சுயேச்சையான அதிகாரம் பெற்றுச் சுதந்திரமாக இயங்கக்கூடிய ஆட்சித் தன்மையைப் பெற்றது. இருப்பினும் பெயரளவில் மொகலாயப் பேரரசின் ஓர் அங்கமாகவே தக்காணம் இருந்து வந்தது. ஆரம்ப காலத்தில் மராத்தியர்கள் தக்காணத்துடன் நட்பைக் கொண்டிருந்தனர். ஆனால், நிஜாம் உல் முல்க்கின் காலத்தில் மராத்தியர்கள் தக்காணத்து ஆளுநருடன் பகைமை கொண்டனர். இவர் 1748-ல் இறந்தார். இவருடைய இறப்பிற்குப் பின் தக்காணத்தில் அரியாசனப் போராட்டங்களும், வாரிசுரிமைப் போர்களும் நடந்தன. இவைகளில் மராத்தியர்களும் ஐரோப்பியர்களும் வெவ்வேறு போட்டியாளர்களுடன் சேர்ந்துகொண்டு தலையீடுகளைச் செய்தனர். 1748-லிருந்து ஹைதரபாத் தனிப்பட்ட ஒரு 'நிஜாமை'ப் (Nizam) பெற்றுச் சுதந்திரமான அரசாக இயங்கலாயிற்று. இந் நிலை ஆங்கிலேயர் இந் நாட்டைவிட்டுச் சென்று, ஹைதராபாத் சுதந்திர இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கையின் மூலம் இந்திய யூனியனில் ஓர் அங்கமாகச் சேர்க்கப்பட்டவரை இருந்தது. தக்காண அரசு எனப்பட்ட ஹைதராபாத் பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதிக் காலம் வரை, பெருமளவில் ஆங்கிலேயருக்குத் துணை நின்று, இந்திய அரசியல் அரங்கில் ஒரு தனித் தன்மையைப் பெற்றிருந்தது.

இவ்வாறு மொகலாய அரசியலின் சரிவு, வீழ்ச்சி, அவைகளின் காரணமாக எழுந்த சுயேச்சையான சிற்றரரசுகளின் எழுச்சி போன்றவையும் சுதேசி அரசர்களின் போட்டி பூசல்களும், பலவீனமும் பதினெட்டாம் நூற்றுண்டில் ஐரோப்பியர்களின் அரசியல் தலையீட்டையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளச் செய்தன. இந்தியாவில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிப் பரப்பும் முயற்சியில் ஃபிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயருமே பெருத்த போட்டிகளை மேற்கொண்டனர். இதில் ஆங்கிலேயரே இறுதி வெற்றியைக் கண்டனர். இதற்குத் துணைபுரியுமாறு அமைந்த காரணங்கள் பலவாகும். ஆனல், அவற்றுள் முக்கியமானவை இதுகாறும் நாம் கண்ட செய்திகளாகும். மொகலாயப் பேரரசின் சிதைவிலிருந்து தோன்றிய முஸ்லிம் சுயேச்சை அரசுகளைத் தவிர, இந்து வீர வகுப்பினரின் அரசியல், மறுமலர்ச்சியையும், பல அந்நியப் படையெடுப்புகளையும் இந் நாடு பதினெட்டாம் நூற்றுண்டில் சந்தித்தது. அவைகளின் விளைவுகள்கூடப் பல வழிகளில் அந்நியர்கள் இங்குப் பல சலுகைகளைப் பெறுமாறு நேரிடையாகவும், மறைமுகமாகவும் உதவின.

இந்து வீர வகுப்பினரின் அரசியல் மறுமலர்ச்சி

மொகலாயப் பேரரசின் அழிவு தொடங்க ஆரம்பித்த உடனேயே இந்தியாவிலிருந்த பல வீர இனத்தவரிடையே ஒரு விதமான அரசியல் எழுச்சி தோன்ற ஆரம்பித்துவிட்டது. மொகலாயப் பேரரசின் மைய அரசாங்கம் வலிவிழந்து, மாநில அரசுகளின்மீது போதிய கட்டுப்பாட்டைச் செலுத்த முடியாத பலவீனமான நிலையில் இருந்ததாலும், அரசவைக் குழப்பங் களுடன் அந்நியர்களின் படையெடுப்புகள் இருந்ததாலும் நாட்டின் பல பகுதிகளில் வசித்து வந்த பல இனத்தவர்கள் தத்தம் பகுதிகளில் சுதந்திரமான ஆட்சி யமைப்பை ஏற்படுத்தும் ஆவலையும் துணிவையும் கொண்டனர். இராச புத்திரர்களின் இராசபுதனம், மார்வார், மீவார், ஆம்பர் போன்றவைகளும், சீக்கியர்களின் பஞ்சாபும், ஆக்ரா மற்றும் மதுரா ஆகிய இடங் களைக் கொண்ட ஜாத்துகளின் அரசும், மராத்தியர்களின் மகராஷ் டிரமும் அப்படி உருவான சுதந்திரச் சிற்றரசுகளே ஆகும். பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார் அவர்கள் கூறுவது போன்று, ஔரங்கசீபின் மறைவிற்குப் பின் மொகலாயப் பேரரசு வீழத் தொடங்கியது. அவ் வீழ்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் எழுச்சியைப் பெற்ற இந்திய நாட்டில் இந்து இனத்தவர் பலராலும் பல சிற்றரசுகள் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால், இவ் வரசியல் எழுச்சியை நாம் ஒரு தேசீய இயக்கமென்றோ, அனைத் திந்திய இந்துக்கள் பேரரசை உருவாக்குவதற்கு என்று மேற் கொண்ட ஒரு முயற்சியென்றோ கொள்ள முடியாது. மாறாகத் தத்தம் பகுதிகளில் சுயேச்சையான அரசியல் அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கென மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சி தான் அது. J. N. சர்க்காரின் கருத்துகளை மனத்தில் கொண்டு பார்க்கும்பொழுது, இந்தியாவின் அரசியல் நிலை 18ஆம் நூற் றுண்டின் தொடக்க காலத்தில் அந்நியர்களின் தலையீடும் அரசியல் ஆதிக்கமும் தோன்றி வளர்வதற்குத் துணைபுரியும் வகையில் தம்மிடையே ஒற்றுமையை இழந்து, பொதுவான ஆபத்திற்கு எதிராக ஒன்றுகூடிப் போராடும் உணர்ச்சியையும், வலிவையும் பெற்றிராத பல சிற்றரசுகளின் கூறுகளைக் கொண்டதாய் இருந்தது என்பது புலப்படுகிறது. இப்படி ஒற்றுமை யற்றவர்களிடம் வேற்றுமையை வளர்த்துத் தேவையான சமயங்களில் தமது வாய்ப் பிற்கு ஏற்பச் சுயநலம் கருதித் தேவையானவர்களுடன் சேர்ந்து கொண்டு மற்றவர்களை ஆட்கொண்டு படைபலம், பணபலம் ஆகிய வற்றின்மூலம் எல்லோரையும் தமது அரசியல் ஆதிக்கத்தின்கீழ் ஆங்கிலேயரால் கொண்டுவர முடிந்தது. எனவேதான் ஆங்கி லேயர்களுக்கும், மராத்தியர்களுக்கும் மற்றும் சீக்கியர்கள், இராச புத்திரர்கள், ரோகில்லாக்கள் ஆகிய பல சிற்றரசுகளுக்கும்

இடையே நடந்த பல போர்களை நாம் பிரிட்டிஷ் இந்திய வரலாற்றில் அதிக அளவில் காண்கின்றோம். இவை யாவும் பல வழிகளில் பலதரப்பட்ட அரசியல் மற்றும் அரசாங்கச் செய்திகளுக்கு மெருகேற்றும் தன்மையைக் கொடுத்தன. மேலும் கூற வேண்டுமெனில் ஔரங்கசீப்பின் மறைவிற்குப் பின்னர் மொகலாயப் பேரரசு சிதறுண்டமையால் பல சுதந்திர அரசுகள் கொண்டிருந்த அரசியலை அரவணைத்தே அந்நியர்கள், குறிப்பாக வணிகர்களாக வந்த ஆங்கிலேயர் தமது வணிகத்தோடு அரசியலையும் வளர்த்துத் தமது நிர்வாகத்தை நிலைநிறுத்தினர்.

இராசபுத்திரர்களின் சுதந்திர அரசியல் அதிகாரத்திற்கும் ஆட்சிக்கும் உட்பட்ட மார்வார், மீவார், ஆம்பர் (ஜெய்ப்பூர்) குஜராத், ஆஜ்மீர் ஆகிய அரசுகளும், சீக்கியர்களின் பஞ்சாப்பும், ஜாத்துகளின் டில்லி மற்றும் ஆக்ராவுக்கிடையே இருந்த நிலப் பரப்புகளைக் கொண்டு அமைக்கப்பட்ட அரசும், மராத்தியர்களின் மகாராட்டிரமும், ஆப்கானிய இனத்தைச் சேர்ந்த ஒரு வகுப்பினரான ரோகில்லாக்களின் ரோகில் கண்டும், இவைகளைத் தவிர மைசூர், ஆற்காடும் தனியரசுகளாகத் தகுதியைப் பெறும் வகையில் தலைதூக்கின. இப்படிப் பல சிற்றரசுகள் தோன்றுவதற்கும், அந்நியர்கள் அவைகளுக்கிடையே அரசோச்சும் நிலையைப் பெறுவதற்கும் காரணமாய் இருந்தவற்றுள் நாதிர்ஷா, அகமதுஷா அப்தாலி ஆகியோரின் படையெடுப்புகளும் முக்கியமாகும். நாதிர்ஷா 1739-ல் இந்தியாவின்மீது படையெடுத்தார்; வெற்றியும் கண்டார்; இவ் வெற்றியின் விளைவாக நாட்டின் செல்வத்தையே சூறையாடிச் சென்றார். நாதிர்ஷாவின் படையெடுப்பினால் மொகலாயப் பேரரசு, பேரரசின் பெரும்பகுதிகளை மட்டுமன்றித் தனது மதிப்பையும் செல்வத்தையும் அரசியல் ஸ்திரத் தன்மையையும் இழந்தது. இவ் விழப்புகளின் காரணமாய்ச் சிற்றரசுகள் உருவாகி, சிக்கலும், பூசலும் நிரம்பிய அரசியல் தோன்றி அந்நியர்களின் தலையீட்டை எளிமையாக்கின.

1748 முதல் 1767 வரை அகமதுஷா அப்தாலியின் படையெடுப்புகளுக்கும், இடையில் 1761-ல் மூன்றாம் பானிபட் போருக்கும் நம்நாடு இலக்காகியது. மூன்றாம் பானிபட் போரைப் பொறுத்தவரை அது மராத்தியர்களுக்கும், அகமதுஷா அப்தாலிக்கும் இடையே நடந்த போராகும். அதனால் மராத்திய அரசு நலிவுற்றது. அகமதுஷா அப்தாலியின் படையெடுப்புகளின் காரணமாகவும், பழுதடைந்திருந்த தனது இறைமையின் காரணமாகவும் மொகலாயப் பேரரசு மீண்டும் தலைதூக்க முடியாத அவல நிலையை அடைந்தது. இப் படையெடுப்புகளின் விளைவாகச்

சீக்கியர்கள் பஞ்சாபில் தமது அரசியல் சக்தியைத் தோற்றுவிக்கவும் முடிந்தது. ஆனால், மொகலாயர்களுக்குப் பிறகு ஓர் இந்திய சாம்ராச்சியத்தை உருவாக்கவேண்டும் என்ற மராத்தியர்களின் கனவு நனவாகவில்லை. எனினும், சீக்கியர்கள், மராத்தியர்கள் என்னும் இரு பெரும் சக்திகளை உருவாக்க அகமதுஷா அப்தாலியின் படையெடுப்புகள் பெரிதும் துணை புரிந்தன. இவர்களோடு ஆங்கிலேயர் தமது கனவை நிறைவேற்றிக் கொள்வதற்கான வழிவகைகளில் எளிய வழியைப் பெற்றனர். அதனால் அவர்கள் தமது ஆட்சியை இந்தியாவில் நிறுவக்கூடிய வகையில் மூன்றுவது முனைப்பான சக்தியாகத் தலைதூக்கினர். நாதிர்ஷா, அகமதுஷா அப்தாலி போன்ற அந்நியர்கள் படையெடுத்து இங்கு வெற்றிகண்ட போதிலும் அவர்கள் நம்நாட்டில் நிலையான அரசை உருவாக்கவில்லை. இதனால் இந்திய அரசுகளிடையே அரசியல் ரீதியாக வல்லமைச் சமநிலை தோன்ற முடியாமல் ஆங்கிலேயர்கள் தமது நிரந்தர ஆட்சி ஆதிக்கத்தை உருவாக்கி நிலை நிறுத்தும் வகையில் இந்திய அரசுகள் பலவீன முற்றவையாய் இருந்தன. ஏனைய சில அரசுகள் அரசியல் பலத்தைப் பெற்றிருந்தாலும், பொருள் பலத்தையும் இராணுவ பலத்தையும் பெற்றிராத காரணத்தால் ஆங்கிலேயர்களையோ, பிற அந்நியர்களையோ சார்ந்திருப்பவையாய் விளங்கும் சூழ்நிலை உருவானது. அகமதுஷா அப்தாலியின் படையெடுப்புகளால் மராத்தியர்கள் மிகவும் பலவீனமடைந்ததே ஆங்கிலேயரின் வெற்றிக்குப் பெருந்துணை புரிந்தது. அதனால்தான் பானிபட் போர் முடிந்த நான்காவது ஆண்டிலேயே இராபர்ட்கிளைவ் வங்காளம், பீகார், ஒரிஸா போன்ற மாநிலங்களின் திவானி உரிமையைப் பெறமுடிந்தது. மராத்தியர்கள்மட்டும் பானிபட் போரில் வெற்றி அடைந்திருப்பார்களேயானால் பேஷ்வாக்களும் பான்ஸ்லேக்களும் அம் மாநிலங்களை ஆங்கிலேயரின் ஆதிகத்திற்கு உட்படாமல் தடுத்திருக்க முடியும். மேலும், பிளாசி, பக்ஸார் போர்களும் ஆங்கிலேயரின் வலிமையை இந்திய அரசுகளுக்கு மட்டுமன்றி ஃபிரெஞ்சு ஆதிக்க சக்திக்கும் எதிராக நிலை நாட்டிவிட்டன.

மேற்சொன்ன செய்திகளையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும்பொழுது நாம் கீழ்க்காணும் முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தியாவின் அரசியல் வரலாற்றில் 18ஆம் நூற்றுண்டின் மையக் காலத்தில் ஒன்றையொன்று மீறக் கூடிய இரு சக்திகள் நம் நாட்டில் இருந்தன. அவை சரிந்து கொண்டிருந்த, என்றுமே சரிசெய்யப்பட முடியாத மொகலாயப் பேரரசின் சக்தியும், எழுச்சி கொண்டிருந்த மராத்திய சக்தியும் ஆகும், ஆனால் மூன்றும் பானிபட் யுத்தமானது (1763) இவ் விரு

சக்திகளேயுமே மிகவும் பலவீனப்படுத்தி, மொகலாயப் பேரரசின் சட்டமுறையான வழித்தோன்றலாக ஆங்கிலேயர் பொறுப் பேற்கும் தன்மையைக் கொடுத்துவிட்டது. நாதிர்ஷாவின் படையெடுப்பு அயோத்தி, காபூல், மேற்கு பஞ்சாப் ஆகியவற்றை மொகலாயப் பேரரசின் பிடியினின்றும் தளர்த்தி அவை நிலப் பிரபுக்களின் ஆளுகைக்கு உட்படும் வகையில் தன்னிலே ஆட்சியைப் பெறும்படி செய்தது. மூன்றும் பானிபட் போர் இப்படி மொகலாயப் பேரரசிற்கு முற்றுப்புள்ளி வைத்து மராத்தியர்களின் அரசியல் கனவைத் தவிடு பொடியாக்கி, மராத்தியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பெருத்த பகைமையைத் தோற்றுவித்து, அப் பகைமையைப் பயன்படுத்தி ஆங்கிலேய ஆதிக்கச் சக்தி நம் நாட்டில் காலூன்றும் காலத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இப்படி உள் நாட்டுச் சூழ்நிலேகளும், வெளிநாட்டுப் படையெடுப்புகளும், சந்தர்ப்பச் சூழ்நிலேகளும், போட்டியும், பூசலும் ஏற்கெனவே வலிமை பெற்றிருந்த ஆங்கிலேயர்களுக்கு மேலும் மிக வலுவாகக் காலூன்றி ஆரசியலேயும் ஆட்சியையும் நடத்துவதற்கு 18ஆம் நூற்றுண்டின் மையக்காலம் வாய்ப்புகளே ஏற்படுத்திக் கொடுத்தது. இதுகாறும் கூறப்பட்ட செய்திகளின் சாராம்சமாகக் கீழ்வரும் செய்திகளேச் சுருக்கிக் கூறலாம். 1707-ல் ஔரங்கசீப் இறந்த பின் மொகலாயப் பேரரசின் அழிவுக் காலம் ஆரம்பமாகிவிட்டது. இவ் வழிவுச் செயல்முறை 18ஆம் நூற்றுண்டு முழுவதும் பரவியிருந்து, இறுதியாக 1759-ல் இரண்டாம் ஷா ஆலம் இறந்த பின்பு பல சுதந்திரமான சிற்றரசுகள் தோன்ற வழி செய்தது. இரண்டாம் ஷா ஆலமிற்குப் பிறகு இரு மொகலாயப் பேரரசர்கள் டில்லியிலிருந்து ஆட்சி புரிந்த போதிலும், அவர்கள் ஆங்கிலேயரின் பாதுகாவலின் கீழும், சில சமயங்களில் மராத்தியர்களின் ஆதரவின் கீழும் பொம்மை அரசர்களாக இருந்தனர். அரசியல் ரீதியாக 18ஆம் நூற்றுண்டில் இந்திய நாடு கண்ட மாற்றங்களேப் பின் வருமாறு வகைப்படுத்திக் கூறலாம்.

சிந்து, காபூல், பஞ்சாப் ஆகியவற்றை மொகலாயப் பேரரசு நிரந்தரமாக இழந்தது. எஞ்சியிருந்த மொகலாயப் பேரரசு டில்லியையும், அதன் சுற்றுப்புற இடங்களேயும் கொண்ட அரசியலமைப்பாக இருந்தது. வங்காளம், பீகார், ஒரிஸா, அயோத்தி, பண்டல் கண்ட் ஆகிய மாநிலங்கள் தத்தம் மாநில ஆளுநர்களால் சுயேச்சை அரசுகளாகத் தலேதூக்கின. டில்லிக்குத் தென்மேற்கில் இராசபுதனம், ஜெய்ப்பூர், உதயபூர், ஜோத்பூர் ஆகியவற்றை உள்ளடக்கிய சுதந்திரமான அரசு ஏற்பட்டது. மேற்கில் குஜராத் பெயரளவிற்கு மொகலாய ஆளுநரின் கீழிருந்து இறுதியாக 1732-ல் மராத்தியர்களால் அடிமைப்படுத்தப்பட்டது.

1720 முதல் 1740 வரை மராத்திய பேஷ்வா முதலாம் பாஜிராவ் வலிமை பெற்றவராய் இருந்தார். அவரால் குஜராத், இராசபுதனம், மால்வா, பண்டல் கண்ட், ஒரிஸா, வங்காளத்தின் எல்லைப் பகுதிகள் ஆகியவற்றைத் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்து அவைகளை ஆளவும் அல்லது அவற்றிடமிருந்து சௌத், சர்தேஷ்முகி எனும் வரிகளையும், கப்பங்களையும் பெறவும் முடிந்தது. ஹைதராபாதில் மராத்தியர்களின் கட்டுப்பாட்டிற்கு உட்படாத நிலையில், நிஜாம் சுதந்திரமான அரசராயிருந்தார். நிஜாம் தக்காணத்தின் மையப் பகுதி மற்றும் கிழக்குப் பகுதி ஆகியவற்றைத் தனது ஆட்சி எல்லைக்குள் கொண்டிருந்தார். மேலும் அவர் மராத்தியர்களின் ஆட்சிக்கு உட்படிருந்த வட சர்க்கார் பிரதேசங்கள் மீதும், தஞ்சாவூர் வரையிலான தென்னிந்தியப் பகுதிகளின் மீதும் உரிமையைக் கோரி வந்தார். தக்காணப் பீட பூமியில் எஞ்சியிருந்த பகுதிகள் கொச்சி, திருவாங்கூர், மைசூர் ஆகிய சமஸ்தானங்களிடையே இருந்தன. ஆற்காட்டு நவாபின்கீழ்க் கர்நாடகம் இருந்தது. மராத்தியர் களும், ஹைதராபாத் நிஜாமும் தக்காணத்தின் வட பகுதியில் தமது காலனி ஆதிக்கப் பிரதேசங்களைப் பெற்றிருந்தனர்.

மேற்கண்ட நிலையில் பல அரசியல் கூறுகளை இந்தியா பெற்றி ருந்த நிலையில் பதினெட்டாம் நூற்றுண்டில் ஃபிரெஞ்சுக்காரர் களும்,ஆங்கிலேயர்களும் அரசியல் போட்டிகளை மேற்கொண்டனர். அவற்றில் இறுதியாக ஆங்கிலேயரே முனைப்பான வெற்றியைப் பெற்றனர். ஆரம்பத்தில் சென்னை, கல்கத்தா. பம்பாய் ஆகிய மும்முனைகளிலிருந்து ஆங்கிலேயர் இங்குக் காரியங்களை ஆற்றினர் அதற்கேற்றவாறு அவ் விடங்களில் தமது ஆட்சியையும் அமைத் திருந்தனர். பின்னர் அவ் விடங்களிலிருந்து அவர்களுடைய ஆதிக்கமும், ஆட்சியும் படிப்படியாக விரிவடைந்து, இறுதியில் இந் நாடு முழுவதும் பரவியது.

4. பதினெட்டாம் நூற்றாண்டில் அமைந்திருந்த கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களின் அரசாங்கமும், ஆட்சியும்.

சென்ற ஓர் அதிகாரத்தில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி தொடங்கப்பட்ட காலம் முதல் 1760 வரை பெற்றிருந்த சாசனங் களும், அவற்றின் அடிப்படையில் கிழக்கிந்தியக் கம்பெனி அமைக் கப்பட்டிருந்த முறையும் ஆராயப்பட்டுள்ளன. அவற்றின்படி கிழக்கிந்தியக் கம்பெனி தனிப்பட்ட வணிகர்களைப் பங்குதாரர் களாகக் கொண்டு வணிகம் செய்வதற்கு அமைக்கப்பட்டது. அதற்கு 1600ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் 31ஆம் நாள் இங்கிலாந்து அரசியின் அனுமதி கொடுக்கப்பட்டது. அப் பட்டயத்திற் கொப்பவும், பின்னர் கொடுக்கப்பட்ட பல பட்டயங்கள் மூலமாகவும் கம்பெனியின் அடிப்படை வர்த்தக உரிமையும், மூலதன உரிமையும் அதன் பங்குதாரர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த உடைமையாளர்கள் மன்றத்திடம், (Court of Proprietors) இருந்தன. இவ் வுடைமையாளர்கள் மன்றம், கம்பெனியின் வர்த்தகச் செயல்களையும் நிர்வாகம் பற்றிய பல்வேறு நடவடிக்கைகளையும் கவனிக்க இருபத்துநான்கு அங்கத் தினர்களைக் கொண்ட ஓர் இயக்குநர் குழுவைத் தேர்ந்தெடுத்தது. இவ் வியக்குநர்குழு ஓர் ஆளுநரையும் ஒரு துணை ஆளுநரையும் ஒரு பொருளாளரையும் கொண்டிருந்தது. இக் குழுவே தனது இந்திய வணிகச் சாலைகளில், ஆட்சிச் செயல்களை மேற்கொள்வதற் கெனத் தலைவர்களையும், பிற அதிகாரிகளையும் நியமித்து இயக்கு விக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. இக் குழு இலண்டன் மாநகரில் இருந்துதான் செயல்பட்டது. இக் குழுவிற்குக் கொள்கை வகுக்கும் அதிகாரங்களோடு, இந்திய வணிகச் சாலை களில் அன்றாட நிர்வாகம் நடைபெறுவதற்குத் தேவையான பல நியதிகளை வகுக்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. இவ் வியக்குநர் குழுமீது ஆரம்பகாலத்தில், குறிப்பாக 1773ஆம் ஆண்டு வரை ஆங்கிலநாட்டு அரச நிறுவனமும் பாராளுமன்றமும் சட்ட

முறையானதும் நேரிடையானதுமான கட்டுப்பாட்டையும், மேற்பார்வையையும் கொண்டிருக்கவில்லை. எனினும், கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிகச் செயலுக்கு அனுமதி கொடுக்கும் அதிகாரம் அரச நிறுவனத்திடம் இருந்ததால், அஃது அவ்வப்போது மறைமுகமாகக் கம்பெனியின் நிர்வாகத்தைத் தனது ஆட்சிக்கோட்பாட்டிற்கு உள்ளடக்கும் வகையில் அமைந்திருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை ஆட்சிமன்றமாய் இருந்த இயக்குநர் குழுவின் தலைவர்களும் இயக்குநர்களும், அரச நிறுவனத்திடமும் பிற அதிகாரிகளிடமும் கொண்டிருந்த செல்வாக்கு, நட்புநிலைகளுக்கொப்பக் கம்பெனியின் தலைமை ஆட்சி அமைப்பு, அரச நிறுவனம் ஆகிய இரண்டிற்கும் இடையே உறவு அமைந்திருந்தது. பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் சிலர் கம்பெனியின் பங்குதாரர்களாக இருந்ததாலும், அவர்கள் இயக்குநர்கள் குழுவில் உறுப்பினராகும் வாய்ப்பைப் பெற்றிருந்ததாலும் அக் குழுவிற்கும், இங்கிலாந்து அரசாங்கத்திற்கும் இடையே உறவும் நட்பும் சுமுகமாகவே அமைந்திருந்தன. காலத்தின் தேவைகளுக்கும் நிலைகளுக்கும் ஏற்ப ஒன்று மற்றொன்றைத் தனது அக்கறைக்கு உள்ளாக்கிக் கட்டுப்படுத்தியதும் உண்டு. எவ்வாறாயினும், கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக அனுமதியையும், காலத் தவணையையும் புதுப்பிக்கவும் இரத்து செய்யவும் உரிய அதிகாரத்தை அரச நிறுவனம் இறுதியாகப் பெற்றிருந்த காரணத்தால் கம்பெனியின் வணிகமும் ஆட்சிச் செயல்களும் இங்கிலாந்து நாட்டு அரசின் சட்டதிட்டங்களுக்குப் புறம்பாக அமைந்திருக்க முடியவில்லை என்பது திண்ணமாகும்.

முன்னரே கூறியது போன்று இந்தியாவில் ஆரம்ப காலத்தில் அமைந்திருந்த தன் வணிகச் சாலைகளில் கிழக்கிந்தியக் கம்பெனி எத்தகைய அரசாங்க அமைப்பு முறையைப் பெற்றிருந்தது என்பதை இங்குத் தெளிவாக எடுத்துக் கூறவேண்டும். பொதுவாக இந்தியாவிலிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் ஒவ்வொரு வணிகச் சாலையும் கோட்டைச் சுவர்களைக்கொண்ட இடமாய் இருந்தது. மதில் சுவர்களால் சூழப்பட்டிருந்த வர்த்தகத் தலம் ஒவ்வொன்றிலும் தேவையான பண்டக சாலைகளும், கம்பெனியின் வர்த்தகர்கள், அதிகாரிகள், பணியாளர்கள் முதலியோர் வசிக்கும் சிறு சிறு காலனிகளும் அமைக்கப்பட்டிருந்தன. கம்பெனியின் பணியாளர்கள், வர்த்தகர்கள், எழுத்தர்கள், வணிகத்துறை உரிமைப் பேராட்கள் அல்லது வணிகர்கள் என்று வகைப்படுத்தப்பட்டிருந்தனர். இவர்கள் யாவருடைய உண்டி, உறையுள் ஆகியவற்றுக்கான செலவினங்களைக் கம்பெனியே ஏற்றிருந்தது. இவர்கள் வாழ்ந்த வாழ்க்கைப்

பாங்கு கல்லூரி மாணவர்களின் விடுதி வாழ்க்கையைப் போலவே அமைந்திருந்தது. கம்பெனியின் பணியாளர்களுக்கு ஊதியம் வரிசை முறையாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அவர்களுக்குப் பணியில் முதுநிலை (seniority) என்னும் நியதிக்கு ஏற்பப் பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்டன. இதனால் சாதாரண எழுத்தராகக் கம்பெனியின் பணியில் சேர்ந்த எவரும் வணிகச் சாலையின் ஆளுநராகவும், வணிகச் சாலையின் ஆட்சி மன்ற உறுப்பினராகவும் கூடப் பதவி உயர்வைப் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தது. எடுத்துக்காட்டாக, இராபர்ட் கிளைவ் என்பவர் ஆரம்பத்தில் ஒரு சாதாரண எழுத்தராகக் கம்பெனிப் பணியில் சேர்ந்து, பின்னர் வங்கத்தின் ஆளுநராகவே நியமிக்கப்பட்டதை இங்குக் குறிப்பிடலாம். பணியாளர்களின் பதவி உயர்வுகளுக்கான வாய்ப்புகளும் வழிகளும் வளமாக இருந்தபோதிலும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊதியங்களின் அளவு மிகவும் குறைவாகவே இருந்தது. உதாரணமாக, ஒரு தரகரின் ஆண்டு ஊதியம் இருபது பவுன்களாகவும், ஒரு வர்த்தகரின் ஆண்டு ஊதியம் நாற்பது பவுன்களாவுகம் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. ஆனால், இக் குறையை நிறைவு செய்துகொள்ளும் வகையில் கம்பெனியின் பணியாளர்களுக்கு இந்தியாவில் தமது சுயப் பொறுப்பின்கீழ்த் தனிப்பட்ட முறையில் வர்த்தகம் செய்து கொள்வதற்குப் பூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. இதனால், ஒரே இரவில் கேளிக்கைக் களியாட்டங்களில் நூற்றுக் கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் செலவு செய்யும் வகையில் கம்பெனியின் பணியாளர்கள் சுய வருமானத்தைப் பெற்றிருந்தனர். இத்தகைய பழக்கமும் செயலும் கிழக்கிந்தியக் கம்பெனி ஒரு வணிக நிறுவனமாகத் தொடர்ந்து செயல்பட்ட காலம் வரை இருந்தது. கோட்டைச் சுவர்களுடன் நிறுவப்பட்டிருந்த ஒவ்வொரு வணிகச் சாலையிலும், தலத்திலும் ஒவ்வோர் ஆளுநர் நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்குத் தலைவர் என்ற பட்டமும் கொடுக்கப்பட்டிருந்தது. அவரது ஆட்சிச் செயல்களில் துணை புரிவதற்கு ஒரு மன்றமும் அமைக்கப்பட்டிருந்தது. தனது வணிகச் சாலையில் செயலாட்சித் தலைவராக ஆளுநர் இருந்தார். ஆனால், அவர் தம் அதிகாரங்களைத் தமது மன்றத்தின் உறுப்பினர்களுடன் கூடிய நிலையில்தான் செயல்படுத்தவேண்டும் என்றிருந்தது. ஆளுநர் மன்றம் மூத்த வணிகர்களை உறுப்பினர்களாகக் கொண்டதாய் அமைந்திருந்தது. இவர்களை வணிகத் தலத்திலிருந்த வணிகர்களே விரும்பித் தேர்ந்தெடுத்திருந்தனர். இம் மன்றம் பயனுறுதி மிக்க ஆட்சி மன்றமாய் இருந்தது. ஆளுநர் மேற்கொண்ட நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஆலோசனைகளைக் கொடுத்ததோடு, அவைகளைத் தேவையானபோது தடை

செய்யவும் இம் மன்றம் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. ஏனெனில், அன்றிருந்த வாய்ப்புகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப வணிகச் சாலைகளில் எந்த ஆளுநரும் கம்பெனியின் வர்த்தகர்களின் அக்கறைகளுக்கு எதிராகவும், கம்பெனியின் குறிக்கோளுக்கு எதிராகவும் புரட்சியைச் செய்திருக்கக்கூடும். எனவே, வணிகச் சாலையின் ஆளுநரான செயலாட்சித் தலைவரின் வல்லாட்சிப் போக்கைத் தடுக்க அவரது ஆட்சி ஆலோசனை மன்றத்திற்கு மேற்கண்ட அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட செய்திகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனி யின் வணிகச் சாலையின் அரசாங்கம், ஒரு தலைவரைப் (President) பெற்றிருந்ததால், பின்னர் அது பிரஸிடென்ஸி அல்லது இராசதானி எனும் மாநிலம் (Presidency) என்று அழைக்கப்படலாயிற்று.

இதுவரை கூறப்பட்ட பொதுவான செய்திகளுக்கு ஏற்பவே இந்தியாவில் 18ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் நிறுவப்பட்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் வர்த்தகக் குடியேற்றங்களிலும், பிரதேசங்களிலும் அரசாங்க அமைப்பும் செயல்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், காலப்போக்கில் அவைகளுக்கிடையேயும், பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களிலிருந்த வணிகக் குடியேற்றங்களிலும் இடத்தின் தேவைகளுக்கும், காலத்தின் மாற்றங்களுக்கும் ஏற்பப் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. அச் செய்திகளைப் பின் வரும் தலைப்புகளின்கீழ் அறிய முற்படலாம்.

கம்பெனி அரசாங்கத்தின் செயலாட்சித்துறை (The Executive Government)

கிழக்கிந்தியக் கம்பெனியின் வசமிருந்த இந்தியக் குடியேற்றங்களிலும், பிரதேசங்களிலும் அமைந்திருந்த அரசாங்கத்தைப் பற்றிப் பொதுவான தலைப்பின்கீழ் எழுதும்பொழுது பேராசிரியர் A.B. கீத் பின்வரும் செய்திகளைக் குறிப்பிடுகின்றார். 'கிழக்கிந்தியக் கம்பெனி தன் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த ஆரம்ப நாட்களில் விரிவானதோர் அமைப்பைக் கொள்ளவேண்டிய தேவையைப் பெற்றிருக்கவில்லை. ஆரம்பத்தில் இட இறைமையைப் (Territorial Sovereignty) பெற்றிராத நிலையில், சாதாரண வர்த்தக நிலையங்களைத் (Trading stations) தான் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றிருந்தது. பின்னர் மாறுபட்ட சூழ் நிலைகளுக்கு ஏற்பவும், தனது அதிகார இருப்பிடங்களின் பல தரப்பட்ட கட்டளைகளுக்கு ஏற்பவும் பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களில் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்ட அதிகாரத்தை மேற்கொள்ளும்

நிலையைப் பெற்றது.' எனவே, முன்னரே கூறியது போன்று வணிகச் சாலைகளின் அலுவல்கள் யாவும் ஓர் ஆளுநருடன் கூடிய ஆட்சிமன்றத்தினால் பொதுவான கட்டுப்பாட்டு நியதிக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அக் கட்டுப்பாட்டு நியதியின் குறிக்கோளைப்பற்றிய கொள்கை கம்பெனியினால் காலத்திற்குக் காலம் மாற்றப்படக்கூடியதாய் இருந்தது. கம்பெனியின் நடவடிக்கைகளுக்கான தலைமை இடங்களாக முதன் முதலில் சூரத்,பந்தம் (Bantam) என்னும் இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஏனைய வணிகச் சாலைகள் அவற்றைச் சார்ந்தவையாய் இருக்கும்படி செய்யப்பட்டன. ஆனால், இவ் வேற்பாடு 1657-ல் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையால் மாற்றப்பட்டுச் சூரத் கம்பெனியின் தலைமையிடமாக அமைக்கப்பட்டது. புனித ஜார்ஜ் கோட்டை, பந்தம், ஹுக்ளி ஆகிய பிரதேசங்கள் சூரத்திற்குக் கீழ்நிலையில் அல்லது சார்புநிலையில் இருந்து (subordinate) செயல்படும்படி செய்யப்பட்டன. ஆனால், கம்பெனி சூரத்தில் தேவையான இட உரிமையுடன் கூடிய அதிகாரத்தைப் பெற முடியவில்லை. எனவே, அரசியல் அதிகாரத்தைப் பெறவேண்டுமென்ற கொள்கையைக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் வகுத்து அதனைச் செயல்படுத்தியதன் விளைவாகப் பம்பாய் சூரத்தைச் சார்ந்திருந்த நிலை அகற்றப் பட்டது. 1686ஆம் ஆண்டில் ஜான் சைல்ட் (John Child) என்பவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான டைரக்டர் ஜெனரலாகவும் (Director General) கம்பெனிப் படைகளின் தலைமைத் தளபதியாகவும் நியமிக்கப் பெற்றார். இவர் பம்பாயைத் தமது தலைமையிடமாகக் கொண்டனர். எனவே, 1687ஆம் ஆண்டு, மேத்திங்கள் முதல் சூரத் புறக்கணிக்கப்பட்டு, அதனை உள்ளடக்கிய நிலையில் கம்பெனியின் தலைமையிடமாகப் பம்பாய் செயல்பட்டது. பம்பாய் ஒரு மேற்கு மாநிலமாக இருந்தபோதிலும், அதனைத் தலைமையிடமாகக் கொண்டிருந்த ஜான் சைல்ட் அவர்களுக்குக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய வணிகச் செயல்கள் யாவற்றுக்குமான உயர் இயக்குநர் என்ற முறையில், சென்னை யையும், வங்கத்தையும் கண்காணித்து அவற்றில் மேற்கொள்ளப் பட்ட செயல்களை ஒழுங்குபடுத்த அதிகாரம் கொடுக்கப்பட்டது. இதற்குக் காரணம் அச் சமயத்தில் டச்சுக்காரர்கள் மேற் கொண்டிருந்த அரசியல் கொள்கையாகும். அக் கொள்கையை இலண்டன் கிழக்கிந்தியக் கம்பெனியும் பின்பற்றும் வகையில், அதன் இந்தியத் தலைமை இயக்குநருக்கு மேற்சொல்லப்பட்ட நிலையில் அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால், ஜான் சைல்ட் ஒரு திறமையான செயலாட்சித் தலைவராக இருக்கவில்லை. அவர் இந்தியாவில் கம்பெனியின் வணிக வளர்ச்சிக்காக எடுத்த

முயற்சிகள் யாவும் தோல்வியைத் தழுவின. மேலும், வங்கத்தில் கம்பெனியினருக்குப் பெருத்த சேதங்களும் உண்டாயின. எனவே, மேற்சொல்லப்பட்ட கம்பெனியின் அமைப்புத் திட்டங்கள் மாற்றி யமைக்கப்பட்டன. இதற்கிடையில் ஜான் சைல்ட் காலமானார்.

ஜான் சைல்ட் இறந்த பின்னர் 1693-ல் சர் ஜான் கோல்ட்ஸ் பரோ (Sir John Golds Borough) என்பவர் தலைவராகவும் தலைமைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டார். ஆனால், இவரது தலைமையின்கீழ்ச் சென்னை தலைமையிட மாக்கப்பட்டது. சர் ஜான் கேயர் (Sir John Gayer) என்பவர் பம்பாயில் ஆளுநராகவும், துணைத் தளபதியாகவும் கோல்ட்ஸ் பரோவின் தலைமையின்கீழ்ச் செயல்படுமாறு நியமிக்கப்பட்டார். 1694-ல் கோல்ட்ஸ் பரோ இறந்தவுடன் கேயர் தளபதியாகப் பதவிப் பொறுப்பேற்றார், அவரின்கீழ் மறுபடியும் பம்பாய், கம்பெனியின் இந்தியத் தலைமை யிடமாக அமைந்தது. அதே நேரத்தில் சென்னையில் ஹிக்கின் ஸன் என்பவர் தலைவராகவும் துணைப் படைத்தளபதியாகவும் நியமிக்கப்பட்டார். பின்னர், 1698-ல் தாமஸ் பிட் என்பவர் சென்னையின் ஆளுநராக நியமிக்கப்பட்டபின் துணைத் தளபதி என்னும் பதவி நீக்கப்பட்டது. ஒரு முறையாகப் பல ஆளுநர் களால் ஆளப்பட்டு வந்த பம்பாயில் 'தலைவர் மற்றும் ஆளுநர்' என்ற ஒரு புதிய பதவி 1715-ல் உருவாக்கப்பட்டது. ஆனால், கல்கத்தாவிலோ அதனுடைய தனித்தன்மை ஏற்கப்பட்ட நிலையில் வில்லியம் கோட்டைக்கெனத் 'தலைவர் மற்றும் ஆளுநர்' என்ற ஒரு பதவி 1700ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்டிருந்தது. இப்படிக் கம்பெனியின் ஒருங்கிணைக்கப்பட்டிருந்த மூல அதிகாரத் திற்கு உட்பட்டிருக்குமாறு பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய மூன்று இடங்களும் சமமான தகுதியைப் பெற்ற மாநிலங்களாய் அமைக்கப்பட்டன. கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை அதிகார நிலையம் நெடுந்தொலைவிலிருந்த இலண்டன் மாநகரில் இருந்த தாலும், ஒத்திசைவான ஓர் ஆட்சிக் கொள்கையை அங்கிருந்தபடி அது தனது இந்தியப் பிரதேசங்களின்மீது முனைப்பாகச் செலுத்த முடியாமலிருந்ததாலும், மேற்கண்ட அமைப்பு நிலை மூன்று மாநிலங்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. 'ஆளுநர்' என்ற பட்டம் கொடுக்கப்பட்டதன் நோக்கம் யாதெனில், ஒவ்வொரு ஆளுநரும் தமது ஆட்சிப் பகுதியில் வணிகம் மற்றும் ஆட்சி அதிகாரங்கள் கொடுக்கப்படுவதோடன்றி, இராணுவங்களை அமைத்து நிர்வாகம் செய்துகொள்வதற்கும் அதிகாரம் கொடுக் கப்பட்டதேயாகும். ஆளுநர் என்ற பட்டம் இரண்டாம் சார்லஸ் மன்னரால் கொடுக்கப்பட்ட பட்டயத்தின்மூலமே முதன் முதலில் ஏற்படுத்தப்பட்டது. நீதி நிர்வாகத்தையும் மேற்

கொள்வதற்கான அதிகாரத்தைப் பெற்றிருந்த அப் பதவியை வகித்தவருக்குக் கோட்டைச் சுவருடன் எழுப்பப்பட்டிருந்த தனது நகரத்தில் இராணுவப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் அதிகாரங் களும் கொடுக்கப்பட்டிருந்தன.'[1]

கிழக்கிந்தியக் கம்பெனி தனது இந்தியப் பிரதேசங்களில் பன்மை ஆட்சி முறையைப் பெரிதும் ஊக்குவித்தது. தனது இந்திய மாநிலங்களின் (presidencies) தலைவர்கள், தம் சக அதிகாரிகளும் ஆட்சி மன்றங்களின் உறுப்பினர்களும் கொடுத்த ஆலோசனைகளை மீறிய நிலையில் எச் செயலையும் மேற்கொள்ள முடியாது. எனினும், தலைவர் மற்றும் ஆளுநர் மன்றத்தின் உறுப்பினர்கள் காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் வேறு பட்டவர்களாய் இருந்தனர். எடுத்துக்காட்டாக, 1674-ல் சென்னையில் ஓர் ஆளுநரும், அவரையே முதல் உறுப்பினராகக் கொண்டிருந்த ஓர் ஆலோசனை மன்றமும், அம் மன்றத்தில் ஒரு கணக்கரும், ஒரு பண்டகசாலைக் காப்பாளரும் தீர்வைகள், வாரங்கள் (rent) மற்றும் வரிகள் போன்றவற்றை வசூலிப்பதற்கு என ஓர் அதிகாரியும் இருந்தனர். பம்பாயில் அதன் தலைவருக்கு உதவும் வகையில் ஒரு கணக்கர் (accountant), ஐரோப்பியப் பொருள்களை விற்பது, கீழை நாட்டுப் பொருள்களை வாங்குவது ஆகியவற்றைப் பதிவு செய்வதற்கான ஒரு பண்டகசாலைக் காப்பாளர், பம்பாய்த் துறைமுகத்தில் கப்பல்களின் இருப்பு களையும், பொருள்களையும் மேற்பார்வை செய்து, ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களைப்பற்றிய கணக்கை மேற்கொண்டு, தொழிலாளிகளுக்குக் கூலி தருவதற்கென ஓர் அதிகாரி, கம்பெனியின் அதிகார முத்திரையுடன் கடிதத் தொடர்புகளை மேற்கொள்ளவும் உத்தரவுகளைப் பதிந்து காக்கவும் ஒரு செயலாளர் ஆகியோர் இருந்தனர். ஆளுநர்களின் ஆலோசனை ஆட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் கம்பெனியின் உயர் அதிகாரி களாகப் பதவி நிலையைப் பதவி உயர்வின் (promotion) மூலம் பெற் றிருந்தவர்களாவர். ஆளுநரின் மன்றத்தின் உறுப்பினர்களாகக் கம்பெனியின் உயர் அதிகாரிகள் முதுநிலை நியதிக்கு ஏற்பப் பதவி உயர்வு பெற்றவர்களாக இருந்தனர். சாதாரண எழுத்தராகக் கம்பெனியின் பணித்துறையில் புகுந்த ஒருவர் ஐந்தாண்டுகளுக்குப் பின் தரகராகவும், பின்னர் மூன்றாண்டுகள் சென்ற பின் முதுநிலைத் தரகராகவும், அதன்பின் வர்த்தக அதிகாரியாகவும் பதவி உயர்வைப் பெறுவதற்கான வரையறை வகுக்கப்பட்டிருந்தது. ஆனால், நடைமுறையில் பயனுறுதி மிக்க செயல்களை மேற்

[1] Dodwell Shorter Cambridge History of India.

கொள்ளவும், நிர்வாக முடிவுகளைச் செய்யவும் பொருத்தமான தாக ஆளுநரின் மன்றம் அமைந்திருக்கவில்லை. இதனாலேயே வில்லியம் கோட்டையில் இராபர்ட் கிளைவ் தமது ஆலோசனை ஆட்சி மன்றத்தை மீறிய நிலையில் செயல்களை மேற்கொள்வதற் கான அதிகாரத்தைத் தமக்குக் கொடுக்குமாறு வலியுறுத்தினார். ஆளுநரும், ஆளுநர் மன்றமும் எவ்வகையிலும் வல்லாட்சிப் போக்கை தவிர்த்தே செயல்படவேண்டும் என்று கிழக்கிந்தியக் கம்பெனி ஆரம்ப காலத்தில் தனது கொள்கையாக வகுத்திருந்தது. ஆனால், பிற்காலத்தில் இத்தகைய போக்கை மேற்கொள்ளக்கூடிய நிலையில் கம்பெனியின் இந்திய ஆட்சி அமையவில்லை. அதனால் தான் பின்னர் அரச நிறுவனத்திற்கும் கம்பெனியின் அதிகாரி களுக்கும் இடையே பல இடர்ப்பாடுகள் தோன்றின.

பல நடவடிக்கைகளில் கம்பெனியின் வணிகச் சாலைகளின் தலைவர்களுக்கு, அவர்களுடைய ஆட்சி மன்ற உறுப்பினர்கள் தடையாகவே இருந்தனர். இதனால் தலைவரும் ஆளுநருமான செயலாட்சித் தலைவரின். அதிகாரம் விரைவான விளைவுப் பயனைக் கொடுக்க முடியாத தன்மையைக் . கம்பெனியின் அக்கறைகள் பெற்றிருந்தன. உதாரணமாக, 1762ஆம் ஆண்டில் நடந்த ஒரு செயலை இங்குக் குறிப்பிடலாம். 1762-ல் வங்கத்து ஆளுநரா யிருந்த வான் ஸிட்டார்ட் என்பவர் உள்நாட்டு வணிகத்தின் மீதான தீர்வைகளை நியாயமான அடிப்படையில் ஒழுங்குபடுத்தும் பொருட்டு மீர்காசிமுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். இவ் வுடன்படிக்கையின்படி நவாபின் அதிகாரி களுக்கு வழக்குகளை விசாரித்துத் தீர்மானிக்கும் அதிகாரம் கொடுக் கப்பட்டது. ஆனால், இஃது ஆளுநர் மன்றத்தின் உறுப்பினர்கள் நீதிபதிகளாகச் செயல்படக்கூடிய ஒரு வாய்ப்பைத் தவிர்ப்பதாக அமைந்தது. இவ் வேற்பாடு அப்பொழுதிருந்த நிலவரங்களுக் கொப்ப ஏற்புடையதாகவே இருந்தது. எனினும், ஆளுநர் மன்றத்தின் உறுப்பினர்கள் இதனை ஒரு பெரும் குறையாகக் கொண்டனர். மேற்கண்ட உடன்படிக்கையின்படி நவாபின் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தை, அவர்கள் திரும்பப்பெறுவதில் முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால், வங்காள நவாபான மீர்காசிமோ அதற்கு இசையவில்லை. எனவே, ஆளுநர் மன்றத்து உறுப்பினர்களின் கையோங்கிய நிலையில், மீர்காசிமுடன் சச்சரவிட்டு அவரைப் பதவியினின்றும் நீக்கி, மீர்ஜாபர் என்பவரை வங்காள நவாபாக நியமித்தனர்.

கம்பெனியின் வணிகச் சாலைகளும், கோட்டைகளும் அமைக்கப்பட்டிருந்த பிரதேசங்களின் உள்நாட்டு விவகாரங்களைச் சுயமாக மேற்கொள்வதற்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருந்த

போதிலும், கம்பெனியின் இயக்குநர் குழு கடிதப் போக்குவரத்து மூலம் இந்திய மாநிலங்களின்மீது தனது கட்டுப்பாட்டை, இலண்டனிலிருந்தபடி செலுத்தி வந்தது. கொள்கைக் கோட்பாட்டு ரீதியாக இலண்டனிலிருந்த கம்பெனியின் தலைமையிடத்திலிருந்து வந்த ஆலோசனைகளையும், கட்டளைகளையும், பலவகையான உத்தரவுகளையும் இந்தியத் தலைவர்கள் மற்றும் ஆளுநர்கள் மீற முடியாத நிலை இருந்தது. அப்படி மீறியவர்களைப் பதவியிலிருந்து நீக்கக்கூடிய உச்ச அதிகாரத்தைக் கம்பெனியின் தலைமையிடம் பெற்றிருந்தது. தவறிழைத்தோரைத் தண்டிக்கக்கூடிய அதிகாரத்தையும் அது பெற்றிருந்தது. மேலும், அவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டு தனிப்பட்ட முறையில் இந்தியாவில் வர்த்தகம் புரிவதற்கான உரிமத்தை மறுப்பதற்கும், பதவி நீக்கத்தின் காரணமாகவோ அல்லது பிற காரணங்களுக்காகவோ தன்னுல் உரிமம் கொடுக்கப்படாது வர்த்தகம் மேற்கொண்டவர்களைத் தண்டிக்கவும்கூடிய அதிகாரத்தைக் கம்பெனியின் தலைமையகம் பெற்றிருந்தது. எனினும், பல காரணங்களால் இவ் வதிகாரங்களைப் பயனுறுதியான நிலையில் முனைப்பாகச் செயல்படுத்த முடியாத இடரினையும் கம்பெனி பெற்றிருந்தது. எனவே, கம்பெனியின் இந்தியத் தலைமைச் செயலாட்சி நிர்வாகத்தினுல் கம்பெனியின் தலைமை இடத்து இயக்கங்களையும் (directives) பல கட்டளைகளையும் நல்ல முறையில் செயல்படுத்த முடியாமல் இருந்தது. இத்தகைய நிலையில் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களில் செயலாட்சி அரசாங்கம் அமைந்திருந்த காரணத்தினுலேயே பிற்காலத்தில் கம்பெனியின் தலைவர்களும், ஆளுநர்களும் வணிகச் செயல்களோடு அரசியல் தலையீடுகளையும் போர்ச் செயல்களையும் இங்கு மேற்கொண்டனர்.

பம்பாய் பிரதேசத்தில் அமைந்திருந்த கிழக்கிந்தியக் கம்பெனி அரசாங்கத்தின் சட்டம்-நீதி ஆட்சி எல்லை

அந்நியர்களான ஆங்கிலேயர் வணிகத்தின் துணைகொண்டு இந்தியாவில் குடியேற்றங்களை அமைத்தனர். பின்னர், இட உரிமையுடன் கூடிய இறைமையை நிலைநிறுத்தி, அரசியல் ஆதிக்கத்தை வேரூன்றச் செய்து வல்லாட்சிப் பேரரசை நிறுவி ஆண்டனர். இந்த அந்நிய அரசையும் ஆட்சியையும் வெறுத்து அவற்றை இந் நாட்டை விட்டே நாம் விரட்டிவிட்ட போதிலும், அவர்களது ஆட்சியின் பயனுய் இந்திய நாடு அரசியல் ரீதியாகவும், அரசியல் அமைப்புமுறைக் குட்பட்டதாகவும் பெற்ற பலன்கள் முக்கியமாக இரண்டாகும். அவை, முறையே இந்தியா அசோகர், அக்பர், ஔரங்கசீப் போன்றவர்கள் ஆட்சியில் இருந்ததைப் போன்று ஒரு குடைக்கீழ் வந்து ஒரு நாடகத் திகழ்ந்துகொண்டி

ருப்பதும், சட்டத்தின் ஆட்சி (rule of law) வேரூன்றியிருப்பதும் ஆகும். இவ்விரண்டிற்கும் ஆபத்து ஏற்பட்டிருக்குமாயின் ஜன நாயகத்திற்குச் சாவு மணி அடிக்கப்பட்டிருக்கும். ஒரு நாட்டில் ஜனநாயகம் தழைத்தோங்கச் சட்டத்தின் ஆட்சி செம்மையாய்ச் செயல்பட வேண்டும். அது செம்மையாய்ச் செயல்படவேண்டு மாயின் முறையான வளர்ச்சியைப் பெற்றிருக்கவேண்டும். இதனை ஒரு நாட்டின் அரசாங்கமும் அரசியல் வரலாற்றுச் செய்தி களும் தெளிவுபடுத்தும். இதற்கு இந்திய நாட்டின் அரசாங்க, அரசியல் வரலாறு விதிவிலக்கன்று. இம் முக்கியத்துவத்தை மனத்தில் கொண்டு பார்க்கும்பொழுது ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் ஆற்றியுள்ள ஆட்சித் தொண்டின் நன்மை நன்குக விளங்குகின்றது. ஏனெனில், ஆங்கிலேயர் ஆரம்ப காலம் முதற் கொண்டே தமது ஆளுகைக்கு உட்பட்டிருந்த இந்தியப் பிரதேசங் களில் சட்டத்தின் ஆட்சி நியதியைப் பின்பற்றியிருந்தனர். இச் செயலை அவர்கள் தொடக்க காலம் முதல் செவ்வனே மேற் கொண்டிருந்தது பம்பாயில்தான். மற்ற இடங்களில் பிற் காலத்தில்தான் படிப்படியாகப் பல சீர்திருத்தங்கள் மூலமாகவும், சட்டதிட்டங்கள் மூலமாகவும் அது மேற்கொள்ளப்பட்டது. 1773ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டத்தி லிருந்து (Regulating Act) இந் நாடு தொடர்ச்சியான ஓர் அரசியலமைப்பு வளர்ச்சியைப் பெற்றது என்றுலும், அதற்கு முன்னரும்கூட அதற்கான பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. பின்வரும் பக்கங்களில் கூறப்படவிருக்கும் செய்திகள் அவைகளை விளக்கும்.

தொடக்க காலம் முதற்கொண்டே பம்பாய், பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் தடையற்ற இறைமைக்கு உட்பட்டிருந்தது. என்வே, இந்திய நடவடிக்கைகளில் கிழக்கிந்தியக் கம்பெனி சட்டத்தின் ஆட்சியை மெதுவாக, இயற்கையாகத் தழுவிக்கொள்ளுமாறு செய்திருந்தது. பம்பாய், பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த ஆரம்ப வருடங்களில் அங்கிருந்த அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாய் இருந்தது அதனுடைய இராணுவப் பாதுகாப்பாகும். ஏனெனில், அப்பொழுது ஔரங்கசீபின் பகைமையினுலும் மராத்திய மன்னன் சிவாஜி யினுலும் அஃது அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டிருந்தது. மேலும், போர்த்துக்கீசியர்களாலும், டச்சுக்காரர்களாலும் பம்பாய்த் தீவிலிருந்த ஆங்கிலேயருக்கும் கம்பெனியின் செயல்களுக்கும் துன்பங்கள் ஏற்பட்டன. இப்படிப்பட்ட சூழ் நிலைகளில் இயற்கை யான காரணத்தின்பொருட்டு, இராணுவச் சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்ட நிலையில் பம்பாய்த் தீவை வைத்திருக்க

வேண்டியிருந்தது.· அத்தகைய சட்ட ஒழுங்கு முறைகள் போர் நிலவரங்களுக்கு இரையாகும் சூழ்நிலைகளில் இருந்ததால் அவைகளை ஒழுங்காகச் செயலாக்கம் செய்யவேண்டிய கட்டாயம் இருந்தது. இப்படிப்பட்ட ஆரம்பகால இராணுவச் சட்டச் செயற்பாடு 1622ஆம் ஆண்டு பீட்டர் பரோ என்பவரால் பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவைத் தழுவி அமைந்திருந்தது. பேராசிரியர் A. B. கீத் அவர்களின் கூற்றுப்படி, 1667-ல் சர் கெர்வேஸ் லூகாஸ் (Sir Gervase Lucas) இறந்தபின் பம்பாய்த் தீவின் ஆளுநராய் வந்த ஹென்றி காரி (Henry gary) என்பவரால் இராணுவச் சட்ட ஒழுங்கு முறைகளைத் தழுவியிருந்த செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. மற்றப்படி போர்த்துக்கீசியச் சட்டம் பம்பாய்த் தீவில் நிலவியிருந்தது.'[1]

பம்பாய்த் தீவு 1534ஆம் ஆண்டில் குஜராத் சுல்தானினால் விட்டுக்கொடுக்கப்பட்டுப் போர்த்துக்கீசியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அதை 1665-ல் ஆங்கிலேயர் போர்த்துக்கீசியரிடமிருந்து பெற்றனர். அப்பொழுது பம்பாயில் H. ஹீக் என்பவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுநராக இருந்தார். இவர் பம்பாய்த் தீவின் ஆளுநராக நியமிக்கப்பட்டவுடன் ஆங்கில நாட்டுச் சட்டத்தை எளிதாக அறிமுகப்படுத்த முடியவில்லை. ஏனெனில், போர்த்துக்கீசியர்கள் பம்பாய்த் தீவை ஆங்கிலேயருக்கே விட்டுக்கொடுத்திருந்த போதிலும், அங்குத் தீவு முதலிய புறப்பகுதிகள் நீங்கலான தலைநிலப் பரப்பில் (mainland) அவர்கள் தமக்கென வர்த்தக நிலையங்களையும், உடைமைகளையும் பெற்றிருந்தனர். எனினும், சிவில் சட்டப் பராமரிப்பு, தீவுப் பகுதிகளில் முன்னேற்றம் பெற்றிருந்தது. மேலும், கோட்டைக் காவற்படை (Garrison) இராணுவச் சட்டத்தினால் மேலாண்மை செய்யப்பட்டு அதன் நிர்வாகத்தின்கீழ் இருந்த யாவருக்கும் மனசாட்சியுடன் செயல்படக்கூடிய உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. நிலையான ஏற்பாடுகளின்கீழ்ப் பம்பாய்த் தீவைக் கொண்டுவருவதற்கு முன்னர் அங்கு எழுந்த நீதி முறையான வழக்குகள் தானா (Thana) என்னும் இடத்திலிருந்த நீதிபதியின் மன்றத்திற்கோ அல்லது பஸ்ஸீனிலிருந்த உயர்நீதிமன்றத்திற்கோ கொண்டுசெல்லப்பட்டுத் தீர்க்கப்பட்டுவந்தன. எனவே, இவ் வின்னலையும், சிக்கலையும், தவிர்க்கும்பொருட்டு ஆளுநர் ஹீக் ஓர் அமைதி காண் நீதிபதியை (Justice of Peace) நியமித்தார். எனினும், ஒரு வழக்கில் இறுதித் தீர்ப்பைக் கொடுக்கும் அதிகாரத்தை ஆளுநரான ஹீக் தம்மிடமே வைத்துக்கொண்டார். இவ் வேற்

[1] A.B. Keith, Constitutional History of India.

பாட்டின்மூலம் ஒழுங்கற்ற நீதி நடைமுறை இருந்ததோடு, ஆளுநர் கையூட்டுகளைப் பெற்றுக்கொண்டு உண்மைக்கும் நீதிக்கும் புறம்பாகத் தீர்ப்புகளை வழங்கக்கூடிய நிலையும் இருந்தது.

மேற்சொல்லப்பட்ட ஆரம்பகால ஏற்பாடு ஹீக்கிற்குப் பிறகு ஆளுநராய் வந்த சர். கெர்வேஸ் லூகாஸ் என்பவராலும் பின் பற்றப்பட்டது. ஆனுல், லூகாஸ் என்பவர் பம்பாய்த் தீவின் ஆளுநராக இருந்தபொழுது போர்த்துக்கீசிய நிலப்பிரபுக்கள் கையாண்டுவந்த கட்டாயப்படுத்தும் அதிகாரங்களுக்கு (Coercive Powers) முற்றுப்புள்ளி வைத்து அவற்றைத் தம்மிடமே வைத்துக் கொண்டார். இவர் அரசர் ஆதரவு பெற்ற ஆளுநராக இருந்த காரணத்தினுல் தண்டனை கொடுக்கும் முழுமையான அதிகாரத்தை அமைதி காண் நீதிபதியின் மூலமாகவோ அல்லது தமது முழு அதிகார உரிமைப்பயனின் காரணமாகவோ தன்னிடமே இருத்திக் கொண்டார். லூகாஸிற்குப் பிறகு வந்த ஆளுநர்கூடத் தாமே வழக்குகளை விசாரித்துத் தண்டனைகளைக் கொடுக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தபோதிலும் அவர் சிவில் சட்டத்தில் பயிற்சி பெற்றுள்ள ஒரு வழக்குரை நீதிபதியை (Judge Advocate) நியமிக்குமாறு கம்பெனியின் தலைமை இடத்தினரை வற்புறுத் தினுர். எவ்வாருயினும் பம்பாய்த் தீவிலிருந்த படைத்துறை முறை மன்றங்கள் (Court Martial) ஆங்கிலேயர்களையும் இராணுவக் குற்றவாளிகளையும் மட்டுமன்றிப் பம்பாய்த்தீவின் சுதேசி மக்களை யும் கொலை போன்ற சில வழக்குகளில் விசாரித்துத் தண்டனை களைக் கொடுக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தன. முன்னரே கூறியது போன்று, பம்பாய்த் தலைநிலப் பரப்பில் போர்த்துக்கீசியர் பெற்றிருந்த உடைமைகளில் மட்டுமன்றிப் பம்பாய்த் தீவிலும் கூடப் போர்த்துக்கீசியச் சட்டத்தின் பராமரிப்பு ஆங்கில நாட்டுச் சட்டத்திற்குப் பொருந்திய நிலையில் இருந்தது. இந் நிலை ஆங்கிலே யரால் பெறப்பட்டிருந்ததும், போர்த்துக்கீசியர்களால் விட்டுக் கொடுக்கப்பட்டிருந்ததுமான பிற இடங்களிலும் நிலவியது. 1845ஆம் ஆண்டில்தான் போர்த்துக்கீசியச் சட்டமும் அச் சட்டத்தைத் தழுவிச் செயல்பட்ட போர்த்துக்கீசிய நீதிமன்றங் களும் பம்பாயிலிருந்து சட்டரீதியாக அகற்றப்பட்டன.

1668ஆம் ஆண்டின் பட்டயத்தின்படி ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கத்திற்கு மாற்றிக் கொடுக்கப்பட்டபின், பம்பாய்த் தீவின் நிலை முற்றிலும் மாற்றப்பட்டது. 1668ஆம் ஆண்டின் பட்டயம், பம்பாயிலிருந்த கம்பெனியின் பிரதேசங்களை நிர்வகிக்கத் தேவையான சட்டங்களைச் செய்துகொள்ளக்கூடிய அதிகாரத்தைக் கம்பெனியின் தனிநபர் குழுக்களைக்கொண்டிருந்த

மன்றத்திற்குக் கொடுத்தது. மேலும், நீதித்துறை அதிகாரம் ஆளுநர்களாலும், பிற அதிகாரிகளாலும் மேற்கொள்ளப்படுவதற்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆனால், மேற்சொல்லப் பட்ட நிலையில் இயற்றப்பட்ட சட்டங்களும், பம்பாய்த் தீவில் அமைக்கப்பட்டிருந்த நீதிமன்றங்களும் அவற்றின் நடவடிக்கைகளும் நேர்மையற்றவையாகவும், இங்கிலாந்து நாட்டுச் சட்டத்திற்குப் புறம்பானவையாகவும் அமையக்கூடாது என்றும் முடிவாக்கப்பட்டது. இத் தீர்மானம் 1688ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் சூரத்தில் கம்பெனியின் தலைவராக இருந்த சர். ஜார்ஜ் ஆக்ஸென்டன் (Sir George oxenden) கட்டளைகளாகக் கம்பெனியின் தலைமை இடத்தினரால் அனுப்பப்பட்டது. சர். ஜார்ஜ் ஆக்ஸென்டன் 1669-ல் பம்பாய்த் தீவைச் சுற்றிப் பார்வையிட்டுத் தமது கம்பெனியினால் வழங்கப்பட்டிருந்த செயல்துறைக் கட்டளைகளுக்கொப்ப ஒரு துணை ஆளுநரையும் ஆலோசனை மன்றத்தையும் கொண்ட ஒரு செயலாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்தினார். எனினும், அவரது வருகைக்கு முன்பிருந்தே செயல்பாட்டிலிருந்த சட்டங்கள் மற்றும் போர்க்கால அவசரக் கட்டளைகள் போன்றவை பம்பாயின் ஆட்சியாளர்களுக்குத் தெளிவற்ற, ஆனால், முனைப்பு மிக்க அதிகாரங்களைக் கொடுத்திருந்தன. மேற்சொல்லப்பட்ட நிலையில் சட்டத்தன்மை மற்றும், நீதிமுறையான அதிகாரங்கள்[1] கம்பெனியினருக்குப் பம்பாயில் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், அமைதிக் காலங்களில் படைத்துறை மன்றங்களால் கைவிடப்பட்டிருந்த வழக்குகள் குறித்தும் அல்லது படைக்கலகம் போன்ற காரணத்தால் அம் முறைமன்றங்களால் கொடுக்கப்பட்ட தண்டனைகளை உறுதிப்படுத்த அரச நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த உரிமை எல்லை குறித்தும் தெளிவற்ற நிலை இருந்தது. 1685-ல் இரண்டாம் ஜேம்ஸ் மன்னர் உரிமை மனுவின் (petition of right) அடிப்படைச் செய்திக்கு ஏற்ப சிவில் நீதி மன்றங்கள் அமைதிக் காலத்தில் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு கொடுக்கவேண்டுமென்றும் போர் அல்லது கலகம் போன்ற காலங்களில் படைத்துறை முறைமன்றங்களினால் தீர்ப்புகள் கொடுக்கப்படும் என்றும் நிலையை உறுதிப்படுத்தித் தமது சாசனத்தைக் கொடுத்திருந்தார். இச் செய்திகளுக்கு ஏற்பப் பம்பாயில் உள்நாட்டு நிர்வாகம் குறித்துச் சட்டத் தொகுப்பு தயாரிக்கப்பட்டது. இச் சட்டத் தொகுப்பின் விதிகள் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை இடத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்டுப் பல ஆண்டுகள் செயலில் இருந்தன. பின்னர், இவ் விதிகள் 1740-ல் சென்னை அரசாங்கத்திலும் புகுத்தப்பட்டன. எனினும்,

[1] Legislative cum judicial powers.

கம்பெனியின் ஆட்சியின்கீழ் இருந்த இந்தியாவில் நிலவிய இராணுவச் சட்டத்தின் தன்மை 1754 வரை இங்கிலாந்து நாட்டின் சட்டத்திற்குப் பொருந்தும் வகையில் மேற்கொள்ளப் படவில்லை. 1754-க்குப் பிறகுதான் பாராளுமன்றச் சட்ட மொன்றின்மூலம் ஆங்கில நாட்டுப் படைக்கலகச் சட்டத்திற்கு இணையாக அமைதிக் காலத்திலும்கூடப் படைத்துறை முறை மன்றங்கள், கம்பெனியின் அதிகாரிகள் மற்றும் படை வீரர்களை விசாரித்துத் தண்டிக்கக்கூடிய அதிகாரம் உறுதிப்படுத்தப் பட்டது.

1669ஆம் ஆண்டு சூலைத் திங்களில் ஆக்ஸென்டென் இறந்த பின் கிழக்கிந்தியக் கம்பெனி பம்பாய் அரசாங்கத்திற்கெனக் கொடுக்கப் பட்டிருந்த தனது பட்டயத்தின்கீழ் இந்தியச் சட்டங்களை இயற்றியது. தாமஸ் பாப்பிலான் (Thomas Poppilan) என்பவரால் இச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இவரால் உருவாக்கப்பட்ட சட்டங்கள் பின்னர், கிழக்கிந்தியக் கம்பெனியின் தனிநபர் குழுக் களின் மன்றத்தாலும், இங்கிலாந்து அரசின் தலைமை வழக்குரை ஞராலும் பரிசீலனை செய்யப்பட்டு அரச முத்திரையின்கீழ் அனுமதிக்கப்பட்டன. இவை 1670ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் போர்த்துக்கீசிய மொழியிலும், மராத்திய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன. இவையே கிழக்கிந்தியக் கம்பெனி தனது ஆளுகைக்கு உட்பட்டிருந்த இடங்களுக்கு என்று, குறிப்பாகப் பம்பாய்க்கென, செய்த முதலாவதும் முக்கியமானது மான சட்டப் பணியாகும். இதன்மூலம் பின்வரும் செய்திகள் வலியுறுத்தப்பட்டுச் சலுகைகளும் கொடுக்கப்பட்டன.

மேற்கூறப்பட்ட இந்தியச் சட்டங்களின் முற்பகுதி, ஆங்கில நாட்டுச் சட்டத்திற்கொப்பக் கத்தோலிக்கக் கிறித்தவர்களுக்கு மட்டுமன்றிப் பம்பாயிலுள்ள எல்லாக் குடிமக்களுக்கும் சமய சுதந் திரத்தைக் கொடுத்தது. ஆனால், ஒருவர் மற்றொருவர் மனத்தைப் புண்படுத்தும் வகையில் கீழ்த்தரமாகப் பேசினாலும் நடந்தாலும் அதற்கான அபராதத்தையும் சிறைத் தண்டனையையும் பெற வேண்டும் என்று தெளிவாக்கப்பட்டது.

நீதி பரிபாலனம் குறித்துப் பின்வரும் செய்திகளை மேற்கண்ட சட்டங்களின் இரண்டாம் பகுதி தெளிவாக்கியிருந்தது. 1670ஆம் ஆண்டில் செயலிலிருந்த உரிமைகளை உறுதிப்படுத்திப் பாகுபாடற்ற நீதி பரிபாலனத்தை மேற்கொள்ள வகை செய்தது: ஒருவரது உரிமைகளை இழக்கச் செய்யக்கூடியதான கசையடி போன்ற உடல் சார்ந்த தண்டனைகள் பன்னிரு உறுப்பினர்கள் அடங்கிய ஒரு

ஜூரியினாலேயே கொடுக்கப்படவேண்டுமென்றும், திட்டவட்டமான கட்டளை பிறப்பிக்கப்படாத நிலையில் எவரையும் சிறைக்கு அனுப்பக்கூடாதென்றும் நீதி பரிபாலனமுறை தெளிவாக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய சட்டங்களின் மூன்றும் பகுதியில் குற்றவியல் செய்திகளில் எல்லா வழக்குகளையும் விசாரிப்பதற்கு ஒரு நீதிமன்றம் நிறுவப்பட்டமை குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இந் நீதிமன்றம் ஆளுநர் மற்றும் அவரது ஆட்சி மன்றத்தினால் நியமிக்கப்படும் ஒரு நீதிபதியைக் கொண்டிருக்கவேண்டுமென்றும் பன்னிரு ஆங்கிலேயர்களைக் கொண்ட ஜூரியினால் வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் விளக்கப்பட்டது. ஆனால், ஒரு வழக்கில் ஒரு கட்சியினர் ஆங்கிலேயரல்லாத பிறராயிருப்பின் அவர்களைப்பற்றிய வழக்குகளை விசாரிக்கும்பொழுது ஜூரியில் பாதிபேர் ஆங்கிலேயர் அல்லாதவர்களாக இருக்கவேண்டுமென்றும் கூறப்பட்டது. இந் நீதிமன்றத்தினால் கொடுக்கப்படும் தீர்ப்புகளை மேல்முறையீட்டின்பேரில் ஆளுநருடன் கூடிய ஆட்சி மன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கு உரிமையும் கொடுக்கப்பட்டது. இவ்வாறு வரும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிப்பதற்கு 'ஆளுநருடன் கூடிய மன்றம் பம்பாய்த் தீவின் உச்ச நீதி மன்றமாகச் செயல்படும்' என்றும் தெளிவாக்கப்பட்டது. மேலும், சட்ட ஒழுங்கையும் அமைதியையும் பராமரிப்பதற்கென அமைதிகாண் நடுவர்களையும் காவலர்களையும் நியமிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது.

மேற்கூறிய சட்டங்களின் நான்கு, ஐந்தாம் பகுதிகளில் வீடுகள் மற்றும் நிலம் போன்றவற்றின் பரிவர்த்தனைகள் பதிவு செய்யப்படுவது குறித்தும், பலதரப்பட்ட குற்றங்களுக்குக் கொடுக்கப்படவிருக்கும் பலதரப்பட்ட தண்டனைகள் குறித்தும் விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. இராணுவ ஒழுங்கு குறித்தும், கிளர்ச்சி மற்றும் அமைதியற்ற செயல்கள் மேற்கொள்ளப்படுவதைத் தடுக்கக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக் குறித்தும் மேற்கண்ட சட்டத்தின் ஆறும் பகுதி விளக்கியது. எனினும், ஆங்கில நாட்டுச் சட்டத்தின்படி அமைந்திருந்த தண்டனைகளின் கடுமை இந்திய விவகாரங்களில் குறைக்கப்பட்டிருந்தது. படைக்கலகம், ஆட்சி எதிர்ப்புக் கிளர்ச்சி அல்லது இராசத் துரோகம், புரட்சி ஆகியவற்றிற்கு மரணதண்டனையும், பிற குற்றங்களுக்குக் கடுமையற்ற இலேசான தண்டனைகளும் கொடுக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. உதாரணமாகக் கடமைப்பற்றை இழந்திருந்த ஒரு படைவீரருக்குச் சாதாரண அபராதமோ அல்லது குறுகிய கால சிறைவாசமோ தண்டனையாகக் கொடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் ஒரு ஜூரி

அல்லது ஆளுநருடன் கூடிய மன்றத்தினுல்தான் வழக்குகள் விசாரிக்கப்பட்டன. இச் சட்டங்கள் ஏறத்தாழ ஐம்பது ஆண்டு களுக்குச் செயலில் இருந்தன.

மேற்சொல்லப்பட்ட செய்திகளுக்கொப்ப இந்தியச் சட்டங்கள் அமைந்திருந்தபோதிலும் பம்பாய்த் தீவிலும், மற்ற இடங்களிலும் நிலவியிருந்த உள்ளூர் நிலவரங்களுக் கேற்பச் சில மாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக 1677ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆளுநருடன் கூடிய மன்றத்திற்கு நீதிமன்றம் கொடுத்த தீர்ப்புகள்மீது மேல்முறையீட்டைச் செய்யும் பழக்கம் செயலிழந்தது. கம்பெனியின் தலைமையிடத் தினுல் உருவாக்கப்பட்டிருந்த சட்டங்களில் தோன்றிய குறைபாடு கள் இங்கிலாந்து நாட்டின் பொதுச் சட்டத்தின் செய்திகளுக் கொப்ப அகற்றப்பட்டன. தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சில வழக்குகளில் ஜூரியுடன் கூடிய ஆளுநர் மற்றும் அவருடைய மன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவற்றின்படி ஓரிரு துணை ஆளுநர்கள் விசாரிக்கப்பட்டுத் தண்டனையும் கொடுக்கப்பட்டனர்.

1683ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் தொடங்கி 1684ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் வரை பம்பாய்த் தீவிலிருந்த கம்பெனியின் வணிகச் சாலையில் கலக நிலவரம் நிலவியது. இதனுல், நீதித் துறையிலும் சட்டத் துறையிலும் புதிய மாற்றங் களைத் தோற்றுவிப்பது தடைப்பட்டது. எனினும், 1683ஆம் ஆண்டு இரண்டாம் சார்லஸ் மன்னர் பிறப்பித்த புதுப் பட்ட யத்தில் பம்பாய் மற்றும் அதன் அருகில் இருந்த இடங்களில் கடல் வழி பற்றிய எல்லாவிதமான வழக்குகளையும், சட்டத்தை மீறிய செயல்களைத் தழுவிய வழக்குகளையும், மற்றும் நீள்கடல்களின் மீது செய்யப்பட்ட தவறுகள், தீங்குகள் போன்ற யாவற்றையும் தழுவிய வழக்குகளையும் விசாரிக்கக் கம்பெனியினுல் தேர்ந்தெடுக் கப்பட்ட இருவரையும் சிவில் சட்டத்தில் புலமை வாய்ந்திருந்த ஒரு நீதிபதியையும் கொண்ட ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இதன்படியே டாக்டர் செயின்ட் ஜான் (Dr. St. John) என்பவர் நீதிபதியாய் நியமிக்கப்பட்டார். ஆனுல், அப்பொழுது சூரத் கம்பெனியின் தலைவராயிருந்த ஜான் சைல்ட் என்பவருக்கும் இவருக்கும் மனத் தாங்கல்களும், பூசல்களும் இருந்தமையால் செயின்ட் ஜான் பதவி நீக்கம் செய்யப்பட்டார். ஆனுல், இச் செயல் நடைபெறுவதற்கு முன்னரே சர். ஜொசையா சைல்ட் கம்பெனியின் குறிக்கோள்களையும் உரிமைகளையும்பற்றிப் புதிய தொரு பொருள் விவரணம் கொடுத்து, ‘ கம்பெனி இந்தியாவில்

இறைமை பெற்ற ஒரு அரசாக வளர்ந்திருந்தது', என்று குறிப்பிட்டார். இதன்படி பம்பாயிலிருந்த ஆளுநருடன் கூடிய மன்றம் வட்டார நிலவரங்களையும் செய்திகளையும் கவனத்தில் கொண்டு ஆங்கிலச் சட்டத்தின் தேவைகளை உணர்ந்தும், தேவையான சட்டங்களையும் துணைச் சட்டங்களையும் செய்துகொள்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. மேலும், அத்தகைய சட்டங்களையும், துணைச் சட்டங்களையும் நிராகரிக்கக்கூடிய அதிகாரம் அரசருக்கும் கம்பெனியின் தலைமை இடத்திற்கும் கொடுக்கப்பட்டது. மேலும் 1683, 1686ஆம் ஆண்டுப் பட்டயங்களின் கீழ்ப் பம்பாயின் குடிமக்கள் இராணுவச் சட்டம், சிவில் சட்டம் ஆகியவற்றின் துணைகொண்டு பரிபாலனம் செய்யப்படுவதே உகந்தது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், சிவில் வழக்குகளை இராணுவச் சட்டத்தின் துணைகொண்டு விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் பொருந்தாப் போக்கு இருந்தது. 1690ஆம் ஆண்டு வரை இத்தகைய நீதி பரிபாலன முறை இருந்ததால் மொகலாயப் பேரரசரான ஔரங்கசீப் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய நிர்வாகத்தை வெறுத்து ஒடுக்க முனைந்தார். இதனால், கம்பெனியினர், ஆளுநருடன் கூடிய மன்றத்தின்மூலம், தேவை நியதிகளின் அடிப்படையில் பம்பாய்த் தீவில் நீதி பரிபாலன முறையை மேற்கொள்ளலாயினர்.

1704-ல் சர் N. வெயிட் (Sir N. Weight) என்பவர் கம்பெனியின் பிரதிநிதியாகப் பதவி ஏற்றார். இவர் தேர்ச்சி மிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு கம்பெனியின் நீதி பரிபாலன முறையில் சில மாற்றங்களைத் தோற்றுவித்தார். அவற்றின்படி சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை ஆளுநருடன் கூடிய மன்றத்திற்குக் கொடுத்தார். ஆனால், இதில் பெரும்பாலான பணியைத் துணை ஆளுநர் மேற்கொள்ளும்படி அதிகார ஒப்படைப்புச் செய்யப்பட்டது. இறுதியான தண்டனையைக் கொடுக்கும் அதிகாரம் ஆளுநர் மன்றத்திடம் கொடுக்கப்பட்டது. இவ் வழக்கம் 1712ஆம் ஆண்டு வரை இருந்தது. 1716-ல் சார்லஸ் பூன் (Charles Boone) என்பவர் ஆளுநராகப் பதவி ஏற்ற பின் ஒழுங்கான நீதி நடைமுறை பின்பற்றப்படலாயிற்று. இதன்படி சில புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இப் புதிய ஏற்பாடுகளின்படி கம்பெனியின் பணியாளர்கள் மற்றும் இந்துக்கள், முகமதியர்கள், போர்த்துக்கீசியக் கிறித்தவர்கள், பார்ஸிகள் ஆகிய இந்தியர்களின் பிரதிநிதிகளாக நான்கு பேர்களையும் கொண்டதாய் நீதிமன்றம் அமைக்கப்பட்டது. ஆனால், ஆங்கிலேயப் பிரஜைகளைப் பற்றிய வழக்குகளை நீதிமன்றம் விசாரிக்கும்பொழுது அவ் விசாரணையை மூன்று ஆங்கிலேய நீதிபதிகளே மேற்கொள்ள

வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. இவ் வேற்பாட்டின்படி ஜுரி முறைக்கு அவசியமில்லாது போய்விட்டது. இந் நீதிமன்றத் திற்குச் சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் அதிகமாகக் கொடுக்கப்பட்டது. எனினும் தூக்குத் தண்டனை போன்ற தண்டனை கொடுக்கப்படக்கூடிய கொலை, பெருங்கொள்ளை, வன்முறைப் பழிச்செயல், கற்பழிப்புப் போன்ற வழக்குகளை ஆளுநருடன்கூடிய மன்றத்திற்கு அனுப்பிவைக்க வகை செய்யப்பட்டிருந்தது. இப்படி 1718 முதல் 1728ஆம் ஆண்டுவரை அமைந்திருந்த நீதிமன்றம் கம்பெனியின் தலைமை இடத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆளுநருடன்கூடிய மன்றத்தின் கட்டளையின்மூலம் அமைக்கப்பட்டிருந்தது. இதற்குமுன் அமைக்கப்பட்டிருந்த நீதிமன்றங்கள் கம்பெனியின் சட்டங்களின் மூலம் அமைக்கப்பட்டவையாகும். அடிப்படையான இவ் வேறு பாட்டின் காரணமாக 1728 ஆம் ஆண்டு முதல் மேயர் நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டுச் செயல்படலாயிற்று. சென்னையில் மேயர் நீதிமன்றம் 1687ஆம் ஆண்டிலேயே அமைக்கப்பட்டுச் செயலில் இருந்தது. சென்னையிலிருந்த மேயர் நீதிமன்றத்தின் அமைப்பு நியதிகளை ஒட்டியே பம்பாயிலும் மேயர் நீதிமன்றம் -1728-ல் அமைக்கப்பட்டது. ஆளுநருடன் கூடிய மன்றத்திற்குச் சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரமும் கொடுக்கப்பட்டது.

1726ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பம்பாயில் ஒரு நகராண்மைக் கழகமும் (Municipal Corporation) அமைக்கப் பட்டது. அந் நகராண்மைக் கழகத்தின் தலைவரான நகரத் தந்தை ஆண்டுக்கு ஒருமுறை அதன் உறுப்பினர்களிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டார். அந் நகரத்தந்தையும் நகராண்மைக் கழக உறுப்பினர்களில் எழுவரும் ஆங்கிலேயர்களாக இருந்தனர். கழக உறுப்பினர்களுக்கு ஆயுட்காலப் பதவி (Life tenure) கொடுக் கப்பட்டது. ஆனால், ஏதேனும் ஒரு காரணத்தால் காலி இடங்கள் தோன்றியபொழுது அவற்றிற்குப் பம்பாய்க் குடிமக்களுள் முக்கிய மானவர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களை நேர்மையான காரணத்தின் அடிப்படையில் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் ஆளுநர் மன்றத்திடம் இருந்தது. ஆனால், பதவி நீக்கம் செய்யப் பட்ட ஒருவர் இங்கிலாந்தின் அரசருக்கு மேல்முறையீட்டைச் செய்துகொள்ள உரிமை கொடுக்கப்பட்டது. நகரத்தந்தையும் உறுப்பினர்களும் மூல ஆதாரங்களுடன்கூடிய சிவில் வழக்குகளை விசாரிக்கும் பதிவேட்டு முறைமன்றமாகவும் செயல்பட அதிகாரம் அளிக்கப்பட்டனர். இப்படிச் செயல்பட மேயர் நீதிமன்றம் ஆங்கில நாட்டுச் சட்டத்தைத் தழுவிச் செயல்முறைகளை மேற்

கொண்டது. இதன் செயல்முறையைச் செயலாக்கம் செய்ய ஆளுநர் மன்றத்தால் ஆண்டுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஷெரிபு (Sheriff) இருந்தார். மேல் நீதிமன்றத்தால் தீர்ப்புகள் வழங்கப்பட்ட சிவில் வழக்குகளில் ஆயிரம் பொன் நாணய மதிப்பைப் பெற்றிருந்த பொருள்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அவை ஆளுநர் மன்றத்திடம் மேல்முறையீட்டைச் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தன. குற்றவியல் நீதியை விசாரித்து உறுதிப்படுத்தும் அதிகாரம் ஆளுநருக்கும் அவருடைய மன்றத்தின் ஐந்து முதுநிலை உறுப்பினர்களுக்கும், இங்கிலாந்து நாட்டின் அமைதிகாண் நீதிபதிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்ததைப்போல், கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், மன்பகைக் குற்றச்சாட்டு வழக்குகளையும், உயர் இராசத் துரோக வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரம் ஆளுநருக்கும் அவருடைய ஐந்து முதுநிலை மன்ற உறுப்பினர்களுக்கும் (Senior members of the council) கொடுக்கப்படவில்லை. அவற்றை இங்கிலாந்து நாட்டில்தான் நடத்த வகை செய்யப்பட்டிருந்தது. குற்றவியல் வழக்குகளைப் பொறுத்தவரை ஜூரி முறை மெல்ல மெல்லப் பின்பற்றப்பட்டது.

நகராண்மைக் கழகங்கள் நிறுவப்பட்டிருந்ததால் அவற்றின் மூலம் தேர்ச்சியான நிர்வாகம் மேற்கொள்ளப்படுவதற்கு என்று தேவையான ஒழுங்கு முறைகளைச் செய்யும் சட்ட ஆக்க அதிகாரம் ஆளுநருடன்கூடிய மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டது. மேலும், அந்த ஒழுங்கு முறைகளை மீறுவோருக்குக் கொடுக்கப்படக்கூடிய தண்டனைகளின் தன்மையையும், அளவையும் நிர்ணயிக்கும் அதிகாரம் ஆளுநர் மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், ஆளுநர் மன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட துணைச்சட்டங்கள் மற்றும் தண்டனைகள் ஆங்கிலச் சட்டங்களுக்குப் புறம்பானவையாய் இருக்கக்கூடாது என்பது உறுதியாய்க் கூறப்பட்டது. மேற்கூறப்பட்ட செய்திகள் யாவும் இயக்குநர்கள் மன்றத்தால் ஏற்று உறுதி செய்யப்பட்ட பின்னரே செயலுக்கு வந்தன.

1753ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8ஆம் நாள் பிறப்பிக்கப்பட்ட பட்டயத்தின்படி நீதி, சட்டமுறைகளில் மேலும் சில தேர்ச்சியான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இப் பட்டயத்தின்படி மேயர் நீதிமன்றத்திற்கு ஒரு வழக்கை எடுத்துச்செல்ல வேண்டுமாயின் அவ் வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த பொருளின் மதிப்பு குறைந்தது ஐந்து பொற்காசுகளாகவேனும் இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. மேயர் நீதி மன்றம், ஆளுநர் மன்றத்தின் மேல்முறையீட்டின் பயனுய் எடுத்து அனுப்பிய முறையீட்டைச் செயல்படுத்தத் தவறுமாயின் ஆளுநர் மன்றமே தனது

தீர்ப்பைச் செயலாக்கம் (execution) செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. சத்தியத்தின்பேரில் கிறித்தவர்களுக்கும், மனச்சாட்சியின் அடிப்படையில் இந்தியர்களுக்கும் வழக்குகளில் சாட்சியம் கொடுக்க அனுமதி கொடுக்கப்பட்டது. கம்பெனிக்கு எதிராகவோ, கம்பெனியால் பிறர்மீதோ தொடரப்படும் வழக்குகளை விசாரிக்கத் தனி ஏற்பாடும் செய்யப்பட்டு, அதன்படி ஆளுநர் மன்றத்தினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று ஆணையாளர் களைக் கொண்ட நீதிமன்றம் அமைக்கப்பட்டது. ஆளுநர் மன்றத்தின் உறுப்பினர்கள் யாவரும் அமைதிகாண் நீதிபதி களாகவும் நியமிக்கப்பட்டனர்.

மேற்சொல்லப்பட்ட செய்திகளுக் கொப்ப நீதி மற்றும் சட்ட பரிபாலன முறைகள் 18ஆம் நூற்றுண்டின் மைய காலத்தில் அமைக்கப்பட்டிருந்தபோதிலும் கம்பெனியின் ஆட்சிமுறை பஞ்சாயத்துகள் போன்ற வட்டார அரசுகளின் செயல்களில் தலையிடவில்லை. சாதிமத வகுப்புவாத வழக்குகளை உள்நாட்டு வழக்காறுகள் மற்றும் சுதேசிச் சம்பிரதாயங்களை அணுகியே தீர்க்க வகை செய்யப்பட்டது. மேலும், கிராமத் தலைவர்கள், வணிகர்கள், முகமதிய காஸிகள் (Kazi) ஆகியோரும் இந்து, முகமதியர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கும்பொழுது ஆலோசனை கேட்கப்பட்டனர். இப்படிப் பல தேர்ச்சியான மாற்றங்களைக் கொண்ட நிலையிலும் பம்பாயிலிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்க முறை 1753 வரை இந்து, முஸ்லிம்களின் மதச்சங்கதி களினுல் பல சிக்கல்களைக் கொண்டதாகவே அமைந்திருந்தது. இச் சிக்கல்கள் பின்னர்ப் பல வழிகளில், பல செய்திகளுக் கேற்பத் தீர்க்கப்பட்டன.

சென்னையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிமுறை

சென்னையைப் பொறுத்தவரை அங்கிருந்த கம்பெனியின் அரசாங்கமுறையும், அதன் அதிகாரத்தின் தன்மையும் அடிப்படை யாகப் பின்வரும் செய்திகளுக் கொப்ப அமைந்திருந்தன. தனது ஆளுகைக் குட்பட்டிருந்த இந்தியக் குடிமக்களின்மீது செலுத்திய அதிகாரம் இந்தியச் சுதேசி அரசர்களால் கொடுக்கப்பட்ட இறைமையிலிருந்து பெறப்பட்டிருந்தது. ஆனுல், ஆங்கிலக் குடி மக்கள்மீது செலுத்திய அதிகாரமும், கட்டுப்பாடும் கம்பெனிப் பட்டயங்களிலிருந்து பெறப்பட்டிருந்தன. 1666-ல் தான் முதன் முதலில் கம்பெனிக் குடிமக்களைப்பற்றிய வழக்குகளைத் தீர்ப்பதற்கு என ஓர் ஒழுங்கான நீதித்துறை அமைக்கப்பட்டது. 1678 ல் ஸ்ட்ரெயின்ஸாம் மாஸ்டர் (Streynsham Master) என்பவர் ஆளுநராக வந்தார். இவர் பம்பாயிலிருந்த நீதிமன்றத்தைப்

போலவே சென்னையின் நீதிமன்றத்தைச் சீர்திருத்தி அமைத்தார். இந் நீதிமன்றம் ஜூரிகளையும் உடன்கொண்டு சிவில் மற்றும் குற்ற வியல் வழக்குகளை ஆங்கிலேயச் சட்டத்தைப் பின்பற்றி விசாரித்து நடத்தியது. எனினும், எட்டாண்டுகளுக்குப் பின்னர் அஃதாவது, 1686-ல் படைத்துறை நீதிமன்றம், மேற்சொல்லப்பட்ட நீதி மன்றத்தை விஞ்சும் வகையில் செயல்படலாயிற்று. சென்னை யிலிருந்த படைத் துறை நீதிமன்றம், கிழக்கிந்தியக் கம்பெனியிடம் பெருஞ் செல்வாக்கையும் ஆதரவையும் பெற்றிருந்த சர் ஜான் பிக்ஸ் (Sir John Biggs) என்பவரை வழக்குரை நீதிபதியாகப் பெற்றிருந்தது. இந்த நீதிமன்றம் உச்ச நீதிமன்றமாகவும் செயல் பட்டது. கம்பெனியினால் 1688-ல் கொடுக்கப்பட்ட பட்ட யத்தின்படி ஒரு நகராண்மைக் கழகம் அமைக்கப்பட்டு, மேற் சொல்லப்பட்ட நீதிமன்றத்திற்கே மேல்முறையீட்டைச் செய்து கொள்ள வகை செய்யப்பட்டது. ஆளுநருக்கும் அவருடைய மன்றத்திற்கும் மேல்முறையீட்டை எடுத்துச் செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கவில்லை. நகராண்மைக் கழகத்தினால் தீர்க்கப் பட்ட வழக்குகள் மேல்முறையீட்டின்பேரில் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட புதியதொரு போக்கு கிழக்கிந்தியக் கம்பெனியின் சென்னைப் பிரதேசத்தில் அமைந்திருந்தது வியப்பிற் குரிய ஒரு செய்தியாகும். ஏனெனில், இத்தகைய ஏற்பாடு பிற இடங்களில் வழக்கத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

வரி விதித்து வருவாய் திரட்டிய தமது நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டே மேற்சொல்லப்பட்ட நிலையில் ஒரு நகராண்மைக் கழகம் சென்னையில் அமைக்கப்பட்டது. இந் நகராண்மைக் கழகத்தில் பன்னிரு உறுப்பினர்களும், ஒரு நகரத் தந்தையும் இருந்தனர். சென்னையின் நகரத் தந்தை ஓர் ஆங்கிலேயராகவே இருந்தார். பன்னிரு உறுப்பினர்களில் முது நிலையான மூவர் ஆங்கிலேயர் களாகவும் ஏனையோர் பிற இனத்தவராகவும் இருந்தனர். அவர் களில் ஒருவர் ஃபிரெஞ்சுக்காரர், இருவர் போத்துக்கீசியர்கள், மூவர் இந்துக்கள், ஏனைய மூவர் அமெரிக்க வணிகர்கள் அல்லது யூதர்கள் ஆகியோர் ஆவர்.

மேற்சொல்லப்பட்ட செய்திகளுக் கொப்பச் சென்னையின் நகராண்மைக் கழகம் அமைக்கப்பட்டிருந்த போதிலும், அந் நிறுவனம் கம்பெனியினர் விரும்பியதைப்போல் செயல்படவில்லை. அதனால் வரிகளை விதித்துத் திரட்டவோ, நகராண்மைக் கழகத்தை அல்லது ஸ்தல ஸ்தாபன நிறுவனங்களை ஸ்தாபிக்கவோ முடிய வில்லை. ஆனால், நீதி பரிபாலனம் செய்வதை மேற்கொண்டிருந்

ததால் அது முக்கியமான ஒரு நிறுவனமாய் இருந்தது. இந் நகராண்மைக் கழகத்தின் தலைவரும் ஏனைய உறுப்பினர்களும் ஒரு சிவில் நீதிமன்றமாகச் செயல்படும் அருகதையைப் பெற்றிருந் தனர். இவர்களில் நகரத்தந்தையும் மற்றும் மூன்று முதுநிலை உறுப்பினர்களும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் அதிகார எல்லையைக்கொண்ட அமைதிகாண் நீதிபதிகளாய் இருந்தனர். இவர்களால் கொடுக்கப்பட்ட தீர்ப்புகளின்மீது மேல்முறை யீட்டைப் படைத்துறை நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லலாம். ஆனால், அவ் வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த பொருளின் மதிப்பு மூன்று பொற்காசுகளாக இருக்கவேண்டியிருந்தது. குற்றவியல் வழக்குகளில் முடமாக்கப்படும் அல்லது மரணதண்டனை விதிக்கப் படும் தீர்ப்புகளில் மட்டும் மேல்முறையீடு செய்துகொள்ள முடியும் என்று இருந்தது. 1712ஆம் ஆண்டு வரை இந் நீதிமன்றம் மரணதண்டனை கொடுக்கக் கூடிய அதிகாரத்தைப் பெற்றிருந்தது சர்ச்சைக்குரியதாய் இருந்தது. ஆனால், இவ் வதிகாரம் ஆளுநர் மன்றத்தினுல் பின்னர் உறுதி செய்யப்பட்டது. 1704ஆம் ஆண்டுக்குப் பிறகு படைத்துறை முறைமன்றத்தின் அதிகார எல்லையை ஆளுநரும் அவருடைய ஆட்சி மன்றமும் பிரயோகிக்க லாயினர். குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும்பொழுது படைத் துறை முறைமன்றத்திலும், நகரத்தந்தை நீதிமன்றத்திலும் ஜூரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர் என்பது உணரப்படுகிறது ஆனுல், சிவில் வழக்குகளை விசாரிக்க ஜூரிகள் நியமிக்கப்படவே யில்லை என்பது உறுதியாக வரலாற்றின்மூலம் அறியக்கிடக் கின்றது. 18ஆம் நூற்றுண்டில் இந்திய நாட்டு வழக்கப்படி இந்திய குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனைகளும், ஆங்கிலக் குடிமக்களுக்குக் கசையடி கொடுத்தல், கைகளுக்குச் சூடுபோடுதல் போன்ற தண்டனைகளும் கொடுக்கப்பட்டன. இவை பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களிலும் பின்பற்றப்பட்டன.

இந்தியக் குடிமக்களைச் சார்ந்து எழுந்த வழக்குகளைப் பொறுத்தவரை சுதேசி வழக்குகளில் ஆரம்ப விசாரணை செய்து தண்டிக்கும் அதிகாரம் இந்திய அதிகாரி எனப்படும் நகர ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இந்தியக் குடிமகனுக இருந்த நகர ஆளுநர் தன்னுடைய நகரத்தில் வழக்கத்திலிருந்த மரபுகளைச் சார்ந்தே நீதி நிர்வாகத்தை மேற்கொண்டார். 1654ஆம் ஆண்டுவாக்கில் இவ் வழக்கத்தில் மாற்றங்கள் செய்யப் பட்டன. அதன்படி இந்திய அதிகாரியின் நகர நீதிமன்றத்தில் இரண்டு ஆங்கிலேயர்களும் நியமிக்கப்பட்டனர். சிறு சிறு வழக்கு களையும், அமைதியை அழிக்கும் செயல்களைப் பற்றிய வழக்கு களையும், ஐம்பது பொற்காசுகளின் மதிப்பில் எழுந்த கடன் வழக்கு

களேயும், நகர நீதிமன்றம் விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. இந் நீதிமன்றத்தின் வழக்குகள் ஆளுநர் மற்றும் அவரது மன்றத்திற்கு மேல்முறையீட்டின்பேரில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தன. 1688, 1689ஆம் ஆண்டுகளில் மாஜிஸ்ட்ரேட்டுகள் மற்றும் தனிச் சிறப்பு வாய்ந்த நீதிபதிகள் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். 1727-ல் சென்னையின் ஆளுநர் மன்றம், நகரத்தந்தை நீதிமன்றத்தின்கீழ், ஒரு மாநகர் மணியக்காரர் நீதிமன்றத்தை (Sheriff's Court) ஸ்தாபிக்க விரும்பியது. மேலும், இந் நீதி மன்றத்திலிருந்து நகரத்தந்தை நீதி மன்றத்திற்கு வழக்குகளே மேல்முறையீட்டின்பேரில் எடுத்துச் செல்லலாம் என்றும் கூறப்பட்டது. ஆனால், கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமையிடம் இத் திட்டத்தை ஏற்கவில்லை. எனினும், மணியக்காரர் தீர்ப்பு மன்றத்தைப்போல் ஒரு நீதிமன்றம் பம்பாயில் செயல்பட்டதைப்போல் சென்னையில் அமைக்கப்படவேண்டும் என்று 1753ஆம் ஆண்டு பட்டயத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

1727ஆம் ஆண்டுப் பட்டயத்தின்படி, பிற நீதிமன்றங்களே எல்லாம் விஞ்சக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்த நகரத் தந்தை நீதிமன்றம் தன் நீதி முறையான அதிகாரங்களே உறுதிப் படுத்தும் வகையில் செயல்பட்டது. எனினும், அது பட்டயத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த வரம்புகளுக்கு உட்பட்டே செயல்பட வேண்டுமென்று தெளிவாக்கப்பட்டது. இவ்வாறு கம்பெனியின் சென்னைப் பிரதேசத்தில் நீதிபரிபாலனம் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் இந்தியக் குடிகள் பற்றிய வழக்குகளில் நீதிமன்றங்களால் பின்பற்றப்பட்ட சட்டத்தைப் பற்றிய பிரச்சினை இயல்பாகவே எழுந்தது. கிழக்கிந்தியக் கம்பெனி நீதிமன்றத்தில் ஆங்கில நாட்டுச் சட்டம் தழுவப்படவேண்டும் என்றும், தேவையான சமயங்களில் வழக்குகளின் தன்மைகளுக்கு ஏற்ப இந்திய பாரம்பரியங்களேயும், மரபுகளேயும் நீதிமன்றம் தன் நோக்கில் கொள்ளலாம் என்றும் வலியுறுத்தப்பட்டது. 1753ஆம் ஆண்டின் பட்டயத்தில் இந்தியக் குடிமக்கள் விரும்பினுல் தம் வழக்குகளே ஆங்கிலச் சட்டத்தின் துணைகொண்டு நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம் என்று விவரணம் செய்யப்பட்டிருந்தது. இங்கிலாந்து குடிமக்களேத் தழுவி எழும் வழக்குகளே ஆங்கில நாட்டுச் சட்டத்திற்கு ஏற்பவே விசாரிக்கவேண்டு மென்றும் தெளிவாக்கப்பட்டிருந்தது. ஆங்கிலக் குடிமக்களுக்கும், இந்தியக் குடிமக்களுக்கும் இடையே எழுந்த வழக்குகளேத் தீர்ப்பதில்தான் குழப்பங்கள் இருந்தன. எனினும், இந்தியக் குடிமக்களான வாதியோ, பிரதிவாதியோ விரும்பிய நிலேயில் ஆங்கிலச் சட்டத்

தைத் தழுவி வழக்குகள் தீர்க்கப்பட்டன. இக் குழப்ப நிலை நிலவிய தற்குக் காரணம் நகரத்தந்தை நீதிமன்றத்திற்கு அடுத்த கீழ் நிலையில் நல்லதொரு தனிப்பட்ட நீதிமன்றம் அமைக்கப்படாமல், சத்திரக் கோர்ட்டே (Choultry court) இருந்ததேயாகும். அது பயனற்றதாகவும் இருந்தது. எனவே, இக் குறைபாட்டை நீக்கும் வகையில் 1795-ல் இந்திய தேசியச் சட்டத்தைச் சார்ந்து எழும் வழக்குகளை விசாரிப்பதற்கெனக் கச்சேரி முறை மன்றம் (Court of cutchery) நிறுவப்பட்டது. ஆனுல், இம் முறைமன்றம் மிக விரைவில் 1798-ல் பதிவாளர் நீதிமன்றத்திஞல் இடம்பற்றிக் கொள்ளப்பட்டது. ஏனெனில், பதிவாளர் தீர்ப்பு மன்றத்தில் இந்தியச் சட்டத்திற்குத் தேவையான மதிப்பைக் கொடுத்து இந்தியக் குடிமக்களைப்பற்றி எழுந்த வழக்குகளைச் செவ்வனே விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்படி, இதுவரை கூறப்பட்ட செய்திகளுக்கு ஏற்பச் சென்னையில் கம்பெனியின் நீதி பரிபாலனம் அமைந்திருந்து, பின்னர்த் தேர்ச்சி யான பல வளர்ச்சியையும், மாற்றங்களையும் ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் பெற்றது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் கல்கத்தா பிரதேசத்தில் அமைக்கப் பட்டிருந்த அரசாங்கத்தின் சட்டம் மற்றும் நீதி ஆட்சி எல்லை

செயலாட்சி மற்றும் நீதித்துறை செயல்களைப் பொறுத்தவரை, வங்கத்தின் வணிகச் சாலையின் அமைப்பின் தன்மை, சென்னையிலும் பாம்பாயிலும் இருந்ததைப்போல் தேர்ச்சியான நிலையில் ஆரம்பக் காலத்தில் அமைந்திருக்கவில்லை. வங்கத்தில் கம்பெனியினர் தோற்றுவித்த குடியேற்றங்கள் ஓர் ஆளுநர் மற்றும் அவரது மன்றத்தைக்கொண்டு பரிபாலனம் செய்யப்படத்தக்க வகையில் பெரு முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கவில்லை. எனினும், பின்னர் வங்கத்திற்கென ஓர் ஆளுநரும், அவரைத் தலைமையாகக் கொண்ட ஒரு மன்றமும் அமைக்கப்பட்டது. 1661ஆம் ஆண்டுப் பட்ட யத்தின்படி நீதி பரிபாலனத்தை மேற்கொள்ளும் அதிகாரம் ஆளுநருக்கும் அவரது மன்றத்திற்கும் கொடுக்கப்பட்டது. ஒரு படைத்துறை முறை மன்றம் அமைக்கப்பட்டிருந்த போதிலும் அது முனைப்பாகவும், பயனுறுதி மிக்கதாகவும் வளர்ச்சியைப் பெற வில்லை. 1699ஆம் ஆண்டு வரை சூதனுதி என்னும் இடத்தில் கம்பெனியினர் தெளிவான நிலையில் செயல்படும் ஓர் அமைப்பைப் பெற்றிருந்தபோதிலும், செங்கடலில் கடற்கொள்ளைகளுக்குக் கம்பெனியின் வணிகக் கப்பல்கள் இரையாக வேண்டியிருந்ததால் அதன் சிறப்பு உரிமைகள் வங்கத்தில் செயல்படாமல் பேரரசரால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. அக் காலத்தில் குற்றங்களை விசாரிப்பதற்கெனக் கைதிகள் சென்னைக்கு அனுப்பப்பட்டனர்.

1699ஆம் ஆண்டின் முடிவில் நிலைமைகள் ஓரளவு சீரடைந்தவுடன் வங்காளம் ஒரு மாநிலமாக அமைக்கப்பட்டு, முழுமையான நீதி பரிபாலனத்தை மேற்கொள்ளும் வகையில் ஆளுநருக்கும் அவரது மன்றத்திற்கும் பூரண அதிகாரம் கொடுக்கப்பட்டது. 1704ஆம் ஆண்டில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு சிறு வழக்குகளை விசாரிப்பதற்கு என்று அமைக்கப்பட்டது. ஆனால், இக் குழு ஒழுங்காகச் செயல்படவில்லை.

நாம் முன்னரே அறிந்துள்ளதுபோல் கிழக்கிந்தியக் கம்பெனியினர் ஆரம்ப காலத்திலேயே சூதனுதி, கோவிந்த்பூர், கல்கத்தா ஆகிய மூன்று கிராமங்களைச் சுதேசி அரசரிடமிருந்து விலைக்குப் பெற்றிருந்தனர். கம்பெனியினர் இதன்மூலம் மேற்சொல்லப் பட்ட மூன்று கிராமங்களிலும் ஜமீன்தாரி உரிமையைப் பெற்றனர். எனவே, இந்த மூன்று கிராமங்களில் வசித்த இந்தியக் குடிமக்கள் கம்பெனியின் அதிகார எல்லைக்கு உட்பட்டிருந்தனர். அப்பொழுது வங்காளத்தில் நிலவிய ஆட்சிமுறைக்கு ஏற்ப ஜமீன்தாரி உரிமையைப் பெற்றிருந்த ஒருவர் கசையடி கொடுத்தல், அபராதம் விதித்தல், சிறைவைத்தல் போன்ற தண்டனைகள் கொடுக்கக் கூடிய குற்றவியல் அதிகாரத் தன்மையைப் பெருமளவில் பெற்றிருந்தார். இப்படிப்பட்ட ஜமீன்தாரி உரிமையைக் கிழக்கிந்தியக் கம்பெனி வங்கத்தில் பெற்றிருந்ததால், அதன் பயனாய் அமைந்திருந்த அதிகாரங்கள் யாவற்றையும் அது மேற்கொள்ளத் தவறவில்லை. ஆளுநர் மன்றத்தின் உறுப்பினர் ஒருவரின் தலைமையின்கீழ் ஜமீன்தாரி நீதிமன்றம், சிவில் மற்றும் குற்றவியல் காரியங்களைக் கவனிப்பதற்கு எனச் செயல்பட்டு வந்தது. 1752 முதல் 1756 வரை இந் நீதிமன்றத்தின் நடுவராக இருந்த ஹால்வெல் (Hollwell) கல்கத்தாவின் தண்டல் நாயகமாகவும் இருந்தார். இவர் ஒரு வரலாற்றுப் பேராசிரியரும் ஆவர். அவரது குறிப்பின்படி, 'ஜமீன்தாரி நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட நடைமுறை, வழக்குவகையில் விசாரணை முறையின்றி முடிவு செய்யப்பட்டு மொத்தத் தீர்வு வழங்குவதாய் இருந்தது. சொத்துகளைப் பற்றிய வழக்குகளில் வங்கத்தின் தலைவர் மற்றும் அவரது மன்றத்திற்கு மேல்முறையீட்டின்பேரில் ஜமீன்தாரி நீதிமன்றத்தின் தீர்ப்புகளை எடுத்துச்செல்ல வகை செய்யப்பட்டிருந்தது. ஜமீன்தாரி நீதிமன்றத்ினால் கொடுக்கப் பட்ட உடல்வலி அல்லது துன்பம் சார்ந்த தீர்ப்புகள் தலைவரால் (President) உறுதிப்படுத்தப்பட வேண்டும்.'[1] வங்காள நவாபிற்குப் பொதுவாக மேற்பார்வை செய்ய உரிமைகள்

[1] Quoted by A. B. Keith. Page 50.

கொடுக்கப்பட்டிருந்தன. மொகலாயப் பேரரசர் முகமதியர்களுக்கு எந் நீதிமன்றத்தாலும் தூக்குத் தண்டனை கொடுக்கப்படக் கூடாது என்று கட்டளை விதித்திருந்தார். இவைகளுக் கேற்பவே வங்கத்தில் நீதிபரிபாலன முறை அமைந்திருந்தது. ஜமீன்தாரி நீதிமன்றம், கச்சேரி நீதிமன்றமாகவும் இருந்தது. இந் நீதிமன்றம் ஐரோப்பியர்களுக்கும் ஐரோப்பிய வழிப்படி (descent) பிறந்திருந்த இந்தியர்களுக்குமிடையே எழுந்த வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரநிலை கச்சேரி நீதிமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்ததை நகரத்தந்தை நீதி மன்றம் வெகுவாக எதிர்க்கவும் தாக்கவும் செய்தது. இதனுல் 1758-ல் இரண்டு தனிப்பட்ட நீதி மன்றங்களை அமைக்கக் கம்பெனி உத்தரவிட்டது. அவற்றில் ஒன்று குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கு என ஆளுநர் மன்றத்தின் மூன்று உறுப்பினர்களை நடுவர்களாய்க் கொண்டு அமைக்கப்பட்டது. இந் நீதிமன்றம் இந்தியக் குடிமக்கள்மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை விசாரிக்க அனுமதிக்கப்பட்டு, அப்படி வழக்குகளை விசாரித்தபொழுது அதற்கு ஒரு ஜமீன்தாரி நீதிமன்றத்தின் அந்தஸ்தும் கொடுக்கப்பட்டது. இரண்டாவது நீதிமன்றம் சொத்துகளைப்பற்றிய சிவில் வழக்குகளை விசாரிப்பதற்கு எனக் கம்பெனியின் பணியாளர்களான ஐம்பது உறுப்பினர்களைக் கொண்டதாய் அமைக்கப்பட்டது. ஆனுல், இந் நீதிமன்றம் குறைந்தது இருபது ரூபாய் மதிப்பைப் பெற்றிருந்த வழக்குகளைத் தான் மேற்கொண்டது. நூறு ரூபாய்க்கு அதிகப்பட்ட நிலையில் ஒரு வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பை வங்கத்துத் தலைவருக்கும், அவரது மன்றத்திற்கும் மேல்முறையீடு செய்துகொள்ள வகை செய்யப்பட்டது. ஆனுல், மேற்கூறப்பட்ட விதிகள் மற்றும் ஏற்பாடுகள் காரணமாக, இந்திய வணிகர்களுக்கு மனநிறைவு உண்டாகவில்லை. மேற்கூறிய இவ் விரு நீதிமன்றங்களைத் தவிரத் தண்டல் நாயகத்தின் கச்சேரி (Collectors Cutchery) என்ற அமைப்பு ஒன்றும் நிறுவப்பட்டது. இந் நிறுவன அமைப்பின்மூலம் கம்பெனி, தண்டல் நாயகம் என்ற முறையில் நிலக் குத்தகைக்காரர்களிடமிருந்தும் குடியானவர்களிடமிருந்தும் நில வருவாயை, ஜமீன்தாருக்கு உரிய கட்டாய உரிமைகளுடன் வசூலித்துப் பரிபாலனம் செய்தது.

1726, 1753 ஆகிய ஆண்டுகளின் பட்டயங்களின்படி பம்பாயிலும் சென்னையிலும் இருந்ததைப்போல் காலாண்டுக்கால மீயுயர் நீதிமன்றம் (Court of quartersessions), நகரத்தந்தையின் நீதிமன்றம் (Mayors Court) ஆகியவையும் அமைக்கப்பட்டன. நகரத்தந்தையின் நீதிமன்றத்திற்குமேல் ஆளுநருடன் கூடிய ஆட்சி மன்றம் மேல்முறையீட்டு நீதிமன்றமாகவும் அமைக்கப்பட்டது.

மேற்சொல்லப்பட்ட செய்திகளுக்கு ஏற்ப நீதி பரிபாலன முறை வங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த போதிலும், அதில் இரு குறைகள் காணப்பட்டன. 18ஆம் நூற்ருண்டின் தொடக்க காலத்திலிருந்தே வங்கத்தில் வணிகம் மற்றும் அரசாங்கச் செயல்கள் பெருமளவிலான தேர்ச்சியைப் பெற்றிருந்தன. எனவே, இத் தேர்ச்சிக்கு ஏற்ப நீதி பரிபாலனத்தை மேற்கொள்ளப் பயிற்சி பெற்ற நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை. இந்தியர்களை நீதிபதிகளாக நியமிப்பதற்கு எந்த ஏற்பாடும் செய்யப்பட்டிருக்க வில்லை. இக் குறைபாடுகளை நிறைவு செய்யும் வகையில் மேற் சொல்லப்பட்ட இரு பட்டயங்களுக்கு ஏற்பக் குற்றவியல் நீதி மன்றங்களில் இந்தியர்களே ஜுூரர்களாக நியமிக்கப்படும் வழக்கம் புகுத்தப்பட்டது. ஆனுல், அவர்கள் இந்தியக் கிறித்தவர்களாக இருக்கவேண்டும் என்ற நியதி இருந்தது. இந் நியதி 1826ஆம் ஆண்டில்தான் நீக்கப்பட்டது. எனினும், இந்தியச் சட்டத்தைத் தழுவி இந்தியக் குடிகள் சம்பந்தப்பட்ட வழக்கில் தீர்ப்புகளை வழங்குவதில் சில குறைபாடுகள் இருக்கவே செய்தன. ஆனுல், அக் குறைபாடுகள் சென்னையிலும், பம்பாயிலும் இருந்ததைப்போல் கடினமானவையாய் இருக்கவில்லை. ஏனெனில், வங்கத்தைப் பொறுத்தவரை அங்கிருந்த ஜமீன்தாரி நீதிமன்றம் கூடுமானவரை இந்திய நாட்டுச் சட்டத்தையும், பிற வழக்காறுகளையும், மரபு களையும் உடன்வைத்தே தனது நடைமுறைகளுடன் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியது.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளுக் கொப்பவே கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆரம்ப காலக் குடியேற்றங்களான (settlements) பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களில் அரசாங்கத்தின் முப்பெரும் பணிவகைகள் 18ஆம் நூற்ருண்டின் பிற்பகுதி வரை மெற்கொள்ளப்பட்டிருந்தன. செயலாட்சி நிர்வாக அதிகாரம், மற்றும் கம்பெனியின் தலைமையிடத்து மூலக் கட்டளைகளுக்கு ஏற்ப துணைச்சட்டங்கள், கட்டளைகள், உத்தரவுகள் போன்றவற்றைப் பிறப்பிக்கும் சட்ட வகையான நிர்வாகம் ஆகியவை ஆளுநரிடமும் அவரது மன்றத்திடமும் இருந்தன. பொதுவாகத் தேவையான அளவுகளில் ஆளுநருக்கும் அவரது மன்றத்திற்கும் நீதிமுறையான அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. இவ் வதிகாரத்தில் நாம் கண்டுள்ள செய்திகளுக்கு ஏற்பப் பல வழிகளில், பல அமைப்பு களின்மூலம் நீதி பரிபாலனமுறை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், பேராசிரியர் டாட்வெல் கூறுவதுபோல், 'ஆங்கிலேயரின் ஆரம்ப காலக் குடியேற்றப் பிரதேசங்களில் எழுந்த நிர்வாக இடர்கள், நீதிப் பிரச்சினைகளைத் தழுவி எழுந்தவையாகவே இருந்தன. மேலும், பம்பாயிலும் சென்னையிலும் நீதி நிர்வாகத்

திற்கென ஆங்கிலேய அதிகாரிகளினுல் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் போதுமானவையாய் இருக்கவில்லை. கம்பெனியின் பணியாளர்களைப் பொறுத்தவரை, நீதி மன்றங்களினுல் மேற் கொள்ளப்பட்ட குற்றவியல் செயல்முறை மிகவும் விரிவானதாய் இருந்தது. இந்தியக் குடிமக்களைப் பொறுத்தவரை சென்னையிலும் கல்கத்தாவிலும் கம்பெனியின் நீதி பரிபாலனத்தின் அதிகாரப் பரப்பு வலுவான அடிப்படையைக் கொண்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை. எனினும், வங்கத்தைப் பொறுத்தவரை மொகலாயப் பேரரசரின் ஆட்சி அதிகார எல்லை பெரும்பகுதிகளில் நிலவியிருந்ததால் குழப்பநிலை இருந்தது. இக் குழப்பநிலை 1757ஆம் ஆண்டு வரை இருந்தது. பின்னர், மொகலாயர்களின் ஆதிக்கமும், அதிகாரமும் கல்கத்தாவிலிருந்து மறைந்து, அங்கிருந்த ஆங்கிலேய நீதிமன்றங்கள் சென்னையிலும், பம்பாயிலும் இருந்ததைப்போல் செயற்பாட்டை மேற்கொள்ளலாயின.'[1] பின்னர், இராபர்ட் கிளைவின் இரட்டை அரசாங்க முறையின் கீழும், வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் பல கவர்னர் ஜெனரல்களால் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின்கீழும், பலதரப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனிச் சட்டங்களின்கீழும், கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களின் ஆட்சி அமைப்புகளிலும் அரசாங்க முறையிலும் பல வகையான மாற்றங்கள் காலத்தின் தேவைகளுக்கும், நாட்டின் நிலவரங்களுக்கும் ஏற்பத் தேர்ச்சி யுடன் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் பயனுய் அமைந்த அரசாங்கம் மற்றும் ஆட்சி நிறுவனங்களே இன்றைய சுதந்திர இந்திய அரசாங்கத்தில் தேவையானவையும், குறிப்பிடத்தக்கவை யுமான சில மாற்றங்களைப் பெற்றுச் செயல்பட்டு வருகின்றன.

[1] Dodwell H. H., "Cambridge History of India"—Vol. V.

பிரிவு 2

கம்பெனி ஆட்சியின் தோற்றம், அதன் அரசியல், இறைமை ஆதிக்கம் ஆகியவற்றின் வளர்ச்சி

5. அரியாசனப் போர்களும் ஆங்கிலேயரின் ஆட்சிக்கான அடித்தளமும்

1600ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் கடைசிநாளன்று, இங்கிலாந்து நாட்டின் பேரரசி அனுமதித்த பட்டயத்தின்பேரில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி வணிக வர்த்தகச் செயல்களைக் கீழை நாடுகளுடன் மேற்கொள்ளு வதற்கு என அமைக்கப்பட்டது. இவ் வடிப்படைக் குறிக்கோளைத் தழுவிய நிலையில்தான் கிழக்கிந்தியக் கம்பெனி ஏறத்தாழ 250 ஆண்டுகள் தன் செயல்களை மேற்கொண்டது. இக் காலத்தில் தனது அடிப்படையான வணிகத் தன்மையை இழக்காமல், இடங்களைப் பிடித்து இறைமையைப் போற்றும் ஓர் இராணுவச் சக்தியாகவும் அல்லது அரசியல் அதிகார நிறுவனமாகவும் பேராவல் மிக்க திட்டங்களைக் கொள்ளாது செயல்பட்டது. இந்தியாவில், அடிப்படையாகத் தமது சாம்ராஜ்யத்தை உருவாக்கவேண்டும் என்ற அரசியல் பெருநோக்கு ஆங்கிலேயர் மனத்தில் 18ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில்தான் உதய மாயிற்று. இதற்கு இடைப்பட்ட காலத்தில் இங்கிலாந்து நாட்டிலும் இந்தியாவிலும் நிலவியிருந்த நிலவரங்கள், கிழக்

கிந்தியக் கம்பெனியை வணிகத்தைத் தவிர வேறெந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடச் செய்வதாய் அமைந்திருக்கவில்லை. 17ஆம் நூற்றுண்டிலேயே ஆசியக் கண்டத்தின், குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியலில் ஆங்கில நாட்டவர்கள் மாற்றங்களைத் தோற்றுவிக்கத் தக்க வலிமை, திறமை, அரசியல் தெளிவு, விஞ்ஞான அறிவு ஆகியவற்றில் தேர்ச்சியான முன்னேற்றத்தைப் பெற்றிருந்தனர் என்பதை மறுக்க முடியாது. மேலும், ஐரோப்பிய நாடுகளிலேயே இங்கிலாந்து தனது அரசியல் மற்றும் இராணுவப் பாரம்பரியத்தின் காரணமாகத் தனியானதோர் இடத்தைப் பெற்றிருந்தது. எனினும், இங்கிலாந்து நாட்டவர்கள் 18ஆம் நூற்றுண்டின் மையப் பகுதிவரை தமது அரசியல் ஆதிக்கத்தை இந்தியாவில் வேரூன்றச் செய்யும் நிலையில் இருக்கவில்லை. இதற்குத் தமது உள் நாட்டிலும், இந்தியா போன்ற பிற வெளி நாடுகளிலும் நிலவிய நிலவரங்கள் காரணமாகும்.

தமது உள்நாடான இங்கிலாந்தைப் பொறுத்தவரை ஸ்டூவர்ட் அரசர்களுக்கும், பாராளுமன்றத்திற்கும் இடையே நெடுங்காலமாய்ப் போட்டிகள் நிலவி வந்தன. நாட்டு மக்களின் அரசியல் ரீதியான ஆதரவு பாராளுமன்றத்தினிடம் இருந்தது. அரச நிறுவனத்திற்கும், மக்கள் ஆதரவுடன்கூடிய பாராளு மன்றத்திற்கும் இடையே நடந்த போராட்டம் மாண்புறு புரட்சியாக உருவெடுத்திருந்தது. அரசியல் நிறுவனத்திடமிருந்து அடிப்படையான அரசியல் மற்றும் அரசாங்க ஆட்சி அதிகாரங்கள் பாராளுமன்றத்திற்கு மாற்றப்படவேண்டும் என்ற நியதியை மையமாகக் கொண்டே அப் புரட்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது. முதலாம் ஜேம்ஸும் அவரது மகனும் உரோமானிய திருச்சபை (Roman Church) ஆதரவாளர்களாகவும், பற்றுளராகவும் இருந்தனர். இதனால், இவர்களது ஆட்சிக்காலம் மதச் சகிப்புத் தன்மையைப் போற்றவில்லை. ஸ்டூவர்ட் மன்னர்கள் தெய்வீக உரிமைக் கோட்பாட்டை (Divine right Theory) வலியுறுத்தித் தமது அரசியல், ஆட்சி அதிகார நிலையை உறுதிப்படுத்த முனைந்தனர். ஆனல், மக்களோ கண்மூடித்தனமான தெய்விக அரச உரிமைக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கவில்லை. மாறுக, அவர்கள் தமது அரச நிறுவனம், நாட்டின் அரசாங்கம் ஆகியவற்றின் அடிப்படையாக, தெய்விக உரிமைக் கோட்பாட்டிற்குப் பதிலாகப் பாராளுமன்றத்தின் உரிமைச் சான்றே அமையவேண்டும் என்று கோரினர். 1641-ல் தொடங்கிய மத அரசியல் சச்சரவுகள் உள்நாட்டுப் போராக வெடித்து, ஐந்து ஆண்டுகள் நாட்டையே அலைக்கழித்தது. இப் போரின் முடிவாகக் கிராம்வெல்லின் சர்வதிகார அரசு அமைக்கப்

பட்டது. எனினும், அரச நிறுவனத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே நடந்த உச்ச அதிகாரப் போட்டி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வண்ணமே இருந்தது. இப் போராட்டம் விக்குக் கட்சியினர் செல்வாக்கைப் பெற்றிருந்தபொழுது மேலும் வலுப்பெற்றது. வலுவூட்டப்பெற்ற இப் போராட்டம் நெடுங்காலம் நடந்தவண்ணம் இருந்தது. மக்களது விருப்பத்தின் அடிப்படையில் அமைக்கப்பெறும் பாராளுமன்றம் இறைமை மற்றும் ஆட்சி அதிகாரத்தை இருப்பிடமாய்க் கொண்டதாகவே இங்கிலாந்து நாட்டின் அரசாங்க அமைப்புமுறை இருக்கவேண்டுமென்று விக்குக் கட்சியினர் போராடினர். இப்படி 16, 17ஆம் நூற்றுண்டுகளில் அரச் நிறுவனத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்ததாலும், உள்நாட்டு அரசியலில் குழப்பங்கள் மிகுந்திருந்ததாலும் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் நாடு பிடிக்கும் கொள்கையைத் தொடக்க காலத்தில் மேற்கொள்ள முடியவில்லை.

கிழக்கிந்தியக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டபின், முதல் 150 ஆண்டுகள்வரை அதனால் இந்தியாவில் வென்று இடம் பிடித்து இறைமை கொள்ளக்கூடிய ஆதிக்கச் செயல்களை மேற்கொள்ள முடியவில்லை. ஏனெனில், அதற்கான தூண்டுதலையும் வளஆதாரங்களையும் பெறமுடியாத வண்ணம், இங்கிலாந்து நாட்டில் அரசியல் சச்சரவுகள் நடைபெற்றன. எனினும், கிழக்கிந்தியக் கம்பெனி பொருளாதார வளர்ச்சியையும் வர்த்தகப் பெருலாபத்தையும் நுகருவதில் அவை தடையாய் இருக்கவில்லை. சர் ஜொசையா சைல்ட், சர் ஜான் சைல்ட் ஆகிய இருவரின் சிறப்பான உழைப்பின் காரணமாகக் கம்பெனியின் நிதி நிலைமை வலிமையாய் அமைந்திருந்தது. இங்கிலாந்தில் மாண்புறு புரட்சி முடிவுற்றிருந்த சமயத்தில், கிழக்கிந்தியக் கம்பெனியின் செல்வ நிலை சிறப்பானதாய் அமைந்திருந்தது. இச் சிறப்பு நிலையின் பயனாக ஆறு கோடி மக்களைப் பெற்றிருந்த இங்கிலாந்து தேசத்தில், குறைந்தது ஒரு கோடியினரேனும் இலண்டன் மாநகரில் குடியேறி யிருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் வணிகத்தைத் தமது வாழ்க்கைத் தொழிலாக ஏற்றுக்கொண்டிருந்தனர். இவர்கள், 17ஆம் நூற்றுண்டில் டச்சுக்காரர்கள் வெகு விரைவாகப் பெற்றிருந்த அதிகாரம் மற்றும் செல்வாக்கைக் கண்டு, தாமும் அந் நிலையை அடையவேண்டும் என்ற விழைவைக் கொண்டனர். 1688-ல் நடந்த மாண்புறு புரட்சியும், 1707-ல் ஸ்காட்லாந்து நாடு இங்கிலாந்தோடு இணைக்கப்பட்டதுமாகிய இரு நிகழ்ச்சிகள் இங்கிலாந்து நாட்டின் அரசியல், பொருளாதார வரலாற்றில் திருப்புமுனைகளாக அமைந்து, அதன் பொருளா

தாரத்தை நிலையானதாகவும் விரைவாக வளரும்படியாகவும் செய்தன.

மேலும், 1609ஆம் ஆண்டிலேயே ஆம்ஸ்டர்டாம் வங்கி ஹாலந்தில் அமைக்கப்பட்டிருந்தது. அவ் வங்கி நூருண்டுக் காலத்திற்குள்ளாகப் பெரும் மூலதனத்தைப் பெற்று, வணிகச் செயல்களைக் கடல் கடந்த நாடுகளிலும்கூட மேற்கொள்ள விழைந்த டச்சுக்காரர்களுக்குத் தேவையான கடனையும் நிதி உதவிகளையும் கொடுக்கக்கூடிய நிலையில் வளர்ச்சியைப் பெற்றிருந்தது. இதனைக் கண்டு, அதன் சிறப்பையும் பயன்பாட்டையும் உணர்ந்த இங்கிலாந்து அரசு 17ஆம் நூற்ருண்டின் இறுதியில் இங்கிலாந்தின் பெரு வங்கியை ஸ்தாபித்தது. இதனேடு தொழிற் புரட்சியும் இங்கிலாந்து நாட்டுப் பொருளாதார நிலையை வளமுள்ளதாக்கியது. மேற்சொல்லப்பட்ட காரணங்களால் நெப்போலியனுடன் எதிர்த்துச் சண்டையிடக்கூடிய நிதி நிலையைப் பெறும் அளவிற்கு இங்கிலாந்து நாட்டின் பொருளாதார நிலை வலுவுற்றிருந்தது. அவ் வலிமையின் இருப்பிடமாக இருந்தது இலண்டன் மாநகரமாகும். இலண்டன் மாநகரில் இருந்த வணிகர்களும் கடல் வணிகத் திறமையாளர்களும் கொடுத்த ஆதரவின் காரணமாகவே கிழக்கிந்தியக் கம்பெனி 18ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும் அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் பிற ஐரோப்பியப் போட்டியாளர்களை மட்டுமன்றி, இந்திய எதிர்ப்பாளர்களையும் முறியடித்து வெற்றிகளைக் குவிக்க முடிந்தது.

எனினும், கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் பெற்றிருந்த ஆரம்ப கால வளர்ச்சியும் பயனும் வெளி உலகம் அறியும் வகையில் இருக்கவில்லை. ஆனல், ஆண்டுகள் செல்லச் செல்லத்தான் கம்பெனியின் இந்திய வர்த்தகமும் அதன் பலன்களும் வெகுவாகப் பெருகின. தான் இந்தியாவில் செயல்பட்ட முதல் 70ஆண்டுகளில் கிழக்கிந்தியக் கம்பெனி சர் தாமஸ்ரோ மதிப்புலத்துடன் காட்டியிருந்த எச்சரிக்கையைப் பின்பற்றி ஏகாதிபத்திய மற்ற தூய்மையான வர்த்தகக் கொள்கையுடன் செயல்பட்டது; இக் கொள்கைக்கு ஏற்பவே இந்தியாவில் தமது வர்த்தகச் செயல்களையும், ஈடுபாடுகளையும் சூரத், பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய துறைமுக நகரங்களிலிருந்து மேற்கொண்டது. இவற்றில் பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய நகரங்களே பின்னர்ப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அரசியல் ஆட்சி நிலையங்களாக மாறின. மேற்கூறிய நான்கு வணிகக் குடியேற்றங்களைத் தவிர காம்பே, புரோச், பரோடா, அகமதாபாத், ஆக்ரா, கள்ளிக் கோட்டை, தெல்லிச்சேரி, இராசப்பூர், கார்வார் ஆகிய இடங்

களிலும் கிழக்கிந்தியக் கம்பெனி தன் துணைக் குடியேற்றங்களையும் வணிக ஸ்தாபனங்களையும் பெற்றிருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனி வங்கத்தில் பாட்னு, டாக்கா, காஸிம்பஜார், பாலாஸோர், ஹூக்ளி ஆகிய இடங்களில் தமது முக்கியத் துணை வணிகத் தொழிற்சாலைகளைப் பெற்றிருந்தது. தென்புலத்தில், 17ஆம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில் ஆங்கிலேயர்களின் வணிகத்திற்கு மசூலிப்பட்டினம் மைய இடமாய் இருந்தது. ஆனல், ஆங்கிலேயரின் கடற்கரை நகரமான மசூலிப்பட்டினம் பின்னர்ச் செல்வாக்கை இழந்தது. ஏனெனில் கிழக்கிந்தியக் கம்பெனி 1640-ல் சென்னைத் துறைமுகப் பட்டினத்தைப் பெற்று அங்குப் புனித ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டது. இதனுல் கிழக்கிந்தியக் கம்பெனியினர் தென்னிந்தியாவைப் பொறுத்தவரை சென்னையைத் தமது நடவடிக்கைகளின் தலைமைக் கேந்திரமாகக் கொண்டனர். மேற்குக் கடற்கரையில் 1685ஆம் ஆண்டுவரை சூரத்தும், பின்னர்ப் பம்பாய்த் தீவும் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை இடமாக விளங்கின. இதனுல், சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று முக்கிய முனைகளை கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றிருந்தது.

இந்தியா இயற்கை வளமும் செல்வச் சிறப்பும் மிக்க நாடு. அதன் ஒரு பகுதியாகிய வங்கமோ அதிக செல்வச் செழிப்பைக் கொண்டதாக இருந்தது. இவ் வங்கத்திலும் ஆங்கிலக் கம்பெனியினர் தமது வணிகச் செல்வாக்கைத் தக்க முறையில் தங்க வைத்துக் கொண்டனர். அப்பொழுது மொகலாயப் பேரரசின் செல்வ நிலையும் பொருளாதார நிலையும் திருப்திகரமாய் இருக்கவில்லை. மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப் தக்காணப் போர்களை மேற்கொள்ளத் தேவையான செல்வத்தை வங்கத்திலிருந்தே பெற வேண்டியிருந்ததால், அதன் இயற்கைச் செல்வம் பெரிதும் செலவழிக்கப்பட்டது. பச்சை மரமாக இருந்த வங்காளம், ஔரங்கசீப் பின் இறுதிக் காலத்தில் பசையற்ற மரமாக இருந்தது. இங்குத்தான் தமது ஆசையை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் ஆங்கிலேயர் அரசியல் நடவடிக்கைகளையும் போர் நடவடிக்கைகளையும் விரைவில் மேற்கொள்ள வேண்டியிருந்தது. பிற்காலத்தில், குறிப்பாக 18, 19ஆம் நூற்றுண்டுகளில், ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கத்திற்கான இந்தியக் கோட்டையாக வங்காளம் அமைய இருந்தது. 1650-ல் கேப்ரியல் ப்ரௌட்டன் என்னும் மருத்துவர் மொகலாயச் சுபேதாருக்கு மருத்துவம் செய்து, மதிப்பு மிக்க சில வணிகச் சலுகைகளைப் பெற்றிருந்த செயல், ஆங்கிலேயருக்கு வங்கத்தில் வலுவாகக் காலூன்றுவதற்குத் துணை புரிந்தது. 1651ஆம் ஆண்டிலேயே ஹூக்ளியில்

கம்பெனியின் வணிக ஸ்தாபனம் அமைக்கப்பட்டிருந்தது. பின்னர், ஏழாண்டுகள் கழித்துக் கிழக்கிந்தியக் கம்பெனி சோழ மண்டலக் கடற்கரையிலிருந்த எல்லா வணிகக் குடியேற்றங் களையும் புனித ஜார்ஜ் கோட்டையின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தது. வங்கத்தைப் பொறுத்தவரை 1687-ல் கம்பெனியின் வர்த்தகத் தலைமையிடம் ஹுக்ளியிலிருந்து கல்கத்தா விற்கு மாற்றப்பட்டது. இதனால், ஆண்டொன்றுக்கு 8000 பவுன் களாக இருந்த கம்பெனியின் வங்கத்து வணிக இலாபம் 3,00,000 பவுன்களாக உயர்ந்தது. இப்படிப் பம்பாய், சென்னை, வங்காளம் ஆகிய மூன்று இடங்களில் ஆங்கிலக் கம்பெனியினர் செய்த வர்த்தகச் செயல்களின் விரிவாக்கத்தின் பயனாக 1622ஆம் ஆண்டிலேயே 3,56,288 பவுன் மதிப்புள்ள பொருள்கள் இங்கிலாந்தில் 1,914,600 பவுன்களுக்கு விற்கப்பட்டன. இப் பெரும் இலாபம் கிடைக்கப்பெறக் காரணம் ஆங்கிலேயர் இந்தியா வில் தமது வணிக முற்றுரிமையை நிலைநிறுத்தியிருந்ததே யாகும். இங்கிலாந்திலிருந்த தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருள்களைக் குறைந்த விலையில் இந்தியாவிலிருந்து பெற்று, அவற்றின்மூலம் மக்களுக்குத் தேவையான நுகர்வுப்பொருள் களைத் தயாரித்து விற்றுக் கிழக்கிந்தியக் கம்பெனி அதிக இலாபத்தைப் பெற்றது. இதனால் 1680ஆம் ஆண்டிலேயே கம்பெனியின் மூலதனமும் பங்குதாரர்களின் எண்ணிக்கையும் மிகவும் அதிகரித்தன. இதனால், '1708-ல் 500 ஆயிரம் பவுன் களாக இருந்த கம்பெனியின் இறக்குமதிப் பொருள்களின் மதிப்பு 1748-ல் 1,100,000 பவுன்களாக உயர்ந்தது. அதே நேரத்தில், 1710-ல் 5,76,000 பவுன்களாக இருந்த அதன் ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பு நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் 1,121,000 பவுன்களாக உயர்ந்தது.'[1] இப்படி இறக்குமதி, ஏற்றுமதி என்று இரு வழிகளிலும் கொள்ளை இலாபத்தை அள்ளிக் கொடுத்தது இந்தியாவில் ஆங்கிலேயர் கொண்ட ஆரம்ப கால வர்த்தகம்! 'பணமில்லையேல் பலமில்லை', 'பணமிருந்தால் பத்தும் செய்யலாம்' என்ற பழமொழிகளுக்கு ஏற்ப ஆங்கிலேயர் செல்வச் செழிப்புடன்கூடிய பணபலத்தைப் பெற்றிருந்தனர்; படை பலத்தையும் பெற்றிருந்தனர்; தேவையான சமயங்களில் தேவையானவர்களோடு போரிட்டு வெற்றிகாண மனபலத்தையும் பெற்றிருந்தனர்.

மேற்சொல்லப்பட்ட நிலையில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பொருளீட்டம் அமைந்திருந்ததால், அதன்

[1] Dodwell. The Cambridge History of India Volume v. p. 108.

இயக்குநர்கள் இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் வகையில் கனவுகளையும் பேராசைகளையும் வளர்த்துக்கொண்டதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுநராகவும் இலண்டனிலிருந்த அதன் இயக்குநர்கள் குழுவின் தலைவராகவும் இருந்த சர் ஜொசையா சைல்ட் ஏகாதிபத்தியக் கொள்கையின் ஆதரவாளராக இருந்தார். அவருக்குக் கம்பெனியின் இயக்குநர்கள் குழுவினிடத்தில் பெருத்த செல்வாக்கும் இருந்தது. அவர் கடுமையான உழைப்பாளியாகவும் நிர்வாகத் திறமை மிக்கவராகவும் இருந்தார். ஆனால், ஒழுக்க நியதிகளுக்கு அவரது அகராதியில் இடமும் பொருளும் இல்லாமலிருந்தன. அவரது ஆலோசனைக்கு ஏற்பக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை நிர்வாக நிறுவனம் பின்வரும் கொள்கையைத் தயாரித்து, அதனை 1687-ஆம் ஆண்டில் இந்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தது. அதன்படி எதிர்காலம் முழுவதிலும் இந்தியாவில் ஆங்கிலேய டொமினியனை (Dominian) உருவாக்கும் வகையில், ஆழமானதும் அகலமானதுமான அடித்தளத்தை நாட்டி, அங்குச் சிவில் மற்றும் இராணுவ அதிகாரத்துடன் கூடிய அரசியலமைப்பை (polity) ஏற்படுத்தி, அதன் மூலம் திரண்ட வருவாயைப் பெறவேண்டியதே கிழக்கிந்தியக் கம்பெனியின் கொள்கையாகும் என்று அறிவிக்கப்பட்டது. எனவே, கிழக்கிந்தியக் கம்பெனி அரசியல் தலையீடுகளை மேற்கொள்ள இந்தியப் பிரதேசங்களில் தக்க தருணத்தை எதிர்பார்த்தவண்ணம் இருந்தது என்பதில் ஐயமில்லை.

இந்தியாவில் கம்பெனியினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கை, சர் ஜொசையா சைல்டின் சகோதரரான சர் ஜான் சைல்ட் அவர்களால் புகுத்தப்பட்டது. இதனை நிறைவேற்ற, அவ்விரு சகோதரர்களும் தத்தம் பதவிக் காலங்களில் நேர்மையற்ற நிர்வாகத்தை மேற்கொள்ளத் தவறவில்லை. சர் ஜான் சைல்ட் தனிப்பட்ட முறையில் நல்லவராய் இருந்தபோதிலும் கிழக்கிந்தியக் கம்பெனியின் நியதியற்ற கொள்கை அறிவிப்பின் காரணமாக, நேர்மையற்ற நிர்வாகத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று. மேலும், அவர் இந்தியாவிலிருந்த தனது நாட்டு மக்களான உரிமையற்ற வணிகர்களை (Interlopers) ஆட்சியாளர்களாக உயர்த்தவேண்டும் என்று ஆவல் கொண்டார். இதனால் மொகலாய அரசாங்கத்திற்கு எதிரான சூழ்ச்சியும் உரிமைப் பறிப்பும் சார்ந்த செயல்களைத் தூண்டிவிட்டார். இதனால் கிழக்கிந்தியக் கம்பெனியினர் பெற்ற பலன் பரிதாபத்திற்குரியதாக இருந்தது. ஏனெனில், கொள்ளை மற்றும் சதிச்செயல்களில் ஆங்கிலேயர் ஈடுபட்டிருந்த காரணத்தால் ஔரங்கசீப்

தமது ஆளுகைக்கு உட்பட்டிருந்த இந்திய நாட்டில் அமைக்கப் பட்டிருந்த வணிகச் சாலைகளைப் பறித்தார். அப்பொழுது கம்பெனியின் படையினர் ஔரங்கசீப்பின் படைபலத்திற்கு எதிராகச் சமாளித்து நிற்கமுடியவில்லை. இதனால், ஆங்கிலேயர் வங்கத்தில் குறைந்தது ஐம்பதாண்டுக் காலத்திற்கேனும் தமது முனைப்பான வணிகத்தை மேற்கொள்ள முடியாமல், தமது கனவுக் கோட்டை தகர்த்து எறியப்பட்டதைக் கண்டனர். இதற்குக் காரணம், உரிமையற்ற வணிகர்கள் இறைமை செலுத்த நினைத்து, வணிகத்துடன்கூடிய போர்க் கொள்கையைக் கிழக் கிந்தியக் கம்பெனி வகுத்ததும், ஜான் சைல்ட்டினால் மேற்கொள்ளப் பட்ட நேர்மையற்ற செயல்களுமேயாகும். இதனால் 416 ஆயிரம் பவுன்கள் மதிப்புள்ள இழப்பையும் கம்பெனி அடைந்தது. வலுச்சண்டைக்குச் செல்வதாக ஜொசையாவும் ஜானும் கொள்கைச் செயல்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டதினாலும், இங்கிலாந்து நட்டின் அரச நிறுவனம் அதனை விரும்பாததாலும், கம்பெனியின் அதிகாரிகள் பொறுப்பில்லாத நிலையில் நடந்து கொண்டதாலும் இத்தகைய அவலமானதோர் நிலை ஆங்கிலே யருக்கு இந்தியாவில் ஏற்பட்டது.

நேர்மையற்ற ஒரு கொள்கையை, நேர்மையற்ற வழிகளில், கம்பெனியின் பணியாளர்கள் இங்கு மேற்கொண்டதற்கு வேறு சில காரணங்களும் இருந்தன. முன்னொரு இடத்தில் கூறியது போன்று கம்பெனியின் பணியாளர்களுக்கு மிகக் குறைவான ஊதியங்கள் கொடுக்கப்பட்டன. தனிப்பட்ட முறையில் தடை யற்ற வர்த்தகம் செய்துகொள்வதற்கு அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருந்தன. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை கம்பெனியின் பணியாளர்களுடைய நடவடிக்கைகள் சுயநலத்தின் அடிப்படையிலும், கொள்ளை இலாபம் பெறும் நோக்கத்திலும், கம்பெனியின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலும் அமைந் திருந்தன. ஆனால், 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கம்பெனியின் அதிகாரிகள் தமது சுயபொறுப்பின்கீழ்த் தடையற்ற சுதந்திரத்துடன் வியாபாரம் செய்துகொண்டிருந்ததாலும், அவர்கள் இங்கு அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு இருந் ததாலும், கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆரம்பகால அடிப்படைக் கொள்கைக்கு ஆபத்து ஏற்பட்டதைக் கம்பெனியின் உயர்மட்ட அதிகாரிகள் பின்னர் உணர்ந்து செயல்படலாயினர். இதனால், பிளாசிப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் கம்பெனியினர், பேரின்ப வாழ்க்கைப் பெருஞ் செல்வர்களாக (Nabobs) மாறினர்.

இப்படிப்பட்ட கொள்ளையர்களாக, வெள்ளையர்கள் 17ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தமது செயல்களை மேற்கொண்டிருந்

தனர். ஆங்கிலேயரின் பணபலம், படைபலம், கடலாதிக்கம், வஞ்சித்து ஏமாற்றும் சூழ்ச்சித் திறம், இந்திய மக்கள் உறுதியுடன் ஒன்றுபட்டு எதிர்த்துப் போராடும் தன்மை யற்றிருந்த நிலை ஆகிய வற்றால் நமது நாட்டைவிட இருபது மடங்கு குறைவான நிலப் பரப்பைப் பெற்றிருந்த பிரிட்டன் இந் நாட்டை ஆளமுடிந்தது போலும்! ஆனால், நாடு திரண்டு அந்நியர்களை எதிர்க்க முடியாத நிலையில் இந்தியர்கள் ஒருங்கிணைந்த சக்தியாகத் தோன்ற முடியாமல் போனதற்குப் பின் வருபவை சில காரணங்களாக அமைந்திருந்தன. எனவேதான் ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கம், ஆட்டம் கொடுக்காத அடித்தளத்தைப் பெறமுடிந்தது.

இந்தியாவில் தமது ஆதிக்கத்தை அமைப்பதற்குமுன் ஆங்கிலேயர், அப்பொழுது இங்கிருந்த ஃபிரெஞ்சுக்காரர்களோடு மட்டுமன்றி. இரு வகையான இந்தியச் சுதேசி சக்திகளுடனும் போரிட வேண்டியிருந்தது. ஹைதர்அலி, திப்புசுல்தான் ஆகிய இருவரைத் தவிர, முஸ்லிம் அரசுகள் ஆங்கிலேயரின் ஆதிக்க விரிவை எதிர்த்தபோதிலும் அவ் வெதிர்ப்பு வலிமை யற்றதாகவும் பயனுறுதி யற்றதாகவும் இருந்தது. வழித்தோன்றல் அரசுகள் (Succession States) எனும் அரசியல் அந்தஸ்தைப் பெற்றிருந்த நிலையில் ஹைதராபாத், வங்காளம், அயோத்தி ஆகிய முஸ்லிம் சிற்றரசுகள் இருந்தன. இவை இறைமையைப் பெற்றுச் சுதந்திர மாக இயங்கிய நிலை போலியானதாக இருந்தது. பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்துடன் அரசியல் முறையான உறவுகளையும் சிக்கல் களையும் கொண்டவையாய் ஹைதராபாத்தும், வங்காளமும் இருந்தன. இவ் விரு சிற்றரசுகளும் பெற்றிருந்த இராணுவ பலம் வலிமை பெற்றதாகவும் சிறப்பானதாகவும் இருக்கவில்லை. ஆனால், இவ் விரு அரசுகளும், தம்மைச் சுற்றியிருந்த பல சிற்றரசு களின் ஆதரவினாலும் அவர்களது நட்புக் கொள்கையாலுமே தொடர்ந்து நிலைத்திருந்தன. எனினும், வங்காளம் எப்பொழுதுமே ஊக்கம் மிக்கதாகவும், கிளர்ச்சியுள்ளதாகவும் இருந்து வந்தது. ஏனெனில், அங்கு அரியாசனப் போர்கள் அடிக்கடி நிகழ்ந்த வண்ணம் இருந்தன. ஆனால், இப்படிப்பட்ட ஒரு கிளர்ச்சி மிக்க நிலை அங்கு அந்நியர்கள் அரசியல் தலையீட்டை மேற்கொண்டு நிலையாகத் தங்கிவிடுவதற்கு வழிசெய்தது என்பதை நாம் இங்குக் கவனத்தில் கொள்ளவேண்டும். மொகலாயப் பேரரசின் சரிவிற்குப் பிறகு இந்திய நாட்டின் இறைமையைப் பெறுவதற்குப் பிரிட்டிஷ் காரர்கள் மராத்தியர்களுடனும் பின்னர்ச் சீக்கியர்களுடனும் பெரிதும் போரிட வேண்டியிருந்தது. மொகலாய அரசுகள் ஆங்கிலேயருக்கு எதிராகக் காட்டிய எதிர்ப்பு, முனைப்பற்றதாக இருந்தது. இவ்வாறு வட புலத்தில் இறைமைப் போட்டி நடந்தது.

இந்தியாவின் தென் புலத்தைப் பொறுத்தவரை ஆங்கிலேயர்கள் சென்னையில் புனித ஜார்ஜ் கோட்டையைக் கட்டித் தமது வணிகக் குடியேற்றத்தை அங்கு அமைத்திருந்தனர். இஃது எதிர்பாராத வகையில் நடந்ததன்று. இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்களின் ஆட்சி அமைவதற்கு என நல்லதோர் அடித்தளத்தை நாட்டிய செயலாகவே அமைந்தது. 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிந்தியப் பேரரசான விசயநகர சாம்ராஜ்யம் அழிவுற்றது. இதனால், தென்னிந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்களுக்கு இடையூறு எழவில்லை. விசயநகரப் பேரரசு வீழ்ந்தபின், தென்னிந்திய இறைமையைப் பெறும் வகையில் சிறு சிறு இந்து குறுநில அரசுகள் (Principalities) போட்டியிட்டன. அவற்றில் முக்கியமானவை மைசூர், திருவாங்கூர், கொச்சி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய குறுநில அரசுகளாகும். ஆனால், அக் குறுநில அரசுகள் மேற்கொண்ட போட்டிகள் யாவும் எப் பலனையும் அவற்றிற்குக் கொடுக்கவில்லை. இக் குறுநில அரசுகளிடையே இருந்த போட்டியின் காரணமாக மொகலாய அரசாங்கத்தின் பிரதிநிதியாகவும் அதிகாரியாகவும் இருந்த கர்நாடக நவாபு தென்னிந்தியாவில், ஆற்காட்டைத் தலைமை யிடமாகக் கொண்டு, தமது ஆதிக்கத்தை நிறுவுவதற்கு அருமையான வாய்ப்பைப் பெற்றார். ஆற்காட்டு நவாபின் உள்ளக்கிடக்கையும் ஆவலும் நிறைவேறும் வகையில், 1707-ல் ஔரங்கசீப் இறந்தபின், தலைநகரில் நடந்த குழப்பமான ஏகாதிபத்திய நடவடிக்கைகள் அவருக்கு ஊக்கத்தைக் கொடுத்தன. எனினும், ஆற்காட்டு நவாபு ஹைதராபாத் நிஜாமாக இருந்த நிஜாம்-உல்-முல்க்கின் மேலாட்சி உரிமைகளுக்கு அடிபணிந்த நிலையிலேயே இருந்தார். ஹைதராபாத் நிஜாம் மொகலாயப் பேரரசின் இறைமை பெற்ற அதிகாரியாகவே இருந்தார். இதனால், ஹைதராபாத் நிஜாமும் ஆற்காட்டு நவாபும் தென்னிந்திய இறைமையைப் பெறுவதில் விழிப்புடன் இருந்தனர். ஆனால், அவர்களுடைய இந்த எண்ணம் நடைமுறைக்கு ஒவ்வாதது என்பதை 1740-ல் மராத்தியர்கள் தென்னிந்தியாவின்மீது மேற்கொண்ட படையெடுப்பு எடுத்துக் காட்டியது. 1740ஆம் ஆண்டு மேத்திங்கள் மராத்தியர்கள் நவாபைப் போரிட்டு வென்று, அவருடைய மகனையும் திறமை வாய்ந்த பல தளபதிகளையும் போர்க்களத்தில் கொன்று குவித்தனர். நிஜாம்-உல்-முல்க்கின் மருமகனான ஹுசைன் தோஸ்த்கான் என்பவர் மட்டும் போர்க்களத்திலிருந்து தப்பித்துப் பின்னர் மராத்தியர்களால் சிறைபிடிக்கப்பட்டார். இவரே இந்திய வரலாற்றில் சந்தாசாகிப் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றவராக அறியக்கிடக்கின்றார். இந் நிகழ்ச்சி ஹைதராபாத், தென்னிந்திய அரசுகளின் இறைமைக்கு ஊறு விளைவிக்கும் வகையில்

அமைந்திருந்தது. எனினும், மராத்தியர்கள் தென்னிந்தியாவில் தங்களது ஆதிக்க நிலையைத் திரட்டி நிலைநிறுத்தத் தவறிவிட்டனர். எனவேதான், உடன்படிக்கையை செய்துகொண்ட நிலையில் மராத்தியர்கள் ஹைதராபாத் நிஜாமை, மேற்கொண்டு ஆள அனுமதித்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நிலவியிருந்த சமயத்தில்தான் ஆங்கிலேயர்களும் ஃபிரெஞ்சுக்காரர்களும் வணிக நிலையங்களை நிறுவி வர்த்தக முற்றுரிமையையும், இட உரிமையுடன் கூடிய இறைமையையும் இந் நாட்டில் நிலை நிறுத்துவதில் தம்முள் போட்டிகளை மேற்கொண்டனர்.

ஆங்கிலேயருக்கும் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் நடந்த வர்த்தக முற்றுரிமைப் போட்டிகள் பகைமை உணர்ச்சியுடன் மேற்கொள்ளப்பட்டு வந்தபொழுது 1748-ல் ஹைதராபாத் நிஜாம் இறந்தார். நிஜாமின் இறப்பு தென்னிந்தியாவில் இரு அரியாசனப் போர்கள் அல்லது வாரிசுரிமைப் போர்கள் நடைபெறுமாறு செய்தது. இவ் வரியாசனப் போர்களில் ஆங்கிலேயர்களும் ஃபிரெஞ்சுக்காரர் காரர்களும் தம் சுயநலம் கருதி உரிய பங்கினைப் பெற்றனர். உள் நாட்டில் நடந்த வாரிசுரிமைப் போர்களில் தலையிட்டு வெற்றிகாண அந்நியர்கள் விழைந்தது வணிக முற்றுரிமையை இங்கு உறுதிப் படுத்திக்கொள்ளவேண்டும் என்பதற்காக ஆகும். ஆனால், இப் போர்களில் அவர்கள் தலையிட்டதன்மூலம் தம்மையும் அறியாத நிலையில் இந்திய இறைமையைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இந்த வகையில்தான் மூன்று கர்நாடகப் போர்களும் பிளாசி மற்றும் பக்ஸார் போர்களும் அரசியல் ரீதியான முக்கியத் துவத்தைப் பெறுகின்றன. எனினும், ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆரம்ப காலத்தில் கடலாதிக்கப் போர்க்கொள்கையை மேற்கொண்டிருக்கவில்லை. 1720-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி அத்தகைய நடவடிக்கைகளில் முனைப்பாக ஈடுபட்டது. 1664-ல் ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் ஆணைப்படி அமைக்கப்பட்ட ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி 1674-ல் பாண்டிச்சேரி, 1725-ல் மாஹி, 1739-ல் காரைக்கால் ஆகிய தென்னிந்தியப் பிரதேசங்களிலும், 1691-ல் சந்திரநாகூரிலும் தமது வணிகக் குடியேற்றங்களையும் உடைமைகளையும் நிறுவினர். 1681 முதல் 1706 வரை ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய ஆளுநராக மார்ட்டின் என்பவர் இருந்தார். இவரது திறமை மிக்க நிர்வாகத்தின் பயனாய்ப் பாண்டிச்சேரி ஃபிரெஞ்சு இந்தியாவின் தலைநகராக ஆக்கப்பட்டது. மேலும் மார்ட்டினால் இது 20,000 மக்களைக் கொண்டதாகப் பெரியதொரு நகரமாகவும் அமைக்கப்பட்டது. பாண்டிச்சேரியைத் தலைமை இடமாகவும் மூலத்தளமாகவும் (base) கொண்டு ஃபிரெஞ்சுக்

காரர்கள் தங்கள் இந்திய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். டியூப்ளே (Dupleix) 1742-ல் புதுச்சேரியில் ஃபிரெஞ்சு ஆளுநராக வருவதற்கு முன், ஃபிரெஞ்சுக் கம்பெனி பெரும் இலாபத்தை வணிகத்தின்மூலம் பெற்றிருந்தது. ஃபிரெஞ்சுக் காரர்கள் பெற்றிருந்த ஏற்றமிகு வர்த்தக நிலையைப்பற்றிப் பேராசிரியர் டாட்வெல் பின்வருமாறு கூறுகிறார். '1728-ஆம் ஆண்டிற்கும் 1740-ஆம் ஆண்டிற்கும் இடையிலான பன்னிரு ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து ஃபிரெஞ்சுக்காரர்கள் ஏற்றுமதி செய்த பொருள்களின் மதிப்பு 89 ஆயிரம் பவுன்களிலிருந்து 880 ஆயிரம் பவுன்களாகச் சுமார் பத்து மடங்கு உயர்ந்தது. அதே நேரத்தில் பிரிட்டனின் வர்த்தகப் பரிமாற்றமும் மிகப் பெரிதாகவே இருந்தது. 1740-ல் இந் நாட்டிலிருந்து ஆங்கிலேயர் பெற்றிருந்த இறக்குமதிப் பொருள்களின் மதிப்பு 1,795,000 பவுன்களாய் இருந்தது.'[1] இந் நிலையை மனத்தில்கொண்டு நோக்கும்பொழுது ஃபிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் இந் நாட்டைச் சுரண்டிப் பெரியதொரு வர்த்தக லாபத்தைப் பெற்றிருந்தனர் என்பது அங்கைச் செங்கனியாய் விளங்குகிறது. மேலும், பணபலத்தைப் பெற்றிருந்த இவர்கள் மனக் கிளர்ச்சியையும் இனப் போராட்ட வளர்ச்சியையும் தோற்றுவித்து அரசியல் சூழ்ச்சிகளிலும் மோசடிகளிலும் ஈடுபட வாய்ப்பளிப்பதாக 18ஆம் நூற்றாண்டின் மையக்கால இந்திய அரசியல் நிலவரங்கள் இருந்தன என்றால், அது மிகையாகாது. எனவே தான், ஃபிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் இந்திய வர்த்தகத்தில் மட்டும் கவனத்தைச் செலுத்தி, நேர்மையான வணிகச் செயல்களை மேற்கொள்ளக்கூடிய நோக்கையும் போக்கையும் பெறவில்லை போலும். இதனால் அவர்கள் வணிகத்தில் உச்ச நிலையைப் பெறும் வகையில் முதலில் போராடினர். பின்னர் அவ் வணிகப் போராட்டமே அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான போட்டிகளாகவும், போர்களாகவும் மாறின.

ஆரம்ப காலத்தில் அரசியல் அதிகாரத்தைப் பெறவேண்டும் என்ற உள்நோக்கம் இல்லை யெனினும், வணிக முற்றுரிமையைப் பெறவேண்டும் என்ற வெளிப்படையான குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதில் ஃபிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் நீர்மீதும் நிலத்தின்மீதும் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டனர். 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டத்தில் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே அரசியல் காரணமாகப் போர்கள் நடைபெற்றவண்ணம் இருந்தன. அச்

1 **Dodwell**, Cambridge History of India Volume V.

சம்பவங்களின் எதிரொலியாக இந்தியாவிலும் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே போர்கள் நடைபெற்றன. 1740ஆம் ஆண்டு முதல் 1763ஆம் ஆண்டு வரை ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரும் (Austrian War of Succession) அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஏழாண்டுப் போரும் (Seven years war) இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கும் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் தத்தம் பலத்தைச் சோதித்துக் கொள்வதற்கான பெரிய வாய்ப்பைக் கொடுத்தன.

இதற்கிடையில் முன்னரே கூறியதுபோன்று 1742-ல் ஃபிரெஞ்சு இந்திய ஆளுநராக டியூப்ளே பாண்டிச்சேரியில் பதவிக்கு வந்தார். 1742ஆம் ஆண்டுக்கு முன்னர் டியூப்ளே வட இந்தியாவில் இருந்ததின்மூலம் தேர்ச்சி மிக்க வணிக நிர்வாக அனுபவத்தையும், ஒப்பற்ற திறமைகளையும் பெற்றிருந்தார். இவர் இங்கிலாந்து நாட்டை ஃபிரான்சின் பரம்பரை எதிரியாகக் கருதி அவர்களின் ஆதிக்கத்தை முறியடிக்கும் வகையில் பல திட்டங்களைத் தீட்டினார். அத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென லா போர்டனுய்ஸ் (La Bourdonnais) என்னும் நல்லதொரு தளபதியையும் அவர் பெற்றிருந்தார். டியூப்ளேயும் லா போர்டனுய்ஸும் விடாப்பிடியான உள உறுதிப்பாட்டைக் கொண்டிருந்தனர். இவர்கள் 1746ஆம் ஆண்டில் ஆங்கிலேயருடன் போரிட்டுச் சென்னையைக் கைப்பற்றினர். இவர்கள் இருவரும் மேற்கொண்டு சிறிது காலத்திற்கு ஒருங்கிணைந்து செயலாற்ற அனுமதிக்கப்பட்டிருப்பார்களேயானல், ஆங்கிலேயர்களைத் தலை தூக்காமலேயே செய்து, இந்தியாவில் தமது பேரரசை நிறுவியிருக்க முடியும். ஆனல் விதி வேறுவிதமாய் அமைந்திருந்தது. லாபோர்டனுய்ஸ் ஃபிரான்ஸிற்குத் திருப்பி யழைக்கப்பட்டார். 1748-ல் ஆங்கிலேயர் ஃபிரெஞ்சுக்காரரிடமிருந்து இழந்த சென்னையை மீட்கவேண்டு மென்று போர் தொடுத்தனர். கடல் தளபதி பாஸ்கோவென் (Bascawen) மற்றும் மேஜர் லாரென்ஸ் (Major Lawrence) என்போரது தலைமையின்கீழ் ஆங்கிலேயர் போரிட்டு ஃபிரெஞ்சுக்காரரிடமிருந்து தாம் இழந்த உரிமைகளைத் திரும்பப் பெற்றனர். இப்படி இருந்த சமயத்தில் ஐரோப்பாவில் ஃபிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே ஐ-லா-ஷாப்பெல் (Aix-la-Chapple) என்னும் உடன்படிக்கை கையெழுத்தாகிப் போர் நின்றது. இதனல் இந்தியாவிலும், ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே தற்காலிகமாகப் போர் நின்றது. ஆனல், வெகு விரைவில் இந்நிலை மாறியது. ஐரோப்பாவில் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே மீண்டும் பகைமையும் போரும்

தோன்றின. அவை இந்தியாவிலும் உடனடியாகப் பிரதி பலித்தன.

ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே பகைமையும் போரும் மூண்டவுடன் அவற்றின் பிரதிபலிப்பு இந்தியாவில் முற்றிலும் புதிய தன்மையைப் பெற்றது. அவர்களுக்கு இடையே நடந்த வணிக முற்றுரிமைப் போராட்டம் இந்திய அரசுகளுக்கிடையே நடந்த அரியாசனப் போர்களுடன் இரண்டறக் கலந்தது. இதன் விளைவாக ஆங்கிலேயர் இந்தியாவில் அரசியல் ஏற்றத்தைப் பெற்றுவிட முடியும் என்ற புத்துணர்ச்சியைப் பெற்றனர். இஃது இவ்வாறிருக்க 1748ஆம் ஆண்டில் மராத்தியர்களால் கடத்திச் செல்லப்பட்டிருந்த சந்தாசாகிப் விடுதலை பெற்றார். அப்பொழுது ஆற்காடு நவாபாக அன்வாருதீனை நிஜாம் நியமித்திருந்தார். ஆற்காட்டின் அரசுரிமையைப் போராடிப் பெறுவதற்குச் சந்தாசாகிப் முனைந்தார். ஃபிரெஞ்சு ஆளுநரான டியூப்ளே அவருக்குத் தேவையான அரசியல் ஆதரவையும் இராணுவ உதவியையும் கொடுத்தார். ஆனால், ஆங்கிலேயர்கள் அன்வாருதீனுக்குத் தமது ஆதரவைக் கொடுத்தனர். ஆற்காட்டின் அரசுரிமையைப் பெறும் நோக்கத்தோடு, ஃபிரெஞ்சுக்காரர்களின் துணையோடு சந்தாசாகிப்பிற்கும் அன்வாருதீனுக்கும் நடந்த இரண்டாம் கர்நாடகப் போரில் அன்வாருதீன் தோற்கடிக்கப்பட்டுப் போரில் உயிரையும் இழந்தார். அன்வாருதீனின் மகன் முகமதுஅலி தப்பியோடித் திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் அடைக்கலம் புகுந்தார். ஃபிரெஞ்சுக்காரர்களின் வலிமையையும் பலத்தையும் வெளிப்படுத்திய இப் போர் 1749ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வேலூரையடுத்த ஆம்பூர் என்னும் இடத்தில் நடந்தது. இப் போரில் ஃபிரெஞ்சுக்காரர்கள் பெற்ற மறைமுக வெற்றியும் ஆங்கிலேயர்கள் பெற்ற மறைமுகத் தோல்வியும் அவர்களிடையே ஏகாதிபத்தியப் போக்கை மேலும் ஊக்குவித்தன.

மேற்சொன்ன நிலையில் ஆற்காட்டின் அரசியல் நிலவரம் இருந்தபொழுது, ஹைதராபாத்தில் நிஜாம் இறந்திருந்த காரணத்தால் அவரது அரசுரிமைக் கட்டில் வெறுமையாக இருந்தது. எனவே, நிஜாமின் இரண்டாவது மகனான நாசிர்ஜங் என்பவரும் அவரது பேரனான முஸபர்ஜங்கும் ஹைதராபாதின் நிஜாம் உரிமையைப் பெறுவதில் போட்டியை மேற்கொண்டனர். இவ் வரியாசனப் போட்டியிலும் ஃபிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் தலையிட்டனர். நாசிர்ஜங்கை ஆங்கிலேயர் ஆதரித்தனர். ஃபிரெஞ்சுக்காரர்களின் முழு உதவியும் முஸபர்ஜங்கிற்குக் கிட்டியது. ஆரம்பத்தில் நாசிர்ஜங்கின் கை ஓங்கிய நிலையிலேயே

இருந்தது. ஆனால், 1750ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் ஒரு புரட்சித் தலைவனால் அவர் கொலை செய்யப்பட்டார். இதனால் ஃபிரெஞ்சுக்காரர்களுக்குத் தக்காணத்தின் சுபேதாராக தமது ஆதரவு பெற்ற ஒருவரை அல்லது காப்புட்படுநரை (protege) நியமிப்பதற்குச் சூழ்நிலை சாதகமாக அமைந்தது. மேலும், பேராசிரியர் டாட்வெல் குறிப்பிடுவதுபோன்று, நாசிர்ஜங்கின் முகாமிலிருந்து பாண்டிச்சேரிக்கு ஃபிரெஞ்சுக்காரர்கள் 'பெருஞ் செல்வத்தைக் கடத்திச் சென்றனர். 18 பெட்டிகள் அடங்கிய நகைகள், ஒரு கோடி ரூபாய் பெறுமான நாணயங்கள், மற்றும் தங்கக் காசுகள் தக்காணத்திலிருந்து பாண்டிச்சேரிக்கு ஃபிரெஞ்சுக் காரர்களால் எடுத்துச் செல்லப்பட்டன.'[1] பேராசிரியர் டாட்வெல் குறிப்பிடும் செய்தி இந்தியாவின் கொழுத்த செல்வம் எவ்வாறு இந்திய அரசர்கள் கையிலிருந்து ஐரோப்பிய வணிகர்கள் கைக்கு மாறி, இந்திய அரசுகளின் கருவூலங்கள் வெறுமையாயின என்னும் பரிதாப நிலையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இதற்குப் பின் நாசிர்ஜங்கின் சகோதரரான சலபத்ஜங்கைத் தக்காணச் சுபேதாராக ஃபிரெஞ்சுக்காரர்கள் நியமித்தனர். இதற்குக் காரணமாக இருந்தவர் ஃபிரெஞ்சுத் தளபதியாக இருந்த புஸ்ஸி என்பவராவார். சலபத்ஜங்கிற்குத் தேவையான இராணுவ உதவிகளையும், பண உதவிகளையும் கொடுத்து ஃபிரெஞ்சுக்காரர்கள் அவரைத் தங்கள் கைப்பாவையாக வைத்துக்கொண்டனர். மேலும், டியூப்ளேயின் தலைமையில் ஃபிரெஞ்சுக்காரர்கள் பல வாய்ப்புகளை உருவாக்கிக்கொண்டு சூழ்ச்சித் திறமையுடன் தமது வணிக நடவடிக்கைகளை மாற்றிக்கொண்டு இந்தியாவில் ஃபிரெஞ்சு அரசியல் ஏற்றத்தை ஸ்தாபிக்க முனைந்தனர். டியூப்ளேயின் மதிப்புலம் வாய்ந்த அரசியல் திறமை தம் ஆதிக்கத்திற் குட்பட்ட சார்பரசுகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. ஆனால், டியூப்ளேயின் கனவுகள் நனவாகவில்லை.

டியூப்ளேயின் கனவுகள் ஈடேறுவதைத் தடுப்பதற்கு இராபர்ட் கிளைவ் காரணமாய் இருந்தார். இராபர்ட் கிளைவ் கிழக்கிந்தியக் கம்பெனிப் பணித்துறையில் சாதாரண ஒரு எழுத்த ராகப் பதவியில் நுழைந்தார். பின்னர்ப் படிப்படியே தமது திறமையினால் பதவி உயர்வைப் பெற்றார். இந்தியாவில் கம்பெனியின் வணிகச் செயல்கள் இக்கட்டான நிலையிலிருந்த பொழுது தமது மதிநுட்பச் செயல்களின் காரணமாக ஃபிரெஞ்சுக்காரர் உள்ளிட்ட யாவரையும் கதிகலங்க வைத்தார். ஆங்கிலேயர்களின் சகாவும், 1749-ல் நடந்த கர்நாடகப் போரில் தப்பிப் பிழைத்துத் திருச்சிக் கோட்டையில் அடைக்கலம் புகுந்

1 Dupleix and Clive : The begining of Empire Henry Dodwell. p. 52.

திருந்தவருமான முகமது அலியைப் பிடிக்கச் சந்தாசாகிப் திருச்சியில் முற்றுகையிட்டிருந்ததை இராபர்ட் கிளைவ் முறியடித்தார். சந்தாசாகிப், முகமது அலியைப் பிடிக்கும் நோக்கத்தோடு திருச்சியை முற்றுகையிட்டபோது இராபர்ட் கிளைவ் துணிவுடன் கர்நாடகத்தின் தலைநகரான ஆற்காட்டைத் தாக்கிப் பிடித்தார். ஆற்காடு ஆங்கிலேயர் கையில் சிக்கிய வுடனேயே ஃபிரெஞ்சுக்காரர்களின் நிலை ஆட்டம் கண்டுவிட்டது. அதற்குப் பின்னர் சந்தாசாகிபை முறியடிக்கும் பணியில் ஈடுபட்டு விவேகத்துடன் நள்ளிரவில் ஃபிரெஞ்சுக்காரர் சிறிதும் எதிர் பார்க்காத நிலையில் காவேரிப்பாக்கத்தில் தாக்குதல் நடத்தி ஃபிரெஞ்சுக்காரர்களை வெற்றி கண்டார். இவ் வெற்றியே இந்தியாவில் ஃபிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் கொண்டிருந்த சம்பலத்தை மாற்றியமைத்தது. 1752ஆம் ஆண்டு ஜூன் திங்கள், ஆங்கிலேயர் துணையுடனும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றிருந்த இராபர்ட் கிளைவின் திறமையாலும் முகமதுஅலி, சந்தாசாகிபை முறி யடித்தார். பின்னர், பிரிட்டிஷ்காரர்களின் நல்லாசியுடன் கர்நாடக அரசுக் கட்டிலில் நவாபாக அமர்ந்தார். இப்படி நடந்து முடிந்ததே இரண்டாம் கர்நாடகப் போராகும். இதனால் 1753-ல் ஆங்கிலேயரிடம் சமாதானம் கோரவேண்டிய நிலை டியூப்ளேக்கு ஏற்பட்டது. ஃபிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் அடைந்த தோல்வியைச் சகித்துக்கொள்ள முடியாத ஃபிரெஞ்சுக் கம்பெனியின் இயக்குநர்கள் 1754-ல் டியூப்ளேயை நாடு திரும்புமாறு பணித்தனர். அவருக்குப் பிறகு பதவி ஏற்ற கோடிஹியு (Godeheu) ஆங்கிலேயருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அவ் வுடன்படிக்கையின்படி உள்நாட்டு அரசு விவகாரங்களில் தாம் தலையிடலாகாது என இரு வல்லரசு களும் ஒத்துக்கொண்டன. இப் போரின் விளைவாக இராபர்ட் கிளைவின் திறமை வெளிப்பட்டு அவரால் இந்தியாவில் வெகுவிரை விலேயே பிரிட்டிஷ் பேரரசு அமைக்கப்படும் சாத்தியக் கூறுகள் வெளியாயின. தக்காணத்தில் ஃபிரெஞ்சுக்காரர்கள் பெற்றி ருந்த ஆதிக்கநிலை ஒழிக்கப்பட்டது.

இரண்டாம் கர்நாடகப் போரின் முடிவில் இந்தியாவில் உள்நாட்டு அரசுகளுக்கிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளில் தாம் தலையிடுவதில்லை என்று ஃபிரெஞ்சு ஆங்கில வல்லரசுகள் உடன்படிக்கை செய்துகொண்டிருந்த போதிலும், ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் தொடங்கியதும் அதன் எதிரொலியாக இந்தியாவிலும் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே மீண்டும் போர் தொடங்கியது. இதனால் ஏற்பட்டதே

மூன்றும் கர்நாடகப் போரார்கும். இந்தியாவில் தாம் போரின் நிமித்தம், ஆங்கிலேயரிடம் இழந்திருந்த உடைமைகளையும் செல் வங்களையும் போரிட்டுத் திரும்பப் பெறும் நோக்கத்துடன் லாலி டாலெண்டல் (Lally Tollendal) என்னும் இராணுவத் தளபதியை ஃபிரெஞ்சு அரசாங்கம் அனுப்பிவைத்தது. இவரைக் கௌன்ட்-டி-லாலி என்றும் வரலாற்றுப் பேராசியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், இவர் தலைக்கனம் மிக்கவராகவும் இந்திய நாட்டையும் அதன் மக்களையும்பற்றிய அறிவைப் பெறாதவராகவும் இருந்த தால் தமது முயற்சியில் வெற்றியைக் காண முடியவில்லை. 1760ஆம் ஆண்டு சனவரித் திங்கள் கௌன்ட்-டி-லாலியும் அவரது படை யினரும் வந்தவாசி என்னும் இடத்தில் கர்னல்கூட் என்பவரின் தலைமையின்கீழான ஆங்கிலப் படையினரால் தோற்கடிக்கப் பட்டனர். ஆங்கிலப் படையினர் புஸ்ஸி என்னும் ஃபிரெஞ்சுத் தளபதியைப் போர்க் கைதியாகவும் பிடித்துச் சென்றனர். இத் தோல்விக்குப் பிறகு ஃபிரான்ஸிற்குத் திரும்பிய லாலிக்குக் கிடைத்த பரிசு மரணதண்டனையாகும். இப்படி மூன்று கர்நாடகப் போர்களிலும் ஃபிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்க முதுகெலும்பு முறிக்கப்பட்டது. 1782-83-ல் ஸஃப்ரென் (Suffren) என்னும் ஃபிரெஞ்சுக் கடற்படைத் தளபதி ஆங்கிலேயருக்கு எதிராக இந்தி யாவில் எடுத்த முயற்சிகளும் பலனற்றுப்போயின. இதற்குப் பிறகு ஃபிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு தலைதூக்க முடியாத நிலையில்-'விலை போகாத சரக்கு' என்னும் நிலையில் சரிந்தது. இறுதி யாகப் பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம் ஆகிய இடங்களில் மட்டுமே அவர்கள் தம் வணிகம் மற்றும் ஆட்சிச் செயல்களை மேற்கொண்டிருந்தனர். 1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் இந்தியா ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற பின்னரும் மேற்சொல்லப்பட்ட இடங்கள் ஃபிரெஞ்சுக் காரர்களின் உடைமைகளாகவே இருந்தன. பின்னர் 1952ஆம் ஆண்டில் தாமாகச் சுதந்திர இந்திய அரசாங்கத்திடம் அவற்றை ஒப்படைத்து, பின் ஃபிரெஞ்சுக்காரர் இந் நாட்டை விட்டு வெளியேறினர். அன்று முதல் இன்று வரை பாண்டிச்சேரியும் பிற இடங்களும் இந்திய சமஷ்டி அரசிற்கு உட்பட்ட ஒரு யூனியன் பிரதேசமாக இருந்து வருகிறது. இஃது இவ்வாறு இருக்க 1760ஆம் ஆண்டில் ஃபிரெஞ்சுக்காரர்கள் முடிவான தோல்வியைப் பெற்று இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி நிறுவப்படுவதற்குத் துணையாக அமைந்த சில காரணங்களையும். இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் ஆதிக்க வளர்ச்சிக்கான காரணங்களையும் இங்குச் சிறிது அறிந்து கொள்ளவேண்டும்.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி அரசியல் ஏற்றத்தைப் பெற்றதற்கான காரணங்கள்

இந்தியாவில் வணிக முற்றுரிமையை நிலை நிறுத்துவது குறித்து ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே போட்டிகளும் போர்களும் நிலவியபோதிலும் உண்மையில் அவ் விருவரிடையில் அரசியல் பகைமை உணர்ச்சியே மேலோங்கி யிருந்தது. ஏனெனில், ஐரோப்பாவில் ஃபிரான்ஸிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே நடந்த போர்கள் அரசியல் காரணங்களாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன. அப் பகைமை உணர்ச்சியின் எதிரொலியாகவும் போர்களின் பிரதிபலிப்பாகவும்தான் இந்தியாவில் அவர்களுக்கிடையே நடந்த போர்களும் மேற்கொள்ளப்பட்டன. எனவே, இந்தியாவில் யாருடைய அரசியல் ஆதிக்கம் இறுதியில் நிலைக்கவேண்டும் என்ற உள்நோக்க அடிப்படையில்தான் போர்களை அவர்கள் மேற்கொண்டனர். ஃபிரெஞ்சுக்காரர்களைப் பொறுத்தவரை அவர்கள் இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களின் செல்வாக்கை முழுதும் அகற்றித் தமது பேரரசை நிறுவவேண்டும் என்ற வெளிப்படையான போக்கைக் கொண்டிருந்தனர். இதனுல்தான் டியூப்ளே தமது சொந்த செல்வத்தையும் பணத்தையும்கூடச் செலவழித்துப் போர்ச் செயல்களில் ஈடுபட்டார். எனினும், ஃபிரெஞ்சுக்காரர்கள் கீழ்க்கண்ட காரணங்களினுல் தோல்வியுற்று அவற்றின்மூலம் ஆங்கிலக் கம்பெனியின் செல்வாக்கு ஏற்றம்பெற வழிசெய்தனர்.

முதலாவதாக, அரசியல் அமைப்பு ரீதியில் ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் அடிப்படையான வேறுபாடுகள் காணப்பட்டன. ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆரம்பம் முதல் இறுதி வரை ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் ஒரு சாதாரண இலாகாவைப் போலக் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் செயல்பட்டது. அதனுடைய நடவடிக்கைகள் யாவும் ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள், கனவான்கள், அரசாங்கத்தின்மீது அக்கறை செலுத்திவந்த மத குருமார்கள் ஆகியோரால் மேற்பார்வை செய்யப்பட்ட நிலையில் தான் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. இதனுல், ஃபிரெஞ்சுக் கம்பெனி ஆர்வத்தையும் தொடக்கத் துணிவையும் மேற்கொள்ள முடியவில்லை. மேலும், ஃபிரான்ஸ் நாட்டின் அறிஞர்கள் தமது நாட்டினர் வெளி நாடுகளில் வர்த்தகச் செயல்களை மேற்கொண்டதை மிகவும் வெறுத்தனர். ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பெரும்பான்மையான பங்குகள் அரச நிறுவனத்தினுலேயே பெறப்பட்டிருந்தன. இதனுல், ஃபிரான்சின் அமைச்சரவை அடிக்கடி தேவையற்ற செய்திகளில்கூடத் தலையிட்டுத் தனது

கம்பெனியின் செயல்கள் உள்நாட்டு நிலவரங்களுக்கு ஏற்பச் சுதந்திரமாக மேற்கொள்ளப்படுவதைப் பெரிதும் தடை செய்தது. டியூப்ளேயைப் பிரெஞ்சு அரசாங்கம் இந்தியாவிலிருந்து திருப்பி அழைத்தது பிரெஞ்சுக் கம்பெனி உள்ளாகியிருந்த அரசாங்கத் தலையீட்டிற்குச் சான்று பகரும். ஆனால், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியோ இலண்டன் மாநரத்தைச் சேர்ந்த தனிப்பட்ட வணிகர்களால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் அரச நிறுவனம் இக் கம்பெனியின் மூலதனத்தில் எந்தவிதமான பங்குத் தொகையையும் பெற்றிருக்கவில்லை. அவ்வப்பொழுது பட்டயங்களை வழங்கித் தேவையான சில சலுகைகளைக் கம்பெனிக்குக் கொடுத்ததைத் தவிரப் பிரிட்டிஷ் அரசாங்கம் தனது கம்பெனியின் செயல்களில் தலையிடவில்லை. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரிகள் இந்தியாவில் நிலவிய உள்நாட்டு நிலவரங்களுக்கு ஏற்பத் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தனர். மேலும், தமது சுய பொறுப்பில் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு ஆங்கிலக் கம்பெனியின் பணியாளர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்ததால், ஆங்கிலக் கம்பெனி ஆர்வத்துடனும் தொடக்கத் துணிவுடனும் உரிமையுடனும் செயல்களை மேற்கொள்ள முடிந்தது. மேலும், ஆங்கிலக் கம்பெனியினர் வர்த்தக முற்றுரிமையைப் பெறுவதைத்தான் தமது மூலக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அரசியல் முறையான ஈடுபாடுகளை ஆங்கிலக் கம்பெனியினர் ஃபிரெஞ்சுக்காரர்களைப் போலல்லாது சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் காரணமாகவே மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனவேதான், படிப்படியாக வளர்ந்தும் வலிமை பெற்றும் ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கம் இந்தியாவில் வேரூன்றக்கூடிய நிலையிலிருந்தது. அடுத்து ஃபிரெஞ்சு அரசாங்கம் மிகவும் சீர்கேடான நிலையில் இருந்ததால் அஃது இந்தியாவில் ஃபிரெஞ்சு அதிகாரிகள் ஆற்றிய தொண்டுகளையும் பணிகளையும் போற்றவுமில்லை; மதிக்கவுமில்லை. இதன் விளைவாக ஃபிரெஞ்சுக் கம்பெனியினர், ஃபிரெஞ்சு அரசாங்கத்திடமிருந்து ஊக்கத்தைப் பெறுவதற்குப் பதிலாக மன முறிவையும் ஏமாற்றத்தையுமே பெற்றனர். இந்தியாவில் தோல்வியைத் தழுவிய காரணத்தால் கௌன்ட்-டி-லாலி தூக்கிலிடப்பட்டதும், டியூப்ளேயின்மீது அரசாங்கம் வழக்கு நடத்தி இறுதியாக அவர் பராரியாக இறந்ததும் தமது கம்பெனிப் பணியாளர்களுக்கு ஃபிரெஞ்சு அரசாங்கம் எத்தகைய வெகுமதியைக் கொடுத்தது என்பதை நமக்குத் தெளிவுறுத்தும் நிகழ்ச்சிகளாகும். இவற்றிற்கு மாறாகக் குற்றங் குறைகள் இருந்த நிலையிலும் ஆங்கிலக் கம்பெனியின் அதிகாரிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் பாராட்டப்பட்டனர். தமது இந்திய நடவடிக்கைகளுக்காக

இராபர்ட் கிளைவ் ஆங்கில அரசினரால் குறை காணப்பட்டிருந்த போதிலும், அவர் தாயகம் திரும்பியபொழுது அவரை, "இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசை ஸ்தாபித்த பெருமகன்" என்று நாடு போற்றியது. இத்தகைய அரசாங்கப் போக்கினுல் ஆங்கிலக் கம்பெனியினர் இந்தியாவில் துணிச்சலுடன் செயல்களை மேற்கொண்டு வெற்றிக் கொடியை நாட்டினர்.

'அரசியல் தன்மை வாய்ந்த சாதனங்கள்மூலம் மட்டுமன்றிப் பிற சாதனங்கள்மூலம் தொடரப்படும் போரும் அரசியலே' என்பது பன்னுட்டு அரசியல் தத்துவத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள ஒரு கருத்தாக உள்ளது. இதன்படி பல போர்ச் சாதனங்களை மேற்கொண்டே ஃபிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர் களும் இந்தியாவில் செயல்பட்டனர். ஆனுல், ஃபிரெஞ்சுக்காரர் கள் ஆங்கிலேயர் பெற்றிருந்ததைப்போல் போர்க் கப்பல்களைப் பெற்றிருக்கவில்லை. இங்கிலாந்து பெற்றிருந்த கடலாதிக்கம் கீர்த்தி வாய்ந்ததாக இருந்தது. இதனுல் பிரிட்டிஷ்காரர்கள் தமது கம்பெனியினருக்குத் தேவையான உதவிகளைத் தேவையான அளவிலும், தேவையான சமயங்களிலும் கொடுக்க முடிந்தது. மாருக ஃபிரெஞ்சுக்காரர்கள் பெற்றிருந்த கடலாதிக்கம் ஃபிரெஞ்சு அரசாங்கம் விரும்பியிருந்தாலும்கூடத் தனது இந்திய கம்பெனியினருக்கு உதவிகளைச் செய்யும் வகையில் அமைந்திருக்க வில்லை. இதனுல் ஃபிரெஞ்சுக் கம்பெனி விரைவாகவும் நிறைவாக வும் செயல்களை மேற்கொள்ள முடியாமல் தோல்வியைத் தழுவ வேண்டியிருந்தது.

தாம் இந்தியாவில் பெற்றிருந்த கப்பல் மற்றும் போர்த் தளங்களைப் பற்றியும் இரு கம்பெனியினருக்கும் இடையே பெருத்த வேற்றுமை இருந்தது. காலத்தோடு இடமும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட நிலையில்தான் வணிகம், அரசியல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்பொழுதுதான் வெற்றியும் காணமுடியும். இவற்றில் ஆங்கி லேயக் கம்பெனியினரே அதிர்ஷ்டம் மிக்கவர்களாக இருந்தனர். ஏனெனில் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய முப்பெரும் முக்கிய இடங்கள் அவர்கள் வசம் இருந்தன. இதனுல் நல்லமுறையில் தாக்குதல்களைச் சமாளிக்கவும், எதிர்த் தாக்குதல்களைத் தொடுக் கவும் ஆங்கிலேயரால் முடிந்தது. வங்கத்தை மையமாகக் கொண்டு நாட்டின் எப் பகுதியிலும் உள்ளே ஊடுருவதற்கு ஆங்கிலேயர் அருமையான வாய்ப்பைப் பெற்றிருந்தனர். ஆனுல், ஃபிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரியைத் தலைநகராகக்கொண்டு தக்காணத்தின் வழியே இந்தியாவில் நுழைந்தது அவர்களுக்கு

சாதகமாய் அமையவில்லை. பொருந்தாத இடத்தை மையமாகக் கொண்டு பொருத்தமற்ற கொள்கையையும் செயல்களேயும் பொருத்தமற்ற நிலையில் ஃபிரெஞ்சுக்காரர்கள் மேற்கொண்டதால் அவர்கள் தோல்வியைத் தழுவ வேண்டியிருந்தது. மேலும், ஆரம்ப நிலையில் எடுத்த எடுப்பிலேயே ஃபிரெஞ்சுக் கம்பெனி வர்த்தக அக்கறைகளை இரண்டாம் தரமாக்கி, நாடு பிடித்து அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்தும் குறிக்கோளுக்கு முக்கியத் துவத்தைக் கொடுத்தது. இதனால் ஃபிரெஞ்சுக் கம்பெனியினர் இந்திய மக்களின் வெறுப்பிற்கும் ஆளாயினர். ஆனால், ஆங்கிலக் கம்பெனியினரோ முதலில் வர்த்தகத்தில் கவனத்தைச் செலுத்திப் பணமும் பொருளும் ஈட்டி, உறுதியான நிலையைப் பெறுவதில் அக்கறை காட்டினர். நாட்டதிகார எல்லையுடன்கூடிய பிரதேசங்களைப் பெறுவதை ஆரம்பத்தில் ஆங்கிலக் கம்பெனி யினர் மேற்கொள்ளவில்லை. எனவே, ஃபிரெஞ்சுக்காரர்கள் பெருத அளவிற்கு ஆங்கிலேயர்கள் இந்தியச் சுதேசி அரசுகளிட மிருந்து ஆரம்ப நிலையிலேயே அதிகமான ஆதரவைப் பெற்று விட்டனர். தேவையான பண, இராணுவ உதவிகளைத் தமது தாய்நாட்டிலிருந்து சரியான சமயங்களில் பெற்றதும், திறமை யான அதிகாரிகளையும், பணியாளர்களையும் இங்குப் பெற்றி ருந்ததும் ஆங்கிலக் கம்பெனியினர் இந்தியாவில் ஏற்றமான நிலையைப் பெறுவதற்குத் துணைபுரிந்தன.

மூன்று கர்நாடகப் போர்களின் விளைவாகத் தென்னிந்தியா முழுவதிலும் தமது செல்வாக்கைப் பரப்பிக்கொண்ட கிழக்கிந்தியக் கம்பெனி 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வட இந்தியாவிலுள்ள வங்காளம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டின்கீழ்த் தங்க வைத்துக் கொள்ளும்படியான பல செயல்களை மேற்கொண்டது. இதனால் எதிர்காலத்தில் தங்களுடைய பேரரசை இந்தியாவில் நிறுவுவதற்கான சாதகக் கூறுகளைப் பெற்றிருப்பதை ஆங்கிலேயர் உணர்ந்தனர். இதற்குத் துணைபுரியும் வகையில் வங்கம் செல்வமும் செழிப்பும் பெற்றிருந்ததையும் அவர்கள் அறிந்திருந்தனர். உதாரணமாக, அக்பர் ஆண்டபொழுதே ஒரு கோடி ரூபாயைத் தனது ஆண்டு வருவாயாகப் பெற்றிருந்த வங்கம், 1756-ல் சுமார் எட்டரை கோடி ரூபாய்களை வருவாயாகப் பெற்றிருந்தது.[1] இயற்கையான செல்வச் செழிப்பை வங்கம் பெற்றிருந்தபோதிலும், அதன் மூலச் சக்திகள் அதன் அரசர்களால் சுரண்டிச் சூறையாடப் பட்டன. அதனால் வங்கத்தின் மக்கள் வறுமைக்கும் துன்பத் திற்கும் ஆளாகியிருந்தனர். உதாரணமாக ஔரங்கசீப்பின்

1 History of the Freedom Movement. Dr. Tarachand Volume I p. 252.

மாமனுன ஷெயிஸ்டகான் வங்கத்தின் ஆளுநராயிருந்த காலங்களில் ஒரு நாளைக்கு 50 ஆயிரம் ரூபாய் வீதம் தமது சுய ஆசைகளைத் தீர்த்துக் கொள்வதற்குச் செலவழித்தாராம்! அவர் வங்கத்தை விட்டுச் செல்லும்போது 38 கோடி ரூபாய்களைத் தம்முடன் எடுத்துச் சென்றதாகவும் தபன்மோகன் சட்டர்ஜி என்னும் வரலாற்றுப் பேராசிரியர் குறிப்பிடுகின்ருர். வங்கத்தின் செல்வ நிலையை விளக்கும் வகையில் சட்டர்ஜி மேலும் பின்வருமாறு கூறுகிருர். 'மூர்ஷித் குலிகான் என்பவர் வங்க மாநிலத்தின் நிதி அமைச்சராக இருந்தபொழுது ஔரங்கசீப்பின் உத்தரவின்படி மராத்தியப் போர்களைச் சமாளிப்பதற்கென மொகலாயப் பேரரசிற்கு வங்கத்து வருவாய்கள் முழுவதையும் அனுப்பிவைத்தார். இதனுல் வங்கத்து மக்கள் வெள்ளி நாணயங்களைக் காணமுடியாதவர்களாகித் தமது வணிகப் பரிமாற்றத்தைச் சிப்பியிலான நாணயங்கள்மூலம் மேற்கொண்டனர். வங்காள நவாபும் அவரது நிலப் பிரபுக்களும் அங்கிருந்த வறுமையான உழவர்களையும் துயரம் மிகுந்த கைவினைஞர்களையும் கசக்கிப் பிழிந்து செல்வத்தைப் பெற்றனர்.'[1] இச் செய்திகளை இங்கு எடுத்துக் காட்டியிருப்பதில் ஒரு முக்கியத்துவம் உள்ளது. வங்க மாநிலம் இயற்கையாகச் செல்வச் செழிப்பைப் பெற்றிருந்தது. ஆனுல், அதன் பயனை மக்கள் நுகர முடியாமல் வறுமைக்கும் வாட்டத்திற்கும் ஆளாகியிருந்தனர். இதனுல் வங்க மாநிலம் இலாபகரமான வணிகத்தை மேற்கொள்ள உதவும் நிலையிலும் அரசியல் காரணமாகப் போராட்டங்களும் போர்களும் நடைபெறும் நிலையிலும் இருந்தது.

வங்கத்தின் செல்வத்தைத் தவருன வழியில் செலவிட்டுத் தரமிழந்த நிலையில் வங்காள நவாபுகள் இருந்தனர். 1740ஆம் ஆண்டு முதல் 1756ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை வங்காளத்தின் நவாபாக அலிவர்திகான் இருந்தார். இவரது ஆட்சிக் காலம் நல்லதாக இருந்தபோதிலும் வங்க அரசு நிதிநிலையில் ஸ்திரத் தன்மையைப் பெறவில்லை. இவருக்குப் பிறகு இவரது பேரனுன சிராஜ்-உத்-தௌலா வங்காள நவாபாகப் பதவியேற்ருர். இவர் ஒரு கொடுங்கோலராகவும் பொறுப்பற்ற ஆட்சியாளராகவும் இருந்தார். இவர் அரசியலில் குறுகிய நோக்கைக் கொண்டு இந்துக்களையும் முஸ்லிம்களையும் கொடுமைப்படுத்தினுர். இவருடைய குடிமக்களே இவர்மீது பகைமை கொள்ளும்படியாக, இவரது நிர்வாகம் அமைந்திருந்தது. இவர் மகதாப் சந்த் என்னும் உலக வங்கி நிறுவனத்தின் தலைவரை உயிருக்கு ஆபத்து ஏற்படும்

[1] Road to Plassey, Tapan Mohan Chatterji pp. 8, 39.

10

படி தாக்கவும் செய்தார். அப்பொழுது பாண்டிச்சேரி, காரைக் கால் போன்ற இடங்களைக் கொண்டிருந்த ஃபிரெஞ்சு இந்தியாவில் பிள்ளைமார்களும், சென்னையைச் சேர்ந்த முதலியார்களும் வணிகப் பெருஞ் செல்வர்களாய் இருந்தனர். ஓர் அரசின் கொள்கை எதுவாக இருப்பினும் அதன் ஆட்சியாளர்கள் நாட்டின் பணக்காரர்களையும் செல்வந்தர்களையும் தமது ஆதரவின்கீழ்க் கொண்டு ஆட்சியையும் அரசியலையும் நடத்தவேண்டும் என்பது இன்றைய அரசியலிலும் பேணப்படும் செயலாக உள்ளது. ஆனால் சிராஜ்-உத்-தௌலாவோ, மகதாப் சந்த் என்பவரைத் தாக்கியதன்மூலம் உலக வங்கியாளர்களுடன் உறவுகளைக் கொண்டிருந்த இந்திய வணிகப் பெருங்குடி மக்களின் விரோதத் தையும் பெற்றார்; இவர்களைத் தவிர, அவர் தம் உறவினரும் செல்வாக்கு மிக்கவருமான மீர் ஜாபர் என்னும் பெருமகனையும் பகைத்துக்கொண்டார். இப் பகைமையினால் தவிர்க்க முடியாத அரசியல் போராட்டத்தையும் அவர் மேற்கொள்ளவேண்டி யிருக்கும் என்பதை உணரவில்லை. சிராஜ்-உத்-தௌலாவுக்கும் ஆங்கிலக் கம்பெனியினருக்கும் இடையே இருந்த உறவு பாழடைந் திருந்தது. அதற்குக் காரணம் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரிகள் அவரிடம் வன்முறையாக நடந்து கொண்டதேயாகும். ஆனால், அன்று ஆங்கிலக் கம்பெனி இருந்த நிலையில் சிராஜ்-உத்- தௌலாவிற்குப் பதிலாக வேறு எவர் பதவியிலிருந்தாலும் கம்பெனி அதிகாரிகளுடன் சமரசப்போக்கை மேற்கொண் டிருப்பார். ஆனால், சிராஜ்-உத்-தௌலாவோ முன்யோசனை யின்றி ஆங்கிலக் கம்பெனியினரைத் தாக்க முனைந்தார். இதன்படி அவர் 1756ஆம் ஆண்டு ஜூன் திங்கள் கல்கத்தா நகரத்திற்குப் படையுடன் சென்று ஆங்கிலக் கம்பெனியினரின் வில்லியம் கோட்டையைப் பிடித்தார். ஆனால், வில்லியம் கோட்டையி லிருந்த ஆங்கில ஆளுநர், ஆங்கிலக் கப்பல்கள் தப்பி ஓடிவிடுமாறு செய்ததை அவர் முன்யோசனையுடன் தடுக்கவில்லை. இப்படிப் பட்ட ஒரு தாக்குதலுக்கு ஆளான ஆங்கிலேயர் மேலும் சிராஜ்-உத்-தௌலாவினால் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாயும் சிறியதோர் இருட்டறையில் அவர் ஆங்கிலேயர்களை அடைத்துச் சாகடித்ததாகவும் வரலாற்றுப் பேராசிரியர்களிடையே ஒரு கருத்து உண்டு. இதனையே 'இருட்டறைத் துயர நிகழ்ச்சி' (Black hole tragedy) என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இந் நிகழ்ச்சியைப்பற்றி W. Z. ஹால்வெல் (W. Z. Holwell) என்பவர் மிகைப்படுத்தி விவரித்துள்ளார். இவ் விருட்டறைத் துயர நிகழ்ச்சி குறித்துப் பேராசிரியர் V. A. ஸ்மித் தமது ஆக்ஸ் ஃபோர்டின் இந்திய வரலாறு என்னும் நூலில் பின்வரும் குறிப்பை எழுதியுள்ளார். 'கல்கத்தாக் கோட்டையை அச்

சமயத்தில் (1756) பாதுகாத்து வந்த படைப்பகுதிக்கு ஹால்வெல் தலைவராவார். அவரைத் தவிர அந் நிகழ்ச்சியைப்பற்றிய உண்மையை நம்பிக்கைக்கு உரிய வகையில் கூறுவோரில்லை. அந் நிகழ்ச்சி நடைபெற்ற பின் ஐம்பதாண்டுகள் வரை அதைப்பற்றி யாரும் சிந்திக்கவில்லை. ஆனால், அதற்குப் பிறகு பிரிட்டானியப் பேரரசின் பழைய வரலாற்றைத் தொகுத்தவர்களுக்குச் சிறந்த தொரு வசதி மிக்க கருவியாக அந் நிகழ்ச்சி பயன்பட்டது. காலப் போக்கில் இருட்டறைத் துயர நிகழ்ச்சி மிக முக்கியத்துவம் பெறலா யிற்று. இந்தியாவைப்பற்றி ஒவ்வொரு பள்ளிக்கூட மாணவனும் அறிந்திருந்த மூன்று செய்திகளுள் ஈதொன்றாயிற்று. இருட்டறைத் துன்ப நிகழ்ச்சி, பிளாசிப்போர், சிப்பாய்க்கலகம் ஆகிய மூன்றும் ஒவ்வொரு பள்ளி மாணவனும் அறிந்திருந்த சிறப்பு மிக்க நிகழ்ச்சி களாகும்.

'பல ஆண்டுகளாகவே இந் நிகழ்ச்சி சிராஜ்-உத்-தௌலா திட்டமிட்டுச் செய்த செயலன்று என்பதைப் பலரும் ஒப்புக் கொண்டுள்ளனர். அவருடைய பிரதிநிதிகளின் அறியாமை யினாலும் பொறுப்பற்ற தன்மையினாலுமே இந்த அவல நிகழ்ச்சி நடைபெற்றது எனலாம். அவருடைய பிரதிநிதிகளின் பழி வாங்கும் மனப்பான்மையினாலோ, துன்புறுத்தவேண்டும் என்னும் கொடுமை வாய்ந்த உள்ளத்தினாலோ நடைபெற்ற நிகழ்ச்சியன்று இது. உண்மை இவ்வாறு இருப்பதால் அதை வருந்தத்தக்க நிகழ்ச்சி என்று கருதவேண்டுமே யொழியத் திட்டமிட்டுச் செய்யப் பட்ட கொடுஞ் செயல் என்று நாம் கருதக் கூடாது. இந் நிகழ்ச்சி உண்மையில் நடைபெறவே இல்லை என்று மெய்ப்பிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி நம்பத்தகுந்ததாகவோ, மன நிறைவை அளிப்பதாகவோ இல்லை. ஆயினும், ஹால்வெல்லினு டைய விளக்கவுரையில் ஒரு பகுதியேனும் அவருடைய கற்பனை ஆற்றலால் எழுதப்பட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். கல்கத்தாக் கோட்டையைக் காத்து வந்த 123 வீரர் களின் நிலை என்ன ஆயிற்று என்பதற்குத் தக்க காரணத்தை நாம் கூற வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர்கள் போரிலே இறந் தார்கள் என்பதற்குக் கிடைத்திருக்கின்ற சான்றுகளைக் காட்டிலும் இருட்டறைத் துன்ப நிகழ்ச்சியினாலேயே இறந்தார்கள் என்பதற்குக் கிடைத்திருக்கின்ற சான்றுகளே பேரளவினவாகவும் நம்பத்தகுந் தனவாகவும் உள்ளன. ஹால்வெல் விரிவாக விளக்கியுள்ள இருட் டறைத் துன்ப நிகழ்ச்சியைப் போன்றே ஏதோவொன்று நடை பெற்றிருக்க வேண்டுமென்பதே எனது முடிவாகும். ஆனால், அந் நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடப்படும் பல செய்திகளும் அந் நிகழ்ச்சியினால் இறந்ததாகக் குறிப்பிடப்படும் வீரர்களின் எண்ணிக்

கையும் உண்மையானவை என்று கூறுவதற்கில்லை. கோட்டையினைக் கைப்பற்றிய குழப்பமான சூழ்நிலையில் நவாபின் பிரதிநிதிகளின் அறியாமையும் அசட்டுத்தனமும் சேர்ந்து உண்டான குழப்ப மிக்க மன நிலையின் விளைவாக நிகழ்ந்ததே இருட்டறைத் துன்ப நிகழ்ச்சி எனலாம்'[1]

அதேசமயம் சென்னையிலிருந்த ஆங்கிலேயப்படை அப்பொழுது ஹைதராபாதில் ஃபிரெஞ்சுக்காரர்களை எதிர்த்துப் படையெடுப்பதற்கு ஆயத்தம் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தது. 'அச்சமயத்தில் கல்கத்தாக் கோட்டை கைவிடப்பெற்ற செய்தி சென்னைக்கு எட்டியது. அப்பொழுது சென்னையில் மூத்த அரசாங்க அதிகாரியாக இருந்தவர் பிடிவாதமாகக் கிளைவையே வங்காளத்திற்குப் படைத்தலைவராக அனுப்பி வைக்கவேண்டும் என்று வற்புறுத்தினார். அவ் விடாப்பிடியான வற்புறுத்தல் பெரு நன்மையைப் பயந்தது எனலாம். அச் சமயத்தில் கிளைவ் செயின்ட் டேவிட் கோட்டையின் துணை ஆளுநராகப் பணியாற்றிவந்தார். போரினால் உண்டாகக்கூடிய இடையூறுகளைப்பற்றிச் சென்னை ஆலோசனைக் குழுவினரிடையே உண்டான பூசல்களுக்கிடையே மகிழ்ச்சியோடு கிளைவ் வங்காளத்தை நோக்கிப் புறப்பட்டார். அவர் வெற்றியைப்பற்றி ஐயுறவும் இல்லை. அதைப்போன்றே அவருக்குப் போரைப்பற்றி அச்சமும் இல்லை. அக்டோபர்த் திங்கள் 16ஆம் நாள் 900 ஐரோப்பியப் படைவீரர்களையும், 1500 இந்தியப் படைவீரர்களையும் கடற்படைத்தலைவர் (அட்மிரல்) வாட்சன் நடத்திச்சென்றார். அவர்களுடன் ஐந்து மனிதர்கள் போரைக் கவனிப்பதற்குச் சென்றனர். போக்குவரத்துக்குரிய ஐந்து வண்டிகளையும் உடன்கொண்டு சென்றார். டிசம்பர் மாதத்தில் ஃபுல்டா விடுவிக்கப்பெற்றது. 1757ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 2ஆம் நாள் கல்கத்தா திரும்பக் கைப்பற்றப்பட்டது. இது நெடுங்காலத்திற்கு முன்பே தாம் மேற்கொண்டிருக்க வேண்டிய செயல் என்பதை அவர்கள் உணர்ந்தனர். ஆனால், திட்டவட்டமான முடிவிற்கு வாராது, வீணாகப்போரிட்டுக் கொண்டிருப்பது சிராஜ்-உத்-தௌலாவிற்கு மீண்டும் மன உளைச்சலை உண்டாக்கியது. அவர் திடீரென்று தமது அரசியல் கொள்கையை மாற்றிக்கொண்டு பிப்ரவரித் திங்கள் 9ஆம் நாள் ஆங்கிலேயரோடு சமாதான உடன்படிக்கை ஒன்றையும் நேசஉறவு ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டார். அதனால் கல்கத்தா கம்பெனிக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. கம்பெனியின் பழைய உரிமைகளும் சலுகைகளும் புதுப்பித்துக் கொள்ளப்பட்டன. மேலும், கம்பெனி இந்த உடன்

[1] ஆக்ஸ் ஃபோர்டின் இந்திய வரலாறு III, வின்சென்ட் A. ஸ்மித், தமிழாக்கம் க. த. திருநாவுக்கரசு.

படிக்கையின் மூலம் புதிதாகச் சில சலுகைகளைக் கூடுதலாகப் பெற்றது. கல்கத்தா நகரைச் சுற்றிலும் கோட்டை கொத்தளங்களை அமைத்துக் கொள்ளுவதற்கும், பணத்தை அச்சிட்டு வழங்கு வதற்கும் ஆங்கிலேயர்கள் நவாபிடமிருந்து உரிமைகள் பெற்றனர்.'[1] மேலும், நவாபு விருப்பமில்லாமல் ஃபிரெஞ்சுக் காரர் வசமிருந்த சந்திரநாகூரை ஆங்கிலக் கம்பெனியினர் தாக்கிப் பிடிப்பதற்கு அனுமதித்தார். ஆங்கிலேயர் இதில் வெற்றி கண்டனர். இஃது இவ்வாறு இருக்க இராபர்ட் கிளைவ் இருட் டறைத் துயர நிகழ்ச்சியின் காரணமாக வங்காள நவாபை எப்படி யும் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று சூழ்ச்சிகளைக் கையாண் டார். சிராஜ்-உத்-தௌலாவின் வெறுப்புக்கு ஆளாகியிருந்த மீர் ஜாபரைத் தமது கைக்குள் போட்டுக்கொண்டு ஒரு சதித்திட்டத் தையும் உருவாக்கினர். இவையெல்லாம் முதிர்ந்த நிலையில் தாம் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலைகள் மற்றும் வாய்ப்புகள் உண்டான போது,இராபர்ட் கிளைவ் சிராஜ்-உத்-தௌலா கம்பெனி யிடம் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறியதாகப் பழி சுமத்தி, அதற்கான பதிலைச் சிராஜிடமிருந்து எதிர்பாராமல் தமது படையுடன் சிராஜைத் தாக்கினர். இதனல் ஏற்பட்ட போரே பிளாசிப் போராகும். சிராஜின் படைத் தலைவர்களில் ஒருவரான மீர்ஜாபாரின் சதியின் காரணமாகவும், ஆங்கிலேயரின் இராணுவ பலத்தாலும் சிராஜ்-உத்-தௌலா இப் போரில் தோற்கடிக்கப் பட்டார். இராபர்ட் கிளைவ் மீர்ஜாபரைத் தமது கைப்பாவை நவாபாக ஆக்கிக்கொண்டார். ஜூன் மாதம் 22ஆம் நாள் நடந்த இப் போரின் விளைவாக ஆங்கிலேயர்கள் வங்கத்தில் அரசர் களை உருவாக்கும் அதிகாரத்தைப் பெற்றனர். மேலும்,இராபர்ட் கிளைவ் வங்கத்தின் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டார். கிழக் கிந்தியக் கம்பெனி 24 பர்கானக்கள் என்னும் இடத்தையும் பெற்றது. இப் போரின் விளைவாக ஆங்கிலேயர் வர்த்தகத்தில் ஏற்றத்தைப் பெறமுடிந்தது. மேலும், இப் போர் ஃபிரெஞ்சுக்காரர் களையும் மற்ற ஐரோப்பியர்களையும் ஆதிக்கத்தை இழக்குமாறும் செய்தது.

தமது சதிச்செயலின் பலனக நவாப் பதவியைப் பெற்ற மீர்ஜாபர் ஆங்கிலேயர் ஆட்டிவைத்த படியெல்லாம் ஆடியபடி, அவர்கள் நாடிய போதெல்லாம் கோடி கோடியாகப் பணம் கொடுத்துக்கொண்டிருந்தார். இதன்மூலம் பெருஞ்செல்வத்தைப் பெற்ற நிலையில் இராபர்ட் கிளைவ் தமது தாயகத்திற்குத் திரும்பிச் சென்றார். இராபர்ட் கிளைவ் திரும்பிச்சென்றவுடன் வங்கத்தில்

[1] ஆக்ஸ் ஃபோர்டின் இந்திய வரலாறு III V. A. ஸ்மித், தமிழாக்கம் க. த. திருநாவுக்கரசு, p. 66, 67

மீண்டும் சிக்கல்கள் உருவாயின. ஏனெனில், மீர்ஜாபரை ஆங்கிலக் கம்பெனியினர் தமது கைப்பாவையாக்கிப் பெரும் பாடுபடுத்தினர். அதே நேரத்தில் நவாபின் குடிமக்கள் அவரைக் கொடுஞ் சதிகாரனாகவும் துரோகியாகவும் கருதினர். மேலும், அவர் தமது ஆட்சிப் பரப்பில் நேர்மையற்ற நிர்வாகத்தையே நடத்திவந்தார். ஆங்கிலேயர் அல்லாத பிற ஐரோப்பியர்களுடன் இரகசிய உறவுகளைக் கொண்டிருந்தார். இராபர்ட் கிளைவ் செய்திருந்த உடன்படிக்கையின்படி, வங்கத்தின் நவாபு கம்பெனியின் இராணுவ உதவிக்காகக் கம்பெனியின் பணியாளர்களுக்குப் பணம் செலுத்த வேண்டியிருந்தது. இதனைப் பயன்படுத்திக்கொண்டு கம்பெனியின் பணியாளர்கள் அதிகமாகச் சுரண்டினர். இதனால் தமது உள்நாட்டு நிர்வாகத்தை நடத்துவதற்குத் தேவையான நிதிவசதியினையும் பெறாத இக்கட்டான நிலையில் மீர்ஜாபர் இருந்தார். அதே நேரத்தில், ஆங்கிலேயர் அவருக்குச் செய்திருந்த உதவிக்கு நன்றி காட்டும் வகையில் கம்பெனியின் பணியாளர்கள் நடைமுறையிலிருந்த தீர்வைகளைச் செலுத்தாத நிலையில் வர்த்தகத்தை நடத்திக் கொள்வதற்கு அனுமதித்தார். இதனால் ஏற்பட்ட ஆபத்தை அவர் உணரவே இல்லை. எனினும், ஆங்கிலக் கம்பெனியினரின் பேராசைகள் யாவற்றையும் மீர்ஜாபரால் பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே, 1760ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கம்பெனியினர் மீர்ஜாபரைப் பதவியினின்றும் நீக்கி, அவருடைய மருமகனை மீர்காசிமை வங்கத்தின் நவாபாக நியமித்தனர். இது நடந்தபொழுது வான்சிட்டார்ட் என்பவர் வங்கத்தின் ஆளுநராய் இருந்தார். இவர் ஆளுநராக இருந்தபோதுதான் மிட்னப்பூர், பர்த்வான், சிட்டகாங் ஆகிய மாவட்டங்களும் நவாபால் கம்பெனிக்கு விட்டுக்கொடுக்கப்பட்டன.

மீர்காசிம் மிகவும் மாறுபட்ட தன்மையுடையவராக இருந்தார். இவர் திறமை வாய்ந்த நிர்வாகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் சரிந்திருந்த தமது நாட்டின் நிலையைச் சீர்ப்படுத்த அதிக அக்கறையுடன் செயல்படத் தொடங்கினார். ஆனால், விரைவில் இவர் ஆங்கிலேயருடன் நட்புறவை இழக்கவேண்டியிருந்தது. ஆங்கிலக் கம்பெனி வங்கத்திலிருந்து செய்து வந்த ஏற்றுமதி வணிகத்தின்மீது வரிகள் செலுத்த வேண்டியதில்லை என்று 1717-ல் பிறப்பிக்கப்பட்டிருந்த பேரரசு கட்டளை, விதிவிலக்களித்திருந்தது. ஆனால், தனிப்பட்ட முறையில் வணிகம் செய்துவந்த கம்பெனி ஊழியர்களுக்கும் டஸ்டக் (Dustuck) என்னும் இச் சலுகை கொடுக்கப்படவேண்டுமெனக் கோரினர். மீர்ஜாபரின் காலத்திலேயே இச் சலுகை மிகவும் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. தற்பொழுது மீர்காசிமின் காலத்தில் இது

மிகவும் மோசமாயிற்று. இதனால் நவாபிற்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய வருமானம் கிடைக்காமல் போயிற்று. எனவே, அவர் கல்கத்தா ஆளுநர் ஆட்சிமன்றத்திடம் முறையிட்டார். ஆனால், யாரும் அதைச் செவிசாய்த்துக் கேட்கவில்லை. இதனால் வெறுப்புற்ற நவாப் இந்திய வணிகர், ஆங்கில வணிகர் ஆகிய இரு சாராருக்கும் வரிகளைத் தள்ளுபடி செய்தார். இச் செயல் ஆங்கிலேய வணிகர்களைக் கூக்குரலிடச் செய்ததோடு அவர்களை பாட்னாவைக் கைப்பற்றும் முயற்சியிலும் ஈடுபடச்செய்து, சச்சரவுகள் முற்றி மோசமான நிலையை அடைந்தன. எனவே, மீர்காசிம் பாட்னாவைத் திறமையுடன் தம்மிடம் தங்க வைத்துக்கொண்டார். ஆங்கிலேயரின் முயற்சி முறியடிக்கப்பட்டது. இதன் பின் ஆங்கிலேயருக்கும் மீர்காசிமிற்கும் இடையே பகைமை உணர்ச்சிகள் வளர்ந்தன. மீர்காசிம் பல போர்களில் தோற்கடிக்கப்பட்டார். கடைசி மோதலுக்குப்பின் அவர் அயோத்திக்கு ஓடினார். ஆங்கிலேயர் மீர்காசிம் பதவியிலிருந்து விலக்கப்பட்டதாக அறிவித்து 1753-ல் மீர்ஜாபரை மீண்டும் வங்காள நவாபாக நியமித்தனர்.

தாம் இழந்த நிலையை மீண்டும் அடைவதற்காக மற்றொரு முயற்சியை மீர்காசிம் மேற்கொண்டார். அப்பொழுது மொகலாயப் பேரரசராயிருந்த இரண்டாம் ஷாஆலம், அயோத்தியின் நவாபு ஆகிய இருவரின் ஆதரவையும் அவர் பெற்றார். பின்னர் வங்கத்தை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டார். இதனால் மேற்கொள்ளப்பட்ட போரே பக்ஸார் போராகும். இப் போர் 1764-ல் நடைபெற்றது. இப் போரில் ஆங்கிலேயர் மேஜர் ஹெக்டர் மன்றோவின் தலைமையில் மீர்காசிமையும் அவரது கூட்டுப் படைகளையும் தோற்கடித்தனர். மீர்காசிம் போர்க்களத்திலிருந்து தப்பியோடி 1777ஆம் ஆண்டுவரை நாடோடியாக வாழ்ந்து உயிர் துறந்தார். ஆனால், பேரரசர் இரண்டாம் ஷாஆலம் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து கொண்டார். அயோத்தியின் நவாபான ஷூஜா-உத்-தௌலா ரோகில்கண்டுக்கு ஓடினார். ஆனால், ஆங்கிலேயர் அவரை விடவில்லை; அவரைக் கீழ்ப்படிய வைத்தனர். இப்படி மூன்று பெரிய இந்திய அரசுகள் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்ட உண்மையைப் பக்ஸார் போர் வெளிப்படுத்தி ஆங்கிலேயரின் ஆதிக்கம் வங்கத்தில் அசைக்க முடியாதபடி வேரூன்றச் செய்துவிட்டது. இதன் பயனாகவே பின்னர் ஆங்கிலேயர் ஆதிக்கமும் ஆட்சி அதிகாரமும் விழுதுகள் விட்டுப் பரவத் தொடங்கின. மேலும், பக்ஸார் போரின் விளைவாக வங்காள நவாப் பெயரளவில் மட்டும் அரசராக இருக்கும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டார். வங்கத்தில் ஆங்கிலேயர் ஆட்டிவைக்கும் பொம்மலாட்ட அரசாங்கமே நடைபெறும் அரசியல் நிலை உருவாயிற்று. மொக

லாயப் பேரரசைப் பொறுத்தவரை அதன் பேரரசரும் வலுவற்ற வராக்கப்பட்டார். இப்படி, இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசின் அடிக்கல்லை நாட்டும் வாய்ப்பைக் கிளைவுக்குப் பிளாசிப் போர் உருவாக்கிக் கொடுத்ததென்றால், பக்ஸார் போர் அதன் அடித் தளத்தை அகலமாக்கி, முன்னரே ஊன்றப்பட்ட வேர்களை மிகவும் உறுதிப்பாடுடையவை யாக்கியது.

1763-ல் மறுபடியும் பதவிக்கு வந்த மீர்ஜாபர் 1765-ல் காலமானார். இவருடைய மகன் நிஜாம்-உத்-தௌலா இவருக்குப் பிறகு பதவியேற்றார். கம்பெனி நியமனஞ் செய்கிற ஒருவரை முதலமைச்சராக நியமிக்கவேண்டும் என்றும், கம்பெனியின் ஒப்புதலின்றி அவர் பதவியிலிருந்து நீக்கப்படலாகாது என்றும் கல்கத்தா சபை இவரை வற்புறுத்தியது. எனவே நிஸாமத் (Nizamat) அல்லது இராணுவம், காவல் ஆகிய நிர்வாகப் பொறுப்புகள் கம்பெனிக்குக் கைம் மாறியதுடன் நவாப் வெறும் கையொப்ப முத்திரையாக இருக்கும் நிலைக்குத் தாழ்த்தவும்பட்டார். மேலும், முன்பு இருந்தவரையே மீண்டும் அமர்த்துவது அல்லது புதிய நவாபைப் பதவியில் அமர்த்துவது போன்ற தருணத்தைக் கம்பெனி ஊழியர்கள் கேள்விக்கிடமான வழிவகைகளில் பணம் பெறுகின்ற வாய்ப்பாக மாற்றியது. அத்தகைய பகற் கொள்ளை கம்பெனியின் தலைமை அரசாங்கத்தால் கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் இருந்தவரை மீண்டும் அமர்த்துவது அல்லது புதிதாக நியமனம் செய்வது போன்ற சந்தர்ப்பங்களில் பணம் பறித்துச் செல்வாக்கைப் பெறும் செயல், குன்றா ஊக்கத்துடன் தொடர்ந்து நடைபெற்றது. ஊழல் மலிந்த செயல்களும் கைக்கூலி பெறுதலும் கம்பெனி ஊழியர்கள் இழைத்துவந்த குற்றங்களாகும். ஊழல் என்னும் தூசு படிந்த கொட்டில்களைத் துடைத்துத் துப்புரவுசெய்ய இரண்டாவது தடவையாக வில்லியம் கோட்டையின் கவர்னராக இராபர்ட் கிளைவ் 1765-ல் பதவி ஏற்றார்.

இராபர்ட் கிளைவ் வில்லியம் கோட்டையின் ஆளுநராக இரண்டாம் முறை அனுப்பி வைக்கப்பட்டுச் செயல்பட்ட காலம் இரண்டாண்டுகளேயாகும். எனினும், இவ் விரண்டாண்டு காலத்தில்தான் வங்கத்து அரசாங்கத்தில் பெருத்த மாற்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன. பெருத்த ஊழல்களும் கம்பெனியின் நிர்வாகத்தில் தலைவிரித்தாடின. இராபர்ட் கிளைவ் அமைத்த வங்கத்து இரட்டை அரசாங்க முறையும் அவர் மேற்கொண்ட பல சீர்திருத்தங்களும் தனியொரு அதிகாரத்தில் கூறப்பட வேண்டிய செய்திகளாகும். 1767-ல் இராபர்ட் கிளைவின் ஆட்சிக் காலம் முடிந்து, வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆளுநராக நியமிக்கப்பட்ட

இடைக்காலத்தில் வெரல்ஸ்ட் (Verelst) என்பவரும் கார்டியர் என்பவரும் ஆளுநராகப் பதவியில் இருந்தனர். கார்டியர் வங்கத்தின் ஆளுநராய் இருந்தபொழுது கிழக்கிந்தியக் கம்பெனி ஹைதர் அலியுடன் போரிட்டுச் சென்னை உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டது. 1765ஆம் ஆண்டு முதல் கிழக்கிந்தியக் கம்பெனியின் வருவாய்களும் வங்கத்தில் அதிகரித்திருந்தன. இங்கிலாந்தின் அரச நிறுவனமும் உரியதொரு பங்கைக் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து பெற்றது. ஆனால், நாள்கள் செல்லச்செல்ல பிரிட்டிஷ் அரசாங்கம் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து அதிகத் தொகைகளை வசூலிக்க முற்பட்டதால், கம்பெனி கடன் தொகைகளை ஏற்கவேண்டிய தாயிற்று. எனவே, எந்த அளவிற்குச் சுரண்ட முடியுமோ அந்த அளவிற்குக் கம்பெனியினர் சுரண்டினர். ஆனால், அதுவும் போதாத நிலையில் கம்பெனி கடனாளியாகவேண்டிய நிலை ஏற்பட்டது. வங்கத்தின் பெரும்பாலான மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாத பொருள்களைப் பெற முடியாமலும், வேலைகளை இழந்தும் பராரிகளாக உலவவேண்டிய தாயிற்று. வெந்த புண்ணில் வேலைச் செருகியதைப்போல் 1770ஆம் ஆண்டில் வங்க மாநிலத்தில் பெரும் பஞ்சம் குடிகொண்டது. இதனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் இறந்தனர். இப்படிப்பட்ட கொடுமைகளுக்கும், இயற்கைக் கடுந் துயர்களுக்கும் வங்கத்து மக்கள் ஆட்பட்டிருந்த போதிலும், கிழக்கிந்தியக் கம்பெனியினர் தமது சுயதேவைகளைப் பெருக்கிக்கொண்டு மேலும் சுரண்டுவதிலேயே கவனம் கொண்டனர். கம்பெனியின் நிர்வாகம் நிலைபேறு மிக்கதாகவோ, நேர்மையானதாகவோ இருக்கவில்லை. இறுதியாக, வங்கத்து மக்களின் அவலக் குரல் ஆங்கிலேயரின் மனச்சாட்சியை உறுத்தும்படியாக இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் எதிரொலித்தது. ஹோரேஸ் வால்போல், கிழக்கிந்தியக் கம்பெனியினர் இந்தியாவில் செய்த அட்டகாசங்களைப் பாராளுமன்றத்தில் கடுமையாகத் தாக்கினார். பிட் என்பவரும் கிழக்கிந்தியக் கம்பெனியின் செயல்களின்மீது அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்குமாறு பெரிதும் சாடினார். இவற்றின் பயனாய்க் கிழக்கிந்தியக் கம்பெனியின் செயல்களை ஒழுங்குமுறையுடன் கட்டுப்படுத்தும் வகையில் பல சட்ட முறையான நடவடிக்கைகளைப் பாராளுமன்றம் மேற்கொண்டு, ஒழுங்கும் திறமையும் மிக்க இந்திய அரசாங்கத்தைக் கம்பெனியின் ஆட்சியின்கீழ் அமைக்க முற்பட்டது. முறையான ஓர் அரசியலமைப்பு வளர்ச்சியும் தொடங்கப்பட்டது. இதனைத் தழுவியே இந்திய அரசாங்கம் ஆங்கிலேயருக்கு உட்பட்டிருந்த இந்தியாவில் நெடுங்காலம் செயல்பட்டது. 1773-ல் இயற்றப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டமே இந்திய அரசியலமைப்பு வரலாற்றின் முதல் பெரும் முக்கியமான சட்டமாகும்.

வட இந்தியாவைப் பொறுத்தவரை பம்பாயைத் தவிர வங்கம், பீகார், ஒரிஸா, அயோத்தியின் ஒரு பகுதி, கோரா, அலகாபாத் மாவட்டங்கள்போன்ற பல இடங்களில் ஆங்கிலேயர் நிர்வாகம் நடத்தக்கூடிய உரிமையைப் பெற்றிருந்தனர். இவ் விடங்கள் யாவற்றிலும் குறிப்பாக வங்கத்தில் ஆங்கிலேயரது ஆட்சி ஊழல்மிக்க ஆட்சியாக நாற்ற மெடுத்திருந்தது. அதே சமயத்தில் தென்னிந்தியாவிலும் ஆங்கிலேயரின் ஆட்சி நேர்மை யானதாகவும் திறமையானதாகவும் இருந்தது என்று கூறிவிட முடியாது. கர்நாடக நவாபான முகமதுஅலி செல்வமற்ற கருவூலத் தைக் காத்துவந்தார். ஆங்கிலேயர் அந்த அளவிற்குச் சுரண்டினர். அதனால் கர்நாடக நவாபும் இலஞ்ச ஊழல் மிக்க நேர்மையற்ற ஆட்சியைத்தான் நடத்தவேண்டியிருந்தது. அவர் 18ஆம் நூற்றாண் டின் முடிவில் ஆங்கிலேயருக்கு 5 மிலியன் பவுன்களைக் கொடுக்க வேண்டிய நிலையில் கடனாளியாக இருந்தார். ஏறத்தாழ அதே சமயம் ஹைதராபாதும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சுற்றிச் சுழலும் ஒரு சார்பு கோளாகச் செயல்படும் நிலைக்கு வந்து விட்டது.அடுத்த நிலையில் ஹைதராபாத் ஆங்கிலேயரைக் கொழுக்க வைத்தது. 'ஓர் ஆங்கிலேயனால் இலாபமாக இந்தியாவில் பெறப் படும் ஒவ்வொரு ரூபாயும் என்றும் திருப்பிப்பெற முடியாததான இந்தியப் பேரிழப்பாகும்' என்று மிக வன்மையாக எட்மண்ட் பர்க்கினால் (Edmund Burke) ஆங்கிலப் பாராளுமன்ற விவாதத்தில் தாக்கப்படும் நிலையில், ஆங்கிலேயர் திரட்டிய செல்வமும் விரட்டிய இந்திய சுதேசி அரசுகளின் எண்ணிக்கையும் அமைந்தன.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளைச் செம்மையாகச் சிந்திப் பதன்மூலம் இந்தியாவில் ஆங்கிலேயராட்சி அமைவதற்கு என நாட்டப்பட்ட கால்கோள்கள் நேர்மையான, நியாயமான, நீதி சார்ந்த நியதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவாக அறியக்கிடக்கிறது. இங்கிலாந்திலிருந்த கம்பெனியின் இயக்குநர்கள் மேற்கொண்ட தவறான கொள்கை களும் இங்குக் கம்பெனியின் பணியாளர்கள் மேற்கொண்ட நேர்மையற்ற செயல்களும்கூட ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கம் இந் நாட்டில் கால்கொள்ள முடியாதவகையில் அதைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை. ஏன்? ஒரே வரியில் விடையைக் கூறவேண்டு மானால் நம் நாட்டு அரசுகளிடையே ஒற்றுமையின்றிப் போன தேயாம். அந்நிய ஆதிக்க நுழைவால் ஏற்பட இருந்த ஆபத்தை உணரும் திறம் நம்மவர்களிடம் இருந்தது. ஆனால், அதைத் தடுத்து முறியடிக்கக்கூடிய ஒற்றுமை இல்லை. எனவேதான், பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த பரங்கியர்கள் தமது பண்ணைக்காடாக இப் பாரதபூமியை ஆட்கொள்ள முடிந்தது.

6. இராபர்ட் கிளைவ் செய்த ஆரம்பகால ஆட்சிச் சீர்திருத்தங்கள்

1725-ல் ஷ்ராப்ஷயர் (Shropshire) என்னும் இடத்தில் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த இராபர்ட் கிளைவ் அசாதாரண மான ஆட்சியாளராகவும் கிழக்கிந்தியக் கம்பெனியின் வங்கப் பிரதேசங்களின் தலைமை நிர்வாகியாகவும் உயர்ந்த கதை எவருக்கும் வியப்பைக் கொடுக்கக்கூடிய தாகும். சிறு வயது முதற்கொண்டே படிப்பில் நாட்ட மில்லாத ஆனால், தைரியமும், அடிபணியாத் தன்மையும் கொண்ட விஷமக்காரராக இராபர்ட் கிளைவ் இருந்தார். தமது 17ஆம் வயதில் அவர் கிழக் கிந்தியக் கம்பெனியில் ஓர் எழுத்தராகப் (writer) பணியில் சேர்ந்து 1744ஆம் ஆண்டின் முடிவில் சென்னையை வந்தடைந்தார். ஆனால், அப்பொழுது கிழக்கிந்தியக் கம்பெனியின் எழுத்தர் வேலையின் தன்மை அவருடைய இளமைத் துடிப்பிற்கும் திறமைக்கும் உகந்த பணியைக் கொடுப்பதாய் இருக்கவில்லை. எனவே, அவர் மேற் கொண்ட பணியில் பாசத்தையும் பற்றையும் இழந்து இரு முறை தற்கொலை செய்துகொள்ளத் துணிந்ததும் உண்டு. ஆனால், ஆட்சியின் உச்சநிலைக்குச் செல்லக்கூடிய நல்வாய்ப்பும் தலைவிதியும் அவருக்கு இருந்தன. இதனால், அவர் தற்கொலை செய்துகொள்ள மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை என்று மாலீசன் (Malleson) என்னும் அறிஞர் குறிப்பிடுகிறார். சென்ற அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளை இங்கு நமது கவனத்தில் கொண்டால் இராபர்ட் கிளைவ் தென்னிந்தியாவில் ஆங்கிலே யருக்கும் ஃபிரெஞ்சுக்காரருக்கும் இடையே நடந்த பகைமைப் போட்டிகளிலும் போர்களிலும் திறமையான பங்கைப் பெற்று 'ஆர்க்காட்டின் வெற்றிவீரன்' என்று போற்றும்படியாக உயர்ந்த செய்தியும், வங்கத்தில் தமது நான்காண்டுப் பதவிக்காலத்தில் இந்திய அரசியல் வரலாற்றில் நிரந்தரமாகப் பதிவு செய்யப்படும் வகையில், பெருஞ்சிறப்பு மிக்கதும், திருப்பு முனையாக அமைந்தது மான சாதனைகளைப் புரிந்த் செய்தியும் நமக்கு விளங்கும். பிளாசிப்

போரில் அவர் பெற்ற பங்கும், கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பெற்றுக்கொடுத்த வாய்ப்புகளும், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிச் சிறப்பும் அவரை வங்கத்தின் ஆளுநராக உயர்த்தின. வங்கத்தின் நவாபுகளாக இருந்த சிராஜ்-உத்-தௌலா, மீர்ஜாபர் ஆகியோரை ஆங்கிலேய ஆட்சியினரின் கைப்பாவைகளாக இவர் மாற்றியதால் கிழக்கிந்தியக் கம்பெனியினர் பெற்ற சலுகைகளும் ஆதாயங்களும் ஏராளம்; ஏராளம். நான்காண்டுகள் கம்பெனியின் வங்கப்பிரதேசத்தின் ஆளுநராய் ஆட்சி நடத்தித் தமக்குப்பின் ஆளுநராக வரவிருந்த வான்ஸிட்டார்ட் என்பவர், வங்க மாநிலத்தின் செயல்களில் நிலையான கவனத்தை எப்பொழுதும் செலுத்தவும், கம்பெனி நிர்வாகத்தில் ஊழல்களும் குற்றங்களும் புகுந்துவிடாமல் காக்கவும்கூடிய நல்வழியை அவருக்குக் காட்டி விட்டு இலண்டன் சென்றார். ஆனால், 1764ஆம் ஆண்டு வங்கத்தில் நடந்த குழப்பங்களும், கம்பெனிப் பணியாளர்களின் தாறுமாறான நிர்வாகமும், இராபர்ட் கிளைவை இரண்டாம் முறையாக வங்கத்தின் ஆளுநராகத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டிய அவசியத்தைக் கம்பெனியின் தலைமை நிர்வாகத்துக்கு உண்டாக்கியது. எனவே, இராபர்ட் கிளைவ் வங்கத்தை வந்தடைந்து கல்கத்தாவிலிருந்த வில்லியம் கோட்டையின் ஆளுநராக 1765ஆம் ஆண்டு மே மாதம் மூன்றாம்நாள் பதவியில் சேர்ந்தார். அவர் 1767ஆம் ஆண்டு வரை இப் பதவியை வகித்தார். இக் குறுகிய காலமான இரண்டாண்டுகளில் மேற்கொண்ட சீர்திருத்தங்களும் புதுமையாக வங்கத்தில் புகுத்திய இரட்டை அரசாங்க (Double Government) முறையும் இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சிக்கும் அதன் வளர்ச்சிக்கும் வித்தூன்றி ஆக்கமும் ஊக்கமும் அளித்தன. இவரால் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டை அரசாங்கம் வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆளுநராக நியமிக்கப்பட்ட காலம் வரை செயலில் இருந்தது. இவற்றில் இராபர்ட் கிளைவ் செய்த சீர்திருத்தங் களையும் அவர் பின்பற்றிய கொள்கையையும் முதலில் அறிந்து கொண்டு பின்னர், இரட்டை அரசாங்கத்தைப்பற்றிய செய்தி களில் கவனத்தைச் செலுத்தலாம்.

இராபர்ட் கிளைவ் செய்த உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்

1765-ல் இராபர்ட் கிளைவ் ஆளுநராகப் பதவி வகித்தபொழுது வங்காளத்தின் நவாபாக நஜீம்-உத்-தௌலா என்பவர் பதவியில் அமர்த்தப்பட்டிருந்தார். இவர் 25 இலட்ச ரூபாய்களைக் கம்பெனி யினருக்குக் கையூட்டாகச் செலுத்தியதன் பயனாகவே தமது நவாப் பதவியைப் பெற்றிருந்தார். இவர் கொடுத்த 25 இலட்ச ரூபாய் களைக் கம்பெனியின் வில்லியம் கோட்டை ஆட்சிமன்றத்தின் உறுப்பினர்கள் பங்கிட்டுக்கொண்டனர். 'இராபர்ட் கிளைவ்

வங்கத்தை வந்தடைந்தபோது, கல்கத்தா ஆளுநர் ஆட்சி மன்றத்தில் ஒரு தலைவரும் பதினறு உறுப்பினர்களும் இருந்தனர். ஆனால்,அவ்வுறுப்பினர்களில் பெரும்பாலோர் தமது சுயபொறுப்பில் மேற்கொண்டிருந்த வர்த்தகச் செயல்களில் அக்கறை காட்டும் வகையில் வங்க மாநிலத்தின் பல்வேறு இடங்களில் இருந்தனர். இதனால் கம்பெனியின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்த வங்கத்து அரசாங்கத்தின் அன்றாடப் பணியை அவர்கள் யாவரும் ஒருசேர நடத்த முடியவில்லை. எனவே, ஏழு அல்லது எட்டு உறுப்பினர்களாலேயே அரசாங்கத்தின் நிர்வாகம் பரிபாலனம் செய்யப்பட்டு வந்தது. இதனால் வங்க அரசாங்கப் பணி பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. ஆட்சிமன்றத்தின் உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் வர்த்தகத்தை மேற்கொள்ளவும் கம்பெனியின் ஏஜென்டுகள் (agents) என்ற முறையில் தனிப்பட்ட ஆதாயத்தைப் பெற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருந்ததால், அவர்கள் ஊழலும் குற்றமும் மிக்க சுயநலச் செயல்களில் ஈடுபட்டவண்ணம் இருந்தனர். அதே நேரத்தில் ஆளுநர் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் அவர்கள் தம் திட்டங்களை ஆதரித்து வாக்களிக்கக்கூடிய நிலையில் இருந்ததாலும் ஆட்சிமன்றத்தின் பிற உறுப்பினர்களின் ஆதரவை எப்பொழுதும் பெற்றிருந்ததாலும், ஆட்சிமன்றத்தின் குற்றவிசாரணை எல்லையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் நிலையிலிருந்தனர்.'[1]

ஆளுநர் ஆட்சிமன்றத்திற்கு அடுத்த நிலையில் இருந்த கம்பெனியின் சாதாரணப் பணியாளர்கள்கூட நன்னடத்தையுடன் செயல்களை மேற்கொண்டிருக்கவில்லை. இவர்களுடைய சுயநலத் தன்மையையும் கொடுங்கோன்மைப் போக்கையும் விளக்கும் வகையில் 1762ஆம் ஆண்டில் வங்காள நவாபாய் இருந்த மீர்காசிம் பின்வரும் செய்திகளைக் கம்பெனியின் ஆட்சிமன்றத்திற்கு எடுத்துக் கூறினர். வங்கத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமத்திலும் கிழக்கிந்தியக் கம்பெனியின் சாதாரணப் பணியாளர்கள்கூடப் பத்து அல்லது இருபது புது வணிகச் சாலைகளையும் தொழிற்சாலைகளையும் அமைத்திருந்ததோடு, அவர்கள் நிறம் மாறும் பச்சோந்திகளாக நேர்மையற்ற செயல்களில் ஈடுபட்டிருந்தனர். மேலும், வியாபாரிகளையும் நாட்டின் பிற மக்களையும் தம் செயல்களின்மூலம் கொடுமைக்கு உள்ளாக்கினர். அவர்கள் செய்த அட்டூழியங்கள் பொறுக்கமுடியாதனவாக இருந்தன. அவர்கள் மக்களைக் கசக்கிப் பிழிந்து பெற்ற கையூட்டுகளும் பொருந்தாத் தீர்வைகளும் தாங்க

[1] Malleson Colonel, G. B. The founders of the Indian Empire, Lord Clive, pp. 369–70.

முடியாதவையாயிருந்தன. சுயநலத்தோடு செயல்களை மேற்கொண்டிருந்த கம்பெனியின் பணியாளர்கள் பல வகையினராக இருந்ததால் அவர்கள் சம்பந்தப்பட்டிருந்த ஊழல்களும் பலதரப் பட்டவையாய் இருந்தன. உதாரணமாக, பர்த்வான் என்னும் இடத்திலிருந்த கம்பெனியின் ஆட்சிமன்றத்தின் பிரதிநிதியான துணைக்காப்பு (Resident) ஆளுநரும் அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்களும் கம்பெனியிடமிருந்து பெற்ற ஊதியங்களைத் தவிர, பர்த்வான் அரசரிடமிருந்து எண்பதாயிரம் ரூபாய்களைப் பெற்றனர் என்று பெர்ஸிவல் ஸ்பியர் (Percivel Spear) என்னும் வரலாற்றுப் பேராசியர் 'நவாபுகள்' என்னும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இப்படி ஆங்கிலேயர் குற்ற ஊழல்களுக்கு இலக்கான வகையில் நேர்மையற்ற வழியில் ஆதாயங்களைப் பெறும் நிலையில் இருந்தனர்.

ஃபாரஸ்ட் (Forrest) என்னும் வரலாற்றுப் பேராசிரியர் குறிப்பிடுவது போலவும் நாம் முன்னொரு இடத்தில் அறிந்துள்ளதைப் போலவும் கம்பெனியின் பணியாளர்கள் மிகக் குறைந்த ஊதியங்களைப் பெற்று வந்தனர். இதனால் அவர்கள் நேர்மையற்ற வழிகளில் வருவாய்களைப் பெருக்கிக்கொள்ள வேண்டியிருந்தது. கம்பெனிப் பணித்துறையின் பல இலாக்காக்களில் பொறுப்பு வாய்ந்த முக்கிய பதவிகளுக்குத் தகுதி, நேர்மையுடன் கூடிய முதுநிலைப் பணியாளர்களை நியமிப்பதில் பற்றுக் குறையும் இருந்தது. இதனால் கம்பெனியின் இளநிலைப் பணியாளர்களை உயர் பதவிகளில் அமர்த்த வேண்டியிருந்தது. இராபர்ட் கிளைவ் 1766 ல் இத்தகைய குறைபாடுகளைக் கண்ணுற்றுப் பின்வரும் செய்திகளைக் கம்பெனியின் மேலிடத்திற்கு எழுதினார். 'வங்கத்துக் கம்பெனியின் அலுவலகத்தில் மூன்றாண்டுக் கால அனுபவத்தைக்கூடப் பெறாத ஓர் இளைஞர், செயலாளரின் பணிகளை மேற்கொண்டிருந்தார். கீழ்மட்ட நிலையில் இருந்த ஓர் எழுத்தாளர் கணக்காயரின் (accountant) பொறுப்புகளைப் பெற்றிருந்தார். 20 இலட்ச ரூபாய்களைப் பட்டுவாடா செய்யக்கூடிய பொறுப்பு சாதாரண எழுத்தரிடம் இருந்தது.'[1] மேலும் கம்பெனியின் இரகசியங்களைக் காப்பாற்றிச் செயல்படும் தன்மையற்ற நிலையில் தாறுமாறான முறையில் பதவிகள் பலருக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. இராபர்ட் கிளைவ் இத்தகைய குறைபாடுகளையும் வேறு பல குற்றங் குறைகளையும் களைந்தெறிய வேண்டிய பொறுப்பைப் பெற்றார்.

எட்வர்ட் தாம்ஸன், ஜி.டி. காரெட் (Edward Thompson and G.T.Garratt) என்னும் அறிஞர்கள் குறிப்பிடுவதுபோல், 'இராபர்ட்

1 Bengal Select Committee to the Company, 24, March 1766 Dodwell p. 177.

கிளைவ் கல்கத்தாவை 1765-ல் வந்தடைந்தபோது கல்கத்தா நகரம் மிகவும் ஒழுக்கக் கேடான இடங்கள் பலவற்றுள் ஒன்றாக இருந்தது. கம்பெனியின் பணியாளர்கள் சிற்றின்பப் பற்றுள்ள இழிகாமம் (Licentiousness) கொண்டவர்களாகவும், எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்குப் பெருஞ் செல்வந்தர்களாகவும், பேராசை பிடித்து அலைந்தவர்களாகவும் இருந்தனர்'.[1]

இறைமைக் கோட்பாட்டு ரீதியாக வங்காள நவாபு வங்கத்தின் சிற்றரசாக இருந்தார். ஆனால், அவர் இராபர்ட் கிளைவ் இரண்டாம் முறையாக ஆளுநராகப் பதவி ஏற்க வந்த போது செல்வம் ஒன்றையே சேர்க்கும் சிந்தையைக் கொண்டிருந்த கம்பெனியின் பணியாளர்களிடம் தமது ஆட்சிப் பொறுப்புகள் சிக்கித் தவிக்குமாறு விட்டிருந்தார். தமது சிற்றரசில் சட்டமும் நீதியும் கம்பெனியின் பணியாளர்களால் சீரழிக்கப்படுவதை உதவியற்ற நிலையில் அவர் காணவேண்டியிருந்தது. எனவே, வங்காள நவாபு எச் சீர்திருத்தத்தையும் சீரமைப்பையும் மேற்கொள்ள முடியாத நிலையில் நாட்டின் ஆட்சிப் பொறி முடக்கத்தைப் பெற்றிருந்தது. இவற்றைச் சரிசெய்ய வேண்டிய பொறுப்பை இராபர்ட் கிளைவ் உணர்ந்தார்.

மேற்கூறிய குறைபாடுகளைத் தவிரத் தாம் இரண்டாம் முறையாக ஆளுநராகப் பதவியேற்க வந்தபொழுது இராபர்ட் கிளைவ் சமாளிக்கவேண்டிய மற்றுமொரு முக்கியப் பிரச்சினையும் இருந்தது. அப் பிரச்சினை இராணுவத் துறையின் அதிகாரிகளுக்குத் தமது அலுவல் நிமித்தம் வாழ்க்கைச் செலவுத் தரத்தைச் சரி செய்துகொள்வதற்கென்று கொடுக்கப்பட்ட ஈட்டுப்படித் தொகையைப் பற்றியதாகும். இதனை உருது மொழியில் 'பேட்டா' (Batta) என்றும் கூறுவதுண்டு. இஃது இராணுவ வீரர்களுக்குப் படைத்துறையில் கொடுக்கப்பட்ட உதவிப் படிப் பணமாகும். இராணுவ வீரர்களுக்கு இப்படிச் செலவைக் கொடுக்கும் பழக்கம் கர்நாடகப் போர்க் காலங்களில் சந்தா சாகிபாலும் முகமது அலியாலும் புகுத்தப்பட்டது. மேற்கூறிய இருவரும் முறையே ஆங்கிலேய மற்றும் ஃபிரெஞ்சுப் படையினரைத் தத்தம் போர்ப்பணியில் அமர்த்தித் தமக்கு உதவும் பொருட்டு இப் பழக்கம் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி அவர்கள் பெருந்தொகைகளைப் படிப்பணமாக அந்நியச் சிப்பாய்களுக்குக் கொடுத்தனர். வங்கத்திலும் இராணுவம் நிறுவப்பட்ட பின் போர்க் காலத்தில் அந்தப்படி கொடுக்கப்பட்டு வந்தது. மேலும்,

[1] Rise and Fulfilment of British Rule in India, 1962. p. 106.

இராணுவ அதிகாரிகளும் சிப்பாய்களும் போரில் ஈடுபடாமல், போர்ச் செயல்களைக் கண்காணிக்கும் வெளிப்புற நிலையங்களில் அமர்த்தப்பட்ட பொழுது அவர்களுக்கு அரைப் படிப்பணம் (half batta) வழங்கப்பட்டது. பிளாசிப் போரில் மீர்ஜாபர் ஆங்கிலேயரிடமிருந்து பெற்ற இராணுவ உதவிக்கு நன்றி காட்டும் வகையில், கம்பெனியின் அதிகாரிகளுக்குப் போருக்குப் பிறகும் முழுப் படிப்பணத்திற்கு இணையான தொகையைக் கொடுத்தார். இத் தொகையைக் கம்பெனியின் இராணுவ அதிகாரிகள் மீர் ஜாபருக்கு உதவியாகப் போர்க்களத்தில் தங்கியிருந்த பொழுதெல்லாம் பெற்றுவந்தனர். அஃதாவது, இராபர்ட் கிளைவ் வங்கத்திற்கு வந்து சேர்ந்தபொழுது நேரடியான போர்ச் செயல்களில் ஈடுபடாமல், போர்க்களத்தில் தங்கியிருந்து மீர்ஜாபருக்கு உதவியதால் கம்பெனியின் இராணுவ அதிகாரிகள் முழுப் படிப்பணத்தைத் தவிரத் தமது அரைப் படிப் பணத்தையும் சேர்த்து இரட்டைப் படிப்பணத்தைப் பெற்ற நிலையில் இருந்தனர்.

இராணுவ அதிகாரிகளுக்குப் படிப் பணம் கொடுக்கும் வழக்கத்தை மீர்காஸிம் நவாபாக வந்தபொழுதும் தொடர்ந்து மேற்கொண்டார். எனினும், கம்பெனியின் இராணுவ அதிகாரிகளுக்குப் படிப் பணத்தைக் கொடுக்கக்கூடிய திறமையையும் வலிவையும் அவர் விரைவில் இழந்தார். எனவே, இச் செலவுகளை ஈடுசெய்து கொள்ளும்படி கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மிட்னப்பூர், சிட்டகாங், பர்த்வான் ஆகிய மூன்று மாவட்டங்களைப் பட்டயம் செய்து கொடுத்தார். இம் மூன்று மாவட்டங்களையும் கம்பெனியினர் பெற்றுக்கொண்டதும் அம் மாவட்டங்களிலிருந்து திரட்டிய வருவாய்களைக் கம்பெனியின் இயக்குநர்கள் தம்முடைய ஆதாயங்களாக வைத்துக்கொண்டு இராணுவ அதிகாரிகளுக்குப் படிப் பணம் கொடுக்கும் வழக்கத்தை நிறுத்துமாறு உத்தரவுகளைப் பிறப்பிக்கலாயினர். இதனால், கம்பெனியின் இராணுவ அதிகாரிகள் மன உளைச்சலைப் பெற்றிருந்தனர். இத்தகு சூழ்நிலைகள் நிலவிக் கொண்டிருந்த சமயத்தில்தான் இராபர்ட் கிளைவ் வங்கத்தின் ஆளுநராக இரண்டாம் முறை நியமிக்கப்பட்டுப் பதவி ஏற்க வந்தார். இதுவரை கூறப்பட்ட வங்கத்தின் உள்நாட்டுச் சிவில், இராணுவப் பிரச்சினைகளைத் தவிரப் பக்ஸார் போரில் இருக்குமிடம் தெரியாமல் தூக்கி யெறியப்பட்டிருந்த மொகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலம், அயோத்தியின் நவாப் வஸீர் எனப்பட்ட தலைமை அமைச்சர் ஆகிய இருவரும் பலம் குன்றி ஆங்கிலேயருடன் ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்துகொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவர்களோடு இராபர்ட் கிளைவ் பொருத்தமான உடன்படிக்கைகளைச் செய்துகொண்டு இரட்டை

அரசாங்கத்தை அமைக்கக்கூடிய வகையில் அதிகாரங்களையும் செல்வங்களையும் பெற்ருர். மேலும், தாம் பதவிக்கு வந்த சமயத்தில் இருந்த குறைபாடுகளை அகற்றும் வகையில் கீழ்க் காணும் பல சீர்த்திருத்தங்களை மேற்கொண்டார்.

குழப்பங்களும் சீர்கேடுகளும் கம்பெனியின் நிர்வாகச் செயல்களில் மலிந்திருந்ததாலும், அவற்றை அகற்றி நல்லதொரு புனரமைப்பைச் செய்யும்படி முழு அதிகாரம் இராபர்ட் கிளைவுக்கு கொடுக்கப்பட்டிருந்ததாலும், இராபர்ட் கிளைவ் இரண்டாம் முறையாக வங்கத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியினரின் இந்திய ஆட்சியில் பல சீர்த்திருத் தங்களை எளிமையாகப் புகுத்த முடிந்தது. இவர் செய்த சீர்திருத் தங்களில் முக்கியமானதும் முதன்மையானதும் ஆளுநர் ஆட்சி மன்றத்தின் உறுப்பினர்களைப் பற்றியதாகும். ஆளுநர் மன்றத்தின் உறுப்பினர்கள் பலதரப்பட்ட பதவிகளையும் ஏஜென்ஸிகளையும் கொண்டிருந்தனர். இதனுல், அவர்கள் கம்பெனியின் நிர்வாகச் செயல்களைச் சரிவரவும் சுயநல அக்கறையின்றியும் செயல்படுத்த முடியாத நிலையில் இருந்தனர். எனவே, இந் நிலையை மாற்றி யமைக்க இராபர்ட் கிளைவ் முடிவெடுத்தார். அதன்படி, ஒருவர் ஆளுநர் ஆட்சிமன்றத்தின் உறுப்பினராய் இருக்கும் காலத்தில் அவர் உறுப்பினர் பதவியை வகிப்பதைத் தவிர வேறு எந்தவித மான பதவியையும், முகவர் (agent) என்ற பதவியையும் எக் காரணம் கொண்டும் ஒரே சமயத்தில் பெற்றிருக்கக்கூடாது என்று விதிகளை இயற்றினுர். இப்படிப் பிறப்பிக்கப்பட்ட புது விதிகளின் கீழ் ஆட்சி மன்ற உறுப்பினர் பதவியும் முகவர் பதவியும் ஒருவரே மேற்கொள்ள முடியாதபடி பிரிக்கப்பட்டிருந்ததால், ஆட்சி மன்ற உறுப்பினர்கள் கம்பெனியின் நிர்வாகத்திலும் மற்றும் பல பிரச்சினைகளிலும் தமது அன்ருடக் கவனத்தைச் செலுத்தித் தலைமை யிடத்திலேயே (head quarters) செயல்படவேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டனர். இவ் விதிகளினின்றும் தலைமைப் படைத் தளபதி ஒருவர் மட்டுமே விலக்களிக்கப்பட்டார். ஏனெனில், அவர் இராணுவத்துடன் அடிக்கடி போர்க் களங்களில் பணிகளை மேற்கொள்ள வேண்டியவரா யிருந்தார். மேலும், பதினுறு உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஆளுநர் ஆட்சி மன்றத்தை எண்ணிக்கையைக் குறைத்துப் பன்னிருவர் கொண்ட தாக மாற்றி யமைத்தார். பேராசிரியர் மாலீசன் கூறுவதுபோல் 'தம்முடைய மதிப்புலம் வாய்ந்த ஆளுநர் மன்றத்தைப்பற்றிய சீர்திருத்தங்கள் இங்கிலாந்து நாட்டில் பெருந் தாக்குதல்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் உள்ளாகும் என்றும், தம் சீர்திருத்தங்களுக்கு ஆட்சி மன்ற உறுப்பினர்களால் எதிர்ப்பு மேற்கொள்ளப்படாது

என்றும் கிளைவ் எண்ணினார். ஆனால், அவர் எதிர்பார்த்ததற்கு மாறாகத் தமது ஆட்சி மன்றப் பொறுக்குக் குழுதான் (Select committee) எதிர்ப்பைக் காட்டியது. எனினும், இராபர்ட் கிளைவ் தமது ஆட்சி மன்றப் பொறுக்குக் குழு காட்டிய எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், கம்பெனியின் நிர்வாக நலன் கருதி முனைப்புடன் அவைகளைச் செயல் படுத்தினார்.'[1]

ஆளுநர் ஆட்சிமன்றத்தின் உறுப்பினர்களும், கம்பெனியின் பிற அதிகாரிகளும், பணியாளர்களும் வங்காள நவாபிடமிருந்தும் அவரது குடிமக்களிடமிருந்தும் நேர்மையற்ற வழிகளில் பரிசுப் பொருள்களையும், கையூட்டுகளையும் மற்றும் பலதரப்பட்ட ஆதாயங்களையும் பெற்று வந்தனர். இப் பழக்க வழக்கங்களை இராபர்ட் கிளைவ் பெரிதும் வெறுத்தார். கம்பெனியின் நிர்வாகத்தில் ஊழல்கள் தோன்றி வளர்வதற்கு அவையே மூலகாரணமாகும் என்று உணர்ந்து அவற்றை ஒழிப்பதற்கான சீர்திருத்தத்தைத் துணிவுடன் மேற்கொண்டார். இதன்படி கம்பெனியின் அதிகாரிகளும் பணியாளர்களும் மேற்சொல்லப் பட்ட பழக்கங்களை மேற்கொள்ளாமல் இருக்கும்பொருட்டு இணை உடன்படிக்கைகள் அல்லது முத்திரை ஒப்பந்தங்களில் கையொப்ப மிடுமாறு பணித்தார். ஆனால், கம்பெனியின் பணியாளர்களோ கிளைவினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் விரைவில் திரும்பப் பெறப்பட்டுவிடும் என்று எண்ணினர். ஏனெனில், இராபர்ட் கிளைவே முதலில் இத்தகைய பழக்கங்களில் வெகுவான ஈடுபாடு களைக் கொண்டிருந்து பெருஞ் செல்வந்தராய் இருந்தார் என்பதை அவர்கள் மறக்கவில்லை. மேலும், மேற்கண்ட இணை உடன் படிக்கையைப்பற்றிய உத்தரவை அவர் பிறப்பித்த சமயத்தில் கூட, அவர் வங்காள நவாபிடமிருந்து பெற்றிருந்த ஜாகீர்கள் மூலம் 30,000 பவுன்களை ஆண்டு வருவாயாகப் பெற்றுக் கொண்டிருந்தார். இராபர்ட் கிளைவ் தமது முதல் ஆளுநர் பதவிக் காலத்தில் பரிசுப் பொருள்களையும் பல ஆதாயங்களையும் பெற்றதைச் சுட்டிக் காட்டி அவருடைய ஆட்சிமன்ற உறுப்பினர் களில் ஒருவரா யிருந்த ஜான்ஸ்டன் (Johnstone) என்பவர் இராபர்ட் கிளைவ் பிறப்பித்த உத்தரவை எதிர்த்தார். ஆனால், இவ் வெதிர்ப்பிற்குத் தக்க பதிலடியான மறுப்புரையை இராபர்ட் கிளைவ் கொடுத்தார். 'அப்போது வங்கத்தில் நிலவிய நிலவரங் களுக்கு ஏற்பக் கம்பெனியின் பணியாளர்கள் யாவரும் அத்தகைய பழக்க வழக்கங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்றும், ஆனால், தற்பொழுது வங்கத்தின் செல்வநிலை

1 Malleson, Lord Clive p. 369—70.

அவற்றிற்கு இடம் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை என்றும், இதனால் கம்பெனியின் பணியாளர்கள் சலுகைகளைப் பெறும் பழக்கம் எல்லை மீறியதாக உள்ளது என்றும் கூறி, அப் பழக்கங்கள் நீக்கப்படவேண்டும்' என்று இராபர்ட் கிளைவ் தமது ஆட்சி மன்ற உறுப்பினர்களிடம் வாதித்தார். எனவே, கம்பெனியின் பணியாளர்கள் பரிசுப் பொருள்களையும், ஆதாயங்களையும் பெறுவதில்லை என்ற கட்டுப்பாட்டிற்கு இணங்கிக் கையொப்ப மிட்டே தீரவேண்டும் என்று கூறி, இராபர்ட் கிளைவ் அதனைச் செயல் படுத்தினார்.

அதேசமயம், 'குறைவான ஊதியங்களைப் பெறுவோர் நிறைவான பணிகளைச் செய்ய முடியாது' என்பதையும் இராபர்ட் கிளைவ் உணர்ந்திருந்தார். ஏனெனில், நாம் முன்னரே கண்டுள்ளது போல் கம்பெனிப் பணியாளர்கள் மிகக் கேவலமான குறைந்த ஊதியங்களையே பெற்றுவந்தனர். ஆளுநர் ஆட்சிமன்றத்தின் உறுப்பினரின் ஆண்டு ஊதியமான 300 பவுன்கள் மிகக் குறைந்த தொகையாகும். கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை நிர்வாக இயக்குநர்கள் இதில் எக் கவனத்தையும் செலுத்தாமல் இருந்தனர். அதனால்தான் கம்பெனியின் பணியாளர்கள் நேர்மையற்ற வழிகளில் பணத்தைச் சம்பாதிக்க முடிந்தது. தாம் பெற்ற குறைந்த ஊதியத்தின் காரணமாகவே அவர்கள் ஆட்சிமுறை ஒழுங்கை (administrative morale) இழந்து இருந்தனர். கம்பெனிப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த உரிமங்களும் அனுமதிச் சீட்டுகளும் தவறாகப் பயன்படுத்தப்பட்டன. கல்கத்தாவிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் இருந்த இந்தியர்கள்கூடப் போலியான உரிமங்களையும் அனுமதிச் சீட்டுகளையும் தயாரித்து அரசை ஏமாற்றிச் சுங்கத் தீர்வையைச் செலுத்துவதைத் தவிர்த்து, சட்டத்திற்குப் புறம்பான வர்த்தகக் காரியங்களை மேற்கொண்டனர். இவற்றால் ஏற்பட்ட வணிக ஒழுங்கீனங்களைத் தடுத்து நிறுத்தும் வகையில் தமது ஆட்சிமன்ற பொறுக்குக் குழுவைக் கலந்தாலோசித்த பின் குறிப்பிட்ட ஒரு சில அதிகாரிகளாலேயே வர்த்தகம் மேற்கொள்ளப்படுவதற்கான உரிமங்களும் அனுமதிச் சீட்டுகளும் வழங்கப்பெறும் என்று இராபர்ட் கிளைவ் விதித்தார். இதனால் நேர்மையற்ற வர்த்தகச் செயல்கள் மேற்கொள்ளப் படுவது தடுத்து நிறுத்தப்பட்டது.

மேற்சொல்லப்பட்ட சீர்திருத்தங்களின் விளைவாகக் கம்பெனியின் பணியாளர்கள் சட்டமுறைக்கு ஒவ்வாத ஆதாயங்களையும் இலாபப் பலன்களையும் பெறமுடியாமல் கட்டுப்படுத்தப்பட்டனர். இதனால் கம்பெனியின் பணியாளர்கள் தம் ஆட்சிச் செயல்களில் நேச பாசங்களை அதிகமாகக் காட்டவில்லை. இத்தகைய மனநிலை

பணியாளர்களிடம் உருவாகி யிருந்தபொழுது இராபர்ட் கிளைவ் மற்றுமொரு சீர்திருத்தத்தைப் புகுத்தினார். இதன்படி தகுதிகளும் பொருத்தங்களும் இல்லாத நிலையில் கம்பெனியின் முதுநிலை நியதி காரணமாக மட்டும் உயர்பதவிகளைப் பெற்றிருந்த அனுபவமற்றவர்களையும் இளநிலையாளர்களையும் அப் பதவிகளிலிருந்து மாற்றினார். அனுபவத் தேர்ச்சியும் தகுதிகளும் கொண்ட முதுநிலை அதிகாரிகளைச் சென்னையிலிருந்த கம்பெனியிடமிருந்து பெற்று, அவர்களுக்கு வங்கத்தில் உயர்பதவிகளைக் கொடுத்தார். இதனால் கம்பெனியின் வங்கத்துப் பணியாளர்களிடம் மனக்கசப்பு அதிகமானது. அவர்கள் கண்டனக் குரல் எழுப்பி எதிர்ப்புச் செயல்களையும் மேற்கொண்டனர். அவர்கள் எதிர்ப்பு அணி ஒன்றையும் அமைத்து அதன்மூலம் இராபர்ட் கிளைவிற்கு எதிர்ப்புத் தீர்மானங்களை அனுப்பி, அவருடைய உத்தரவுகளைப் புறக்கணிக்கவும் செய்தனர். எனினும், பேராசிரியர் டாட்வெல் அவர்கள் குறிப்பிடுவதுபோல், 'இராபர்ட் கிளைவ் மிகவும் உறுதியுடன் நடந்துகொண்டார். பலன்மிக்க பதவியை இழக்கச் செய்தல், உரிம அனுமதிச் சீட்டுகளை மறுத்தல், பணியாளர்கள் விரும்பாத இடங்களுக்குப் பணியின் நிமித்தம் அவர்களை மாற்றுதல் ஆகிய நடவடிக்கைகளை இராபர்ட் கிளைவ் மேற்கொண்டதால் கம்பெனியின் பணியாளர்கள் முடிவில் கிளைவின் சீர்திருத்தங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதாயிற்று. இதனால் கம்பெனியின் பணியாளர்கள் காட்டிய எதிர்ப்பு அடங்கியது. அதே நேரத்தில் கம்பெனியின் பணியாளர்களின் வருவாய்களை நேர்மையான முறையில் உயர்த்தி, அவர்கள் ஊழல் குற்றங்களுக்கு இரையாவதைத் தடுக்கக்கூடிய முயற்சிகளையும் இராபர்ட் கிளைவ் மேற்கொண்டார்.'[1]

வங்கத்தில் நடைபெற்று வந்த உப்பு வியாபாரம் (salt trade) கம்பெனி அரசாங்கத்தின் முற்றுரிமையாகவே தொடர்ந்து இருந்து வந்தது. இதனை நல்ல முறையில் நிர்வகித்து அதன்மூலம் பெறப்படும் இலாபங்களைக் கம்பெனியின் தலையாய சிவில் மற்றும் இராணுவப் பணியாளர்களின் படித்தொகைகளாகச் செலுத்த இராபர்ட் கிளைவ் விரும்பினார். எனவே, இராபர்ட் கிளைவ் 'வர்த்தகக் கழகம்' ஒன்றை (society for trade) ஆட்சிமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுச் செயல்படுமாறு அமைத்தார். கம்பெனியின் முற்றுரிமையாக இருந்த உப்பு வியாபாரம் இக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இக் கழகத்தில் பங்குகளை வாங்குமாறு சிவில் மற்றும் இராணுவப் பணியாளர்களை

[1] Dodwell. The Cambridge History of India, volume V. p. 178.

அனுமதித்து வரவேற்றார். இதனால் கம்பெனியின் பணியாளர்கள் நேர்மையான இலாபத்தைப் பெறக்கூடியதும், பத்துமடங்கு விலை குறைந்த நிலையில் இந்திய மக்கள் பொருளை வாங்கக்கூடியதுமான நன்மைகள் கிட்டின. இக் கழகத்தை ஆரம்பித்து ஊழலற்ற, குற்றம் குறைகளுக்கு இரையாகாத நல்ல நிர்வாகம் நடைபெறத் தமக்குப் பின்னால் வந்த காரன்வாலிஸ் போன்ற தலைமை ஆளுநர் களுக்கு இராபர்ட் கிளைவ் வழிகாட்டினார். ஆனால், இந் நல்ல திட்டத்திற்குக் கம்பெனியின் தலைமை இடத்து இலண்டன் இயக்கு நர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இராபர்ட் கிளைவினால் புகுத்தப்பட்டிருந்த இத் திட்டம் கம்பெனியின் பணியாளர்களைத் தனிப்பட்ட முறையில் வர்த்தகத்தை மேலும் வளர்த்துக் கொண்டு, கம்பெனியின் கொள்கைக்கு எதிராகக் கொள்ளை யடிக்கும் செயல்களில் ஊக்கத்தைக் கொள்ளுமாறு செய்யும் என்று கருதினர். பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த தனிப்பட்ட வர்த்தக முறையை முழுதும் ஒழிக்கவேண்டும் என்று இயக்குநர்கள் கருதியதாலும், பணியாளர்களின் தனிப்பட்ட வியாபாரத்தின் காரணமாக வங்காள நவாபை மேலும் வருத்த விரும்பாததாலும் இயக்குநர்கள் கிளைவ் அமைத்திருந்த வர்த்தகக் கழகத்தைக் கலைத்து விடுமாறு கட்டளையிட்டனர். இராபர்ட் கிளைவ் தமது சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தையும் பலனையும் குறித்து எடுத்துக் கூறிய செய்திகள் யாவும் இயக்குநர்களால் செவிமடுக்கப்படவில்லை. எனவே, இவ் வர்த்தகக் கழகம் இறுதி யாகக் கலைக்கப்பட வேண்டியதாயிற்று. நல்ல நோக்கத்துடன் உருவாக்கப்பட்டிருந்த இத் திட்டம் இயக்குநர்களின் தவறான கணிப்பாலும் கருத்தாலும் கைவிடப்பட வேண்டியதாயிற்று. அனுவசியமாக இராபர்ட் கிளைவின்மீது இயக்குநர்கள் குறை கண்டனர். ஆனால், காரன்வாலிஸ் இத் திட்டத்தைப் பின்னர்ப் பின்பற்றிய பொழுது, கம்பெனியின் இயக்குநர்கள் வெகுவாக உயர்த்திப் பேசிப் பாராட்டினர்.'[1] என்று பேராசிரியர் டாட்வெல் கூறும் செய்தி இராபர்ட் கிளைவ் செய்த சீர்திருத் தத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

கம்பெனியின் இராணுவத் துறையில் படைவீரர்கள் பெற்று வந்த படிச்செலவுப் பணத்தைப் பற்றிய பிரச்சினையைச் சமாளித்து ஓர் ஒழுங்கு முறையை இராபர்ட் கிளைவ் ஏற்படுத்தினார். வங்காளம், பீகார் ஆகிய எல்லைகளுக்கு அப்பால் நியமிக்கப்பட்டிருந்த படை வீரர்களும் அதிகாரிகளும் இரட்டைப் படிச்செலவுப் பணத்தையும் அம் மாநிலங்களில் போர்நிமித்தம் பணிபுரிந்து கொண்டிருந்த

[1] Dodwell. The Cambridge History of India Volume V. p. 178.

படைவீரர்கள் ஒற்றைப் படிச்செலவுப் பணத்தையும், பாட்னு, மாங்கிர் (Monghyr) ஆகிய இடங்களில் இருந்த பாளையம் என்னும் 'படையினர் நகரங்களில்' (Cantonments) தங்கியிருந்த படைவீரர்கள் அரைப் படிச்செலவுப் பணத்தையும் பெறுவதற்கு அருகதையானவர்கள் என்றும் இராபர்ட் கிளைவ் ஒழுங்குமுறையை உருவாக்கினார். கம்பெனியின் உடனடி ஆளுகைக்கு உட்பட்டிருந்த மாநிலத்திலும், வணிகச் சாலைகளிலும் அல்லது கோட்டைகளிலும் இருந்த இராணுவச் சிப்பந்திகளுக்குக் கட்டண மற்ற குடியிருப்புகள் கொடுக்கப்பட்டிருந்ததால் அவர்களுக்குப் படிச்செலவுப் பணம் கிடையாதென்றும் இராபர்ட் கிளைவ் அறிவித்தார். இதனால், இராணுவ அதிகாரிகள் அவருக்கு எதிராகத் திரண்டெழுந்தனர். இதனால் பலர் தம் பதவிகளை இராசினாமா செய்தனர். அச் சமயத்தில் மராத்திய இராணுவம் கம்பெனியினரையும் மொகலாயப் பேரரசரையும் தாக்கக்கூடிய நிலையிலிருந்தது. எனவே, இராபர்ட் கிளைவ் அச் சமயத்தில் மராத்தியத் தாக்குதல்களிலிருந்து கம்பெனியைக் காப்பாற்றும் பொருட்டு மொகலாயப் பேரரசரிடம் சில ஒப்பந்தங்களையும் செய்திருந்தார். மராத்தியர்களின் எதிர்ப்பால் ஆபத்தானநிலை உருவாகியிருந்த அச் சமயத்தில் கிளைவின் மேற்சொல்லப்பட்ட சீர்திருத்தங்களின் காரணமாகக் கம்பெனியின் இராணுவ அதிகாரிகள் தம் பதவிகளைத் துறக்க முடிவுசெய்ததோடு, கலகத்தில் இறங்கவும் செய்தனர். எனினும், பேராசிரியர் டாட்வெல் குறிப்பிடுவதுபோல், 'இராபர்ட் கிளைவ் மனவுறுதியுடன் கலகச் சூழ்நிலையைச் சமாளித்தார், இராணுவ அதிகாரிகள் செய்த இராசினாமாக்களை ஏற்றுக்கொண்டு, சென்னையிலிருந்து இராணுவ அதிகாரிகளைப் பெற்றார். படைவீரர்களின் கலகத்திற்கு ஆதரவு காட்டாத நேர்மையான அதிகாரிகளைப் பொறுக்கி யெடுத்து உடனடியாகக் கல்கத்தாவிற்கு அனுப்பினார். மேலும், தாமே நேரில் சென்று கல்கத்தாவிலிருந்த படைமுகாம்களையும் தலைமையிடத்தையும் சுற்றிப் பார்த்து, அங்கிருந்த இராணுவ வீரர்கள் கட்டுப்பாட்டுடன் இருந்ததை உறுதிப்படுத்திக் கொண்டார். இதனால் பெரும்பாலானவர்கள் கலகம் செய்யும் செயலைக் கைவிட்டனர். எனினும், அது முற்றிலும் தவிர்க்கப்படவில்லை. ஏனெனில், கிளைவிற்கு எதிராக இருந்த இராணுவ வீரர்கள் கலகத்தில் ஈடுபட்டனர். கலகம் வெடித்தவுடன் இராபர்ட் கிளைவ் ஈவு இரக்கமின்றி அவர்களைத் தண்டித்துக் கலகத்தை அடக்கினார். அதே நேரத்தில் தமது குற்றத்தை உணர்ந்து, திரும்பிய இராணுவ வீரர்களை மூன்றாண்டுக் கால உடன்படிக்கையொன்றில் கட்டாயமாகக் கையொப்பமிட வைத்து மீண்டும் பணியில் அமர்த்தினார். அவ் வுடன்படிக்கை கிழக்கிந்தியப் படைவீரர் கலகச் சட்டத்தின் (East India Mutiny Act)கீழ் ஏற்படுத்தப்பட்டு, மீண்டும்

கலகத்தில் ஈடுபடுவோருக்கு மரணதண்டனைகூடக் கொடுக்க ஏற்பாடுசெய்தது.[1] இராபர்ட்கிளைவ் இப்படிப் பல சீர்திருத்தங்கள் செய்தும் இராணுவ வீரர்களின் கலகத்தை அடக்கியும் இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசு எழுவதற்கான அடித்தளத்தை அமைத்தார். ஆனால், இராபர்ட் கிளைவ் மொகலாயப் பேரரசர் ஷா ஆலம், அயோத்தியின் நவாப் ஆகியோரிடம் சாதகமான உடன்படிக்கை களைச் செய்தும், சலுகைகளைப் பெற்றுமே பிரிட்டிஷ் இந்தியப் பேரரசிற்கான வலிவுள்ள அடித்தளத்தை அமைக்க வேண்டி யிருந்தது. இவற்றின் பயனாகவே வங்கத்தில் இரட்டை அரசாங்க முறையும் அமைக்கப்பட வேண்டியதாயிற்று. எனவே, இரபார்ட் கிளைவ் இந்திய அரசுகளிடம் மேற்கொண்ட வெளிவிவகாரச் செய்திகளைப்பற்றியும் இங்குச் சிறிது அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

இராபர்ட் கிளைவின் வெளிவிவகாரக் கொள்கை

பக்ஸார் போருக்குப் பிறகு ஷா ஆலமை பேரரசராகக் கொண்டிருந்த மொகலாயப் பேரரசும், அதன் இறைமைக்கு உட் பட்ட நவாப் வஸீரைக் கொண்டிருந்த அயோத்தியும் பிரிட்டிஷ் காரர்களின் ஆதரவை நம்பியநிலையில் இருந்தன. அயோத்தியின் நவாபாக இருந்த ஷுஜா-உத்-தௌலா பெயரளவில் மொகலாயப் பேரரசின் தலைமை அமைச்சராக இருந்தபோதிலும், நடை முறையில் அயோத்தியின் உண்மைத் தலைமை அதிகாரி என்னும் நிலையில் இருந்தார். இதனால், மொகலாயப் பேரரசிற்கும் அயோத் திக்கும் இடையில் அரசியல் முறையான உறவுமுறைகள் நலிந் திருந்தன. ஆனால், வான்ஸிட்டார்ட் ஆளுநராக இருந்த பொழுது அயோத்தி ஆங்கிலேயரின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தது. அதே நேரத்தில் மொகலாயப் பேரரசரிடம் அயோத்தியை ஒப்படைப் பதாகவும் வான்ஸிட்டார்ட் உறுதி யளித்திருந்தார். ஆனால், இராபர்ட் கிளைவ் மொகலாயப் பேரரசர் ஷா ஆலமிற்குப் பரந்த நிலப்பரப்பை ஆளக் கூடிய திறமையில்லை என்று அறிந்து வான்ஸிட்டார்ட் கொடுத்திருந்த உறுதி மொழியைத் தவறானது என்று கருதினார். இஃது ஓரளவிற்குச் சரியானதே. எனவே, இராபர்ட் கிளைவ் ஷுஜா-உத்-தௌலாவுடன் பேசி 1765ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண் டார். இவ் வுடன்படிக்கையின்படி ஷுஜா-உத்-தௌலாவிற்கு அயோத்தியின் இழந்த உடைமைகள் திருப்பிக்கொடுக்கப்பட்டன. ஆனால், சூனர் கோட்டையையும் (Chunar), கோரா, அலகாபாத் ஆகிய இடங்களையும் ஆங்கிலேயர் ஷுஜா-உத்-தௌலாவிடமிருந்து

[1] Dodwell. The Cambridge History of India Vol. V. p. 179.

பெற்றுக்கொண்டனர். மேலும், ஷுஜா-உத்-தௌலா ஐம்பது இலட்ச ரூபாய்களைப் போர் இழப்பீட்டுத் தொகையாகப் (war indemnity) பிரிட்டிஷ்காரர்களுக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. இராபர்ட் கிளைவினுல் அவரிடம் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையும் செய்துகொள்ளப்பட்டது. இதன்படி அயோத்திக்கு இராணுவப் பாதுகாப்பைக் கொடுக்கும் பொறுப்பைக் கிழக்கிந்தியக் கம்பெனி ஏற்றுக்கொண்டது. ஆனல், போரின் காரணமாக ஏற்படும், பிரிட்டிஷ் இராணுவப் படைச்செலவுகளை அவர் கம்பெனிக்குச் செலுத்தவேண்டும் என்று கோரப்பட்டது. பனரஸ் அரசர் ஷுஜா - உத் - தௌலாவுக்குக் கீழ்நிலை இறைமையைச் செலுத்திச் செயல்படும் வாய்ப்பும் கொடுக்கப்பட்டது.

அயோத்தியின் ஷுஜா-உத்-தௌலாவுடன் உடன்படிக்கை செய்து கொண்ட நேரத்தில், இராபர்ட் கிளைவ் மொகலாயப் பேரரசருடன் தம் சகாக்களை அனுப்பி இரண்டு கோரிக்கைகளை முன்வைத்தார். அவ் விரு கோரிக்கைகள், வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்களின் வருவாய்களைத் திரட்டி வசூலிக்கக் கூடிய திவானி (Diwani) அனுமதி பிரிட்டிஷ் கம்பெனியினருக்குக் கொடுக்கப்பட வேண்டும்; மேற்சொன்ன மூன்று மாநிலங்களின் புதிய நவாபாக நாஜிம்-உத்-தௌலாவை மொகலாயப் பேரரசர் ஏற்று உறுதிப்படுத்த வேண்டும் என்பவையாகும். இவற்றை ஷா ஆலம் எவ் வெதிர்ப்பும் இன்றி ஏற்றுக்கொண்டு அனுமதித்தார். இதற்குக் கைம்மாறுகக் கிழக்கிந்தியக் கம்பெனி ஷா ஆலமை இந்தியப் பேரரசராக ஏற்றுக்கொண்டு அவருக்கு ஆண்டுக்கு இருபத்தாறு இலட்ச ரூபாய்களைக் கப்பமாகச் செலுத்த ஒப்புக் கொண்டது. மேலும், கோரா, அலகாபாத் ஆகிய இரண்டு மாநிலங்களையும் மொகலாயப் பேரரசருக்குக் கிழக்கிந்தியக் கம்பெனி விட்டுக்கொடுத்தது. இவ்வாறு இராபர்ட் கிளைவ் செய்துகொண்ட உடன்படிக்கை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்து இந்திய நாடு அந்நியர்களான ஆங்கிலேயரின் ஆட்சிப்பிடியின்கீழ் வருவதற்குக் காரணமாய் அமைந்துவிட்டது. மொகலாயப் பேரரசரும், அயோத்தியின் நவாபும் செய்த இச் செயல், இந் நாட்டு மக்களை வஞ்சித்துச் செய்யப்பட்டதாகும். வணிகத் தஞ்சத்தை வேண்டியிருந்த ஆங்கிலேயர்கள் வங்கத்தில் அரசியல் மஞ்சத்தைப் பெற்றுவிட்டனர். ஆடிக்காற்றில் அம்மி பறக்கக்கூடிய நிலையில் மொகலாயப் பேரரசின் நிலை இருந்தது. பேரரசு என்று சொல்வதற்கு இம்மிகூட இடமில்லாத நிலையில் அதன் பேரரசர் இருந்தார். ஓடித் திரிந்த நிலையிலிருந்த ஷுஜா-உத், தௌலாவிடமிருந்து 'ஆடிக் கறக்கும் மாட்டை ஆடிக் கற-பாடிக் கறக்கும் மாட்டைப் பாடிக் கற' என்பதைப்போல்

இராபர்ட் கிளைவின் தலைமையிலான ஆங்கிலேயர் வருவாயைத் திரட்டி வசூலிக்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றுவிட்டனர். இதற்குப் பின் ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ் இருந்த இந்திய இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று. இப்படிப்பட்ட தகாத செயல்கள் நடந்தபொழுதும் இந்தியச் சுதேசிஅரசுகள் தம்மிடையே பகையை வளர்த்துக்கொண்டு, அந்நியரை எதிர்க்கக்கூடிய நிலையில் இல்லை. எனவேதான், வங்காள நவாபிடமிருந்து நிஸாமத் (Nizamat) என்னும் நிர்வாக உரிமையையும் இராபர்ட் கிளைவ் பெற்றுவிட்டார். இப்படிப் பெறப்பட்ட திவானி, நிஸாமத் என்னும் இருவகை அதிகாரங்களை இறைமைப் பொருளாகக் கொண்டு அமைக்கப்பட்டதே கிளைவின் இரட்டை அரசாங்க முறையாகும். இவ் அரசாங்க முறையைப்பற்றிய செய்திகளை அடுத்த அதிகாரத்தில் விரிவாகக் காணலாம்.

7. இராபர்ட் கிளைவின் இரட்டை அரசாங்கமுறை

18ஆம் நூற்றுண்டின் மையப் பகுதிக்குப் பிறகு வங்கத்து அரசியலில் தோன்றிய போட்டி பூசல்களும் கலகங்களும் எவ்வாறு அம் மாநிலத்தைப் புரட்சிகரமான சீர்திருத்தங்களுக்கும் மாற்றங்களுக்கும் உட்படுமாறு செய்தன என்பதைச் சென்ற சில அதிகாரங்களில் சொல்லப்பட்டிருந்த செய்திகள்மூலம் நாம் அறிந்துள்ளோம். மேலும், அங்குக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆங்கிலேய அதிகாரிகள் தமது சூழ்ச்சி அரசியலின் பயனாய்ச் சிறுகச் சிறுகப் பிரதேச உரிமைகளையும் அரசியல் அதிகாரங்களையும் பெற்றனர் என்பதும் அடிப்படையாக நம்மால் அறியக்கிடக்கின்றது. தமது கட்டுப்பாட்டின்கீழ் வந்த வங்கத்துப் பிரதேசங்களையும் அரசியல் அதிகாரங்களையும் கிழக்கிந்தியக் கம்பெனி நேரிடையாக மேலாண்மை செய்து ஆட்சியை மேற்கொள்ளக் கூடிய விருப்பத்தையோ திறமையையோ பெற்றிருக்கவில்லை என்று அரசியல் வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால், 'கிழக்கிந்தியக் கம்பெனிக்கு நேரடியாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய திறமை இருக்கவில்லை,' என்ற கோட்பாடு ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. மாறாக, நேரிடையான ஆட்சியை மேற்கொள்வதற்கான விருப்பம் கம்பெனியினருக்கு இல்லாமலிருந்திருக்கலாம். கம்பெனியின் உள் நோக்கமே இந்தியாவில் ஆங்கிலப் பேரரசை நிறுவவேண்டும் என்றிருந்ததால், மேற்கூறிய இரு கருத்துகளும் காரமற்றவையாய்க் காணப்படுகின்றன. எனவே, ஆங்கிலேயர் இங்குத் தமது கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிகச் செயல்களின்மூலம் விரைவில் அரசியல் தன்மை வாய்ந்த ஓர் ஆதிக்கச் சக்தியாக மாறி, இட உரிமையுடன் கூடிய இறைமையைச் செலுத்தக்கூடிய நிலைக்கு உயர்த்தப்பட்டனர். அன்று ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆங்கிலச் சட்டங்களின்கீழ் வியாபாரத்தை மேற்கொள்ளக் கூடிய ஒரு வர்த்தக நிறுவனமாகத்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அஃது இந்தியாவில் ஒரு பேரரசை

ஆளும் அரசியல் சக்தியாக மாறிய நிகழ்ச்சி இங்கிலாந்து நாட்டின் சட்டமுறைக்கு முரண்பட்டதாக இருந்ததோடு மட்டுமன்றிக் கடினமான சில சட்டப் பிரச்சினைகளையும் எழுப்பியது. ஏனெனில் ஆங்கில நாட்டுச் சட்டங்களின்படி அரச நிறுவனம் ஒன்றே நிலப் பரப்பாட்சி உரிமையைப் பெற்றிருக்கமுடியும். இஃது இன்று போல் அன்றும் செயலில் இருந்தது. இப்படிப்பட்ட சட்டப் பிரச்சினை இருந்தபொழுது கிழக்கிந்தியக் கம்பெனி நிலப்பரப்பாட்சி உரிமையை இங்குப் பெற்றுவிட்டது. அதே நேரத்தில் ஆங்கில நாட்டின் அரச நிறுவனம் நேரிடையாகத் தனது இறைமையைக் கம்பெனியின் ஆளுகைக் குட்பட்டிருந்த பிரதேசங்களில் செலுத்த முடியாமலும் இருந்தது. எனவே, தாம் பெற்றுவிட்ட நிலப்பரப் பாட்சி உரிமையுடைய அதிகாரத்தை எக் காரணம் கொண்டும் இழக்க விரும்பாத இராபர்ட் கிளைவ் தமது நுண்ணறிவினால் தமது எண்ணத்தை ஈடேற்றிக்கொள்ளும் வகையில் இரட்டை அரசாங்க முறையை அமைத்தார். இதன்மூலம் மொகலாயப் பேரரசரையும், வங்காள நவாபையும் பெயரளவில் செயல்படுபவர்களாக்கி, உண்மையில் செயல் முறையான ஆட்சியை ஆங்கிலேயரே மேற் கொண்டனர். இவ் வரசாங்க முறையைப்பற்றிய செய்திகளைக் கண்ணுறுமுன் கம்பெனியினர் குறிப்பாக, இராபர்ட் கிளைவின்கீழ் எவ்வாறு இறைமை படைத்த அதிகாரங்களைப் பெற்றனர் என்பதைச் சிறிது சுருக்கமாக அறிந்து கொள்ளுதல் இன்றியமை யாததாகும்.

அரசியல் வரலாற்று அறிஞர்களால், 'இராபர்ட் கிளைவின் வங்கத்து இரட்டை அரசாங்கமுறை' என்று ஆரவாரச் சிறப்புடன் கூறப்பட்டாலும், அவ் வரசாங்க முறையின்கீழ் வங்கத்தைத் தவிர பீகாரும் ஒரிஸாவும் இருந்தன. தமது இரண்டாம்முறை ஆளுநர் பதவிக்காலத்தில் வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்களில் இராபர்ட் கிளைவ் புகுத்தியிருந்த இரட்டை அரசாங்க முறையில், அரசாங்க அதிகாரங்கள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவ் வதிகாரப் பிரிவின்கீழ் சிவில், குற்றவியல் மற்றும் காவல் என்னும் போலீஸ் நிர்வாகம் வங்காள நவாபினால் கொள்கை ரீதியில் மேற்கொள்ளப்பட்டது. வங்காள நவாபு கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதுலட்ச ரூபாய்களைப் பெற்று வந்தார். இத் தொகை மேற்சொல்லப்பட்ட கடமைகளை ஆற்றுவதற்கு என வங்காள நவாபிற்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், உண்மையானதும் இறுதியானதுமான நிர்வாக அதிகாரம் கிழக்கிந்தியக் கம்பெனியிடமே இருந்தது. இதன்படி, நவாப் தமது சிவில், குற்றவியல் மற்றும் சட்ட ஒழுங்கைப் பராமரிக்கும் நிர்வாகத்தை மேற்கொள்வதில் கம்பெனியின் இயக்கத்திற்கு

உட்பட்டிருந்தார். மேலும், வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்களின் இராணுவப் பாதுகாப்பைக் கிழக்கிந்தியக் கம்பெனி பெரியதொரு இராணுவப் படையைக் கொண்டிருந்ததின்மூலம் நேரிடையாகப் பராமரித்தது. மேற்சொல்லப்பட்ட அதிகாரப் பிரயோக ஆட்சிமுறை 'நிஸாமத்' என்னும் அனுமதியை வங்காள நவாபிடமிருந்து கம்பெனி பெற்றபின் அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. நிஸாமத் என்பது நிஜாம் (Nizam) என்னும் பதவியிலிருந்து பெறப்பட்டதாகும். மொகலாய இந்தியாவில் ஒரு மாநிலத்தின் சுபேதார் அல்லது ஆளுநர் நிஜாம் என்று அழைக்கப்பட்டார். அவரது ஆளுகைக்கு உட்பட்டிருந்த நிலப்பகுதி சுபா (Suba) எனப்பட்ட பேரரசின் மாநில மாகும். இம் மாநிலத்தில் நிஸாம் எனப்பட்டவர் நிர்வாகச் செயலாட்சி புரியும் அதிகாரத்தையும், குற்றவியல் நீதிபரிபாலனம் செய்யும் அதிகாரத்தையும் பெற்றிருந்தார். எனவே, நிஸாமத் (Nizamat) என்பது செயலாட்சி நிர்வாக அதிகாரத்தையும் குற்ற வியல் நீதி அதிகாரத்தையும் குறிக்கக்கூடிய ஒரு சொல்லாகும். பெயரளவில் நிஜாம் இவ் வதிகாரங்களைத் தம்மிடம் வைத்திருந் தார். கொள்கைக் கோட்பாட்டின்படி அவற்றிற்கு அவரே பொறுப்பு ஏற்க வேண்டும். ஆனால், நடைமுறையில் எச் செயலுக்கும் பொறுப்பு ஏற்காத நிலையில் கம்பெனியினரே அவற்றைத் திரைமறைவிலிருந்து இயக்கி வந்தனர்.

நிஸாமத் எனும் அதிகாரத்தைக் கம்பெனியினர் பெற்றபின் மொகலாயப் பேரரசரிடமிருந்து வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய இராசதானிகளின் 'திவானி' (Diwani) உரிமையையும் 1765ஆம் ஆண்டில் கம்பெனியினர் பெற்றனர். திவானி என்ற சொல் திவான் எனும் சொல்லிலிருந்து பிறந்ததாகும். மொகலாயப் பேரரசில் திவான் என்பவர் ஒரு மாநிலத் தலைமை அதிகாரி யாவார். இவர் தமது மாநிலத்தில் நிதி வருவாய்களைத் திரட்டும் அதிகாரத்தையும் சிவில் நீதி பரிபாலனம் செய்யும் அதிகாரத் தையும் பெற்றிருந்தார். எனவே, திவானி என்பது வரிகளைத் திரட்டி வசூலிக்கும் அதிகாரத்தையும் சிவில் வழக்குகளில் நீதி பரிபாலனம் செய்யக்கூடிய அதிகாரத்தையும் குறிக்கும் ஆட்சி அதிகாரச் சொல்லாகும். இத் திவானி உரிமை ஆண்டொன்றுக்கு 26 இலட்ச ரூபாய்களைக் கப்பமாகப் பெற்றுக்கொண்டதன்மூலம் மொகலாயப் பேரரசர் ஷா ஆலமினால் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கப்பட்டது. இதன்மூலம் வங்கம், பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்களில் வரிகளை வசூலித்து நிர்வாகம் செய்யக்கூடிய உரிமை கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது. இப்படிச் சுதேசி அரசர்களைப் பொம்மை அரசர்களாக, கைப்பாவைகளாகக்

கொண்டு, கிழக்கிந்தியக் கம்பெனியினர் தம்மைச் சட்ட ஒழுங்குப் பராமரிப்பிற்கான நேரிடைப் பொறுப்பிற்கு உட்படுத்திக் கொள்ளாமல், நிதி வருவாய்களை நேரிடையாக ஆட்சிப் பொறுப்புடன் வசூலித்து, இந்திய மக்களை ஆண்டு ஆட்டிப் படைக்க உருவாக்கப்பட்ட அரசாங்க முறையே இரட்டை அரசாங்க முறையாகும். சாதாரண நோக்காளர் ஒருவருக்கு இவ் வரசாங்க முறையில் இருவகை அதிகாரங்கள் அமைந்தது புரியும். ஒன்று அந்நியர்களால் மேற்கொள்ளப்பட்டது; மற்றொன்று சுதேசி அரசர்களால் மேற்கொள்ளப்பட்டது. அவ் விரு அதிகாரங்களுள் ஒன்று உண்மையானது; மற்றொன்று பெயரளவிலான போலியானது. அந்நியர் செலுத்திய அதிகாரம் விஞ்சிய ஆற்றலுடையது; முனைப்பானது. மற்றொன்றோ உயிர்ப் பற்ற செயற்பாட்டினைச் சார்ந்தது. ஒன்று உச்சத் தன்மையைப் பெற்றதாகவும் மற்றொன்று நிழல் படிந்ததாகவும் இருந்தது. இப்படி இரு வகையான அதிகாரப் பகுப்பு முறையைக் கொண்டிருந்ததே இராபர்ட் கிளைவின் இரட்டை அரசாங்கமாகும்.

வங்கத்தில் அடிக்கடி ஏற்பட்ட புரட்சிகளும் வங்காள நவாபாகிய மீர்காசிமுடன் நடந்த போர்களும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் வங்காள நவாபிற்கும் அதிகாரப் போட்டியை உருவாக்கி இருந்தன. எனவே, இப் போட்டியைத் தவிர்த்துக் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகார உச்ச நிலையைப் பெறுமாறு செய்யவேண்டுமென இராபர்ட் கிளைவ் தாம் இரண்டாம் முறை ஆளுநராக வருவதற்கு முன்னரே தீர்மானித்திருந்தார். மேலும், ‘பெயரளவில் இல்லையென்றாலும், உண்மைச் செயல்பாட்டு நிலையில் கம்பெனியின் அதிகாரிகளே நவாபாகச் செயல்படுவதற்கு உரிமை பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட வேண்டும்’ என்று கம்பெனியின் தலைமை இயக்குநர்களுக்கு எழுதி, ஓரளவு ஆதரவையும் அவர்களிடமிருந்து பெற்றிருந்தார். எனவே, இராபர்ட் கிளைவ் வங்கத்தில் இரண்டாம் முறையாக ஆளுநராக வந்தவுடன் தமது கருத்துகளைச் செயற்படுத்த முனைந்தார். அதன் விளைவாகவே கிழக்கிந்தியக் கம்பெனிக்கு நிஸாமத், திவானி என இரு அதிகாரங்களையும் முறையே வங்காள நவாபிடமிருந்தும் மொகலாயப் பேரரசிடமிருந்தும் பெற்றுக் கொடுத்தார். இவ் விரு அதிகாரங்களையும் பின்வரும் இரு கட்டங்களில் இராபர்ட் கிளைவ் பெற்றார்.

1765ஆம் ஆண்டு வங்கத்து நவாபான மீர்ஜாபர் இறந்த பின் அவரது மகன் நிஜாம்-உத்-தௌலா அரியணை ஏறினார். இவர் அரியணை ஏறுவதற்கு ஆங்கிலேயர் உதவி புரிந்து ஓர் உடன்

படிக்கையைச் செய்திருந்தனர். அவ் வுடன்படிக்கையின்படி, அவர் அரியணை ஏறியவுடன் ஆண்டொன்றுக்கு ஐம்பது இலட்ச ரூபாய்களை உதவித் தொகையாகப் பெற்றுக்கொண்டு, வங்க அரசாங்கத்தின் நடைமுறை ஆட்சியை அவர் மேற்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், வங்கத்தின் நிர்வாகத்தைக் கிழக்கிந்தியக் கம்பெனியினால் நியமிக்கப் பெறும் அதிகாரிகளைக் கொண்டே அவர் மேற்கொள்ளவேண்டும் என்றும் தெளிவாக்கப்பட்டிருந்தது. எனவே, இவ் வுடன்படிக்கையின்படி கிழக்கிந்தியக் கம்பெனி இராஜா சிதாப் ராய் (Raja Shitab Rai), முகமது இராஜாகான் (Mohamed Raja Khan) என்னும் இருவரைத் தன் உதவிச் சுபேதார்களாக நியமித்தது. நவாபின் பெயரில் உண்மையான நிர்வாகத்தை நடத்தக் கூடிய அதிகாரம் கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரதிநிதிகளான மேற்சொல்லப்பட்ட இரு முகவர்களுக்குக்[1] கொடுக்கப்பட்டது. இவர்கள் தமது நிர்வாகத்தைப் பொறுத்தவரை கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தான் பொறுப்புள்ளவர்களாக இருக்கவேண்டுமேயன்றி, நவாபுக்கு பொறுப்புடையவர்கள் அல்லர். ஆனால், இவர்களின் நிர்வாகத்தின் காரணமாக எழும் பிரச்சினைகள் யாவற்றுக்கும் நவாபே பொறுப்பேற்றுப் பதிலளித்து, அதனால் ஏற்படும் விளைவுகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எத்தகைய சூழ்ச்சி! பெயரளவில் அதிகாரம் நவாபிடம். நடைமுறையில் அதிகாரத்தைச் செலுத்தி ஆட்சியை மேற்கொண்டவர்கள் கம்பெனியின் பிரதிநிதிகள். நவாபிற்குப் பொறுப்பேற்காத அவர்கள் செய்யும் காரியங்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டியது நவாப். இதுதான் நிஸாமத்தின் பயனாய் அமைந்த அதிகாரப் பகுப்பு. அதிகாரத்தைச் சுயமாகச் செலுத்த முடியாத நிலையில் யாவற்றுக்கும் பொறுப்பு வகிக்கக் கூடியவர் நவாப். அதிகாரத்தைத் தம் விருப்பம் போல் பிரயோகித்து எவருக்கும் பொறுப் பேற்காமல் ஆட்சிக் குற்றங் களுக்கான பழியை நவாபின்மீது போடக்கூடிய நிலையில் கம்பெனி. உண்மையில் வென்று விட்டான் ஆங்கிலேயன்! சுதேச அரசர் களின் சக்தியைக் கசக்கிப் பிழிந்து கொன்று விட்டான்! வங்காள நவாப் அதிகாரச் சூனிய அறைக்குச் சென்று விட்டான்! இதுதான் நிஸாமத் உரிமையை ஆங்கிலேயருக்கு வங்கத்து நவாப் கொடுத்ததால் நாடு கண்ட பலன். இந்த நிலையில் கிழக்கிந்தியக் கம்பெனியினர் வங்கம், பீகார், ஒரிஸா ஆகிய இடங்களில் பாதுகாப்பைக் கொடுக்கும் பொருட்டுத் தம் விருப்பம்போல் படைபலம் மூலம் பாதுகாப்பு எனும் பெயரில் அடக்கி யொடுக்கக்கூடிய பெரிய தொரு இராணுவத்தையும் வைத்துக் கொண்டிருந்தனர்.

[1] Agents.

இப்படிக் கிழக்கிந்தியக் கம்பெனி வங்க மாநிலம் முழுவதிலும் மற்றும் பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்களிலும் செயலாட்சிக் கட்டுப்பாட்டை முழுமையாகச் செலுத்தும் அதிகாரத்தையும் குற்றவியல் அதிகாரப் பரப்பெல்லையையும் வங்காள நவாபிட மிருந்து பெற்றது.

முன்னொரு இடத்தில் கூறியதுபோல் வங்க நவாபிடம் உடன் படிக்கை செய்துகொண்ட நேரத்தில் இராபர்ட் கிளைவ் மொகலாயப் பேரரசர் ஷா ஆலமை அலகாபாதில் சந்தித்து, இருபத்தாறு இலட்ச ரூபாய்களைக் கொண்ட கப்பத் தொகைக்கு ஈடாக அவரிடமிருந்து திவானி உரிமையைப் பெற்றார். இதனால் வங்கம், பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்களில் சிவில் சட்டத்தைப் (civil law) பரிபாலித்து வரிகளைத் திரட்டி வசூலிக்கும் உரிமையை-திவானி உரிமையை-இராபர்ட் கிளைவ் நிலைநிறுத்திக் கொண்டார். பணம் திரட்டி வசூலித்தல், படைபலம் கொண்டு காத்தல், அன்றாட நிர்வாகம் மற்றும் நீதிச் செயல்முறைகளை நடத்தல் ஆகிய எல்லா அதிகாரங்களையும் எவருக்கும் பொறுப்பேற்காத நிலையில் கிழக்கிந்தியக் கம்பெனியினர் பெற்றுவிட்டனர். அந்நிய அரசியல் சூழ்ச்சிக்கு நம்மவர் தோற்றுவிட்டனர். நம்மவரின் அறியாமையையும், அரசியல் பலவீனத்தையும் பயன் படுத்திக்கொண்டு, அந்நியரான ஆங்கிலேயர் வென்றுவிட்டனர். இதனால் வங்கத்தில் ஆங்கிலேயரின் அதிகாரத்தின் உச்சநிலை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாயிற்று. இதற்குக் காரணம் கம்பெனியினர் பெற்ற நிஸாமத், திவானி ஆகிய இரு உரிமையும் அதிகாரமுமே ஆகும்.

மேற்கூறிய இரு கட்டங்களில் இரு வகையான அதிகாரங் களைப் பெற்று, இரட்டை அதிகாரக் கோட்பாட்டின்கீழ் அமைக்கப்பட்ட இராபர்ட் கிளைவின் இரட்டை அரசாங்கம் கீழ்க் காணும் தன்மையைக் கொண்டிருந்தது. வங்கத்தின் சிவில் மற்றும் இராணுவக் கட்டுப்பாடு கம்பெனியின் கைகளின்கீழ் வந்தன. ஆனால், வங்கத்தின் நடைமுறையிலான அன்றாட நிர்வாகப் பொறுப்பு சுதேசி ஆளுநரான நவாபிடமே விட்டு வைக்கப்பட்டது. எனினும், அன்றாட நிர்வாகத்தை நடத்துவதில் நவாப் கம்பெனியின் பிரதிநிதிகளின்மூலம் கம்பெனியினரின் இயக்கத்திற்குட்பட்டே நடத்தினார். இத்தகைய புதிய அரசாங்க ஆட்சிமுறை வங்கத்திலும் மற்ற இரு மாநிலங்களிலும் அமைக்கப் பட்டிருந்த போதிலும், அங்கு நிலவிய பழைய நீதி நிர்வாக முறை எம் மாற்றத்திற்கும் உள்ளாக்கப்படவில்லை. அமின், பௌஜ்தார், கானுங்கோ, பத்வாரி போன்ற சிற்றேவல் சுதேசிப்

பணியாளர்கள் தொடர்ந்து செயல்படும்படி அனுமதிக்கப் பட்டனர். எனினும், இவர்களுடைய ஆட்சிச் செயல்களின் போக்கையும் தன்மையையும் தேவையான அளவு இயக்கிக் கட்டுப்படுத்தக்கூடிய மறைமுக அதிகாரத்தைக் கம்பெனியினர் தம்மிடம் தங்க வைத்திருந்தனர். மேற்சொன்ன அதிகாரிகளின் செயல்களைப் பெயரளவிலான பேரரசர் மற்றும் நவாப் ஆகியோர் மூலம் இயக்கிக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கம்பெனியினரிடம் இருந்தது. சுருங்கக் கூறின், எழுத்தராக வந்த இராபர்ட் கிளைவ் ஆளுநராகி, நம்மவர்களை ஏமாளிகளாக்கி விட்டார். அதிகார ஒப்படைப்பைக் கிழக்கிந்தியக் கம்பெனியிடம் தங்கவைத்து, வங்காள நவாபிடம் பொறுப்பைச் சுமத்தி, அவரை என்றும் எதற்கும் ஆங்கிலேயரையே நாடவேண்டி ஏங்க வைத்தது இரட்டை அரசாங்க முறையாகும். இப்படிப்பட்ட ஒரு அரசாங்க முறையை இராபர்ட் கிளைவ் எத்தகைய உட்கருத்துகளுடன் அமைத்தார் என்பதையும் இங்கு அறிந்து கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் இவ் வரசாங்க முறையின் நன்மை தீமைகளைச் சீர்தூக்கி அதன் அரசியல் முக்கியத்துவத்தை நாம் உணர முடியும்.

தாம் விரும்பியதை விரும்பியவாறே பெறக்கூடிய நிலையி லிருந்தும், தாமே நேரிடையான ஆட்சிப்பொறுப்பை வங்கத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையிருந்தும், இரட்டை அரசாங்க முறையை இராபர்ட் கிளைவ் புகுத்தியதற்குச் சில உட் கருத்துகள் இருந்தன. இவ் வதிகாரத்தின் தொடக்கத்தில் எடுத்துக்கூறியது போல் அன்று கிழக்கிந்தியக் கம்பெனி, தன் ஆட்சியை மற்றொரு நாட்டில் அமைத்துப் பரிபாலனம் செய்வதற்கு இங்கிலாந்து நாட்டின் சட்டமுறை அனுமதிக்கவில்லை. அப்படிக் கிழக்கிந்தியக் கம்பெனி செய்திருக்குமாயின் அச் செயல் சட்டப் பிரச்சினைகளை எழுப்பியிருக்கும். எனவே, வணிகத் தன்மையின் காரணமாக அரசியல் நிறுவனத்தன்மையைப் பெறமுடியாதிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் உண்மைநிலையை மூடி மறைக்கவேண்டிய அவசியம் இராபர்ட் கிளைவிற்கு இருந்தது. மேலும், முறையான சட்டத் திருத்தங்களைச் செய்து தாய்நாட்டு அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி செலுத்தும் அதிகார நிலையை நேரிடையாக மேற்கொண்டிருந்தால், அது மற்ற ஐரோப்பிய அரசுகளையும் சக்திகளையும் சமாளிக்க முடியாத அளவிற்குப் போட்டி பொறாமைகளை முடுக்கியிருக்கக் கூடும். எனவே, சாலையில் நின்று நிதானித்துச் செல்வதைப்போல் தமது மூலக் குறிக்கோளை ஈடேற்றிக் கொள்வதில் இத்தகைய ஒரு முடிவைத்தான் இராபர்ட் கிளைவ் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

அடுத்து, பிரிட்டிஷ் அரசாங்கம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குப் பிறகு தமது அமெரிக்கக் காலனிகளின் எதிர்ப்பைக் கண்டு அவற்றிற்கு விடுதலை தரவேண்டிய நிலையிலிருந்தது. அப்போதைய பிரிட்டிஷ் அரசின் வெளிநாட்டுக் கொள்கையும், ஏகாதிபத்திய வல்லரசுப் போக்கைக் கடைப்பிடிப்பதாய் இல்லை. எனவே, அப்படிப்பட்ட ஒரு வல்லரசை இந்தியாவில் அமைப்பதற் கேற்ற தருணமாக 1765ஆம் ஆண்டு அமையவில்லை. எனவே, உள்ளதைக் கொண்டு நல்லது செய்ய வேண்டும் என்பதற் கேற்பத் தான் போடும் தாளத்திற் கேற்ப ஆடும் நிலையில் வங்காள நவாபு இருந்ததால், அவரை ஒரு பொம்மை அதிகாரியாக வைத்துத் திரைமறைவிலிருந்து பொம்மலாட்டம் நடத்துவதுபோல் வங்கத்தில் ஆட்சியை நடத்துவதை இராபர்ட் கிளைவ் உட்கருத்தாகக் கொண்டிருந்தார் என்பதில் ஐயமில்லை.

அடுத்து, அன்று நேரிடையான அரசாங்கத்தை நடத்திக் கொள்வதற்குத் தேவையான பணியாளர்களும் கம்பெனியிடம் இருக்கவில்லை. இருந்த சில கம்பெனிப் பணியாளர்களும் நாட்டின் புவியியல், பொருளியல் மற்றும் அரசியல் ஆகியவற்றிலும் அவற்றைத் தழுவி மேற்கொள்ள வேண்டியிருந்த ஆட்சியியலிலும் தேவையான, தேர்ச்சியான அறிவையோ அனுபவத்தையோ பெற்றிருக்கவில்லை. எனவே, வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும் என்பதற் கேற்ப நம்நாட்டில் நம்மவர்களைக் கொண்டே நம்மை ஆளும் சூழ்ச்சியான அரசாங்கச் சட்டத்தை இரட்டை ஆட்சி மூலம் புகுத்துவதைத் தவிர வேறு வழியே யில்லை என்ற உட்கருத்தையும் இராபர்ட் கிளைவ் பெற்றிருந்தார். எனவேதான், காலத்தின் தேவைகளுக்குச் சாலச் சிறந்த அமைப்பு முறையாக இரட்டை அரசாங்க முறையை இராபர்ட் கிளைவ் நிறுவினார். தமது மாநிலத்தில் சுதந்திரமாகச் செயல்படக் கூடிய நிலையில் வங்காள நவாபு இருந்த போதிலும், அவர் மொகலாயப் பேரரசின் திவானி உரிமைக்குக் கட்டுப்பட்டிருந்தார். மொகலாயப் பேரரசரே திவானி உரிமையை இராபர்ட் கிளைவை ஆளுநராகக் கொண்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுத்ததாலும், தனக்கிருந்த சுய அதிகாரத்தின் அடிப்படையில் நிஸாமத் உரிமையை வங்காள நவாபு கொடுத்ததாலும், உள்நாட்டுச் சட்டத்தைப்பற்றிய பிரச்சினையோ, இடர்ப்பாடோ எழமுடியாது என்ற உட்கருத்தையும் இராபர்ட் கிளைவ் கொண்டிருந்தார். இது நுண்ணறிவு வாய்ந்த ஒரு கருத்தும் செயலும் ஆதலின், இராபர்ட் கிளைவ் இரட்டை அரசாங்க முறையை அமைத்துக்கொடுத்தார்.

இதுவரை சொல்லப்பட்ட செய்திகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட இரட்டை அரசாங்கமுறை செயல்பட்ட விதம் குறித்து

A.B. கீத் பின்வரும் கருத்துகளைத் தெரிவிக்கின்றார். இப் புதிய ஏற்பாட்டின்படி 1756-க்கு முன் இருந்த அரசாங்கத்தின் அமைப்பு வங்க அரசில் அப்படியே இருந்தது. அப்புற அமைப்பை அப்படியே வைத்துக்கொண்டு உள்ளிடைச் சீர்த்திருத்தங்களை மேற்கொண்டு இராபர்ட் கிளைவ் இரட்டை அரசாங்கம் செயல்படுமாறு செய்தார். 1769ஆம் ஆண்டில் ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டு, அதன்படி கம்பெனியின் வங்க ஆளுநரின் ஆட்சிமன்றத்தின் சட்டப் பராமரிப்பைச் செய்யும் சிவில் அதிகார உச்சநிலை உறுதியாக்கப்பட்டு, அவ் வதிகாரம் கம்பெனியின் பணியாளர்களுக்கு அதிகார ஒப்படைப்பின் (delegation) மூலம் கொடுக்கப்படவும் உறுதியான ஏற்பாடு செய்யப்பட்டது. இரட்டை அரசாங்க முறையின் பயனாக, ஆளுநர் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் நிர்வாகப் பணிகள் அதிகமானதால் 1770-ல் ஆளுநர் ஆட்சிமன்றத்தின் சாசனம் மறு விவரணம் செய்யப்பட்டது. அதன்படி, முன்னரே இராபர்ட் கிளைவ் செய்திருந்த சீர்திருத்தத்தின் அடிப்படையில் ஆளுநரையும் சேர்த்து ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டதாக ஆட்சிமன்றம் அமைக்கப்பட்டது. ஆளுநர், தலைமைப் படைத்தளபதி, ஆட்சிமன்றத்தின் முதல் மூன்று முதுநிலை உறுப்பினர்கள் ஆகியோர்களைக் கொண்டு ஒரு பொறுக்குக்குழு (Select Committee) அமைக்கப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி மேற்கொள்ளும் போர் அல்லது சமாதானம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கான அதிகாரங்கள் பொறுக்குக் குழுவிற்குக் கொடுக்கப்பட்டன. ஆனால், இந்தியாவின் ஒரு மன்னருடனோ, அல்லது சுதேசிச் சக்தியுடனோ கம்பெனி மேற்கொள்ளும் வர்த்தகம், அரசியல் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் ஆகியவற்றிற்கு ஆளுநர் மன்றமே தனது இறுதி ஒப்புதலைக் கொடுக்கவேண்டும் என்று வரையறுக்கப்பட்டது. பொறுக்குக் குழுவின் பெயரில் மேற்கொள்ளப்படும் கடிதப் போக்குவரத்துகளும் மற்ற நடவடிக்கைகளும் ஆளுநராலேயே கையாளப்பட்டன. ஆனால், ஆளுநர் பொறுக்குக்குழு அங்கத்தினர்களுக்குச் சொல்லாமல் எதையும் செய்யமுடியாது. மேலும், ஆளுநர் நிர்வாக சம்பந்தமாக எழுதிய கடிதங்களின் நகல்கள் இலண்டனிலிருந்த கம்பெனியின் தலைமை இடத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இவைகளே யன்றி இராபர்ட் கிளைவ் தமது இரண்டாண்டுக்கால பதவிக்காலத்தில், தமது இரட்டை அரசாங்க முறையின் குறிக்கோள்களுக்குப் பொருந்தும் வகையில், பல சீர் திருத்தங்களையும் செய்தார்.[1] அவை இராபர்ட் கிளைவிற்குப் பிறகு ஆளுநர்களாக வந்த வெரல்ஸ்ட் (Verelst), கார்டியர் (Cartier) வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) ஆகியோராலும் பின்பற்றப்

1. A. B. Keith. 'A Constitutional History of India', p. 56 to 57.

பட்டு இரட்டை அரசாங்க முறை 1772 வரை செயற்பாட்டிலிருந்து பிறகு கலைக்கப்பட்டது. இரட்டை அரசாங்க முறை அகற்றப் பட்டதற்கான காரணங்களையும் அதன் அரசியல் முக்கியத்து வத்தைப்பற்றியும் ஆராய்வதற்கு முன் இவ் வரசாங்க முறை செயல் பட்டதால் ஏற்பட்ட நன்மை தீமைகளை இங்கு எடுத்து இயம்ப வேண்டும்.

இரட்டை அரசாங்க முறையினால் ஏற்பட்ட நன்மைகள்

இராபர்ட் கிளைவ் அமைத்த இரட்டை அரசாங்க முறையினால் ஏற்பட்ட நன்மைகளில் முதன்மையானதும் முக்கியமானதும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் வங்காள நவாபுக்கும் இடையே அடிக்கடி எழுந்த பூசல்களுக்கும் புரட்சிகளுக்கும் முடிவு கட்டப்பட்டதாகும். வங்கத்தில் உச்ச அதிகார நிலையை நிலை நாட்டுவதில் கிழக்கிந்தியக் கம்பெனியினராலும், வங்காள நவாபுகளாலும் தொடர்ச்சியான பல போட்டிச் செயல்கள் மேற் கொள்ளப்பட்டு வந்தன. 1765-ல் இராபர்ட் கிளைவினால் இவ் வர சாங்க முறை புகுத்தப்பட்டு, பின்னர்ச் சம்பந்தப்பட்ட யாவராலும் ஏற்றுக்கொள்ளப்படுமுன் கிழக்கிந்தியக் கம்பெனி எந்த அளவிற்கு ஆதிக்கத்தைச் செலுத்தி அதிகாரத்தைச் செயல்படுத்த முனைந் ததோ அதே அளவில் வங்காள நவாபு தமது ஆதிக்க அதிகார நிலை யைச் செலுத்தும் முயற்சியை மேற்கொண்டிருந்தார். இதனாலேயே போட்டிகளும், பூசல்களும் தொடர்ந்து மலிந்த வண்ணம் இருந்தன. எனினும், அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், கிழக் கிந்தியக் கம்பெனியின் ஆதிக்க நிலை சற்று ஓங்கியே இருந்தது. வங்காள நவாபு சட்ட முறைமைக்குப் பொருந்தாத நிலையில் பின் தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார். இரட்டை அரசாங்க முறை, வங்க நவாபை என்றென்றும் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சார்ந்திருக்கும்படியாகச் செய்து, கிழக்கிந்தியக் கம்பெனியின் நிலையை இந்திய நாட்டின் சட்டத்திற்கு உடன்பாடானதாய் இருக்குமாறு செய்தது. ஏனெனில், கிழக்கிந்தியக் கம்பெனி யினருக்கும், வங்காள நவாபுக்கும் கொடுக்கப்பட்டிருந்த அரசியல் சலுகைகள் மற்றும் அதிகாரங்கள் தெளிவாக விவரணம் செய்யப் பட்டன. எனவே, குழப்பம்,குற்ற ஊழல்கள், போட்டி புரட்சிகள் ஆகியவை மேற்கொள்ள முடியாதபடி நல்லாட்சி செய்வதற்கான வாய்ப்பு கிளைவின் இரட்டை அரசாங்க முறையினால் பெறப்பட்ட பெரும் பலனாகும். அன்று நாட்டில், குறிப்பாக வங்கத்தில் நிலவிய நிலவரங்களுக்கு ஏற்பத் தேவையாயிருந்த ஓர் அரசாங்கம் மற்றும் ஆட்சி ஏற்பாடு இதனால் செய்து கொடுக்கப்பட்டது.

1765ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராகப் படையைக் கொண்டிருந்த மற்ற

ஐரோப்பிய அரசியல், வணிகச் சக்திகள் பலவீனப்படுத்தப்பட வேண்டிய அவசியமும், ஏமாற்றப்பட வேண்டிய தேவையும் இருந்தன. ஆங்கிலேயரல்லாத மற்ற ஐரோப்பியர்கள் குறிப்பாக ஃபிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் ஆங்கிலேயர்களைத் தமது சந்தேகக் கண்களுடன் கண்காணித்து வந்தனர். அவர்கள் கண்களில் மண்ணைத் தூவித் தமது கம்பெனிக்கு உறுதியானதோர் ஆட்சி நிலையைப் பெற்றுத் தந்த பெருமை இராபர்ட் கிளைவின் இரட்டை அரசாங்க முறைக்கே அப்பொழுது இருந்தது. ஏனெனில், வங்க அரசாங்கத்தின் பொறுப்புகளையும், ஆட்சி அதிகாரங்களையும் நேரிடையாக ஆங்கிலேயர் ஏற்றிருந்தால் அச் செயல் கண்டிப்பாகப் ஃபிரெஞ்சுக்காரர்கள் மற்றும் பிற ஐரோப்பியர்களின் பொறாமையையும் எதிர்ப்பையும் அடக்க முடியாத அளவிற்கு முடுக்கி விட்டுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வளர்ச்சியைத் தடை செய்திருக்கும். ஆனால், இரட்டை அரசாங்க முறை கிழக்கிந்தியக் கம்பெனியின் நிலப்பரப்பாட்சி அதிகாரத்தைத் 'திவானி' என்னும் சட்டம் சார்ந்த திரை மூலம் மூடிப் பாதுகாத்துக் கொள்ளும் நன்மையை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், இராபர்ட் கிளைவிற்கும் கொடுத்தது. அதே நேரத்தில் பிற அந்நிய எதிர்ப்பைப் பலவீனமடையும் படியும் அது செய்தது. அவ்வாறு இல்லையேல் ஆங்கிலேயரின் ஆட்சியின் பயனாய் நாம் பிற்காலத்தில் பெற வேண்டியிருந்த பலன்கள் கிடைக்கப் பெறாமல் உடைத்தெறியப்பட்டிருக்கக் கூடும். அல்லது அவற்றைப் பெறுவதில் பெரும் காலக் கழிவும் தாமதமும் ஏற்பட்டிருக்கக் கூடும். எனவேதான், இராபர்ட் கிளைவே பின் வரும் செய்திகளை அன்று தம் தலைமை இயக்குநர்களுக்கு ஒரு கடிதத்தில் எழுதித் தெளிவாக்கி யிருந்தார். 'ஒரு நாட்டின் அரசியலின் முதல் மூலக்கருத்து அல்லது அளவைக்கூறு அதன் அரசாங்க அமைப்பாகும் என்பதை உங்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வங்க மாநிலத்தின் மக்களின் முறையிணைந்த உடைமையாகத் திவானி அதிகாரம் இருந்த போதிலும், உண்மையில் அவ் வதிகாரம் முழுவதும் நாம் அதைப் பெற்ற நாள் முதல் கிழக்கிந்தியக் கம்பெனியிடமே உள்ளது என்பதை நாம் நமது பாராட்டுக்குரிய கவனத்தில் கொள்ளவேண்டும். இவ் வதிகாரத்தை நாம் பெற்றுவிட்டபின் வங்காள நவாபிடம் பெயரளவில்தான் அதிகாரம் உள்ளது. அவர் ஒரு பொம்மை அரசரே. அவருக்கு இருப்பது 'நவாபு' என்ற வெறும் பட்டம் மட்டுமே. எனினும், இப் பட்டத்தைத் தவிர்க்க முடியாத நிலையில் அவரிடம் தங்க வைத்திருப்பது மிகத் தேவையானதாகும். ஏனெனில், நாம் நவாபு நமக்குக் கொடுத்துள்ள அனுமதியின் பேரில் அவருடைய மதிப்பிற்கு உரியவர்களாக இருக்கவேண்டும்.

இதனால், அந்நியச் சக்திகளால் மேற்கொள்ளப்படவிருக்கும் எத்தலையீட்டையும் நாம் எவ்வித நேரடி நடவடிக்கையையும் மேற்கொள்ளாது பயனுறுதியுடன் நசுக்கிவிட முடியும். ஏனெனில், நவாபு போர்த்திக் கொள்ளும் போர்வையில் நாமிருந்து செயல்களை மேற்கொண்டு நமது ஆதாய நிலையைச் சேதாரமில்லாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும். எனவே, வங்கத்தில் ஒரு நவாபு இருப்பார். ஆனால், அம் மாநிலத்து வருவாய்கள் யாவும் நமது கம்பெனிக்குச் சொந்தமாகும். மேலும், இம் மாநிலத்தில் நிலப் பரப்பாட்சி பற்றிய அதிகார எல்லை இந் நாட்டிலுள்ள நமது தலைமை அதிகாரிகளிடமே இருக்கும்; இருக்க வேண்டும். அவர்கள் தமது அரசியல் உண்மை உருவத்தை இழந்திருக்கும் நவாபின்கீழ், பெயரின்கீழ்தான் செயல்படுவர்; உண்மையான அதிகாரங்கள் நம்மிடம்தான் இருக்கும் என்பதை உணர்வீர்களாக.'[1] மேற்கண்டவாறு இராபர்ட் கிளைவ் கூறிய செய்திகளின் மூலம் அன்று நாட்டில் நிலவிய இடர்ப்பாடான நிலைகளின்படி எந்த அந்நியச் சக்திக்கும் வங்கம் இரையாகியிருக்கக் கூடும். அதே நேரத்தில், அந்நியர்கள் நேரிடையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தால், வங்கத்து மக்களே அதற்கு எதிராகத் திரண்டெழுந்திருக்கவும் கூடும். ஏனெனில், மொகலாய அரசியலில் பேரரசர், நவாபு போன்றோர் தொடர்ந்து மக்களின் மதிப்பிற்கு பாத்திரமானவர்களாய் இருந்தனர். எனவே, மக்கள் மதித்த மன்னரைப் பெயருக்கேனும் உலவவிட வேண்டிய அவசியம் இருந்தது. அப்பொழுதுதான், சுதேசி மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியும்; அது தோன்றவே முடியாதபடி செய்ய முடியும் என்ற நிலை இருந்தது. உள்நாட்டு மக்களின் கண்களில் மண்ணைத் தூவிய செயலாக அஃது அமைந்த போதும், அன்று இருந்த சூழ்நிலைகளில் இரட்டை அரசாங்க முறையைப் புகுத்தியதைத் தவிர வேறெந்த மதிப்புலம் வாய்ந்த செயலையும் இராபர்ட் கிளைவ் செய்திருக்க முடியாது.

மேலும், இரட்டை அரசாங்க முறை வங்க நவாபின் பெயரையும் அதிகாரமற்ற நிழற்பாடான அவரது நிலையையும் தன் கையில் உறுதியாகத் தங்கவைத்துக்கொண்டு, தேவைக் கேற்றாற்போல், உள்நாட்டுச் செயல்களில் அக்கறை காட்டிப் பலன்களைப் பெறக் கூடிய வாய்ப்பைக் கம்பெனிக்குக் கொடுத்தது. கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை இடத்து இயக்குநர்கள் தமது கம்பெனி இட ஆதிக்கக் கொள்கையையும், அரசியல் ஆதிக்கக் கொள்கையையும் அப்பொழுது பெறக்கூடாது என்று வகுத்திருந்தனர். ஆனால்,

[1] Edward Thompson and Garrat—'Rise and Fulfilment of British Rule in India.—p. 105.

ஆங்கிலக் கம்பெனியினர் இந்த நாட்டில் அவ் வாய்ப்புகளைப் பெற்றுவிட்ட நிலை யிருந்தது. எனவே, ஒரே சமயத்தில் தமது இயக்குநர்களை மேற்சொன்ன கொள்கைக் கொப்பச் சமாதானப் படுத்தி, அவர்கள் மனநிறைவைப் பெறும்படியாகவும், தேவை யானல் அவர்கள் அறியாவண்ணம் சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக் கொப்பச் செயல்களை மேற்கொள்ளவும் கூடிய வாய்ப்பை கம்பெனி யினர் இதன்மூலம் பெற்றனர். மேலும், 1765-ல் வங்கத்தில் நடந்த அமைதிப் புரட்சி ஆரவாரம் இல்லாத நிலையில் வங்க அரசியலில் சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும் தோற்றுவிக்கக் கூடிய நன்மையை இராபர்ட் கிளைவிற்குக் கொடுத்தது. எனவே, ஃபிரெஞ்சுக்காரர்கள் போன்ற பிற அந்நியர்கள், சுதேசி மக்கள் மற்றும் கம்பெனியின் தலைமை இடத்து இயக்குநர்கள் ஆகியோர் மனத்தில் எந்த ஐயப்பாட்டையும் எழுப்பாது, கிழக்கிந்தியக் கம்பெனியைத் தேவையற்ற துன்பங்களுக்கு உள்ளாக்காமல், உண்மையான அதிகாரச் செயல்பாட்டை ஆங்கிலேயர் மேற்கொள் வதற்குக் கிளைவின் இரட்டை அரசாங்க முறை வழி வகுத்துக் கொடுத்தது.

18ஆம் நூற்றுண்டின் பெரும்பகுதிவரை பிரிட்டிஷ் அரசு ஐரோப்பாக் கண்டத்தில் பெரும் பொறுப்புகளைப் பெற்றிருந்தது. தனது அரசியல் ரீதியான ஏகாதிபத்தியத்தை எந் நாட்டிலும் விரிவுபடுத்தக்கூடிய நிலையில் அன்று பிரிட்டிஷ் அரசு இருக்க வில்லை. எனினும், இராபர்ட் கிளைவ் தனிப்பட்ட முறையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் வங்க நிர்வாகத்தின் பொறுப்பை நேரிடையாக ஏற்கவேண்டும் என்று விரும்பினர். இக் கருத்தை அன்று இங்கிலாந்து நாட்டின் பிரதம அமைச்சராயிருந்த முதிய பிட் (Pitt the elder) என்பவர்மூலம் கம்பெனியின் இயக்குநர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். எனினும், கம்பெனியின் இயக்குநர்கள் அத்தகைய பெரும் பொறுப்பை ஏற்க அறவே மறுத்துவிட்டனர். எனவே, வங்கத்தில் இரட்டை அரசாங்க முறையைப் புகுத்துவதைத் தவிர வேறெந்த மாற்று வழியும் அவருக்குப் புலப்படவில்லை. எனவே, பெற்ற வாய்ப்பை இழந்து விடாமல் ஆங்கிலேயர் ஆட்சி வேரூன்றி எதிர் காலத்தில் நல்ல பல நன்மைகளைச் செய்யக்கூடிய தலைவிதியை இரட்டை அரசாங்க முறை நிர்ணயித்தது.

இரட்டை அரசாங்கமுறை எனும் மாறுவேடத்தில் கிழக் கிந்தியக் கம்பெனியின் உண்மையான ஆதிக்க நிலை மறைக்கப் பட்டு, அதன்மூலம் ஆங்கிலேயர்களுக்கும், மராத்தியர்களுக்கும் இடையே போராட்டம் தோன்றிவிடாதபடி காக்கப்பட்டது.

அன்று இருந்த நிலையில் 1765-ல் அல்லது அதனைத் தொடர்ந்த ஓரிரு ஆண்டுகளில் வங்க அரசின் அதிகாரத்தை ஆங்கிலேயர் உண்மையிலேயே பெற்றுவிட்டனர் என்பதை உணர்ந்து, மராத்தியர் போர் மேற்கொண்டிருந்தால் ஆங்கிலேயர் கண்டிப்பாக அதைச் சமாளித்திருக்க முடியாது. மாபெரும் சக்தியாக அப்பொழுது மராத்தியர்கள் தலையெடுத்தவண்ணம் இருந்தனர். எனவே, இரட்டை அரசாங்கம் என்ற போர்வையைப் போர்த்திக் கொண்ட நிலையில்தான் ஆங்கிலக் கம்பெனியினர் தம் செயல்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதனால், இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்களின் அக்கறைகள் நற்பலனைப் பெற்றன. மேலும், நேரிடையான எப் பொறுப்பையும் மேற்கொள்ளாது, அதிகாரத்தையும் முனைப்பாகச் செயல்படுத்தி, அதே நேரத்தில் தமது நிதிநிலையை நிலையாக்கிக்கொள்ளக்கூடிய நன்மையை ஆங்கிலக் கம்பெனியினர் இரட்டை அரசாங்கத்தின்மூலம் பெற்றனர். இவ் வரசாங்க முறையிலுள்ள ஒரு முக்கியச் செய்தி என்னவென்றால், இராபர்ட் கிளைவினாலேயே இந்த அரசாங்க முறை ஒரு முடிவான நிர்வாக ஏற்பாடாகக் கருதப்படவில்லை என்பதாகும். அது மதிப்பார்ந்த ஓர் அரசாங்க முறையாகவும் கருதப்படவில்லை. ஆனால், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்பதற் கேற்ப, அப்பொழுதிருந்த நாட்டின் நிலைக் கேற்பத் தமக்கும் பிறர்க்கும் பொருந்தும் வகையில் நெகிழ்ச்சியான, எளிதில் சமாளிக்கக்கூடிய ஓர் ஏற்பாட்டை இவ் வரசாங்க முறை ஏற்படுத்திக் கொடுத்தது. அதனால்தான் பொருத்தமான சமயமும், சூழ்நிலையும் கைகூடியபோது வாரன் ஹேஸ்டிங்ஸ், காரன்வாலிஸ் ஆகியோர் ஆட்சிக் காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி வெளிப்படையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்க முடிந்தது.

இறுதியாகப் பேராசிரியர் டாட்வெல் அவர்களின் கருத்துப்படி, '1765-ல் இராபர்ட் கிளைவால் வங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த இரட்டை அரசாங்கமுறை உறுதியான உடனடி நன்மைகளைப் பெற்றிருந்தது. காலத்தின் அவசரத் தேவைகளுக்கும், நெருக்கடி நிலைகளுக்கும் பொருந்துமாறு அஃது ஏற்றமுற அமைந்திருந்தது. அன்று மிக அத்தியாவசியத் தேவையாகக் கருதப்பட்ட நவாபின்மீது கம்பெனி செலுத்தக்கூடிய கட்டுப்பாடு இராபர்ட் கிளைவிற்குக் கிடைத்தது. தாய்நாட்டு அரசாங்கமான பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தேவைகளுக்கும், அந்நிய சக்திகளின் முறையீடுகளுக்கு எதிராகவும் வேண்டிய பாதுகாவலை அது பெற்றுக் கொடுத்தது. உண்மையை மறைத்துக் காட்டும் நிலையில் அதிகாரத்தைப் பெறுவதன்மூலமே டியூப்ளேயின் திட்டங்களுக்குப் பணிந்து கொடுக்காத எதிர்ப்பைக்

காட்டி வெல்லமுடியும் என்று இராபர்ட் கிளைவ் நினைவில் கொண்டிருந்தார். மொகலாயப் பேரரசர் வங்காள நவாபு ஆகியோரின் கட்டளைகள் பாரிஸ் (Paris), ஹேக் (Hague) போன்ற அந்நிய இடங்களிலும் இராசதந்திர ஒழுங்கு நியதிகளுக்கு உட்பட்டவையாகக் கருதப்பட்டு, மதிக்கவும்பட்டன. ஆனால், அத்தகைய கட்டளைகள் ஆங்கிலேயச் சக்தியின் ஆதரவு இல்லாது இருக்குமாயின் மதிப்பற்றவையாகவே இருந்திருக்கும். இப்படி இந்தியச் சுதேசி அரசர்கள் அயல்நாட்டு அரசியல் உறவில் மதிப்பைப் பெற வழி செய்தது. கிளைவின் இரட்டை அரசாங்க முறையும் அதன்மூலம் ஆங்கிலேயர் செலுத்திய அரசாங்க மரியாதை முறையுமே ஆகும். மேலும், வெளிப்படையாகக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி அதிகாரப் பொறுப்பை ஏற்றிருக்குமாயின், அச்செயல் இங்கிலாந்து நாட்டில் துன்பங்களைத் தோற்றுவித்துக் கம்பெனியின் விவகாரங்களில் பாராளுமன்றத்தின் தலையீட்டிற்கு வழி வகுத்திருக்கும் என்றும் கருதப்பட்டது. எனவே, சுருங்கக்கூறின் கம்பெனியின் நலனுக்கு உகந்தவகையில் வங்கத்துச் செயல்களில் முழுக் கட்டுப்பாட்டைப் பெறுவதற்கான திட்ட அமைப்பைக் கொடுப்பதாய் அமைந்ததே திவானி வழங்கப்பட்ட செயலாகும். அதே நேரத்தில் முறையணைந்த குடியேற்ற நாட்டைப்பற்றிய தொல்லைகளை மேற்கொள்ளுவதை அது தடுக்கவும் செய்தது.'[1]

இரட்டை அரசாங்க முறையினால் ஏற்பட்ட தீமைகள்

இராபர்ட் கிளைவினால் வங்கத்தில் அமைக்கப்பட்ட இரட்டை அரசாங்கம், கிழக்கிந்தியக் கம்பெனியால் நேரிடையாக அரசாங்கம் ஆட்சிப் பொறுப்புகளை மேற்கொள்ள முடியாமலிருந்த உண்மை நிலையை மூடிமறைக்கும் வகையில் முன்திறமை வாய்ந்த ஒரு நடவடிக்கையாக உருவாக்கப்பட்டது. இவ் வரசாங்க அமைப்பு முறை எவ்வாறாயினும் சட்டப்படி வங்கத்தின் நவாபு நடப்பின்படி உண்மையான ஆட்சியாளராக இருந்தார் என்னும் கருத்தை, மற்ற ஐரோப்பியச் சக்திகளின் மனத்தில் நிலைத்திருக்கும்படியாகச் செய்து, அதன்மூலம் கம்பெனியின் மறைமுகமான ஆட்சி ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக்கொள்வதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. ஆனால், பேராசிரியர் கேய் (Prof. Kaye) கூறுவதுபோன்று, 'இராபர்ட் கிளைவின் இரட்டை அரசாங்க முறையானது பல செய்திகளைத் தெளிவுபடுத்தாமல் இயற்கைக்கு ஒவ்வாத, பொது நிலை திறம்பிய ஒரு திட்டமாக இருந்தது. ஒன்றுக்கொன்று முரணான வணிக அக்கறைகளும், அரசியல் அக்கறைகளும்

[1] Dodwell. The Cambridge History of India. p. 177.

இரண்டறக் கலக்கப்பட்டு, ஒன்றின் செயற்பாடு மற்றொன்றின் அழிவிற்குத் துணைபுரிவதாய் அமைக்கப்பட்டிருந்தது. இத் திட்டமானது அரசாங்க நிர்வாகச் செயல்களைப் பொருத்தமற்ற இரு பிரிவுகளில் அடக்கிய பொருத்த மற்ற தன்மையைக் கொண்டிருந்தது. நவாபிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் அவைகளைச் செயல்படுத்துவதற்கான அதிகாரம் அவரிடம் இல்லை. அதிகாரங்கள் யாவும் கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஆனால், அவ் வதிகாரங்களைப்பற்றி எழுந்த பொறுப்புகளை அது மேற்கொள்ளவில்லை. எனவே, இவ் வரசாங்க முறையானது பொருத்தமற்றதாகவும், கால இடச் சூழலுக்கு ஒவ்வா நிலையுடையதாகவும், நடைமுறைக்கு ஒவ்வாததாகவும், அதிகாரப் பங்கீட்டைக் கொண்டிருந்தது. இதனால் குழப்பங்களும், ஊழல் குற்றங்களும் மிக அதிகமாயின. துரதிர்ஷ்டவசமாக அதிகாரமும் அதனோடு இணைந்திருக்க வேண்டிய பொறுப்பும் பிரிக்கப்பட்டிருந்த காரணத்தினால் கிளைவின் இரட்டை அரசாங்கம் வங்கத்து மக்களை நிராதரவாக்கிக் கொடுமையான ஆட்சிக்கே உட்படுத்தியது. எனவே, அரசியல் மற்றும் அரசாங்கக் கோட்பாட்டு ரீதியாகக் கிளைவின் இரட்டை அரசாங்க முறை பின்வரும் கொடுந் தீமைகளை உடையதாயிருந்தது.

டாக்டர் நந்தலால் சட்டர்ஜி (Dr. Nandalal Chatterjee) என்பவர் கிளைவின் இரட்டை அரசாங்கமுறை பொருத்தக் கேடானதாகவும் நடைமுறைக் கொவ்வாததாகவும் இருந்தது எனக் குறித்துப் பின்வரும் செய்திகளைக் கூறுகின்றார். அராசகத்தையும், குழப்பத்தையும் தோற்றுவிக்கக் கூடியது என்று அறிந்த நிலையிலும் இராபர்ட் கிளைவ் அதிகாரங்களைப் பிரித்தமைத்த நிலை, கேடானதாகும். வங்கத்தின் திவானி உரிமையைப் பெற்றுக்கொண்ட செயல் இராபர்ட் கிளைவின் ஒப்பற்ற மதிக்கூர்மையைக் காட்டுகிறது. அவரை ஒரு சூழ்ச்சித்திட்டவாதி என்றும் அத் திட்டம் வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. அவரது இரட்டை அரசாங்க முறை கடந்தகால ஆதாயக் கொள்ளைப் பொருள்களை அனுபவிப்பதற் கென்றும், அதனால் ஏற்பட்ட அடிப்படையான குழப்பங்களைப்பற்றிக் கருதாமல் செயல்படுவதற் கென்றும் அமைக்கப்பட்ட ஒரு சூழ்ச்சித் திட்டமாகும். இந்தியாவிலிருந்த சுதேசி அரசுகளையும், பிற அந்நியச் சக்திகளையும் (forces) ஏமாற்றி அவைகளுக்கு எத் தஞ்சத்தையும் கொடுக்க விரும்பாத நிலையில், தமது கம்பெனியின் செயல்கள் மேற்கொள்ளப்படுவதற்கு இராபர்ட் கிளைவினால் அமைக்கப்பட்ட ஒரு கண்கட்டி உபாயமே அவரது இரட்டை அரசாங்க முறையாகும். வங்கத்தில் ஏற்பட்ட அரசியல் புரட்சியை மூடி மறைப்பதற்கான ஒரு சிறந்த திட்டம்

என்று அதனை இராபர்ட் கிளைவ் வெளிப்படையாகவே விளக்கினர். ஆங்கில ஆதிக்கத்தின்கீழ்ப் பொருளற்ற பட்டத்தையும், வெறும் பெயரளவிலான அதிகாரத்தையும் பெற்றிருந்த ஒரு பார்வைப் பொருளாக வங்காள நவாபு காட்சியளித்தார். இந் நிலையைப் பயன்படுத்திக் கொண்டுதான் இராபர்ட் கிளைவிற்குப் பின்னர், கம்பெனியினர் தமது திவானி உரிமையை ஏமாற்று மோசடி வித்தையாகக் கொண்டு ஊழல் மிக்க நிர்வாகத்தைச் செயல் படுத்தினர்.'

இரட்டை அரசாங்க முறையினுல் வங்கத்தின் உள்நாட்டு நிர்வாகம் நிலைகுலைந்து போயிற்று. ஏனெனில் இவ் வரசாங்க முறை மனிதத் தன்மையும், இரக்கத் தன்மையும் அற்ற நிலையில் செயல்படுத்தப்பட்டது. சட்ட ஒழுங்கு அமைதியையும், நீதி நெறி முறைகளையும் செயலாக்கம் செய்வதற்கான அதிகாரத்தை வங்க நவாபு பெற்றிருக்கவில்லை. ஆனுல், அதே நேரத்தில் அரசின் அதிகாரங்களை மறைமுகமாகச் செயலாக்கம் செய்யும் பேற்றினைப் பெற்றிருந்த ஆங்கிலேயர் அவற்றிற்கான கட்டுப்பாட்டையும் பொறுப்பையும் ஏற்கவில்லை. இருந்த அரசு ஒன்று; அந்த அரசின் அதிகாரங்கள் இரு கூறுகளாக்கப்பட்டன. ஆனுல், அவ்விரு கூறு களும் பொருந்தாத் தன்மையைப் பெற்று மதிப்பற்றவையாக இருந்தன. ஒரு வண்டியை எதிரெதிர்த் திசைகளில் இரு குதிரை கள் இழுக்க முனைந்த நிலைக்கு உள்ளாகி யிருந்தது வங்க அரசு. அரசின் அதிகாரம் பற்றிய அடிப்படையான அரசியல் கோட்பாட் டிற்கு ஒவ்வாத நிலையில் அதிகாரப் பிரிவினை செய்யப்பட்டிருந்த முறை வங்க நாட்டில் நிர்வாகச் சீர்கேடு மேலும் நிலைபெறவே வழிகோலியது. வங்க நாட்டு ஜமீன்தார்களின் போக்கிரித்தனமும் நவாபின் அதிகாரிகள் மற்றும் கம்பெனி அதிகாரிகளுடைய கொடுங் கொள்ளைச் செயல்களும் எல்லையற்ற நிலையில் கட்ட விழ்த்துவிடப் பெற்றிருந்ததால் வீட்டமைதியும், நாட்டமைதியும் அழிந்தன. தொழிலாளர்களும், வணிகர்களும் அச்சுறுத்தலுக்கு அடிபணிய வேண்டியிருந்தது. தமது அவலக் குரல்களுக்கும், குறைகளுக்கும் பரிகாரத்தைத் தேடித்தரும் நிலையில் செவி சாய்ப்போர் யாரும் இல்லாது போனமையின் வங்கத்து மக்கள் தமது குடிசைகளையும், சிறு வீடுகளையும் விட்டு வெளியேறி நாடோடிகளாகத் திரிய வேண்டியவராயினர். வங்கத்தின் வரலாற்றிலேயே இப்படிப்பட்ட ஓர் அழிவுக் காலம் ஏற்பட்டிருக்க முடியுமோ என ஐயுறும் வகையில் பாழ்நிலை நிலவியது. மேலும், மக்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் ஓரளவுக்கேனும் தமது வரம்பிற் குட்பட்டுச் செவிமடுத்து, வங்க நவாபு நிர்வாகத்தை மேற்கொள்ள முனைந்த போதும், அவரிடம் நல்ல நிர்வாகத்தை

நடத்துவதற்குத் தேவையான நிதி நிலைமை இருக்கவில்லை. அவரிடம் நல்ல மனம் இருந்தது; ஆனால் பணம் இல்லை. எனவே, மணமற்ற மலராகத்தான் வங்கத்தின் இரட்டை அரசாங்கம் காட்சியளித்தது. இவைகளையும் மீறித் தமது அதிகார வரம்பின் கீழ் வங்காள நவாபால் மேற்கொள்ளப்பட்ட நிர்வாகச் செயல் களில் தார்மீகமற்ற நிலையில் கம்பெனியின் பணியாளர்கள் கண்டபடி தலையிட்டனர். நிர்வாகத்தின் பொறுப்பு நவாபிடம் இருந்தது. ஆனால், அந் நிர்வாகத்தை எளிதாகத் தடைகள் அகற்றி நடத்துவதற்குத் தேவையான நிதியையும் அதிகாரங்களையும் நவாபு பெற்றிருக்கவில்லை. கம்பெனிப் பணியாளர்களின் சகிக்க முடியாத தலையீட்டைத்தான் தமது உள்நாட்டு நிர்வாகத்தில் அவர் பெற்றிருந்தார். இத்தகைய தலையீட்டு நிலையால் வங்காள நவாபு கம்பெனியினரின் அரசியலாதிக்கத்தைப் பாம்பு என்று அடிக்க முடியாமலும், பழுதென்று உதறித்தள்ள முடியாமலும் மிகவும் இக்கட்டான சஞ்சலத்தில் இருந்தார். இவரது இந்த இக்கட்டான நிலை ஆங்கிலேயரின் அராசகச் செயல்களைத் தறி கெட்டு ஓடும்படி செய்தது. இப்படி, ஆங்கிலேயர் அடிப்படை யாகப் பல நன்மைகளைப் பெற்றிருந்ததோடன்றி, இவ் விரட்டை அரசாங்க முறையினால் நம்மவர் பெற்றிருந்த தீமைகளிலிருந்தும் ஆதாயத்தைப் பெற்றனர்.

வங்கத்தின் இரட்டை அரசாங்க முறையினால் தோன்றிய தீமைகளை வலியுறுத்தும் வகையில் ராம்சே மூர் (Ramsay Muir) என்னும் அரசியல் வரலாற்றுப் பேரறிஞர் பின்வரும் செய்திகளை எடுத்துக் காட்டியுள்ளார். இவ் வரசாங்க முறையின்கீழ்த் தனியார் வர்த்தகத்தின் சீர்கேடுகளும், ஊழல்களும் உச்ச நிலையை அடைந்தன. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பணியாளர்கள் தாறுமாறாகப் பழிபாவங்களுக்கு அஞ்சாமல், சுயநலப் போக்கில் தமது தனிப்பட்ட வர்த்தகத்தை மேலும் மேலும் விரிவடையச் செய்தனர். அவர்கள் கம்பெனியின் பெயரைக்கொண்டு கம்பெனியின் செலவில் பெருங் கொள்ளைஇலாபம் அளிக்கக்கூடிய வகையில், வங்க அரசாங்கத்தையும், சுதேசி நிர்வாகத்தையும் ஒரு சிறிதும் மதிக்காது சுரண்டித் தனிப்பட்ட வர்த்தகச் செயல்களை மேற்கொண்டனர். தமக்குச் சாதகமாகச் சூழ் நிலைகளை உருவாக்கிக்கொண்டும், தம் வர்த்தகப் பொருள்களின் மீதான தீர்வைகளிலிருந்து விலக்குகளைப் பெற்றும் தம் வர்த்தகச் செயல்களைக் கம்பெனிப் பணியாளர்கள் மேற்கொண்டனர். இவற்றின் விளைவாக ஆங்கிலக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் பொது வருவாய் குறைந்து, அதன் பணியாளர்கள் பெற்ற ஆதாயங்கள் வெகுவாக அதிகரித்தன. எனவே, கிழக்கிந்தியக்

கம்பெனி என்னும் வணிக நிறுவனத்தின் நோக்கின்படியும் வங்கத்தில் அமைக்கப்பட்ட இரட்டை அரசாங்கமானது முழுமையான ஒரு தோல்வித் திட்டமாகவே அமைந்தது. இவ் வரசாங்க ஏற்பாட்டின் மூலம் கிழக்கிந்தியக் கம்பெனி மிக நெருக்கடியான நிதி இடர்ப்பாடுகளைப் பெற்றுவந்த சமயத்தில், அதன் பணியாளர்கள் பெருஞ் செல்வங்களுடன் தமது தாயகத்திற்குத் திரும்பியவண்ணம் இருந்தனர். இதனால் இன்னலுற்றிருந்த இந் நாட்டு மக்களை எவரும் திரும்பிப்பார்க்கவோ, அல்லது விரும்பி விழைந்து அவர்களது துன்பங்களைத் துடைக்கக்கூடிய நிலையோ தோன்றவில்லை'.[1]

பேராசிரியர் R. C. டட் (R. C. Dutt) அவர்களும் எடுத்துக் காட்டியுள்ளதுபோல், 'வங்காள நவாபின் கருவூலத்திற்குச் சேர வேண்டிய நிதி வருவாய்கள் தொடர்ந்து திரட்டப்பட்டு வந்தன. நவாபின் அதிகாரிகளாலேயே நீதி நிர்வாகம் நடத்தப்பட்டு வந்தது. ஆனல், இந்த ஏற்பாட்டு நடவடிக்கைகளை நவாபின் அதிகாரப் போர்வையைப் போர்த்திக்கொண்டே கம்பெனியின் அதிகாரிகளும் நவாபின் அதிகாரிகளும் மேற்கொண்டனர். ஆனல், தமது சுயலாபம் கருதிக் கம்பெனியின் பணியாளர்கள் நவாபின் அதிகாரிகளையும், பணியாளர்களையும் மிரட்டியும் கொடுமைப்படுத்தியும் செயல்பட்டனர். நவாபின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த நீதி மன்றங்களைத் தமது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான சாதனங்களாகச் செயல்படும்படி தமது செல்வாக்கிற்கு உள்ளாக்கியிருந்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலைகளாலும் இந்திய மக்கள் வெகுவிரைவில் வறுமை நிலையைத் தழுவ வேண்டியிருந்தது.'

இரட்டை அரசாங்க முறை செயல்பட்ட காலத்தில் இந்திய வணிகர்கள் பெருந்தொல்லைகளுக்கு ஆளாயினர். இந்தியத் தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் யாவும் பெருந் துன்பங்களுக்கு ஆளாயின. சமாளிக்க முடியாத வர்த்தகப் போட்டியைப் பிரிட்டிஷ் வணிகர்கள் உருவாக்கியிருந்தமையால் இந்திய வர்த்தகர்கள் பெரும் இழப்பிற்கு ஆளாகும் நிலை தோன்றியது. எனவே, தமது பொருள்களைக் குறைந்த விலையில், கரைந்து போய்விட்ட வர்த்தக ஊக்கத்துடன் விற்கவேண்டிய நிலை இந்திய வணிகர்களுக்கு ஏற்பட்டது. ஆனல், பிரிட்டிஷ் வர்த்தகர்களோ தமக்குச் சாதகமான சூழ்நிலைகளில் அதிக இலாபத்துடன் பொருள்களை இந் நாட்டில் விற்றனர். மேலும், கம்பெனியின்

[1] Ramsay Muir. Making of British India, p. 93.

பணியாளர்கள் இந்தியக் கைவினைஞர்களைத் (artisans) தம் தொழிற்சாலைகளில் மட்டும் வேலைசெய்யுமாறு நெருக்கத்திற்கும் கட்டாயத்திற்கும் உள்ளாக்கினர். தம் சுய அக்கறைகளுக்கும் வியாபாரங்களுக்கும் போட்டியாய் அமைந்த சிறந்த பஞ்சாடைகளையும் கைத்தறிப் பட்டாடைகளையும், துணிமணிகளையும் இந்தியக் கைவினைஞர்கள் உற்பத்தி செய்யாமல் இருக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். இவற்றால், மேற்கூறியதுபோல் இந்தியர்களின் தனிப்பட்ட வர்த்தகமும் வியாபாரமும் பேரின்னல்களுக்கு ஆளாயின.

இராபர்ட் கிளைவ் உருவாக்கி யிருந்த இரட்டை அரசாங்க முறையினால் தோன்றிய தீமைகளின் காரணமாக 'வங்க மாநிலம் அழிவின் எல்லைக்கோட்டிற்கு இழுத்துச் செல்லப்பட்டது.' என்று பெக்கர் (Becher) என்னும் பேரறிஞர் எடுத்துக்காட்டியுள்ள செய்தியானது நமது நெஞ்சை நெக்குருகச் செய்வதாக உள்ளது. இவ் வவலநிலை தோன்றியதற்குக் காரணமாய் அமைந்தவை இரட்டை அரசாங்க முறையும் அதனால் தோன்றிய சீர்கேடுகளுமேயாகும். பொதுவாக நாட்டில் தீய அரசாங்கத்தையும் நேர்மையற்ற நிர்வாகத்தையும் குறிப்பாக, வங்கத்தில் உழவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் அடக்கு முறையையும் கொடுமையையும் கொடுப்பதாய் இரட்டை அரசாங்க முறை பரங்கியர்களால் மேற்கொள்ளப்பட்டது. நவாபின் பொறுப்பிலிருந்த உள்நாட்டு நிர்வாகத்தில் அக்கறை காட்டாது அதை ஒதுக்கித் தமது வருவாயைத் திரட்டி, ஆதாயத்தைப் பதுக்கிக் கொள்வதிலேயே கிழக்கிந்திய கம்பெனி கண்ணும் கருத்துமாக இருந்தது. வங்க நவாபின் அதிகாரத்திற்குக் கடப்பாட்டைக் கொண்டிருந்த அமீர்களும் ஜமீன்தார்களும்கூட நாட்டுமக்களின் நல்வாழ்வைப் புறக்கணிக்கக்கூடிய பேராபத்தை இவ் வரசாங்கமுறை தோற்றுவித்தது. அவர்களைத் தட்டிக் கேட்கக்கூடிய நிலையில் அரசின் மேல்திகாரிகள் இல்லாமலிருந்ததால், அவர்கள் மக்களைக் கசக்கிப் பிழிந்து கொடுங்கோன்மையுடன் மிக அதிகமான வரிகளைத் திரட்டினர். கம்பெனியினால் நியமிக்கப்பட்டிருந்த தண்டல் நாயகங்களும் வெகுவான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தனர். இவ் வதிகாரங்களை அவர்கள் தவறான முறையில் பயன்படுத்தத் தயங்கவில்லை. இத் தண்டல் நாயகங்கள் தத்தம் மாவட்டங்களில் தமது சுய செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ளும் வகையில் தமக்கு அளிக்கப்பட்டிருந்த சுய அதிகாரங்களைத் தவறான முறையில் பயன்படுத்தினர். சுருங்கக் கூறின் 'உண்மையிலேயே வங்க நிர்வாகத்தின் ஒவ்வொரு செயலும் தவறைத் தழுவியதாகவே மேற்கொள்ளப்பட்டது. வங்க மாநிலம் கொள்ளையர்களால் சூழப்

பட்டுத் தாக்கப்பட்டது. மக்களின் உயிர், உடைமை, மதிப்பு ஆகிய யாவும் பாதுகாவலற்று இருந்தன,' என்று பேராசிரியர் பெக்கர் கூறியுள்ளார். இது வங்கத்து இரட்டை அரசாங்கமுறை தோற்றுவித்த தீமைகளுள் சகித்துக்கொள்ள முடியாத ஒன்ருகும்.

வங்கம், பீகார், ஒரிஸா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த இரட்டை அரசாங்கத்தினுல் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு நிலங்களின்மூலம் அதிக வருவாய் கிடைக்கும் என்று கணிக்கப் பட்டது. 1765ஆம் ஆண்டில் ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு இலட்சம் பவுன்கள் நிலங்களிலிருந்து வருவாய் கிடைக்கும் என்று கம்பெனியின் உள்துறை அரசாங்கம் மதிப்பிட்டது. மேலும், நில நிர்வாகம் ஒழுங்காக மேலாண்மை செய்யப்படுமாயின் முப்பத்தாறு இலட்சம் பவுன்களுக்கு மேலாகவே நில வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனுல், அவையாவும் பொய்த்துப் போயின. ஏனெனில், கம்பெனியின் பணியாளர்களின் சுயநலமும் ஊழலும் மிக்க செயல்களினுல் கம்பெனியின் கருவூலத்திற்குப் போய்ச் சேரவேண்டிய தொகைகள் அதன் பணியாளர்களின் பணப் பெட்டியைப் போய் அடைந்தன. இரட்டை அரசாங்க முறையின்கீழ் நிலங்கள் யாவும் ஏலத்திலும் குத்தகையிலும் அதிக மான தொகைகளைக் கொடுக்க முன்வந்தோரிடம் ஒப்படைக்கப் பட்டன. இதனுல் நிலங்கள் அடிக்கடி பலர் கைகளுக்கு மாறின. இச் செயல், நிலங்களின் செழிப்பைச் சீர் குலைத்தது. இதனுல் உழவர்கள் தொழிலில் நாட்டம் கொள்ளாத நிலை ஏற்பட்டது. எனவே, நில வருவாய் கம்பெனியினர் எதிர்பார்த்தபடி அதிகரிக்கவே இல்லை. உற்பத்தி குறைந்ததால் உள்நாட்டவரும் துன்பங்களுக்கும் வறுமைக்கும் உட்பட்டு அவதிப்படலாயினர்.

முன்ஞெரு பகுதியில் வங்க நவாபின்கீழ் இருந்த உள்நாட்டு நிர்வாகத்தில் ஆங்கிலேயர் எவ்வாறு தலையிட்டனர் என்பதும் அதனுல் தடையற்ற நிர்வாகத்தை அவர் மேற்கொள்ள முடியாத நிலைக்கு எவ்வாறு உள்ளாக்கப்பட்டார் என்பதும் கூறப்பட்டன. ஆங்கிலேயர் நவாபின் உள்நாட்டு நிர்வாகத்தில் தலையிட்ட தீமை அவரது ஆட்சிப் பொறுப்பின்கீழிருந்த நீதி நிறுவனங்களையும் விட்டு வைக்கவில்லை. ஆங்கிலேயரின் தலையீட்டால் வங்கத்திலிருந்த சுதேசி நீதிமுறை முழுமையாக நொடித்துப் போயிற்று. கம்பெனியின் அதிகாரிகள் எப்பொழுதும் தலையிட்டுக்கொண்டிருந்த காரணத்தால் நவாபின் நீதிபதிகளும் நீதித்துறை அலுவலர்களும் கடமைகளைச் சரிவர மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். அதனுல், அவர்களின் நிர்வாகம் ஊழலும் குற்றமும் மிக்கதாக ஆகியது. ஆங்கிலேயர் தமது பேராசை

மற்றும் கொள்ளை ஆதாய வேட்டைகளுக்கான சாதனங்களாகவும் கருவிகளாகவும் நவாபின் நீதி மன்றங்களைச் செயல்படுமாறு செய்தனர். அதனால், தீய நிர்வாகம் நாட்டில் தாண்டவமாடக் கூடிய ஒரு நிலையை இராபர்ட் கிளைவின் இரட்டை அரசாங்க முறை தோற்றுவித்தது.

வணிக அக்கறைகளும் அரசியல் அக்கறைகளும் திரட்டி ஒன்று படுத்தப்பட்டிருந்ததாலும் கைப்பாவை ஆட்சியாளராக இருந்த நவாபிடம் பொறுப்பும், கம்பெனி ஆளுநரிடமும் அவரது ஆட்சி மன்றத்திடமும் உண்மையான அதிகாரமும் இருந்ததாலும் மேற் சொல்லப்பட்ட தீமைகளும் கொடுஞ்செயல்களும் மலிந்து இரட்டை அரசாங்க முறை பேராசிரியர் கேய் (Kaye) கூறுவது போல், 'ஏற்கெனவே நாட்டில் நிலவியிருந்த குழப்பத்தைப் பெருங்குழப்பமாகவும் ஊழல் அரசாங்கத்தை பேரூழல் மிக்க ஓர் அரசாங்கமாகவும் மாற்றியது.'

இராபர்ட் கிளைவைத் தொடர்ந்து கம்பெனியின் ஆளுநர் களாக வந்த வெரல்ஸ்ட், கார்டியர் ஆகியோரது ஆட்சிக் காலத்தில் இரட்டை அரசாங்கத்தின் தீமைகள் மேலும் அதிகரித்தன. இவ் விருவரும் இராபர்ட் கிளைவைப்போல் திறமை யாளர்களாக இருக்கவில்லை. எனினும், 1769-ல் வெரல்ஸ்ட் இரட்டை அரசாங்க முறையினால் தோன்றியிருந்த சூழ்நிலையைச் சீர்செய்ய முனைந்தார். இதன்படி அவர் ஒவ்வொரு மாவட்டத் திலும் அவற்றின் தல அதிகாரிகளுக்கு நல்வழியையும் அறிவை யும் கொடுத்து அவர்களின் செயல்களைக் கண்காணிக்க ஆங்கில மேற்பார்வையாளர்களை (supervisors) நியமித்தார், ஆனால், இம் முயற்சி இரட்டை அரசாங்க முறையின் தீமைகளை மேலும் அதிகரிக்கவே செய்தது. ஏனெனில், புதிதாக நியமிக்கப்பட்டி ருந்த ஆங்கில மேற்பார்வையாளர்கள் தம் பதவிகளைத் தத்தம் மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட சுயவர்த்தகத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு என்று கொடுக்கப்பட்ட ஓர் அருமையான சாதன மாகக் கருதிச் செயல்பட்டனர். இம் மேற்பார்வையாளர்கள் தல அதிகாரிகளுக்கும் சுதேசி அதிகாரிகளுக்கும் அறிவுரை ஆலோசனைகளைக் கூறுவதாகச் சொல்லித் தமது சுயநலத் தேவை களைப் பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் அவர்களின் செயல் களில் தலையிட்டனர். இதனால் தல அதிகாரிகளும் சுதேசி ஆட்சி யாளர்களும் மனம் நொந்து வெந்தனர்; கம்பெனிப் பணியாளர் களை வெறுக்கவும் சபிக்கவும் செய்தனர். கம்பெனியின் வருவாய் களைக் கட்டுப்படுத்தி மேற்பார்வை செய்வதற்கென அமைக்கப் பட்டிருந்த மூர்ஷிதாபாத்திலும் பாட்னாவிலும் இருந்த வருவாய்க் கட்டுப்பாட்டு மன்றங்களைப் பற்றிய நிறுவனமோ அல்லது

1771-ல் கல்கத்தாவில் அமைக்கப்பட்டிருந்த கணக்கீடுகள் பற்றிய கட்டுப்பாட்டுக் கமிட்டியோ மேற்சொல்லப்பட்ட சூழ்நிலையையும் நிலவரங்களையும் சரிசெய்து தேர்ச்சியுறச் செய்யவில்லை.

இத்தகைய தீமைகளுக்கெல்லாம் இறுதி வீச்சு என்னும் முடிவாக்கும் செயலாக (coup-de-grace) 1770-ல் வங்க மாநிலம் துன்பமிகு பஞ்ச நிலையை அடைந்தது. 1770-ல் வங்க நாட்டில் ஏறத்தாழ ஒன்றரைக் கோடி மக்கள் வசித்தனர். இவர்களில் முப்பது இலட்சம் மக்களேனும் வறுமையாலும் பஞ்சத்தாலும் இறந்தனர். இத்தகைய கொடுமையான நிலை ஏற்பட்டபோதும், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பணியாளர்கள் இதைப் பொருட்படுத்தவில்லை; மக்கள் துயர் துடைக்கும் மனப் போக்கையும் கொள்ளவில்லை. மாறாகக் கொதியெண்ணெயில் கொப்பளித்துக் கொண்டிருந்தவர்களைக் கொடுந்தீயில் தூக்கி எறிந்ததைப்போல், கம்பெனியின் பணியாளர்களான நாயிப் திவான்கள் எனப்பட்ட உதவி நவாபுகள் மக்களிடமிருந்து வசூலித்த தீர்வைகளை மேலும் பத்து சதவிகிதம் உயர்த்தி, அவற்றை இரும்புக் கரங்கள்மூலம் வசூலித்தனர். இதனால் வங்கம் வறுமை நாடாகவும், வேற்றிடத்தை மக்கள் நாடிச் செல்லக்கூடிய வெற்றிடமாகவும் மாறியது. இத்தகு கொடுமைகளையும் தீமைகளையும் இந் நாட்டவர்களுக்குக் கொடுப்பதாய் அமைந்ததே அந்நியர்கள் அமைத்த இரட்டை அரசாங்க முறையாகும். எனவே, இத்தகு அரசாங்க முறை விரைவில் கலைத்து அழிக்கப்பட வேண்டிய நிலையும் தோன்றிவிட்டது.

இரட்டை அரசாங்க முறையின் கலைப்பு

அரசியல் மற்றும் ஆட்சிக் கோட்பாடு நியதிக்கு உட்படாத வகையில் அதிகாரமும் பொறுப்பும் பிரிக்கப்பட்டிருந்ததாலும், கம்பெனியின் செலவில் அதன் பணியாளர்கள் தம்மைச் செல்வந்தர்களாக்கிக் கொண்டதாலும், கிழக்கிந்தியக் கம்பெனி கடனாளியாக மாறிற்று. ஏனெனில், கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதாயங்கள் அதன் உரிமையாளர்களுக்கும் இயக்குநர்களுக்கும் போய்ச் சேரவில்லை. கம்பெனியின் இயக்குநர்களோ தமது ஆதாயங்கள் குறைந்து போனதற்குச் சுயேச்சை ஏஜெண்டுகள் அல்லது முகவர்கள் கொள்ளையடித்ததே காரணம் என்று நினைத்தனர். ஆனால், கம்பெனியின் பணியாளர்கள்தாம் உண்மையில் அதன் காரணமென்பதை இயக்குநர்கள் உணரவில்லை. இக் கருத்தின் அடிப்படையில்தான் மாவட்ட அதிகாரிகளையும் தல அதிகாரிகளையும் கண்காணித்துக்கொள்ளும் பொருட்டு மேற்பார்வையாளர்களைக் கம்பெனியின் தலைமையிடம் தமது ஆளுகைக்கு

உட்பட்டிருந்த இந்தியப் பிரதேசங்களில் நியமிக்க வகை செய்தது. ஆனால், முன்னரே எடுத்துக் காட்டியதுபோல் ஆங்கில மேற்பார்வையாளர்களைக் கொண்டு கம்பெனியின் நிர்வாகச் செயல்களைச் சீர்திருத்த முனைந்த திட்டமானது தோல்வியையே தழுவியது. எனவே, 1771ஆம் ஆண்டில் கம்பெனியின் இயக்குநர்களே திவான்களாகச் செயல்படக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொள்வது என்று தீர்மானித்தனர். இதன்மூலம் இந்திய வருவாய்களைத் திரட்டி மேலாண்மை செய்யும் முழுப் பொறுப்பையும் தாமே மேற்கொள்வது என்றும் முடிவெடுத்தனர். இவற்றைச் செயல்படுத்தும் வகையிலேயே வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவரை வங்கத்து ஆளுநராக நியமித்தனர். இவருக்குத் தமது சுய தீர்ப்பு மற்றும் விருப்பத்திற் கொப்ப (discretion) இயக்குநர்களின் பொதுவான கொள்கையைச் சார்ந்து வங்கத்திற்கெனப் புதியதொரு அரசாங்க முறையை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய அதிகாரம் தரப்பட்டது. இத்தகைய அதிகாரத்தோடு, இந்தியாவிற்குக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுநராக வந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் நாயிப் திவான் எனப்பட்ட உதவி நவாப் பதவியை ஒழித்தார். ஆனால், இவர் ஆளுநர் மற்றும் ஆட்சி மன்றத்தைக் கொண்ட ஒரு வருவாய் வாரியத்தை (Board of Revenue) அமைத்தார். இதுகாறும் மூர்ஷிதாபாத்திலிருந்த கம்பெனியின் கருவூலத்தை (treasury) கல்கத்தாவிற்கு மாற்றித் தமது நேரடிக் கண்காணிப்பின்கீழ்க் கொண்டுவந்தார். மாவட்ட மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தவர்களை மாவட்டத் தண்டல் நாயகம் என்னும் ஆட்சியாளர்களாகப் (District Collectors) பதவி மாற்றம் செய்தார். இம் மாவட்டத் தண்டல் நாயகத்திற்கு உதவி புரியும் வகையில் திவான்கள் என்ற சுதேசி அதிகாரிகளை நியமித்து, அவரது கடமை மற்றும் பொறுப்புகளைத் தெளிவாக்கினார். மேலும், நாட்டிலிருந்த நீதி நிறுவன அமைப்பு முறையை மாற்றியமைத்தார். இதன்படி ஒவ்வொரு மாநிலத்திலும் திவானி அதலத் (Diwani Adalat) என்னும் ஒரு சிவில் நீதி மன்றத்தையும், ஃபௌஜ்தாரி அதலத் (Faujdari Adalat) எனப்பட்ட ஒரு குற்றவியல் நீதி மன்றத்தையும் அமைத்தார். இவற்றில் திவானி அதலத், தண்டல் நாயகத்தின் தலைமையின்கீழ் இந்திய மாவட்ட அதிகாரியின் உதவியோடு செயல்படும்படி செய்யப்பட்டது. குற்றவியல் நீதிமன்றம் ஃகாஸி (Quazi) என்ற சமய குரு ஒருவரைத் தலைவராகக்கொண்டு இயங்கும்படி செய்யப்பட்டது. இந்த நீதிமன்றம் முஃப்டி (Mufti) என்ற முஸ்லிம் சட்ட அறிஞர் ஒருவரையும் மௌல்விகளையும் (Maulvis) உதவியாளர்களாகக் கொண்டு, மாவட்டத் தண்டல் நாயகத்தின்கீழ்ச் செயல்படும்படியாக அமைக்கப்பட்டது. இந்த நீதிமன்றங்களுக்கெல்லாம்

மேலாகக் கல்கத்தாவில் சாதர் திவானி அதலத் என்னும் சிவில் உயர்நீதி மன்றமும், சாதர் நிஸாமத் அதலத் எனப்பட்ட குற்றவியல் உயர்நீதி மன்றமும் அமைக்கப்பட்டன. ஆளுநரும் அவரது ஆட்சி மன்றமும் தலைமை தாங்கக்கூடிய வகையில் சிவில் உயர் நீதிமன்றமும், மன்றத்துடன் கூடிய ஆளுநரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுத் தலைமை ஃகாஸி, முஃப்டி மற்றும் மூன்று திறம் மிக்க மௌல்விகளின் உதவியுடன் தரோஹா-இ-அதலத் என்பவரைத் தலைவராகக்கொண்டு செயல்படும்படி குற்றவியல் நீதிமன்றமும் அமைக்கப்பட்டன. இத்தகைய மாற்றங்களினால் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினரின் இந்திய ஆட்சிக் கொள்கை புதிதாக அமைக்கப்பட்டு, புதியதொரு அரசியல் மற்றும் ஆட்சி சகாப்தம் தொடங்கி, ஆங்கிலேயரின் ஆதிக்கம் உச்ச நிலையை அடையுமாறு இராபர்ட் கிளைவின் இரட்டை அரசாங்கமுறை கலைக்கப்பட்டுப் புதியதொரு ஆட்சி அமைப்பு நிறுவப்பட்டது.

இரட்டை அரசாங்கமுறையின் அரசியல் முக்கியத்துவம்

கி. பி. 1772-லிருந்து இந்தியாவின் அரசியல் மற்றும் அரசாங்க வாழ்விலும் வரலாற்றிலும் புதியதொரு பாதையை வகுத்துக் கொடுப்பதற்குக் காரணமாய் இருந்த இராபர்ட் கிளைவின் இரட்டை அரசாங்கம் பின்வரும் அரசியல் முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. இவ் வரசாங்க முறை வங்கத்தில் புகுத்தப்பட்டதால், இந்தியாவில், குறிப்பாக வங்கத்தில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் தலைமை உறுதியாக அமைக்கப்பட்டது. இதன்மூலம் ஆங்கிலேயர் பயன் பெறக்கூடிய நிலையில், கம்பெனியின் இயக்குநர்கள் மன்றம் சிறிதும் எதிர்பார்க்காத வகையில், இயற்கையாகவே உயர்வான அரசியல் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். மொகலாயப் பேரரசர் ஆங்கிலேயரின் முழுக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தார்; அயோத்தியின் நவாபு ஆங்கிலேயரைச் சார்ந்திருக்கக் கூடிய நண்பராக மாறினர்; வங்க நவாபோ அந்நியருக்கு அடிமையாக மாறி விட்டிருந்தார். இவற்றால் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு நம் நாட்டில் அரசோச்சும் நிலை உறுதியாக்கப்பட்டுவிட்டது. எனினும், அப்பொழுது நடைமுறையிலிருந்த ஆங்கில நாட்டுச் சட்டமுறைகளுக்கும் நம் நாட்டு நிலவரங்களுக்கும் ஏற்ற வகையில் காலம் மற்றும் சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப இவ் வரசாங்கம் அமைந்திருந்தது. தான் ஒரு ஆட்சி அதிகார அரச நிறுவனத்தைப் போல் செயல்பட முடியாத நிலை இருந்தபோதும், ஆதாயமிக்க ஆட்சியை வலுவுடன் நடத்தக்கூடிய வாய்ப்பைப் பரங்கியர்களுக்குக் கொடுத்த அரசியல் முக்கியத்துவத்தை இரட்டை அரசாங்க முறை

பெறுகின்றது. இவ் வரசாங்க முறை இராபர்ட் கிளேவின் கூரிய அரசியல் அறிவையும் பொது அறிவையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருப்பது மட்டுமன்றி, பன்னெடுங் காலம் நாட்டில் நிலவி யிருந்த மொகலாய இறைமையையும், மற்றும் பல சுதேசி அரசர் களின் அரசியல் மேலாண்மையையும் மிகக் குறுகிய காலத்தில் அடக்கி யொடுக்கிவிட்ட முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்து கின்றது. கிழக்கிந்தியக் கம்பெனி 1857 வரை பலவிதமாகப் போராடி இந்தியா முழுவதிலும் தனது ஆட்சியைச் செலுத்தக் கூடிய வாய்ப்பைப் பெறுவதற்கான அடித்தளத்தை நாட்டியது. இந்தியப் பேரரசர் மற்றும் மொகலாய இறைமையின் பெயரைப் பயன்படுத்திக்கொண்டு திவானி, நிஸாமத் ஆகிய அதிகாரங்கள் மூலம் மறைமுகமாக வங்கத்தில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நிலை நாட்டச் சட்ட ரீதியாய் அடித்தளம் நாட்டப்பட்டது. இத்தகைய அரசாங்க முறை அமைக்கப்பட்டிருக்காது போயின் ஆங்கிலேயர் பல போர்களில் ஈடுபட்டிருக்க வேண்டியிருந்திருக் கலாம்; அல்லது அவர்களின் ஆதிக்கம் தங்குமிடம் பெற முடியாதபடி தரை மட்டமாக்கப்பட்டுத் தகர்த் தெறியவும்பட்டி ருக்கலாம். அன்று நாடு இருந்த நிலையில் வங்கத்தில் கவனத்தைச் செலுத்தித் தம்மை நிலைநிறுத்திக்கொள்ளாது போயிருப்பாரே யானால், ஆங்கிலேயர் ஆதிக்கம் இந் நாட்டில் தங்கிக் கிடக்கவோ, தங்கியிருந்ததைக் காப்பாற்றிக்கொள்ளவோ முடியாது போயிருக்கும். இத்தகு காரணங்களாலேயே இராபர்ட் கிளேவின் இரட்டை அரசாங்க முறை, இந்தியாவின் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியின் அரசியல் வரலாற்றில் முக்கிய மானதொரு இடத்தைப் பெறுகின்றது. இவ் வரசாங்க முறை எண்ணற்ற தீமைகளைக் கொண்டிருந்தது என்பதில் ஐயமில்லை. தான் பெற்றிருந்த தீமைகளின் காரணமாக அஃது பின்னர் அழிக்கப் படவேண்டியதாயிற்று என்பதும் உண்மை. எனினும், பின்னால் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு ஆங்கிலேயர்கள் இந் நாட்டின் தலைவிதியை அரசியல் ரீதியாகவும், ஆட்சி ரீதியாகவும் நிர்ணயிக்கக் கூடிய வாய்ப்பை அஃது அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது என்பதும் மறுக்கமுடியாத உண்மையே.

8. கிழக்கிந்தியக் கம்பெனியின் இறைமை, அரசியல் ஆதிக்கம் ஆகியவற்றின் வளர்ச்சி (1772—1857)

கம்பெனி அரசாங்கத்தின் வினை ஆற்றல்

இராபர்ட் கிளைவ், வெரல்ஸ்ட், கார்டியர் ஆகிய மூவரது ஆட்சிக்காலத்திற்குப் பிறகு 1772 முதல் 1857 வரை அமைந்த காலத்தை ஆங்கிலேயரின் ஆதிக்கம் இந்தியாவில் பரவிய காலம் என்று கூறலாம். பேராசிரியர் R. கூப்லாண்ட் (R. Coupland) அவர்கள் கூறுவதுபோன்று, 'வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் தலைமை ஆளுநராக (Governor General) 1773-ல் பதவி ஏற்ற காலம் முதல் டல்ஹௌசி தலைமை ஆளுநராக இருந்த காலம்வரை பர்மா நீங்கலாக. இந்தியா முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் வந்தது.' எனவே, 1772 முதல் 1857 வரை நடந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளை அறிந்துகொள்ளுதல் மிக இன்றியமையாததாகும். இக் காலத்தில் ஆங்கிலேயர் வலிமைபெற்ற சில இந்தியச் சக்திகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. சீக்கியர்கள், மராத்தியர்கள், தென்புலத்து வேந்தர்கள், குறிப்பாக மைசூரை ஆண்ட ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகிய சக்தி வாய்ந்த தேசிய மரபினரைப் பல வழிகளில் ஆங்கிலேயர் சந்தித்துத் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி, இந்தியா பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடி ஆட்சியின்கீழ் வருவதற்குத் துணைபுரிந்தனர். எனவே, 1772 முதல் 1857 வரை அமைந்த காலத்தை இந்தியாவின் அரசியல் வரலாற்றில் ஒரு சகாப்தம் என்று கூறலாம். இச் சகாப்தத்தில் ஆங்கிலேயரால் அரசாங்கச் சீர்திருத்தங்களும், ஆட்சிச் சீர்திருத்தங்களும், அரசியலமைப்பு வளர்ச்சியும், கல்வி, கலாசார, சமுதாய சீர்திருத்தங்கள் போன்றவையும் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் விளைவாக 1857-க்குப் பிறகு இந்திய அரசியலிலும் அரசாங்க அரங்குகளிலும் புதியதொரு திருப்பம் ஏற்பட்டது. இந்தச் சகாப்தமும், இச் சகாப்தத்தில் நடந்த பல்வேறு

செயல்களும், நடைமுறையிலிருந்த பல்வேறு செய்திகளும் இந்தியாவில் தோன்றிய தேசீய இயக்கத்திற்கும், பிற்காலத்தில் பெருவழக்கிலிருந்த வகுப்புவாத அரசியலுக்கும், அரசாங்க ஆட்சி முறை வளர்ச்சிக்கும் இன்னோரன்ன பல முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் முகாந்திரமாக அமைந்தன. மேலும், இச் சகாப்தத்தில்தான் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுப் பின்னர் வீழ்ந்துவிட்ட சீக்கியர், மராத்தியர் ஆகியோருடைய அரசியலும் மற்றும் ஆட்சி முறைகளும் அமைந்திருந்தன. வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் டல்ஹௌசி வரை ஆட்சிபுரிந்த காலம் இப்படிப் பலவழிகளிலும் நோக்குகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. சீக்கியர்கள், மராத்தியர்கள் ஆகியோரது அரசியல் மற்றும் ஆட்சிமுறை வாரன் ஹேஸ்டிங்ஸ், காரன்வாலிஸ், வெல்லெஸ்லி போன்ற சில முக்கியத்துவம் வாய்ந்த தலைமை ஆளுநர்கள் செய்த அரசாங்கம் மற்றும் ஆட்சிச் சீர்திருத்தங்கள், இக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் அமைப்புச் சட்ட வளர்ச்சி போன்ற யாவும் தனித்தனியாக ஆராயப்படவேண்டிய முக்கியத் துவத்தைப் பெறுகின்றன. எனினும், ஆங்காங்கே சொல்லப்படும் செய்திகளின் முக்கியத்துவத்திற்கு ஏற்பப் போர் மற்றும் அரசியல் வரலாற்றுச் செய்திகளையும் இவ் வதிகாரத்தில் அறிந்து கொள்ள வேண்டியது நமது தலையாய கடமையாகும். ஏனெனில், அரசியலை ஒதுக்கிய வரலாறும், வரலாற்றைவிட்டு ஒதுங்கிய அரசியலும் சாரமும், சத்தும் அற்றவையாகவே இருக்கமுடியும். எனவே, இவ் வதிகாரம் இந் நூலில் முக்கியமானதோர் இடத்தைப் பெறு கின்றது.

இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களுள் முதன்மையானவரும் முக்கியமானவரும் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவராவார். இவர் 1772-ல் வங்கத்தில் ஆங்கிலக் கிழக் கிந்தியக் கம்பெனியின் ஆளுநராகப் பதவி ஏற்றார். இவர் அப்பொழுது இந்தியாவை அறிந்திராதவராகவும், இந்தியாவில் கம்பெனியினர் நடத்திவந்திருந்த ஆட்சிச் செயல்களைப் புரிந்தி ராதவராகவும், நாட்டுச் செயல்களில் பழக்கமற்ற புதியவ ராகவும் இருக்கவில்லை. ஏனெனில், இவர் 1772ஆம் ஆண்டிற்கு முன்னரே, ஏறத்தாழப் பதினான்கு ஆண்டுகளுக்குக் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்தில் பலவிதமான பொறுப்புகளை ஏற்று இந் நாட்டில் தங்கியிருந்தார். பிரிட்டிஷ் அறிஞர்களே யன்றி இந்திய நாட்டு அறிஞர்களாலும் இவர் பெற்றிருந்த அறிவும் மதிக் கூர்மையும் உயர்த்திப் பேசப்படுகின்றன. வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவின் தொன்மைச் சிறப்பு வாய்ந்த பண்பாட்டுப் பாரம் பரியத்தில் அக்கறை கொண்டவராக இருந்தாரென்றும் இவர்கள்

எடுத்துக்காட்டி யுள்ளனர். வாரன் ஹேஸ்டிங்ஸ் நிர்வாகக் கோட்பாட்டு வல்லுநராக மட்டுமல்லாமல், நிர்வாக நடைமுறை அறிவையும் பெற்றிருந்தார். எனவே, கிழக்கிந்தியக் கம்பெனியின் வருவாயை அதிகரிக்கும் பொருட்டு இயக்குநர் மன்றம் தயாரித்த பல்வேறு திட்டங்கள் செயல்முறைக்கு ஒவ்வாதன என்ற காரணத்தினுல் தீவிரமாக எதிர்த்தார். மேலும், இயக்குநர் மன்றம் இவர் சுதந்திரமாகச் செயல்படுவதைத் தடைசெய்யும் வகையில் பிறப்பித்த கட்டளைகளும், 1772-ல் கம்பெனி பெற்றிருந்த இந்தியப் பிரதேசங்களின் பரப்பும் இவருக்கு நடைமுறையில் பல தொல்லைகளை விளைவித்தன. உண்மையில் கிழக்கிந்தியக் கம்பெனியினரின் ஆதிக்கம் மற்றும் ஆட்சிப் பிடியின்கீழ் வந்திருந்த வங்காளம், பீகார், ஒரிஸா ஆகியவற்றின் பரப்பு இங்கிலாந்தின் பரப்பைவிட மிக அதிகமாய் இருந்தது. வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆட்சிக் காலம் தமது தாய் நாட்டின் பரப்பைவிடப் பெரியதொரு நிலப்பரப்பைப் பெற்றிருந்த கிழக் கிந்தியக் கம்பெனியின் ஆட்சிப் பகுதிகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்த தென்ருல், அது மிகையாகாது. ஏனெனில், பெரிய யானை யாய் இருந்த இந்தியாவின் காதில் ஒரு சிற்றெறும்பு புகுந்து அதனை வீழ்த்திவிடும் தன்மையை ஆங்கிலேயர் பெற்றிருந்த வாய்ப்பு 1772 முதல் தொடங்கியது. உறுதி வாய்ந்த பெரிய தொரு கல்லாக இருந்த இந்தியாவைத் தகர்த்தெறியக்கூடிய தன்மை வாய்ந்த சிற்றுளியாகக் கம்பெனியினரின் நிலை அமைவ தற்கும் காரணமாய் இருந்தது எண்பத்தொரு ஆண்டுகளைத் தழுவிய இக் காலமேயாகும். இக் காலத்தின் அரசியல் முக்கியத் துவம் இவ்வாறிருக்க, வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்கத்தின் ஆளுநராகப் பதவியேற்ற சமயத்தில் வங்கமும், பீகாரும் பெரும்பஞ்சம், சுரண்டல் ஆகியவற்ருல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தன. அரசியல் மற்றும் ஆட்சி ரீதியான குற்றம் குறைகளையும் 'இலஞ்சம்' போன்ற ஊழல்களையும் கொண்டு, வறுமைக் காடு களாக அவை காட்சியளித்தன. நன் மருந்தை நாடியிருக்கும் நலிவுற்ற ஒரு நோயாளியைப் போல், நீண்ட கால அமைதி, பயனுறுதியும் திறமையும் மிக்க நிர்வாகம், பொருளாதார மறுமலர்ச்சி ஆகியவை உறுதிப்படுத்தப்படும் வாய்ப்பையும், தேவையையும் எதிர்நோக்கிய நிலையில் வங்கமும் பீகாரும் இருந்தன. வாரன் ஹேஸ்டிங்ஸ் பிணி தீர்க்கும் நல்லதொரு மருத்துவராகச் செயல்படவேண்டும் என்னும் உள்ளக்கிடக் கையைக் கொண்டிருந்தார் என்பதில் ஐயமில்லை. ஆனல், அரசியலில் மனச்சாட்சிக்குப் புறம்பான எவ்வளவோ அநீதியான செயல்கள் வாரன் ஹேஸ்டிங்ஸினுலும் பிற ஆட்சியாளராலும்

மேற்கொள்ளப்படவே செய்தன. 18ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதி வெகு வேகமாகச் செயல்கள் நடைபெற்ற காலமாக இருந்தது. மேலும், ஆங்கில நாட்டவர்கள் இந்தியர்களுடன் மேற்கொண்டிருந்த ஈடுபாடுகளில் நாகரிகப் போக்கையும், பண்பட்ட பழக்க வழக்க முறையையும், நிதான அடக்கத்தையும் மேற்கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தை அறிந்திருக்கவில்லை. தமது ஆளுகையின்கீழ் வந்திருந்த இந்தியப் பிரதேசங்களில் சீர்திருத்தச் சீரமைப்பைச் செய்யாமல், நாடு பிடிக்கும் ஆர்ஜிதச் செயல்களில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் ஆர்வம் காட்டவேண்டிய நிலை இருந்தது. எனவேதான், நல்லெண் ணத்தோடு, நல்ல மனத்துடன், நன்னம்பிக்கையோடு நனி சிறந்த செயல்களை மேற்கொள்ளவேண்டும் என்ற நாட்டத்தைக் கொண்டிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் போன்ற கம்பெனியின் ஆட்சி யாளர்கள் நயமற்ற பல செயல்களில் ஈடுபட வேண்டியிருந்தது. இதற்கான உள்நாட்டுக் காரணங்களும், அயல் நாட்டு நிலவரங் களும் பலவாய் இருந்தன.

முன்னரே கூறியது போன்று 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி குறிப்பாக, 1772-க்குப் பிற்பட்ட காலம் அரசியலமைப்புச் சட்ட வளர்ச்சியிலும் பிற துறைகளிலும் பெருமாற்றங்கள் தோன்றிய காலமாகும். எனவே, வாரன் ஹேஸ்டிங்ஸின் சொந்த நாட்டமும் வருவதுரைக்கும் எண்ணங்களும் எம் முக்கியத் துவத்தையும் பெறமுடியவில்லை. 1775ஆம் ஆண்டில் அமெரிக்கச் சுதந்திரப் போர் வெடித்தது. இதனால் ஃபிரான்ஸ், ஹாலந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் இங்கிலாந்திற்கு எதிராகத் திரண்டெழுந்தன. அப்பொழுது ஐரோப்பியக் கண்டத்திலும் தமது அமெரிக்கக் காலனிகளிலும் ஏற்பட்டிருந்த எதிர்ப்பைச் சமாளிப்பதிலேயே பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரிகள் கவனத்தைச் செலுத்த வேண்டியிருந்தது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமையிடத்து இயக்குநர்களும், மற்ற அதிகாரிகளும் தமது தாய்நாட்டு அரசாங்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிக அக்கறை காட்ட வேண்டியிருந்தது. எனவே, அப்பொழு திருந்த நிலையில் அவர்கள் இந்தியாவிலிருந்த தமது கம்பெனியின் அதிகாரிகளுக்கும், கீழ்நிலைப் பணியாளர்களுக்கும் தேவையான அளவில் எவ் வுதவியையும் செய்யமுடியவில்லை. அதே நேரத்தில் ஐரோப்பா மற்றும் அமெரிக்கக் கண்டங்களில் தாம் இழந்திருந்த அல்லது இழக்க வேண்டியிருந்த பேரரசு நில உடைமைகளுக்கு ஈடுசெய்துகொள்ளும் வகையில் ஆசியாக் கண்டத்தில் குறிப்பாக, இந்தியத் துணைக்கண்டத்தில் நிலப்பரப்பாட்சி விரிவாக்கத்தை

மேற்கொள்ளவேண்டும் என்ற தீவிரமான நாட்டம் அறிந்தோ, அறியாமலோ ஆங்கிலேயர்களின் மனத்தில் ஆழமாக வேரூன்றி இருந்தது.

பொதுவான நிலை மேற்சொன்னவாறு அமைந்திருக்க, சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியாளர்கள் விவேகமும், முன் ஜாக்கிரதையும், செயலறிவுத் திறமும் சற்றும் இல்லாதவர்களாக இருந்தனர். எவ்விதமான முன்னறிவும், முன்னேக்கும் இன்றிச் சென்னையிலிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்க அதிகாரிகள் தகாத செயல்களில் ஈடுபட்டனர். அவற்றில் குறிப்பிடத்தக்கது அப்பொழுது தென்புலத்து மைசூரின் வேந்தராயிருந்த ஹைதர் அலி என்னும் சக்தி வாய்ந்த அரசருடன், அவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்த இடங்களில் வேண்டும் என்றே நியாயமற்ற முறையில் புகுந்து, நேர்மையற்ற உரிமை கோரிப் போரைத் தொடங்கியதாகும். 1767-69ஆம் ஆண்டுகளிலேயே ஆங்கிலேயர், மராத்தியர் மற்றும் ஹைதராபாத் நிஜாம் ஆகியவர்களுக்குத் துணை நின்று ஹைதர்அலியுடன் மோதி முதலாம் மைசூர்ப் போரில் சமநிலை சமரசத்தை மேற்கொண்டனர். அப்பொழுது ஹைதர்அலிக்கு இருந்த வலிமை, சக்தி, அரசியல் செல்வாக்கு முதலியவற்றைச் சரியாக எடை போடாமலும் சிந்திக்காமலும் சென்னையிலிருந்த கம்பெனியின் அதிகாரிகள் மீண்டும் அவருக்கு எதிராகப் போர் நடவடிக்கைகளைத் தொடங்கினர். தம் ஆட்சிப் பகுதிகளில் நேர்மையற்ற தலையீட்டைச் செய்த ஆங்கிலேயரின் அநாகரிகத்தையும், ஆணவத்தையும் சகிக்க முடியாத ஹைதர் அலி 1780ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் ஆங்கிலயேருக்கு எதிராகக் கர்நாடகப் போரைத் தொடங்கினர். இவருடைய எதிர்ப்பை ஆங்கிலேயரால் சமாளிக்க முடியவில்லை. தம்மை எதிர்க்க முயன்ற ஆங்கிலப் படைகளையும் ஆங்கில அடிவருடிகளையும் ஹைதர் அலி அடித்து நொறுக்கினர். பக்ஸார் போரில் ஆங்கிலேயருக்கு வெற்றியைத் தேடித்தந்திருந்த சர் ஹெக்டர் மன்ரோவைப் புறமுதுகிட்டு ஓடும்படி செய்தார். பெய்லி (Baille) என்னும் தளபதியின் கீழ் இருந்த ஆங்கிலப் படை ஒன்றை ஹைதர் அலி அழித்தார். சென்னை இராசதானி அதிகாரிகளால் இப்படிப்பட்ட போர்ச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டுக் கம்பெனியினர் இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தபோதிலும், வாரன் ஹேஸ்டிங்ஸின் தலையீடும், சர் அயர்கூட் என்பவரின் இராணுவத் தலைமையுமே ஒருவாறு நிலவரத்தைச் சமாளிக்கும்படி செய்தன. ஏனெனில், வாரன் ஹேஸ்டிங்ஸும், அயர்கூட்டும் 1781ஆம் ஆண்டு ஜூலை மாதம் பரங்கிப் பேட்டையிலும், 1782ஆம் ஆண்டு

ஜூன் மாதத்தில் ஆரணியிலும் தமது வெற்றியை நிலை நாட்டினர். இவற்றால் ஹைதர் அலி ஆங்கிலேயரை எதிர்த்து வெற்றி காண முடியாது என்று முடிவு கட்டினார். ஆனால், அம் முடிவிற்கு ஏற்ப நல்ல செயல்களை அவர் மேற்கொள்வதற்கு முன் 1782ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 7ஆம் நாளன்று, 'எப்படித்தான் என் மகனை திப்பு சுல்தான் அந்நிய ஆங்கிலச் சக்தியை முறியடித்து ஆளப் போகின்றானோ?' என்ற ஐயப்பாட்டை மனத்தில் கொண்டவ ராகவே இறந்தார். எனவேதான், ஆங்கிலேயர் பின்னர் மேலும் இருமுறை மைசூர்ப் போர்களை மேற்கொண்ட நிலையில் மைசூரையும், மைசூரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பல தென் புலத்து அரசுகளையும் தமது குடையின்கீழ்க் கொண்டுவந்தனர். இறுதியாக, ஆங்கிலேயரது ஆதிக்கத்தைத் தழுவிய ஆட்சியின்கீழ் மைசூர் சமஸ்தானமும், பிற இடங்களும் கொண்டுவரப்பட்ட போதிலும், ஹைதர் அலி ஏற்படுத்திக் கொடுத்திருந்த திறமை யான நிர்வாகமும் ஆட்சி முறையும் மக்கள் மனத்தை விட்டு இன்றும் மறையாமல் உள்ளன.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிழக்கிந்தியக் கம்பெனி யின் சென்னை மாநில அதிகாரிகள் முன்னறிவற்ற செயல்களை மேற்கொண்டதைப் போலவே வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆட்சிக் காலத்தில் பம்பாய் இராசதானியின் கம்பெனி அதிகாரிகள் மராத்தியர்களுடன் அநாவசியமாக மோதி இரு நீண்ட போர்களை மேற்கொண்டனர். மராத்தியர்களிடம் பிரிட்டிஷ்காரர்கள் கொண்டிருந்த உறவு காலத்திற்கு ஏற்றவாறு நேசமானதாகவும், எட்டி உதைக்கும் மோசமானதாகவும் அமைந்திருந்தது. கிழக் கிந்தியக் கம்பெனி நிறுவப்படுவதற்குக் காரணமாய் இருந்த 1600ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31ஆம் நாளின் சாசனம் பிறப்பிக்கப்பட்ட வேளையிலிருந்து, 1802ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31ஆம் நாளன்று மராத்திய பேஷ்வாவுடன் பஸ்ஸின் உடன்படிக்கை என்ற ஓர் ஏற்பாட்டைச் செய்துகொண்ட காலம் வரை மராத்தியர்கள் செல்வாக்குப் பெற்றிருந்த இந்தியப் பிரதேசங்களிலிருந்து எந் நிலப்பகுதியையும் குறிப்பிட்டுச் சொல்லும்படி ஆங்கிலேயர் பெற முடியவில்லை. மாவீரர் சிவாஜி ஆண்ட காலத்திலும் அவரது இறப்பிற்குப் பின் அமைந்த குழப்ப மான காலத்திலும் எவ்விதமான நிலக் கைப்பற்றுதல்களையும் ஆதாயங்களையும் ஆங்கிலேயர் பெற முடியவில்லை. ஆனால், 18ஆம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளில் அவர்கள் மராத்தியர் களின் செல்வாக்கை நலிவுபடுத்தும் வகையில் தொடர்ச்சியான பல முயற்சிகளை மேற்கொண்டனர். அப்பொழுது மராத்தியப் பேரரசுக்குக் கன்னோஜி ஆங்கரே (Kannoji Angria) என்பவர்

பெருந்திறமை வாய்ந்த கப்பற்படைத் தளபதியாக இருந்தார். இவரது மதிக் கூர்மையும் போர்த் திறமையும் மேற்குக் கடற்கரை முழுவதும் மராத்தியர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும்படி செய்ததோடு, ஆங்கிலேயருக்கும் மற்ற சில ஐரோப்பியர்களுக்கும் பேரச்சத்தைக் கொடுப்பதாக அமைந்திருந்தன. கன்ஹோஜி ஆங்கரே உயிருடன் இருந்த காலம் வரை இந்தியாவிலிருந்த ஐரோப்பியச் சக்திகளினால் தமது ஆட்சி ஆதிக்கத்தை மராத்திய நிலப் பகுதிகளில் ஏற்படுத்த முடியவில்லை. ஆங்கிலேயர்களும், போர்த்துக்கீசியர்களும் ஒன்று சேர்ந்து மராத்தியர்களைத் தாக்கிய பொழுதும் அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. எனவே, வீரத்தைக் காட்டி வெற்றி காணமுடியாத ஆங்கிலேயர் தங்கள் அரசியல் சூழ்ச்சித் திறத்தைக் கையாள முற்பட்டனர்.

மராத்தியர்கள் 18ஆம் நூற்றாண்டின் பெரும்பகுதி வரை தமது வீரத்தை யாவரது மனத்திலும் ஆழமாகப் பதியவைக்கும் படியாகப் புகழையும், வெற்றிகளையும் குவித்தவண்ணம் இருந்தனர். கன்ஹோஜி ஆங்கரே கடலாதிக்கப் பாதுகாப்பை மராத்தியப் பேரரசுக்குக் கொடுக்க, அதன் பேஷ்வாக்கள் நிலப் பாதுகாப்பை மேற்கொண்டு பெரு முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிகளை நீர்மீதும், நிலம் மீதும் பெற்றனர். முதலாம் பாஜி ராவ் வீரம் மிக்க பேஷ்வாவாக இருந்தார். இவருக்கு 'போர்க் குணம் வாய்ந்த மராத்திய பேஷ்வா' என்னும் சிறப்புப் பெயரும் இருந்தது. இவர் 1728ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் போபால் என்னும் இடத்தில் ஹைதராபாத் நிஜாமான, நிஜாம்-உல்-முல்க்கின் படைகளை முறியடித்தார். 1738ஆம் ஆண்டு சனவரித் திங்கள் தக்காணச் சுபேதாரை வென்று, அவரைத் தமது நேச உடன்படிக்கைக்குக் கட்டுப்படுமாறு செய்தார். இச்செயல்கள், 18ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே மராத்தியர்களை எவ்வித ஐயப்பாடுமின்றி மிக வலிமை பெற்ற ஓர் இராணுவச் சக்தியாக உருவாக்கியிருந்தன என்பதை மறுக்க முடியாது. மேலும் மராத்தியர்கள் 1739ஆம் ஆண்டு சனவரித் திங்கள் மாஹி என்னும் இடத்தைப் போர்த்துக்கீசியர்களின் ஆதிக்கத்தினின்றும் விடுவித்துக் கைப்பற்றினர். இத்தகைய வெற்றிகளை மராத்தியர்கள் பெற்றதற்குப் பேஷ்வாக்களின் தனிப்பட்ட அரசியலறிவும் ஆட்சித் திறமையும் கன்ஹோஜி ஆங்கரே, சின்னாஜியப்பா போன்ற திறமையும் கீர்த்தியும் வாய்ந்த தளபதிகளை அவர்கள் பெற்றிருந்தமையுமே காரணமாகும். இவை யாவும், 'மராத்தியர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த இன்றைய மகாராட்டிரம், குஜராத் ஆகிய நிலப் பகுதிகளில் ஆங்கிலேயர் அன்று எவ்வித இட ஆர்ஜிதச் செயல்களையும் மேற்கொள்ளக் கூடாது என்பதைத் தெளிவாக

எச்சரிக்கவும் செய்தன. எனவே, தமது கம்பெனியின் ஆதிக்க எல்லைக்கு உட்பட்டிருந்த பம்பாய் பிரதேசத்தைச் சுற்றி எவ்விதமான இட ஆர்ஜிதங்களையோ, வெற்றிகளையோ ஆங்கிலேயர் தமது வீரத்தைக் காட்டிப் பெற முடியவில்லை. மராத்தியப் பேரரசை ஏழு பேஷ்வாக்கள் 1714 முதல் 1818 வரை ஆண்டனர். இவர்களில் நான்காம் பேஷ்வாவான மாதவ ராவ் என்பவர் 1761 முதல் 1772 வரை ஆண்டு இறந்த பின்னரும், அவருக்குப் பின் ஒன்பது மாதங்களே பேஷ்வாவாக இருந்த நாராயணராவ் என்பவர் கொலை செய்யப்பட்ட பின்தான் மராத்தியப் பேரரசியலில் பலவீனப் போக்குகள் தோன்ற ஆரம்பித்தன. மேலும், 1761ஆம் ஆண்டில் நடந்த மூன்றும் பானிபட் போரின் விளைவாகவும், மராத்தியர்கள் கட்டிக் காத்திருந்த ஒற்றுமைப் பேரரசும், கூட்டிணைவும் (Confederacy) சரியத் தொடங்கின. இச் சமயத்தில்தான் இதுகாறும் மராத்தியர்களுக்கு எதிராகத் தமது வீரத்தை நிலைநாட்ட முடியாத ஆங்கிலேயர் சூழ்ச்சி மற்றும் சதிச் செயல்களுடன் தமது தலையீட்டைச் செய்து பின்னர் 1818-ல் வெற்றியும் கண்டனர். ஆனால், 1818ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயர் மராத்தியர்களுடன் மூன்று பெரும் போர்களையும், நுண்ணறிவற்ற பல செயல்களையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. சுருங்கக் கூறின், 1740 முதல் 1818 வரை வலிமை பெற்றிருந்த மராத்தியப் பேரரசை ஆங்கிலேயர் எளிதாகத் தமது ஆதிக்கச் செயல்களுக்கு உட்படுத்த முடியவில்லை. ஒரு புறம் மராத்தியர்கள், மொகலாயர்கள், ஹைதராபாத் மற்றும் தக்காண நவாபுகள் ஆகியோருடனும், மறுபுறம் வளர்ச்சி யடைந்துகொண்டிருந்த சீக்கியர்களுடனும் ஆங்கிலேயர்கள் போரிட்டுக்கொண்டிருந்தனர். மராத்தியர்களின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சீக்கியர்களின் அரசியல் வளர்ச்சி, ஆங்கிலேயருக்கு ஒரு சவால் விடுப்பதாய் அமைந்தது. பின்னர் 1858ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியத் தேசீய இயக்கம் ஆங்கிலேயரின் ஆதிக்க ஆட்சியை அலைக்கழித்தது. இஃது இவ்வாறிருக்க, 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கும் மராத்தியருக்கும் இடையே நிலவிய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த உறவு நிலைகளைப் பற்றிய செய்திகளைச் சிறிது இங்குக் கூறவேண்டியது அவசியமாகும்.

1772-ல் பேஷ்வா மாதவராவ் இறந்தார் என்றும், அவருக்குப் பின் அவரது சகோதரர் நாராயணராவ் என்பவர் பேஷ்வாவாகப் பதவி ஏற்று, ஒன்பதே மாத காலத்தில் கொலை செய்யப்பட்டார் என்றும் முன்னர்க் கூறப்பட்டது. இக் கொலைச்செயலில் மாதவ ராவ், நாராயணராவ் ஆகிய இரு பேஷ்வாக்களின் மாமனை இரகோபா என்னும் இரகுநாதராவ் பங்கு பெற்றிருந்தார் என்று

வலிவுள்ள சந்தேகம் நிலவி இருந்தது. இரகுநாதராவே பேஷ்வா நாராயணராவைக் கொலை செய்வதற்கான சதித்திட்டத்தைத் தீட்டினர் என்ற ஐயப்பாடு இருந்ததாக அரசியல் வரலாற்றுப் பேராசிரியர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர். எப்படியாயினும் இரகுநாதராவ் திறமை வாய்ந்த ஓர் இராணுவத் தளபதியாய் இருந்தார் என்பதில் ஐயமில்லை. மராத்தியர்களுக்கும், ஆப் கானியர்களுக்கும் இடையே 1761-ல் நடந்த மூன்றாம் பானிபட் போரில் மராத்தியப்படை இரகுநாதராவின் தலைமையின்கீழ் அனுப்பப்பட்டிருக்குமாயின் அரசியல் மற்றும் வரலாற்றுச் செய்தி கள் மாற்றம் பெற்றிருக்கக்கூடிய வெற்றியை அவரது திறமை கொடுத்திருக்கக் கூடும். உண்மையிலேயே சீக்கியர்களை எதிர்த்துப் பஞ்சாபிலுள்ள அட்டாக் என்னும் இடத்தை நடுநடுங்கவைக்கும் திறமையை இரகுநாதராவ் பெற்றிருந்தார். ஆனால், நியாயமும் நேர்மையும் அற்ற அபிலாசையையும் இவர் பெற்றிருந்தார். தம் மனைவியான ஆனந்திபாய் என்பவரின் அழகிற்கும் சொல்லிற்கும் இவர் அடிமையாகி இருந்தார். எனவேதான், இவர் தம் மனைவியின் தூண்டுதலுக்கு அடிமையாகி, பேஷ்வா பதவியை எவ் வழியிலேனும் பெற்றுவிடவேண்டும் என்று, தமது கனவு நனவாகும் செயல்களில் ஈடுபட்டார்.

பொதுவாக ஒழுக்க நியதிகளின் அடிப்படையிலோ, ஆதர விலோ ஒரு நாட்டின் அரசியல் நடைபெறுவதில்லை என்பதைத் தற்காலப் பன்னாட்டு அரசியலும் எடுத்துக் காட்டுகிறது. இந்த நிலைதான் 18ஆம் நூற்றாண்டின் இந்திய அரசியலிலும் நிலவியது. அப்பொழுது அரசுகளும், சாம்ராச்சியங்களும் சூழ்ச்சி, சதி ஆகிய வற்றின் துணைகொண்டு அமைக்கப்பட்டன. இதற்கு எடுத்துக் காட்டாகவே ஆங்கிலக் கம்பெனியினர் மராத்தியப் பேரரசில் தலையிட்டுத் தமது ஆதிக்கத்தை விரிவாக்கிய செயல் அமைந் திருந்தது. பம்பாய் இராச்தனியிலிருந்த கம்பெனியின் அதிகாரிகள் நேர்மையான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களாக இருக்க வில்லை. இந்திய நாட்டில், குறிப்பாக பலவீனத்தின் அறிகுறி தென்பட ஆரம்பித்திருந்த மராத்தியப் பேரரசில் குறுமதியான செயல்களையும், சங்கடத்தைத் தோற்றுவிக்கும் நடவடிக்கை களையும் கம்பெனியினர் மேற்கொண்டனர். மராத்தியப் பேஷ் வாக்களுக்கு எதிராக நேரிடையாகவோ மறைமுகமாகவோ செயல்பட்ட யாவருக்கும் பம்பாயிலிருந்த கம்பெனியின் அதிகாரி கள் எவ் வுதவிகளையும் செய்யத் தயங்கவில்லை. அப்பொழுது பூனு வில் காப்பாளர் அரசாங்கம் (Regincy Government) இருந்தது. அவ் வரசாங்கம் தமக்கு எதிராக, எதிரிகளுக்குச் சாதகமாய்ப் பம்பாயி லிருந்த கம்பெனியின் அதிகாரிகள் செயல்பட்டதைச் சாடி

அவர்கள் அவ்வாறு ஈடுபட்ட செயல்களைத் தடுக்குமாறு இங்கிலாந்தின் பேரரசருக்கு வேண்டுகோள் விடுத்தது. ஆனால், இதனையும் பம்பாயின் கம்பெனிப் பணியாளர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. இங்கிலாந்திலிருந்த கம்பெனியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் பூனா அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்தியாவிலிருந்த தமது கீழ்நிலை அதிகாரிகளுக்கு மராத்தியர்களின் உள்நாட்டு அரசியலிலும், அக்கறைச் செய்திகளிலும் தலையிட வேண்டாம் என்று உத்தரவுகளைப் பிறப்பித்தனர். ஆனால், அவ் வியக்க உத்தரவுகள் எப் பலனையும் கொடுக்கவில்லை. மாறாக, இங்கு நிலவிய நிலவரங்களுக் கொப்ப ஆட்சியினை மேற்கொண்டிருந்த கம்பெனி அதிகாரிகளின் முடிவுகளும், துணிவுகளுமே கிழக்கிந்தியக் கம்பெனி உள்நாட்டவர்களோடு கொண்டிருந்த ஈடுபாடுகளின் தன்மையைத் தீர்மானித்தன. பம்பாயிலிருந்த கம்பெனியின் அதிகாரிகள் குறிப்பாக, பம்பாய் ஆளுநர்மன்றத்தின் தலைவராயிருந்த கேம்பியர் (Gambier) மற்றும் மோஸ்டின் (Mostyn) என்போர் மராத்தியப் பேரரசில் தோன்றிய பிணக்குகளின் வளர்ச்சியைக் கூர்ந்து கவனித்து வந்தனர். இச் சமயத்தில்தான் இரகுநாதராவின் சதித்திட்டம் ஈடேறியது. இரகுநாதராவின் போக்கினால் தமது அதிகாரத்திற்கும், அண்டை உறவினர்களின் ஒற்றுமைக்கும் பேராபத்து ஏற்பட்டுவிடும் என்று கம்பெனியினர் அஞ்சினர். இவ் வச்சத்தினால் பம்பாயிலிருந்த கம்பெனியினர் மராத்தியர்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடவேண்டியது அவசியம் என்றே கருதினர். மேலும், கொலைபாதகச் செயலின்மூலம் பேஷ்வாவாகப் பதவியேற்றிருந்த இரகுநாதராவ் தம் மக்களின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் இழந்து பலவீனமான அரசையும் ஆட்சியையும் நடத்திவந்தார். மேலும், ஆப்கானியர்கள் மற்றும் மொகலாயர்களின் எதிர்ப்பும் மராத்தியப் பேரரசுக்கு இருந்தது. எனவே, இரகுநாதராவுக்கு ஆங்கிலேயர்களின் உதவியும் தேவையாயிருந்தது. இதற்கிடையில் நாராயணராவின் மறைவிற்குப் பிறகு 1774-ல் அவருடைய மைந்தர் பிறந்தார். இந்த இளம் குழந்தையான இரண்டாம் மாதவராவ் பிறந்த நாற்பதாவது நாளில் பேஷ்வாவாகப் பிரகடனம் செய்யப்பட்டார். பேஷ்வா பதவிக்கான இக் குழந்தையின் உரிமைக்காக வாதாடி அதில் வெற்றியும் கண்டவர்கள் மகதாஜி சிந்தியாவும், நானா பர்னவிஸும் ஆவர். இப் பிரகடனத்தில் பின்வரும் ஆபத்தை உணர்ந்த இரகுநாதராவ் பூனாவிலிருந்து ஓடித் தம்மைப் பேஷ்வா பதவியில் அமர்த்திட வேண்டும் என ஆங்கிலேயரின் உதவியை நாடினார். நுழைவதற்கு ஒரு சிறிது இடம் கிடைத்தால் கூடப் புகுந்துவிடக்கூடிய நிலையிலிருந்த ஆங்கிலேயர் இரகுநாத

ராவின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. இதன் பயனாக விளைந்ததே 1775ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் ஆறும் தேதியன்று ஆங்கிலேயருக்கும் இரகுநாதராவுக்கும் ஏற்பட்ட சூரத் உடன்படிக்கையாகும். இவ் வுடன்படிக்கையின் மூலம் இராகுநாதராவிற்குத் தேவையான உதவிகளைச் செய்யவும் அவற்றுக்கு ஈடாக மராத்தியப் பேரரசின் பல பகுதிகளை ஆங்கிலேயருக்கு இரகுநாதராவ் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன.

இதற்கிடையில் 1773ஆம் ஆண்டில் இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் செயல்களில் தேவையான அளவிற்குத் தலையிட்டு ஒழுங்குபடுத்தும் வகையில் ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating Act) இயற்றப்பட்டிருந்தது. இச் சட்டம் கிழக்கிந்தியக் கம்பெனியினர் இந்திய அரசர்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாதென்று முனைப்பாக எடுத்துக் காட்டியிருந்தது. இச் சட்டத்தின்படி இந்தியாவிலிருந்த கிழக்கிந்தியப் பிரதேசங்களின் தலைமை ஆளுநராக அல்லது கவர்னர் ஜெனரலாக வாரன் ஹேஸ்டிங்ஸ் நியமிக்கப்பட்டிருந்தார். இந்தியாவில் தமது தலைமையின்கீழ் நிர்வாகச் செயல்கள் நடைபெறுவதற்கு ஆதாரமாய் அமைந்திருந்த ஒழுங்குமுறைச் சட்டத்தின் செய்திக்குப் புறம்பாகத் தமது மேலாண்மை அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த பம்பாய் இராசதானியின் அதிகாரிகள் சூரத் உடன் படிக்கையின்மூலம் செயல்களை மேற்கொண்டது வாரன் ஹேஸ்டிங்ஸுக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. அவர்கள் செய்திருந்த உடன்படிக்கையை 'நியாயமற்றது, அறிவற்றது, அரசியல் நெறி பிறழ்ந்தது, தேவையற்றது' என்று கூறி, அதனைச் செயல்படாதிருக்குமாறு அவர் ஒதுக்கி வைத்தார்; ஆனால், தம் புதிய இயக்கங்களுக் கொப்ப மராத்தியர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி 1776ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல் நாளன்று 'புரந்தர் உடன்படிக்கை' என்ற ஒன்றைச் செய்து கொண்டு அவ் வுடன்படிக்கையின் அடிப்படையில் மராத்திய அரசாங்கத்திற்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இடையே உறவுகள் சீர்ப்பட வழிவகுத்தார். ஆனால், இவ் வுடன்படிக்கை ஒரு சிறிது காலத்திற்கே செயலில் இருந்தது. இவ் வுடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி ஆங்கிலேயர் ஸால்செட்டையும் போர்ச் செலவுக்காக 12 இலட்சம் ரூபாய்களையும் பெற்றுக்கொள்வதென்றும், இரகுநாதராவின் முயற்சிக்குத் தாம் ஆதரவு தருவதில்லை என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும், இரகுநாதராவிற்குச் செலவுப்படியாக மாதம் இருபத்தைந்தாயிரம் ரூபாயைக் கொடுத்துவிடுவது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இஃது இவ்வாறு இருக்க, கம்பெனியின் இயக்குநர்கள் மன்றம் இதற்கிடையில் சூரத் உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளவே, அந்த ஒப்புதலின்பேரில் கம்பெனியின் பம்பாய் அரசாங்கம் 1778-ல் மராத்தியர்களுக்கு எதிராகப் போர்களைத் துவக்கியது. இரகுநாதராகவும் கையூட்டுகளையும், சன்மானங்களையும் வாரி இறைத்துக் கம்பெனியின் பம்பாய் அதிகாரிகளைப் புரந்தர் உடன் படிக்கையைப் புறக்கணித்து, தம்மைப் பூனாவின் பேஷ்வாவாக ஆக்கும்படியாகப் படையெடுப்பை மேற்கொள்ளுமாறு தூண்டினார். ஆனால், கம்பெனியின் பம்பாய்ப்படைகளை மகதாஜி சிந்தியா தோற்கடித்து, அவர்களைத் தாழ்வுறுத்தும் வார்கான் உடன்படிக் கையில் (Wargaon treaty) 1779ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 16ஆம் நாள் கம்பெனியினரைக் கையொப்பமிடுமாறு செய்தார். அதன்படி தாம் வென்ற குஜராத் பகுதிகள், ஸால்செட், தானா அனைத்தையும் ஒப்படைப்பதுடன் இரகுநாதராவையும் பிணையக் கைதியாக ஒப்படைக்க அவர்கள் உறுதி கூறினர். பேராசிரியர் கிளெய்க் (Prof. Glieg) அவர்கள் கூறுவது போன்று, 'கீழை நாடுகளில் தம்மை நிலையானதொரு சக்தியாக அமைத்துக் கொண்ட பின்னர் இப்படிப்பட்ட ஓர் இழிவும், தாழ்வும் கம்பெனி யினருக்கு இதற்கு முன் ஏற்பட்டதில்லை.' வார்கான் உடன் படிக்கை ஏற்பட்ட காலமான 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் மராத்தியர்கள் அசைக்க முடியாதபடி ஒற்றுமையையும் வலிமையையும் பெற்றிருந்தனர். அப்பொழுது ஆங்கிலேயர் போன்றோரின் சக்திகளைக் கண்டு அஞ்சிவிடக்கூடிய நிலையிலும் மராத்தியர்கள் இருக்கவில்லை என்று சர் ஆல்ஃபிரட் லியால் (Sir Alfred Lyall) என்பவர் கூறியுள்ள செய்தி மிகப் பொருத்தமானதேயாகும்.

வார்கான் உடன்படிக்கையில் மராத்தியர்கள் காட்டிய சலுகைகள் எதிர்பாராத அளவிற்கு நியாயமானவையும் அதிக மானவையும் ஆகும். ஆனால், வாரன் ஹேஸ்டிங்ஸும் கம்பெனியின் கல்கத்தா அரசாங்கத்தினரும் வார்கான் உடன்படிக்கையை ஒப்புக் கொள்ள மறுத்துப் புதிய போர்களைத் துவக்கினர். அப்பொழுது கொட்டார்ட் (Goddard) என்பவர் ஆங்கிலக் கம்பெனியின் திறமைமிகு போர்த் தளபதியாக இருந்தார். இவரது தலைமையின் கீழ் ஒரு படையைக் கம்பெனியின் கல்கத்தா அரசாங்கம் பம்பாய் அரசாங்கத்தின் உதவிக்காக அனுப்பியது. ஆனால், இப் படை முறியடிக்கப்பட்டது. இதற்குக் காரணம் பேஷ்வாவின் அமைச் சராயிருந்த நானா பட்னிஸ் என்பவரின் திறமையும் ஆற்றலுமே யாகும். இதனால், மனச்சோர்வுற்ற வாரன் ஹேஸ்டிங்ஸ் கம்பெனியின் பம்பாய் அதிகாரிகளுக்கு மராத்தியர்களுடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்ளுமாறு அறிவித்தார்.

ஆனால், மராத்திய அரசின் நடவடிக்கையில் முழுப்பொறுப்பையும் கொண்டிருந்த நானுபட்னிஸ், வாரன் ஹேஸ்டிங்ஸ் அமைதிகாண விழைந்த ஆவலைப் புறக்கணித்துத் தம் வழிப்படி போர் நடந்து முடியட்டும் என்று செயல்களை மேற்கொண்டார். இதற்குக் காரண மில்லாமலும் இல்லை. நானு பட்னிஸ் கீர்த்தி வாய்ந்த ஓர் அரசியல் மேதையாவார். அவர் வளர்ந்து வந்த ஆங்கிலேயரின் ஆதிக்கத்தால் நம் நாட்டின் சுதந்திரத்திற்கு எவ்வளவு பெரிய ஆபத்து வர விருந்தது என்பதைச் சரியாக மதிப்பிட்டிருந்தார். அதனாலேயே அவர் மைசூர் அரசரான ஹைதர் அலி, மகதாஜி சிந்தியா ஆகியோ ருக்கு இவ் வாபத்தை உணர்த்திக் கடிதங்கள் எழுதி, அவர்களுடன் ஒரு நேச உடன்படிக்கையை செய்துகொண்டு, ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு கூட்டு எதிர்ப்பை உருவாக்கினார். நாட்டில் நிலைமைகள் இவ்வாறு மாறியதால் ஆங்கிலேயர் மீண்டும் போர்ச் செயல்களை மேற்கொள்ளலாயினர். 'மராத்தியர்கள் ஒற்றுமையாகவும் வெகு விரைவுடனும் செயல்பட்டால் டில்லியில் ஆங்கிலேயர் தமது உச்ச அதிகாரத்தை நிலைநாட்டவே முடியாது'[1] என்று அவர் நம்பியதோடன்றிப் பிறரையும் நம்பும்படி செய்தார். ஆனால், பூனா அரசாங்கத்தின் தலைவராயிருந்த சிந்தியாவோ அரைமனத் துடன் போரைக் கைவிட்டு அமைதியும், சமரசமும் செய்து கொள்ள முயன்றார். இதற்கிடையில் ஆங்கிலப் படையினரும் வெற்றி கண்டனர். இவற்றின் விளைவாக ஏற்பட்டதே சால்பாய் (Salbai) உடன்படிக்கையாகும். 1782ஆம் ஆண்டு மேத் திங்கள் பதினேழாம் நாள் செய்துகொள்ளப்பட்ட சால்பாய் உடன் படிக்கையின்படி ஆங்கிலேயர்களுக்கும் மராத்தியர்களுக்கும் இடையே நடந்துகொண்டிருந்த பதவிப்போர் மராத்தியர்களுக்கு அனுகூலமாக முடிவடைந்தது. மேலும், இவ் வுடன்படிக்கையின் மூலம் இரகுநாதராவிற்கு எவ் வுதவியையும் எக்காலத்தும் செய்வ தில்லை யென்று ஆங்கிலக்கம்பெனி ஒத்துக்கொண்டது. இவ் வுடன் படிக்கையை நானுபட்னிஸ் ஆரம்பத்தில் ஏற்கவில்லை என்றாலும், பின்னர் 1783-ல் அதில் கையெழுத்திட்டார். ஆங்கிலேயர் இரகுநாதராவை ஒரு பகடைக்காயாகக் கொண்டு அரசியல் சதுரங்க ஆட்டத்தை ஆடினர் என்றும், தமது நிலையை காலங் கழித்து உணர்ந்து ஏதும் செய்ய முடியாத நிலையில் இழிவுச்சாவை இரகுநாதராவ் அடைந்தார் என்றும் பேராசிரியர் டாட்வெல் எடுத்துக் கூறுகின்றார். இவ்வாறு 18ஆம் நூற்றாண்டில் வலிமை பெற்றிருந்த மராத்தியர்களின் அரசுகளும், கூட்டிணைவும் ஆங்கிலே யர்களின் தலையீட்டிற்கு இறுதியில் ஒருவாறு இடம் கொடுப்பதாய்

[1] A History of the Maratha people, C. A. Kinkaid and Milford, Vol. III, page 141.

இருந்தன. ஆனால், பூனாவிலிருந்த பேஷ்வா, இந்தூரிலிருந்த ஹோல்கார், பரோடாவிலிருந்த கெயிக்வார், குவாலியரிலிருந்த சிந்தியா, நாக்பூரிலிருந்த பான்ஸ்லே ஆகியோர் உள்ளடங்கியிருந்த கூட்டிணைவு (Confederacy) ஆங்கிலேய ஆதிக்க அரசின் முன்னேற்றத் திற்குப் பெருந்தடையாக இருந்தது. இத் தடை வெகு விரைவில், 1818ஆம் ஆண்டில் ஆங்கிலேயரால் தகர்த்தெறியப்பட்டது. ஆனால், அதற்குமுன் ஆங்கிலேயர் மேற்கொண்ட செயல்கள் பலதரப்பட்டவையாய் இருந்தன.

சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கும் காலத்தின் தேவைகளுக்கும் ஏற்ப முதலாம் ஆங்கிலேய மராத்தியப் போர் மற்றும் இரண்டு மைசூர்ப் போர்களில் வாரன் ஹேஸ்டிங்ஸ் தமது அரசாங்கத்தை ஈடுபடுத்திய செயலானது பெரும் நிதி இடர்ப்பாடுகளையும், தொல்லைகளையும் கம்பெனியின் அரசாங்கத்திற்குக் கொடுத்தன. இதனால், வாரன் ஹேஸ்டிங்ஸ் கடுமையான நடவடிக்கைகள் பல வற்றை மேற்கொண்டார். இவர் மேற்கொண்ட நடவடிக்கை களில் நிர்ப்பந்தங்கள் இருந்தன; நியாயமும் நீதியும் இருக்கவில்லை. ரோகில்லாக்களைத் தாக்கியதும், பனாரஸின் அரசரான செயித் சிங் என்பவரை அடக்குமுறைக்கு உள்ளாக்கி அவரை அநியாயமாக வாட்டி வதைத்துத் துன்புறுத்தித் தொந்தரவு கொடுத்ததும், அயோத்தி பேகம்களின் செல்வத்தைச் சூறையாடியதும் காலியாகி விட்டிருந்த தமது கருவூலத்தை நிரப்பிக்கொள்ள இவர் மேற் கொண்ட அநீதியான செயல்களுக்குச் சான்று பகர்வனவாகும். மேலும், வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆட்சியில் மலிந்திருந்த ஊழல் களையும், குற்றங்குறைகளையும் அம்பலப்படுத்திய மகாராஜா நந்த குமாரின்மீது சட்டத்தின் துணைகொண்டு விரைவுடன் வழக்கைத் தொடர்ந்து, தம் நண்பரான 'எலிஜா இம்பே' என்பரைத் தலைமை நீதிபதியாகக் கொண்டிருந்த தலைமை நீதிமன்றத்திடமிருந்து தூக்குத் தண்டனையைப் பெற்று அவரைத் தூக்கிலிட்ட மாபாதகச் செயலும் 'வாரன் ஹேஸ்டிங்ஸ் எப்படித் தன் அதிகாரத்தை நிலை நிறுத்திக்கொள்ள மனச் சாட்சியையும், ஒழுக்க நியதிகளையும் புறக்கணித்துச் செயல்பட்டார் என்பதையும், அதனால் அவர் எவ்வளவு மங்கிய மதிப்புத் தரத்தைப் பெற்றுவிட்டார் என்ப தையுமே நமக்குக் காட்டுகின்றன'[1]. வாரன் ஹேஸ்டிங்ஸ் சீர்திருத்தங்கள் பலவற்றைக் கம்பெனியின் அரசாங்கத்திலும் ஆட்சி அமைப்பிலும் புகுத்தினார் என்றாலும், அவை கம்பெனியின் நிர்வாகத்தைத் தூய்மையாக்கவோ, திறமையுறும்படியோ செய்ய வில்லை யென்பதும் உண்மையே. அடிப்படையான இக் குறை

[1] A. B. Keith. Ibid.

பாடுகளும் குற்றங்களும் வாரன் ஹேஸ்டிங்ஸிடம் காணப்பட்ட போதிலும் தம் நாட்டவர் அறிந்திராத அளவிற்கு இந்தியர்களின் எண்ணத்தையும் உள்ளத்தையும் அவர் நன்கு அறிந்திருந்தார். எனவே, இந்தியர்களைத் தாழ்வானவர்களாகக் கருதாமல் தமது ஆட்சிக் கொள்கைகளை உருவாக்கி அவை காலத்தின் சோதனைகளுக்கு ஆட்பட்டுப் பலவித அரசியல் மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், இந்திய பிரிட்டிஷ் உறவுகள் நெடு நாளைக்குத் தொடர்ந்து இருப்பதற்கான உறுதிப்பாட்டை ஏற்படுத்திக் கொடுத்தார். எனவேதான், காழ்ப்புணர்ச்சிக்கு இலக்காகும் பல:செயல்களை அவர் மேற்கொண்டபோதும், புகழ்ச்சிக்குரிய 'ஒரு நல்ல மனிதராக'வும் பிரிட்டிஷ் பேரரசு நிலை நிறுத்தப்படுவதற்கு மற்றுமொரு அடித்தளத்தை நாட்டியவராகவும் அரசியல் மற்றும் வரலாற்றுப் பேராசிரியர்களால் போற்றப்படுகின்றார். எவ்வாறாயினும் இவர் வங்கத்தின் ஆளுநராயிருந்த ஓராண்டுக் காலமும், பின்னர் ஒழுங்கு முறைச் சட்டத்தின் கீழ்க் கவர்னர் ஜெனரல் என்னும் தலைமை ஆளுநராக 1773 முதல் ஆட்சி புரிந்த பன்னிரண்டு ஆண்டுக் காலமும் ஆங்கிலேயரின் ஆதிக்க வல்லரசு ஆழமாகக் காலூன்றத் துணைபுரிந்த காலமென்றால் அது மிகையாகாது.

வாரன் ஹேஸ்டிங்ஸ் 1785ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தலைமை ஆளுநர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுத் தமது தாயகம் திரும்பினார். அவர் இந்தியாவில் செய்த தவறுகளுக்காக அவர் மீது அரசத் துரோகக் குற்றச்சாட்டு (impeachment) தொடரப்பட்டது. இக் குற்றச்சாட்டு வழக்கு 1788 முதல் 1795 வரை நடந்தது. இதன் முடிவில் வாரன் ஹேஸ்டிங்ஸ் மன்னிக்கப்பட்டார். அவர் தலைமை ஆளுநராக இருந்த காலத்தின் கடைசி ஓராண்டிற்கு முன்னர், 1784-ல் பிட் இந்தியச் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினால் இயற்றப்பெற்றது. அச் சட்டத்தினால் வரையறுக்கப்பட்டிருந்த அமைப்புக்கூட்டிற்குப் பொருந்தவே கம்பெனியின் இந்திய அரசாங்கம் 1858 வரை அமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டது. எனினும், அவ்வப்பொழுது எழுந்த தேவைகளுக் கொப்பப் பிட் இந்தியச் சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டிருந்த செய்திகள் சில மாற்றவும்பட்டன. இவற்றைப்பற்றிய செய்திகளையெல்லாம் பிறிதொரு அதிகாரத்தில் விளக்கமாகக் காணலாம்.

வாரன் ஹேஸ்டிங்ஸிற்குப் பிறகு வங்காளத்தில் கம்பெனியின் இந்திய நிர்வாகத்திற்கான தலைமை ஆளுநராகச் சர் ஜான் மேக்பர்ஸன் (Sir John Macpherson) பதவி ஏற்றார். இவர் 1786ஆம்

ஆண்டு செப்டம்பர்த் திங்கள் வரை பதவியிலிருந்தார். தமது குறுகிய ஆட்சிக் காலத்தில் சர் ஜான் மேக்பர்ஸன் கம்பெனியின் நிர்வாகத்திலும் செலவினச் செயல்களிலும் சிக்கனத்தைத் தோற்றுவிப்பதற்கான பல சீர்த்திருத்தங்களை மேற்கொண்டார். இவரது ஆட்சிக் காலத்தில் மகதாஜி சிந்தியா மிகவும் வலிமை பெற்ற நிர்வாகத் தலைவராகப் பேஷ்வாவின்கீழ்ச் செயல்பட்டு வந்தார். இவர் மொகலாயப் பேரரசரைத் தமது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டிருந்ததோடன்றி, அவரிடமிருந்து டில்லி, ஆக்ரா ஆகிய மாநிலங்களையும் பெற்றிருந்தார். மகதாஜி சிந்தியா கிழக்கிந்தியக் கம்பெனியை மராத்தியப் பேரரசுக்குச் 'சௌத்' எனப்பட்ட கப்பத் தொகையைச் செலுத்தவேண்டும் என்று கட்டளையிட்டார். ஆனால், ஆங்கிலேயர் இக் கட்டளையை வெறுத்தனர்; எக் கப்பத்தையும் செலுத்த மறுத்தனர். இச் செயல் ஆங்கிலேயர்களுக்கும், மராத்தியர்களுக்கும் இடையே பகைமையை வளர்த்தது. மேக்பர்ஸன் வெகு விரைவில் 1786ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்கள் பதவியிலிருந்து திருப்பி அழைக்கப்பட்டதால் சௌத் வரியினால் ஏற்பட இருந்த உடனடி விளைவுகள் ஓரளவிற்குத் தடுத்து நிறுத்தப்பட்டன. அதே சமயம் ஓரளவிற்கு மராத்தியர்களை மனத்திருப்தி அடையச் செய்ய வேண்டிய நிலையில் கம்பெனியினரும் இருந்தனர். ஏனெனில், அப்பொழுது கம்பெனியின் அரசாங்கம் மைசூரை ஆண்ட திப்பு சுல்தான் மீதும் மற்றும் வங்கத்தின் உள்நாட்டுப் பிரச்னைகள் ஆகியவற்றிலும் வெகுவாகக் கவனம் செலுத்தவேண்டிய நிலை இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நிலவியதால், அவர்களைச் சமாளிப்பதற்குக் காரன்வாலிஸ் பிரபுவை இந்தியாவிற்குத் தலைமை ஆளுநராகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை நிர்வாகிகள் அனுப்பி வைத்தனர்.

காரன்வாலிஸ் பிரபு 1786 முதல் 1793 வரை தலைமை ஆளுநராக ஆட்சி புரிந்தார். வாரன் ஹேஸ்டிங்ஸைப்போல் அல்லாது நல்லதோர் உயர்வான மதிப்பு வாய்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராகக் காரன்வாலிஸ் பிரபு இருந்தார். இவர் வங்கத்தின் தலைமை ஆளுநராக நியமனம் செய்யப்படுவதற்கு முன் வட அமெரிக்காவில் பிரிட்டிஷ் இராணுவத் தளபதியாக அமெரிக்கச் சுதந்திரப்போர் நடந்த சமயத்தில் பணி புரிந்திருந்தார். இவரே 1781ஆம் ஆண்டில் யார்க்டவுன் என்னும் இடத்தில் அமெரிக்கத் தலைவர் ஜார்ஜ் வாஷிங்டனிடம் சரணடைந்து அமெரிக்கக் காலனிகளில் பிரிட்டிஷ் ஆட்சி முடிவுறுவதற்குக் காரணமாயிருந்தார். எனினும், இவரது பெயரும் புகழும் நேர்மையும் மதிக்கூர்மையும் சரிந்துவிடவில்லை. ஏனெனில்,

இந்தியாவில் எவ்விதமான அக்கறையையும் ஆதிக்கத்தையும் கொள்ளக்கூடாது; அவ்வாறு இருப்பின் அதை முறியடிக்கவேண்டும் என்ற கொள்கைப் பிடிப்பில் ஆங்கிலேயர் இருந்தனர். எனவே, ஃபிரெஞ்சுக்காரர்களுடன் நெருக்கமான உறவைப் பெற்றிருந்த திப்பு சுல்தானின் மைசூர் அரசை எப்படியும் ஒழித்துவிடவேண்டும் என்ற எண்ணம் ஆங்கிலேயர் மனத்தில் வேரூன்றியிருந்தது. மேலும் திப்பு சுல்தான் ஃபிரெஞ்சு மாவீரனை நெப்போலியனை இந்தியாவின்மீது படையெடுத்து ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை அழிக்கும்படி தூண்டினார் என்று சொல்லும் சில வரலாற்றுப் பேராசிரியர்கள் இருக்கின்றனர். இக் கருத்திலுள்ள உண்மை எப்படிப்பட்டதாயினும் மைசூர் அரசையும், திப்பு சுல்தானையும் அடக்கி யொடுக்கிவிடவேண்டும்; அதன் மூலமே, தமது ஆட்சி ஆதிக்கப் பரப்பெல்லையை விரிவுபடுத்த முடியும் என்று தமது தாய்நாட்டவர் கொண்டிருந்த கருத்தை மனத்தில் கொண்டு அதனை எப்படியும் செயலாக்கம் செய்துவிடவேண்டும் என்னும் பேரார்வத்துடன் காரன்வாலிஸ் இந்தியாவிற்கு வந்தார். அப் பொழுது இந்தியாவிலிருந்த திருவாங்கூர் சமஸ்தானம் ஆங்கிலேயருக்கு ஒரு நேச நாடாக இருந்தது. அத் திருவாங்கூரைத் திப்பு சுல்தான் தாக்கினார். இதைக் காரணமாக வைத்துக்கொண்டு தலைமை ஆளுநர் கரான்வாலிஸ் திப்பு சுல்தான்மீது போரைத் துவக்கினார். அதே நேரத்தில் ஹைதராபாத் நிஜாமும், மராத்தியர்களும் திப்பு சுல்தானின்மீது பகையைக் கொண்டிருந்தனர். இதனையும் ஆங்கிலேயர் பயன்படுத்திக்கொண்டு நிஜாம் மற்றும் மராத்தியர்களின் துணையைப் பெற்று மைசூருக்கு எதிராகப் போரைத் தொடுத்தனர். மராத்தியர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஆங்கிலேயருக்குத் துணைசெய்த செயல், நானுபட்னிஸ் இந்திய ஒருமைப்பாடு குறித்து ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வகுத்திருந்த அரசியல் கோட்பாட்டிற்கு எதிரானதாகவே இருந்தது. எனினும், ஆங்கிலேயர் விரித்த வலையில் மராத்தியர் தற்காலிகமாகச் சிக்கிவிட்டனர். அந்நியரான ஆங்கிலேயர், இந்தியரான ஹைதராபாத் நிஜாம் மற்றும் மராத்தியர்கள் ஆகியோர் சேர்ந்து தொடுத்த தாக்குதலை வீரம் மிக்க திப்பு சுல்தான் தீரமாக ஈராண்டுகள் எதிர்த்துப் போரிட்டார். ஆனால், 1791ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் பெங்களூர் தாக்கப் பட்டுப் பிடிக்கப்பட்டவுடன் திப்பு சுல்தான் தோல்வியை ஒப்புக் கொண்டு, ஆங்கிலேயருடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். இவ் வுடன்படிக்கை அவருடைய புகழையும் பெயரையும் குலைப்பதாய் இருந்தது. இவ் வுடன்படிக்கையின்படி தமது நிலப்பரப்பில் பாதியை ஆங்கிலேயருக்கும், மராத்தியருக்கும் நிஜாமிற்கும் கொடுக்கவேண்டி யிருந்ததோடு மூன்றரைக்கோடி

ரூபாய்களையும் போர் இழப்பீட்டுப் பணமாகக் கொடுக்கவேண்டியிருந்தது. இவை யாவற்றையும் ஆங்கிலேயரும், நிஜாமும், மராத்தியர்களும் பங்கிட்டுக்கொண்டனர். மைசூரின் வடமேற்குப் பகுதியை மராத்தியர்களும், வடகிழக்குப் பகுதியை நிஜாமும், மலபார், குடகு (Coorg), திண்டுக்கல், பாரமஹால் ஆகிய இடங்களை ஆங்கிலேயரும் பெற்றனர். அன்றிருந்த நிலைகளில் காரன்வாலிஸ் மைசூர் அரசு முழுவதையுமே திப்பு சுல்தானிடமிருந்து பறித்துத் தமது ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்திருக்க முடியும். அவ்வாறு அவர் செய்திருப்பாரேயானால் பின்னர் வெல்லெஸ்லி பிரபுவின் காலத்தில் நான்காம் மைசூர்ப் போர் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், நிஜாமும் மராத்தியர்களும் ஆங்கிலேயருக்குத் துரோகம் இழைத்துவிடுவர் என்று காரன்வாலிஸ் நம்பியதால், அவர் அவ்வாறு செய்ய விரும்பவில்லை. மேலும், அவ்வாறு காரன்வாலிஸ் செய்திருந்தால், அவர் பெரும் நிலப்பகுதிகளை நிஜாமிற்கும் மராத்தியர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டியிருந்திருக்கும். இதனை அவர் விரும்பவில்லை. யாவரையும் அடக்கி ஆங்கிலப் பேரரசையும், அரசியல் ஆதிக்கத்தையும் இங்கு நிறுவவேண்டும் என்ற அடிப்படையான கொள்கைக்கு உகந்த வகையிலும், காலத்தின் தேவைக்கு ஒப்பவும், மிக முன் ஜாக்கிரதையுடன் நம்மை அடிமைப்படுத்தும் பணியில் ஆங்கிலேயர் ஈடுபட வேண்டிய அவசியம் இருந்தது. எனினும், காரன்வாலிஸ் தொடுத்து வெற்றி கண்ட மூன்றும் மைசூர்ப்போர் திப்பு சுல்தானின் மனத்தில் அழிக்கமுடியாத வெறுப்புணர்ச்சியை ஆழமாகப் பதியவைத்தது என்பதை மறுக்க முடியாது.

முன்னரே கூறியதுபோன்று, காரன்வாலிஸின் தலைமை ஆளுநர் பதவிக் காலத்தில் அரசாங்கம் மற்றும் ஆட்சி அமைப்புகளில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இவற்றால் அவர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளின் ஏற்க இயலாத தன்மையைப் பிரிட்டிஷரான வரலாற்றுப் பேராசிரியர்கள் ஓரளவிற்கு மூடி மறைத்துள்ளனர். எவ்வாறாயினும், இவர் ஏற்படுத்திக் கொடுத்த நிரந்தர நிலவரித்திட்டம் நம் நாட்டுச் சிவில் நிர்வாக வரலாற்றில் முக்கியமானதோர் இடத்தைப் பெற்றுள்ளது என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இந்த ஏற்பாட்டின்படி வங்கம், பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்களில் அப்பொழுது வழக்கிலிருந்த நிலநிர்வாக முறைகள், உரிமைகள் யாவும் 1793-ல் நிலையானதாகவும் தொடர்ச்சியாக என்றும் இருப்பதாகவும் செய்யப்பட்டன. இந்தத் திட்டம் ஜமீன்தார்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட நிலவுரிமையையும், அதன்மூலம் அரசாங்கத்திற்குத் தொடர்ந்து வருவாய் கிடைப்பதையும்

உறுதிப்படுத்தியது. இதைத் தவிரச் சிவில் மற்றும் குற்றவியல் நீதித்துறையில் காரன்வாலிஸ் சீர்திருத்தங்களைச் செய்தார். இலஞ்ச ஊழலற்ற நிர்வாகம் கம்பெனியினரால் மேற்கொள்ளப் படுவதற்கு உகந்த விதிமுறைகளையும் வகுத்தார். ஆனால், அவர் அரசாங்கத்தின் உயர் பதவிகளைச் சுதேசி மக்களான இந்தியருக்குக் கொடுக்க முன்வரவே யில்லை. 'இந்தியர்கள் நேர்மையும் திறமையும் அற்றவர்கள்' என்ற எள்ளளவும் ஏற்றுக்கொள்ள முடியாத தவறான கருத்தை அவர் கொண்டிருந்தார். எனவே, அரசாங்கம் மற்றும் ஆட்சியின் உயர்பதவிகளை ஆங்கிலேயருக்கே கொடுக்கக் கூடிய அதிகாரத்தைத் தம்மிடம் வைத்துக்கொண்டார். எனினும், தேவையின் நிமித்தம் தமக்குகந்த ஒரு சில இந்தியர்களை அவர் அரவணைத்துக் கொண்டார். இவைகளையெல்லாம் மனத்தில் கொண்டு பார்க்கும்பொழுது 'தேவையான அளவில் தேவையான இந்தியர்களின் துணைகொண்டு, அதே நேரத்தில் அவர்களை நம்பாது நம்பிக்கைத் துரோகம் செய்து, தம் இச்சை ஈடேறும் செயலைக் கண்ணும் கருத்துமாக மேற்கொள்வதையே தமது அடிப் படையான அரசியல் பணியாக ஆங்கிலேயர் கொண்டிருந்தனர்' என்பது நமக்குப் புலனாகிறது. எனவேதான், காரன்வாலிஸை உள்ளிட்ட எல்லா ஆங்கிலேய அதிகாரிகளும் செய்த சீர்திருத் தங்கள் யாவும் ஒரு சில நன்மைகளையும் பல்வேறு தீமைகளையும் பயப்பனவாய் நம் நாட்டில் அமைந்தன. இதற்குக் காரன்வாலிஸ் செய்த சீர்திருத்தங்களும் விதி விலக்கல்ல. எனவேதான், அவர் தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற பின்னரும் அவர் செய்திருந்த சீர்திருத்தங்களினால் ஏற்பட்டிருந்த தீமைகளும், அவர் பின்பற்றிய நியாயமற்ற ஆட்சிக் கொள்கையின் பலன்களும் நெடுங்காலம் வரை நம்நாட்டை ஆட்கொண்டிருந்தன.

காரன்வாலிஸ் பிரபுவுக்குப் பிறகு சர் ஜான்ஷோர் என்பவர் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் 1798ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுக் காலம் பதவியில் இருந்தார். தமது ஆட்சிக்காலத்தில், பிட் இந்தியச் சட்டத்தின் வரம்பிற்கு உட்பட்ட நிலையில், இந்திய அரசுகளின் செயல்களில் நடுநிலை வகிக்கும் கொள்கையைப் பின்பற்றினார். அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த எவ்வாட்சிச் சீர்திருத்தத்தையும் இவர் செய்யவில்லை. இவரது ஆட்சிக் காலத்தில் மராத்தியர்கள், ஹைதராபாத் நிஜாமைத் தாக்கி வெற்றி கண்டனர். ஆங்கிலேயர் மராத்தியர்களுக்கு எதிராக நிஜாமிற்கு எந்த உதவியையும் செய்யவில்லை. இது மராத்தியக் கூட்டிணைவு பெற்றிருந்த அரசியல் வலிமையைக் காட்டுகிறது. எனினும், தம்மிடையே மராத்திய அரசர்கள் கருத்து வேற்றுமைகளையும் ஒற்றுமையற்ற போக்குகளையும்

கொண்டிருந்தனர். அவை முதிர்ந்து வெடிக்கும் தருணத்தை ஆங்கிலேயர் மிக உன்னிப்பாக எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். அத் தருணம் பின்னர் 1818-ல் தோன்றியது. அது வரை ஆங்கிலேயர் முன்ஜாக்கிரதையுடன் காரியங்களைச் செய்து, மராத்தியர்களைப் போலல்லாது வலிமையற்றிருந்த வேறு சில சுதேசி அரசுகளைத் தமது பிடியின்கீழ்க் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இதற்கு ஒப்பவே, சர் ஜான்ஷோர் அயோத்தியின் விவகாரங்களில் தலையிட்டார். அயோத்தியின் நவாபு 1797-ல் இறந்தார். அவருக்குப் பின் அவரது ஆசைநாயகிக்குப் பிறந்த மைந்தர் அரியணை ஏறினர். அவர் அயோத்தி நவாபின் சட்டப்படியான மனைவிக்குப் பிறக்காதவர் என்ற காரணத்தைக் காட்டி, சர் ஜான்ஷோர் அவரைப் பதவியிலிருந்து நீக்கிப் பழைய நவாபின் சகோதரர் ஒருவரை ஆட்சியில் அமர்த்தியதோடு அவருடன் ஓர் உடன்படிக்கையையும் செய்துகொண்டார். இந்த உடன்படிக்கையின்படி அயோத்தியின் இராணுவப் பாதுகாப்புப் பொறுப்பு கிழக்கிந்தியக் கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கு ஈடாக எழுபத்தாறு இலட்ச ரூபாய்களை உதவித்தொகையாகவும் ஆங்கிலேயர் பெற்றனர். மேலும், அயோத்தியின் நவாபு வேறெந்த அந்நிய அரசுடனும் எத் தொடர்பையும் உறவையும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று இவ் வுடன்படிக்கை கூறியது. அலகாபாத் கோட்டையும் ஆங்கிலேயருக்கு இவரால் கொடுக்கப்பட்டது. ஆங்கிலேயர் இப்படி நம்மவரின் பலவீனத்தைப் பயன் படுத்திச் சிறுகச் சிறுகத் தமது ஆதிக்கத்தைப் பெருக்கியவண்ணம் இருந்தனர். நெஞ்சுருக்கும் இச் செய்திகளை நாம் அறியும்பொழுது ஆங்கிலேயர் பின்பற்றிய அரசியல் மற்றும் ஆட்சிக்கொள்கையின் தரமற்ற தன்மையை உணர்ந்துகொள்ள முடிகிறது. எனினும், அத்தகு கொள்கையைச் சுற்றிச் சுழல்வதாகத்தான் அன்றைய வரலாறும், அவ் வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருந்த அரசியலும் அரசாங்கமும் இருந்ததால் நம்மால் அதை ஒதுக்கித் தள்ளிவிட முடியவில்லை. மேலும், ஆங்கிலேயர் அமைத்துக் கொடுத்த அரசாங்கம் மற்றும் அரசியலின் காரணமாக, இந்தியர்களாகிய நாம் அரசியலமைப்பு முறைக்கு உட்பட்ட ஆட்சிமுறையிலும், பிறவற்றிலும் தகுந்த பயிற்சியைப் பெற்றுள்ளோம் என்பதைக் கவனத்தில் கொண்டு, தீமையிலும் நன்மையிருந்தது என்பதை உணர்தல் அவசியமாகும்.

1795ஆம் ஆண்டில் வங்கத்தில் இருந்த ஐரோப்பிய அதிகாரிகள் பயங்கரமான ஒரு கலகத்தில் (Mutiny) ஈடுபட்டு, ஆட்சிப்பொறுப்பைக் கம்பெனியிடமிருந்து பிடுங்கிவிடக்கூடிய அச்சத்தைத் தோற்றுவித்தனர். கட்டுக்கடங்காத நிலையில்

கலகக்காரர்கள் இருந்ததால் சர் ஜான்ஷோர் அவர்களுக்கு ஆதாயங்களையும் சலுகைகளையும் வாரி வீசினர். ஆனால், திறமை யுடன் நிலைமையை அவரால் சமாளிக்க முடியவில்லை. எனவே, அவர் 1798-ல் திருப்பி அழைக்கப்பட்டார். 'தமது ஐந்தாண்டுக் கால ஆட்சியில் சர் ஜான்ஷோர் தமது கீர்த்தி வெளிப்படும்படியான செயல்களை மேற்கொண்டார் என்று சொல்வதற்கில்லை. அவர் ஓர் உயர்தரமான வங்க ஆட்சியாளராகவும், புகழ் மிக்க நிதி நிபுண ராகவும், வெளிப்படையாகப் பேசி நேசபாவத்துடன் நடப்பவரா கவும், ஆடம்பர ஆரவாரங்களில் நாட்டமில்லாமல் தமது பணியில் அமைதியையும் சிக்கனத்தையும் நாடி, அதே நேரத்தில் ஊக்க மில்லாதவராகவும் இருந்தார். ஆரம்பத்தில் வாரன் ஹேஸ் டிங்ஸின் கொள்கைகளில் குற்றம் குறைகளைக் கண்டு, பின்னர் அவருடன் சந்திப்பு ஏற்பட்டதும் தமது கருத்தை மாற்றிக் கொண்ட கனவான் சர் ஜான்ஷோர் ஆவார்' என்று கர்ஸான் பிரபு தமது 'இந்தியாவின் பிரிட்டிஷ் அரசாங்கம்'[1] என்னும் நூலில் புகழ்ந்துரைத்திருப்பினும் அவர் திறமையான நிர்வா கத்தை முழுமையான அளவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிப் பரப்பின்கீழ் இருந்த இந்தியப் பிரதேசங்களில் ஏற்படுத்திக் கொடுத் தார் என்பதை ஏற்பதற்கில்லை.

சர் ஜான் ஷோருக்குப் பிறகு வங்கத்தின் தலைமை ஆளுநராக வெல்லெஸ்லி பிரபு நியமிக்கப்பட்டார். இவரது ஆட்சிக்காலம் 1798 முதல் 1805 முடிய அமைந்த ஏழாண்டுக் காலமாகும். இவர் திப்பு சுல்தானை நான்காம் மைசூர்ப்போரில் தோற்கடித்தபின் வெல்லெஸ்லி கோமகன் என்று சிறப்பிக்கப்பட்டார். வெல் லெஸ்லி பிரபு இந்தியாவின் தலைமை ஆளுநராக வந்தபோது இந் நாட்டின் நிலை மிகவும் அச்சத்திற்குரியதாக இருந்தது. ஆங்கிலே யர்களால் சமாளிக்கப்பட வேண்டிய கம்பெனியின் பிரச்சினைகள் பல சிக்கல்களுடன் காணப்பட்டன. சர் ஜான் ஷோர் காலத்தில் மராத்தியர் தம்மைத் தாக்கிய பொழுது எவ் வுதவியையும் நல்காத ஆங்கிலேயர்மீது ஹைதராபாத் நிஜாம் அடக்க முடியாத சினம் கொண்டிருந்தார். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் எந்த உடன்பாட்டையும் மேற்கொள்ளக்கூடாது என்ற மனப்போக்கி லிருந்த நிஜாம், ரேமாண்ட் என்னும் ஃபிரெஞ்சு அதிகாரியின் தலைமையின்கீழ் இராணுவப் படையை அமைத்தவண்ணம் இருந்தார். தாம் நிஜாமை வென்றிருந்த காரணத்தினாலும், நடைமுறையில் மத்திய இந்தியாவைத் தமது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டிருந்ததாலும், பணபலத்தையும். மன உறுதியையும்

[1] British Government of India, Vol. I, p. 171-172.

கொண்டிருந்த காரணத்தினாலும், மராத்தியர்கள் எவருக்கும் வளைந்து கொடுக்காத வீர உணர்ச்சியைப் பெற்றிருந்தனர். பெர்ரான் (Perron) என்னும் ஃபிரெஞ்சுத் தளபதியினால் பயிற்சி யளிக்கப்பட்டு அவரது தலைமையின்கீழ் இயங்கிய பலம் மிக்க இராணுவம் ஒன்றையும், வளம் மிக்க மூல ஆதாரங்கள் பலவற்றை யும் சிந்தியா பெற்றிருந்தார். இராபர்ட் கிளைவினால் ஃபிரெஞ்சுக் காரர்களின் ஆதிக்கமும், செல்வாக்கும் ஒடுக்கப்பட்டிருந்தாலும், அவை முற்றிலும் ஒழிக்கப்படவில்லை. எனவேதான், 1798ஆம் ஆண்டில் ஃபிரெஞ்சுக்காரர்கள் தமது செல்வாக்கை மீண்டும் முடுக்கியவண்ணம் இருந்தனர். இதன் பயனாகவே இந்தியச் சுதேசி அரசுகள் பலவற்றில் ஃபிரெஞ்சு அதிகாரிகள் முக்கியத்துவம் வாய்ந்த உயர்வான பதவிகளைப் பெற்றிருந்தனர். ஃபிரெஞ்சு அதிகாரிகள் பெற்றிருந்த நிலை எவ் வையப்பாட்டிற்கும் இடமின்றி ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அச்ச அறிகுறியாய் இருந்தது. காரன் வாலிஸ் பிரபுவினால் தோற்கடிக்கப்பட்டு, இகழ்ச்சிக்குரிய உடன்படிக்கையில் கட்டாயத்தின்பேரில் கையொப்பமிட்டுத் தமது நாட்டின் பெரும்பகுதியை ஆங்கிலேயருக்குத் தாரை வார்த் திருந்த செயலும், தமது இரு மைந்தர்களை ஆங்கிலேயரிடம் பணயம் வைக்க வேண்டியிருந்ததோடு நிறையப் பணத்தைப் போரின் நிமித்தம் இழப்பீட்டுத் தொகையாக ஆங்கிலேயருக்குக் கொடுத்துக்கொண்டிருந்த செயலும் திப்பு சுல்தானை ஆங்கி லேயரைப் பழிவாங்கவேண்டும் என்ற உள்ளக் கொதிப்பைப் பெற்றிருக்குமாறு செய்திருந்தது. எனவே, இவர் ஆங்கிலேயருக்கு வெளிப்படையான எதிரியாக இருந்தார். திப்பு சுல்தானும் ஃபிரெஞ்சு அதிகாரிகளை உயர் பதவிகளில் நியமித்து அவர்கள் மூலம் தம் படைவீரர்களுக்குத் தகுந்த இராணுவப் பயிற்சியையும் கொடுத்து வந்தார். கர்ஸான் பிரபு என்பவர், தமது 'இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம்' என்னும் நூலில் கூறியிருப்பதைப்போல், 'ஆங்கிலேயரால் அவமான விளைவுகளுக்கு ஆளாக்கப்பட்டு அலைக் கழிக்கப்பட்டிருந்த திப்பு சுல்தான் மொரிஸஸ், ரியூனியன் ஆகிய இரு ஃபிரெஞ்சு அரசுகளின் ஆளுநர்களுக்குத் தூதனுப்பிப் பேச்சு வார்த்தைகளை நடத்திக்கொண்டுவந்தார். மாவீரர் நெப் போலியன் போனபார்ட்டும் தமது ஃபிரெஞ்சு சாம்ராஜ்யத்தின் எல்லை, கீழைநாடுகளில் பரவவேண்டும் என்ற பேரவாவில் கீழை நாடுகளை நோக்கித் தமது படைகளுடன் முன்னேறிக் கொண்டி ருந்தார். இப்படிப் பலவழிகளில் ஃபிரெஞ்சுக்காரர்களால் ஆபத் தான நிலை ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவில் ஏற்பட்டிருந்தது. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் நிலைமையைச் சமாளித்துத் தமது ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் இந்தியாவில் நிலை நிறுத்திக் காப்பாற்றி, அதை மேலும் விரிவாக்கும் பொருட்டு

அறிவு, ஆற்றல், வலிமை ஆகியவற்றைக் கொண்டிருந்த வெல்லெஸ்லி பிரபுவைத் தேர்ந்தெடுத்துத் தலைமை ஆளுநராக இந்தியாவிற்குக் கம்பெனியின் தலைமையிடம் அனுப்பிவைத்தது."

படாடோபமும், பகட்டார்வமும் கொண்டிருந்த வெல்லெஸ்லி பிரபு, தாம் பதவியிலிருந்த ஏழாண்டுக் காலத்திற்குள் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக இருந்த உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் எதிரிகளைப் பெருமளவிற்கு முறியடித்தார். 1798-ல் தாம் பதவியேற்ற பொழுது இந்தியாவில் நிலவிய அரசியல் நிலவரங்களுக்கு ஒப்ப இதுவரை ஆங்கிலேயரால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த தலையிடாக் கொள்கை நடைமுறைக்கு உகந்ததன்று என இவர் கருதினார். உண்மையிலேயே அப்பொழுது இந்தியாவில் உயர் வீறிறைமை (Paramount) வாய்ந்த சக்தியாக ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியோ, இந்திய அரசுகளோ இருக்கவில்லை. இதனால் அப்பொழுது இந்தியாவிலிருந்த அரசுகள் ஒவ்வொன்றும் தம் மனப்போக்கிற்கு ஒப்பச் செயல்களை மேற்கொண்ட நிலையில் இருந்ததோடு, அவை அரசியல் குட்டையைக் கலக்கிக்கொண்டும் இருந்தன. நாட்டமைதிக்கும், வீட்டமைதிக்கும் தேவையான உத்தரவாதம் இருக்கவில்லை. உச்ச அதிகாரச் சக்தி ஒன்றோ, அல்லது அரசோ இல்லாத காரணத்தால் அதனிடம் தம் குறைகளை முறையிட்டு அதன்மூலம் பரிகாரங்களைத் தேடிக் கொள்ளக்கூடிய நிலையில் இந்திய அரசுகள் இருக்கவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி, பிற அரசுகளின் மேல்முறையீடுகளை எடுத்துக்கொண்டு, அவற்றிற்குப் பரிகாரத்தைத் தேடிக்கொடுக்கும் அரசியல் அந்தஸ்தைப் பெற்ற உச்ச அதிகாரச் சக்தியாக இந்தியாவில் அமைக்கப்படவேண்டும் என்றும் வெல்லெஸ்லி உறுதி கொண்டார். இத்தகைய உறுதிப்பாட்டுடன்தான் வெல்லெஸ்லி தமது பணியினை இந்தியாவில் மேற்கொண்டு, அதன் மூலம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இங்கு உச்ச அரசியல் அதிகார வரம்பைப் பெறுவதை உறுதிப்படுத்தினார். இதற்குக் காரணமாக அமைந்தவை இவரது ஆட்சிக் காலத்தில் நடந்த நான்காம் மைசூர்ப் போர், இரண்டாம் மராத்தியப் போர் முதலியவையும், தமது துணைப்படைத் திட்டத்தின் (subsidiary system) மூலம் தஞ்சாவூர், சூரத், கர்நாடகம், அயோத்தி போன்ற பல முக்கியமான அரசுகளைத் தமது சுற்றரணுக்குள் (king fence) சிக்கவைத்ததும் ஆகும். இவரது துணைப்படைத் திட்டத்தின் அம்சங்களையும், அவற்றின் அரசியல் மற்றும் ஆட்சி முறையின் முக்கியத்துவத்தையும் பிறிதொரு அதிகாரத்தில் அறிந்து கொள்ளலாம்.

இந்திய நாட்டில் இந்தியர்கள் தமக்கே உரித்தான ஒரு கனவு உலகத்தை அமைத்துக்கொண்டு வசித்தனர் என்பதை ஏற்க மறுத்து, இந்தியாவில் ஆங்கிலப் பேரரசை அமைக்கக் கடவுளால் பிரத்தியேகமாக அனுப்பப்பட்ட ஒரு பிரதிநிதியாகத் தம்மைக் கருதிக்கொண்டு, போர் உணர்ச்சியுடன் செயல்களை மேற்கொள்ளும் போக்கை வெல்லெஸ்லி கொண்டிருந்தார். இந்தியர்களின் பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை வழியையும்பற்றி இவர் ஏதும் அறியாதவராக இருந்தார். இந்தியர்கள் பசி, பட்டினி, வறுமை, பஞ்சம் ஆகியவற்றால் பதறிக்கொண்டிருந்தனர் என்பதையும் இவர் நிச்சயமாக அறிந்திருக்கவில்லை. இவர் இந்திய அரசர்களையும், இளவரசர்களையும் சுதந்திர அரசர்களாக நோக்க மறுத்ததோடு, அவர்களை அவர்களுடைய அரசுகளிலேயே உரிமையற்றவர்கள் என்று கருதினர். ஆட்சி உரிமைபற்றிய அடிப்படையான அரசியல் கோட்பாட்டிற்கு எதிரான கொள்கையைத் தமது உள்ளத்தில் இருத்திவைத்திருந்ததால், 'திப்பு என்று ஒருவர் இருப்பதே தப்பு' என்று அவரையும் அவரது அரசையும் அடக்கி, அமிழ்த்தி அழித்துவிடவேண்டும் என்று உறுதி பூண்டிருந்தார். எத்தகைய இறுமாப்பான எண்ணம் வெல்லெஸ்லிக்கு! இதனை நம்மால் இன்று பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆனால், இந் நாடு அன்று அதற்கு ஆட்படவேண்டித்தான் இருந்தது.

தமது இறுமாப்பான எண்ணம் இனிதாக ஈடேறுவதற்கு வெல்லெஸ்லிக்குத் துணை நின்ற சாதகமான சூழ்நிலைகள் பல இருந்தன. இவருடைய ஆதரவாளர்கள் இந்தியாவில் மட்டும் அன்றி இங்கிலாந்திலும் இருந்தனர். இவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களுக்கான தலைமை ஆளுநராகப் பதவியேற்ற போது, கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை இடத்துக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைவராக டுண்டாஸ் (Dundas) என்பவர் இருந்தார். இவர் வெல்லெஸ்லிக்கு அரசியல் மற்றும் ஆட்சி முறையான உதவிகள் யாவற்றையும் செய்து கொடுத்தார். டுண்டாஸும் வெல்லெஸ்லியும் இந்திய நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் முழு ஆளுமை தமக்குத்தான் உண்டு என்று கருதினர். இத் தீர்மானத்திற் கொப்பவே, வெல்லெஸ்லி பொருத்த மற்ற சாக்குப்போக்குகளைக் கூறிப் பல போர்ச் செயல்களில் ஈடுபட்டார். முன்னரே கூறியதைப்போல் திப்பு சுல்தானைத் தீர்த்துவிடவேண்டும் என்பது வெல்லெஸ்லியின் உள் நோக்கமாக இருந்தது. எனவே, இவர் ஹைதராபாத் நிஜாமுடன் பேசிச் சமரசங்கண்டு அவரது உதவியைப் பெற்று, மைசூரைத் தாக்க முற்பட்டார். வெல்லெஸ்லி ஹைதராபாத் நிஜாமைத் தமது

துணைப்படைத் திட்டத்திற்குப் பணியவைத்து அவரிடமிருந்து ஃபிரெஞ்சுக்காரர்களை அகற்றிவிடுமாறு செய்தார். மராத்தியர்களையும், தமது பக்கம் இழுத்துக்கொள்ள இவர் முயன்றார். ஆனால் அம் முயற்சி வெற்றிபெறவில்லை. எனினும், தமது பலத்துடனும் ஹைதராபாத் நிஜாமின் துணையுடனும் திப்பு சுல்தான்மீது ஆதிக்கத்தைச் செலுத்தி, திப்புவிடமிருந்து பொருத்தமற்றதும் நடைமுறைக்கு ஒவ்வாததுமான சலுகைகளைக் கேட்டார். ஆனால், நேர்மைக்கும் வீரத்திற்கும் பெயர் பெற்றிருந்த திப்பு சுல்தான் அந்நியர்களின் விருப்பத்திற்கும் ஆதிக்கத்திற்கும் அடிபணிய விரும்பாமல், ஆங்கிலேயருடன் போராட முடிவெடுத்தார். ஆனால், அச் சமயம் திப்பு சுல்தான் ஃபிரெஞ்சுக்காரர்களிடமிருந்து போதுமான பலன்தரும் உதவியைப் பெற முடியவில்லை. பேச்சு வார்த்தைகளே நடந்து கொண்டிருந்தன. இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு வெல்லெஸ்லி பொருந்தாக் காரணத்துடன் மைசூர்மீது படையெடுத்தார். திப்பு சுல்தானும், தமது படைகளுடன் ஆங்கிலேயரைச் சீரங்கப் பட்டினத்தில் சந்தித்துப் போர்க்களத்தில் தாம் உயிர் துறக்கும்வரை போரிட்டார். போரின் இறுதியில் ஆங்கிலேயர் வென்றனர். மைசூர் வீழ்ந்தது. இப் போர் நடந்தது 1799ஆம் ஆண்டு மே மாதம் நான்காம் நாளாகும். இதுவே நான்காம் மைசூர்ப் போராகும். மைசூர் அரசு வீழ்ந்த பின்னர் அதனைப் பிரிட்டிஷ் இந்தியப் பிரதேசத்துடன் முழுமையாகச் சேர்த்துவிட வேண்டும் என்று, டுண்டாஸ் விரும்பினார். ஆனால், ஆழ்ந்த சில அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் டுண்டாஸின் கருத்தை வெல்லெஸ்லி ஏற்கவில்லை. ஹைதர் அலியின்மூலம் பிறந்திருந்த உடையார் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையை மைசூரின் அரச பீடத்தில் அவர் அமர்த்தினார். அதன் மூலமே மைசூரை மையமாக வைத்துத் தென் புலத்தைக் கம்பெனியின் அரசியல் ஆதிக்கக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவருவதற்கு வழி வகுத்தார். எனினும், டுண்டாஸைச் சமாதானப்படுத்தும் வகையில், நாட்டின் பல்வேறு பகுதிகளைப் பிரிட்டிஷ் ஆட்சிப் பகுதியின்கீழ்க் கொண்டுவர வெல்லெஸ்லி உறுதியளித்தார்.

டுண்டாஸிற்குக் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில், வெல்லெஸ்லி புகழ் மிக்க மராத்தியப் பேரரசைச் சின்னபின்னப் படுத்தினார். மராத்தியர்களும் பிறரைப்போல் ஃபிரெஞ்சு அதிகாரிகளின் துணையுடன் தமது இராணுவத்தினருக்குப் பயிற்சியினைக் கொடுத்து, வலிமையுள்ளவர்களாக இருந்தபோதிலும் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியத் துணைக் கண்டத்தில் தமது இறைமையை நிலைநாட்ட முடியாத

வகையில் பல துரதிர்ஷ்டமான செயல்கள் நடைபெற்றன. 1795-ல் கார்தா போரில் பேஷ்வாவின் தலைமையின்கீழ் மராத்தியத் தலைவர்கள் பெற்றிருந்த ஒற்றுமைநிலை மேலும் நீடித்திருக்கவில்லை. தம்மை எதிர்நோக்கியிருந்த ஒரு பொதுவான அந்நிய ஆபத்தை எதிர்த்துப் போராடவேண்டும் என்பதை ஏனோ மராத்தியத் தலைவர்கள் உணரவில்லை. 1795ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இருபத்தேழாம் தேதியன்று, பேஷ்வா இரண்டாம் மாதவர்ராவ் இளம் வயதில் இறந்தது மராத்திய அரசியலில் ஒரு பெரிய துயர நிகழ்ச்சி எனலாம். தமக்குள்ளாகவே சூழ்ச்சி, சதி, நம்பிக்கையின்மை, மோசம் ஆகியவற்றை மராத்திய அரசர்களும் தலைவர்களும் பின்பற்றித் தமக்குத்தாமே ஈடுசெய்ய முடியாத அழிவைத் தேடிக்கொண்டனர். இரண்டாம் மாதவராவுக்குப் பிறகு மராத்தியப் பேரரசு என்னும் பெருந்தேருக்கு உரியதோர் அச்சாணியாக இருந்துவந்த பேஷ்வாவின் பதவி தரமிழந்ததாகிவிட்டது. இப்படிப்பட்ட ஒரு மாற்றம் ஏற்பட்டது நமது தேசிய துரதிர்ஷ்டமேயாகும். இத் துரதிர்ஷ்டத்திற்குத் துணையாக அமைந்த செயல்களும் பல உண்டு.

அடுத்தடுத்துத் துன்பங்கள் மராத்தியப் பேரரசர்க்கு ஏற்பட்டுக்கொண்டிருந்த போது, இரகுநாதராவின் மகன் 1796ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் பேஷ்வாவாகப் பதவியில் அமர்த்தப்பட்டார். இவரே பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் ஆவார். இவர் மராத்தியப் பேரரசின் பெருமை அழிந்துபோகக் காரணமாய் இருந்தவர் என்றால் மிகையாகாது. இவரது பேஷ்வா பதவிக் காலமான 1796 முதல் 1818 வரையிலான இருபது ஆண்டுக்காலம் மராத்தியப் பேரரசுக்கு ஒரு கெட்ட காலமாகவே இருந்தது. இவரால் மராத்தியப் பேரரசுக்கு அழிவு வர இருந்ததை மதிக்கூர்மை படைத்த நானா பட்னிஸ் உணர்ந்து இவர் பேஷ்வாவாக அமர்த்தப்பட்ட செயலைத் தடுத்து நிறுத்த முனைந்தார். ஏனெனில், இரகுநாதராவ் கட்சி மாறிக் காட்டிக் கொடுக்கும் ஆங்கிலேயரின் அடிவருடியாக இருந்தார். அவருடைய மகன் பேஷ்வாவாக வந்தால் அத்தகைய இழிநிலையே கோலோச்சும் என்று நானா பட்னிஸ் வலியுறுத்தினார். ஆனால், அவர் முயற்சிகள் பலிக்கவில்லை. இத்தகைய இழிநிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து 'பட்டகாலில் படும்; கெட்ட குடியே கெடும்' என்பதற் கொப்ப மதிப்பு, திறமை, மதிப்புலம் ஆகிய சீரிய பண்புகள் பலவற்றைப் பெற்றிருந்த மராத்தியத் தலைவர்கள் பலர் இக்கட்டான நேரத்தில் ஒருவர் பின் ஒருவராக இறக்கலாயினர். உண்மையிலேயே 18ஆம் நூற்றாண்டின் கடைசிப்

பத்தாண்டுக் காலம் மராத்தியப் பேரரசிற்கு ஈடு செய்யமுடியாத இழப்பினைக் கொடுத்த காலமாய் இருந்தது. பெண்ணுயிருந் தாலும் நனி சிறந்த நிர்வாகத்தைக் கொடுத்து வந்த அறிவுக் கீர்த்தி வாய்ந்த இந்தூர் மகாராணியான அகல்யாபாய் ஹோல்கார் 1795ஆம் ஆண்டு இறந்தார். இவரது திறமையான படைத்தளபதியாய் இருந்த துக்கோஜிராவ் என்பவரும் 1797-ல் இறந்தார். பூனு அரசாங்கத்தை வலிமையுள்ளதாக்கியதில் பெரும் பங்கை ஏற்றுப் புகழ் பெற்றிருந்த திறமைசாலியும் மராத்திய மண்டலம் அன்று கண்டிருந்த மாபெரும் வீரருமான மகதாஜி சிந்தியா 1794ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இறந்து போனுர். மராத்திய அரசியல்வாதிகளில் மதிக்கூர்மையும் மனவுறுதியும் பெற்றிருந்த நாஞ பட்னிஸும் 1800ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 13ஆம் நாளன்று இம் மண்ணுலகைவிட்டு மறைந்தார். இவர்கள் யாவரது இறப்பாலும் மராத்தியப் பேரரசின் பெருமை வீழ்ச்சியுறத் தொடங்கியது.

வீரமும் ஆற்றலும் மிக்க பெருமக்கள் பலர் இறந்தவுடன், தகுதி யற்ற தரமற்ற பலர் அதிகாரத்தின் இருப்பிடங்களில் அமரக் கூடிய அவலநிலை, மராத்தியப் பேரரசில் தோன்றியது. பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் தமது பதவியை வகிக்கக் கூடிய ஆற்றலில் லாமல் முட்டாள்தனமாகத் தம்மைத் தாமே புகழ்ந்துகொண்ட நிலையில் குறுமதியும், சூழ்ச்சியும், சதிச் செயல்களும் மேற் கொள்ளக்கூடிய மனப்பாங்கைக் கொண்டவராகவும், வஞ்சித்து ஒழுகிக் காட்டிக்கொடுக்கும் தன்மையாளராகவும், சிற்றினம் சேருபவராகவும் இருந்தார். மகதாஜி சிந்தியாவின் பின்தோன்ற லான தௌலத் ராவ் சிந்தியா பதினுன்கே வயதை அடைந்திருந்த சிறுவராயிருந்தார். எனினும், இவரது வளர்ப்புத் தந்தை மராத்தி யர்களின் பரம்பரை வீரத்தைப் போற்றிக் காத்துவந்தார். எனினும், தௌலத்ராவ் மகதாஜி சிந்தியா இறந்த பத்தே ஆண்டுகளுக்குள் தமது சுதந்திர இறைமையை ஆங்கிலேயரிடம் வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தின் கீழ் அடகு வைத்துத் தம்மை பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு உட்படுத்திக்கொண்டார். மராத்தியப் பேரரசின் நடவடிக்கைகள் நலிந்து போவதற்குக் காரணமாய் அமைந்தவர்களுள் யஸ்வந்த்ராவ் ஹோல்ஹாரும் ஒருவராவார். அகல்யாபாய் அமைத்துக் கொடுத்திருந்த அடிச் சுவட்டை விட்டு அகன்று, மராத்தியப் பேரரசின் ஒரு பகுதி அந்நியருக்கு அடிபணிந்து அடைக்கலமாக வேண்டி நடந்த செயலில் இவருக்குப் பெரும்பங்கு இருந்தது. இவர் தமது இனத்த வரையே பகைத்துக் கொண்டவராவார். பேரரசுக் கூட்டிணை வில் ஓரங்கமாக இருந்துகொண்டு மற்ருெரு அங்கத்தின்மீது இவர்

போர் தொடுத்தார். இவர் சிந்தியாவுடன் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள், மராத்தியர்களை அழிவின் உச்சிக்கே அழைத்துச் சென்றது. போர் செய்துகொண்டிருந்த ஹோல்காருக்கும், சிந்தியாவுக்கும் இடையே சமரசம் செய்துவைக்கவேண்டிய பொறுப்பை பேஷ்வா உணரவில்லை. அவர்களிடையே சமரசத்தைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாகச் சிந்தியாவுடன் சேர்ந்து கொண்டு, ஹோல்கார் ஆத்திரத்துடன் போர்ச் செயல்களை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்குவதில் துணைபுரிந்தார். இப்படித் தம்முள் ஒருவரோடொருவர் அடித்துக்கொண்டு, குடும்பச் சண்டை வெளியாருக்குத் தெரியும்படி மராத்திய அரசர்களும், தலைவர்களும் நடந்துகொண்டனர். இவற்றால் 'எரியும் வீட்டில் பிடுங்கியது ஆதாயம்' என்பதற் கொப்பவும், 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பதற் கொப்பவும், ஆங்கிலேயர் ஆள்பிடிக்கும் தமது கைவரிசையைக் காட்டினர். இதற்கொப்ப அப்பொழுது பீஷ்வா பதவியிலிருந்த இரண்டாம் பாஜிராவ் வெல்லெஸ்லியின் இயக்கத்திற்கு உடன்பட்டு 1802ஆம் ஆண்டில் டிசம்பர்த் திங்கள் 31ஆம் நாளன்று பஸ்ஸீன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். இவ் வுடன்படிக்கையின் மூலம், தமது பேரரசின் சுதந்திரத்தை ஆங்கிலேயருக்கு விற்று அதன் மூலம் ஆங்கிலேயர் உச்ச அதிகாரச் சக்தியாய் வெகு விரைவில் வளர்ச்சியுறுவதற்குத் துணைபுரிந்தார். 'பஸ்ஸீன் உடன்படிக்கைக்கு முன் பிரிட்டிஷ் சாம்ராச்சியம் என்ற ஒன்று தோற்றத்தில் இருந்தது. ஆனால், இவ் வுடன்படிக்கை தமது நேர்முகமான அல்லது மறைமுகமான செயற்பாடுகளின் மூலம் இந்தியப் பேரரசைக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுத்து விட்டது.'[1] பிரிட்டிஷ்காரர்களே நம்பமுடியாத அளவிற்குப் பஸ்ஸீன் உடன்படிக்கை பேராதாயத்தை அவர்களுக்கும், பேரிழப்பை மராத்தியர்களுக்கும் கொடுப்பதாய் அமைந்தது.

துணைப்படைத் திட்டத்தின்கீழ்த் தம்மை ஆங்கிலேயரிடம் அடகு வைத்துவிட்ட நிலையில், தமது அரசவையில் ஆங்கிலேயக் காப்பரசாட்சியாளரைப் (resident) பதவியில் அமர்த்திக் கொள்வதை ஏற்றுக்கொண்டும், ஆங்கிலப் படையின் துணை கொண்டும் தமது நாட்டு மக்களின் தூற்றல்களுக்கு ஆளான நிலையில் பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் 1803ஆம் ஆண்டு மேத் திங்கள் பதின்மூன்றும் நாளன்று பூனாவிற்குத் திரும்பினார். தற் கொலைக்குச் சமமான காரியங்களில் ஈடுபட்டு இருந்த பேஷ்வாவை ஆங்கிலேயரின் சூழ்ச்சிஅரசியல் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்

[1] The Marquess of Wellesly, W. H. Hutton, p. 86.

கான முயற்சிகள் எதையும் எவரும் எடுக்கவில்லை. பேஷ்வா இரண்டாம் பாஜிராவும் தமக்கு ஏற்பட்டிருந்த தாழ்வான நிலையின் தன்மையை முழுதும் உணரவில்லை. இவர் தமது மக்களிடமிருந்து அச்சுறுத்திப் பணம் பறித்தல், வரம்பு மீறிய ஊதாரித்தனங்களை மேற்கொள்ளுதல் போன்ற பல தரமற்ற செயல்களில் ஈடுபட்டிருந்ததோடு, தமக்கு ஏற்பட்டிருந்த தாழ்வான நிலையை ஒரு சில வேளைகளில் உணர்ந்தபொழுது குழந்தைத்தனமாகவும் செயல்பட்டுவந்தார். அந்நியர்களான ஆங்கிலேயர்களால் தமக்கு ஏற்பட்ட தலை குனிவான நிலையை அவர் பூரணமாக உணர்ந்தவுடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடக்கூடிய சக்தியை இழந்திருந்த அந்த நேரத்தில் ஆங்கிலேயருடன் அவர் பகையைக் காட்டத் தொடங்கி விரைவில் மோத ஆரம்பித்து, மராத்தியப் பேரரசு சரிவதற்கான சூழ்நிலையையும் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டார். பெயரளவில் மட்டுமன்றிச் செயல்முறையிலும் மராத்தியப் பேரரசின் அடிச்சுவடு மறைந்து போகக்கூடிய கேடுகாலம் தோன்றிவிட்டது. இதற்கு ஏற்றாற்போல் ஒரு கொலைச் செயலிலும் பேஷ்வா ஈடுபட்டார். பிரிட்டிஷ்காரர்களின் ஆதரவில் பரோடா அரசு இருந்தது. பரோடா அரசவையைச் சேர்ந்த கங்காதர் சாஸ்திரி என்பவர் அரசாங்கச் செயலின் நிமித்தம் பூனாவிற்குச் சென்றிருந்தார். இவர் பந்தர்பூர் என்னும் இடத்தில் தங்கியிருந்தபோது 1815ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் இருபதாம் நாளன்று கொலை செய்யப்பட்டார். பேஷ்வாவின் தூண்டுதலின்பேரில்தான் இக் கொலை நடந்தது என்று கம்பெனியின் அரசாங்கம் கருதியது. இதனால் அப்பொழுது தலைமை ஆளுநராயிருந்த ஹேஸ்டிங்ஸ் பிரபு (Lord Hastings) பெருஞ்சினம் கொண்டிருந்தார். எரியும் தீயில் எண்ணெயிட்டதுபோல் ஆங்கிலேயரின் சினத்தை அதிகரிக்கும் வகையில் பேஷ்வா வேறு சில அறிவீனமான காரியங்களிலும் ஈடுபட்டார். அவற்றில் முக்கியமானது அவர் பூனாவிலிருந்த பிரிட்டிஷ் ஆளுநர் காப்பரகத்தைத் (Residency) தாக்கியதாகும். இத்தகைய செயல்கள் யாவும் அவருடைய ஆட்சிக்கு முற்றுப்புள்ளியிட்டன. 1818ஆம் ஆண்டு ஜூன் திங்கள் ஆங்கிலேயர் அவரைப் பதவி துறக்குமாறு செய்தனர். மேலும், அவருக்கு 8 இலட்ச ரூபாய்களை உதவித்தொகையாகக் கொடுத்து 1819 முதல் ஆட்சிச் செயல்களினின்று ஒதுங்கியிருக்குமாறு செய்தனர். இவர் அதற்குப்பின் ஆங்கிலேயருக்கு எதிரான எச் செயலையும் மேற்கொள்ள முடியாமல் தமது எழுபத்தாறும் வயதில், 1851ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இருபத்தெட்டாம் நாளன்று இறந்தார். இதற்கிடையில் பேஷ்வாவின் மதிப்பைச் சரியச் செய்து மராத்தியப் பேரரசைச் சின்னபின்னம் அடையும்படியாக மௌண்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் (Mount Stuart

Elphinston) என்பவர் முனைப்பான செயல்கள் பலவற்றை மேற்கொண்டார். பூனாவில் ஆங்கிலக் காப்பரசாட்சியாளராக இருந்த எல்பின்ஸ்டன் பேஷ்வாவின் பதவி பிரிட்டிஷ் அரசிற்கு என்றும் பேராபத்தைக் கொடுப்பதாகும் என்று கூறி, அப் பதவியை அழித்து விடுவதற்குப் பரிந்துரைத்து ஆதரித்தார். இதனை ஆங்கில அதிகாரிகள் செயல்படுத்தியும் காட்டினர். ஆனால், அதே நேரத்தில் மராத்தியர்கள் பெற்றிருந்த நாட்டுப்பற்று உணர்ச்சியையும், தேசீய உணர்ச்சியையும் அவர்கள் குறைவாக எடை போட்டுவிடவில்லை. எனவே, உணர்ச்சிக்கு மதிப்பளிக்கும் வகையில் பூனாவையும் பேஷ்வா பதவியையும் இருக்குமிடம் தெரியாமல் உருக்கிவிட்டிருந்த போதிலும், சிவாஜியின் வழித்தோன்றல்கள் வசித்து வந்த சதாராவிற்குச் சிற்றரசு (principality) அந்தஸ்தைக் கொடுத்தனர். இருப்பினும், மராத்தியர்கள் ஆங்கிலேயரை நேர்மையானவர்கள் என்று கருதத் தயாராக இல்லை. ஆங்கிலேயரும் மராத்தியர்களின் உள்நாட்டுச் செயல்களில் தலையீட்டைச் செய்து, ஆக்கிரமிப்புச் செயல்களை மேற்கொண்டவாறே இருந்தனர்.

பேஷ்வாவின் விதி மேற்சொன்னவாறு அமைந்திருக்க, பரோடாவைச் சேர்ந்த கெயிக்வார்களும், நாக்பூரை ஆண்ட பான்ஸ்லேக்களும்கூட பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிரான ஒரு வலிமை பெற்ற அமைப்பாக இருக்கவில்லை. முன்னரே கூறியது போன்று, பரோடாவின் மராத்திய அரசர் பேஷ்வாவினால் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டிருந்தார். எனவே, அரசியல் குழப்பவாதியாகவும், அறிவுச் சூனியமானவராகவும் பேஷ்வா மாறிவிட்டபோது, இனியும் மராத்தியக் கூட்டிணைவில் அங்கம் வகிப்பது அறிவுடைமையாகாது என்று பரோடா அரசர் கருதித் தம்மை மராத்தியக் கூட்டிணைவினின்றும் விடுவித்துக்கொண்டார். மராத்தியக் கூட்டிணைவினின்றும் விலகிக்கொண்ட பரோடா, ஆங்கிலேயரின்கீழ் ஒதுங்கிச் செயற்பட ஆரம்பித்தது. எனினும், இரகூஜி பான்ஸ்லே ஆங்கிலேயருக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு முறியடிக்கப்பட்டு ஓர் இரண்டாம் தர அரசராக ஆக்கப்பட்டார். இவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த மூதோஜி அப்பா சாகேப் என்பவர் மூர்க்கத் தனமாக ஆங்கிலேயரை எதிர்த்து 1817-ல் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டார். இவருக்குப் பின் நாக்பூரின் அரியணை ஆங்கிலேயரது கைப்பாவைகளையும், அடிவருடிகளையுமே அரசர்களாகப் பெற்றிருக்க வேண்டியிருந்தது. இறுதியாக 1854-ல் டல்ஹௌசி தலைமை ஆளுநராக இருந்த பொழுது எவ்விதமான ஆரவாரமும் இன்றி நாக்பூர் அரசு பிரிட்டிஷ் இந்தியப் பிரதேசத்தில் சேர்க்கப்பட்டது.

1798 முதல் 1805 வரையிலான வெல்லெஸ்லியின் தலைமை ஆளுநர் காலத்திலும், அவரை யடுத்து ஈராண்டுகளுக்குச் சர் ஜார்ஜ் பார்லோ என்பவர் தலைமை ஆளுநராக இருந்த காலத்திலும், அவருக்குப் பின் 1807 முதல் 1813 வரை தலைமை ஆளுநராயிருந்த மின்டோ பிரபு காலத்திலும், அதற்குப் பின்னர் 1813 முதல் 1823 தழுவிய பத்தாண்டுகள் ஹேஸ்டிங்ஸ் பிரபு தலைமை ஆளுநராயிருந்த காலத்திலும், மராத்தியச் சிற்றரசர்கள் ஒன்றுபட்டு அமைத்திருந்த மராட்டியக் கூட்டிணைவு என்றும் தலைதூக்க முடியாத அளவிற்குப் பலவீனப்படுத்தப் பட்டிருந்தது. பூனா, பரோடா, நாக்பூர் ஆகியவற்றைத் தவிர எஞ்சியிருந்த மராத்திய அரசுகளுள் குவாலியர் சிறப்பானதொரு நிலையைப் பெற்றிருந்தது. எவராலும் முறியடிக்கப்பட முடியாத அளவிற்குச் சீரிய முறையில் ஒழுங்குபடுத்தி அமைக்கப் பட்டிருந்த வலிமை மிக்க இராணுவத்தைக் குவாலியர் பெற்றி ருந்தது. ஆரம்ப காலத்தில் குவாலியரில் இராணுவம் மற்றும் ஆட்சிச் செயல்களில் அக்கறையையும் இயக்கத்தையும் செலுத்தி அவைகளைத் தரமும் திறமும் உள்ளவைகளாக மகதாஜி சிந்தியா என்பவர் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். மகதாஜி சிந்தியா ஆரம்பத்தில் அமைத்துக் கொடுத்திருந்த நெறிமுறைகளுக்கு உட் பட்டுக் குவாலியரின் செயல்கள் 1796 வரை டி-பாய்ன் (De Boigne) என்பவரால் திறமையுடன் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவர் 1796-ல் குவாலியரின் பணித்துறையிலிருந்து பதவி ஓய்வு பெற்றபின், தளபதி பெர்ரான் (Perron) என்பவர் குவாலியரின் இராணுவத் தலைமையை மேற்கொண்டார். இவ்வாறு ஆங்கி லேயரை உள்ளிட்ட ஐரோப்பியர்களின் மேற்பார்வையின்கீழ் மராத்தியப் படைகள் செயல்படுமாறு செய்யப்பட்டிருந்த செயல் மராத்தியப் பேரரசிற்குப் பலவீனத்தைத் தேடிக் கொடுப்ப தாகவே அமைந்தது. ஆனால், மகதாஜி சிந்தியா உயிருடன் இருந்த 1794 வரை ஆங்கிலேயர் குவாலியர் அரசியலில் தமது முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்த முடியவில்லை. எனவே, அவர்கள் ஐந்தாம்படை வேலைகளையும், ஏமாற்று மோசடிச் செயல்களையும் மேற்கொண்டனர். இச் செயல்கள் 1796-க்குப் பிறகு ஆங்கிலேயர் விரும்பிய பலனைக் கொடுக்க ஆரம்பித்தன. தளபதி பெர்ரான் குவாலியரில் துணைப்படைத் திட்டத்தின்கீழ், இராணுவப் பொறுப்புகளை வகித்து வந்தார். இவர் குவாலியரின் இராணுவப் படையிலிருந்து ஐரோப்பிய அதிகாரிகளை அரசருக்கு எதிராக நம்பிக்கைத் துரோகம் செய்யும் காரியங்களில் ஈடுபடுமாறு தூண்டியதோடு, கையூட்டுகளையும் கொடுத்தார். இவர் தாறுமாறான வழிகளில் தமது அந்தஸ்தைப்பற்றி, ஒரு சிறிதும் கவலைப்படாமல் சொத்தும் செல்வமும் சேர்ப்பதிலேயே கண்ணும்

கருத்துமாய் இருந்தார். இப்படிப்பட்ட வேளையில்தான் 1803-ல் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் குவாலியரின் மராத்தியப் படைகள் வெல்லெஸ்லியால் முறியடிக்கப்பட்டன. அதே ஆண்டு நவம்பர் மாதம் வெல்லெஸ்லி பான்ஸ்லேயையும் தோற்கடித்தார். எஞ்சியிருந்த மராத்தியர்களுக்கு எதிராக இவை யாவும் ஆங்கிலேயர்களுக்கு உறுதியான அரசியல் மற்றும் இராணுவ அனுகூலத்தைக் கொடுத்தன. வெல்லெஸ்லியினால் ஒடுக்கப்பட்டிருந்த குவாலியரில் ஏற்கெனவே ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த தௌலத்ராவ், கொஞ்சநஞ்சம் எஞ்சியிருந்த தமது சுதந்திரத்தையும் ஆங்கிலேயரிடம் அடகு வைத்தார். எனினும், மகதாஜி சிந்தியாவினால் இவர் உருவாக்கப்பட்டிருந்ததால் ஆங்கிலேயருக்கு எதிரான சுசப்புணர்ச்சியைத் தமது உள்ளத்தில் தேக்கி வைத்திருந்த வண்ணம் இருந்தார். இதனையும் ஆங்கிலேயர் அறியாமலிருக்கவில்லை. எந்த நேரமும் தௌலத்ராவ், ஹோல்காருடன் சேர்ந்துகொண்டு தம்மை எதிர்க்கக் கூடும் என்று அவர்கள் கருதினர். எனவே, ஹேஸ்டிங்ஸ் பிரபு தலைமை ஆளுநராயிருந்த காலத்தில் தௌலத்ராவ், ஹோல்கார் ஆகிய இருவரையும் தமது முழுக்கவனக் கண்காணிப்பின்கீழ் வைத்திருந்தார். வெல்லெஸ்லியினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த 'வென்று நிலம் பிடிக்கும் வேலை'யை ஹேஸ்டிங்ஸ் பிரபு முன்னேக்கிய பல கட்டங்களில் விரிவுபடுத்தி வெற்றி காணும் வெறி ஆர்வத்தைக் கொண்டிருந்தார். எனவே, தமது குறிக்கோள் நிறைவேறுவதற்குத் துணைபுரியும் வாய்ப்புகள் யாவற்றையும் அவர் நன்முறையில் பயன்படுத்திக் கொண்டார்.

தமது ஆளுநர் பதவிக் காலத்தில் பிண்டாரிகள் எனப்பட்டோரால் தொல்லைகள் பல ஏற்பட்டிருந்ததை ஹேஸ்டிங்ஸ் பிரபு உணர்ந்திருந்தார். 'பிண்டாரிகள் எனப்பட்டோர் கொள்ளைக் கூட்டத்தினராவர். ஆங்கிலேயரின் ஆதிக்க ஆட்சியின், துணைப்படைத் திட்டத்தின் காரணமாகத் தம் பதவிகளையும், சொத்து சுகங்களையும் இழந்து நிர்க்கதியான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருந்தவர்களே பிண்டாரிகள் என்றும், அவர்கள் கொள்ளைச் செயல்களில் ஈடுபட்டுத் தமது வாழ்க்கையை நடத்திக்கொள்ள வேண்டிய இழி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்', என்றும் வரலாற்றுச் செய்திகளின்மூலம் அறியப்படுகின்றது. பிண்டாரிகளுடன் இரகசிய உறவைக் கொண்டிருந்ததாகத் தௌலத்ராவ் சிந்தியாவின்மீது குற்றம் சுமத்தி, ஹேஸ்டிங்ஸ் பிரபு 1817ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் அவரைத் தம்முடன் ஓர் உடன்படிக்கைக்குக் கட்டுப்படுமாறு செய்தார். இந் நிர்ப்பந்த உடன்படிக்கையின்மூலம் கொஞ்சநஞ்சம் எஞ்சி

யிருந்த தமது அதிகாரத்தைக் குவாலியர் அரசும் முற்றிலும் இழந்துவிட்ட நிலை ஏற்பட்டது.

குவாலியரின் வீழ்ச்சிக்குப் பின் ஆங்கிலேயர் ஹோல்காரின் தலைமையில் இயங்கிவந்த இந்தூரின்மீது கவனத்தைச் செலுத்தினர். இந்தூரை ஆண்ட யஸ்வந்த்ராவ் ஹோல்கார், பேஷ்வா மற்றும் பான்ஸ்லேக்களுக்கு வேண்டாதவராகவும் இருந்தார். வீரமும் நாட்டுப்பற்றும் கொண்ட மதிப்புலம் மிக்க ஓர் அரசியல் வாதியாகவும் இவர் இருந்தார். எனினும், இவர் ஆட்சி ஒரு கொடுங்கோலாட்சியாகவே விளங்கியது. ஆங்கிலேயரையும், பிற மராத்தியத் தலைவர்களையும் வென்றடக்கி நாடு முழுவதையும் தமது ஆட்சியின்கீழ்க் கொண்டு வரவேண்டும் என்ற பேரார்வத்தையும் ஹோல்கார் கொண்டிருந்தார். இவர் வெல்லெஸ்லியைப் பலமுறை எச்சரித்ததும் உண்டு. தமது எல்லைக்குள் ஆங்கிலேயர் தலையிட்டால் அவர்களுடைய படைகள் நசுக்கப்படும் என்று அறிவித்திருந்தார். இவரது வலிமையைக் கண்டு இவருடன் மோதுவதற்கு ஆங்கிலத் தளபதிகள் உண்மையிலேயே அஞ்சினர். ஏனெனில், மான்ஸன் என்ற ஆங்கிலத் தளபதியின்கீழ்ச் செயல் பட்ட ஆங்கிலப் படையை ஹோல்கார் புறமுதுகிட்டு ஓடும்படி செய்தார். பரத்பூரில் நடந்த போரில் ஆங்கிலப் படையை இவர் தோற்கடித்த செயலானது இவரது செல்வாக்கை உயர்த்தியிருந்தது. இதனால் ஆங்கிலேயருக்கும் மராத்தியருக்கும் இடையே நடந்த போர்கள் ஆரவாரம் மிக்கவையாய் இருந்தன. மேலும், பேராசிரியர் எட்வர்ட் தாம்ஸன் (Edward Thompson) கூறுவது போல், 'சீக்கியர்கள், ரோகில்லாக்கள், முஸ்லிம் தலைவர்கள், மற்றும் டில்லியின் சிற்றரசர்கள் போன்ற பல தலைவர்கள் இந்தூரை ஆண்ட ஹோல்காருக்கு மன ஆதரவைக் காட்டினர். மேலும், இவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து பிரிட்டிஷ்காரர்களை நாட்டைவிட்டுத் துரத்துவதற்கு முயற்சி எடுக்கும்படியாக ஒருமித்த ஒரு திட்டத்தைத் தயாரித்தவண்ணம் இருந்தனர்.'[1] ஆனால், இவை யாவும் கதிரவனைக் கண்ட பனித்துளிபோல், வெகு விரைவில் மறைந்துவிட்டன. ஹோல்காரின் வீழ்ச்சிக்காலம் வெகுவிரைவில் நெருங்கிக் கொண்டிருந்தது.

தமது செல்வாக்கும் வலிமையும் குன்றிவிட்ட நிலையில், பிரிட்டிஷ்காரர்களை எத் தனியொரு சக்தியும் எதிர்த்துப் போராட முடியாது என்று ஹோல்கார் காலம் கடந்த நிலையில் உணர்ந்தார். எனினும், இவர் ஆங்கிலேயரை எதிர்க்கக்கூடிய

[1] Edward Thompson, 'The making of Indian Princes' p. 105.

பணியைக் கைவிடவில்லை. 1804ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் ஏனைய மராத்தியத் தலைவர்கள் ஆங்கிலேயர்களால் ஒடுக்கப் பட்டிருந்த நிலையில், அவரது உதவியையும் பெறமுடியாத நிலையில் யஸ்வந்த்ராவ் ஹோல்கார் காலச் சூழல்களின் கட்டாயத்தினால் தள்ளப்பட்டு ஆங்கிலேயருடன் மோதித் தோல்வி கண்டார். இத் தோல்விக்குப் பின் தமது உயிரைக் காத்துக்கொள்ளும் வகையில் பஞ்சாபிற்குப் பாதுகாவலைத் தேடி ஓடினார்; பின்னர், ஓராண்டு கழித்து ஆங்கிலேயருடன் இராஜ்காட் உடன்படிக்கை யில் கையெழுத்திட்டார். இவ் வுடன்படிக்கை ஹோல்காரைப் பிரிட்டிஷ்காரர்களின் அதிகாரத்திற்கு உட்பட்ட ஒரு பண்ணை யாளரின் நிலைக்குத் (Feudatory) தள்ளியது. இவரது இறப்பிற்குப் பிறகு இந்தூர் அரசு பட்டாணியர்கள், மராத்தியர்கள் என்ற இரு கட்சிகளைக் கொண்டிருந்தது. பதினேரு வயதே நிரம்பி யிருந்த ஒருவர் ஹோல்காரின் அரசராய் அரியணை ஏறினார். பட்டாணியர்களின் தலைவராக அமீர்கான் என்பவர் இருந்தார். பட்டாணியர் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து மால்ஹாராவ் ஹோல்காரை ஆங்கிலேயருடன் போரிடும்படியான கட்டா யத்தைத் தோற்றுவித்தனர். இதற்கிடையில் பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் ஆங்கிலேயருடன் பொருது தோல்வியைக் கண்டிருந்தார். நாக்பூரின் அப்பா சாகிப் பான்ஸ்லே, ஹோல்கா ருக்குத் துணையாக நின்று ஆங்கிலேயருக்கு எதிரான போரைத் துவக்கினார். இப்படி பான்ஸ்லேயும் ஹோல்காரும் சேர்ந்து ஆங்கிலேயருடன் மேற்கொண்ட போரே மூன்றும் ஆங்கிலேய மராத்தியப் போராகும். இப் போரில் மராத்திய அரசர்கள் யாவரும் தோற்கடிக்கப்பட்டனர். மராத்தியக் கூட்டிணைவும் முற்றிலும் முறியடிக்கப்பட்டு ஒழிக்கப்பட்டது. இதற்குப் பின் மராத்தியர்கள் ஆங்கிலேயரின் ஆளுநர் காப்பரசின்கீழே குறுநில அரசர்களாகவும் சிற்றரசர்களாவும்தான் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. மூன்றும் மராத்தியப் போர் முடிந்தவுடன் 1818ஆம் ஆண்டு சனவரித் திங்கள் ஆறும் நாளன்று மாண்டஸோர் நேச உடன்படிக்கையில் ஹோல்காரைக் கையொப்பமிட வைத்து அவரைத் துணைப்படைத் திட்டத்தின்கீழ் ஆங்கிலேயர் கொண்டு வந்தனர். ஆனல், தமது ஆட்சிப் பகுதியிலிருந்த பல பிரதேசங் களை ஆங்கிலேயருக்கு ஹோல்கார் பிரித்துக்கொடுக்க வேண்டியும் இருந்தது. இவ்வாறு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் மராத்திய உலகில் அரசியல் ஈடுபாடுகளை மேற்கொண்டு இந் நாட்டில் பெரும்பகுதியைத் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தனர்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகள்மூலம் பிரிட்டிஷ்காரர்கள் 19ஆம் நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகளைத் தழுவிய காலத்தில் மராத்தியர்களை நெருங்க அஞ்சி, பின்னர்க் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு, தங்கள் ஆட்சிக்குப் பேரெதிர்ப்பைக் காட்டிவந்த மராத்தியப் பேரரசை நிலைகுலையச் செய்தனர் என்பது பெறப்படுகின்றது. மெட்காஃப் (Metcalfe) என்னும் ஆங்கிலப் பெருமகன் கூறுவதுபோன்று, 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்கள் என்றும், மராத்தியர்கள் என்றும் இருபெரும் சக்திகளே இருந்தன. இயற்கை ஆற்றலும், வலிவும், பலமும், மக்கள் ஆதரவும் பெற்றிருந்த மராத்தியர்கள் அரசியல் அதிகாரத் தலைமையின் உச்சிக்குச் செல்வதற்குப் பதிலாக, அடிமட்டக் குழியில் அமிழ்ந்துவிட்டனர். இந் நாட்டை ஆளும் தகுதியை அவர்கள் பெற்றிருக்க வேண்டும். ஆனால், அவ் வாய்ப்பு அந்நியரான ஆங்கிலேயருக்குக் கிடைத்துவிட்டது. ஏன்? அதற்குப் பல காரணங்கள் இருந்தன. பேஷ்வாவின் தலைமையில் இயங்கிவந்த மராத்தியக் கூட்டிணைவு பல சிறப்பான அம்சங்களுடன், அரசாங்கம் மற்றும் ஆட்சிமுறைகளைக் கொண்டிருந்தது என்பதில் ஐயமில்லை. எனினும், அரசியல் மற்றும் ஆட்சி ரீதியான பல காரணங்கள் மராத்தியர்களின் வீழ்ச்சிக்குத் துணை புரிந்தன.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு' என்று விடுதலைக் கவிஞர் பாரதியார் பாடினார். ஆனால், தம்முள் ஒற்றுமை இல்லாத காரணத்தால் மராத்தியர்கள் வீழ்ந்தனர். உறுதியாக, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் ஒருவரையொருவர் அனுசரித்து, ஒரு தலைமையின்கீழ் மராத்தியர்கள் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் செயல்படத் தவறி விட்டனர். இதனால் நான்கு மாடுகள் ஒரு சேர நின்று தாக்கியதால் ஒன்றும் செய்ய முடியாது ஓடிவிட்ட சிங்கத்தின் நிலைமாறி, ஒற்றுமையாயிருந்த மாடுகள், ஒற்றுமையற்றுத் தனித்திருந்த நிலையில் அவற்றை ஒவ்வொன்றாகச் சிங்கம் அடித்துப் புசித்ததைப் போல் மராத்தியர்கள் மற்றும் ஆங்கிலேயரின் நிலை இருந்தது. எனவே, தம்முள் பகைமையைப் பாராட்டி ஒற்றுமையை ஒழித்து, ஆங்கிலேயரைப் பொதுவான எதிரி என்று கருதாது குறுமதியுடன் செயல்பட ஆரம்பித்ததால், மராத்தியர்கள் ஆங்கிலேயரின் ஆதிக்கம் தம்மை அரவணைப்பதைத் தடுக்க முடியவில்லை.

மாவீரர் சிவாஜியின் தலைமையின்கீழ் மராத்தியர்கள் பின்பற்றிய ஒழுக்க நியதிகள் யாவும் பிற்கால மராத்திய அரசர்களால்

புறக்கணிக்கப்பட்டன. சிவாஜியின்கீழ் அமைந்திருந்த அரசியல் மற்றும் ஆட்சிமுறை, போர்ச் செயல்களிலும் தர்ம நியாய நியதிகளையும் விதி முறைகளையும் அடித்தளங்களாய்க் கொண் டிருந்தன. ஆனால், இவ் வரசியல் நெறிமுறைகள் பிற்கால மராத்தியர்களால் பேணப்படவில்லை. வாய்மை யகற்றிப் பொய்ம் மைச் செயல்களையும் மராத்திய அரசர்கள் மிதமிஞ்சி மேற்கொண் டனர். வங்கத்திலும் வேறு பல இடங்களிலும் மராத்தியப் படைகள் செய்த அட்டூழியம், பல தளபதிகளைக் கெடுத்துக் கொலை செய்தது, மகாராட்டிரத்தில் யாத்திரைத் தலங்களை ஹோல்காரின் படைகள் சூறையாடியது போன்ற செயல்கள் மராத்திய அரசியல் முறை எவ்வாறு தரமிழந்ததாக மாறிவிட்டிருந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றன. தரமிழந்த அரசியலை நடத்தும் தலைவர்கள் தரை மட்டமாகிவிடுவர் என்பதைத் தற்கால அனுபவம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இதைப் போலவே அன்றும் மராத்தியர்கள் வரலாற்றுச் சிறப்பும், பாரம்பரியமும் கொண்டிருந்த தர்ம நியாய அரசியலை விட்டு ஒதுங்கித் தரம் இழந்தபோது, தமது தலை தெரியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். எனவே, ஆங்கி லேயர் போர், போட்டிப் பூசல்களை மேற்கொண்டும் சதி, சூழ்ச்சிகள் ஆகியவற்றில் ஈடுபட்டும் மராத்தியர்களின் பலவீனத் தைப் பயன்படுத்திக்கொண்டும் தமது ஆதிக்கத்தை விரிவு படுத்தினர்.

18ஆம் நூற்றாண்டின் முடிவில் தாம் பெற்றிருந்த அரசியல் வலிவையும், ஆதிக்கப் பொலிவையும் 19ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில் மராத்தியர்கள் இழந்து, பரிதாபத்திற்குரிய நிலைக்கு தள்ளப்பட்டதற்கான காரணத்தைப்பற்றிக் கூறும்பொழுது, J. N. சர்க்கார் என்னும் அறிஞர் கீழ்க்காணும் செய்திகளை நமது கவனத்திற்குக் கொடுத்துள்ளார். 'மராத்திய சமுதாயத்தில் காணப்பட்ட அடிப்படையான குறை மராத்தியர்களால் பேணப் பட்ட சாதி முறையாகும். பிற்கால மராத்தியர் காலத்தில் இந்து சமுதாயம் சாதிமுறை மற்றும் இந்து மரபுக் கோட்பாட்டின் தீமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்ததால் தமக்குள் சாதிப் பொறாமைகளையும், பூசல்களையும் மராத்திய அரசர்கள் பெற்றிருந்தனர். இவர்களுக்கு இடையே நிலவிய சாதிப் பொறாமைகள் மராத்தியப் பேரரசுக்குச் சாவு மணி அடித்தது.' 18ஆம் நூற்றாண்டில் மராத்தியர்களின் தேசியப் புகழும், அதிகாரமும், செல்வாக்கும் பெருவளர்ச்சியைப் பெற்றன. இதனால், இந்து சமுதாயத்தில் பார்ப்பனர்களின் செல்வாக்கும் ஆதிக்கமும் வளர்ந்தன. பேஷ்வாக்கள் பார்ப்பன மராத்தியர்கள் என்பதை நாம் இங்குக் கவனத்தில் கொள்ளவேண்டும். பார்ப்பன

மராத்திய அரசர்கள் இந்து சமுதாயத்தில் மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கத் தக்க வலிமையான சீர்திருத்தங்களை ஆதரித்துப் புகுத்துவதற்கு பதிலாகப் பிற்போக்கான, மிகவும் பழமை வாய்ந்த அரசியல் நிலைகளையும் சம்பிரதாயங்களையும் வழக்காறு மற்றும் மரபுகளையும் மீண்டும் உயிர்ப்பித்தனர். இவர்கள் அரசியலில் பிற்போக்குச் சக்திகளை (reactionary forces) முனைப்புடன் செயல் படும்படி அமைத்தனர். இரண்டாம் பாஜிராவைப் போன்ற பல மராத்திய அரசர்கள் தமது அரசின் பாதுகாப்பைக்கூடப் பொருட் படுத்தாமல் பார்ப்பனர்களுக்கு அரசின் அலுவல்கள் மற்றும் பதவிகள் பலவற்றை அள்ளி அள்ளிக் கொடுத்தனர். இதன் மூலம், அவர்கள் மதச்சிறப்பையும் புகழையும் பெறுவதில் அக்கறை கொண்டவர்களாய் இருந்தனர். பேராசிரியர் சர்க்காரின் கருத் தோடு இணைந்த வகையில் ராஜ்வதே (Rajwade) என்னும் ஆசிரி யரும் பின்வருமாறு சில செய்திகளை எடுத்துக் காட்டுகிறார். 'சாதி மதம் ஆகியவற்றில் மதிமயக்கத்தைக் கொண்டிருந்த மராத் தியர்களால் அவர்களது சமுதாயமே போட்டி பொறாமைகளுக்கு இலக்காகி ஆதிக்க நலிவைப் பேஷ்வாக்களின் காலத்தில் அடைந்தது. இதனால் அரசியலில் அனுபவத்தையும் தெளிவையும் பிறவியிலேயே பெற்றிருந்த ஆங்கிலேயர் வெளிப் பார்வை யில் பெருமக்களாகவும் கனவான்களாகவும் காட்சியளித்துக் கொண்டு, தமது உள்ளத்தில் பேய்த்தனமான கொடியவர்களாக இருந்தனர். இத்தகைய ஆங்கிலேயர், அரசியல் மற்றும் ஆதிக்க ஈடுபாடுகளென்றால் தமது உற்றார் உறவினரையே உதாசீனம் செய்து, அவர்களது பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு உச்ச நிலையைப் பெறுவதில் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்வர். எனவே, பசுத்தோல் போர்த்திய புலிகளாய் உலவிய ஆங்கிலேயர் சாதிமத நோக்கு போக்குகளின் காரணமாக மராத்தியர்கள் கொண்டிருந்த பொறாமைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டு அரசியல் ஆதிக்கத்தை இங்குப் பெற்றனர். மராத்தியர்கள் குறுகிய நோக்குடைய பழமைவாதத்தின் பற்றாளர் களாய் இருந்தனர். இவர்கள் பரம்பரையான சாதிமுறையைப் பின்பற்றிய செயல் அவர்களிடையே இனத் திமிரையும் தோற்று வித்தது. இவை யாவும் புகழைப் பெற்றிருந்த மராத்தியச் சமுதாயம் என்னும் பேருடலில் புரையோடும்படி செய்து, மராத் தியப் பேரரசு இறுதியாக வீழ்ச்சியுறுவதற்குத் துணைபுரிந்தன.' எனினும், பேராசிரியர்கள் S. R. சர்மா, சர்தேசாய் போன்றோர் கூறுவதுபோன்று மராத்தியர்கள் பரம்பரைச் சாதிமுறையைக் குறுகிய நோக்கமுடன் கண்மூடித்தனமாகப் பின்பற்றிய பொழுதி லும், அச் செயலொன்றே அவர்களின் அழிவிற்குக் காரணமாய் அமைந்துவிடவில்லை.

'மராத்தியர்கள், மொழி மற்றும் மதத்தின் காரணமாகப் பெற்றிருந்த உறவானது, அவர்களது போர்ப் படைகளை அதிகாரம் மிக்க ஒரு தேசீய இராணுவமாக மாற்றியமைத்திருந்தது. ஆனால், சத்திரபதி சிவாஜியினால் வகுத்துக் கொடுக்கப்பட்டிருந்த போர்முறை உத்திகளைப் பிற்கால மராத்தியர்கள் போற்றவில்லை. அவர்கள் இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பதில் மொழி மற்றும் மதத்தைத் தழுவி அமைந்திருந்த தமது அதிகாரத்தைப் பேரளவில் பயன்படுத்தினர். இதனால், பல்லாயிரக்கணக்கானவரை எதிர்த்துச் சமாளிக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றிருந்த மராத்தியர்களின் தேசீய இராணுவமானது பலவீனத்தை அடைந்தது. கூலிப் பட்டாளங்களைத் தமது இராணுவ அமைப்பில் அமைத்துக்கொண்டதால் வேலியே பயிரை மேயும் நிலை மராத்தியப் பேரரசிற்கு ஏற்பட்டது. இதற்கு எடுத்துக்காட்டாகப் பெர்ரான் மற்றும் அவரது ஆட்கள் குவாலியரின் சிந்தியாவுக்கு எதிராகச் செய்த நம்பிக்கைத் துரோகத்தைக் கூறலாம். மராத்தியர்கள் அந்நியர்களல்லர்; இந் நாட்டவர்களே. ஆனால், ஆங்கிலேயரோ அந்நியர்கள். இந் நாட்டவர்களாய் இருந்தும் மராத்தியர்கள் இந்தியப் புவியியலைப் பற்றிய தேர்ச்சியான அறிவைப் பெற்றிருக்கவில்லை. நானு பட்னிஸ் போன்ற ஒரு சிலர் இந்தியப் புவியியலைப் பற்றிப் பெற்றிருந்த அறிவும் குறைவாகவும் தவறானதாகவும் இருந்தது. இதற்கு நேர்மாறாக ஆங்கிலேயர் அவர்களுடைய தேசீய வாழ்க்கையைப் பற்றிய அம்சங்களை நன்றாக அறிந்ததோடு, இந்தியப் புவியியலின் கூறுகள் மற்றும் அவைகளைப் பற்றிய செய்திகளைத் தேர்ச்சியாக அறிந்து வைத்திருந்தனர். எடுத்துக்காட்டாக, நிஜாமின் அவைக்களத்தில் இருந்த மேஜர்கிர்க் பாட்ரிக் (Major Kirk Patrick), பூனாவின் அரசவையிலிருந்த வில்லியம் பாமெர் போன்றோர் தமது பழக்கவழக்கங்களை இந்தியப் பாரம்பரியங்களுக்கு உட்பட்டதாய் அமைத்துக் கொண்டிருந்தனர். இதனால் இந் நாட்டில் அவர்கள் ஆட்சி புரிந்தபொழுது எல்லாச் செய்திகளையும் நன்றாகப் புரிந்து கொண்டு உள்ளாற்றல்களுடன் செயல்களை மேற்கொண்டனர். இதனால் தம் நாட்டைப் பற்றிக் குறையறிவைப் பெற்றிருந்த நிஜாம் மற்றும் மராத்திய அரசர்கள் ஆகிய யாவரின் செயல்களையும் உன்னிப்பாக ஆங்கிலேயர் கவனித்து வந்தனர். இதனால் மால்கம், மன்றோ, மெட்காஃப், மௌன்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் போன்ற ஆங்கிலேய அதிகாரிகள் தமது தாய்நாட்டின் பெரும்புகழை இங்கு நிறுத்திப் பரப்பும் வகையில் அரசியல் மற்றும் ஆட்சி ஈடுபாடுகளையும் கொண்டிருந்தனர். ஆனால், இந்தியச் சுதேசி அரசர்களும் அவர்களுடைய அதிகாரிகளும் தமது தாய்நாடு வீழ்ச்சியுறுவதற்கான செயல்களை மேற்கொண்டனர். படைமானிய முறை, குறுமதி

நோக்கு, நாட்டில் பெருவளர்ச்சித் தேக்கம் ஆகியவற்றுல் நலிவுற்றும் இருந்தனர். ஆனுல், ஆங்கிலேயரோ பெருமதி நோக்கையும், விசாலமான அனுபவத்தையும் ஆற்றலையும் பெற்றிருந்தனர். எனவே, அவர்கள் மராத்தியப் பேரரசின் ஆதிக்கத்தை மங்கிப் போகுமாறு செய்தனர்.

'பணமிருந்தால் பத்தும் சாதிக்கலாம்' என்பது அனுபவத்தால் பெறப்பட்டுள்ள பழமொழியாகும். ஆனுல், மராத்தியர்களின் அரசாங்கமோ குறிப்பாக 19-ஆம் நூற்ருண்டின் ஆரம்ப காலத்தில் வறுமையின் உறைவிடமாய் இருந்தது. பேஷ்வாக்கள் தம் வள ஆதாரங்களை இழந்து திவாலாகிவிட்ட நிலைக்குத் தள்ளப் பட்டிருந்தனர். இதனுல், நாட்டிற்கும் மக்களுக்கும் தேவையான நல்வாழ்வுப் பணிகளையும், மேம்பாட்டுச் செயல்களையும் மராத்தியர்கள் மேற்கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் அவர்கள் பெருஞ்செலவினக் காரியங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதனுல், மக்களின் மனத்திலும் அதிருப்தியே குடி கொண்டிருந்தது. இதனுல், மக்களிடையே தமது செல்வாக்கையும் மராத்தியர்கள் இழக்க வேண்டியிருந்தது. அதே நேரத்தில் ஆங்கிலேயர் இங்குச் செல்வக்கொழிப்பில் மிதந்தனர். பணத்தைக் காட்டிச் சுதேசி மன்னர்களின் மனத்தை மாற்றிவிடக்கூடிய மதிக்கூர்மையையும் அவர்கள் பெற்றிருந்தனர். இப்படிப் பல காரணங்களோடு, மராத்தியப் பேரரசில் நிலவிய ஒற்றுமையற்ற போக்கையும் பயன் படுத்திக்கொண்டு அந்நியர்களான ஆங்கிலேயர் தமது நாட்டு விரிவாக்கக் கொள்கையை வெல்லெஸ்லி மற்றும் ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் காலங்களில் செயல்படுத்தித் தமது ஆதிக்க விரிவாக்கத்தை மேற்கொண்டனர். வரலாற்றுச் செய்திகளின் துணை கொண்டு மராத்தியப் பேரரசின் வீழ்ச்சிக்கும், ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்க விரிவாக்கத்திற்கும் காரணமாகக் கீழ்க்காணும் சிலவற்றையும் கூறலாம்.

ஆங்கிலேயர் தமது அரசியல் ஆதிக்கத்தை இங்கு விரிவு படுத்தும் வகையில் மாவீரர் சிவாஜியினுல் தேசீய அரசாக உருவாக்கப்பட்டிருந்த மராத்திய நாடு பேஷ்வாக்கள் மற்றும் வேறு சில தலைவர்களின் காலத்தில் தனது தேசீயத் தன்மையை இழந்தது. மராத்திய தேசீய அரசை வல்லுள்ளதாக்கித் திரட்டிப் பாதுகாக்கும் வகையில் மாவீரர் சிவாஜி தமது மக்களின் மனத்தில் தேசீய உணர்ச்சியை எழுப்பியிருந்தார். இதன் விளைவாக நாட்டுமக்களும் தமது நாட்டையும், தேசீய அரசையும் காக்கும் பொருட்டு உடல், பொருள், ஆவி ஆகிய யாவற்றையும் துறக்க முன்வந்தனர். மேலும் அவர் மக்களது தேசீய சுதந்திரத்தைப்

பேணிக் காக்கவும் இந்து மதத்தை வீடு பேறுற்ற நிலையைப் பெறும்படி செய்யவும் மத உணர்ச்சிகளைத் தமது மக்களிடையே அடிக்கடி தூண்டி, அவர்களை ஒரு வலுவுள்ள சக்தியாக மாற்றி யமைத்திருந்தார். தேசீய உணர்ச்சிகளைச் செலுத்தியதன்மூலம் ஒற்றுமை ஒழுங்கையும் கூட்டுப் பொறுப்புணர்வையும் தமது மக்களிடையே தோற்றுவித்ததில் மாவீரர் சிவாஜி பெருவெற்றி கண்டிருந்தார். மதத்தைப் பொறுத்தவரை பெருமதிச் சமரசப் போக்கையும் சகிப்புத் தன்மையையும் சிவாஜியின் காலத்தில் பெற்றிருந்த மராத்திய அரசியல் பேஷ்வாக்களின் காலத்தில் தடம் புரண்டது. பேஷ்வாக்களின்கீழ் மராத்தியர்கள் அந்நியர்களான பட்டாணியர், ஐரோப்பியர் ஆகியவர்களின் உதவியையே தேவையான சமயங்களிலெல்லாம் அதிகமாக நாடினர். தம் சக மதவாதிகளான இராசபுத்திரர்கள், ஜாத்துகள் ஆகியோரை வெறுத்து நசுக்கி, அதன்மூலம் தமது அரசியல் ஏகாதிபத்தியத்தை நிறுவ முனைந்தனர். பொதுவானதோர் இந்து சாம்ராச்சிய அரசியல் மண்டலத்தைப் பிற இந்து மதத்தவர்களை அரவணைத்து அமைக்க மராத்தியர்கள் தவறிவிட்டனர். இதனால், எவ் வுதவியையும் ஒத்துழைப்பையும் இந்து மதத்தைச் சார்ந்த பிற சக்திகளிடமிருந்து பேஷ்வாக்களின் கீழிருந்த மராத்தியர்கள் பெறமுடியாமல் போயினர். எனவே, மதத்தின் காரணமாகவும் குறுகிய சகிப்புத் தன்மையற்ற கருத்துகளாலும் மராத்திய அரசியல் நலிந்து ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்தது.

18ஆம் நூற்றாண்டில் மராத்தியப் பேரரசு பலவீனமடைந்ததற்கு மற்றொரு காரணம் அக் கால மராத்திய அரசர்கள் ஜாகிர்தாரி முறையை மீண்டும் புகுத்தியதாகும். ஜாகிர்தாரி முறையைச் சிவாஜி ஒழித்திருந்தார். ஆனால், பேஷ்வாக்களின் காலத்தில் அது மீண்டும் புகுத்தப்பட்டது. இதனால், நாட்டில் பிளவுபடுத்தும் சக்திகளும், தனிப்பட்ட படைவீரர்களும் பெரிய பெரிய நிலச்சுவான்தார்களும் தோன்றித் தத்தம் சிற்றரசுகளைத் தோற்றுவித்தனர். ஜாகிர்தாரி முறையின் பயனாகவே ஹோல்கார், கெயிக்வார், சிந்தியா, பான்ஸ்லே ஆகியோர் தோன்றினர். இவர்களது ஆட்சியின்கீழ் ஜாகிர்தாரிமுறை பெருவாரியாகப் பின்பற்றப்பட்டதால் மாவீரர் சிவாஜியினால் திரட்டப்பட்டுக் காக்கப்பட்டிருந்த பேரரசு பல கூறுகளாகப் பிளவுண்டு, தனது கால்களையூன்றித் தானே நிற்கமுடியாத தரமிழந்த நிலையைப் பெற்று, ஆங்கிலேய ஆதிக்கத்திடம் தஞ்சம் புகுந்தது. அதற்கான சூழ்நிலைகளைப் போர், சூழ்ச்சி போன்றவற்றின்மூலம் பெற்றுப் பல உத்திகளையும் கையாண்டு ஆங்கிலேயர் வெற்றி கண்டனர். இப்படி மராத்தியப் பேரரசு நலிவுற்று வீழ்ச்சியடைந்ததற்கான

காரணங்களை V. V. ஜோஷி என்னும் பேராசிரியர் கூறியுள்ள செய்திகளின்மூலம், 'தேவையற்ற நிலையில் சாதி, மதச் செயல்கள் அரவணைக்கப்படுவதும், மக்களின் பொருளாதாரத் தேவைகளைப் புறக்கணித்துச் செல்வாக்கான ஒரு சிலர் மட்டும் செல்வம் மற்றும் ஆட்சி அதிகாரப் பயனை அனுபவிக்க அனுமதிக்கப் படுவதும் ஒரு நாட்டின் அரசியலில் கலக்கப்படுமானால் அவ் வரசியலும், அவ் வரசியலைச் சார்ந்து அமையும் அரசும் அதன் வழி பெறப்படும் அரசாங்கமும் நிர்வாகமும் நிலைகுலைந்து நாச மடையும் என்பதற்கு மராத்திய பேஷ்வாக்களின் கீழ் அமைந்த பேரரசின் அரசியலே உதாரணமாகும்' என்பது நன்கு வெளிப் படுகின்றது.

பேராசிரியர் எட்வர்ட்ஸ் என்பார் குறிப்பிடுவதுபோல் பிற்கால மராத்தியர்களின்கீழ் அமைக்கப்பட்டிருந்த அரசாங்கம் மற்றும் ஆட்சி முறையானது ஆக்கப்பாதையில் தமது பேரரசை அழைத்துச் செல்லாமல், அழிவுப் பாதையை நோக்கியே இழுத்துச் சென்றது. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் மராத்தியர்களால் அமைக்கப்பட்டிருந்த அரசாங்கம் மற்றும் ஆட்சிமுறை சீரிய அம்சங்கள் பலவற்றைப் பெற்றிருந்தபோதிலும் அவை மராத்திய இனத்தவரின் பொது நலனைப் புறக்கணித்துச் செல்வாக்குப் பெற் றிருந்த சிறுபான்மையோரின் சுயநலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவே அமைந்திருந்தன என்றும், சிவாஜியினால் உருவாக் கப்பட்டிருந்த தேசீய உணர்ச்சி பேணிக் காக்கப்படாத குறை யினைப் பெற்றிருந்தன என்றும், மக்களிடையே கல்வித் தரத்தை உயர்த்தாமல் தன்னாட்சிப் புரியக்கூடிய தகுதியை வளர்க்காமல் திறமை, நேர்மை ஆகியவை யற்ற அதிகாரிகளுடன் கூடிய அரசாங் கத்தை நடத்தித் தமது பேரரசும் அரசியலும் நலிந்து வீழ்ச்சியுறு வதற்குக் காரணமாக மராத்திய அரசர்களும் தலைவர்களும் இருந் தனர் என்றும், 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்னும் கருத்தை மதியாது 'இது நமது அரசு' என்ற உணர்ச்சியை மக்கள் பெற முடியாதபடி பேரரசின் ஸ்திரத் தன்மையிலும், பலத்திலும் கவனத்தைச் செலுத்த முடியாத குறைகளை மராத்தியத் தலைவர்கள் பெற்றிருந்தனர் என்றும் எட்வர்ட்ஸ் பல காரணங் களைக் கூறுகின்றார். நொடிப்பொழுதில் சரிந்துவிடும் மணல் வீட்டைப்போல் அல்லது காகிதக் கட்டடத்தைப்போல் மராத்தியப் பேரரசும், அதில் நிலவிய அரசியலும் அழிவுச் சக்திகளை அரவணைத்திருந்தன என்றும் அவர் கூறுகின்றார். இக் கருத்துகள் யாவற்றையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சர் தேசாய் என்னும் பேராசிரியரும் வேறு சில செய்திகளைக் கூறுகிறார். அவையாவன:

பேஷ்வா இரண்டாம் பாஜிராவ், தௌலத் ராவ் சிந்தியா ஆகிய இருவரின் திறமையற்ற கையாலாகாத அரசியல் மற்றும் ஆட்சியின் காரணமாக மராத்திய வீழ்ச்சி ஏற்பட்டது என்று எத் தயக்கமுமின்றிக் கூறலாம். பேஷ்வாக்களின் தகாத காரியங் களால் மக்களின் வாழ்க்கை, சொத்து, மதிப்பு ஆகியவைகளுக்கு அபாயம் ஏற்பட்டு ஒழுக்கச் சீரழிவை அரவணைத்திருக்கும்படியாக பூனாவில் மராத்திய அவைக்களமும், சமுதாயமும் தள்ளப்பட் டிருந்தன. சர்தார்கள், ஜாகிர்தார்கள் போன்ற பெரு நிலச் சுவான்தார்களும், பண்ட மானியக்காரர்களும் ஆங்கிலேயரின் துணையை நாடித் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ளவும், சுதந்திர ஆட்சி அமைப்புகளை, ஏற்படுத்திக்கொள்ளவும் கூடிய தீய ஆட்சியை இரண்டாம் பாஜிராவும், தௌலத்ராவ் சிந்தியாவும் மேற்கொண்டிருந்தனர். இவ்விருவரது அறிவற்ற செயல்களின் காரணமாகவே, பல தலைமுறைகளாகப் பலமிக்க கட்டுமானத்தைப் பெற்றிருந்த மராத்தியப் பேரரசு சரிவுற்று தனக்கென ஏற்புடைய ஓர் அரசியலமைப்பை (constitution) பெற்றிருக்க முடியாத இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இது மறுக்க முடியாத உண்மையாகும். நல்லதோர் அமைப்பு முறைக்கு உட்பட்டிருந்த அரசாங்கத்தை, தேர்ச்சியான அதிகாரி களின்மூலம் அவர்கள் நடத்தியிருப்பார்களேயானால் இந் நிலை ஏற்பட்டிருக்காது. தனிப்பட்ட நபர்கள் வரலாற்றை ஆக்கவும் அழிக்கவும் முடியும். இதற்கொப்ப மராத்திய அரசை, அதன் மாண்புமிகு அரசியலை, அதன் பண்புள்ள அரசாங்கத்தை ஒரு சிவாஜியினால் ஆக்கிக் கொடுக்க முடிந்தது. அவை யாவற்றையும் ஒரே பாஜிராவ் போன்றவரால் அழிக்கவும் முடியும் என்பதை 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த மராத்தியர்களின் அரசியல் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. பேரின்னலைப் பெற்றி ருந்த இக்கட்டான நிலையில் திறமை மிகுந்த அமைப்பாளர் ஒருவரை அரசின் தலைவராக, மராத்தியப் பேரரசு 19ஆம் நூற்றாண்டில் பெற்றிராமல் போனது இந் நாட்டு மக்களின் கெட்ட காலமும், அந்நியர்களான ஆங்கிலேயருக்கு 'இரண்டு ஆடுகள் அடித்துக் கொண்டால் ஓநாய்க்கு இலாபம்' என்பதற் கொப்ப அமைந்த நல்ல காலமும் ஆகும். மராத்தியப் பேரரசில் நிலவிய பலவீனங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அரசியல் மற்றும் போர்ச் சூழ்ச்சிகளை மேற்கொண்டு, உதட்டளவில் உறவை மேற்கொண்டு, சமயம் வந்த பொழுது யாவரையும் உதறித் தள்ளி விட்டனர் ஆங்கிலேயர். இதனைக் காலங் கடந்த நிலையில் இரண்டாம் பாஜிராவும் உணர்ந்தார். அதற்கு எப் பயனும் கிட்டவில்லை.

இப்படி மராத்தியப் பேரரசிற்கு ஏற்பட்ட பேரடியும், சரிவுச் சிதைவும் திடீரென ஏற்பட்டுவிடவில்லை. பேராசிரியர்கள் எல்பின்ஸ்டன், J. N. சர்க்கார் ஆகியோர் கூறுவது போன்று மூன்றும் பானிபட் போரில் மராத்தியர்கள் பெற்றிருந்த தோல்வி அவர்களுடைய அதிகாரத்திற்கு என்றும் தலைதூக்க முடியாத அளவிற்குப் பேரடியைக் கொடுத்தது. எனவே, மராத்தியர்களின் தேசீயப் பெருமைக்கும், புகழுக்கும் சாவுமணி 1761ஆம் ஆண்டிலேயே பானிபட் போர்க்களத்தில் அடிக்கப்பட்டுவிட்டது எனலாம். அது முதல் மராத்தியர்கள் வல்லரசுச் சக்தியாக இருந்த தமது மதிப்பை இழக்கத் தொடங்கி, இறுதியாக மூன்றுவது ஆங்கிலேய மராத்தியப் போரில் இருக்குமிடம் தெரியாமல் போய் விட்டனர். பானிபட் போரானது மராத்தியக் கூட்டிணைவின் அடித்தளத்தை ஆட்டம் கொடுக்குமாறு செய்தது. இதனால் மராத்தியர்கள் பலவீனத்தின் வளர்ச்சியைப் பெற்று வந்த நேரத்தில் ஆங்கிலேயர் கர்நாடகத்திலும், வங்காளத்திலும் தமது சக்தியையும், அதிகாரத்தையும் திரட்டிக் கொள்வதற்கான தேவையான காலத்தைப் பெற்றனர். '16ஆம் நூற்றாண்டில் பானிபட்டில் நடந்த போர்களின் விளைவுகளைக் காட்டிலும் 18ஆம் நூற்றாண்டில் நடந்த மூன்றும் பானிபட்போரின் விளைவு மராத்தியப் பேரரசு வீழ்ந்து, பிரிட்டிஷ்காரர்களின் உச்சநிலை இந்தியாவில் நிலையாக நிறுவப்படுவதற்கான விளைவைக் கொடுக்கும் படியாய் அமைந்திருந்தது'[1] என்று டாக்டர். V. A. ஸ்மித் அவர்களும் கூறுகின்றார்.

'வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியுந்
துணைவலியும் தூக்கிச் செயல்'

என்னும் தமிழ் மறையாகிய திருக்குறளின் தத்துவத்திற்கொப்ப அந்நியரான ஆங்கிலேயர் இந்தியரைப்பற்றிய பழக்க வழக்கங்கள், புவியியல் மற்றும் வரலாற்றுச் செய்திகள் இந்திய அரசர்களின் வலிமை மற்றும் பலவீனங்கள், மொழி, கலாசாரம் போன்ற பலவற்றை ஓரளவு அறிந்து தமது அரசியல் மற்றும் ஆட்சிக் கொள்கையை வகுத்து அதற்கொப்பச் செயல்களில் ஈடுபட்டனர். இந்திய மொழிகளைக் கற்றறிந்த பல ஆங்கிலேய அதிகாரிகள் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியில் இருந்தனர். ஆனால், ஆங்கில மொழியை அறிந்திருந்த சுதேசி அரசர்களும், ஆட்சியாளர்களும் மராத்தியப் பேரரசில் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இருக்கவில்லை என்று சர் தேசாய் என்னும் பேராசிரியர் எடுத்துக் காட்டுகிறார். எப்படித் தேவையான சங்கதிகளை யெல்லாம்

1 The Oxford History of India, Book VII, Chapter III, V. A. Smith.

உள்ளடக்கித் திட்டங்களைத் தீட்டி ஆங்கிலேயர் செயல்களை மேற்கொண்டு வெற்றி கண்டனர் என்பதையும், அறியாமையின் காரணமாக நம்மவர்கள் அழிந்து போனதையும் 19ஆம் நூற்றுண்டின் இந்திய அரசியல் வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இப்படிப் பல காரணங்களினுல் மராத்தியர்களின் பேரரசும், அரசியலும் சரிந்து வீழ்ச்சியடைந்தது.

மராத்தியர்களுடன் போர்களை மேற்கொண்டு அவர்களுடைய நலிவிற்குக் காரணமாய் இருந்த வெல்லெஸ்லிக்கு அவர் மேற்கொண்ட போர்களே வீழ்ச்சியைத் தேடிக் கொடுத்தன என்பதில் ஐயமில்லை. சிறிதும் ஈவு இரக்கம் இன்றி இடங்களைப்பிடித்துச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கோட்பாடுடையவராக வெல்லெஸ்லி இருந்தார். இதனுல் இவரது ஆட்சிக்காலத்தில் 1799-ல் தென்னிந்தியாவில் மராத்திய அரசாக இருந்த தஞ்சாவூரும், நவாபின் ஆட்சி எல்லைக்குட்பட்டிருந்த சூரத்தும், பின்னர் ஈராண்டுகள் கழித்துக் கர்நாடகமும் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் கொண்டுவரப்படவேண்டும் என்ற அவாவைக் கொண்டிருந்தார். ஆனுல், இஃது அவருடைய ஆட்சிக்காலத்தில் ஈடேறவில்லை. 1765ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் செய்திருந்த ஓர் உடன்படிக்கைப்படி பிரிட்டிஷ்காரர்களின் செல்வாக்கின்கீழ் அயோத்தி வந்திருந்த போதிலும், அது தன் தனித்தன்மையை அரசியலில் தங்கவைத்த வண்ணமே இருந்தது. எனினும், ஆங்கிலேயரின் தலையீட்டின் காரணமாகவே, அரசியல் அமைதியை இழக்க ஆரம்பித்திருந்தது. வெல்லெஸ்லி அயோத்தியின் நவாபை முழுதும் அடக்கி ஆண்டுவிடவேண்டும் என்று மேற்கொண்ட செயல்களெல்லாம் பலனளிக்காது போயின. ஆனுல், அவரிடம் இருந்து வெல்லெஸ்லி 1,350,000 ரூபாய்களை வருமானமாய்க் கொடுத்த கங்கைக்கும் சிந்துக்கும் இடைப்பட்ட கீழ்த்திசைச் செழிப்பு நிலத்தை 1801ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் நவாபுடன் செய்து கொண்ட உடன்படிக்கை மூலம் பெற்றுர்.

அயோத்தியின் ஆட்சியாளர்கள் சங்கடமான மன உறுத்தலுடன் ஆங்கிலேயரிடம் நேர்மையுடன் நடந்து வந்ததால் வெல்லெஸ்லியும், ஹேஸ்டிங்ஸ் பிரபுவும் மேற்கொண்ட நாட்டாட்சி எல்லை விரிவாக்கச் செயலிலிருந்து தப்பிய வண்ணம் இருந்தது. வெல்லெஸ்லியின் காலத்தில் அயோத்தியின் நவாபாக இருந்தவர் சாதத் அலி. இவருக்கு வெல்லெஸ்லியால் மானக்கேடுகளும் நட்டங்களும் ஏற்பட்டிருந்த போதிலும், ஆங்கிலேயரைப் புறக்கணித்த வாழ்வை அவர் மேற்கொள்ள முடியவில்லை. ஹேஸ்டிங்ஸ் பிரபு இவரை ஒரு கனவான் என்றும் பெருமகன்

என்றும் புகழ்ந்தார். இதனால், ஆங்கிலேயர் மேற்கொண்ட நேபாளப் போர்க்கான செலவினங்கள் யாவற்றையும் இவர் மேற்கொண்டார். இப்படி ஆங்கிலேயரின் புகழ்ச்சி யுரையில் இலயித்துப்போய்த் தம் நிலையை மறந்த நிலையில் அயோத்தியின் நவாபு இருந்தார். இப்படி அயோத்தியின் நவாபை மயங்க வைத்துத் திரை மறைவிலிருந்தே அயோத்தியின் செயல்களை ஆங்கிலேயர் ஆட்டிப் படைத்தவண்ணம் இருந்தனர். தம்முடைய அதிகாரத்தைத் தம்முடைய அரண்மனைக்குள்ளாகவே சுயமாகவே செயல்படுத்த முடியாத அயோத்தி நவாபை அரச பட்டத்தைத் தரித்துக்கொள்ளுமாறு ஆங்கிலேயர் ஊக்குவித்தனர். அரசியல் கோட்பாட்டுக் கொள்கைக்கு ஒப்ப மொகலாய மேலாண்மை இறைமைக்கு உட்பட்டிருந்த அயோத்தி அரச அந்தஸ்தைப் பெறுமாறு தூண்டிவிடப்பட்ட செயலானது மொகலாய அரசரைக் கொதித்தெழும்படி செய்தது. இது டில்லியிலிருந்த மொகலாய அரசுக்கும், அயோத்திக்கும் இடையே பொறாமை பூசல்களைத் தோற்றுவித்தது. அதைத்தான் அவர்கள் எதிர் பார்த்தனர். இப் போட்டி பூசல்களைப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயர் அயோத்தியைப் பலவீனப் படுத்தினர். அயோத்தியின் நிர்வாகம் சீரழிந்தது. அதனைக் காரணமாகக் காட்டி 1856-ல் டல்ஹௌஸி அயோத்தியைப் பிரிட்டிஷ் இந்தியப் பேரரசில் இணைத்தார்.

அயோத்திக்கு அடுத்து ஆங்கிலேயரின் கவனத்தைக் கவர்ந்த அரசு ஹைதராபாத் ஆகும். திறமையின்மை, ஊழல் ஆகிய வற்றால் பிணிப்புண்டு அயோத்திக்கு இணையாக அவல நிலையில் ஹைதராபாத் இருந்தது. எனினும், ஆங்கிலேயரின் மேலாதிக்க அதிகாரத்திற்கு முகம் சுளிக்காமல் என்றும் கீழ்ப்படிந்திருந்த நிலையைப் பெற்றிருந்ததால் ஹைதராபாத், பிரிட்டிஷ் ஆதிக்க அடியினின்று தப்பியிருந்தது. ஆங்கிலேயர் இந் நாட்டை விட்டு இறுதியாக வெளியேறிய காலம் வரை ஹைதராபாத் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் அடிவருடி அரசாகவே இருந்தது. தமது நேரடி ஆட்சியின்கீழ் ஹைதராபாத்தை ஆங்கிலேயர் கொண்டுவரவில்லை என்றாலும், அதனைத் தமது அரசியல் சதுரங்க ஆட்டத்தில் பகடைக்காயாகப் பலவிதமாக உருட்டி விளையாடினர். இப்படி ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் தலைமை ஆளுநர்கால ஆட்சி முடிவின் போது, சிந்து மற்றும் பஞ்சாபைத் தவிர அனைத்திந்தியா முழுவதும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. ஆனால், இத்துடன் ஆங்கிலேயரின் ஆதிக்கவிரிவுச் செயல் நின்று விடவில்லை. 1784-ல் இயற்றப்பட்டிருந்த பிட் இந்தியச் சட்டம் நிலப்பரப்பாட்சி

விரிவாக்கத்தைக் கம்பெனியினர் இந்தியாவில் மேற்கொள்ளக் கூடாது என்று தடையிட்டிருந்த நிலை பின்னர் நெகிழ்வுற்று, 1841-ல் அறிவிக்கப்பட்ட பிரகடனப்படி கம்பெனி அதிகாரத்தின் ஆட்சி எல்லை விரிவாக்கத்தை வரவேற்கும் வகையில் நேர்மை யானதும், சட்ட முறையானதுமான வாய்ப்புகளைப் பயன் படுத்திக் கொள்ளக் கம்பெனியினருக்கு அனுமதி வழங்கப்பட்டது. பன்னாட்டு அரசியல் சிக்கல்கள் ஏற்படமுடியாதபடி 1814ஆம் ஆண்டு ஃபிரான்ஸும், ஹாலந்தும் இந்திய இறைமையைப் பெறுவதற்கான வாய்ப்பை ஆங்கிலேயருக்கு வெளிப்படையாக விட்டுக்கொடுத்துவிட்டன. நம் தாய்நாடாம் இந்திய நாட்டில் தமது மேலாதிக்க இறைமையை, வெளிப்படையாகவும் எளிதாகவும் செலுத்தக்கூடிய வகையில், இடர்ப்பாடுகளற்ற நிலையில் மொகலாயர் மராத்தியர் போன்றோர் கவனிப்பாரற்றுத் தள்ளப்பட்ட நிலையில், வாய்ப்புகளும் வசதிகளும் 19ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் ஆங்கிலேயர் கிடைக்கப் பெற்றனர்.

'1820 முதல் 1857ஆம் ஆண்டைத் தழுவிய முப்பத்தேழு ஆண்டுகளில் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியா முழுவதிலும் விஸ்தரிக்கப் படுவதற்கான காலமாய் அமைந்தது என்று பேராசிரியர் கூப்லாண்ட் கூறிப் பின்வரும் செய்திகளை அழகுபட விவரித் துள்ளார். 'இமயம் முதல் சிந்துசமவெளி வரையிலான இந்தியத் துணைக்கண்டத்தின் நிலப்பகுதி மட்டுமே பிரிட்டிஷ் கட்டுப்பாட் டிற்கு உட்படாத பகுதியாக 1820-ல் இருந்தது. இந் நிலப்பகுதி இரண்டு சுதந்திர அரசுகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. பலூசி அமீர்களால் (Baluchi Amirs) ஆளப்பட்டுப் பெரும் பாலைவனப் பகுதியையும் மிகக்குறைந்த மக்களைக் கொண்டதாயும், மேற்சொன்ன நிலப்பகுதியின் தென்பகுதியில் சிந்து (Sind) அமைந் திருந்தது. குறைந்த அளவிலான மக்களைக் கொண்டிருந்த போதிலும் போர்த்திற நடவடிக்கைகளுக்குப் பயன்படத் தக்க முக்கியத்துவத்தையும், புவியியல் முக்கியத்துவத்தையும் அது பெற்றிருந்தது. வர்த்தகம் மற்றும் செய்திப் போக்குவரத்து களுக்கு இருவழிப் பெரும்பாதையை அமைத்துக்கொடுக்கும் முக்கியத்துவத்தையும் அது பெற்றிருந்தது. எனினும், இங்கிருந்து சிந்துநதியின் வழியாக மிகவும் செழிப்பு வாய்ந்த பஞ்சாபின் பொருள்கள் கடல் வர்த்தகத் தடத்தை அடைவதற்கு இயற்கை யான வசதி அமைக்கப்பட்டிருந்தது. மேலும், ஆப்கானிஸ் தானத்திற்குக் கணவாய்கள் வழியாக வர்த்தகத்தை மேற்கொள் வதற்காக மற்றுமொரு வழியும் இங்கிருந்தே அமைக்கப்பட்டிருந்த தோடு, பழக்கத்தில் மேற்கொள்ளப்பட்டும் இருந்தது. சிந்து அரசிற்கு வடக்கே பஞ்சாப் இருந்தது. இங்குச் சீக்கியர்களால்

வலிமை மிக்க ஓர் இராணுவ அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்தது. பிரிட்டிஷ்காரர்கள் தமது ஆதிக்கத்தைப் புகுத்தி விரிவாக்கத் தொடங்கியது அந்நிய அரசின் தலையீட்டினாலேயே ஆகும். நெப் போலியனாலும் அவரது ஃபிரெஞ்சு சாம்ராச்சியத்தினாலும் ஏற்பட்ட ஆபத்தின் காரணமாக இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அரசு பஞ்சாப் மற்றும் சிந்து அரசுகளுடன் நேச உறவைக் கொண் டிருந்தது. ஆனால், அத்தகைய நேச உறவில் விரிசல் ஏற்படு வதற்குத் தொடர்ச்சியாய் அமைந்த பல செயல்கள் ரஷ்யாவின் ஊடுருவலால் ஏற்பட்டதாகும். 1830ஆம் ஆண்டு முதல் ரஷ்ய நாடு மத்திய ஆசியாவில் பலநாடுகளை வென்று பிடித்த வண்ணம் இருந்தது; மேலும் கிரிமியப் போர் (Crimean War) மூலம் ஃபிரான்ஸிற்கு இணையான வலிமையைப் பெற்றுத் தனது குடி யேற்றங்களையும், டொமினியன்களையும் இந்தியாவின் நுழைவாயில் கள் வரை தோற்றுவித்த வண்ணம் இருந்தது. இப்படிப்பட்ட ரஷ்ய ஆபத்து (Russian danger) தமது ஆதிக்கச் செல்வாக்கிற்குப் பேராபத்தைத் தோற்றுவித்துவிடும் என்று அஞ்சி ஆங்கிலேயர் அவசரக் கோலத்தில் செயல்களை மேற்கொண்டனர்.'[1] ஹேஸ்டிங்ஸ் பிரபுக்குப் பிறகு ஆம்ஹர்ஸ்ட் (Amherst), (1823-28), வில்லியம் பென்டிங் (William Bentinck) (1828-35), சர் சார்லஸ் மெட்காஃப் (Sir Charles Metcalfe) (1835-36) ஆகியோர் தலைமை ஆளுநர்களாக இருந்த காலங்களில், குறிப்பாக வில்லியம் பென்டிங்கின் காலத்தில், புதுமைச் சீர்திருத்தங்களைப் புகுத்திப் போரற்ற அமைதியான ஆட்சியைப் பெருமளவில் இங்கு மேற் கொள்ளக்கூடிய நிலையில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி அமைந் திருந்தது. எனினும், பேராசிரியர் கூப்லாண்ட் எடுத்துக் காட்டியுள்ளதுபோல் அந்நியச் சக்தியான ரஷ்ய நாட்டினால் ஏற்பட்ட ஆபத்து ஆக்லண்ட்பிரபு (1836-42) என்பவர் தலைமை ஆளுநராக இருந்த பொழுதுதான் உணரப்பட்டு, அவசரக்கோலத் துடன் காரியங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதைப்பற்றிக் கூறும் பொழுது, பேராசிரியர் கூப்லாண்ட் பின்வரும் செய்திகளைத் தமது பனுவலில் எழுதியுள்ளார். 'ஆப்கனிஸ்தானத்தை ரஷ்யா ஆக்ர மித்துக் கொள்வதைத் தடுக்கும் பொருட்டு அதன் அரசராயிருந்த தோஸ்த் முகமது என்பவரைப் பதவியிலிருந்து பிரிட்டிஷ்காரர்கள் நீக்கினர். அவரது இடத்தில் தமக்குச் சாதகமாய் இருக்கக்கூடிய ஓர் இளவரசரை அமர்த்தினர். மேலும், அவரை ஆதரித்துத் துணைபுரியும் வகையில் காபூலில் ஒரு பிரிட்டிஷ் படையையும் தங்க வைத்தனர். ஆனால், ஆப்கானிஸ்தான் அரசியலில் ஆங்கி லேயர் செய்த தலையீடானது அவர்களுக்கே ஆபத்தைத் தருவதாக

[1] R. Coupland, 'Britain and India' Chapter I—p. 9—10.

வெகுவிரைவில் அமைந்துவிட்டது. ஏனெனில், பதவியிலிருந்து விலக்கப்பட்டிருந்த தோஸ்த் முகமது பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிராக 1841-42-ல் புரட்சியைத் தோற்றுவித்தார். இப் புரட்சியில் பிரிட்டிஷ் படைகளைப் புரட்சிக்காரர்கள் அழித் தொழித்தனர். பிரிட்டிஷ் அதிகாரிகளும் கொலை செய்யப்பட்டனர். இச் சோகக் கதையை இந்தியாவிலிருந்த ஆங்கிலேய அதிகாரிகளுக்கு அறிவிக்கும் பொருட்டு ஒரே ஒரு பிரிட்டிஷ் நபர்தான் உயிர் பிழைத்துத் தப்பி ஓடிவந்தார். எனினும், பிரிட்டிஷ் படைகள் மேற்கொண்டு அனுப்பப்பட்டுப் புரட்சி மற்றும் போர்நிலை ஆப்கனிஸ்தானத்தில் அடக்கப்பட்டுப் புரட்சியாளர்களைச் சிதறி ஓடச்செய்து காபூலை ஆங்கிலேயர் பிடித்தனர். இதன்மூலம் தோஸ்த் முகமதுவை மீண்டும் ஆப்கனிஸ்தானத்தின் அரசராக்கி அவரைத் தமது ஆதரவாளராகக் கொள்வதே சாலச் சிறந்தது என்னும் சீரிய முடிவை ஆங்கிலேயர் எடுத்து, ஆப்கானிஸ் தானத்தை விட்டு வெளியேறினர்.'[1] இதற்கிடையில் 1839ஆம் ஆண்டில் சிந்து நாட்டு அமீர்களுடன் ஆக்லாண்ட் பிரபு ஓர் அரசியல் உடன் படிக்கையைச் செய்துகொண்டிருந்தார். சிந்து மாநிலம் முழுவதையும் தமது ஆதிக்கத்தின்கீழ்ப் படிப் படியாகக் கொண்டுவரவேண்டும் என்ற மூலக்கருத்தின் அடிப் படையில் ஆப்கானிஸ்தானத்தில் நிலவிய நிலவரங்களைக் காட்டி மேற்கண்ட உடன்படிக்கை செய்யப்பட்டது. இவ் வுடன்படிக் கையின் அடிப்படைக் குறிக்கோளை நான்கே ஆண்டுக்காலத் திற்குள் சாதகமான சந்தர்ப்பச் சூழ்நிலைகள் ஏற்பட்டதால் சிந்துவின் அமீர்களுடன் போரிட்டு ஆங்கிலேயர் நிறைவேற்றிக் கொண்டனர். இதனைப்பற்றிய செய்திகளை விவரிக்கும் பொழுது பேராசிரியர் கூப்லாண்ட் பின்வருவனவற்றைக் கூறுகிறார். 'ஆக்லாண்ட் பிரபு தலைமை ஆளுநராய் இருந்த காலத்தில் ஆப்கானிஸ்தானத்தில் நடைபெற்ற இழிவுச் செயல்கள் இந்தி யாவில் பிரிட்டிஷ் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தவில்லை யென்றாலும், அவை அதன் உயர்மதிப்பை அசைந்து ஆட்டங் கொடுக்கும்படி செய்திருந்தன. தமது உயர் மதிப்பைக் கீழைநாடு களில் போற்றிக் காப்பதைப் பெரு நோக்காகவும், பெரு முக்கியத் துவமாகவும் கொண்டிருந்த ஆக்லாண்ட் பிரபுவுக்குப் பின் தலைமை ஆளுநராயிருந்த எல்லன்பரோ என்பவர் மிகவும் மூர்க்கத்தனமான போர்களை மேற்கொண்டேனும் அசைந்து ஆட்டம் கொடுத்திருந்த தமது உயர்மதிப்பை எப்படியும் நிலைநிறுத்தி விடுவதென்று முடிவு கொண்டார். இவர் 1842 முதல் 1844 ஜூன் மாதம் வரை பதவியிலிருந்து பின்னர்த் திருப்பி அழைக்கப்பட்டார். தம்

[1] Ibid.

ஈராண்டுக் காலப் பதவிக் காலத்தில் இவர் சிந்து மாநிலத்தைப் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவருவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.'[1]

கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை நிர்வாக அமைப்பின் முக்கிய நிறுவனங்களான கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் இயக்குநர்கள் மன்றம் ஆகியவை கம்பெனியின் இந்திய ஆட்சிச் செயல்களை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்தும் பணியில் பிரிட்டிஷ் பாராளு மன்றத்தினால் அவ்வப்போது இயற்றப் பட்டிருந்த விதிகளுக்குப் புறம்பாகத் தம் இந்திய அதிகாரிகள் மூலம் பலவிதமான போர்ச் செயல்களையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவே செய்தன. ஒரு சில சமயங்களில், ஒரு சில அதிகாரிகளுக்கு விதி விலக்குகளையும், மிகுதியான அதிகாரங்களையும் கொடுக்கவும் செய்தன. எனினும், கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை இடத்தினர் தமது இந்திய அதிகாரிகள் வர்த்தகச் செயல்களை அடிப்படையாகக் கொண்டு, இந்திய அரசுகளின் உள்நாட்டுச் செயல்களில் தலையிடா வண்ணம், ஆதாயப் போக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அவ்வப்பொழுது எடுத்துக் காட்டி, ஏதேச்சாதிகாரப் போக்கில் அதிகார வரம்பை மீறி ஏகாதிபத்தியப் போக்குடன் நடந்துகொண்ட அதிகாரிகளைச் சாடவும் செய்தனர்; தேவையான பொழுது அவர்களைத் திருப்பி அழைக்கவும் செய்தனர். இந்திய நாட்டு மக்களுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியின் இலண்டன் மாநகரத் தலைமையிடத்தினருக்கும் இடையே எவ் விதமான நேரடித் தொடர்பும் இல்லாதிருந்ததாலேயே, கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமையிடம் விரும்பாத நிலையிலும், சிறிதும் எதிர்பார்க்காத நிலையிலும், இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் வர்த்தகத்தின் பெயரால் வெள்ளையர் தமது அரசியல் ஆதிக்கத்தின்கீழ் வரப் பெற்றனர். இதற்கேற்றாற்போல், இந்தியாவிலிருந்த கம்பெனியின் தலைமை ஆளுநர்களில் பலர் கம்பெனியின் தலைமை இடத்திலும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திடமும் அல்லது பிரிட்டிஷ் அரசாங்கத்திடமும் செல்வாக்கு மிக்கவர்களாகவும் இருந்ததால் சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கு ஒப்பப் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வல்லரசைத் தோற்றுவிக்கும் பணியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டனர். மேலும், இவ் வெற்றி பரிபூரணமாய் அமைவதற்குச் சிந்து, பஞ்சாப் ஆகிய இரு மாநிலங்களும் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட வேண்டும் என்று ஆங்கிலேயத் தலைமை ஆளுநர்கள் கருதியதில் தவறில்லை.

[1] R. Coupland, 'Britain and India'—Chap. I, p. 9—10.

எனவே, ஆப்கானிய கலகத்தின் காரணமாக, ஆட்டங்கண்ட தமது உயர் மதிப்பை இந்தியாவில் நிலைநிறுத்த வேண்டும் என்று எல்லன்பரோ பிரபுவும் உறுதி பூண்டிருந்தார். மேலும், சிந்து மாநிலத்தில் அமீர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த ஆட்சி காட்டு மிராண்டித்தனமானதாகவும் இருந்தது. அவர்கள் ஆங்கிலேயர்களுடன் செய்திருந்த உடன்படிக்கையின் மூலம் கொடுத்திருந்த வர்த்தக சம்பந்தமான வாக்குறுதிகளைக் காப்பாற்றவில்லை. இவை யாவற்றையும் காரணமாகக் காட்டிச் சிந்து மாநிலத்தின்மீது 1843-ல் எல்லன்பரோ போர் தொடுத்தார். சிந்து மாநிலத்தைப் போரிட்டு வெல்வதன் மூலம் மலைவழி வர்த்தகத் தடங்களைத் தமது பொறுப்பின்கீழ் நேரிடையாகக் கொண்டுவந்துவிட முடியும் என்று அவர் எண்ணினார். இதன் மூலம் சிந்து மாநில மக்களும், பிரிட்டிஷ் இந்திய மக்களும் அந்நியப் படையெடுப்புக்கு ஆளாகாமல் தடைசெய்ய முடியும் என்றும் எண்ணினார். எனவே, எல்லன்பரோ சிந்து மாநிலத்தின் மீது போர் தொடுத்தார்; வெற்றியும் கண்டார். 1843ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் சிந்து மாநிலம் பிரிட்டிஷ் இந்திய நிலப்பரப்பின்கீழ்ச் சேர்க்கப்பட்டது. அவரது இந்தச் செயல் அருவருக்கத்தக்க ஒரு செயலேயாகும். நாடு பிடிக்கும் அநியாய போர்ச் செயலை மேற்கொண்ட அநாகரித்தையே இது காட்டுகின்றது. ஏனெனில், 1843-ல் மிகவும் நொடித்திருந்த நிலையில் சிந்து மாநில அமீர்கள் இருந்தனர். இதனையும் வேறு பல நொண்டிச் சாக்குகளையும் காட்டி சர் சார்லஸ் நேப்பியர் என்னும் இராணுவத் தளபதியின் துணையுடன், சிந்துவை ஆக்ரமித்து அதன் ஆட்சியாளர்களைத் தோற்கடித்துத் தமது ஆதிக்கத்தின்கீழ் எல்லன்பரோ கொண்டுவந்தார். இஃது ஒரு வெளிப்படையான ஆக்ரமிப்புச் செயலேயாகும். எனவேதான், மேஜர் அவுட்ராம் என்னும் படைத் தளபதியை ஒதுக்கித் தமது எண்ணத்திற்கு வளைந்துகொடுக்கக் கூடிய சர் சார்லஸ் நேப்பியரைப் படைத் தளபதியாக நியமித்தார். சர் சார்லஸ் நேப்பியருக்கு உண்மையிலேயே சிந்துவின்மீது போர் தொடுத்த செயலானது தர்ம நியாயமற்ற செயல் என்று உள்ளத்தில் உணர்த்தியது. எனினும், தமது தலைமை ஆளுநர் இட்ட கட்டளையை அவர் நிறைவேற்றி வைக்க வேண்டியிருந்தது. இதனை அவர் தமது அன்றாட நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் (diary) சிந்து மாநிலத்தின்மீது போரைத் துவக்குவதற்கு முன் குறித்திருந்தார். அவரது சொற்களில், 'சிந்து மாநிலத்தை ஆக்ரமித்துப் பிடிப்பதற்கான உரிமை நமக்குக் கிடையாது. எனினும், மிகுந்த அனுகூலத்தையும், பயன்பாட்டையும் அது கொடுக்கக் கூடுமாதலால், அது முறையற்ற செயலாக இருக்குமென்றாலும்கூட

அச் செயலை நாம் செய்து முடிப்போம்'[1] என்று குறித்திருந்தார். அவருடைய உள்ளக்கிடக்கை எப்படியிருந்த போதிலும் இந்தியா விலிருந்த மேஜர் அவுட்ராம் போன்ற பிரிட்டிஷ் உயர் அதிகாரிகள் நேப்பியரின் நடத்தையைப்பற்றிப் பழித்து உரைத்தனர். இத்தகைய செயல் இங்கிலாந்து நாட்டிலிருந்த கம்பெனியின் தலைமையிடத்தினருக்கும் அரசாங்கத்திற்கும் முன்கூட்டியே இந்திய அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டிருக்குமாயின், அந் நாட்டின் மக்களும், அவர்களது எதிர்ப்புணர்ச்சியும் அதனைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். இவை யாவும் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை நிர்வாகிகள் அமைத்துக் கொடுத்திருந்த அடிப்படைக் கொள்கையும், அதன் அதிகாரிகள் இந்தியாவில் பின் பற்றிய நடவடிக்கைகளும் எவ்வளவு தூரத்திற்கு ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாய் அமைந்திருந்தன என்பதையே நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இதனை வலியுறுத்தும் வகையிலேயே பின்னர்த் தமது ஆதிக்கத்திற்கு உட்படாது தப்பியிருந்த இந்திய மாநிலங்களுள் ஒன்றான பஞ்சாப், இன்று நமது அண்டை நாடாக இருக்கும் பர்மா ஆகியவற்றுடன் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய அதிகாரிகளும் ஆட்சியாளர்களும் மேற்கொண்ட செயல்கள் அமைந்தன. இரு போர்களுக்குப் பிறகு பஞ்சாபும் மூன்று போர்களுக்குப் பிறகு பர்மாவும் ஆங்கில இறைமையின் கீழ் 1844-1848 வரை தலைமை ஆளுநராயிருந்த ஹார்டிஞ்ச் பிரபு, 1848 முதல் 1856 வரை தலைமை ஆளுநராயிருந்த டல்ஹௌசி, மற்றும் டஃப்ரின் பிரபு ஆகியோர் காலங்களில் கொண்டுவரப் பட்டன. இவ்வாறு ஆங்கிலேயர் இந் நாட்டில் பின்பற்றிய அரசியல் ஆதிக்கவிரிவுக் கொள்கை போர்களைத் தழுவியதாய் 1848 வரை அமைந்திருந்தது. அதன் பின்னர் டல்ஹௌசியின் தலைமை ஆளுநர் ஆட்சிக் காலத்தில் அக் கொள்கை புதியதொரு பாதையில் செலுத்தப்பட்டு, மாற்றத்தைப் பெற்றது.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை நிர்வாக நிலையத்தின் அடிப்படையான மூலக் கொள்கைக்கு ஒவ்வாத நிலையிலும், கம்பெனியின் தலைமை இறைமையாளர்கள் சிறிதும் எதிர்பார்க்காத வண்ணமும், கம்பெனியின் இந்திய அதிகாரிகள் பர்மாவின்மீது போர்களைத் தொடுத்தனர். முன்னரே கூறியது போன்று மூன்று போர்களைப் பர்மாவுடன் மேற்கொண்டதன் விளைவாகவே பர்மாவைத் தமது ஆளுகைக்கு உட்படுமாறு செய்ய முடிந்தது. 19ஆம் நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகளில் பர்மியர்கள் பலம் மிக்க நிலையில் இருந்தனர். தங்களது வலிமையில்

[1] Quoted by Coupland, 'Britain and India'—p. 11.

பெருமைப்பட்டத் தக்க நம்பிக்கையை வைத்திருந்த பர்மியர்கள் தமது நாட்டிற்கு வடக்கே அமைத்திருந்த பிரதேசங்களை வென்று பிடித்தனர். 1824ஆம் ஆண்டில் அஸ்ஸாமை வென்று வயப் படுத்தித் தமது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்தனர். மேலும், கிழக்கு வங்கத்தின்மீதும் அவர்கள் படையெடுத்தனர். எனவே, 1824ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பர்மியப் போர் நடந்தது. இப்போரில் பிரிட்டிஷ் இந்தியப் படைகள் பெருஞ் சேதங்களுக்கு உள்ளாயின. பண்டுலா என்பவர் பலம் மிக்க படைத்தளபதியாக இருந்தார். இவரது போர்த் திறமைக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் பிரிட்டிஷ் இந்தியப் படைகள் சீரற்ற அமைப்பைக் கொண்டிருந்தன. பிரிட்டிஷ்காரர்கள் கடற்படையின் துணை கொண்டு இரங்கூனைப் பிடிப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட்டன. எனினும், ஆங்கிலேயர்களுக்கும் பர்மியர்களுக்கும் இடையே ஒரு சமரச உடன்படிக்கை 1826-ல் செய்யப்பட்டது. இவ் வுடன்படிக்கை யாண்டபூ உடன்படிக்கை (Yondaboo treaty) என்பதாகும். இவ் வுடன்படிக்கைக் கொப்பப் பர்மியர்கள் அஸ்ஸாமையும் இரு கடற்கரை மாநிலங்களையும் விட்டு வெளியேறச் சம்மதித்தனர். எனினும், இவ் வுடன்படிக்கை ஆங்கிலேயருக்கும், பர்மியருக்கும் இடையே என்றும் நீடித்திருக்கக் கூடிய நேச உறவைத் தேர்ச்சியுறுமாறு செய்யவில்லை. டல்ஹௌசி பிரபு தலைமை ஆளுநராக இருந்தபொழுது, இந்தியா விலிருந்த ஆங்கிலேயருக்கும் பர்மியருக்கும் இடையே கருத்து வேற்றுமைகளும் பூசல்களும் தோன்றின. இவற்றால் தோன்றியதே 1852-ல் நடைபெற்ற இரண்டாம் ஆங்கிலேயப் பர்மியப் போராகும். இந்தியர்கள், பிரிட்டிஷ்காரர்கள், பிரிட்டிஷ் இந்திய வணிகர்கள் ஆகியோர் மேற்கொண்ட சட்டமுறையான வர்த்தகத்தை யாண்டபூ உடன்படிக்கையில் கண்டிருந்த வர்த்தக சரத்துகளுக்குப் புறம்பாக இரங்கூனிலிருந்த பர்மிய அதிகாரிகள் தடுத்து இடருறும்படி செய்திருந்ததால், இரண்டாம் பர்மியப் போரை டல்ஹௌசி மேற்கொள்ள வேண்டியிருந்தது. இப் போரை அவர் விரும்பியிருந்தால் தடுத்திருக்கவோ அல்லது தள்ளிப் போட்டிருக்கவோ முடியும். ஆனால், தமது வர்த்தகத் திற்குப் பர்மியர்களால் ஏற்பட்ட இடரால் இழப்பீட்டைக் கோரித் தாம் அனுப்பியிருந்த அறிவிப்புக் கடிதத்தைப் பர்மியர் புறக்கணித்ததால் சினங்கொண்டு பர்மாவின் கீழ்ப்பிரதேசமான பெகு (Pegu) முழுவதையும் டல்ஹௌசி போரிட்டுப் பிடித்துச் சேர்த்துக் கொண்டார். எஞ்சியிருந்த மேற்பகுதி டஃபரின் பிரபுவின் காலத்தில் 1886-ல் பிடிக்கப்பட்டுப் பர்மா முழுவதும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இதற்கு இடையில் பின்வரும் பக்கங்களில் சொல்லப்பட்டுள்ள செய்திகளுக்

கொப்பப் பஞ்சாப் மற்றும் எஞ்சியிருந்த சில இந்தியச் சிற்றரசுகளையும் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்து, தமது பிரிட்டிஷ் இந்தியாவுடன் பர்மாவையும் அணைத்துப் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தை இங்கு ஆங்கிலேயர் தோற்றுவித்தனர்.

கங்கை நதிக்கு வெகு தூரத்தில் வடமேற்கில் அமைந்திருப்பதே ஐந்து நதிச் சமவெளிப் பிரதேசமான பஞ்சாபாகும். இப் பஞ்சாப் 1839வரை வலிமை மிக்க ஒரு சுதந்திர நாடாக இருந்தது. இச் சுதந்திர நாட்டின் அரசிற்கும் வலிவிற்கும் காரணமாக இருந்தவர் மகாராஜா ரஞ்சித்சிங் ஆவார். இவர் சீக்கியர்களை ஒருமைப்பாட்டையும் விவேகத்துடன் கூடிய ஆற்றலையும் கொண்டவர்களாக உருவாக்கியிருந்தார். மதத்தைத் தழுவி அமைதியான இனத்தவர்களாய் இருந்த சீக்கியர்களைப் பெரியதொரு இராணுவச் சக்தியாக ஔரங்கசீபின் அறிவற்ற மதக்கொள்கை ஆக்கியிருந்தது. ஔரங்கசீபின் மறைவிற்குப் பிறகு மதம், வீரம் ஆகியவற்றுடன், ஆன்மிகத்துடன் கூடிய அரசியலையும் அகிலம் போற்றும் அளவுக்குச் சீக்கியர்கள் அமைத்திருந்தனர். சீக்கியர்களைத் தவிர முஸ்லிம்களையும் இந்துக்களையும் கொண்ட மத சமூகங்கள் பஞ்சாபில் இருந்தன. இவைகளிடையே பழக்க வழக்கங்களினாலும், சாதி சம்பிரதாயங்களாலும், வாழ்க்கைப் போக்குகளாலும் பெருத்த வேற்றுமைகள் மலிந்திருந்தன. ஆனால், இவ் வேற்றுமைகளின் மலிவு பஞ்சாப் அரசியலில் நலிவைத் தோற்றுவிக்காத வண்ணம் 'பஞ்சாபின் சிங்கம்' என்று அழைக்கப்படும், இரஞ்சித் சிங்கின் இராணுவமும் ஆட்சித் திறமையும் பாதுகாத்தன. எனவே, சிந்துநதிப் பிரதேசமான ஐயாறு நிலப்பகுதி முழுவதும், சீக்கியர்களைப் பெருந்தலைவர்களாகக் கொண்டு, இந்திய அரசியல் அமைப்புக் கூறுகளிடையே சிறப்பானதொரு இடத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மையக் காலம் வரை பெற்றிருந்தது.

இந்தியத் துணைக்கண்டத்தில் ஏனைய இடங்கள் யாவற்றையும், நேரிடையாகவும், மறைமுகமாகவும் போர், அரசியல் சூழ்ச்சிகள், மற்றும் உடன்படிக்கைகள் ஆகியவற்றின் மூலம் தமது குடையின் கீழ்க்கொண்டு வந்திருந்த ஆங்கிலேயரும், அவர்தம் படைகளும் பஞ்சாபை நெருங்க முடியாத நிலை இரஞ்சித் சிங்கின் ஆயுட்காலம் வரை இருந்தது. மகாராஜா இரஞ்சித் சிங்கும் தம் வாழ்நாள் முழுவதும் ஆங்கிலேயருடன் பெருமைப் படத்தக்க நேச உறவைக் கடைப்பிடித்து வந்தார். இவரது நேர்மையான நேசம் மற்றும் வலிவுள்ள இராணுவம் ஆகியவற்றை மதிப்புலத்துடன் உணர்ந்திருந்த ஆங்கிலேயர் பஞ்சாபின் அரசியலில்

எவ் விதத் தலையீட்டையும் செய்யாமல், முன் ஜாக்கிரதையுடன் செயல்களை மேற்கொண்டனர். மகாராஜா இரஞ்சித்சிங் மாண்புலம் அமைந்த மாமேதை ஆவார். இவர் உண்மையிலேயே மறைந்து வரும் சகாப்தத்தின் கடைசி இராணுவ வீரரும், அரசியல் மேதகையும் ஆவார். பெருமதி நோக்கைக் கொண்டிருந்த இரஞ்சித்சிங் போர்க் குணம் கொண்டிருந்த சீக்கியர்களை அதிகாரமும், ஒழுங்கும் அமையப்பெற்ற இராணுவத் தோழமையைக் கொண்டிருந்த ஒரு சக்தியாக ஒன்று படுத்தியிருந்தார். குறுகிய இன உணர்ச்சி, அவர்களிடம் தோன்றுவதை அவர் அறவே தவிர்த்திருந்தார். திறமையில் தன்னம்பிக்கை கொண்டிருந்த இரஞ்சித்சிங், திறமை படைத்திருந்த எவரையும் ஆதரித்து ஊக்குவிப்பதினின்றும் தவறவே இல்லை. திறமைக்கு உரிய மதிப்பைக் கொடுக்கக் கூடிய நல்ல அரசியலையும் அரசாங்கத்தையும் ஆட்சியையும் இவர் நடத்தியதாலேயே நேர்மை உணர்ச்சியுடன் இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் ஐரோப்பிய அதிகாரிகள் போன்றோர் சிறப்பான இடங்களையும் தகுதிகளையும் பஞ்சாபின் சிவில் மற்றும் இராணுவ அரசாங்கத்தில் பெற்றிருந்தனர். கைபர் கணவாய் முதல் சட்லெஜ் நதி வரையிலான நாட்டையும், காஷ்மீரத்தைத் தழுவியிருந்த நிலப் பகுதியையும் இவர் தமது ஆளுகையின்கீழ்க் கொண்டிருந்து, வன்முறையற்றதும், நீதி நெறிமுறைக்கு உட்பட்டதுமான ஆட்சியை மேற்கொண்டிருந்தார்.' உள்நாட்டு அரசியல் மற்றும் ஆட்சிச் செயல்கள் மட்டுமன்றித் தமது வெளி நாட்டுக் கொள்கைகளிலும், தார்மீக நியதிகளை அரவணைத்துச் செயல்களை மேற்கொண்டார் இரஞ்சித்சிங். எனவே தான், ஆங்கிலேயரின் அதிகார நிலையையும், ஆதிக்கச் செல்வாக்கையும் அறிந்திருந்த இரஞ்சித்சிங் அவர்களுடன் நேச உறவை அடிப்படையாக வைத்து எந்த இன்னல்களும் தமது நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்படாத வண்ணம் தமது நாட்டின் புகழையும், தமது புகழையும் இத் தரணியில் உயர்த்தி வைத்திருந்தார். இதற்கு எடுத்துக் காட்டாக அமைந்திருந்ததே இவர் ஆங்கிலேயருடன் 1809ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் செய்திருந்த அமிர்தசரஸ் உடன்படிக்கையாகும். இவ் வுடன் படிக்கையின்படி பரஸ்பர சமாதானமும், ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு நாடு பிடிக்கும் செயல்களில் ஈடுபடாத நற்போக்கும், ஆங்கிலேயர்களுக்கும் சீக்கியர்களுக்கும் இடையே அமைந்திருந்தன. ஆங்கிலேயர்களும், சீக்கியர்களும் ஒத்துழைத்த செயல்கள் பல இருந்தன. அமிர்தசரஸ் நேச உடன் படிக்கை, போர்ப் பூசல்களைத் தழுவாத நிலையில், ஆங்கிலேயரையும் சீக்கியரையும் கட்டிக் காத்து, 1831-ல் மகாராஜா இரஞ்சித்சிங் இறந்த காலம் வரை மதிக்கப்பட்டுச் செயல்

முறையில் இருந்தது. இவ் வுடன்படிக்கையின் பயனாக மற்றும் ஒரு அரசியல் முக்கியத்துவமும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி யின் அரசாங்கத்திற்கும் சீக்கியர்களுக்கும் கிடைத்திருந்தது. அஃதாவது மனத்தாங்கல் கொண்டிருந்த ஆப்கனிஸ்தானத் திற்கும் பிரிட்டிஷ் இந்தியாவிற்கும் இடையே நடுநிலை அரசாக (Buffer state) பஞ்சாப் சுதந்திரமுடன் இயங்கி வந்தது. இதனால் ஆங்கிலேயரும் போரற்ற அரசியல் உறவைக் கொண்டிருந்தனர். எனினும், இதனால் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கமே பேரனுகூலத்தைப் பெற்றிருந்தது.

மேற்சொல்லப்பட்ட செய்திகளுக் கொப்ப அமைந்திருந்த ஆங்கிலேய - சீக்கிய உறவில் மகாராஜா இரஞ்சித்சிங் இறந்தபின் விரிசல் தோன்றியது. இவரது இறப்பிற்குப் பிறகு ஆங்கிலே யருக்கும், சீக்கியருக்கும் இடையே நிலவிவந்த நேச உறவு அழிய லாயிற்று. தரமிகு திறமையான தலைவரை இழந்துவிட்ட பஞ்சாபின் அரசியல் அதன் இராணுவத் தலைவர்களின் தலையீட்டு ஆதிக்கத்தின்கீழ் வந்தது. அப்பொழுது ஆப்கனிஸ்தானத்தில் ஆங்கிலேயர் அலைக்கழிக்கப்பட்டிருந்த நேரம். ஆங்கிலேயரின் ஆப்கனிஸ்தானத் தோல்வியினால் உந்தப்பட்டும், தமது பலத்தில் பெரு நம்பிக்கையைக் கொண்டும் சீக்கிய இராணுவத் தலைவர்கள் வட இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துச் சவால் விட வேண்டுமெனத் தீர்மானித்தனர்; போர்த் தலையீடுகளையும் மேற் கொண்டனர். இதற்கேற்றாற்போல் ‘பிரிட்டிஷ் இந்திய அரசு’ அதனோடு பொருதக் கூடிய நிலையிலிருந்த ‘பஞ்சாப் அரசு’ எனும் இரு இறைமை படைத்த அரசுகள் இந்திய மண்ணில் அரசியல் கோட்பாட்டு ரீதியாக இருந்தால் அதனால் தீமையே விளையும் என்றும், ஒரு நாட்டில் இறைமை படைத்த இரு சுதந்திர அரசு களால் பேராபத்து ஏற்படும் என்றும் ஆங்கிலேயர் உணர்ந்தனர். எனவே, ஆங்கிலேயர் பஞ்சாப் அரசின் இறைமையைத் தமது ஆதிக்கப் பொருளாக மாற்றிவிடக்கூடிய செயல்களையும், அச் செயல்கள் நேர்வதற்கான தக்க தருணங்களையும் எதிர்பார்த்த வண்ணமும் இருந்தனர். மேலும், முன் ஜாக்கிரதையாகப் பஞ்சாபின் எல்லை முழுவதிலும் தமது பிரிட்டிஷ் இந்தியத் துருப்பு களைக் குவித்தனர். ‘இதற்குக் காரணமாகக் கல்கத்தாவிலிருந்த கம்பெனி அதிகாரிகள் தமது புறக்காவல் படையிருக்கைகளை (military outposts) பலப்படுத்துவதாகக் கூறிக் கொண்டனர். ஆனால், உண்மையில் தருணம் வாய்க்கும் பொழுது சீக்கிய இராணுவத்தை முறியடிப்பதற்கு என்றே ஒரு முன்னேற்பாட்டு நடவடிக்கையாக, ஒரு மோசடிச் செயலாக இஃது ஆங்கிலேயர் களால் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும் என்பதை நாம்

மறுப்பதற்கு இல்லை.' சர் ஆல்ஃபிரட் லையால் (Alfred Lyall) என்னும் அறிஞர் கூறுவதுபோல், '1843-ல் உள்நாட்டுக் கலவரங்கள் தோன்றுவதைத் தடுப்பதற்கான முன் ஜாக்கிரதை நடவடிக்கையாகக் குவாலியரின் பெரிய இராணுவத்தைப் படைக் கலைப்பு செய்தனர். மேலும், சமயத்துக்கு ஒவ்வாத எல்லைப்புறச் சச்சரவுகளையும் ஆங்கிலேயர் மேற்கொண்டு, அவற்றின்மூலம் லாகூர் அரசாங்கம் ஆங்கிலேயர்மீது மிகுந்த கசப்பு உணர்ச்சியையும், வெறுப்புப் பகைமை உணர்ச்சியையும் கொள்ளும்படி செய்திருந்தனர்.'[1] இச் செயல்கள் சர் ஹென்றி ஹார்டிஞ்ச் என்பவர் பிரிட்டிஷ் இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த பொழுது மேற்கொள்ளப்பட்டது. தனிப்பட்ட முறையில் ஹார்டிஞ்ச் திறமையான இராணுவ வீரராகவும் இருந்தார். எனவே, இவரால் கவனமுடன் மேற்கொள்ளப்பட்ட இராணுவ முன்னேற்பாடுகள் யாவும் ஆங்கிலேயர் விரும்பிய பலன்களைக் கொடுத்தன. இவற்றால் ஆங்கிலேயர்களும் சீக்கியர்களும் விரைவில் போர் மேற்கொள்ள வேண்டியிருந்தது. 1846ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10ஆம் தேதி அன்று நான்கு முனைத் தாக்குதல்களுடன் கூடிய முதலாம் சீக்கியப்போர் தொடங்கியது. உள்ள உறுதியுடன் இப் போரில் இறுதிவரை போராடிய போதிலும், தேஜ்சிங் தலைமையிலான சீக்கியப் படை இறுதியாகப் பின்வாங்க வேண்டியே இருந்தது.

முதலாம் சீக்கியப்போரின் முடிவில் இலாகூர் உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் ஆங்கிலேயரும் சீக்கியரும் அரசியல் உடன்பாடு ஒன்றைச் செய்துகொண்டனர். இவ் வுடன்பாட்டின்படி இலாகூர் அரச பீடத்தில் துலிப்சிங் என்னும் ஒன்பது வயது இளவரசர் ஒருவரைப் பதவியில் அமர்த்தி, சர் ஹென்றி லாரன்ஸ் என்பவரைச் சீக்கிய அரசின் பாதுகாவலராக ஆங்கிலேயர் நியமித்தனர். எனினும், இப் புதிய ஏற்பாடானது நல்ல முறையில் செயல்படவில்லை. ஏனெனில், மேற்சொல்லப்பட்ட உடன்படிக்கையின் மூலம் செய்யப்பட்ட ஏற்பாடுகள் பஞ்சாபின் சுதந்திரத்தை அனுமதித்து, அதன் அரசியல் ஆங்கிலேயரின் பாதுகாவலின்கீழ்தான் நடைபெறவேண்டும் என்பதாக இருந்தன. ஆனால், பஞ்சாபின் இராணுவத் தலைவர்களின் எண்ணம் வேறு விதமாய் இருந்தது. அவர்கள் எக் காரணத்தைக் கொண்டும் ஆங்கிலேயரால் தாங்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவதை விரும்பவில்லை. இஃது இப்படியிருக்க, 1848-ல் சீக்கியர்களுக்கும்,

[1] The rise and expansion of the British Dominion in India-Sir Alfred Lyall, p. 315.

பிரிட்டிஷ் ஆதரவாளர்களுடன் இயங்கிவந்த தமது அரசாங்கத் திற்கும், எதிராக ஒரு புரட்சி தோன்றியது. இப் புரட்சிக்குக் காரணம் ஆங்கிலேய அதிகாரிகளுக்கும் சீக்கிய இராணுவ அதிகாரி களுக்கும் ஒரு பூசல் தோன்றி, இரு பிரிட்டிஷ் அதிகாரிகள் கொலை செய்யப்பட்டதாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் டல்ஹௌசி பிரபு (1848-56) தலைமை ஆளுநராக நியமிக்கப் பட்டார். இலாகூர் உடன்படிக்கைப்படி செய்யப்பட்டிருந்த புதிய ஏற்பாடு நன்முறையில் செயல்படாததாலும், மேற்சொல்லப் பட்ட புரட்சியினாலும், டல்ஹௌசி பஞ்சாபை நேரிடையாகப் போரிட்டு வென்று பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்த்துவிட வேண்டும் என்று நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஈடு பட்டார். டல்ஹௌசியின் செயல்நோக்கைத் தடுத்துநிறுத்தக் கூடிய ஆற்றலையும், அவரது செயலுக்கு எதிர்ப்பைக் காட்டும் திறமையையும் கொண்ட பிரபலம் மிக்க ஒரே இந்தியத் தலைவர் ஜம்முவின் மகாராஜாவாக இருந்த குலாப்சிங் என்பவராவார். ஆனால், மகாராஜா குலாப்சிங்கிற்குக் காஷ்மீரத்தை நன்கொடை யாகக் கொடுத்து அவரைத் தம் பக்கம் இழுத்துக்கொண்டார் டல்ஹௌசி.[1] இப்படி டல்ஹௌசியின் தலைமையிலான ஆங்கி லேயர், தாம் செல்லவிருந்த பாதையில் தோன்றிய தடைகளை யெல்லாம் அகற்றி, அப் பாதையைச் செப்பனிட்டு முன்னேறிக் கொண்டிருந்த பொழுது, சில சந்தர்ப்பச் சூழ்நிலைகளும் அவர் களுக்குக் கை கொடுத்தது. இதற்கு எடுத்துக்காட்டாக அமைந்ததே 1848ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பஞ்சாப் அரசுக்கு உட்பட்டிருந்த மூல்தானின் ஆளுநர், பஞ்சாபிற்கு எதிராய்ப் புரட்சியில் ஈடுபட்ட செயலாகும். இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஏதுமறியாப் பஞ்சாப் அரசின்மீது டல்ஹௌசி போரைக் கட்டாயமாகத் திணித்தார். இதனைக் கண்டு சீற்றம்கொண்ட சீக்கியர் சிதறி ஓடிவிடாமல், வரலாற்றுச் சிறப்பு மிக்க வீர தீரத்துடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டனர். இப்போர் இரு முனைத்தாக்குதல்களைக் கொண்டதாய் இராம் நகர், ஜாலியன் வாலா ஆகிய இரு இடங்களில் நடந்தது. ஆனால், இவற்றில் இரு சாராரும் சமநிலையில் வெற்றியைக் கண்டனர். எனினும், ஆங்கிலேயர் 1849-ல் அப் போரை மேலும் தொடர்ந்து குஜராத் தில் போரிட்டனர். இதில் சீக்கியர்கள் ஆங்கிலேயரிடம் தோற்றுச் சரணடைந்தனர். இதுவே, இரண்டாம் சீக்கியப் போராகும். இப் போரின்மூலம் மகாராஜா இரஞ்சித் சிங்கின் பரம்பரைப் பெருமை, சிறப்பு, புகழ் ஆகிய யாவும் அவர் இறந்த பத்தாண்டு களுக்குள்ளாகவே அழித்தொழிக்கப்பட்டன.

[1] K. M. Panikkar, Asia and Western dominance—p. 81.

போர்களையும், அரசியல் சூழ்ச்சிகளையும் கையாண்டு பல இந்தியப் பிரதேசங்களைத் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்ததோடன்றிப் போரற்ற அமைதி நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டதன் மூலமும் பல இந்திய அரசுகளும், பிரதேசங் களும் பிரிட்டிஷ் இந்தியப் பேரரசின் பகுதிகளாக இணைக்கப்பட்ட செயல் டல்ஹௌசியின் காலத்தில் நடைபெற்றது. டல்ஹௌசி பின்பற்றிய ஆதிக்கக் கொள்கைகளில் முக்கியமானது பிறழ்வு அல்லது விடுபாட்டுக் கோட்பாடு (Doctrine of Lapse) என்பதாகும் இக் கோட்பாட்டைப் பயன்படுத்திப் பல இந்திய அரசுகளைப் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்த செயல் வரலாற்று ரீதியாக மறக்கப்பட முடியாததும், அரசியல் ரீதியாக அருவருக்கத் தக்கதும் ஆகும். இக் கோட்பாட்டின்படி உரிய ஆண் வாரிசைப் பெற்றெடுக்காத நிலையில் இறந்துபட்ட அரசர்களின் நாடுகளும் அரசுகளும் பிரிட்டிஷ் பேரரசுடன் சேர்க்கப்பட்டன. ஆனால், உரிய காரணங்களுக்காக வாரிசு இல்லாத அரசர்களுக்குச் சுவீகாரம் எடுக்கவும் அவர்களுக்கு அரசுரிமை வழங்கவும் கூடிய அதிகாரத்தை ஆங்கிலேயர் தம் கையில் வைத்திருந்தனர். இத்தகைய கோட்பாடு டல்ஹௌசியினால் முனைப்பாகவும், பெருமளவிலும் செயல்படுத்தப் பட்ட போதிலும், இக் கோட்பாட்டினை உருவாக்கியவர் அவரல்லர். ஏனெனில், 1834ஆம் ஆண்டிலேயே இத்தகைய கோட்பாடு கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமையிடத்து இயக்குநர் களால் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும், 1841-ல் 'நீதியும் நேர்மையும் அற்ற முறையில் இடத்தையோ பொருளையோ அல்லது பண வருவாயையோ பிரிட்டிஷ் இந்தியப் பேரரசுக்கு ஈர்த்துக்கொள்ளுதல் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டிய முயற்சி யாகும்' என்ற இயக்கக் கட்டுப்பாட்டு அறிவிப்புச் செய்தியும் இயக்குநர்களால் வலியுறுத்தப்பட்டது. இவற்றையெல்லாம் தமது கருத்தில் கொண்டே நாடும் மக்களும் விரும்பாத போர்ச் செயல்களை அகற்றி, விடுபாட்டுக் கோட்பாட்டைப் பயன்படுத்தி அமைதியான முறையில் பிரதேச இணைப்புகளைப் பிரிட்டிஷ் இந்தியப் பேரரசுக்கு டல்ஹௌசி செய்து கொடுத்தார். அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அடிப்படையும், இக் கோட்பாட்டின் மூலம் வலியுறுத்தப்பட்டு நிலை நிறுத்தப்பட்டது. அஃதாவது, அரசியல் ரீதியாகப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி உயர் அதிகாரச் சக்தியாக நிலை நிறுத்தப்பட்டதாகும். எனவே, இவ் வதிகாரச் சக்தியைச் சார்ந்தும், அதன் அக்கறை ஈர்ப்புக்கும், அரசியல் மற்றும் ஆதிக்கக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டே, அதன் அனுமதியைப் பெற்றே தம் ஈடுபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இந்திய அரசுகள் இருந்தன. இதனால், தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்திருந்த இந்திய அரசுகளைத் தமது மேற்பார்

வைக்கு உட்பட்ட சுதந்திர அரசுகள், தம்முடன் கூட்டுச் சேர்ந்திருந்த நேச அரசுகள், தமது அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து அவர்களை என்றும் நம்பியிருக்கக் கூடிய சார்பு அரசுகள் என்று பலவாறு ஆங்கிலேயர் வகைப்படுத்தி யிருந்தனர். இத்தகைய சார்பு அரசுகள்மீது மட்டுமே டல்ஹௌசியின் விடுபாட்டுக் கோட்பாடு பயன்படுத்தப்பட்டதென்றாலும், அதனைக் கையாண்ட முறையில் பல வேறுபாடுகள் இருந்தன. விடுபாட்டுக் கோட்பாட்டைத் தவிர டல்ஹௌசி மற்றுமொரு கோட்பாட்டையும் தமது அரசாங்கக் கொள்கையாகக் கடைப்பிடித்தார். அக் கோட்பாடு 'தமது மேலாண்மைக்கு உட்பட்டிருந்த இந்திய அரசுகளின் நிர்வாகம் சீர்கேடான நிலையில், மக்களின் நலனுக்கு உகந்த முறையில் அமையவில்லையென்றால், அவை பிரிட்டிஷ் இந்திய அரசின் நேரடி நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரப்படும்' என்பதாகும். இவற்றையெல்லாம் பின்பற்றித்தான் நேரிடையாகவும் மறைமுகமாகவும், இந்திய அரசுகள் யாவும் பிரிட்டிஷ் இந்தியப் பேரரசின்கீழ்க் கொண்டுவரப்பட்டுப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் உச்ச அதிகார நிலையும் நிலை நிறுத்தப்பட்டது.

மேற்கூறியவாறு, டல்ஹௌசியின் தலைமை ஆளுநர் பதவிக் காலம் அமைதியுடன் ஆங்கிலேயரின் ஆதிக்கம் விரிவடைந்து முற்றுப்பெற்றதாய் அமைந்த காலமாகும். 'கெடுதலிலும் நல்லது உண்டு' என்பதற்கு ஒப்ப டல்ஹௌசியின் கொள்கைகளால் இந் நாடு முழுவதும் அந்நியர்க்கு அடிமையாக வேண்டிய நிலை ஏற்பட்டபொழுதிலும், அதன்மூலம் நிலையான ஓர் அரசாங்கம் இந்திய மக்களுக்கு அமையக்கூடிய வாய்ப்பு கிட்டியது. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் அன்று இந்தியா சுதந்திரம் அடைந்தபோது காஷ்மீரம், ஹைதராபாத் போன்ற அரசுகளால், குறிப்பாக ஹைதராபாத் அரசினால், ஏற்பட்ட இன்னல்களை மனத்தில் கொண்டு பார்க்கும் பொழுது அத்தகைய இன்னல்கள் அயோத்தி போன்ற இந்திய அரசுகளால் ஏற்பட முடியாத நன்மையைக் கொடுப்பதாய் டல்ஹௌசி இந்தியாவில் ஆற்றிய பணி இருந்தது. எனவே, பிறழ்வுக் கோட்பாட்டின்கீழ் நாக்பூர், சதாரா, ஜான்ஸி போன்ற பெரிய அரசுகளும், ஜெயித்பூர், சம்பர்பூர், கரௌலி போன்ற வேள்புல அரசுகளும் பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளுடன் சேர்க்கப் பட்டது வரவேற்கத் தக்கதாகவும் நியாயமானதாகவுமே இருந்தது. ஆனால், வெல்லெஸ்லியைப் போலவோ அல்லது ஹேஸ்டிங்ஸைப் போலவோ இந்திய சமஸ்தான அரசுகளுடன் அவர் மேற்கொண்டிருந்த அரசியல் உறவு முறைகள், எப் புதிய அரசியல் நியதிகளின் அடிப்படையிலும் அமைந்திருக்கவில்லை.

மேலும், அவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வலிமையுள்ளவையாயிருந்தன என்றும் கூறுவதற்கில்லை. மாந்தவி, கொலாபா ஆகிய அரசுகள் டல்ஹௌசி பதவி ஏற்கும் முன்னரே கம்பெனியின் இயக்குநர்களால் அறிவிக்கப்பட்டிருந்த பிறழ்வுக் கோட்பாட்டிற்கு ஒப்ப ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ்க் கொண்டு வரப்பட்டிருந்தன.

விடுபாடு அல்லது பிறழ்வுக் கோட்பாட்டின்படி பல அரசுகள் ஆங்கிலேய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டன என்றாலும், அடங்காத தன்மையைக் கொண்டிருந்ததாய் அயோத்தி அரசு இருந்தது. டல்ஹௌசியினால் பிறழ்வுக் கோட்பாடு பயன்படுத்த முடியாத நிலையிலிருந்தது அயோத்தி அரசாகும். அயோத்தி பிரிட்டிஷ்காரர்களின் பாதுகாவலைப் பெற்றிருந்தபோதிலும், அது தனது சுய ஆட்சி நிர்வாக உரிமையை இழந்திருக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் அயோத்தியின் அரசாங்கமும், நிர்வாகமும் ஆழ்குழியில் சரிந்து விழுந்துகொண்டிருக்கக் கூடிய நிலையில் இருந்தன. தீய நிர்வாகம் தலைவிரித்தாடியது. E. தாம்ஸன், G. T. காரெட் என்னும் அறிஞர்கள், அயோத்தி பெற்றிருந்த சீர்கேடான அரசாங்கத்தைப்பற்றிக் கூறும்பொழுது, ‘அது நேர்மையற்றதாகவும், கொடுமையானதாகவும் இருந்தது’[1] என்று செப்புகின்றனர். டல்ஹௌசிக்கு முன் இருந்த ஆளுநர்கள் அவ்வப்பொழுது தம்மைத் திருத்திக்கொள்ளுமாறு அயோத்தியின் அரசருக்கு எச்சரித்தவண்ணம் இருந்தனர். ஆனால், அவர்கள் எப்பலனையும் காணவில்லை. அயோத்தியின் அநீதியான ஆட்சி அதன் எல்லையோரங்களில் அமைந்திருந்த அரசுகளிலும் தீய விளைவுகளை ஏற்படுத்தியவண்ணம் இருந்தது. டல்ஹௌசி தலைமை ஆளுநராக வந்தபின் அயோத்தியின் விவகாரங்கள் பொறுக்க முடியாதவையாகவும் பொறுப்பிழந்த தன்மையைக் கொண்டவையாகவும் இருந்தன. ஆனால், அதே நேரத்தில் பிறழ்வுக் கோட்பாட்டை அயோத்தியின்மீது செலுத்தி அதனை அடக்கி ஆளமுடியாத இடையூறும் இருந்தது. எனவே, ‘எவராலும் மறுக்க முடியாத துன்பங்களுக்கு ஆளாகியிருந்த அயோத்தியின் பொதுமக்களை அத்துன்பங்களினின்றும் விடுவிக்க வேண்டும் என்றால், அயோத்தியின் அரசை அதன் அரசரிடமிருந்து விடுவித்துத் தம்முடைய பேரரசில் சேர்ப்பதைத் தவிர எவ்வழியும் இல்லை’ என்று எழுதி, அயோத்தியின்மீது மிகக் கடுமையான நடவடிக்கையை எடுக்கத் தம்மை அனுமதிக்குமாறு கம்பெனியின் இயக்குநர்களுக்கு பரிந்துரைக் கடிதமொன்றை டல்ஹௌசி எழுதினார். இதுகாறும்

[1] "Rise and Fulfilment of British Rule in India", E. Thompson and G. T. Garrat p. 407

நிலப்பரப்பாட்சியை விரிவாக்கம் செய்த தமது இந்திய அதிகாரிகளின் ஆட்சிச் செயல்களுக்குத் தயக்கத்துடன் அனுமதி அளித்து வந்திருந்த இலண்டன் அதிகாரிகள் அயோத்தியின் விவகாரத்தில் டல்ஹௌசியின் எண்ணத்தை ஏற்று அதை விரைவுடன் செயல்படுத்த அனுமதித்தனர். உண்மையில் டல்ஹௌசி ஒரு பிள்ளைப் பூச்சியைப் போல் இருந்தார். பிள்ளைப்பூச்சி துன்பம் தராதது; சேற்றில் வாழ்வது; ஆனால், சேறு தன்மீது ஒட்டாத உடலமைப்பைப் பெற்றிருப்பது. இதைப் போன்றே டல்ஹௌசியும் குழப்பம் மிகுந்திருந்த இந்திய அரசியலில் களங்கமற்ற எண்ணத்துடன் சீர்திருத்தங்கள் பலவற்றைப் புகுத்தியும், நம்மவர்களுக்குக் குறைகளை வைக்காத நிலையிலும் செயல்களை மேற்கொள்ளும் உளப்பாங்கைப் பெற்றிருந்தார். எனவே, அயோத்தி அரசைப் பிரிட்டிஷ் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்ற முடிவை அவர் எடுத்த போதும், அதே நேரத்தில் அதன் அரசரது ஆட்சிப் பீடத்தையும் பதவியையும் பறித்துவிடவேண்டும் என்று விரும்பவில்லை. எனினும், கம்பெனியின் தலைமையிடத்து இயக்குநர்கள் முழுமையாக அயோத்தியைப் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்துடன் இணைத்து விடுமாறு கட்டளையிட்டு அனுமதித்தவுடன் அதனைச் செயல்படுத்தினர். தீய அரசாங்கமும், ஆட்சியும் நடைபெற்று அவற்றால் அயோத்தி மக்கள் பெற்றிருந்த அல்லல் மிக்க அவல வாழ்க்கையை அகற்றும் வகையில் தகுந்த காரணம் காட்டி, அயோத்தியை டல்ஹௌசி தம்முடைய இந்தியப் பேரரசுடன் இணைத்தார்.

அயோத்தியைப் போலவே, சீர்கேடான அரசியலையும், ஆட்சியையும் நடத்தி வந்தது ஹைதராபாத் அரசாகும். ஹைதராபாத்தின் முறைகெட்ட ஆட்சிச் செயல்கள் அயோத்தியில் நடைபெற்ற செயல்களைவிட எந்த வகையிலும் குறைந்தவைகள் அல்ல. ஆனால், டல்ஹௌசி ஹைதராபாத்தின் விஷயத்தில் அயோத்தியின் விவகாரங்களில் நடந்துகொண்டதைப்போல் செயல்களை மேற்கொள்ளவில்லை. அயோத்தியைப்போல் ஹைதராபாத்தையும் தமது குடையின்கீழ் ஆங்கிலேயர் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால், டல்ஹௌசி அவ்வாறு செய்யவில்லை. மாறாகப் பிரிட்டிஷ் இந்தியப் படை ஹைதராபாத் நிஜாமிற்குத் துணை புரிந்ததற்கு ஈடாக, பீரார் மாநிலத்தை நிஜாமிடமிருந்து பெற்று அதை ஆங்கில இந்தியப் பேரரசுடன் இணைத்துக்கொண்டார். ஆங்கிலேயருக்குக் கைக்கூலியாகவும், அடிவருடியாகவும் இருந்ததற்கான சலுகையாக ஹைதராபாத்தைத் தமது நெகிழ்ச்சியான கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டிருப்பதே நேர்மையானது என்று டல்ஹௌசி கருதினர் போலும். அயோத்தியின் விவகாரத்தில்

அவர் எடுத்த முடிவின்படி மக்களது நல்வாழ்வை மையமாகக் கொண்டே ஆங்கிலேயரின் அரசியல் ஈடுபாடும் அரசாங்கமும் இங்கு நடைபெறும் என்ற ஆரம்ப நல் அறிகுறியை அவர் நிர்வாகம் காட்டியது. ஆனால், அத்தகைய நம்பிக்கையை டல்ஹௌசியின் ஹைதராபாத் நடவடிக்கை நலியவைத்துவிட்டது. அன்று இருந்த சூழ்நிலையில் ஹைதராபாத்தைச் சுதந்திரமான ஓர் அரசாக விட்டுவைத்திராமல் அதைத் தமது அதிகார ஆதிக்கத்தின் குடைக் கீழ் நேரடியாக ஆங்கிலேயர் கொண்டுவந்திருப்பார்களே யானால், பிற்காலத்தில் 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்குப் பிறகு ஹைதராபாத்தினால் பெருத்த தலைவலி சுதந்திர இந்திய அரசுக்கு ஏற்பட்டிருக்காது. இந்தியாவின் இரும்பு மனிதர் வல்லபபாய் படேலின் வலிமையான கரங்களில் நெருக்குண்ட பிறகே ஹைதராபாத் சுதந்திர இந்தியாவின் சமஷ்டி அமைப்பிற்குள் வரவேண்டும் என்ற தலைவிதி இருந்தது போலும். எவ்வாறாயினும், ஹைதராபாத்தின் விஷயத்தில் டல்ஹௌசி பின்பற்றிய 'கட்டுப் படுத்தப்பட்ட பொறுப்பு' (Limited liablity) ஏற்புடையதாக இருக்கவில்லை. எனவே, டல்ஹௌசியினால் பிரிட்டிஷ் அரசியல் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டிருந்த இந்திய அரசுகளை 'இறைமை பெற்ற வேள்புல அரசுகள்' (sovereign principalities) 'சார்நிலை வேள்புல அரசுகள்' (dependancies) என்று இருவகை யாகப் பிரிக்க வேண்டிய நிலை இருந்தது.

டல்ஹௌசியின் தலைமையில் ஆங்கிலேயர் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்திருந்த இந்திய அரசுகளை இறைமையைப் பெற்றவை என்றும் சார்புத் தன்மை வாய்ந்தவை என்றும் இரு வகையான வேள்புல அரசுகளாக வகைப்படுத்திப் பிரித் திருந்த செயல், 'இறைமை (Sovereignity) என்பது பிரிக்கவோ அல்லது துண்டாடப்படவோ முடியாதது' எனப்படும் அரசியல் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவத்திற்கு ஒரு சவாலாய் அமைந்தது. உண்மையில் இந்திய அரசுகள் அவ்வாறு வகைப் படுத்திப் பிரிக்கப்பட்ட செயலானது துண்டிக்கப்பட முடியாத இறைமைக் கோட்பாட்டிற்கு முரண்பட்டதாய் இருந்தது. எனவே, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் அதன் அரசியல் ஆதிக்கத்தின்கீழ் வந்திருந்த இந்திய அரசுகளுக்கும் இடையே இருந்த உறவுகள், அவற்றின் தன்மை, கொள்கைக் கோட்பாடுகள் போன்ற யாவும் தனிப்பட்ட ஓர் அதிகாரத்தில் விரிவாகக் கூறப் படவேண்டிய செய்திகளாகும். அரசியல் கோட்பாட்டின்படி, அரசியல் நிர்ணய சட்ட முறைப்படி அதற்கு அளவிட முடியாத முக்கியத்துவம் உண்டு.

ஆங்கில ஆதிக்கத்தின்கீழ் இந்திய அரசுகள் கொண்டுவரப் பட்டு, அவைகளுக்கு இடையே மேற்சொல்லப்பட்ட பாகுபாடு கடைப்பிடிக்கப்பட்டது என்றாலும், இந்திய அரசுகள் யாவும் ஒப்புவமையற்ற தனித்தன்மை வாய்ந்த ஓரினமான அரசுகளாகவே இருந்தன. எனினும், அவற்றை இந்திய அரசுகள்மீது மேலாதிக்கம் கொண்டிருந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி சுதந்திரமான அமைப்புகளாக நடத்தவில்லை; அப்படி அவற்றுடன் தொடர்புகொண்டு நடந்துகொள்ளவும் இல்லை. இதனாலேயே கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி வெகுவிரைவில் முடிவுற்றுப் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடி ஆட்சியின்கீழ் இந்திய நிர்வாகம் கொண்டுவரப்பட வேண்டியிருந்தது. அதற்குப் பின்னரும் இந்திய அரசுகளின் நிலை அடிமை நாடுகளுக்கு இணையாகவே இருந்ததால், நாட்டு மக்கள் அரசியல் விழிப் புணர்ச்சியைப் பெற்று,தேசீய உணர்ச்சியைத் தேர்ச்சியுறச் செய்து சுமார் அரை நூற்றாண்டுக் காலத்திற்கு ஆங்கிலேயருடன் போராடித் தியாகங்கள் பலவற்றைச் செய்து, இனிய சுதந்திரத் தைப் பெறவேண்டியிருந்தது. இஃது இவ்வாறிருக்க, 19ஆம் நூற்றாண்டின் மையப் பகுதியில் சுதந்திர நிறுவனங்களாக, அல்லது ஆங்கிலப் பேரரசின் உட்பொருள்களாகச் சுதந்திரத்துடன் இந்திய அரசுகள் செயல்படமுடியாத அரசியல் அமைப்புத் தன்மை இருந்தது என்பதை இங்கு மீண்டும் வலியுறுத்துவது மிக்க அவசிய மாகும். இப்படிப்பட்ட அரசுகள் பலவற்றின் தோற்றம் தெளி வற்றதாகவும், அவை வலிமையற்றனவாகவும் இருந்தன. எனவே, இந்திய அரசுகள் பலவற்றிற்குத் தமது பாதுகாவலைக் கொடுத்துத் தமது ஆதிக்கத்தின்கீழ் அவற்றைத் தொடர்ந்து வைத்துக்கொள் வதிலேயே ஆங்கிலேயர் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். வன்முறையைப் பயன்படுத்திப் புரட்சி வாதிகளும், இராணுவ வீரர்களும் தம் அரசர்களுக்கு எதிராகப் புரட்சி நடத்தி இந்திய அரசுகளில் ஆட்சியைக் கைப்பற்றிய செயல்கள் அதிகமாக இருந்தன’ என்று சர் வில்லியம் லீவார்னர் என்பவர் கூறுகின்றார். இத்தகைய அரசுகள் பலவற்றுக்கும்கூட ஆங்கிலேயர் தமது பாதுகாவலைத் தந்தனர். இதனால், அவ் வரசுகளின் தலைவர்கள் பெற்றிருந்த வலிமை, செல்வாக்கு போன்றவைகளையும், சந்தர்ப்பச் சூழ்நிலைகளையும் கவனத்தில் கொண்டு அரசியல் கோட்பாட்டுக்கு ஒவ்வாத அரசுகளின் பாகுபாட்டை ஆங்கிலேயர் செய்யவேண்டி யிருந்தது. இதில் அவர்கள் நிதானத்தையும் கவனத்தையும் செலுத்தவேண்டி இருந்தது. எனவேதான், கரௌலி என்னும் சிறிய இராசபுத்திர அரசைச் சுதந்திரமான வேள்புல அரசாக ஆரம்பத்தில் ஆங்கிலேயர் அங்கீகரிக்கவேண்டி யிருந்தது. பிறழ்வுக் கோட்பாட்டின்கீழ் அதனை முழுமையாகக்

கொண்டுவர முடியவில்லை. வீர தீரம் மிக்க இராசபுத்திரர்களுடன் வீண் வம்புக்குச் செல்ல விரும்பாமலும், அதே நேரத்தில் அதனைத் தமது செல்வாக்கிற்கு உட்பட்ட அரசாகச் செய்ததிலும் தமது விவேகத்தைக் காட்டிக் கரௌளியை சுதந்திரமான வேள்புல அரசாக டல்ஹௌசி நடத்தினர். எனினும், கரௌலி பெற்றிருந்த சுதந்திரத் தன்மையும் பெயரளவில் மட்டுமே இருந்தது. டல்ஹௌசிக்கு முற்பட்ட தலைமை ஆளுநர்கள் அவசர ஆர்வத்தில் தாறுமாறான நிலையில் தமது ஆதிக்க விரிவாக்கச் செயல்களை மேற்கொண்டனர். காரன்வாலிஸ், வெல்லெஸ்லி, ஹேஸ்டிங்ஸ், ஹார்டிஞ்ச் ஆகிய யாவரும் இதற்கு விதி விலக்கல்லர். ஹார்டிஞ்ச் பிரபு 1844-ல் இறைமை பெற்ற அரசாயிருந்த இந்தூரின் அரசரான ஹோல்காருக்கு ஓர் உத்தரவுக் கடிதத்தை எழுதினர். அதன்படி ஹோல்காருக்கு வாரிசு இல்லாது போக நேருமாயின், அவரது அரசு பிரிட்டிஷ் இராச்சியத்துடன் இணைக்கப்பட்டுவிடும் என்று அவசர புத்தியுடன் செய்தி அறிவித்தார். ஆனால், ஹோல்கார் ஒருவரைத் தத்தெடுத்துத் தமது அரசுரிமைக்கான வாரிசாக அவரை நியமிக்க முடியும் என்பதை ஏனோ ஹார்டிஞ்ச் மறந்திருந்தார். இதன் மூலம் தமது பிரிட்டிஷ் இந்தியப் பேரரசின்கீழ் ஏதேனும் ஒரு காரணத்தைக் காட்டி, எவ்வளவு விரைவில் இந்திய அரசுகளைச் சேர்த்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதைச் செய்து முடிக்கவேண்டும் என்ற அவசரம் மிக்க அரசியல் நெறியே ஹார்டிஞ்சினல் பின்பற்றப்பட்டது என்பது புலனுகின்றது. அரசியல் ஈடுபாடுகளில் தீவிரப் பங்கேற்பவர்களுக்கு ஆத்திரமும், அவசரமும் கூடாது. பொறுமையும் நிதானமும், பொதுமக்களின் விருப்பத்தை அறிந்து அரவணைத்துச் செயல்களை மேற்கொள்ளவேண்டிய கவனமும் இருக்கவேண்டும். பொதுமக்களின் கவனத்தைத் தமக்குச் சார்பாகத் திசை திருப்பக் கூடிய திறமையும் அவர்களுக்கு இருக்கவேண்டும். முடிந்த வரையில் சீர்திருத்த நன்மைகளைச் செய்யக்கூடிய விசால அறிவும் இருக்கவேண்டும். அப்பொழுது தான் அரசியலில் கொந்தளிப்பையும், மந்த நிலையையும் ஒருவாறு சமாளித்துத் துன்பத்தை அகற்ற முடியும். இவற்றை எல்லாம் மனத்தில் கொண்டு நோக்கும்பொழுது டல்ஹௌசி நிதானமும், முன் ஜாக்கிரதையும் கவனமும் கூடிய ஓர் இணைப்பு வாதியாக இருந்தார் என்பதை மறுப்பதற்கு இல்லை. எனவே, 'உரிய வாரிசுகள் இல்லாத காரணத்தாலோ அல்லது நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாகவோ பறிமுதல் செய்யப்பட்டால் ஒழிய எவ் வேள்புல அரசுகளையும் தமது பேரரசில் இணைக்கக் கூடாது'[1]

1 Cambridge History of India, Vol V. p. 587

என்ற கொள்கையைக் கடைப்பிடித்துத் தமது செயல்களை டல்ஹௌஸி மேற்கொண்டார்.

மேற்சொல்லப்பட்ட செய்திகளுக்கு ஒப்பச் செயல்கள் மேற் கொள்ளப்பட்டு, பெயரளவில் பலதரப்பட்ட தலைவர்களாகவும், அரசர்களாகவும், ஆட்சியாளர்களாகவும் இந்திய அரசுகளின் உடைமையாளர்கள் இருந்தனர். இதனால், அவர்கள் உண்மைச் செயல்முறையிலும் நடைமுறையிலும் ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கத்திற்கு அடிமை யாக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். இந்திய அரசுகள் பெற்ற இவ்வுருமாற்றம் நமது நெஞ்சை உருக்கக் கூடிய செயலாகத்தான் உள்ளது. ஏதேனும், ஒரு நிலையில் தமது பிரதிநிதிகளை இந்திய அரசுகளின் அவையில் இருக்கச்செய்து, தம்மையன்றி, வேறெந்த அந்நியச் சக்திகளுடனும் இந்திய அரசுகள் எவ் வுறவை வைத்துக்கொள்வதையும், உதவியைப் பெறு வதையும் அவற்றின் சக்திக்கு அப்பாற்பட்டதாக்கித் தமது அரசியல் மற்றும் அரசாங்கச் செயல்களை ஆங்கிலேயர் மேற் கொண்டனர். ஆங்கில அதிகாரிகள், குறிப்பாக டல்ஹௌஸி, இந்திய அரசுகளிடம் கடைப்பிடித்த கொள்கையின் தன்மை எவ்வாறாக இருந்தபோதிலும் அவர்களில் சிலர் சிறப்பு மிக்கவர் களாகவும், புகழ் மிக்கவர்களாகவும் இருந்தனர் என்பதில் ஐயமில்லை. இந்தியர்கள் மனத்தில் மங்காத இடத்தை அவர்கள் பெற்றிருந்தனர் என்பதிலும் ஐயமில்லை. ஏனெனில், 18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாக் கண்டத்திலும் குறிப்பாக இங்கி லாந்து நாட்டிலும், பெருவழக்கிலிருந்த அரசியல் முற்போக்கு அறிவுவாதம், (Rationalism) மக்களுரிமையை மாண்புறச் செய்யும் திறந்த மனப்பான்மையுடைய முற்போக்குத்துவம் ஆகியவை இந்திய அரசாங்கச் செயலில் வில்லியம் பென்டிங்க், டல்ஹௌஸி போன்றவர்களால் தேவையான அளவிற்குப் புகுத்தப்பட்டன. இவைகளுக்குத் துணைபுரியும் வகையில் இராசாராம் மோகன்ராய் போன்ற இந்தியப் பெருமக்களின் நல்லாதரவும், உதவியும் அவர் களுக்குக் கிட்டியது. எனவே, மக்களின் நலனையும் வாழ்க்கை வசதிகளையும் கண்காணித்து அவற்றை உயர்த்தும் வகையில் பல அரசியல், ஆட்சி, சமுதாயச் சீர்திருத்தங்களை ஆங்கிலேயர் இங்குச் செய்தனர். அச் சீர்திருத்தங்கள் நல்ல நோக்கில் புகுத்தப்பட்டன என்றாலும், அவற்றால் இந்திய நாடு பெற்ற பலன்கள் பல என்றாலும், அவை ஒரு வகையில் அநீதிகளாகவும் பின்னர்க் கருதப்பட்டன. எவ்வாறாயினும், இந்திய நாடு முழுவதிலும் ஓர் அதிகாரக் குடையின்கீழ்க் கொண்டுவரப்பட்டு, டல்ஹௌஸியின் காலத்தில் இருப்புப் பாதைகள், செய்திப் போக்குவரத்துச் சாதனங்கள், மேலை நாட்டுக் கலை மற்றும் அறிவியல், கல்விமுறை போன்ற பல பயன்கள்

நமக்கு நல்கப்பட்டன. இந்தியா ஆற்றல் மிக்க ஒரு நாகரிக நாடாய் விரைவில் வளர்ந்து, நாட்டு மக்களிடையே 'நாம் யாவரும் ஒரு நாட்டவர்' என்ற ஒற்றுமையுணர்ச்சி முன்னைவிடப் பன்மடங்கு வலிமை பெற்றது. இதனை நாம் மறுப்பதற்கில்லை; மறைப்பதற்கும் இல்லை. இந்தியாவில் ஒருமைப்பாடு, இந்திய மக்களிடையே முடுக்கிவிடப்பட்ட தேசிய உணர்ச்சி ஆகியவை பெருமளவில் இங்கு வளர்ந்து தேர்ச்சி யடைவதற்குக் காரணமாய் இருந்தது, டல்ஹௌசியின் ஆட்சிக்காலமும் அவரது ஆட்சியும் சீர்திருத்தங் களு மாகும். 'இந்தியாவை நிர்வகித்து ஆட்சி புரிய இங்கிலாந்திலுல் அனுப்பப்பட்டவர்களுள், டல்ஹௌசியின் திறமையையும் புகழையும் மிஞ்சக்கூடிய எவரும் இருக்கவில்லை'. என்று சர் ரிச்சர்ட் டெம்பிள் என்பவர் கூறும் கூற்று ஏற்றுக்கொள்ளத் தக்கதே. ஆனல், டல்ஹௌசிக்குப் பின் வந்த கானிங் பிரபுவின் ஆட்சிக்காலம், டல்ஹௌசியினுல் நிர்ணயிக்கப்பட்டிருந்த நாட்டின் தலைவிதியை நலிவுறுத்தித் தகர்த் தெறியச்செய்தது; அஞ்சத்தக்க, விரும்பப்படாத விளைவுகளைக் கொண்ட பல செயல் களும் நடக்கவேண்டி யிருந்தது. இவற்ருல் ஆங்கிலேயர் மேற் கொள்ளவேண்டி யிருந்த ஆட்சி நோக்கும், கொள்கைப்போக்கும் நாட்டுமக்கள் பெற்றிருந்த அரசியல் போக்கும், அவர்கள் நடத்திய தாக்குதல்களும் புதிய பாதையில் செல்லலாயின. எனினும் எந்த ஐயப்பாட்டிற்கும் இடமின்றி 1857-க்குப் பிறகு புதியதோர் இலக்கை நோக்கி இந்திய நாடும் அரசியலும் உறுதியுடன் நகரத் தொடங்க ஆரம்பித்தன என்று கூறலாம். இவற்றைச் சார்ந்தே இந்திய அரசாங்கமும் அரசியலும் 1857-க்குப் பிறகு அமைய இருந்தன.

இதுகாறும் நாம் கண்டுள்ள செய்திகள் பலவற்றைச் செம் மையாய் உள்ளடக்கிப் பேராசியர் கூப்லாண்ட் அவர்கள் பின் வருமாறு எழுதியுள்ளவற்றை இவ் வதிகாரத்தின் முடிவுரையாய்க் கூறுவது பொருத்தமுடையதாகும். '1857-ல் இந்தியா முழுவதும், பர்மாவும் பிரிட்டிஷ் பேரரசின் செயலெல்லைக்குள் வந்தன. ஆனல், ஒரே ஓர் அரசுமட்டும் இதற்கு விதி விலக்காய் இருந்தது. அவ் வரசு இமயமலைச் சரிவுகளிலுள்ள நேபாள அரசாகும். சீக்கியர்களைப்போல் அச்சமற்ற, பலமிக்க கூர்க்கா இனத்தவர் களின் நாடாக இருந்தது நேபாள அரசு. இவ் வரசு பிரிட்டிஷ் அரசிற்கோ அரசு நிறுவனத்திற்கோ அடிபணியவில்லை. 1814-1816 ஆம் ஆண்டுகளில் நேபாளம், பிரிட்டிஷ்காரர்களுடன் இணை யாக மோதிப் போரிட்டுத் தோல்வியைத் தழுவியபோதிலும் நேபாளக் கூர்க்காக்களை ஒடுக்கவே முடியாது என்று கருதிய ஆங்கிலேயர் நேபாளத்துடன் நேச உடன்படிக்கையைச் செய்து

கொண்டு, அதனைச் சுதந்திரமான இறைமையைப் பெற்ற ஓர் அரசாக ஏற்றுக்கொண்டனர். அத்தோடு பிரிட்டனுடனும் அதன் இந்தியப் பேரரசுடனும் நேபாளம் என்றும் நேச உறவை மேற் கொள்ளக்கூடிய அண்டை நாடாக அதனை ஆங்கிலேயர் ஏற்றுக் கொண்டனர். நேபாளம், காலம் செல்லச் செல்ல மிக்க வலிமை பெற்ற அரசாக மலர்ந்தது. இப்படி நேபாளம் ஒதுங்கிய, இமயம் முதல் கன்னியாகுமரி வரையிலும், சிந்துநதி முதல் ஐராவதி வரை யிலுமான நாடு முழுவதிலும் நேரிடையாகவோ, மறைமுக மாகவோ பிரிட்டிஷ் ஆட்சி 1857ஆம் ஆண்டுவாக்கில் நிறுவப் பட்டது.'

'இப் பெருவெற்றியின் பெருமையை வரலாறு அனுமதித்தே ஆகவேண்டும். ஏனெனில், உலகத்தின் ஒரு பகுதியாக இருந்த இந்தியாவில்மட்டும் பிரிட்டிஷ்காரர்களின் ஈடுபாடுகளும் 1715 முதல் 1857 வரை செயல்பட்டனவாய் இருக்கவில்லை. உலகின் மற்றப் பகுதிகளிலும் வெள்ளையர்களின் சலியா உழைப்புகள் மேற் கொள்ளப்பட்டு வந்தன. அவர்களுக்கு ஐரோப்பாக் கண்டத் திலும் வேறு பல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட போர் களின் காரணமாக நிதி இடர்ப்பாடுகள் இருந்தன. ஆனால், வெகு விரைவில் இவ் விடர்ப்பாட்டினின்றும் அவர்கள் விடுபட்டவர் களாய், ஐரோப்பிய மக்களின் உரிமைகளை நெப்போலியனிட மிருந்து காப்பாற்றுவதில் பெரும் பங்கேற்றனர். நலிந்திருந்த அவர்கள் சமுதாய முறையும் சரி செய்யப்பட்டுத் தேர்ச்சியடைந் திருந்ததால், ஒரு சிறிய தீவைத் தமது தாய்நாடாகக் கொண்டிருந்த ஆங்கிலேயர், இங்கிலாந்தின் வள ஆதாரங்களைப் பயன்படுத்தி, உலக வர்த்தகத்தில் வெற்றிக்கொடி நாட்டினர். அதே நேரத்தில் இங்கிலாந்தில் தோன்றியிருந்த தொழிற் புரட்சி யின் காரணமாகச் சமுதாயத் தீமைகளும் தோன்றியவண்ணம் இருந்தன. இவற்றையெல்லாம் களைந்து, நாட்டு மக்களின் நலனைத் தேர்ச்சி செய்யும் வகையில், முற்போக்குடைய ஜனநாயகத்தைத் தோற்றுவிக்கத் தேவையான அடித்தளங்களை நாட்டியிருந்தனர். ஐரோப்பாக் கண்டத்தில் அவர்களுக்குப் பல தொல்லைகள் இருந்தன. ஃபிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளுடன் போரிடவேண்டிய நிலை அவர்களுக்கு இருந்தது. இதற்கிடையில் கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் இருந்த தம் காலனிகளில் பிரிட்டிஷ் குடியேற்ற வாதிகள் புதிய சமூகங்களை உருவாக்கியவண்ணம் இருந்தனர். இதில் ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட பணச்செலவும் இன்னல் களும் மிக அதிகமாகும். இப்படிப்பட்ட ஒரு சூழல் அவர்களைச் சுற்றியிருந்த பொழுது இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசை

ஸ்தாபித்த செயல் குறிப்பிடத் தக்க ஒரு பெருஞ் சாதனையாகும். உலகில் இந்தியாவைத் தவிர ஏனைய பகுதிகளிலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டக்கூடிய வாய்ப்பு ஆங்கிலேயருக்கு இருந்த போதிலும், அவ் விடங்களிலெல்லாம் அவர்களுடைய பேரரசை நிறுவுவதற்கான திறமையான அதிகாரிகளும் பணியாளர்களும் தேவையான அளவில் இருக்கவில்லை. ஆனால், அவ் வாய்ப்பு அவர்களுக்கு இந்தியாவில் இருந்தது. இந்திய சிவில் பணித்துறையில் பிரிட்டிஷ்காரர்கள் உத்வேக உணர்ச்சியைப் பெற்று, சுய அக்கறையைக் கொண்டு, பேரரசை இங்கு ஸ்தாபிப்பதற்கான ஆர்வத்தையும் விழிப்புணர்ச்சியையும் பெற்றிருந்தனர். எனவே, நல்லதாயினும் கெட்டதாயினும் இந்திய சிவில் பணித்துறை அதிகாரிகள் பெற்றிருந்த விழிப்புணர்ச்சியும், அவர்கள் ஆற்றிய தொண்டும், பங்கும் பிரிட்டிஷ் பேரரசை 1857ஆம் ஆண்டு வாக்கில் இங்கு ஸ்தாபிக்கப் பெருந் துணைபுரிந்த பல காரணிகளுள் முக்கியமான தொன்றாகும். பழங்கால உரோமானியர்களுக்குப் பேரரசை ஸ்தாபித்து ஆளவேண்டும் என்றிருந்த தலைவிதியைப் போல், இந்தியத் துணைக் கண்டத்திலும் தமது பேரரசை நிறுவி ஆளவேண்டும் என்ற தலைவிதி பிரிட்டானியர்களுக்கும் இருந்தது. அப்படிப்பட்ட ஒரு விதி தமது நாடான பிரிட்டனுக்கு இருந்தது என்ற நம்பிக்கையும் ஆங்கிலேயரிடம் இருந்தது.'

1857ஆம் ஆண்டுவாக்கில் பிரிட்டிஷ் இந்தியா அமைக்கப் படாமலிருக்குமாயின், தனிப்பட்ட சுதந்திர இந்தியா அமைந்திருக்கும் என்று சொல்லமுடியாது. வணிக உறவுகள், அரசியல் உறவுகளுடன் இரண்டறக் கலந்து அதன்மூலம் ஆங்கிலேயர் தமது ஏற்ற நிலையைப் பெறுவதாய் இருந்ததை எவராலும் தடுக்க முடியவில்லை. மேலும், அத்தகு ஆதிக்க வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தக்கூடிய சக்தியை எந்த ஆசிய மக்களும் பெற்றிருக்கவில்லை. வர்த்தகம் மற்றும் அரசியல் அதிகாரச் சக்தியைப் பிரிட்டன் பெற்றிருந்ததாலேயே, இந்தியத் துணைக்கண்டத்தில் சாதகச் சூழ்நிலைகளின் காரணமாகவே, ஃபிரான்சிற்கோ ரஷ்யாவிற்கோ கிடைக்கப் பெறாத இந்தியப் பேரரசு பிரிட்டனுக்குக் கிடைத்தது. அவ்வாறு கிடைக்கப் பெற்ற இந்தியப் பேரரசு ஆங்கிலேயரின் தார்மீகப் போட்டிக்குச் சோதனையாகவும் தனது பண்புகளுக்கும் தேசியக் குண நலனுக்கும் ஒரு சவாலாகவும் இருந்தது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிகுறித்துப் பேசிய எட்மண்ட் பர்க் (Edmund Burke) 'இந்தியாவில் நாம் நமது ஆட்சியை அமைத்துள்ளோம். அங்கிருந்த இறைமைச் செயலாட்சியாளர்களால் நாம் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளோம். எனவே, நாம் அங்கிருக்கும் சூழ்நிலையில் நம்மால் இயன்ற நல்லதைச் செய்தேயாகவேண்டும்.

ஏனெனில், ஒரு மனிதனுக்கு அமையக்கூடிய சூழ்நிலையே அவனது கடமைக்கான ஆசான்' என்று கூறினர். இத்தகைய கடுஞ் சோதனையைப் பிரிட்டன் உறுதிப்பாட்டுடன் 19ஆம் நூற்றுண்டில் இந்தியாவில் ஏற்றுக்கொண்டது. உரோமானிய மற்றும் நார்மானிய வெற்றிப் படையெடுப்புகள் ஐயமறப் பிளவுண்டும் பின்தங்கியும் இருந்த தொன்மைக் கால இங்கிலாந்திற்குப் பயன் அளித்ததைப்போல், ஆங்கிலேயரின் இந்திய ஆட்சியும் ஒற்றுமை யற்றுப் பிளவுச் சக்திகளைக் கொண்டிருந்த இந்தியாவிற்குப் பயன் அளிக்காமல் போகுமா என்ன?'[1] இப்படிப் பேராசிரியர் கூப்லாண்ட் கேள்விக் குறியுடன் முடித்திருக்கும் உணர்ச்சி உரை யானது எந்த அளவிற்குப் பிரிட்டிஷ் இந்திய அரசியலும் ஆட்சியும் இந்தியர்களுக்குப் பயன்பட்டவையாய் அமைந்திருந்தன என்பதை நாம் அறிந்துகொள்ளத் தூண்டுவதாய் உள்ளது. மேலெழுந்த வாரியாக, எடுத்த எடுப்பில், கல்வி, கலாசாரம், பண்பாடு, நாகரிகம், அரசாங்கம் மற்றும் ஆட்சி நிறுவன அமைப்புகள், சமுதாய மாற்றங்கள் போன்ற பலவற்றில் ஆங்கிலேயரின் ஆட்சிப் பயனுய்ப் பெற்ற பலன்கள் அதிகம் என்று நாம் துணிந்து கூறி விடலாம். எனினும், 'ஆதாயமற்ற அரசியலோ, ஆட்சியோ இருக்க முடியாது' என்ற காரணத்தாலும் சுயநல சூழ்ச்சிகள் இல்லாத அரசியல் மற்றும் ஆட்சி நடவடிக்கைகள் இருக்கமுடியாது என்ற காரணத்தினுலும் ஆரம்ப காலம் முதல் 1858 வரை பிரிட்டிஷ் ஆட்சியினுல் இந்திய நாடும் அரசுகளும், மக்களும் பெற்ற பலாபலன்களை இனி வரவிருக்கும் சில அதிகாரங்களில் அறிந்து கொள்ளலாம். அவ்வாறு செய்வதன்மூலம் ஒரு சகாப்தம் 1858-ல் முடிந்து, மற்றும் ஒரு புதிய சகாப்தம் தோன்றி யதன் முக்கியத்துவத்தை நாம் முழுமையாக உணர்ந்து கொள்ள முடியும்.

[1] R. Coupland, Britain and India, p. 14—15.

பிரிவு 3

ஒழுங்குமுறைச் சட்டமும் வாரன் ஹேஸ்டிங்ஸின் அரசாங்கமும்

9. ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப் பட்டதற்கான காரணங்களும் சூழ்நிலைகளும்

கி. பி. 1600ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பேரரசி முதலாம் எலிசபெத் அவர்களால் அளிக்கப்பட்ட பட்டயத்தின்மூலம் அமைக்கப்பட்ட ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி கீழைநாடு களில், குறிப்பாக, நம் தாய்நாடாம் இந்தியப் பெருநாட்டில் தனது வணிகச் செல்வாக்கை வளமுள்ளதாக்கி, அரசியல் ரீதியான அதிகார நிலையைப் பெற்று, இந் நாட்டின் அரசாங்கம் மற்றும் அரசியல் வரலாற்றில் புதியதொரு திருப்பத்தைத் தோற்றுவித்தது. இந்தியத் திருநாட்டில் தனது இறைமையையும் அரசியல் செல்வாக் கையும் உறுதிப்படுத்தி விரிவாக்கி உன்னதமானதோர் நிலையை வெகு விரைவில் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றுவிடும் என்று எவரும் எளிதில் எண்ணிக்கூடப் பார்த்திருக்கமுடியாது. எனினும், கிழக்கிந்தியக் கம்பெனி 1740ஆம் ஆண்டு வணிகத்தை அரவணைத் ததோர் அரசியல் நிறுவனமாகத் தனது நேரடி உரிமை மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த இந்தியப் பிரதேசங்களில் தனக்குச் சாதகமாக இருக்கக்கூடிய அரசாங்க முறையினை அமைத்துக் கொண்டது. இதற்கு முதற்படியாக அமைந்ததே இராபர்ட் கிளைவின் இரட்டை அரசாங்க முறையாகும். இவ் விரட்டை அரசாங்கமுறை வெகுவாக விரிவடைந்து, பல மாற்றங்களைக் கொண்ட வகையில் வளர்வதற்குச் சக்தி வாய்ந்த அடித்தளத்தைப் பெற்றிருந்தது. எனவேதான், 1740ஆம் ஆண்டில் தொடங்கி

1858-ல் விக்டோரியாப் பேரரசியின் பிரகடனத்தின்மூலம் (Proclamation) அரசாங்கப் பொறுப்பதிகார மாற்றம் செய்யப்பட்ட காலம் வரை, கிழக்கிந்தியக் கம்பெனி பல வழிகளில், பல விதங்களில் தனது வணிகத்தை வளமாக்கி, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இறைமையினை நிலை நிறுத்தியது என்பதை நாம் முன்னரே கண்டுள்ளோம். 1740 முதல் 1858 வரையிலான இடைப்பட்ட காலத்தில் குறிப்பாக 1773 முதல் முறையான அரசியலமைப்பின் வளர்ச்சியும் தொடர்ச்சியான அரசாங்க முறையும் நம் நாட்டவருக்கு ஆங்கிலேயரால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. அவை, 1947ஆம் ஆண்டில், நாம் இனிய சுதந்திரத்தை அடைந்த நாள் வரையில் உயிரூட்டத்தைப் பெற்றவையா யிருந்தன. எனவே, இந்த உயிரூட்டத்திற்கான அடித்தளத்தையும் முதற்படியையும் கொடுத்தது ஒழுங்குமுறைச் சட்டமெனின், அது மிகையாகாது.

1773ஆம் ஆண்டிற்கு முன்னர் இராபர்ட் கிளைவினால் அமைக்கப்பட்டிருந்த இரட்டை அரசாங்க முறையே கம்பெனியின் ஆளுகை உரிமைக்கு உட்பட்டிருந்த வங்கம், பீஹார் போன்ற இடங்களில் பெரு வழக்கிலிருந்தது. ஆனால், அவ் வரசாங்க முறையில் குற்றம் குறைகள் மிகவும் மலிந்திருந்தன. மேலும், அவ் வரசாங்க முறை குறிப்பிட்டதொரு அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அமையாது இருந்தமையின் அதைப் பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதிக்குப் பின் தோன்றிய அரசியலமைப்பு மற்றும் அரசாங்கக் கட்டுமான வளர்ச்சித் திட்டத்தின் முதற்படி என்று கூறமுடியவில்லை. அப் பெருண்மை 1773-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுச் சட்டமாக வந்த ஒழுங்குமுறைச் சட்டத்திற்கே உரியது. மிகப் பெரும் அரசியல் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ள இச் சட்டம், இந் நாட்டில் அரசியல் விழிப்புணர்ச்சி தோன்றி, படிப்படியாக வளர்வதற்குத் துணை புரிந்தது. மேலும் ஆங்கிலேயர், குறிப்பாக, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தினர் இந்தியர்களைப்பற்றியும், அவர்கள் இந்தியர்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளையும் உணர்ந்து, அவ் வுணர்வை நிலைத்திருக்குமாறு செய்தது. எனவே, இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியின் முதலாவதும் முக்கியமானதுமான ஒரு கட்டமாக ஒழுங்குமுறைச் சட்டம் அமைந்தது. இதுவரை கம்பெனியின் விஷயங்களில் அசட்டையாக இருந்த பிரிட்டிஷ் பாராளுமன்றம், கிழக்கிந்தியக் கம்பெனியின் செயல்களும் நடவடிக்கைகளும் ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற துணிகரமான முடிவிற்கு இச் சட்ட ஆக்கத்தின்மூலம் வந்தது. எனவே, இச் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இயற்றப்படுவதற்கான காரணங்களும் சூழ்நிலைகளும் பலதரப்பட்டவையாய் இருந்து

போதிலும், 'அதன் அரசியல் சட்ட முக்கியத்துவம் குறிப்பிடத் தக்கதாகவும், அளவிட முடியாததாகவும் உள்ளது.'[1] இக்கூற்று பொருள் பொதிந்த கூற்றாகும். ஏனெனில், இதுகாறும் வணிக வர்த்தகச் செயல்களைமட்டும் மையப் புள்ளியாகக்கொண்டு சுற்றிச் சுழன்றுகொண்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனி தனது அரசியல் ரீதியான நடவடிக்கைகளையும் ஆட்சிச் செயல்களையும் உறுதியான முறையில் மேற்கொண்டிருந்ததை ஏற்புடைய ஒரு செய்தியாக இது வெளிப்படுத்தியது. மேலும், முன்னரே கூறியதுபோன்று, கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த கம்பெனியின் நடவடிக்கைகளிலும், அரசாங்கச் செயல்களிலும் தனது கவனத்தைச் செலுத்தாமல் இயங்கிவந்த பிரிட்டிஷ் பாராளு மன்றத்தை முதன் முதலாகத் தனது கடமை மற்றும் பொறுப் புணர்ச்சியைப் புரிந்து செயல்படுமாறு இச் சட்டம் செய்தது. கிழக்கிந்தியக் கம்பெனியால் இந் நாட்டில் பெறப்பட்டிருந்த உடைமைகள் யாவும் அதன் தனிப்பட்ட சொத்துடைமைகளாய்க் கருதப்பட்டு வந்தன. இக் கருத்துப்போக்கிலும் அடிப்படை யானதோர் மாற்றம் ஏற்படுவதற்கு இச் சட்டம் வழி கோலியது. ஏனெனில், முதல் முறையாகப் பிரிட்டிஷ் பாராளுமன்றம், கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களில் எத்தகைய அரசாங்க ஆட்சி முறையும் அமைப்பும் தோற்றுவிக்கப்படவேண்டும் என்பதை நிர்ணயிக்கக்கூடிய உரிமையை இச் சட்டத்தின்மூலம் பெற்றது. அரசாங்க முறையில் பல பரிசோதனைகளை மேற் கொள்ளும் வகையிலும், இந்திய நாட்டின் அரசியலமைப்பு வளர்ச்சி பிரிட்டிஷ் பாராளுமன்றச் சட்டங்களுக்கு ஏற்ப அமையும் வகையிலும் பொருத்தமான முறையை இச் சட்டம் உருவாக்கியது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஒழுங்கு முறைச் சட்டம் எச் சூழ்நிலைகளில், எக் காரணங்களால் இயற்றப் பட்டது என்பதை அறிந்துகொள்ள வேண்டியது மிக இன்றியமை யாததாகும்.

1765ஆம் ஆண்டில் திவானி உரிமையைக் கிழக்கிந்தியக் கம்பெனி பேரரசர் ஷா ஆலமிடமிருந்து பெற்றபின், அதன் நடவடிக்கைகளையும் செயல்களையும் இந் நாட்டவர் மட்டுமன்றி இங்கிலாந்து நாட்டவரும் மிக உன்னிப்பாகக் கவனிக்குமாறு செய்தது. கிழக்கிந்தியக் கம்பெனி பெற்ற திவானி உரிமை அதன் செயல்களை முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் அவற்றின் மீது பிரிட்டிஷ் அரசியல்வாதிகளையும் பாராளுமன்றத்தினரையும்

[1] G. N. Singh, 'Land marks in Indian Constitutional and National development.'

அக்கறை ஆவலையும், கவனத்தையும் மேற்கொள்ளுமாறும் செய்தது. மொகலாயப் பேரரசரின் திவான் என்ற முறையில் கிழக்கிந்தியக் கம்பெனி இந் நாட்டில் செயல்படத் தொடங்கியவுடன் அதனைப்பற்றிய செய்திகளையும் நடவடிக்கைகளையும் பற்றித் தெரிந்துகொள்ளக்கூடிய ஆவல்துடிப்பு கம்பெனியின் தலைமையிடத்து அதிகாரிகளுக்கு மிக அதிகமாக இருந்தது. பிரிட்டிஷ் அரசும் கிழக்கிந்தியக் கம்பெனியின்மூலம் இந்தியாவில் காரியங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அறிந்துகொள்ளக்கூடிய ஆவலுக்கு மட்டுமன்றி, அவசியத்துக்கும் உள்ளாகியிருந்தது. பாராளுமன்றத்தின் உறுப்பினர்களும் தமக்கு வாய்ப்புக் கிடைத்தபொழுதெல்லாம் கம்பெனியின் காரியங்கள் குறித்துப் பாராளுமன்றத்தில் பேசியவண்ணமிருந்தனர்.

பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில், குறிப்பாக 1770ஆம் ஆண்டில், கிழக்கிந்தியக் கம்பெனியைப்பற்றிய பல கேள்விகள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டன. இவற்றின் பயனுய்ப் பாராளுமன்றம் கம்பெனியின் செயல்களையும் நடவடிக்கைகளையும் ஆராய்ந்து பல விசாரணைகளை மேற்கொண்டது. இதனுல், அரச பட்டயத்தின் துணைகொண்டு சுதந்திரமாய்ச் செயல்பட்டுவந்த கிழக்கிந்தியக் கம்பெனி பாராளுமன்றத்தின் உச்ச அதிகாரத்திற்கு உடன்பட்டுக் கட்டுப்படவேண்டிய சூழ்நிலை தோன்றலாயிற்று. மேலும், பிரிட்டிஷ் பாராளுமன்றமும் தனது கட்டுப்பாட்டிற்கு உட்படாத வகையில் இனியும் கிழக்கிந்தியக் கம்பெனி செயல்படுமாறு அனுமதிக்கக்கூடாது என்ற நிர்ப்பந்தமான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றிருந்த அடிப்படைச் சட்டமும், அதனைச் சார்ந்து அமைந்திருந்த கம்பெனியின் அரசாங்கங்களும், அவற்றின் வழி வெளிப்பட்ட நிர்வாகமும் பல குற்றம் குறைகளுக்கு இலக்காகியிருந்தன. இக் குற்றம் குறைகளை அகற்றித் தனது கட்டுப்பாட்டின்மூலம் கம்பெனியின் இந்திய ஆட்சித் தன்மையும் பாணியும் தேர்ச்சியுறுமாறு செய்யப்படவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியைப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் பெற்றது. எனவே, ஆங்கிலோ-இந்திய அரசியலமைப்புக்கும் அரசாங்க வளர்ச்சிக்கும் அடித்தளத்தை அமைத்து, கம்பெனிக்குப் புதியதொரு அடிப்படைச் சட்டத்தைக் கொடுப்பதாய் ஒழுங்குமுறைச் சட்டத்தைப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றவேண்டியது தவிர்க்கப்பட முடியாததாய் இருந்தது. ஏனெனில், பல காரணங்களால் கம்பெனியின் இந்திய அரசாங்க ஆட்சிச் செயல்களும் பிற காரியங்களும் பழுதுபட்ட நிலையில் இருந்ததை 1772ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்

காட்டினர். மேலும், கம்பெனியின் காரியங்கள், செய்திகள் போன்ற யாவும் ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை பாராளுமன்றத்தினரால் வலுவாக்கப்பட்டது. எனவே, பிரிட்டிஷ் பாராளுமன்றம் இனியும் தனது பொறுப்பைத் தட்டிக்கழித்து, தான் ஆற்றவேண்டிய கடமையைப் புறக் கணிக்க முடியவில்லை. தனது பொறுப்புணர்ச்சியையும் கடமையையும் பாராளுமன்றம் வெளிப்படுத்திக் கம்பெனியின் காரியங்களை ஒழுங்குமுறைப்படுத்தப் பின்வரும் மூன்று முக்கியச் செயல் நோக்கங்களும் உட்கருத்துகளும் இருந்தன என்று பேராசிரியர் R. கூப்லாண்ட் கூறுகின்றார்.

'இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்பமே நல்லதாக இருக்கவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவில் பல இடங்களை வென்று பிடித்த செயலின் ஆரம்ப விளைவுகள் யாவருடைய மனத்திலும் காழ்ப்பையும் வருத்தத்தையும் தோற்றுவிப்பனவாய் அமைந்தன. உண்மையிலேயே, கிழக்கிந்தியக் கம்பெனியினால் எக் காரியங்கள் இந்தியாவில் நடந்திருந்தன என்பதை எவரும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இங்கிலாந்திலிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள், அரசியல்வாதிகள், வர்த்தகப் பெருமக்கள் போன்ற யாவரும் கம்பெனியின் இந்தியக் காரியங்கள்மீது கருத்து மிக்க கவனத்தைச் செலுத்தவில்லை. ஆனால், பிளாசிப் போரின் வெற்றி வீரரான இராபர்ட் கிளைவ் மட்டும் அவற்றை நன்கு புரிந்துகொண்டிருந்தார். அவர், வங்கத்தின் இறைமை மற்றும் பல இடங்களின் மீதான ஆதிக்க உரிமை கம்பெனியின் கைப்பிடிக்குள் இருந்ததையும் வணிக நிறுவனமான தமது கம்பெனி அவ் விறைமையைத் தனதாக்கிக் கொள்வதில் எந்த இடர்ப்பாடும் இருக்க முடியாது என்பதையும் உணர்ந்தார். எனவே, பிரிட்டிஷ் அரசு முன்வந்து அப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறி, அப்பொழுது பிரிட்டிஷ் பிரதமராயிருந்த முதிய பிட் (Elder Pitt) அவர்களுக்குக் கடிதமொன்றை எழுதினார். இப்படி, இராபர்ட் கிளைவ் பொருள் செறிவு வாய்ந்த தூண்டுதல்களைப் பிரிட்டிஷ் அரசிற்குக் கொடுத்துவந்தார். இதற்குக் காரணமாய் அமைந்த செய்தி யாதெனின், அப்பொழுது தமது பழைய அமெரிக்கக் காலனிகளிடமிருந்து (American Colonies) பெற முடியாதிருந்த இலாப ஆதாயங்களை இந்தியப் புது மாநிலங்களிடமிருந்து பிரிட்டிஷார் பெற முடியும் என்பதேயாகும். இவருடைய உள் நோக்கங்கள் எத்தகைய கெடுதலான தன்மையைப் பெற்றிருந்த போதிலும், பிரிட்டிஷ் அரசு கம்பெனியின் இந்தியச் செயல்கள் குறித்துப் பொறுப்பேற்கவேண்டும் என்று எடுத்துக் காட்டிய கிளைவ்

அவர்களின் நிலை கொள்கையளவில் சரியானதாகவே இருந்தது. ஏனெனில், பிளாசிப் போரின் முடிவில் கிழக்கிந்தியக் கம்பெனி மிகப் பெரும் இந்தியப் பிரதேசத்தின்மீது தனது ஆதிக்கத்தைச் செலுத்துகின்ற தலையாய அதிகாரச் சக்தியின் (dominant power) தன்மையைப் பெற்றுவிட்டது. அதன்மூலம் அளவிடற்கரிய அரசியல் ரீதியான பொறுப்பையும் கம்பெனி பெற்றுவிட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி வெகு விரைவில் பெற்றுவிட்ட இந்த அதிகார நிலையை இலண்டனிலிருந்த கம்பெனியின் இயக்குநர் களும், பிரிட்டிஷ் அரசியல் வாதிகளும், வர்த்தகப் பெரு மக்களும் நெடுங்காலம் தமது கருத்தில் கொள்ளவில்லை. அரசியல் ஆதிக் கத்தைக் கம்பெனி பெற்றுவிட்டதைத் அவர்கள் கருத்திற் கொள்ளாமல், தமது கம்பெனி இந்தியாவில் வணிக வர்த்தகச் செயல்களை மட்டுமே மேற்கொண்டு இயங்கி வருவதாய் எண்ணி இருந்தனர். இக் குறைபாடுடைய கருத்திற்கு ஒப்பவே இயக்கு நர்கள் கம்பெனியைப்பற்றிய தமது மேலாண்மைச் செயல்களை மேற்கொண்டோராய் இருந்தனர். எனவே, மேற்சொல்லப்பட்ட சூழ்நிலையில், இராபர்ட் கிளைவ் வங்கத்தில் அரசியல் சூதாட்டத்தை மேற்கொண்டார். மறைமுகமாகவேனும் தமது மேலாண்மை ஆதிக்கத்தின்கீழ் வந்துவிட்ட வங்கத்து அரச பீடத்தில் தமது கைப்பாவையாக, வெறும் காட்சிப் பொருளாக அரசர்களை மாற்றி யமைக்கவேண்டிய நிலைக்குக் கிளைவ் இலக்கானர். இதனுல், இராபர்ட் கிளைவின் இத்தகைய போக்கிற்கும், தமது கம்பெனி வணிகத்தையன்றிப் பிற செயல்களை மேற்கொள்ளக் கூடாது என்று இலண்டனிலிருந்த இயக்குநர்கள் கொண்டிருந்த' கொள்கை நோக்கிற்கும் இடையே பெருத்த இடைவெளியும், முரண்பாடுகளும் இருந்தன. இதனுல் தமது தலைமையிடத்து இயக்குநர்களின் கட்டளைகளுக்கும் விருப்பங் களுக்கும் உடன்பட்டும், அதே சமயம் வங்கம், பீகார், ஒரிஸா போன்ற இடங்களில் நிலவிய செயல்பாட்டுத் தன்மைக்கொப்ப ஆட்சிக் காரியங்களை மேற்கொண்டும் இராபர்ட் கிளைவ் காரியங்களை ஆற்றியதால், முரண்பாடுகளும், குழப்பங்களும் மலிந்தன. மேலும், இங்கிருந்தோருக்குக் கம்பெனியின் நிர்வாகம் பற்றிய, முதன்மையான அதிகாரம் என்பதைப்பற்றிய எவ் வையப் பாடும் இருக்கவில்லை. கம்பெனியின் இந்திய அதிகாரிகளும் பிற பணியாளர்களும், கம்பெனியின் மூலம் செயல்பட்ட இந்திய முகவர்களும் (agents) சம்பந்தப்பட்ட பிறரும் கம்பெனியின் தலைமையிடத்துக் கட்டளைகளுக்கும் இயக்கத்திற்கும் கட்டுப் படுத்தப்பட்டிருந்தனர்; கீழ்ப்படியுமாறு செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ வங்கம், பீகார் போன்ற இந்தியப் பிரதேசங்களில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றி

ருந்தனர்; ஆனால், அவற்றிற்கான பொறுப்பைப் பெற்றிருக்கவில்லை. எனவே, கம்பெனியின் இந்திய ஆட்சிப் பிரதேசங்களில் ஆரம்பத்திலேயே நிர்வாகக் குற்றங் குறைகளும் குழப்பங்களும் மிகுந்திருந்தன.'

'இயற்கையாக ஒருவருக்கு அதிகாரமும், அதன்மூலம் பல செயல்களைப் புரிவதற்கு வாய்ப்பு வசதிகளும் இருந்தும், அதே சமயம் அவ் வதிகாரச் செயற்பாட்டுக்கான பொறுப்பை ஏற்காத நிலை இருக்குமாயின், அவர் தமது சுயநலத்திலும், பொருளீட்டச் செயலிலும் இன்னோரன்ன பலவற்றிலுமே அக்கறை செலுத்துவார். இஃது எவரிடமும் பொதுவாகக் காணப்படும் இயற்கைத் தன்மையாகும். இவ் வியற்கைத் தன்மை கம்பெனியின் இந்திய அதிகாரிகளிடமும் பணியாளர்களிடமும் புரையோடியிருந்தது. இராபர்ட் கிளைவ் அமைத்திருந்த இரட்டை அரசாங்க முறையின் தன்மையும் செயற்பாடும் இதனை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.'

'கம்பெனியின் இந்தியப் பணியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தமது சுயப்பொறுப்பில் தனிப்பட்ட வர்த்தகத்தை நடத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் கம்பெனியின் பணித்துறையில் மிகச் சொற்பமான ஊதியத்தைப் பெற்றனர். ஆனால், அதிகாரத்தையும், ஆட்சிச் செல்வாக்கையும் 1750ஆம் ஆண்டுவாக்கில் அதிகமாய்ப் பெற்றிருந்தனர். எனவே அவர்கள் தமது அதிகாரத்தையும் செல்வாக்கையும் தகாதவழிகளில்கூடப் பயன்படுத்திப் பொருளீட்டக் காரியங்களை மேற்கொண்டனர். இதனால், வங்கத்துச் சுதேசி அரசர் தமது அரசியல் அதிகார வரம்பிற்கு உட்பட்டு விதித்த வரி வாய்தாக்களையும், கட்டுப்பாடுகளையும் நிராகரித்துக் காரியங்களை ஆற்றும் நிலையில் ஆங்கிலேயர் இருந்தனர். ஆங்கிலேயர் அடித்த ஆதாயக் கொள்ளைகள் அளவிடற் கரியனவாய் இருந்தன. ஆனால், இத்தகைய வாய்ப்பு வசதிகளைப் பெற்றிராத ஏனைய வணிகர்கள் வங்கத்திலும் பிற இடங்களிலும் வறுமையைத் தழுவி அழியக்கூடிய அவலநிலைக்கு உள்ளாயினர். இந் நாட்டின் செல்வம் பெரும்பாலும் கம்பெனியின் அதிகாரிகட்கும் பணியாளர்கட்கும் தனிப்பட்ட ஆதாயங்களாகச் சென்றுகொண்டு இருந்தமையால், வங்கத்து நிதிநிலை வெகுவாக வீழ்ச்சியுற்றது. இதனால், வங்கத்தில் ஆட்சியைக்கொண்டிருந்த கம்பெனிக்குச் சாதாரணமாகக் கிடைத்திருக்கவேண்டிய வருவாய்கள் வெகுவாய்ச் சரிந்தன. இராபர்ட் கிளைவ் இந் நாட்டைவிட்டு இங்கிலாந்திற்குத் திரும்பியிருந்த காலத்தில் மேற்சொல்லப்பட்ட குற்றம் குறைபாடுகளும் தீமைகளும் வெகுவாக மலிந்திருந்தன. எனவே, தமது கம்பெனியின்

சரிந்துவிட்டிருந்த செல்வ நிலையைச் சரிக்கட்ட வேண்டியும், கம்பெனியின் இந்தியக் காரியங்களைச் சரிசெய்ய வேண்டியும், இராபர்ட் கிளைவை இரண்டாம் முறையாகக் கம்பெனியின் தலைமை அரசாங்கத்தினர் இந்தியாவிற்கு அனுப்பிவைத்தனர். அவரும் வங்கத்தில் பல சீர்திருத்தங்களையும் ஆட்சி நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். ஆனால், அவர் இந் நாட்டைவிட்டுத் திரும்பியவுடன் அவரால் செய்விக்கப்பட்டிருந்த சீர்திருத்தங்கள் சீரிழந்து, 1772ஆம் ஆண்டு வரை அராசகம், குழப்பம், இலஞ்ச லாவண்யம், 'ஊழல், சுரண்டல் ஆகியவற்றிற்கு இலக்கான இருண்ட காலம் கம்பெனியின் ஆட்சியோடு இங்கு நிலவியது.'

இதற்கிடையில், இந்தியாவில் கம்பெனியினரின் செயற்பாடுகள் தாறுமாறாகத் தறிகெட்ட நிலையில் நடந்து கொண்டிருந்ததைப் பிரிட்டிஷ் மக்கள் உணரலாயினர். பிரிட்டிஷ் பாராளுமன்றமும் இனியும் கண்மூடித்தனமாக இருக்கமுடியாத நிலை உருவாயிற்று. எனவே, 'பிளாசிப் போரின் விளைவாக 1757ஆம் ஆண்டில் தனது கம்பெனியின்மூலம் மறைமுக ஆதிக்க அதிகார நிலையைப் பெற்றுவிட்ட இங்கிலாந்திற்கும், இந்தியாவிற்கும் இடையே நிலவிவந்த உறவின் தன்மையில், 1740ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட பதினேழு ஆண்டுகளுக்குள்ளாக மாற்றம் ஏற்பட வேண்டிய அவசியம் எழுந்தது. இத்தகைய மாற்றம் ஏற்படப் பல காரணங்கள் ஒன்றோடொன்று இணைந்து செயல்பட்டவையாய் இருந்தன. அவற்றுள் முக்கியமானது பொருளாதாரக் காரணமாகும். கம்பெனியின் ஆங்கில வணிகர்கள் செருக்குக் கொண்டவர்களாகவும், இந்திய மக்களின் நல்வாழ்வில் அக்கறை காட்டாத மெத்தனமான தன்மையைக் கொண்டவர்களாகவும் இருந்தனர். இந்திய மக்களின் துன்பங்களை எண்ணிப் பார்க்கும் நிலையில் அவர்கள் இருக்கவில்லை. இதற்குக் காரணமாக அவர்களது வணிகச் செயல்கள் வரம்பற்றவையாய் நேர்மையின்றி இருந்ததை அவர்கள் உணரவில்லை. இந்தியாவில் தாம் பெற்றிருந்த வணிக உறவின்மூலம் தமது வள ஆதாயங்கள் என்றென்றும், எவ் வழிகளிலேனும் பெருகிப் பெருகித் தம்மை வந்தடைந்தே தீர வேண்டும் என்ற வேட்கையைக் கொண்டவர்களாய் இருந்தனர். ஆனால், நல்லதோர் அரசாங்கமும் நிர்வாக முறையுமின்றி ஆதாயம் மிக்க நேர்மையான வணிகத்தை மேற்கொள்ள முடியாது என்ற அடிப்படையான அரசியல் பொருளாதார நியதியைப்பற்றியும் இந்தியாவில் அதைத் தாம் பெற வேண்டியிருந்த முக்கியத்துவத்தையும் ஆங்கிலேயர் உணர்ந்திருக்கவில்லை. இவற்றால் கிழக்கிந்தியக் கம்பெனி நல்லதோர் அரசாங்கத்தையும் ஆட்சியையும் ஆரம்ப நிலையில் ஏற்படுத்திக் கொடுக்கத் தவறி

விட்டது.' எனவே, பேராசிரியர் கூப்லாண்ட் அவர்கள் கூறுவது போல் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி மிகவும் கெடுதலான ஆரம்பத்தைப் பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை.

மேற்கூறிய நிலையில் கம்பெனியின் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் நல்லதோர் அரசாங்கத்தையும் நிர்வாகத்தையும் இங்கு ஏற்படுத்திக் கொடுக்கத் தவறியதாலும், அவர்களின் வணிகச் சூதாட்டம் வரம்பற்றிருந்ததாலும் பிரிட்டிஷ் அரசு, கம்பெனியின் இந்தியச் செயற்பாடுகளில் தனது முழுமையான கவனத்தைச் செலுத்தக்கூடிய நிலையில் இருந்தது. இப்படிப் பொருளாதாரக் காரணத்தையொட்டி எழுந்த அரசியல் தேவைக்குப் பக்க பலமாய் உலகின் மற்றப் பாகங்களில் சில நிகழ்ச்சிகளும் நடந்தன. கதிரவனின் மறைவைக் காணுதவாறு பெரும் நிலப்பரப்பைக் கொண்டிருந்த பிரிட்டிஷ் பேரரசு தனது ஆட்சிக்கு எதிராகத் தோன்றிய புரட்சியின் காரணமாக அஃது உலகில் பெற்றிருந்த வணிகச் சமநிலையில் தொய்வைக் காண வேண்டியிருந்தது. தனது அமெரிக்கக் குடியேற்றங்களை (colonies) வெகுவிரைவில் இழந்துவிடக்கூடிய நிலையில் பிரிட்டிஷ் பேரரசு இருந்தது. அதன்மூலம் ஏற்பட ஆரம்பித்திருந்த இழப்புகளை ஈடுகட்டிக்கொள்ளும் வகையில் தனது இந்திய வர்த்தகச் செயல்களின்மீது முனைப்பான கவனத்தைச் செலுத்தவேண்டிய நிலை பிரிட்டிஷ் அரசுக்கு எழுந்தது. இதனை வலியுறுத்தும் வகையிலேயே இங்கிலாந்திலிருந்த அரசியல்வாதிகள் யாவரும் பிரிட்டிஷ் இந்தியாவின் முக்கியத்துவத்தைப்பற்றிப் பேச முற்படலாயினர். இவை யாவும் கம்பெனியின் இந்தியச் செயற்பாடுகளில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் தலையிட்டுத் தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்குக் காரணமாய் அமைந்தன.

'சரியத் தொடங்கிவிட்ட தனது பொருளாதார நிலையை ஈடுசெய்து கொள்ளும் வகையில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இந்திய நாட்டில் கிடைத்த இட உரிமை மற்றும் இறைமை பற்றிய வெற்றிகள் பெருந்துணை புரிவன என்று கருதிய எல்லாத் தரப்பு அரசியல்வாதிகளும், 'மேதகு அரசரின் மகுடத்தில் பதிக்கப்பட்ட ஒளிமிக்க மணிக் கற்களுடன் கூடிய அணிகலனாகப் பிரிட்டிஷ் இந்தியா உள்ளது' என்று பலவாறு புகழ்ந்து பேசவும் முற்பட்டனர். இத்தகு சிறப்பையும் முக்கியத்துவத்தையும் பெற்றிருந்ததாய்க் கருதப்பட்ட பிரிட்டிஷ் இந்தியாவில் கம்பெனியின் செயற்பாடுகளில் பாராளுமன்றம் தலையிடுவதற்கு அரசியல் சட்டமுறையான ஓர் உள்நோக்கமும் இருந்தது.' இஃது அறிஞர் கூப்லாண்ட் எடுத்துக் காட்டும் மூன்று முக்கியச் செயல் நோக்கங்களுள் இரண்டாவதாகும்.

'சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாத மிகக் குறுகிய காலத்திற்குள் கிழக்கிந்தியக் கம்பெனி தமது வணிகச் செயற்பாடுகளை அரசியற் செயற்பாடுகளாக மாற்றிக் கொண்டிருந்தது. இதனால், தமது வணிகச் செயல்களே பிற்பாடு அரசியல் ஈடுபாடுகளுக்கும் செயற்பாடுகளுக்கும் வழிவகுத்துக் கொடுத்தன என்றாலும், கம்பெனியின் தலையாய வணிகக் குறிக்கோள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு, மிகப்பெரும் அளவிலான அரசியலைக் கம்பெனி நடத்த ஆரம்பித்தது. பிரிட்டிஷ் அரசின் குடிமக்களாய் இருந்த கம்பெனியின் ஆங்கில அதிகாரிகளும் பணியாளர்களும் போர் தொடுத்தல், யுத்தங்களைச் சமாளித்தல், இடங்களைப் பிடித்தல், நடைமுறையிலிருந்த சுதேசி அரசுகளைத் தூக்கியெறிதல் போன்ற பல செயல்களைத் தமது கம்பெனியின் அதிகாரத்தின்கீழ் மேற்கொண்டனர். இத்தகைய செயல்களுக்குப் பிரிட்டிஷ் அரச நிறுவனம் எவ்வித அனுமதியையும், அதிகாரத்தையும் கம்பெனிக்குக் கொடுத்திருக்கவில்லை. எனினும், உரோமானியக் குடியரசை (Roman Republic) அழித் தொழித்த புரோ கான்சல்களைப் (Pro consuls) போல், எவ்விதமான அரசியற்சட்டக் கட்டுப்பாடற்ற நிலையில் இராபர்ட் கிளைவும், வாரன் ஹேஸ்டிங்சும் இங்குக் காரியங்களை மேற்கொண்டனர். இத்தகைய பொறுப்பற்றதும், ஒழுங்கற்றதுமான செயல்கள்-அரசியலமைப்பு முறைக்கு உட்படாதிருந்த செயல்கள் - மேற்கொள்ளப்பட்டதற்கு எவ்விதமான முன் நிகழ்வு ஆதாரங்களும் (precedents) இருக்கவில்லை. எனினும், இந்தியாவில் சீர்கேடான நிலையில் தமது காரியங்களை மேற்கொண்டிருந்தமையால், தமது சொத்து சுகங்கள் அதிகரிக்கப்பட்டு, பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் உறுப்பினர் பதவிகளையே (seats) விலைபேசி வாங்கக்கூடிய அளவிற்குப் பெருஞ் செல்வந்தர்களாய் - இலட்சாதிபதிகளாகவும், கோடீஸ்வரர்களாகவும்-நபாபுகள் (nabobs) என்றழைக்கப்பட்ட கம்பெனியின் அதிகாரிகளும் பணியாளர்களும் தமது தாயகத்திற்குத் திரும்பியவண்ணம் இருந்தனர்.'

'தமது தாயகமாம் இங்கிலாந்து நாட்டிற்குத் திரும்பிய கம்பெனியின் இந்தியப் பணியாளர்களும் அதிகாரிகளும் பெற்றிருந்த ஏற்றம் மிகு செல்வத்தன்மை அந் நாட்டு அரசியல்வாதிகளின் சிந்தனையைத் தூண்டி, அவர்கள்மீது சீற்றத்தையும் பொறாமையையும் கொள்ளுமாறு ஜசெய்தது. போர் செய்வதாயினும், பொருளீட்டுவதாயினும் ஒரு நாட்டின் குடிமக்கள் தமது நாட்டு அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட நிலையில் செயல்படவேண்டும் என்பது பன்னெடுங்காலமாக... பன்னாட்டு அரசியலில் பரம்பரையாய்ப் பேணப்பட்டு வந்துள்ள நெறியாகும். இப் பாரம்பரிய நெறியைப்

பிரிட்டிஷ் குடிமக்களான கம்பெனியின் அதிகாரிகளும் பிறரும் இந்தியாவில் பின்பற்றினரா என்றால், அறவே இல்லை என்ற விடைதான் கிடைக்கின்றது. அவர்கள் இந்திய மண்ணில் தொடுத்த போர்களும், சண்டை சச்சரவுகளும், அவர்கள் இங்கு ஈட்டிய செல்வங்களும், இன்னோரன்ன பிறவும் தமது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு ஒப்பவேனும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டனவா எனில், அவைகளுக்கும் 'இல்லை' என்ற விடையே கிடைக்கின்றது. எனவே, தமது சொந்த நாட்டு அரசியல் சட்ட முறைமைக்கு அப்பாற்பட்ட நிலையில் ஆங்கிலேயர் ஆற்றிய காரியங்களின் அவலக் கேடு இங்கு நிலவியது. இந்த அவலக் கேடு விரைவில் சரிசெய்யப்படவேண்டும் என்ற விழிப் புணர்வு இங்கிலாந்தில் விரைந்தெழுந்தது.' இவ் விழிப்புணர் விற்கு அரசியல் சட்ட ரீதியான வேறு சில காரணங்களும் இருந்தன. அவற்றைப்பற்றித் தனியாகக் காணலாம். ஏனெனில், அவை இங்குக் கூப்லாண்ட் அவர்களின் கருத்தோட்டங்களுக்குத் தடையாய் அமையும்.

ஆங்கிலேயர் இந்தியாவில் மேற்கொண்டு வந்த செயற்பாடு களைப் பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வருவதற்குத் துணை புரிந்த மூன்றாவது உள்நோக்கம் மிகவும் எளிதானதும், பெரும்பாலோரால் விழையப்பட்டதும் ஆகும். இதனைப் பேராசிரியர் கூப்லாண்ட் 'நேர்மை உணர்வின் தகைமை' (sense of decency) என்று கூறுகின்றார். கம்பெனியினரால் இந்தி யாவில் மேற்கொள்ளப்பட்ட சீர்கேடான செயல்கள், ஒழுங்கு முறையற்ற அநியாய நடவடிக்கைகள், நேர்மையற்ற அநாகரிகக் காரியங்கள் ஆகியவற்றைக் குறித்துப் பல வதந்திகள் உலவின. இவ் வதந்திகளில் இருந்த உண்மையை அறிந்து கொள்ளும் வகையில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் 1772ஆம் ஆண்டில் இரு குழுக்களை (committees) அமைத்தது. இக் குழுக்கள் கம்பெனியின் நடவடிக்கைகளை ஆராய்ந்து, பிளாசிப் போருக்குப் பிறகு இந்தி யாவில் எத்தகைய நிலவரம் நிலவியது என்பதைத் தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டின. கிழக்கிந்தியக் கம்பெனியின் செயல்களை ஆராயும்பொருட்டு இரு விசாரணைக் குழுக்களை அமைக்கவேண்டிய அடிப்படைச் சட்டரீதியான அவசியம் பாராளு மன்றத்திற்கு உண்மையில் இருக்கவில்லை. எனினும், தனது நேர்மைப் புலனின் காரணமாக, பண்புநல உணர்வின் அடிப் படையில், நேர்மை உணர்வுத் தகைமையின்பொருட்டு இரு குழுக்களைப் பாராளுமன்றம் அமைத்தது சிறப்பான செயலாகவே அமைந்தது. இக் குழுக்கள் தமது அறிக்கைகளைச் (reports) சமர்ப்பித்த சமயம் இராபர்ட் கிளைவ் பாராளுமன்றத்தின் மேல

வையான பிரபுக்கள் சபையில் (House of Lords) உறுப்பினராய் இருந்தார். பாராளுமன்றக் குழுக்களின் அறிக்கைகள் எவ்வாறு கம்பெனியின் அதிகாரிகளும் பணியாளர்களும் இந்தியாவிலிருந்து பெருஞ்செல்வத்தைத் திரட்டிவந்தனர் என்பதை எடுத்துக் காட்டின. உதாரணமாக, கம்பெனியின் கைப்பாவையாக இருந்த வங்கத்து நவாபிடமிருந்து இராபர்ட் கிளைவ் மட்டும் 2,50,000 பவுன்களுக்கு ஈடான பெருந்தொகையினையும், 30,000 பவுன்களுக்கு ஈடான தாவரச் சொத்தையும் ஒவ்வோர் ஆண்டும் பெற்றவாறு இருந்தார் என்பதையும், அவரது இந்திய ஆட்சி முறையும் செயல்களும் அலங்கோலமானவையாய் இருந்தன என்பதையும் அவ் வறிக்கைகள் அறிவித்தன. மேற்கூறிய குழுக்களின் அறிக்கைகள் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் அவையின் விவாதத்திற்கு வந்தபொழுது இராபர்ட் கிளைவின் ஆட்சி முறையும், அவரது ஆட்சி நடத்தையும் கடுந்தாக்குதலுக்கும் விமரிசனத்திற்கும் உள்ளாயின. எனவே, இனியும் இழிவான செயல்கள் வேறெவராலும் மேற்கொள்ளப்படலாகாது என்ற முறையில் கம்பெனியின் இந்திய நடவடிக்கைகளையும் காரியங் களையும் ஒழுங்குமுறைப்படுத்தவேண்டும் என்ற முடிவைப் பாராளுமன்றம் பண்புநல உணர்வின் அடிப்படையில் எடுத்தது.

மனிதாபிமான இயக்கத்தின் அடிப்படையில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் மேற்சொல்லப்பட்ட பண்பு நல உணர்வைப் பெற்று, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உந்தலை வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆரம்ப கால இந்திய ஆட்சிச் செயல்களின் தன்மையும் போக்கும் கொடுத்தன. தனிப்பட்ட முறையில் நல்லவராக இருந்தபோதிலும், தம் மீது அரசியல் துரோகக் குற்றச்சாட்டு (impeachment) சுமத்தப்படும் வகையில் வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆட்சிச் செயல்கள் இங்கு அமைந் திருந்தன. பிரிட்டிஷ் ஆதிக்கத்தையும் அரசியல் ஏற்றத்தையும் ஆழப் பதித்து, அவற்றின் பரப்பு வெகுவாக விரிவடையவேண்டும் என்ற வெறிப்போக்கையும், தாம் ஈட்டிய சொந்தச் செல்வங் களையும்கூடச் செலவழித்து அவ் வெறிப்போக்கைத் தணித்து வெற்றியைக் காணவேண்டும் என்ற நடத்தையையும் வாரன் ஹேஸ்டிங்ஸும் அவரது ஆட்சியாளர்களும் கொண்டனர். எனவே, வாரன் ஹேஸ்டிங்ஸின்மீது பாராளுமன்றத்தின் பொதுமக்கள் அவையில் நடந்த அரசத் துரோகக் குற்றச்சாட்டு விவாதங்கள், கம்பெனியினர் தாம் இட இறைமையும் உரிமையும் கொண்டிருந்த இந்தியப் பிரதேசங்களில் எவ்வாறு தாறுமாறாக, முறை கெட்ட வகையில் காரியங்களை ஆற்றி வந்தனர் என்பதை வெளிப்படுத்தின. அது மட்டுமன்றிப் பிரிட்டிஷ் குடிமக்களான

ஆங்கிலேயர் இரண்டு விதமான நடத்தைத் தரத்தைப் (standard of behaviour) பெற்றிருந்தனர் என்பதையும் அவ் விவாதங்கள் வெளிப்படுத்தின. வில்லியம் கோல்ட்ஸ்மித் என்னும் இலக்கிய அறிஞர், 'பிரிட்டிஷ் பெண்டிர், ஒன்று தமது கணவர்க்கென்றும் மற்ருென்று பிறருக்கென்றும் இரண்டு முகங்களைக்கொண்டு உள்ளனர்' என்று நகைச்சுவையாய் எழுதியுள்ளார். ஆனால், கம்பெனியின் ஆங்கில ஆண்மக்களும் அதற்கு விதி விலக்கல்லர் என்பதைப்போல், கம்பெனியினர் தமது தாய் நாடான இங்கிலாந்திலிருந்த பொழுது ஒரு விதமான நடத்தைத் தரத்தையும், வெளி நாடான இந்தியாவில் அரசியல் ஆதிக்க அதிகாரத்தை அரவணைத்துச் செயல்பட்டபோது மற்ருெரு விதமான நடத்தைத் தரத்தையும் பெற்றிருந்தனர். இத்தகைய நடத்தைப் போக்கு மனிதாபிமானத் தன்மைக்கும், அரசியல் நீதிக்கும் நன்னயமற்றது; புறம்பானது என்பது யாவராலும் உணரப்பட்டது. எனவே, 'கீழை நாடுகளில் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றிருந்த அரசாங்க பரிபாலனம், நிர்வாகம் ஆகியவைபற்றிய அரசியல் அமைப்பு வரம்பற்றதாயும் வல்லாட்சித் தன்மை கொண்டதாயும் உள்ளது; இந் நிலையை மாற்றிக் கம்பெனியின் இந்திய ஆட்சி, நீதி நேர்மையான விதிகளுக்கு உட்பட்டு இயங்குமாறு செய்யவேண்டியதை நமது தலையாய கடமையாகக் கொள்ளவேண்டும்'[1] என்று பொது மக்கள் அவையில் இளைய பிட் (Younger Pitt) இனிதுரைத்தார். இப்படிப் பல செய்திகள் பாராளுமன்றத்தினர் பண்பு நல உணர்வைப் பெறத் துணைபுரிந்தன.

'இப்படிப்பட்ட பண்பு நல உணர்வு உத்வேகமாக உதித்தெழுந்தபோது, அதன் தன்மை, திசை ஆகியவற்ருேடு பிரிட்டிஷ் பொது மக்களின் கருத்தும் வேகமாகத் திரண்டெழுந்தது. 1770ஆம் ஆண்டுவாக்கில் இங்கிலாந்தில் மிகப் பெரும் மனிதாபிமான இயக்கம் ஒன்று (Humanitarian Movement) சக்தி பெற்றதாய் வளர்ந்து வந்தது. இவ் வியக்கம் அமெரிக்கச் சுதந்திரப் போர், ஃபிரெஞ்சுப் புரட்சி ஆகியவற்றின் அரசியல் தத்துவ நியதிகளையும், கிறித்துவ மதத்தின் உலகேற்புடைய தத்துவ நியதியான சகோதரத்துவத்தையும் போற்றிப் போதித்தது. எனவே, இவ் வியக்கம் கடவுளின் கனிவு, இனம், நிறம் ஆகியவற்றின் பெயரால் உலக மக்களை ஐரோப்பியர் வஞ்சித்துக் கொடுமைப்படுத்தக் கூடாது என்ற மனச்சாட்சியைப் பிரிட்டிஷ் பொதுமக்கள் பெறுமாறு செய்தது. மேலும்,

[1] Hansard, XXVI (1786), p. 110

அப்பொழுது ஆப்பிரிக்க நாடுகளில் ஐரோப்பியரால் பேணப்பட்டு வந்த அடிமை முறையினை (slave system) இவ் வியக்கம் சாடியது. இவற்றின் பயனாய் 1772-ல் பிரிட்டிஷ் மண்ணிலிருந்து அடிமை முறை ஒழித்து அகற்றப்பட்டது.'[1]

1772-ல் அடிமை முறையினை-மக்களை மக்களே அடிமையாக நடத்தும் மதிப்பற்ற ஈனச் செயலை-ஒழித்துவிட்ட பிரிட்டிஷ் அரசு, இந்திய மக்கள் கம்பெனியின் அரசின்கீழ்ப் பெற்றுவந்த இன்னல்களைப் புறக்கணிக்கக் கூடிய நிலையில் இருக்கவில்லை. ஆப்பிரிக்கக் காலனிகளில் மக்கள் ஐரோப்பிய உடைமையாளர்களால் அடிமைகளாக நடத்தப்பட்டதைப்போல் கிழக்கிந்தியக் கம்பெனியினரால் இந்திய மக்கள் அவ்வளவு கொடுமைகளுக்கு உட்படுத்தப்படவில்லை யென்றாலும், ஆங்கிலேயரின் சுரண்டல் ஏகாதிபத்தியத்திற்கும், நிர்வாகக் கொடுமைகட்கும் அவர்கள் ஆட்பட்டிருந்து அல்லலுற்றனர் என்பதில் ஐயமில்லை. இதனை எட்மண்ட் பர்க், ஷெரிடன் போன்ற அரசியல் மேதைகள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எடுத்தியம்பினர். எட்மண்ட் பர்க், இந்தியாவில் நிலவிய சூழ்நிலையையும், அதற்கொப்பக் கம்பெனியின் இந்திய அரசாங்கங்கள் காரியங்களை இங்கு மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருந்ததையும் தமது கருத்தில் கொண்டிருந்த போதிலும், 'பிரிட்டிஷ் அரசு தனது கம்பெனியின்மூலம் தனது கடமையைப் பொறுப்புணர்ச்சியோடு நீதியின் அடிப்படையில் மேற்கொள்ளத் தவறுமாயின் அதனால் பிரிட்டிஷ் தேசத்தின் வரலாற்றுப் புகழும் அரசியல் சிறப்பும் ஈடுசெய்யப்பட முடியாத அவமானத்திற்கு உள்ளாகிவிடும்' என்று எச்சரித்தார். இதன்மூலம் பிரிட்டிஷ் பாராளுமன்றம் கம்பெனியின் செயல்களில் தனது கவனத்தைச் செலுத்தி, மனிதாபிமான நோக்கத்துடன் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தூண்டுதலைப் பெற்றது.

மேலும், 'இந்தியாவில் இட இறைமை மற்றும் அதிகாரத்தை ஆங்கிலேயர் பெற்றிருந்ததால், அவர்களுக்கெனச் சில பொறுப்புகளும், கடமைகளும் இருக்கவேண்டும்; அக் கடமைகள், பொறுப்புகள் ஆகியவற்றின் தன்மை பாராளுமன்றத்தால் பொருள் விளக்கம் செய்யப்படவேண்டும் என்று பாராளுமன்றத்தினர் உணரக்கூடிய காலம் 1772-ல் நெருங்கிவிட்டது.'[2] ஆள்வோர், ஆளப்படுவோர்; ஆதிக்கவாதிகள், சார்பு மக்கள் (dominant and dependent people) என்ற உறவு நிலை தோன்றிவிட்ட தன்மையும், அதனால், ஆங்கிலேயரால் ஆளப்பட்டுவந்த

1 P. E. Roberts.

2 Ibid

மக்களும் பிரதேசங்களும் இங்கிலாந்தின் பொறுப்பாண்மைப் பொருளாகப் (trust) பேணப்படவேண்டும் என்ற கடப்பாட்டு உணர்ச்சியும் பாராளுமன்றத்தினரின் மனத்தில் பதிந்தன. எனவே, 'இந்திய மக்கள்மீது செலுத்தப்பட்டுவந்த அரசியல் அதிகாரம் முழுவதும் முடிவில் அவர்களின் நன்மைக்காகவும் ஆதாயத்திற்காகவுமே செயல்படுத்தப்படவேண்டும்' என்று எட்மண்ட் பர்க் அவர்கள் எடுத்துக்கூறி, கம்பெனியின் இந்திய விவகாரங்கள் யாவற்றையும் பாராளுமன்றம் ஒழுங்குமுறைகளுக்கு உட்படுத்தவேண்டும் என்ற பண்பு நல உணர்வைப் பெறுமாறு செய்தார்.

பேராசிரியர் கூப்லாண்ட் எடுத்து இயம்பியுள்ள மூன்று முக்கிய, அடிப்படையான செயல் நோக்கங்களை மனத்தில் கொண்டு ஆராயின், கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய நடவடிக்கைகளையும் விவகாரங்களையும் ஒழுங்குமுறைகளுக்கு உள்ளாக்கும் வகையில், ஒழுங்குமுறைச் சட்டத்தை இயற்றுவதற்கு அவர் கூறியிராத வேறு பல காரணங்களும் இருந்தன என்பதும் விளங்கும். எனவே, பேராசிரியர் கூப்லாண்ட் அவர்கள் மேற்போக்காகக் கூறியுள்ள செய்திகளோடு, ஏனையவற்றையும் அரசியல் முக்கியத்துவத்தின் காரணமாய் ஈண்டுக் காண வேண்டியது அவசியமாகும்.

நாம் முன்னோர் இடத்தில் அறிந்துள்ளதைப்போல், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் இட இறைமையைப் பெற்றுவிட்ட செயல் பிரிட்டிஷ் அரசியலமைப்புக்கும், வழக்காறுகளுக்கும் பொருந்தாததாய் இருந்தது. பிளாசி மற்றும் பக்ஸார் போர்களில், தான் பெற்ற வெற்றிகளின் பயனாய்க் கம்பெனி ஆட்சித் தன்மை வாய்ந்த அதிகாரச் சக்தியாக மாறி வங்கம், பீஹார், ஒரிசா போன்ற இடங்களில் நடைமுறையான தனது ஆட்சியை (Defacto rule) நிறுவியிருந்தது. ஆனால், அச் செயல் சட்டமுறையில் ஏற்புடையதாய் (dejure) அமைந்திருக்கவில்லை. இதனால், 1764ஆம் ஆண்டுக்குப் பின்னர் வணிக நிறுவனமாய் இருந்த கம்பெனி, அரை குறையான இறைமை படைத்த அரசியல் மற்றும் ஆட்சி அமைப்பாக மாறிய செயல் சில முக்கியமான சட்டப் பிரச்சினைகளையும், சிக்கல்களையும், விளைவுகளையும் தோற்றுவித்தது. நிகழ்வுமுறையில் தன்னை ஓர் ஆட்சி பரிபாலனம் செய்யக்கூடிய அமைப்பாய் மாற்றிக்கொண்டதால் கிழக்கிந்தியக் கம்பெனி பிரிட்டிஷ் அரச நிறுவனத்தோடும் பாராளுமன்றத்தோடும் எத்தகைய அரசியலமைப்பு முறையான உறவுகளைப் பெற்று இயங்கவேண்டும் என்ற பிரச்சினையும்

சிக்கலும் தோன்றின. இங்கிலாந்து நாட்டில் அன்று வழக்கத்திலிருந்த சட்டத்தின்படி, அந் நாட்டுக் குடிமகன் தனது அரச நிறுவனத்தின் பெயரிலேயே எந்த நிலத்தையும் பிரதேசத்தையும் பெற்றிருக்க முடியும் என்று இருந்தது. ஆனல், கம்பெனியினர் இந்தியப் பிரதேசங்களை அவ்வாறு பெற்றிருக்கவில்லை. எனவே, இங்கிலாந்து நாட்டின் அரசியலமைப்பின்படியும், சட்டத்தின் படியும் கம்பெனி இந்தியாவில் பெற்றிருந்த உரிமை மற்றும் இறைமைநிலை ஒழுங்கு மீறியதாக (anomalous) இருந்தது. இதனல் பிரிட்டிஷ் அரசு சிக்கலான அரசியற் சட்டப் பிரச்சினையைச் சந்திக்கவேண்டிய தாயிற்று. இதற்கான தீர்வு காணப்படவேண்டிய அடிப்படை அவசியமும் எழுந்தது. மேற் கூறப்பட்ட சிக்கலான நிலை இரண்டு தீர்வுகளை (solutions) வெளிப் படுத்துவதாயும் இருந்தது. அவை பின்வருமாறு:

1772ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் வசமிருந்த இந்தியப் பிரதேசங்களைப் பிரிட்டிஷ் அரச நிறுவனம் கைப்பற்றி அவற்றைத் தன்வசமாக்கிக் கொண்டிருக்க வேண்டும். அல்லது கம்பெனியின் வசமிருந்த பிரதேசங்களைத் தன்வசப்படுத்திக் கொள்ளாது, கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம், சலுகைகள் ஆகியவற்றில் எத் தலையீட்டையும் செய்யாது அரச நிறுவனம் ஒதுங்கி இருந்திருக்க வேண்டும். ஆனல், கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களைப் பிரிட்டிஷ் அரச நிறுவனம் தன்வசமாக்கிக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்க வில்லை. ஏனெனில், பதினெட்டாம் நூற்றுண்டில் இங்கிலாந்து நாட்டில் ‘சொத்தின் புனிதத் தன்மை’ (sacredness of property) பற்றிய கோட்பாடும் நியதியும் பெரிதும் போற்றப்பட்டனவா யிருந்தன. எனவே, தன் மக்களான கம்பெனியினரின் சொத்து உரிமையில் தலையிட்டு, அதன் சொத்துடைமைகளைத் தன் வசமாக்கிக் கொள்ளக்கூடிய தவறுன நிலையிலும் அதன்மூலம் மக்களது எதிர்ப்பைச் சமாளிக்கக்கூடிய நிலையிலும் பிரிட்டிஷ் அரசு இருக்கவில்லை. அதேசமயம், நாம் இதுவரை அறிந்திருக்கும் சூழ்நிலைச் செய்திகளின் அடிப்படையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் தாறுமாறுன செயல்களிலும் நடவடிக்கைகளிலும் தனது கட்டுப்பாட்டைச் செலுத்தாது, அதனை இனியும் சுதந்திரமாக இயங்குமாறு அனுமதிக்கக்கூடிய நிலையிலும் பிரிட்டிஷ் அரசு இருக்கவில்லை. ஏகாதிபத்தியப் பேரரசு என்றும் சாம்ராச்சியம் என்றும் பெயர் பெற்றிருந்த இங்கிலாந்து நாட்டின் புகழுக்குக் களங்கம் ஏற்பட்டுவிடக்கூடிய பேராபத்தும் இருந்தது. இதற்கு ஏற்றுற்போல், இந்தியாவில் தமது ஆளுகைக்கு உட்பட்டிருந்த இடங்களான வங்கம், பீஹார், ஒரிசா ஆகிய

வற்றில் கம்பெனியினர் தீய ஆட்சியை நடத்தி வந்தனர். ஆனுல், பேராசிரியர் டாட்வெல் அவர்கள் கூறுவதுபோல். 'இங்கிலாந்தில் கம்பெனியினர் செலுத்திவந்த பெரும் தீர்வைத்தொகைகளின் மூலம், அவர்களின் இந்திய அக்கறைகள் ஆதரிக்கப்பட்ட நிலேயிலும் இருந்தன. இதனுல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலும் இந்தியக் காரியங்களில் அக்கறை கொண்டிருந்தோரான செல்வந் தர்களின் ஊழல் பரவி, அதன்மூலம் இங்கிலாந்து நாட்டின் நிர்வாகத்திலும் ஊழல்கள், குற்றங்கள் ஆகியவை ஊடுருவிவிடும் என்ற பேரச்சமும் இருந்தது.'[1] மேலும், கிழக்கிந்தியக் கம்பெனி யானது பிரிட்டிஷ் வர்த்தகத்தை இந்தியாவில் விரிவாக்கு வதற்கான சாதாரண ஒரு வணிக நிலேயமாகச் செயல்படாது, கீழை நாடுகளில் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் இறைமையும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முழு அதிகாரமும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்குமோ என்று எண்ணும் வகையில் ஓர் அரசியல் சக்தியாக அது மாறி விட்டிருந்ததைப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பல அறிஞர்கள் அச்சத்துடன் எடுத்துக் கூறினர். அதேசமயம், இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றிருந்த நிலேயாலும் தன்மையாலும் அதன் இந்திய ஆட்சியின்மீது தனது கட்டுப்பாட்டைச் செலுத்தவேண்டிய முக்கியத்துவத்தையும் கட்டாயத்தையும் பெற்றதாய் இருந்தது. எனவே, மேற்சொல்லப்பட்ட செய்திகள் யாவற்றையும் தனது கவனத்தில் கொண்டு அரசியல் அமைப்பு முறையானதொரு சாதனத்தின்மூலம் தனது கட்டுப்பாட்டைக் கம்பெனியின் மீது நிலேநிறுத்தவேண்டும் என்ற சிறந்ததொரு தீர்வைப் பாராளுமன்றம் மேற்கொண்டது. இத் தீர்வின் அடிப் படையிலேயே கம்பெனி பெற்றிருந்த பிரதேச உரிமை மற்றும் அதன் அரசியல் அமைப்புச் சட்டத்தின் பொருந்தாத் தன்மை ஆகியவற்றிற்கு இடையேயான பிரச்சினேயைச் சமாளிக்கவேண்டிய கட்டாயம் பாராளுமன்றத்துக்கு இருந்தது. இக் கட்டாயத்தைக் கொடுப்பதாய் அமைந்தவற்றுள் இராபர்ட் கிளேவினுல் வங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த இரட்டை அரசாங்கத்தின் சீர்கேடுகள் தலேயாயவையாகும்.

வங்கத்தில் இராபர்ட் கிளேவினுல் அமைக்கப்பட்டிருந்த இரட்டை அரசாங்கம் அரசியற்கோட்பாட்டு ரீதியாகப் பெருங் குழப்பத்தையும், நிர்வாகச் சீர்கேடுகளேயும் தோற்றுவித்திருந்தது. இவ் வரசாங்க முறையின்கீழ்க் கம்பெனியின் நபாபுகள் (Nababs) என்றழைக்கப்பட்ட இடைத் தரகர்களான அதிகாரிகள் செய்த

1 Dodwell. Cambridge History of India, Vol. VI, p. 183

அட்டூழியங்களுக்கு அளவே இல்லாதிருந்தது. மேலும், இவ் விரட்டை அரசாங்க முறை கம்பெனியின் அதிகாரிகட்கு இடையே யான கடமைகளை விவரணம் செய்து விளக்கிக் கூறியிருந்ததே தவிர, அக் கடமைகளின் செயற்பாட்டிற்கான மூல ஆதாரமா யிருந்த பொறுப்பைப்பற்றி எதையும் கூறவில்லை. அதிகாரத் திற்கும் அவ் வதிகாரத்தின் செயற்பாடுபற்றிய பொறுப்பிற்கும் இடையே இணைப்பும் பிணைப்பும் இருக்கவில்லையாதலால் நிர்வாகச் சீர்கேடுகளும் குழப்பங்களும் அதிகரித்து மக்களின் வாழ்வு நிலை குலைந்து போயிற்று. கம்பெனியின் நபாபுகளால் வங்கத்து மக்களும் பிறரும், பெருங் கொடுமைகட்கு உட்படுத்தப்பட்டனர். ஆட்சி அமைப்புமுறையின்படி இரட்டை அரசாங்கத்தின்மூலம் நிர்வாகச் சீர்கேடுகளும் குழப்பங்களும் எவ்வாறு நிலவின என்பது குறித்து ஆல்ஃபிரட் லையால் என்பவர் பின்வருமாறு எழுதி யுள்ளார். 'வங்கத்தில் நடைபெற்ற அரசாங்கம் தீயதோர் அரசாங்கமாய் இருந்தது. அத் தீய அரசாங்கத்தின் முக்கியப் பிரிவினராய் இருந்த குற்றவியல் நீதிமன்றத்தினரும், காவல் துறை மற்றும் வருவாய்த்துறை ஆகியவற்றின் அதிகாரிகளும் சர்ச்சை களுக்கும் எதிர்ப்புகளுக்கும் இலக்கான அக்கறைகளில் (interests) ஈடுபாடு கொண்டவர்களாய்ச் செயல்பட்டனர். மேற்கூறிய அதிகாரிகள் வேறுபாடுடைய ஆட்சி முறைகளின்கீழ் எதிர்ப்பு மனப்பான்மையுடன் செயல்பட்டனர். மேற்கூறிய ஒவ்வொரு பிரிவினரும் தனிப்பட்டதும் எதிர்ப்பு முறைகளுக்கு உள்ளானது மான தகாத கவனத்தைச் செலுத்தியவர்களாய் இருந்தனர். நன்னியதிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிராத ஆட்சி முறையின்கீழ் நயமற்ற நடவடிக்கைகளை அவர்கள் மேற் கொண்டவாறு இருந்தனர். இப்படிச் செயல்பட்ட வங்கத்து இரட்டை அரசாங்க முறையானது ஒருமித்ததோர் ஆட்சிக் கோட்பாட்டிற்கு உட்பட்டதாக இருக்கவில்லை. மேலும், இவ் வரசாங்க முறைக்கு உறுதுணையாய் அமையும் வகையில் ஆக்க முறையான சட்டமோ (positive law) நேர்மையான நீதிமுறையோ இருக்கவில்லை. இதனல், இந் நாட்டு மக்கள் கம்பெனியின் நிர்வாகக் கொடுமைகட்கும் அநீதிகட்கும் இலக்காயினர். இவை களேயன்றிக் கம்பெனியின் பணியாளர்கள் மேற்கொண்டிருந்த தனிப்பட்ட வர்த்தக வாய்ப்புகளின் காரணமாக ஊழல்கள், வணிகப் பெருங்குற்றங்கள், குழப்பங்கள் போன்றவை வரம் பற்றவையாயிருந்தன. மக்களைக் கசக்கிப் பிழிந்து வரிகளைத் திரட்டிய கொடுங்கோன்மையும் நாசமிக்க கொள்ளையடிப்புச் செயல்களும் வெகு சாதாரணமாக மேற்கொள்ளப்பட்டன. ஆட்சி அதிகாரம், ஆட்சிப் பொறுப்பு ஆகியவற்றிற்கு இடையே பொருந்தாத் தன்மையும் வரம்பற்ற நிலையும் இருந்ததால்,,

வங்கத்து இரட்டை அரசாங்க முறை குற்றங் குறைகளுக்கு இலக்காகி, மக்களையும் கொடுமைகளுக்கு உள்ளாக்கி யிருந்தது.'[1] இத்தகைய குற்றங் குறைகளுக்கு இலக்காகி மக்களைக் கொடுமை களுக்கு உள்ளாக்கியிருந்த வங்கத்து இரட்டை அரசாங்க முறை வலிவற்ற தன்மையையும் பொலிவற்ற போக்கையும் கொண் டிருந்தது என்பதை இராபர்ட் கிளைவை யடுத்து வங்கத்து ஆளுநராய் ஆட்சி புரிந்த வெரல்ஸ்ட் (Verelst) என்பவர்கூடக் கூறி வருந்தினர்.

மேற்கூறிய செய்திகளுக்கொப்ப நிராதரவான நிலையில் நம் மக்கள் கொடுமையாய் அவதிப்பட்டதையும், கம்பெனியின் ஆட்சி முறையின் காரணமாக நம் நாட்டில் நிலவிய நிலவரங்களையும் பிரிட்டிஷ் அரசு, குறிப்பாக அதன் பாராளுமன்றம் புறக்கணிக்கக் கூடிய நிலையில் இருக்கவில்லை. மேலும், வங்கம், பம்பாய், சென்னை ஆகிய மாநிலங்கள் இந்தியாவில் கம்பெனியின் ஒரே அரசாங்க ஆட்சித் தலைமையின்கீழ் வராமல் இலண்டனில் இருந்த இயக்குநர்கள் மன்றத்தோடு நேரிடையாய்த் தொடர்பு கொண்ட வையாயும், பொறுப்புகளை ஏற்றவையாயும் சுதந்திரமாய்ச் செயல்பட்டு வந்தன. இதனுல், அவை ஒவ்வொன்றும் இந்தியச் சுதேசி அரசுகளுடன் (Native States) ஒருங்கிணைப்பற்ற நடவடிக்கைகளையும் (un co-ordinated actions), போர்ச் செயல் களையும் மேற்கொண்டவாறிருந்தன. இதனுல், தமது சுய இச்சைக் கொப்பவும், தமது சுயப் பொறுப்பின் கீழும் இந்தியச் சுதேசி அரசுகளுடன் போர் அல்லது நட்புப்பற்றிய நடவடிக்கைகளை ஒன்றித்த ஒரு கொள்கையில்லாமல் மேற்கொண்டனர் ஆங்கி லேயர். எனவே, கிழக்கிந்தியக் கம்பெனியின் நிலையே அச்சத்திற்கு ஆளாகி, அது பிரிட்டிஷ் பேரரசின் பெயரும் புகழும் கெடுவதற்கும் காரணமாயிற்று. எனவே, பிரிட்டிஷ் பாராளுமன்றம் கம்பெனியின் நடவடிக்கைகளில் தலையிட்டு, அவற்றை ஒழுங்கு முறைகளுக்குள்ளாக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாகியது.

1757-ல் பிளாசிப் போரில், தாம் பெற்ற வெற்றிக்குப் பிறகு கம்பெனியினர் எல்லா வழிகளிலும் செல்வங்களையும் ஆதாயங்களையும் திரட்டுவதிலேயே வெகு முனைப்பாயிருந்தனர். அவற்றைத் திரட்டிக் கொள்வதற்கான திட்டங்களைத் தீட்டி, அவைகளை மிகுந்த தைரியத்துடன் ஈடேற்றியவண்ணமும் இருந் தனர். அவர்கள் அநாகரிகமான, அகோரப் பேராசைக்கு ஆளாகி, இந் நாட்டு மக்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொள்ளை

[1] Alfred Lyall, 'British Dominion in India'.

அடித்தனர். அப்பொழுது நாட்டில் நிலவிய பஞ்ச நிலைகளிலும் கூட, மக்களைப் பராரிகளாக்கித் தமது சுய லாபங்களைச் சுருங்கா வண்ணம் பெருக்கிக்கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். இப்படிப் பல வழிகளிலும், முறைகளிலும் அவர்கள் செல்வங்களைத் திரட்டிய செய்திகளும் கதைகளும் இங்கிலாந்து நாட்டில் வெகுவாகப் பரவின. மேலும் அவர்களை இங்கிலாந்து நாட்டவரே வெறுத்துத் தூற்றும்படியாக, அவர்கள் இந்தியாவை விட்டுத் தமது தாயகம் திரும்பிய பின் மேற்கொண்ட பல காரியங்கள் அமைந்தன. கம்பெனியின் அதிகாரிகளாகவும் பணியாளர்களாகவும் இந்தியாவில் பணிபுரிந்து, இங்கிலாந்திற்குத் திரும்பியவுடன் அவர்கள் மாடமாளிகை வாசிகளாகவும், ஊதாரி வாழ்க்கையை மேற்கொண்டவர்களாகவும், எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்குப் பாராளுமன்றத் தேர்தல்களில் பெருந் தொகைகளைச் செலவழித்துப் போட்டியிடக் கூடியவர்களாகவும் இருந்தனர். இவை யாவும் கம்பெனியினர் இந்திய நாட்டில் எத்தகைய வாழ்க்கையை நடாத்தினர் என்பதை மக்கள் புரிந்து கொள்ளுமாறு செய்தன. மேலும், அவர்களின் அரசியல் செல்வாக்கு எவராலும் விழையப்படாத வகையில் அதிகரித்த வண்ணமும் இருந்தது. இவை யாவும் கம்பெனியின் இந்தியப் பணியாளர்களான ஆங்கிலேயர்மீது தமது தாய் நாட்டவர்களையே வெறுப்பையும் கோபத்தையும் கொள்ளுமாறு செய்தன. இவற்றால் தோன்றிய பொதுமக்கள் கருத்து, கிழக்கிந்தியக் கம்பெனியின்மீது பிரிட்டிஷ் பாராளுமன்றம் தனது கவனத்தைச் செலுத்தி, அதன் காரியங்களை ஒழுங்குமுறைகளுக்கு உள்ளாக்குவதற்கான காரியத்தை மேற்கொள்ளுமாறு செய்தது.

அடுத்து, 1765ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனி திவானி உரிமையை முகலாயப் பேரரசர் ஷா ஆலமிடம் இருந்து பெற்ற செயல் இலண்டனிலிருந்த கம்பெனியின் உடைமையாளர்களின் உள்ளங்களில் பேருவகையைத் தோற்றுவித்தது. ஏனெனில், திவானி உரிமையின்கீழ்க் கம்பெனியின் ஆட்சி வலைக்குள் சிக்கி இருந்த இந்தியப் பிரதேசங்கள் வளமான செல்வத்தை வழங்கித் தரும் சுரங்கங்களாக இருக்குமென அவர்கள் எண்ணினர். இதனை ஆதரிக்கும் வகையில், வங்கத்தின் மொத்த வருவாய் ஆண்டொன்றுக்கு நாற்பது இலட்சம் பவுன்களாக இராபர்ட் கிளைவினால் மதிப்பிடப்பட்டது. இம் மதிப்பீட்டையொட்டி வங்கத்தின் நிகரவருமானம் (net income) 16,50,000 பவுன்களாக இருந்தது. இத்தகைய பேராதாய மிக்க நிலை கம்பெனி பெற்ற திவானி உரிமையின்மூலம் நிலவியதால் கம்பெனியின் வருவாய்களும் ஆதாயங்களும் மேற்கொண்டு அதிகரிக்கும் நல்வாய்ப்புகள்

இருந்தன. இவற்றால் கவரப்பட்டும் உந்தப்பட்டும் கம்பெனியின் உடைமையாளர்கள், தாம் செய்திருந்த முதலீட்டுக்கு அதிகமான ஊதியப் பங்குகளைக் (dividends) கம்பெனி கொடுக்கவேண்டு மென்று ஆர்ப்பரிக்க முற்பட்டனர். ஆனால், கம்பெனியின் இயக்குநர்கள் அந்த ஆர்ப்பரிப்பை விரும்பவில்லை. எனினும், இயக்குநர்களின் விருப்பமற்ற போக்கையும் மீறி, 1766-ல் ஆறு சதவிகிதமாக இருந்த உடைமையாளர்களின் ஊதியப் பங்கு பத்து சதவிகிதமாகவும் (10%), பின்னர் 1767-ல் 12½% ஆகவும் உயர்த்தப்பட்டது. இதனால், கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலதன இருப்பில் (stock) பணம் செலுத்திப் பங்குகளைப் பெறுவதை ஒரு சூதாட்டச் செயலாக பிரிட்டிஷ் செல்வந்தர்கள் மேற்கொண்டனர். அதிக இலாபத்தைப் பெறும் நோக்கில், அதிகமான பங்குகளைப் பெற்றதால், கம்பெனியைச் சார்ந்திருந்த அதிகார முறையான ஆதாய முற்சலுகைகளையும் (patronages) அவர்கள் பெற்றனர். 1767ஆம் ஆண்டுவாக்கில் கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலதன இருப்புகளில் பங்குகளைப் பெற்றிருந் தோரின் எண்ணிக்கை 267 ஆக உயர்ந்தது. ஆனால், அதே நேரத்தில் பலர் எதிர்பார்த்ததற்கு மாறாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வருவாய் வெகுவாகச் சரியத் தொடங்கிற்று. ஏனெனில், நாம் முன்னரே அறிந்துள்ளதைப்போல், ஒருபுறம் கம்பெனியின் பணியாளர்கள் தமது கம்பெனி பெற்றிருந்த அரசியல் செல்வாக்கு மற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தனிப்பட்ட முறையில் பொருளீட்டும் செயலை மேற்கொண்டனர். இதனால், கம்பெனிக்குக் கிடைக்கவேண்டியிருந்த உரிய வருவாய்கள் கிடைக்காமல் போயிற்று. மறுபுறம், கம்பெனியின் அரசாங்கங்களோ இங்கு மேற்கொண்ட போர்கள் பலவற்றிற்கு அதிகமாகச் செலவினங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இவற்றின் விளைவாகக் கம்பெனியின் பங்குதாரர்களின் ஊதியப் பங்குகள் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுக்கும் வகையில் குறைந்தன. அதேநேரத்தில், தான் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு அறிவித்ததற்கேற்ப 12½% ஊதியப் பங்குகளை உடைமையாளர் களுக்குக் கொடுக்கவேண்டியிருந்த கடப்பாட்டைக் கம்பெனி பெற்றிருந்தது. இதனால், கடனாளியான கம்பெனி திவாலாகிவிடும் நிலையில் இருந்தது. மேலும் ஏறத்தாழ அறுபது இலட்சம் பவுன்களை இங்கிலாந்து நாட்டுப் பெருவங்கியிடமிருந்து கம்பெனி கடனாய்ப் பெற்றிருந்தது. இத்தகைய நிலையில், கம்பெனியின் நடவடிக்கைகளில் பாராளுமன்றம் தலையிட்டு அதன் நடவடிக்கை களை ஒழுங்குபடுத்துவதை உடைமையாளர்கள்கூட மேற்போக்காக வரவேற்றனர்.

மேற்சொல்லப்பட்ட செய்திகளுக் கொப்பக் கிழக்கிந்தியக் கம்பெனியின் செல்வநிலையும் பொருளாதார நிலையும் ஒருபுறம் நிலவியிருந்த போதிலும், மறுபுறம் ஆரம்ப காலத்தில் கம்பெனி பெற்றுவந்த ஆதாயங்களில் ஒருபங்கைத் தானும் பெறவேண்டும் என்ற பேராசை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தையும் பற்றியிருந்தது. ஒரு விதத்தில், பாராளுமன்றத்தின் பேராசைப் பெரும்போக்கே, அது பின்னர்க் கம்பெனியின் நடவடிக்கைகளில் தலையிடவேண்டிய நிர்ப்பந்தத்தையும் தோற்றுவித்தது. பிரிட்டிஷ் பேரரசின் உள் நாட்டுப் பொருளாதார நிலையும் வர்த்தக வருவாய்களும் வெகுவாக வீழ்ந்திருந்த நேரம் அது. தனது அமெரிக்கக் காலனிகள் இங்கிலாந்தின் வருவாய் ஊற்றுகளாக இருந்து வற்றத் துவங்கியிருந்த சமயம் அது. மேலும், இங்கிலாந்து நாட்டின் மக்கள்மீது புதுமையான வரிகளை விதிக்கக்கூடிய நிலையிலும் பிரிட்டிஷ் அரசாங்கம் 1772-ல் இருக்கவில்லை. எனவே, தனது நிதி நிலையையும், தனது மக்களின் இன்னல்களையும் சரிசெய்து சீர்படுத்திக் கொள்வதற்குக் கிழக்கிந்தியக் கம்பெனியையே பிரிட்டிஷ் அரசு நோக்கியது. இதன்படி, கிழக்கிந்தியக் கம்பெனி திவானி உரிமையை இந்தியாவில் பெற்றுவிட்டவுடன், அஃது ஆரம்ப காலங்களில் ஈட்டிவந்த பேராதாயங்களிலும், இலாபங்களிலும் பெரும்பங்கைப் பெறப் பாராளுமன்றம் பேராவல் கொண்டது. கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வர்த்தகத்தின் பெயரால் முற்றுரிமைச் சலுகைகளைப் (monopolistic privileges) பட்டயச் சட்டங்கள்மூலம் வழங்கியிருந்ததைக் காரணம் காட்டி, தனக்குக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக்கொண்டு கம்பெனியின்மீது வரிவிதித்து, அதனைக் கசக்கிப் பிழிந்து, ஒவ்வோராண்டும் தனது நிதிக் கோரிக்கைகளைப் பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகரித்தவண்ணம் இருந்தது. பின்னர், 1766ஆம் ஆண்டில் கம்பெனியின் உடைமையாளர்கள் மற்றும் அதன் ஆட்சி மேலாண்மையர்களுடன் பிரிட்டிஷ் அரசாங்கம் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டு, அதன் முடிவில் ஒரு சட்டத்தை 1767-ல் இயற்றியது. இச் சட்டத்தின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனி இதுகாறும் பெற்றிருந்த இந்தியப் பிரதேச உடைமைகளையும் பிற சலுகைகளையும் மேலும் அஃது அனுபவித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், தனக்குத் தாராளமாக வழங்கப்பட்ட இச் சலுகைக்கு ஈடாகக் கம்பெனி ஏராளமாகப் பணத்தைத் தனது ஆண்டுத் தொகையாகப் பிரிட்டிஷ் கருவூலத்திற்குக் கொடுக்கவேண்டியிருந்தது. அத் தொகை 4,00,000 பவுன்களாக நிர்ணயிக்கவும் பட்டது.[1] இவ்வாறு பிரிட்டிஷ் அரசால் நிர்ண

1 G. N. Singh 'Land marks in Indian Constitutional and National Development'—p. 12

யிக்கப்பட்ட ஆண்டுத்தொகை நீதி நியாயமற்றதாய் இருந்தது. கம்பெனியின் உடைமையாளர்களும் அதனுடன் தொடர்பு கொண்டிருந்த பல அரசியல்வாதிகளும் பிரிட்டிஷ் அரசு தனது பாராளுமன்றத்தின் மூலம் நிர்ணயித்த தொகை பெரியதொரு அரசியல் மோசடியும் மிரட்டிப் பறிக்கும் செயலுமாகும் என்று கூறினர். ஆனால், தான் நிர்ணயித்திருந்த தொகையைக் கம்பெனியிடமிருந்து வசூலிப்பதிலிருந்து பிரிட்டிஷ் அரசு கிஞ்சித்தும் விட்டுக் கொடுக்கவில்லை. இதனாலும், வேறுபல காரணங்களாலும் தனது வருவாய்களை இழந்து கடன்களுக்கு ஆளாகியிருந்த கம்பெனி, மேற்கொண்டு கடன்தொகைகளைப் பெறுவதற்கு இங்கிலாந்தின் பெருவங்கியை நாடியது. ஆனால், அவ் வங்கியோ கம்பெனிக்கு மேற்கொண்டு எக் கடனையும் கொடுக்கமுடியாது என்று மறுத்துவிட்டது. எனவே, 1772-ல் கம்பெனி மீண்டும் திவாலாகிவிடக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனைச் சமாளிக்கும் வகையில் கம்பெனி பத்து இலட்சம் பவுன்களைக் கடனாய்த் தருமாறு விண்ணப்பித்து பிரிட்டிஷ் அரசின் கருவூலத்தை வேண்டியது. இதுகாறும் தான் பெற்றுவந்த வருவாய்க்காகப் பிரிட்டிஷ் அரசு, குறிப்பாக அதன் பாராளுமன்றம், சிறிதும் பொருத்தமற்ற வகையில் அரசியல் அதிகாரங்களையும் ஆட்சி நலனையும் பெற்றுவிட்ட கம்பெனியின் முறையற்ற செயல்களுக்குப் போர்வையிட்டு வந்ததைக் கைவிடக்கூடிய தருணம் வந்துவிட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் நொடித்துப் போயிருந்த நிலையை நல்லதொரு வாய்ப்பாகக் கருதித் தான் செய்துவிட்ட தவறைத் திருத்திக்கொள்வதற்கான வாய்ப்பை எதிர்நோக்கி யிருந்த பாராளுமன்றம் உடனடியாகக் கம்பெனியின் காரியங்களில் தலையிடக்கூடிய நிலையை 1772-ல் பெற்றது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் காரியங்களில் பாராளுமன்றம் தலையிட்டு, அவற்றை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கு மேற்கூறிய பல காரணகளேயன்றி, உடனடியான காரணமாய் அமைந்த இரு நிகழ்ச்சிகளும் இருந்தன. அவை, கம்பெனியினர் இந்தியாவில் ஹைதர் அலியுடன் போரிட்டுக் கண்ட பெருந்தோல்வியும் அதனால் பிரிட்டிஷ் பேரரசுக்கு ஏற்பட்ட புகழ்ச்சரிவும், வங்கத்தை ஆட்கொண்ட பேரழிவுப் பஞ்சமும் ஆகும். 1769-ல் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தினர் மைசூர் அரசராயிருந்த ஹைதர் அலியுடன் போரிட்டுத் தோல்வியைக் கண்டனர். இந்தியப் பேரரசர் ஒருவரால் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்ட அடி, ஆங்கிலேயரின் உயர்மதிப்பிற்கும் புகழுக்கும் கொடுக்கப்பட்ட பேரடியாய் இருந்தது. மேலும், அத் தோல்வி கம்பெனியின் சென்னை அரசாங்கத்தின் மதிப்பை வெகுவாய்க் குறைத்தது. எனவே,

இதனைச் சரிசெய்ய வேண்டிய உள்ளுணர்வு ஆங்கிலேயருக்கு-பாராளுமன்றத்தினருக்கு - இருந்தது. இதைத் தொடர்ந்து 1770-ல் இந்திய அரசாங்கத்திற்கு ஆட்சி முறையில் ஏற்பட்ட பெருந்தோல்வியும் அதனால் விளைந்த இழிவும் இதற்கு மற்றொரு காரணமாகும். வங்கத்திலும் பீகாரிலும் எழுத்தில் வடித்துக் காட்ட முடியாத அளவில் மக்கள் பேரின்னல்களுக்கு ஆளான நிலையில், பெரும்பஞ்சம் ஒன்று தோன்றியது. ஓர் அரசு எத் தன்மைத்தாயினும், அதனைச் சார்ந்து அமையும் அரசாங்கம் எவ் வகைப்பட்டதாயினும், அவ் வரசாங்கத்தின்மூலம் வெளிப் படும் நிர்வாகம் பஞ்சகாலத்தில் நீதி நேர்மையுடன் நடத்தப்பட வேண்டும் என்பது அடிப்படையான அரசாங்கக் கோட்பாடாகும். இக் கோட்பாட்டிற்கு மாறாகப் பெரும்பஞ்சம் ஏற்பட்டிருந்த 1770-ல் தான் கம்பெனியினரின் நிர்வாகம் மிகவும் கீழ்த்தரமாய், நீதி நியாயமற்று இருந்தது. கொதிக்கும் எண்ணெய்ச் சட்டி யிலிருந்து கொடுந்தீயில் தள்ளப்பட்ட நிலைக்கு வங்காளம் மற்றும் பீகாரின் மக்கள் இலக்காகி யிருந்தனர். எவ்வாறெனில், மொத்த-ஜனத்தொகையில் பெரும்பாலோர் அழிந்துவிடக் காரணமா யிருந்த அப் பஞ்ச நிலையிலும்கூட, கம்பெனியின் அரசாங்கத்தினர் மற்றவர்களைக் கசக்கிப் பிழிந்து வரிகளைத் திரட்டியும் பொருள் களை ஈட்டியும் கொடுங்கோல் ஆட்சி நடாத்தினர். 'ஆங்கில வணிக அதிகாரிகளைக் கண்டமாத்திரத்தில் மக்கள் அஞ்சி ஓடும்படி யாகவும், கடைக்காரர்கள் தத்தம் கடைகளை இழுத்து மூடக்கூடிய அச்ச நிலையிலும் இருந்தனர்.[1] 1770-ல் தோன்றிய பஞ்சத்தால் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குக் கால்கோளை அமைத்துக் கொடுத்த வங்கமே பேரழிவுக்கு உள்ளாயிற்று. பேராசிரியர் A.B. கீத் அவர்களும் கம்பெனியின் ஆட்சியாளர்கள் நடத்திய அநீதியான நிர்வாகம் எவ்வாறு கொடுங்கோன்மை மிக்கதாய் இருந்தது என்று கூறி, கம்பெனியின் அவல ஆட்சிக்கும், இயற்கைச் சீற்றத்திற்கும் இலக்காகி யிருந்த இந் நாட்டு மக்களின் நிலை பிரிட்டிஷ்காரர்களின் கருத்திற்கு எட்ட வெகுகாலம் பிடிக்கவில்லை என்று எழுதியுள்ளார். கம்பெனியின் கொடுங்கோலாட்சிக்கு இலக்காகி யிருந்த மக்களுக்கு, ஆதரவு காட்டும் வகையில் இங்கிலாந்து நாட்டு மக்களின் பொதுக் கருத்தும் (public opinion) உருவாகி, பாராளு மன்றம் கம்பெனியின் இந்திய நடவடிக்கைகளில் தலையிட்டுத் தகுந்த செயலை மேற்கொள்ளும்படி கட்டாயப்படுத்தியது.

இவை தவிரக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியலமைப்பும் (constitution) பல தீமைகளைக் கொண்டதாய் இருந்தது. கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த அரசியலமைப்பின்படி, அதன்

[1] G. N. Singh

தலைமை நிர்வாகமும் முழுச் செயற்பாடும் இலண்டனிலிருந்த உடைமையாளர்கள் மன்றத்திடமும் இயக்குநர்கள் மன்றத்திடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. உடைமையாளர்களின் மன்றத்தில் கம்பெனியின் மூலதன இருப்பில் பங்குகளைப் பெற்றிருந்தோர் உறுப்பினர்களாய் இருந்தனர். இயக்குநர்கள் மன்றத்தில் 24 உறுப்பினர்கள் இருந்தனர். இவ் வியக்குநர்கள் ஆண்டிற்கு ஒரு முறை உடைமையாளர்கள் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இயக்குநர்கள் மன்றத்திற்கான தேர்தல்கள் நடப்பதற்கு முன், குறைந்தது ஆறு மாதங்களுக்கேனும் ஐந்நூறு பவுன்களுக்கு ஈடான இருப்பைப் பெற்றிருந்த எப் பங்குதாரரும் வாக்களிக்கும் தகுதியைப் பெற்றிருந்தார். அப்பொழுது இயக்குநர் பதவி என்பது பெருஞ்செல்வாக்கு மிக்கதாய் இருந்தது. பலருக்குச் சலுகைகளை வழங்கக்கூடிய பதவி நிலையைப் பெற்றதாய் இயக்குநர்களின் அந்தஸ்து இருந்தது. எனவே, அத்தகு செல்வாக்கு மிக்க பதவிகளுக்குத் தமக்கு வேண்டியவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு என்றே, பலர் போட்டியிட்டுக் கொண்டு, பங்குகளை விலைக்கு வாங்கும் செயலில் அக்கறை காட்டினர். இச் செயல் மேலும் வலுவடையும் வகையில்தான், செல்வம் திளைத்த நிலையில் கம்பெனியின் அதிகாரிகளும் பணியாளர்களும் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குத் திரும்பிய செயல் அமைந்தது. எனவே, இயக்குநர்கள் மன்றத்தில் தமது ஆட்களைப் பெற்றிருப்பதன்மூலம் இந்தியாவிலிருந்து என்றென்றும் பேராதாயங்களைப் பெறமுடியும் என்று கருதி அவர்கள் தகாத வழிகளில் தமது பணத்தைப் பெருமளவில் செலவழித்து இயக்குநர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஈடுபட்டனர். இதனால், நல்லரசியலுக்குச் சிறிதும் ஒவ்வாத வகையில் ஒட்டுகளை விலைகொடுத்து வாங்கும் தீயபழக்கம் பெருவழக்கில் இருந்தது. மேலும், கம்பெனியின் பணியாளர்கள் தமது இந்தியக் காரியங்களுக்கு இயக்குநர்கள் மன்றத்திற்குப் பொறுப்பேற்றவர்களாக இருந்தனர். இயக்குநர்கள் மன்றமோ உடைமையாளர்களின் மன்றத்தின் ஒட்டுரிமைக்கும் செல்வாக்கிற்கும் இலக்காகி யிருந்தது. இதனால் இந்தியாவில் நடைபெற்ற கம்பெனியின் தீய செயல்களுக்குக் காரணமாய் இருந்தோர்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை உருவாயிற்று. இத்தகைய குறைகளை இனியும் அனுமதிக்கக்கூடாது என்ற உணர்வைப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் பெற்றது. எனவே, கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகம் மற்றும் நடவடிக்கைகள் குறித்துப் பொருத்தமான விசாரணையை நடத்தவேண்டும் என்றும், பல குற்றம் குறைகளுக்கும் காரணமாயிருந்த கம்பெனியின் அரசியல் அமைப்பைச் சரியானதொரு அரசியல் நிர்ணயச் சட்டமாக இயற்ற வேண்டும் என்றும் பாராளுமன்றத்தினர் கோரினர்.

மேற்சொன்னவாறு வலுவான கோரிக்கை எழுந்தபோதிலும், பிரிட்டிஷ் பாராளுமன்றம் உடனடியாக, அவசரப்பட்டு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தான் ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்கு முன் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இரண்டு குழுக்களை அமைத்து, அவற்றின்மூலம் கம்பெனியின் இந்திய நிர்வாகச் செயல்களைப்பற்றிய விவரங்களை அறிய முற்பட்டது. 1772-ல் பதவியிலிருந்த நார்த் பிரபுவின் (Lord North) அரசாங்கம் பொதுமக்களின் விருப்பத்திற்குச் செவி சாய்ப்பதாக இருந்தது. மேலும் அஃது இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குத் திரும்பிய வண்ணம் இருந்த கம்பெனியின் அதிகாரிகளின் செல்வநிலை, ஆணவப்போக்கு ஆகியவற்றையும், அவற்றால் இங்கிலாந்து நாட்டு மக்கள் வெளிப்படுத்திய உணர்வையும் மிக உன்னிப்பாக எடைபோட்டுக் கவனித்து வந்தது. இவை யாவற்றையும்விட நார்த் பிரபுவின் அரசாங்கம் கம்பெனியின் இந்திய நடவடிக்கைகளில் தலையிடுவதற்கான 'நேர்மை உணர்வுத் தகைமை'யையும் தூண்டுதல் உணர்ச்சியையும் பெற்றிருந்தது. எனவே, நார்த் பிரபுவின் அரசாங்கம், 1772ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் 31 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பொறுக்குக் குழுவையும் (Select Committee) 13 பேர்களைக் கொண்ட ஒரு இரகசியக் குழுவையும் (Secret Committee) அமைத்தது. இவ்விரு குழுக்களும் கிழக்கிந்தியக் கம்பெனியின் காரியங்களையும் பிறவற்றையும் தீர விசாரித்து, ஆராய்ந்து தமது அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. இதற்கொப்ப, பொறுக்குக் குழு பன்னிரு அறிக்கைகளையும், இரகசியக்குழு ஆறு அறிக்கைகளையும் சமர்ப்பித்தன. இவ்வறிக்கைகள் கம்பெனியின் இந்திய நிர்வாகம் முழுவதையும் பழித்துரைத்துச் சாடின. மேலும் அவை, கம்பெனியினரின் ஆதாயக் கொள்கைச் செயல்களைப் பெரிதும் தாக்கின. இவ்வறிக்கைகள் எடுத்துக் காட்டிய கம்பெனியின் குற்றம் குறைகளை அறிந்து, அவற்றை அகற்றிக் கம்பெனியின் காரியங்களை நல்வழிப்படுத்தி ஒழுங்குமுறைக்கு உள்ளாக்கும் சட்ட ஆக்கப் பணியை நார்த் பிரபு மேற்கொண்டார்.

1773ஆம் ஆண்டு மேத் திங்கள் பதினெட்டாம் நாளன்று 'கிழக்கிந்தியக் கம்பெனி மசோதா' (East India Company Bill) என்ற பெயரில் ஒரு மசோதாவை நார்த் பிரபு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார். 'கம்பெனியின் தொடர்ச்சி நிலைக்கும் உயிர் வாழ்வுக்கும் மட்டுமன்றி, அதன் அமைப்பு நலனுக்கும் தேவையானது இம் மசோதா; இஃது இனிதாக நிறைவேற்றப்பட வேண்டும்' என்று அவர் விளக்கிப் பாராளுமன்றத்தின் ஆதரவைக்

கோரினர். கம்பெனியின் இந்திய நடவடிக்கைகளில் தமது அரசாங்கம் தலையிடுவதற்குத் தோன்றியிருந்த காரணங்களையும் தவிர்க்க முடியாத நிலையையும் அவர் விளக்கினர். எனினும் இம் மசோதாவைச் சிலர் கடுமையாக எதிர்க்கவும் செய்தனர். உதாரணமாக, எட்மண்ட் பிரபு மக்கள் பெற்றிருந்த உரிமைகளின் பெயரிலும், கொள்கை அடிப்படையிலும் நார்த் பிரபுவின் மசோதாவை எதிர்த்தார். மேலும், பாராளுமன்றத்தின் மேலவையான (Upper House) பிரபுக்கள் அவையில் பதின்மூன்று உறுப்பினர்கள் இம் மசோதவை மிகக் கடுமையாகத் தாக்கினர். எனினும், மேற்கூறிய எதிர்ப்புகளுக்கு இடையே நார்த் பிரபுவின் அரசாங்கம் 'கிழக்கிந்தியக் கம்பெனி மசோதாவைப் பாராளுமன்றத்தின் ஈரவைகளிலும் நிறைவேற்றி வெற்றிகண்டது. இம் மசோதாவிற்கு ஆதரவாகப் பொதுமக்கள் அவையில் (House of Commons) 131 வாக்குகளும், எதிராக 21 வாக்குகளும், மேலவையில் ஆதரவாக 71 வாக்குகளும், எதிராக 17 வாக்குகளும் கிடைத்தன. இவ்வாறு நிறைவேறிய மசோதா மன்னரின் கையொப்பத்தைப் பெற்று, கம்பெனியின் காரியங்களை ஒழுங்கு முறைகளுக்கு உள்ளாக்கும் அடிப்படைக் குறிக்கோளைக் கொண்டு 'ஒழுங்குமுறைச் சட்டம்' (Regulating Act) என்ற பெயரில், கம்பெனியின் இந்திய அரசாங்கங்கள், நிர்வாகம் போன்ற பலவற்றின் ஏற்பாடுகளைக் கொண்டதாய் நடைமுறைக்கு வந்தது. இச் சட்டத்தின்மூலம் செய்யப்பட்ட அரசாங்க ஏற்பாடுகள், இதன் பல அம்சங்கள் யாவும் அடுத்த அதிகாரத்தில் விளக்கப் பட்டுள்ளன. கிழக்கிந்தியக் கம்பெனி மசோதாவை இயற்றிய சமயத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, அதன்மூலம் கம்பெனியின் நிதி நெருக்கடியையும், இன்னலையும் தீர்த்து வைத்தது.

10. ஒழுங்குமுறைச் சட்டத்தின் முக்கியக் கூறுகளும் அது நிறுவிய அரசாங்க ஆட்சிமுறையும்

கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய நடவடிக்கைகள் குறித்து எல்லா வகையிலும் ஒழுங்குமுறைகளை நிர்ணயிக்கும் நோக்கில் 1773ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டம் பெரியதொரு ஆவணமாய்க் கருதப்படுகின்றது. இந்த ஆவணத்தின் (document) மூலம், இலண்டன் மாநகரிலிருந்த கம்பெனியின் தலைமையிடத்து அரசாங்கம், கம்பெனியின் இந்திய மைய, மாநில அரசாங்கங்கள் ஆகியவற்றின் அமைப்பு, நிர்வாகச் செயல்முறை ஆகியவை குறித்து, யாவராலும் பின்பற்றப்படவேண்டிய அடிப்படையான ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டன. இவற்றைப் பின்வரும் பக்கங்களில் ஆராயலாம்.

ஒழுங்குமுறைச் சட்டம் இங்கிலாந்திலிருந்த கம்பெனியின் தலைமை அரசாங்க ஆட்சியமைப்பின் இரு கூறுகளாயிருந்த உரிமையாளர்களின் பெருமன்றம், இயக்குநர்கள் மன்றம் ஆகியவற்றில் பொருத்தமான மாற்று ஏற்பாடுகளையும் திருத்தங்களையும் செய்தது. புகழ் மிக்க வின்சென்ட் ஸ்மித் (Vincent Smith) அவர்களின் கருத்தின்படி ஒழுங்குமுறைச் சட்டம் 'முதலில், இங்கிலாந்திலிருந்த கம்பெனியின் செயல்முறைகளைக் கண்காணித்து முறைப்படுத்தியது. உடைமையாளர்கள் எனப்பட்ட உரிமையாளர்களின் பெருமன்றத்தின் குழப்பம் மிகுந்த செயல்முறைகளை அச் சட்டம் தடை செய்தது. ஆண்டுத் தேர்தல்களில் போட்டியிட்ட எதிர்க்கட்சிகள், பலரை இயக்குநர்களாக்கியும் வேறு சிலரை இயக்குநர் பதவியிலிருந்து நீக்கியும் வந்தன. வாக்குச் சீட்டுகளை வழங்கும் உரிமையைப் பெறுவதற்காகக் கம்பெனியின் பங்குகள் வாங்கப்பட்டன. எத்தகைய பொறுப்பும் தொடர்பும் இல்லாதிருந்த இலண்டன் மாநகரத்துக் குழுக்கள் சிலவற்றின்

சதியாலோசனைக்கு ஏற்ப இந்தியக் கொள்கைகள் மாற்றம் செய்யப்பட்டன; சில சமயங்களில் தீர்மானிக்கவும் பட்டன.'[1] கம்பெனியின் தலைமை யாட்சி அமைப்பின் உடைமையாளர் மன்றத்தில் காணப்பட்ட இத்தகைய குறைபாடுகளையும், அஃது இயக்குநர்களைத் தேர்ந்தெடுத்ததில் கையாண்ட ஒழுங்கீனங் களையும் அகற்றி, அதன் செயல்களை ஒழுங்குமுறைப்படுத்தும் வகையில் பின்வரும் ஏற்பாடுகளையும் திருத்தங்களையும் ஒழுங்கு முறைச் சட்டம் செய்தது.

கம்பெனியின் இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருந்த உடைமையாளர்களின் மன்றத்து உறுப்பினர்களின் வாக்குரிமைத் தகுதிகளை (voting qualifications) ஒழுங்கு முறைச் சட்டம் திருத்தி யமைத்தது. இதுகாறும், குறைந்தது ஆறு மாத காலத்திற்கேனும் 500 பவுன்களைத் தமது மூலதன இருப்பாகக் கொண்டிருந்தோருக்கே இயக்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இச் சட்டத்தின்படி, 'இயக்குநர்கள் மன்றத்துக்கான தேர்தல் நடக்கும் குறிப்பிட்ட நாள் அல்லது தேதிக்கு (date) முன் குறைந்தது பன்னிரு மாதங் களுக்கு ஆயிரம் பவுன்களுக்கு ஈடான மூலதன இருப்பைப் பெற்றிருப்போரே இனி வாக்களிக்கும் உரிமையை அனுபவிக்க முடியும்' என்று நிர்ணயிக்கப்பட்டது. இதன் நோக்கம் யாதெனில் இயக்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருந்த உடைமையாளர்களின் எண்ணிக்கை யைக் குறைக்கவேண்டும் என்பதாகும். இவ்வாறு செய்வதன் மூலம், அன்று நடைமுறையிலிருந்த கம்பெனியின் அரசிய லமைப்பில் காணப்பட்ட குறைகளையும், உடைமையாளர்கள் மன்றத்தில் நிலவிய குழப்பங்களையும், அவற்றின் காரணமாக வெளிப்பட்ட குறைகள் மலிந்த அரசியலையும் நீக்கிவிட முடியும் என்று கருதப்பட்டது. 'கூட்டத்தைக் குறைப்பதால் குழப்பம் குறையும்' என்ற அடிப்படையில் செய்யப்பட்ட மேற்சொன்ன மாற்றம் பொதுவாக யாவராலும் வரவேற்கப்பட்டது. இம் மாற்று ஏற்பாட்டின்மூலமும், ஒழுங்குமுறையின்மூலமும் ஏறத் தாழ 1246 சிறிய உடைமையாளர்களும் உரிமையாளர்களும் தமது வாக்களிக்கும் உரிமையை இழக்கவேண்டியவ ராயினர். அதேசமயம், ஒழுங்குமுறைச் சட்டம் மேற்சொன்னவாறு உடைமையாளர்களின் வாக்களிக்கும் உரிமையையும் தகுதியையும் தீர்மானித்த போதிலும், அவர்கள் கொண்டிருந்த மூலதன இருப்பு களின் மதிப்பிற்கு ஏற்ப, அவர்களின் வாக்குச் சீட்டுகளின்

[1] Vincent Smith—'Oxford History of India'— ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு, தமிழாக்கம், க. த. திருநாவுக்கரசு பக்கம் 311.

எண்ணிக்கையை அதிகரித்தது. இதன்படி, 1,000 பவுன்களுக்கு ஈடான மூலதன இருப்பை ஓராண்டுக் காலத்திற்குப் பெற்றிருந்த ஓர் உரிமையாளருக்கு ஒரு வாக்குச் சீட்டு என்றும், 3,000 பவுன்களுக்கு ஈடான மூலதன இருப்பைப் பெற்றிருந்தவருக்கு இரண்டு வாக்குச் சீட்டுகள் என்றும், 10,000 பவுன்களுக்கு ஈடான மூலதன இருப்பைப் பெற்றிருந்தோர்க்கு நான்கு வாக்குச் சீட்டுகள் என்றும் வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. இவ்வொழுங்குமுறை ஏற்பாட்டின் விளைவாக, 'உடைமையாளர்களின் வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்ட போதிலும், அவ் வதிகரிப்பே அவர்களுடைய மன்றத்தின் ஓட்டுரிமைத் தகுதியைக் குறைத்தது எனலாம். ஏனெனில், அது கம்பெனியின் நிர்வாக அதிகாரம் அவர்களால் விலைக்கு வாங்கப்படும் நிலையிலிருந்த அசிங்கமான அரசியல் போக்கைக் குறைக்கவோ, தடுக்கவோ இல்லை.'[1] எனினும், மேற்கூறிய மாற்றங்களுடன் கூடிய ஒழுங்குமுறையைச் செய்ததன்மூலம், இச் சட்டம், கிழக்கிந்தியக் கம்பெனியின் உடைமையாளர்கள், தமது இயக்குநர்கள் மன்றத்தின்மூலம் தொடர்ச்சியானதும் தேர்ச்சியானதுமான கொள்கையைப் பின்பற்றிக் கம்பெனியின் இந்திய நிர்வாகமும் காரியங்களும் நடைபெற ஒழுங்குமுறையான குறிக்கோளைக் கொடுத்தது.

இச் சட்டத்தின் முதலாவதும் முக்கியமானதுமான ஷரத்தின்படி[2] கம்பெனியின் இயக்குநர்கள் இதுகாறும் பெற்றிருந்த ஓராண்டுப் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டது. எனினும், உடைமையாளர்கள் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படும் 24 இயக்குநர்களில் நான்கில் ஒரு பங்கினர், அஃதாவது அறுவர், ஒவ்வொரு ஆண்டும் பதவியிலிருந்து ஓய்வு பெறவேண்டும் என்று இச் சட்டம் நிர்ணயித்தது. அவ்வாறு பதவியிலிருந்து ஓய்வுபெறும் இயக்குநர்கள் உடனடியாக அடுத்த ஆண்டு நடைபெறும் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவராவர் என்று தெளிவாக்கி, அவர்கள் மீண்டும் இயக்குநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமாயின் அவர்கள் குறைந்தது ஓராண்டுக் கால இடைவெளியைப் பெற்றிருக்கவேண்டும் என்று இச் சட்டம் தீர்மானித்தது. மேலும், இந்தியாவிலோ அல்லது தூரக்கிழக்கு நாடுகளிலோ பணியாற்றி இங்கிலாந்திற்குத் திரும்புவோர் எவரேனும் இயக்குநராய்த் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமாயின், அவர் இங்கிலாந்திற்குத் திரும்பிய நாளிலிருந்து

[1] A. B. Keith, 'Constitutional History of India', p. 71.

[2] Clause 1

குறைந்தது இரண்டாண்டுகளுக்கேனும் இங்கிலாந்தைவிட்டுக் குடி பெயராமல் இருந்திருக்கவேண்டும் என்று கட்டுப்பாடும் நிர்ணயிக்கப்பட்டது.

பொறுப்பற்ற அதிகாரமோ, அதிகாரமற்ற பொறுப்போ எவரிடமும் அல்லது எந்த நிறுவனத்திடமும் அனுமதிக்கப்படலாகாது என்ற ஆட்சி இயலின் அடிப்படையான நியதியின்படி, ஒழுங்குமுறைச் சட்டம் பின்வரும் பொறுப்பைக் கம்பெனியின் இயக்குநர்கள் மன்றத்திற்குக் கொடுத்தது. இதன்படி, தமது ஆட்சி மன்றத்துடன் கூடிய வங்கத்துத் தலைமை ஆளுநரிடமிருந்து[1] பெறப்படும் ஆலோசனைகள், கடிதங்களின் நகல்கள் போன்ற யாவற்றையும் இனி இயக்குநர்கள் இங்கிலாந்தின் அரசிற்கு அவற்றை அவர்கள் பெற்ற 14 நாள்களுக்குள் சமர்ப்பிக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. கம்பெனியின் பொருளாதாரம் மற்றும் நிதி பற்றிய மேலாண்மை குறித்து இந்தியாவிலிருந்து பெறப்படும் செய்திகளும் கடித நகல்களும் பிரிட்டிஷ் கருவூலத்திற்கும், இராணுவச் செயல்முறைகள் பற்றியவை அரசுச் செயலர் (Secretary of State) ஒருவருக்கும், மேற்சொல்லப்பட்ட காலவரையறைக்குள் இயக்குநர்களால் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்ற ஒழுங்குமுறை இச் சட்டத்தின்மூலம் ஏற்படுத்தப்பட்டது. வங்கத்துத் தலைமை ஆளுநரும், சென்னை, பம்பாய் ஆகியவற்றின் ஆளுநர்களும் கீழ்ப்படிந்து செயல்படக்கூடிய வகையில் தேவையான உத்தரவுகளையும் கட்டளைகளையும் பிறப்பிக்கும் அதிகாரம் இயக்குநர்களுக்குக் கொடுக்கப்பட்டது. மேலும் வங்கம், சென்னை, பம்பாய் ஆகியவற்றின் தலைமை அதிகாரிகள் இயக்குநர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு காரியங்களை ஆற்றவும் ஒழுங்குமுறைச் சட்டம் வழிவகை செய்தது.

ஒழுங்குமுறைச் சட்டமும் கம்பெனியின் இந்திய அரசாங்க அமைப்பும்

ஒழுங்குமுறைச் சட்டம் கம்பெனியின் இந்திய அரசாங்க அமைப்பை முழுத் தேர்வாய்வு செய்து செப்பனிட்டு அமைத்தது. ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன் இந்தியாவில் கம்பெனி பெற்றிருந்த பிரதேச உடைமைகளும் அரசாங்கங்களும் முறையே, வங்கம், சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களில்[2]

[1] இச் சட்டத்தின்கீழ் வங்கத்தின் ஆளுநர், தலைமை ஆளுநராக்கப் பட்டார்.

[2] President என்றால் தலைவர் என்று பொருள். வங்கம், சென்னை, பம்பாய் ஆகியவற்றில் கம்பெனியின் ஆட்சிக் காரியங்களையும் பிறவற்றையும் கவனிக்கத் தலைவர்கள் இருந்தனர். எனவே, அவை presidencies எனப்பட்டன. பின்னர், மாநிலங்கள் என்றழைக்கப்படலாயின.

(Presidencies) அமைந்திருந்தன. மேற்சொன்ன மூன்று மாநிலங்களும் கம்பெனியின் ஆட்சி வரம்பிற்கு உட்பட்டிருந்தன. ஆனால், அவை ஆட்சி ரீதியாக ஒரு சேரத் திரட்டப்படாமல், குறிப்பிட்ட ஒரு தலைமை அதிகாரியின்கீழ்ச் செயல்படாமல் ஒன்றையொன்று சாராது தனித்துச் சுதந்திரமாய் இயங்குபவையாய் இருந்தன. தத்தம் அரசாங்கக் காரியங்களைக் கவனிக்க வங்கம், சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைவரெனப்பட்ட ஆளுநரும், அவருக்குத் துணைபுரிய முதுநிலை வணிகர்களை (senior merchants) உறுப்பினர்களாய்க் கொண்ட ஆட்சி மன்றமும் இருந்தன. மாநில ஆளுநர்கட்கு ஆலோசனைகளை வழங்குவதற்கு என அமைக்கப்பட்டிருந்த ஆட்சி மன்றங்களில் 12 முதல் 16 அங்கத்தினர்கள் இருந்தனர். உதாரணமாக, வங்கத்து ஆளுநர் மன்றத்தில் 1772–ல் 16 உறுப்பினர்கள் இருந்தனர். இந்த அளவில் ஏனைய ஆளுநர் மன்றங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருக்கவில்லை. மேலும், ஆளுநர் மன்றங்களைப்பற்றிய அமைப்பு, பதவிக் காலம் (tenure), உறுப்பினர்களின் பணி வரையறைகள், மற்றும் சலுகைகள் போன்றவை குறித்து எவ்வித அடிப்படையான வரைமுறையும் இருக்கவில்லை. எனவேதான், இராபர்ட் கிளைவ் வங்கத்தின் ஆளுநராய் இருந்தபொழுது; நான்கு உறுப்பினர்களைத் கொண்டதாய்த் தமது மன்றத்தை நொடிப்பொழுதில் மாற்றி அமைத்தார். இப்படிப்பட்ட குறைபாடுகளுடன், வங்கம், சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களின் தலைவர்கள் யாவரும் தத்தம் காரியங்கள் குறித்துக் கம்பெனியின் தலைமை ஆட்சி அதிகாரத்தைப் பெற்றிருந்த இலண்டன் இயக்குநர்கள் மன்றத்தோடு நேரிடையான தொடர்புகளைக் கொண்டிருந்தனர். எனவே, கம்பெனியின் இந்திய ஆளுநர்கள் மூவரும் சமமான அந்தஸ்து நிலையைப் பெற்றிருந்தனர். அவர்களுக்கு இடையே ஆட்சி நியதியான உயர்நிலை, சார்நிலை உறவு (superior, subordinate relationship) எதுவும் இருக்கவில்லை. இதுபோன்ற நிலவரங்களால் கம்பெனியின் இந்திய அரசாங்கங்களும் நிர்வாகமும் மையப்படுத்தப்படாது, அவை ஒருமித்த ஒரு கொள்கையைப் பரிபாலிக்காமல் ஒழுங்குமுறை யற்று இருந்தன. இக் குறைபாடுகளை அகற்றித் தலைமை அரசாங்கம் மற்றும் தல அரசாங்கங்கள் எனப்படுமாறு சமஷ்டி முறையான கூட்டாட்சியாக இல்லாவிட்டாலும் ஒருமுக அமைப்பைத் தரும் வகையில்; உயர், சார்நிலை உறவு பேணப்படும் வகையில் அரசாங்கக் கட்டுமானத்தை ஒழுங்குமுறைச் சட்டம் அமைத்துக் கொடுத்தது.

இதுகாறும் வங்கம், சென்னை, பம்பாய் ஆகிய இடங்களில் ஒழுங்குபடுத்தப்படாத நிலையில் கம்பெனியின் ஆட்சியும்

நிர்வாகமும் ஒருமித்த ஒரு தலைமையைப் பெறாமல் செயல்பட்டு வந்ததை ஒழுங்குமுறைச் சட்டம் அகற்றி, வங்கத்து அரசாங்கத்தைக் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின் தலைமை அல்லது மைய அரசாங்கமாக அமைத்தது. இந்த ஏற்பாட்டிற்கு ஏற்ப, இதுநாள் வரை சாதாரண ஆளுநர் பதவியைப் பெற்றிருந்த வங்கத்தின் தலைமை, கவர்னர் ஜெனரல் (Governor General) என்னும் தலைமை ஆளுநர் பதவியாக உயர்த்தப்பட்டது. இதன் மூலம், அப்பொழுது வங்கத்து ஆளுநராயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்கத்தின் முதல் தலைமை ஆளுநராக நியமனம் செய்யப்பட்டார். தலைமை ஆளுநரின் ஊதியம் ஆண்டு ஒன்றுக்கு 25,000 பவுன்கள் என்றும் இச் சட்டம் நிர்ணயித்தது.

தமது பணிகளை மேற்கொள்வதற்கெனத் தலைமை ஆளுநர்க்கு ஆலோசனையும் உதவியும் நல்க நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆட்சி மன்றம் (Executive Council) அமைக்கப்பட்டது. மேலும், ரிச்சர்டு பார்வெல் ((Richard Barwell), ஜெனரல் கிளாவரிங், (General Clavering), பிலிப் ஃபிரான்சிஸ் (Phillip Francis), தளபதி மான்சன் (Colonel Monson) ஆகிய நால்வரையும் இச் சட்டம் உறுப்பினர்களாக அறிவித்தது. வங்கத்துத் தலைமை ஆளுநரின் ஆட்சி மன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் 10,000 பவுன்களை ஆண்டொன்றுக்கு ஊதியமாகப் பெறுவதற்கும் இச் சட்டம் வகை செய்தது.

கிழக்கிந்தியக் கம்பெனிச் சட்டம், 1773 எனப்படும் ஒழுங்குமுறைச் சட்டத்தின் பத்தாவது ஷரத்தின்படி வங்கத்துத் தலைமை ஆளுநர் மற்றும் அவரது மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்தாண்டுகள் என்று ஒழுங்குமுறை செய்யப்பட்டது. எனினும், இவ் வைந்தாண்டுப் பதவிக் காலம் முடியும் முன்னரே, இயக்குநர்கள் மன்றம் செய்யும் முறையீட்டின்பேரில் அவர்களைப் பிரிட்டிஷ் அரசர் பதவியிலிருந்து நீக்குவதற்கும் வகை செய்யப்பட்டது.

அடுத்து, ஏதேனும் ஒரு காரணத்தால், தற்செயலாகத் தலைமை ஆளுநர் பதவி காலியாகும்போது (vacancy) அப் பதவியை ஆட்சி மன்றத்தின் முதுநிலை உறுப்பினர் (senior member) வகிக்கவும், தலைமை ஆளுநர் ஆட்சிமன்றத்தில் காலியிடங்கள் தோன்றுமாயின் அவற்றிற்குப் பொருத்தமானவர்களை அரசரின் கையொப்பத்தைப் பெற்றபின் இயக்குநர்கள் நியமிக்கவும் ஒழுங்குமுறைச் சட்டத்தில் செய்தித் தெளிவு செய்யப்பட்டது.

'தலைமை ஆளுநரின் மன்றத்தால் எடுக்கப்படும் முடிவுகள் யாவும், அம் மன்றத்தின் கூட்டத்திற்கு (meeting) வந்து, பங்கு கொள்ளும் உறுப்பினர்களில் பெரும்பான்மையோரின் ஆதரவிற்கு ஒப்பவே (majority support) எடுக்கப்பட வேண்டும். எப்பொழுதாவது மன்ற உறுப்பினர்களிடையே சம பல நிலைநிலவு மாயின், தலைமை ஆளுநர் தமது முடிவு வாக்கைப் (casting vote) பயன்படுத்தலாம்' என்ற ஒழுங்கு முறைகள் இச் சட்டத்தின்மூலம் நிர்ணயிக்கப்பட்டன.

மேற்கூறிய செய்திகளைத் தொடர்ந்து, தமது ஆட்சிமன்றத் துடன் கூடிய வங்கத்துத் தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் பலவற்றையும் ஒழுங்குமுறைச் சட்டம் எடுத்தியம் பியது. இவற்றின்படி, மன்றத்துடன் கூடிய வங்கத்தின் தலைமை ஆளுநருக்குக் கம்பெனியின் வசமிருந்த இந்தியப் பிரதேசங்கள் யாவற்றையும் நிர்வகிப்பதற்கான அதிகாரங்கள் யாவும் கொடுக்கப்பட்டன. வங்கத்தைப் பொறுத்தவரை. அதன் சிவில் மற்றும் இராணுவ அரசாங்கப் பொறுப்புகள் யாவும் மன்றத் துடன்கூடிய தலைமை ஆளுநரின் அதிகாரப் பொறுப்பின்கீழ் விடப் பட்டன. மற்றப்படி சென்னை, பம்பாய் ஆகிய மாநில அரசாங் கங்களைப் பொறுத்தவரை, அவ் வரசாங்கங்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் வங்கத்துத் தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு வங்கத்துத் தலைமை ஆளுநருக்கு வழங்கப்பட்ட கண்காணிப்புக் கட்டுப்பாட்டு அதிகாரம் சென்னை, பம்பாய் ஆகிய மாநில அரசாங்கங்கள் சுதேசி அரசுகளுடன் (Native States) போர் அல்லது சமாதானம் செய்துகொள்ளுதல், உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ளுதல் போன்ற செய்தி களைப்பற்றிய தாகும். மற்றப்படி, சென்னை மற்றும் பம்பாயின் கம்பெனி அரசாங்கங்களுக்குச் சுதந்திரமான அதிகாரங்கள் பல கொடுக்கப்பட்டன. எனினும், அவ் வரசாங்கங்கள் வங்கத்துத் தலைமை ஆளுநருக்குக் கீழ்நிலையாகவும், சார்நிலையாகவும் இருந்தே அரசியல் சட்ட ரீதியாகச் செயல்படவேண்டும் என்ற ஒழுங்கு முறை இச் சட்டத்தின்மூலம் நிர்ணயிக்கப்பட்டது. அதே சமயம் இயக்குநர்கள் மன்றத்திடமிருந்து பெறப்படும் சிறப்பான கட்டளை கள் அல்லது தனிப்பட்ட உத்தரவுகள் (special orders) ஆகிய வற்றின் நிமித்தம் செயல்படவேண்டிய சமயத்தில் சென்னை மற்றும் பம்பாய் அரசாங்கங்களின் ஆளுநர்களும் அவர்தம் ஆட்சி மன்றங்களும் போர் மற்றும் சமாதானம்பற்றிய காரியங்களை மன்றத்துடன் கூடிய வங்கத்துத் தலைமை ஆளுநரின் ஒப்புதலைப் பெறாமல் மேற்கொள்ள அனுமதியும் விலக்கும் கொடுக்கப்பட்டன. இந்த அனுமதி மிகமிக நெருக்கடியான நேரத்தில், உடனடித்

தேவையின் நிமித்தம் எழும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கென்றே வழங்கப்பட்டது. மற்றப்படி மன்றத்துடன் கூடிய தலைமை ஆளுநரையும், அவரது உயர் ஆட்சி நிலையையும் உதாசீனம் செய்யக்கூடிய நிலை சென்னை, பம்பாய் ஆகிய கம்பெனியின் அரசாங்கங்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

மேலும், தலைமை ஆளுநரும் அவரது மன்றமும் வங்கத்தின் நல்லரசாங்கத்துக்கு மட்டுமன்றி, அதற்குச் சார்நிலையாக்கப்பட்ட பிற பிரதேசங்கள் மற்றும் வணிக நிலையங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் நல்லாட்சி குறித்தும் தேவையான விதிகள், ஒழுங்கு முறைகள் (regulations), அவசரச் சட்டங்கள் (ordinances) ஆகிய வற்றைப் பிறப்பிக்க அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், சென்னை, பம்பாய் ஆகிய அரசாங்கங்களின் அன்றாடத் தேவைக்கும், உள்ளாட்சி நிர்வாகத்திற்கும் தேவையான சட்டங்களை இயற்றக் கூடிய அதிகாரம் (legislative power) மன்றத்துடன்கூடிய வங்கத்துத் தலைமை ஆளுநருக்கு வழங்கப்படவில்லை. மாறாக, அவ் வதிகாரம் சென்னை, பம்பாய் மாநிலங்களின் ஆளுநர்களுக்கும் அவர்தம் மன்றங்களுக்குமே வழங்கப்பட்டது. மற்றப்படி, தலைமை ஆளுநர் தமது ஆட்சி மன்றத்துடன் கூடிப் பிறப்பிக்கும் விதிகள், ஒழுங்குமுறைகள் போன்ற யாவும் நியாயமானவையாயும், பிரிட்டிஷ் சட்டங்களுக்கு உடன்பட்டவையாயும் இருக்கவேண்டும் என்றும், அப்படிப்பட்ட விதிகள், ஒழுங்குமுறைகள், அவசரச் சட்டங்கள் யாவும் வங்கத்து உச்ச நீதிமன்றத்தில்[1] பதிவு செய்யப் பட்டு, அதனால், அங்கீகரிக்கப்பட்ட பின்னரே முழுமையான செயற் பாட்டிற்கு வரவேண்டும் என்றும் இச் சட்டம் ஒழுங்குமுறைகளை வகுத்துக் கொடுத்தது. மேலும், மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரால் பிறப்பிக்கப்படும் விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவை, குறிப்பிட்ட சில காரணங்களுக்காக ஆலோசனைச் சபையுடன் கூடிய பிரிட்டிஷ் மன்னரால் (King in Council) நிராகரிக்கப்படலாம் என்றும் ஒழுங்குமுறைச் சட்டம் கூறியது.

சென்னை, பம்பாய் ஆகிய மாநில அரசாங்கங்களைப் பொறுத்தவரை இதுகாறும், நாம் அறிந்துள்ள செய்திகளைத் தவிர அவற்றின்மீது இரு கட்டுப்பாடுகளை ஒழுங்குமுறைச் சட்டம் சுமத்தியது. 'நெருக்கடியற்ற சாதாரண சமயங்களில், தமக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தால் ஒழிய மன்றத்துடன்கூடிய

[1] ஒழுங்குமுறைச் சட்டம் வங்கத்து உச்ச நீதிமன்றத்தை அமைக்க வழி செய்தது. இதைப்பற்றிய செய்திகள் அடுத்த சில பக்கங்களில் விளக்கப் பட்டுள்ளன.

வங்கத்துத் தலைமை ஆளுநரின் விதிகள், ஒழுங்குமுறைகள், அவசரச் சட்டங்கள் போன்றவற்றை மாநில அரசாங்கங்கள் புறக்கணித்தல் கூடாது; அவ்வாறின்றி, அவற்றை மாநில அரசாங்கங்கள் மதிக்காமல், கீழ்ப்படியாது செயல்படுமாயின் அவ் வரசாங்கங்கள் தலைமை ஆளுநரால் தற்காலிகப் பதவி நீக்கத் திற்கு உட்படுத்தப்படும்' என்ற ஒழுங்குமுறையை மைய, மாநில அரசுகளுக்கு இடையே ஒழுங்குமுறைச் சட்டம் ஏற்படுத்திக் கொடுத்தது. இவ் வொழுங்குமுறை ஏற்பாடு, இன்றைய அரசியல் சட்டத்தின்படி, ஒரு மாநில அரசில் அரசியல் சட்ட இயந்திரம் செயல்பட முடியாதபடி ஸ்தம்பித்து விடுமாயின், அம் மாநிலத்தில் தமது நேரிடையான ஆட்சியை இந்தியக் குடியரசுத் தலைவர் பிரகடனப்படுத்தி ஏற்றுக்கொள்வதற்கு இணையாகக் காணப் படுகின்றது. அடுத்து, 'தத்தம் அரசாங்கம், ஆட்சி ஆகியவை குறித்து மாநிலங்களின் ஆளுநர்களால் செய்யப்படும் விதிகள், ஒழுங்குமுறைகள் யாவும் வங்கத்துத் தலைமை ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்' என்ற கட்டுப்பாட்டை மாநில அரசாங்கங் களின்மீது ஒழுங்குமுறைச் சட்டம் தோற்றுவித்தது. மேலும், கம்பெனியின் அக்கறைகளைப் பாதிக்குமாறு தாம் மேற்கொண்ட காரியங்களைப்பற்றிய செய்திகள் யாவற்றையும் மன்றத்துடன் கூடிய தலைமை ஆளுநருக்குக் கால தாமதமின்றி அறிவிக்க வேண்டும் என்ற பொறுப்பும் கட்டாயமும் மாநில அரசாங்கங்கள் மீது சுமத்தப்பெற்றன.

ஒழுங்குமுறைச் சட்டம் அமைத்த வங்காள உச்ச நீதிமன்றம்

கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய அரசாங்கச் செயல்முறை களில் பிரிட்டிஷ் அரசு தலையிட்டுப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் துணை புரியுமாறு 1772-ல் பாராளு மன்றத்தால் அமைக்கப்பட்ட இரு குழுக்களில் ஒன்றான இரகசியக் குழு, தனது அறிக்கையில் இந்திய நீதி பரிபாலனம் குறைபாடு உடையதாய் இருந்ததைத் தெளிவாக எடுத்துரைத்தது. எனவே, வங்கத்தின் நீதி பரிபாலனத்தில் முக்கியமான மாற்றங்கள் பலவற்றை இச் சட்டம் தோற்றுவித்தது. 1773ஆம் ஆண்டிற்கு முன்னர்க் கல்கத்தாவில் நகரத் தந்தை தீர்ப்பு மன்றம் (Mayor's Court) ஒன்று மட்டுமே இருந்தது. இந் நீதிமன்றத்தால் வழங்கப் பட்ட தீர்ப்புகளை எதிர்த்து முதலில் கல்கத்தாவிலிருந்த ஆட்சி மன்றத்துடன்கூடிய ஆளுநருக்கும், பின்னர் இறுதியாக ஆலோசனைச் சபையுடன்கூடிய பிரிட்டிஷ் அரசருக்கும் மேல் முறையீட்டைச் செய்ய வேண்டிய நிலை இருந்தது. ஏற்கெனவே சட்டம் செய்தல், விதிகளை வகுத்தல், நிர்வாகம் புரிதல் போன்ற

அதிகாரங்களைப் பெற்றிருந்த ஆளுநரும் அவரது மன்ற உறுப்பினர்களும், அன்று செயல்பட்டு வந்த நகரத் தந்தைத் தீர்ப்பு மன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை மேல்முறையீட்டின்பேரில் விசாரித்துத் தீர்ப்பளிக்கும் அதிகாரத்தையும், நிர்வாகம் புரியும் அதிகாரத்தையும் ஒருங்கே பெற்றிருந்ததால் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டிற்கு மாறாக, ஆட்சி மன்றத்துடன்கூடிய ஆளுநரிடம் அதிகாரங்கள் குவிந்திருந்தன. மேலும் ஆட்சி மன்றத்துடன் கூடிய ஆளுநரைக் கொண்டிருந்த அரசாங்கச் செயலாட்சிப் பிரிவின் (executive) மீது தனித்ததும் சுயேச்சையானதுமான நீதி முறையான எத் தடையையும் தோற்றுவிக்கக்கூடிய வழி ஏதும் இல்லாமலிருந்தது. இவற்றால் சரியானதும், நேர்மையானதும், காலம் தவறாததுமான நீதி கிடைக்க வழி இல்லாமலிருந்தது. இத்தகைய குறைபாடுகளை நீக்கும் வகையில் வங்கத்தில் தலைமை அல்லது உச்ச நீதிமன்றம் (Supreme Court) ஒழுங்குமுறைச் சட்டத்தின் பயனாய் அமைக்கப்பட்டது. இதன்மூலம் பல ஒழுங்கு முறைகள் நீதி பரிபாலனத்திற்கென வகுத்துக் கொடுக்கப்பட்டன. அத்தகைய ஏற்பாடுகள் பின்வருமாறு:

ஒரு தலைமை நீதிபதி (Chief Justice), மூன்று துணை நீதிபதிகள் (Puisne judges) ஆகியோரைக் கொண்டதாய் உச்ச நீதிமன்றம் கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. மேலும், அந் நீதிபதிகள் யாவரும் ஒழுங்குமுறைச் சட்டத்திலேயே பெயரிடப்பட்டோராய் முதன் முறையாக நியமனம் செய்யப்பட்டனர். இதன்படி சர் எலிஜா இம்பே (Sir Elijah Impey) என்பவர் தலைமை நீதிபதியாகவும், சேம்பர்ஸ் (Chambers), லெமாய்ஸ்டர் (Lemaister), ஹைட் (Hyde) ஆகியோர் துணை நீதிபதிகளாகவும் நியமனம் செய்யப்பட்டனர். இவர்களுக்குப் பின் நியமனம் செய்யப்படும் நீதிபதிகள் பெற்றிருக்கவேண்டிய தகுதிகளையும் யோக்யதாம்சங்களையும் ஒழுங்குமுறைச் சட்டம் நிர்ணயித்தது. இதன்படி, குறைந்தது ஐந்தாண்டுகளுக்கேனும் இங்கிலாந்திலோ அல்லது அயர்லாந்திலோ வழக்கறிஞர்களாக அனுபவத்தைப் பெற்றிருந்தாலொழிய எவரும் இந் நீதிமன்றத்தின் நீதிபதிகளாக நியமிக்கப்படக்கூடாது என்று விதிக்கப்பட்டது. இந் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் அரச நிறுவனத்திற்கே கொடுக்கப்பட்டது. வங்கத்து உச்ச நீதிமன்றத்தின், நீதிபதிகள் அரசரால் விரும்பப்படும் காலம்வரை (Kings pleasure) பதவியிலிருக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. மேலும், இந் நீதிமன்றத்தின் அதிகாரம் முழுவதும் பிரிட்டிஷ் அரச நீதிமன்ற ஆயத்தின் (King's Bench) அதிகாரத்திற்கு இணையாகத் தன்மயமாக்கப்பட்டது. தலைமை நீதிபதியின் ஊதியம் ஆண்டொன்றுக்கு 8000 பவுன்களென்றும்,

ஏனைய நீதிபதிகளின் ஊதியம் ஆண்டொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 6000 பவுன்களென்றும் நிர்ணயிக்கப்பட்டது.

மேற்சொன்னவாறு நான்கு நீதிபதிகளைக் கொண்டதாய் நிறுவப்பட்ட கல்கத்தா உச்சநீதி மன்றத்துக்கு நீதிபரிபாலனச் செய்முறை (practice), செயல்முறை (process) ஆகியவை குறித்து விதிகளை நிர்ணயிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது. நீதி பரிபாலனத்திற்குத் தேவையான சார்பணியாளர்களை (subordinate staff) நியமிப்பதற்கான அதிகாரமும் இந் நீதிமன்றத்துக்குக் கொடுக்கப்பட்டது. ஆனல், உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப் படும் சார்பணியாளர்களின் ஊதியங்கள், பணிவரையறைகள் (conditions of service) போன்றவை தலைமை ஆளுநரால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்ற நிபந்தனை ஒன்றை இச் சட்டம் விதித்தது. மேலும் தலைமை ஆளுநரின் கையொப்பத்துடன் நீதி மன்றக் கட்டணங்களை (court fees) ஒழுங்குபடுத்துவதற்கான பொறுப்பு வங்கத்து உச்ச நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கல்கத்தா மாநகரின் அமைதிக் காவலரின் (Sheriff) பதவிக்கு உரியவரைப் பொறுக்கியெடுத்துத் தலைமை ஆளுநர் நியமிப்பதற்கென மூன்று நபர்களைப் பரிந்துரைக்கும் பொறுப்பும் உச்ச நீதிமன்றத் துக்கு வழங்கப்பட்டது. நீதி மன்றத்தில் வழக்கறிஞர்களையும் வழக்குரைஞர்களையும் (Lawyers and Advocates) சேர்த்துக்கொள் வதில் முடிவெடுக்கும் அதிகாரம் முழுவதும் நீதிபதிகளின் கையில் ஒப்படைக்கப்பட்டது.

ஒழுங்குமுறைச் சட்டம் வங்கத்து உச்ச நீதிமன்றத்துக்கு மிகவும் விசாலமானதும் பரந்துபட்டதுமான அதிகார வரம் பையும், செயலெல்லையையும் (Jurisdiction) ஏற்படுத்திக் கொடுத்தது. கல்கத்தா நகரம், வில்லியம் கோட்டையிலிருந்த வியாபார ஸ்தலம் (Factory at William fort) மற்றும் அதன் சார்நிலை வியாபார ஸ்தலங்கள் (subordinate factories) ஆகியவை குறித்து எழும் வழக்குகள் யாவற்றையும் விசாரிக்கும் அதிகாரமும் உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது. மேலும், தனக்களிக்கப் பட்டிருந்த ஆட்சி வரம்பின்கீழ்த் தண்டல்நாயக நீதிமன்றம் (Collector's Court), குற்றவியல் நீதிமன்றம் (Sessions Court), காலாண்டுப் பருவ உலாவியல் நடுவர் மன்றம் (Court of Quarter Sessions) ஆகியவற்றைக் கண்காணித்து (superintend), அவற் றிற்குச் செயலுறுத்தும் நீதிப்பேராணை (writ of mandamus), ஆவணக் கேட்புப் பேராணை (writ of certiorari), தவறு மற்றும் நடைமுறைகள் மீதான ஆணை (writ of error and procedure) போன்ற கட்டளைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத் திற்கு வழங்கப்பட்டது.

மேற்கூறியவைகளே யன்றி, வங்காளம், பீஹார், ஒரிஸா ஆகிய இடங்களில் இருந்த பிரிட்டிஷ் குடிமக்கள் யாவர்மீதும் சிவில் வழக்குகள் (civil cases), குற்றவியல் வழக்குகள் (criminal cases), மதசம்பந்தமான வழக்குகள் யாவற்றையும் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் முழுமையான அதிகாரமும் உச்ச நீதிமன்றத்திற்கு ஒழுங்குமுறைச் சட்டத்தால் வழங்கப்பட்டது. இவ் வதிகார வரம்பிற்குக் கம்பெனியின் பணித்துறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பதவி வகித்த யாவரும் உட்படுத்தப்பட்டனர். மேலும், நடுநிலை நேர்மைத் தகைமை நெறியுடன் செயல்படும் ஒரு நீதிமன்றத்திற்கும் (Court of Equity), கப்பல்துறை நீதிமன்றத்திற்கும் (Court of Admiralty) உரித்தான அதிகாரம் யாவும் உச்ச நீதிமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டு. அவ் வதிகாரச் செயற்பாட்டிற்குள் அடங்கும் பிரதேசங்களாக வங்கம், பீஹார், ஒரிஸா, இவற்றின் வெகு அருகில் அமைந்திருந்த இடங்கள் மற்றும் கம்பெனியின் ஆட்சி வரம்பிற்குள் இருந்த தீவுகள் (Islands) யாவும் கொண்டுவரப்பட்டன. தனக்களிக்கப்பட்ட அதிகார எல்லைக்கு உட்பட்டுக் கொலைகள், கொள்ளைகள், நீள்கடலில் மேற்கொள்ளப்படும் தேசத்துரோகச் செயல்கள் ஆகியவைபற்றிய வழக்குகளையும் விசாரித்துக் குற்றவாளிகளைத் தண்டிக்கும் அதிகாரம் வங்கத்து உச்ச நீதிமன்றத்திற்கு உறுதிப்படுத்தப்பட்டது. தமக்குள் எழும் வழக்குகளை வங்கத்து உச்ச நீதிமன்றத்தில் தீர்த்துக் கொள்ளலாம் என்று ஒப்பந்தம் செய்துகொண்ட இந்தியக் குடிமக்கள், கம்பெனியின் பிரிட்டிஷ் குடிமக்கள் ஆகியோரிடையே எழும் வழக்குகளையும் தீர்ப்பதற்கான அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்குத் தரப்பட்டது. ஆனால், இத்தகைய வழக்குகளில் சம்பந்தப்பட்டோர் தலைமை நீதிமன்றத்தின் நீதி ஆட்சி வரம்பிற்கு உட்பட்டிருந்த வங்கம், பீஹார், ஒரிஸா போன்ற இடங்களில் வசிப்போரா யிருக்க வேண்டும் என்ற ஒழுங்கு முறையும் விதிக்கப்பட்டது. மேலும், ஒப்பந்தத்தின் அடிப்படையில் உச்ச நீதிமன்றத்துக்கு மேற்சொல்லப்பட்டோரால் வழக்குகள் எடுத்துச் செல்லப்பட வேண்டுமாயின், அவ் வழக்குகள் ஒவ்வொன்றிலும் குறைந்தது 500 ரூபாய்களைக் கொண்ட தொகையோ அல்லது அத் தொகைக்கு ஈடான பொருளோ சம்பந்தப்பட்டு, வழக்குரை பொருளாக இருக்க வேண்டும் என்றும் ஒழுங்குமுறைச் சட்டம் கூறியது. மேற்சொல்லப்பட்ட வழக்குரை பொருளின் மதிப்பைச் சார்ந்து எழும் வழக்குகளை முதலேற்பு வழக்குகளாகவும் (origination) அல்லது நகர்ப்புற தீர்ப்பு மன்றங்களிலிருந்து (Mofussil Courts) வரும் மேல்முறையீட்டு (appeal) வழக்குகளாகவும் ஏற்று அவற்றை விசாரிப்பதற்கான அனுமதி அதிகார ஒழுங்குமுறை உச்ச நீதிமன்றத்திற்கு இச் சட்டத்தால் கொடுக்கப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தால் சிவில், குற்றவியல் வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகள்மீது மேல்முறையீட்டை ஆலோசனை மன்றத்துடன் கூடிய பிரிட்டிஷ் அரசருக்கு (King in Council) எடுத்துச் செல்ல ஒழுங்குமுறைச் சட்டம் வகை செய்தது. ஆனால், சிவில் வழக்குகளைப் பொறுத்தவரை அரச மன்றத்துக்கு மேல்முறையீட்டைச் செய்யவேண்டுமாயின், உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்படும் வழக்குகள் ஒவ்வொன்றும் குறைந்தது 1000 பகோடாக்கள் (Pagodas)[1] மதிப்புள்ள விஷயத்தை வழக்குரை பொருளாய்க் கொண்டிருக்கவேண்டும் என்றும், அம் முறையீட்டைச் செய்வதற்கான அனுமதியை உச்ச நீதிமன்றம் கொடுக்க வேண்டும் என்றும், உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்ட ஆறுமாத காலக் கெடுவுக்குள் மேல்முறையீட்டைச் செய்ய வேண்டும் என்றும் இச் சட்டம் கூறியது.

உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள்,அதன் அதிகார எல்லைக்கு உட்பட்ட வழக்குகள் ஆகியவற்றைப்பற்றி வரையறை செய்ததோடு மட்டுமன்றி, அதன் எல்லைக்கு உட்படாத வழக்குகள் எவை என்பதையும் இச் சட்டம் சுட்டிக் காட்டியது. இதன்படி தேசத் துரோகக் குற்றத்தையன்றி வேறு எக் காரணத்தைக் கொண்டும் தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரிக்கக்கூடாது என்றும், நீதிபதிகளைச் சிறையில் தள்ளும்படி கோரும் வழக்குகளை நடத்தக்கூடாது என்றும் ஒழுங்குமுறைச் சட்டம் நிர்ணயித்தது. மேலும், தன்னிடம் விசாரணைக்கு வரும் வழக்குகள் யாவற்றையும் கல்கத்தாவில் வசிக்கும் பிரிட்டிஷ் குடிமக்களைக் கொண்ட தீர்ப்புச் சான்றுளர் குழு (Jury) ஒன்றின் துணையின்றி உச்ச நீதிமன்றம் நடத்தக்கூடாது என்ற கட்டுப்பாட்டையும் ஒழுங்குமுறைச் சட்டம் நிர்ணயித்தது. தலைமை ஆளுநர், அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்கள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரைப்பற்றிய வழக்குகளைப் பிரிட்டிஷ் அரச நீதிமன்ற ஆயத்தில்தான் (King's bench) நடத்த முடியும் என்று வகை செய்யப்பட்டது. இறுதியாக, வங்கத்துத் தலைமை ஆளுநரும் அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்களும் அமைதிகாண் நடுவர்களாகவும் (Justices of Peace) காலாண்டுப் பருவ உலாவியல் நடுவர் மன்றமாகவும் செயல்பட்டு நீதி பரிபாலனத்தை அவர்களும் மேற்கொள்ள இச் சட்டம் ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தது.

[1] 'Pagoda' என்பது தென்னிந்தியப் பழம் பொன் நாணயம்; ஒரு வராகன் மதிப்பைப் பெற்றது.

20

பணித்துறையினர்பற்றிய ஒழுங்கு முறைகள்

1773-ல் ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன் கம்பெனியின் அரசாங்கப் பணியாளர்கள் இலஞ்ச ஊழல்கள் போன்ற பல்வேறு தீய வழக்கங்களுக்கு இலக்காகியிருந்தனர். அத்தகைய குற்றம் குறைகளை அகற்றும் வகையிலும் ஒழுங்கு முறைச் சட்டம் பல ஏற்பாடுகளையும் அம்சங்களையும் கொண்டிருந்தது. அவற்றின்படி பின்வரும் நிபந்தனைகள் கம்பெனியின் அதிகாரிகள்மீது விதிக்கப்பட்டன. முதலாவதாகக் கம்பெனியின் சிவில் அல்லது இராணுவ அதிகாரிகள் எவரும் இந்தியச் சுதேசி அரசுகளிடமிருந்தோ, அரசர்களிடமிருந்தோ எவ் வெகுமதியையும் பரிசையும் இனிமேல் பெறக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டது. இதை மீறி ஓர் அதிகாரி வெகுமதியையோ, பரிசையோ பெற்றால் அவர் அவ் வெகுமதி அல்லது பரிசுப் பொருளுக்கு ஈடான இரட்டிப்புத் தொகையைச் செலுத்த வேண்டியதோடன்றி, அவர் இந்தியாவிலிருந்து அகற்றப்படலாம் என்றும் விதிக்கப்பட்டது. அடுத்து, வரி வசூலிப்பு, நிதி திரட்டல் போன்ற பணிகளில் சம்பந்தப்பட்டுள்ளோர் அரசின் முற்றுரிமையிலோ (state monopoly), தனிப்பட்ட வியாபாரத்திலோ எக் காரணம் கொண்டும் எவ் வழியிலும், தம்மை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது என்ற கட்டுப்பாட்டை ஒழுங்குமுறைச் சட்டம் விதித்தது. இதனைத் தொடர்ந்து ஒழுங்குமுறைச் சட்டம் விதித்த மற்றொரு கட்டுப்பாடு யாதெனில், ஆங்கிலேயர் எவரும் இந்தியாவில் 12% வட்டிக்கு மேலாகப் பணத்தைக் கடனாக எவருக்கும் கொடுக்கக்கூடாது என்பதாகும். தலைமை ஆளுநர், அவரது ஆட்சி மன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள் ஆகியோர் கம்பெனியின் நலத்திற்கேயன்றி வேறு எக் காரணம் கொண்டும் பரிசுகளையும் வெகுமதிகளையும் பெறக்கூடாது என்றும், அவர்கள் தனிப்பட்ட வியாபாரத்தை மேற்கொள்ளக்கூடாது என்றும், முற்றிலும் தடை செய்யப்பட்டது. அடுத்து, கம்பெனியின் பணித்துறையின் நம்பிக்கை உடன்படிக்கையை மீறும் ஆங்கிலக் குடிமக்களான பணியாளர்கள் அக் குற்றத்திற்கான தண்டனையாக இங்கிலாந்திற்குத் திருப்பி யனுப்பப்படுவர் என்றும், அத்தகைய தண்டனையைப் பெற்ற ஒருவர் மீண்டும் கம்பெனியின் இந்தியப் பணித்துறையில் அமர்த்தப்படமாட்டார் என்றும், ஒருவேளை அவரைத் திரும்பப் பணியில் அமர்த்த வேண்டுமாயின் அதற்கு இயக்குநர்களில் முக்காற்பங்கினர் தமது ஒப்புதலைக் கொடுக்க வேண்டும் என்றும் பல ஒழுங்குமுறைகளை ஒழுங்குமுறைச் சட்டம் நிர்ணயித்தது. இவற்றின் விளைவாகக் கம்பெனியின் அதிகாரிகளது பொருளீட்டச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

அதே சமயம், இச் சட்ட ஏற்பாடுகளின் மூலம் இழப்புகளுக்கும் நட்டங்களுக்கும் அதிகாரிகள் இலக்காவதை ஈடுசெய்யும் வகையில் தலைமை ஆளுநர் முதல் நீதிபதிகள் வரை யாவரது ஊதியங்களும் அதிக அளவில் இச் சட்டத்தின்மூலம் நிர்ணயிக்கப் பட்டன.

இதுகாறும் நாம் அறிந்துள்ள பல செய்திகளுக்கு ஏற்ப அடிப் படையான ஏற்பாடுகளையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்திக் கொடுத்ததன்மூலம், ஒழுங்குமுறைச் சட்டமானது செயலாட்சிப் பிரிவு, சட்டமியற்றும் துறை, நீதி, பணித்துறை போன்ற யாவற் றையும் தழுவியதாய் இந்திய அரசாங்கக் கட்டுமானத்தை வழங்கி, அஃது ஒருமுக அமைப்பின்கீழ் மேலும் மேலும் வளர்ச்சி பெறத் தேவையான அடித்தளங்களை வலுவாக அமைத்துக் கொடுத்தது.

ஒழுங்குமுறைச் சட்டத்தின் சிறப்பும் முக்கியத்துவமும்

1773ஆம் ஆண்டிற்கு முற்பட்ட இருபது, முப்பது ஆண்டு களில் இந்தியாவைப்பற்றியும், இந்திய நிகழ்ச்சிகளைப்பற்றியும் இங்கிலாந்திலிருந்தோர் கவனத்தில் கொண்டோராய்ப் பேசி வந்தனர். இதற்கு முத்தாய்ப்பு வைப்பதைப்போல் ‘கம்பெனியின் மீது பிரிட்டிஷ் பாராளுமன்றம் தனது கட்டுப்பாட்டை முதன் முதலாக நிலைநாட்டியமையே ஒழுங்குமுறைச் சட்டத்தின் முக்கியத்துவமாகும். அதனுடன் இந்திய மக்களின் நல்வாழ்வைப் பற்றிப் பாராளுமன்றம் கருத்தைச் செலுத்தத் தொடங்கி யதைப் பொன்னெழுத்துகளால் ஒழுங்குமுறைச் சட்டத்தில் பொறித்துள்ளனர் எனலாம்....ஒரு முறை ஆட்சி இயந்திரத்தை இயங்குமாறு செய்துவிட்ட பிறகு, மீண்டும் புதிய சட்டங் களின் மூலம்தான் இங்கிலாந்தில் உள்ள அரசினால் கம்பெனியின் செயல்முறைகளில் தலையிட முடிந்தது. பொறுப்பினை ஏற்றுக் கொள்ளும் கொள்கையை ஒழுங்குமுறைச் சட்டம் நிலை நாட்டியதோடு அல்லாமல், இந்தியாவோடு நெருங்கிய தொடர்பினை உண்டாக்கியதும் அறிவு முதிர்ச்சியடைந்த நீதிபதிகளையும், மதியுரைஞர்களையும் கீழை நாட்டிற்கு அனுப்பி யதன் மூலம் அந் நாட்டின் நிகழ்ச்சிகளைப்பற்றிய அறிவைப் பெற்றதும் ஒழுங்குமுறைச் சட்டத்தினால் விளைந்த சிறப்பு மிக்க பயன்களாகும்.’[1]

ஒழுங்குமுறைச் சட்டத்தினால் பெறப்பட்ட அடுத்த சிறப்பு மிக்க பயனும் முக்கியத்துவமும் யாதெனின் அது கம்பெனியின்

[1] வின்ஸெண்ட். A. ஸ்மித் — ‘ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு’ — தமிழாக்கம் க. த. திருநாவுக்கரசு — pp. 212, 213.

நடவடிக்கைகளை வலிவானதும் தீர்க்கமானதுமான ஒரு நிறுவன அடிப்படையின்கீழ்க் கொண்டுவந்ததாகும். இக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையிலேயே ஒழுங்குமுறைச் சட்டத்தின் ஒவ்வொரு ஷரத்தும் சாராம்சங்களைக் கொண்டிருந்தது. கிழக் கிந்தியக் கம்பெனி இந்தியாவில் இடவுரிமை பெற்று வங்கம், பீஹார், ஒரிஸா, சென்னை, பம்பாய் ஆகிய இடங்களில் தனது நிகழ்வு முறையிலான அரசியல் அதிகாரத்தையும் ஆட்சி உரிமையையும் பெற்றிருந்தது. திவானி, நிஸாமத் உரிமைகளைப் பெற்றிருந்த கம்பெனியினரின் வங்கத்து அரசாங்கம் வல்லாட்சிப் போக்கைக் கொண்டதாயிருந்தது. இடவுரிமை பேணி, அரசாங்க ஆட்சிகளை நடாத்தத் தேவையான அரசியல் சட்டம் எதுவும் எழுதப் பெற்ற நிலையில் இருக்கவில்லை. எனவேதான். கம்பெனியின் நிர்வாகம் கொடுங்கோன்மை மிக்கதாய் இருந்தது. இக் குறைகளை அகற்றி, இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்களின் கம்பெனி அரசாங்கங்களின் நிர்வாகம் குறித்து எழுதப் பெற்ற ஓர் அரசியல் சட்டமாக அமையும் முக்கியத்துவம் ஒழுங்குமுறைச் சட்டத்திற்கு இருந்தது. இதனால் கம்பெனியின் இந்திய அரசாங்கங்களின் அமைப்பு, நிர்வாகம், நடைமுறைகள், நடவடிக்கைகள் போன்ற யாவும் அரசியலமைப்பு முறைக்கு உட்படுத்தப்பட்டு, பிற்காலத்தில் தொடர்ச்சியான அரசியல் சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கான அடிப்படையான ஓர் அமைப்புக்கூடு (framework) ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் ஏற்படுத்தப் பட்டது. இதனாலேயே அறிஞர்கள் பலர் 'இந்திய அரசியலமைப்பு வளர்ச்சிக்கான அடிப்படையும் ஆரம்பமும் ஒழுங்குமுறைச் சட்டத்திலிருந்து தொடங்குகின்றது,' என்று இச் சட்டத்தினால் பெறப்பட்ட நன்மையையும் பெருமுக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறியுள்ளனர்.

பிரிட்டிஷ் பாராளுமன்றம் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய நடவடிக்கைகளை ஒழுங்குமுறைகளுக்கு உள்ளாக்குவதற்கு முன், கம்பெனியின் உடைமையாளர்கள், இயக்குநர்கள் ஆகியோரைக் கொண்டிருந்த தலைமை ஆட்சியமைப்பில் பெருங் குழப்பங்களும் குற்றம் குறைகளும் மலிந்திருந்தன. மேலும், கம்பெனியின் இந்திய ஆட்சி நிறுவனத்தின் இயக்கத்திற்கும் செயல்பாட்டிற்கும் காரணமாய் இருந்த கம்பெனியின் தலைமை ஆட்சியினர் — தலைமையிடத்துத் தாயக அரசாங்கத்தினர் — ஆட்சித் திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாகவும், சுய லாபம் தேடிய சூதாட்ட மதியினரா்கவும் இருந்தனர். ஆரம்பத்தில் ஓராண்டு பதவிக் காலத்திற்கே இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமையால், அவர்கள் அக் குறுகிய காலத்தில் முதற்பகுதியைத் தாமும், தமக்கு வேண்டியவர்களும் எவ்வெவ் வழிகளிலும், வகைகளிலும்

ஆதாயங்களைத் தேடிப் பகிர்ந்துகொள்ளலாம் என்பதிலும், எஞ்சியிருந்த பிற்பகுதியை வரவிருக்கும் தேர்தலில் ஆதரவைத் திரட்டும் வகையில் ஓட்டுகளைச் சேகரிக்கும் பணியிலும் செலவழித்தனர். இவற்றால் இந்தியாவில் மேற்கொள்ளப்பட வேண்டிய நல்ல நிர்வாகத்தைப்பற்றிச் சிறிதும் அவர்கள் எண்ணிப் பார்த்தனரில்லை. 'கட்டுப்பாடற்ற கூட்டத்தில் கசடான காரியங்களும் குழப்பங்களுமே மிகுந்திருக்கும்' என்பதற்கொப்பக் கம்பெனியின் தலைமையாட்சி அமைப்பில் உரிமையாளர்கள் கூட்டம் குழப்பம் கொண்டதாக இருந்தது. எனவே, உரிமையாளர்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தி, அவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, குழப்பத்தை அகற்றும் வகையில், சூதாட்டச் செயல்களை நீக்கும் வகையில், ஒழுங்குமுறைச் சட்டம் உடைமையாளர்களின் இருப்புத் தொகையின் மதிப்பையும், அவர்களின் வாக்குத் தகுதிகளையும் கணிசமாக உயர்த்தியது. இயக்குநர்களின் பதவிக் காலத்தை நான்காண்டுகளுக்கு உயர்த்தியது. இவற்றின் மூலம் திறமையும் நாட்டமும் கொண்டோர் கம்பெனியின் தலைமை நிர்வாக அமைப்பில் இடம் பெறக்கூடிய நன்மையையும், வரவேற்கப்படக்கூடிய மாறுதலையும் ஒழுங்குமுறைச் சட்டம் நல்கியது. இச் சிறப்பையும் நன்மையையும் பற்றி கே. வி. புன்னையா என்னும் அறிஞர் பின்வருமாறு எழுதியுள்ளார். 'கம்பெனியின் இயக்குநர்கள் நீண்ட பதவிக் காலத்தையும், அதனை ஒருதலையாகப் புதுப்பித்துக்கொள்ள வாய்ப்பும் கொடுக்கப் பட்டனர். இதுகாறும் சிதறிக்கிடந்த கம்பெனியின் அதிகாரத்தை ஒருமைப்படுத்தி அதனை அக்கறையும் அனுபவமும் கொண்டபலரிடம் கொடுத்து, அதன்மூலம் அவர்கள் பாதுகாவலும் தொடர்ச்சியும் மிக்க கொள்கையை மேற்கொள்ளுமாறு ஒழுங்குமுறைச் சட்டம் செய்தது.'[1] இது ஒழுங்குமுறைச் சட்டத்தால் கிடைக்கப் பெற்ற அரும்பயனும், பெருஞ்சிறப்பும் ஆகும்.

தரம் குறைந்து, நிலைகுலைந்து செயல்பட்டுக் கொண்டிருந்த கம்பெனி அரசாங்கத்தில், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் முனைப் பாற்றல் மிக்க கட்டுப்பாடு சட்டபூர்வமாகப் புகுத்தப்பட்டதும், அக் கட்டுப்பாடு தொடர்ந்து செயல்படுவதற்கு வழிவகை செய்யப்பட்டதும் இச் சட்டத்தின் தனிச் சிறப்பாகும். இச் சட்டத்தின்மூலம்தான் இந்தியாவில் பெறும் வருமானங்கள், தனது இந்தியச் சிவில் மற்றும் இராணுவக் காரியங்கள்பற்றிய அறிக்கைகளைப் பிரிட்டிஷ் அரசிற்குச் சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயம் கம்பெனிக்கு ஏற்பட்டது. கம்பெனியின்மீது செலுத்தப்பட்ட இப் பாராளுமன்றக் கட்டுப்பாடு இந்தியாவில் கம்பெனி பெற்றி

1 K.V. Punniah, A Constitutional History of India, p. 23.

ருந்த வணிக அக்கறைகள் பிரிட்டிஷ் அரசியல் அக்கறைகளுக்குச் சார்நிலை பெற்றவையாய் அமைய வழிகோலியது. இதனைக் 'கம்பெனியின் காரியங்கள் குறித்து அரசியல் ரீதியான குறிக் கோளை ஈடேற்றிக்கொள்ள பிரிட்டிஷ் பாராளுமன்றம் எடுத்த துணிகரமான முதல் நடவடிக்கை' என்று டாட்வெல் அவர்கள் கூறுகின்றார். இந் நடவடிக்கையின் முடிவு, இறுதியாக 1858-ல் கம்பெனி கலைக்கப்பட்டு, பிரிட்டிஷ் இந்திய ஆட்சிப் பொறுப்பு அரச நிறுவனத்தால் நேரிடையாக மேற்கொள்ளப்பட்டு நடத்தப் படுவதற்குத் தேவையான வழியைச் சீராக்கிக் கொடுப்பதாய் அமைந்தது. 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பதற் கொப்ப, பின்னால் வரவிருந்த பிரிட்டிஷ் அரசின் நேரடியான அரசியல், மற்றும் அதிகார ஆட்சிச் செயல்முறைக்கு முன் கூட்டி உரிய நேரத்தில் ஊன்றப்பட்ட நல் வித்தாகவும், முன் அறிவிப்பாகவும் அமைந்த முக்கியத்துவத்தை ஒழுங்குமுறைச் சட்டம் பெற்றது. இதன்மூலம் இங்கிலாந்தில் செல்வாக்கைப் பெற்றுப் பரவியிருந்த மக்கள்உரிமை நோக்கிய முற்போக்கு உணர்ச்சி (spirit of liberalism) நம் நாட்டில் எத் தடையுமின்றிப் பாய்ந்து பெருக வழி ஏற்பட்டது.

ஆரம்பத்தில் கம்பெனிக்கு அளிக்கப்பட்டிருந்த உரிமை களுக்கும் சலுகைகளுக்கும், ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்ட 1773-ல் அஃது இந்தியாவில் பெற்றிருந்த தன்மை, அதிகாரங்கள் சலுகைகள் போன்றவற்றிற்கும் இடையே குழப்பம் மிக்க வேறுபாடு காணப்பட்டது. தான் செயல்படுவதற்குக் காரண மாயிருந்த அரசப் பட்டயங்களில் கிழக்கிந்தியக் கம்பெனி அரசியல் அதிகாரம், இட இறைமை ஆகியவற்றைப் பெற்றுத் திகழ எவ் வனுமதியும் ஏற்பும் சட்ட ரீதியாகக் கொடுக்கப்படவில்லை. ஆனல், இதற்கு மாருக, 1773-ல் சாதாரண ஒரு வியாபார நிறுவனமாய் இருந்திருக்க வேண்டிய கிழக்கிந்தியக் கம்பெனி திவானி, நிஸாமத் ஆகியவற்றைப் பெற்று இந்தியப் பிரதேசங் களில் அரசியல் முறையான அதிகாரங்களைப் பெற்ற நிறுவனமாக மாறியிருந்தது. இதனால் கம்பெனியின் மாற்ற நிலையும் ஏற்றத் தன்மையும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய இக்கட்டான சூழ்நிலை இருந்தது. அப்பொழுதுதான் கம்பெனியின் காரியங்களைப் பிரிட்டிஷ் அரசு ஒழுங்கு முறைகளுக்கு உள்ளாக்கி யிருக்க முடியும். அவ்வாறு செய்யாதுபோய் இருப்பின் பெருங்குழப்பங்கள் அதிகரித்திருக்கும். எனவே, இவற்றைத் தவிர்த்து, கம்பெனியின் மாற்ற நிலைக்கு ஏற்பினை வழங்கி, அதன் இந்திய ஆட்சிக் காரியங் களைப் பலவாருய் ஒழுங்கு முறைகளுக்கு உள்ளாக்கி, அரசாங்கக் கட்டுமானத்தை இங்கு அமைத்துக் கொடுத்த அரசியல் சட்ட ரீதியான முக்கியத்துவம் ஒழுங்குமுறைச் சட்டத்திற்கு உள்ளது.

இதுகாறும் தனது சொந்த உரிமையின் அடிப்படையில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆதரவு காட்டும் அதிகாரங்களைப் பெற்றிருந்தது. இதனால் தமக்கு வேண்டியவர்களுக்கே இந்தியப் பணித்துறைகளில் பட்டம் பதவிகளைக் கம்பெனியின் உடைமையாளர்களும் இயக்குநர்களும் வழங்கி வந்தனர்; ஆதரவு, ஆதாயக் கொள்ளைமுறையான (spoils system) நிர்வாகத்தை நடத்தி வந்தனர். இதனைக் கட்டுப்படுத்தித் தடுக்கும் வகையில் ஒழுங்கு முறைச் சட்டம் தலைமை ஆளுநர், அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்கள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் போன்றோரைப் பெயரிட்டு நியமனம் செய்ததோடு, இனிமேல் செய்யப்படும் பதவி நியமனங்கள் (subsequent appointments) யாவும் அரச நிறுவனத்தின் முன் அனுமதி பெற்ற பின்னரே கம்பெனியின் மேலாண்மையரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றும் உறுதி செய்தது. இதன்மூலம், கம்பெனியின் சார்நிலைப் பதவிகளுக்கான அதிகாரிகளை நியமனம் செய்வதில் அரச நிறுவனம் தனது தேர்ச்சியான கட்டுப்பாட்டைப் படிப்படியாகச் செலுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றது. ஒழுங்குமுறைச் சட்டத்தின் மூலம் பெற்ற இவ் வாய்ப்பின்மூலம் அரச நிறுவனம் பிற்காலத்தில் இந்தியச் சிவில் பணித்துறைகளைப் பகிரங்கப் போட்டி முறைக்கு (open competition) உள்ளாக்கக்கூடிய நன்மை ஏற்பட்டது.

ஒரு நாட்டில் நல்லாட்சி நடைபெறவேண்டுமாயின் அங்கு ஆட்சியாளர்களின் வல்லாட்சிப்போக்கு தவிர்க்கப்படவேண்டும். தனிப்பட்ட ஒருவரிடமோ அல்லது நிறுவனத்திடமோ அதிகாரங்கள் யாவும் குவிக்கப்படுமாயின் அதனால் ஒரு நாட்டில் எதேச்சாதிகாரமும் கொடுங்கோலாட்சியும் எக்காளமிட்ட வண்ணமிருக்கும். வல்லாட்சியும் எதேச்சாதிகாரமும் பண்பாடற்ற மக்களைப் பணிய வைக்கப் பொருத்தமானவையாய் இருக்கலாம். நாகரிக முதிர்ச்சியையும் சிறப்பையும் பெற்றிராத ஒரு நாட்டில் அத்தகைய ஆட்சி முறையை மேற்கொள்ளலாம். ஆனல், இனிய பாரதத்தின் மக்களாகிய நாமும் நமது மூதாதையரும் பண்பாடற்றவர்களாகவோ நாகரிகமற்றவர்களாகவோ என்றும் இருந்ததில்லை. எனவே, இந்தியர்களின்மீது எதேச்சாதிகார ஆட்சியைக் கம்பெனியின் தலைமை ஆளுநர் செலுத்தமுடியாத தடுப்பை ஒழுங்குமுறைச் சட்டம் ஏற்படுத்திக் கொடுத்தது. எவ்வாறெனின், கம்பெனியின் இந்திய ஆட்சியின் தலைமை யதிகாரங்கள் தலைமை ஆளுநரிடமே குவிக்கப்படாமல், அவை அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவோடு செயல்படுத்தப்படவேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஒழுங்குமுறைச் சட்டம் அமைத்துக் கொடுத்தது. இவ் வேற்பாடு 'ஐரோப்பியக் கண்டத்திற்கு வெளியே, நாகரிக

மக்கள் வாழ்ந்த இடங்களைப் பெற்றிருந்த ஓர் ஐரோப்பிய அரசாங்கம் அவ் விடங்களில் நல்ல முறையில் ஆட்சி செய்வதற்கான பொறுப்பை மேற்கொள்ளச் செய்த முதலாவது திட்டமாகவும் நடவடிக்கையாகவும் இருந்தது.' ஆனால், கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் பெற்றிருந்த இடங்களும், கைப்பற்றிய பிரதேசங்களும் அதன் தனிப்பட்ட சொத்துரிமையின்பாற்பட்டவையாய்க் கருதப்பட்டுவந்தன. அப்படிப்பட்ட சமயத்தில் கம்பெனியின் நடவடிக்கைகளில் ஒழுங்குமுறைகளைப் புகுத்தித் தனது கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்கான உரிமையைப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இச் சட்டத்தின்மூலம் நிலைநிறுத்தியது. எனவே, 'சட்டப் பிரச்சினையின் காரணமாகத் தனது நேரடியான ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ள முடியாதிருந்த நேரத்தில் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களில் நல்லரசாங்கத்தை அமைத்துக் கொடுக்க பிரிட்டிஷ் அரசால் மேற்கொள்ளப்பட்ட துணிகரமான முயற்சியாய் ஒழுங்குமுறைச் சட்டம் அமைந்தது' மேலும், கம்பெனியின் இந்திய அதிகாரிகளின் ஊதியங்களை உயர்த்தி, அவர்கள் தனிப்பட்ட வர்த்தகத்தை மேற்கொள்ளக் கூடாது என்று தடைவிதித்து, பன்னிரண்டு சதவிகித வட்டிக்குமேல் கடன்கொடுக்கும் பணியில் எந்த ஆங்கிலேயரும் ஈடுபடக்கூடாது என்று தடைசெய்து, இந்திய மக்களைக் கம்பெனியினரின் சுரண்டல் ஏகாதிபத்தியத்திலிருந்து முழுமையாகக் காக்கவில்லை என்றாலும், முடிந்த அளவிற்குக் காப்பாற்றிய நற்பெருமையும் நன்மையும் ஒழுங்குமுறைச் சட்டத்திற்கு இருந்தது. இவை யாவற்றையும்விட, கம்பெனியின் இந்திய அரசாங்கங்களை ஒன்று திரட்டி, ஓர் ஆட்சித் தலைமையின் கீழ்க் கொண்டுவந்து, ஒருமித்ததும் ஒன்றிப்பானதுமான நிர்வாகம் நடைபெற உதவியது, ஒழுங்குமுறைச் சட்டத்தினால் சம்பந்தப்பட்ட யாவரும் பெற்ற நன்மையாகும். அஃது அச் சட்டத்தின் சிறப்பு, நன்மை, முக்கியத்துவம் ஆகியவற்றை நமக்கு அறிவிப்பதாகும்.

1773-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டு, அரசர் கையொப்பத்துடன் செயற்பாட்டுக்கு வந்த ஒழுங்குமுறைச் சட்டம் இதுகாறும் நாம் அறிந்துள்ள நன்மைகளையும் சிறப்பையும் பெற்றிருந்தபோதிலும், அதனைச் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட அரசாங்கச் செயற்பாட்டைக் கவனமாக ஆராயும்போது அதில் பல்வேறு குறைபாடுகளும் தீமைகளும் இருந்தன என்பதை நாம் அங்கைச் செங்கனியாய் உணரமுடியும். எனவே, அத்தகைய தீமைகளும் குறைபாடுகளும் எவை, அவை எவ்வாறு அகற்றப்பட்டன என்பன போன்ற செய்திகளை அடுத்த அதிகாரத்தில் நாம் காணலாம்.

11. ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் வெளிப்பட்ட தீமைகளும், அரசாங்கக் குறைபாடுகளும், பிற செய்திகளும்

சாதாரண ஒரு வர்த்தக நிறுவனமாக உருவெடுத்து உழன்று வந்த கிழக்கிந்தியக் கம்பெனி, காலப்போக்கில் பல சலுகைகளையும் அதிகாரங்களையும் பெற்று ஓர் அரசியல் நிறுவனமாக உருமாற்றம் பெற்ற செயலும், அதன் சீர்கேடான நிர்வாகமும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தைச் சிந்திக்கவைத்து, அதன் இந்திய நடவடிக்கைகளை அரசியல் மற்றும் ஆட்சி ரீதியாக ஒழுங்கு முறைகளுக்கு உள்ளாக்கும் வகையில் ஒழுங்குமுறைச் சட்டம் 1773-ல் இயற்றப் பட்டது. கம்பெனியின் தலைமையிடத்துத் தாயக அரசாங்கம் அதன் இந்திய அரசாங்க ஆட்சிப்பொறிகள் ஆகியவை குறித்து அடிப்படையான ஏற்பாடுகளை இச் சட்டம் உருவாக்கியது. எனினும், ஒழுங்குமுறைச் சட்டம் செயற்பாட்டிற்கு வந்தவுடன் அது பெருங்குறைபாடுகளைக் கொண்டிருந்தது வெளிப்பட்டது. இச் சட்டத்தின் அடிப்படையான குறிக்கோள்கள் நன்மை பயப்பனவாகவும் உயர்ந்தனவாகவும் இருக்கும் என்று யாவராலும் கருதப்பட்டன. ஆனால், இக் கருத்தும், நம்பிக்கையும் விரைவில் பொய்த்துப் போகுமாறு ஒழுங்குமுறைச் சட்டத்தின் செயற்பாடும் அரசாங்கக் காரியங்களும் அமைந்தன. இச் சட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட பயன்களில் பெரும்பாலானவை நிறைவேறாமல் போயின. இதற்குச் சில காரணங்கள் இருந்தன.

ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலக் குறிக்கோள்கள் தோல்வியைத் தழுவப் பொதுப்படையான சில காரணங்கள் இருந்ததைப் பானர்ஜி போன்ற புகழ் மிக்க அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். முதலாவதாகக் கம்பெனியின் இந்திய நடவடிக்கைகளில் பிரிட்டிஷ் அரசு தலையிட்டதற்கு அதன் நிதி மற்றும் அரசியல் நோக்கங்களே அடிப்படைக் காரணங்களாய் இருந்தன. கம்பெனியின் இந்திய அரசாங்கங்களின்கீழ் வாழ்ந்த மக்களுக்கு

நல்லாட்சியைத் தோடித்தரவேண்டும் என்ற ஆவலை முனைப்பான தாய்க் கருதாது, அதை இரண்டாம் பட்சமானதாகவே பிரிட்டிஷ் பாராளுமன்றம் கருதியது. இரண்டாவதாக, இந்தியர்களின் துன்பங்களை அகற்றி அவர்கள் வாழ்க்கையில் மேம்பாடு அடைய உதவவேண்டும் என்பதைப் பிரிட்டிஷார் தமது அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதை ஏற்றுக்கொண்டாலும் கூட, அவர்கள் ஒழுங்குமுறைச் சட்டத்தை இயற்றியபோது இந்தியாவைப்பற்றியும், கம்பெனியின் ஆட்சிச் செயல்களைப் பற்றியும் பொருத்தமான செய்திகளையும் தேவையான தகவல் களையும் பெற்றிருந்தனரில்லை. மேலும், பிரிட்டிஷ் பாராளுமன்றத் தினர் இந்தியர்களுக்கு நல்ல அரசாங்கத்தையும் ஆட்சியையும் அமைத்துக் கொடுப்பதற்கான சிறந்த வழி எது என்பது குறித்தும், அதனை அடைவதில் அவர்கள் எப்படி மேற்கொண்டு முன்னேற வேண்டும் என்பது குறித்தும் தேர்ச்சி மிக்க ஆலோசனை, அறிவுரை களைப் பெற்றிருக்கவும் இல்லை; பெறவும் முடியவில்லை.

அடுத்து, ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்படுவதற்கு மூல காரண கர்த்தாவாக இருந்தவர் நார்த் பிரபு அவர்களே என்பதை நாம் அறிவோம். ஆனால், இச் சட்டத்தை இயற்றுவதற்கு எளிதான வழிவகைகளைக் கண்ட நார்த் பிரபு, வலிமையானதும் தீர்க்கமானதுமான மேல் நடவடிக்கைகளையும் திட்டங்களையும் மேற்கொள்ளக் கூடியவராக இருக்கவில்லை. அவர் சோம்பலுக்கும் அனுவசியமாய்த் தொல்லைகளைக் கிளறிவிட்டுக் கொள்ளக்கூடாது என்ற மனப்போக்கிற்கும் இயற்கையாக அடிமையானவராய் இருந்தார். எனவே, அவர் இந்தியாவில் அன்று நடைமுறையில் இருந்த கம்பெனியின் தகுதிநிலை கூடுமானவரை எக் குழப்பத் திற்கும் உட்படலாகாது என்ற உள்ளெண்ணத்தைக் கொண்டிருந் தார். எனவேதான், கம்பெனியின் செயல்களில் பாராளுமன்றம் தொடர்ச்சியும் தேர்ச்சியும் மிக்க ஆய்வைச் செலுத்துவதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட அமைப்பு, திறமையும் திறனும் அற்ற தாய்ச் செயல்பட வேண்டியிருந்தது. ஒழுங்குமுறைச் சட்டத்தின் தோல்விக்கு மேற்கூறிய செய்திகள் பொதுவான காரணங்களாய் இருந்ததைத் தவிர, மற்றொன்றும் சிறப்புக் காரணமாயிருந்தது. அது நார்த் பிரபு அவர்களும், அவரது அரசாங்கமும் கொண்டி ருந்த தவறான கருத்தாகும்.

ஒருநாட்டில் ஓர் அரசையும் அதனைச் சார்ந்து ஓர் அரசாங் கத்தையும் அமைத்து, அவ் வரசாங்கத்தின்மூலம் வெளிப்படும் நிர்வாகத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் ஆட்சிச் செயல்கள் அந் நாட்டு மக்களின் தேவைகளையும் பொதுநலத்தையும் புறக்கணிப்

பதாய் அமையின், அவை யாவும் குற்றம் குறைகளுக்கும், தீமைகளுக்கும், முரண்பாடுகளுக்கும் இலக்காகி முடிவில் தோல்வியைத் தான் தழுவும் என்பது அரசியல் மற்றும் ஆட்சியியல் தத்துவத்தில் காணப்படும் அடிப்படையான கருத்தாகும். இவ் வடிப்படைத் தேவை ஒழுங்குமுறைச் சட்டத்தில் காணப்படவில்லை. கம்பெனியின் இந்தியப் பிரதேங்களை அரசுகளாக உருவாக்கும் உயரிய நோக்கையும் இந்திய மக்களின் தேவைகளில் அக்கறை காட்டக்கூடிய போக்கையும் ஒழுங்குமுறைச் சட்டம் முழுமையாய்ப் பெற்றிருக்கவில்லை. இந்திய மக்களுக்குக் குறிப்பாக, வங்கத்து மக்களுக்குத் துன்பங்கள் மிகுந்திருந்ததற்கான அடிப்படைக் காரணம் அவர்கள் அரசியல் சுதந்திரத்தைப் பெற்றிருக்கவில்லை என்பதாகும். இம் முக்கியச் செய்தியை நார்த் பிரபுவும் அவரது அரசாங்கமும் கருத்தில் கொள்ளவில்லை. மாருக, இங்கு ஐரோப்பிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டு, அதன்மூலம் தாம் பாதுகாக்கப்படவேண்டும் என்று இந்தியர்கள் விரும்பியதாக நார்த் பிரபு கருதினர். இது நார்த் பிரபுவால் தவருக எடைபோடப்பட்ட கருத்தாகும். எனினும், இந்திய மக்களின் மனக் குறைகளை நீக்கவேண்டும் என்றும், அக் குறைகளுக்குக் காரணமாயிருந்தது வங்கத்து இரட்டை அரசாங்க முறையே என்றும் நார்த் பிரபு கருதினர். எனவே, அவர் இரட்டை அரசாங்க முறையை ஒழித்து, அதன் பொறுப்புகள் யாவற்றையும் புதியதோர் அரசாங்கத்தின்கீழ் வைத்து, அதன்மூலம் மக்களுக்கு நல்லாட்சி நல்கப்படவேண்டும் என்று முடிவெடுத்தார். இம் முடிவிற் கொப்பத் தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சி மன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றைக் கொண்ட ஓர் அரசாங்க அமைப்பை யமைப்பதே சிறப்பானது என்று எண்ணினர். இவ் வரசாங்க அமைப்பின்மூலம் தலைமை ஆளுநர், அவரது ஆட்சி மன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றினிடையே அதிகாரச் சமநிலையையும் ஏற்படுத்தி வல்லாட்சி நடைபெற முடியாமல் மக்களைப் பாதுகாக்கமுடியும் என்று நார்த் பிரபு எண்ணினர். இவ்வாறு எண்ணியதிலும் அவ் வெண்ணத்தையொட்டி அவர் செய்த சட்ட ஆக்கத்திலும் தவறில்லை. ஆனல், ஒழுங்குமுறைச் சட்டம் செயல்பட்ட விதத்திலும் அச் செயற்பாட்டையொட்டி அமைந்த அரசாங்க நடவடிக்கைகளிலும்தான் பல குறைபாடுகளும் தீமைகளும் காணப்பட்டன. எனவேதான், நன்னோக்கத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டு ஒழுங்குமுறைச் சட்டம் தன்னம்பிக்கையுடன் செயல்பட முடியாத ஓர் அரசாங்க அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்துத் தோல்வியைத் தழுவியது. எனவே, ஒழுங்குமுறைச் சட்டத்தின் பலனற்ற செயல்பாட்டிற்கு மூல காரணமாக இருந்தது அச் சட்டத்தின் அம்சங்களிலும் ஏற்பாடு

களிலும் காணப்பட்ட பெருங்குறைகளும் ஆட்சி ரீதியான முரண்பாடுகளுமேயாம். இக் கருத்தைச் சுருக்கமாகவும் அழகாகவும் பேராசிரியர் வின்ஸென்ட் ஸ்மித் பின்வருமாறு விளக்குகின்ருர்.

'ஒழுங்குமுறைச் சட்டத்தைமட்டும் தனிப்பட்ட வகையில் ஆராய்வோமாஞல், அது குறைகள் மலிந்ததாக, காலங்கடந்து இயற்றப்பட்ட திட்டமாகத் தோன்றும். அச் சட்டத்தின் குறை பாடுகள், முதல் கவர்னர் ஜெனரலாகப் பணியாற்றிய வாரன் ஹேஸ்டிங்ஸிற்கு உண்டான துன்பங்களுக்கும் தொல்லேகளுக்கும் மூலகாரணமாக இருந்தன. கவர்னர் ஜெனரலுக்கு முடிவு வாக்கு அளிக்கும் உரிமை அளிக்கப்படவில்லே. எனவே, ஆலோசனே மன்றத்தின் உறுப்பினர்கள் தங்கள் விருப்பம்போல் கவர்னர் ஜெனரலே ஆட்டிப்படைத்தனர். முதல் இரண்டாண்டுகள் பிலிப் ஃபிரான்சிசும் அவருடைய நண்பர்களும் கவர்னர் ஜெனரலே ஆட்டிப்படைப்பதில் வெற்றி பெற்றுவந்தனர். மற்ற இரு மாநிலங்களேயும் (சென்னே, பம்பாய்) மேற்பார்வையிடவேண்டும் என்று வழங்கப்பெற்ற அதிகாரம் தெளிவற்றதாய் இருந்தது. அவ் வதிகாரத்தைக் கட்டாயமாகச் செயல்படுத்துவதற்கு உரிய முன்னேற்பாடுகள் ஒன்றும் செய்யப்படவில்லே. உச்ச நீதிமன்றம் எந்தச் சட்டத்தை அடிப்படையாகக்கொண்டு நீதி வழங்க வேண்டும் என்பதையும், யாருக்கு அது நீதி வழங்கவேண்டும் என்பதையும், ஒழுங்குமுறைச் சட்டம் வரையறுக்கவில்லே.'[1] இத்தகைய குற்றம் குறைபாடுகளே ஒரு சில உதாரணங்களோடு விளக்கமாய் அறிந்துகொண்டால், ஒழுங்குமுறைச் சட்டம் ஏன் தோல்வி அடைந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

ஒழுங்குமுறைச் சட்டத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட அரசாங்க அமைப்பு ஆட்சி இயலின் தலேயாய அடிப்படை நியதி களேப் புறக்கணிப்பதாய் அமைந்து செயல்பட்டது. ஒழுங்கு முறைச் சட்டத்தின் அம்சங்களுக்கு ஒப்ப அரசாங்கத்தின் இராணுவம் மற்றும் சிவில் நிர்வாகம் பற்றிய அதிகாரங்களும், அவசரச் சட்டங்களேயும் விதிகளேயும் பிறப்பித்துக் கம்பெனியின் இந்திய அரசாங்கங்கள்மீது தகுந்த இயக்கம், மேற்பார்வை, கட்டுப்பாடு ஆகியவற்றைச் செலுத்தும் அதிகாரம் யாவும் தலேமை ஆளுநரிடமும், அவருடைய ஆட்சிமன்றத்திடமும் ஒப்படைக்கப் பட்டன. மேற்கண்ட செய்திகளில் எம் முடிவை மேற்கொள்வ தாயினும் தலேமை ஆளுநர் தமது ஆட்சி மன்ற உறுப்பினர்களின்

[1] வின்ஸென்ட் A. ஸ்மித், 'ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு'—தமிழாக்கம், க. த. திருநாவுக்கரசு; pp. 212, 213.

பெரும்பான்மை ஆதரவுடனும், பலத்துடனுமே மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது. தமது ஆட்சி மன்றத்தில் சம வாக்கு நிலவரம் நிலவும்பொழுது மட்டுமே தலைமை ஆளுநருக்குத் தமது விருப்ப வாக்கை அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டது. ஆனால், தமது ஆட்சிமன்றம் எடுக்கும் முடிவை, குறிப்பாக அஃது எடுக்கும் தவறான முடிவுகளைக்கூடப் புறக்கணிக்கவோ, ஒதுக்கித் தள்ளவோ அவருக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இந் நிலை தமது ஆட்சி மன்றத்திற்கு எதிராகவே, தமது கீழ்நிலை அதிகாரிகளுக்கு எதிராகவே தலைகுனிவான நிலையைத் தலைமை ஆளுநர் பெறும்படி செய்தது. இதனால் தலைமை ஆளுநர் நலிவுமிக்க அதிகார நிலையைப் பெற்று, ஒழுங்குமுறைச் சட்டத்தின் மூல நோக்கத்திற்கு ஒப்ப வலிவும் பொலிவும் மிக்க அரசாங்கத்தை நடத்த முடியவில்லை. ஆட்சி மன்றத்துடன்கூடிய ஆளுநரால் கம்பெனியின் காரியங்கள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலை ஏற்கெனவே வில்லியம் கோட்டை, சென்னை, பம்பாய் ஆகிய இடங்களில் இருந்தது. அத்தகைய பன்மைச் செயலாட்சி முறையே மற்ற பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலும் (colonies) செயலில் இருந்தது. ஒழுங்குமுறைச் சட்டம் பன்மைச் செயலாட்சி முறையே வங்காளத்தின் தலைமை அரசாங்கத்தில் தொடர்ந்து நீடிக்குமாறு செய்தது. ஆனால், ஏனைய குடியேற்ற நாடுகளில் இருந்ததைப்போல் தலைமை ஆளுநரின் ஆட்சி மன்றம் ஓர் ஆலோசனை மன்றமாகச் செயல்படவில்லை. மாறாக, தலைமை ஆளுநரைக் கட்டுப்படுத்தி அவரது செயல்களுக்கு முட்டுக்கட்டை போடும் நிலையில் அவரது ஆட்சி மன்றம் செயல்பட்டது. அமைப்பு ரீதியாகக் காணப்பட்ட இம் முரண்பாடு மட்டும் அன்றிச் செயற்பாட்டு முறையிலும் தலைமை ஆளுநருக்கும், அவரது ஆட்சிமன்ற உறுப்பினருக்கும் இடையே பகைமையும் போராட்டமும் நிலவின.

ஒழுங்குமுறைச் சட்டத்திலேயே வங்கத்துத் தலைமை ஆளுநரின் ஆட்சி மன்ற உறுப்பினர்களாகப் பெயரிடப்பட்டு முறையே கிளாவரிங், மான்சென், பிரான்சிஸ், பார்வெல் ஆகிய நால்வர் நியமனம் செய்யப்பட்டனர். இவர்களில் பார்வெல் ஒருவர் மட்டுமே கம்பெனியின் இந்திய நிர்வாகத்திலும் ஆட்சிச் செயல்களிலும் முன் அனுபவத்தைப் பெற்றவராயிருந்தார். ஏனைய மூவரும் இங்கிலாந்தின் பொது வாழ்க்கையில் செல்வாக்கைப் பெற்றிருந்தவர்களாகவும், இந்தியாவைப் பற்றியும் கம்பெனியின் இந்திய விவகாரங்கள்பற்றியும் ஏதும் அறியாதவர்களாயும் இருந்தனர். அம் மூவரும் தலைமை ஆளுநரான வாரன் ஹேஸ்டிங்ஸ்மீது பொறாமையையும், பகைமை

யையும் கொண்டிருந்தனர். அவர்கள் வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆட்சி மன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பமான நிலையிலேயே, இப் போக்கின் தன்மையை நாம் காணமுடிகின்றது. ஆரம்பம் முதல் இறுதி வரை இம் மூவரும் தலைமை ஆளுநர் எடுக்கும் எம் முடிவையும், விடுக்கும் கட்டளைகளையும் முழு மூச்சுடன் எதிர்ப்பதையே தமது தொழிலாகக் கொண்டனர். அவ்வாறு செய்வதன்மூலமே கம்பெனியின் நிர்வாகத்தைத் தலைமை ஆளுநர்மூலம் நன்முறையில் நடத்த முடியும் என்று அவர்கள் பகைமை உணர்ச்சியுடன் செயல்பட்டனர். தலைமை ஆளுநரான வாரன் ஹேஸ்டிங்ஸ் இத்தகைய பகைமை உள்ளத்தினரைத் தமது ஆட்சிமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினராகக் கொண்டிருந்ததாலும், அவர்கள் எதற்கெடுத்தாலும் மறுப்பைக் கூறும் மதிப்போக்கைக் கொண்டிருந்ததாலும் தமது ஆட்சிச்செயல்களில் அக்கறை காட்ட முடியாத நிலை இருந்தது. 'பாராளுமன்றத்தின் புனிதச் சட்டத்தின்மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பறிக்கப்பட்டு எனது பதவிக்கும் அதன் தன்மைக்கும் உரிய மரியாதை மறுக்கப்பட்டு, நான் ஏற்றுக்கொள்ள முடியாத பல திட்டங்களை, என் பதவிப் பொறுப்பின் காரணமாக மேற்கொள்ளவேண்டிய கீழான நிலைக்குத் தள்ளப்பட்டவனுய் எனது நிலை ஒறுத்து அடக்கப்பட்டதாயும், இன்னல் மிக்கதாயும் உள்ளது'[1] என்று தமது பதவியையே வெறுத்து, இராசினுமாச் செய்யக்கூடிய அளவிற்கு மனச் சோர்வுற்றவராய் வாரன் ஹேஸ்டிங்ஸ் தமக்கு ஏற்பட்டிருந்த அவல நிலையைக் கம்பெனியின் மேலிட அதிகாரிகளுக்கு அறிவித்தார். தமது ஆட்சிமன்றத்திற்கு எதிராகத் தலைமை ஆளுநர் அதிகாரமற்றவராகவும், தலைமை ஆளுநரை உள்ளிட்ட செயலாட்சித் துறை உச்ச நீதிமன்றத்திற்கு எதிராக அதிகாரமற்றதாகவும், ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் வங்கத்தின் அரசாங்க அமைப்பு ஏற்படுத்தப்பட்டது, நிர்வாக முறையின் அடிப்படையான கோட்பாடுகளைப் புறக்கணிப்பதாய் உள்ளது.

தலைமை ஆளுநரான வாரன் ஹேஸ்டிங்ஸ், தமது ஆட்சிமன்றச் சகாக்களில் மூவரின் தீவிரமான எதிர்ப்பு, ஒத்துழையாமை ஆகிய காரணங்களால் 1776ஆம் ஆண்டில் தமது இராசினுமாக் கடிதத்தைக் கம்பெனியின் தாயக அரசிற்கு அனுப்பினுர். ஒரு சில அறிஞர்களின் கருத்துப்படி அந்த இராசினுமாக் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனல், வாரன் ஹேஸ்டிங்ஸிற்குப் பிறகு அப் பதவிக்கு வேருெருவரைக் கம்பெனியின் உயர் அரசாங்கம்

[1] Forrest, Selections from state papers, Vol. II p. 279.

நியமிப்பதற்கு முன் வாரன் ஹேஸ்டிங்ஸின் தலையாய எதிரி யாயிருந்த மான்சென் இறந்தார். அதற்குப் பின் பார்வெல்லின் உதவியைக்கொண்டும், தமது விருப்ப வோட்டுரிமையின்மூலமும் வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆட்சிமன்றத்தில் தமது உச்ச அதிகார நிலையை மேற்கொள்ள முடிந்தது. இவ்வாறு சாதகமான சூழ்நிலை மான்செனின் இறப்பால் தோன்றியவுடன் வாரன் ஹேஸ்டிங்ஸ் தமது இராசினுமாக் கடிதத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். மேலும், அவரது உண்மையான உச்ச அதிகாரநிலை உயர்வை அடையும் வகையில் 1777-ல் வாரன் ஹேஸ்டிங்ஸின் இரண்டாவது எதிரியான கிளாவரிங் என்பவரும் இறந்தார். இந் நிலை தோன்றி யிராமல் போயிருக்குமாயின், ஆட்சிமன்றத்தின் பெரும்பான்மை யினரின் பகைமைப் பிடியில் சிக்குண்டவராய்த் தலைமை ஆளுநர் தொடர்ந்து செயற்பட நேர்ந்திருக்கும். இதன்மூலம் தலைமை ஆளுநரின் பதவி எத்தகைய தரமற்ற நிலையை மேலும் பெற்றிருக்கும் என்பதை நம்மால் உணரமுடிகின்றது. தலைமை ஆளுநருக்கு எதிரிகளாய் இருந்த ஆட்சிமன்ற உறுப்பினர்களில் இருவர் இயற்கையாக இறக்க நேர்ந்ததால், தலைமை ஆளுநருக்குச் சங்கடங்கள் தீர்ந்தன. ஆனால், ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைகள் அகற்றப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. ஏனெனில், காலியாகிவிட்டிருந்த ஆட்சிமன்றத்தின் இரண்டு உறுப்பினர் பதவிகளுக்கு உரியவர்கள் உடனே நியமிக்கப் பட்டிருந்தால் மேற்சொல்லப்பட்ட அவலநிலை தொடர்ந்து நீடித்திருக்காது. எனவே, தலைமை ஆளுநர் தமது ஆட்சிமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவுக்கு உட்பட்டுத் தமது காரியங்களை எஞ்ஞான்றும் ஆற்றவேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்த கட்டாயம் ஆட்சி நியதியின்படி பெருந் தவறுனதாகும். இக் குறைபாடு காரன்வாலிஸ் பிரபு இந்தியாவிற்குத் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்ட காலம்வரை இருந்தது. எனவே, தலைமை ஆளுநருக்கு ஆட்சிமன்ற உறுப்பினர்களால் நேர்ந்து வந்த இடையூறுகள் தமக்கும் ஏற்படக்கூடாது என்று விழைந்த காரன் வாலிஸ் தமது ஆட்சிமன்ற உறுப்பினர்களின் முடிவை ஒதுக்கித் தள்ளக்கூடிய அதிகாரம் தமக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று எழுத்துமூல அனுமதி உத்தரவாதத்தைப் பெற்ற பின்னரே தலைமை ஆளுநராகப் பதவி ஏற்கச் சம்மதித்தார்.

ஒழுங்குமுறைச் சட்டம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட காலத்தில், ஃபிரெஞ்சு அரசியல் பேரறிஞரான மான்டெஸ்க்யூ (Monstesquieu) பெரிதும் வாதித்து எடுத்துரைத்த அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு இங்கிலாந்தில் செல்வாக்கைப் பெற்றி ருந்தது. எனவே, இக் கோட்பாட்டின் நியதிகளுக்கு உகந்தவகையில்

ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் அரசாங்கத்தின் அமைப்பும், அதன் பல்வேறு உறுப்புகளுக்கான அதிகாரங்களும், உறவு நிலைகளும் விளக்கப்பட்டன. ஆனால், அவை நல்லரசாங்க நியதிகளுக்கும், நிர்வாகக் கோட்பாடுகளுக்கும் உகந்தனவாய் இருக்கவில்லை.

ஒழுங்குமுறைச் சட்டத்தின் செயல்பாட்டின் வாயிலாக வெளிப்பட்ட இரண்டாம் பெருங்குறைபாடு தலைமை ஆளுநரும் அவரது ஆட்சிமன்றமும் பெற்றிருந்த அதிகாரத்தையும் அதன் தன்மையையும் பற்றியதாகும். மொகலாயப் பேரரசிடமிருந்து கிழக்கிந்தியக் கம்பெனி பெற்ற திவானி உரிமை இக்கட்டான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் ஒழுங்குமுறைச் சட்டத்தின் பல அம்சங்கள் தெளிவற்றனவாகவும், குழப்பம் மிகுந்தனவாகவும் இருந்தன. தில்லியிலிருந்த மொகலாயப் பேரரசர் மற்றும் அவரது வங்கப் பிரதிநிதியாக இருந்த நவாபின் ஆட்சி அந்தஸ்து கிழக்கிந்தியக் கம்பெனியினால் அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. ஏனெனில் வங்கப் பிரதேசங்கள் உறுதியான முறையில் கிழக்கிந்தியக் கம்பெனியினால் தனது நேரடி ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களாக இணைக்கப்படாமல் இருந்தன. எனவே, வங்கநாடு மற்றும் அதன் அரசின் இறைமையைப் பற்றிய அம்சங்கள் அல்லது அடிப்படையான சிறப்புக் கூறுகள் கிழக்கிந்தியக் கம்பெனி, மொகலாயப் பேரரசர், வங்காள நவாபு ஆகியவர்களுக்கிடையே பிரிவுண்டு செயல்படுமாறு அமைந்திருந்தன. இறைமை வெட்டுண்டால், கட்டுண்ட அரசாங்கம் இருக்க முடியாது என்பது அடிப்படையான அரசியல் கோட்பாடாகும். ஆனால், அறிந்தோ அறியாமலோ அடிப்படையான இவ் வரசியல் கோட்பாட்டின் சாராம்சம் ஒழுங்குமுறைச் சட்டத்தில் ஒழுங்காக மேற்கொள்ளப் படவில்லை. எனவே, தில்லிப் பேரரசரும், வங்காள நவாபும் அதிகாரத்தின்—ஆட்சிப்பொறுப்பின்—நிழல் உருவங்களாக இருந்தனர். ஆனால், ஆட்சி இறைமையைப்பற்றிய முழு அதிகாரங்கள் யாவும் எவருக்கும் பொறுப்பேற்காத நிலையில் கம்பெனியிடம் இருந்தன.

ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் இரண்டு உயர் அதிகார சக்திகள் உருவாக்கப்பட்டன. அவை தலைமை ஆளுநரை உள்ளிட்ட அரசியல் மன்றமும், உச்ச நீதிமன்றமும் ஆகும். இந்த இரு நிறுவனங்களும் தத்தம் அதிகார எல்லைகளில் உயர் அதிகாரத்தைப் பெற்றுத் திகழ்பவையாய் இருந்தன. நிர்வாகம் மற்றும் இராணுவத் துறைகளில் தலைமை ஆளுநரும் அவரது ஆட்சி மன்ற உறுப்பினர்களும் தலையாய அதிகாரங்கள் கொடுக்கப்

பட்டனர். நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரை உச்ச நீதிமன்றத்திற்குத் தலையாய அதிகாரம் கொடுக்கப்பட்டது. வங்கத்து மக்களுக்குத் தகுந்த பாதுகாப்புகள் அளிக்கப்படவேண்டும் என்ற தகைசால் நோக்குடன், ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரைக் கொண்ட செயலாட்சிப் பிரிவு பிறப்பிக்கும் விதிகள், அவசரச் சட்டங்கள், மற்றும் ஒழுங்குமுறைகள் போன்ற யாவும் உச்ச நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே செயல்பாட்டிற்கு வர முடியும் என்று ஒழுங்குமுறைச் சட்டம் விதித்தது. ஆனால், இதன் விளைவாகச் செயலாட்சித்துறை நீதித்துறையின் கட்டுப்பாட்டிற்கும், ஆதிக்கத்திற்கும் உட்படுத்தப் பட்ட ஒரு விசித்திர நிலை தோன்றியது. இதனால் சீரிய சிவில் நிர்வாகத்தின் அடித்தளங்கள் சிதைவுற்றுப் போகும் சூழ்நிலை தோன்றியது. உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்குச் சட்ட ரீதியாக அன்றாட நிர்வாகத்தையும், அரசாங்கத்தையும் நடத்துவதற்கான பொறுப்புகள் கொடுக்கப்படவில்லை. இந்திய மக்களின் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை வழி முறைகள் ஆகியவற்றை அந் நீதிபதிகள் அறிந்தவர்களாகவும் இருக்கவில்லை. அத்தகைய நீதிபதிகளிடம் செயலாட்சிப் பிரிவைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் கொடுக்கப்பட்டது பெருந் தீங்கைப் பயப்பதாய் இருந்தது. இதற்குக் காரணம் முன்னரே கூறியது போன்று அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் நியதிகளை மனத்தில் கொண்டு செயலாட்சிப் பிரிவு, நீதிமன்றத்தினால் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்று எண்ணித் துணியப்பட்டதே யாகும். கோட்பாட்டு ரீதியாக இதில் தவறில்லையாயினும், செயலாட்சிப் பிரிவு தான் செய்யக்கூடிய ஒவ்வொரு சட்ட திட்டமும் நீதிமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது அடிப்படையான தவறாகும். இத் தவற்றை யொட்டியே ஒழுங்குமுறைச் சட்டம் அமைத்துக் கொடுத்த அரசாங்கத்தின் பிரிவுகளுக்கு இடையே பிணக்குகள் தோன்றின.

தத்தம் அதிகார எல்லைகளில் அரசாங்கத்தின் செயலாட்சித் துறையும், உச்ச நீதிமன்றமும் உச்ச அதிகாரங்கள் கொடுக்கப் பட்டவையாய் உருவாக்கப்பட்ட செயல் அவ்விரு துறைகளுக்கும் இடையே எவராலும் தீர்த்துவைக்க முடியாத அளவிற்கு அதிகாரப் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. இதனால் தலைமை ஆளுநர் உள்ளிட்ட ஆட்சிமன்றத்திற்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் இடையே தத்தம் அதிகார எல்லை குறித்து வழக்குகள் எழுந்தன. தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றமும், உச்ச நீதிமன்றமும் வெளிப் படையாக மோதிக்கொள்ளும் அளவிற்குப் பல வழக்குகள் எழுந்தன. இதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் வழக்குகளைக் கூறலாம்.

21

1779-1780ஆம் ஆண்டில் காஸி ஜூரா (Kasi Jura) என்னும் ஊரின் அரசரைப் பற்றிய ஒரு வழக்கு எழுந்தது. காஸி ஜூராவின் அரசர் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஜமீன்தாராக இருந்தவர். இவ் வரசர் காஸிநாத் என்பவருக்குக் கடன்பட்டிருந்தார். தமக்குச் சேரவேண்டிய கடன் தொகையை உரிய காலத்திற்குள் பெற முடியாததால், அத் தொகையை நீதிமன்றத்தின்மூலம் வசூலிக்கும் பொருட்டுக் காஸி ஜூரா அரசின் மீது, காஸி நாத் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தார். இவ் வழக்கில் காஸி ஜூரா அரசரைக் கைது செய்வதற்கான பொதுப் பிடிப்பாணைக் (warrant) கட்டளையை உச்ச நீதிமன்றம் பிறப்பித்தது. இக் கட்டளையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டிருக்கவேண்டும் என்றால் அதற்கான ஜாமீனை உரிய முறையில் காஸி ஜூராவின் அரசர் கொடுத்திருக்கவேண்டும். ஆனால், சட்ட முறையான அவ் வழியைப் பின்பற்றாமல் அவர் ஓடி ஒளிந்து கொண்டிருந்தார். இதனால் நீதிமன்றத்தின் கட்டளை செயல்படுத்தப்பட முடியாமல் நீதிமன்றத்திற்கே திரும்பியது. அதே நேரத்தில் கம்பெனியின் வருவாய்களுக்குப் பொறுப்பேற்றிருந்த ஜமீன்தாராகவும் காஸி ஜூராவின் அரசர் இருந்தார். அவர் நீதிமன்றத்தின் பொதுப் பிடிப்பாணையிலிருந்து காத்துக் கொள்ள எங்கோ சென்று ஒளிந்து விட்டதால் கம்பெனியின் அரசாங்கத்திற்கு அவர்மூலம் சேர வேண்டியிருந்த வருவாய் திரட்டப்படுவதில் தடையேற்பட்டது. இதனை அறிந்த தலைமை ஆளுநரான வாரன் ஹேஸ்டிங்ஸ் தமது அரசாங்கத்தின் தலைமை வழக்கறிஞரை ஆலோசித்து, அவரது ஆலோசனையின்பேரில் காஸி ஜூராவின் அரசர் உச்ச நீதிமன்றத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படியவோ, அதன் அதிகார வரம்பிற்கு உட்படவோ வேண்டியதில்லை என்றும், உச்ச நீதிமன்றத்தில் இது குறித்து அவர் நேரில் வரவோ, வழக்காடவோ தேவையில்லை என்றும் செய்தி அனுப்பினார். மேலும், 'தமது சுய ஒப்புதலின் பேரில் ஏற்றுக் கொண்டிருந்தால் ஒழியத் தலைமை நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு ஜமீன்தார்கள் உட்பட வேண்டியதில்லை; உட்பட்டவர்களும் அல்லர்' என்று ஒரு பொது அறிவிப்பு (general notification) அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்டது. இது உச்ச நீதிமன்றத்திற்கு எதிராக அரசாங்கத்தின் செயலாட்சிப் பிரிவினால் விடுக்கப்பட்ட சவாலாக அமைந்தது.

தமது அதிகார எல்லைக்கு எதிராக அரசாங்கத்தின் செயலாட்சிப் பிரிவினால் விடுக்கப்பட்ட சவாலை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு வலுவுடன் அதனுடன் மோதிற்று. மேற் சொல்லப்பட்ட நிலையில் உச்ச நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்

பட்ட கட்டளையும், பொதுப்பிடிப்பாணையும் உரிய நபர்மீது செலுத்தப்படாமல் இருந்ததாலும், செயலாட்சிப் பிரிவு மோதலைத் தோற்றுவித்திருந்ததாலும், உச்ச நீதிமன்றம் மற்றொரு கட்டளை மூலம் காஸி ஜஃரா அரசரின் நிலம், சொத்து முதலியவற்றை ஆர்ஜிதப்படுத்த உத்தரவிட்டது. அதனை நிறைவேற்றும் வகையில் தலைமை நீதிமன்றத்தின் காவல் அதிகாரியின் (sergeant) தலைமையின்கீழ் அறுபது பேர்களை உச்ச நீதிமன்றம் அனுப்பியது. தலைமை நீதிமன்றத்தினால் தனது கட்டளையைச் (writ) செயல்படுத்த அனுப்பப்பட்ட நீதிமன்றத்தின் அதிகாரிகள் காஸி ஜஃரா அரசரின் வீட்டில் புகுந்து அவரது வேலையாட்களையும் ஏவலாளர்களையும் அடித்துக் காயப்படுத்தியதுடன், அவ் வரசரின் அந்தப்புரத்தில் வலுக்கட்டாயமாகச் சென்று அட்டூழியம் செய்தனர் என்றும், அவரது மத வழிபாட்டு அறையில் புகுந்து அங்கிருந்த ஆபரணங்களையெல்லாம் ஆர்ஜிதம் செய்தனர் என்றும், தமது குடியானவர்களிடமிருந்து வரி மற்றும் வாரங்களை (rents) வசூலிப்பதிலிருந்து அவர் தடைப்படுத்தப்பட்டார் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. அதன் பேரில் தலைமை ஆளுநரும் அவரது ஆட்சி மன்றமும், காஸி ஜஃரா அரசரை உச்ச நீதிமன்றத்தின் கட்டளைச் செயல்முறைக்கு (process) அடிபணிய வேண்டாம் என்று அறிவுறுத்தி உச்ச நீதிமன்றத்தின் அதிகாரிகளைக் காவலில் வைக்குமாறு கட்டளையிட்டனர். கம்பெனியின் படைகள் நீதிமன்றத்தின் அதிகாரிகளைப் பிடித்து அவர்களைக் கல்கத்தாவிற்குக் கொண்டு வந்தனர். உடனே உச்ச நீதிமன்றம் அரசாங்கத்தின் தலைமை வழக்கறிஞர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாவர் மீதும் உடனடியான நடவடிக்கையை எடுத்தது. இந் நடவடிக்கையின் விளைவாக அரசாங்கத்தின் தலைமை வழக்கறிஞர் சிறை பிடிக்கப்பட்டார்.

மேற்சொல்லப்பட்ட நிலையில் காரியங்கள் அரசாங்கத்தின் ஆட்சிப் பிரிவு, உச்ச நீதிமன்றம் ஆகியவற்றால் மேற்கொள்ளப் பட்டவுடன் காஸி ஜஃரா அரசருக்குக் கடன் கொடுத்திருந்தவரும் மேற்சொல்லப்பட்ட வழக்கில் வாதியுமாக இருந்த காஸிநாத், தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவர் மீதும் உச்ச நீதிமன்றத்தின் அன்றாட நிர்வாக நடவடிக்கையில் தகாத முறையில் தலையிட்டதாகக் குற்றம்சாட்டி அதே உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்தார். ஆரம்பத்தில் தலைமை ஆளுநரும், அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்களும் உச்ச நீதிமன்றத்தில் ஆஜரான போதிலும் பின்னர் அவர்கள் அம் மன்றத்தின் கட்டளைகளுக்கும், செயல் முறைகளுக்கும் அடிபணிய மறுத்து அவற்றை ஒதுக்கித் தள்ளினர்.

இவ்வாறு தனது செயற்பாட்டிற்கு இழிவைத் தேடித்தரும் வகையில் ஆட்சித்துறை அதிகாரிகள் நடந்துகொள்ளக் காரணமாயிருந்தது அரசாங்கத் தலைமை வழக்கறிஞரின் தவறான அறிவுரையே என்று கூறி, அவர் நீதிமன்றத்தை அவமானத்திற்கு உள்ளாக்கினார் என்ற காரணத்தைக் காட்டி, தலைமை வழக்கறிஞரை உச்ச நீதிமன்றம் சிறையில் தள்ளியது. இதனால் ஏற்பட்ட இக்கட்டான நிலையை அகற்றவேண்டி உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த எலிஜா இம்பேயை சாதர் திவானி அதலத்தின் தலைமை அதிகாரியாக 1780-ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் மாற்றி நியமித்தார். இம்பேயும் அப் பதவியை ஏற்றுக்கொண்டார். ஆனால், கம்பெனியின் மேலிடத்து இயக்குநர்கள் அந்த ஏற்பாட்டை அனுமதிக்கவில்லை. எனவே, அவர்கள் எலிஜா இம்பேயைப் பதவியிலிருந்து திருப்பி அழைத்தனர் (recall).

இதற்கிடையில் காஸி ஜுரா வழக்கில் தாம் எடுத்த நடவடிக்கைகளை ஆதரித்து அவை சரியானவை என்று எடுத்துக் காட்டி, உச்ச நீதிமன்றத்தின் தவறைச் சுட்டிக்காட்டும் வகையில் தலைமை ஆளுநரும், அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்களும் ஒரு விண்ணப்பத்தையும், உச்ச நீதிமன்றத்தின் 'அட்டூழியங்களை அறிவிக்கும் வகையில் வங்காளத்திலிருந்த முக்கிய பிரிட்டிஷ் குடிமக்கள் ஒரு மனுவையும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு அனுப்பினர். மேற்சொல்லப்பட்ட இரண்டு மனுக்களும், பொதுமக்கள் அவையினால் நியமிக்கப்பட்ட பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டன. அக் குழு, அம் மனுக்களைப் பரிசீலித்து 1781-ல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. தனது அறிக்கையில் பாராளுமன்றத்தின் பொறுக்குக் குழு கல்கத்தாவின் உச்ச நீதிமன்றம் வரம்பு மீறிய அதிகாரங்களை வன்முறையில் பயன்படுத்தியது என்பதை எடுத்துக்காட்டித் தலைமை ஆளுநரும் அவரது ஆட்சி மன்றமும் எடுத்த நடவடிக்கைகள் சரியானவையே என்று கூறியது. இதன் பேரில் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பணிகளில் காணப்பட்ட குறைபாடுகளை அகற்றும் வகையில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் வங்காள நீதித்துறைச் சட்டம் என்ற ஒன்றை 1781-ல் நிறைவேற்றியது. அச் சட்டத்தின்மூலமே மேற்சொல்லப்பட்ட காஸி ஜுரா வழக்கின் சம்பந்தமாகத் தலைமை நீதிமன்றத்தால் குறை காணப்பட்ட தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்கள் யாவரும் சட்ட விலக்குரிமை அளிக்கப்பட்டனர். மேலும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு ஒப்பக் கல்கத்தாவில் சிறை வைக்கப்பட்டிருந்த யாவரும் விடுவிக்கப்பட்டனர்.

அரசாங்கத்தின் செயலாட்சிப் பிரிவான தலைமை ஆளுநரை உள்ளிட்ட ஆட்சிமன்றத்திற்கும் நீதித்துறையின் உச்ச நிறுவன மான உச்ச நீதிமன்றத்திற்கும் இடையே அதிகார வரம்பு பற்றி எழுந்த மற்ற இரு வழக்குகள்பற்றி இங்கு எடுத்துக் கூற வேண்டியது அவசியமாகும். அரசாங்கத்தின் செயற்பாடுகளும், பொறுப்புகளும் சிதைந்து சின்னபின்னமாகும் வகையிலும் எல்லாத் தரப்பு மக்களின் மனத்திலும் அச்சத்தை உருவாக்குவ தாகவும் உச்ச நீதிமன்றத்தின் செயல்கள் அமைந்தன. 1775-ல் வங்காளத்தின் நவாபாக இருந்தவர் முபாரக்-உத்-தெளலா என்பவராவார். இவருக்கு இராதா சர்ண் (Radha churn) என்பவர் சட்ட ஆலோசகராகவும் வழக்குரைஞராகவும் இருந்தார். வங்கத்து உச்ச நீதிமன்றத்தில் இராதா சர்ண் மீது ஒரு வழக்கு தொடரப்பட்டது. ஆனால், உச்ச நீதிமன்றம் வங்காள நவாபு பெற்றிருந்த மாநில இறைமையை ஏற்க மறுத்து, அவரை அரசியல் ரீதியாக அதிகாரமற்ற பெயர்ச் சூனியம் (empty name) என்று அறிவித்தது. ஏனெனில், ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் பிரிட்டிஷ் பாராளுமன்றம் முன்னெச்சரிக்கையுடனும், வெகு ஜாக்கிரதையாகவும் வங்கம் மற்றும் பிற மாநிலங்கள் யாவற் றுக்கும் பிரிட்டிஷ் அரசரே மன்னராய் இருந்தாரா அல்லது இல்லையா என்பதைக் கூறாமல் விட்டிருந்தது. ஆனால், இச் சட்ட நுணுக்கப் பிரச்சினையைத் தீர்மானிக்க வேண்டியது அவசியம் என்பதை இவ் வழக்கின்மூலம் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் நினைக்கவில்லை. எனினும், வங்கம் மற்றும் பிற மாநிலங்களின் அரசாங்கம் முழுவதும் நடைமுறையில் கிழக்கிந்தியக் கம்பெனி யின் கைகளிலேயே இருந்தது என்று எண்ணினர். இப்படி உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் மேற்கொண்ட எண்ணமும் முடிவும் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதாய் இருந்தன. அஃதாவது, 'கம்பெனியின் அரசாங்கத்தில் வருவாய் திரட்டுபவர்களாகவோ, நிலவருவாய் கொண்ட உழவர்களாகவோ சுதேசி நீதிமன்றங்களில் (Native Courts) நீதிபதிகளாகவோ, சட்ட அதிகாரிகளாகவோ பணியாற்றும் யாவரும் பிரிட்டிஷ்காரர்களாகவோ அல்லது இந்தியர்களாகவோ இருந்தால் அவர்கள் யாவரும் உச்ச நீதி மன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்களே' என்று தீர்மானித்துச் செயல்களை உச்ச நீதிமன்றம் மேற்கொண்டது. ஆனால், கம்பெனியின் அரசாங்கத்தில் பணியாற்றும் குடிமக்கள் உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கும் உட்பட்டவர்கள் என்று ஒழுங்குமுறைச் சட்டத்தில் கூறப்பட்டிருந்த செய்தி தெளி வற்றதாக இருந்தது. இத் தெளிவற்ற வாசகத்தை உச்ச நீதி மன்றம் பயன்படுத்திக்கொண்டு, நேரிடையாகவும் மறைமுக மாகவும் கம்பெனியின் அரசாங்கத்தில் பணியாற்றிய பிரிட்டிஷ்

குடிமக்களை மட்டுமன்றி, இந்தியர்களையும் சுதேசி அதிகாரிகளையும் தனது அதிகார எல்லைக்கு உட்பட்டவர்கள் என்று முடிவெடுத்து அதன்மூலம், நிர்வாகக் குற்றம் குறைகளை நீக்கும் வகையில் செயல்பட்டது. இதனால், விரும்பத் தகாத விளைவுகள் பல தோன்றின. மேலும், உச்ச நீதிமன்றம் வழக்குகளின் தன்மைகளுக்கு ஒப்பத் தண்டனை கொடுக்கவில்லை. உதாரணமாக, கள்ளக் கையெழுத்து, திருட்டுப் போன்ற சிறு குற்றங்களுக்குத் தூக்குத் தண்டனை (capital punishment) வழங்கப்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் அதிகாரப் பிரயோகம் யாவர் மனத்திலும் அச்சத்தை உண்டாக்கியதோடன்றிக் கம்பெனியின் அரசாங்கமே நிலைகுலைந்து போகும்படி செய்தது. அரசாங்கத்தைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, வரம்பு மீறிய தனது அதிகாரத்தைச் செயல்படுத்தும் நிலையை இராதாசர்ண் வழக்குமூலம் உச்ச நீதிமன்றம் தெளிவாக வெளிப்படுத்தியது. இதனையொட்டி எழுந்த இரு பெரும் வழக்குகளே பாட்னு மற்றும் காஸி ஜூரா வழக்குகளாகும். அவ் வழக்குகள் அரசாங்கத்தின் செயலாட்சித் துறைக்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் இடையே போட்டியைத் தோற்றுவித்ததோடன்றி அரசாங்கம் தடுமாற்றத்தைப் பெறும் வகையிலும், மக்கள் மன அமைதியை இழக்கும் வகையிலும் அமைந்திருந்த தலைமை நீதிமன்றத்தின் அதிகார வெறிப்போக்கை வெளிப்படுத்தின. எடுத்துக்காட்டாக, தமது அதிகார எல்லைக்கு உட்பட்டு அரசாங்கத்தின் ஆட்சித்துறை அதிகாரிகள் நில வருவாயைக் கட்டத் தவறியவர்களைக் கைது செய்தனர். இச் செயல் ஆட்சித்துறையின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதேயாகும். எனினும், கைதாகியிருந்த சம்பந்தப்பட்டவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஆள் காப்புரிமைக் கட்டளையை வேண்டி உச்ச நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தனர். உச்ச நீதிமன்றம், 'அவர்கள் யாவரும் ஏதேச்சாதிகாரமாக ஆட்சித்துறையினரால் கைது செய்யப்பட்டது தவறு' என்று கூறி அவர்களை ஜாமீனில் விடுவித்தது. உச்ச நீதிமன்றத்தின் இந் நடவடிக்கை அரசாங்கத்தின் வரிவசூல் வேலை முழுவதையும் முடக்கி நொடித்துப் போகுமாறு செய்தது.

பாரறிந்த பாட்னு வழக்கின்மூலம் தமது அரசாங்க அலுவல் பொறுத்தவரை கம்பெனி அரசாங்கத்தின் வருவாய் குத்தகைதாரர்களும் (farmers of revenue), வரிவசூல் அதிகாரிகளும் உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்கள் என்பது வெளிப்படுத்தப்பட்டது. இவ் வழக்கில் வருவாய்க் குத்தகைதாரராக இருந்த பகதூர் பெக் (Bahadur Beg) என்பவருக்கும், நாதிரா பேகம் (Nadirah Begum) என்னும் விதவைக்கும் இடையில்

சொத்தைப்பற்றிய தகராறு எழுந்தது. நாதிரா பேகம் என்பவர் ஷாபஸ்கான் (Shabazkhan) என்பவரின் மனைவியாவார். பகதூர் பெக் அவரது மைத்துனராவார். ஷாபஸ்கான் இறந்தவுடன் அவரது சொத்தில் பங்குரிமை கோரி நாதிரா பேகத்தின்மீது பாட்னாவிலிருந்த திவானி அதலத் என்னும் சுதேசி நீதிமன்றத்தில் 1777-ல் பகதூர் பெக் ஒரு வழக்கைத் தொடர்ந்தார். கம்பெனியின் சட்ட அதிகாரிகளாக இருந்த காஸி, முக்தீப் ஆகியோர் மேற் சொன்ன வழக்கு குறித்து ஒழுங்கற்ற முறையில் சான்றைப் பதிவு செய்தனர். மேலும், அச் சான்றின் அடிப்படையில் நாதிரா பேகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்களும், தஸ்தாவேஜுகளும் (deeds) கள்ளக் கையெழுத்துகளுடன் தயாரிக்கப்பட்டவை என்று முடிவெடுத்து, அவை செல்லாதவை என்று நிராகரித்தனர். எனவே, முகமதிய சட்டத்திற்கு ஒப்ப ஷாபஸ்கானின் சொத்தைப் பிரித்து, அதில் கால் பகுதியை நாதிரா பேகத்திற்கும், எஞ்சிய முக்கால் பகுதியை ஷாபஸ்கானின் சகோதரியின் மகனான பகதூர் பெக்கிற்கும் வழங்கினர். சட்ட அதிகாரிகளின் தவறான இம் முடிவை எதிர்த்துக் கல்கத்தாவிலிருந்த சாதர் திவானி அதலத் நீதிமன்றத்தில் நாதிரா பேகம் மேல்முறையீட்டு வழக்கைத் தொடர்ந்தார். ஆனால், அந் நீதிமன்றத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, நாதிரா பேகம் தமது வழக்கை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச்சென்றார். உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச்சென்ற தமது வழக்கில் நாதிரா பேகம் பகதூர் பெக்கை மட்டுமன்றிக் காஸி மற்றும் முக்தீப்பையும் (பாட்னா திவானி அதலத்தின் சட்ட அதிகாரிகள்) பிரதிவாதிகளாகச் சேர்த்தார். அவர்கள் யாவரிடமிருந்தும் ஆறு இலட்ச ரூபாய்களை இழப்பீடுகளாகவும் (damages) கோரினார். இவ் வழக்கைப் பதிவு செய்து உச்ச நீதிமன்றம் விசாரணையைத் தொடங்கிற்று. உச்ச நீதிமன்றம் பகதூர் பெக், சட்ட அதிகாரிகளான காஸி, முக்தீப் ஆகிய மூவரையும் கைது செய்யுமாறு உத்தரவிட்டது. அதன் பேரில் அம் மூவரும் கைது செய்யப் பட்டுப் பாட்னாவிலிருந்து கல்கத்தாவிற்குக் கொண்டுவரப்பட்டு உச்ச நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர். உச்ச நீதிமன்றம் பின்னர் வழக்கை விசாரணை செய்தது. தனது விசாரணையின் முடிவில் சட்ட அதிகாரிகளான காஸி மற்றும் முக்தீப் ஆகியோர் எடுத்த நடவடிக்கைகள் யாவும் சட்டப் புறம்பானவை என்று அறிவித்து அவர்களுக்கு, சொத்து சம்பந்தமான இவ் வழக்கை நடத்துவதற்கு அதிகாரமே கிடையாது என்றும் அறிவித்தது. மேலும், அவர்களால் நாதிரா பேகம் கொடுமையான நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டார் என்றும் கூறியது. எனவே, அவர்கள் மூன்று இலட்சரூபாய் இழப்பீட்டுத் தொகையாக நாதிரா பேகத்

திற்குக் கொடுக்கவேண்டும் என்றும் தீர்ப்பினை வழங்கியது. ஆனால், அத் தீர்ப்பிற்கு மூவரும் கட்டுப்படவில்லை. எனவே, அவர்களைச் சிறையில் தள்ள உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவ் வழக்கில் எழுந்த முக்கியமான சட்டப் பிரச்சினை யாதெனில் தமது அலுவல் நிமித்தம் செயல்பட்ட கம்பெனி அரசாங்கத்தின் சட்ட அதிகாரிகள் உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்களா என்பதேயாகும். இதற்கு உச்ச நீதிமன்றம் விளக்கம் கொடுக்கும் வகையில் அறிவித்த செய்தி யாதெனில் கம்பெனி அதிகாரிகள் தங்களுடைய அன்றாடப் பணிகளை மேற்கொண்டதற்காகத் தண்டிக்கப்படவில்லை; ஆனால், அவர்கள் தகாத முறையில் தமது அதிகார வரம்பிற்கு அப்பாற் பட்ட நிலையில் சட்டத்திற்குப் புறம்பான செயல்களை மேற் கொண்டதற்காகவே தண்டிக்கப்பட்டனர் என்று கூறியது. இதன்மூலம் வருவாய்க் குத்தகைதாரர்களாக இருந்தவர்கள், மறைமுகமாகக் கம்பெனியின் பணித்துறையில் ஈடுபட்டி ருப்போரே என்று கூறி, அவர்கள் தனது அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்களே என்று தீர்ப்பு வழங்கியது.

கல்கத்தா உச்ச நீதிமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகார வரம்புகள் மற்றும், வேறு பல செய்திகள் குறித்தும் பல குறைபாடுகள் இருந்தன. உண்மையிலேயே அதன் அதிகாரங்கள் மற்றும் செயல்பாட்டு எல்லை முதலியவை தெளிவான சொற்களில் விளக்கப்படவில்லை. ஒழுங்குமுறைச் சட்டத்தின் அம்சங்கள் பலவும் வரையறுத்துக் கூறப்படாதனவாய், தெளிவற்றனவாய் இருந்தன. அதன் பணியைப்பற்றிய செய்திகள் நேர்முனைச் சொற்களில் (positive terms) கூறப்பட்டிருந்தனவே யன்றி, எதிர் மறைச் சொற்கள் கையாளப்படவில்லை. இதனால், ஒரு சட்டச் செய்தி குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட உரைவிளக்கங்கள் நீதிபதி களால் கொடுக்கப்பட்டன. இந் நிலை ஒழுங்குமுறைச் சட்டம் எக் குறிக்கோளின் அடிப்படையில் இயற்றப்பட்டதோ அக் குறிக் கோள் வெளிப்பட ஏதுவாக இல்லை. எனவே, உச்ச நீதிமன்றத் திற்கும், தலைமை ஆட்சிமன்றத்திற்கும் இடையே அடிக்கடி சச்சரவுகள் தோன்றின. இத்தகைய தெளிவற்ற சொல்லாட்சியின் காரணமாக உச்ச நீதிமன்றத்தில் வல்லாட்சி தோன்றியது. அதன்படி தனக்கு வருவாய் விவகாரங்கள் பற்றிய வழக்குகளை நடத்த அதிகாரம் உண்டு என்று தலைமை நீதிமன்றம் உரிமை கோரியது; அவ் வுரிமையைச் செயல்படுத்தியும் காட்டியது. அதே நேரத்தில் அதே வேகத்தில் தலைமை ஆட்சிமன்றம் உச்ச நீதிமன்றம் தனக்குத்தானே உருவாக்கிக் கொண்ட அதிகார

நிலையை மறுத்தது. கம்பெனியின் வருவாய் மற்றும் நீதித்துறை அதிகாரிகளை விசாரிக்கும் உரிமை உச்ச நீதிமன்றத்திற்குக் கிடையாது என்று தலைமை அரசாங்கம் வாதித்தது. ஒழுங்கு முறைச் சட்டத்தின் வாசகத்தின்படி எல்லாப் பிரிட்டிஷ் குடிமக்களையும், கம்பெனியின்கீழ்ப் பணியாற்றும் யாவரையும் விசாரிப்பதற்கான அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டது. ஆனல், பிரிட்டிஷ் குடிமக்கள் என்பவர் யாவர் என்று சட்டத்தில் எங்கும் தெளிவாக விளக்கம் செய்யப்படவில்லை. ஒரு கருத்தின்படி, 'பிரிட்டிஷ் குடிமக்கள் என்னும் சொற்கள் ஆங்கிலேயராகப் பிறந்திருந்தோரை மட்டுமே குறித்தது. மற்ருெரு கருத்தின்படி அல்லது நோக்கில் வங்கம் பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்களின் முழு ஜனத் தொகையையும் பிரிட்டிஷ் குடிமக்களாகக் கருத இடமிருந்தது. ஏனெனில், மேற்சொன்ன மூன்று பிரதேசங்களும் கம்பெனியின் ஆட்சி வரம்பிற்குள் அமைந்திருந்தன. மற்றுமொரு கருத்தின்படி வங்கத்தின் முழு மக்கள் தொகையையும் குறிக்காது, கல்கத்தாவில் வசித்து வந்தவர்களை மட்டுமே பிரிட்டிஷ் குடிகள் என்னும் சொல் குறிப்பதாக அமைந்தது எனலாம். இப்படி உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டோர் எவர் என்பதைக் குறித்துத் தெளிவற்றதும் குழப்பம் மிகுந்ததுமான நிலை இருந்தது. மேலும், கம்பெனிக்கு ஒருவர் ஆற்றிய தொண்டு அல்லது கம்பெனியின் பணித்துறை என்பது பற்றிய விளக்கமும் சரியாக ஒழுங்குமுறைச் சட்டத்தில் காணப்படவில்லை. ஜமீன்தார்கள் எனப்பட்ட நிலக் கிழார்கள், கம்பெனியின் பணியாளர்கள் அல்லது வருவாய் குத்தகைதாரர்கள் என்று கருதப்பட்டனரா என்பதும் விளங்க வில்லை. இத் தெளிவற்ற சட்ட ஏற்பாடு (provision) கம்பெனியால் நேரிடையாகவோ மறைமுகமாகவோ பணியில் அமர்த்தப்பட்டிருந்த யாவரையும்-பிரிட்டிஷ்காரர்களால் பணியில் அமர்த்தப்பட்டிருந்த யாவரையும்-உச்ச நீதிமன்றத்தின் ஆட்சி வரம்பிற்கு உட்பட்டவர்கள் என்று கருதுமாறு செய்தது. இதனல், உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் தமது அதிகாரத்தை எல்லைமீறிப் பயன்படுத்தினர். இதன் காரணமாக நெடுந் தொலைவிலிருந்த சுதேசி மக்கள்கூட ஏதேனும் ஒரு வழக்கின் காரணமாகக் கைது செய்யப்பட்டுக் கல்கத்தாவிற்குக் கொண்டு வரப்பட்டனர். மேலும், உச்ச நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்ட நடைமுறை நுணுக்கங்கள், செயல் முறைகள், அவற்றின் காரணமாக விளைந்த தவிர்க்க முடியாததும் பொறுத்துக்கொள்ள முடியாததுமான கால தாமதம், உச்ச நீதிமன்றத்தால் வழங்கப் பட்ட கொடுமையான, மனிதத் தன்மையற்ற தண்டனைகள் ஆகிய யாவும் உச்ச நீதிமன்றத்தை எவரும் அச்சத்துடன் அணுகும்

நிலையை உருவாக்கியது. தமது வழக்குகளில் உச்ச நீதிமன்றத்தை நாடி அதன்மூலம் தகாத தண்டனை பெற்றதைக் காட்டிலும் இன்னலுடன் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை ஏராளம் என்பதை மெக்காலே போன்ற அறிஞர்கள் எடுத்துக்காட்டி யுள்ளனர். அளவற்ற அதிகாரச் செயல்பாட்டை விரும்பிய உச்ச நீதி மன்றத்தின் நீதிபதிகள் பல்லாயிரம் மக்களைக் கொண்டிருந்த இந் நாட்டின் பழக்க வழக்கங்களையும், மரபுகளையும் வழக்காறுகளையும் சிறிதும் அறிந்திருந்தவர்களாக இருக்கவில்லை.

ஒரு நாட்டில் நீதிமன்றம் என்ற ஒன்று இருப்பின் அஃது ஒரு சட்டத்தின் செய்திகளைத் தழுவிய வண்ணம் எழுந்துள்ள வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டியதைத் தனது தலையாய கடமையாகக் கொண்டிருத்தல் வேண்டும். நிலையானதும் நியாயமானதுமான நீதி கிடைக்கவேண்டுமாயின் சட்டங்கள் தெளிவாக இருக்கவேண்டும். சட்டத்தை அதன் மூலக் குறிக் கோளுக்கொப்பப் பொருள் விளக்கம் செய்யும் அறிவும் ஆற்றலும் படைத்த நீதிபதிகள் இருக்கவேண்டும். ஒரு வழக்கு என்றால் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கட்சிக்காரர்கள் இருப்பதும் இயற்கையே. ஆனால், ஒரு வழக்கைப்பற்றி வாதி, பிரதிவாதிகள் வெவ்வேறு சட்டங்களின் துணையை நாடி நீதியை விழையும் நிலை யிருக்குமாயின் ஒரு நீதிமன்றத்தின் பொறுப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருத்தல்வேண்டும். இது தவிர நீதிபதிகளும் சட்ட நுணுக்கங்களை நன்கறிந்த நிபுணர்களாகவும் இருக்கவேண்டும். ஒழுங்குமுறைச் சட்டம் நிறுவிய உயர் நீதி மன்றம் இத் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் அமைந்திருக்க வில்லை. இதனால் பல குழப்பங்கள் மற்றும் குறைபாடுகள் தோன்றின. உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் ஆங்கிலச் சட்டத்தை மட்டும் அறிந்தவர்களாக இருந்தனர். ஆனால், உச்ச நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடுத்தவர்களோ இந்தியர்களும் முகமதியர்களுமாவர். அவர்கள் தமக்கே உரித்தான இந்து முகமதியச் சட்டங்களைப் பின்பற்றுவோராய் இருந்தனர். இச் சட்டங்களைப் பற்றிய எச் செய்தியையும் முழுமையாக அறிந்த நிலையில் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளில் எவரும் இருக்க வில்லை. அவற்றைப்பற்றி ஓரளவேனும் அவர்கள் அறிந்திருந்த போதிலும் இந்து முகமதிய சட்டங்களுள் எச் சட்டத்தைப் பின்பற்ற வேண்டும் என்பது அறவே குறிக்கப்படவில்லை. அதனால் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் தமது கருத்திற்கும், சட்டப் புலமைக்கும் ஒப்ப ஆங்கிலச் சட்டத்தைத் தழுவியே தீர்ப்புரைகளை வழங்கினர். இதனால் இன்னலுற்றோர் இந் நாட்டு மக்களேயன்றி வேறெவரும் அல்லர். மேலும் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளே

யன்றி அவர்களின் தீர்ப்புரைகளையும் கட்டளைகளையும் செயலாக்கம் செய்த நீதிமன்ற அதிகாரிகளும், பணியாளர்களும் இந் நாட்டு மக்களின் சம்பிரதாயங்களையும், மதிப்பு மிக்க மரபுகளையும் சிறிதும் அறியாதவர்களாக இருந்தனர். இதனால் நீதிமன்ற அதிகாரிகளும், பணியாளர்களும் பெண்களின் அந்தப்புரங்களிலும், தனிமை இடங்களிலும் அத்து மீறி நுழைந்து நீதி மன்றத்தின் கட்டளைகளை நிறைவேற்றினர்; அவ்வாறு செய்ய வேண்டியது கடமை என்றும் கருதினர். அதே நேரத்தில் தமது அலுவல் நிமித்தமாக அதிகாரப் பாங்குடன் காரியங்களை நிறைவேற்றுவதற்குக் காரணமாயிருந்த நீதி நிர்வாக நடைமுறைகளைப்பற்றி எதையும் அறியாத நிலையில் வங்கத்து மக்கள் இருந்தனர். இதனால், ஒழுங்குமுறைச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தையும் அதன் நீதிபதிகளையும் அதிகாரிகளையும் கண்டு அஞ்சியவண்ணம் இருந்தனர் அவல நிலைக்கு உள்ளாகியிருந்த வங்கத்து மக்கள்.

உச்ச நீதிமன்றத்தை உருவாக்குவதன்மூலம் நல்லதொரு நீதி நிர்வாக முறையை ஸ்தாபிக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தை ஒழுங்குமுறைச் சட்டம் அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும், அச் சட்டம் இந் நாட்டு நீதிமுறையில் இரு பொருள் படும்படியான தெளிவற்ற தன்மையைத் தோற்றுவித்தது. எவ்வாறெனில், உச்ச நீதிமன்றத்திற்கும் வங்கத்துச் சுதேசி மக்களுக்கென அமைக்கப்பட்டிருந்த சுதேச நீதிமன்றங்களான சாதர் திவானி அதலத், சாதர் நிசாமத் அதலத் ஆகிய நீதி மன்றங்களுக்கும் இடையே அதிகார வரம்பு குறித்து எழுந்த குழப்பங்களைத் தவிர்க்கத் தவறியது. திவானி, நிசாமத் நீதி மன்றங்கள் மற்றும் அவற்றின் மேற்பார்வை கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு உட்பட்டு இருந்த ஏனைய நீதி மன்றங்கள் யாவும் இந்தியச் சிவில் மற்றும் குற்றவியல் சட்டங்களைத் தழுவி வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புகளை வழங்கும் பொருட்டு அமைக்கப்பட்டிருந்தன. இந் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிராக மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லலாமா அல்லது கூடாதா என்பது ஒழுங்குமுறைச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. மாறாக, வங்கத்துச் சுதேசி நீதிமன்றங்கள் உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதா இல்லையா என்பதும் அடிப்படையாக, ஆணித்தரமாக ஒழுங்குமுறைச் சட்டத்தில் அறிவிக்கப்படவில்லை. எனினும், உச்ச நீதிமன்றம், அந் நீதிமன்றங்கள் யாவும் தனது அதிகாரப் பரப்பின்கீழ் அமைந்தனவே என்று கூறிச் செயல்பட்டது. மேலும், உச்ச நீதிமன்றமும்

பிற நீதிமன்றங்களும் தத்தம் செயல்களை மேற்கொண்டதில் பின்பற்றிய நடைமுறைகளிலும் செயல்முறைகளிலும் வேறுபாடுகளும் முரண்பாடுகளும் இருந்தன.

உச்ச நீதிமன்றத்திற்கும் தலைமை ஆளுநரை உள்ளிட்ட ஆட்சிமன்றத்திற்கும் இடையே எழுந்த சிக்கல்களையும் பல வழக்குகளையும் மனத்தில்கொண்டு பார்க்கும்பொழுது, அத்தகைய குழப்பங்களும் சீர்கேடுகளும் தோன்றுவதற்குக் காரணம் ஒழுங்குமுறைச் சட்டத்தில் வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய பிரதேசங்கள் மற்றும் அவற்றின்மூலம் பெறப்பட்ட வருவாய்கள் ஆகியவற்றைப் பற்றிய கம்பெனியின் மேலாண்மை மற்றும் வில்லியம் கோட்டையின் அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையே வேறுபாட்டை எடுத்துக் காட்ட முற்பட்டதாகும். இவ்வாறு செய்யப்பட்டதற்குக் காரணமும் கட்டாயமும் இருந்தன. எவ்வாறெனில், கிழக்கிந்தியக் கம்பெனி இடவுரிமையை இந்தியாவில் பெற்றிருந்ததால், அதன் காரியங்களை ஒழுங்குபடுத்தவேண்டிய கட்டாயம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எழுந்தது. மேலும், கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களில் பணியாற்றிய கம்பெனியின் பணியாளர்களின் அக்கறைகளைப் பாதுகாக்கவேண்டிய அவசியமும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு இருந்தது. அதே நேரத்தில் திவானி நிலங்களின்மீதான கம்பெனியின் அதிகாரங்களில் பிரிட்டிஷ் அரசாங்கம் தலையிட முடியவில்லை. ஏனெனில், திவானி உரிமையைப் பெற்றிருந்த கம்பெனியின் பிரதேசங்கள் கொள்கையளவில் மொகலாயப் பேரரசருக்குச் சொந்தமானவைகளாகவே இருந்தன. இதன்மூலம் மொகலாயப் பேரரசர் பெற்றிருந்த இறைமை நீடித்த நிலையிலேயே இருந்தது. இக் காரணத்தாலேயே ஒழுங்குமுறைச் சட்டம் வில்லியம் கோட்டையில் இருந்த கம்பெனியின் ஸ்தாபிதங்கள் அல்லது குடியேற்றங்களுக்கும் (settlements) மற்றும் வில்லியம் கோட்டையின் நிர்வாகத் தலைமைக்குச் சார்நிலைப் படுத்தப்பட்டிருந்த ஏனைய கம்பெனியின் பண்டகசாலைகளுக்கும் பிரதேசங்களுக்கும் மட்டுமே ஒழுங்குமுறைகளைச் செய்யவேண்டி இருந்தது. வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்கள் முழுமைக்கும் ஒழுங்குமுறையைத் தோற்றுவிக்கக்கூடிய அதிகாரத்தை அது பெற்றிருக்கவில்லை. இதைப் போலவே, உச்ச நீதிமன்றத்தின் அதிகார எல்லை கல்கத்தா நகரம், வில்லியம் கோட்டை மற்றும் அதற்குச் சார்நிலைபடுத்தப்பட்டிருந்த இடங்கள் ஆகியவற்றைத் தழுவிய வகையில் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. ஆனல், பிரிட்டிஷ் அரச நிறுவனத்திடமிருந்து கம்பெனி பெற்ற அதிகாரம் மொகலாயப் பேரரசரிடமிருந்து அது பெற்ற அதிகாரம் மற்றும் சலுகைகள் ஆகியவற்றுக் கிடையே இருந்த

வேறுபாட்டை மையமாகக் கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனி எளிதாகத் தனது காரியங்களை இங்கு ஆற்ற முடியவில்லை. இதன் காரணமாகவே, நாம் முன்னரே கண்டிருப்பதுபோல் பல சிக்கல் களும் பெருங் குழப்பங்களும் விளைந்தன. கம்பெனியின் பணித்துறையில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ் குடிமக்கள்மீது தனது அதிகாரத்தைப் பயன்படுத்தும் வகையில் உச்ச நீதிமன்றம் செயல்படவேண்டும் என்று இருந்தது. மேலும், கம்பெனியின் பணியாளர்களால் இந்திய மக்களுக்கு ஏற்படக்கூடிய தொல்லை தொந்தரவுகளையும், இன்னல் இடர்ப்பாடுகளையும் தடுத்து நிறுத்தக் கூடிய அதிகாரமும் உச்ச நீதிமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டது. எனவே, தனது அதிகார வரம்பிற்கும் வழக்கெல்லைக்கும் உட்படுத்தப்படா திருந்த மக்களின் முறையீடுகளையும், தான் விசாரிக்கக்கூடிய வாய்ப்பை உச்ச நீதிமன்றம் பெற்றது. இப்படி ஒழுங்குமுறைச் சட்டத்தில் தெளிவாகவும் தெளிவற்றதாகவும் கூறப்பட்டிருந்த செய்திகளோடன்றி வேறு பல சூழ்நிலைகளின் பொருட்டும் சர்ச்சைக்குரிய நிலையில், குழப்பங்களையும் குறைபாடு களையும் குவிக்கும் வகையில் தலைமை நீதிமன்றத்தின் செயல்களும் ஆட்சிப் பொறியின் காரியங்களும் அமைந்தன. இந்தியப் பிரதேசங்களில் அமைந்திருந்த கம்பெனியின் அரசாங்கத்தை ஒழுங்குபடுத்துவதுதான் ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறிக்கோள். ஆனால், இதுகாறும் கூறப்பட்ட செய்திகளின் தன்மைகளுக்கு ஒப்ப, ஒழுங்குமுறைச் சட்டத்தின் செயற்பாடு திவானி நிலங்கள் அல்லது பிரதேசங்களில் பணியாற்றிய பணியாளர்களையும் கம்பெனியின் அரசாங்கம் கட்டுப்படுத்தக்கூடியதாய் அமையலாயிற்று. இவை யாவும் வெகுவிரைவில் தவிர்க்கப்படவேண்டிய அல்லது சரி செய்யப்படவேண்டிய குறைபாடுகளாக இருந்தன.

மேற்கூறிய செய்திகளின் சாராம்சமாக டாக்டர். தாராசந்த் அவர்கள் கூறியுள்ள கருத்துரையை இங்குப் பின்வருமாறு கூறுவதன்மூலமும் ஒழுங்குமுறைச் சட்டத்தினால் ஏற்பட்ட கம்பெனியின் இந்திய அரசாங்கச் செயல்பாட்டுக் குறைகளும் தீமைகளும் தெள்ளென விளங்குவனவாகும். 'மொகலாயப் பேரரசரிடமிருந்து பெற்ற திவானி உரிமையின் அடிப்படையில் தனது சிவில் அதிகாரங்களை மட்டுமன்றி, பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் பொதுவான பொறுப்பதிகார அனுமதி நிலையையும் (general authority) கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றது. இவற்றால் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய நிர்வாகம் மொகலாயப் பேரரசருக்கு நேர்மையுடையதாகவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஏஜெண்ட் அல்லது முகவராகவும் செயல்படவேண்டிய ஈருருவ

நிலையைப் பெற்றது. தாம் மொகலாயப் பேரரசருக்குக் கடமைப் பட்டிருந்த நேர்மையின் நிமித்தம் இந்தியச் சட்டங்கள், மதங்கள் மற்றும் சம்பிரதாயங்கள், வழக்காறுகள் ஆகியவற்றைக் கம்பெனி யின் அரசாங்கம் மதித்துப் பேணவேண்டியிருந்தது. அதே நேரத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஏஜெண்ட் என்ற நிலையில் கம்பெனியின் இந்திய அரசாங்கம் பிரிட்டிஷ் ஆட்சி வழிகளையும் நியதிகளையும் நிலைநிறுத்திப் பேணவேண்டிய கடமையையும் இங்குப் பெற்றிருந்தது. இவற்றின் காரணமாகக் கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் அதன் நிர்வாகச் செயற்பாடுகள் யாவும் இந்திய மயமாக்கப்படவேண்டும் என்று விழைந்தவர் களுக்கும் இதற்கு மாறாக, அவை ஆங்கில மயமாக்கப்பட வேண்டும் என்று வாதாடியவர்களுக்கும் இடையே தவிர்க்க முடியாத முரண்பாடு இருந்தது.'[1]

பம்பாய், சென்னை ஆகியவற்றின் கம்பெனி அரசாங்கங்கள் வங்காளத்தின் தலைமை ஆளுநருடன்கூடிய ஆட்சிமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கும் மேற்பார்வைக்கும் உட்படுத்தப்பட்டிருந்தன என்பதை முன்பு கண்டோம். ஆனால், தலைமை அரசாங்கத் திற்குக் கொடுக்கப்பட்டிருந்த இந்த அதிகாரம் பம்பாய் மற்றும் சென்னை மாநில அரசாங்கங்களுக்கு இச் சட்டத்தின்மூலம் கொடுக்கப்பட்டிருந்த விதி விலக்குகளால் பயனற்றதாகவும் ஆற்றல் அற்றதாகவும் இருந்தது. எனவே, பம்பாய், சென்னை மாநில அரசாங்கங்கள் வங்கத்தின் தலைமை அரசாங்கத்தை மீறிய நிலையில் போர் மற்றும் வென்று நிலங்கொள்ளும் கொள்கைகளைப் பின்பற்றின. இத்தகைய போக்கின் விளைவாகவே கம்பெனியின் பம்பாய், அரசாங்கம் மராத்தியர்களுக்கு எதிராகவும், சென்னை அரசாங்கம் மைசூரின் ஹைதர் அலிக்கு எதிராகவும் வங்கத்தின் தலைமை அரசாங்கம் ஒரு சிறிதும் விரும்பாத போர்களை மேற் கொண்டன. தலைமை ஆளுநர் என்ற முறையில் ஹேஸ்டிங்ஸ் பம்பாய், சென்னை அரசாங்கங்களின் காரியங்களைச் சிறிதும் கண்காணித்துக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரத்தைச் செயல் படுத்த முடியவில்லை. ஏனெனில், பம்பாய் சென்னை அரசாங்கங் கள் தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த விருப்ப அதிகாரங்களையும் (discretionary powers) இயக்குநர் மன்றம் பிறப்பித்த கட்டளை களையும் அடிப்படையாகவும் ஆதாரமாகவும் கொண்டு கல்கத்தா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மீறிய செயல்களில் ஈடுபட்டன. இவற்றால் வில்லியம் கோட்டையின் தலைமை அரசாங்கம் தலைகுனி வான நிலையைப் பெற்றதோடன்றிப் பொருத்தமற்ற காரணங்

1 Tarachand, 'History of the Freedom Movement in India'—Volume I p. 28.

களுக்காகப் பெருஞ் செலவினைப் பொறுப்பையும் ஏற்கவேண்டி இருந்தது. பாம்பென்று அடிக்க முடியாமலும், பழுதென்று ஒதுக்கித்தள்ள முடியாமலும் மிகவும் பரிதாபமான நிலையில் தலைமை ஆளுநர் இருந்த நிலையை வாரன் ஹேஸ்டிங்ஸின் சொற் களின் மூலமே இங்கு வெளிப்படுத்தலாம். 'ஒழுங்கு முறைச் சட்டம் நமக்கு எதிர்மறைக் கூறுனது. அது மறுதலையான வெற்று அதிகாரத்தையன்றி வேறு எதையும் கொடுக்கவில்லை. பம்பாய், சென்னை ஆகிய மாநிலங்கள் தலைமை அரசாங்கத்தின் அனுமதி இன்றிச் சண்டை அல்லது சமாதானங்களைச் செய்யக்கூடாது என்று இச் சட்டம் கூறுகிறது. ஆனால், அதே நேரத்தில் அது வெகு கவனமாக எந்தெந்தத் துறைகளில் மாநில அரசாங்கங்களுக்கு ஆணையிடும் அதிகாரம் தலைமை அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதையும் தெளிவாகச் சொல்லாமல், அம் மாநிலங்களின் விரும்பத்தகாத செயல்களைப் பாதுகாப்பதாய் உள்ளது. இந்தியாவில் நமது சக்திகளை ஒன்றுபடுத்துவதற்குப் பதிலாக அவை சின்னபின்னமாகும்படி பாராளுமன்றத்தின் இச் சட்டத்தை இதுகாறும் பயன்படுத்தியிருப்பது இக்கட்டான சூழ்நிலையையும் துன்பமான நிலையையும் தோற்றுவித்திருக்கிறது.'[1] எனவே, இந்தியாவில் கம்பெனியின் பிரதேசங்களைப்பற்றிய ஒரு தலைமை அரசாங்கத்தை உருவாக்கவேண்டும் என்ற முயற்சி ஒழுங்கு முறைச் சட்டத்தின்மூலம் முழுமனத்துடன் மேற்கொள்ளப்பட வில்லை. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் பொருத்த மற்றதாயும் முனைப்பற்றதாயும் இருந்தது.

இறுதியாக, ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை இடத்துத் தாயக அரசாங்கத்தின் அரசியல் அமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்களும் குறைகளைக் கொண்ட தாகவே இருந்தன. ஒழுங்குமுறைச் சட்டம் எந் நோக்கங்களின் அடிப்படையில் உடைமையாளர்கள் மற்றும் இயக்குநர்கள் மன்றம் ஆகியவற்றில் மாற்றங்களைப் புகுத்தியதோ, அந் நோக்கங்கள் முழுமையாக ஈடேறவில்லை. மேலும், அந் நோக்கங்கள் உடைமை யாளர்கள் மன்றத்தின் நிர்வாகத் தன்மையைத் தேர்ச்சியுறச் செய்யவில்லை. உடைமையாளர்கள் தமது அதிகாரத்தை விலைப் பொருளாக மதித்து, தமது மன்றத்தில் வாக்குச் சீட்டுகளை அதிக அளவில் பெறுவதற்காக அவற்றை விலைகொடுத்து வாங்கும் போக்கைத் தொடர்ந்து மேற்கொண்டவாறு இருந்தனர். உடைமையாளர்களின் மன்றத்தினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள் மன்றம் நிரந்தரமான வியாபாரப் போக்குடைய ஒரு சிறு குழுவினரின் ஆட்சியாக (oligarchy) மாற்றப்பட்டது.

[1] Gleig, 'Memories of Warren Hastings' Volume II, p. 557

கம்பெனியின் இந்திய பணித்துறையிலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகளும் பணியாளர்களும், ஒழுங்குமுறைச் சட்டத்தின் மூல நோக்கத்திற்கு எதிராக, அதிக அளவில் உடைமையாளர்கள் மற்றும் இயக்குநர் மன்றங்களில் தமது அக்கறைகளையும் செல்வாக்கையும் அதிகரித்தவண்ணமே இருந்தனர். இப்போக்கு தடுத்து நிறுத்தப்படவில்லை. 'உடைமையாளர்களின் இருப்பு மூலதனங்கள் அதிகமாகவும் அவர்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருக்குமாயின் அவர்களின் அரசியல் மற்றும் அதிகாரச் சூதாட்ட நிலையும் செயலும் தவிர்க்கப்படும்' என்ற கருத்து மிகவும் தவறானதாக இருந்தது. உண்மையில் கம்பெனியின் தாயகத் தலைமை அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு இடையே நடத்தை நேர்மை, அமைதிப் பாதுகாவல் போன்றவை நிலவவில்லை. மேலும், அம் மன்றங்களில் தன்னலக் கும்பல்களும், உள்கட்சிப் பூசல்களும் மலிந்தன. இவற்றால் அம் மன்றங்கள் கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் நிர்வாகச் செயல்களில் பொறுப்பு மிக்கனவும், மறுப்பற்றனவுமான செயல்களைக் கருத்தூன்றி மேற்கொள்ள முடியவில்லை. இவை, கம்பெனியின் இந்திய அரசாங்க அதிகாரிகளிடம் பாரபட்சத்தையும் காட்டின.

கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய நடவடிக்கைகள்மீது ஒழுங்குமுறைச் சட்டம் போதுமான அளவில் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டை ஏற்படுத்தவில்லை. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒப்பக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை அதிகாரிகள் தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், தாம் பெறும் கடிதங்கள், செய்திகள், கம்பெனியின் நிதி நிலவரம் ஆகிய யாவற்றையும் குறித்துத் தமது அறிக்கைகளையும் தமது கட்டளைகள், உத்தரவுகள் போன்ற பலவற்றின் நகல்களையும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உரிய காலங்களில் சமர்ப்பிக்கவேண்டும் என்றிருந்தது. ஆனால், அத்தகைய அறிக்கைகளையும் பிறவற்றையும் ஊன்றிப் படித்து ஆராய்ந்து கம்பெனியின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் நடவடிக்கைகளையும் கண்காணிக்க எவ் விதமான பயனுறுதி மிக்க நிறுவனமும் இங்கிலாந்தின் அரசால் அமைக்கப்படவில்லை. இதனால், கம்பெனியின் தலைமை அதிகாரிகள் ஏனோதானோ என்றும் ஏதோ பெயருக்காகவும் அறிக்கைகளைத் தயாரித்துச் சமர்ப்பித்தனர். அப்படிச் சமர்ப்பிக்கப்பட்ட அலங்கோல அறிக்கைகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் சரிவர ஆராயப்படவும் இல்லை. எனவே, கம்பெனியின் குறைகள் மலிந்த நிர்வாகச் செயல்கள் தொடர்ந்து நடைபெற்றவண்ணம் இருந்தன. இவ்வாறு குறைபாடுகள் பலவற்றை ஒழுங்குமுறைச் சட்டம் கொண்டிருந்த போதிலும் அவை தவிர்க்க முடியாதவைகளாய் இருந்தன என்பது பின்வரும் செய்திகள்மூலம் புலப்படும்.

ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைபாடுகள் தவிர்க்க முடியாதவை

இதுகாறும் சொல்லப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டத்திலும் அச் சட்டத்தை யொட்டி மேற்கொள்ளப்பட்ட செயல்பாடு களிலும் இருந்த குறைபாடுகள் தோன்றுவதற்குப் பல சூழ்நிலை களும் கட்டுப்பாடுகளும் (limitations) கால வரம்புகளும், காரணங்களாய் இருந்தன. ஒழுங்குமுறைச் சட்டத்தில் காணப் பட்ட பெருங்குறை, அது பல அம்சங்கள் மற்றும் ஏற்பாடுகள் குறித்துத் தெளிவற்ற தன்மையைக் கொண்டிருந்ததாகும். இத்தகைய தெளிவற்ற தன்மை மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டாயம் அப்பொழுதைய சந்தர்ப்பச் சூழ்நிலைகளில் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது. எனவே, இஃது அறியாமையின் காரணமாக மேற்கொள்ளப்பட்டதன்று.' மாறாக, ஒழுங்குமுறைச் சட்டத்தில் தெளிவற்ற நிலையும், சொல்லாட்சியும், கருத்தூன்றி ஆராய்ந்து செய்யப்பட்டதேயாகும் என்று பொருத்தமான காரணத்துடன் நாம் கூறலாம். நாம் முன்னரே அறிந்துள்ளவாறு இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனி தமது அதிகாரங்களை மொகலாயப் பேரரசர், பிரிட்டிஷ் அரச நிறுவனம் ஆகிய இரு இடங்களிலிருந்து (sources) பெற்றிருந்தது. இச் சூழ்நிலையில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின்மூலம் பெற்றிருந்த உரிமைகளின் மீது மட்டுமே பிரிட்டிஷ் அரச நிறுவனம் தனது இறைமையை நிலை நிறுத்தக்கூடிய நிலை இருந்தது. மொகலாயப் பேரரசரின் இறைமை முறியடிக்கப்பட்டு மறுதலையாக்கப்படாதிருந் ததால், கம்பெனியின் இந்தியத் திவானிப் பிரதேசங்களின்மீது மொகலாய இறைமை பெயரளவிலும் கொள்கை முறையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பேணப்பட்டு வந்தது.' இதனால் மொகலாயப் பேரரசரின் அரசியல் மற்றும் ஆட்சி இறைமையை முற்றிலும் அகற்றிவிடக்கூடிய எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடிய நிலையில் பிரிட்டிஷ்காரர்கள் இருக்கவில்லை. மேலும், பல இந்தியப் பிரதேசங்கள் கம்பெனியினரால் செயல் முறையில் பெறப்பட்டு இருந்தன. மொகலாயப் பேரரசர் திவானி உரிமையைக் கொடுத்தாரேயன்றித் தமது நாட்டைச் சுதந்திரமாக ஆட்சிப் புரிந்து நிர்வகிக்கக்கூடிய அதிகாரத்தைக் கம்பெனிக்குக் கொடுக்கவில்லை. எனவே, ஒழுங்குமுறைச் சட்டம் கம்பெனியின் இந்திய இறைமைக்குச் சட்ட பூர்வமாக அங்கீகாரம் கொடுக்க முடியாத நிலை இருந்தது. அதே நேரத்தில் மொகலாய இறைமை பெயரளவில் செயல்படுவதாகவும் நாளுக்கு நாள் தேய்ந்து கம்பெனியின் அதிகாரப் பிடியில் சிக்கியவண்ணமும் இருந்தது. எனவே, மொகலாய இறைமையைத் தெளிவான முறையில் அங்கீகரிக்க முடியாத நிலையில் கம்பெனியின் திவானி

நிலங்களின்மீது தனது உரிமைகளைத் தெளிவாகச் செலுத்தி நிலைநிறுத்த முடியாத நிலையும், அதே நேரத்தில், அவற்றின் நிர்வாகம்பற்றி மௌனமாக இருக்க முடியாத நிலையும் யாவராலும் அறியப்பட்டவையாய் இச் சட்டத்தில் மேற் கொள்ளப் படலாயின. இதனால் அவ்வப்பொழுது தோன்றும் சமய சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கு ஒப்ப உரியவர்கள் யாவராலும் உரிய காரியங்கள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படட்டும் என்ற நோக்கின் அடிப்படையில் தெளிவற்ற தன்மையுடன் ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்டுச் செயல்பாட்டிற்கு உட்படுமாறு செய்யப்பட்டிருந்தது.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி இங்கிலாந்தில் மக்களின் உரிமைகளை, குறிப்பாகச் சொத்துரிமையைப் போற்றிப் பாதுகாக்கும் காலமாகக் கருதப்பட்டது. சொத்துரிமைகளின் புனிதத் தன்மையை வெளிப்படையாக ஒதுக்கித் தள்ளக்கூடிய நிலையில் பிரிட்டிஷ் அரச நிறுவனம் இருக்கவில்லை. கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் பெற்றிருந்த இடங்கள் சொத்துரிமை களின் அடிப்படையில் அனுபவிக்கப்பட்டு வந்தன. அன்று நாடு இருந்த நிலையில் பிரிட்டிஷ் அரச நிறுவனம் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களைத் தனது நேரடி உரிமைப் பொறுப்புகளின்கீழ்க் கொண்டு வந்திருக்கலாம். அத்தகைய செயலின்மூலம் பிரிட்டிஷ் அரசாங்கம் அதிக வருவாய்களையும். சலுகைகளையும் பெற்றிருக் கவும் கூடும். ஆனால், நாட்டுமக்களும் அவர்களின் இறைமைக் கேந்திரமான பாராளுமன்றமும் சொத்துரிமையின் புனிதத் தன்மையைப் புறக்கணிக்கும் நிலையில் சிறிதும் இருக்கவில்லை. எனவே, தனது முழுமையான, நேரடியான அதிகாரத்தையும், பொறுப்பையும் கம்பெனியின் பிரதேசங்கள்மீது ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் பிரிட்டிஷ் அரச நிறுவனமோ அல்லது பாராளு மன்றமோ நிலைநிறுத்த முற்படவில்லை. அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் எண்ணிப் பார்க்கமுடியாத விளைவுகள் தோன்றியிருக்கலாம். அவற்றின் எதிர் விளைவுகள் இந்தியாவின் அரசியல் மற்றும் அரசாங்கச் செயல்களில் ஒரு திருப்பத்தைத் தோற்றுவித்திருக்கலாம். ஆங்கி லேயர்கள் ஃபிரெஞ்சுக்காரர் போன்ற அந்நியர்களாலோ அல்லது சுதேசிச் சக்திகளாலோ இங்கு ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி யிருக்கலாம். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தே ஒழுங்கு முறைச் சட்டத்தைத் தெளிவற்றதாகவும் குறைபாடுகள் உள்ள தாகவும் தவிர்க்க முடியாத நிலையில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றியது.

மேற்சொல்லப்பட்ட சூழ்நிலையில் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்கள் குறித்துப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினால் இயற்றப் பட்ட முதல் சட்டமாக ஒழுங்குமுறைச் சட்டம் இருந்தது. இந்தியாவில் கம்பெனியின் இட ஆர்ஜிதங்களைப்பற்றிய பிரச்சினைகள் பலவகைப்பட்டவையாகவும் பரந்தவையாகவும் இருந்தன. பல ஆயிரம் மைல்களுக்கப்பால் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கம்பெனியின் இந்தியப் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை முற்றிலும் புரிந்துகொள்ள முடியாதவர்களாய் இருந்தனர். எனவே, அவர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப் பட்ட ஒழுங்குமுறைச் சட்டம் குறைகளைக் கொண்டிருந்ததில் வியப்பில்லை. சட்டத்தை நிறைவேற்றியவர்களுக்கே, கம்பெனியின் இந்தியச் செயல்கள், நடவடிக்கைகள், போக்குகள், மற்றும் இந்திய நாட்டைப்பற்றிய செய்திகள், இன்னோரன்ன பலவற்றைப் பற்றித் தெளிவில்லாமல் இருந்தபொழுது ஒழுங்குமுறைச் சட்டத்தில் இத்தகைய குறைபாடுகள் இருந்ததில் வியப்பில்லை.

முன்னோர் இடத்தில் கூறியவாறு ஒழுங்குமுறைச் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டபொழுது, மாண்டெஸ்கோவின் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு அதிக செல்வாக்கு பெற்றிருந்தது. அச் செல்வாக்கிற்குக் கண்மூடித் தனமாகவோ அல்லது முழு அளவிலோ பிரிட்டிஷ் பாராளுமன்றத் தினர் ஆட்பட்டிருந்தனர். எனவே, அரசாங்கத்தின் ஒரு பிரிவின் செயல்கள் மற்றொரு பிரிவின் சமநிலை தலையீட்டிற்கு உட்படுத்தப் பட்டு அதன்மூலம் அதன் வல்லாட்சித் தன்மையும் அதனால் விளையும் தீமைகளும் அகற்றப்படவேண்டும் என்று பாராளு மன்றத்தினர் கருதினர். இக் கருத்தின் அடிப்படையிலேயே பல்வேறு அதிகாரங்கள் கொடுக்கப்பட்ட ஓர் ஆட்சிமன்றத்துடன் கூடிய தலைமை ஆளுநரைக்கொண்ட செயலாட்சிப் பிரிவும் ஒரு தலைமை நீதிமன்றமும் ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் இங்கு நிறுவப்பட்டன. எனவே, நன்னோக்கத்தின் அடிப்படையில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டைச் செயல்படுமாறு செய்து கம்பெனியின் இந்திய அரசாங்க அமைப்பை ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் நிறுவவேண்டிய சந்தர்ப்பச் சூழ்நிலைகள் இருந்தன. இவற்றால் தலைமை ஆளுநர், அவரது ஆட்சிமன்றம் மற்றும் தலைமை நீதிமன்றம் ஆகியவற்றுக்கு இடையே சிக்கல் களும் போட்டிப் பூசல்களும் எழுந்தன. ஆனால், இத்தகைய குறைபாடுகள் சரிசெய்யக்கூடியனவாகவே இருந்தன என்பது 1781-ல் இக் குறைபாடுகளை நீக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி களிலிருந்து நன்கு விளங்கும். எனவே, மேற்கூறிய செய்திகள் யாவற்றையும் மனத்தில் கொண்டும், அன்று நிலவிய பல சூழ்நிலை

களையும் கருத்தில் கொண்டும் பார்க்கும்பொழுது பேராசிரியர் இல்பர்ட் அவர்கள் கூறுவதுபோன்று, 'பிரிட்டிஷ் பாராளுமன்றம் எதிர்நோக்கிய கஷ்டமான அரசியல் அமைப்புச் சட்டம், பிரச்சினை மற்றும் இச் சட்டம் இயற்றப்படவேண்டிய தேவையின் கட்டாயம் ஆகியவற்றின் காரணமாக ஒழுங்குமுறைச் சட்டத்தின் தீமைகள் அல்லது குறைபாடுகள் (defects) இயற்கையானவை யாகவே இருந்தன. இச் சட்டத்தின் குறிக்கோள் நல்லதாகவே இருந்தது. ஆனால், அது நிறுவிய அரசாங்கமும் ஆட்சிமுறையும் ஒழுங்கற்றனவாய் இருந்தன.'[1]

ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைகள் அகற்றப்படல்

1773-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டம் இந்தியாவில் செயல்பாட்டிற்கு வந்த சில ஆண்டுகளில் அதன் பெருங் குறைகள் ஒவ்வொன்றாக வெளிப் படலாயின. அக் குறைகள் பல வகையினவாகவும், பலதரப் பட்டவையாகவும் இருந்தன. அவை உரிய முறைகளில், தகுந்த சட்டங்களின்மூலம் அகற்றப்பட்டன. ஒழுங்குமுறைச் சட்டத்தின் செயல்பாட்டுக் குறைகள் பல வங்கத்து நீதித்துறைச் சட்டம், பிட் இந்தியச் சட்டம் ஆகியவற்றின்மூலம் திருத்தப்பட்டன. இதனைப் பற்றியும் இங்கு ஓரளவு அறிந்து கொள்ளுதல் இன்றியமை யாததாகும்.

ஒழுங்குமுறைச் சட்டம் வங்கத்துத் தலைமை ஆளுநர் தமது ஆட்சிமன்றத்துடன் எத்தகைய உறவினைக் கொள்ளவேண்டும் என்று தெளிவாகக் கூறவில்லை. அவருக்குத் தமது ஆட்சி மன்றத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய முழுமையான கட்டுப்பாட்டு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இஃது ஒரு பெருங்குறை பாடாகும். இது 1786-ல் அகற்றப்பட்டது. 1786-ல் தமது ஆட்சி மன்ற சகாக்களின் ஆலோசனைகளையும் கருத்துகளையும் தேவையான பொழுது தகுந்த காரணத்திற்காக ஒதுக்கி உதறித் தள்ளுவதற்கு அதிகாரம் தமக்குக் கொடுக்கப்பட்டால்தான், தாம் தலைமை ஆளுநர் பதவியை ஏற்றுக்கொள்ள முடியும் என்று காரன் வாலிஸ் கோரினார். இதனை ஒரு கட்டளைக் கோரிக்கை என்றும் கூறலாம். வாரன் ஹேஸ்டிங்ஸ் தலைமை ஆளுநராகப் பெற்றிருந்த கசப்பான அனுபவங்கள் (bitter experiences) யாவருடைய மனத்திலும் பசுமரத்தாணிபோல் பதிந்திருந்தன. இங்கிலாந்தின் அரசாங் கமும் அக் குறையினை அறிந்திருந்தது. எனவே, இளைய பிட் அவர்களின் (Younger Pitt) தலைமையில் இயங்கிவந்த பிரிட்டிஷ் அரசாங்கம் காரன் வாலிஸ் பிரபு முன்வைத்த கட்டளையைத்

[1] Dodwell Cambridge History of India Vol. V, p. 189-192

தயக்கமின்றி ஏற்றுக்கொண்டது. அதன் பின்னர்த் தலைமை ஆளுநர் உயர் அதிகாரம் ஏதுமின்றி, ஆட்சிமன்ற உறுப்பினர்களின் நியாயமற்ற விருப்பங்களுக்கு ஏற்ப இதுகாறும் செயல்பட்டு வந்த பரிதாபமானநிலை ஒழிக்கப்பட்டது.

வங்கத்துத் தலைமை அரசாங்கம், தன் அதிகார வரம்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்த சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களுடன் ஆட்சிமுறையாகக் கொண்டிருந்த உறவுகள் ஸ்திரத் தன்மையற்ற வையாய் இருந்ததாலேயே, அவை தமது தலைமை அரசாங்கத்தின் விருப்பத்திற்கு எதிராக முறையே மராத்தியர்களுடனும் ஹைதர் அலியுடனும் போர்ச் செயல்களை மேற்கொண்டன. இத்தகைய நிலையும், இம் மாநிலங்கள் நெருக்கடிக் காலங்களில் தலைமை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு நடக்கவேண்டிய தேவையில்லை என்ற விதிவிலக்கும் ஒழுங்குமுறைச் சட்டத்தின் ஒரு குறைபாடாக இருந்தது. இக் குறைபாட்டை அகற்றி வங்கத்து அரசாங்கத்திற்கு ஆட்சி ரீதியான வலிமையைக் கொடுக்கும் வகையில் பிட் இந்தியச் சட்டத்தில் பொருத்தமான முறையில், தெளிவான சொற்களில் திருத்தங்கள் செய்யப் பட்டன. அச் சட்டத்தில் கம்பெனியின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த மாநிலங்கள் யாவும் தமது தலைமை அரசாங்கமான வங்கத்து அரசாங்கத்தின் தலைமை ஆளுநரின் மேற்பார்வை, கட்டுப்பாடு ஆகியவற்றிற்குக் கண்டிப்பாக உட்பட்ட நிலையில்தான் தேசிய சக்திகளுடன் போர், சமாதானம் அல்லது ஏனைய உறவுகளை மேற்கொள்ளவேண்டும் என்று தெளிவாக்கப்பட்டது. மேலும், அச் சட்டத்தின்மூலம் இயக்குநர்கள் மன்றம், தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சிமன்றத்தின் மூலமாகவே சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களின் காரியங்களைக் கட்டுப்படுத்தவேண்டும் என்றும் அறுதியிட்டுக் கூறப்பட்டது.

அடுத்துத் தலைமை ஆளுநரை உள்ளிட்ட தலைமை ஆட்சி மன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றிற்கு இடையே நிலவிய பிணக்குகள் மற்றும் அவற்றின் அதிகார வரம்புகள்பற்றிய குறைகள் விரைவில் அகற்றப்பட வேண்டியவையாய் இருந்தன. 1781ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட திருத்தச் சட்டத்தின்மூலம் தலைமை ஆட்சிமன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றின் உறவு களைத் தழுவி எழுந்த குறைகள் அகற்றப்பட்டன. இச் சட்டத்தின் மூலம் நிதி வசூலிப்பு, வருவாய் நிர்ணயம் (revenue settlements) ஆகியவற்றைப்பற்றிய செய்திகளை விசாரிக்கும் முழுமையானதும், முடிவானதுமான அதிகாரம் தலைமை ஆளுநருக்கே உண்டு; அவற்றைப்பற்றி விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்றத்திற்கு

அதிகாரம் கிடையாது என்று அறிவிக்கப்பட்டது. மேலும் தலைமை ஆளுநரும் அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்களும் கல்கத்தா உச்ச நீதிமன்றத்திற்குப் பொறுப்புடையவர்கள் அல்லர்; அவர்கள் இங்கிலாந்திலிருந்த அதிகாரப் பொருத்தம் உடைய ஒரு நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கே நேரிடையாகப் பொறுப்பானவர்கள் என்றும் வங்காள நீதித்துறைச் சட்டத்தின் மூலம் தெளிவாக்கப்பட்டது.

பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் ஆறு ஆணையர்களைக்கொண்ட ஒரு வாரியம் (Board of Six Commissioners) கம்பெனியின் தலைமை அரசாங்கத்தில் நிறுவப்பட்டது. இவ் வாரியத்திற்கு இந்தியாவில் கம்பெனியின் சிவில், இராணுவம் மற்றும் நிதி அல்லது வருவாய்க் காரியங்களையும் நடவடிக்கைகளையும் இயக்கி மேற்பார்வை செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இதன்மூலம் இங்கிலாந்து அரசாங்கம் நிறைவானதும் பொருத்தமானதுமான கட்டுப்பாட்டு அமைப்பு (controlling machinery) ஒன்றைப் பெற்றிராத வெளிப் படையான குறையை ஒழுங்குமுறைச் சட்டம் கொண்டிருந்தது. அக் குறை மேற்சொல்லப்பட்ட பிட் இந்தியச் சட்ட ஏற்பாட்டின் மூலம் அகற்றப்பட்டது.

மேலெழுந்தவாரியாக, இதுகாறும் சொல்லப்பட்ட செய்தி களுக்கு ஒப்ப ஒழுங்கு முறைச் சட்டத்தில் காணப்பட்ட வெளிப் படையான குறைகளும் தெளிவற்ற தன்மையும் நீக்கப்பட்டன. எனினும், இப்பணி முற்றுப்பெற பதின்மூன்று ஆண்டுகள் பிடித்தன என்பதை நாம் எண்ணிப் பார்க்கும்பொழுது பிரிட்டிஷ் காரர்களின் அரசியல் நேர்மையின்மையையும் அவர்களின் தாமதப் போக்கையும் நம்மால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

ஒழுங்குமுறைச் சட்டத்தின் அரசியலமைப்பு முக்கியத்துவம்

ஒழுங்குமுறைச் சட்டத்தின் நன்மைகள், குறைபாடுகள் ஆகியவற்றையும், அக்குறைபாடுகள் எவ்வாறு பின்னர்த் தவிர்க்கப்பட்டன என்பதையும் அறிந்துள்ள நாம், 1773-ல் இந் நாடு இருந்த நிலை, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மூலநோக்கம், அப் பாராளுமன்றம் சமாளிக்க வேண்டியிருந்த பிரச்சினைகள் ஆகிய யாவற்றையும் கருத்தில்கொண்டு பார்க்கும் பொழுது ஒழுங்குமுறைச் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் எடுக்கப் பட்ட கன்னி முயற்சியே ஆயினும், கணிசமான அரசியலமைப்பு முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தை நாம் உணரமுடியும். அப்படிப் பட்ட உணர்விற்கு உறுதுணை பயப்பனவாய் அமையும் பல கருத்துகளைப் பின்வருமாறு எடுத்துரைக்கலாம்.

இந்தியாவின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய வகையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருந்த அரசாங்க முறையைப் பெரிதும் மாற்றி, அதன்மூலம் மேற்கொள்ளப்பட்டுவந்த நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்குத் தனது உரிமையை உறுதியாக நிறுவும் வகையில், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட சட்டத் துணிவுகளுக்கு ஆரம்ப நிலையையும் அரசியல் பொறுப்பையும் கொடுத்த முனைப்பான முக்கியத்துவத்தை ஒழுங்குமுறைச் சட்டம் கொடுத்தது. கம்பெனியின் இந்திய நடவடிக்கைகளை ஒழுங்கு முறைப்படுத்தும் வகையில் மொகலாய இறைமையைப் பொருட் படுத்தாமல் பிரிட்டிஷ் பாராளுமன்றமே இந்தியாவில் பிரிட்டிஷ் நிர்வாகத்திற்கான பொறுப்பாண்மையாளர் நிலையை இதன்மூலம் ஏற்றுக்கொண்டது. இங்குக் கவனத்தில் கொள்ளவேண்டிய செய்தி யாதெனில், இந்தியாவின் எதிர்கால பிரிட்டிஷ் நிர்வாகத் தைப்பற்றிய பொறுப்பை பிரிட்டிஷ் அரசர் வசம் ஒப்படைக் காமல், அதனை பிரிட்டிஷ் பாராளுமன்றம் தன்னிடமே தங்க வைத்துக்கொண்டதாகும். அன்று இந்தியாவிலும் இங்கிலாந் திலும் நடை முறையில் பழக்கத்திலிருந்த செய்திகளுக்கும், சங்கதி களுக்கும், சட்டங்களுக்கும் ஏற்ப இந்தியப் பிரச்சினைக்குக் காணப் பட்ட இணக்கமான ஒரு தீர்வாக ஒழுங்குமுறைச் சட்டம் அமைந்த தெனில் அது மிகையாகாது. மொகலாயப் பேரரசரால் கம்பெனிக்கு வழங்கப்பட்டிருந்த திவானி உரிமையைப்பற்றிப் பொருத்தமான முறையில் அணுகாமல் விட்டு ஒதுங்கி அதே நேரத்தில் கம்பெனியின் உடைமை உரிமைக்கும் (proprietory rights) பாதுகாவல் கொடுத்து, இந் நாட்டில் ஆங்கிலோ இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு ஆணித்தரமான அடித்தளத்தை அமைத்துக்கொடுத்த முக்கியத்துவத்தை இச் சட்டம் பெற் றிருந்தது.

இதுகாறும் ஒரு வணிகக்கூட்டு நிறுவனமாக இருந்த கிழக் கிந்தியக் கம்பெனியை ஒரு அரசியல் நிறுவனமாக, ஆட்சிப் பொறுப்புடைய நிர்வாக கேந்திரமாக அங்கீகாரம் அளித்த முக்கியத்துவத்தையும் இச் சட்டம் பெற்றிருந்தது. மிகப் பெரிய பரந்த பிரதேசமான இந்தியாவில் நிர்வாகத்தை நடத்து வதற்கான பொறுப்பை ஏற்றிருந்த வணிக நிறுவனமான கிழக் கிந்தியக் கம்பெனியைப் பிரதேச உரிமைபெற்ற ஒரு அரசியல் அதிகாரச் சக்தியாக அங்கீகாரம் அளித்த ஏற்றமிகு முக்கியத் துவத்தை ஒழுங்குமுறைச் சட்டம் பெற்றிருந்தது[1] என்று,

[1] Tarachand History of the Freedom Movement in India, p. 281

டாக்டர் தாராசந்த் அவர்களும் இதனை எடுத்துக்காட்டியுள்ளார். போர் மற்றும் சமாதான நடவடிக்கைகள் போன்ற பலவற்றின் மூலம் பல இடங்களையும் குடியேற்றங்களையும் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றிருந்தது. அவற்றின்மீது செயல்முறையில் இருந்த பிரிட்டிஷ் இறைமை, அரசியல் மற்றும் ஆட்சி ரீதியான கோட்பாட்டுப் பொறுப்பு ஆகியவற்றை இச் சட்டம் ஏற்றுக் கொண்டது. அதே நேரத்தில் மேற்சொல்லப்பட்ட செய்திகளின் காரணமாக எந்த அளவிற்குக் கம்பெனியின் இறைமையின்கீழ் வந்திருந்த இந்தியப் பிரதேசங்களின் மக்கள் பிரிட்டிஷ் குடிகளாகக் கருதப்பட்டனர் என்பது பற்றிய கருத்தை ஓரளவிற்கு இச் சட்டம் வெளிப்படுத்தியது. எவ்வாறெனில், பிரிட்டிஷ் குடிகள் என்போர் யாவர் என்பது குறித்துச் சர்ச்சைகள் பல எழுப்பப்பட்டிருந்த அந்த நேரத்தில் 'கல்கத்தாவில் இராணுவ அதிகாரிகளைத் தவிர இந்துஸ்தானத்தின் மக்களும், ஏனைய அந்நியர்களும் பிரிட்டிஷ் 'குடிகளே' என்று அறிவிக்கப்பட்டது. மொகலாய இறைமையைப் பொறுத்தவரை 1773-ல் ஃபிரெஞ்சுக்காரர்களும், பிரிட்டிஷ்காரர்களும் பின்பற்றிய கொள்கைகள் வேறுபட்டவையாய் இருந்தன. தக்காணம் எனப்பட்ட இன்றைய தென்னிந்தியாவில் அன்று ஃபிரெஞ்சுக்காரர்கள், தாம் பெற்றிருந்த தக்காண சுபேதார் என்ற அதிகாரத்தின்பேரில் தமது உரிமைக் கோரிக்கைகளைக் கொண்டிருந்தனர். மேலும், அதன்பேரில் அவர்களுடைய அக்கறையைப் பல வழிகளில் விரிவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். தங்களுடைய ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் வகையில் மொகலாயப் பேரரசு என்னும் கருத்துப்படிவத்திற்கு (concept) புத்தூக்கம் அளிக்கும் வகையில் ஃபிரெஞ்சுக்காரர்கள் மட்டுமன்றி மராத்திய, சிந்தியாக்களும் செயல்களை மேற்கொண்டவண்ணம் இருந்தனர். ஆனால், அதே நேரத்தில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியோ மொகலாய இறைமையின் நிழல் உருவத்தை ஏற்றுக்கொண்டிருந்தது. எனினும், டில்லியில் மொகலாயப் பேரரசை உரிமை மீட்டளிப்பின்பேரில் திருத்தியமைக்கும் கருத்தையும் போக்கையும் எதிர்க்கும் உறுதிப்பாட்டில் கம்பெனி இருந்தது. எனவே, ஒழுங்குமுறைச் சட்டமானது கம்பெனியின் ஆளுகை இறைமைக்கு உட்பட்டிருந்த மக்களை பிரிட்டிஷ் குடிகளென்று பொதுப்படையாகக் கூறியதன்மூலம், எதிர்காலத்தில் இந்தியர்கள் யாவரையும் பிரிட்டிஷ் குடிகள் என்று உட்படுத்தி, அதன் அடிப்படையில் தொடர்ச்சி மிக்க தேர்ச்சியானதொரு அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு வித்திட்ட முனைப்பான முக்கியத்துவத்தை ஒழுங்குமுறைச் சட்டம் பெற்றிருந்தது.

என்று பேராசிரியர் டாட்வெல் எழுதியுள்ள செய்திகளை நாம் எளியனவாகப் புறக்கணிப்பதற்கு இல்லை.[1]

இந்தியாவிலிருந்த தேசீயச் சக்திகளோடு அல்லது அரசுகளோடு போர் அல்லது சமாதானம் என்பவற்றின் அடிப்படையில் காரியங்களை மேற்கொள்வதற்கான அதிகாரம் சில நிபந்தனைகளின்பேரில் கம்பெனிக்கு வழங்கப்பட்டது. பேராசிரியர் ஆல்ஃபிரட் லியால் (Prof. Alfred Lyall) அவர்கள் எடுத்துக்காட்டுவதுபோல் ஒழுங்குமுறைச் சட்டம் நிறுவிய நிர்வாக ஏற்பாட்டுமுறை கிழக்கிந்தியக் கம்பெனி இதுகாறும் பெற்றிருந்த தெளிவற்ற ஆளுகைத் தன்மையைக் குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் தெளிவுடன் உறுதிப்படுத்தி அங்கீகாரம் அளிப்பதாய் அமைந்தது. எனவே, 1773ஆம் ஆண்டு முதற்கொண்டு ஆங்கிலோ-இந்திய அரசாங்கத்தின் ஆட்சித் தன்மையையும், அதிகாரத் தன்மையையும் எல்லைக் கோடிட்டு அல்லது உருவரைப்படுத்திக் காட்டிய முக்கியத்துவத்தைப் பெற்றது.[2]

கிழக்கிந்தியக் கம்பெனியிடம் அரசியல் அதிகாரத்தைக் கொடுத்ததன்மூலம் (vesting) கம்பெனிக்கும் நவாபிற்கும் இடையே அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. ஆனால், கம்பெனியின் உள்ளமைப்பு முறையில் இருந்த அதிகார இருநிலைத் தன்மை அல்லது பிளவுத் தன்மை தொடர்ந்து நீடிக்கப்பட்டது. கம்பெனியின் இந்திய நடவடிக்கைகள்மீது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இறைமை நிலைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் செயல்பாட்டிற்கான உரியதோர் அமைப்பு (organ) உருவாக்கப்படவில்லை. இத்தகைய அதிகார இரட்டைத் தன்மை வில்லியம் கோட்டையிலிருந்த தலைமை ஆளுநரை உள்ளிட்ட ஆட்சி மன்றத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டது. அவ் விஸ்தரிப்பில்தான் ஏனைய சக்திகளின் நலிவும் வருங்காலத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்திய விவகாரங்கள் குறித்து ஏற்கவேண்டியிருந்த பொலிவும் பொதிந்துவைக்கப்பட்டன.

பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டின்மூலம் கம்பெனியின் இந்திய நிர்வாகம் சீரடைந்தது ஒழுங்குமுறைச் சட்டத்தின் மற்றொரு சிறப்பாகும். இயக்குநர்கள் மன்றக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டிய கடமையைத் தலைமை ஆளுநர் மற்றும்

[1] Dodwell, Volume V p. 594

[2] British Dominion in India p. 182

அவரது ஆட்சிமன்றத்தின்மீது சுமத்தியதன்மூலமும், தாம் மேற்கொள்ளும் காரியங்கள் யாவற்றையும் குறித்து அறிக்கைகளை அவ்வப்பொழுது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அறிவிக்கவேண்டும் என்ற நிபந்தனையின்மூலமும் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் அதிகார இறைமைக்குத் தனது அங்கீகாரத்தையும் ஏற்பையும் இச் சட்டம் கொடுத்தது. இஃது, அன்று மிகவும் தேவையானதாகக் கருதப்பட்டது.

ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனியின் உயர் அதிகாரிகளும், இயக்குநர்களும், ஏனைய பணியாளர்களும் அனுபவித்து வந்த வாடிக்கையான ஆதரவு அதிகாரங்கள் (the powers of patronage) பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டன. ஏனெனில் அரச நிறுவனத்தின் அனுமதியும் அங்கீகாரமும் பெறுமல் யாரையும் எப் பதவியிலும் அமர்த்தக்கூடாது என்று சட்ட ரீதியாக இப்பொழுது நிலைநாட்டப்பட்டது. இதன் விளைவாக அரசியல் ஆட்சிச் சீர்கேடுகளும் ஊழல்களும் தவிர்க்கப்பட ஒழுங்குமுறைச் சட்டம் வழிவகைசெய்தது.

ஒரு விதத்தில் ஒழுங்குமுறைச் சட்டத்தில் காணப்பட்ட பெருங்குறைபாடுகள்கூட நன்மை தரும் முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தன. எவ்வாறெனில், ஒழுங்குமுறைச் சட்டத்தில் காணப்பட்ட குற்றம் குறைபாடுகளின் காரணமாகவே வங்கத்து முதல் தலைமை ஆளுநரான வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆட்சிச் செயல்களிலும் நடவடிக்கைகளிலும் குற்றங்கள் காணப்பட்டன. அவற்றின் காரணமாகவே இங்கிலாந்திலுள்ள வெஸ்ட் மினிஸ்டர் மாமன்றத்தில் வாரன் ஹேஸ்டிங்ஸின்மீது மன்பகைக் குற்றச்சாட்டு (impeachment) சுமத்தப்பட்டு வழக்கு நடந்தது. இவ் வழக்கின் காரணமாக இந்தியாவில் வாரன் ஹேஸ்டிங்ஸ் மேற்கொண்ட தகாத காரியங்கள் மற்றும் தீய செயல்கள்பற்றிய பதிவுகள் யாவும் உலகறியும்படி வெளிப்படுத்தப்பட்டன. அவை வெளிப்படுத்தப்பட்டிருக்காது போயின் இந்தியாவில் கம்பெனியினரால் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கச் செயல்கள், ஆட்சி நடவடிக்கைகளின் தீய தன்மை வெளிப்பட்டிருக்கவே முடியாது. இவை வெளிப்பட்டிருக்காது போயின் எட்மண்ட்பர்க், ஃபாக்ஸ், ஷாரிடன் போன்றோரின் கனல் மிக்க பேச்சுகளும், அப் பேச்சுகளின் காரணமாகக் கிளர்ந்தெழுந்த இங்கிலாந்து மக்களின் மனச் சாட்சியின் இயற்கை உந்தலும் வெளிப்பட்டிருப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்காது. அதன்மூலம் பிரிட்டிஷ் அரசாங்கம், கம்பெனியின் இந்திய அரசாங்கம் ஆகியவை ஆட்சிச் செயல்களிலும் இந்திய மக்களின் பொதுநலத்திலும் கவனத்தையும்

கட்டுப்பாட்டையும் செலுத்திய செயல் வெகுவாக காலத்தால் பின் தள்ளப்பட்டிருக்கும். உரிய காலத்தில், உரியதொரு தலைமை நிறுவனத்தின் நடவடிக்கைகளும், செயல்களும் உரிய காலத்தில் உலகு அறியுமாறு வெளிப்படாதுபோயின், உயர்வானதோர் அரசியல் அமைப்பு ஏற்பட்டிராது. அதனையொட்டி எழுகின்ற அரசாங்கம் மற்றும் ஆட்சிச் செயல்கள் உருப்படியானவைகளாக இருக்கவோ அவற்றை உருவாக்கவோ முடியாது. இஃது ஒரு நாடு பெறவேண்டிய அரசியல் அமைப்பின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகும். அத்தகைய முக்கியத்துவத்தையே எத்துணைக் குறைபாடுகளைக் கொண்டிருந்தபோதிலும் ஒழுங்குமுறைச் சட்டம் நம் நாட்டின் அரசியல் அமைப்பு வரலாற்றில் பெற்றுள்ளது.

ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர்க் கம்பெனியின் இந்திய உடைமைகளும், பிரதேசங்களும் ஒருமைப் படுத்தப்படாமல் சிதறிய நிலையில் இருந்தன. வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மாநிலங்கள் ஒன்றுக்கொன்று மேல்நிலை கீழ்நிலை உறவைப் பெறுமல் ஆட்சி ரீதியாக தனித்தியங்கும் தன்மையைப் பெற்றிருந்தன. மேலும், அவை இலண்டனிலிருந்த கம்பெனியின் இயக்குநர்களால் நேரிடையாகக் கட்டுப்படுத்தப் பட்டு வந்தன. இவற்றுல் அம் மாநிலங்களுக்கிடையே பொதுவானதோர் ஆட்சிமுறை இருக்கவில்லை. இதனைத் தவிர்த்து தொடர்ச்சியானதொரு வளர்ச்சியைப் பெறுவதற்கு அடித்தளம் நாட்டும் வகையில் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்கள் ஒருமைப் படுத்தப்பட்டன. தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சி மன்றத்திற்குக் கம்பெனியின் இந்திய மாநிலங்களின்மீது கண்காணிப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றை மேற்கொள்ளக்கூடிய அதிகாரம் கொடுக்கப்பட்டதன் விளைவாகக் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்கள் யாவும் மையமாக நிறுவப்பட்டிருந்த ஒரு செயலாட்சித் தலைமையின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இதனுல் ஒருமுக அல்லது ஒற்றையாட்சிமுறை இந்தியப் பிரதேசத்தில் ஓங்கி வளரக்கூடிய நன்மையும் பலனும் ஒழுங்குமுறைச் சட்டத்தால் கிட்டின. எனவே, நல்லதோர் அரசாங்கமுறையின் வளர்ச்சிக்கு வழிவகுத்துக் கொடுத்த பெருமையை ஒழுங்குமுறைச் சட்டம் பெற்றிருக்கின்றது.

ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மாநிலங்களில் சிதறிக்கிடந்த கம்பெனியின் இடங்களின் நிர்வாகம் வியாபார ரீதியாகக் கிழக் கிந்தியக் கம்பெனியினுலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது. பக்ஸார் மற்றும் பிளாசிப் போர்களுக்குப் பிறகு திவானி

உரிமையை, மொகலாயப் பேரரசராயிருந்த ஷா ஆலமிடமிருந்து கம்பெனி பெற்றுவிட்ட செயல் அதனை ஓர் அரசியல் சக்தியாக உருமாற்றம் கொள்ளச் செய்தது. திவானி, நிஸாமத் ஆகியவற்றின் காரணமாகக் கம்பெனியின் இந்திய விவகாரங்கள் மட்டுமன்றி, உள்நாட்டு நிலவரங்களும் பெரும் மாற்றங்களுக்கு உள்ளாயின. இத்தகைய பெரும் மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சி அமைப்பு முறைகளில் பொருத்தமான மாற்றங்கள் செய்யப்படவேண்டியது அவசியமாயிற்று. இதுகாறும் கம்பெனியின் கைவசம் இருந்த இந்தியப் பிரதேசங்களும் உடைமைகளும் தனியார் நிறுவனமான கம்பெனியின் சொத்துகளாகக் கருதப்பட்டு வந்தன. ஆனால், ஒழுங்குமுறைச் சட்டம் அரசியல் மற்றும் ஆட்சிப் பொறுப்புகளை ஒரு நாட்டில் ஒரு நிறுவனம் ஏற்றுக்கொள்வதன்மூலம் அஃது அந் நாட்டின் பிரதேசங்களையும் உடைமைகளையும் தனிப்பட்ட தனிநபர் சொத்துகளாகக் கருதக்கூடாது என்ற நிலையைத் தெளிவாக்கி, அதன்மூலம் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந் நாட்டில் உரியதோர் அரசாங்கமுறையை அமைத்துக்கொடுக்க வழிவகை செய்ததோடன்றி, அதன் செயல்களில் தமது கட்டுப்பாட்டை நிலைநிறுத்த உதவிய முக்கியத்துவத்தையும் பெற்றுள்ளது.

நாம் முன்னரே அறிந்துள்ளதைப்போல் வங்காளத்தில் இராபர்ட் கிளைவினால் இரட்டை அரசாங்கமுறை அமைக்கப்பட்ட நாள் முதற்கொண்டு ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றி நிறைவேற்றப்பட்ட காலம் வரை இலஞ்ச லாவண்யங்களும், ஊழல்களும், ஆதாயக் கொள்ளைச் செயல்களும் கம்பெனியின் நிர்வாகத்தில் மலிந்திருந்தன. இவற்றால் கம்பெனியின் இந்திய நிர்வாகத்தில் ஒழுங்குமுறை காணப்படவில்லை. மாறாகச் சீர்கேடுகளே மலிந்திருந்தன. இவற்றிற்கு முடிவு காணும் வகையில் கம்பெனியின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியங்களைக் கொடுத்தும், தேவையான அளவில் அவர்கள் அனுபவித்து வந்த சலுகைகளை நீக்கியும், கட்டுப்படுத்தியும் முனைப்பான பல கட்டுப்பாடுகளை அவர்கள்மீது அமர்த்தியதன்மூலமும் ஒழுங்குமுறைச் சட்டம் கம்பெனியின் இந்திய நிர்வாகத்தில் நிறைந்திருந்த தனிப்பட்ட வர்த்தகம் போன்ற முறைகேடுகள் மற்றும் ஊழல்கள் அகற்றப்பட உதவியது. மேலும், சட்டம் மற்றும் நீதி பற்றிய ஒழுங்கான நியதிகளைக் கம்பெனியின் இந்திய அரசாங்கம் மேற்கொள்ளுவதற்கான ஆரம்பத் துணிவு நிலையையும் இச் சட்டம் ஏற்படுத்திக் கொடுத்தது. இவை யாவற்றையும் தழுவி உருப்படியானதோர் அரசாங்கம் மற்றும் ஆட்சிமுறையைப்பற்றிய உருவொத்த

கொள்கையைக் கம்பெனியின்மூலம் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய நாட்டில் மேற்கொள்வதற்கு, அதன்மூலம் கம்பெனியின் இந்திய அரசாங்கமுறையில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுத்த முனைப்பாற்றல் மிக்க முக்கியத்துவத்தை, அரசியல் அமைப்பு ரீதியான முக்கியத்துவத்தைப் பெற்றது.

இந் நாட்டின் வருங்கால அரசியல் மற்றும் அரசாங்கத் தலைவிதியை நிர்ணயித்து அவை உரியதொரு பாதையில் செல்வதற்கு வழிவகை ஒழுங்குமுறைச் சட்டத்தால் செய்யப் பட்டது என்பதை நாம் மறப்பதற்கில்லை; மறுப்பதற்கும் இல்லை. ஒரு தனி மனிதர் அல்லது ஒரு நிறுவனம் மேற்கொள்ளும் முதல் முயற்சி அல்லது கன்னி முயற்சி முழுமை பெற்றதாகவோ அல்லது குறையற்றதாகவோ இருக்க முடியாதென்பது இயற்கை நிலை. இத்தகைய நிலை அரசியல் மற்றும் ஆட்சிச் செயல்களில் சர்வ சாதாரணமாக நிலவுவதாகும். எனவே, ஒழுங்குமுறைச் சட்டத்தின் செயற்பாட்டின் காரணமாகத் தோன்றிய குறைபாடு களையும், தீமைகளையும் ஒதுக்கி அச் சட்டத்தால் பெறப்பட்ட நன்மைகளையும் அரசியல் முறையான முக்கியத்துவங்களையும் நமது சிந்தனைக்குரிய செய்திகளாகக் கொண்டால், உண்மையில் பேராசிரியர் ஜி. என். சிங் கூறுவதுபோல, 'ஒழுங்குமுறைச் சட்டம் உருப்படியான ஓர் அரசாங்க - அமைப்பையும், முறையையும் இந்திய மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த நற்பேற்றைப் பெற்றிருந்தது' என்பதை முனைப்பான முடிவாகக் கொள்ளலாம்.

12. ஒழுங்குமுறைச் சட்டத்திற்கான 1781ஆம் ஆண்டின் திருத்தச் சட்டம் வங்கத்து நீதித்துறைச் சட்டம்

உயரிய அடிப்படையில், உரிய அம்சங்கள் பலவற்றைத் தன்னுள் கொண்டவாறு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இயற்றப் பட்ட ஒழுங்குமுறைச் சட்டம் அமைத்துக்கொடுத்த அரசாங்கக் கட்டுமானமும், ஆட்சிப்பொறியும் எத்துணைக் குறைபாடுகளுக்கும், தீமைகளுக்கும் இலக்காகி அவல நிலையில் இருந்தன என்பதைச் சென்ற அதிகாரத்தில் நாம் கண்டுள்ளோம். அக் குறைபாடு களில் தலையாயது அரசாங்கத்தின் செயலாட்சிப் பிரிவுக்கும் உச்ச நீதிமன்றத்துக்கும் இடையே நிலவிய கருத்துவேறுபாடுகளும் பலப்பரீட்சையுமாகும். இவற்றால், எதிரெதிர்த் திசைகளில் இரு பெரும் பரிகளால் இழுக்கப்பட்ட ஓர் ஊர்தியைப்போல் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களுக்கென அமைக்கப்பட்ட தலைமை அரசாங்கம் இருந்தது. இந்த ஆபத்தான போக்கும், நிலையும் உலகம் அறியுமாறு வெளிப்பட வெகுகாலம் பிடிக்கவில்லை. அதற்குத் துணைபுரியும் வகையில் காசி ஜூரா, பாட்னு வழக்குகள் எழுந்தன. மேலும் இவ் வழக்குகள் மூலம் அரசாங்கத்தின் தலைமைச் செயலாட்சிப் பிரிவும், உச்ச நீதிமன்றமும் அரசாங்கம் மற்றும் ஆட்சிக் கோட்பாடுகளின் அடிப்படையான நியதிகட்கு ஏற்ப ஒன்றித்து, உடன்பாடுடன் செயற்பட முடியாது என்ற தேக்கநிலையும் அச்சமும் தோன்றின. இதேபோல் தலைமை ஆளுநருக்கும் அவரது ஆட்சிமன்றத்திற்கும் இடையே நிலவிய பலப்பரீட்சையும், முரண்பாடுகளும் இன்னல்களைத் தோற்று வித்தன. தலைமை ஆளுநருக்கும், மாநில அரசாங்கங்களுக்கும் இடையே உறுதி மிக்கதும், நெறிமுறையானதும் ஆகிய உறவு நிலைகள் அமைந்திருக்கவில்லை. இவ்வாறு, நெகிழ்ச்சியற்ற போக்குகள் கம்பெனியின் இந்திய அரசாங்கங்களுக்கு இடையே நிலவியதால் செம்மையான நிர்வாகம் நடைபெற முடியவில்லை. எனவே, தலைமை ஆளுநரும் அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்

களும், வங்கத்தில் வசித்துவந்த செல்வாக்கு மிக்க, பிரிட்டிஷ் குடிமக்களும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்திற்குத் தமது கோரிக்கை மனுக்களையும், குறையிரப்பு விண்ணப்பங்களையும் அனுப்பி, அவற்றின்மூலம் இந்தியாவில், குறிப்பாக, வங்கத்தில் நிலவிய நிலவரங்களையும் சூழ்நிலைகளையும் விளக்கி அவற்றில் பாராளுமன்றம் தலையிட்டுத் தகுதியற்றிருந்த சங்கதிகளைத் தகர்த்தெறிந்து நிலைமையைச் சீர்திருத்துமாறு வேண்டினர். இவற்றின் விளைவாக, கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சிச் செயல்களைப்பற்றித் தீர விசாரித்துத் தமது யோசனைகளையும், புத்தாய்வுத் திட்டங்களையும் சமர்ப்பிக்குமாறு இரண்டு குழுக்களை பிரிட்டிஷ் பாராளுமன்றம் அமைத்தது: அக் குழுக்கள் முறையே பொறுக்குக் குழு, இரகசியக் குழு என்பவையாகும். இக் குழுக்களை அமைக்க இலண்டனிலிருந்த இயக்குநர்கள் மன்றம் எவ் வெதிர்ப்பையும் காட்டவில்லை. ஏனெனில் அம் மன்றமும் வங்கத்து அரசாங்கத்தில் நிலவிய குழப்பங்களைச் சட்டரீதியாகப் பாராளுமன்றமே பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதன்மூலம் அகற்ற வேண்டும் என்பதை வெளிப்படுத்திற்று. எனவே, அன்று பாராளுமன்றத்தில் பெருஞ்செல்வாக்கைப் பெற்றிருந்த எட்மண்ட்பர்க் அவர்களின் தலைமையில் பொறுக்குக் குழுவும், டுண்டாஸ் (Dundas) என்பவரது தலைமையில் இரகசியக் குழுவும் அமைக்கப்பட்டு, அவை முறையே கம்பெனியின் இந்தியத் தலைமை அரசாங்கத்தின் சீரமைப்பு, கம்பெனியினரால் மேற்கொள்ளப்பட்ட இந்தியப் போர்களுக்கான காரணங்கள், அவற்றின் விளைவுகளின் தன்மை மற்றும் கம்பெனி கீழை நாடுகளில் பெற்றிருந்த பிரதேச உடைமைகளின் தன்மை ஆகியவை குறித்துத் தெளிவான அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. இதற்கொப்பப் பொறுக்குக்குழு 1781-ல், குறுகிய காலத்திற்குள், பன்னிரு அறிக்கைகளைச் சமர்ப்பித்தது. இவ் வறிக்கைகள் யாவும் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின் குறைபாடுகளைக் கோடிட்டுக் காட்டி, அவற்றுக்கான காரணம் ஒழுங்குமுறைச் சட்டத்தின் பல குறைபாடுகளேயாகும் என்று வலியுறுத்திக் கூறி உண்மையை வெளிப்படுத்தின. இவை யாவற்றையும் பாராளுமன்றம் தீர ஆராய்ந்து, ஒழுங்குமுறைச் சட்டத்தால் அமைக்கப்பட்டிருந்த அரசாங்கம் மற்றும் அதன் ஆட்சிமுறையில் உரிய திருத்தங்களைச் செய்யும் குறிக்கோளுடன் திருத்தச் சட்டமொன்றை (amending legislation) 1781-ல் இயற்றியது. இச் சட்டம் வங்காள நீதித்துறைச் சட்டம் என்றும் (Bengal Judicature Act) அழைக்கப்பட்டது.

ஒழுங்குமுறைச் சட்டத்திற்கான திருத்தச் சட்டம் இயற்றப் பட்ட 1781ஆம் ஆண்டில் இந்திய மக்கள் பலவிதமான நம்பிக்கைகளையும், அபிலாஷைகளையும், கம்பெனியின் அரசாங்கத் தைப்பற்றிய தப்பெண்ணங்களையும் தங்கள் மனத்தில் கொண்டு இருந்தனர். இவை யாவற்றையும் மதித்துத் தீர்வு காணவேண்டிய நிலை பிரிட்டிஷ் பேரரசுக்கு இருந்தது. மேலும், வங்கத்தில் கம்பெனியின் இந்தியத் தலைமை அரசாங்கம் உறுதி மிக்கதாய் இருக்கவேண்டும் என்பது இனிது உணரப்பட்டு இருந்தது. மேலும், வங்கத்தில் கம்பெனி அரசாங்கம் வருவாய்களைத் திரட்டிவந்த முறையிலும் அமைப்பிலும் தேர்ச்சியையும் திறமையையும் தோற்றுவிக்கவேண்டியிருந்த முக்கியத்துவமும் வெளிப்படுத்தப் பட்டு, அம் முக்கியத்துவம் பிரிட்டிஷ் அரசால் உணரப்பட் டிருந்தது. இவற்றையெல்லாம் தனது கருத்தில்கொண்டு, திருத்தச் சட்டத்தைப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. இத் திருத்தச் சட்டத்தின்மூலம் செய்யப்பட்ட அரசாங்க ஏற்பாடுகளும் அம்சங்களும் பின்வருவனவாகும்.

இதுகாறும் ஆட்சிமன்றத்துடன் கூடிய தலைமை ஆளுநருக்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் இடையே நிலவி வந்த அதிகார எல்லைப் போராட்டம், இனியும் தொடராதிருக்குமாறு தவிர்க்கப்பட்டது. முக்கியத்துவமற்ற ஒரு சில செய்திகளையன்றிப் பிறவற்றில் உச்ச நீதிமன்றத்தின் அதிகார எல்லையும், செயற்பரப்பும் மிகவும் குறைக்கப்பட்டன. தமது அலுவல் காரணமாகத் தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்கள் மேற் கொள்ளும் ஆட்சிச் செயல்கள் யாவும் உச்ச நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டன வாக்கப்பட்டன. இதனால், தலைமை ஆளுநரை உள்ளிட்ட ஆட்சிமன்றத்திற்கு உரியதோர் உயர்வான நிலை இத் திருத்தச் சட்டத்தின்மூலம் வழங்கப்பட்டது.

நாம் முன்பே அறிந்துள்ளவாறு, தலைமை ஆளுநரை உள்ளிட்ட ஆட்சிமன்றம் இதுவரை சாதர்-திவானி-அதலத் என்ற முறையில் நீதி பரிபாலனத்தையும் மேற்கொண்டுவந்தது. ஆனால், அதற்கான தலையாய நிறுவன நிலை இதுவரை அளிக்கப்படாமல் இருந்தது. இக் குறையை வங்கத்து நீதித்துறைச் சட்டம் அகற்றியது. மேலும், இதுகாறும், அஃது அனுபவித்து வந்த மேல்முறையீட்டு அதிகாரம் இச் சட்டத்தின்மூலம் அங்கீகரிக்கப்பட்டது. அடுத்து, எல்லாச் சிவில் வழக்குகளிலும் அல்லது 5000 பவுன்கள் மதிப் பிற்குமேலான வழக்குகள் யாவற்றிலும் சாதர் திவானி அதலத் வழங்கும் தீர்ப்புகளின் மீது, வங்கத்து உச்ச நீதிமன்றத்தை

அனுகாது, ஆலோசனைச் சபையுடன் கூடிய பிரிட்டிஷ் அரசருக்கு மேல்முறையீட்டைச் செய்துகொள்ளக்கூடிய வசதியை இச் சட்டம் செய்து கொடுத்தது.

இச் சட்டம் தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சிமன்றத்திற்கு மாநில மன்றங்கள் (Provincial councils) மற்றும் சுதேசி நீதிமன்றங்கள் ஆகியவற்றைப் பற்றிய ஒழுங்குமுறைகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை முழுமையாகக் கொடுத்தது. தலைமை ஆளுநரை உள்ளிட்ட ஆட்சி மன்றத்தால் அனுபவிக்கப் பட்டு வந்த அவ் வதிகாரம் உச்ச நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப் படாமல் உதாசீனம் செய்யப்பட்டுவந்தது. இதனை மீறி ஒழுங்கு முறைச் சட்டத்தின்கீழ்த் தலைமை ஆளுநரால் செய்யப்பட்ட ஒழுங்குமுறைகளை உச்ச நீதிமன்றம் பதிவு செய்யாமல் மறுத்து ஒதுக்கித் தள்ளியவண்ண மிருந்தது. இக் குறைபாட்டை அகற்றும் வகையில் ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநர் உருவாக்கும் ஒழுங்குமுறைகள் இனி உச்ச நீதிமன்றத்தால் பதிவு செய்யப்படத் தேவையில்லை என்று திருத்தம் செய்யப்பட்டது. ஆனால், அவ் ஒழுங்குமுறைகளின் (regulations) நகல்கள் யாவும் பிரிட்டிஷ் அரசின் தலைமைச் செயலர் மற்றும் கம்பெனியின் இயக்குநர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்ற கட்டாயத்தை இச் சட்டம் ஏற்படுத்திக் கொடுத்தது. ஆலோசனைச் சபையுடன் கூடிய அரசருக்கு அத்தகைய ஒழுங்குமுறைகளைத் திருத்தியமைக்கவோ, நிராகரிக்கவோ அதிகாரம் உண்டு என்றும் இச் சட்டம் கூறியது. ஆனல், அவ் வொழுங்கு முறைகள் ஆலோசனைச்சபையுடன் கூடிய அரசரால் இரண்டாண்டுகளுக்குள் திருத்தியமைக்கப் படாமலோ, நிராகரிக்கப்படாமலோ இருந்தால், அவை எக் கட்டுப்பாடுகளுக்கும் உட்படாத நிலையில் தொடர்ந்து செயற் பாட்டில் இருந்துவரும் என்ற உறுதிப்பாடு இச் சட்டத்தில் தெளிவாக்கப்பட்டது.[1]

மேற்கூறப்பட்ட அதிகாரத்தைப் பெற்றதன் விளைவாகத் தலைமை ஆளுநருடன்கூடிய ஆட்சிமன்றம் 'திவான்' என்ற முறையில் வங்கம், பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்களில் இதுவரை பெற்றிருந்த சட்ட ஆக்க அதிகாரம் இத் திருத்தச் சட்டத்தின் மூலம் ஆக்க ரீதியாக அங்கீகரிக்கப்பட்டது. அடுத்து, மாநில ஆட்சி மன்றங்கள் மற்றும் சுதேசி நீதிமன்றங்கள் ஆகியவை குறித்து ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரால் செய்யப் படும் ஒழுங்குமுறைகள் உச்ச நீதிமன்றத்தில் இனிப் பதிவு செய்யப்

[1] Courtenay Ilbert—'The Government of India'.

படவேண்டியதில்லை என்ற நெகிழ்ச்சியான நிலை இச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட போதிலும், பிரிட்டிஷ் குடிமக்களைப் பொறுத்தவரை செய்யப்படும் ஒழுங்கு முறைகள் யாவும் உச்ச நீதி மன்றத்தில் பதிவு செய்யப்படவேண்டும் என்றிருந்த ஒழுங்கு முறைச் சட்டத்தின் பழைய ஏற்பாடு இச் சட்டத்தால் நீக்கப்பட வில்லை. எனவே, தமது ஆளுகையின்கீழ் இருந்த மக்கள் யாவருக்கும் சட்டங்களை இயற்றுவதற்கான அல்லது ஒழுங்கு முறைகளை உருவாக்குவதற்கான கட்டுப்பாடற்ற, நெகிழ்ச்சியான முழு அதிகாரம் ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்கு இத் திருத்தச் சட்டத்தால் கொடுக்கப்படவில்லை என்பதை இங்கு நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். அத்தகைய முழுமையான அதிகாரம் 1833-ல் இயற்றப்பட்ட சாசனச் சட்டத்தின்மூலம் தான் தலைமை ஆளுநருக்கு வழங்கப்பட்டது. எனவே, 1781ஆம் ஆண்டுக்குப் பிறகுகூட கம்பெனியின் இந்திய அரசாங்க அமைப்பில் அதிகார நிலை குறித்து அவ்வப்பொழுது குழப்பங்கள் தோன்றியவண்ண மிருந்தன. எனினும், அவை ஒழுங்குமுறைச் சட்டத்தின் செயற்பாட்டையொட்டி அமைந்ததைப்போல் அபாயகரமானதாய் இருக்கவில்லை; அந்த அளவிற்குத் திருத்தச் சட்டம் வருத்தத்தை அகற்றும் வகையில் பொருத்தமானதாகவே இருந்தது.[1]

அடுத்து, குடியானவர் அல்லது நிலக்கிழார் என்ற முறையில் எவரையும் விசாரிக்க உச்ச நீதிமன்றம் பெற்றிருந்த அதிகாரமும், இதுகாறும் ஆட்சித் துறையினர் வருவாய்களைத் திரட்டிவந்ததில் எழுந்த வழக்குகளை விசாரிக்கும் அதிகாரமும் அகற்றப்பட்டன. இனி வருவாய்களைத் திரட்டுதல் குறித்து எழும் வழக்குகளை விசாரித்துத் தீர்க்கக்கூடிய அதிகாரம் முழுவதும் ஆட்சிமன்றத் துடன்கூடிய தலைமை ஆளுநருக்கு இத் திருத்தச் சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டது. ஆனால், அத்தகைய வழக்குகளில் கொடுக்கப்படும் தண்டனைகள் தொடர்ச்சியான சிறைவாசம் அல்லது முடமாக்கல் அல்லது மரண தண்டனை என்பவைகளாக இருக்கக் கூடாது என்று இச் சட்டம் திட்டவட்டமாகக் கூறியது.

ஒழுங்குமுறைச் சட்டம் அமுலில் இருந்த காலத்தில் இந்தியச் சுதேசித் தீர்ப்பு மன்றங்களுக்கும், வங்கத்து உச்ச நீதிமன்றத்திற்கும் இடையே நிலவிவந்த அதிகார எல்லை மற்றும் செயல் பரப்புப் பற்றிய குழப்பநிலைகளும் இத் திருத்தச் சட்டத்தின்மூலம் அகற்றப் பட்டன. இவ் வேற்பாட்டின்படி, சுதேசித் தீர்ப்பு மன்றங்களின்

[1] Ibid.

அதிகாரிகள் தமது அலுவல் நிமித்தம் மேற்கொள்ளும் செயல்கள் யாவும் உச்ச நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்டவை அல்ல என்பது தெளிவாக்கப்பட்டது.

கம்பெனியின் பணித்துறையிலிருந்த இந்தியர் அல்லது கம்பெனியின் நிர்வாக மேலாண்மைக்கு உட்பட்டிருந்த ஐரோப்பிய, பிரிட்டிஷ் குடிகளின்கீழ் (European British Subjects) பணியாற்றிவந்த இந்தியர் யாவரும் தமது நிலம், சொத்துகள் தொடர்பான வாரிசுரிமை வழக்குகளில் உச்ச நீதிமன்றத்தால் விசாரிக்கப்படத் தேவையில்லை என்பது தெளிவாகக் கூறப்பட்டது. ஆனால், சிவில்வழக்குகள், ஒப்பந்தமீறல்கள் போன்ற வழக்குகளில், சம்பந்தப்பட்டவர்கள் விரும்பினால் உச்ச நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படலாம் என்று வரையறை செய்யப்பட்டது. இதன் மூலம் ஐரோப்பிய நீதிபதிகளின் சுய விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அளிக்கப்பட்ட தீர்ப்புகளை ஏற்கவேண்டிய அல்லது தீர்ப்புகளுக்கு உட்படவேண்டிய நிலை தவிர்க்கப்பட்டது. எனினும், கல்கத்தா வாசிகளைப் (inhabitants) பொறுத்தவரை, அவர்கள் இந்தியராயினும் வெள்ளையராயினும், அவர்களைப்பற்றிய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் வங்கத்து உச்ச நீதிமன்றத்திடமே தங்கியிருக்குமாறு 1781ஆம் ஆண்டுத் திருத்தச் சட்டம் செய்தது. மேலும், அத்தகைய வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரிக்கும்போது ஆங்கிலச் சட்டம் (English Law), இந்தியச் சட்டம் (Indian Law), இந்துக்களின் சட்டம் (Hindu Law), முகமதியச் சட்டம் (Mohammadan Law) ஆகியவற்றுள் எச் சட்டத்தைப் பின்பற்றித் தனது தீர்ப்பினை வழங்கவேண்டும் என்றும் 1781ஆம் ஆண்டின் வங்கத்து நீதித்துறைச் சட்டம் தெளிவாகக் கூறியது. இதன்படி, கல்கத்தாவாசிகளான ஆங்கிலேயரே வாதிப் பிரதிவாதிகளாக இருப்பின் ஆங்கிலச் சட்டமும், வெவ்வேறு இனத்தவரும் மதத்தவரும் வாதிப் பிரதி வாதிகளாயிருப்பின் பிரதி வாதிகளின் சட்டமும் - அஃதாவது பிரதிவாதி இந்துவாயின் இந்துச் சட்டமும், முகமதியராயின் முகமதியச் சட்டமும் - உச்ச நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டுச் சம்பந்தப்பட்டோரின் வழக்குகள் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படவேண்டும் என்று இத் திருத்தச் சட்டம் செய்தித் தெளிவைச் செய்து, முன்பிருந்த குழப்பக் குளறுபடிகளை அகற்றியது.

வங்கத்து நீதிபரிபாலனத்தில் செய்யப்பட்ட மற்றொரு முக்கியமான திருத்தம், அது தனது கட்டளைகளையும் உத்தரவுகளையும், செயல்முறைகளையும் (orders and processes) செயலாக்கம் செய்யும்போது பேணவேண்டியிருந்த விதிமுறை

களைப்பற்றியதாகும். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பாணைகள் மற்றும் நீதிமுறைக் கட்டளைகள் ஆகியவற்றைச் செயல்படுத்தும் பொழுது அதன் அதிகாரிகள் இந்தியர்களின் மதம், சமுதாயப் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றை மதித்தும் கவனத்திற்கொண்டும் அவற்றிற்கு எந்த அவமரியாதையும் கொடுக்காது காரியங்களை ஆற்றவேண்டும் என்று திருத்தச் சட்டம் கோரியது. மேலும் இந்துக்கள் மற்றும் அவர்களது குடும்பத் தலைவர்கள் ஆகியோரின் உரிமைகளை அவரவர் சட்டங்களுக்கு ஒப்ப மதித்துச் செயலாக்க நடவடிக்கைகளை உச்ச நீதி மன்றம் மேற்கொள்ளவேண்டும் என்று இச் சட்டம் விளம்பிற்று. 'சாதித் தேவைகளுக்காக மேற்கொள்ளப்படும் எச் செயலும் குற்றம் என்று இனி கருதப்படலாகாது' என்றும் வங்கத்து நீதித் துறைபற்றிய சட்டம் திருத்தத்தைச் செய்தது.

அடுத்து, இந்திய வழக்குகள் சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகளைப்பற்றிய பொருத்தமான படிவங்களை (forms) பிரிட்டிஷ் பேரரசரின் அனுமதியுடன் தயாரித்து வெளியிடும் அதிகாரம் வங்கத்து உச்ச நீதிமன்றத்திற்கு இச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.

இத் திருத்தச் சட்டத்தின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனியின்மீது ஒரு கடமையும் சுமத்தப்பட்டது. இதன்படி இனி மேற்கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனி தனது பணித்துறையில் பணியிலமர்த்தும் இந்தியர்களின் பெயர்கள், வேலைகள் போன்ற விவரங்கள் யாவற்றையும் ஒழுங்காகப் பதிவேடுகளில் (registers) குறித்து, அவற்றை பேணிக் காத்து வரவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இறுதியாக, ஒழுங்குமுறைச் சட்டத்தின் ஷரத்துகளுக்கு ஒப்பச் செயல்பட்ட உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளுக்கு ஒப்ப வங்கத்தில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த ஒரு சிலருக்குத் தேவையான நிவாரணம் (relief) இத் திருத்தச் சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு நாம் அறிந்துள்ள வங்காள நீதித்துறைச் சட்டம் எனப்படும் இத் திருத்தச் சட்டத்தின் செய்திகள் பல, ஒழுங்கு முறைச் சட்டத்தின் செயற்பாட்டில் காணப்பட்ட குறைபாடுகளை அகற்றும் வகையில் அமைந்திருந்தன. இதுகாறும் கம்பெனியின் இந்தியத் தலைமை அரசாங்கத்தில் தலைமை ஆளுநருடன்கூடிய ஆட்சி மன்றத்துக்கும், உச்ச நீதிமன்றத்துக்கு மிடையே நிலவி வந்த போட்டா போட்டி நிலையை அகற்றி, அப் போட்டா போட்டியில் தலைமை ஆளுநருடன்கூடிய ஆட்சி மன்றத்தின்—செயலாட்சிப் பிரிவின் (executive) — வெற்றிக்கு உதவியதோடன்றி, அந்

நிலையை இச் சட்டம் உறுதிப்படுத்தியது. அப்பொழுது தலைமை ஆளுநர் பதவியிலிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் அவர்களும், பிறரும் கூட எதிர்பார்க்காத அளவில் கம்பெனியின் இந்திய அரசாங்க அமைப்பில் தலைமை ஆளுநரின் அதிகார நிலை வலிமை பெற்றதாக ஆக்கப்பட்டது. இதற்கு முன்கூட்டியே துணை புரியும் வகையிலும் கம்பெனியின் சலுகைகள் மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்படும் வகையிலும், ஒழுங்குமுறைச் சட்டத்திற்கு ஒப்பத் தமது பதவிக்காலம் முடியப் பெற்றிருந்த தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மேற்கொண்டு ஓராண்டுக் காலப் பதவிநீட்டிப்பை வழங்கும் வகையிலும், தனித்தனியான இரு சட்டங்களை முறையே 1779, 1780 ஆகிய ஆண்டுகளில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றியது. இத்தகைய சலுகைகளைப் பாராளுமன்றம் அளிக்க அன்று அமெரிக்கக் காலனிகளில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகத் தோன்றியிருந்த அவசர நெருக்கடியே காரணமாயிருந்தது.[1] இதற்குப் பின்னரே வங்கத்து நீதித்துறைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இச் சட்டத்தின்மூலம் ஒழுங்குமுறைச் சட்டத்தில் காணப்பட்ட பல குறைபாடுகள் அகற்றப்பட்ட போதிலும், அச் சட்டத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுவதில் முழுமையான வெற்றி கிட்டவில்லை என்பதை மறுக்க முடியாது. எனவே, கம்பெனியின் இந்திய அரசாங்கங்களின்மீது பாராளுமன்றம் தனது கட்டுப்பாட்டைப் படிப்படியாக மேலும் தீவிரமாக்கத் தொடங்கியது. இதன் பயனாகவே பாராளுமன்றம் பல சட்டங்களை இயற்றவேண்டியிருந்தது. இத் தீவிரம் 1813 வரை மேற்கொள்ளப்பட்டது. எனினும், 1781ஆம் ஆண்டுத் திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரை அதன் முக்கியத்துவம் பின்வருமாறு அமைந்திருந்தது. '1781ஆம் ஆண்டுச் சட்டம், 1773-ல் அமைத்துக் கொடுக்கப்பட்ட இந்திய அரசாங்க முறையில் முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களை விளைவிப்பதாய் அமைந்தது. அவ் வரசாங்க முறையில் நிலவி வந்த கடும்போட்டியில் யார் வெற்றி பெற்றது என்பதை அதன் முகப்புரை தெளிவாக வெளிப்படுத்தியது. மேலும், கம்பெனியின் அரசாங்கம் ஆதரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், அதன் வருவாய்கள் ஒழுங்காகத் திரட்டப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும், தமது தொன்மைச் சட்டங்களோடு இயைந்த நிலையில் மக்கள் எவ்வாறு பரிபாலிக்க வேண்டும் என்பதையும் அங்கைச் செங்கனியாய் திருத்தச்சட்டம் நிலை நிறுத்தியது.[2]

1 A. B. Keith, ' A Constitutional History of India ', p. 83.

2 Ibid, p. 88.

பிரிவு 4

கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின்மீது பிரிட்டிஷ் பாராளுமன்றம் படிப்படியாகச் செலுத்திய கட்டுப்பாடு

13. டுண்டாஸ், ஃபாக்ஸ் ஆகியோரின் இந்திய மசோதாக்கள்

1773-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டுச் செயற்பாட்டு நிலையை அடைந்த ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறிக்கோள்களைக் குறையுள்ளத்துடன், நிறைவற்ற அக்கறையுடன் கம்பெனியின் மேலிடத்து நிர்வாகத்தினரும், பிரிட்டிஷ் அரசாங்கத்தினரும் அணுகிச் செயல்பட்டனர். இந்நிலை 1780ஆம் ஆண்டு வரை அதிகமாய் இருந்தது. இவ்வாறு கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சி விவகாரங்களில் தனது கவனக் குறைவைப் பிரிட்டிஷ் அரசு, குறிப்பாகப் பாராளுமன்றம், பெருமளவில் கொண்டிருந்ததற்குப் பல காரணங்களும் சூழ்நிலைகளும் இருந்தன. அவற்றுள் மிக முக்கியமானதாய்க் கருதப்படும் காரணம் யாதெனில் 1780ஆம் ஆண்டுவரை இங்கிலாந்து நாடும், மக்களும் அச்சத்துடன்கூடிய தமது கவனத்தையும் கருத்தையும் அமெரிக்கக் காலனிகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மேற்கொண்ட புரட்சிகளிலும், தமது நாட்டிற்கும் பிரான்சிற்கு மிடையே நிலவிவந்த போரிலும் ஆழப் பதித்திருந்ததாகும். இவை 1780-ல் முடிவு பெற்றிருந்த நிலையில்தான், பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் இந்தியாவில்

நடைபெற்றுவந்த கம்பெனியின் அரசாங்கம் மற்றும் ஆட்சிச் செயல்களில் தமது முழுக் கவனத்தையும் செலுத்த முற்பட்டனர். இதற்கிடையில் இந்தியாவில் நடைபெற்று வந்த வாரன் ஹேஸ்டிங்ஸின் அரசாங்கமும் ஆட்சியும் மக்கள் மனத்தில் மலைப்பையும், தமது எதிர்காலத்தைப் பற்றிய கவலையையும் ஏக்கத்தையும், கம்பெனியின் அரசாங்கத்தின்மீது அவநம்பிக்கையையும் தோற்றுவித்திருந்தன. அமெரிக்கச் சுதந்திரப் போரும், அது பிரிட்டிஷ் அரசால் ஒடுக்கப்பட்ட விதமும், ஃபிரான்ஸ் நாடு படையெடுத்துவிடுமோ என்றிருந்த பயமும் மேற்கூறிய நிலைமையை மேலும் மோசமாக்கியது.

ஒழுங்குமுறைச் சட்டத்தின் அடிப்படையான குறிக்கோள்கள் உயர்வானவையாகவே இருந்தன. எனினும் அச் சட்டத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்த ஆட்சிப்பொறி பயனற்றதாய் இருந்தது. கர்நாடகத்தில் மேற்கொள்ளப்பட்ட மைசூர்ப் போர்களின் காரணமாகவும், வளர்ந்துவந்தவண்ண மிருந்த மராத்தியர்களின் அரசியல் செல்வாக்கு, பலம் ஆகியவற்றை முறியடிக்கும் வகையில் மேற்கொண்ட போர்களும் திட்டங்களும் கம்பெனியின் நிதி நிலையை வெகுவாகப் பாதித்தன. மேலும், பிரிட்டனுக்கும் ஏனைய நாடுகளுக்கும் நடைபெற்றுவந்த போரின் காரணமாக இலாபமற்ற முறையில் பெருத்த பொருட்சேதத்துடன் கப்பல் போக்குவரத்தை மேற்கொண்டதால், கம்பெனியின் வர்த்தக நிலையும் நொடித்திருந்தது. இத்தகைய சூழ்நிலைகளில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இங்கிலாந்து நாடு முழுவதிலும் பெருத்த குரலில் பேரெதிர்ப்பு எழுப்பப்பட்டது. அவ் வமயம் இந்தியாவில் தலைமை ஆளுநராக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியச் செல்வங்களையும் நிதி வருவாய்களையும் தாறுமாறுகவும் கண்மூடித்தனமாகவும், செலவழித்து வந்ததைப் பலரும் எடுத்துக்காட்டி, அவர்மீது பல குற்றச்சாட்டுகளை அள்ளி வீசினர். அவர் கம்பெனியின் பங்குதாரர்களுக்குமட்டுமே சலுகைகளைக் காட்டும் வகையில் நீதி நேர்மையற்ற முறையில் நடந்துகொண்டார் என்று குற்றம் சாட்டப்பட்டது. அப்பொழுது இங்கிலாந்திலிருந்த ஆடம் ஸ்மித் (Adam Smith) போன்ற சிந்தனையாளர்கள் பலர் கிழக்கிந்தியக் கம்பெனி ஏகாதிபத்தியப் பேரரசை உருவாக்கும் நோக்கில் பின்பற்றிவந்த நடவடிக்கைகளை வெகுவாகக் கண்டித்தனர். இது குறித்துத் தமது கருத்தை எழுதும்பொழுது ஆடம் ஸ்மித் பின்வரும் செய்திகளைக் கூறுகின்றார். ‘வர்த்தகத்தை மையமாகக் கொண்டே, வியாபார உணர்ச்சியுடன் கிழக்கிந்தியக் கம்பெனி அமைக்கப்பட்டு உயிரூட்டம் கொடுக்கப்பட்டது. அஃது ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்குள் தனது

வர்த்தக நோக்கத்தை இந்தியாவில் வேரூன்றச் செய்திருந்த போதிலும், கம்பெனியின் ஆட்சிச் செயல்கள், நடவடிக்கைகள் ஆதாயக் கொள்ளைப் பெருவிழைவுகள் போன்ற யாவும் கம்பெனியின் அரசாங்கத்தையும், ஆட்சியாளர்களையும் கேடுறுமாறு செய்தன. கிழக்கிந்தியக் கம்பெனியின் கேடான இறைமை நிலையும் அதன் மெய்ப்பொருளும் பிரிட்டிஷாரைத் தீய வர்த்தக வாதிகளாகவும் ஆக்கிவிட்டிருந்தன.[1]

மேற்சொல்லப்பட்ட செய்திகள் நிலவரத்திலிருந்த பொழுது இங்கிலாந்தின் பேரரசராய் மூன்றும் ஜார்ஜ் என்பவர் இருந்தார். அவர் கிழக்கிந்தியக் கம்பெனி மற்றும் இந்திய அரசாங்கம் ஆகியவற்றின் கேடான காரியங்களால் தமது பேரரசின் பெயர், புகழ், இறைமை ஆகியவற்றிற்கு இழுக்கு ஏதும் ஏற்படக்கூடாது என்று கருதினார். எனவே, கிழக்கிந்தியக் கம்பெனியின்மீது தமது தனிச் சிறப்புரிமையையும் (royal prerogative) அதிகாரத்தையும் மீண்டும் உறுதிப்படுத்தினார். இவரது செயல் பெருஞ்சினத்தையும் சீற்றத்தையும் பிரிட்டிஷ் அரசியல்வாதிகளிடையே ஏற்படுத்தின. ஏனெனில் கிழக்கிந்தியக் கம்பெனியின்மூலம் கீழை நாடுகளிலிருந்து குறிப்பாக, இந்தியாவிலிருந்து திரட்டப்பட்ட செல்வங்களை அனுபவித்து வந்த அதிர்ஷ்டசாலிகளாகவும், பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் பெருஞ் செல்வாக்கையும் அக்கறையையும் கொண்ட சக்தி வாய்ந்த அரசியல்வாதிகளாகவும் அவர்கள் இருந்தனர். எனவே, தமது செல்வ நிலைக்கும் செல்வாக்கு நிலைக்கும் காரணமாயிருந்த வர்த்தகச் சலுகைகளும் பிறவும் பேரரசரால் கட்டுப்படுத்தப்படுவதை அவர்கள் விரும்பாது சீற்றம் கொண்டனர். அதே சமயம் பிரிட்டிஷ் அரசாங்கம் நிதிநெருக்கடிக்கு ஆளாகியிருந்தது. எனவே, தமது அரசின் நிதிநெருக்கடிகளைச் சமாளிக்கும் வகையில் பிரிட்டிஷ் அமைச்சர்கள் இந்தியாவின்மீது தமது பேராசைப் பார்வையைச் செலுத்தினர். அவ்வமயம், பல இன்னல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் இலக்காகியிருந்த போதிலும் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் அதிகமான இடங்களையும், பிரதேச உரிமைகளையும் பெற்றிருந்ததோடு, அவற்றின்மூலம் ஆண்டொன்றுக்கு 4,000,000 பவுன்களுக்கு ஈடான வருவாயைப் பெற்றதாகவும் இருந்தது. எனவே, கம்பெனிக்குச் சலுகைகளையளித்து அதன் நிதிகளைப் பயன்படுத்திக்கொள்ள பிரிட்டிஷ் அமைச்சர்கள் விரும்பியதில் ஆச்சரியமில்லை. நாட்டின்வளம், பரப்பு, செல்வச்செழிப்பு, மக்கள்தொகை ஆகியவற்றின் அடிப்படையில் அன்றிருந்த இந்தியா, இங்கிலாந்து ஆகிய இருதேசங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்

1 Adam Smith, 'The Wealth of Nations'

போது, எல்லாவகையிலும் இந்திய நாடே உயர்வானதாகவும் சிறப்பானதாகவும் இருந்தது. அத்தகைய சிறப்பான இந்திய நாட்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரதேசக் கைப்பற்றுதல்கள் அதிகரித்தவண்ண மிருந்தன. அவற்றின்மூலம் கம்பெனி பெற்று வந்த வருவாய்கள் தனக்குத் தேவையான நிதியைத்தரும் வளமான ஆதாரமாய் அமையும் என்று பிரிட்டிஷ் அரசு கருதியது. எனவே, பிரிட்டிஷ் அரசு கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சிக் காரியங்கள்மீது தனது கட்டுப்பாட்டை மேலும் தீவிரமாக்கவும், கம்பெனியின் இந்தியப் பிரதேசங்கள்மீது தனது உரிமையை நிலைநாட்டவும் முற்பட்டது.

இங்கிலாந்தின் உள்நாட்டு அரசியல் மற்றும் நிதி நிலவரம் மேலே விளக்கப்பட்ட வகையில் இருந்த சமயத்தில், கம்பெனியின் இந்திய அரசாங்கத்தால் ஏற்பட்ட தொல்லைகளும் சீர்கேடுகளும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டன. எனவே பாராளுமன்றம் இனியும் கம்பெனியின் இந்திய விவகாரங்களில் அலட்சியமாய் இருக்கக்கூடாது என்ற உணர்ச்சியால் உந்தப்பட்டது. இவ் வுணர்ச்சி மேலும் வலிவைப்பெறும் வகையில் காசி ஜூரா, பாட்னு வழக்குகள், கம்பெனியின் இந்திய அரசாங் கத்தின் பிரிவுகளுக்கிடையே பேணப்பட்ட பலப்பரீட்சை, வாரன் ஹேஸ்டிங்ஸின் குமுறல், வங்கத்து மக்கள் பிரிட்டிஷ் அரசுக்கு அனுப்பிய விண்ணப்பங்கள் போன்ற பலவும் நடந்தன. கம்பெனியின் இந்தியச் செயல்களின்மீது தனது பயனுறுதி மிக்க கட்டுப்பாட்டைப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் செலுத்தவேண்டும் என்ற கோரிக்கை முன்பு இருந்ததைவிட அதிகமாக முடுக்கப்பட்டிருந்தது. எட்மண்ட் பர்க் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டிருந்த பொறுக்குக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1781-ல் இயற்றப்பட்ட திருத்தச் சட்டத்திற்குப் பிறகும்கூட மேற் சொல்லப்பட்ட கோரிக்கை சிறிதும் தணியவில்லை. டுண்டாஸின் (Dundas) தலைமையிலான இரகசியக்குழு ஆறு அறிக்கைகளைத் தனிப்பட்ட முறையில் 1782ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. இந்த ஆறு அறிக்கைகளும் கம்பெனியின் அரசாங்கத்தினரின் காரியங்கள் யாவற்றிலும் குறைகளைக் கண்டு, அவர்கள் ஆட்சி, கொடுங் கோன்மை மிக்க ஆட்சியாக இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டின. அதுமட்டுமன்றி இந்தக் கொடுங்கோன்மையிலிருந்து இந்திய மக்களை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை இங்கிலாந்து அரசு உடனடியாக மேற்கொள்ளவேண்டிய அவசியத்தையும் அந்த அறிக்கைகள் வலியுறுத்தின. 'தனியார்களின் சுரண்டல்களுக்கு ஆட்பட்டிருந்த நிலையில் இந்த நாட்டின் மூல வள ஆதாரங்கள் இருந்தன,' என்று A. B. கீத் அவர்கள் எழுதியுள்ள கருத்து நம் மை

இன்றும் சிந்திக்க வைப்பதைப்போல், அன்று பிரிட்டிஷ் அரசையும் சிந்திக்க வைத்திருக்கவேண்டும்; குறிப்பாகத் தனது பதவியின் இறுதி ஆண்டை அணுகிக்கொண்டிருந்த நார்த் பிரபுவின் அமைச் சவையைச் (cabinet) சிந்திக்கவைத்து உரிய நடவடிக்கையை அது மேற்கொள்ளுமாறு செய்திருக்கவேண்டும். எனவே, கம்பெனியின் மீதும், அதன் இந்திய அரசாங்கம் மற்றும் நிர்வாகத்தின்மீதும் தேவையானதும் உறுதியானதுமான கட்டுப்பாட்டைப் பாராளு மன்றம் செலுத்த முனைந்தது.

மேற்சொல்லப்பட்ட காரணங்களினால் 1782ஆம் ஆண்டு, மேத் திங்கள் 30ஆம் நாளன்று பாராளுமன்றத்தின் பொதுமக்கள் அவையில் ஒரு தீர்மானம் (resolution) நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானத்தின்மூலம் கம்பெனியின் பொதுவான நிர்வாகம், குறிப்பாக வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆட்சி, பெரும் கண்டனத்திற்கு உள்ளாக்கப்பட்டது. மேலும் அத் தீர்மானம் இந்தியாவில் தலைமை ஆளுநராயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸையும், வங்கத்து உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாயிருந்த எலிஜா இம்பே யையும் உடனடியாகத் திருப்பி அழைக்கவேண்டும் என்றும் கோரியது. மேற்சொல்லப்பட்ட தீர்மானத்திற்கு இயக்குநர் களும் தமது ஆதரவைக் காட்டினர். ஆனால், அத் தீர்மானம் பயனற்றுப் போகும் வகையில் கம்பெனியின் உடைமையாளர்கள் மன்றம் தடையாக இருந்தது. கம்பெனியின் உடைமையாளர்கள் அத் தீர்மானத்திற்குச் செவிசாய்க்காது, வாரன் ஹேஸ்டிங்ஸையும், இம்பேயையும் தொடர்ந்து தத்தம் பதவிகளில் நீடிக்குமாறு துணை புரிந்தனர். உடைமையாளர்களின் இச் செயல் பொதுமக்கள் அவையின் தீர்மானத்திற்கும், இயக்குநர்களின் கட்டளைக்கும் மதிப்பை யளிக்காது எதிர்ப்பைக் காட்டுவதாய் இருந்தது. இச் செயல்கள் ஒழுங்குமுறைச் சட்டமும், அதற்கான திருத்தச் சட்டமும் பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாட்டைக் கம்பெனியின்மீது செலுத்தியதில் தோல்வியைக் கண்டிருந்த தன்மையை வெளிப் படுத்தின. எனவே, கம்பெனியின்மீது செலுத்தப்படவிருந்த பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுத் தேவையின் உணர்வும், விழைவும் முன்பிருந்ததைவிட மிக அதிகமாக உணரப்பட்டன. இச் சூழ்நிலையில் நார்த் பிரபுவின் அமைச்சவை பதவியிலிருந்து இறக்கப்பட்டு, ஃபாக்ஸ் (Fox) அவர்களின் தலைமையிலான கூட்டு மந்திரிசபை அமைக்கப்பட்டிருந்தது. இக் கூட்டு அமைச்சவை 1783-ல் பதவியிலிருந்தபோது, கிழக்கிந்தியக் கம்பெனி தனது நிதி நெருக்கடியைச் சமாளித்துக்கொள்ளும் வகையில் பிரிட்டிஷ் அரசிடம் நிதி நிவாரணம் கோரி விண்ணப்பித்தது. இச் சந்தர்ப் பத்தையும், இந் நிதி உதவிக் கோரிக்கையையும் பயன்படுத்திக்

கொண்டு, 'உரிய சீர்திருத்தங்களை இந்தியாவில் மேற்கொண்டா லன்றி உதவி கிடைக்காது' என்று எட்மண்ட் பர்க் எடுத்துரைத் தார். அப்பொழுது, இரகசியக்குழுவின் தலைவராயிருந்த டுண்டாஸ் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இடம்பெற்றவரா யிருந்தார். எனினும், அவர் கம்பெனியின் இந்திய நிர்வாகம் குறித்து ஒரு மசோதாவை (bill) 1783ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பொதுமக்கள் அவையில் (House of Commons) சமர்ப் பித்தார். 'டுண்டாஸின் இந்தியச் சட்டவரைவு' என்று அழைக்கப் பட்ட அம் மசோதாவில் பின்வரும் கருத்துகளையும், முன்மொழி களையும் (proposals) டுண்டாஸ் எடுத்துக் கூறியிருந்தார்.

டுண்டாஸின் இந்தியச் சட்ட வரைவு தன்னகத்தே கொண்டி ருந்த செய்ற்குறிப்புகள் அல்லது ஏற்பாடுகளில் முதலாவது என்ன வெனில், இந்தியாவிலிருந்த கம்பெனியின் தலைமை ஆளுநரையும் மற்ற அதிகாரிகள், பணியாளர்கள் யாவரையும் இந்தியாவிலிருந்து திருப்பி அழைக்க (recall) பிரிட்டிஷ் அரச நிறுவனத்திற்கு முழுமையான அதிகாரம் கொடுக்கப்படவேண்டும் என்பதாகும். அடுத்து, தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சிமன்ற உறுப்பினர் களுக்கு இடையே உயர் அதிகார உறுதிப்பாட்டு நிலையை ஏற்படுத்தும் வகையில், தலைமை ஆளுநரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டு முனைப்பானவை யாக்கப்படவேண்டும் என்று அச் சட்ட வரைவு கோரியது. மேலும், தனிப்பட்டதும் முக்கிய மானதுமான சிறப்பான சமயங்களில் அல்லது வழக்குகளில் தமது ஆட்சிமன்ற உறுப்பினர்களின் முடிவினை ஒதுக்கிச் செயல் படும் வகையில் மறுப்பதிகாரம் (veto power) தலைமை ஆளுநருக்கு வழங்கப்படவேண்டும் என்றும் அது கூறியது. அடுத்து, கம்பெனியின் இந்திய அரசாங்கத் தலைமை ஆளுநர் முதற்பெரும் படைத் தலைவர் (Commander-in-Chief) என்னும் பதவியையும் ஒரு சேர வகிக்க வகை செய்யப்படவேண்டும் என்று டுண்டாஸின் சட்ட வரைவு கோரியது. வங்கத்துத் தலைமை ஆளுநரின் மைய அரசாங்கத்திற்கும், ஏனைய மாநில அரசாங்கங்களுக்கும் இடையில் முன்பிருந்ததைவிட அதிகமான அளவில் ஒன்றிப்பானதும் கட்டுப் பாடு மிக்கதுமான இயக்க நிலையும், அதிகார வழியும் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும் என்றும் அச் சட்ட வரைவு கோரியது. இறுதியாக, வாரன் ஹேஸ்டிங்ஸின் ஐந்தாண்டு வரி ஏற்பாட்டின் விளைவாகத் தமது நிலங்களையும், வருவாய் உரிமைகளையும் இழந்து, இடம் பெயர்ந்திருந்த நிலச்சுவான்தார்கள் யாவருக்கும் உரிமை மீட்பினை வழங்கவேண்டும் என்றும் டுண்டாஸின் சட்ட வரைவு கூறியது.

மேற்சொல்லப்பட்ட கருத்துகளையும், செயற் குறிப்புகளையும் கொண்டிருந்த டுண்டாஸின் மசோதா ஏற்கப்பட்டுச் சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்குமாயின் அஃது இந்தியாவில் நிலவி வந்த துர்பாக்கியமான செயல்களையும் நிலையையும் பெருமளவில் திருத்தித் தேர்ச்சியுறுமாறு செய்திருக்கும்.[1] தமது இந்தியப் பணியாளர்களை முழுமையாய் எவ் வகையிலும் கட்டுப்படுத்த முடியாதிருந்தனர் இயக்குநர்கள் ; கம்பெனியைச் சரிவ்ரக் கட்டுப் படுத்த முடியாத நிலையிலிருந்தது பிரிட்டிஷ் அரசு; அதே நேரத்தில், தனக்குச் சார்நிலைப் படுத்தப்பட்டிருந்த இந்திய மாநிலங்களைச் செம்மையாய் இயக்கிக் கட்டுப்படுத்த முடியாம லிருந்தது வங்கத்திலிருந்த கம்பெனியின் தலைமை அரசாங்கம்; மைய அரசாங்கத்தை உதாசீனம் செய்து மாநில அரசாங்கங்கள் இங்குக் காரியங்களை மேற்கொண்டன. இத்தகைய குறைபாடு களையெல்லாம் அகற்றி உறுதியான, ஒன்றிப்பான அரசாங்க உருவாக்கத்தைக் கொடுக்கக்கூடிய உயரிய குறிக்கோளைக் கொண்டதாக டுண்டாஸின் மசோதா இருந்தது என்று அறிஞர் A. B. கீத் கூறியுள்ளார். ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட வரைவு என்ற அரசியல் காரணத்தால், கட்சிகளின் பலத்தின் அடிப்படையில் இயங்கி வந்த பொதுமக்கள் அவையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையிலேயே டுண்டாஸின் மசோதா புறக்கணிக்கப்பட்டுவிட்டது. எனினும், அது கம்பெனியின் காரியங்கள் குறித்து பிரிட்டிஷ் அமைச்சவை விரைவில் எடுக்கவேண்டியிருந்த நடவடிக்கையின் அவசியத்தை உணர்த்தத் தவறவில்லை. எனவேதான், 1783ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் ஃபாக்ஸின் இந்திய மசோதா தாக்கல் செய்யப்பட்டு, பின்னர் அதனைத் தழுவி 1784-ல் பிட் இந்தியச் சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டம் கம்பெனியின் இந்திய அரசாங்க, ஆட்சிமுறைகளுக்கு ஆக்க முறையான உருவையும் அமைப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

ஃபாக்ஸின் இந்திய மசோதா

1783ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 18ஆம் நாளன்று ஃபாக்ஸ்-நார்த் கூட்டு அமைச்சவை பாராளுமன்றத்தில் இரண்டு நடவடிக்கைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. அவற்றில் ஒன்று வாரன் ஹேஸ்டிங்ஸின் தலைமை ஆளுநர்ப் பதவிக்காலத்தில் நடைபெற்ற பயனற்ற காரியங்கள் மேற்கொண்டு நடைபெற முடியாமல் கவனித்துக்கொள்ளும் குறிக்கோளைக் கொண்டிருந்தது. எனவே, அத் திட்டம் குறைபாடுடையதான கம்பெனியின் இந்திய

[1] A. B. Keith. A Constitutional History of India. p. 94

அரசாங்க முறையைத் திருத்தக் கூடியதாக இருந்தது. இரண்டாவது திட்டம் கிழக்கிந்தியக் கம்பெனியின் அடிப்படையமைப்பில் தேவையான பல மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் செய்து கொடுக்கக்கூடிய ஒரு புரட்சிகரமான முயற்சியாக இருந்தது. இவற்றை உள்ளடக்கி ஃபாக்ஸ் அவர்கள் தமது மசோதாவைத் தயாரித்திருந்தார். இம் மசோதாவின்மூலம் இந்தியாவில் நடைபெற்று வந்த கம்பெனி ஆட்சியின் சீர்கேடான நிலையை எடுத்துக் காட்டி, கொள்ளை ஆதாயம் பெறும் நோக்கம் கைவிடப்பட்டு முற்றிலும் புதியதோர் அடிப்படையில் கம்பெனி ஆட்சி அமைய வேண்டும் என்பதுதான் இம் மசோதாவின் நோக்கம் என்பதை ஃபாக்ஸ் தெளிவாக எடுத்துக்காட்டினார். எனவே, 1783ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 18ஆம் நாளன்று இம் மசோதா பொது மக்கள் அவையில் தாக்கல் செய்யப்பட்டது.

ஃபாக்ஸின் இந்திய மசோதாவில் எடுத்தியம்பப்பட்டிருந்த உயர்வான ஏற்பாடுகளை அறிந்துகொள்ளு முன் நாம் இங்குக் கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான செய்தியொன்று உள்ளது. அது கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் பெற்றிருந்த அரசியல் மற்றும் வணிக அக்கறைகளைப்பற்றியதாகும். நாம் அறிந்துள்ளவாறு, அடிப்படையாக வர்த்தகத்தைமட்டும் மேற்கொள்வதற்கென ஒரு வணிக நிறுவனமாய் அமைக்கப்பட்டிருந்ததே கிழக்கிந்தியக் கம்பெனியாகும். ஆனால், காலம் செல்லச் செல்ல, சூழ்நிலை சந்தர்ப்பவசமாக அரசியல் அக்கறைகளையும் கம்பெனி இந்நாட்டில் பெற்று, 18ஆம் நூற்றாண்டில் அஃது ஓர் ஆட்சி நிறுவனமாய் மாறியிருந்தது. இதனால், அதன் அடிப்படையான வணிகக் குறிக்கோளுக்கும் அதன் அரசியல் ஈடுபாடுகளுக்கும் இடையே முரண்பாடுகள் பெரிதும்காணப்பட்டன. இப்பொருந்தா நிலையைப் புறக்கணிக்கவேண்டிய அல்லது அகற்றிவிடவேண்டிய அவசியம் அன்று இருந்தது. ஆனால், அதேசமயம் அவ்வவசியத்தை முழுமையாகச் செயல்படுத்திக் காட்டக்கூடிய நிலையிலும் பிரிட்டிஷ் அரசு இருக்கவில்லை. எனவே, ஃபாக்ஸின் இந்திய மசோதா கம்பெனியின் அரசியல் மற்றும் வணிக அக்கறைகளுக்கு இடையே நிலவிய தெளிவானதும், உறுதியானதுமான வேறுபாட்டை வெளிப்படுத்தி, கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் அக்கறைகளும், நிர்வாக ஈடுபாடுகளும் அதனிடமிருந்து அகற்றப்படவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டது. இம் மசோதாவின் குறிக்கோளும் அம்சங்களும் பின்வருமாறு :

கம்பெனியின் தலைமையிடத்து நிர்வாக நலன் குறித்துத் தனிப்பட்ட இரு ஆட்சியமைப்புகள் அமைக்கப்படவேண்டும்

என்று ஃபாக்ஸின் சட்ட வரைவு எடுத்துக்கூறியது. அவ் விரு நிறுவனங்களும் முறையே எழுவரைக் கொண்ட ஆணையர் வாரியம்[1] ஒன்பது துணை இயக்குநர்களைக் கொண்ட சார்நிலை வாரியம் (Subordinate Board of Nine Deputy Directors) என்பவை யாகும். இவ் விரு நிறுவனங்களும் கம்பெனியின் உடைமையாளர் கள் மன்றம், இயக்குநர்கள் மன்றம் ஆகியவை அகற்றப்பட்டு அவற்றிற்குப் பதிலாக அமைக்கப்படுபவையா யிருக்கவேண்டும் என்று இச் சட்ட வரைவு செய்தியைக் கொண்டிருந்தது.

ஏழு ஆணையர்களைக் (Commissioners) கொண்ட வாரியத்தை (Board) பொறுத்தவரை இம் மசோதா பின்வரும் அம்சங்களைக் கொண்டிருந்தது. கம்பெனியின் இந்தியப் பிரதேசங்கள் மற்றும் அதன் வருவாய்கள் யாவும் இவ் வேழு ஆணையர்களால் நிர்வாகம் புரியப்பட வேண்டும். இவ் வெழுவரும் சட்டத்திலேயே குறிப்பி டப்பட்டவர்களாய் பிரிட்டிஷ் அரசரால் நியமனம் செய்யப்பட வேண்டும். அவர்களுடைய பதவிக்காலம் நான்காண்டுகளாக இருக்க வேண்டும். இவ் வேழு ஆணையர்களின் பதவிகளில் காலி ஸ்தானங்கள் ஏற்படும்பொழுது அவற்றை நிரப்பும் அதிகாரம் அரசிடமே இருக்கவேண்டும். ஆனால், அவ் வேழு உறுப்பினர் களையும் அல்லது அவர்களில் சிலரையோ அல்லது ஒருவரையோ அவர்களின் நான்காண்டுப் பதவிக்காலம் முடியும் முன் பதவியி லிருந்து விலக்கவேண்டுமாயின் அதற்கான தீர்மானம் ஒன்று பாராளுமன்றத்தின் ஈரவைகளில் ஏதேனும் ஓர் அவையால் நிறைவேற்றப்படவேண்டும். அத் தீர்மானத்தையொட்டியே அரசர் அவர்களைப் பதவியிலிருந்து முன்கூட்டி விலக்கலாம். இவ் வாரியம் இலண்டன் மாநகரில் தனது தலைமையிடத்தைக்கொண்டு செயல்படவேண்டும். கம்பெனியின் ஆளும் பொறுப்பு முழுவ தையும் மேற்கொள்ளும் இவ் வாரியத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள் (minutes) யாவும் பாராளுமன்றத்தின் ஆய்வுக்கு உட்பட்ட வையாய் இருக்கவேண்டும். மேலும், கம்பெனியின் பணித் துறையில் எல்லாப் பதவிகளிலும் எவரையும் நியமிக்கவும் பதவி யிலிருந்து எவரையும் நீக்கவும் முழுமையான அதிகாரம் இக் குழுவிற்கு வழங்கப்படவேண்டும். இத்தகைய பொறுப்புகள் அளிக்கப்படும் ஏழு ஆணையர் வாரியத்திற்குத் துணை புரியும் வகையிலும் கம்பெனியின் வர்த்தகக் காரியங்களைக் கவனிக்கும் பொருட்டும் ஒன்பது துணை இயக்குநர்களைக் கொண்ட ஒரு சார் நிலை வாரியம் அமைக்கப்படவேண்டும் என்று ஃபாக்ஸின் இந்தியச் சட்ட வரைவு கூறியது.

[1] A Board of Seven Commissioners

ஒன்பது துணை இயக்குநர்களைக் கொண்ட சார் நிலை வாரியத்தைப் பொறுத்தவரை, பின்வரும் ஏற்பாடுகளை ஃபாக்ஸின் சட்டவரைவு முன் மொழிந்தது. இவ் வாரியத்தின் ஒன்பது துணை இயக்குநர்களும் கலைக்கப்படவிருக்கும் உடைமையாளர்கள் மன்றத்தில் பேரளவிலான இருப்புகளைக் (stocks) கொண்டிருப்போரிலிருந்து பாராளுமன்றத்தால் பொறுக்கி யெடுக்கப்பட்டு, அவர்கள் ஐந்தாண்டுகளுக்குப் பதவி வகிக்குமாறு அரசரால் நியமிக்கப்படவேண்டும் என்றும், அவர்களைத் தமது ஐந்தாண்டு பதவிக்கால முடிவிற்கு முன் அரசர் நீக்க வேண்டுமாயின் அதற்கான தீர்மானம் ஒன்றைப் பாராளுமன்றத்தின் ஏதேனும் ஓர் அவை நிறைவேற்றவேண்டும் என்றும் இம் மசோதா செய்தித் தெளிவைக் கொண்டிருந்தது.

மேற்கூறிய இரு அமைப்புகள்பற்றிய விவரங்கள் தவிர வேறு சில பொதுவான, முக்கியமான அம்சங்களையும் ஃபாக்ஸின் மசோதா தன்னகத்தே கொண்டிருந்தது. அவை, கம்பெனியின் ஐரோப்பியப் பணியாளர்களின் அல்லது அதிகாரிகளின் அடக்குமுறை, அட்டூழியம் ஆகியவற்றிலிருந்து இந்தியர்களுக்குப் பாதுகாவல் கொடுக்கப்பட்டு அவர்களின் பொதுநலம் (welfare) பேணப்படவேண்டும்; குறிப்பிட்ட சில சூழ் நிலைகளில், உரிய நிபந்தனைகளுக்கு ஏற்பவே பிரிட்டிஷ் படைகள் இந்திய அரசர்களுக்கு இரவலாகக் கொடுக்கப்படவேண்டும்; கம்பெனியின் இந்தியப் பணியாளர்கள் எவ்விதமான பரிசுகளையும், வெகுமதிகளையும் எவரிடமிருந்தும் பெறக்கூடாது என்று தடை செய்யப்பட வேண்டும் என்பவையாகும்.

இத்தகு சிறப்பான அம்சங்களையும் செயற் குறிப்புகளையும் கொண்டிருந்த ஃபாக்ஸின் இந்திய மசோதாவை, 'அன்று இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நிலவிய நிலவரங்களைக் கருத்திற் கொண்டு பார்க்கும்போது அது நேர்மையானதும் அரசியல் குறைபாடுகளற்ற சிறப்பானதோர் முயற்சியாகவும் இருந்தது'[1] என்பது புலப்படுகின்றது. எனவேதான் இம் மசோதாவிற்குப் பொதுமக்கள் அவையில் பேராதரவு இருந்தது. இம் மசோதாவை எட்மண்ட் பர்க் பெரிதும் ஆதரித்து, அது சட்டமாக நிறைவேற்றப்படுமாயின் 'உலகில் எங்குமே காணப்படாத அளவில் பேருழலும், கொடுங்கோன்மையும் மலிந்திருந்த கம்பெனியின் அரசாங்கம் அகற்றப்பட்டு, பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரிடைப் பாதுகாவலின்கீழ் நல்லதொரு

1 Grant Robertson, England under Hanoverians, pp. 299 — 307.

அரசாங்கம் இந்தியாவில் அமையப்பெறும்' என்று கூறினர். எனவே, தனது மசோதா ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று ஃபாக்ஸ் அவர்களும் இடிமுழக்கம் செய்தார். எட்மண்ட் பர்க், ஃபாக்ஸ் ஆகியோரின் முழக்கங்களுக்குச் செவி சாய்த்த நிலையில், இம் மசோதா பொதுமக்கள் அவையில் ஆதரவாக 208 வாக்கு களையும் எதிராக 108 வாக்குகளையும் பெற்று நிறைவேறியது. ஆனால், பாராளுமன்றத்தின் மேலவையான பிரபுக்கள் அவையில் இம் மசோதா தோற்கடிக்கப்பட்டது. இதற்குப் பலர் உடந் தையாய் இருந்தனர். ஆரம்பத்தில் நன்னோக்கத்தைக் கொண்டி ருந்த மூன்றும் ஜார்ஜ் மன்னர்கூட மனம்மாறி, இச் சட்ட வரைவு பிரபுக்கள் அவையால் தோற்கடிக்கப்படக் காரணமாய் இருந்தார்.

நல்ல நோக்கத்தை அடிப்படையாய்க் கொண்டிருந்த ஃபாக்ஸின் இந்திய மசோதா எதிர்ப்புக்கு ஆளாகித் தோற்கடிக்கப் பட்டதற்குக் காரணங்கள் பல இருந்தன. இங்கிலாந்து நாட்டின் உள்நாட்டு அரசாங்கம் மற்றும் அரசியல் ஆகியவை கட்சி அரசி யலின் குரோதம், ஊழல், திறமையின்மை ஆகியவற்றிற்கு ஆட் பட்டிருந்தன. எனவே, அவற்றில் ஈடுபட்டிருந்தோரைத் தலைமை நிர்வாகிகளாய்க் கொண்டிருக்கும்படி கம்பெனியின் ஆட்சியமைப்பு அமையவிருந்ததைப் பெரும்பாலோர், குறிப்பாக பிரபுக்கள் அவையின் உறுப்பினர்கள் விரும்பவில்லை. மூன்றும் ஜார்ஜ் மன்னரும் அதனை விரும்பவில்லை. ஏனெனில், ஊழல் காரியங் களுக்குப் பெயர்பெற்றிருந்த ஒரு சிலரின் கைகளுக்கு இந்தியாவைப் பற்றிய அளவற்ற ஆதரவுச் சலுகைகளையும் உரிமைகளையும் மாற்ற முற்படுவது ஒரு ஏமாற்றுவித்தையாக முடியும் என்று மன்னர் கருதினர். எனவே, இவர் 'இம் மசோதாவிற்கு ஆதரவாக வாக்களிக்கும் எப் பிரபுவும் என் முதல் எதிரியாவார்' என்று அறிவித்தார். ஊழல் மிக்கவர்களைப் புதிதாக நியமிப்பதைக் காட்டிலும், ஊழல் காரியங்களை நடத்திவந்த கம்பெனியின் பழைய வர்களைத் திருத்துவது எளிது என்று இவர் கருதினர்போலும். கம்பெனியின் பங்குதாரர்களும் இம் மசோதாவை எதிர்த்துப் போர்க் குரல் எழுப்பினர். இம் மசோதா சட்டமாக இயற்றப்படு மாயின் அஃது அவர்களின் தனிப்பட்ட உரிமைகளை நசுக்கிவிடும் என்று அலறினர். கம்பெனியின் இந்திய அரசாங்க அதிகாரங்கள் ஆணையர்கள் வாரியத்திற்கு மாற்றப்படுமாயின், அது பாராளுமன் றத்தில், குறிப்பாகப் பொதுமக்கள் அவையில், ஆதிக்கம் கொண்டி ருக்கும் அரசியல் கட்சியின் நோக்கங்களுக்கு அடிமையாகி, அதன்மூலம் பாராளுமன்றமே ஊழல் காரியங்களைச் செய்வதற்கு வழிவகுக்கும் என்று பலர் கருதினர். ஏனெனில், 'என்றென்றும்

தாம் பதவியில் இருக்கவேண்டும் என்ற குறிக்கோளில் ஆணையர் வாரிய உறுப்பினர்கள் பாராளுமன்றத்தினருக்கு எப்பொழுதும் 'காட்ட வேண்டியதைக் காட்டி, கொடுக்க வேண்டியதைக் கொடுத்துப் பெறவேண்டியவைப் பெற முயல்வார்கள்.' இதனால் பாராளுமன்றமும் மாசுள்ள செயல்களுக்கு உடந்தையாய் இருக்க வேண்டியிருக்கும் என்றும் பலரால் கூறப்பட்டது. எனவே, 'கம்பெனியின் தலைமைப் பொறுப்புகளை ஆணையர் வாரியத்திடம் விடாது, பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவரிடமோ அல்லது சிலரிடமோ ஒப்படைக்கலாம்' என்று சிலர் கூறினர். இப்படி சர்ச்சைகளும் எதிர்ப்புகளும் கிளம்பியதற்குக் காரணமாய் அமைந்தது கோட்பாடு ரீதியாக வாரிய அமைப்பைப்பற்றியது அன்று; மாறாக, ஏழு ஆணையர்களைத் தமது கட்சியைச் சார்ந்தவர்களிலிருந்து, தமக்கு வேண்டியவர்களை ஃபாக்ஸ் முன் மொழிந்திருந்ததே காரணமாகும். ஃபாக்ஸ் அவர்களால் முன்மொழியப்பட்டிருந்தோர் பாராளுமன்றத்தினரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருக்கவில்லை. இதனைப் பலர் எடுத்துக்காட்டி, கம்பெனியின் இந்திய அரசாங்கம், செல்வம் பற்றிய அதிகாரமும் சலுகையும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிவிடும் என்று கூறி, 'தனியார் சொத்துரிமையை மீறக்கூடிய மிகக்கொடிய மசோதா இது,' என்று வாதித்து எதிர்த்தனர். எனவே, ஃபாக்ஸின் இந்திய மசோதா இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டது.

ஃபாக்ஸின் இந்திய மசோதா பிரபுக்கள் அவையால் தோற்கடிக்கப்பட்டதற்கான காரணங்கள் மசோதாவின் அம்சங்களில் இருக்கவில்லை. ஏனெனில் அதன் அம்சங்களைப்பற்றி எழுப்பப்பட்ட குறைகள் திருத்தியமைக்கப்படத் தக்கனவாகவே இருந்தன. எனவே, இங்கிலாந்து நாட்டின் உள்நாட்டு அரசியல் அக்கறையும், செல்வாக்கும், சுயநலவாதிகளின் சக்தியும், மூன்றும் ஜார்ஜ் மன்னரின் எச்சரிக்கையும்தான் இச் சட்டவரைவின் தோல்விக்குக் காரணங்களாய் அமைந்தன என்று கூறுதல் வேண்டும். மேலும், ஃபாக்ஸ், நார்த் ஆகியோரது கூட்டு அமைச்சவை செல்வாக்கற்றிருந்த நிலையும், தமக்கு வேண்டியவர்களையே வாரிய ஆணையர்களாக நியமிக்கவேண்டும் என்று நயமற்று மூர்க்கத்தனமாக வாதிட்ட ஃபாக்ஸ் அவர்களின் பிடிவாதமும், பொறுப்பற்ற தன்மையும் இம் மசோதா இறுதியாகத் தோற்கடிக்கப்படக் காரணமாக இருந்தன என்றும் கூறலாம். மற்றப்படி இம் மசோதாவின் செய்தி சாராம்சங்களைப் பொறுத்தவரை பெருங்குற்றம் குறைகளைக் காண இடமேதும் இருக்கவில்லை. எனவேதான் 1784-ல் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட பிட் இந்தியச் சட்டத்தின் (Pitt's India Act) பெரும்பான்மையான செய்தி சாராம்சங்களும்,

அம்ச ஏற்பாடுகளும் ஃபாக்ஸின் இந்திய மசோதாவின் செய்திகளை யும் அம்சங்களையும் பின்பற்றித் தயாரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன. எவ்வாருயினும் இம் மசோதா தோற்கடிக் கப்பட்டதன் காரணமாக ஃபாக்ஸ் - நார்த் கூட்டு அமைச் சவையை மூன்றும் ஜார்ஜ் மன்னர் 18-12-1783-ல் பதவியிலிருந்து விலக்கி இளைய பிட் (Younger Pitt) என்பவரை அமைச்சவையை அமைக்குமாறு செய்தார். இந்திய விவகாரம் குறித்து பிரிட்டிஷ் அமைச்சவை யொன்று முதல் முறையாகவும், இறுதியாகவும் பதவியிலிருந்து அகற்றப்பட்டது இதுவேயாகும். இளைய பிட் அவர்களால் அமைக்கப்பட்ட புதிய அமைச்சவை ஆரம்ப காலத்தில் பெரும்பான்மைப் பலத்தையும் ஆதரவையும் பொது மக்கள் அவையில் பெற்றிருக்கவில்லை. ஃபாக்ஸ், நார்த் ஆகியோரின் ஆதரவாளர்களே அவ் வாய்ப்பைத் தொடர்ந்து பெற்றிருந்தனர். எனவே, அவர்கள் இளைய பிட்டின் முயற்சிகளைத் தோற்கடித்தனர். இதனல், பொதுமக்கள் அவை கலைக்கப்பட்டு, தேர்தல் நடந்து, இளைய பிட் பெரும்பான்மை பலத்துடன் மீண்டும் அமைச்சவையை அமைத்துச் சட்ட ஆக்கத்தை மேற்கொண்டார். அப்பொழுதும் அவர் ஃபாக்ஸின் இந்தியச் சட்டவரைவின் அம்சங்களைப் பெரும் பாலும் தழுவியே காரியங்களை மேற்கொண்டார். இச் செய்தி யொன்றே ஃபாக்ஸின் இந்தியச் சட்டவரைவு அல்லது மசோதா பெற்றிருந்த பெருஞ்சிறப்பை உணர்த்துவதாகும்.

14. பிட் இந்தியச் சட்டத்தின் கூறுகளும் அரசாங்க ஏற்பாடுகளும்

1783ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் பதினெட்டாம் நாளன்று ஃபாக்ஸின் இந்திய மசோதா பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் பிரபுக்கள் அவையினரால் நிராகரிக்கப்பட்டதன் காரணமாகத் தோற்கடிக்கப்பட்டது. இதனுல், ஃபாக்ஸ்—நார்த் கூட்டு அமைச் சரவை (coalition ministry) பதவியிலிருந்து விலகியது. அதன் பின்னர், ஃபாக்ஸின் இந்திய மசோதாவை ஆரம்பம் முதல் முழு மூச்சாக எதிர்த்து வந்தவரும், எதிர்க்கட்சி தலைவரும் ஆகிய இளைய பிட் என்பவரை மூன்றும் ஜார்ஜ் மன்னர் அமைச்சரவையை அமைக்குமாறு வேண்டினுர். அப்பொழுது பொதுமக்கள் அவை யில் பெரும்பான்மையான பலத்தைப் பெற்றிராத நிலை இளைய பிட் அவர்களுக்கு இருந்தது. எனினும், அவர் தமது அமைச்சரவையை 1784ஆம் ஆண்டு சனவரித் திங்களில் அமைத்தார். அதன் பின்னர் அவர் தமது இந்திய மசோதாவை எக் காலத் தாமதமும் செய் யாது பொதுமக்கள் அவையில் சமர்ப்பித்தார். இம் மசோதாவின் முக்கியக் கூறுகள், அம்சங்கள், ஏற்பாடுகள் போன்ற யாவும் ஃபாக்ஸின் இந்திய மசோதாவில் காணப்பட்ட அம்சங்களைத் தழுவியனவாகவே இருந்தன. ஃபாக்ஸின் இந்திய மசோதாவை அரசியல் நோக்கத்துடன் இளைய பிட் எதிர்த்திருந்த போதிலும், அம் மசோதாவின் செய்திகளும், அவற்றின்மீது நடந்த காரசார மான பாராளுமன்ற விவாதங்களும் கம்பெனியின் சீர்கேடான நிலை அதன் இந்தியக் காரியங்களின் முறைகெட்ட தன்மை ஆகிய வற்றை உள்ளங்கை நெல்லிக்கனியாக வெளிப்படுத்தியதை நன்ருக உணர்ந்திருந்தார். எனவேதான், அவர் தமது மசோ தாவில் ஃபாக்ஸினுல் விழையப்பட்டிருந்த அம்சங்கள் பலவற்றைப் புகுத்தியிருந்தார். ஆனுல், முன்னரே கூறியதைப்போல் இளைய பிட்டின் அமைச்சரவைக்குப் பெரும்பான்மையான பலமோ அல்லது ஆதரவோ பொது மக்கள் அவையில் இல்லாதிருந்தாலும் ஃபாக்ஸ் — நார்த் ஆகியோரின் அரசியல் ரீதியான எதிர்ப்பு

இருந்ததாலும் அவரது மசோதா தோல்வியைக் கண்டது. இதன் பேரில் இளைய பிட் மன்னரை அணுகிப் பொதுமக்கள் அவையைக் கலைத்துப் பொதுத்தேர்தலுக்கு வகை செய்யுமாறு பரிந்துரைத்தார். இது மன்னரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விரைவில் தேர்தலும் நடத்தப்பட்டது. இத் தேர்தலை, இந்திய விவகாரங்கள் குறித்து ஜனநாயக முறையின் அடிப்படையில் இங்கிலாந்தில் நடந்த முதற் பெரும்தேர்தல் என்று கூறலாம். ஏனெனில் இத் தேர்தலில் தமது குறிக்கோள்களையும், கொள்கைகளையும் மையமாக வைத்து இளைய பிட் பெரும் வெற்றியைப் பெற்றார். தேவையான பெரும்பலத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்டு, இளைய பிட் மீண்டும் தமது அமைச்சரவையை அமைத்தார். அதன்பின், மேற்கூறிய தேர்தல் நடப்பதற்குக் காரணமாயிருந்ததும், ஃபாக்ஸ்—நார்த் ஆகியோரின் எதிர்ப்பால் தோற்கடிக்கப்பட்டிருந்ததுமான தமது இந்திய மசோதாவை இயக்குநர்கள் மன்றத்தின் ஆட்சேபனைகளைக் குறைக்கும் வகையில் உரிய சில மாற்றங்களைச் செய்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இம் மசோதா பாராளுமன்றத்தின் ஈரவைகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேறி, 1784ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் அரசரின் கையொப்பத்தைப் பெற்றபின் பிட் இந்தியச் சட்டமாக மலர்ந்தது.

மேற்கூறியவாறு நிறைவேற்றம் கண்ட பிட் இந்தியச் சட்டம் இயற்றப்படுவதற்கு நாம் சென்ற அதிகாரத்தில் கண்டுள்ள செய்திகளே பெருங்காரணமாக இருந்தன. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேரடியானதும், என்றென்றும் தொடர்ந்திருப்பதுமான கட்டுப்பாட்டிற்குக் கிழக்கிந்தியக் கம்பெனியை உட்படுமாறு செய்த முக்கியத்துவமும் நற்பயனும் இச் சட்டத்தின்மூலம் கிடைக்கப்பெற்றன. அதே நேரத்தில், கம்பெனியின் பங்குதாரர்கள், உடைமையாளர்கள் இயக்குநர்கள் போன்ற யாவரது எதிர்ப்பையும் பெற்றிருந்த ஃபாக்ஸின் மசோதாவில் சொல்லப்பட்டிருந்த செய்திகள் பலவும் வெகு புத்திசாலித்தனமாகப் பிட் இந்தியச் சட்டத்தில் விலக்கப்பட்டிருந்தன. மேலும் கம்பெனியின் அடிப்படையான அரசியல் அமைப்பைத் (constitution) தீவிரமான மாற்றத்திற்கு உட்படுத்திவிடாது, கண்மூடித்தனமாகக் கம்பெனி பெற்றிருந்த புரவு அல்லது ஆதரவுச் சலுகையை (patronage) அரச நிறுவனத்திற்கு (crown) மாற்றம் செய்யாமல், காலத்தின் தேவைக்கேற்பத் தமது மசோதாவைப் பிட் அவர்கள் புனைந்ததற்கு ஒழுங்குமுறைச் சட்டத்தின் செயற்பாடு, ஃபாக்ஸின் மசோதாவைப்பற்றிய பாராளுமன்ற விவாதங்கள், திறனாய்வுகள் போன்ற யாவும் வெகுவாகத் துணை புரிந்தன.

எனவே, கம்பெனியின் உரிமைகள் நசுக்கப்படாமலும், அதன் காரியங்களின்மீது பாராளுமன்றத்தின் துடிப்பான கட்டுப்பாட்டைப் படிப்படியாகச் செலுத்துவதற்கு அடித்தளத்தை அமைத்துக்கொடுக்கும் வகையிலும், கம்பெனியின் இந்திய அரசாங்க முறையில் நயமிக்க மாற்றத்தைத் தோற்றுவிக்கும் வகையிலும் இம் மசோதா அமைந்திருந்தது. எனவேதான், அஃது எவ் வின்னலுமின்றி, பிட் இந்தியச் சட்டமாக நிறைவேற்றம் கண்டு செயற்பாட்டிற்கு வந்தது. சுருங்கக்கூறின் கிழக்கிந்தியக் கம்பெனியை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேரடியான கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரவேண்டியிருந்த அவசரத் தேவை அன்று இருந்தது. அத் தேவையை நிறைவேற்றும் அடிப்படையில் கம்பெனியின் இந்திய அரசாங்கம்பற்றிய பல ஏற்பாடுகளையும் அம்சங்களையும் இச் சட்டம் கொண்டிருந்தது. இவை யாவற்றையும் நமது மனத்தில் நிலை நிறுத்திக்கொண்ட பின்னரே பிட் இந்தியச் சட்டத்தின் பலவிதமான கூறுகளையும் ஏற்பாடுகளையும் நாம் கண்ணுறவேண்டும். ஏனெனில் இச் சட்டத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்ட அரசாங்கம் மற்றும் ஆட்சி அமைப்புகள், முறைகள் போன்ற யாவும் 1858-ல் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடிப் பொறுப்பிற்கு மாற்றப்பட்ட காலம்வரை செயலில் இருந்தன. இத்தகைய முக்கியத்துவத்தையும் சிறப்பையும் பெற்றிருந்த பிட் இந்தியச் சட்டத்தின் அம்சங்கள் யாவும் பின் வருமாறு.

கம்பெனியின் தாய்நாட்டு அல்லது தலைமை இடத்து அரசாங்கத்தைப்பற்றிய ஏற்பாடுகள்

முன்னொரு இடத்தில் வலியுறுத்திக் கூறியிருப்பதைப்போல் பாராளுமன்றத்தின் நேரடியான கட்டுப்பாட்டின்கீழ்க் கிழக்கிந்தியக் கம்பெனியின் நடவடிக்கைகள், காரியங்கள், சட்டதிட்டங்கள் போன்ற யாவும் கொண்டுவரப்படவேண்டிய அவசியம் 1784-ல் உறுதிசெய்யப்பட்டது. இதன் விளைவாகக் கம்பெனியின் தலைமை இடத்து அரசாங்கத்தில் (Home Government) பின்வரும் புதிய ஏற்பாடுகளும், பழையனவற்றில் புதிய மாற்றங்களும் பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் செய்யப்பட்டன. பேராசிரியர் டாட்வெல் எழுதியிருப்பதைப் போல் ‘ஆரம்பத்தில் பிரிட்டிஷ் அமைச்சவைக் குழு (Cabinet Committee) ஒன்று அமைக்கப்பட்டு, அதன் இயக்கம், கட்டுப்பாடு, மேற்பார்வை ஆகியவற்றின்கீழ்க் கம்பெனியின் தலைமை அரசாங்கத்தைக் கொண்டுவரவேண்டும் என்று திட்டமிடப்பட்டது.’ ஆனுல், அத் திட்டம் கைவிடப்பட்டு, அதற்குப் பதிலாகக் கம்பெனியின் உடைமையாளர்கள் மன்றத்தை மாற்றியமைக்கும் வகையில் கட்டுப்பாட்டு வாரியம் (Board of Control) நிறுவப்பட்டது. இயக்குநர்கள் வாரியம்

என்று அழைக்கப்பட்டுவந்தது, இயக்குநர்கள் மன்றம் (Court of Directors) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அதிலும் சில புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவை யாவும் பின்வருவன வாகும்.

கம்பெனியின் இந்திய விவகாரங்களையும்: அலுவல்களையும் இங்கிலாந்தின் தலைநகரான இலண்டனிலிருந்து, அதன் உயர் அதிகார அமைப்பொன்றின்மூலம் மேற்கொள்ளும் வகையிலும், அதன் காரியங்கள் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குக் (parliamentary control) காலம், இடம் ஆகியவற்றுல் எளிமையாய் இலக்காகும் வகையிலும், ஆறு ஆணையர்களைக் கொண்டதாய் ஒரு வாரியம் இச் சட்டத்தின்மூலம் அமைக்கப்பட்டது. அவ் வாரியமே கட்டுப்பாட்டு வாரியம் எனப்பட்டதாகும். இஃது ஆறு ஆணையர்களைக் (commissioners) கொண்டதாய் அமைக்கப்பட்டது. இந்த ஆறு ஆணையர்களான உறுப்பினர்கள் முறையே அரசுச் செயலாளர் (Secretary of State), கருவூல வேந்தர் (Chancellor of The Exchequer), அரசப் பேரவையைச் சேர்ந்த (Privy Council) உறுப்பினர்கள் நால்வர் ஆகியோராவர். இவ் வுறுப்பினர்கள் யாவரும் அரசரால் நியமனம் செய்யப்பட்டனர். அரசரால் விரும்பப்படும் காலம் வரை அல்லது அவரது மனநிறைவிற்குக் குந்தகம் ஏற்படாது பணியாற்றும் காலம் வரையில் அதிகாரத் திலிருக்குமாறு அவர்களின் பதவிக்காலம் (Tenure) நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த ஏற்பாடுகளின்மூலம், ஃபாக்ஸின் மசோதாவில், அதிகமாக விழையப்பட்டிருந்ததைப் போல் அல்லாமல், தனித்தியங்கக்கூடிய சுதந்திரமான ஓர் ஆட்சியமைப் பாகவோ அல்லது ஒரு செயலாட்சி நிறுவனமாகவோ (executive body) உருவாக்கப்படாமல், கட்டுப்பாட்டு வாரியமானது அன்று நடைமுறையில் இருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் இணைக்கப் பட்ட ஓர் ஆட்சி அமைப்பாக உருவாக்கப்பட்டது. இது பிட் இந்தியச் சட்டம் ஏற்படுத்திக்கொடுத்ததும், அன்று மிகத் தேவை யாயிருந்ததுமான அரசாங்க ஏற்பாடுகளுள் முதலாவதும் முக்கிய மானதுமாகும்.

கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆறு உறுப்பினர்களின் ஊதியம், அவர்களின் இதர செலவினங்களைப்பற்றிக் கூறும் வகையில் இச் சட்டம் பின்வரும் ஏற்பாடுகளைத் தெளிவாக்கியது. வாரிய ஆணையர்களுக்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படும் நிதிநிலை அறிக்கையின்மூலம் (budget) ஊதியம் மற்றும் செலவினங்கள் போன்ற யாவும் கொடுக்கப்பட வேண்டும்; ஆனல், அப் பணம் அல்லது தொகை முழுவதும் கம்பெனியின்

இந்திய அரசின் நிதி வருவாய்களிலிருந்தே கொடுக்கப்பட வேண்டும்; அவ்வாறு கொடுக்கப்படும் தொகையின் மதிப்பு 16 ஆயிரம் பவுன்களுக்கு மேலாக இருக்கக்கூடாது என்றும் தெளிவாக்கப்பட்டது.

கட்டுப்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்களில் மிக முக்கிய மானவர்களாய் இருந்தோர் அரசுச் செயலரும் கருவூல வேந்தருமேயாவர். இவர்கள் பிரிட்டிஷ் அமைச்சவை உறுப்பினர்கள் என்ற முறையில் தமக்கெனத் தனிப்பட்ட அமைச்சகங்களையும் நிர்வாக இலாக்காக்களையும் கொண்டிருந்தனர். எனவே, இவர்களின்மூலம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் கம்பெனியின் தலைமை இடத்து அரசாங்கத்திற்கும் இடையே நல்லதோர் தொடர்பு ஏற்பட வழி வகுக்கப்பட்டது.

அரசுச் செயலர் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் எனவும், அவ் வாரியத்தின் அன்றாட வேலைகள் நடைபெறுவதற்குக் குறைந்தபட்ச அங்கத்தினர்களின் எண்ணிக்கை (quorum) மூன்று எனவும் இச் சட்டம் நிர்ணயித்தது.

கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரங்களைப் பொறுத்தவரை, அஃது இந்தியாவையும் உள்ளிட்ட கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்த பிரிட்டிஷ் உடைமைகளின் வருவாய்கள், சிவில் மற்றும் இராணுவ அரசாங்கங்களின் நடவடிக்கைகள், செயற்பாடுகள், உடன்பாடுகள் ஆகிய யாவற்றையும் தன் இயக்கத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்படுத்திக்கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றது.[1] மேலும் இச் சட்டத்தின் நான்காவது பிரிவில் கட்டுப்பாட்டு வாரியத்தில் சம ஓட்டு நிலவரம் (parity of votes) நிலவும்பொழுது, அதன் தலைவர் தமது விருப்ப வாக்கைப் (casting vote) பயன்படுத்தலாம் என்று தெளிவாக்கப்பட்டது.

கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் இயக்குநர்கள் மன்றத்திற்கும் இடையே இனி நிலவவேண்டிய உறவு முறைகள் குறித்தும் பிட் இந்தியச் சட்டம் பின்வரும் ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தது. இவற்றின்படி கட்டுப்பாட்டு வாரியத்திற்குத் தேவையான அல்லது அவ் வாரியத்தால் விழையப்படும் எல்லாச் செய்திகளையும் இயக்குநர்கள் மன்றம் அனுப்பிவைக்கவேண்டும் என்று அடிப்படையாகவும் ஆணித்தரமாகவும் தெளிவுபடுத்தப்பட்டது. தாம் இந்திய அதிகாரிகளிடமிருந்து பெற்ற தீர்மானங்கள்,

[1] Clause III and VI of the East India Company Act 1784.

கட்டளைகள், விளக்கக் குறிப்புகள், எல்லாவிதமான அலுவலக அதிகார சம்பந்தமான செய்திகள் மற்றும் அவற்றின்மீது தாம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் (proceedings) போன்றவற்றின் நகல்கள் யாவற்றையும் இயக்குநர்கள், வாரிய உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று இச் சட்டம் விளம்பியது.

அடுத்து ' இயக்குநர்களால் பிறப்பிக்கப்படும் கட்டளைகளும் அஞ்சல் விடுக்கைகளும் கம்பெனியின் இந்திய அதிகாரிகளுக்கு அனுப்பப்படுவதற்கு முன் கட்டுப்பாட்டு வாரியத்தால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் அல்லது அனுமதிக்கப்படவேண்டும் ' என்றும் முக்கிய ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், அவற்றின் வரைவுகளில் பொருத்தமான மாற்றங்களையோ, தேவையான திருத்தங்களையோ செய்யும் அதிகாரம் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு உண்டு என்றும் இச் சட்டம் கூறியது. மேற்கூறப்பட்ட முடிவுகள், கட்டளைகள் போன்றவை கட்டுப்பாட்டு வாரியத்திற்கு ஏற்புடையனவாக இல்லையென்றால், புதிய ஆணைகளையும் முடிவு களையும் உருவாக்கி அவற்றை இயக்குநர்கள்மூலம் செயல்படுத்தும் செம்மையான அதிகாரம் வாரியத்திற்கு வழங்கப்பட்டது.

குறிப்பிட்ட ஒரு செய்தி குறித்துக் குறிப்பிட்ட ஒரு கட்டளையை அல்லது அஞ்சல் விடுக்கையை இயக்குநர்கள் தயாரித்து அதனை இந்திய அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்குமாறு செய்யக்கூடிய அதிகாரமும் கட்டுப்பாட்டு வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டது. இதனைக் கட்டுப்பாட்டு வாரியத்தால் இயக்குநர்கள் மன்றத்தின்மீது செலுத்தப்பட்ட கட்டுப்பாட்டுச் செயலென்றும் நாம் கூறலாம். இத்தகைய செயலை இயக்குநர்கள் மன்றம் பதினன்கு நாள்களுக்குள் செய்து முடிக்கவேண்டும் என்ற கட்டாய நிலை இயக்குநர்கள் மன்றத்தின்மீது செலுத்தப்பட்டது. இந்த ஏற்பாட்டைப் புறக்கணித்து இயக்குநர்கள் மன்றம் செயற் படக்கூடிய நிலை இருக்குமாயின், தானே அத்தகைய கட்டளையை அல்லது அஞ்சல் விடுக்கையைத் தயாரித்து, அதனை இயக்குநர்கள் மூலம் அனுப்பிவைக்கக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

இரகசியமாகச் சில நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு இயக்குநர் மன்ற உறுப்பினர்களில் மூவரைக் கொண்ட ஒரு குழு இச் சட்டத்தின்மூலம் அமைக்கப்பட்டது. கம்பெனியின் நிர்வாக நடவடிக்கை இரகசியம் பற்றியதான இக் குழுவின்மூலம் இயக்குநர்கள் மன்றத்தின் ஏனைய உறுப்பினர் அறியாதவாறு

கட்டுப்பாட்டு வாரியம் சில இரகசிய இயக்கங்களையும் கட்டளைகளையும் செய்தி அறிவிப்புகளையும், கம்பெனியின் இந்திய அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்க பிட் இந்தியச் சட்டம் வழி செய்தது.

ஃபாக்ஸின் இந்திய மசோதாவில் கோரப்பட்டிருந்ததைப் போன்று தமது விசாலமான மேற்பார்வையைக் கம்பெனியின் விவகாரங்களிலும் நடவடிக்கைகளிலும் மேற்கொள்வதற்குக் கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர்கள் பிட் இந்தியச் சட்டத்தின் மூலம் பொறுப்பைப் பெற்றனர். எனினும், கட்டுப்பாட்டு வாரியத்திற்கு எந்த ஆதரவுச் சலுகையும், புரவு அதிகாரமும் (power of patronage) கொடுக்கப்படவில்லை. கம்பெனியின் இந்தியப் பணியாளர்களைப் பதவிகளில் நியமிக்கவோ, பதவிகளிலிருந்து விலக்கவோ கட்டுப்பாட்டு வாரியத்திற்கு எப்பொறுப்பும் அதிகாரமும் கொடுக்கப்படவில்லை.

கட்டுப்பாட்டு வாரியத்திற்குப் பலவிதமான பொறுப்புகளையும் அதிகாரத்தையும் கொடுத்ததின்மூலம், இதுகாறும் கம்பெனியின் நிர்வாக ஓட்டத்திற்கு உறுத்தல் உளைச்சல்களையும் தொந்தரவுகளையும் கொடுத்துவந்த உடைமையாளர் மன்றத்தின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் முற்றிலும் பிட் இந்தியச் சட்டம் நீக்கியது. இச் சட்டத்தின் இருபத்தொன்பதாம் பிரிவின்படி கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட இயக்குநர்கள் மன்றத்தின் எம் முடிவுகளையும் தீர்ப்புகளையும் மாற்றுவதற்கு உடைமையாளர்கள் மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம் பறிக்கப்பட்டது.

கம்பெனியின் தலைமை இடத்து அரசாங்கத்தில் இருந்த மற்றொரு முக்கிய அமைப்பான இயக்குநர்கள் மன்றத்தைப் பொறுத்தவரை பின்வரும் மாற்றங்கள் பிட் இந்தியச் சட்டத்தின் பொருத்தமான சில ஷரத்துகளின்கீழ்ச் செய்யப்பட்டன. அவற்றின்படி, இயக்குநர்கள் வாரியம் என்றிருந்த பழைய பெயர் 'இயக்குநர்கள் மன்றம்' என மாற்றப்பட்டு, அம் மன்றத்தின் உறுப்பினர்கள் அனுபவித்துவந்த வணிகச் சிறப்பு உரிமைகளை (commercial privileges) மேலும் தொடர்ந்து அனுபவிக்க அனுமதிக்கப்பட்டனர். இந்தியப் பணியாளர்களைப் பதவி நியமனம் செய்யும் இயக்குநர்களின் அதிகாரம் உறுதி செய்யப்பட்டது.

இயக்குநர்கள் மன்றத்தைப் பொறுத்தவரை பிட் இந்தியச் சட்டத்தால் வலியுறுத்தப்பட்டுத் தெளிவாக்கப்பட்ட மற்றொரு

செய்தி என்னவெனில், இயக்குநர்களின் தனிப்பட்ட அதிகாரத்தின்கீழ் இயங்கிக்கொண்டிருந்த கம்பெனியின் சிவில், இராணுவ ஸ்தாபனங்களின் எண்ணிக்கையையும் அவற்றில் பணிபுரியும் அலுவலர்களின் எண்ணிக்கையையும் குறைக்கவேண்டியதன் அவசியத்தை இச் சட்டம் எடுத்துக் காட்டியதாகும். தமது வணிகச் சிறப்புச் சலுகைகளும் உரிமைகளும் முற்றிலும் உறுதிப்படுத்தப்பட்டு, அவை எவராலும் சுருக்கப்படவோ, பறிக்கப்படவோ முடியாத ஏற்பாடு இயக்குநர்கள் மன்றத்திற்குச் செய்து கொடுக்கப்பட்டபோதிலும், தனது உரிமைகளுக்கு வாரியத்தின் செயல் அல்லது நடவடிக்கையின் காரணமாய் ஆக்கிரமிப்பு ஏற்படுமாயின், அதனைத் தவிர்க்கும் வகையில் ஆலோசனைச் சபையுடன்கூடிய அரசருக்கு மேல்முறையீட்டைச் செய்து கொள்வதற்கான அதிகாரம் இச் சட்டத்தின்மூலம் இயக்குநர்கள் மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டது. இறுதியாக, அவ்வப்பொழுது கட்டுப்பாட்டு வாரியத்தால் அனுப்பப்படும் உத்தரவுகள், அறிவுரைகள் (instructions) போன்ற யாவற்றுக்கும் அடங்கிக் கீழ்ப்படிந்து இயக்குநர்கள் இணங்கிச் செயற்பட வேண்டும் என்று இச் சட்டம் தெரிவித்தது.

இத்தகைய ஏற்பாடுகள் பலவற்றின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் அதிகாரம் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மாற்றப்படுவதை இஃது முக்கியக் குறிக்கோளாய்க் கொண்டிருந்தது. எனினும், கட்டுப்பாட்டு வாரியத்திற்கும், இயக்குநர்கள் மன்றத்திற்கும் இடையே இணக்க நிலையை உருவாக்கி, சுணக்கமற்ற சாதனைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற மூலநோக்கின் அடிப்படையில்தான் இதுகாறும் சொல்லப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந் நிலை 1786-ல் வாரியத்தின் நடவடிக்கை மீது ஆலோசனைச் சபையுடன்கூடிய அரசருக்கு இயக்குநர்கள் செய்துகொண்ட ஒரே ஒரு மேல்முறையீட்டைத் தவிர வேறெந்தப் பிணக்கும் அவ் விரு அமைப்புகளிடையே நீண்ட காலத்திற்கு ஏற்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது. எனினும், இவ் விரு நிறுவனங்களின் பலமும் அதிகார நிலையும் பிட் இந்தியச் சட்டத்தின் செயற்பாடு துவங்கிய பின்னர் வெளிப்படலாயிற்று. இவ் விரு அமைப்புகளும் கம்பெனியின் தலைமை இடத்து அரசாங்கத்தில் இரட்டை ஆட்சிமுறையை ஏற்படுத்திக் கொடுத்தது. இவ் விரட்டை ஆட்சிமுறையின் காரணமாக எழுந்த பல செய்திகள் நமக்குப் பிட் இந்தியச் சட்டத்தின் நன்மை தீமைகளை அறிவிப்பனவாகும். ஆனால், அவற்றை அறியும் முன் இச் சட்டம் கம்பெனியின் இந்திய அரசாங்கங்களிலும் பிறவற்றிலும் செய்து கொடுத்த மாற்றங்களை அறிந்து கொள்வது அவசியமாகும்.

கம்பெனியின் இந்திய மைய, மாநில அரசாங்கங்களில் செய்யப்பட்ட மாற்றங்கள்

பிட் இந்தியச் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குக் கம்பெனியின் இந்திய விவகாரங்கள்மீது தனது பரிபூரண கட்டுப்பாட்டைச் செலுத்தும் நிலையைப் பெற்றுத் தந்த போதிலும், நெடுந்தொலைவில் இருந்த இந்திய நாட்டைத் தேவையான அளவிலும், திறமையுடனும் இலண்டனிலிருந்து கட்டுப்படுத்த முடியாது என்பதனை அஃது உணர்ந்திருந்தது. இதனை வில்லியம் பிட்டும் உணர்ந்திருந்தார். எனவே, தேவையும் திறமையும் மிக்க நிர்வாகத்தை இந்தியப் பிரதேசங்களில் மேற்கொள்வதற்கு அவசியமான அதிகாரங்களும், பொறுப்புகளும் வில்லியம் கோட்டையிலிருந்த ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டன. அத்தகைய அதிகாரங்களும், பணிகளும் இச் சட்டத்தின் குறிக்கோளின்படி பிரிட்டிஷ் அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், மேலே குறிப்பிட்ட செய்தியின் காரணமாகக் கம்பெனியின் இந்திய விவகாரங்களைப் பற்றிய கட்டுப்பாட்டு வாரிய ஆணையர்கள், மற்றும் அவர்களின் தலைவர் ஆகியோரது கண்காணிப்பு இயக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் வங்கத்துத் தலைமை ஆளுநருக்கும் அவரது ஆட்சிமன்றச் சகாக்களுக்கும் இச் சட்டத்தின் மூலம் அதிகார ஒப்படைப்பு (delegation) செய்யப்பட்டன. மேலும், இந்திய அரசாங்கம் தங்குதடையின்றிச் செயல்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் ஒழுங்குமுறைச் சட்டத்திலிருந்த பல குறைபாடுகளைப் பிட்இந்தியச் சட்டம் நீக்கியது. வில்லியம் கோட்டையின் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றத்தைப்பற்றிய அடிப்படைச் செய்திகளையும், பிறவற்றையும் முற்றிலும் திருத்திப் பல மாற்றங்களை இச் சட்டம் புகுத்தியது. இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் பிரதேச உடைமைகள் யாவற்றிலும் ஒரே மாதிரியான (uniform) கொள்கையை உறுதிப்படுத்தும் வகையிலும், ஆட்சி அதிகாரப் பொறுப்பை ஒருமைப் படுத்தும் நோக்கிலும் பல திருத்தங்களும், மாறுதல்களும் செய்யப்பட்டன. இந்தியாவிலிருந்த கம்பெனியின் பிரதேச உடைமைகள் ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரின்கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்த கல்கத்தாவை நடுவண் அரசின் இடமாகக் கொண்டு வங்கம், பீகார், ஒரிஸா, சென்னை, பம்பாய் ஆகிய இடங்களைக் கொண்டவையாயிருந்தன என்பதை நாம் அறிவோம். கம்பெனியின் இந்தியப் பிரதேச உடைமைகள், 'பிரிட்டிஷ் உடைமைகள்' (British Possessions) என்று பிட் இந்தியச் சட்டத்தில் முதன் முதலாக அறிவிக்கப்பட்டு அவற்றின் மைய, மாநில அரசாங்கங்களைப்பற்றிய பல மாறுதல்களும் செய்து கொடுக்கப்பட்டன.

இந்தியாவின் நடுவண் அரசாங்கத்தைப் பொறுத்தவரை பிட் இந்தியச் சட்டம் பின்வரும் ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தது. ஒழுங்குமுறைச் சட்டத்தின்கீழ்த் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்ற உறுப்பினரின் எண்ணிக்கை நான்காக நிர்ணயிக்கப்பட்டு, அதன் மூலம் ஏற்பட்ட பல இன்னல்களும், சச்சரவுகளும் முழுமையாகத் தவிர்க்கப்படவேண்டிய அவசியம் முழுமையாக உணரப்பட்டிருந்தது. எனவே, பிட் இந்தியச் சட்டம் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை நான்கிலிருந்து மூன்றாகக் குறைத்தது. இம் மூன்று உறுப்பினர்களில் ஒருவராக இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் படைகளின் முதற்பெரும் படைத் தலைவர் (Commander-in-chief) கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று பிட் இந்தியச் சட்டம் கூறியது. இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றம் தலைமை ஆளுநரின் முனைப்பு மிக்க அதிகாரத்தைத் தன்னுள் பெற்றிருக்குமாறு செய்தது. ஒழுங்குமுறைச் சட்டத்தின்கீழ் இருந்ததைப் போலல்லாது, தலைமை ஆளுநர் தமது ஆட்சிமன்ற உறுப்பினர்களில் ஒருவரைத் தமது பக்கம் வைத்துக்கொண்டும், தமது விருப்பப்படி முனைப்பு மிக்க ஆட்சியை நடத்தத் தேவையான தமது விருப்ப வாக்குச்சீட்டை அளிப்பதற்கான அதிகாரமும் இச் சட்டத்தின் மூலம் மீண்டும் தரப்பட்டு, அவருடைய அதிகாரத்திற்கு முன்பு இல்லாதிருந்த பயனுறுதி மிக்க ஆற்றல் கொடுக்கப்பட்டது.

தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றத்து மூன்று உறுப்பினர்களில் ஒருவராக நியமிக்கப்படும் முதற்பெரும் படைத்தலைவருக்கு அம் மன்றத்தின் தலைமை ஆளுநருக்கு அடுத்த இடத்தை வகிக்கக்கூடிய வசதி செய்யப்பட்டது. ஆனால், இப் பதவிநிலை தலைமை ஆளுநர் ஒருவர் பதவியிலிருக்கும்போதுதான் அவரால் அனுபவிக்கப்பட வேண்டியதாகும்; அல்லது செயலில் இருக்க வேண்டியதாகும் என்பது இச் சட்டத்தில் காணப்பட்ட மிக முக்கியமான செய்திகளுள் ஒன்றாகும். இதனால், ஏதேனும் காரணத்தை முன்னிட்டுத் தலைமை ஆளுநரின் பதவி காலியாய் இருக்கும் பொழுது, தலைமை ஆளுநருக்கு அடுத்த நிலை அவரது ஆட்சிமன்றத்தில் முதற்பெரும் படைத்தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அவரால் தலைமை ஆளுநரின் இடத்தில் அமர்ந்து செயல்பட முடியாது என்று விளக்கப்பட்டது. மாறாக, மேற்சொல்லப்பட்ட சூழ்நிலையில் முதற்பெரும் படைத்தலைவரை அல்லாத ஏனைய இரு மன்ற உறுப்பினர்களுள் முதுநிலை உறுப்பினரே (Senior member) காலியாய் இருக்கும் தலைமை ஆளுநர் பதவிக்குப் புதிதாக ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை, தற்காலிக அல்லது பதிலித் தலைமை ஆளுநராகச் (Acting Governor General) செயல் புரிய வேண்டும்

என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இத்தகைய ஏற்பாடு செய்யப் பட்ட காரணம் யாதெனின் பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாடு குறுகிய சிறு காலத்திற்கும்கூட விலக்கப்பட்டதாய் இருக்கக் கூடாது என்று விழையப்பட்டதேயாகும். ஏனெனில், இராணுவ அதிகாரி அல்லது படைத்தலைவர் ஒருவர் ஆட்சி அதிகாரத் தலைவராகும் வாய்ப்பை மிகக் குறைந்த காலத்திற்குப் பெற்றால் கூட, அவர் தம்மை ஒரு சர்வாதிகாரியாக நிலைநிறுத்திக் கொள்ள முடியும் என்று நிலவிய அச்சமேயாகும். இது முற்றிலும் உண்மையே. இத்தகைய வாய்ப்புகள் இருந்ததின் காரணமாகவே, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றுள் இன்றும்கூட இராணுவ ஆட்சிகள் அமைக்கப்பட்டும், செயல்பட்டும் வருகின்றன. அத்தகைய ஆட்சிகளால் நல்லரசியலும், ஆட்சியும், நாடும், மக்களும் நசித்துப் போவதைத் தற்கால அனுபவம் நமக்கு அறிவிக்கின்றது. எனவே, இத்தகைய ஓர் ஆபத்தான நிலை நேரக் கூடாது என்பதற்காகவும், அதே நேரத்தில் கம்பெனியின் இந்தியத் தலைமை அரசாங்கம் இராணுவத் தலைவரின் ஆலோசனை அறிவுரையின் பேரில் இராணுவ நடவடிக்கைகளை நேர்மையுடன் மேற்கொள்ளத் துணை புரியவேண்டும் என்ற நன்னோக்கத்தின் அடிப்படையிலும் முன் யோசனையுடன் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடு செய்யப்பட்டது.

கம்பெனியின் இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் முதற் பெரும் பிரிட்டிஷ் படைத்தலைவர்கள் இருந்தனர். இவர்களுள் கம்பெனியின் வங்கத்துப் படைகளின் முதற்பெரும் தலைவரே ஏனைய படைத் தலைவர்கள் யாவருக்கும் தலைவர் என்று பிட் இந்தியச் சட்டத்தில் தெளிவாக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டின் மூலம் வங்கத்து முதற்பெரும் படைத்தலைவர் ஏனைய மாநிலங் களின் படைத் தலைவர்களுக்கு அறிவுரைகளையும் இராணுவ சம்பந்தமான அறிவிப்புகளையும் கொடுக்கக்கூடிய தலையாய அதிகாரநிலை கொடுக்கப்பட்டது. மேலும், இவர் எந்த ஒரு மாநிலத்திற்கும் ஆய்வின் (inspection) பொருட்டுச் செல்ல நேரும் பொழுது அம் மாநில ஆளுநர் ஆட்சி மன்றத்தில் (Governor's Council) அம் மாநிலத்தின் சம்பந்தப்பட்ட படைத் தலைவரின் நிலையில் பங்கேற்க வசதி செய்யப்பட்டது. இத்தகு சூழ்நிலையில் அம் மாநிலத்தின் சம்பந்தப்பட்ட படைத்தலைவரும் ஆளுநர் ஆட்சிமன்றத்தில் பங்கேற்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டது; ஆனால், அவர் அத்தகைய நிலையில் ஆளுநர் ஆட்சிமன்றத்தில் நடைபெறும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள முடியாதென்று விதிக்கப்பட்டது. இப் புதிய ஏற்பாட்டின்மூலம் கம்பெனியின் இந்தியத் தலைமை அரசாங்கம் போர் மற்றும் இராணுவச் செயல்

களில் மாநில அரசாங்கங்கள்மீது கண்காணிப்பையும் கட்டுப்பாட்டையும் மேற்கொள்ளும்படியான வசதி செய்யப்பட்டது.

வங்கத்துத் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் நியமனத்தைப் பொறுத்தவரை இதுகாறும் பின்பற்றப்பட்ட வழக்கம் கொடுமையான தோல்வியைக் கொடுப்பதாய் இருந்தது. குறிப்பாக, தலைமை ஆளுநர் மற்றும் மாநில ஆளுநர்களின் ஆட்சி மன்றங்களுக்கு இங்கிலாந்திலிருந்தே செய்யப்பட்ட நியமனங்களைப்பற்றிய புதிய வழக்கம் முனைப்பற்றதாய் இருந்தது. அப்பதவிகளுக்கு இங்கிலாந்தில் செல்வாக்கைப் பெற்றிருந்த எவரும் நியமிக்கப்படலாம் என்ற நயமற்றநிலை, பயமற்ற போக்கில் பின்பற்றப்பட்டு வந்தது. இக் குறையை அல்லது தீமையைத் தவிர்க்கும் வகையில் பிட் இந்தியச் சட்டத்தின்கீழ், இனிமேல் அத்தகைய உறுப்பினர்கள் யாவரும் கம்பெனியின் ஒப்பந்தப் பணியாளர்களிலிருந்தே[1] பொறுக்கியெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்படவேண்டும் என்ற நியதி நிலைநிறுத்தப்பட்டது. இதன் மூலம், கம்பெனியின் இந்திய அரசாங்கத் தலைமை ஆளுநர் மற்றும் மாநில ஆளுநர் மன்றங்களின் உறுப்பினர் பதவிகள் யாவும் சந்தைப் பொருள்களாகக் கருதப்பட்டுவந்த நிலை நீக்கப்பட்டது.

தலைமை ஆளுநரின் நியமனத்தைப் பொறுத்தவரை கம்பெனியின் இயக்குநர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம் இச் சட்டத்தின்மூலம் மறுக்கப்படவோ, குறைக்கப்படவோ இல்லை. ஆனால், இனிமேற்கொண்டு கம்பெனியின் இயக்குநர்களால் செய்யப்படவிருக்கும் தலைமை ஆளுநரின் பதவிக்கான நபரின் தேர்வும், அவரது நியமனமும் முன்கூட்டியே பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே செய்யப்படவேண்டும் என்று இச் சட்டத்தின்மூலம் தெளிவாக்கப்பட்டது. ஆனால், தலைமை ஆளுநரின் ஆட்சிமன்ற உறுப்பினர்கள், மாநில ஆளுநர்கள், மற்றும் அவர்களுடைய ஆட்சிமன்றங்களின் உறுப்பினர்களின் நியமனத்தைப் பொறுத்தவரை மேற்கூறிய முறை பின்பற்றப்பட வேண்டியதில்லை என்று பிட் இந்தியச் சட்டம் தெளிவாகக் கூறியது. எனினும், தலைமை ஆளுநர் மற்றும் மாநில ஆளுநர்களைத் தான் விரும்பும் எக் காரணத்தை முன்னிட்டும் பிரிட்டிஷ் அரச நிறுவனம், குறிப்பாகக் கூறவேண்டுமாயின் பிரிட்டிஷ் பேரரசர் திருப்பி அழைக்கலாம் (recall) என்றும் இச் சட்டம் கூறியது.

[1] Covenanted Servants.

கம்பெனியின் இந்திய அரசாங்கங்களின் தலைமை ஆளுநர் மற்றும் மாநில ஆளுநர்கள் போன்ற உயர் அலுவலர்கள் யாவரும் இனி எழுத்துமூலமாகச் சமர்ப்பிப்பதன் மூலமே தத்தம் பதவிகளை இராசினுமா செய்யமுடியும் என்ற கட்டாய விதி இச் சட்டத்தின்மூலம் விதிக்கப்பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸின் இராசினுமாவைப் பற்றிய 1777ஆம் ஆண்டின் கசப்பான அனுபவம் மீண்டும் தொடரக்கூடாது என்ற நோக்கத்தின் அடிப் படையில் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடு பிட் இந்தியச் சட்டத்தின் மூலம் செய்துகொடுக்கப்பட்டது.

ஒழுங்குமுறைச் சட்டத்தின்கீழ்த் தலைமை ஆளுநரும், மாநில ஆளுநர்களும் போர் மற்றும் உடன்படிக்கை செய்துகொள்ளுதல் பற்றிய விவகாரங்களில் பல தீவிர கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப் பட்டிருந்த போதிலும், அவர்கள் இந்தியச் சுதேசிச் சக்திகளுடனும் அரசுகளுடனும் விரும்பத் தகாத வகையில் பொருத்தமில்லாத நிலையில் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டவண்ணம் இருந் தனர். இத்தகைய நிலை;. அடக்கமாக வாழ்ந்து வந்தவர்களை அடக்கியொடுக்கி ஏகாதிபத்திய முறையில் அடங்கிப் போகுமாறு செய்த கம்பெனியின் இந்திய அதிகாரிகளின் கனிவற்ற ஆணவப்போக்கையே வெளிப்படுத்தியது. மேலும், தலைமை ஆளுநரை உதாசீனம் செய்து, தரம்கெட்ட போர்ச் செயல்களை மேற்கொண்ட கம்பெனியின் மாநில அரசாங்கங்களின் போக்கும் இதன்மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இத்தகைய தீய செயல்களை அகற்றும் வகையில் பிட் இந்தியச் சட்டமானது 'இயக்குநர்கள் மன்றத்தின் இரகசியக் குழுவின் உறுதியான அனுமதியைப் பெறுமல் தனது ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநர் எவ் விந்தியச் சுதேசிச் சக்தி அல்லது அரசின் மீதும் போர்ப் பிரகடனத்தைச் செய்யக்கூடாது' என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அதை மீறி மேற்கொள்ளப்படும் செயல்கள் யாவும் இங்கிலாந்து அரசாங்கத்தின் கொள்கை, மதிப்பு, விருப்பும் ஆகியவற்றுக்குப் புறம்பானவையாய் அமையும் என்று உணரப் பட்டிருந்ததாலும், இந்தியாவில் தமது குடியேற்றங்களை விரிவு படுத்துவதும் நாடு பிடிக்கும் படையெடுப்புகளைப்பற்றிய திட்டங் களை மேற்கொள்ளுவதும் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப் பட்டதின் அடிப்படைக் குறிக்கோளுக்குப் புறம்பானதென்று கருதப்பட்டதாலும் மேற் சொல்லப்பட்ட ஏற்பாடு பிட் இந்தியச் சட்டத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது.

அதே நேரத்தில் போர் மற்றும் உடன்படிக்கைகள் பற்றிய செய்திகளில் அல்லது செயல்களில் வங்கத்துத் தலைமை அரசாங்கத் திற்கும் மற்ற மாநிலத்திற்கும் இடையே நிலவ வேண்டியிருந்த

உறவையும், செயற்பாட்டையும், வேலைமுறைக் கட்டுப்பாட்டையும் இச் சட்டம் தெளிவுபடுத்தியது. இதன்படி வங்கத்துத் தலைமை ஆளுநரும் அவரது ஆட்சிமன்றமும் கம்பெனியின் மற்ற மாநிலங்கள்மீது இதுகாறும் செலுத்திவந்த அதிகாரமும் கட்டுப்பாடும் இச் சட்டத்தின்மூலம் மேலும் வலுப்படுத்தப்பட்டன. இதன்படி, நிதி அல்லது வருவாய்த்துறைகள் மட்டுமன்றிப் போர், அமைதி, மற்றும் உடன் படிக்கை போன்ற துறைகளிலும் சுதேசி அரசுகளுடன் மாநில அரசாங்கங்கள் யாவும் ஆலோசனை மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரின் மேற்பார்வை, இயக்கம், கட்டுப்பாடு ஆகிய நிர்வாக நெறிகளுக்கு உட்பட்டே நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், எதிர்பாராத நிர்ப்பந்தம் அல்லது அவசரத்தின் காரணமாகவும், பேராபத்தின் காரணமாகவும் கம்பெனியின் மாநில அரசாங்கங்கள் சுதேசி அரசுகளுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள வேண்டியிருக்குமாயின் அத்தகைய உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் யாவும் தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சி மன்றத்தால் ஒப்புக்கொள்ளப்படவேண்டும் என்றும் இச் சட்டம் கூறியது.

இருப்பினும் தலைமை ஆளுநரோடு கூடிய ஆட்சிமன்றத்திற்குத் தெரியாமல் இயக்குநர் மன்றத்திடமிருந்து பெறப்படும் உத்தரவுகளுக்கு ஏற்ப, நெருக்கடி காலங்களில் மாநில அரசுகள் மைய அரசின் கட்டளைகளைப் புறக்கணித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற பழைய ஏற்பாடு இச் சட்டத்தின்மூலம் அகற்றப்படவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது. ஆனால், நெருக்கடி நிலையில் மாநில அரசாங்கங்கள் இயக்குநர்களிடமிருந்து பெறும் கட்டளைகள், உத்தரவுகள் போன்றவற்றை மைய அரசாங்கத்திற்கு உடனடியாக அனுப்பிவைத்து அதன் இயக்க ஆலோசனைகளைப் பெறவேண்டும் என்ற அவசியம் பிட் இந்தியச் சட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டது. மேலும், 'தாம் மேற்கொள்ளும் காரியங்களைப்பற்றிய அலுவலகக் கடிதங்கள், உத்தரவுகள் போன்றவற்றின் நகல்கள் யாவற்றையும் மாநில அரசாங்கங்கள் யாவும் மைய அரசிற்குக் கண்டிப்பாக அனுப்பி வைக்கவேண்டும். அத்தகைய செய்திகளில் மைய அரசு எத்தகைய மாற்றத்தை அல்லது திருத்தத்தை மேற்கொள்ளுமாறு பணித்தாலும் அதனைப் பணிவுடன் ஏற்று அவை செயல்படுத்தப் படவேண்டும்' என்றும் பிட் இந்தியச் சட்டம் மைய, மாநில அரசாங்கங்களுக்கு இடையே நிலவவேண்டிய உறவு நிலையை விளக்கியது. இவ் விளக்கச் செய்தியின்மூலம் அல்லது ஏற்பாட்டு நியதியின்மூலம் இதுகாறும் நிலவிய அகந்தையான நிலை அகற்றப்பட்டு, மைய அரசாங்கத்தின் உயர் அதிகார ஆட்சி அந்தஸ்துத்

தேவைக்கு ஏற்ப, ஒன்றிப்பான முறையில், ஒரு படித்தான கொள்கைப்பிடிப்புடன், இங்குக் காரியங்கள் மேற்கொள்ளப் படவேண்டும் என்ற நன்னியதியைப் பிட் இந்தியச் சட்டம் நிலை நிறுத்தியது.

இதுகாறும் முதற் பெரும் படைத்தலைவரின் பதவிக்குக் கீழான எல்லா இராணுவப் பதவிகளுக்கும், இயக்குநர் மன்ற உறுப்பினர் களின் அதிகார எல்லைக்கு உட்பட்டிருந்த சிவில் பணித்துறைப் பதவிகளுக்கும் முதுநிலை நியதியின் அடிப்படையில் பதவி உயர்வு செய்யப்படவேண்டும் என்று பிட் இந்தியச் சட்டம் தெளிவாக்கிக் கம்பெனியின் இந்தியப் பணித்துறைகளில் பின்பற்றப்பட்டு வந்த ஆதாயக் கொள்கை முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஆனால், குறிப்பிட்ட சில சமயங்களில் (special cases) பணித்துறை நிய மனங்கள் குறித்துச் சம்பந்தப்பட்ட கம்பெனியின் இந்திய அரசாங்க அலுவலர்கள்மூலம் இயக்குநர் மன்றம் அறிவிக்கப்பட வேண்டும் என்று பிட் இந்தியச் சட்டமூலம் விதிக்கப்பட்டது.

கம்பெனியின் இந்திய மாநில அரசாங்கங்களைப் பொறுத்த வரை பிட் இந்தியச் சட்டம் பின்வரும் ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தது. கம்பெனியின் இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் ஆளுநரும், மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனை ஆட்சி மன்றமும் இருக்கவேண்டும் என்று பிட் இந்தியச் சட்டம் கூறியது. தலைமை ஆளுநர் ஆட்சிமன்றத்தில் செய்யப்பட்ட ஏற்பாட்டைப் போலவே மாநில ஆளுநர் ஆட்சிமன்றத்திலும் அம் மாநிலத்தின் முதற் பெரும் படைத்தலைவர் ஆளுநருக்கு அடுத்த நிலையில் அங்கம் வகித்துக் கட்டாய உறுப்பினராக இருக்க வேண்டும் என்று வகை செய்யப்பட்டது. ஏனைய இரு உறுப்பினர் கள் கம்பெனியின் ஒப்பந்தப் பணியாளர்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டு நியமனம் செய்யப்படவேண்டும். மாநில ஆளுநர் மற்றும் அவருடைய ஆட்சிமன்ற உறுப்பினர்கள் யாவரும் கம்பெனி யின் இயக்குநர்களால் நியமனம் செய்யப்படவேண்டும் என்று மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது. ஆனால், நாம் முன்பே அறிந்திருப் பதைப் போல், 'மாநில ஆளுநர் அல்லது ஆளுநர்களை அவர்தம் பதவிகளிலிருந்து திருப்பி அழைக்கவோ, அல்லது அவர்களைப் பதவி யிலிருந்து நீக்கவோ அரசர் ஒருவருக்குத்தான் அதிகாரம் உண்டு' என்றும் பிட் இந்தியச் சட்டம் தெளிவாக்கியது.

முன்னரே கூறியது போன்று, கம்பெனியின் இந்திய மாநில அரசாங்கங்கள் யாவும் ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரின் முழுமையான அதிகாரத்துடன்கூடிய இயக்கத் திற்கும் மேற்பார்வைக் கட்டுப்பாட்டிற்கும் கீழ்ப்படிந்து செயல்

படுமாறு செய்யப்பட்டன. தாம் எடுக்கும் முடிவுகள், மேற்கொள்ளும் நடவடிக்கைகள் போன்றவைபற்றிய செய்திகளின் உண்மை நகல்களையும் இயக்குநர்களின் தனிப்பட்ட உத்தரவுகளின் பேரில் மேற்கொள்ள விருக்கும் காரியங்களைப் பற்றிய செய்திகளையும் மைய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கங்கள் அவ்வப்போது அறிவித்து, அதன் இயக்க அறிவுரைகளுக்கு ஒப்பச் செயல்பட வேண்டும் என்ற ஏற்பாடும் இதன்மூலம் செய்யப்பட்டது. இவையன்றி ஒரு மாநிலத்தின் ஆளுநர் மற்றும் அவரது ஆட்சி மன்றத்தினர் மைய அரசிற்குக் கீழ்ப்படியாமல் அடங்காத தன்மையுடன் பொறுப்பற்றுச் செயல்படுவார்களாயின் அவர்கள் யாவரும் தற்காலிகப் பதவி நீக்கத்திற்கோ (suspension) அல்லது பதவி விலக்கலுக்கோ உட்படுத்தப்படுவர் என்றிருந்த பழைய ஏற்பாட்டைப் பிட் இந்தியச் சட்டம் மீண்டும் நிலை நிறுத்தி உறுதிப்படுத்தியது.

ஒழுங்குமுறைச் சட்டத்தைத் தொடர்ந்து பிட் இந்தியச் சட்டம் ஒருமுக அமைப்பைக் கம்பெனியின் இந்திய அரசாங்கங்களில் நல்லமுறையில் மேலும் தேர்ச்சியுறுமாறு செய்தது என்பதை நாம் இதுகாறும் கண்டுள்ள செய்திகள் நமக்குத் தெளிவாக்குகின்றன. இனிக் காணவிருக்கும் பொதுவான சில செய்திகளும் அதைத் தெளிவாக்குவனவாய் உள்ளன. ஆங்கிலேய நபாபுகளின் செயல்களையும், நடவடிக்கைகளையும் நன்னயப்படுத்திக் கட்டுப்படுத்தும் வகையில் பிட் இந்தியச் சட்டம் கம்பெனியின் இந்திய அதிகாரி எவரும் வெகுமதி அல்லது சன்மானம் எதைப் பெற்றாலும் அல்லது அதைக் கோரினாலும் அவர்களுடைய செயல் 'அச்சுறுத்திப் பணம் பறிக்கும் சட்டத்திற்குப் புறம்பான செயல்' என்று கருதப்படுவதோடன்றி, அச் செயலுக்குரிய நடவடிக்கை அவர்மீது எடுக்கப்பட்டுப் பொருத்தமான தண்டனை 'கொடுக்கப்படும் என்றும் பிரகடனப்படுத்தியது. இந்த ஏற்பாட்டின்மூலம் ஆதாயக் கொள்ளை யடித்து வந்த ஆங்கிலேய அதிகாரிகளின் நியாயமற்ற செயல்கள் அகற்றப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 'கம்பெனியின் இந்தியப் பணித்துறையில் பணிபுரிந்து இங்கிலாந்திற்குத் திரும்பக்கூடிய எவ் வதிகாரியும் அவர் ஈட்டியுள்ள பொருள்கள் அல்லது செல்வங்களைப்பற்றிய உண்மை அறிக்கையைப் பிரிட்டிஷ் அரசிற்குச் சமர்ப்பிக்கவேண்டும்' என்ற கட்டாயத்திற்குக் கம்பெனியின் பணியாளர்கள் உள்ளாக்கப்பட்டனர். தீர்ப்பு மன்றம் வழங்கும் தண்டனையின் காரணமாகத் தமது பணியில் இருந்து நிரந்தரமாக விலக்கப்படும் எப் பணியாளரையும் அவர் முன்னர் வகித்துவந்த பதவிக்கு மீண்டும் நியமிக்கவோ, அல்லது அவரை விடுதலை செய்யவோ கம்பெனியின் எவ் வதிகாரிக்கும் அதிகாரம் கிடையாது என்று பிட் இந்தியச் சட்டத்தில் பொருத்த

மான ஏற்பாடு செய்யப்பட்டது. உடல் நலமின்மை போன்ற காரணத்தைத் தவிர வேறு எக் காரணத்தை முன்னிட்டும் கம்பெனியின் பணியாளர் ஒருவர் ஐந்தாண்டுகளுக்கு வேலைக்கு வராமல் இருந்தால் அவரை இயக்குநர்கள் மன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கினர் ஏற்றுக்கொண்டாலொழிய, அவர் மீண்டும் பதவியில் அமர்த்தப்படக் கூடாது என்றும், கம்பெனியின் இந்திய அரசின் பணித்துறையைப்பற்றிய எப் பேரமும் (bargain), இயக்குநர்களின் கட்டளைகளுக்கும், உத்தரவுகளுக்கும் கீழ்ப்படியாத எச் செயலும் சட்டப்படிக் குற்றமான செயல்கள் என்று கருதப்பட்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இச் சட்டத்தின்மூலம் நிலை நிறுத்தப் பட்டன. இத்தகைய செயல்களையும் அச்சுறுத்திப் பணம் பறிக்கும் செயல்களையும் விசாரிப்பதற்கெனத் தனிப்பட்ட ஒரு நீதிமன்றம் நியமிக்கப்படவேண்டும் என்றும் அந் நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகளும் நான்கு பிரிட்டிஷ் பிரபுக்களும் (Peers), பிரிட்டிஷ் பாராளுமன்றப் பொதுமக்கள் அவையின் ஆறு உறுப்பினர்களும் இருக்கவேண்டும் எனவும் ஏற்பாடு செய்யப்பட்டது. காலத்தாலும், கம்பெனியின் இந்தியப் பணியாளர்கள் ஆற்றி வந்த செயல்களின் தன்மையாலும் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடு மிக முக்கியமானதாக இருந்தது. ஏனெனில், இத்தகைய ஏற்பாட்டின்மூலம் கம்பெனிப் பணியாளர்களின் செயல்களும், செயற்பாடுகளும் அச்சத்துடனும், நேர்மையுடனும் மேற்கொள்ளப்படுவதற்கான வழிவகை செய்யப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இவ் வேற்பாடு 1786-ல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்மூலம் திருத்தப்பட்டுவிட்டது. 'பிரிட்டிஷ் அரசரின் குடிகள் யாவரும், அவர்கள் கம்பெனின் இந்தியப் பணித்துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இல்லாவிடினும் அவர்கள் யாவரும் தாம் இந்திய அரசைச் சார்ந்த பகுதிகளில் புரியும் குற்றத்திற்கும், இங்கிலாந்து மற்றும் இந்தியாவிலிருந்த நீதிமன்றங்களின் அதிகார எல்லைக்கும், அந் நீதிமன்றங்கள் வழங்கும் தண்டனைகளுக்கும் உட்படுபவர்களாவர்' என்று பிட் இந்தியச் சட்டம் வலியுத்தியது. சந்தேகத்திற்கு இலக்கான நிலையில், சட்டத்திற்குப் புறம்பாகக் கம்பெனியின் அதிகாரிகளுடன் நேர்மையற்ற உறவுகளைக் கொள்ளக்கூடிய எவரையும், அவர் எந்த ஐரோப்பிய ஸ்தாபிதங்களைச் சேர்ந்தவராயிருப்பினும், அல்லது எவ் இந்திய அரசைச் சார்ந்தவராயிருப்பினும் அவரைச் சிறைபிடிப்பதற்கான சிறப்பதிகாரங்கள் தலைமை ஆளுநருக்கும் மாநில ஆளுநர்களுக்கும் இச் சட்டத்தின்மூலம் கொடுக்கப்பட்டன. ஆனால், அவ் வதிகாரங்கள் செயல்படுத்தப்பட்டனவாகத் தெரியவில்லை.

15. பிட் இந்தியச் சட்டத்தைப்பற்றிய ஒரு திறனாய்வும், அதன் செயற்பாட்டின்மூலம் வெளிப்பட்ட அரசாங்கச் செய்திகளும், முக்கியத்துவமும்

ஃபாக்ஸின் இந்திய மசோதாவைப் பெருமளவில் ஒத்திருந்த பிட் இந்தியச் சட்டம், கம்பெனியின் பொது விவகாரங்களை (public affairs) பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தவேண்டுமென்ற அச் சட்டவரைவின் கருத்தைத் தன் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதன் பிரதேச உடைமைகளைப்பற்றிய உரிமை எந்த அளவிற்கு மேலும் வழங்கப்பட்டது, அல்லது இதுகாறும் இருந்ததை உறுதிப்படுத்தியது என்பவை குறித்து ஃபாக்ஸின் இந்திய மசோதாவைப் போலவே பிட் இந்தியச் சட்டமும் உறுதியாகத் தீர்மானிக்காமல் விட்டிருந்தது. ஆனால், ஃபாக்ஸின் இந்திய மசோதாவில் கையாளப்படாதிருந்த சூழ்ச்சித் துணிவுகள் (tactics) பிட் இந்தியச் சட்டத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு வகை செய்யப்பட்டிருந்தது. இதுவே இச் சட்டத்தின் தேர்ச்சியான செயற்பாட்டிற்கு வழிவகை செய்தது எனலாம். மேலும், கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களில் நிலையான ஆட்சி முறையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற வெளிப்படையான குறிக்கோளைக் கொண்டிருந்ததால், பொருத்தமானதும் தேவையானதுமான ஏற்பாடுகளையும், திருத்தங்களையும் இச் சட்டம் செய்தது. எனவே, கம்பெனியின் அரசியலமைப்பில் புரட்சிகரமான அவசர மாற்றத்தை அல்லது திருத்தத்தைச் செய்யாது, கம்பெனி பெற்றிருந்த பேராதரவுச் சலுகையைப் பெருமளவில் கம்பெனியிடமே தங்கியிருக்குமாறு செய்தது. இதன் காரணமாகவே பிட் இந்தியச் சட்டம், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பொறுப்புணர்ச்சி, கிழக்கிந்தியக் கம்பெனியின் உரிமை மற்றும் சலுகை ஆகியவற்றுக்கு இடையே தேவையான சமரச இணக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்

பதாய் அமைந்தது[1] என்று பேராசிரியர் A.B. கீத் கூறியுள்ளார். இக் கூற்றின் உண்மை இச் சட்டம் அமுல் செய்யப்பட்ட முறையில் இருந்து நன்கு புலப்படும்.

கம்பெனியின் தலைமை இடத்து அரசாங்கத்தில் கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம் ஆகிய இரு உறுப்புகளை தேவையான மாற்றங்களுடன் அமைத்துக் கொடுத்ததன்மூலம் இங்கிலாந்திலிருந்த கம்பெனியின் தலைமை ஆட்சி அமைப்பில் இரட்டை அரசாங்க முறையை (Dual Government System) பிட் இந்தியச் சட்டம் ஏற்படுத்திக் கொடுத்தது. இத்தகைய ஏற்பாட்டின் மூலம், கம்பெனியின் காரியங்களும், செயல்களும் அரசியல், நிர்வாகத் தன்மையானவை, வணிக வர்த்தக முறையானவை என்று இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டன. இவற்றில் முற்றிலும் வணிகத் தன்மை வாய்ந்த பணிகள் யாவும் இயக்குநர்களின் முழுப் பொறுப்பின்கீழும், கட்டுப்பாட்டின்கீழும் விடப்பட்டன. கம்பெனியின் அரசியல் மற்றும் ஆட்சிப் பணிகளின் பொறுப்பைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கட்டுப்பாட்டு வாரியத்தின்கீழ் விடப் பட்டது. கட்டுப்பாட்டு வாரியம் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் பிரதிநிதியாகவும், இயக்குநர்கள் மன்றம் கம்பெனியின் பிரதிநிதியாகவும் விளங்கின. எனவே, இலண்டன் மாநகரில் இருந்த கம்பெனியின் தலைமை ஆட்சி அமைப்பில் இரட்டை அரசாங்க முறையானது கம்பெனியின் உடைமைகள், உரிமைகள் ஆகியவை பற்றிய சம்பந்தப்பட்ட சக்திகள், பிரிட்டிஷ் அரசாங்கம் ஆகியவற்றிற்கு இடையே இணக்க நிலையைத் தோற்றுவித்தது.

பிட் இந்தியச் சட்டத்தின் அம்சங்களைச் சற்று நுணுக்கமாகவும் கவனமாகவும் ஆராயும்பொழுது, கம்பெனியின் விவகாரங்களில் தனது மேலாண்மையை முழுமையாக நிலைநாட்ட வேண்டும் என்று பாராளுமன்றம் விரும்பியது எளிதில் புலனாகும். பிரிட்டிஷ் அரசாங்கம் நேரிடையாக இந்திய ஆட்சிப் பொறுப்பை ஏற்க முடியாதிருந்ததாலும், அதே நேரத்தில் உண்மையானதும், பயனுறுதி மிக்கதுமான அரசாங்கத்தை இங்குத் தனது கண்காணிப்பு மற்றும் இயக்கத்தின்கீழ் மேற்கொள்ள வேண்டியிருந்ததாலும் தன்னுடன் சம்பந்தப்பட்டவர்களையும் தனக்குப் பொறுப்பானவர்களையும் கட்டுப்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்களாகக்கொண்டு, தனது பெரு விழைவை பிரிட்டிஷ் அரசாங்கம் ஈடேற்றிக்கொண்டது.

1 A. B. Keith, A Constitutional History of India p. 95.

கம்பெனியின் நிதி, சிவில், இராணுவத் துறைகள் பற்றிய பணிகள் யாவற்றையும் கண்காணித்துக் கட்டுப்படுத்தி இயக்கக் கூடிய அதிகாரம் கட்டுப்பாட்டு வாரியத்திற்குக் கொடுக்கப் பட்டது என்பதையும் தமது கட்டளைகளையும் ஆட்சிச் செய்தி களையும் இந்தியாவிற்கு அனுப்பிவைப்பதற்கு (despatches) முன் அவற்றின் உண்மை நகல்களைக் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்பு தலுக்கும் ஏற்பிற்கும் இயக்குநர்கள் மன்றம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதையும் பிட் இந்தியச் சட்டம் அவ் விரு அமைப்புகளுக்கு இடையேயான உறவு நிலையைப்பற்றிக் கூறியது. ஆனால், அந்த உறவு நிலைக்கான நடைமுறைச் செயலைப்பற்றி எதையும் விளக்க வில்லை. எனவே, பிட் இந்தியச் சட்டம் செயற்பாட்டிற்கு வந்த வுடன் அவ் விளக்கம் கிடைத்தது. இதன்படி இந்தியாவிற்கு அனுப்பப்பட இருந்த ஆட்சிச் செய்தி முதலில் தனிப்பட்ட கடிதப் போக்குவரத்தின்மூலமும் அல்லது சாதாரண வாய்மொழிப் பேச்சு மூலமும் கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம் ஆகிய வற்றின் தலைவர்களால் (chairmen) விவாதிக்கப்பட்டது. அதன் பிறகு, அது பொருத்தமாகப் புனையப்பெற்று, அதற்குத் தேவை யான ஆவணங்களுடன் (documents) வாரியத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இக்கட்டம் வரையிலான (stage) நடை முறை 'முற்செய்தியறிவிப்பு' (previous communication) என்று கூறப்பட்டது. இயக்குநர் மன்றத்திடமிருந்து அலுவலக ரீதியாக இந்தியாவிற்குச் செல்வதற்கான ஆட்சிச் செய்தியை வாரியத் தலைவர் பெற்றபின் அதனை அப்படியே ஏற்றுக்கொண்டோ, அல்லது அதில் தேவையான திருத்தங்களைச் செய்தோ அது செயலாக்கம் செய்யப்படத் துணை புரிந்தார். ஆனால், சில சமயங் களில் இயக்குநர் மன்றத்தால் விழையப்பட்ட அடிப்படைக் கருத்தையும் செயலையும் மாற்றியமைப்பதாய் ஆட்சிச் செய்தியின் தன்மையும் வடிவமும் வாரியத் தலைவரால் மாற்றப்பட்டதும் உண்டு.

பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் கட்டுப்பாட்டு வாரியத் திற்குத் துவக்க உரிமை (initiative) அதிகாரம் கொடுக்கப்பட்டு, அதன்மூலம் குறிப்பிட்ட ஒரு பொருள் குறித்து ஓர் உத்தரவையோ, அல்லது ஆட்சிச் செய்தியையோ இயக்குநர்களைத் தயாரிக்குமாறு செய்யக்கூடிய நெறிமுறை உருவாக்கப்பட்டது. அச் செயலைப் பதினான்கு நாள்களுக்குள் இயக்குநர்கள் செய்து முடிக்காமற் போயின் கட்டுப்பாட்டு வாரியமே அதனைத் தயாரித்து இயக்குநர்கள் மன்றத்தின்மூலம் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கவும் வழிவகை செய்யப்பட்டது. மேலும், இயக்குநர்கள் மன்றத்தில் அமைக்கப்பட்டிருந்த இரகசியக் குழுவின்மூலம்

இரகசியமான சில உத்தரவுகளைக் கட்டுப்பாட்டு வாரியம் தானே தயாரித்துக் கம்பெனியின் இந்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து அவற்றைச் செயல்படுத்துவதற்கான அதிகாரம் கொடுக்கப்பட்டது என்பதை நாம் முன்பே கண்டுள்ளோம். இந்த ஏற்பாட்டுச் செயற்பாட்டின்மூலம் வெளிப்பட்ட மிக முக்கியமான செய்தி யாதெனில் இதுகாறும் மிக்க பலம் பெற்றிருந்த உடைமையாளர் மன்றம் தனது முழுச் சக்தியையும் இழந்து இருக்கும் இடம் தெரியாமல் போகும்படி ஏற்பட்ட நிலையாகும். இத்தகைய செயற்பாட்டுச் சூழ்நிலையின் காரணமாக உடைமையாளர்களின் மன்றமானது கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம் ஆகியவற்றின் இடையே எத்தகைய குழப்ப நிலையையும் உருவாக்க முடியாமல் உருக்குலைந்து போயிற்று. மேலும், கட்டுப்பாட்டு வாரியத்தின் இயக்கங்களுக்குக் கட்டுப்படாத நிலையை இயக்குநர்கள் மன்றம் மேற்கொள்ளுமாயின் இயக்குநர்கள் மன்றத்தைத் தனது செயலாக்கக் குறிக்கோளுக்கு உட்படுத்தும் வகையில் அஃது ஆலோசனை சபையுடன்கூடிய பிரிட்டிஷ் அரசருக்கு மேல்முறையீட்டைச் செய்து அதன்மூலம் செயலுறுத்தும் நீதிப் பேராணையைப் பெறக்கூடிய செயற்பாட்டு நிலை வெளிப்பட்டது.

கம்பெனியின் இந்திய அரசாங்கங்களில் தமக்கு வேண்டியவர்களைப் பதவியில் அமர்த்துதல் போன்ற சலுகைகளைப் பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் கட்டுப்பாட்டு வாரியம் பெற்றிருக்கவில்லை. ஆனால், கம்பெனியின் இந்திய அதிகாரிகள் எவரையும் அவரது பதவிகளிலிருந்து திருப்பி யழைக்கக்கூடிய அதிகாரத்தை அது பெற்றிருந்தது. இதன் விளைவு என்னவெனில் கட்டுப்பாட்டு வாரியம் விரும்பாத எவரையும் கம்பெனியின் இந்தியப் பணித் துறையில் இயக்குநர் மன்றம் நியமிக்க முடியாது என்பதாகும்.

பிட் இந்தியச் சட்டத்தின் ஏற்பாட்டையொட்டி மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்ட முறை, கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம் ஆகிய இரண்டிற்கும் இடையே சில சமயங்களில் சச்சரவுகளையும் அல்லது கருத்து வேறுபாடுகளையும், மற்றும் சில சமயங்களில் ஒத்துப்போகக்கூடிய இணக்க நிலையையும் தோற்றுவித்தது. இத்தகைய நிலையால் 1784 முதல் ஏறத்தாழ 70 ஆண்டுகளில் இயக்குநர்கள் அனுப்பிவைத்த கட்டளைகள், ஆட்சிச் செய்திகள் போன்றவற்றில் பாதிக்கு மேற்பட்டவைகளை அப்படியே வாரியம் ஏற்றுக்கொண்டது. அதேசமயம் அது தனக்கு அளிக்கப்பட்டிருந்த திருப்பி அழைக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி இயக்குநர்கள் செய்த பல பதவி நியமனங்களைப் பயனற்றதாகச் செய்தது. எனினும், பெரும்பாலான

செயல்களில் கட்டுப்பாட்டு வாரியம் தனது உச்ச அதிகார நிலையைத் தன் தலைவரின்மூலம் உறுதிப்படுத்துவதைத் தலையாய கடமையாகக் கொண்டது. இதற்குத் துணைபுரியும் வகையில் அமைந்த சில சூழ்நிலைகள் பின்வருமாறு.

ஆறு ஆணையர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கட்டுப் பாட்டு வாரியம், கருவூல வேந்தரின் தலைமையில் செயற்பட வேண்டும் என்று பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் கூறப் பட்டிருந்தது. கருவூல வேந்தர் வாரியக் கூட்டங்களுக்கு வர முடியாத நிலையில் அவ் வாரியத்தின் கூட்டங்கள், வாரியத்தின் மற்றொரு உறுப்பினரான அரசுச் செயலரின் தலைமையில் நடக்க வேண்டும் என்றும் வாரியத்தின் வேலை நியதிமுறை விளக்கப் பட்டிருந்தது. மேற்கூறிய இருவரும் வாரியக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்து அதன் வேலையில் பங்கேற்க வராத நிலையில் ஏனைய உறுப்பினர்களில் முதுநிலையானவராய் இருந்தவர் தலைமை வகிக்கவேண்டும் என்றும் வகை செய்யப்பட்டிருந்தது. மேலும், கட்டுப்பாட்டு வாரியம் தன் மொத்த உறுப்பினர்களில் குறைந்த பட்சம் எவரேனும் மூவர் ஆஜரான நிலையில்தான் தன் கூட்டங்களை நடத்திச் செயல்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இத்தகைய ஏற்பாடுகளின்மூலம், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிதி அமைச்சராய் இருந்த கருவூல வேந்தரே கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக இருந்து காரியங்களை ஆற்றவேண்டும் என்று தனது குறிக்கோளைப் பிட் இந்தியச் சட்டம் வெளிப்படுத்தியது. ஆனால், இக் குறிக் கோளுக்கு எதிர்மாறாக வாரியத் தலைமைப் பதவி நடைமுறையில் கருவூல வேந்தரையோ அரசுச் செயலரையோ சற்றிச் சுழல்வதாய் அமையவில்லை. ஏனெனில், கருவூல வேந்தரும் அரசுச் செயலரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அமைச்சர்களாக இருந்ததால் அவர்கள் பிரிட்டனின் அரசியலிலும், பொது வாழ்க்கையிலும், அரசாங்கச் செயல்களிலும் அதிகக் கவனம் செலுத்தவேண்டி யிருந்தது. இதனால், அவர்கள் வாரியக் கூட்டங்களைப்பற்றிச் சிந்திக்க முடியாதவர்களாகவும், அக் கூட்டங்களில் கலந்துகொள்ளச் சிறிதும் அவகாசம் இல்லாதவர்களாகவும் இருந்தனர். இல் பர்ட் என்னும் அறிஞர் கூறுவதுபோல், அவர்கள் இருவரும் வாரியக் கூட்டங்களில் பங்கு பெறுவதான செயல் பிட் இந்தியச் சட்டம் செயற்பாட்டிற்கு வந்தபின் வெகு விரைவிலேயே நின்றுவிட்டது. ஆனால், அவர்களுடைய வாரியத் தலைமை மற்றும் உறுப்பினர் பதவிகள் தொடர்ந்து நீடித்தன. இதைப்போல் எஞ்சியிருந்த நான்கு உறுப்பினர்களில் முதுநிலை உறுப்பினரைத் தவிர மற்ற மூன்று இளநிலை உறுப்பினர்களும் வாரியக் கூட்டங்களிலும் செயல் களிலும் பங்கேற்கவேண்டும் என்ற உந்தலையும் உறுதியான மன

நிலையையும் பெறுதவர்களாய் இருந்தனர். இதனால் கருவூல வேந்தர் மற்றும் அரசுச் செயலர் ஆகியோரை அடுத்திருந்த நான்கு உறுப்பினர்களில் மேற்கூறிய இருவரையும் மற்ற மூன்று இளநிலை உறுப்பினர்களையும் உள்ளிட்டு, ஐவர் வாரியக் கூட்டங்களிலிருந்து விலகி இருந்ததால் எஞ்சியிருந்த உறுப்பினர் ஒருவரே எல்லாக் காரியங்களையும் கவனிக்கவேண்டியிருந்தது. அதே நேரத்தில் வாரியத்தின் செயல்பாட்டிற்கான சட்டத் தேவைகளைப் புறக் கணிக்க முடியவில்லை. எனவே, முதுநிலை உறுப்பினரைத் தலைவரா கவும் ஒரே செயலியாகவும் கொண்டு வாரியம் செயல்பட்டது. இத் தலைவர், சட்டத்தின் தேவைகளையும் வாரியச் செயற் பாட்டின் நியதியையும் பரிபூரணமாக்கும் வகையில் தாம் எடுக்கும் முடிவுகளுக்கும் கட்டளைகளுக்கும் கருவூல வேந்தர் மற்றும் அரசுச் செயலர் ஆகியோரைச் சந்தித்து அவர்களுடைய கையொப்பங் களைப் பெற்றார். இத் தலைவரே பின்னர் இந்தியா மற்றும் அதன் விவகாரங்களுக்கான அரசுச் செயலராகப் பதவிநிலை பெற்ற வரானார்.

பிட் இந்தியச் சட்டத்தில் இந்திய விவகாரங்களைக் கவனித்துக் கொள்வதற்கென ஓர் அமைச்சர் இருக்கவேண்டும் என்று கூறப் படவில்லையாயினும், வாரியத்தின் தலைவர்கள், கருவூல வேந்தர், அரசுச் செயலர், முதுநிலை உறுப்பினர் ஆகியோர் பிரிட்டிஷ் அமைச்சரவை உறுப்பினர்களாய் இருந்தனர். அவர்கள் இங்கி லாந்தில் அரசாங்கத்தை அமைக்கக்கூடிய பெரும்பான்மை பலத் துடன்கூடிய ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் இருந் தனர். மேற்சொல்லப்பட்ட சில செய்திகளுக்கு ஒப்பவும் உண்மை நிலையில் வாரியத்தின் தலைவராக வாரியத்தின் முதுநிலை உறுப்பினர் செயல்பட நேர்ந்ததும், அம் முதுநிலை உறுப்பினரை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் மிகவும் செல்வாக்கான ஓர் உறுப்பினராக ஆக்கியது. எனவே, அவ் வாரியத்தின்மூலம் பிரிட்டிஷ் அமைச்ச ரவையும் பாராளுமன்றமும் எடுத்த நடவடிக்கைகளை இயக்கு நர்கள் எதிர்க்க முடியாதவர்களாயினர். வாரியத் தலைவரை எதிர்த்துச் செயல்படுவதன்மூலம் அத் தலைவர் பாராளுமன்றத்தில் பெற்றிருந்த செல்வாக்கின் காரணமாகத் தம்து ஆதரவுச் சலுகைகள் சேதப் பொருளாக மாறிப் பயனற்றுப் போய்விடும் என இயக்குநர்கள் அஞ்சினர். இவ்வாறு பிட் இந்தியச் சட்டத்தின் அடிப்படையான உள்நோக்கத்திற்கு மாறாகச் செயற் பட ஆரம்பித்த வாரியத்திற்கு முற்றிலும் அடங்கியவர்களாய் இயக்குநர்கள் காரியங்களை ஆற்றினர்.

எவரும் விழைந்தோ விழையாமலோ, சூழ்நிலைச் சந்தர்ப்பங் களின் காரணமாக மேற்சொன்ன நிலையில் உருவான வாரியத்தின்

தலைவருடைய அதிகாரங்கள் இந்திய அந்நிய விவகாரங்களில் இயக்குநர்களின் அதிகாரப் பொறுப்பு நிலையை மிஞ்சுவதாய் இருந்தது. மேலும், இந்தியாவின் தலைமை ஆளுநரும் கட்டுப் பாட்டு வாரியத்தின் கட்டளை அறிவுரைகளுக்குப் பெரிதும் செவி சாய்த்துப் பணி புரியும் நாட்டத்தையே கொண்டிருந்தார். தொடர்ச்சியாகப் பல தலைமை ஆளுநர்கள் கட்டுப்பாட்டு வாரியத்தின் இரகசிய ஆதரவு பெற்று, இயக்குநர்களின் விருப்பங் களுக்கு மாருக, இந்தியாவில் ஏகாதிபத்தியக் கொள்கையைத் தொடர்ந்து மேற்கொண்ட செயல்கள் இதை நமக்குத் தெளிவாக, ஆணித்தரமாக அறிவிக்கின்றன. எனவே, செயல்முறையில் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின்மீது பயனுறுதி மிக்க கட்டுப் பாட்டையும் இயக்குநர்கள் மன்றத்தைவிட மிக அதிகமான அதிகாரத்தையும் செல்வாக்கையும் கட்டுப்பாட்டு வாரியம் பெற்றிருந்தது என்பதை நாம் அறிந்துகொள்ளுதல் இன்றி யமையாததாகும். இத்தகைய உயர்ந்த அதிகார நிலையையும், செல்வாக்கையும் கட்டுப்பாட்டு வாரியம் பெற்றிருந்த போதிலும் இயக்குநர் மன்றம் முற்றிலும் தன் அதிகாரத்தையும் செல்வாக்கையும் இழந்துவிடவில்லை என்பதை ஏ. பி. கீத் வலியுறுத்துகிருர்.

இலண்டனிலிருந்த கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் கம்பெனி யின் இந்திய அரசாங்கத்திற்கும் இடையே அடிப்படையான, மிகவும் தேவையான செய்திப் போக்குவரத்திற்கான இணைப்புப் பாலமாக இயக்குநர்கள் மன்றம் இருந்தது. கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சிச் செயல்கள் குறித்து, காரியங் களை மேற்கொள்வதற்கான துவக்க உரிமையை இயக்குநர்கள் அனுபவித்து வந்தனர். இதனுல், இயக்குநர்கள் மன்றத்தை உதாசீனம் செய்து இந்தியாவுடன் தனிப்பட்ட முறையில் கடிதப் போக்குவரத்தை அல்லது செய்தியறிவிப்பை மேற்கொள்ளு வதற்கு வாரியத்திற்கு வசதி செய்து கொடுக்கப்படவில்லை. மேலும், வாரிய உறுப்பினர்கள் மற்றும் இயக்குநர்கள் ஆகியவர் களுக்கு இடையே இணக்க உணர்ச்சியும் சமரசப்போக்கும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் இருந்த மையால் வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆட்சிக் காலத்தில் நிலவியதைப் போல், போட்டா போட்டியும், இழுபறி நிலையும் எவராலும் மேற்கொள்ளப்படவில்லை.[1]

கட்டுப்பாட்டு வாரியம் கம்பெனியின் அரசாங்கத்தின்மீது இவ்வளவு அதிகாரத்தைப் பெற்றிருந்தபோதிலும் அதன்

1 A. B. Keith —'Constitutional History of India.'

அதிகாரத்தின்மீது அரசியல் மற்றும் ஆட்சி ரீதியான இரு பெரும் தடைகள் சுமத்தப்பட்டிருந்தன. அவை, முறையே பிரிட்டிஷ் அமைச்சரவை தனது பாராளுமன்றத்தில் கொண்டிருந்த கூட்டுப் பொறுப்பும் (joint responsibility), இயக்குநர்கள் பாராளுமன்றத்தில் பெற்றிருந்த அதிகாரமும் செல்வாக்கும் வாய்ந்த ஆதரவாளர்களின் கணிசமான எண்ணிக்கையுமாகும். இவற்றின் மூலம் இயக்குநர்கள் கட்டுப்பாட்டு வாரியத்தைத் தமது வழியைப் பின்பற்றுமாறு செய்துகொள்ள முடிந்தது. எனவே, 'கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் பெற்றிருந்த உச்ச அதிகார நிலையின் காரணமாகச் செயற்பாடுடைய உண்மையான எக் கட்டுப்பாட்டினையும் இயக்குநர்கள் இழந்துவிட்டனர் என்று கூற முடியாது. இயக்குநர்களின் அதிகாரநிலை தொடர்ந்து வலிமை மிக்கதாகவே இருந்தது. கம்பெனியின் அரசாங்கம் மற்றும் ஆட்சிச் செயல்கள் பற்றியதான துவக்க உரிமை அவர்களிடமே தொடர்ந்து இருந்தது. அவர்கள் கம்பெனியின் மேலாண்மை மற்றும் ஆளுகையைப் பற்றிய அறிவின் கிளப்பிடமாக இருந்தனர். சட்டமுறையான பொறுப்பு பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் இருந்த போதிலும், கம்பெனியின் நிர்வாக விளக்கங்களில் கடைசி கட்டம் வரை தமது அக்கறையை அவர்கள் செலுத்தியவண்ணம் இருந்தனர்.'[1] இச் செய்தியை இங்கு மீண்டும் கூறுவதன்மூலம் பிட் இந்தியச் சட்டத்தின் செயற்பாட்டுத் தன்மையை அங்கைச் செங்கனியாய் அறிந்துகொள்ள முடிகின்றது.

முன்கூட்டியே பொருத்தமானதோர் இடத்தில் கூறியிருப்பதைப்போல், கம்பெனியின் இந்திய நிர்வாகம் குறித்து இயக்குநர்கள் துவக்க உரிமையைப் பெற்றிருந்தனர். அவை எவராலும் எக் காரணத்தை முன்னிட்டும் தடைப்படுத்தப்படவும் இல்லை. இயக்குநர்களுக்கு ஆரம்ப காலத்திலிருந்தே கொடுக்கப்பட்டிருந்த இத் துவக்க உரிமை நலிந்து போகா வண்ணம் இருந்ததற்கு ஒரு சில முக்கியமான காரணங்களும் இருந்தன. இந்திய விவகாரங்கள் சம்பந்தமான மூல ஆவணங்கள் யாவும் இயக்குநர்கள் மன்றத்தின் பொறுப்பில் இருந்தன. நிலையான சிவில் பணியாளர்கள் பலரைக் கொண்டதாய் இருந்த பெரிய சிப்பந்தி நிறுவனம் இயக்குநர்களின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தது. எனவே, வாரிய உறுப்பினர்களைக் காட்டிலும் இயக்குநர்கள் இந்திய நிர்வாகம்பற்றிய கருத்துகளையும் செயற்குறிப்புகளையும் (proposals) புனைவதற்குத் தேவையான மூல ஆதாரங்கள், சாலச்சிறந்த ஆவணங்கள், காலத்தாலும் கடமையாலும் அனுபவம் மிக்க ஆட்கள் போன்ற பலவற்றைப் பெற்றி

[1] The Report on the constitutional Reforms 1918.

ருந்ததால் கம்பெனியின் விவகாரங்களில் எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான தேர்ச்சி மிக்க அனுபவத்தையும் புரிந்து கொள்ளும் மதிக்கூர்மையையும் பெற்றிருந்தனர். எனவே, இயக்குநர்கள் மன்றமும் அதன் கருத்துகளும் இன்னோரன்ன பிறவும் கட்டுப்பாட்டு வாரியத்தால் மதிக்கப்பட்டே வந்தன.

இயக்குநர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஆதரவுச் சலுகை அதிகாரங்களும் முழுமைப் பொருள்களாக, வாரிய உறுப்பினர் களின் படையெடுப்பிற்கு ஆளாகாது, பெருமளவு செயற்பாட்டில் இருந்தன. இயக்குநர்களின் சலுகைகளையும், ஆதரவுகளையும் ஆக்கிரமித்து நேரிடையாகத் தாக்கக்கூடிய எவ் வதிகாரமும் வாரியத்துக்குக் கொடுக்கப்படவில்லை. தலைமை ஆளுநரையும், அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்களையும், மாநில ஆளுநர்களையும், அவர்தம் ஆட்சி மன்றங்களின் உறுப்பினர்களையும் எழுத்தர் பதவிநிலை வரை இருந்த எல்லா அதிகாரிகளையும் பதவியில் நியமனம் செய்யக்கூடிய அதிகாரமும் ஆதரவுச் சலுகையும் இயக்குநர்களிடமே இருந்தன. பலதரப்பட்ட அதிகாரிகளையும், பணியாளர்களையும் உரிய பதவிகளில் நியமனங்கள் செய்ததைத் தவிர, அவர்களைப் பதவிகளிலிருந்து நிரந்தரமாக நீக்குவதற்கும், திருப்பி அழைப்பதற்கும் இயக்குநர்கள் அதிகாரத்தை வெகு காலமாகப் பெற்றிருந்தனர். 1784ஆம் ஆண்டு முதல் 1833ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இயக்குநர்கள் மேற்கொண்ட காரியங்கள் மற்றும் கருத்துருக்கள் ஆகியவற்றில் பெரும் பாலானவை கட்டுப்பாட்டு வாரியத்தால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இஃது இயக்குநர்கள் பெற்றிருந்த ஆதரவுச் சலுகைபற்றிய அதிகாரத்தின் வினையாற்றலை நமக்கு விளக்குவ தாகும்.

இவை யாவற்றையும்விட இயக்குநர்கள் மன்றம் தனது அதிகார நிலையை இழக்காமல் இருந்ததற்கு மற்றொரு முக்கிய செயற்பாட்டு நிலை இருந்தது. அஃதாவது கம்பெனியின் அன்றாட இந்திய நிர்வாகம் இயக்குநர்கள் மூலமாகவே மேற்கொள்ளப் பட்டு வந்தது. இதன்மீது கட்டுப்பாட்டு வாரியம் முனைப்பான எத் தடையையும் ஏற்படுத்தவில்லை. இயக்குநர்கள் மன்றத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தேவையான சமயங்களில், தேவை யான சில பிரச்சினைகளை மறுஆய்வு (revision) செய்யக்கூடிய ஒரு சாதாரண நிலையைத்தான் கட்டுப்பாட்டு வாரியம் கொண்டிருந்தது என்பது புலனாகின்றது. மேலும், கட்டுப்பாட்டு வாரியம் இந்தி யாவைப்பற்றிய அரசியல் மற்றும் வெளி விவகாரச் செய்திகளில் மட்டுமே அதிக அக்கறை காட்டி வந்தது. எனவே, இதுகாறும்

கூறப்பட்ட செய்திகளுக்கு ஏற்பக், கம்பெனியின் தலைமை அரசியல் இரட்டை அரசாங்க முறை அமைக்கப்பட்டுச் செயல்பட்டது. எனினும், இச் செயல்பாட்டின்மூலம் வெளிப்பட்ட குறைபாடுகள் பலவகையானவைகளாக இருந்தன. அத்தகைய குறைபாடுகளை அகற்றி, ஆட்சிச்செயல்களை மேற்கொள்வதற்கு உகந்த சட்ட ஆக்கங்கள் பல பிற்காலத்தில் பிட் இந்தியச் சட்டத்தைத் தொடர்ந்து செய்யப்பட்டமையால், அக் குறைபாடுகளை இங்கு அறிந்து கொள்ளுதல் மிக இன்றியமையாததாகும்.

பிட் இந்தியச் சட்டத்தின் செயற்பாட்டில் காணப்பட்ட தீமைகளும் குறைபாடுகளும்

பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட கம்பெனியின் தலைமை அரசின், இரட்டை அரசாங்க முறையைப் பொறுத்தவரை அது பொதுமக்கள் கருத்தைப் (public opinion) புறக்கணித்து, அதன் பொறுப்புணர்ச்சியை ஐயப்பொருளாக்கி, பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டை ஒரு கண்துடைப்புப் பொருளாக ஆக்கிச் செப்பிடு வித்தை நடைபெறுமாறு செய்தது. உண்மையிலேயே இச் சட்டத்தினால் செய்யப்பட்ட இரட்டை அரசாங்க ஏற்பாட்டுமுறை மிகவும் வசதியற்றதாகவும், சுற்றி வளைத்துக் காரியங்களை மேற்கொள்ளக் கூடியதாகவும், நலிவான நியதிகளின் அடிப்படையில் செயல்படுவதாகவும் இருந்தது. அந்த ஏற்பாட்டுமுறை தேவைக்குறைவுகளினால் பெரிதும் அலைக்கழிக்கப் பட்டது. எனவே, பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் செய்யப்பட்ட பல ஏற்பாடுகள், குறிப்பாக இலண்டனில் அமைக்கப்பட்டிருந்த கம்பெனியின் இரட்டை அரசாங்க முறை, பெருவாரியான குறை பாடுகளுக்கும் தீங்குகளுக்கும் இலக்கான வகையில் 1858 வரை செயற்பாட்டில் இருந்தது. அக் குறைபாடுகள் பின்வருமாறு.

முதலாவதாக, கம்பெனியின் காரியங்களைப் பொறுத்தவரை பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் அமைக்கப்பட்ட இரட்டை அரசாங்க முறை வலுவற்றதும், பலவீன மிக்கதுமான நிர்வாகத்தையே ஏற்படுத்திக் கொடுத்தது. கட்டுப்பாட்டு வாரியத்திற்கும், இயக்குநர்கள் மன்றத்திற்கும் இடையே அதிகாரங்களும் பொறுப்பு களும் பிரித்து அளிக்கப்பட்டிருந்தன. இவ்விரு அமைப்புகளும் முரண்பட்ட அக்கறைகளைக் கொண்டிருந்தன. அவை இரண்டும் குறிப்பிட்டு ஓர் அதிகாரச் சக்திக்கோ, அல்லது நிறுவனத்திற்கோ ஒருமித்த பொறுப்பைக் கொண்டிருக்கவில்லை. குறிப்பிட்ட ஒரு நிறுவனத்திற்கு அவை இரண்டும் அரசியல் மற்றும் ஆட்சி ரீதியான பொறுப்பை ஏலாதிருந்ததால் அவற்றின்மூலம் வலிமையும் திறமையும் மிக்க ஆட்சியை ஏற்படுத்த முடியாமற் போயிற்று.

ஓர் உயிர்ப்பொருளைப் போன்று, முழு உருவுடன் ஒவ்வொரு அரசாங்கமும் செயல்படவேண்டும் என்பது இன்றுபோல் அன்றும் இருந்த நியதியாகும். ஆனல், இந் நியதிக்குப் புறம்பாக வாரியம், மன்றம் ஆகியவற்றிற்கு இடையே ஆட்சிப்பொறுப்பு இரு கூறுகளாக்கப்பட்டது. இதனல், தோல்வியைத் தழுவாத திறமை மிக்க பரிபாலனம் மேற்கொள்ளப்பட முடியாமல் போயிற்று. இத்தகைய சூழ்நிலையில் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் இயக்குநர்கள் மன்றம் ஆகியவற்றிற்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகார வரம்புகளும் தெளிவற்றனவாய், விவரித்துக் கூறப்படாதனவாய் இருந்தன. இத்தகைய குறைபாட்டின் காரணமாக பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்திய நடவடிக்கைகளில் கவனத்தைச் செலுத்தக் கூடிய விருப்பத்தில் முனைப்பின்மை காணப்பட்டது. 'அன்றிருந்த சூழ்நிலைகளில் பிட் இந்தியச் சட்டம் செய்து கொடுத்திருந்த ஏற்பாட்டின்மூலம் பிரிட்டிஷ் பாராளுமன்றம் கம்பெனியின் இந்தியக் காரியங்களில் அல்லது நடவடிக்கைகளில் கவனத்தையும் நாட்டத்தையும் செலுத்தியிருக்க வேண்டுமாயின் அஃது கட்டுப்பாட்டு வாரியத்தின் செயல்களைப் பொறுத்தே இருந்திருக்க வேண்டும். ஆனல், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இடங்களைப் பெற்றிருந்த ஒரு கட்சியின் பிரதிநிதியாக-பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதி நிதியாக-இருந்த ஒருவரே கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக இருந்தார். ஆனல், அவர் தமது கட்சிக்கு அஞ்சியோ, பாராளுமன்றத்திற்குப் பயந்தோ நடந்ததாகத் தெரியவில்லை. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருந்த தமது கட்சியின் பக்கபலம் இருந்ததாலோ என்னவோ அவர் பாராளுமன்றத்திற்கு அஞ்சிச் செயல்பட்டவராக இருக்கவில்லை. மேலும் வாரியத் தலைவர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குக் கம்பெனியின் இந்திய விவகாரங்கள் குறித்து ஆண்டொன்றுக்கு ஒரு முறையான அல்லது குறிப்பிட்ட காலங்களுக்கான அறிக்கைகளைச் சமர்ப்பித்ததற்கு எச் சான்றும் இல்லை. எனவே, வாரியத் தலைவர் வரம்பற்றுச் செயல்படுவதற்கும், அவர்மூலம் பொறுப்பற்ற வல்லாட்சிச் செயல்கள் மேற்கொள்ளப்படுவதற்கும் துணை புரியும் வகையில், கம்பெனியின் விவகாரங்களின்மீது செலுத்தப்பட்ட பாராளுமன்றக் கட்டுப்பாடு முழுமையற்று, குறைபாடுடையதாய் அமைந்தது. இதனல் இங்கிலாந்தில் கம்பெனியின் தலைமை நிர்வாகம் மிகவும் பலவீனமாக அமைந்தது.

மேலும், A. B. கீத் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளதைப் போல், கம்பெனியின் இந்திய விவகாரங்களில் பாராளுமன்றத்தின் ஆளும் கட்சியே யன்றி எதிர்க்கட்சியும்கூடக் கவனத்தையும், நாட்டத்தையும் செலுத்த முடியாத வகையில், கம்பெனியின்

நடவடிக்கைகள் பல இரகசியமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனவே, கட்டுப்பாட்டு வாரியத்தையும் இயக்குநர்கள் மன்றத்தின் இரகசியக் குழுவின் உறுப்பினர்களையும் அன்றி, வேறெவரும் அறியாதவகையில் கம்பெனியின் இந்திய ஆட்சிக் காரியங்கள் யாவும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனவே, கட்டுப்பாட்டு வாரியத்தின் செயல்கள், காரியங்கள், நடவடிக்கைகள் முதலானவற்றைச் சரியாக அறிந்து கொள்ளமுடியாத அவலநிலை பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு இருந்தது.[1] இத்தகைய வாய்ப்பின் காரணமாகத் தமக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகார எல்லைக்குள் வாரியத்தலைவர் ஏதேச்சாதிகாரமான முறையில் காரியங்களை மேற்கொண்டார்.

அரசியல் மற்றும் அரசாங்கக் கோட்பாட்டு நியதிகளின்படி ஆட்சி அதிகாரங்கள் கொடுக்கப்படும் எந் நிறுவனமும் பொறுப்பு மிக்கதாய் இருக்கவேண்டும். ஓர் ஆட்சி நிறுவனத்தின் பொறுப்பு பொருள் பொதிந்ததாக இருக்கவேண்டுமாயின் அதற்கான அதிகாரங்கள் அடிக்கோடிட்டும், எல்லை வரையறை செய்யப்பட்டும் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். இஃது அன்றும் இன்றும் மட்டுமில்லாமல் என்றும், எவ் வரசாலும் பேணப்படவேண்டிய நியதியாகும். ஆனால், இத்தகைய அடிப்படை ஆட்சி நியதி அன்று பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் வலியுறுத்திக் காட்டப்படவில்லை. கம்பெனியின் இந்திய விவகாரங்களைப் பொறுத்தவரை, பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் அமைக்கப்பெற்ற முப்பெரும் முக்கிய நிறுவனங்கள் இங்கிலாந்திலிருந்து செயல்பட்ட கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம், தலைமை ஆளுநருடன் கூடிய இந்திய ஆட்சிமன்றம் ஆகிய மூன்றுகும். இம் மூன்று நிறுவன அமைப்புகளிடையேயான அதிகாரப் பொறுப் பெல்லையை அல்லது செயற்பரப்பைப் பிட் இந்தியச் சட்டம் தெளிவாக்காமல் விட்டிருந்தது அதன் மிகப்பெரும் குறைபாடும் தீமையுமாகும். இத் தீங்கு மற்றும் குறைபாட்டினால் பல சச்சரவுகளும், சங்கடங்களும், இழுபறி நிலைகளும் தோன்றின. அவற்றைப் பின்வரும் செய்திகளின்மூலம் எடுத்துக் காட்டலாம்.

தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த கண்காணிப்பு, இயக்கம், மற்றும் மேற்பார்வை ஆகியவற்றின் அதிகாரத்தின் காரணமாகக் கட்டுப்பாட்டு வாரியம் இயக்குநர்கள் மன்றம் பெற்றிருந்த அதிகாரங்களில் அருவருப்பை உண்டாக்கும் வகையில் அடிக்கடி தனது தலையீட்டைச் செய்த வண்ணம் இருந்தது. மன்றத்திற்குக்

[1] A. B. Keith. A Constitutional History of India.

கொடுக்கப்பட்டிருந்த நியமன அதிகாரச் சலுகை, வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த திருப்பி யழைக்கும் அதிகாரம் ஆகியவற்றால் ஏற்பட்ட மோதல்கள் கம்பெனியின் இந்திய ஆட்சிச் செயல்களில் சேத நிலையை உருவாக்கின என்றால் அது மிகையாகாது. இச் செய்திக்குச் சான்று பகர்வதாய்ப் பேராசிரியர் K. V. புன்னையா அவர்கள் எடுத்துக்காட்டியுள்ள ஓரிரு செய்திகளை இங்குக் கூறலாம்.* 1784ஆம் ஆண்டில் மக்கார்ட்னே பிரபு (Macartney) என்பவர் புனித ஜார்ஜ் கோட்டையின் (இன்றைய சென்னை) ஆளுநராய் இருந்தார். அவரது இராசினாமா இறப்பு அல்லது பதவி நீக்கம் ஆகிய ஏதேனும் ஒன்றிற்குப் பிறகு ஹாலண்ட் என்பவர் புனித ஜார்ஜ் கோட்டையின் தலைவராகப் பதவியேற்க வேண்டும் என்று பதவி நியமன உத்தரவை இயக்குநர்கள் பிறப்பித்திருந்தனர். இதனை அன்று கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராய் இருந்த டுண்டாஸ் என்பவர் எதிர்த்தார். ஆனால், இயக்குநர்களோ ஹாலண்ட் அவர்களே சென்னையின் ஆளுநராக நியமிக்கப்படவேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தனர். அது மட்டுமன்றி, கம்பெனியின் இந்திய அரசாங்கங்களின் பதவி நியமனங்களைப் பொறுத்தவரை கட்டுப்பாட்டு வாரியத்திற்கு எந்த அதிகாரமும் கிடையாது என வாதிட்டனர். இவ் வாதத்தையும், 'இயக்குநர்களின் விருப்பத்தில் தலையீட்டைச் செய்வதற்கான சட்டமுறையான எவ் வுரிமையையும் கட்டுப் பாட்டு வாரியம் பெற்றிருக்கவில்லை' என்பதையும் ஏற்றுக் கொண்ட டுண்டாஸ், 'ஹாலண்ட் அவர்கள் தமது பதவியை ஏற்றுக்கொண்ட அடுத்த விநாடியே அவரைப் பதவியிலிருந்து திருப்பி அழைத்துவிடக்கூடிய அதிகாரத்தை வாரியம் பெற்று உள்ளது' என்பதை வெளிப்படையாக அறிவித்தார். இதன் காரணமாக, டுண்டாஸ் அவர்களின் விருப்பத்திற்கு இணங்கி இயக்குநர்கள் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. இதன் விளைவாக டுண்டாஸிற்கு மிகவும் வேண்டிய நண்பரொருவர் ஹாலண்ட் அவர்களுக்குப் பதிலாகப் புனித ஜார்ஜ் கோட்டையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.*

மேற்சொல்லப்பட்ட செய்தி சாராம்சத்தின் அடிப்படையில் மற்றுமொரு போட்டா போட்டி நிலை கட்டுப்பாட்டு வாரியத் திற்கும் இயக்குநர் மன்றத்திற்கும் இடையே 1806-ல் எழுந்தது. பிட் இந்தியச் சட்டத்தின்கீழ்க் கம்பெனியின் இந்திய அரசாங்கங் களுக்கான தலைமை ஆளுநராக இருந்த வெல்லெஸ்லி பிரபு காலமானார். அவரது இறப்பிற்குப் பிறகு இந்தியத் தலைமை

* K. V. Punniah, The Constitutional History of India, p. 41—43.

ஆளுநர் பதவிக்குத் தற்காலிகமாக அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்களில் முதுநிலை அந்தஸ்தைப் பெற்றிருந்த சர் ஜார்ஜ் பார்லோ (Sir George Barlow) என்பவர் இயக்குநர்கள் மன்றத்தால் நியமிக்கப்பட்டார். அச் சமயத்தில் பொதுத் தேர்தல் நடந்து முடிந்து அமைச்சரவை மாற்றமும் ஏற்பட்டிருந்தது. கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக மிண்டோ பிரபு (Lord Minto) அப்பொழுது பதவி வகித்து வந்தார். அவர், காலம் சென்ற வெல்லெஸ்லி பிரபுவின் பதவிக்குப் பார்லோ அவர்களே முறைப்படியாக இந்தியத் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். ஆனால், இங்கிலாந்தில் பதவி ஏற்றிருந்த புதிய அமைச்சரவை இதற்கான இசைவைக் கொடுக்காமல், இந்தியத் தலைமை ஆளுநர் மன்றத்தில் பார்லோ அவர்களுக்குக் கீழ்நிலையில் இருந்த லாடர்டேல் கோமகன் (Earl of Lauderdale) என்பவர் பதவி ஏற்க வேண்டும் என்று முடிவெடுத்தது. இம் முடிவை இயக்குநர்கள் ஏற்க மறுத்தனர். ஆனால், பிரிட்டிஷ் அமைச்சரவை, அரச உத்தரவின்பேரில் இயக்குநர்களால் நியமிக்கப்பட்டிருந்த பார்லோ அவர்களை இந்தியத் தலைமை ஆளுநர் பதவியிலிருந்து திருப்பி அழைத்தது. இச் செயலுக்கு வாரியத் தலைவராயிருந்த மின்டோ பிரபு எந்த வகையில் எந்த அளவில் உடன்பட்டிருந்தார் என்பது அறிய முடியவில்லையாயினும், இயக்குநர்கள் மன்றத்தின் உரிமைச் சலுகை மற்றும் அதிகாரத்தின் பயனாக இது நடந்தேறியது. எனவே, 1786 முதல் 1813 வரையிலான இடைப்பட்ட காலத்தில் தன் எல்லாப் பணியாளர்களையும் நியமிப்பதற்கான அளவு கடந்த அதிகாரங்களை இயக்குநர்கள் மன்றம் பெற்றிருந்தது என்பதையும் அதே நேரத்தில் கட்டுப்பாடற்ற நிலையில் கம்பெனியின் இந்திய அதிகாரி எவரையும் திருப்பி அழைக்கக்கூடிய அதிகாரத்தை கட்டுப்பாட்டு வாரியம் பெற்றிருந்தது என்பதையும் நமது கவனத்தில் கொள்ளவேண்டும். இத்தகு நிலையால் இடர்ப்பட்டு இன்னலுற்றது, இனிதாய் இயங்கியிருக்கவேண்டிய கம்பெனியின் இலண்டன் தலைமை ஆட்சி அமைப்பேயாகும். இந் நிலைமை ஓரளவிற்குச் சீர்ப்படவும், கட்டுப்படுத்தப்படவும் வேண்டும் என்ற பொறுப்புணர்வு 1813ஆம் ஆண்டில் எழுந்தது. அதன் காரணமாகவே, அவ் வாண்டில் பாராளுமன்றம் ஒரு சட்டத்தை இயற்றி அதன்மூலம் தலைமை ஆளுநர், மாநில ஆளுநர்கள், ஆட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பலருடைய நியமனங்கள் யாவும் அரச நிறுவனத்தின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டது.

1813ஆம் ஆண்டின் சட்டத்திற்கு ஒப்பக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் இயக்குநர்கள் மன்றத்திற்கும் இடையே நிலவி வந்த செயற்பாட்டுச் சச்சரவும் சங்கடமும் கட்டுப்படுத்தப் படுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்ட பொழுதிலும், பிட் இந்தியச் சட்டத்தின் அடிப்படை நியதிகளையும், ஏற்பாடுகளையும் தழுவித் தமக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரச் சலுகையின் பெயரில் அவ் விரு அமைப்புகளும் தொடர்ந்து செயல்பட்டு வந்தன. அவை இரண்டும் தமது குறிக்கோள்களை ஈடேற்றிக் கொள்வதிலிருந்து பின்வாங்கவில்லை. எனவே, கட்டுப்பாட்டு வாரியம் தனது செல்வாக்கையும், அதிகார நிலையையும் அதிகரித்துக் கொள்வதி லேயே நாட்டம் செலுத்தி முன்னிலும் முனைப்பாகச் செயல் பட்டது. இதற்குச் சான்று பகர்வதாக உள்ளது 1834 முதல் 1836 வரையான ஆண்டுக் காலத்தில் இயக்குநர்கள் மன்றத் திற்கும் கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் இடையே நடந்த பலப் போட்டியாகும். அப்பொழுது இந்தியத் தலைமை ஆளுநராக இருந்த வில்லியம் பெண்டிங்க் பிரபு பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின், அவரது பதவியில் சர் சார்லஸ் மெட்கேஃப் (Sir Charles Metcalf) என்னும் ஆட்சி மன்ற முதுநிலை உறுப்பினர் பிட் இந்தியச் சட்டத்தின் நியதிக்கு ஒப்பப் பதிலித் தலைமை ஆளுநராக அமர்த்தப்பட்டிருந்தார். சர் மெட்கேஃபின் பதிலித் தன்மையை நீக்கி அவரையே நிலைபேறு மிக்க தலைமை ஆளுநராகச் செயல் படும்படி பதவி நியமனம்செய்து, அதனை உறுதிப்படுத்த இயக்கு நர்கள் பெரிதும் விரும்பினர். அப்பொழுது சார்லஸ் கிராண்ட் (Charles Grant) என்பவர் வாரியத் தலைவராக இருந்தார். அவர், கம்பெனியின் ஒப்பந்த உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்த எப் பணியாளரும் தலைமை ஆளுநராக நியமனம் செய்யப்படக் கூடாது என்றிருந்த நியதியைச் சுட்டிக்காட்டி இயக்குநர்களால் விழையப் பட்ட மெட்காஃபின் நியமனத்தை ஏற்க மறுத்தார். மேலும், கிராண்ட் அவர்களே இந்தியாவின் தலைமை ஆளுநராகச் செல்ல வேண்டும் என்ற தனிப்பட்ட விருப்பத்தையும் கொண்டிருந்தார். எனவே, அவர் இந்தியத் தலைமை ஆளுநர் பதவிக்குச் செய்ய வேண்டியிருந்த பதவி நியமனத்தைப்பற்றிய மாற்று ஏற்பாட்டையோ, யோசனையையோ கருத்தில் கொள்ளாது இரண்டு மாதங்களுக்கு அச் செயலை ஒத்திப்போட்டு வைத்தார். ஏனெனில், பிட் இந்தியச் சட்டத்தில் கூறப்பட்டு, பிற்பாடு இயற்றப்பட்ட சட்டங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த அடிப்படையான ஓர் ஏற்பாட்டின்படி, ' தலைமை ஆளுநர், மாநில ஆளுநர்கள் அவர்தம் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிகளில் காலி இடங்கள் தோன்றுமாயின் இரண்டு மாதங் களுக்குள் இயக்குநர்கள் அப் பதவிகளை நிரப்பவேண்டும்,

அவ்வாறு இயக்குநர்கள் செய்யாதுபோயின் அச் சலுகையும். அதிகாரமும் அரசு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு, அப் பதவிகளுக்கு உரிய நபர்களை அரசு நிறுவனமே பதவி நியமனம் செய்யும்' என்ற செய்தி விளக்கமும் நடைமுறையும் இருந்தது; மேலும், அவ்வாறு அரச நிறுவனத்தால் நியமனம் செய்யப்படு வோரை இயக்குநர்கள் பதவிகளிலிருந்து திருப்பி அழைக்கவோ, பதவி நீக்கம் செய்யவோ முடியாது என்ற கட்டுப்பாடும் இருந்தது. மேற்சொல்லப்பட்ட சூழ்நிலைகளில் உரிய நியமனங் களையும், பதவி நீக்கம் செய்தல் போன்றவற்றையும் பிரிட்டிஷ் அரச நிறுவனமே செய்யமுடியும் என்று இருந்தபோதிலும், உண்மைச் செயற்பாட்டு நிலையில் அல்லது நடைமுறையில் கட்டுப் பாட்டு வாரியமே அரச நிறுவனத்தின் நிமித்தம் அவற்றைச் செய்துவந்தது. எனவேதான், சர் சார்லஸ் கிராண்ட், மெட் காஃபின் விஷயத்தில் குயுக்தியாகவும், சாதுரியமாகவும் செயல் பட்டார். இவ்வாறு கிராண்ட் இரு மாத காலத்தைக் கடத்திய பின், இங்கிலாந்தில் அப்பொழுது ஆட்சியிலிருந்த விக்கு அமைச் சரவையின் பதவிக்காலம் முடிந்து பீல் (Peel) என்பவரின் தலைமையில் கன்சர்வேடிவ் கட்சி ஆட்சிக்கு வந்தது. இதனால் கிராண்ட் அவர்களின் விருப்பம் நிறைவேறாது போயிற்று. அதன் பின்னர் பீல் அவர்களின் அமைச்சரவையின் அனுமதி யுடன் ஹேலஸ்பரி (Haylesbury) பிரபுவை இந்தியத் தலைமை ஆளுநராக இயக்குநர்கள் நியமித்தனர். ஆனால், ஹேலஸ்பரி பிரபு இங்கிலாந்தை விட்டுக் கிளம்புவதற்குமுன் பீல் அமைச்சரவை சரிந்து, மெல்பர்ன் பிரபுவின் (Lord Melbourne) தலைமையில் விக்கு அமைச்சரவை மீண்டும் பதவிக்கு வந்தது. இப் புதிய அமைச்சரவை எக் காரணத்தாலோ ஹேலஸ்பரி பிரபுவின் நியமனத்தைத் தள்ளுபடி செய்தது. இச் செயலை இயக்குநர்கள் பெரிதும் வெறுத்தனர். எனினும் அமைச்சரவை இயக்குநர்களின் எதிர்ப்பைப் புறக்கணித்து அவர்களைக் கட்டாயப் படுத்தி வாரியத் தலைவர் விரும்பிய ஆக்லாண்ட் பிரபுவை இந்தியத் தலைமை ஆளுநராக மன்றத்தின்மூலம் நியமனம் செய்தது. இவ்வாறு 1784 முதல் 1858 வரை கட்டுப்பாட்டு வாரியம் அதிகார ஏற்றநிலையைப் பெற்றுத் திகழ்ந்தது. அதே நேரத்தில் இயக்குநர்கள் மன்றமும் தனது அதிகார நிலை யிலிருந்து பின்வாங்கவில்லை. ஏனெனில் அம் மன்ற உறுப்பினர் களும் கம்பெனியின் இந்திய அதிகாரிகளைத் திருப்பி அழைக்கக் கூடிய அதிகாரத்தைத் தேவையான சமயங்களில் செயல் படுத்தி வந்தனர். உதாரணமாக, பிரிட்டிஷ் அமைச்சர்கள் எதிர்த்ததைப் பொருட்படுத்தாது இந்தியத் தலைமை ஆளுநரா யிருந்த எல்லன்பரோ பிரபுவை இயக்குநர்கள் அவரது பதவி

யிலிருந்து 1844-ல் திருப்பி அழைத்தனர். எனவே, வாரியம், மன்றம் ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் இடையே போட்டா போட்டியான நிலை நிலவி வந்தது. அதே நேரத்தில், நாம் முன்னரே அறிந்துள்ளதைப்போல், பல சமயங்களில் பெரும் பான்மையான செய்திகளில் வாரியமும் மன்றமும் இணக்க இசைவு உணர்ச்சியுடன் ஒத்துப்போனதும் உண்டு. இத்தகைய ஒத்துப்போகும் இணக்கநிலை பல முக்கிய காரியங்களில் வாரியம், மன்றம் ஆகிய இரு உறுப்புகளாலும் முழுமையாகப் பேணப் பட்டிருக்குமாயின் இதுகாறும் நாம் கண்டுள்ள விரும்பத் தகாத பல நிகழ்ச்சிகளைத் தவிர்த்திருக்கக்கூடும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. எனவேதான், பிட் இந்தியச்சட்டம் அமைத்துக் கொடுத்த கம்பெனியின் தலைமை இடத்து இரட்டை அரசாங்க முறையினால் இன்னல்களும் தீமைகளும் அதிகமாகத் தோன்றின.

கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின் உயர் பதவிகளைப் பற்றிய செய்திகளை மட்டுமன்றிக் கொள்கை இயக்கத்தைப் பற்றிய செய்திகளிலும்கூடக் கட்டுப்பாட்டு வாரியம் இயக்குநர்கள் மன்றத்தை மிஞ்சும் வகையில் அவ்வப்போது ஏற்ற நிலையைப் பெற்றது. அடிப்படையாக இயக்குநர்களுக்குக் கம்பெனியின் அரசாங்கம் மற்றும் ஆட்சியின் கொள்கையை வகுக்கும் அதிகாரங் களும் சலுகைகளும் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால், இந்த அதிகாரத்தில் வாரியம் அடிக்கடித் தேவையற்ற தலையீட்டைச் செய்தவண்ணம் இருந்தது. இத் தலையீட்டிற்கு உறுதுணையாய் இருந்தது, வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த கம்பெனியின் இந்திய உயர் அதிகாரிகளைத் திருப்பி அழைக்கக்கூடிய அதிகாரமே யாகும். வாரியம் பெற்றிருந்த இவ் வதிகாரம் கம்பெனியின் இந்தியத் தலைமை ஆளுநர், மற்றும் பல உயர் அதிகாரிகளை வாரியத்திற்கு அஞ்சிச் செயல்படும்படி செய்தது. எனவேதான், இயக்குநர்கள் விரும்பாமலிருந்த பல சமயங்களிலும் தொடர்ச் சியான பல இந்தியத் தலைமை ஆளுநர்கள் இங்கு ஆக்கிரமிப்புக் கொள்கையையும் பல போர்களையும் மேற்கொண்டனர். அதே நேரத்தில் ஆட்சி விளக்கம் பற்றிய விஷயங்களில் முடிவைக் காணும் அதிகாரத்தில் பெரும் பங்கைக் கடைசிகாலம் வரை இயக்குநர்களும் செயல்படுத்தி வந்தனர். இதனால் இங்கிலாந்தின் கட்சி அரசியல் (party politics) குருட்டுத்தனமான கட்சி உட்கருத்துகள் ஆகியவற்றின் செல்வாக்கிற்கும் அக் கறைக்கும் இலக்காகிச் செயல்பட்டுவந்த கட்டுப்பாட்டு வாரியத்தின்மீது பொருத்தமான தடையினை இயக்குநர்கள் செலுத்த முடிந்தது. எவ்வாறாயினும், வாரியம், மன்றம் ஆகிய இரு அமைப்புகளிடையே அதிகாரம், பொறுப்பு ஆகியவை

நல்லாட்சி நியதிகளுக்குப் புறம்பாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்பது இங்கு வெளிப்படும் ஓர் உண்மையான கருத்தாகும். ஆட்சி, அதிகாரம், பொறுப்பு ஆகியவை ஒன்றுபடாது கம்பெனியின் தலைமை இடத்தில் வெட்டப்பட்டமையால் உறுமலும் பொறுமலும் அதிகரித்துக் கட்டுண்ட நிர்வாகம் தேவையான அளவிலும், தேவையான சமயங்களிலும் கிடைக்காது போயிற்று. இதற்குக் காரணம் பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் வாரியமும் மன்றமும் தம் தடைகளையும் எதிர்த் தடைகளையும் மேற்கொள்ளுமாறு கம்பெனியின் இலண்டன் தலைமை ஆட்சியமைப்பில் செய்யப்பட்ட இரட்டை அரசாங்க முறையேயாகும்.

கம்பெனியின் தலைமை அரசாங்கம் சுற்றி வளைத்து வாலாயமாகக் காரியங்களை ஆற்றியது இச் சட்டச் செயற்பாட்டில் காணப்பட்ட மற்றொரு குறையாகும். வாரியமும் மன்றமும் முறையே "கேனன் ரோ' (Canon Row), 'இந்திய இல்லம்' (India House) ஆகிய இரு தலைமை அலுவலகக் கட்டடங்களிலிருந்து செயல்பட்டன. இவ் விரு அலுவலகங்களும் பிட் இந்தியச் சட்டத்திற்கு உரித்தான சில அம்சங்களுக்கு ஒப்பக் கம்பெனியின் இந்திய அரசாங்கங்களுடன் ஆட்சிச் செய்தியைப்பற்றிய நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஆட்சிச் செய்திபற்றிய செயலைத் தழுவிப் பின்பற்றப்பட்ட நடைமுறைக் காலம் கடத்துகிற குறைக்கும், எளிதில் கையாள முடியாத குறைபாட்டிற்கும் இலக்காகி யிருந்தது. இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு அனுப்பவேண்டிய ஆட்சிச் செய்திகளைத் தயாரித்தல், இந்தியாவிலிருந்து பெறப்பட்ட ஆட்சிச் செய்திகளுக்கு உரிய பதிலை இறுத்தல் போன்ற இரு காரியங்களும் குறைகளுக்கு உள்ளாயிருந்தன. இந்தியாவிலிருந்து பெறப்பட்ட ஆட்சிச் செய்திகளுக்குப் பதிலிறுக்கும் வகையில் உரிய நடைமுறையைப் பின்பற்றுவதன்மூலம் கம்பெனியின் தலைமை அரசாங்கம் சராசரி ஒவ்வொரு ஆட்சிச் செய்திக்கும் இரண்டாண்டுகளைச் செலவழித்தது என்று கர்ட்னே இல்பர்ட் கூறுகிறார். கம்பெனியின் தலைமை அரசாங்கமும் அதன் இந்திய அரசாங்கமும் நீண்ட தொலைவினால், பிரிக்கப்பட்டிருந்தன. சிறப்பாகவும், விரைவாகவும், நிறைவாகவும் , செய்திப் போக்குவரத்துகளை மேற்கொள்ளக்கூடிய சாதனங்களும் இருக்கவில்லை. இக் குறைகளுடன், கம்பெனியின் தாயக அரசாங்கத்தின் நடைமுறைக் குறைபாடும் சேர்ந்து தாறுமாறான, ஆட்சிச்செயல்கள் மேற்கொள்ளப்பட ஏதுவாயின. ஆட்சிச் செய்தியின் நடைமுறையைப் பொறுத்தவரை, ஓர் அமைப்பு அதனைப் பெற்றவுடன் தனக்கே உரித்தான நடைமுறைச் சம்பிரதாயங்கள், படாடோபங்கள் ஆகியவற்றைப் பின்பற்றிக் கால தாமதத்துடன் முடிவு

எடுத்துப் பின்னர் அதனை அடுத்த அமைப்பிற்கு அனுப்பிவைக்க, அவ் வமைப்பும் அதற்கே உரித்தான நடைமுறையைப் பின்பற்றி அதில் மாற்றங்களைச் செய்து முதல் அமைப்பிற்கு மறுபடியும் திருப்பி அனுப்பிவைக்க, அது மீண்டும் அடுத்த அமைப்பிற்கு அனுப்பிவைக்க, ஓர் அஞ்சல் விடுக்கையானது கேனன் ரோவிற்கும் இந்திய அலுவலகத்திற்கும் இடையே அலைக்கழிக்கப்பட்டது. இத்தகைய நிலையால் தான் அனுப்பிய அஞ்சல் விடுக்கைக்குத் தேவையான பதிலோ விளக்கமோ உரிய காலத்தில் கிடைக்கப் பெறுமல், கம்பெனியின் இந்தியத் தலைமை அரசாங்கம், தனது சுய தீர்ப்பின் அடிப்படையில் காரியங்களை ஆற்றவேண்டி யிருந்தது. அத்தகைய காரியங்கள் பின்னர்க் கம்பெனியின் தலைமை அரசினரால் ஏற்றுக்கொள்ளப்படாமல் போனதும் உண்டு. எனவே, இவை யாவற்ருலும் கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சிச் செயல்கள் தடுமாறியவண்ணம் இருந்தன. ஒருவேளை இந்தியத் தலைமை ஆளுநர் மற்றும் அவரது அரசாங்கம் மேற்கொண்ட காரியங்களை மேலெழுந்தவாரியாக ஏற்றுக்கொண்டாலும் அதனைப் பிணப் பரிசோதனை செய்வதுபோல் ஆராய்ந்து காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்தாத திருத்தங்களையும் செயல்களையும் மேற்கொள்ளுமாறு இந்திய அதிகாரிகளைத் தலைமை அரசாங்கம் பணித்துவந்தது.[1]

எனவே, இரண்டு ஆடுகள் அடித்துக்கொண்டால் நரிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல் வாரியமும் மன்றமும் சச்சரவிலிருக்க இந்தியத் தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சியினர் தான்தோன்றித்தனமாகச் செயல்படலாயினர். இதனுல், இந்தியத் தலைமை ஆளுநரின் அதிகாரம் மற்றும் பதவிநிலை வசதி மிக்கதாய் இருந்தது என்றும் கூறமுடியாது. ஏனெனில், பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின் மீது செலுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் முனைப்பானவையாகவே இருந்தன. எனவே, தாம் விழைந்த செய்திகளுக்கு உரிய அனுமதியையோ விளக்கத்தையோ உரிய காலத்திற்குள் பெற முடியாமலும், அதே நேரத்தில், தாம் தமது சுயதீர்ப்பில் இங்குக் காரியங்களை மேற்கொண்டால் அதற்கான தண்டனை பெற வேண்டியிருக்குமே என்று தயங்கியும், இருதலைக் கொள்ளியாக இடர்ப்பட்ட நிலையில் இந்தியத் தலைமை ஆளுநர் இருந்தார். இத்தகைய சூழ்நிலையாலும் காரணத்தாலும் வலுவுடன் இயங்க வேண்டியிருந்த கம்பெனியின் இந்திய அரசாங்கம் வலிமை இழந்து, பொலிவற்று, நலிவுற வேண்டியிருந்தது.

[1] C. Ilbert, Government of India.

மேலும், இல்பர்ட் அவர்கள் எழுதியிருப்பதைப்போல் கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம் ஆகிய இரு உறுப்புகளும் வெவ்வேறுன இரு அக்கறைகளைக் கொண்டிருந்தமையாலும், அவை இந்தியத் தலைமை ஆளுநரைப் பகடைக் காயாகப் பயன்படுத்தித் தமது அக்கறைகளை ஈடேற்றிக்கொள்வதில் பெரும் மோதல்களைக் கொண்டிருந்தமையாலும் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தில் நிர்வாகத் திறமைச் சேதமும், கருத்துப் பேதமும், செல்வச் சீரழிவும் காணப்பட்டன. இவற்றிற்கெல்லாம் வாரியத் தலைமை பெற்றிருந்த எதேச்சாதிகார வல்லாட்சி நோக்கும் பொறுப்பற்ற போக்குமே காரணமாகும். இத்தகைய நிலவரத்தால் கம்பெனியின் அரசாங்கம் மற்றும் ஆட்சிக் காரியங்களைப்பற்றிய 'உறுதியானதும் இறுதியானதுமான அதிகாரம் எவரிடம் அல்லது எந் நிறுவனத்திடம் இருந்தது அல்லது இருக்க வேண்டும் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாமலிருந்தது. எனவேதான் 1853ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இந்திய விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டபொழுது, பிரதம அமைச்சராக இருந்த டிஸ்ரேலி (Disraeli) தமது அரசாங்கத்தின் கண்காணிப்பு, கட்டுப்பாடு, இயக்கம் ஆகியவற்றுக்கு உட்பட்டிருந்த கம்பெனியின் இந்திய விவகாரங்களுக்கான பொறுப்பை எவர்மீது சுமத்துவது என்பதைச் சுட்டிக்காட்ட முடியாத நிலையில் இருந்தார்.

இறுதியாகக் கட்டுப்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்களின் ஊதியங்கள், செலவினங்கள் ஆகியவற்றைப்பற்றி பிட் இந்தியச் சட்டம் வகுத்திருந்த விதி மிகவும் ஏற்பற்றதாகவும், நேர்மையற்றதாகவும் அரசியல் மற்றும் ஆட்சிக் கோட்பாடுகளுக்குப் புறம்பானதாகவும் இருந்தது. தாம் பெற்றிருந்த பொறுப்பின் தன்மை எப்படிப்பட்டதாக இருந்திருப்பினும் வாரிய உறுப்பினர்கள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் உறுப்பினராய்ப் பொறுப்பானவர்களாக ஆக்கப்பட்டிருந்தனர். எனவே, நிதிநிலை அறிக்கையை அனுமதித்து இயற்றக்கூடிய அதிகாரம் பெற்றிருந்த பாராளுமன்றத்தின் ஏற்பாட்டின்மூலம் பிரிட்டிஷ் கருவூலத்திலிருந்துதான் அவர்களின் ஊதியங்களும், பிறவும் வழங்க வகை செய்திருக்க வேண்டும். மாறுகக் கூறவேண்டுமாயின், பிரிட்டிஷ் நிதிநிலை அறிக்கையின் ஏற்பாட்டின்கீழ்தான் அவற்றிற்கான ஊதியமும் பிறவும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதுதான் நியாயமும், நேர்மையும் ஆகும். ஆனல், '16,000 பவுன்களுக்கு ஈடான வாரிய உறுப்பினர்களின் ஊதியச் செலவினத்தொகை கம்பெனியின் இந்திய வருவாயிலிருந்து கொடுக்கப்பட்டது மிகவும் துரதிர்ஷ்டமானதாகும்.' இத்தகைய ஏற்பாட்டினல் கடைத்

தேங்காயினை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதைதான் நடந்தது. இக் குறைபாடு விரைவில் தீர்க்கப்பட வேண்டியதாக இருந்தது.

இதுகாறும் சொல்லப்பட்ட செய்திகளின்மூலம் இலண்டனில் அமைக்கப்பட்டிருந்த கம்பெனியின் இரட்டை ஆட்சி அமைப்பு பல தொந்தரவுகளையும் இடர்ப்பாடுகளையும் ஏற்படுத்திக் கொடுத்து, அதனால், கம்பெனியின் இந்திய ஆட்சிக்காரியங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன என்பது அறியக் கிடக்கின்றது. இதற்கான மூலகாரணம் பிட் இந்தியச் சட்டத்தில் காணப்பட்ட தெளிவற்ற சொல்லாட்சியும், தொய்வுமாகும். ஆனால், இச் சட்டம் இயற்றப்பட்ட காலத்தில் இந்தியாவில் மட்டுமன்றி இங்கிலாந்திலும் நிலவிய நிலவரங்களையும் தனிப்பட்ட பிரச்சினையையும் நாம் கருத்தில்கொண்டு பார்க்கும்பொழுது, 'கதிரவனுக்கும் கரும்புள்ளிகள் உண்டு' என்பதற்கு ஒப்பப் பிட் இந்தியச் சட்டத்திலும் பல குறைபாடுகள் இருந்தன. எனினும் அதனால் நன்மையும் இருந்தது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, இச் சட்டத்தில் சொல்லாட்சித் தெளிவு ஏன் கையாளப்படவில்லை என்பதைக்கூறி, அதன் நன்மையையும் முக்கியத்துவத்தையும் நாம் அறியவேண்டும். கிழக்கிந்தியக் கம்பெனி அரசியல் மற்றும் வணிகம் சார்ந்த இருவகையான அதிகாரங்களை இந்தியாவில் பெற்றிருந்தது. கம்பெனியின் உரிமையாளர்கள் பிரிட்டிஷ் குடிமக்களாக இருந்தனர். அவர்கள் இந்தியாவில் பல உரிமைகளையும் உடைமைகளையும் பெற்றிருந்தனர். இவற்றால் எழுந்த பிரச்சினைகள் தனித்தன்மை வாய்ந்தவையாகும். அன்றிருந்த ஆங்கிலச் சட்டத்தின்படி தமது அரச நிறுவனத்தின் பெயரிலேயே, அரச நிறுவனத்தின் குடிமக்களாய் இருந்த ஆங்கிலேயர் அரசியல் அதிகாரங்களைப் பெற்று இயங்கி இருக்கவேண்டும். ஆனால், 'வணிக அதிகாரங்கள், சொத்துடைமை ஆகியவற்றை ஒருவர் தமது சுய உரிமையின்கீழ்ப் பெற்றிருக்கலாம்' என்றும் இருந்தது. இத்தகைய சிக்கல்களின் காரணமாக அல்லது சட்டச் செய்தியின் தேவையின் காரணமாக அரச நிறுவனம் கம்பெனியின் அரசியல் ரீதியான அதிகாரங்களை மேற்பார்வையும் கட்டுப்பாடும் செய்து அவற்றில் தலையிடுவதற்கான தனது உரிமையை உறுதிப் படுத்தவேண்டியிருந்தது. ஆனால், கம்பெனியின் அரசியல் முறையான அதிகாரங்கள், அதன் வணிக உரிமைகள், சொத்துரிமை ஆகியன கேடு பயக்கும் வகையில், ஒன்றோடொன்று கலக்கப்பட்டிருந்தன. இத்தகைய பொருந்தா உறவால் கம்பெனியின் உரிமைகள், அதிகாரங்கள் ஆகியவற்றின்மீது அரச நிறுவனம் தனது உயரிய இறைமை நிலையை நிலைநாட்ட முடியவில்லை. எனவே, தனது

இறைமைப் பொறுப்பை அல்லது இயக்கக்கட்டுப்பாட்டு அதிகாரத்தைக் கம்பெனியின் அமைப்பின்மீது தேவையான விதத்தில் தெளிவற்றதாகவும், குழப்பமிக்கதாகவுமே கொண்டிருக்க வேண்டிய அவசியத்தில் பிரிட்டிஷ் அரசு இருந்தது. இதனுல், அரசின் இறைமை அதிகாரம், தனியார் சொத்து ஆகிய இரு எல்லைக்கோடுகளுக்கு இடையே கூடுமானவரை தொல்லைகளை அகற்றிப் பிட் அவர்கள் தமது சட்டத்தை இயற்றிச் செயல்பட வேண்டியிருந்தது. அன்றிருந்த சூழ் நிலையாலும் நில வரத்தாலும் தெளிவுபடுத்திக் காட்டக்கூடிய வரம்புகளை 'அரச இறைமை அதிகாரம்,' 'தனியார் சொத்துரிமை' ஆகியவற்றுக்கு இடையே எளிதாகப் பின்பற்ற முடியாதிருந்ததால், தாம் நன்ருய் அறிந்த நிலையிலேயே பிட் அவர்கள் தமது சட்டத்தில் வேண்டுமென்றே தெளிவின்மையை மேற்கொண்டார். இத்தகைய சந்தர்ப்பச் சூழ்நிலை மற்றும் சட்ட நெருக்கடி இருந்தபோது அவற்றிற்கிடையில் கூடுமானவரை கம்பெனியின் அரசாங்கம் மற்றும் ஆட்சிச் செயல்களில் தேர்ச்சியையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்திக் கொடுக்க பிட் இந்தியச் சட்டம் விழைந்ததை ஒரு பெருந்துணிவு என்றே நாம் கூறவேண்டும். கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த சாசனங்கள், அதன் சொத்துரிமைகள், அதன் இந்திய அரசியல் மற்றும் ஆட்சி விவகாரங்கள் ஆகியவற்றை மதித்து, தேவையான உடன்பாட்டு உணர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட யாவரும் கம்பெனியின் காரியங்களை மேற்கொள்ளுமாறு செய்தது பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் பெறப்பட்ட நன்மையும் அதன் அரசியல் அமைப்பு முறையான முக்கியத்துவமும் ஆகும்.

பிட் இந்தியச் சட்டத்திஞல் பெறப்பட்ட நன்மைகளும் அதன் முக்கியத்துவமும்

பேரறிஞர் டாட்வெல் அவர்கள் பிட் இந்தியச் சட்டத்தின் பயன் மற்றும் முக்கியத்துவத்தைப்பற்றிக் கூறும்பொழுது, 'ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்ட 1773ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் டொமினியன்களின் ஒரு பகுதியாகத் தெளிவாக உட்படுத்தப்படாதிருந்த இந்தியப் பிரதேசத்தில், பதினேராண்டுகளுக்குப் பின்னர், அஃதாவது 1784-ல், பலவிதமான சட்டப் பிரச்சினைகளும் நெருக்கடிகளும் இருந்த சமயத்தில், கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களுக்கான இறைமையைச் சிறிதும் அணுகாது, அதே நேரத்தில் கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சி குறித்துச் சட்டங்களைச் செய்வதற்கான இறைமையான அதிகாரங்கள் யாவற்றையும் பாராளுமன்றம் பெற்றது' என்று எழுதியுள்ளார். சட்ட ரீதியாகக் கம்பெனியின் பிரதேசங்களைப்பற்றிய தன் இறைமையைப் பிரிட்டிஷ் அரசு

வெளிப்படுத்த முடியாமலிருந்த நிலையில், பிட் இந்தியச் சட்டத்தின் மூலம் தன் கடமைகளையும் பொறுப்புகளையும் ஆற்ற வழிவகை செய்யப்பட்ட முக்கியத்துவத்தை இச் சட்டம் பெறுகிறது. கம்பெனியின் காரியங்களை இறுதியாக இயக்கக்கூடிய அதிகாரத்தைப் பிரிட்டிஷ் அமைச்சரவைக்கு மாற்றிக்கொடுப்பதைத் தனது அடிப்படைக் குறிக்கோளாகப் பிட் இந்தியச் சட்டத்தின் தலைமை இடத்து இரட்டை அரசாங்கமுறை கொண்டிருந்தது. ஆனால், அதே நேரத்தில், தனது இந்திய அரசாங்கத்தின் அன்றாட ஆட்சிச் செயல்களை மேற்கொள்ளும் பொறுப்பைக் கம்பெனியின் கைகளிலேயே விட்டது. இத்தகைய ஏற்பாட்டின்மூலம், கம்பெனியின் உரிமைகளுக்கு இன்னலைக் கொடுப்பதாய்ப் பிரிட்டிஷ் அரசு காரியங்களை மேற்கொள்கின்றது என்று எழுப்பப்பட்டிருந்த எதிர்ப்புகள் யாவும் சமாளித்து அடக்கப்பட்டன. கம்பெனியின் இயக்குநர்களும் அன்றிருந்த சூழ்நிலைகளில் கம்பெனியையும் உள்ளிட்ட தம் எல்லா உடைமைகளையும் இழந்துவிடக்கூடிய நிலையில் இருந்தனர். ஏனெனில், பிரிட்டிஷ் அரசு பொருத்தமான ஒரு புதிய சட்டத்தை இயற்றியோ, அன்று நிலவரத்திலிருந்த சட்டத்தைத் திருத்துவதன் மூலமோ கம்பெனியைக் கலைத்து, அதன் ஆதாயச் சலுகைகளை அழித்து, அதன் வசமிருந்த உடைமைகளைத் தன்னுடையதாக்கிக் கொண்டிருக்க முடியும். எனவே, கம்பெனியின் இயக்குநர்கள், தம் அதிகாரங்களும் ஆதரவுச் சலுகைகளும் தம்மிடம் தங்கியிருக்குமாறு வசதி செய்யப்பட்டால் போதும் என்று கருதினர். அதே சமயம், கம்பெனியின் இயக்குநர்கள், அனுதாபிகள் போன்றோர் அன்று நினைத்திருந்தால் மூர்க்கத்தனமாகப் பிரிட்டிஷ் அரசை எதிர்த்துப் போராடி இருக்கவும் முடியும். ஆனால், அத்தகைய செயல் எதுவும் மேற்கொள்ளப்படாது, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையில் கிழக்கிந்திய வணிக நிறுவனம், அரச நிறுவனம் கம்பெனியின் இந்திய அரசாங்கம் (Company, Crown, India) ஆகிய மூவமைப்புகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் அரசியல் ஏற்பாட்டைப் பிட் இந்தியச் சட்டம் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் செய்து கொடுத்தது பெரும்பயனைத் தருவதாய் இருந்தது. எதையும் அரவணைத்து அழிவை உண்டாக்காது, அமைதியான ஆட்சி அமைப்பு உருவாக்கப்பட்டதன் பயனை இஃது ஏற்படுத்திக் கொடுத்தது[1].

எனவே, தனது கட்டுப்பாட்டு ஆணையர்கள்மூலம் இந்திய விவகாரங்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தியதனால் இதுகாறும் தெளிவற்றதாகவும், விளைவாற்றல் அற்றதாகவும் இருந்த

[1] Dodwell, Cambridge History of India. Vol. V

பாராளுமன்றக் கட்டுப்பாடு பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் தெளிவுள்ளதாகவும், பயனுறுதி மிக்கதாகவும் மாறிற்று. அஃதாவது, நடைமுறையில் கம்பெனியையும் அதன் காரியங்களையும் பாராளுமன்றக் கட்டுப்பாட்டின்கீழ்ப் பிட் இந்தியச் சட்டம் கொண்டு வந்தது. இங்கிலாந்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்த இந்திய நடவடிக்கைகளின் இயக்க அமைப்பின் அடித்தளத்தை இச் சட்டம் மாற்றியது. இதுகாறும் கம்பெனியின் அரசியல் அதிகாரத்தை அனுபவித்து வந்த உடைமையாளர்கள் மன்றம் இருக்குமிடம் தெரியாமல் போயிற்று. எல்லா அதிகாரங்களையும், கட்டளைகளையும் பிறப்பிக்கும் வரம்பற்ற சக்தியை இயக்குநர்கள் பெற்றிருந்த போதிலும், அவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இரண்டாம் பட்ச நிலைக்கு உள்ளாக்கப்பட்டனர். இயக்குநர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவுகளுக்குக் கீழ்ப்படியுமாறு செய்யப்பட்டனர். ஒழுங்குமுறைச் சட்டத்தில் இந்த ஏற்பாடு செய்யப்படவில்லை. எனவே, அதனால் பின்னர் ஏற்பட்ட தீமையைப் பிட் இந்தியச் சட்டம் அகற்றியது.

பிட் இந்தியச் சட்டம் நிறைவேற்றப்பட்டுச் செயலாக்கம் செய்யப்படுவதற்கு முன், கம்பெனியின் மேலிடத்து ஆட்சி அமைப்புக்குப் பெருந் தலைவலியையும், தாறுமாறான தலையீட்டையும் கொடுத்துவந்தது உடைமையாளர்கள் மன்றமே. அம் மன்றமே கம்பெனியின் அரசியல் அதிகாரம் முழுவதிலும் முற்றுரிமையைக் கொண்டிருந்தது. இயக்குநர்கள் எடுத்த எம் முடிவுகளையும் மாற்றியமைக்கக்கூடிய சர்வ வல்லமை பெற்றதாய், தனக்கு உடன்பட்டு இசைவாக நடப்பவர்களையே இயக்குநர்களாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஆன்மபலத்தைப் பெற்றதாய் இருந்த உடைமையாளர்கள் மன்றத்தின் அதிகாரங்களையும், சலுகைகளையும் காலத்தின் தேவைக்கு ஏற்பப் பிட் இந்தியச் சட்டம் நீக்கிற்று. இயக்குநர்களால் சிறப்பிக்கப்பட்டு, கட்டுப்பாட்டு வாரியத்தினால் ஏற்கப்படும் எம் முடிவிலும் தனது தலையீட்டைச் செய்ய முடியாதபடி உடைமையாளர்கள் மன்றம் தடைப்படுத்தப்பட்டது. உடைமையாளர்கள் அல்லது பங்குதாரர்கள் என்ற முறையில் வர்த்தக ரீதியான தமது பங்குகளைப் பெறுதல், இயக்குநர்களின் தேர்தலில் சாதாரணப் பங்கை ஏற்றல் ஆகியவற்றைத் தவிர ஏனைய அதிகாரங்கள், சலுகைகள் யாவற்றையும் பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் உடைமையாளர்கள் இழந்தனர். இதுகாறும் உடைமையாளர்கள் மன்றம் கம்பெனியின் அரசாங்கத்திற்கும் ஆட்சிக்கும் கொடுத்துவந்த இன்னலின் நிலை, காலில்

குத்திய கருமுள்ளாகவே இருந்தது. அக் கடுமையான கொடிய முள்ளை அகற்றி, இன்னலற்ற ஓட்டத்தைக் கம்பெனியின் அரசாங்கம் பெறக்கூடிய பெரும்பயனையும் முக்கியத்துவத்தையும் பிட் இந்தியச் சட்டம் பெற்றது.

இந்தியாவில் அமைக்கப்பட்டிருந்த கம்பெனியின் அரசாங்க அமைப்புகளின் தன்மையிலும் பொருத்தமான சில மாற்றங்களைப் பிட் இந்தியச் சட்டம் ஏற்படுத்திச் சுமுகமான ஆட்சி நடைபெற வழி வகுத்தது. வாரன் ஹேஸ்டிங்ஸ் பெற்றிருந்த அவலமானதும், கொடுமையானதுமான அனுபவம் எல்லோருக்கும் ஓர் எச்சரிக்கையாக இருந்தது. எனவே, தலைமை ஆளுநரின் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை நான்கிலிருந்து மூன்றாகக் குறைத்ததன்மூலம் தலைமை ஆளுநருக்கும் அவரது ஆட்சி மன்றத்திற்கும் இடையே சுமுகமான உறவுநிலை உருவாக்கப் பட்டது. இந்த ஏற்பாட்டிலும்கூட, 1786-ல் காரன் வாலிஸ் பிரபு இந்தியத் தலைமை ஆளுநர் பதவியை ஏற்க விடுத்த கட்டாயத்தின்பேரில், மாற்றம் செய்யப்பட்டது. இதைப் பற்றிய செய்தியைப் பிறிதோர் இடத்தில் காணலாம். இவ்வாறு, தேவையான இடத்தில், தேவையான மாற்றத்தைத் தலைமை ஆளுநரின் ஆட்சி மன்றத்தில் செய்ததன்மூலம் அவரது அலுவலக அந்தஸ்து எல்லாவகையிலும் அதிகரிக்கப்பட்டது.

தலைமை ஆளுநரைக் கொண்டு வங்காளத்திலிருந்து செயல்பட்ட கம்பெனியின் தலைமை அரசாங்கத்திற்கும், சென்னை, பம்பாய் போன்ற ஏனைய மாநிலங்களுக்கும் இடையே கூட்டிசைவானதும், ஒன்றிப்பானதுமான உறவு நிலைகள் 1784-க்கு முன் செம்மையாய் இருக்கவில்லை. 1784-க்கு முன் சென்னை, பம்பாய் ஆகிய மாநில அரசாங்கங்கள் வங்கத்துத் தலைமை அரசாங்கத்திற்கு அடங்காத அகங்காரப் போக்கைக் கொண்டிருந்தன. மைய, மாநில அரசுகள் பெற்றிருக்கவேண்டிய உறவுநிலைகளும் முறைகளும் தெளிவாக்கப் படாமல் இருந்தமையால் மாநில அரசாங்கங்கள், மைய அரசாங் கத்தை உதாசீனம்செய்து, போர் முதலான நடவடிக்கைகளைக் கீழ்ப் படியாத் தன்மையுடன் மேற்கொண்டன. இவற்றையெல்லாம் அகற்றி, கம்பெனியின் இந்திய மைய, மாநில அரசாங்கங்களுக்கு இடையே உறவுகளை அரசியல் மற்றும் ஆட்சிக் கோட்பாட்டு நியதி முறையாகப் பிட் இந்தியச் சட்டம் செம்மையாக்கியது. அஃதாவது, கம்பெனியின் இந்திய மாநில அரசாங்கங்கள் யாவும் தலைமை அரசாங்கத்தின் ஆட்சிமன்றத்துடன்கூடிய வங்கத்துத் தலைமை ஆளுநரின் கட்டுப்பாடு, இயக்கம், மேற்பார்வை ஆகிய

வற்றிற்கு முழுமையாக உட்பட்டுச் செயல்படவேண்டும் என்று பிட் இந்தியச் சட்டத்தின் முப்பத்தொன்றும் பிரிவு தெளிவாக்கியது. மேலும், இந்த ஏற்பாட்டிற்குப் புறம்பாகச் செயல்படும் எம் மாநில அரசாங்கமும் தனது மன்றத்துடன் கூடிய தலைமை ஆளுநரால் பதவி நீக்கம் செய்யப்படலாம் என்றும் இச் சட்டம் கூறியது. இவை யாவற்றின் மூலமும், பிரிட்டிஷ் அமைச்சரவையுடன் மிகவும் நெருக்கமாக அரசியல் ரீதியான உறவைப் பெற்றிருக்குமாறு வகை செய்யப்பட்டதன் மூலமும் தலைமை ஆளுநரின் பதவி மற்றும் அதிகாரங்கள் யாவும் மிகவும் வலிமையைப் பெற்றன. இது பிட் இந்தியச் சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற மற்றொரு நன்மையும் அரசியலமைப்பு முறையான பெரு முக்கியத்துவமுமாகும்.

இந்தியச் சுதேசி அரசுகளுக்கும், கம்பெனிக்கும் இடையே நிலவ வேண்டிய உறவைப்பற்றிய புதியதொரு நியதியும் இச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. 'இங்கிலாந்து தேசத்தின் விருப்பம், கொள்கை, மதிப்பு ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கும் வகையில்தான் கம்பெனியினர் இந்தியாவில் இடம்பிடிக்கும் காரியத்தை இனி மேற்கொள்ள முடியும்' என்று தெளிவாக்கியதன் மூலம் இந்தியச் சுதேசி அரசுகளில் தலையிடாக் கொள்கையைக் (non-intervention) கம்பெனியின் அரசு மேற்கொள்வதற்கான ஒரு புதிய அத்தியாயம் இந்திய அரசியலில் தொடங்கப்பட்டது. இதனால் கம்பெனியின் அதிகாரிகளால் ஏகாதிபத்திய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது தடைப்படுத்தப்பட்டது.

இந்தியாவில் பணியாற்றும் ஆங்கிலேயர் புரியும் குற்றங்களுக்குத் தகுந்த விசாரணையின்பேரில் தண்டனையளிக்கும் பொருட்டு, ஒரு தனிப்பட்ட நீதிமன்றம் இங்கிலாந்தில் அமைக்கப்பெறப் பிட் இந்தியச் சட்டம் வகை செய்தது. இதன் மூலம் இதுகாறும் வழக்கத்திலிருந்த ஏற்பாடுகளைப் போலல்லாமல் தவறு செய்வோருக்கு உரிய தண்டனையை வழங்கக்கூடிய தேர்ச்சியான ஓர் அமைப்பு செயல்படும் பயன்மிகு முக்கியத்துவம் கிட்டியது. மேலும், கம்பெனியின் இந்தியப் பணியாளர்கள் எந்த ஆதாயங்களையும், பரிசுகளையும் விழையவோ, பெறவோ கூடாது என்றும், இயக்குநர்களின் கட்டளைகளுக்கு எப் பணியாளர் கீழ்ப்படியாமல் செயலாற்றினாலும் அது சட்ட விரோதமானது என்று கருதப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பல ஏற்பாடுகளைச் செய்ததன்மூலம் சிவில் பணித்துறைபற்றிய பணி வரையறைகள் (conditions of service) முதன் முறையாக

முனைப்பாற்றலுடன் செயலுக்கு வந்தன. இது பிட் இந்தியச் சட்டத்தின் ஒரு சிறப்புக்கூறு ஆகும்.

இவ்வாறு தேவையான பல மாற்றங்களையும், நல்விளைவுகளையும் கம்பெனியின் ஆட்சியமைப்புகளின் பல மட்டங்களில் பிட் இந்தியச் சட்டம் ஏற்படுத்திக் கொடுத்ததால் கம்பெனியின் இந்திய அரசாங்க ஆட்சிப்பொறிகள் யாவும் அவ்வப்போது செய்யப்பட்ட மாற்றங்களுடன் தேர்ச்சியான வளர்ச்சியைத் தொடர்ந்து பெறமுடிந்தது. ஏறத்தாழ எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு இச் சட்டத்தின்மூலம் அமைக்கப்பட்ட அரசாங்க ஆட்சி அமைப்புகள் யாவும் செயலில் இருந்தது ஒன்றே இச் சட்டத்தின் பெருமுக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

16. 1786 முதல் 1813 வரை இயற்றப்பட்ட சட்டங்களும், கம்பெனியின் இந்திய அரசாங்க, ஆட்சி அமைப்புகளில் செய்யப்பட்ட மாற்றங்களும்

1786ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம்

1784-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டு, செயற்பாட்டிற்கு வந்திருந்த பிட் இந்தியச் சட்டம் இரண்டாண்டு களுக்குள்ளாக இரு முக்கியத் திருத்தங்களுக்கு உள்ளாக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த இரு திருத்தங்களும் 1786ஆம் ஆண்டில் ஒரு சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்டன. அவை கம்பெனியின் இந்தியத் தலைமை ஆளுநரைப் பற்றியவையாக இருந்தன. பிட் இந்தியச் சட்டத்தின் ஏற்பாட்டின்மூலம் வங்கத்துத் தலைமை ஆளுநர் ஆட்சிமன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கிலிருந்து மூன்றாகக் குறைக்கப்பட்டது. இவ்வாறு செய்ததன்மூலம் தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டிருந்த விருப்ப வாக்குச் சீட்டைப் பயன்படுத்தும் அதிகாரம் மேலும் வலிமையையும் மதிப்பையும் பெறும் என்று கருதப் பட்டது. ஆனால், தலைமை ஆளுநரையும் உள்ளிட்டு நான்கு உறுப்பினர்கள் இருந்த ஆட்சிமன்றத்தில், தலைமை ஆளுநர் முனைப் பான நிலையில் தமது விருப்ப வாக்குச் சீட்டைப் பயன்படுத்தவே முடியாது என்ற நிலை யாவராலும் அறியப்பட்ட ஒன்றாக இருந்தது. குறிப்பாகப் பிட் இந்தியச் சட்டத்தின்கீழ் இந்தியத் தலைமை ஆளுநராகப் பதவியேற்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த காரன்வாலிஸ் பிரபுவால் அஃது உணரப்பட்டிருந்தது. மேலும், ஒழுங்குமுறைச் சட்டத்தின்கீழ்த் தலைமை ஆளுநராகப் பணியாற்றிப் பெருந் தொல்லைகளுக்கு ஆளாகியிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸின் அனுபவங்கள் காரன்வாலிஸிற்கு எச்சரிக்கையாக அமைந்தன. எனவே, வாரன்ஹேஸ்டிங்ஸிற்கு ஏற்பட்டிருந்த அனுபவங்கள் அல்லது தொல்லைகள் தமக்கு எக் காரணம்

கொண்டும் ஏற்படவே கூடாதென்று கருதிய காரன்வாலிஸ், மிக முன் ஜாக்கிரதையுடன் தாம் பதவி ஏற்க ஒரு நிபந்தனையை விதித்தார். அஃதாவது, தாம் தலைமை ஆளுநராக மட்டுமேயன்றி முதற் பெரும்படைத் தலைவராகவும் செயல்படக்கூடிய தகுதி மற்றும் பதவிநிலை தமக்கு அளிக்கப்படவேண்டும் என்று நிபந்தனை விதித்தார். இந் நிபந்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டால் ஒழியத் தாம் இந்தியத் தலைமை ஆளுநராகப் பதவி ஏற்க முடியாது என்றும் கூறினார். இவ்வாறு தலைமை ஆளுநர் பதவியும், முதற் பெரும்படைத் தலைவர் பதவியும் தம்மைச் சார்ந்ததாகவே அமைய வேண்டும் என்று காரன்வாலிஸ் நிபந்தனை விதித்ததன்மூலம், வங்கத்துத் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து இரண்டாகக் குறைக்கப்பட வேண்டியதாயிற்று. மேலும், இத்தகைய ஏற்பாடு செய்துகொடுக்கப்படுவதன்மூலமே தமது விருப்ப வாக்குச்சீட்டைப் பயனுள்ள வகையில், பொருள் சிறப்புடன், தாம் பயன்படுத்தமுடியும் என்று, காரன்வாலிஸ் அறிவித்தார். இத்தகைய ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டா லொழியத் தமது ஆட்சி மன்றத்தைத் தமது சுய பொறுப்பிற்கு ஒப்பவும் ஆட்சித் தேவைக்கு ஏற்பவும் தம்மால் ஒதுக்கித் தள்ள (over rule) முடியாது என்று அவர் எடுத்துக்காட்டி, அதற்கான வாய்ப்பும் வசதியும், சட்டமுறையாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும் என்றும் கண்டிப்பாகக் கூறினார். எனவே, 1786ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசு காரன்வாலிஸின் கருத்துகளையும் வாதங்களையும் ஏற்றுப் பாராளுமன்றத்தின்மூலம் ஒரு சட்டத்தை இயற்றியது. அச் சட்டத்தின் மூலம் பிட் இந்தியச் சட்டத்தினால் செய்யப்பட்டிருந்த ஏற்பாடு திருத்தப்பட்டு வங்கத்துத் தலைமை ஆளுநரே முதல் பெரும்படைத் தலைவராகவும் இருப்பார் என அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் தேவையான சந்தர்ப்பங்களில் தமது ஆட்சிமன்றத்தை ஒதுக்கித் தள்ளக்கூடிய அதிகாரம் அல்லது வசதி தலைமை ஆளுநருக்குச் செய்து கொடுக்கப்பட்டது. மேலும், இச் சட்டத்தின்மூலம் இந்தியாவின் தலைமை ஆளுநராக நியமனம் செய்யப்படும் எவரும் பிரிட்டிஷ் அரசரின் ஒப்புதலைப் பெறவேண்டிய தேவையில்லை என்றும் கூறப்பட்டது.

பிட் இந்தியச் சட்டத்தின் ஒரு திருத்தமாக அமைந்த இச் சட்டம் இயற்றப்பட்ட 1786-ல் மற்றொரு சட்டமும் இயற்றப்பட்டது. இதன்மூலம் பிட் இந்தியச் சட்டத்தில் காணப்பட்ட ஒரு நியதி ரத்து செய்யப்பட்டது. அஃதாவது, கம்பெனியின் இந்தியப் பணித்துறையிலிருந்து இங்கிலாந்திற்குத் திரும்பும் எவரும் அங்குத் திரும்பியவுடன் தமது சொத்தைப்பற்றிய அறிவிப்பைச்

செய்யவேண்டும் என்றிருந்த கட்டாய விதி இச் சட்டத்தின் மூலம் முழுமையாக நீக்கப்பட்டது. தாம் விரும்பிய நிலையில், தாம் விதித்திருந்த நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1786-ல் புதிய சட்டம் இயற்றப்பட்ட பின்னர், காரன்வாலிஸ் இந்தியத் தலைமை ஆளுநராகப் பதவி ஏற்று வங்கத்து நீதித்துறையைச் சீரமைத்ததோடன்றிச் சாசுவத நிலவரித் திட்டத்தையும் (permanent settlement) அறிமுகப்படுத்திக் கம்பெனியின் அரசியல் மற்றும் ஆட்சி அதிகாரநிலை உயர்வான ஏற்றத்தைப் பெறுவதற்குப் பெருந்துணை புரிந்தார்.

1788ஆம் ஆண்டின் விளக்கச் சட்டம் (Declaratory Act)

பிட் இந்தியச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக டுண்டாஸ் (Dundas) இருந்தார். அவர் அப்பொழுது பிரிட்டிஷ் பிரதம அமைச்சராக இருந்த இளைய பிட்டின் நெருங்கிய நண்பராகவும் இருந்தார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் குறிப்பாகப் பொதுமக்கள் அவையில் பெரும் பான்மை ஆதரவைப் பெற்றிருந்த பிரதம அமைச்சர் இளைய பிட்டின் இனிய நண்பராக இருந்ததாலோ என்னவோ, சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் காரணமாகவும் தமது மற்ற சகாக்களின் நிமித்த மாகவும் செயல்பட்டுவந்த டுண்டாஸ், இயக்குநர்கள் மன்றம் விரும்பாத நிலையில் பல காரியங்களை மேற்கொண்டார். அச் செயல்கள் யாவும், 1781ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டிருந்த சட்டத்திற்குப் புறம்பானவையாக இருந்தன. 1781ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டிருந்த ஒரு சட்டத்தின்படி இந்தியாவின் பொதுநலம் குறித்துக் கம்பெனியால் வேண்டப்பட்டு பிரிட்டிஷ் அரசால் அனுப்பப்படும் ஆயிரம் பேரைக்கொண்ட ஒவ்வொரு படைவகுப்பு அணிக்கும் (regiment) இரண்டு இலட்சம் ரூபாய்களைக் கம்பெனி ஈடாகக் கொடுக்க வேண்டும் என்றும் விதிக்கப்பட்டிருந்தது. 1787ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசின்சார்பாக நான்கு படைவகுப்பு அணிகள் அனுப்பப் பட்டிருந்தன. இதன் காரணமாகக் கிழக்கிந்தியக் கம்பெனி எட்டு இலட்ச ரூபாய்களைப் பிரிட்டிஷ் அரசருக்குச் செலுத்தவேண்டும் என்ற நெருக்கடிநிலை தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், அவற் றிற்கான செலவினத் தொகையைக் கொடுக்கக்கூடிய நிலையில் கம்பெனி இருக்கவில்லை. மேலும், 1781ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் விளக்கப்பட்டிருந்த சட்ட முறையான நடைமுறை பின் பற்றப்படவில்லை என்று இயக்குநர்கள் எடுத்துக்காட்டி, தாம் எட்டு இலட்சரூபாய்களைச் செலுத்தமுடியாத நிலையில் இருந்ததை யும், அத் தொகையைக் கோருவதற்கான உரிமை நடைமுறையாகக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இருக்கமுடியாது என்றும் வாதிட்

டனர். எனவே, பொதுநலம் அல்லது அக்கறை குறித்து இந்தியாவிற்கு அனுப்பப்படவிருந்த பிரிட்டிஷ் படைவகுப்பு அணியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, அப் படைவகுப்பு அணிகளுக்கான செலவினத்தொகை போன்றவற்றை நிர்ணயித்து விளக்கம் செய்யக் கூடிய அதிகாரம் கட்டுப்பாட்டு வாரியத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய அவசியம் எழுந்தது. இந்த அவசியத்தின் காரணமாகவே, 1788ஆம் ஆண்டில் ஒரு விளக்கச் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது.

அவ் விளக்கச் சட்டத்தின்படி இந்தியாவிற்கு இனிமேற்கொண்டு அனுப்பப்படவிருந்த பிரிட்டிஷ் அரசப் படைவகுப்பு அணியின் எண்ணிக்கை, அவற்றிற்கான செலவினத்தொகை ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கு உரிய முழுமையான அதிகாரமும் உச்சநிலையும் கட்டுப்பாட்டு வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டன. மேலும், இப் புதிய சட்டத்தின்மூலம் தமது கணக்குகள் யாவற்றையும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு இயக்குநர்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டனர். இந்தியாவில் மேற்கொள்ளப் படவிருந்த போர், மற்றும் இராணுவ நடவடிக்கைகளுக்குத் தேவையான படைவகுப்பு அணிகளை அனுப்பிவைக்கக் கூடிய நிலையில் பிரிட்டிஷ் அரசு அன்று இருந்தது. ஆனால், அதற்காகப் பெருஞ்செலவினச் செயலை, அல்லது பொறுப்பை மேற்கொள்ளக்கூடிய நிலையிலோ, பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் இராணுவ உதவியை நாடக்கூடிய நிலையிலோ கம்பெனி இருக்க வில்லை. எனினும், மேற்சொல்லப்பட்ட கட்டுப்பாடு கம்பெனியின் மீது கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலம் பிரிட்டிஷ் அரசால் செலுத்தப்பட்டது. இதனைப் பலர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எதிர்க்கவும் செய்தனர். எனினும், இவ் வெதிர்ப்பையும் பொருட்படுத்தாது, மேற்சொல்லப்பட்ட செய்திகளுக்கு ஏற்ப பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் ஒரு விளக்கச் சட்டம் 1788-ல் இயற்றப் பட்டது. இச் சட்டத்தின்மூலம் இந்தியாவில் கம்பெனி பெற்றிருந்த அதிகாரம், உரிமை, ஆதாயச்சலுகை போன்ற யாவும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்திற்கு மாற்றப்படுவது எளிதாக்கப்பட்டது. அதே நேரத்தில் இயக்குநர்களின் சம்மதத்தை அல்லது ஒப்புதலைப் பெறுமல் கம்பெனியின் இந்தியப் பணித்துறையைச் சார்ந்திருந் தோருக்குப் பணிக்கொடை (gratuity), ஊதிய உயர்வு (increment) ஆகியவற்றைக் கட்டுப்பாட்டு வாரியம் வழங்கக்கூடாது என்றும் இச் சட்டத்தின்மூலம் கூறப்பட்டது.

இச் சட்டத்தினுல் பெறப்பட்ட நன்மை தீமைகளின் தன்மை எத் தரப்பட்டதாய் இருந்த போதிலும், 1793ஆம் ஆண்டிற்கு முன் நிலவிய தனிப்பட்ட சூழ்நிலை நிலவரங்களுக்கு ஒப்ப பிரிட்டிஷ்

பாராளுமன்றத்தால் அஃது இயற்றப்பட்டது. எனவேதான், அச் சட்டத்தின் செய்திகள் பல ஒன்றிற்கொன்று முரண்பட்டவையாக இருந்தன. அம் முரண்பாடுகளை அகற்றி இங்கிலாந்திலிருந்த கம்பெனியின் தலைமை அரசாங்கம் மற்றும் அரசாங்க ஆட்சி அமைப்புகள் ஆகியவற்றில் பொருத்தமான சில புதுமைகளையும் மாற்றங்களையும் செய்விக்கும் வகையிலும் கம்பெனியின் உரிமைகளைப் புதுப்பிக்கும் வகையிலும் 1793-ல் சாசனச் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இயற்றப்பட வேண்டியதாயிற்று.

1793ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட சாசனச் சட்டம்

இந்திய அரசியல் மற்றும் அரசாங்க வரலாற்றில் 1784 முதல் 1858 வரையிலான 75 ஆண்டுக் காலம், இரு முக்கியச் செய்திகளின் காரணமாக மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இக்காலத்தில்தான் இங்கிலாந்தில் இருந்தபடியே கம்பெனியின் இந்திய நடவடிக்கைகளைக் கண்காணித்து, மேற்பார்வையுடன் கூடிய தனது கட்டுப்பாட்டைக் கட்டுபாட்டு வாரியத்தின்மூலம் பிரிட்டிஷ் அரசு மேற்கொள்ளத் துணைபுரிந்த பிட்டின் இந்தியச் சட்டமும், கம்பெனியின் ஆட்சியை முடித்து, இந்தியப் பிரதேசங்களைப் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடி ஆட்சிப் பொறுப்பின் கீழ் மாற்றிய 1858ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டமும் இயற்றப்பட்டன. இந்த இரு சட்ட ஆக்கங்களின் இடைப்பட்ட காலத்தில்தான், இங்கிலாந்தில் இருந்தபடியே அனுபவித்துவந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் சலுகைகள், அதிகாரங்கள் ஆகியவை மெல்ல மெல்லக் குறைந்து, அதே சமயம் படிப்படியாகத் தேர்ச்சியான ஓர் ஆட்சிமுறை இந்தியாவில் வளர்ச்சியுற்றது. எனவே, அவ்வப்பொழுது இருபது ஆண்டுகளுக்கு ஒரு முறை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் புதுப்பிக்கப்பட்ட நான்கு சாசனச் சட்டங்கள், பிட்டின் இந்தியச் சட்ட ஆக்கத்திற்கு அடுத்தபடியாக முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. இச் சட்டங்களின்மூலம் செய்யப்பட்ட திருத்தங்களும், புகுத்தப்பட்ட பல மாற்றங்களும் புதுமைகளும் 1858-ல் கம்பெனியின் இந்தியப் பிரதேச உடைமைகளும் பிற யாவும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடி ஆட்சிப் பொறுப்பிற்கு மாற்றப்படுவதற்குத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்துகொடுத்தன எனலாம்.

1784-ல் இயற்றப்பட்ட பிட்டின் இந்தியச் சட்டம் கம்பெனியின் இந்திய அரசாங்கங்கள், நிர்வாகம் ஆகியவற்றின் மீது பிரிட்டிஷ் பாராளுமன்றம் செலுத்தவேண்டிய கட்டுப்பாட்டைத் தேவையான அளவில் நிறுவிக்கொடுத்திருந்தது. ஆனல், அச் சட்டம் பிரிட்டிஷ் அரசாங்கம் எதிர்பார்த்த

அளவிற்கு மனநிறைவைத் தரவில்லை. எனவே, பிரிட்டிஷ் அரசாங்கம் ஒழுங்கும் நிறைவும் கொண்ட முழுமையானதும் சரியானதுமான கட்டுப்பாட்டைக் கம்பெனியின் காரியங்களின் மீது செலுத்திவரவேண்டிய அவசியத்தை உணர்ந்திருந்தது. அந்த அவசிய உணர்ச்சியினல் தூண்டப்பட்டு 1784ஆம் ஆண்டுக்குப் பிறகு தனக்குக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டதன்மூலம் பிரிட்டிஷ் பாராளுமன்றம் விழிப்பான துணிவை மேற்கொண்டவண்ணம் இருந்தது. இந் நோக்கம் ஈடேறிய வழியில் அமைந்த மைல் கற்களாகத் தோன்றியவையே நான்கு சாசனச் சட்டங்களாகும். எனவே, அவை இயற்றப்படுவதற்கான சூழ்நிலைகள், அவற்றின் செய்தி சாராம்சங்கள், அரசியல் அமைப்பு முறையான முக்கியத்துவம் ஆகியவற்றை இனி வரும் பக்கங்களில் காணலாம்.

1793ஆம் ஆண்டுச் சாசனச் சட்டம் இயற்றப்பட்டதற்கான சூழ்நிலைகள்

1773ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டிருந்த சாசனச் சட்டத்தின்படி, கிழக்கிந்தியக் கம்பெனி கீழை நாடுகளில் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான முற்றுரிமை இருபதாண்டுகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. 1793-ல் அவ் வணிக வர்த்தக முற்றுரிமைக் காலம் முடிவுற்றது. எனவே, கம்பெனியின் இயக்குநர்கள் தமது கம்பெனியின் வர்த்தக முற்றுரிமையை மேற்கொண்டு இருபதாண்டுகளுக்கு வழங்கிச் சாசனச் சட்டத்தைப் புதுப்பிக்குமாறு பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு விண்ணப்பித்தனர். அச் சமயம் பிட் அவர்கள் தமது பதவி அதிகாரத்தின் உச்சநிலையில் இருந்தார். அவருடைய ஆத்ம நண்பரான டுண்டாஸ் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக இருந்தார். டுண்டாஸ் அவர்கள் இந்திய விவகாரங்கள் யாவற்றிலும் தேர்ச்சியையும் அனுபவம் மிக்க அறிவையும் பெற்றிருந்தார். இவர் கம்பெனியின் வர்த்தக உரிமைகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுச் சாசனச் சட்டம் இயற்றப்படவேண்டும் என்று பெரிதும் ஆர்வம் காட்டி, இயக்குநர்களின் விண்ணப்பத்தை ஆதரித்தார். மேலும், பிரிட்டிஷ் அமைச்சர்களில் சிலர் கம்பெனியின் கோரிக்கையை ஆதரிக்கும் மனப்போக்கைக் கொண்டிருந்தனர். பேராசிரியர் K. V. புன்னையா அவர்கள் எடுத்துக்காட்டியிருப்பதைப்போல், 'க்ளாஸ்கோ (Glasgo), லிவர்பூல் (Liver pool), மான்செஸ்டர் (Manchester) ஆகிய நகரங்களில் இருந்த உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும் கீழை நாடுகளுடன் வர்த்தகத்தை மேற்கொள்ள அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தனர். கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த வர்த்தக முற்றுரிமையை நீக்கி, வர்த்தக சுதந்தரம் யாவருக்கும் வழங்கப்படவேண்டும்

என்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்டன, ஆனால், 1793ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் மக்களின் கவனமெல்லாம் ஃபிரான்சிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே நடந்துகொண்டிருந்த போர்களில் ஆழ்ந்திருந்தது. ஐரோப்பா முழுவதிலும் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டும் நோக்கத்துடன் படையெடுப்பு ஒன்றை நெப்போலியன் மேற்கொண்டார். இதனால் பிரிட்டன் தோல்வி பெற்றுவிடக் கூடாது என்று மக்கள் தமது அரசு எடுத்த முடிவுகளுக்கெல்லாம் பக்கபலமாய் நின்று, பிட்டின் அரசாங்கத்தை முழுமையாக ஆதரித்து வந்தனர். எனவே, கம்பெனியின் வணிக முற்றுரிமைக்கு எதிராக வர்த்தக சுதந்திரத்தைக் கோரியவர்களின் குரல் எடுபடாமல் போயிற்று. மேலும், கம்பெனியின் முற்றுரிமையை நீக்கி, அதனைக் கலைத்துவிடும் அளவிற்குக் கம்பெனியின் இந்திய நிதிநிலை மோசமானதாய் இருக்கவில்லை.' 1793-ல் காரன்வாலிஸ், தமது தலைமை ஆளுநர் பதவிக் காலம் முடியப்பெற்று இங்கிலாந்திற்குத் திரும்பியிருந்தார். அவர்மூலம் டுண்டாஸ், அரசியல் மற்றும் வர்த்தக நிறுவனமாகக் கம்பெனி தொடர்ந்து செயல்படச் செய்யவேண்டியதன் அவசியத்தையும், அன்று இயக்குநர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஆதரவுச் சலுகை மற்றும் அதிகாரங்கள் அவர்களிடமே தங்கியிருக்குமாறு அனுமதிக்கப்பட வேண்டும் என்பதையும் ஆதாரபூர்வமாக அறிந்துகொண்டார். அதன் பின்னர், டுண்டாஸ் ஏப்ரல் திங்கள் இருபத்துமூன்றும் நாளன்று பொதுமக்கள் அவையில் சாசன மசோதாவை அறிமுகப் படுத்தினார். அம் மசோதாவை, வாரன்ஹேஸ்டிங்ஸ், பார்வெல், ஃபிரான்சிஸ், இம்பே ஆகியோரையும் கலந்தாலோசித்து அவர்களுடைய அறிவுரைகளைக் கேட்டு, அவற்றில் ஒருமித்த கருத்தைக் காணமுடியாததால், அன்று நடைமுறையிலிருந்த கம்பெனியின் இந்திய ஆட்சிமுறை மேலும் தொடர்ந்து செயல்படுமாறு அனுமதிக்கப்படுவதே சாலச் சிறந்தது என்று கருதித் தமது கருத்தைப் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் விளக்கி விவாதித்தார். அதன் பிறகு எவ் விதமான ஆர்ப்பாட்டமும் இல்லாமல் சாசன மசோதா பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டது. பின்னர், அரசரின் கையொப்பத்தைப் பெற்று சட்டமாகிச் செயற்பாட்டிற்கு வந்தது. இல்பர்ட் அவர்கள் கூறுவதைபோல், '1793ஆம் ஆண்டின் சாசனச் சட்டம் கம்பெனியின் இந்திய விவகாரங்களைப்பற்றி இதுகாறும் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளைத் திரட்டிக் கொடுப்பதாயும், முந்தைய சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டதாயும், அதிக பக்கங்களைக் கொண்டதாயும் இருந்தது. இச் சட்டம் நிறைவேறு

வதற்குத் துணைபுரியும் வகையில் இங்கிலாந்து நாட்டின் பத்திரிகைகளும், நாளேடுகளும் எதிர்ப் பிரசாரங்களைச் செய்யாமல் கம்பெனியின் வர்த்தக முற்றுரிமை நீக்கப்படும் வகையிலோ, அல்லது பெரும்பாலோர் விழைந்திருந்த வர்த்தக சுதந்திரத்தைப் பற்றியோ பரபரப்பான செய்திகளைப் பிரசுரிக்காமல் அமைதியான சூழ்நிலையை அமைத்துக்கொடுத்தன'. இவ்வாறு பல சூழ்நிலைகளில், சந்தர்ப்ப வசதிகளுடன் இயற்றப்பட்ட சாசனச் சட்டத்தின் அம்சங்கள் பின்வருமாறு அமைந்திருந்தன.

இச் சட்டத்தின் அம்சங்கள்

கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த வர்த்தக முற்றுரிமை, மேலும் இருபது ஆண்டுகளுக்குப் புதுப்பிக்கப்பட்டு வழங்கப்பட்டது. ஆனால், இவ் வணிக முற்றுரிமைக்கு ஒரு சிறு விதிவிலக்கு செய்யப்பட்டது. அவ் விதிவிலக்கின்மூலம், கம்பெனியினரைத் தவிரச் சில தனிப்பட்ட வணிகர்கள் 3000 டன்கள் வரையிலான பொருள்களைக்கொண்டு கடல்வழிமூலம் கீழை நாடுகளுடன் வர்த்தகம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இவ் வேற்பாட்டைச் செய்துகொடுத்ததன்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த வணிக முற்றுரிமை விரைவில் நீக்கப்படுவதற்கு வழிகோலப்பட்டது.

கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் அவர்தம் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியங்கள், செலவினத்தொகைகள்' யாவும் இனிமேற்கொண்டு இந்திய நிதி மற்றும் வருவாய்களிலிருந்தே கொடுக்கப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்மூலம் 1793ஆம் ஆண்டு முதற்கொண்டு கம்பெனியின் தலைமை அரசாங்கத்தைப்பற்றிய செலவினங்களைக் கம்பெனி ஏற்கவேண்டியதாயிற்று.

கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, தகுதிகள் ஆகியவற்றில் பின்வரும் சிலமாற்றங்கள் இச் சட்டத்தின்மூலம் செய்யப்பட்டன. இதுகாறும் ஆறு உறுப்பினர்களைக் கொண்டிருந்த கட்டுப்பாட்டு வாரியம், இனி ஐந்து உறுப்பினர்களை மட்டும் கொண்டிருக்குமாறு செய்யப்பட்டது. இம் மாற்றம் வாரியத்தின் இளநிலை உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கிலிருந்து மூன்றாகக் குறைக்கப்பட்டதன்மூலம் செய்யப்பட்டது. அம் மூவரில் முதுநிலையான உறுப்பினர் வாரியத் தலைவராக்கப்பட்டார். மற்ற இரு இளநிலை உறுப்பினர்கள் அரசப்பேரவை உறுப்பினர்களாக இருக்கவேண்டிய தகுதியை இனிப் பெற்றிருக்கவேண்டியதில்லை என்று தெரிவிக்கப்பட்டது. மேலும், வாரியத்தின் செயலர்

பாராளுமன்றத்தில் அமர்ந்து காரியங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார். தமது ஊதியப்பங்கைப் பத்து சதவிகிதம் வரை உயர்த்திக்கொள்ளக் கம்பெனியின் இயக்குநர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

கம்பெனியின் நிதிகளையும் வருவாய்களையும் ஒழுங்குமுறைப் படுத்தும் வகையில் இச் சட்டத்தின்மூலம் ஒரு முயற்சி எடுக்கப் பட்டது. அதன்படி கம்பெனியின் நிதிக்கணக்குகளில் குறிப்பிட்ட ஒரு தொகை ஓர் ஆண்டு உபரியாகக் கருதப்பட்டு அதிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாய்களைப் பத்து சதவிகிதம்வரை ஊதியப் பங்குகளை (dividends) அதிகரிக்கும் வகையில் ஏற்றுக்கொள்ள (absorb) வேண்டும் என்றும் தனது கடன்களை அடைப்பதற்கு ஒவ்வோர் ஆண்டும் மற்றும் ஓர் ஐந்து இலட்சம் ரூபாய்களைக் கம்பெனி ஒதுக்கி வைக்கவேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. ஆனால், இவற்றில் எதுவும் ஈடேறவில்லை. இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்பட்டிருந்ததும், அனுப்பப்படவிருப்பது மான படைவகுப்பு அணிகளின்மீதான நடைமுறைச் செல வினங்கள் யாவற்றையும் கம்பெனியே ஏற்கவேண்டும் என்று இச் சட்டத்தின்மூலம் கூறப்பட்டது. மேலும், கம்பெனியின் முதலீட் டைப்பற்றி எதுவும் கருத்தில் கொள்ளாமல், கம்பெனியின் இந்திய வருவாய்கள் யாவற்றையும் நாட்டின் இராணுவப் பாது காப்பிற்குத் தேவை என்று கருதும்போது அவற்றை அதற்காகச் செலவழிக்கக்கூடிய அதிகாரம் அரச நிறுவனத்திற்கு வழங்கப் பட்டது.

இச் சட்டத்தின்மூலம் பிரிட்டிஷ் அரசரின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே கம்பெனியின் வங்கத்துத் தலைமை ஆளுநர், மாநில ஆளுநர்கள், முதற் பெரும்படைத்தலைவர் ஆகியோரை இயக்கு நர்கள் நியமிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இந்தியாவில் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றம், ஆளுநர்களின் ஆட்சிமன்றங்கள் ஆகிய ஒவ்வொன்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாறு இச் சாசனச் சட்டம் செய்தது. மேலும், இந்தியாவில் பன்னிரண்டு ஆண்டுகள் கம்பெனியின் பணித் துறையில் பணியாற்றியவர்களே மேற்சொல்லப்பட்ட மன்றங் களின் உறுப்பினர்களாக நியமிக்கப்படவேண்டும் என்று கட்டாய மாக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டின்மூலம் இந்திய நாட்டு விவகாரங்கள்பற்றிய அறிவும், அனுபவமும் இல்லாதவர்கள் அப் பதவிகளில் நியமிக்கப்பட்டு அதன்மூலம் ஒரு திறமையற்ற நிர்வாகம் நாட்டில் ஏற்படுவது தவிர்க்கப்பட்டது.

தமது ஆட்சி மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் அக் கூட்டங்களைத் தலைமை வகித்து நடத்த ஒரு உதவித் தலைவரை (Vice President) நியமிக்கக்கூடிய அதிகாரம் ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டது. தமது மற்ற முடிவுகளைப் புறக் கணித்து ஒதுக்கித் தள்ளக்கூடிய அதிகாரம் இதுகாறும் தலைமை ஆளுநருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தது. அவ் வதிகாரம் இச் சட்டத்தின்மூலம் மீண்டும் உறுதியாக்கப்பட்டு, தத்தம் ஆட்சி மன்றங்களுக்கு எதிராக மாநில ஆளுநர்களும் அவ் வதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்று இச் சட்டம் கூறியது. ஆனால், சட்ட ஆக்கம், வரிவிதிப்பு, நீதி பரிபாலனம் ஆகியவற்றைப்பற்றிய செய்திகளின்மீது அவர்கள் அவ் வதிகாரத்தைச் செலுத்த முடியாது என்றும் கூறப்பட்டது. இத்தகைய மறுப்பதிகாரம் பிரிட்டிஷ் உடைமைகளின் அக்கறைகள் மற்றும் அவற்றின் பாதுகாவல் போன்றவைபற்றிய சில சிறப்பான செய்திகளின்மீது மெய்ப்பாட்டுடன் அவர்களால் மேற்கொள்ளப்படுமாறு செய்யப் பட்டது. இதுவே அந்த ஏற்பாட்டின் முக்கிய நோக்கமாகும்.

போர், அமைதி, இந்திய அரசுகளுடன் மேற்கொள்ளும் உறவுகள், வருவாய்களைத் திரட்டல், அவற்றைப் பயன்படுத்தல், இராணுவங்களைப் பயன்படுத்தல் ஆகிய சிவில் மற்றும் இராணுவ அரசாங்கச் செயல்கள் யாவும் பம்பாய் மற்றும் சென்னை மாநில அரசாங்கங்களால் ஆட்சிமன்றத்துடன்கூடிய வங்கத்துத் தலைமை ஆளுநரின் முழுமையான கண்காணிப்பு, இயக்கம், கட்டுப்பாடு ஆகிய அதிகாரத்திற்கு உட்பட்டே மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. மாறாக இச் சட்டத்தின்மூலம் கம்பெனியின் சென்னை, பம்பாய் மாநிலங்களின் சிவில் மற்றும் இராணுவ அரசாங்கங்கள்மீது முழுமையான அதிகாரத்தைச் செலுத்தக்கூடிய ஆட்சிநிலை ஆட்சிமன்றத்துடன்கூடிய வங்கத்துத் தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டது. ஆட்சிமன்றத்துடன் கூடிய தலைமை ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் யாவற்றுக்கும் சென்னை, பம்பாய் அரசாங்கங்கள் அடங்கிக் கீழ்ப் படிந்து செயல்களை மேற்கொண்டே ஆகவேண்டும் என்று இச் சட்டத்தின்மூலம் நிலை நிறுத்தப்பட்டது. ஆனால், இந்த உத்தரவு கள் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட கட்டளைகளுக்குப் புறம்பானவையாக இருக்கக்கூடாது.

கம்பெனியின் இந்திய மைய அரசாங்கத்தின் அதிகாரம் மேலும் வளர்ச்சியுறும் வகையில் இச் சாசனச் சட்டம் பின்வரும் நடைமுறையை வகுத்துக் கொடுத்தது. பொதுப்படையாக வங்கத்தின் தலைமை ஆளுநர், 'இந்தியத் தலைமை ஆளுநர்' என்று

பலரால் அழைக்கப்பட்டுவந்த போதிலும், சட்ட ரீதியாக அவர் அந்த அந்தஸ்தைப் பெருதவராகவே இருந்தார். கம்பெனியின் அரசாங்கம் மற்றும் ஆட்சிச் செயல்கள் ஒருமித்து ஒன்றிப்பாக மேற்கொள்ளப்படவேண்டும் என்ற தேவையின் பொருட்டு ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்குச் சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களைக் கண்காணித்து இயக்கி, கட்டுப் பாட்டை மேற்கொள்ளக்கூடிய அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இதுவரை தலைமை ஆளுநருக்குச் சென்னை, பம்பாய் ஆகிய அரசாங்கங்களின் கம்பெனியின் பணித்துறையினருக்குக் கட்டளைகளைப் பிறப்பிக்கக்கூடிய அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இத்தகைய குறைபாட்டு நிலையின் காரணமாகவே கம்பெனியின் மைய, மாநில அரசுகளுக்கிடையே சுமுக நிலை நிலவி இருக்கவில்லை. இக் குறைபாட்டை, முடிந்த அளவிற்குத் தவிர்க்கும் வகையில், கம்பெனியின் இந்திய மைய அரசில் அதிகார நிலை வளர்ச்சியுறும் நிலையில், பின்வரும் ஏற்பாடு இச் சாசனச் சட்டத்தின்மூலம் செய்யப்பட்டது. அதன்படி, தலைமை ஆளுநர் ஏதேனும் ஒரு மாநிலத்திற்கு வருகை புரிவாரேயானல் (visit), அப்பொழுது அம் மாநிலத்து ஆளுநரைப் புறக்கணிக்கும் வகையில், மாநில ஆட்சி மன்றக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தக்கூடிய அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. இத்தகைய சமயத்தில் சம்பந்தப்பட்ட தல ஆளுநர் (Local Governor) செயலற்றவராகவே கருதப்படவேண்டும் என்று இச் சட்டத்தின்மூலம் கூறப்பட்டது. எனினும், அத் தல ஆளுநர் தமது மாநிலத்திற்கு வருகை புரிந்துள்ள தலைமை ஆளுநரின் தலைமையில் நடைபெறும் தமது ஆட்சிமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளத் தடை விதிக்கப்படவில்லை. மேலும், தலைமை ஆளுநர் கம்பெனியின் இந்திய மாநிலப் பணியாளர்களுக்கு அவர்கள் எம் மாநில அரசாங்கத்தைச் சார்ந்தவர்களாயினும், அவர்களுடைய மாநில ஆளுநர் ஆட்சி மன்றத்திற்கு முன்கூட்டிச் செய்தியறிவிப்பைச் செய்யாமல் அல்லது அதனுடன் முன்னதாகக் கலந்தாலோசிக்காது கட்டளைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டார். இவ்வாறு, தலைமை ஆளுநரால் வங்கத்திலிருந்து பிறப்பிக்கப்படும் கட்டளைகள் மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரால் பிறப்பிக்கப்படும் கட்டளைகளுக்கு இணையானவையாய் இருக்குமாறு இச் சாசனச் சட்டம் ஏற்பாட்டையும் விளக்கத்தையும் செய்து, கம்பெனியின் இந்திய மைய அரசாங்கத்தின் அதிகாரநிலை உயர்வதற்கு வழி கோலியது. இதன்மூலம் தமது தலைமை இடமான வில்லியம் கோட்டையிலிருந்து மேற்கொள்ள முடியாததாய் இருந்த தலைமை ஆளுநரின் ஆட்சிச் செயற்பாங்கு உயர்வானதாக்கப்பட்டது. மேலும், மாநில ஆட்சி மன்றங்களின் சட்டம்

இயற்றுதல், செயலாட்சி அதிகாரம் ஆகியவற்றிற்குக் குந்தகத்தை உண்டாக்காது, அதே நேரத்தில் அச் செயல்களில் முழுமையான பங்கைத் தலைமை ஆளுநர் பெறுவதற்கு மேற் சொல்லப்பட்ட ஏற்பாடு பெரிதும் துணை புரிந்தது.

அடுத்து, இதுகாறும் அலுவல் நிமித்தம் ஆட்சிமன்றத்தின் உறுப்பினர்களில் ஒருவராய் இருந்த முதற் பெரும்படைத் தலைவர், இச் சட்டத்தின்மூலம் இனி அவ்வாறு உறுப்பினராக நீடிப்பது நீக்கப்பட்டது. ஆனால், கம்பெனியின் இயக்குநர்கள் தனிப்பட்ட சில முக்கியக் காரணங்களுக்காக அவரை ஆட்சிமன்ற உறுப்பினராக நியமிக்கலாம் என்று இச் சட்டம் கூறியது.

தலைமை ஆளுநர், மாநில ஆளுநர்கள் ஆகிய இவ் விரு சாரா ருடைய ஆட்சிமன்ற உறுப்பினர்கள், முதற் பெரும்படைத் தலைவர் போன்ற கம்பெனியின் இந்திய உயர் அதிகாரிகள் எவரும் தமது பதவிக்காலம் முடியுமுன், தாயகம் திரும்பிச் செல்லும் நோக்கத்துடன் இந்தியாவைவிட்டுச் செல்லக்கூடாது என்று இச் சட்டம் புதியதொரு ஏற்பாட்டைச் செய்தது. தாயகம் திரும்ப வேண்டும் என்ற உட்கருத்தோடு இந்தியாவைவிட்டுப் புறப்படும் உயர் அதிகாரிகள் யாவரும் சட்டப்படி தத்தம் பதவிகளை இராசினாமாச் செய்ததாகக் கருதப்படுவர் என்று அவர்கள்மீது கட்டுப்பாடு செலுத்தப்பட்டு, அவர்கள் யாவரும் கம்பெனியின் இந்திய ஆட்சிச் செயல்களிலும் நடவடிக்கைகளிலும் முழுக் கவனத்தைச் செலுத்த வகை செய்யப்பட்டது. இப் புது ஏற்பாடு 1925ஆம் ஆண்டு வரை செயற்பாட்டில் இருந்தது.

கம்பெனியின் இந்தியச் சிவில் பணித்துறையினரின் படிநிலை, அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய பதவி உயர்வு ஆகியவை குறித்தும் இச் சட்டத்தில் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கம்பெனியின் சிவில் பணியாளர்களின் படிவரிசைகள் அவர்களின் முதுநிலைஆட்சி அனுபவ நியதியின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்டு நிலைப்படுத்தப்படவேண்டும் என்று விதிக்கப்பட்டது. முதுநிலை நியதி அடிப்படையிலேயே, கம்பெனியின் சிவில் பணியாளர்கள் உயர்பதவிகளுக்குப் பதவி உயர்வுகள் கொடுக்கப்படவேண்டும் என்று இச் சட்டத்தின்மூலம் வகை செய்யப்பட்டது. மேலும், பேராசிரியர் புன்னையா அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளதைப் போல் குறிப்பிட்ட ஒரு தொகையை ஆண்டு ஊதியமாகக் கொண்டுள்ள சில பதவிகளுக்கு எவர்களை, எம் முறையில் நியமிக்கவேண்டும் என்று இச் சாசனச் சட்டம் சில செய்திகளைக் கூறியது. இவற்றின்படி ஆண்டொன்றுக்கு முறையே 500, 1500,

3000, 4000 பவுன்களுக்கு ஈடான அல்லது அதிகமான வருவாய்களைக் கொண்ட பதவிகளுக்கு முறையே 3, 6, 9, 12 ஆண்டுகளுக்கு இந்தியாவில் பணியாற்றிய கம்பெனியின் ஒப்பந்தப் பணியாளர்களே (covenanted servants) அருகதையானவர்கள் என்று கருதப்பட்டு, முறையே அப் பதவிகளில் அமர்த்தப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டது. கம்பெனியின் இந்தியப் பணியாளர்கள் எவரிடமிருந்தும் எத்தகைய சன்மானத்தையும் பரிசுகளையும் விரும்பிக்கேட்பதும் பெறுவதும் ஆட்சிநடவடிக்கைக்கு உரிய தீச் செயலாகவும் குற்றமாகவும் கருதப்படும் என்று முன்பு வழக்கத்திலிருந்த சட்டச் செய்தியை மிகவும் வலிமையுடன் இச் சட்டம் மீண்டும் நிலை நிறுத்திற்று. இத்தகைய ஏற்பாடுகளின் மூலம் ஆக்க பூர்வமானதும், மன ஒழுங்கைத் (morale) தனது முதுகெலும்பாய்க் கொண்டிருக்கக் கூடியதுமான இலஞ்ச ஊழலற்ற இந்தியப் பணித்துறை உருவாவதற்கு இச் சாசனச் சட்டம் பெருந் துணைபுரிந்தது.

இதுகாறும் வங்கத்துத் தலைமை ஆளுநர் ஆட்சிமன்ற உறுப்பினர்கள், தலைமை நீதிமன்றத்து நடுவர்கள், மாநில ஆளுநர்கள் மற்றும் அவர்தம் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் ஆகியோரே அமைதி காண் நடுவர்களாகச் (Justices of Peace) செயல்படச் சட்ட ரீதியான அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தனர். ஆனால், கம்பெனியின் இந்திய மாநிலங்களில் அமைதியைப் பாதுகாத்து நிலைநாட்ட அதிக நீதிபதிகள் நியமிக்கப்படவேண்டிய சூழ்நிலை நிலவியது. எனவே, இச் சாசனச் சட்டத்தின்மூலம் மேதகு அரசரின் பெயரில், தலைமை நீதிமன்றத்தின் அதிகார முத்திரையின்கீழ் ஆணை பெற்றவர்களாக (commissioned) தேவையான நடுவர்களை நியமிப்பதற்கான அதிகாரம் மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், அவ்வாறு நியமனம் செய்யப்படும் அமைதி காண் நடுவர்கள் யாவரும் கம்பெனியின் ஒப்பந்தப் பணியாளர்களாகவோ அல்லது பிரிட்டிஷ் குடிகளாகவோ இருக்கவேண்டும் என்று இச் சட்டம் தெளிவாக்கிற்று. இவ்வாறு நியமிக்கப்படும் நடுவர்களுக்குத் தமது நீதிமுறையான அன்றாடக் கடமைகளைத் தவிர, சம்பந்தப்பட்ட தமது மாநிலங்களில் காலாண்டுப் பருவ மேல் வழக்குமன்றமாக (Quarter Sessions) கூடும்பொழுது துப்புரவுப் பணியாளர்களையும், மாநிலத் தலைநகரங்களின் தெருக்களைப் பாதுகாத்துத் தூய்மைப்படுத்திச் செப்பனிடத் தேவையான ஊழியர்களையும் நியமிப்பதற்கான அதிகாரமும் கொடுக்கப்பட்டது. இதற்கான செலவினங்களை அவர்கள் மேற்கொள்வதற்குத் தேவையான பணத்தைச் சுகாதார வரிகளை விதித்துத் திரட்டிக்கொள்ளக்கூடிய அதிகாரமும் கொடுக்கப்பட்டது.

மற்றும், மதுப்பொருள்களை, உரிய உரிமங்களைப் (licences) பெற்றபின்னரே எவரும் விற்கமுடியும் என்று இச் சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டது. இதற்கான உரிமத்தைக் கொடுக்கக் கூடிய அதிகாரம் தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டது.

இறுதியாக, இந்தியச் சுதேசி அரசுகளுடன் மேற்கொள்ளும் போர் நடவடிக்கைகள் யாவும் கம்பெனியின் அக்கறைகளுக்கும் இங்கிலாந்து நாட்டின் பெயர், மதிப்பு, புகழ் ஆகியவற்றிற்கும் உகந்தவையான செயல்களாகக் கருதப்படமாட்டா என்று மீண்டும் இச் சட்டத்தின்மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது. மேலும், கம்பெனி சம்பந்தமாக இங்கிலாந்திலும், இந்தியாவிலும் மேற்கொள்ளப்படும் செயல்கள் யாவற்றையும் குறித்து ஒவ்வோர் ஆண்டும் ஓர் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தேவையான ஏற்பாடு செய்யப்பட்டது.

1793ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தைப்பற்றிய புனராய்வு

1793ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தின் அம்சங்களும் செய்திகளும் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தபோதிலும், அவற்றின் மூலம் பெருமுக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்கள் எதுவும் கம்பெனியின் இந்திய அரசாங்கங்கள் மற்றும் ஆட்சி அமைப்புகளிலும் அவற்றின் காரியங்களிலும் ஏற்பட்டுவிடவில்லை, இச் சட்டத்தின் செயல்பாட்டின் காரணமாக ஏற்பட்ட ஒரு சில நன்மைகளைத் தவிர, அதில் காணப்பட்ட குறைபாடுகளும், அவற்றால் விளைந்த தீங்குகளும் பலவாகவும், துன்பம் பயப்பனவாகவும் துரதிர்ஷ்டவசமானவையாகவும் இருந்தன.

இந்திய மண்ணில் மேற்கொள்ளப்படும் போர் நடவடிக்கைகள், காரியங்கள் ஆகியவை தவிர்க்கப்படவேண்டும் என்று இச் சட்டத்தின்மூலம் மீண்டும் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போதிலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குறிக்கோள் உறுதியாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றிற்குப் புறம்பாக ஆக்கிரமிப்புச் செயல்கள் பல 1793-க்கு முன்பு இருந்ததைப் போலவே, இச் சட்டம் இயற்றப்பட்டதற்குப் பின்னரும் மேற்கொள்ளப்பட்டன. பிரிட்டிஷ் பாராளுமன்றம் மற்றும் கம்பெனியின் இயக்குநர்கள் ஆகியோரது இயக்கங்களும், பிறவும் கம்பெனியின் இந்திய அதிகாரிகளால் அலட்சியம் செய்யப்படுவதைத் தடுக்கத் தேவையான ஏற்பாடுகள் இச் சட்டத்தின்மூலம் செய்யப்படவில்லை. எனவே, இச் சாசனச் சட்டத்தில் கூறப்பட்டிருந்த விதிக்குப் புறம்பாக 1799-ல் மைசூர்ப் போர் மேற்கொள்ளப்பட்டு அதன்மூலம் அந்த அரசின் பெரும்பகுதி,

கம்பெனியின் பிரதேச உடைமைகளுடன் சேர்க்கப்பட்டது. 1800-ல் சூரத்தின் நவாப் ஒய்வூதியம் அளிக்கப்பட்டு அவருடைய பிரதேசங்கள் கம்பெனியினால் அபகரிக்கப்பட்டன. 1801-ல் கர்நாடக நவாப் செயலற்றவராக ஆக்கப்பட்டார். 1803-ல் ஃபரூகாபாத் (Farrukhabad) கம்பெனியின் பிரதேசங்களுடன் இணைக்கப்பட்டது. 1803–1805 ஆகிய ஆண்டுகளில் ஆக்கிரமிப்புப் போர்களை மராத்தியர்களுக்கு எதிராகக் கம்பெனியின் அரசினர் மேற்கொண்டு பயன்பெற்றனர்.

கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர்கள் மற்றும் அதன் பணித் துறையினர் ஆகியோரது ஊதியங்கள் செலவினங்கள் ஆகியவற்றுக் கான தொகைகளைக் கம்பெனியின் இந்திய அரசின் வருவாய் களிலிருந்து பெறுவதற்கு வகை செய்யப்பட்டதன்மூலம் இந் நாட்டின் மக்கள் கம்பெனியின் கொடுமையான, கடுமையான நிதி திரட்டும் நெருக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டுத் தவிக்க வேண் டியதாயிற்று. இத்தகைய நெருக்கத் தவிப்பின்மூலம் அனலில் இடப்பட்ட மெழுகாய் இந்திய மக்களின் நிலை 1919ஆம் ஆண்டு வரை இருந்தது. இதனால் இந்திய மக்களின் எதிர்ப்புகளையும் கலகங்களையும் கம்பெனியின் இந்திய அரசாங்கம் சமாளிக்க வேண்டிய நிலை இந் நாட்டில் நிலவிற்று. ஒருவிதத்தில் இத்தகைய கலவர உணர்ச்சியும், எதிர்ப்பு உணர்வும் பிற்காலத்தில் வெள்ளை யர்களை வெளியேற்றத் தேவையான தேசீய இயக்கமாக உருமாற் றத்தைப் பெறக்கூடிய நன்மையைப் பெற்றிருந்தது.

இறுதியாக, மாநிலப் பெருநகரங்களில் துப்புரவாளர்கள், தெருத்தோட்டிகள் ஆகியோரை நியமித்ததன்மூலம் மனிதனது அசுத்தப் பொருள்களை மனிதனே சுமந்து அகற்றவேண்டிய இழிநிலை தோற்றுவிக்கப்பட்டது. பெருமளவிற்குக் கட்டுப்படுத்தப் பட்டுள்ள போதிலும் இத் தீயநிலை, தொடுமைச் செயல் இன்னும் முற்றிலும் ஒழிக்கப்படவில்லை. இவ்வாறு பல்லாண்டுகளுக்கு நிலைத்து நிற்பதால் இத் தீச்செயலை ஆரம்பித்து வைத்த 1793ஆம் ஆண்டுச் சட்டம் கண்டனத்திற்கு உரியதாகக் கருதப்படுவதில் தவறில்லை. அதேநேரத்தில், கம்பெனியின் பணித்துறைகளைப் பற்றிய பதவி நியமனம், பதவிஉயர்வு, அப் பதவிகளைத் தரப்படுத்தி நிலைப்படுத்தல் ஆகியவற்றைப்பற்றிப் பல செய்திகளை இச் சட்டம் கூறிய போதிலும் தகுதிபடைத்தோர் இருந்தும்கூட, அவற்றை இந்தியர்கள் வகிப்பதற்கு எவ் வாய்ப்பும் கொடுக்கப்படவில்லை. கம்பெனியின் இந்தியப் பணித்துறைகளில் கவர்ச்சியையும் நாட்டத்தையும் அந்நியர்களான ஆங்கிலேயர் பெறுவதற்கென்றே மேற்சொல்லப்பட்ட பணிச்சலுகைகள் இச் சட்டத்தின்மூலம்

அறிவிக்கப்பட்டன. மேற்சொல்லப்பட்ட இரு செய்திகளையும் உடன்வைத்துப் பார்க்கும்பொழுது இந் நாட்டு மக்களுக்கு ஆக்கரீதியான நன்மையையும், பயனையும் செய்துகொடுக்க இச் சாசனச் சட்டம் தவறியது என்றே நாம் எண்ணவேண்டி யுள்ளது.

1793 முதல் 1813 வரையிலான இடைப்பட்ட காலத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் நான்கு சட்டங்கள் இயற்றப் பட்டு, அவற்றின்மூலம் 1793ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தின் பயனுய்ச் செயல்பாட்டிற்கு வந்திருந்த ஆட்சிமுறையில் சில சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டன.

1797-ல் இயற்றப்பட்ட சட்டத்தின்மூலம் பிரிட்டிஷ் குடிகள் முறைகேடாகவும், அனுமதியின்றியும் இந்தியச் சிற்றரசர்களுக்குக் கடன்களை வழங்கிவந்த செயல் தடைசெய்யப்பட்டது. இதே சட்டத்தின்மூலம் வங்காளத் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கை மூன்ருகக் குறைக்கப்பட்டது.

1793ஆம் ஆண்டில் காரன்வாலிஸ் தலைமை ஆளுநர் பதவியி லிருந்து ஓய்வுபெற்றுச் செல்வதற்கு முன், வங்கத்தில் இருந்த கம்பெனியின் அரசாங்கத்தின் உள்நாட்டு ஆட்சி மேலாண்மைக்கு உகந்த, ஒருமித்த ஒரு சட்டத்தொகுப்பை, இதுகாறும் சிதறிய நிலையிலிருந்த பல விதிகளைத் திரட்டியும் உள்ளடக்கியும் தயாரிக்கும் ஒழுங்குமுறை பின்பற்றப்பட்டது. இப் புதிய சட்டத்தொகுப்பு இந்தியக் குடிகளின் உயிர், உடைமை, உரிமை களைப்பற்றியதாய் இருந்தது. மேலும், இச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டிருந்த விதிகள், பிரகடனக் கட்டளைகள் ஆகியவற்றை அனுசரித்தே நீதிமன்றங்களின் தீர்ப்புகள் அமையவேண்டும் என்று கூறப்பட்டது. இச் சட்டத் தொகுப்பில் தனிப்பட்ட சட்டங் கள் (personal laws), வழியுரிமை (succession), சொத்து முறை யுரிமை (inheritance), சாதிமத வழக்கங்கள், நிறுவனங்கள் ஆகிய வற்றிற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. மற்றபடி பிற செய்தி களில் இந்தியக் குடிகளின் உயிர், உடைமை அல்லது சொத்து உரிமைகள் ஆகியவை குறித்துச் செய்யப்படும் சட்டங்கள் யாவும் இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சடித்து அறிவிக் கப்படவேண்டும் என்றும், அத்தகைய சட்டங்கள் எவ் வாதாரங் களின் அடிப்படையில் இயற்றப்பட்டன என்ற அறிக்கைகளைக் கொண்டிருக்கவேண்டும் என்ற அவசியத்தையும் அது வெளிப்படுத் திற்று. இதன்மூலம் தாம் பெற்றிருந்த உரிமைகள், சலுகைகள், சட்ட விலக்களிப்புகள் (immunities) ஆகியவற்றை இந்தியக் குடி மக்கள் பரிபூரணமாக அறிந்துகொள்ள வகை செய்யப்பட்டது.

மேலும், அத்தகைய சட்டத் தொகுப்புகளில் தேவையான சமயங்களில் உரிய திருத்தங்களைச் செய்வதற்கும் வகை செய்யப்பட்டிருந்தது. இதன்மூலம் முந்தைய வங்க அரசர்களின் தனிப்பட்ட விதிகளுக்கு உட்பட்டிருந்த அரசாங்கம் இனி எழுதப்பட்ட சட்டங்கள் (written laws), விதிகள், ஒழுங்குமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் செயல்படுவதற்கான அடித்தளம் நாட்டப்பட்டது. எனினும், அத்தகைய சட்டங்களையும், விதிமுறைகளையும் கம்பெனி அரசாங்கத்தின் நீதிமன்றங்கள்தாம் பொருள் விளக்கம் செய்யமுடியும் என்ற ஏற்பாடும் இருந்தது. ஆனால், இவை யாவும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் சட்டத்தின்மூலம் ஏற்கப்படாமலும், உறுதியாக்கப்படாமலும் இருந்தன. இக் குறைகள் 1793ஆம் ஆண்டுச் சட்டத்தின்மூலம் நீக்கப்பட்டன.

1799-ல் செய்யப்பட்ட மற்றொரு சட்டத்தின்மூலம் இந்தியாவில் பிரிட்டிஷ் படைகளை உருவாக்கிப் பராமரிப்பதற்கான அதிகாரம் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது. 1800ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட மற்றொரு சட்டத்தின்மூலம் சென்னை அரசாங்கத்தின் தலைமை நீதிமன்றத்தின் ஆட்சி எல்லையை பனாரஸ் மாவட்டத்தையும் உள்ளிட்டிருக்குமாறு விஸ்தரித்தது.

பின்னர், 1807ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டம் சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களின் ஆளுநர்களுக்கும் அவர்தம் ஆட்சி மன்றங்களுக்கும், வங்கத்து அரசாங்கம் இதற்குமுன் பெற்றிருந்ததைப்போல், ஒழுங்குமுறைகளை (regulations) உருவாக்கிக் கொள்ளக்கூடிய அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆனால், அத்தகைய ஒழுங்குமுறைகள் யாவும் முறையே, சென்னையில் அதன் தலைமை நீதிமன்றத்தாலும், பம்பாயில் அதன் பதிவாளர் நீதிமன்றத்தாலும் (Recorders Court) ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட பின்னர்தான் நடைமுறைக்கு வரமுடியும் என்று வகை செய்யப்பட்டது.

பிரிவு 5

சாசனச் சட்டங்களும் கம்பெனி அரசாங்க முடிவின் துவக்கமும்

17. 1813ஆம் ஆண்டுச் சாசனச் சட்டமும் இந்திய அரசாங்கமும்

கீழை நாடுகளுடன், குறிப்பாக இந்தியாவுடன் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான வணிக முற்றுரிமை கொடுக்கப்பட்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய அரசியல் மற்றும் அரசாங்க வரலாற்றில் 1813ஆம் ஆண்டு ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது. இதனை 1813ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சாசனச் சட்டத்தின் பல ஷரத்துகளும் செய்திகளும் நமக்கு அறிவிப்பதாய் உள்ளன. 1793ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தைவிட 1813ஆம் ஆண்டுச் சட்டம் பல செய்திகளின் காரணமாக வெகு முக்கியமானதாக உள்ளது. இச் சட்டத்தின் மூலம் இந்தியாவுடன் வர்த்தகத்தை மேற்கொண்டிருந்த கம்பெனியின் வணிக முற்றுரிமை புதிதாக இங்கிலாந்தில் மட்டுமன்றி இந்தியாவிலும் எழுந்திருந்த பல சூழ்நிலைகளால் முற்றிலும் நீக்கப்பட்டது. 'இனி மேற்கொண்டும் இந்தியர்களின் பொது நலத்தைப் பேணாத வகையில் சட்ட ஆக்கங்களைப் பிரிட்டிஷ் அரசு மேற்கொள்ளலாகாது' என்ற அடிப்படையான உணர்வு உலகறிய வெளிப்பட்ட முக்கியத்துவத்தையும் இச் சாசனச் சட்டம் பெற்றிருந்தது. எனவே, இச் சட்டம் எவ் வரசியல் சூழ்நிலைகளில், எக் காரணங்களின் அடிப்படையில் இயற்றப்பட்டது என்பதை விளக்கி, அதன் முக்கிய அம்சங்களை அறியவேண்டியது அவசியமாகும்.

ஆழிசூழ் இப் பூமியில் ஐரோப்பியக் கண்டம் என்றுமே தனித்ததொரு இடத்தைப் பெற்று வந்துள்ளது. அதற்கென ஒரு வரலாறும் உண்டு. அவ் வரலாற்றைப் படிக்கும் எவரும், 19ஆம் நூற்றுண்டின் முதற் பத்தாண்டுகள் மிகவும் நெருக்கடியானதும் கடுஞ்சோதனை மிக்கதாகவும் இருந்தது என்பதை மறுக்க முடியாது. இக் கருத்தைக் கெட்டில்பி (Kettelby), டாட்வெல் போன்ற அறிஞர் பெருமக்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். ஐரோப்பிய வரலாற்றில் மேற்சொல்லப்பட்ட காலம் பெருஞ் சோதனை மிக்கதாக இருந்ததால் ஐரோப்பாக் கண்டத்தின் ஓர் அங்கமாக உள்ள பிரிட்டனின் அன்றைய அரசியல் அந்தஸ்து, பிரிட்டிஷ்காரர்களின் வெளிநாட்டு வணிக வர்த்தகக் காரியங்கள் ஆகிய யாவும் இடர்ப்பாடுகளுக்கு உள்ளாயின. ஐரோப்பியக் கண்டத்தின் பெரும்பகுதி நெப்போலிய மாமன்னரின் ஏகாதி பத்தியக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப்பட்டிருந்தது. பிரிட்டன் அன்று பெற்றிருந்த வணிகச் செல்வாக்கை வற்றிப் போகுமாறு செய்யவேண்டும் என்ற வளைந்து கொடுக்காத குறிக் கோளை நெப்போலியன் பெற்றிருந்தார். இக் குறிக்கோள் வெற்றி யைத் தழுவும் வகையில் நெப்போலியன் பிரிட்டிஷ்காரர்களின் வணிகச் சரக்குக் கப்பல்கள், தமது ஏகாதிபத்திய உரிமையின்கீழ் வந்திருந்த ஐரோப்பியத் துறைமுகங்களின் வழியாகச் செல்லக் கூடாது என்று தடை விதித்ததோடு, அத் துறைமுகங்கள் யாவற் றையும் சரக்குக் கப்பல் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதபடி அடைத்தும் விட்டார். நெப்போலியனின் இச் செய லால் ஐரோப்பியத் துறைமுகங்களின் வழியாக மேற்கொள்ளப் பட்டுவந்த பிரிட்டிஷ் வர்த்தகம் பாதிக்கப்பட்டுப் பெருஞ் சோதனைக்கு உரியதாயிற்று. இதனுல் பிரிட்டிஷ் வணிகர்களும் வியாபாரிகளும் தமது இழப்பை ஈடுகட்டிக்கொள்ளும் வகையில் ஐரோப்பாவிற்கு வெளியே புதிய சந்தைகளை நாடவேண்டியவர் களானுர்கள். இத்தகைய சூழ்நிலை, கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த முற்றுரிமையைத் தகர்த்தெறிவதற்கான வாய்ப்பைத் தனிப்பட்ட பிரிட்டிஷ் வணிகர்களுக்குக் கொடுத்தது. அவர்கள் யாவரும் இந்தியாவுடன் வர்த்தகத்தை மேற்கொள்வ தற்கு வாய்ப்பையும், உரிமையையும் கோரினர். தனியார் நிறுவனங்கள் மூலமும் தனிப்பட்ட நபர்கள் மூலமும் மேற் கொள்ளப்பட்டுவந்த பிரிட்டிஷ் வணிகம், தொழில் ஆகியவற்றை மேற்சொல்லப்பட்ட நெப்போலியனின் திட்டத்திலிருந்து காப்பாற்றவேண்டிய நெருக்கடிநிலை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எழுந்தது. மேலும், தனிப்பட்ட பிரிட்டிஷ் வர்த்தகர்களின் கோரிக்கை மிகவும் வலிமைபெற்றதாய் இருந்தது. அக் கோரிக்கையை பிரிட்டிஷ் அமைச்சர்கள் புறக்கணிக்க

முடியாதபடி பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் பலரும், பிரிட்டிஷ் சமுதாயத்தில் செல்வாக்கைப் பெற்றிருந்தவர்களும், பொதுமக்களும் அதனை ஆதரித்தனர். இப்படிக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த முற்றுரிமைக்கு மேலும் வக்காலத்து வாங்கக்கூடியவர்கள் இல்லாதிருந்த நிலையில் சந்தர்ப்பச் சூழ்நிலை காரணமாக 1813ஆம் ஆண்டில் கம்பெனியின் சாசனச் சட்டம் புதுப்பிக்கப்பட வேண்டியதாயிற்று.

ஏறத்தாழ அதேசமயத்தில் ஆடம் ஸ்மித் (Adam Smith) என்னும் பேரறிஞரின் 'அரசின் தலையிடாக் கோட்பாடு' (Laissez-Faire) பிரிட்டிஷ் மக்களின் மனத்தையும், கவனத்தையும் மிக அதிகமாகக் கவர்ந்திருந்தது. 'ஒரு நாட்டின் பொருளாதாரத் தேர்ச்சியும் வளர்ச்சியும், அதன் அரசு தன் குடிகளின் பொருளாதாரத் துணிபுகளிலும், காரியங்களிலும் எத் தலையீட்டையும் செய்யாமல் இருந்தால்தான் முனைப்பாய் இருக்கும்' என்று ஆடம் ஸ்மித்தின் கோட்பாடு அறிவித்தது. இதற்கான ஆதரவு இங்கிலாந்து நாடுமுழுவதும் காட்டுத் தீப்போல் பரவியிருந்தது. எனவே, சுதந்திரமான ஒரு நாட்டில் வணிக முற்றுரிமை கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மேலும் அனுமதிக்கப்படுவது, அந் நாட்டு நலனுக்கு உகந்ததன்று என்பது எல்லோராலும் குறிப்பாக, பாராளுமன்றத்தினரால் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்தது. இவற்றையும் இவற்றிற்கு ஆட்பட்டிருந்த பொதுமக்கள் விருப்பத்தையும் பிரிட்டிஷ் பாராளுமன்றம் புறக்கணிக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை.

மற்றொரு விதத்தில் 19ஆம் நூற்றாண்டின் துவக்க காலம் முக்கியமானதாகவும் இருந்தது. கிறித்துவ மதம் பெரிதும் வேரூன்றி, அதைப் பரப்புவதற்கான நடவடிக்கைகள் இங்கிலாந்திலிருந்த கிறித்தவ மதத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கிறித்தவமத குருமார்களுக்கும், அனுதாபிகளுக்கும் வில்பர் ஃபோர்ஸ் (Wilber Force) அப்பொழுது தலைவராக இருந்தார். இவரும், பிற கிறித்தவமத அனுதாபிகளும் கம்பெனி அரசாங்கத்தின் நிமித்தம் இந்தியாவில் கிறித்தவ மதம் பரவுவதற்கான முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கோரினர். இதற்கும் பிரிட்டிஷ் மக்களின் பொதுவானதும், பரவலானதுமான ஆதரவு இருந்தது. கம்பெனியின் இந்திய அரசாங்கம் இதற்கு முழுமையாகத் துணை நிற்கவில்லை. எனினும், கல்கத்தாவில் ஒரு தலைமைக் குரு எனப்படும் மேற்றிராணியாரையும் (Bishop) திருக்கோயில் மணியக்காரர்களையும் (Archdeacons) கம்பெனியின் அரசாங்கம் நியமித்தது. இதற்குமேல், மத

வளர்ச்சி மற்றும் பிரசாரம் குறித்து வேறெந்தக் காரியத்தையும் மேற்கொள்ளவோ, அவற்றிற்கான அனுமதியைப் பிறருக்குக் கொடுக்கவோ கம்பெனியின் அரசாங்கம் விரும்பவில்லை. அவ்வாறு செய்யின் இந்தியக் குடிமக்களின் மத உணர்ச்சி வெகுண்டெழுந்து, அதனால் கம்பெனியின் இந்திய உடைமைகளுக்கே ஆபத்து ஏற்படக்கூடும் என்று கம்பெனியின் அரசு கருதியது. ஆனால், பாமர மக்களின் ஆதரவை இங்கிலாந்தில் பெற்றிருந்த மதத் தலைவர்கள், கம்பெனியின் அரசாங்கத்தைச் சாடித் தமது கோரிக்கையைப் பாராளுமன்றத்தின்மூலம் நிறைவேற்றிக் கொள்வதற்கான தருணத்தை நாடி இருந்தனர். அத் தருணத்தை 1813-ல் அவர்கள் பெற்றனர். எனவே, 1813-ல் அவர்களுடைய கோரிக்கைக்கு பிரிட்டிஷ் பாராளுமன்றம் செவி சாய்த்து, அதன்மூலம் இந்தியாவில் கிறித்தவ சமய நிறுவனங்களால் பல காரியங்கள் மேற்கொள்ளப்பட வழிவகை செய்யும் வகையில் சட்டம் ஒன்றைச் செய்யவேண்டியிருந்தது.

1793 முதல் 1813 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட இருபது ஆண்டுகளில் கம்பெனியின் இந்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்த படையெடுப்பு, ஆக்கிரமிப்புச் செயல்களும், கம்பெனியின் நிதி நிலவரமும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் எளிதில் புறக்கணிக்கப்படுபவையாய் இருக்கவில்லை. இந்த இருபதாண்டுக் காலத்தில், பேராசிரியர் புன்னையா அவர்கள் எழுதியிருப்பதைப் போல் பஞ்சாப், சிந்து, நேபாளம் ஆகியவற்றைத் தவிர ஏனைய இந்தியப் பிரதேசங்களில் அப்பொழுது தலைமை ஆளுநர்களாய் இருந்த வெல்லெஸ்லி, ஹேஸ்டிங்ஸ்பிரபு ஆகியோருடைய செயல்களின் காரணமாகப் பிரிட்டிஷ் உயர் இறைமை நேரிடையாகவும், மறைமுகமாகவும் கொண்டு வரப்பட்டிருந்தது. இந் நாடு முழுவதையுமே தனது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்துவிட வேண்டும் என்ற குறிக்கோளில் முனைப்பாகவும், மூர்க்கத்தனமாகவும் கம்பெனியின் இந்திய அரசு செயல்பட்டு வெற்றி மேல் வெற்றி பெற்றுவந்தது. இருக்குமிடம் தெரியாமல் போய்விட்டிருந்த மொகலாயர்களால் தோற்றுவிக்கப்பட்டிருந்த அதிகாரச் சூனியத்தை உரிய முறையில் முன்பிருந்ததைவிட மேலும் அதிகமாக நிரப்ப வேண்டிய நிலையில் கம்பெனி இருந்தது. ஏனைய இந்தியச் சிற்றரசர்கள் கம்பெனியின் அரசின் கீழ்ச் சாதாரணக் குத்தகைக்காரர்களைப்போல் பதவி நிலைகளை இழந்திருந்தனர். இவ்வாறு கம்பெனியின் ஆதிக்கமும், அதிகாரமும் அதன் இந்தியப்பிரதேச உடைமைகளின் எண்ணிக்கை விஸ்தரிப்பும் வளர்ந்துகொண்டிருந்த நேரத்தில், இங்கிலாந்தில் அச் செயலுக்கு எதிராகப் பொறுமையும், சீற்றமும் அதிகரித்தவண்ணம் இருந்தன.

இதனால் பிரிட்டிஷ் அரசியல் வாதிகளும் பொது மக்கள் பலரும் கம்பெனி முழுமையாகக் கலைக்கப்படவேண்டும், அல்லது அதற்குக் கொடுக்கப்பட்டிருந்த முற்றுரிமைகளேனும் அறவே நீக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினர்.

பல காரணங்கள், சூழ்நிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பெருஞ்செலவினப் போர்களைக் கம்பெனி, இந்தியாவில் மேற் கொண்டமையால், 19ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் முதல் அதன் கடன் சுமை மிகவும் அதிகரித்தவண்ணம் இருந்தது. 1805ஆம் ஆண்டின் முடிவில் கம்பெனி இருபத்தொரு மிலியன் பவுன்களை, முன்பிருந்ததைவிட இருமடங்கான நிலையில், தனது கடன் சுமையாகப் பெற்றிருந்தது. இத்தகைய கடன் சுமையால் கம்பெனி காலாவதியாகி மறைந்துவிடுமோ என்று அஞ்சக்கூடிய நிலையும் இருந்தது எனலாம். இதற்கு இடையே பிரிட்டிஷ் அரசாங் கத்திற்குக் கிழக்கிந்தியக் கம்பெனி 1, 200,000 பவுன்களை முன்பு கடனாகக் கொடுத்திருந்தது. தற்பொழுது தனக்கேற்பட்டிருந்த கடன் சுமை, நிதி நெருக்கடி ஆகியவற்றின் காரணமாகவும், தனது வர்த்தகத்தில் இலாபச் சரிவையும், பொருளீட்டக் குறைவையும் பெற்றிருந்த காரணத்தாலும், கம்பெனியின் இயக்குநர்கள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திடம் நிதி உதவியை நாடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயினர். எனவே, கம்பெனியின் இயக்குநர் கள் பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுக்கவேண்டியிருந்த 1, 200,000 பவுன்களோடு அதற்கு ஈடான மற்றுமொரு 1,200,000 பவுன் களையும் சேர்த்துக் கடன் அல்லது நிதி உதவியைக் கேட்டு விண்ணப் பித்தனர். இவ்வாறு, கம்பெனியின் இயக்குநர்கள் கடன் கோரி விண்ணப்பித்ததின்மூலம் பாராளுமன்றம், கம்பெனியின் இந்திய விவகாரங்களிலும், நிர்வாகத்திலும் கவனத்தைச் செலுத்தியது. கம்பெனியின் கஷ்டத்திற்குத் தனது நிவாரணத்தைக் கொடுத்துத் தீர்வுகாணும் முயற்சியில் முதற்கட்டமாக, 1808ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் அவை ஒரு பொறுக்குக் குழுவை (Select committee) அமைத்தது. மேலும், கம்பெனியின் நிலவரங்கள் இந்தியாவில் எவ்வாறு உள்ளன என்பதை அலசி ஆராய்ந்தும், தீரவிசாரித்தும் தனது அறிக்கையை அளிக்குமாறு அப்பொறுக்குக் குழுவைப் பணித்தது. இக் குழு நான்காண்டுகள் செயல்பட்டு, ஐந்து அறிக்கைகளைச் சமர்ப்பித்தது. அவற்றுள் ஐந்தாவது அறிக்கை அன்று இந்தியாவில் செயற் பாட்டில் இருந்த கம்பெனியின் நிலத்திட்டங்கள் (land tenure) நீதித்துறை மற்றும் காவல் ஏற்பாடுகள் ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றின் குறைபாடுகளை ஆணித்தரமாக எடுத்தியம்பியது[1] இவ்

[1] S. C. Ilbert, 'The Government of India'—p. 73

வறிக்கையேயன்றி ஏனைய அறிக்கைகளும், கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சி முறையின் பலவீனத்தையும், குறைகளையும் வெளிப்படுத்தி, கம்பெனியின் காரியங்களில் உடனடியாகப் பாராளுமன்றம் தலையிட்டு உரிய சீர்திருத்தக் காரியங்களை மேற்கொள்ளுமாறு செய்தன.

இதுகாறும் சொல்லப்பட்ட சூழ்நிலைகள் நிலவரத்திலிருந்த பொழுது, 1812ஆம் ஆண்டில் கம்பெனியின் இயக்குநர்கள் அன்று நடைமுறையிலிருந்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே தமக்கு அளிக்கப்பட்டிருந்த சாசனம், மேற்கொண்டு இருபதாண்டுகளுக்குப் புதுப்பிக்கப்பட்டு அளிக்கப்படவேண்டும் என்று விண்ணப்பித்தனர். ஆனால், எடுத்த எடுப்பிலேயே கம்பெனிக்கு அளிக்கப்பட்டிருந்த சாசனத்தைப் புதுப்பிக்க முடியாது என்று, இயக்குநர்களின் கோரிக்கையை பிரிட்டிஷ் அமைச்சரவை (Cabinet) நிராகரித்தது. எனினும், கம்பெனியின் இயக்குநர்கள் விடாப்பிடியாக விவாதத்தில் இறங்கினார்கள். அதே நேரத்தில் கம்பெனியின் வர்த்தக முற்றுரிமைக்கு எதிராக இந்தியாவில் வர்த்தகத்தை மேற்கொள்ளப் பெரும்பாலோர் விழைந்து விண்ணப்பங்களைச் செய்திருந்தனர். இங்கிலாந்தின் தனிப்பட்ட வர்த்தகர்களும், பொருள் உற்பத்தியாளர்களும் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த பொருளாதாரத் துணிபுகளிலும் செயல்களிலும் தமக்கும் பங்களிக்கவேண்டும் என்று கோரினர். இவ்வாறு, வணிகர்களின் கோரிக்கை ஒருபுறம் வற்புறுத்தப்பட, மறுபுறத்தில் கிறித்தவ மத அனுதாபிகள் தமது மதப் பிரசார சம்பந்தமான காரியங்கள் மேற்கொள்ளப்பட அனுமதி கோரி பிரிட்டிஷ் அரசை மிகவும் நெருக்கினர். மேலும், கம்பெனி அரசாங்கத்தின் திறமையின்மையும், ஊழல்களும் அம்பலமாயின. எனவே, பலரும் கம்பெனியின் இந்திய நிர்வாகத்தைப் பெரிதும் தாக்கி, அதன் ஆட்சிக் கட்டுமானத்தில் மாட்சிமை தங்கிய சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினர். இவ் வெதிர்ப்புகள் யாவற்றையும் சமாளித்துத் தமது நிலையையும், வாய்ப்புகளையும் நிலைநிறுத்திப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் கம்பெனியினரும் பல வாத விவாதங்களை மேற்கொண்டனர். தமது வாத விவாதங்களில், இந்திய அரசாங்கத்தை ஒழுங்கான முறையில் தேர்ச்சியாக நடத்திச் செல்வதற்குத் தேவையான வருவாய்களை அவர்கள் இந்தியாவில் ஈட்ட முடியவில்லை என்று எடுத்துக் கூறினர். இதனால், கம்பெனியின் வணிக முற்சலுகைகள், அதன் அரசியல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளிலிருந்து பிரிக்கப்படக்கூடாது என்று கம்பெனியினர் எடுத்தியம்பினர்.

இவற்றைத் தவிர, கம்பெனியின் இயக்குநர்கள் மற்றுமொரு காரணத்தையும் எடுத்துக் கூறினர். அஃதாவது தம்மையன்றிப் பிற ஆங்கிலேயர் யாவருக்கும் கீழை நாடுகளின் வர்த்தக வாய்ப்பு விஸ்தரிக்கப்பட்டு அனுமதிக்கப்படுமாயின், அதனுல் எண்ணிலடங்காத பலர் இந்தியாவில் குடியேறி இந்திய மக்களைச் சுரண்டலுக்கு உள்ளாக்கி இன்னல்களை ஏற்படுத்திவிடுவர் என்று கூறினர். மேலும், அவர்களை நியாய நேர்மை நீதிகளுக்கு உட்படுத்துவதில் பேரின்னல்கள் ஏற்படும் என்றும் வாதிட்டனர். இக் கருத்திற்கும் நோக்கிற்கும் உடன் நிற்கும் வகையில் வாரன்ஹேஸ்டிங்ஸ், கர்னல் மால்கம், கர்னல் மன்றோ, சார்லஸ் கிராண்ட் ஆகியோருடைய சாட்சியக் கருத்துகளை முன்வைத்து, அவற்றின் அடிப்படையில் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த வர்த்தக உரிமைகள் எக் காரணத்தைக் கொண்டும் பறிக்கப்படலாகாது என்றும் வாதிட்டனர். தமது வாதங்கள் யாவும் புறக்கணிக்கப்பட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் காரியங்களை மேற்கொள்ளுமாயின் அல்லது சட்ட ஆக்கத்தைச் செய்யுமாயின் அதனுல் விபரீத விளைவுகள் ஏற்படும் என்று கூறி, கம்பெனியின் இயக்குநர்கள் வாதிட்டனர்.

கம்பெனி இயக்குநர்களின் வேண்டுகோள்களுக்கு மறுமொழி கூறும் வகையில், கம்பெனியின் எதிரிகள் தமக்கே உரித்தான முறையில் பின்வரும் சிலசெய்திகளை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கவனத்தின் முன்வைத்தனர். இந்தியாவுடன் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான முற்றுரிமை கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்ததன் காரணமாக அதன் அரசியல் மற்றும் ஆட்சி அமைப்புகள் மிகவும் தாறுமாருக, குறைபாடுகள் மலிந்த நிலையில் செயல்பட்டன. எனவே, அவ் வர்த்தக முற்றுரிமையின் பயனுய் யாவரும் எதிர்பார்த்த அளவுக்கு இலாபங்களையும், பொருளீட்டத்தையும் செய்து, கம்பெனியின் நிர்வாகம் செயல்படவில்லை என்றும், அதனுல் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குப் போதுமான நன்மையைப் பயக்கக்கூடியதாய்க் கம்பெனியின் வணிக முற்றுரிமை இருக்கவில்லை யென்றும் பலராலும் எடுத்துக்காட்டப்பட்டன. மேலும், இந்தியாவிலிருந்து கிடைத்த வருவாய்களைத் தமது முதலீடுகளாகக்கொண்டு, தமது செல்வநிலையைக் கம்பெனியினர் பெருக்கியவண்ணம் இருந்தனர் என்றும் எடுத்துக்காட்டப்பட்டது. அடுத்து, ஆங்கிலேயர் யாவரும் வர்த்தகம் மற்றும் மதப்பிரசாரம் ஆகியவற்றின் காரணமாக இந்தியாவிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்களாயின் அதனுல் ஏற்படும் விளைவுகள் அஞ்சத்தக்கவையாய் அமையும் என்ற கம்பெனி ஆதரவாளர்களின் வாதமும் மறுக்கப்பட்டது. தகுந்த வரையறைகளுக்கு அல்லது தடைவரம்புகளுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அக்கறை கொண்ட

ஆங்கிலேயர் இந்தியாவுடன் உறவுகொள்ள அனுமதிக்கப்படுவதில் எத் தவறும் நேரமுடியாது என்று பெரிதும் எடுத்தியம்பப்பட்டது. இதன்மூலம் இந்தியாவிற்கு வர்விரும்பிய மேற்கூறியவர்கள் போன்றோருடன் கம்பெனியினர் சமரசமான சுமுகஉறவு ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது இன்றியமையாதது என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்கூறிய செய்திகளேயன்றிக் கம்பெனியின் எதிர்ப்பாளர்கள் வேறுபல செய்திகளேயும் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த வணிக முற்றுரிமைக்கு எதிராக எடுத்துக் கூறினர். இந்திய வர்த்தகம், கம்பெனிக்கு மட்டுமன்றி அக்கறைகொண்ட பிரிட்டிஷ் மக்கள் யாவரும் அனுமதிக்கப்படுவதன்மூலம் பல நன்மைகள் கிட்டும் என்று எடுத்தியம்பினர். இந்தியாவுடன் வியாபாரத்தை மேற்கொள்ளுவதற்குத் தமக்கும் அனுமதிகள் வழங்கப்படுவதன் மூலம், தம்மையன்றிப் பிற ஐரோப்பியர்கள் அல்லது இங்கிலாந்தைத் தவிர்த்த பிறநாடுகள் இந்திய வர்த்தகத்தைப் பிடிப்பதை அல்லது அதில் தலையிடுவதைத் தடுக்கமுடியும். எனவே, கம்பெனியினரைத் தவிரப் பிற ஆங்கிலேயரும் இந்திய வர்த்தகத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவதன்மூலம் பிரிட்டிஷ் வணிகமும் தொழில் துணிவுகளும் வெகுவாகப் பரவி வளர்ச்சியையும் தேர்ச்சியையும் பெறும் என்று அவர்கள் எடுத்தியம்பினர். இவைகளேயன்றிப் பண்டக சாலைகள் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றின் செலவினங்கள் குறித்தும் பெருஞ் சுமையைக் குறைத்துவிடக்கூடிய அனுகூலம் கிடைக்கப்பெறுவதுடன், இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்களை வெகு சகாயமாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யமுடியும் என்று ஆணித்தரமாக எடுத்தியம்பப்பட்டு வாதிடப்பட்டது.

இவ்வாறு வாத விவாதங்கள் பல மேற்கொள்ளப்பட்டிருந்த பொழுது கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த சாசனம் புதுப்பிக்கப்படுவதற்கான மசோதா பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. அதனோடு மேற்சொல்லப்பட்ட வாத விவாதச் செய்திகள் யாவற்றையும் பிரிட்டிஷ் அரசாங்கம் கவனமாய் ஆராய்ந்து, பதின்மூன்று தீர்மானங்களைப் பாராளுமன்றத்தின் முன் வைத்தது. அத் தீர்மானங்களின் அடிப்படையில் மேற்சொல்லப்பட்ட மசோதா பாராளுமன்றத்தின் ஈரவைகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. பின்னர், அரச கையொப்பத்துடன் 1813ஆம் ஆண்டுச் சாசனச் சட்டமாகச் செயல்பாட்டிற்கு வந்தது. இச் சாசனச் சட்டத்தின்மூலம் அமைந்த கம்பெனியின்

அரசாங்கச் செய்திகள் பின்வரும் அம்சங்களைக் கொண்டவை யாயிருந்தன.

இச் சட்டத்தின் அம்சங்கள்

இச் சட்டத்தின்மூலம் இதுகாறும் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த சாசனம் அல்லது பட்டயம் மேற்கொண்டு இருபது ஆண்டுகளுக்குப் புதுப்பிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டது. அதனுடன் இந்தியாவில் கம்பெனியால் கைப்பற்றப்பட்டிருந்த பிரதேசங்கள்மீது பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் இறைமை எந்த ஐயப்பாடுமின்றி நிலை நிறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் கம்பெனிக்கு இந்திய உடைமைகள் மற்றும் வருவாய்கள் குறித்துச் சலுகைகளும் அதிகாரங்களும் அனுமதிக்கப்பட்டன. அஃதாவது தனது இறைமை நிலைநிறுத்தத்திற்கு ஏற்பக் கம்பெனியினர் மேற் கொண்டு இந்தியாவில் ஆட்சி முறையான எல்லாக் காரியங்களை யும் மேற்கொள்ளமுடியும் என்று அரசியல் சாசன முறையான செய்தித் தெளிவு செய்யப்பட்டது. இதன்மூலம் 18ஆம் நூற்றாண்டு முழுவதும் எழுந்த பல சச்சரவுகளுக்கும், சங்கடங் களுக்கும் முடிவு கட்டப்பட்டது. இவ்வாறு பாராளுமன்றம் 1813ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தின்மூலம் தனது இறைமை நிலையை நிலைநிறுத்தியது. அதனை 1814-ல் பாரிஸ் உடன்படிக்கை (Treaty of Paris) வாயிலாக ஃபிரான்ஸ், ஹாலந்து ஆகிய நாடுகளை உள்ளிட்ட அரசியல் செயல்திறம் பெற்றிருந்த உலகம் முழுவதற் கும் முறையாக அஃது அறிவித்தது. இவ்வாறு இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இறைமை நிலை மற்ற நாடுகளுக்கும் அறிவிக்கப்பட்டதால் அன்று இங்கிலாந்தின் ஏகாதிபத்திய அரசி யலுக்கு இணையாகக் கீழை நாடுகளில் காரியங்களை மேற்கொண் டிருந்த ஃபிரெஞ்சுக்காரர்களையும், டச்சுக்காரர்களையும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மெய்ப்பாட்டு நிலையை அங்கீகரிக்குமாறு செய்தது. இம் மெய்ப்பாட்டுநிலை உலகம் அறியுமாறு செய்யப்பட்டதன் மூலம் வெகுவிரைவில் மொகலாயப் பேரரசரின் இறைமைப் போர்வைக்குள் புகுந்திருந்தவண்ணம் செயலாற்றி வந்த பிரிட்டிஷ் அரசாங்கம் அப் போர்வையை அகற்றி வெளிப்படை யாகத் தனது உண்மை இறைமை நிலையை வெளிப்படுத்த முடிந்தது. எனவேதான் 1835ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசரின் உருவத்தையும் முகட்டு வரைவையும் (superscription) தாங்கிய வண்ணம் செலாவணிக்குரிய நாணயங்களைக் கம்பெனி வெளியிட முடிந்தது. இதன்மூலம், படிப்படியாகப் பெயரளவில் செயல் பட்டுவந்த மொகலாயப் பேரரசரின் இறைமையையும், அவருடைய வாரிசுரிமையைப் பற்றியிருந்த அந்தஸ்தையும் குறைத்து, இறுதி யாத 1858-ல் முற்றிலும் ஒழித்துவிடக்கூடிய இறைமை ஏற்றநிலை

கம்பெனிக்கும், கம்பெனியின்மூலம் பிரிட்டிஷாருக்கும் கிட்டியது. பேராசிரியர் டாட்வெல் அவர்கள் எடுத்துக்காட்டியிருப்பது போல், 'அரசியல் மற்றும் சட்டமுறையான மொகலாய இறைமை 1858க்குப் பின்னர் எச் சச்சரவிற்கும் இடமில்லாத வகையில் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் உரிமைப் பொருளாக மாறி விட்டது. இதற்கு வழிவகுக்கும் வகையில் 1813ஆம் ஆண்டுச் சட்டத்தின் முகப்பிலேயே (preamble) இந்தியப் பிரதேசங்களின் மீதான பிரிட்டிஷ் அரசஇறைமை முதல் முறையாக நிலையாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.'[1]

கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த சாசனம் மேலும் இருபது ஆண்டுகளுக்குச் செயல்படுமாறு புதுப்பித்துக் கொடுக்கப் பட்ட போதிலும், நாம் முன்னரே அறிந்துள்ள பல காரணங்களுக்கு ஒப்ப, கம்பெனியின் வணிக முற்றுரிமை வெகுவாக இச் சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டது. இந்திய வர்த்தகத்தில் பங்குகொள்ள பிரிட்டிஷ் குடிமக்கள் யாவருக்கும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால், தேயிலை வர்த்தகத்தில் கம்பெனியினருக்கு முழு உரிமை கொடுக்கப்பட்டது. ஏனைய இந்திய வர்த்தகக் காரியங்களில் கிழக்கிந்தியக் கம்பெனி மற்றவர்களுடன் வர்த்தகப் போட்டிகளை மேற்கொண்டே காரியங்களை மேற்கொள்ளவேண்டிய நிலை இச் சட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்டது. தேயிலையைத் தவிரப் பிற வற்றில் இந்தியாவுடன் மேற்கொள்ளுவதற்கான வர்த்தக உரிமை பிரிட்டிஷ் குடிமக்கள் யாவருக்கும் கொடுக்கப்பட்ட போதிலும் சம்பந்தப்பட்ட வணிகர்களும், விருப்பம் கொண்ட உற்பத்தியாளர்களும், இயக்குநர்கள் மன்றத்தின்மூலம் பொருத்த மான உரிமங்களைப் பெற்றபின்னரே வர்த்தகக் காரியங்களை மேற் கொள்ளமுடியும் என்று இச் சட்டம் விதித்தது. மேலும், ஏதேனும் ஒரு காரணத்தால் இயக்குநர்கள் மன்றம் உரிமங்களை வழங்க மறுக்குமாயின், இந்தியாவுடன் வர்த்தகத்தை மேற் கொள்ள விழைவோர் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து உரிமத்தைப் பெற வகைசெய்யப்பட்டது. இதைப்போலவே இந்தியர்களைச் சீர்திருத்தவும், அவர்களுக்கு ஐயம் தெளிவித்து அறிவு ஒளியூட்டும் வகையில் சட்டமுறையான குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளச் சமயப் பிரச்சாரக் குழுக்களை அனுப்பவும் (missionaries) இயக்குநர்கள் மன்றம் அல்லது கட்டுப்பாட்டு வாரியத்தின் உரிமத்தின்பேரில் அனுமதி வழங்கப்பட்டது.. அதே நேரத்தில் வியாபாரம் அல்லது மதப்பணி காரணமாக இந்தியா விற்கு வருவோர் இந்தியாவில் அமுலில் இருக்கும் சட்ட திட்டங்

[1] Dodwell - 'Cambridge History of India'. Vol. VI.

களுக்கு ஏற்பச் செயல்படாது போயின், அவர்களுக்கு வழங்கப் பட்டிருந்த உரிமங்களை இரத்துசெய்யக்கூடிய அதிகாரம் ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்கும் கம்பெனியின் இந்தியத் தல அரசாங்தங்களுக்கும் கொடுக்கப்பட்டது. சட்ட முறையான அனுமதிகளையும், உரிமங்களையும் பெறாத நிலையில் இந்தியாவிற்குள் புக எத்தனிப்போர் யாவரும் உரிமையற்ற வணிகர்களாகவும், அத்துமீறி நுழைவோராகவும் (interlopers) கருதப்பட்டுச் சட்டபடி தண்டனை வழங்கப்படுவர் என்று இச் சட்டம் விளக்கிக் கூறியது.

கிழக்கிந்தியக் கம்பெனி பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து பெற்றிருந்த கடன் சுமையைக் குறைத்துக் கம்பெனியினரின் பங்கு வீதத்தைப் பத்தரை சதவிகிதமாக இச் சட்டம் உயர்த்தியது. மேலும், இச் சட்டம் கம்பெனியை அதன் வணிகத் தொடர்பான கணக்குகளையும், நிர்வாகத் தொடர்பான கணக்குகளையும் தனித் தனியே பிரித்து எழுதிப் பேணுமாறு பணித்தது. இந்த ஏற்பாடு அல்லது விதிப்பின்மூலம் தனது இந்திய அரசாங்கங்களின்மூலம் பெறும் வரி, வாய்தா போன்ற வருவாய்களை இந்தியச் சிவில் மற்றும் வணிக ஸ்தாபனங்கள், இராணுவப் படைகள் வட்டிச் செலவினம் மற்றும் இந்திய மக்களின் பொதுநலம் ஆகிய வற்றுக்குச் செலவழித்தே தீரக்கூடிய கடமையும், கட்டாயமும் கம்பெனியின் ஆட்சி அமைப்பின்மீது சுமத்தப்பட்டன. இவையே யன்றி இந்திய மக்களின் கல்வியையும் அறிவையும் தேர்ச்சி செய்யக்கூடிய பொறுப்பைக் கம்பெனியின் இந்திய அரசுகளின் மீது சுமத்தும் வகையில், கம்பெனி தனது வருவாய்களிலிருந்து ஓர் இலட்சம் ரூபாயை ஒதுக்கி வைக்கவேண்டும் என்றும் இச் சாசனச் சட்டம் வகை செய்தது. இந்தியாவில் மதப்பணி மற்றும் மதத்தின் அடிப்படையில் இந்திய மக்களை நல்வழிப்படுத்திச் சீர்திருத்தும் காரியத்தை மேற்கொள்ளும் வகையில், ஒரு மேற்றிராணியாரை யும் (Bishop) மூன்று திருக்கோயில் மணியக்காரர்களையும் கல்கத்தாவில் நியமனம் செய்வதற்கு இச் சட்டம் வகைசெய்தது. இச் சட்டத்தின்மூலம், கம்பெனி இனிமேற்கொண்டு பெறக்கூடிய உபரி வருமானங்களில் அல்லது இலாபத் தொகைகளில் ஐந்தில் ஒரு பங்கை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும் என்று பணிக்கப்பட்டது.

இதுகாறும் கிழக்கிந்தியக் கம்பெனி அனுபவித்து வந்த ஆதாயச் சிறப்புரிமைகளும், சலுகைகளும் இரண்டு வகைகளில் கட்டுப்படுத்தப்பட்டன. தலைமை ஆளுநர், மாநில ஆளுநர்கள், முதற் பெரும் படைத்தலைவர்கள் ஆகியோரது நியமனங்கள்

பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே இனி மேற்கொள்ளப்பட இச் சட்டம் வகை செய்தது. மேலும், அந் நியமனங்கள் யாவும் கட்டுப்பாட்டு வாரியத் தலைவரின் ஏற்புக் கையொப்பத்தை (counter-signature) பெறவேண்டும் என்றும் இச் சட்டத்தின்மூலம் கூறப்பட்டது. இது மட்டுமன்றிக் கம்பெனி யால் மேற்கொள்ளப்படும் சிறுபதவி நியமனங்கள்கூடக் கட்டுப் பாட்டு வாரியத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்றும் கூறப் பட்டது. அடுத்து, பிரிட்டனில் இருந்த ஹெய்லிபரி (Hailebury) கல்லூரி, அட்டிஸ்கோம்ப் இராணுவப் பயிற்சிக்கூடம் (Addis Combe Military Training Centre) ஆகியவற்றில் முறையாகப் பயின்று சான்றிதழைப் பெறுவோரே இனிமேல் கம்பெனியின் இந்தியப் பணித்துறைகளில் நியமிக்கப்படவேண்டும் என்ற தேவை நியதியும் இச் சட்டத்தின்மூலம் தோற்றுவிக்கப்பட்டது. மேற் கூறிய இரு நிறுவனங்களையும் மேற்பார்வை செய்து கட்டுப் படுத்தக்கூடிய உரிமையும் அதிகாரமும் கட்டுப்பாட்டு வாரியத் தலைவருக்கு வழங்கப்பட்டன. இதுகாறும் கம்பெனியின் இந்தியப் பணித்துறையில் பணியாற்றவேண்டி எவரையும் அல்லது எம் முற் பயிற்சியைப் பெருதவரையும், இந்தியாவிற்கு அனுப்பக் கூடிய அதிகாரம் இயக்குநர்களுக்கு இருந்தது. அவ் வதிகாரம் மேற்சொல்லப்பட்ட ஏற்பாட்டின்மூலம் செல்லாக் காசாக்கப் பட்டது. முறையான நிர்வாகப் பயிற்சியைப் பெற்ற பின்னரே எவரும் இந்திய அரசாங்கச் சிவில் பணித்துறைக்கு நியமிக்கப்பட வேண்டும் என்ற நற்போக்கிற்கான அடிக்கல் இச் சட்டத்தின் மூலம் நாட்டப்பட்டது. மேலும், கல்கத்தாவிலும், சென்னை யிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்த கல்லூரிகள் கட்டுப்பாட்டு வாரியத்தின் இயக்கங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற் றுக்கு உடன்பட்டவையாய்ச் செயல்படக்கூடிய தேவையும் செயற் பாடும் இச் சட்டத்தின்மூலம் புகுத்தப்பட்டன.

கம்பெனியின் அரசாங்க அனுபோக உரிமையின்கீழ் வந்திருந்த இந்தியா, பிரிட்டிஷ் பேரரசின் ஒரு பகுதியென இச் சட்டத்தின் மூலம் தெளிவாக்கப்பட்டது என்று முன்னரே எடுத்தியம்பப் பட்டுள்ளது. இம் மெய்ப்பாட்டுச் செய்திக் கொப்பக் கம்பெனியின் செலவில் இருபதாயிரம் பேர்களைக்கொண்ட அரசபடை ஒன்றை இந்தியாவில் பராமரிப்பதற்கான உரிமை பிரிட்டிஷ் அரசாங்கத் திற்கு இச் சட்டத்தின்மூலம் கொடுக்கப்பட்டது. அப் படையைப் பற்றிய சட்ட திட்டங்களையும், ஒழுங்கு முறைகளையும் உருவாக் கவும், அத் துருப்பினரின் குற்றங்களைத் தண்டிப்பதற்கான ஓர் இராணுவ நீதிமன்றத்தை (Court Martial) அமைக்கவும் கம்பெனிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

இறுதியாக வணிகம், மதம் மற்றும் சட்டமுறையான எக் குறிக்கோளின் காரணமாகவும் உரிய உரிமங்களின் அடிப்படையில் இந்தியாவிற்குச் செல்லும் யாவரும் கம்பெனியின் இந்திய அரசாங் கங்கள் விதிக்கும் வரிகளைச் செலுத்தவேண்டும் என்றும், அத்தகைய வரிகளைச் செலுத்த மறுப்போரை உரிய சட்டத்தின்கீழ்த் தண்டிப் பதற்குக் கம்பெனியின் அரசாங்கங்களுக்கு அதிகாரங்கள் உண்டு என்றும் இச் சட்டம் தெளிவாக்கியது. கம்பெனியின் இந்திய அரசாங்கங்கள் மேற்சொல்லப்பட்ட தமது அதிகாரங்களைத் தலைமை நீதிமன்றத்தின் செயல் எல்லைக்கும், ஆட்சிப்பரப்பிற்கும் உட்பட்டுப் பயன்படுத்தவேண்டும் என்றும் இச் சாசனச் சட்டம் அறிவித்தது. மேலும், இச் சட்டத்தின்மூலம் இந்தியர்களுக்கு எதிராக பிரிட்டிஷ் குடிமக்கள் புரியும் குற்ற வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பதற்கான அதிகார எல்லை அமைதி காண் நடுவர்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டது. இத்தகைய ஏற்பாட்டின்மூலம் நன்மைகள்பல தோன்ற வழிவகை செய்யப் பட்ட போதிலும், மேற்கூறிய வழக்குகளில் சம்பந்தப்படும் எந்த இந்திய பிரிட்டிஷ் குடிமகனையும் விசாரித்துத் தீர்ப்பளிக்கக் கூடிய வாய்ப்பும் உரிமையும் இந்தியாவில் ஐரோப்பிய நீதிபதி ஒரு வருக்கே இருக்கமுடியும் என்ற குழப்பமும் பொருந்தாத் தன்மையும் கொண்ட முறையும் இச் சட்டத்தினால் உருவாயிற்று என்றும் கூறலாம்.

இச் சட்டத்தின் செயற்பாடு

இச் சட்டத்தின் செயற்பாட்டு நிலையால் தோன்றிய முக்கியத் துவம் யாதெனின் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்கள்மீது பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் இறைமை பிரகடனப்படுத்தப்பட்டு நிலை நிறுத்தப்பட்டதாகும். இதனால் கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரங்கள் கணிசமான அளவில் விரிவடைந்து அதன்மூலம் கம்பெனி அரச நிறுவனத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் அடிமைப் பண்புடைய ஒருதுணைக் கருவியாய் மாறிச் செயல்படுமாறு செய்யப் பட்டது. கம்பெனியின் பணியாளர்களுக்குச் சிவில் மற்றும் இராணுவப் பயிற்சிகளைக் கொடுப்பதற்கென அமைக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள்மீது கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலம் கட்டுப் பாடு செலுத்தப்பட்டதால் பொருத்தமானவர்களையும் தகுதி யுடையவர்களையும் இந்தியப் பணித்துறை பெறக்கூடிய நன்மை கிட்டிற்று.

கம்பெனியின் வர்த்தக முற்றுரிமை நீக்கப்பட்டதன்மூலம் கடுமையான வர்த்தகப் போட்டி நிலவ ஆரம்பித்தது. இதனால் ஆங்கிலேயர் இந்தியாவில் மேற்கொண்ட வர்த்தகத்தின் மதிப்பு

உயர்ந்தது. 1713-ல் பதின்மூன்று மிலியன் பவுன்களாக இருந்த ஆங்கிலேயரின் இந்திய வியாபார மதிப்பு 1865-ல் நூறு மிலியன் பவுன்களாக உயர்ந்தது. ஆனால், மேற்சொல்லப்பட்ட பிரிட்டிஷ் இந்திய வர்த்தக மதிப்பின் உயர்வால் நன்மை அடைந்தோர் பிரிட்டிஷ்காரர்களே யன்றி இந்தியர்களல்லர். ஏனெனில், எல்லோருக்கும் உரியதாக அனுமதிக்கப்பட்டிருந்த இந்திய வர்த்தகம், இந்திய மக்கள் பொருளாதார ரீதியாகச் சுரண்டப் படுவதற்கு வித்தூன்றியது. இந்தியத் தொழில் துறைகளும், குடிசைத் தொழில்களும், கைத்தொழில்களும் வெகுவாகப் பாதிக் கப்பட்டு நொடிக்க ஆரம்பித்து, இறுதியாக மறைந்துபோக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாயின. பெருமளவில் ஆங்கில நாட்டுப் பொருள்கள் இந்தியச் சந்தைகளில் நிரம்பியமையால், இந் நாட்டில் உற்பத்தியான பொருள்கள் மவுசை இழந்தன. மேலும், இந்திய நாட்டைக் கறவைப் பசுவாகக் கருதி, இந் நாட்டின் செல்வத்தையும் பொருளையும் கறந்து அனுபவித்தனர். ஆங்கிலேயர் இங்கிருந்து கச்சாப்பொருள்களை மிக மலிவாக எடுத்துச்சென்று அவற்றை மிகக் குறைந்த செலவில் நுகரும் பொருள்களாக உற்பத்தி செய்து அவற்றை இந்தியாவிற்கு அனுப்பி அதிகவிலைக்கு விற்றுப்பெரும் இலாபத்தை அடைந்தனர். இத்தகைய அரசாங்கச் செயற்பாட்டு நிலை 1813ஆம் ஆண்டில் துவங்கி, அதன்மூலம் இந் நாடு வறுமைக்காடாக மாறிப்போகும் பெருந்தீமைக்கு உட்பட்டது.

இச் சட்டத்தின்மூலம் கிறித்துவமத நிறுவனங்கள் இங்கு நிறுவப்பட வகை செய்யப்பட்டதன் பயனாக, அவற்றின் மூலம் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் இந்தியர்களுக்குக் கல்வி புகட்டும் வகையில் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், அவற்றை ஏற்படுத்திய மதப் பிரசார நிறுவனங்கள் ஆரம்ப முதற் கொண்டே கிறித்தவ மதத்தையும் நம்பிக்கையையும் மிகத் தீவிர மாகப் பிரசாரம் செய்யத் தொடங்கின. அவை இந்திய மதங் களையும் நம்பிக்கைகளையும் காட்டுமிராண்டித்தனமானவை என்று பிரசாரம் செய்தன. இதனால் ஆங்கிலேயர்களுக்கும், இந்தியருக்கும் இடையே இனவெறியும் கசப்புணர்ச்சியும் வெகு விரைவில் பரவத் தொடங்கின.

மிகக் குறுகிய எல்லையில் இச் சட்டச் செயற்பாடு சில நன்மை களையும் இந்தியர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது என்பதை இங்கு எடுத்துக் கூறவேண்டியது மிக அவசியமாகும். இச் சட்டம் இயற்றப்பட்ட காலத்தில், தமது வணிக முற்றுரிமையும், பிற சலுகைகளும் பறிக்கப்படக்கூடாது என்று கம்பெனியின் ஆதர

வாளர்களாலும், அனுதாபிகளாலும் பெரிதும் விவாதித்து எடுத்துக் கூறப்பட்டது. ஆனால், பொதுமக்களின் விருப்பம் அல்லது கருத்திற்கு (public opinion) மாறாக எக் காரியத்தையும் பிரிட்டிஷ் அரசாங்கம் மேற்கொள்ள முடியாது என்ற மெய்ப் பாட்டு நிலையை இச் சட்டத்தின் செயற்பாடு எடுத்துக் காட்டிற்று. மேலும், இந்திய நாடு, இந்திய அரசாங்கம் மற்றும் இந்தியர்களின் அரசியல், பொதுநலம் ஆகிய பல செய்திகள் குறித்து ஆதரவும் சகாயமும் மிக்க கருத்தை, நமக்கென எதையும் செய்து தரக்கூடிய அதிகாரநிலை படைத்திருந்த பிரிட்டிஷ் பாராளு மன்றத்தின்மீது சுமத்தும் வகையில் இங்கிலாந்தில் அஃது உருவாக் கம்பெற இச் சட்டம் வழிகோலியது.

இன்று நம்நாடு உலகிலேயே பெரியதொரு ஜனநாயக அரசைக் கொண்டுள்ளது. இன்றும் நாம் ஆங்கிலக் கல்வி முறையைப் பின் பற்றுபவர்களாகவே இருக்கிறோம். இத்தகைய ஜனநாயக உணர்வை நாம் பெறுவதற்கு ஆங்கில இலக்கியமும் கல்வி முறை யும் பெருந்துணை புரிந்துள்ளன. இந் நோக்கில் பார்க்கும்பொழுது மேற்சொல்லப்பட்ட கல்வி முறையை இந் நாட்டில் புகுத்தித் தேர்ச்சி செய்ததற்கு ஒரு லட்சம் ரூபாயை இச் சட்டத்தின்மூலம் ஒதுக்கிவைத்த ஏற்பாடு நம்மால் ஒதுக்கித் தள்ள முடியாத நன்மை ஆகும். ஆங்கிலேய கலாசாரம், மொழி ஆகியவற்றை அந்நியர் களே அதிசயிக்கும் வண்ணம் இந்தியர் கற்றுணர்ந்து உலகப் புகழைப் பெற்றனர். இச் சிறப்பிற்கும், பயனிற்கும் வழி அமைத்துக் கொடுத்தது 1813ஆம் ஆண்டின் சாசனச் சட்ட மென்றால், அது மிகையாகாது.

1814ஆம் ஆண்டு முதல் 1833ஆம் ஆண்டு வரையிலான சட்ட ஆக்கங்கள்

1813ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட சாசனச் சட்டத்தின் செயற்பாட்டுக் காலமான இருபது ஆண்டுகளில், அஃதாவது 1813ஆம் ஆண்டு முதல் 1833ஆம் ஆண்டு வரை, கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய அரசாங்கங்களின் அதிகாரங்களை அதிகரிக்கும் வகையில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் பலவிதமான சட்டங்களை இயற்றி, அவற்றின்மூலம் பல திருத்தங்களையும் மாற்றங்களையும் அவ்வப்பொழுது செய்தது. இவை யாவும் 1773-ல் ஆரம்பமான இந்திய அரசியலமைப்பின் தங்கு தடையற்ற வளர்ச் சிக்குப் பெரிதும் துணை புரிந்தன. அத்தகைய செய்திகள் யாவும் பின்வருமாறு:

1814ஆம் ஆண்டில் பாராளுமன்றம் ஒரு சட்டத்தை இயற்றி, அதன்மூலம் சுங்கத் தீர்வைகளையும் (customs duties) பிற வாணிக வரிகளையும் விதிக்கக்கூடிய அதிகாரத்தைக் கிழக்கிந்தியக்

கம்பெனிக்குப் பாராளுமன்றம் வழங்கிற்று. அடுத்து, 1818-ல் இயற்றப்பட்ட மற்ருெரு சட்டம் பத்தொன்பதாம் நூற்ருண்டின் ஆரம்பகாலத்திலேயே இந்தியாவில் உணரப்பட்டிருந்த முக்கிய மான ஒரு தேவையைப் பூர்த்திசெய்தது. அஃதாவது, கம்பெனியின் இந்தியப் பணித்துறையில் பணிபுரிந்துகொண்டிருந்த பல ஐரோப் பியர்கள் இந்தியப் பெண்களைக் கிறித்துவமதச் சடங்குகளின் கீழ்த் திருமணம் புரிந்திருந்தனர். அத்தகைய திருமணங்கள் யாவற்றை யும் சட்ட ரீதியாகச் செல்லத்தக்கன என்று அறிவிக்கவேண்டிய அத்தியாவசியம் நெடுங்காலமாக உணரப்பட்டு வந்தது. ஆனல் அவ்வாறு செய்வதற்கான தருணம் 1818-ல் தான் வந்தது. எனவே, இந்தியக் கிறித்துவர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும், குறிப்பாக ஆங்கிலேயர்களுக்கும் இடையே நடந்த திருமணங்களைச் சட்ட ரீதியானவை என்று அறிவிக்கும் சட்டம் ஒன்றைப் பாராளு மன்றம் 1818-ல் இயற்றியது. இதன்மூலம் பலவிதமான உரிமை கள் அவ்வாறு திருமணம்செய்து கொண்டவர்களுக்குக் கிடைக்க வழி செய்யப்பட்டது. இதனையடுத்து, 1820-ல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்மூலம் தனது பணியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு தொண்டர்படையை (Volunteer Corps) அமைத்துக் கொள்வதற்கான அதிகாரம் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது. இச் சட்டத்தின்பயனுகக் கிழக்கிந்தியக் கம்பெனி தனக்குத் தேவையான ஆர்வம் மிக்க ஊழியர்களைத் திரட்டிக்கொள்ளவும், அவர்கள்மூலம் நன்மை பயக்கும் காரியங் கள் பலவற்றையும் மேற்கொள்ளவும் துணைபுரியப்பட்டது. இதனை இன்றைய மாண்புமிகு தமிழ்நாடு அரசால் அமைக்கப் பட்டுள்ள சீரணிப்படையோடு ஒப்பிடலாம்.

1823-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஒரு சட்டத்தை இயற்றி, அதன்மூலம் இந்தியாவில் பணிபுரியுமாறு அமைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படையினர், இந்திய நீதிமன்றங்களின் நீதிபதிகள், மற்றும் கல்கத்தாவில் செயல்பட்டுவந்த பிஷப் (Bishop) என்னும் மதத் தலைவர், அவரது திருச்சபை மணியக்காரர்கள் ஆகியோ ருடைய சம்பளங்களும், ஓய்வூதியங்களும் (salaries and pensions) கம்பெனியின் இந்திய அரசாங்கங்களால் கொடுக்கப்படவேண்டும் என்று வகை செய்யப்பட்டது. மேலும், இச் சட்டத்தின்மூலம் பம்பாயில் ஒரு தலைமை நீதிமன்றம் நிறுவப்பட்டது. இதுகாறும் பம்பாயில் வெகு காலமாகச் செயல்பட்டுவந்த ஆவணக்காரர் தீர்ப்பு மன்றம் (Recorder's Court) கலைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக மேற்கூறிய தலைமை நீதிமன்றம் அமைக்கப்பட்டது. 1832-ல் இயற்றப்பட்ட மற்ருெரு சட்டத்திற்கு ஏற்பத் தனது பணித்துறையைச் சார்ந்திராது இந்தியாவில் வசித்து வந்த பிற ஐரோப்பியர்களை அமைதிகாண் நீதிபதிகளாக (Justices of Peace)

இந்தியாவில் நியமனம் செய்யக்கூடிய அதிகாரம் கம்பெனியின் இந்திய அரசாங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டது.

மற்றொரு விஷயத்தில், கம்பெனியின் இந்திய உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரை 1813ஆம் ஆண்டு முதல் 1833ஆம் ஆண்டு வரையிலான இருபதாண்டுக் காலம் முக்கியத்துவம் வாய்ந்த காலக் கட்டமாக அமைகின்றது. ஏனெனில் இந்த இருபது ஆண்டுகளில் பிரிட்டிஷ் அரசு யாவரும் வியப்புறும் வண்ணம் இந்தியாவில் விரிவடைந்தது. இக் காலத்தில் வலிமை பெற்றிருந்த மராத்தியர்கள் தோற்கடிக்கப்பட்டு, அவர்களுடைய ஆதிக்கத்தின்கீழிருந்த மகாராஷ்டிரமும், மத்திய இந்தியாவும், இராஜஸ்தான் அரசுகளும் கம்பெனியின் பிரதேச உடைமை களாகச் சேர்க்கப்பட்டன. சுருங்கக் கூறின் பஞ்சாப், சிந்து, குவாலியர், இந்தூர், பூடான் ஆகியவற்றைத் தவிர, ஏனைய இந்தியப் பிரதேசங்கள் இந்த இருபதாண்டுக் காலத்தில் கம்பெனியின் அரசாங்கச் செயல்கள்மூலம் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. இவ்வாறு இந்திய நாட்டின் பெரும் பான்மையான பிரதேசங்கள் ஹேஸ்டிங்ஸ் பிரபு என்பவர் (Lord Hastings) தலைமை ஆளுநராக இருந்தபொழுது கைப்பற்றப் பட்டன. இவர் வருவாய் திரட்டல், அன்றாட நிர்வாகத்தை மேற்கொள்ளுதல் ஆகியவற்றோடு நீதி முறையான பணிகளையும் (Magisterial functions) ஒருங்கிணைத்து மாவட்டக் கலெக்டர் மற்றும் மாஜிஸ்ட்ரேட்டின் நிர்வாக முறையை உருவாக்கினார். இந் நிர்வாக முறை இன்றும் ஓரளவிற்குச் செயலில் உள்ளது. மேலும், இந்திய நீதித் துறைகளுக்கு இந்தியர்களும் நியமிக்கப்பட வேண்டும் என்பதில் ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் அரசாங்கம் பேருக்கம் காட்டியது. இவை மட்டுமன்றிக் கல்கத்தாவில் இந்துக் கல்லூரி (Hindu College) ஒன்று ஆரம்பிக்கப்பட்டது; பத்திரிகைச் சுதந்திரம் வழங்கப்பட்டது. தற்காலிக அடிப்படையில் பலவித மான நிலவரித் திட்டங்களும் இந் நாட்டின் பல்வேறு பகுதிகளில் புகுத்தப்பட்டன. 1829-ல் தொன்மையும் பழமையும் மிக்க நீதி மன்றங்கள் கலைக்கப்பட்டு, அவற்றிற்குப் பதிலாகப் புதிய நீதி மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட வைகளே இன்றும் செயலில் உள்ள மாவட்டச் சிவில் மற்றும் அமர்வு நீதிமன்றங்களாகும். (District Civil and Sessions Courts) இவ்வாறு பல முன்னேற்றங்களையும், மாற்றங்களையும் கம்பெனி யின் இந்தியப் பிரதேசங்கள் கண்டமையின் அவற்றிற்கு ஏற்பவும், இங்கிலாந்து நாட்டில் நிலவிய நிலவரங்களுக்கொப்பவும் 1833-ல் கம்பெனியின் சாசனம் அடிப்படையான பல மாற்றங்களுடன் புதுப்பிக்கப்படவேண்டியதாயிற்று.

18. 1833ஆம் ஆண்டின் சாசனச் சட்டமும் அரசாங்க அதிகாரக் குவிப்பும்

இச் சட்டம் இயற்றப்பட்டதற்கான காரணங்களும் சூழ்நிலைகளும்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதி பொதுவாக உலக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்ட காலமாகும். ஏனெனில், இக் காலத்தில்தான் உலகின் பல பாகங்களில் உரிமைக் குரல்களும் ஜனநாயகக் கோரிக்கைகளும் எழுந்தன. தத்தம் தொழில் வளர்ச்சியிலும் ஆக்கப் பணிகளிலும் பல நாடுகள் வெகு முனைப்புடன் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தன. பல நாடுகளில் அரசியல் மற்றும் சமூகப் பொருளாதாரத் துறைகளில் பல புரட்சிகரமான மாற்றங்களும் தோன்றலாயின. அந்தச் சமயம் உலகப் பேரரசாயிருந்த இங்கிலாந்து நாட்டிலும் பல மாற்றங்களும் திருப்பங்களும் அரசியல் மற்றும் பொருளாதாரப் புதுமைக் கோட்பாடுகளும் தோன்றின. அவற்றின் பிரதிபலிப்பை இந்தியாவிலும் நாம் காணமுடிகின்றது. 1833ஆம் ஆண்டில் ஏற்பட்ட சாசனச் சட்டமும், அதன்மூலம் மேற்கொள்ளப்பட்ட அரசியல் செய்திகளும், அரசாங்கச் செயல்களும் இவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டதாய் அமைந்தன. எனவே, இச் சட்டத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி எழுதும்பொழுது மார்லி பிரபு 'பிட் இந்தியச் சட்டம் இயற்றப்பட்ட 1784ஆம் ஆண்டு முதல் விக்டோரியாப் பேரரசி இந்திய அரசாங்கத்தின் நேரடிப் பொறுப்பையும் ஆட்சியையும் எடுத்துக்கொண்ட 1858ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலத்தில் இந்திய அரசாங்கத்தைப்பற்றி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட மிக விரிவானதொரு திட்டமும் நடவடிக்கையும் 1833ஆம் ஆண்டின் சட்ட ஆக்கமாகும்,' என்று கூறியுள்ளார். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த 1833ஆம் ஆண்டுச் சாசனச் சட்டம், எக் காரணங்களால், எச் சூழ்நிலைகளில் இயற்றப்பட்டது என்பதை எடுத்தியம்பவேண்டியது மிக்க அவசியமாகும்.

நாம் முன்னரே அறிந்துள்ளதைப்போல் கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனம் 1813-ல் மேலும் இருபத்தைந்தாண்டு களுக்குப் புதுப்பிக்கப்பட்டிருந்த்து. அச் சட்டத்தின் இருபது ஆண்டுக் காலச் செயற்பாடு 1833-ல் முடிவுற்றது. இந்த இடைப் பட்ட காலத்தில் இங்கிலாந்தில் பெரும் மாற்றங்கள் தோன்றின. இங்கிலாந்து நாடு புகழ் வாய்ந்த தொழிற்புரட்சியின் (industrial revolution) ஆதாயங்களையும், நற்பெரும் பலன்களையும் அனுப வித்துக்கொண்டிருந்தது. அந் நாட்டின் தொழில் துறைகள் இயந்திர மயமாக்கப்பட்டிருந்தன. பழையன கழிந்து புதியன புகுத்தப்பட்டிருந்தன. புதிய விருப்பங்களும், புதுமை நாட்ட விழைவுகளும் அந் நாட்டுமக்களின் மனத்தில் வேரூன்றி யிருந்தன. நாட்டின் செல்வநிலை உயர்ந்திருந்தது. தொழிலாளிகள், முதலாளிகள் ஆகிய புதுவகுப்பினர் எண்ணிக்கையில் அதிகரித் தனர்; அவர்களின் குறிக்கோள்களும் நாட்ட விழைவுகளும் அதிகரித்தவண்ணம் இருந்தன. புதுமை இயந்திரங்களின் துணையால் மிக மலிவான விலைகளில் மிகமிக அதிகமான பொருள் களை உற்பத்தி செய்தனர். இவ் வுற்பத்திப் பெருக்கத்தின் காரண மாக ஆங்கிலேயரின் உலகச் சந்தை விரிவுபட்டு அயல் நாடுகளில் அவர்கள் தமது கருத்துகளையும், அனுபவங்களையும் யாவருக்கும் நன்மை பயக்கும் வகையில் சுமுகமாக விஸ்தரிக்கக்கூடிய உணர் வைப் பெற்றிருந்தனர். செல்வமும், செழிப்பும், பேறுகள் பலவும் மடைதிறந்த வெள்ளம்போல் இங்கிலாந்து நாட்டை அடைந்ததால் அந் நாட்டு மக்களிடையே புதியதொரு சுதந்திர உணர்ச்சி சுடர் விட்டு எரிந்தது. அதேநேரத்தில் தொழிலாளர்கள் தமக்குச் செம்மையான பணி வரையறைகளும் (conditions of service) ஆதாயங்களும் பிற சலுகைகளும் கொடுக்கப்படவேண்டும் என்று கோரினர். ஆனால், முதலாளிகள் அக் கோரிக்கைக்குச் செவிசாய்க் காது அலட்சியப்போக்கை மேற்கொண்டனர். இவ் விருசாராருக் கும் இடையே தொழிலாளர்களுக்குத் தமது ஆதரவையும், ஊக்கத்தையும் நல்கும் வகையில் கற்றறிந்தோர் வகுப்பும், அறிஞர் குழாமும் கிடுகிடுவென வளர்ந்தன. இவை தமது இலக்கியப் படைப்புகள்மூலமும், பிரசார சாதனங்கள்மூலமும் தொழிலாளர்கள் மனத்தில் விழிப்புணர்ச்சியையும், பொறுப் புணர்ச்சியையும் செம்மைப்படுத்தி வளர்த்தன. கல்வி, கேள்வி, படிப்பு, படிப்பினை ஆகியவற்றின்மூலம் நாட்டுமக்கள் தந்நிலை உணர்த்தப்பட்டு இங்கிலாந்து நாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக் கிலும். ஃபிரெஞ்சுப் புரட்சியின் தாரக மந்திரமான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை எதிரொலித்தன. ஃபிரெஞ்சுப் புரட்சியின் பயன் இங்கிலாந்தை உள்ளிட்ட உலக நாடுகள் பலவற்றிலும் தனது முத்திரையைப் பதிய வைத்தது.

உலக நோக்கில் ஃபிரெஞ்சுப் புரட்சி பன்னாட்டு மக்களின் மனத்தில் சுதந்திர விழிப்பு உணர்ச்சியையும் சுரண்டல் ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பையும் தோற்றுவித்தது. இதனால், உலக அரசியலில் புதியதொரு காலக் கட்டமும் திருப்புமுனையும் தோன்றின.

ஃபிரெஞ்சுப் புரட்சியின் பயனாய்த் தோன்றிய புதுமைக் காலத்தின் முக்கியத்துவத்தைக் கற்பித்துப் பரப்பும் வகையில், ப்ரீஸ்ட்லி (Priestley), வேக்ஃபீல்ட் (Wakefield), பிரைஸ் (Bryce) மாக்கின்டோஷ் (Mackintosh) போன்ற பல ஆங்கில அறிஞர்களும், எழுத்தாளர்களும் பொருத்தமான பணிகளை மேற்கொண்டனர். 1830ஆம் ஆண்டில், இங்கிலாந்தின் பேரரசராக இருந்த நான்காம் வில்லியம் பழமை வாதிகளின் பக்கபலமாய் இருந்தார். ஆனால், பழமை வாதிகளான டோரிகளின் கட்சி (Tory Party) 1830-ல் பிரிட்டிஷ் மக்களால் தோற்கடிக்கப்பட்டது. விக்குக் கட்சியினர் (Whig Party), கிரே (Grey) என்பாரது தலைமையின் கீழ்ப் பெரும் வெற்றிகண்டனர், எனவே, நான்காம் வில்லியம், கிரே அவர்களைத் தமது புதிய பிரதம அமைச்சராக நியமிக்க வேண்டிய தாயிற்று. அதே நேரம் புதுமைக் காலத்தின் புதிய கோட்பாடுகளில் ஈடுபாடு கொண்டிருந்த பலர் கம்பெனியின் தலைமை ஆட்சி அமைப்பிலும், பாராளுமன்றத்திலும், நாட்டின் பொது வாழ்விலும் முக்கியப் பங்கேற்றிருந்தனர். உதாரணமாக மெக்காலே பிரபு கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலராகவும், பயன்பாட்டுத் தத்துவத்தின் (utilitarianism) ஆதரவாளராய் இருந்த ஜேம்ஸ் மில் (James Mill) பாராளுமன்றத்தில் மட்டுமன்றி நாடு முழுவதிலும் பொதுமக்கள் விருப்பையும் கருத்தையும் உருவாக்கியவராகவும் இருந்தனர். மேலும், ஜேம்ஸ் மில் கம்பெனியின் தலைமை ஆட்சி அமைப்பின் இந்திய இல்லத்தில் (Indian House) கடிதத் தொடர்புக் கண்காணிப்பாளராக இருந்தார். சார்லஸ் கிராண்ட் என்பவர் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராய் இருந்தார்.

மனித உரிமைகளின் மாண்பையும் பண்பையும் மாசறு பொருள்களாக நிலைநிறுத்தி வெற்றி காணுவதைக் குறிக்கோளாக விக்குக் கட்சியினர் கொண்டு இருந்தனர். விக்குக் கட்சியினர் பொதுத் தேர்தலில் பெற்ற வெற்றி தமது முற்போக்கான கொள்கைகளைப் (liberal principles) பாராளுமன்றம் கடைப்பிடிக்குமாறு செய்தது. விக்குக் கட்சியினரின் முற்போக்குக் கொள்கைகளும், கோட்பாடுகளும் அரசியல் ரீதியான வெற்றியைப் பெற்றன. இதற்கு முன்னரே மனித உரிமைகளை மதித்து, முற்போக்கான காரியங்களை மேற்கொள்ளக்கூடிய அரசியல் மதிப்போக்கும் நோக்கும்

இங்கிலாந்தில் ஓரளவு பேணப்பட்டன. உதாரணமாக 1811-ல் அடிமை வர்த்தகம் (slave trade) ஒழிக்கப்பட்டிருந்தது. 1823-ல் நூற்றுக்கணக்கான அடாப் பழிகளும் பெருங் குற்றங்களும் மரண தண்டனை கொடுக்கப்படுவதிலிருந்து பெருமதிப்போக்குடன் விலக்களிக்கப்பட்டுக் கைவிடப்பட்டன. 1829-ல் கத்தோலிக்க மதத்தினர் (Catholics) விடுதலை கொடுக்கப்பட்டுப் புத்துயிர் அளிக்கப்பட்டனர். இவ்வாறு சில முற்போக்கான சட்ட ஆக்கச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 1830-க்கு முன் இங்கிலாந்தில் பதவியிலிருந்த வெலிங்டன் கோமகனின் அரசாங்கம் காலத்திற்கு ஒவ்வாத பழமைக் கோட்பாடுகளைப் பின்பற்றி வந்தது. பேராசிரியர் A.B. கெயித், C.L. ஆனந்த் என்னும் அறிஞர்கள் எடுத்துக்காட்டியிருப்பதைப் போல் உலகு ஏற்றுக் கொள்ளக்கூடிய வாக்குரிமை மற்றும் ஜனநாயக நியதிகளுக்கு ஏற்றவகையில் வெலிங்டன் அரசாங்கம் நடந்து கொள்ளவில்லை. எனவே, டோரிக் கட்சியினர் வீழ்த்தப்பட்டு, விக்குக் கட்சியினர் அரசாங்கத்தைக் கைப்பற்றினர். கிரே அவர்களின் தலைமையில் பிரிட்டிஷ் பாராளு மன்றச் சீர்திருத்தச் சட்டமொன்று 1832-ல் இயற்றப்பட்டு, முற்போக்கு உணர்ச்சிக்குப் புத்தூக்கமும் மறுவாழ்வும் கொடுக்கப் பட்டன. மனித இனத்தின் மதிப்பு அங்கீகரிக்கப்பட்டது. அரசின் தலையிடாக் கொள்கை முன்னிலும் அதிகமாக முனைப்பான செயற்பாட்டைப் பெற்றது. தொன்மைவாய்ந்த பழமைவாத உணர்ச்சியும், சுரண்டல் கோட்பாடும் வலுவிழந்தன. முற்போக்கு வாதப் புத்துணர்ச்சி பொலிவைப் பெற்று வளர்ந்தது. பழமை வாதம், முற்போக்கு வாதம் ஆகிய இரண்டிற்கும் இசைவான ஒரு புத்துணர்ச்சியைக் காலத்தின் தேவைக்கு ஏற்ப கிரே அவர்களின் அரசாங்கம் தோற்றுவித்தது. இத்தகைய நிலவரங்களும், சூழ் நிலைகளும் இங்கிலாந்தில் சூழ்ந்திருந்த சமயத்தில்தான், கிழக் கிந்தியக் கம்பெனியின் சாசனச் சட்டம் மேலும் இருபது ஆண்டு களுக்குப் புதுப்பிக்கப்படும்படியான கோரிக்கை பாராளுமன்றத் தின் முன் வைக்கப்பட்டது. அதேசமயம் கிழக்கிந்தியக் கம்பெனி யும் இந்தியாவில் தனது ஆதிக்க எல்லையை விரிவாக்கி, இந் நாட்டின் மிகப் பெரும்பகுதியைத் தனது அரசாங்கம் மற்றும் ஆட்சி இயக்கத்தின்கீழ்க் கொண்டுவந்திருந்தது. கம்பெனியின் அரசியல் மற்றும் ஆட்சி அதிகாரத்தின்மூலம் பிரிட்டிஷ்காரர்களின் வணிகச் செல்வாக்கும் இலாப ஈட்டங்களும் அதிகரித்தன. மேலும் வணிக வாய்ப்புரிமை, அரசியல் அதிகாரஆட்சி இறைமை ஆகிய இரண்டும் ஒன்றுசேர்ந்த ஓர் அமைப்பாகக் கம்பெனி இருந்தது. இவற்றில் மாற்றங்களும் திருத்தங்களும் செய்யப்படவேண்டும் என்று சம்பந்தப்பட்ட பலரும், அவ்வாறு அவை செய்யப்படக்கூடாது என்று அக்கறைகொண்ட சிலரும் வாதிட்டனர். இத்தகைய சூழ்

நிலைகளில் 1833ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தைப்பற்றிய விவாதத்தை பிரிட்டிஷ் பாராளுமன்றம் மேற்கொண்டது.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட விவாதங்களில் பெரும்பாலானவை கம்பெனியின் இந்திய அரசாங்கம் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடியான பொறுப்பின்கீழ் உடனடியாகக் கொண்டுவரப்படவேண்டும் என்பதை வலியுறுத்தின. மேலும், பாராளுமன்றத்தில் செல்வாக்கைப் பெற்றிருந்த அதிகாரம் மிக்க ஒரு பகுதியினர் கம்பெனியின் இந்திய அரசாங்கங்களில் இந்தியர்களுக்கு உரிய வாய்ப்புகளும் பதவி நிலைகளும் கொடுக்கப்படவேண்டும் என்று வாதிட்டனர். இத்தகைய வாத, விவாதங்களுக்கு உயிரூட்டத்தைக் கொடுத்தவர்கள் பக்கிங்ஹாம் (Buckingham), மெக்காலே (Macaulay) போன்ற பெருந்தகையாளர்கள் ஆவர். பெரியதொரு கூட்டுப்பங்கு நிறுவனமாயிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியிடம் இனிமேற்கொண்டும் இந்திய அரசியல் மற்றும் அரசாங்கப் பொறுப்புகள் தங்கியிருப்பதை அனுமதிக்கக்கூடாது என்று அவர்கள் வாதிட்டு வலியுறுத்தினர். மேலும், பிரிட்டிஷ் பிரதிநிதிகளேயன்றி இந்திய மக்களின் பிரதிநிதிகளும் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றம் முதலிய கம்பெனியின் இந்திய ஆட்சி அமைப்புகள் பலவற்றில் நியமனம் செய்யப்படவேண்டும் என்றும் எடுத்துரைத்தனர். சட்டரீதியாகப் பாராளுமன்றத்தின் கீழவையான பொதுமக்கள் அவை கம்பெனியின் இந்திய விவகாரங்களில் பொருத்தமான மேற்பார்வையையும், கட்டுப்பாட்டையும் மேற்கொள்ளக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை என்று அவர்கள் வாதிட்டனர். தமது சொந்த நாட்டு விவகாரங்களைக் கவனிப்பதற்கே காலமும் அவகாசமும் இல்லாதிருந்த நிலையில், பொது மக்கள் அவையின் உறுப்பினர்கள் இந்திய விவகாரங்களில் தமது முழுமையான கவனத்தைச் செலுத்துவதற்கு அவாவையும், அவகாசத்தையும், தேவையான அறிவையும், அவற்றைப் பெற வேண்டும் என்ற ஊக்கத்தையும் பெற்றிருக்கவில்லை என்று பக்கிங்ஹாம் கூறினர்.

மேலும், கட்சி அரசியலில் கசடான காரியங்களுக்கும் கண்ணியமற்ற நடைமுறைச் செயல்களுக்கும் இலக்கான நிலையில் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் அவை இருந்தது. விக்குக் கட்சியினர், டோரிக் கட்சியினர் ஆகிய இரு சாராரின் போட்டி பூசல்களுக்கு அஃது இலக்காகியிருந்தது. எனவே, இத்தகைய ஒரு நிறுவனம் கம்பெனியின் இந்திய விவகாரங்களில் பாரபட்ச மற்ற

முறையில் நடந்துகொள்ளும் என்று எதிர்பார்ப்பது பொருந்தாது என்று கருதப்பட்டது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்துகொண்டு உள்நாட்டு மக்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளை அறியாமலும், புரிந்து கொள்ளாமலும் பாராளுமன்றத்தினர் இந்திய அரசாங்கம் மற்றும் நிர்வாகம் குறித்துச் செயல்பட்டால் அதனுல் ஈட்டலின்றி இழப்பே மிகுதியாகும் என்று மெக்காலே பிரபு யாவர் மனத்திலும் படும்படி எடுத்துக் கூறினுர். மேலும், இதுகாறும் நடுநிலை நன்னியதியோடு, பாரபட்ச மற்ற நிலையில் இங்கிலாந்து நாட்டின் அரசியல் கட்சிகளின் அக்கறைகளுக்குப் பெரிதும் பலியாகாது, திறமையுடன் கிழக்கிந்தியக் கம்பெனி செயல்பட்டு இருப்பதாக அவர் கூறி, அந் நிறுவனத்திற்கான சாசனம் மேலும், இருபதாண்டுகளுக்குப் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று அவர் விடுத்த அறைகூவல் பலனைக் கொடுத்தது. மேலும், பிரிட்டிஷ் பாராளுமன்றம், குறிப்பாக, அதன் கீழவை கம்பெனியின் இந்திய விவகாரங்களைப் பரிபூரணமாகக் கவனித்து அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அளவிற்கு அவகாசத்தையும் அறிவாற்றலையும் பெற்றிராது இருந்தமையால், அத்தகைய பொறுப்பு கிழக்கிந்தியக் கம்பெனியிடமே தொடர்ந்து இருக்க வேண்டிய அவசியம் எல்லோராலும் உணரப்பட்டது.

ஆனுல், அதே நேரத்தில் வணிக முறையான காரியங்களும், அரசியல் முறையான ஆட்சிச் செயல்களும், அவற்றிற்கான இறைமை அதிகாரமும் கம்பெனியினரிடம் ஒன்றித்து இருக்கும்படியாக அனுமதிக்கக் கூடாது என்று எல்லாத்தரப்பினரும் குரல் எழுப்பினர். எனவே, வணிகப் போட்டி மனப்பான்மையின் காரணமாக, அல்லது உணர்ச்சிப் போக்கின் காரணமாகக் கம்பெனி முற்றிலும் கலைக்கப்படவேண்டும் என்று கோரியவர்களும் இருந்தனர். ஆனுல், வைரத்தை வைரத்தால் அறுக்கவேண்டும் என்பதைப் போல், முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும் என்பதைப் போல், கம்பெனியை வைத்துக்கொண்டே அதன்மூலம் இந்தியாவில் ஈட்டப்பட்டிருந்த பிரதேசங்களும் அவற்றைச் சார்ந்திருந்த ஆட்சிமுறையான பல பொறுப்பான காரியங்களும் மேற்கொள்ளப் படவேண்டும் என்று மெக்காலே எடுத்துக் கூறினுர். அவரது வாதமும், கருத்துகளும் முடிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவற்ருல், கம்பெனியின் வணிகச் சலுகைகளும் காரியங்களும் பெரிதும் குறைக்கப்பட்டு, அதன் இந்திய அரசியல், மற்றும் அரசாங்க முறையான காரியங்கள் அதிகரிக்கப்படும் வகையில் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த சாசனம் 1833-ல் புதுப்பிக்கப்பட வேண்டியதாயிற்று. எனவே, 1833ஆம் ஆண்டின் கிழக்கிந்தியக் கம்பெனிச் சாசன மசோதா விவாதமின்றிக்

கீழவையில் 1833ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 8ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்டது. பின்னர், அம் மசோதா பாராளு மன்றத்தின் மேலவையிலும் நிறைவேறி, மன்னரின் கையொப் பத்தைப் பெற்றுச் சட்டமாக மாறி 1834ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. இவ்வாறு நடை முறைக்கு வந்த சட்டத்தின்மூலம் பின்வரும் அரசாங்க ஆட்சி அம்சங்களும் ஏற்பாடுகளும் செயற்பாட்டின்கீழ் வந்தன.

இச் சட்டத்தின் அம்சங்களும் ஏற்பாடுகளும்

1813ஆம் ஆண்டுச் சட்டம் கம்பெனியின் இந்திய உடைமை கள் மீதான பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் இறைமையைப் பொது வான நிலையில் நிலைநாட்டியிருந்தது. அவ் விறைமை மேலும் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் நிலைநாட்டப்படும் வகையில் 1833ஆம் ஆண்டின் சாசனச் சட்டம் அமைந்திருந்தது. கம்பெனி யின் இந்தியப் பிரதேசங்களும், வருவாய்களும் பிரிட்டனின் மேதகு அரசர் மற்றும் அவரது வழித்தோன்றல்கள், வாரிசுகள் ஆகியோரின் அடைக்கலப் பொருள்களாக (trust) மேற்கொள்ளப் பட்டு, கம்பெனியினரால் தொடர்ந்து மேலும் இருபது ஆண்டு களுக்கு நிர்வகிக்கப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் பிரிட்டிஷ் பேரரசர், மற்றும் அவரது வாரிசுகளின் பொறுப்பாண்மைக் கழகமாக (trustee) செயல்படக்கூடிய நிலைக்குக் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிலை அரசியல் ரீதியாக இறக்கப் பட்டது. இதன்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப் பட்டிருந்த தேயிலை வர்த்தக முற்றுரிமையும், சீன நாட்டுடன் மேற் கொள்வதற்குக் கொடுக்கப்பட்டிருந்த வர்த்தக முற்றுரிமையும் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து அகற்றப்பட்டன. சுருங்கக் கூறின், 1600ஆம் ஆண்டு முதற்கொண்டு வணிக முறையான வியாபாரக் காரியங்களை ஆற்றிவந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிகத் தன்மை நீக்கப்பட்டு, அஃது ஓர் ஆட்சி நிறுவனமாக மாற்றப்பட்டது. அஃதாவது, கம்பெனியானது அரச நிறுவனத் தின் ஓர் அரசியல் பணித்துறை மேலாளாக அல்லது நிறுவனமாகச் (political functionary) செயல்படுமாறு செய்யப்பட்டது. இதனால், அது வணிகத்துறையில் அடைந்த இழப்பிற்கும் நஷ்டத்திற்கும், ஈடுசெய்யும் வகையில் 1874ஆம் ஆண்டுவரை இந்திய வருவாய் களிலிருந்து பத்தரை சதவிகிதத்தை ஒவ்வோர் ஆண்டும் இழப் பீட்டுத் தொகைகளாகக் கொடுக்கவேண்டும் என்று இச் சட்டம் வகை செய்தது. இதன்மூலம், கம்பெனியின் பங்குதாரர்கள் மேற்கொண்டு நாற்பது ஆண்டுகளுக்குத் தமது பங்குத் தொகை களைப் பெறுவதற்கு இச் சட்டத்தின்மூலம் வழி வகை செய்யப் பட்டது. மேலும், இவ்வாறு செய்துகொடுக்கப்பட்ட

ஏற்பாட்டின்மூலம் கம்பெனியின் கடன் தொகைகள் யாவும் நாளடைவில் தீர்க்கப்படவேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

1833-ஆம் ஆண்டின் சாசனச் சட்டம் கம்பெனியின் தலைமை அரசாங்க அமைப்பில் பின்வரும் மாற்றங்களையும் திருத்தங்களையும் செய்தது. கம்பெனியின் இயக்குநர்கள் மன்றத்தைப் பொறுத்த வரை, அம் மன்றம் இதுகாறும் பெற்றிருந்த ஆதாய முற் சலுகையை வெகுவாகக் குறைத்தது. அதன்மூலம், இந்திய அரசாங்கப் பணித்துறையில் எத்தனை காலி ஸ்தானங்கள் ஏற்படு கின்றனவோ, அக் காலி ஸ்தானங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு நபர்களை இயக்குநர்கள் நியமித்து அவ்வாறு நியமனம் செய்யப்படுவோர் ஹெய்லிபரி கல்லூரியில் பொருத்தமான பயிற்சியைப் பெறுமாறு செய்தது. இப் பயிற்சிக் காலம் முடிந்த பின் அவர்கள் பரீட்சிக்கப்பட்டு, அத் தேர்வில் வெற்றி பெறு வோர் வரிசை அடிப்படையில் (basis of merit precedence) இறுதி யாகக் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின் உயர் பதவிகளில் அமர்த்தப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், இவ்வாறு செய்யப்பட்ட ஏற்பாடு இயக்குநர்களின் பேரெதிர்ப் புக்கு ஆளாகியது. எனவே, இந்த ஏற்பாடு 1834-ல் பாராளு மன்றத்தால் திருத்தப்பட வேண்டியதாயிற்று. அத் திருத்தத்தின் மூலம் இயக்குநர்கள் மன்றத்தின்மீது செலுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடு 1833ஆம் ஆண்டுக்கு முன்னர் வழக்கிலிருந்த இயக்குநர்களின் பதவி நியமன முற்சலுகை மேலும் இருபது ஆண்டுகளுக்குச் செயலில் இருக்குமாறு நீடிக்கப்பட்டது.

கம்பெனியின் தலைமை அரசாங்கத்தின் மற்றோர் அங்கமாய் இருந்த கட்டுப்பாட்டு வாரியத்தைப் பொறுத்தவரை பின்வரும் மாற்றங்களும், திருத்தங்களும் செய்யப்பட்டன. கட்டுப்பாட்டு வாரியத்தின் அடிப்படையான அரசியலமைப்பு இச் சட்டத்தின் மூலம் பெரிதும் மாற்றப்பட்டது. தான் உருவாக்கிய இறைமைக் கோட்பாட்டின் தன்மைக்கு ஒப்ப 1833ஆம் ஆண்டின் சாசனச் சட்டம், கட்டுப்பாட்டு வாரியம் இதுகாறும் பெற்றிருந்த ஆதிக்கப் பிடியை (strangle hold) மேலும் இறுக்கமாக்கியது. இதன்மூலம் கட்டுப்பாட்டு வாரியத்தினுல் முன்கூட்டியே அதிகார பூர்வமாக நிலை நிறுத்தப்படாமல், எந்த அலுவல் முறையான செய்தி அறிவிப்பையும் போக்குவரத்தையும் இயக்குநர்கள் மன்றம் மேற் கொள்ளக்கூடாது என்று செய்யப்பட்டது.

இச் சட்டத்தின்மூலம் கட்டுப்பாட்டு வாரியத்தின் அமைப்பு, அவ் வாரியத் தலைவரின் அதிகாரம் ஆகியவற்றிலும் பெரு முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்திய

விவகாரங்களைக் கவனிப்பதற்கான கட்டுப்பாட்டு ஆணையர்களின் வாரியம் அரச நிறுவனம் எவரெவரைப் பொருத்தமானவர்கள் என்று தீர்மானிக்கின்றதோ, அத்தகைய நபர்களையே உறுப்பினர்களாகக் கொண்டிருக்கவேண்டும் என்று இச் சட்டம் அறிவித்தது. அத்தகையோரில் பிரிட்டிஷ் அரசின் முத்திரை நாயகம் (Lord Privy Seal), கருவூல வேந்தர் (Chancellor of Exchequer), கருவூல முதற் கோமகன் (First Lord of the Treasury) மற்றும் பிரிட்டிஷ் அரசின் தலையாய செயலர்கள் (Principal Secretaries of State) ஆகியோர் அலுவல் நிமித்தமான உறுப்பினர்களாகவும் (ex-officio) பிற ஆணையர்கள் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்ட பொழுதும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆணையர்கள் மூலமாகவே கம்பெனியின் இந்தியக் காரியங்களை மேற்கொள்ளக் கூடிய நிலையில் கட்டுப்பாட்டு வாரியம் இருந்தது. மேலும், பிரிட்டிஷ் அரசப் பட்டயத் தனியுரிமை அல்லது பாதுகாப்புரிமைச் சீட்டில் (letters patent) முதலாவதாகப் பெயரிடப்படும் ஆணையரான கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவருக்கு விருப்ப வாக்குச் சீட்டை அளிப்பதற்கு உரிமையும் அளிக்கப்பட்டது. இத் தலைவர் பின்னர் இந்திய விவகாரங்களுக்கான அமைச்சராக்கப்பட்டார். இதனால், இதற்குமுன் கட்டுப்பாட்டு வாரியத்தில் இவரது சகாக்களாய் இருந்தோர் மறைந்து அவர்களது இடத்தில் இரு உதவி ஆணையர்கள் நியமிக்கப் பட்டனர். இவ் விரு உதவி ஆணையர்கள் வாரியத் தலைவரின் நேரடி ஆட்சி உதவியாளர்களாயினர். வாரியத் தலைவர் பாராளு மன்றத்தின் மேலவையான பிரபுக்கள் அவையில் கம்பெனியின் இந்திய விவகாரங்கள் யாவற்றுக்கும் பொறுப்பேற்றார். பொது மக்கள் அவையில் அவருக்காகக் கம்பெனியின் இந்திய விவகாரங்களுக்கான பொறுப்புகளை வாரியத்தின் செயலாளர் ஏற்றார். வாரியத் தலைவரின் செயலாளருக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளும் பணி முறைகளும் பின்னர் இந்தியாவிற்கான அரசுச் செயலரின் பதவி (Secretary of State for India) தோன்றி வளர்வதற்கான வித்தை ஊன்றியது. இத்தகைய மாற்றங்கள் செய்யப்பட்டபோதும், முன்பு செயலில் இருந்த இரகசியக் குழு மேலும் தொடர்ந்து இருக்குமாறு இச் சட்டத்தில் அனுமதிக்கப் பட்டது. இதனால், கட்டுப்பாட்டு வாரியம் இரகசியம் காத்து, இயக்குநர்கள் மன்றத்தைத் தேவையின் நிமித்தம் புறக்கணித்து, இந்திய அதிகாரிகளுடன் ஆட்சிமுறையான தொடர்பைக் கொண்டு காரியங்களை மேற்கொள்வது முனைப்பாக்கப்பட்டது. இத்தகைய மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்ட கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இந்தியப் பிரதேசங்களின் வருவாய்கள், அரசாங்கப் பொறுப்புகள்,

சட்டங்கள் போன்ற யாவற்றையும் கண்காணிக்கவும், இயக்கிக் கட்டுப்படுத்தவும் முழு அதிகாரமும் உரிமையும் கொடுக்கப் பட்டன.

மேற்சொல்லப்பட்ட செய்திகளுக்கு ஒப்பக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இயக்குநர்கள் மன்றத்தைவிட உயர் அதிகார நிலை இச்சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்ட போதிலும், கம்பெனியின் அரசாங்கம், மற்றும் ஆட்சி குறித்து உயர் அதிகாரிகளைத் தேர்ந் தெடுப்பதில் (selection) அவை இரண்டும் ஒன்றின் கருத்துகளையும் விருப்பங்களையும் மற்றொன்று உதாசீனம் செய்யாமல், அறிந்து காரியங்களை மேற்கொண்டன. எனினும், உண்மைச் செயல் முறையில் அல்லது நடைமுறையில் இந்தியத் தலைமை ஆளுநர், அவரது ஆட்சி மன்றத்தின் சாதாரண நான்காம் உறுப்பினர், மாநில ஆளுநர்கள் மற்றும் பல உயர் அதிகாரிகள் ஆகியோரின் நியமனச் செயல்களில் கட்டுப்பாட்டு வாரியம் மிகுந்த செல்வாக்கையும், அதிகாரங்களையும் பெற்றது. மேற்சொல்லப் பட்டோரின் நியமனங்கள் யாவும் இயக்குநர்கள் மன்றத்தினுல் பிரிட்டிஷ் அரச ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும் என்று இச் சட்டத்தின் 40-42-வது ஷரத்துகள் கூறின. ஆனுல், கட்டுப் பாட்டு வாரியம் பெற்றிருந்த அதிகார நிலையின் காரணமாகக் கம்பெனியினர் அநாதரவான நிலையில் இருக்கவில்லை. ஏனெனில் கம்பெனியின் சார்பில் முனைப்பு மிக்க ஆட்சிச் செயலியாக இயக்கு நர்கள் மன்றம் கம்பெனியின் இந்திய அதிகாரி எவரையும் திருப்பி அழைக்கக்கூடிய அதிகாரத்தைத் தொடர்ந்து பெற்றிருந்தது. அதற்கான அனுமதி இச் சட்டத்தின்மூலம் மறுக்கப்படாததாலும், குறைக்கப்படாததாலும் இயக்குநர் மன்றம் கட்டுப்பாட்டு வாரியத்துடன் அதிகாரச் சமநிலையைப் பெற்றிருந்தது எனலாம். இதற்கு எடுத்துக்காட்டாக இயக்குநர்கள் மன்றம் 1825ஆம் ஆண்டில் இந்தியத் தலைமை ஆளுநராயிருந்த ஆமெர்ஸ்ட் (Amherst) பிரபுவைத் திருப்பி யழைப்பதாக அச்சுறுத்தியதையும், 1845-ல் கட்டுப்பாட்டு வாரியத்தின் விருப்பங்களுக்கு எதிராக அப்பொழுது இந்தியத் தலைமை ஆளுநராக இருந்த எல்லன்பரோ பிரபுவை உண்மையாகத் திருப்பியழைத்ததையும் இங்கு எடுத்துக் கூறலாம்.

கம்பெனியின் இந்திய நிர்வாகப் பொதுக்கொள்கை குறித்தும் வாரியத்திற்கும் மன்றத்திற்கும் இடையே ஏறத்தாழ மேற் சொல்லப்பட்ட சமநிலைப் போக்கே இச் சட்டத்தின்மூலம் நிலவியது. கம்பெனியின் இந்திய விவகாரங்கள்பற்றிய ஆட்சி ரீதியான கொள்கை போன்றவற்றில் முடிவுகாணும் இறுதி அதிகாரம் இச் சட்டத்தின் 109ஆம் ஷரத்தின்கீழ் வாரியத்திற்குக்

கொடுக்கப்பட்டது. அதே சமயத்தில் வாரியத்தின் நிர்வாகத்தில் காணப்படும் குறைகளை அம்பலப்படுத்தி, அதன் காரியங்களை எதிர்ப்பதற்கான சுதந்திரம் இயக்குநர்கள் மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டது. இதனை இயக்குநர்கள் மன்றம் தனது திருப்பியழைக்கும் அதிகாரச் செயல்மூலம் மேற்கொண்டது. மேலும், கம்பெனியின் இந்தியக் காரியங்கள் குறித்துத் துவக்க நிலையை[1] மேற்கொள்ளுவதற்கான அதிகாரத்தை இயக்குநர்கள் மன்றம் பெற்றிருந்தது. இயக்குநர்கள் மன்றத்தின் துவக்க உரிமையின் மீது பொதுவானதும் கட்டுப்படுத்தக் கூடியதுமான அதிகாரத்தைச் செலுத்தும் நிலை வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டது. இத்தகைய ஏற்பாடுகளின்மூலம், இச் சட்டம் கம்பெனியின் தலைமை இடத்துத் தாயக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு வாரியமும், இயக்குநர்கள் மன்றமும் அதிகாரச் சமநிலைத் தலையீடுகளைப் பெற்றுச் செயல்படும்படியான ஆக்க ரீதியான போக்கு நிலவிற்று என்று R. C. மஜூம்தார் அவர்களும் எடுத்துக் கூறியுள்ளார்.[2]

அடுத்து, 1813ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்க் கையாளப்பட்டு வந்த உரிம முறையும், அவ்வுரிம முறையின் அடிப்படையில் குறிப்பிட்ட ஒருசில ஆங்கிலேயர்மட்டும் இந்தியாவிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின்மூலம் அறவே நீக்கப்பட்டன. இப்புதிய ஏற்பாட்டின் கீழ் இனிமேற்கொண்டு எந்த ஐரோப்பியரும் இந்தியாவிற்குச் சென்று குடியேறி, அங்குச் சொத்து சுகங்களையும், வணிக உரிமைகளையும் பெற அனுமதிவழங்கப்பட்டது. எத்தகைய அனுமதியும் இல்லாமல் நிலத்தையும் ஏனைய பொருள்களையும் வாங்கவும் விற்கவும் எல்லா பிரிட்டிஷ் குடிமக்களுக்கும் உரிமை வழங்கப்பட்டதால் அதன்மூலம் இந்தியச் சுதேசி மக்களின் எண்ணங்கள், மதங்கள், உயிர்கள், உடைமைகள், இடங்கள், பிரதேசங்கள் இன்னோரன்ன பிறவற்றிற்கு வெகுவிரைவாகவும், நிறைவாகவும் பாதுகாவலை அளிப்பதற்குச் சட்டமூலமாகவும் ஒழுங்குமுறைகள் மூலமாகவும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆட்சிமன்றத்துடன்கூடிய இந்தியத் தலைமை ஆளுநருக்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டது. இதன்மூலம் ஆங்கிலேயரான பிரிட்டிஷ் இந்தியக் குடிகளால் இந்திய மக்களுக்கு எக் கெடுதலும், அவமதிப்பும், அழிவுகளும் ஏற்படாமல் அவர்கள் இங்கு மற்றவர்

1 Initiative

2 R. C. Majumdar, British Paramountcy and Indian Renaissance Part II p. 318

களுடன் இணக்கமாகவும், சுமுகமாகவும் நடந்துகொள்ள வகை செய்யப்பட்டது.

கம்பெனியின் இந்திய மைய, மாநில அரசாங்கங்களைப் பொறுத்தவரை, முக்கியத்துவம் வாய்ந்த பல ஏற்பாடுகளை இச் சட்டம் செய்து கொடுத்தது. அவை பின்வருமாறு: இந்திய நிர்வாகம் முழுவதும் ஒருமுகப்படுத்தப்பட்டு இந்தியத் தலைமை அரசாங்கத்தில் அதிகாரம் குவிக்கப்பட்டது. இதற்கான அடித்தளம் 1773ஆம் ஆண்டுச் சட்டத்திலேயே நாட்டப்பட்டு, பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் பலப்படுத்தப்பட்டபோதிலும் அது 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின்மூலம் கோட்பாட்டு ரீதியான முழுமையைப் பெற்றது. இத்தகைய அதிகாரக் குவிப்பு (centralisation) முறை பல வழிகளில் பெறப்பட்டது. சட்ட ரீதியாக இல்லாமல், மிகவும் பொதுப்படையாக, வங்கத்தின் தலைமை ஆளுநர் 'இந்தியத் தலைமை ஆளுநர்' என்று இதுகாறும் கருதப்பட்டு வந்தார். இச் சட்டத்தின்மூலம் அந் நிலை அகற்றப்பட்டு வங்கத்தின் தலைமை ஆளுநர் இந்தியாவின் தலைமை ஆளுநர் என்று முதன் முறையாகச் சட்ட ரீதியாகப் பதவி உயர்வு பெற்றார். மேலும், அவர் தமது ஆட்சி மன்றத்தை உடன் வைத்து அதன் உதவி மற்றும் ஆலோசனையின்பேரில் காரியங்களை ஆற்ற வேண்டியிருந்ததால் 'ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநர்' (Governor General in Council) என்றும் அழைக்கப்பட்டார். இவ்வாறு பதவிநிலை வழங்கப்பட்ட இந்தியத் தலைமை ஆளுநருக்கு வங்க மாநில அரசாங்கத்தை நேரிடையாகப் பரிபாலிப்பதற்கும் சென்னை, பம்பாய் போன்ற மாநில அரசாங்கங்களின் சிவில் மற்றும் இராணுவக் காரியங்கள் யாவற்றையும் கண்காணித்துக் கட்டுப்படுத்தி இயக்கவும் தேவையான அதிகாரங்கள் யாவும் கொடுக்கப்பட்டன. தமது சுயபொறுப்பில் செயல்படும்பொழுது மாநில ஆளுநர்களும் அவர்களது ஆட்சிமன்றங்களும், ஆட்சி மன்றத்துடன்கூடிய இந்தியத் தலைமை ஆளுநரிடமிருந்து வரும் உத்தரவுகள், அறிவிப்புக் கட்டளைகள் போன்ற யாவற்றுக்கும் கீழ்ப்படிந்து காரியங்களை ஆற்றவேண்டும் என்ற பொறுப்பு இச் சட்டத்தின்மூலம் நிலைநிறுத்தப்பட்டது. இவ் வேற்பாட்டின் மூலம் நடுவண் அரசின் உத்தரவுகளை உதறித்தள்ளி மாநில அரசாங்கங்கள் காரியங்களை மேற்கொள்ளமுடியாத நல்லாட்சி நியதிச் செயல்பாட்டிற்கு வந்தது. ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரின் உத்தரவின் அடிப்படையிலேயே எல்லா விதமான வருவாய்த் திரட்டல்களும் சம்பந்தப்பட்ட யாவராலும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் மைய, மாநில அரசுகளின் செலவினங்கள் யாவும் அவரது கட்டுப்பாட்டிற்கே உட்பட்டவை.

யாக இருக்கவேண்டும் என்றும், இச் சட்டம் கம்பெனியின் இந்திய அரசாங்க நிதி நிர்வாகத்தில் அதிகாரக் குவிப்பு முறையைத் தோற்றுவித்தது. மேலும் ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநர் அனுமதிக்கும் அளவிலேயே அவரது மாநில அரசாங்கங்கள் செயல்களை மேற்கொள்ளுமாறு செய்யப்பட்டது. மைய அரசாங்கத்தின் முன் அனுமதியின்றி மாநில அரசாங்கங்கள் நிதித் தொடர்பான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாதபடி செய்யப்பட்டது. பிரிட்டிஷ் இந்திய மாநிலங்கள் யாவற்றின் வருவாய்கள் யாவும் ஒரே நிதியைச் (single fund) சேர்ந்தவையாய்ப் பேணப்பட்டது. கம்பெனியின் ஆட்சி எல்லையிலிருந்த பிரிட்டிஷ் இந்தியப் பிரதேசம் முழுவதும் ஒரே நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு, பின்பற்றப்படும் அரசாங்கச் செயல்முறை மேற்கொள்ளப் படலாயிற்று. மாநில அரசாங்கங்கள் விழையும் செலவினக் கோரிக்கைகள் யாவும் மைய அரசாங்கத்தால் இனவாரியாக அலசி ஆராயப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட்டன. எனவே தான், 'இரு வட்டார அங்காடிகளுக்கு இடையேயான ஒரு சாலையை அமைக்கவோ, அல்லது செப்பனிடவோ இருபது பவுன்களைச் செலவிடுவதற்கான தேவை எழுந்தாலும் சரிந்துபோன குதிரைத்தொழுவத்தைப் புதுப்பிக்க வேண்டியிருந்தாலும் மாதம் ஒன்றுக்குப் பத்து ஷில்லிங்குகளைக் (shilling) கூலியாகக் கொடுத்துச் சாதாரண ஒரு குற்றேவலரைப் (menial servant) பயன்படுத்த வேண்டி இருந்தாலும், அவை யாவற்றையும் மாநில அரசாங்கம் முறையாக மைய அரசாங்கத்திற்கு அனுப்பி அறிவித்து அவற்றிற்குரிய அனுமதிகளைப் பெற்றபின்னரே மேற்கொள்ளவேண்டும்.' என்று நிதி பற்றிய நிர்வாகச் செயல்முறையில் மாற்றம் எழுந்ததைப்பற்றிப் பேரறிஞர் ஒருவர் எழுதியுள்ளார். இவ்வாறு நிதி நிர்வாக ஒன்றிப்புமுறை மேற்கொள்ளப்படும் வகையில் இச் சட்டத்தின்மூலம் மற்றும் ஒரு செய்தியும் தெளிவாக்கப்பட்டது. அதன்படி, மைய அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல், அஃதாவது ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரின் முன் அனுமதியைப் பெறுமல், எம் மாநில அரசாங்கமும் ஊதியம், படி, பணிக்கொடை (gratuity), ஓய்வு ஊதியம் ஆகியவற்றைக்கொண்ட எப் புதிய பதவியையும் தோற்றுவிக்கக்கூடாது என்று விதிக்கப்பட்டது. ஏனையவற்றில் பேணப்பட்டதைப்போல் நிதி நிர்வாக உறவுமுறைகளிலும் மைய அரசின் உத்தரவுகளை உதாசீனம் செய்யக்கூடிய எம் மாநில அரசாங்கமும் தற்காலிக நீக்கத்திற்கு (suspension) உட்படுத்தப்பட்டு ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் இச் சட்டம் வகை செய்தது. இவ்வாறு பிரிட்டிஷ் இந்திய அரசாங்கங்களுக்கு இடையே அதிகாரக் குவிப்புடன் கூடிய நிதி நிர்வாகமுறை இச்

சட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படுவதற்குக் குறிப்பிட்ட சில காரணங்களும் இருந்தன. அவை பின்வருமாறு:

தொடர்ச்சியான பல போர்களைக் கம்பெனியின் அரசாங்கம் இங்கு 1833ஆம் ஆண்டுக்கு முற்பட்ட இருபத்தைந்து ஆண்டு களில் மேற்கொண்டவண்ணம் இருந்தது. கம்பெனியின் இந்திய மைய அரசாங்கத்தில் நிதி நிலவரம் பற்றாக்குறைவானதாகவும் மிக மோசமானதாகவும் இருந்தது. பிரிட்டிஷ் பேரரசின் கருவூலமே காலியாகக்கூடிய நிலை கம்பெனியின் காரியங்களால் தோன்றியிருந்தது. கம்பெனியின் இந்திய அரசாங்க நிர்வாகம் சிக்கலானதாகவும், கடினமானதாகவும் வளர்ந்தவண்ணம் இருந்தது. இதனால், மைய அரசாங்கத்தின் நிதித் தேவைகள் அதிகரித்தவண்ணம் இருந்தன. இந்திய அரசுகளுடனும் அந்நியர் களுடனும் கம்பெனியின் இந்திய அரசாங்கம் மேற்கொண்ட அரசியல் உறவுகள் அதிகச் செலவுகளை மேற்கொள்ளும்படி செய் திருந்தன. நம் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவந்த கம்பெனியின் நிதிமுறையான நடவடிக்கைகள் மற்றும் காரியங்கள் யாவற்றிலும் கம்பெனியின் தாயக அரசின் அதிகாரிகளுக்கு இந்திய மைய அரசே முழுப் பொறுப்பையும் ஏற்றிருந்தது. மேலும், பிரிட்டிஷ் முதலாளிகளின் மூலதனம் மற்றும் நம்பிக்கைக்கு உறுதியளித்து, அவர்களின் மூலதனங்கள் இந் நாட்டில் அதிகரிப்பதற்கான பல காரியங்களை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு கம்பெனியின் இந்திய மைய அரசாங்கத்திற்கு இருந்தது. எனவே, இவையாவும் 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின்மூலம் நிதி ஒன்றிப்பும் ஒருமைப் பாடும், அதிகாரக்குவிப்பும் கம்பெனியின் இந்திய மைய அரசில் நிலைநிறுத்தப்படுவதற்கான தேவையையும் அவசியத்தையும் ஏற்படுத்தின.

1833ஆம் ஆண்டுச் சட்டத்தின் 39, 40வது விதிகளின்கீழ்க் கம்பெனியின் இந்திய மைய அரசாங்கத்தில் பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்கும் சட்டங்களைச் செய்வதற்கான சட்ட ஆக்க அதிகாரக் குவிப்பையும் (legislative centralisation) ஏற்படுத்திக் கொடுத்தது. இதனால் பிரிட்டிஷ் இந்தியாவிற்கான ஒரு மைய அரசாங்கம் என்ற சட்ட ரீதியான அந்தஸ்து முதல் முறையாக ஏற்படுத்தப்பட்டது என்றும் கூறலாம். இந்த ஏற்பாடு எப்படி, எச் செய்திகளின் அடிப்படையில் செய்யப்பட்டது என்பதை விளக்குவதற்கு முன், அஃது அவ்வாறு செய்யப்படுவதற்குச் சில காரணங்கள் இருந்தன என்பதை இங்குக் கூறவேண்டியது அவசியமாகும்.

1833ஆம் ஆண்டின் சாசனச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன் இந் நாட்டில் சர்ச்சைக்கும் குழப்பங்களுக்கும் உட்பட்டிருந்தனவாய் ஐவகைச் சட்டங்கள் இருந்தன. மேலும், அவை குறைபாடு மிக்கவையாய் இயற்றப்பட்டிருந்தன. அவையாவன: முதலாம் ஜார்ஜ் மன்னரின் சாசனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு இந்திய மாநில நகரங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டம்; அச் சாசனத்தைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் அவ்வப்பொழுது இயற்றப்பட்டுச் செயல்பாட்டில் இருந்த சட்டங்கள்; வங்கத்துத் தலைமை ஆளுநர் மற்றும் அவரது ஆட்சி மன்றத்தால் செய்யப்பட்டு வங்கத்து பிராந்தியங்களில் செயலில் இருந்த ஒழுங்குமுறைகள்; சென்னை மாநிலத்திற்கென அம் மாநிலத்தின் ஆளுநர், அவரது ஆட்சிமன்றத்தால் செய்யப்பட்டிருந்த ஒழுங்குமுறைகள் மற்றும் பம்பாய் மாநிலத்தில் செயல்பாட்டிலிருந்த அவ் வரசின் ஒழுங்குமுறைகள் என்பவையாகும். இவை யாவற்றாலும் பெருத்த குழப்பங்களும், நெருக்கடிகளும் பிரிட்டிஷ் இந்திய அரசுகளில் தோன்றி நிலவின. எனவே, இவற்றை நீக்கி, பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்கும் பொருந்துமாறு சட்ட ஆக்கத்தை மேற்கொள்ளக்கூடிய அதிகாரக் குவிப்பைக் கம்பெனியின் இந்திய மைய அரசாங்கத்திடம் தோற்றுவிக்க வேண்டிய அவசியம் எழுந்திருந்தது. மேலும், பிரிட்டிஷ் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட நீதி நடவடிக்கைகளிலும், ஆங்காங்கு நிலவரத்திலிருந்த சட்டங்களுக்கு ஒப்ப வழங்கப்பட்ட தீர்ப்புகள் யாவற்றிலும் பெருத்த வேறுபாடுகளும் குறைபாடுகளும் இருந்தன. இவை யாவற்றையும் நீக்கிச் சீரான நீதி வழங்கப்படும் வகையில் ஒருமித்தவொரு சட்ட ஆக்கமுறையை உருவாக்க வேண்டிய அவசியம் எழுந்தது. மேலும், ஐரோப்பியர்களுக்கு, குறிப்பாக பிரிட்டிஷ்காரர்களுக்குத் தடையற்ற உரிமை இங்கு வழங்கப்பட்டிருந்தமையின் குற்றவியல் சட்டத்தை நன்முறையில் பரிபாலனம் செய்யவேண்டிய அவசியம் 1833-ல் எழுந்தது.

ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்கு பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்குமான ஒரு படித்தான சட்டங்களை இயற்றுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. ஆட்சிமன்றத்துடன் கூடிய தலைமை ஆளுநரால் இதுகாறும் செய்யப்பட்டுவந்த ஒழுங்குமுறைகள் இனிமேற்கொண்டு சட்டங்கள் எனப் பெயர்பெற்று அவை நாடு முழுவதும் செயல்படுத்தப்படவேண்டும் என்று விளக்கப்பட்டது. இச் சட்டத்தின்மூலம் எல்லா விஷயங்கள், இடங்கள் குறித்தும் எல்லா வகையான குடிமக்களைக் குறித்தும் சட்டங்களை இயற்ற மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவ்வாறு செய்யப்படும் சட்டங்கள்

யாவும் நாட்டின் நீதிமன்றங்கள் யாவற்ருலும் செயல்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இவைமட்டுமன்றி பிரிட்டிஷ் இந்தியப் பிரதேசங்களிலும், கம்பெனியுடன் நேச உறவு கொண்டிருந்த சுதேசி அரசுகளிலும் இருந்த கம்பெனியின் பணியாளர்களைப் பற்றிச் சட்டம் இயற்றுவதற்குக் கம்பெனியின் இந்திய மைய அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. இராணுவக் கட்டுப்பாடு (military discipline) மற்றும் போர்ச் சட்டத்தைப் பற்றிய ஷரத்துகள் ஆகியவை குறித்தும் சட்டம் இயற்றுவதற்கு ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்கு அனுமதியும் அதிகாரமும் வழங்கப்பட்டன. இதுகாறும் நடைமுறையிலிருந்த அல்லது இனிமேற்கொண்டு நடைமுறைக்கு வரும் சட்டங்களில் திருத்தங்களைச் செய்யவும் அல்லது அவற்றை நீக்கவும் தலைமை ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இவ்வாறு சட்ட ஆக்க அதிகாரங்கள் யாவும் ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரிடம் குவிக்கப்பட்டமையால், கம்பெனியின் இந்திய மாநில அரசாங்கங்கள் சுயேச்சையாகச் சட்டம் இயற்றும் அதிகாரங்களை இழக்க நேர்ந்தது. எனினும், அவை தமது ஆட்சிப் பரப்பிற்குத் தேவையான சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்று மைய அரசாங்கத்தைக் கோரவும், அத்தகைய சட்டங்களைப்பற்றிய வரைவுகளைத் தயாரித்து அனுப்பவும் அனுமதிக்கப்பட்டன. அத்தகைய கோரிக்கைத் தீர்மானங்களும் வரைவுகளும் மைய அரசாங்கத்தினுல் ஏற்று நிறைவேற்றப்பட வேண்டும் என்று இச் சட்டம் வழி வகை செய்தது.

மேற்சொல்லப்பட்ட செய்திகளுக்கு ஏற்ப ஆட்சிமன்றத்துடன் கூடிய தலைமை ஆளுநரைக் கொண்டிருந்த மைய அரசாங்கத்தில் சட்ட ஆக்க அதிகாரக் குவிப்பு செய்யப்பட்ட பொழுதிலும் அவ்வரசாங்கம் செய்யக்கூடாத சில செயல்களையும் இச் சட்டம் ஆணித்தரமாக எடுத்தியம்பியது. இதன்படி 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின் ஷரத்துகளை மாற்றக்கூடியதும் திருத்தக்கூடியதும் நீக்கக்கூடியதுமான எச் சட்டத்தையும் தலைமை ஆளுநரும் அவரது ஆட்சிமன்றமும் செய்யக்கூடாது. இச் சாசனச் சட்டத்தின் ஷரத்துகளைச் செயற்பாட்டிலிருந்து நீக்கிவைக்கவும் மைய அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. இதைப் போலவே அரச நிறுவனம் மற்றும் கம்பெனியின் இந்தியப் பணித்துறை அதிகாரிகள், அலுவலர்கள், சிப்பாய்கள் ஆகியோரைப் பற்றியிருந்த படைக்கலகச் சட்டங்களில் (mutiny acts) மாற்றங்களையும், திருத்தங்களையும், நீக்கத்தையும் மைய அரசாங்கம் மேற்கொள்ள முடியாத தடைகளும், கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. எனினும், அவற்றின் தேர்ச்சிக்கான செம்மையான

காரியங்களை மேற்கொள்ள அஃது அனுமதிக்கப்பட்டது. மேலும், 'அரச நிறுவனத்தின் முற்சலுகைகள் திருத்தப்படும் வகையிலோ, இங்கிலாந்து நாட்டின் அரசியலமைப்பு வழக்காறுகளில் இந்திய நிர்வாகம் சம்பந்தப்பட்ட எப் பகுதியையும் பாதிக்கும் வகையிலோ, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்குப் புறம்பாகவோ சட்டங்களைச் செய்வது ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்கு அப்பாற்பட்டதும், ஒரு சிறிதும் அனுமதிக் கப்படாததுமான அதிகாரம் என்று இச் சட்டத்தின்மூலம் கூறப் பட்டது. பிறப்பால் ஐரோப்பியரான பிரிட்டிஷ் இந்தியக் குடி மக்கள் எவருக்கும் சாசனப்படுத்தப்பட்டிருந்த நீதிமன்றத்தை (Chartered Court) தவிர, வேறெந்த நீதிமன்றமும் மரண தண்டனையை வழங்கும் வகையில் எச் சட்டத்தையும் ஆட்சிமன்றத் துடன்கூடிய தலைமை ஆளுநர், இயக்குநர்கள் மன்றத்தின் முன் அனுமதியைப் பெறாமல் செய்யமுடியாத தடை இச் சட்டத்தின் மூலம் நிலைநிறுத்தப்பட்டது.

தமக்கு அளிக்கப்பட்ட அதிகார வரம்புகளுக்கு உட்பட்டு இந்தியத் தலைமை ஆளுநரும் அவரது ஆட்சிமன்ற உறுப்பினர் களும் செய்யும் சட்டங்கள் யாவும் எந்த நீதிமன்றத்திலும் பதியப்பட வேண்டியதில்லை என்று 1833ஆம் ஆண்டின் சாசனச் சட்டம் எடுத்தியம்பியது. எனினும், அவ்வாறு செய்யப்படும் சட்டங்கள் யாவும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படவேண்டும் என்று வகை செய்யப்பட்டது. அச் சட்டங் களுக்குக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவிப்புக் கட்டளைகளின் கீழ் இயக்குநர்கள் மன்றம் அனுமதியை மறுக்க அதிகாரம் வழங்கப் பட்டது. மேலும், இந்திய மக்களுக்கு என எச் சட்டத்தையும் செய்யக்கூடிய பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அதிகாரம் இச் சட்டத்தின்மூலம் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது.

இதுகாறும் சொல்லப்பட்ட அதிகாரக் குவிப்பு முறைக்குத் துணைசெய்யுமாறும், ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரின் சட்ட ஆக்கப்பணி செம்மையாக மேற்கொள்ளப்பட உதவுமாறும் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றம் விரிவாக்கப்பட்டது. இதன்படி ஆட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து நான் காக உயர்த்தப்பட்டது. புதிதாக நியமனம் செய்யப்பட்ட நான்காம் உறுப்பினர், 'சட்ட உறுப்பினர்' (Law member) என்று பெயரிடப்பட்டார். இவ்வாறு, சட்ட அறிவைக்கொண்ட ஒருவரை உறுப்பினராகத் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றத்தில் சேர்க்க இரண்டு காரணங்கள் இருந்தன. ஆட்சிமன்றத்தின் சட்ட ஆக்கப் பணிகளைப் பூரண அறிவுடனும், திறமையுடனும் தேர்ச்சியாக மேற்

கொள்ளுவதற்குத் தமது முழு நேரத்தையும், கவனத்தையும் அக் காரியங்களில் செலுத்தக்கூடிய ஒருவரை நியமிக்கவேண்டி இருந்தது. அடுத்து, இதுகாறும் வங்கத்துத் தலைமை நீதிமன்றத் தின்மூலம், பெறப்பட்டுவந்த சட்டங்கள் மீதான அனுமதி, ஆலோசனைகளை இனி இவ் வுறுப்பினர்மூலம் எளிமையாகப் பெற்றுத் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றம் செயல்படமுடியும் என்பது இரண்டாவது காரணமாகும். எனவே, அச் சட்ட உறுப்பினர்—அரச நிறுவனத்தின் ஒப்புதலுடன் இயக்குநர்கள் மன்றத்தால் நியமிக்கப்பட வேண்டியவரானார். மேலும், அவர் கம்பெனியின் எப் பணித்துறையையும் சாராதவராக இருக்கவேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றத்தின் சட்ட உறுப்பினராக ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்ட பொழுதிலும் அவருக்கு அம் மன்றத்தின் கூட்டங்களில் அமரவோ, வாக்களிக் கவோ முழுமையான அனுமதி கொடுக்கப்படவில்லை. அஃதாவது ஆட்சிமன்றச் சட்டங்களையும், ஒழுங்கு முறைகளையும் செய்வதற்கு என்று கூடும்பொழுதுமட்டும் அவர் தலைமை ஆளுநரின் ஆட்சி மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டார். இச் சட்ட ஏற்பாட்டின்கீழ் மெக்காலே பிரபு தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றத்தின் முதற்சட்ட உறுப்பினராக நியமிக்கப்பட்டார். மேலும், தலைமை ஆளுநர் ஆட்சிமன்றத்தில் சிறப்பு உறுப் பினராக (extraordinary member) முதற் பெரும் படைத்தலைவர் இயக்குநர்கள் மன்றத்தால் நியமிக்கப்பட இச் சட்டம் வகை செய்தது. இவ்வாறு தலைமை ஆளுநர், சட்ட உறுப்பினரையும் உள்ளிட்ட நான்கு உறுப்பினர்கள், முதற் பெரும் படைத்தளபதி ஆகியோரைக் கொண்டதாகக் கம்பெனியின் இந்திய அரசாங்க உச்ச ஆட்சிமன்றம் (Supreme Council) விரிவான அமைப்பை இச் சட்டத்தின்மூலம் பெற்றது.

மேற்சொல்லப்பட்ட இந்திய அரசாங்கத்தின் உச்ச ஆட்சி மன்றத்தின் அமைப்பையும் அதன் தலைவரும், பிற உறுப்பினர்களும் பெற்றிருந்த பணிகளின் பாங்கையும் ஊன்றிக் கவனித்தால் எல்லா வகையான அதிகாரங்களின் இருப்பிடமாக அஃது இருந்தது என்பது நன்கு வெளிப்படும். இத்தகைய அமைப்பு முறை கம்பெனியின் இந்திய மைய அரசாங்கத்தில் ஏற்படுத்தப்பட்டதால் அதன் நிர்வாகப் பணிகள் மற்றும் சட்ட ஆக்கப் பணிகள் பிரிக்கப் பட்டுத் தனித்தனியே மேற்கொள்ளப்படுவதற்கான அதிகாரப் பிரிவினை முறையைப் புகுத்துவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டது. எனினும், சட்ட உறுப்பினர்மூலம் இவ் வுச்ச ஆட்சிமன்றம் தனித் தியங்கக்கூடிய, சுதந்திரமான ஒரு சட்ட மன்றமாக உருவாக்கப் படவில்லை. இந்த உச்ச ஆட்சிமன்றம் சிவில் மற்றும் இராணுவ

முறையான பணிகளை ஏற்கெனவே பெற்றிருந்ததாலும், அம் மன்றத்தில் சட்ட உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுப் பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்குமான சட்டத்தை ஆக்கும் பணிகள் கொடுக்கப்பட்டமையாலும், ஆனால் சட்ட உறுப்பினருக்கு உச்ச ஆட்சிமன்றத்தின் அன்றாட ஆட்சி முறையான கூட்டங்களில் அமர்ந்து வாக்களிக்க அனுமதி கொடுக்கப்படாததாலும், இச் சட்டம் செயல்பாட்டிற்கு வந்தவுடன் ஒரு சில செய்தி விளக்கங்கள் செய்யப்பட வேண்டியதாயிற்று. இச் சாசன மசோதாவைப் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் அவையில் தாக்கல் செய்து, அதன் நிறைவேற்றத்திற்குக் காரணமாயிருந்த மெக்காலே பிரபு-கட்டுப்பாட்டு வாரியத்தின் முன்னுள் செயலாளராக இருந்த அதே மெக்காலே பிரபு-இந்திய அரசாங்கத்தின் உச்ச ஆட்சிமன்றத்தின் சட்ட உறுப்பினராகப் பதவியேற்றபின் ஒரு நிகழ்ச்சிக் குறிப்பைப் (minute) பதிவு செய்தார். 'அந் நிகழ்ச்சிக் குறிப்பின்மூலம், தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றம் முறையே சட்டமன்றம் என்றும், செயலாட்சிமன்றம் என்றும் இரு தகுதிகளில் அவ்வப்பொழுது செயல்படவேண்டும் என்பதையே 1833ஆம் ஆண்டின் சாசனச் சட்டம் நோக்கமாய்க் கொண்டுள்ளது,' என்று மெக்காலே வாதிட்டார். ஆனால், அவரது வாதத்தை 1833-ல் தலைமை ஆளுநராய் இருந்த வில்லியம் பென்டிங்க் பிரபு ஏற்றுக்கொள்ள வில்லை. மெக்காலே பிரபுவும் தமது வாதத்தை நிலைநிறுத்த முயன்றதிலிருந்து பின்வாங்கவில்லை. எனவே, மேற்சொல்லப் பட்ட குழப்ப நிலையை அகற்றும் வகையில் இந்திய அரசாங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதன்மூலம் தலைமை ஆளுநரின் உச்ச ஆட்சிமன்றம் சட்டமன்றமாக மட்டும் கருதப்படக்கூடாது என்று கூறியது. மேலும் இந்திய மைய அரசாங்கத்தில் ஒரே ஒரு மன்றமே இருக்கமுடியும் என்றும், அதனுடன் தனிப்பட்ட ஒரு சட்ட இலாகாதான் இருக்க முடியும் என்றும் கூறி, எல்லாவிதமான சட்ட முறையான பிரேரணைகளும், கருத்துருக்களும் (Legislative proposals) முதலில் தலைமை ஆளுநரை உள்ளிட்ட ஆட்சி மன்றத்தால் சம்பந்தப்பட்ட அரசாங்க இலாகாக்களின் ரீதியாக கவனித்துச் சீர்தூக்கப்படவேண்டும் என்றும் நிலைநிறுத்தியது. அவ்வாறு உச்ச ஆட்சிமன்றத்தால் இவை சீர்தூக்கி ஏற்றுக் கொள்ளப்பட்டபின், அவை சட்ட இலாகாவிற்கு அனுப்பப்பட்டு அவ் விலாகாவின்மூலம் பொருத்தமான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவேண்டும் என்றும் விளக்கித் தன்னிலை அறிவிப்பை இந்திய அரசாங்கம் செய்தது. இதனைக் கம்பெனியின் தலைமை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதற்கானதோர் ஆட்சிச் செய்தியை அனுப்பியும் வைத்தது. எனினும், கம்பெனியின் இயக்குநர்கள் தமது ஆட்சிச் செய்தியில் இந்திய உச்ச ஆட்சிமன்றத்தின் சட்ட

உறுப்பினர் அம் மன்றத்தின் எல்லாக் கூட்டங்களிலும் கலந்து கொள்ள அருகதையானவரே என்று கூறியது. ஆனால், அம் மன்றத்து வாக்கெடுப்புகளில் மட்டும் அவர் பங்குகொள்ளக் கூடாது என்று அஃது அறிவித்தது. எனவேதான், மெக்காலே பிரபு தலைமை ஆளுநரின் சட்ட ஆக்கப் பணிகளில் மட்டுமன்றிப் பிறவற்றிலும் பங்குகொண்டு செல்வாக்கு மிக்கவராய் இருந்தார். இந்திய அரசாங்கம் அன்று உருவாக்கிய கல்விக் கொள்கையில் இவர் ஆற்றிய பங்கும் பணியும் இதற்குச் சான்று பகர்வன வாகும்.

1833ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தின் 49ஆம் ஷரத்து தெளிவாக்கிய மற்றொரு செய்தியும் உண்டு. அதன்படி தனது உச்ச ஆட்சிமன்றத்தின் உறுப்பினர்களின் முடிவை மீறித் தலைமை ஆளுநர் செயல்படுவதற்கான அதிகாரம் மிகத் தெளிவாக விளக்கப் பட்டது. ஏதேனும் ஒரு காரணத்தால் தலைமை ஆளுநருக்கும், அவரது ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே கருத்து வேற்றுமை நிலவுமாயின் அக் கருத்துவேற்றுமை குறித்து அவர்கள் எழுத்து மூலமாகப் பொருத்தமான காரணங்களைக் காட்டிக் கருத்துப் பரிமாற்றத்தின்மூலம் கருத்து வேறுபாடுகளைப் போக்கிக் கொள்ளவேண்டும். அவ்வாறு முடியாது போயின், இறுதியாக மற்ற உறுப்பினர்களின் கருத்தை உரிய காரணம் அல்லது தேவையின் நிமித்தம் தலைமை ஆளுநர் நிராகரிக்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டார். இவ்வாறு பல ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் மூலம் கம்பெனியின் இந்திய மைய அரசாங்கத்தில் அதிகாரக் குவிப்பு முறை இச் சட்டத்தின்மூலம் முழுமைப்படுத்தப்பட்டது. மேலும், பிரிட்டிஷ் இந்தியாவில் சீரான, சட்டத் தொகுப்புகளைத் தயாரிக்கவும், சட்ட நீதி பரிபாலனம் ஒரே சீராக மேற்கொள்ளத் தேவையான விதிகளை உருவாக்கவும் ஒரு சட்ட ஆணையர் குழு தலைமை ஆளுநரால் நியமிக்கப்படவேண்டும் என்றும் இச் சட்டம் விதித்தது. இதன்படி, மெக்காலே பிரபுவைத் தலைவராகக் கொண்டு இந்தியச் சட்ட ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

நிதி, சட்டம் ஆகியவற்றைத் தவிர நிர்வாக அதிகாரக் குவிப்பும் (administrative centralisation) இந்திய மைய அரசாங்கத்தில் முன் பிருந்ததைவிட முனைப்பாக்கப்பட்டது. இதன்படி, கம்பெனியின் இந்திய மாநிலங்கள் யாவும் இந்தியத் தலைமை ஆளுநரின் முழுமை யான கட்டுப்பாடு, கண்காணிப்பு, இயக்கம் ஆகியவற்றின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. மேலும், தமது கட்டளைகளுக்கும் உத்தரவுகளுக்கும் கீழ்ப்படியாத மாநில அரசாங்கங்களின் அதிகாரி எவரையும் பதவியிலிருந்து நீக்குவதற்குத் தலைமை ஆளுநருக்கு

அதிகாரம் அளிக்கப்பட்டது. மேலும், அவர் தமது தலைமை இடத்தைவிட்டுப் பிற மாநிலங்களுக்குச் சென்றால், அம் மாநில ஆளுநரையும் அவரது ஆட்சிமன்றத்தையும் மீறிச் செயல்படக் கூடிய அதிகாரம் (supersede) முன்பிருந்ததைவிட முனைப்பாக்கப் பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

கம்பெனியின் மாநில அரசாங்கங்களைப் பொறுத்தவரை 1833ஆம் ஆண்டின் சட்டம் பின்வரும் செய்திகளைக் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் இந்தியாவில் சிவில் மற்றும் இராணுவ அரசாங்கத்தைத் தலைமை ஆளுநருடன்கூடிய ஆட்சிமன்றத்தில் மையப்படுத்துவதை மூலநோக்கமாக இச் சட்டத்தின் மூல மசோதா கொண்டிருந்தது. எனவே, அம் மசோதாவில் மாநில ஆளுநர்களின் ஆட்சிமன்றங்கள் அகற்றப்படுவதற்கான யோசனை கள் கூறப்பட்டிருந்தன. ஆனால், இவை இயக்குநர்கள் மன்றத் தாலும் பாராளுமன்றத்தாலும் வெகுவாக எதிர்க்கப்பட்டதால் மேற்சொல்லப்பட்ட முயற்சி கைவிடப்பட்டு, இச் சட்டத்தின் மூலம் மாநில அரசாங்கங்களின் அதிகாரங்கள் அவற்றின் ஆட்சி மன்றங்களிடம் தொடர்ந்திருக்குமாறு அனுமதிக்கப்பட்டன. ஆனால், நாம் ஏற்கெனவே அறிந்துள்ளவாறு மாநில அரசாங்கங் களின் அதிகாரங்கள் இந்திய மைய அரசாங்கத்தின் கண்காணிப்பு, இயக்கம், கட்டுப்பாட்டின்கீழ்ச் செயல்படுமாறு செய்யப்பட்டன.

1833-ல் வங்க மாநிலம் தனது எல்லையிலும் பிறவற்றிலும் விரிவடைந்திருந்தது. எனவே, அம் மாநிலம் வில்லியம் கோட்டை, வடமேற்கு மாநிலங்கள் என்று இரண்டாகப் பிரிக்கப்பட இச் சட்டம் வகைசெய்தது. ஆனால், இதற்கு எதிர்ப்பிருந்தமையால் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடு கைவிடப்பட்டது. அதற்குத் துணையாக 1835-ல் பொருத்தமான திருத்தம் செய்யப்பட்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

வங்கத்துத் தலைமை ஆளுநராய் இருந்தவர் இந்தியத் தலைமை ஆளுநர் என்று பதவி மாற்றம் செய்யப்பட்டதால் வங்க மாநிலத் தில் ஆளுநர் பதவிபற்றிய சட்டப்பிரச்சினை எழுந்தது. எனவே, இந்தியத் தலைமை ஆளுநரே வங்கத்தின் தலைமை ஆளுநராகவும் செயல்பட இச் சட்டம் வகைசெய்தது. ஆனால், வங்க மாநிலத்தின் அரசாங்கக் காரியங்களை அன்றாடம் கவனித்துக் கொள்வதற்கு உதவி புரியும் வகையில் ஒரு துணை ஆளுநரைத் (Lieutenant Governor) தலைமை ஆளுநர் நியமனம் செய்ய இச் சட்டம் அனுமதித்தது.[1] மேலும், அவ்வாறு நியமனம் செய்யப்படும் துணை

[1] Clause 69. The Charter Act, 1833

ஆளுநர், தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றச் சாதாரண உறுப்பினர்களுள் ஒருவராக இருக்கவேண்டும் என்றும், அத் துணை ஆளுநர் அவ்வாறு நியமனம் செய்யப்படுவதன் காரணமாகக் கூடுதல் சம்பளம் எதையும் பெறக்கூடாது என்றும் இச் சட்டம் கூறியது. மற்றப்படி அத் துணைஆளுநருக்கு ஏற்புடைய ஆட்சி அதிகாரங்கள் யாவும் கொடுக்கப்பட்டன.

இச் சட்டத்தின் 56ஆம் ஷரத்து சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களின் ஆட்சிமன்றங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை மூன்ருக இருக்கவேண்டும் என்று நிர்ணயித்தது. ஆனல், அவ் வெண்ணிக்கையைக் குறைக்கவும், ஏதேனும் ஒரு மாநிலம் அல்லது எல்லா மாநிலங்களின் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் நியமனத்தை நீக்கவும், தமது முடிவை மாற்றித் திரும்பப்பெறவும் இயக்குநர்கள் மன்றத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவ்வாறு ஆட்சி மன்றம் இல்லாத நிலை ஒரு மாநிலத்தில் இருக்குமாயின் அப்பொழுது அதன் ஆளுநரே காரியங்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் 57ஆவது ஷரத்தின்மூலம் அறிவிக்கப்பட்டது.

நாம் ஏற்கெனவே அறிந்துள்ளதைப்போல் 1833ஆம் ஆண்டின் சட்டம் மைய அரசாங்கத்தில் நிதி அதிகாரக் குவிப்பை ஏற்படுத்திக் கொடுத்ததன்மூலம், மாநில அரசாங்கங்கள் அனுபவித்து வந்த அதிகாரப் பரவல் முறைக்கு உட்பட்டிருந்த நிதிச் செயல்முறைகள் யாவும் நீக்கப்பட்டன.

சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்கள் தத்தம் படைத் தளபதிகளின் தலைமையின்கீழ்த் தனித்தனியே இராணுவங்களைக் கொண்டிருக்க அனுமதிக்கப்பட்டன. எனினும், அவை மைய அரசாங்கத்தின் இறுதிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவையாக்கப் பட்டன. சட்ட ஆக்கக் காரியங்களிலும், மாநில அரசாங்கங்கள் மைய அரசாங்கத்தின் இறுதியான அதிகாரங்களுக்கு உட்பட்டுச் செயல்படுமாறு செய்யப்பட்டன. மேலும், மாநில அரசாங்கங்கள் யாவும் தம் அரசாங்கக் காரியங்களைப்பற்றிய கட்டளைகள், உத்தரவுகள் ஆகியவற்றின் உண்மையான நகல்களை அவ்வப் பொழுது, ஒழுங்காக மைய அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்க வேண்டிய கடமை மீண்டும் வலியுறுத்தப்பட்டது. மேலும், தாம் மேற்கொள்ளும் காரியங்கள்,செய்திகள் பற்றிய விவரங்கள் யாவற்றையும் மட்டுமன்றி, தலைமை ஆளுநர் அவ்வப்பொழுது கேட்கும் செய்திகளையும், மைய அரசிற்கு அவை அனுப்பிவைக்கவேண்டும் என்று இச் சட்டத்தின் 68ஆம் ஷரத்து அறிவித்தது. மற்றப்படி மைய அரசாங்கத்தின் கட்டளைகளையும் உத்தரவுகளையும் மீறி

அல்லது உதாசீனம் செய்து அடங்காத் தன்மையுடன் மாநில அரசாங்கங்கள் செயல்படுமாயின் அவற்றை எவ்வாறு அடக்கி அல்லது அகற்றி மைய அரசாங்கம் செயல்படமுடியும் என்பதையும் நாம் முன்னரே அறிந்துள்ளோம். எனவே, இச் சட்டத்தின்மூலம் செய்யப்பட்ட பிற பொதுவான அரசாங்க ஏற்பாடுகளை ஈண்டுக் கூறுதல் முக்கியமாகும்.

இச் சட்டத்தின் 87ஆம் பிரிவு, பிரிட்டிஷ் குடிமக்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையே சமத்துவத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. மதம், பிறப்பிடம், நிறம் அல்லது மரபுவழி ஆகிய எக் காரணத்தைக் கொண்டும் எவ் விந்தியரும் பிரிட்டிஷ் குடிமக்களும் நிலம் அல்லது இடம், பதவி அல்லது வேலைபெறுவதில் வேற்றுமை பாராட்டப்படக்கூடாது, அல்லது அவற்றைப் பெறுவதற்கு அவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படக்கூடாது என்று ஆணித்தரமாக அறிவித்தது. இத்தகைய ஏற்பாட்டினால் தகுதி (merit) கொண்ட எவரும் எப் பதவியையும் பெறுவதற்கு வகை செய்யப்பட்டது. இவ்வாறு செய்யப்பட்ட வசதி உடனடியாகச் செயற்பாட்டிற்கு வரவில்லை என்றாலும், இதனால் இந் நாட்டு மக்கள் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தில் உரிய பதவிகளையும் இடங்களையும் பெற ஆக்க ரீதியாகப் போராடி இறுதி வெற்றியைக் காண்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. இச் சட்டத்தில் மேற் சொல்லப்பட்ட வசதி செய்யப்பட்ட போதிலும் அஃது உடனடியாக நடைமுறைக்கு வராமல் போனதற்கு 1793ஆம் ஆண்டுச் சட்டத்தில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடும், அக் கட்டுப்பாடு இதுகாறும் குறிப்பாக இச் சாசனச் சட்டத்தின்கீழ் அகற்றப் படாமல் இருந்ததுமேயாகும்.

இறுதியாக இந்தியா முழுவதும் இருந்த அடிமைகளின் வாழ்க்கைத் தரத்தை வளமாக்கி, உரிய நேரத்தில் அடிமை முறையை முற்றிலும் நீக்க இந்திய அரசாங்கம் உடனடியாகக் காரியங்களை மேற்கொள்ளவேண்டும் என்று இச் சட்டம் விதித்தது. இதன் பயனாகவே இராசாராம் மோகன்ராய் போன்ற இந்தியத் தலைவர்களின் உதவியுடன் வில்லியம் பென்டிங்க் பிரபுவும் பிறரும் உடன் கட்டை ஏறுதல், சிசுவதை, நரபலி ஆகியவற்றை நீக்கிச் சமுதாயச் சீர்திருத்தக் காரியங்கள் பலவற்றை மேற் கொண்டனர் என்பதை இங்கு நாம் அறியவேண்டும். மேலும், இந்தியாவிலிருந்த சமய வட்டத் தலைவரின் ஆட்சி அலுவலகங்களின் (Bishoprics) எண்ணிக்கை மூன்றாக அதிகரிக்கப்பட்டுக் கல்கத்தாவின் மேற்றிராணியார் இந்தியத் தலைமை மேற்றிராணியாராக ஆக்கப்பட்டார். கம்பெனியின் இந்தியச் சிவில்

பணியாளர்கள் ஹெய்லிபரி கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படும் வகையில் அனுமதிக்கப்படும் விதிகள் மேலும் இச் சட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டன.

இச் சட்டத்தின் செயற்பாட்டின்மூலம் வெளிப்பட்ட நிறைகளும், குறைகளும்

1833ஆம் ஆண்டுச் சாசனச் சட்டம் தனது செயற்பாட்டுக் காலமான இருபது ஆண்டுகளில் பல நன்மைகளையும் சில தீமைகளையும் தோற்றுவித்தது. இச் சட்டத்தின் செயற்பாட்டினால் பெறப்பட்ட முக்கியத்துவமும் நன்மைகளும் பின்வருபவையாகும். இதுகாறும் வணிக நிறுவனமாகவும் ஆட்சிக் கேந்திரமாகவும் செயல்பட்டு வந்த கிழக்கிந்தியக் கம்பெனி அரசியல் தன்மை வாய்ந்த ஒரு நிர்வாக நிறுவனமாக அமைந்தது இந்திய அரசியல் பெற்ற பெரிய நன்மையாகும். கம்பெனியின் வணிக முற்றுரிமை நீக்கப்பட்டுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் மற்றும் இந்தியக் காரியங்களுக்கான செயலாளர் ஆகியோர்மூலம் அரசியல் மற்றும் அரசாங்க ரீதியான காரியங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் சீர்திருத்த உணர்ச்சி இந்திய அரசியல் மண்டலத்தில் நுழையலாயிற்று. ஐரோப்பியர்களுக்கு இந்தியாவில் குடியேறுவதற்குத் தடையற்ற சுதந்திரம் வழங்கப்பட்டதால் இந்திய மக்களின் சிந்தனை, செயல், பண்பாடு ஆகியவை ஆங்கிலேயரின் பண்பாட்டுப் பாரம்பரியத்துடன் ஏற்றுக் கொள்ளத் தக்க அளவில் கலந்து உறவாடக்கூடிய நன்மை கிட்டிற்று. நிதி, சட்டம் நிர்வாகம் ஆகியவற்றின் அதிகாரக் குவியலின் விளைவாக பிரிட்டிஷ் இந்தியப் பிரதேசங்களை ஒன்று திரட்டி, ஒரு குடையின்கீழ்க் கொண்டுவந்து, ஒருமுக அரசு மேலும் தேர்ச்சியாக வளரக்கூடிய அரசியல் கோட்பாட்டு ரீதியான நன்மை கிட்டியது. இது பின்னர் ஜனநாயகக் கருத்துகளில் ஈடுபாடு ஏற்படவும், தேசிய உணர்ச்சி வளரவும் உதவி செய்தது. மெக்காலே பிரபுவின் தலைமையின்கீழ்ச் செயல்பட்ட சட்ட ஆணைக் குழு, இந் நாட்டின் ஒருமித்த ஒரு சட்டத் தொகுப்பை வழங்கும் அரும்பணியைச் செய்தது. நாடு முழுவதற்குமான பொதுவான ஒரு சட்டம் பின்பற்றப்பட்டதால் தேசிய நேர்மை (National integrity) தோன்றிப் பேணப்படலாயிற்று. இவை யாவற்றையும்விட எல்லோரிடையிலும் சமத்துவத்தைப் பேணி, அடிமைத்தளை அகற்றப்படும் வகையில் இச் சட்டத்தின் 87ஆம் விதி பெரும்பயனை இந் நாட்டவர்க்குப் பெற்றுத் தந்தது.

இச் சட்டத்தின் செயற்பாட்டினால் பெறப்பட்ட நன்மைகள் பலவாக இருந்தபோதிலும், அதனால் தோன்றிய சில தீமைகளும் இருந்தன. இச் சட்டம் ஏற்படுத்திக் கொடுத்த அதிகாரக் குவிப்பு

முறை பல இன்னல்களையும் நெருக்கடிகளையும் இந்திய அரசாங்கங்களுக்கு இடையே தோற்றுவித்தது. மதம், இனம், மொழி, கலாசாரம், பொருளாதாரநிலை ஆகிய பலவற்றின் காரணமாக இந் நாட்டின் மக்களிடையே வேறுபாடுகள் மலிந்திருந்தமையால் அவை யாவற்றையும் அணுகி ஆராய்ந்து பயன் தரத்தக்க ஆட்சி ரீதியான காரியங்களை இந்திய மைய அரசாங்கம் மேற்கொள்வதில் காலதாமதமும் பொருந்தாத் தன்மைகளும் மிகுந்து காணப்பட்டன. மாநில அரசாங்கங்களுக்கும் வட்டார அரசாங்கங்களுக்கும், தத்தம் ஆட்சி எல்லைகளில் நேரிடையாகப் பரிபாலனம் செய்யக்கூடிய அதிகாரங்கள் நீக்கப்பட்டிருந்தமையால், மைய, மாநில அரசுகளுக்கு இடையே பிணக்குகள் தோன்றின. வடக்கு வாழ்ந்து, தெற்கு தேயும்படியான நிலையில் பாரபட்சமாக இந்திய மைய அரசாங்கம் செயல்பட்டது. மாநில அரசாங்கங்கள் தமக்குத் தேவையான நிதி உதவிகளை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறமுடியவில்லை. எனவே, சிக்கனமற்றதும் பொறுப்பற்றதுமான காரியங்களை மாநில அரசாங்கங்கள் துணிச்சலுடன் மேற்கொண்டன. மைய அரசாங்கத்திடமிருந்து அதிகமான நிதி உதவிகளைப் பெறும் வகையில் நியாயமற்ற கோரிக்கைகளைத் தயாரித்து அனுப்பி, அத் தொகைகளைப் பெற்றுச் சரியான முறையில் செலவு செய்யாமல் அதிகாரிகள் கொள்ளையடித்தனர். மைய, மாநில அரசுகளுக்கு இடையே நிதி நிர்வாக உறவைக் கண்காணித்து மேற்பார்வை செய்வதற்குத் தேவையான ஒரு சாதனத்தையும், ஆட்சிப் பொறியையும் இச் சட்டம் அமைக்காதது, இதன் செயற்பாட்டின்மூலம் வெளிப்பட்ட பெருந் தீமையும் குறைபாடுமாகும்.

இறுதியாக, மேற்சொல்லப்பட்ட நன்மை தீமைகள் இரண்டையும் ஒருசேரவைத்துச் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது இச் சட்டத்தினால் இந்திய அரசாங்கம் பெற்ற உடனடியானதும் அடிப்படையானதுமான நன்மையே அதிகமானதாக வெளிப்படுகின்றது. எவ்வாறெனில், 1909ஆம் ஆண்டில் மின்டோ மார்லி சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட வரை பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் நிலையானதும் ஒன்றிப்பானதுமான ஒருமுக அரசை ஏற்படுத்திக் கொடுத்து, அதன்மூலம் இந்திய அரசாங்கத்தின் ஆட்சிப் பொறி படிப்படியாகத் தேர்ச்சியுற்று வளர்வதற்கு உறுதுணையாக இருந்தது. எனவே, 1833ஆம் ஆண்டுச் சாசனச் சட்டம் இந்திய அரசாங்கம் மற்றும் அரசியல் அமைப்பில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திக் கொடுத்தது.

19. 1853ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட சாசனச் சட்டமும் அரசாங்கச் செயற்பாடும்

கம்பெனியின் பிரிட்டிஷ் இந்திய அரசாங்க அமைப்பு ஆட்சிப் பொறி ஆகியவற்றின் இயக்கத்திற்கும், செயல் ஓட்டத்திற்கும் காரணமாயிருந்த 1833ஆம் ஆண்டின் சாசனச் சட்டம் தனது செயற்பாட்டின் முடிவுக்காலத்தை நெருங்கியபொழுது பிரிட்டிஷ் இந்திய மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி தோன்றியிருந்தது. இதனுல், கிழக்கிந்தியக் கம்பெனியின் பிற்போக்கான ஆட்சிமுறை அறவே அகற்றப்படவேண்டும் என்று பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம் முயற்சியில் வங்காளிகள் மற்ற யாவருக்கும் வழி காட்டினர். வங்கத்தில் செல்வாக்கு மிக்க தங்கமான மனிதராய்க் கருதப்பட்டவரும், தலைசிறந்த சீர்திருத்த வாதியுமான இராசாராம் மோகன்ராய் இங்கிலாந்திற்குச் சென்று, இந்திய மக்களின் நலனிற்காகப் பாராளுமன்றத்தின் பொறுக்குக் குழுவில் பங்குகொண்டு, பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் சீர்திருத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினுர்.

1852-ல் பம்பாய்ச் சங்கம் (Bombay Association) என்னும் ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டது. இவ் வமைப்பு பம்பாய் மக்களின் நலனையும், அக்கறைகளையும் கம்பெனியின் பம்பாய் அரசாங்கத்துப் பிற்போக்கான காரியங்களிலிருந்து காப்பாற்றித் தேர்ச்சியுறச் செய்வதைத் தனது குறிக்கோளாய்க் கொண்டிருந்தது. இச் சங்கம் மிகவும் தேர்ச்சியான அரசாங்கமுறை இந்தியாவில் அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானத்தை நிறைவேற்றி பிரிட்டிஷ் பாராளு மன்றத்திற்கு விண்ணப்பித்தது. ஏறத்தாழ அதே சமயம் சென்னை யிலும், 'சென்னைச் சுதேசி மக்கள் சங்கம்' (Madras Natives Association) என்ற ஓர் அமைப்பு அமைக்கப்பட்டிருந்தது. இம் மன்றமும் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் தேர்ச்சியான முறையில் காரியங்களை மேற்கொள்ளுமாறு சீர்திருத்தப்படவேண்டும் என்று தீர்மானம் இயற்றி ஒரு கோரிக்கை மனுவை அனுப்பியது.

மான்டீகில் பிரபுவின் (Lord Monteagle) மூலம் அனுப்பிய தமது கோரிக்கை விண்ணப்பத்தின்மூலம் பம்பாய் மக்கள் கம்பெனியின் தலைமை அரசாங்க அமைப்பில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்று கோரினர். இதன்படி, கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம் ஆகியவற்றைக் கொண்டு செயல்பட்டுவந்த தலைமை இடத்து இரட்டை அரசாங்க முறை அறவே நீக்கப்பட வேண்டும் என்றும் இயக்குநர்கள் மன்றம் பெற்றிருந்த பொறுப்புகள், அதிகாரங்கள் யாவும் இந்திய மன்றத்திற்கு (India Council) முழுமையாக மாற்றப்படவேண்டும் என்றும் கோரப்பட்டது. வங்கத்து மக்கள் ஹாரோபி (Horrowby) பிரபுவின் கோரிக்கை மனுவிலும், இலண்டனிலிருந்த இரட்டை அரசாங்கமுறை அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக ஓர் அரசு செயலரும், அவருக்குச் சட்டம் இயற்றுவதில் துணைபுரிய இந்திய மன்றம் ஒன்றும் அமைக்கப்பட வேண்டும் என்றும் வேண்டினர். மேலும், அவ்வாறு அமைக்கப்படும் இந்திய மன்றஉறுப்பினர்களுள் அரைப் பங்கினர் தேர்ந்தெடுக்கப்படுபவர்களாகவும் இருக்கவேண்டும் என்று எடுத்துக்காட்டினர். இந்தியாவில் அமைக்கப்படும் அம் மன்றம் அரசாங்கத்தின் செயலாட்சிப் பிரிவிலிருந்து (executive) மாறுபட்டதாய், மக்களாட்சி நியதியின் அடிப்படையில் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்குமாறு அமையவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இத்தகைய கோரிக்கைகளை இந்திய மக்கள் எழுப்பியதன்மூலம் கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சிக்கு எதிராகத் தமது அரசியல் விழிப்புணர்ச்சியை வெளிப்படுத்தினர்.

இவ்வாறு மக்களின் மனத்தாங்கல் கம்பெனியின் இந்திய அரசாங்கத்திற்கு எதிராக வெளிப்படப் பல காரணங்கள் இருந்தன. அவற்றுள் மிக முக்கியமானது, 1833ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்திய மக்களுக்கான சமத்துவப் பணிவாய்ப்பு முறை செயல்படுத்தப்படாமல் இருந்ததாகும். அச் சட்டத்தின் ஏற்பாட்டின்படி இந்தியர்கள் யாவரும் கம்பெனியின்கீழ் எல்லாப் பதவிகளையும் வகிக்க அருகதை உள்ளவர்களாக்கப்பட்டிருந்தனர். மேலும், தகுதியின் அடிப்படையில் எவ் விந்தியரும் எப் பதவியிலும் அமர்த்தப்படலாம் என்று வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஏற்பாடுகளுக்கு எதிராகக் கம்பெனியின் இந்திய நிர்வாகத்தில், குறிப்பாக உயர்பதவிகளில், இந்தியர்கள் நியமிக்கப்படவில்லை. இச் செயல் இந்தியர்களின் மனத்தில் தோன்றியிருந்த அபிலாஷைகளை அல்லது நாட்ட விழைவுகளை ஈடேற்றவில்லை. எனவே, 1853-ல் கம்பெனியின் சாசனச் சட்டம் புதுப்பிக்கப்படுவதற்கு முன்னைப்பான எதிர்ப்பு முதல்முறையாக இந்தியாவிலிருந்தே கிளம்பியது. வியாபார

நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியிடம் அரசாங்கப் பொறுப்பும் ஆட்சிச் சுமையும் இருக்குமாறு அனுமதிக்கக்கூடாது என்று இங்கிலாந்தில்தான் இதுகாறும் கோரிக்கைகளும் எதிர்ப்புகளும் எழுப்பப்பட்டு வந்தன. ஆனால், அத்தகைய எதிர்ப்பை இந்திய மக்களும் முதன்முறையாக 1850ஆம் ஆண்டுக்குப் பிறகு எழுப்பினர். இத்தகைய எதிர்ப்புச் சூழ்நிலையில், இந்திய மக்களின் மனோபாவத்தை அறிந்த நிலையில், கம்பெனியின் சாசனச் சட்டத்தைப் புதுப்பித்து இயற்றக்கூடிய பணியை பிரிட்டிஷ் பாராளுமன்றம் மேற்கொண்டிருந்தது. அதற்கென ஒரு பொறுக்குக் குழுவையும் அமைத்திருந்தது. இப் பொறுக்குக் குழுவில் கலந்துகொள்ளவே இராசாராம் மோகன் ராய் இலண்டனுக்குச் சென்றிருந்தார். இப் பொறுக்குக் குழுவின் முன் இந்தியப் பிரச்சினையை எடுத்துக்கூறிக் கம்பெனியின் வணிக உணர்ச்சியும் அக்கறையும் இனிமேற்கொண்டு எக் காரணத்தை முன்னிட்டும் இந்திய அரசாங்கத்தை ஆக்கிரமித்திருக்குமாறு அனுமதிக்கக்கூடாது என்று கோர, இந்தியச் சீர்திருத்தக் கழகம் (India Reform Society) ஒன்றும் அமைக்கப்பட்டது.

மேலும், கம்பெனியினர் இந்தியாவில் 1833ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளின் காரணமாக அரசியல் முறையான மாற்றங்களேயன்றிக் கம்பெனியின் இந்தியப் பிரதேச உரிமை மற்றும் இறைமை நிலையும் விரிவடைந்திருந்தது. முதலாம் ஆப்கானியப் போர் 1833-க்குப் பின்னரே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் விளைவாகச் சிந்து மற்றும் பஞ்சாப் போன்ற இந்திய அரசுகள் கம்பெனியின் இறைமை அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டிருந்தன. மேலும், இந்தியத் தலைமை ஆளுநரான டல்ஹௌசி பிரபுவால் பின்பற்றப்பட்ட ஆக்கிரமிப்பான அவகாசியிலிக் கொள்கையின் காரணமாக ஜான்ஸி, சதாரா, நாக்பூர், ஜெயித்பூர் போன்ற பல இந்திய அரசுகள் கம்பெனியின் ஆதிக்கம் மற்றும் ஆட்சி இறைமையின்கீழ்க் கொண்டு வரப்பட்டிருந்தன. இத்தகைய பிரதேசங்கள் யாவற்றுக்கும் பொருந்துமாறு பல சீர்திருத்தங்கள் அரசாங்க ரீதியாகவும் ஆட்சி ரீதியாகவும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. அதே சமயம், கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் யாவும் பன்முகப்படுத்தப்படவேண்டும் என்று, இந்தியர்களால் மட்டுமன்றி ஆங்கிலேயர்களாலும் பெரிதும் வலியுறுத்தப்பட்டது. டெர்பி பிரபு (Lord Derby) போன்றவர்கள் 1852ஆம் ஆண்டில் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின் உள்விவகாரங்களில், சுதேசி மக்களான இந்தியர்களுக்கு அதிக வாய்ப்புகளும் பொறுப்புகளும் கொடுக்கப்படவேண்டும் என்று பெரிதும் வாதாடினர்.

ஆனால், பிரிட்டிஷ் பொதுமக்களும், பாராளுமன்றத்தின் பொதுமக்கள் அவையும் இந்திய மக்கள் சங்கங்கள் அனுப்பிய கோரிக்கை மனுக்களைக் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. ஏனெனில், பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரிட்டிஷ் அமைச்சர்கள், கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் மற்றும் கம்பெனியின் இயக்குநர்கள் ஆகிய யாவரும் ஒன்று சேர்ந்து கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த சாசனம் மறுபடியும் புதுப்பிக் கப்படவேண்டும் என்று முடிவெடுத்திருந்தனர். எனினும், இந்திய மக்கள் வெளிப்படுத்தி யிருந்த மனக்குமுறல்களையும், நாட்ட விழைவுகளையும் மிக எளிதாக ஒதுக்கிவிடக்கூடிய நிலையில் பிரிட்டிஷ் அரசு இருக்கவில்லை. எனவே, அது 1851ஆம் ஆண்டு சனவரித் திங்களிலேயே இந்தியாவின் தலைமை ஆளுநருக்குக் கடிதம் ஒன்றை எழுதி, அதன்மூலம் 1853-ல் புதுப்பிக்கப்பட இருக்கும் சாசனச் சட்டத்தில் எத்தகைய மாற்றங்களையும், புதுமைகளையும் புகுத்தலாம் என்பது குறித்து அவரது கருத்துகளை அறிவிக்குமாறு கோரியது. அப்பொழுது இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த டல்ஹௌசி பிரபு தமது குறிப்பாணையை 1852ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 13ஆம் நாளன்று பிரிட்டிஷ் அரசிற்குச் சமர்ப்பித்தார். அக் குறிப்பாணையில் பின்வரும் செய்தி களை அவர் தெளிவுபடுத்தியிருந்தார்.

டல்ஹௌசி பிரபுவின் குறிப்பாணை (memorandum) அப் பொழுது இந்தியாவில் நிலவிய அரசாங்க நிலையையும், அதில் காணப்பட்ட நிறுவனக் குறைபாடுகளையும் அங்கைச் செங்கனி யாய் அறிவிப்பதாய் இருந்தது. பிரிட்டிஷ் இந்திய அரசாங் கத்தின் உச்சக் கட்டுப்பாடு, ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரிடம் முன்னிலும் முனைப்பாக அதிகரிக்கப்படவேண்டும் என அவர் தமது குறிப்பாணையில் எடுத்து இயம்பியிருந்தார். மேலும், தேவையான சமயம், தேவையான காரணங்களின் நிமித்தம் தமது ஆட்சிமன்றத்தை மீறிக் காரியங்களை ஆற்றத் தலைமை ஆளுநர் ஆணித்தரமாகவும், சட்ட முறையாகவும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினர். இவற்றையெல்லாம் கூறி, இந்திய அரசாங்கத்தின் சட்ட ஆக்க இயந்திரம், நிர்வாக இயந்தி ரத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டப்படுமாறு புனரமைப்புச் செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்தினர். இதற்குச் சான்றாகப் பின்வரும் செய்திகளையும் அவர் எடுத்துக்காட்டி யிருந்தார். பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்குமான சட்ட ஆக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கெனத் தமது ஆட்சிமன்றத்தின் சிவில் உறுப் பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தோர், வங்கப் பணித்துறையைச் சார்ந்தோராக இருந்ததால் அவர்கள் சென்னை, பம்பாய் ஆகிய

பிரதேசங்களைப் பற்றிய அறிவைப் பெருதவர்களாய் இருந்தனர். எனவே, அத்தகையோரை உறுப்பினர்களாய்க் கொண்டிருந்த தமது ஆட்சி மன்றம் பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்குமான, தேவையானதும் பொருத்தமானதுமான சட்ட ஆக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குப் போதுமான ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை என்று எழுதினுர். மேலும், தலைமை ஆளுநரின் ஆட்சி மன்றத்தில் சிறப்பு உறுப்பினராயிருந்த முதற் பெரும்படைத் தளபதி சட்ட ஆக்க நடவடிக்கைகளைப்பற்றிய செய்திகளில் அறிவுச் சூனியராக இருந்தார் என்றும், நிர்வாகப் பணிகளிலேயே தமது முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டியிருந்ததால், தலைமை ஆளுநரும் சட்ட முறையான ஆக்கங்களிலும், நடவடிக்கைகளிலும் உரிய கவனத்தைச் செலுத்தமுடியாத நிலையைப் பெற்றிருந்தார் என்றும் டல்ஹௌசி பிரபு தமது குறிப்பாணையில் வெளிப்படுத்தி இருந்தார். பிரிட்டிஷ் இந்தியாவில் சட்ட ஆக்க நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு என நியமிக்கப்பட்டிருந்த உச்ச ஆட்சி மன்றத்தின் ஆட்சி உறுப்பினரும் ஆங்கிலச் சட்டத்தை மட்டுமே பரிபூரணமாக அறிந்தவரா யிருந்தார். இந்தியாவில் நிலவரத்திலிருந்த சட்டங்களைப்பற்றியோ, இந்து முகமதியச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றியோ அவர் ஏதும் அறியாதவராய் இருந்தார். இவை மட்டுமன்றி, இந்தியர்களைப்பற்றியும் அவர்கள் பின்பற்றி வந்த பழக்க வழக்கங்கள், வழக்காறுகள், மரபுகள், நில உரிமைகள் ஆகியவற்றைப்பற்றியும் முக்கியத்துவம் வாய்ந்த இன்னோரன்ன பிறவற்றைப்பற்றியும் அவர் அறியாதவராய் இருந்தார். மேலும், அச் சட்ட உறுப்பினர் மேற்கூறிய யாவற்றையும் அனுபவத்தின் காரணமாக, அறிந்து இடுக்கண் களைய முனைந்த சமயத்தில் தமது பதவியிலிருந்து திருப்பி யழைக்கப் பட்டார். இத்தகைய குறைபாடுகள் இருந்தமையால், 1833ஆம் ஆண்டின் சட்டம் அமைத்துக் கொடுத்திருந்த ஆக்கப் பொறி செவ்வனே செயல்பட முடியாதிருந்ததை டல்ஹௌசி பிரபு தெள்ளத் தெளிய எடுத்துக் கூறி, சட்ட ஆக்கப்பணி செம்மையாக நடைபெறத் தகுதியும், திறமையும் கொண்ட மற்றும் சில உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வகையில் தமது உச்ச ஆட்சிமன்றம் சீரமைக்கப்படவேண்டும் என்று மிகவும் வலியுறுத்தி எழுதினுர். டல்ஹௌசி பிரபு தமது குறிப்பாணையில் எடுத்தியம்பி யிருந்த மெய்ப்பாட்டு நிலவரங்களையும் செய்திகளையும் கருத்தூன்றி ஆராய்ந்து, அவர் எடுத்துக் கூறியிருந்த ஆலோசனைக் கருத்துகளைப் பெரும்பாலும் ஏற்றுக்கொண்டு, கம்பெனியின் சாசனச் சட்டத்தை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினர் இயற்றினர். அவ்வாறு இயற்றப்பட்ட சட்டத்தில் இந்திய மக்கள் வெளிப்படுத்தியிருந்த நாட்ட விழைவுகளையும், டல்ஹௌசி பிரபு காட்டி

யிருந்த ஆலோசனை அறிவுரைகளையும் செயல்படுத்தும்வண்ணம் பல்வேறு அரசாங்க ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டன. அவை பின்வருமாறு :

இச் சட்டத்தின் முக்கிய அம்சங்களும் ஏற்பாடுகளும்

இச் சட்டத்தின்மூலம் செய்யப்பட்ட முதலாவதும் முக்கிய மானதுமான ஏற்பாடு யாதெனில், இதுகாறும் இருந்ததைப் போலல்லாமல் பிரிட்டிஷ் பாராளுமன்றம் மாற்று ஏற்பாடுகளைச் செய்ய முற்படும் காலம் வரையில் மட்டுமே இந்தியப் பிரதேசங் களையும் வருவாய்களையும் கிழக்கிந்தியக் கம்பெனி பிரிட்டிஷ் அரசருக்காகவும், அவருடைய வாரிசுகளுக்காகவும் தர்மகர்த்தா வாக இருந்து நிர்வகிக்கவேண்டும் என்று தெளிவாக்கப்பட்ட தாகும்.

பேராசிரியர்கள் A. B. கீத், டாட்வெல் போன்ற அறிஞர் பெருமக்கள் எடுத்துக் கூறியிருப்பதைப்போல் மேற்சொல்லப் பட்ட ஏற்பாட்டின்மூலம், இந்தியப் பிரதேசங்கள் மற்றும் வருவாய்களை அனுபவித்து மேலாண்மை செய்வதற்குரிய கால வரையறை மேற்கொண்டு இருபது ஆண்டுகளுக்கு இருக்குமா என்ற ஐயப்பாட்டைத் தோற்றுவிக்குமாறு கம்பெனிக்கான அனுமதிகளும் சலுகைகளும் வழங்கப்பட்டன. எனவே, இதுகாறும் செய்யப்பட்டு வந்த இருபது ஆண்டுக்கால அனுமதியும், கால நீட்டிப்பும் கம்பெனிக்கு வழங்கப்படுவது குறித்து எவ் வுறுதிப் பாடும் செய்யப்படவில்லை.

அடுத்து, கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலாளர், உறுப் பினர்கள், அதன் ஏனைய அதிகாரிகள் ஆகியோரின் ஊதியங்கள் யாவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு, அவை கம்பெனியால் கொடுக்கப்படவேண்டும் என்று இச் சட்டம் தெளிவுபடுத்தியது. கட்டுப்பாட்டு வாரியத் தலைவரின் ஊதியம் இங்கிலாந்து அரசின் தலையாய அரசு செயலர் ஒருவரின் ஊதியத் திற்குக் குறைவுபடாததாக இனி இருக்கும் எனவும் இச் சட்டம் எடுத்தியம்பியது. ஆரம்பத்தில் கட்டுப்பாட்டு வாரியத் தலைவரின் ஊதியம் ஆண்டொன்றுக்கு 2000 பவுன்களாக இருந்தது. இதற்குக் காரணம் அப்பொழுது வாரியத்தின் மற்ற உறுப்பினர்கள் பெற்று வந்த சலுகைகளையே அவரும் பெற்றிருந்ததாகும். ஆனால், 1810ஆம் ஆண்டில் வாரியத் தலைவரின் பதவி தனிமைப்படுத்தப் பட்டு, பதவிநிலை உயர்த்தப்பட்டதால், அவரது ஊதியம் ஆண்டொன்றுக்கு 5000 பவுன்களாக உயர்த்தப்பட்டது. பின்னர் 1831-ல் நிதி நெருக்கடியின் காரணமாக 3500 பவுன்களாகக்

குறைக்கப்பட்டது. ஆனால், மேற்கூறிய செய்திகளுக்கு ஏற்ப, அவரது அந்தஸ்தையும் நிலையையும் பிரிட்டிஷ் அமைச்சரின் நிலைக்கு உயர்த்திச் சமநிலை காணும் வகையிலும், இனி வருங் காலத்தில் இரண்டாம் நிலையில் இருந்த ஆட்சியாளர்கள் மற்றும் திறமை மிக்கவர்கள் வாரியத் தலைவரின் அந்தஸ்திற்கு உயர்த்தப் படுவதற்கு உந்தலைக் கொடுக்கும் வகையிலும் வாரியத் தலைவரின் பதவி குறித்து மேற்சொல்லப்பட்ட ஊதிய நிர்ணயம் இச் சட்டத்தில் செய்யப்பட்டது.

இதுகாறும் இருபத்து நான்கு உறுப்பினர்களைக் கொண்டிருந்த இயக்குநர்கள் மன்றத்திலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அவற்றின்படி, அம் மன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபத்துநான்கிலிருந்து பதினெட்டாகக் குறைக்கப்பட்டது. அப் பதினெட்டு உறுப்பினர்களுள் அறுவர் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தால் நியமனம் செய்யப்படவேண்டும் என்றும் வகை செய்யப்பட்டது. இதைப்போலவே இயக்குநர்கள் மன்றத்தின் கூட்டத்தை நடத்துவதற்குத் தேவையான குறைவெண் (quorum) வரம்பும் திருத்தப்பட்டது. இதுகாறும் இயக்குநர்கள் மன்றத்தின் கூட்டங்களுக்கும், காரியங்களுக்கும் தேவையான உறுப்பினர் களின் குறைவெண் வரம்பு பதின்மூன்று ஆக இருந்தது. அக் குறைவெண் வரம்பு 1853ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்ப் பத்தாகக் குறைக்கப்பட்டது. பொதுவாக மன்றத்துக் கூட்டங் களில் அதிகமான உறுப்பினர்கள் கலந்துகொள்ளாத நிலையும் அவாவின்மையும் இருந்தன. அத்தகைய காரணத்தால், இனி மேற்கொண்டு நடைபெறும் இயக்குநர் மன்றக் கூட்டங்களில் பிரிட்டிஷ் அரசால் நியமிக்கப்படுவோர் அதன் குறைவெண் வரம்பினருள் பெரும்பான்மை நிலையை மேற்கொள்வதற்குத் துணை புரியப்பட்டது. எவ்வாறெனில், குறைந்தது பத்துப் பேர்களேனும் பிரசன்னமானலொழிய, மன்றக்கூட்டம் நடை பெறமுடியாது என்று நவிலப்பட்டிருந்ததால், அப் பதின்மருள் பிரிட்டிஷ் அரசால் நியமிக்கப்படும் அறுவர் கண்டிப்பாகப் பங்கு ஏற்கும் நிலை தோற்றுவிக்கப்பட்டது. இதன்படி மேற்சொல்லப் பட்ட நிலவரம் நிலவ வகைசெய்யப்பட்டது.

இச் சட்டத்திஞல் செய்யப்பட்ட மற்ருெரு மாற்றம் யாதெனில் கம்பெனியை மேற்கொண்டு சில ஆண்டுகளுக்குச் செயற்பாட்டிலிருக்குமாறு அனுமதிக்கப்பட்டிருந்த காரணத்தைப் பற்றியதாகும். கம்பெனியின் இயக்குநர்களுக்கு இதுகாறும் கொடுக்கப்பட்டிருந்த ஆதாயச் சலுகைகள் நீக்கப்பட்டன. இதனுல், கம்பெனியின் ஒப்பந்தச் சிவில் பணித்துறைகளில் நுழைய

விரும்பும் பிரிட்டிஷ் குடிகள் யாவருக்கும் போட்டித் தேர்வுமுறை கட்டாயமாக்கப்பட்டது. ஆனால், அப் போட்டித் தேர்வுமுறை பற்றிய விதிகள் யாவற்றையும் வகுக்கக்கூடிய அதிகாரம் கட்டுப் பாட்டு வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டது. இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டதன்மூலம் எவ் விடையூறும், தடையும் இல்லாது கம்பெனியின் இந்திய உடைமைகள் யாவற்றையும், பிரிட்டிஷ் அரச நிறுவனத்திற்குப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் மாற்றுவதற்கு எளிதான வழிவகை செய்யப்பட்டது. பொதுப் படையாகப் பார்க்கும்பொழுது இச் செயல் 1873-ல் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 1857-ல் பல காரணங்களின் அடிப்படையில் எழுந்த படைவீரர் கலகம் எனப்படும் முதல் இந்திய விடுதலைப் போரின் காரணமாக, இச் சாசனச் சட்டம் இயற்றப்பட்டு நடை முறைக்கு வந்த எட்டாண்டுக் காலத்திற்குள் மேற்கொள்ளப் படலாயிற்று. இச் செயல் விரைவில் நடைபெறத் துணைபுரியும் வகையில், அறிந்தோ அறியாமலோ, எதிர்பார்த்தோ எதிர்பாரா மலோ மேற்சொல்லப்பட்ட ஏற்பாடு செய்யப்பட்டது இச் சட்டத்தின் சிறப்பான அம்சமாகும். கம்பெனியின் இயக்குநர் களின் பதவி நியமனம்பற்றிய ஆதாயச் சலுகைகள் அகற்றப்பட்டு, கட்டுப்பாட்டு வாரியத்திற்கு விதிகளையும், திட்டத்தையும் உருவாக்குவதற்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம் முழுமை யாகச் செயல்படுத்தப்படும் வகையில், அதற்கென ஒரு குழு மெக்காலே பிரபுவின் தலைமையில் 1854-ல் அமைக்கப்பட்டது. மேலும், ஹெய்லிபரியில் இருந்த பயிற்சிக் கல்லூரி 1858-ல் மூடப் பட்டு மாற்று ஏற்பாடு இந்தியாவில் செய்யப்படவேண்டும் என்றும் இச் சட்டம் கூறியது.

இச் சட்டம் இயற்றப்பட்ட காலத்தில் கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தமையால் அவற்றின் எல்லை மற்றும் ஆட்சி வசதி குறித்தும் ஓரிரு காரியங்களை மேற் கொள்ளவும் இச் சட்டம் வகைசெய்தது. இந்த ஏற்பாட்டின்படி இந்தியாவில் ஒரு புதிய மாநிலத்தை உருவாக்குவதற்கும் அல்லது அப்பொழுது நடைமுறையிலிருந்த கம்பெனியின் இந்திய மாநிலங் களின் எல்லைகளை மாற்றிச் சீரமைப்பதற்கும் இயக்குநர்களின் மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இவ் வதிகாரத்திற்கு ஒப்பவே பஞ்சாப் மாநிலம் ஒரு துணை ஆளுநரின் மேலாண்மைக்கு உட்பட்டதாய் உருவாக்கப்பட்டது. மேலும், அப்பொழுது வங்க மாநிலத்தின் நிர்வாகம் பெருஞ்சிக்கல் மிக்கதாய் இருந்தது. அச் சிக்கல் அகற்றப்படுவதற்கும் இச் சட்டம் வகை செய்தது. எவ்வாறெனின் வங்க மாநிலத்திற்கு என்று தனிப்பட்ட ஓர்

ஆளுநர் நியமிக்கப்பட இச் சட்டம் வகை செய்தது. ஆனால், 1912 வரை வங்கத்திற்கு என ஒரு தனிப்பட்ட ஆளுநர் நியமிக்கப் படவில்லை. மாறாக ஒரு துணை ஆளுநர் நியமிக்கப்பட்டார்.

1833ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, மெக்காலே பிரபுவின் தலைமையின்கீழ்ச் செயல்படுமாறு ஒரு சட்ட ஆணைக்குழு அமைக்கப் பட்டிருந்தபோதிலும், அதனுடைய பணிகள் முற்றுப் பெற்றவை யாய் இருக்கவில்லை. எனவே, அவ் வாணைக் குழுவின் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும்,அவ் வாணைக் குழு சமர்ப்பித்திருந்த அறிக்கைகள் மற்றும் சட்ட வரைவுகள் யாவற்றையும் அலசி ஆராய்ந்து, அவற்றின் அடிப்படையில் இந்தியாவில் மேற் கொள்ளத் தேவையான சட்டதிட்டங்களைப் பரிந்துரைப்பதற் கென இங்கிலாந்திலிருந்து செயல்படுமாறு ஒரு சட்ட ஆணைக் குழு அமைக்கப்பட்டது.

கம்பெனியின் இந்திய அரசாங்கங்களைப் பொறுத்தவரை இச் சட்டம் பின்வரும் மாற்றங்களையும் ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தது. அத்தகைய மாற்றங்கள் பெருமுக்கியத்துவம் வாய்ந்தவையயக அமைந்தன.

1833ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்த் துவக்கப்பட்டிருந்த இந்திய அரசாங்கத்தின் நிர்வாகம் மற்றும் சட்ட ஆக்கப் பணி களுக்கு இடையே பேணப்பட்ட பிரிவு தற்பொழுது மேலும் தேர்ச்சியுறுமாறு செய்யப்பட்டது. இதுகாறும் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் பெற்றிருந்த நடைமுறையான பல சலுகைகளைப் பெற்றிராத சட்ட உறுப்பினர், இச் சட்டத்தின் கீழ்த் தலைமை ஆளுநர் ஆட்சிமன்றத்தின் முழுநேர உறுப்பினராக ஆக்கப்பட்டார். இதன்படி அவருக்கு ஆட்சிமன்றக் கூட்டங்கள் எல்லாவற்றிலும் கலந்துகொண்டு வாக்களிக்க அனுமதி தரப் பட்டது. உச்ச ஆட்சி மன்றமாகச் செயல்பட்டுவந்த போதிலும், தலைமை ஆளுநருடன்கூடிய இந்திய மைய அரசின் ஆட்சி மன்றத் திற்குச் சட்ட ஆக்கப் பணிகளும் 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ்க் கொடுக்கப்பட்டிருந்தன என்பதை நாம் அறிவோம். எனினும், அவ் விரு வகையான அதிகாரங்கள் மற்றும் பணிகளுக்கு இடையே வேறுபடுத்திக் காட்டக்கூடியதான எல்லைக்கோடு வரையப்பட்டிருக்க வில்லை. எனவே, இரு வகையான பணிகளையும் ஒருசேரக் கொண்டு, தெளிவற்ற நிலையில் செயல்பட்டு வந்த தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றம், சட்ட ஆக்கப் பணித் திறமை யுடன் செயல்படுவதற்கான அமைப்பு 1853ஆம் ஆண்டுச் சட்டத்தில் செய்யப்பட்டது. இதன்படி தலைமை ஆளுநரைத்

தவிர முதற் பெரும்படைத் தளபதியையும், நான்கு சாதாரண நிர்வாக உறுப்பினர்களையும், ஆறு கூடுதல் உறுப்பினர்களையும் கொண்டு தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றம் சட்ட மன்றமாகச் செயல்படவேண்டும் என்று விதிக்கப்பட்டது. மேற்சொல்லப் பட்ட காரியத்திற்கு என நியமிக்கப்படும் ஆறு கூடுதல் உறுப்பினர் கள் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, அதன் சாதாரண நீதிபதி ஒருவர், மற்றும் வங்கம், சென்னை, வடமேற்குப் பிராந்தி யங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த நான்கு அரசாங்க உறுப்பினர்கள் ஆகியோராக இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. சென்னை, பம்பாய், வடமேற்குப் பிராந்தியங்கள் ஆகியவற்றின் நான்கு பிரதிநிதிகள் அவ் வரசாங்கங்களில் குறைந்தது பத்து ஆண்டுகளேனும் பதவி வகித்திருந்த சிவில் பணியாளர்களாக இருக்கவேண்டும் என்றும் இச் சட்டம் பணித்தது. மேலும், தேவை யானால் அதிகப்படியான இரு சிவில் பணியாளர்களைச் சட்ட ஆக்கப் பணியில் பங்கு பெறுவதற்கென நியமித்துக்கொள்ளத் தலைமை ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. ஆனால், இவ் வதிகாரம் எப்பொழுதும் பயன்படுத்தப்படவில்லை.

மேற்சொல்லப்பட்ட செய்திகளுக்கு ஒப்ப அமைக்கப்பட்டுச் செயல்படும் தலைமை ஆளுநரின் சட்டமன்றம் குறைந்தது எழுவரை யேனும் குறைவெண் வரம்பினராய்ப் பெற்றுச் செயல்பட வேண்டும் என்று இச் சட்டத்தின்மூலம் நிலைநிறுத்தப்பட்டது. சட்ட மன்றமாகச் செயல்படும் தலைமை ஆளுநர் மன்றத்தில் கொணரப்படும் சட்டக் கருத்துருக்கள் தலைமை ஆளுநரின் அனுமதி யைப் பெற்றே தாக்கல் செய்யப்படவேண்டும் என்று வகை செய்யப்பட்டது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் சட்ட ஆக்க நடைமுறைகளை (procedures) மேற்சொல்லப்பட்ட இந்தியத் தலைமை ஆளுநரின் மன்றமும் பின்பற்றுவதற்கு வகை செய்யப் பட்டது. இவற்றின்படி இந்திய அரசாங்கத்தின் நிர்வாகக் கொள்கையை விவாதிக்கவும், அரசாங்கத்தின் நிர்வாகம்பற்றிய வினாக்களைக் கேட்கவும், விபரங்களைக் கோரவும் உறுப்பினர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இம் மன்றத்தால் மேற்கொள்ளப் படும் சட்ட நடவடிக்கைகள் (legislative measures) யாவும் அதன் பொறுக்குக் குழுவின் ஆய்வின் பொறுப்பிற்கு விடப்படவேண்டும் என்றும் வகை செய்யப்பட்டது. ஆனால், ஏற்கெனவே துவக்கப் பட்டிருந்த சட்ட நடவடிக்கைகள் பற்றிய விவாதங்கள் பொது மக்களின் கவனத்திற்கு அறிவிக்கப்படத் தடைசெய்யப்பட்டது. தலைமை ஆளுநரின் உச்ச ஆட்சிமன்றம், நிர்வாகக் காரியங்கள், சட்ட ஆக்கக் காரியங்கள் என இரு பெரும்பணிகளைத் தனித்துக் காட்டப் பெற்றிருந்த இரு தகுதிகளில் செயல்படுமாறு செய்யப்

பட்டது. சட்ட மன்றத்தின் தகுதியில் செயல்பட்டு எடுக்கப்படும் முடிவுகள் தலைமை ஆளுநரின் செயலாட்சி மன்றத்தால் (Executive Council) அங்கீகரிக்கப்படாமல், புறக்கணிக்கப்படவும் அதிகாரம் அளிக்கப்பட்டது. தமது மன்றத்தில் சட்ட ஆக்கப் பணிகளைக் கவனிக்கும் உறுப்பிற்கு ஒரு துணைத்தலைவரை (Vice President) நியமிப்பதற்கான அதிகாரம் தலைமை ஆளுநருக்குத் தரப்பட்டது. இவை யாவற்றின்மூலமும் நிலையானதொரு சட்டமன்றம் இந்திய அரசாங்கக் கட்டுமானத்தில் வெகுவிரைவில் தோன்றித் தேர்ச்சி யுற்று, அதில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் நடைமுறைகளும், பழக்க வழக்கங்களும் மேற்கொள்ளப்பட இச் சட்டம் உறுதுணை புரிந்தது. தலைமை ஆளுநரின் சட்டமன்றத்தில் உறுப்பினர் களாக்கப்பட்ட நான்கு மாநிலப் பிரதிநிதிகள் ஒவ்வொருவருக்கும் தாம் ஆற்றும் சட்ட ஆக்கப் பொறுப்பிற்கென ஆண்டொன்றுக்கு 5,000 பவுன்களை ஊதியமாகக் கொடுப்பதற்கும் இச் சட்டம் வழிவகை செய்தது.

முன்னரே கூறியதைப் போன்று கம்பெனியின் இந்தியப் பணித்துறைகளில் இந்தியர்களையும் உள்ளிட்ட பிரிட்டிஷ் குடிகள் யாவரும் தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் நியமிக்கப் படுவதற்கு வழி வகைகளை இச் சட்டம் வகுத்துக் கொடுத்தது. வங்க மாநிலத்திற்கெனத் தனிப்பட்ட ஓர் ஆளுநர் நியமிக்கப்பட வகை செய்யப்பட்டது. கம்பெனியின் இந்திய மாநிலங்களைப் பற்றிய சட்ட ஆக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் பிரதிநிதிகள் கண்டிப்பாகச் சட்ட ஆக்கப் பணியில் கலந்துகொள்ளும் நிலையிலேயே மேற்கொள்ளப் படவேண்டும் என்று வகை செய்யப்பட்டது. இப்படி இந்திய அரசாங்கம், ஆட்சி மற்றும் அவற்றின் பணித்துறைகள் யாவும் ஒரு தேசீய அடிப்படையில் உருவாவதற்கான உறுதியான அடித் தளம் இச் சட்டத்தினால் நாட்டப்பட்டது.

இச் சட்டத்தைப்பற்றிய ஒரு மதிப்பீடு

1853ஆம் ஆண்டுச் சாசனச் சட்டம் ஏற்படுத்திக் கொடுத்த பல அம்சங்களையும், ஏற்பாடுகளையும் ஊன்றிக் கவனிப்பதன்மூலம் அவற்றால் பெறப்பட்ட நன்மைகளும் தீமைகளும் நன்கு வெளிப் படும். இதன் நன்மைகளைப் பொறுத்தவரை பின்வரும் செய்திகள் இந்திய அரசியல் மற்றும் அரசாங்க வரலாற்றில் முக்கியமான பங்கை வகிக்கின்றன. கம்பெனிக்கு மேலும் வழங்கப்பட்ட சலுகைகள், குறிப்பாக அரசியல் முறையான பணிகள், அதனிட மிருந்து அகற்றப்பட்டு, இந்திய அரசாங்கங்களின் மேலாண்மை

நிர்வாகத்தை பிரிட்டிஷ் அரசு தனது நேரடிப் பொறுப்பின்கீழ் எந்தச் சமயத்திலும் கொண்டுவருவதற்கான வழிவகையை இச் சட்டம் செய்தது. இதனால், பொறுப்பாண்மை மிக்க அரசாங்கமும் ஆட்சியும் பிரிட்டிஷ் அரசால் நேரடியாய் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரப்பட்டு வந்த கனவும் விழைவும் நனவாகக் கூடிய தருணமும் சூழ்நிலையும் உருவாயின. கட்டுப்பாட்டு வாரியத் தலைவரின் அந்தஸ்தும் ஊதிய நிலையும் உறுதியாக்கப்பட்டு, இயக்கு நர்களின் செல்வாக்கும், இடர்ப்பாடுகளைத் தோற்றுவிப்பதாய் இருந்த அவர்களின் அதிகாரங்களும் வெகுவாகக் குறைக்கப் பட்டதால் கம்பெனியின் தலைமையிடத்து அரசாங்கத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் பொருத்தமான அளவில் தேவையான காரியங்களை மேற்கொள்ள முனைப்பான நிலையையும் பயனுறுதி மிக்க பாங்கையும் பெறமுடிந்தது. மேலும், பதினெட்டாகக் குறைக்கப்பட்டிருந்த இயக்குநர்கள் மன்றத்தில் அறுவரை அரச நிறுவனம் தக்க முறையில் பயன்படுத்தி இந்திய விவகாரங்களில் முழுமையான கவனத்தைச் செலுத்த முடிந்தது. கம்பெனியின் இயக்குநர்கள் அனுபவித்து வந்த நியமனச் சலுகை நீக்கப்பட்டு. பகிரங்கப் போட்டி முறையின்மூலம் திறமையும் தகுதியும் கொண்ட டோர் யாவரையும் பணித்துறையில் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய நன்மையை அரசாங்கம் பெற்றது. இதனால் இங்கு நேர்மையும் திறமையும் கொண்ட நிர்வாகம் ஏற்பட வகை செய்யப் பட்டது. தலைமை ஆளுநருடன்கூடிய இந்திய உச்ச ஆட்சி மன்றத்தில் நிர்வாகப் பணிகளுக்கும், சட்ட ஆக்கப் பணிகளுக்கும் இடையே எல்லையை வரையறுத்து, அவற்றிற்கான அமைப்புகள் வகுக்கப்பட்டதும் இச் சட்டத்தின்மூலம் பெறப்பட்ட மிகப் பெரும் நன்மையாகும். இதனால், உலகப் பாராளுமன்றங்கள் எல்லாவற்றிற்கும் முதன்மையாய்த் தாய்மை நிலையில் விளங்கும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பின்னர்த் தனித்துச் சட்டமன்றங்கள் எழுந்து சட்ட ஆக்கங்கள் மேற்கொள்ளக்கூடிய நன்மையை இந் நாடு வெகுவிரைவில் பெறலாயிற்று. இன்று உலகம் போற்றும் பாராளுமன்ற ஆட்சி முறையை நாம் கொண்டுள்ளோம். அதற்கான அனுபவத்தைப் பெறுவதற்கான ஆரம்பமும் இச் சட்டத்தின் செயற்பாட்டின்மூலம் செய்யப்பட்டது அதன் முக்கியத்துவம் வாய்ந்த நற்செயலாகும். இந்திய மைய அரசாங்கத்தில் சட்ட ஆக்கப்பணிகட்கென மாநிலப் பிரதிநிதிகளையும் சேர்த்து, நாட்டின் பல்வேறு பகுதி களின் நலன்களையும் அக்கறைகளையும் செம்மையாய்க் கவனத்தில் கொண்டு இந்திய அரசாங்கம் காரியங்களை மேற்கொள்ள வகை செய்யப்பட்டதும் ஒரு நன்மையாகும். இதனால், 1853-க்குப் பிற்பட்ட காலத்தில் மைய மாநில அரசுகளுக்கு இடையேயான

உறவு முறைகள் அரசியலமைப்பு ரீதியாக வளர்ச்சி பெறவும், அதையொட்டி அரசியல் நடவடிக்கைகளும் விழிப்புணர்ச்சியும் ஏற்படவும் வழி வகுக்கப்பட்டது. எனவே, 'முதன்முதலில் பிரிட்டிஷ் இந்திய ஆட்சி வரலாற்றில், சட்ட ஆக்கச் செயல் (legislation) அரசாங்கத்தின் சிறப்புப் பணியாகவும், அப் பணி சிறப்பான ஒரு சட்ட ஆக்கப் பொறியின்மூலம், சிறப்பான செயல் முறைகளுடன் மேற்கொள்ளப்படக் கூடியதாகவும் செய்யப் பட்டது இச் சட்டத்தின் இன்றியமையாத பயனாகும்.'[1] இறுதியாக, இங்கிலாந்தில் ஒரு சட்ட ஆணைக்குழுவை அமைத்து, அதன்மூலம் இந்தியக் குற்றவியல் சட்டம் (The Indian Penal Code) போன்ற வைகளைத் தயாரித்ததால், இந் நாட்டில் ஒரே சீரான சட்டச் செயற்பாடு நிலவ வகை செய்யப்பட்டது.

மேற்சொல்லப்பட்ட நன்மைகள் பலவற்றை இச் சட்டம் கொண்டிருந்த போதிலும், அதில் சில குறைபாடுகளும் இருக்கவே செய்தன. அவை பின்வருமாறு:

கம்பெனியின் தலைமை அரசாங்கத்தில் கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம் ஆகியவற்றின் இடையே பொருத்த மான பல மாற்றங்கள் செய்யப்பட்டு, இயக்குநர்களின் ஆதாயச் சலுகைகளும் அக்கறைகளும் வெகுவாகக் குறைக்கப்பட்ட போதிலும், அங்கு நிலவிய இரட்டை அரசாங்கமுறை முற்றிலும் நீக்கப்படவில்லை. எனவே, அவற்றினிடையே தொடர்ந்து போட்டி களும் பூசல்களும் காணப்பட்டன. ஏனெனில், தமது நியமன அதிகாரங்களையும் சலுகைகளையும் இழந்திருந்த போதிலும் இயக்கு நர்கள் இந்திய அரசாங்கத்தின் எவ் வதிகாரிகளையும் திருப்பி அழைக்கக்கூடிய அதிகாரத்தைச் செயல்படுத்தி வந்தனர். இதனால், நல்லவர்களையும் வல்லவர்களையும் பதவிகளில் அரச நிறுவனம் நியமித்த போதும்கூட, தமக்கு வேண்டாதவர்களைப் பதவியி லிருந்து இயக்குநர்கள் திருப்பி அழைக்கும் நிலை தொடர்ந்தது. இவ் வதிகாரத்தை அவர்கள் ஓரிரு முறை பயன்படுத்தி வாரியத்தின் அதிகாரத்தை ஒடுக்கினர். எனவே, இச் சட்டத்தின் மூலக் குறிக் கோள் முழுமையாக, எவராலும் எவ் விடர்ப்பாடுமின்றிச் செயல் படுத்துவது இன்னலைப் பெற்றுத் தடைப்பட்டது.

தலைமை ஆளுநரின் ஆட்சி மன்றத்தில் அமைக்கப்பட்டிருந்த சட்ட ஆக்க அமைப்பும் ஒரு சில குறைபாடுகளைக் கொண்டிருந்தது. அவ் வமைப்பு அளவில் மிகச் சிறியதாய் இருந்தது. ஆனால்,

[1] Report on Indian Constitutional Reforms, p. 38

அதன் பணிப்பளுவோ அதிகமாய் இருந்தது. மேலும், அதில் அதிகாரிகளல்லாத உறுப்பினர் (non official) எவரும் நியமனம் செய்யப்படவில்லை. அதிகாரிகளை அல்லது அரசாங்க அலுவலர்களை மட்டும் உறுப்பினர்களாய்க் கொண்டிருந்தமையின் இச் சட்ட ஆக்க அமைப்பில் அதிகாரவர்க்கப் போக்கும் (bureaucratic tendency) வழி முறைகளும் நிலவின. நாட்டு மக்களின் பொது விருப்பத்தின் (general will) பிரதிநிதிக் கூடமாக அஃது அமைய வில்லை. இதனால், இச் சட்ட ஆக்க அமைப்பின்மூலம் செய்யப் பட்ட சட்டங்களைக் கலவரத்தின்மூலமும், புரட்சியின்மூலமும் தான் மக்கள் எதிர்க்க வேண்டியிருந்தது. மேலும், இந்தியத் தலைமை ஆளுநருக்கு மறுப்பதிகாரம் (veto) அளிக்கப்பட்டி ருந்ததும் ஒரு குறையே. இதனால், தான் விரும்பும் ஒன்றை வலுக் கட்டாயமாகப் பிறர்மீது சுமத்தி அதைச் சட்டமாகச் செய்யும் நிலையைத் தலைமை ஆளுநர் பெற்றிருந்தார். மேலும், நிர்வாக முறையான பணிகள், சட்ட ஆக்கப் பணிகள் ஆகிய இரண்டையும் முழுமையாகத் தனிபடுத்திச் செயல்படும் வகையில் தலைமை ஆளுநரின் உச்ச ஆட்சி மன்றம் இருக்கவில்லை என்றும் கூறலாம். ஏனெனில், தலைமை ஆளுநரும் அவரது ஆட்சிமன்றச் சாதாரண உறுப்பினர்களும் தமது நிர்வாகப் பணிகளேயன்றிச் சட்ட ஆக்கப் பணிகளிலும் பங்கேற்றனர். இஃது அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் அடிப்படைத் தேவைக்கு ஒவ்வாததாய் இருந்தது.

இச் சட்டத்தின்மூலம் அமைக்கப்பட்ட சட்ட ஆணைக் குழுவும் இந் நாட்டு மக்களாலும் அரசாங்கங்களாலும் விரும்பப்பட வில்லை. ஏனெனில், அஃது ஓர் ஆங்கிலோ இந்தியச் சட்ட மன்ற மாகச் செயல்பட்டது. மேலும், அஃது இந்திய அரசாங்கங் களின் நிர்வாக நடவடிக்கைகளைக் கடிந்து அவற்றின் குற்றங்களைக் காணும் இயல்பைக் கொண்டதாய்ச் செயல்பட்டது. இக் குறை பாட்டை எடுத்துக் காட்டியபோதும், அவ் வாணைக் குழு தனது சுதந்திரத் தன்மையையும், விரும்பப்படாத பணிப் பாங்கையும் கைவிடத் தயாராக இல்லை. இதன்மூலம் இலண்டனிலிருந்த கம்பெனியின் மேலாண்மையினர் இந்தியச் சட்ட ஆக்க விளக்கங் களில் தேவையில்லாத தலையீட்டைச் செய்து, இந்தியத் தலைமை ஆளுநர் ஆட்சி மன்றத்தின் சட்ட ஆக்க அமைப்பை ஒரு பதிவுக் கூடமாக (registering body) மாறும்படி செய்தனர்.

கம்பெனியின் இந்திய அரசாங்கங்களின் நிதிக் கட்டுப்பாடு முழுவதும் மைய அரசிடம் குவிக்கப்பட்டுப் பரவலாக்கப் படாதிருந்தமையாலும், ஓர் அரசின் காரியங்கள் யாவற்றிற்கும் பணமே பிரதானமானதாலும், அப் பணத்தைப்பற்றிய முடிவுகளை

இறுதியாக மேற்கொள்ளும் அதிகாரம் தலைமை ஆளுநருடன்கூடிய உச்ச மன்றத்திடம் இருத்தி வைக்கப்பட்டிருந்தமையாலும், மைய அரசுகளை வருத்தி, நெருக்கிக் காரியங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பகிரங்கப் போட்டித் தேர்வுகளின்மூலம் இந்தியச் சிவில் பணித்துறைகளுக்கு இந்தியர்களையும் உள்ளிட்ட பிரிட்டிஷ் குடிமக்கள் யாவரும் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்பட வழி செய்யப்பட்டதும், முழுமையானதும் முனைப்பானதுமான திட்டமாக இல்லை. ஏனெனில், இந்தியச் சிவில் பணித்துறைகளுக்கான போட்டித் தேர்வுகள் இங்கிலாந்தில் நடத்தப்பட்டன. மேலும், அத் தேர்வுகளுக்கான பாடங்கள் பிரிட்டிஷ் பாடத்திட்டங்களை ஒட்டியவையாய் இருந்தன. இவற்றால், பெரும் நிதி வசதியும் செல்வ நிலையும் கொண்டிருந்த மிகச் சில இந்தியர்களே அவற்றில் பங்கு கொள்ள முடிந்தது. அவ்வாறு பெருஞ் செலவினங்களையும், நெடுந்தூரப் பயணத்தையும் மேற்கொண்டு இலண்டன் சென்ற ஒரு சில இந்திய இளைஞர்கள்கூட அங்கு நிலவிய சூழ்நிலைகளாலும், தேர்வுகளின் கடினத் தன்மையாலும் எளிதாகத் தேற முடியவில்லை. வெகு சிரமத்தின்பேரில் எப்பொழுதோ ஓரிரு இந்தியர்களே I.C.S. தேர்வில் வெற்றி காண முடிந்தது. எனவே, கம்பெனியின் இந்தியப் பணித்துறைகளுக்கெனச் சமத்துவம் பேணப்படுவதாக அறிவிக்கப்பட்டதும், அதன் செயற்பாடும் ஏமாற்றம் தருவனவாய் (hoax) அமைந்து, ஆங்கிலேயர்களே பெரும்பதவிகளைப் பெற்றவண்ணம் இருந்தனர். இதற்கான எதிர்ப்புகள் எழுந்ததைக்கூடக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராய் இருந்த சார்லஸ் உட் (Charles Wood) பொருட்படுத்தவில்லை. இவையெல்லாம், வெகுவிரைவில் தேசீய இயக்கம் தோன்றி, அதன்மூலம் ஆக்க பூர்வமான அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படத் துணைபுரிந்தன. மேற்சொல்லப்பட்ட குறைபாடுகள் 1919ஆம் ஆண்டுவரை ஏதேனும் ஒரு வகையில் நிலவிய வண்ணம் இருந்தன. 1853ஆம் ஆண்டுச் சட்டத்தின் குறைபாடுகள் எவ்வளவினவாய் இருந்தபோதிலும், அச் சட்டம் இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சி அமைப்புகளில் அடிப்படையான பல மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் புதுமைகளையும் புகுத்தியது என்பதை நாம் உதாசீனம் செய்வதற்கில்லை. இச் சட்டத்தின் செயற்பாடு 1858ஆம் ஆண்டு வரையிலேயே இருந்தது. அதன் பின், கம்பெனியின் ஆட்சி முடிவுற்று, பிரிட்டிஷ் அரசின் நேரடிப் பொறுப்பின்கீழ் இந்தியா வந்ததும் இதுகாறும் செய்து கொடுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் யாவும் தேர்ச்சியுடன் பெரிதும் பின்பற்றப்பட்டு வந்தன. எனவே, கம்பெனிக்கு அளிக்கப்பட்டு வந்த சாசனச் சட்டங்களின் தொகுப்பில் கடைசியானதாய் அமையும்

இச் சட்டம் இந்தியாவில் பாராளுமன்ற ஆட்சிமுறையின் துவக்கத்திற்கு வழி கோலியதால் ஒரு சிறப்பிடத்தைப் பெறுகின்றது. இச் சட்டத்தைத் தொடர்ந்து 1854-ல் ஒரு சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. அதைப்பற்றியும் இங்கு ஓரளவு அறிந்துகொள்வது இன்றியமையாததாகும். ஏனெனில், இவை யாவற்றையும் அறிந்து, அவற்றின் அடிப்படையில் 1858ஆம் ஆண்டுவரை செயலில் இருந்த கம்பெனியின் ஆட்சிப் பொறி கொண்டிருந்த வளர்ச்சியை நாம் புரிந்துகொண்டு, அவ்வாட்சிப் பொறி 1858ஆம் ஆண்டுக்குப் பின் பிரிட்டிஷ் அரசால் எவ்வாறு, எம் மாற்றங்களுடன் இயக்கப்படலாயிற்று என்பதை உணர முடியும்.

1854ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டமும் அதன் மூலம் செய்யப்பட்ட சில மாற்றங்களும் திருத்தங்களும்

அவ்வப்பொழுது உரிய காலக் கட்டங்களில் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் பலவிதமான சட்டங்களின்கீழ்ப் புதுப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றின் அடிப்படையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய அரசாங்கங்கள் மற்றும் ஆட்சி அமைப்புகள் செயல்பட்டு வந்தன. அவை யாவும் 1854ஆம் ஆண்டில் எவ் வமைப்பு நிலையை அல்லது தன்மையைப் பெற்று இயங்கின என்பதை அறியத் துணைபுரிவதாய் அமைந்தது இச் சட்டமாகும். இச் சட்டத்தின்மூலம் தமது ஆட்சி மன்றத்துடன்கூடிய இந்தியத் தலைமை ஆளுநருக்கு இந் நாட்டில் தலைமை ஆணையர் பதவிகளை (Chief Commissioners) ஏற்படுத்துவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது. அது மட்டுமன்றி, கம்பெனியின் ஆட்சி அதிகார எல்லையின்கீழ்க் கொண்டுவரப்பட்ட பல இந்தியப் பிரதேசங்களைத் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் ஆட்சிக் கோட்பாட்டிற்கும் ஏற்பத் துணை ஆளுநர்களையும், தலைமை ஆணையர்களையும் கொண்டு நிர்வகிப்பதற்கு அனுமதி வழங்கப்படவேண்டிய அவசியம் 1854-ல் எழுந்தது. எனவே, எந்த நிலவரங்களின் அடிப்படையில் 1854ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் கம்பெனியின் இந்திய ஆட்சி அமைப்புக் குறித்துச் சட்டத்தை இயற்றியது என்பதை முதற்கண் கண்டு, பின்னர் அதன் அம்சங்களை அறிந்துகொள்வது முக்கியமாகும்.

19ஆம் நூற்றாண்டின் முதற்பகுதி கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியப் பிரதேசங்கள் பலவற்றைக் கைப்பற்றிய காலமாய் இருந்தது. கம்பெனியின் இந்தியத் தலைமை ஆளுநர்கள், குறிப்பாக டல்ஹௌசி பிரபு, பின்பற்றிய போர் மற்றும் விடுபாட்டு நியதி (doctrine of lapse) போன்ற இடச் சேர்க்கைக் கொள்கைகளின்

காரணமாக இந்தியப் பிரதேசங்கள் பல கம்பெனியின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டிருந்தன. இவ்வாறு புதிதாகச் சேர்க்கப்பட்ட இடங்கள் பம்பாய், சென்னை, வங்காளம் ஆகிய மாநிலங்களோடு இணைக்கப்பட வேண்டியனவாயின. இதனால், வங்க மாநிலத்தின் ஆட்சிப் பரப்பும் பொறுப்பும் விரிந்து சாதாரணமாகச் சமாளிக்கப்பட முடியாமல் இருந்தது. இத்தகைய ஆட்சி முறையின் காரணமாகவே இடப் பரப்பாலும் ஆட்சிப் பொறுப்பாலும் விரிவடைந்திருந்த வங்க மாநிலத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான முயற்சி 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழேயே மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, வட மேற்கு மாநிலமொன்று அமைக்கப்படுவதற்கும் வகை செய்யப்பட்டது. ஆனால், அக் குறிக்கோளும் ஏற்பாடும் 1835ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி ஒத்தி வைக்கப்பட்டு, வங்க மாநிலத்திற்கென ஒரு துணை ஆளுநர் நியமிக்கப்படுவுதற்கு வகை செய்யப்பட்டது என்பதை நாம் அறிவோம். ஆனால், இந் நடவடிக்கை வங்க அரசாங்கத்தின் காரியங்களை மேற்கொள்வதற்குப் போதுமான வசதியைச் செய்து கொடுக்கவில்லை. எனவேதான், 1853-ல் வங்க மாநிலத்திற்கெனத் தனிப்பட்ட ஓர் ஆளுநர் நியமிக்கப்பட வகை செய்யப்பட்டது. இத்தகைய ஏற்பாடும்கூடக் கம்பெனியின் ஆட்சிப் பரப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்த இடங்களின் நிர்வாக ஏற்பாட்டிற்கான நன்மையைச் செய்யவில்லை. சிக்கல்களையும் தீர்த்து வைக்கவில்லை.

எனவே, கம்பெனியின் இறைமை அதிகார எல்லைக்குள் வீழ்ந்த வண்ணம் இருந்த இந்தியப் பிரதேசங்களை நிர்வகிப்பதற்கு உரிய அதிகாரங்கள் ஆட்சி மன்றத்துடன்கூடிய இந்தியத் தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப்படும் வகையில் 1854ஆம் ஆண்டில் ஒரு சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இயற்றி நிறைவேற்றப் பட்டது. இச் சட்டத்தின்படி கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம் ஆகியவற்றின் அனுமதியுடன் ஆட்சி மன்றத்துடன் கூடிய இந்தியத் தலைமை ஆளுநர் கம்பெனியின் உடைமை மற்றும் உரிமையின்கீழ் வந்திருந்த இந்தியப் பிராந்தியங்களின் எப் பகுதியிலும் தற்காலிகக் கட்டளைகள் மற்றும் இயக்கங்களைப் பிறப்பித்து அவற்றைச் செயல்படுத்துவதற்கான அனுமதியும், அப் பிராந்தியங்களைத் தமது உடனடியான பொறுப்பதிகாரம் மற்றும் மேலாண்மையின்கீழ் மேற்கொள்வதற்கு அதிகாரமும் வழங்கப் பட்டன. அத்தகைய பிராந்தியங்களின் நிர்வாகத்தைக் கவனிப் பதற்குப் பிரத்தியேகமான அதிகாரிகளை நியமித்து அவர்களுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்குவதற்குரிய வசதியும், ஆட்சி

மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்குச் செய்து கொடுக்கப் பட்டது. இவ்வாறு நியமிக்கப்பட்ட சிறப்பு அதிகாரிகள் தலைமை ஆணையர்கள் (Chief commissioners) என்று அழைக்கப்பட்டனர். இத்தகைய தலைமை ஆணையர்கள் அஸ்ஸாம், மத்திய மாகாணம் (Central Provinces) ஆகிய இடங்களிலும் மற்றும் வேறு சில பகுதி களிலும் நியமிக்கப்பட்டனர். நாம் ஏற்கெனவே அறிந்துள்ளதைப் போல் இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒப்ப இந்திய மாகாணங்கள் பலவற்றின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கான அதிகாரம் ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், எந்த இந்தியத் தல அரசாங்கத் திற்கும் கொடுக்கப்படாது விடுபட்டிருந்த எஞ்சிய அதிகாரங்களும் (residuary powers) ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநருக்கு மிகத் தெளிவான, உறுதியான நிலையில் வழங்கப்பட்டது. இறுதியாக, இச் சட்டத்தின் பயனாகவே வங்க மாநிலத்திற்கெனத் தனிப்பட்ட துணைஆளுநர் ஒருவரும் நியமிக்கப்பட்டார்.

பிரிவு 6

கம்பெனியின் பிரிட்டிஷ் இந்திய அரசியல் முடிவும் அதிகார மாற்றமும்

20. கிழக்கிந்தியக் கம்பெனியின் நூற்றாண்டுக் கால அரசியல், மற்றும் ஆட்சி ஆகியவற்றின் முடிவும் மதிப்பீடும்

கம்பெனி அரசாங்கத்தில் இந்தியா பெற்ற பயன்கள்

வந்தோரை வாழவைக்கும் நற்பண்பைக் கொண்டுள்ள இந்திய நாட்டின் அரசியல் பாரம்பரிய வரலாறு பல சாம்ராச்சியங் களும் பேரரசுகளும் உருவாகி வீழ்ந்த உணர்ச்சி மிக்க காவியங் களைக் கொண்டதாகும். மௌரியப் பேரரசு முதல், அந்நியர்களான ஆங்கிலேயர் அமைத்த பிரிட்டிஷ் பேரரசு வரையிலான யாவும் தமக்கே உரிய சிறப்பான இடங்களைத் தமது அரசியல் வரலாற்று ஏடுகளில் பெற்றுள்ளன. நல்லவர்களும் வல்லவர்களும் அப் பேரரசுகள் ஒவ்வொன்றிலும் இருந்துள்ளனர் என்பதும், அவர்கள் இந் நாட்டு மக்களின் அரசியல், நிர்வாகம், சமுதாயம், பண்பாடு ஆகியவற்றைத் தேர்ச்சியுறுமாறு செய்வதில் அக்கறை காட்டினர் என்பதும் உண்மையே. ஆனால், மௌரியப் பேரரசு முதல் மொகலாயப் பேரரசு வரையிலான எல்லாப் பேரரசுகளும் அவற்றுக்குப் பின்வந்த பிரிட்டிஷ் பேரரசுடன் ஒப்பிடப்படும் பொழுது அவற்றுக்கு இடையே அடிப்படையான முக்கிய வேறுபாடு ஒன்றும் காணப்படுகிறது. அஃதாவது, மௌரியப் பேரரசு முதல் மொகலாயப் பேரரசு வரை இருந்த பேரரசுகள்

யாவும் பெருமளவிலும், பல வழிகளிலும் இந்தியப் பண்பாட்டு முறையுடன் ஒதுங்கி நில்லாமல் செயலில் இருந்தன. அவை தமது அந்நியத் தன்மையைக் கூடுமானவரையில் அகற்றி, இந்திய அரசியல் மற்றும் கலாசாரத்துடன் இணைந்து செயல்பட்ட சிறப்பைப் பெற்றிருந்தன. ஆனால், பிரிட்டிஷ் இந்தியப் பேரரசோ, அஃது இங்கு நிறுவப்பட்ட நாள் முதல் இந் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட நாள் வரை தனித்ததோர் நிறுவன மாக, இந்திய அரசியல் மற்றும் கலாசாரத்தோடு ஒட்டிவர முடியாத அந்நிய நிறுவனமாக இயங்கிக்கொண்டிருந்தது. எனினும், தனது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த இந் நாட்டு மக்களின் தேவைகளையும் நாட்ட விழைவுகளையும் ஒதுக்கியோ அல்லது அவற்றைவிட்டு ஒதுங்கியோ அதனால் செயல்பட முடிய வில்லை. அதனால்தான் பிரிட்டிஷ் பேரரசு இந் நாட்டில் ஏற்படுத்திய சாதனைகள் குறிப்பிடத் தக்கனவாகவும் தனிச் சிறப்பிற்கு உரியனவாகவும் காணப்படுகின்றன.

நாம் முன்னரே அறிந்துள்ளவாறு, நாட்டின் ஒருமைப் பாட்டிற்குச் சோதனைகள் ஏற்பட்டிருந்த காலங்களிலும் சமயங் களிலும் பிரிட்டிஷ்காரர்கள் இந் நாட்டில் இறைமை அதிகாரங் களை ஏற்றனர். அரசியல் அமைதியின்மையும் குழப்பங்களும் இந் நாட்டை அணுஅணுவாக அழித்து நாடு சிதைவுற்றுப்போகும் நிலையில், ஆங்கிலேயர்கள் அரசியல், ஆட்சிப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு இந் நாட்டில் அழிவு ஏற்படாவண்ணம் காத்தனர். மேலும், இந் நாடு முழுவதையும் ஒரே இறைமைக் குடையின் கீழ்க் கொண்டுவந்து, இன்றும் நாம் பின்பற்றக்கூடியதாக இருக்கும் அடிப்படையான ஆட்சி அமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தனர். வெறுக்கத் தக்க பல நடவடிக்கைகளை மேற் கொண்டு அமைக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசு முடிவில் போற்றக் கூடியதும் மதிப்பு வாய்ந்ததுமான சாதனைகள் பலவற்றை இந்திய அரசியல் உலகில் ஏற்படுத்திக் கொடுத்தது. உண்மையிலேயே ஆங்கிலேய ஆட்சியினால் இந்திய நாடு பெற்ற நன்கொடை பல செய்திகளில் சிறப்பானதாய் இருந்தது என்பதை நாம் மறுக்கவும் மறைக்கவும் முடியாது. இதனை இவ் வதிகாரத்தில் காணப் போகும் செய்திகள் நமக்கு அறிவிப்பனவாகும்.

அரசியல் வரலாற்றுக் கண்கொண்டு நோக்கும் பொழுது இந் நாட்டிலிருந்த பல பேரரசுகள் சிறப்பு மிக்க பல தொண்டுகளை ஆற்றியிருந்த போதிலும், அவை இந் நாட்டை ஒருமித்த ஓர் அரசாங்க அமைப்புக் கூட்டின்கீழ்க் கொண்டுவரவில்லை. வலிமை மிக்க பேரரசுகள் நிலவிய காலத்திலும்கூட நலிவு மிக்க

சிற்றரசுகளும், பலதரப்பட்ட அரசாங்கங்களும் மலிந்திருந்தன. ஆனால், பிரிட்டிஷ்காரர்கள் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக இந் நாட்டை ஒருமித்த ஓர் அரசாங்க அமைப்புக் கூட்டின்கீழ்க் கொண்டுவந்து, உருவொத்த ஆட்சி முறையையும், ஆட்சி நியதியையும் பின்பற்றினர். இவற்றின் காரணமாக நாட்டில் அழிவற்ற அமைதி நிலைத்திருப்பதற்கான சூழ்நிலைகள் உருவாயின. அறிஞர் வில்டூரான்ட் (Willdurant) கூறுவதைப்போல், 'சாந்தமான வீரத்துடன்,'[1] அச்சத் துணிவுடன் பிரிட்டிஷ் பேரரசு இந் நாட்டில் நிலவிவந்த அருவருப்பான சமுதாயத் தீமைகளுடன் போராடி, அவற்றை அகற்றவும் முற்பட்டது. இவை யாவற்றையும்விட இந்தியர்கள் ஐரோப்பிய நாகரிகத்துடன் நெருங்கி உறவாடக்கூடிய நல்வாய்ப்புகள் பலவற்றை ஏற்படுத்திக் கொடுக்கவும் செய்தது. நாட்டில் அரசியல் மற்றும் சமுதாய வாழ்க்கை மறுமலர்ச்சி இயக்கங்களின் உற்சாகத்தைத் தோற்று விக்கும் வகையில் அப் பேரரசு அமைத்துக் கொடுத்த ஆங்கிலக் கல்வி முறை எல்லையற்ற மதிப்பையும் பயன்பாட்டையும் பெற்றி ருந்தது. இக் கல்வி முறையில் நாட்டு மக்களின் உதிரத்தோடு உணர்ச்சி மிக்க ஒருமைப்பாடு உறைந்திருக்குமாறு செய்தது. இவ் வொருமைப்பாட்டு உணர்ச்சியின் காரணமாகவே இந்திய மக்கள் யாவரும் ஓர் உருவமாகத் திரண்டு நின்றதும், இன்றும் திரண்டு நிற்பதுமான கதையை இந் நாட்டின் அந் நாள் வரலாறும், இந் நாள் செயல்களும் எடுத்துக் காட்டுகின்றன. சுருங்கக் கூறின் 'வேற்றுமைகளுக்கு இடையிலும் ஒற்றுமையைப்' பேணிக் காப்பதே இந்திய நாட்டின் பண்பாடும் பாரம்பரியமும் ஆகும். இப் பண்பாட்டுப் பாரம்பரியம் சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் காரணமாக மங்கியிருந்தது; அது முனைப்பாகச் செயலில் காட்டப் பட முடியாமல் மக்கள் மனத்தில் தேங்கிக் கிடந்தது. ஆனால், பிரிட்டிஷ் ஆட்சி, இந்திய நாட்டையும் மக்களையும் காத்து, நமது பண்பாட்டுப் பாரம்பரியத்தை முனைப்புடன் செயல்படுத்தி, அது மறுமலர்ச்சி காண்பதற்கு வெகுவாகத் துணை புரிந்தது.

'இந் நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிறுவப்பட்டது பிரிட்டிஷ் ஆட்சியினால் இந்திய நாடு பெற்ற அரசியல் பயன்பாடுகளில் மிகச் சிறப்பும் முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும்.' என்பது முன்னொரு இடத்திலேயே வலியுறுத்திக் கூறப்பட்ட செய்தியாகும். இக் கூற்றின் உண்மையை நாம் உளமார உணர வேண்டுமாயின் மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு அமைந்த இந் நாட்டின் அரசியல் மற்றும் ஆட்சி வரலாற்று ஏடுகளை நாம் எண்ணச் சிதை

[1] Timid boldness (சாந்தமான வீரம்)

வின்றி உன்னிப்பாகப் புரட்டிப் பார்க்கவேண்டும். மொகலாய ஆட்சியின் மறைவிற்குப் பிறகு இந் நாட்டில் ஒருமைப்பாட்டைக் காத்து அமைதியை உருவாக்கிக் கொடுக்கக்கூடிய நல்வாய்ப்பு மற்றும் திறமை, வரலாற்றுச் சிறப்பு மிக்க மராத்தியர்களுக்கு இருந்தது. ஆனல், மாமன்னர் சிவாஜிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த மராத்திய மன்னர்கள் அரசாங்கப் பொறுப்புகளை ஏற்று வரலாற்றையே மாற்றி அமைக்கக்கூடிய செயலை மேற்கொள்வதில் ஏனே தோல்வியைக் கண்டுவிட்டனர். அவர்கள் பெற்ற தோல்வி அசாதாரணமான தன்று; அச்சத்திற்கும் பேரழிவிற்கும் வித்திட்ட தாய் அமைந்தது அத் தோல்வி. அவர்கள் தோல்வி கண்டதற்குச் சந்தர்ப்பச் சூழ்நிலைகளும், அசாதாரணமான காரணங்களும் இருந்தன என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. ஆனல், மராத்தியர்கள் பெற்ற பெருந்தோல்வி இந் நாட்டில் அமைதியற்ற நிலையும், பல சீர்கேடுகளும் காட்டுத் தீப்போல் பரவுவதற்குக் காரணமாயிருந்தது. வீட்டமைதியும் நாட்டமைதியும், சிதறுண்டு சின்ன பின்னமாகிய அச்சநிலை 18ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி முதல் நிலவத் தொடங்கிற்று. பிண்டாரிகள் எனப்பட்ட கொள்ளை, கொலைக் கூட்டத்தினர் நாட்டை அலைக்கழித்தவண்ணம் இருந்தனர். இவர்களின் கொள்ளை, கொலைபாதகச் செயல்களுக்கு இலக்காகாத எந்த ஆடவரும் பெண்டிரும், குழந்தைகளும், நாடு நகரங்களும் குக்கிராமங்களும் இருக்கவில்லை. இத்தகைய கயவர் கூட்டத்தைக் களைந்தெறியும் பணி ஹேஸ்டிங்ஸ் பிரபு (Lord Hastings) போன்றவர்களால் மேற்கொள்ளப்பட்டது. பிண்டாரிகளின் இன்னல்களிலிருந்து இந் நாட்டு மக்களை உய்வித்த ஆங்கிலேயரின் அருந்தொண்டும் பெருஞ்செயலும் யாவராலும் போற்றப்பட்டன. ‘உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு’ என்னும் முப்பால் மூதுரைக்கு ஒப்பத் தனது ஆட்சி அதிகாரிகளும் சிறப்பு மிக்க இந்தியத் தலைவர்களும் நட்புப் பூண்டு, அமைதி இன்பத்தை நாட்டிற்கும், மக்களுக்கும் கொடுக்கக்கூடிய நற்செயல் கம்பெனியின் பிரிட்டிஷ் ஆட்சியினுல் மேற்கொள்ளப்பட்டது. வில்லியம் பெண்டிங்க் உடன்கட்டையேறுதல், பெண் குழந்தைகளைப் பலி கொடுத்தல் போன்ற நாகரிகமற்ற செயல்களை ஒழிப்பதில் தீவிரம் காட்டினர். இவரது ஆட்சிக் காலத்தில் தக்கர்கள் (Thugs) எனப்பட்ட வழிப்போக்குக் கொள்ளைக் கூட்டத்தினர் முழுமையாக அழித்தொழிக்கப்பட்டனர். பொதுவாக, ஆங்கிலேய ஆட்சியில் இந் நாட்டுப் பழக்க வழக்கங்களில் தேர்ச்சியை உண்டுபண்ணும் வகையில், பல தரப்பட்ட சீர்த்திருத்தங்கள் செய்தது, பழமைக் கோட்பாடுகளில் மூழ்கியிருந்த இந்தியர்கள் பலரால் அநீதி என்றும் கருதப்பட்டது. எனினும், இன்று நாம் பெற்றுள்ள அறிவியல்

முன்னேற்றத்தையும், உலகப் பண்பாட்டோடு உறவாடும் தன்மை கொண்டுள்ள சமுதாயத்தையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் மனத்தில் கொண்டு பார்க்கும் பொழுது, அன்று ஆங்கிலேயர் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏற்றமும் சிறப்பும் கொண்டவையாகவே புலப்படுகின்றன. இதனை அன்றே உணர்ந்திருந்த இந்தியப் பெருமக்கள் பலர் ஆங்கிலேயரின் ஆட்சி என்றும் நிலைத்திருக்கவேண்டும் என விரும்பவும் செய்தனர். எவ்வாறுயினும் இந் நாடு பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் வந்ததன் பயனாக அமைதியை அரவணைத்து நாடு முன்னேறக்கூடிய தன்மையைப் பெற்றது என்பதை நாம் இங்கு ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். இதற்குச் சில ஆங்கிலேய அதிகாரிகளும், இராசராம் மோகன்ராய் போன்ற நம் நாட்டுத் தலைவர்களும் காரணகர்த்தாக்களாவர்.

1857ஆம் ஆண்டுவாக்கில் இந் நாட்டு மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியும் தெளிவும் தோன்றிவிட்டன. 1857-ல் முடிவுற்ற சகாப்தத்தில் இந் நாடு தற்கால அரசாங்கத்திற்கு உரிய சாதனங்கள் பலவற்றைப் பெற்றிருந்தது. மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றங்களைப் பெற்றிராவிட்டாலும் அரசாங்க ஆட்சி நிறுவனங்கள் பலவற்றை இந் நாடு பெற்றது. நாம் இதற்குமுன் பல அதிகாரங்களில் கண்டுள்ளது போல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினரின் ஆட்சியின்கீழ் அரசியலமைப்பு முறையான பல சட்டங்களையும் அரசாங்க வளர்ச்சியையும் இந் நாடு பெற்றது. 1773-ல் இயற்றப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டமானது நாட்டு நிர்வாகத்திற்கு உகந்த முறையில் அமைக்கப்பட்ட நல்ல ஆட்சிப் பொறியைக் கொடுக்கவில்லை. நாம் முன்னரே கண்டுள்ளவாறு திறமையான அரசாங்கத்தை நடத்த முடியாத அளவிற்குப் பல குறைபாடுகளையும் சிக்கல்களையும் அச் சட்டம் கொண்டிருந்தது. எடுத்துக்காட்டாக, இச் சட்டத்தின்மூலம் தலைமை ஆளுநர் தமது ஆட்சி மன்ற உறுப்பினர்களின் ஆதரவு வாக்குச் சீட்டை என்றும் எதிர்பார்க்கக் கூடியதான அவல நிலை இருந்ததையும் ஆளுநர் ஆட்சி மன்றத்திற்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் இடையே தெளிவற்ற அதிகார எல்லைப் பாகுபாடு இல்லாதிருந்ததையும் இங்கு மீண்டும் கூறலாம். எனினும், இந்திய அரசியல் படிநிலை வளர்ச்சிக்கு வீரியம் மிக்க விதையை ஊன்றிய பெருமையும் முக்கியத்துவமும் ஒழுங்குமுறைச் சட்டத்திற்கு இருந்தது. இச் சட்டத்தின் குறைபாடுகளை அகற்றி, இந்திய நிர்வாக முறையில் தேர்ச்சியைக் காணும் பொருட்டு, இந்திய ஆட்சிச் செயல்களுக்கான பொறுப்பும் அதிகாரமும் முனைப்பாகக் கொடுக்கப்பட்ட நிலையில், 1784-ல் பிட் இந்தியச் சட்டம் இயற்றப்பட்டது. தலைமை ஆளுநருக்கும் அவரது

ஆட்சி மன்றத்திற்கும் இடையே நிலவிய அதிகாரப் போட்டி நிலையை அகற்றிய நன்மையை இச் சட்டம் செய்தது. இச் சட்டத்தின்மூலம் இந்திய அரசாங்கத்தின்மீது கண்காணிப்பையும் கட்டுப்பாட்டையும் செலுத்தக்கூடிய வகையில், விரிவான அதிகாரம் கொடுக்கப்பட்ட நிலையில், ஒரு கட்டுப்பாட்டு வாரியம் நிறுவப்பட்டது. அதே நேரத்தில் கம்பெனியின் இயக்குநர்கள் குழுவும் அதிகாரம் மிக்க நிறுவனமாக இருந்து வந்தது. எனவே, பிட் இந்தியச் சட்டம் இந்திய நிர்வாகம் குறித்து இரட்டை அரசாங்கமுறை அமையத் துணைபுரிந்தது. ஆனால், சுற்றி வளைத்து வாலாயமாகவும், தடைகளையும் எதிர்த் தடைகளையும் கொண்ட தாகவும் இந்திய நிர்வாகச் செயல்கள் மேற்கொள்ளப்படும் படியாக அந்த ஆட்சிமுறை இருந்தது. 1784க்குப் பிறகு பல சாசனச் சட்டங்கள் இயற்றப்பட்ட போதிலும் மேற்சொல்லப் பட்ட குறைபாடுகள் 1858-ல் இந்திய அரசாங்கம் இங்கிலாந்தின் அரச நிறுவனத்தின் நேரடியான அதிகார எல்லையின் கீழ்க் கொண்டு வரப்பட்ட காலம்வரை இருக்கவே செய்தன. குறை பாடுகள் பலவற்றைக் கொண்டதாக இருந்த போதிலும், பிரிட்டிஷ் இந்தியச் சட்டங்கள் நல்லதோர் அரசாங்கம் அமைவதற்கான சிறப்பான சாதனங்களாக இல்லையென்றாலும், காலத்தின் தேவை களுக்கு ஒப்ப அவை பல பயன்களை விளைவித்தன.

1773-ல் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டம் முதற் கொண்டு 1857 வரையிலான பட்டயச் சட்டங்கள்வரை யாவும் குறைபாடுகள் பலவற்றைக் கொண்டிருந்தபோதும், அவை ஒரு மித்த ஓர் அரசாங்கமுறை அமைவதற்குத் தேவையான மாதிரிச் சாதனங்களாகவும் உபகரணங்களாகவும் அமைந்தன என்பதில் ஐயமில்லை. இவற்றின்மூலம் அதிகாரப் பற்றுதலும் பொறுப்பும் மிக்க (integrity) ஆட்சித்துறை மற்றும் நீதித்துறை அமைப்புகள் நிறுவப்பட்டது இந்திய அரசியல் வாழ்க்கைப் போக்கிற்குக் கிடைத்த நற்பயனேயாகும். இந்திய நாட்டின் அரசியல் மற்றும் இறைமை விதிக்குப் பலரது போர் பலத்தாலும், ஆக்கிரமிப்பாலும் இன்னல் ஏற்பட்டு வந்த அச் சகாப்தத்தில் வளர்ச்சி முறைக்கு உட்படுத்தப்பட்ட செயலாட்சித்துறை மற்றும் நீதித்துறை அமைப்புகள் அமைக்கப்பட்டுச் செயல்படுத்தபட்ட செயல், இந் நாட்டிற்கு உடனடியாக இல்லையென்றாலும், பின்னர் காலம் செல்லச்செல்ல நற்பயன்களை ஏற்படுத்திக் கொடுத்தன என்பதில் ஐயமில்லை. படிநிலை அமைப்பிற்கும் அதிகார வரிசைக்கும் (hierarchy) உட்பட்ட நீதிமன்றங்கள் அமைக்கப் பட்டு அவற்றின்மூலம் சட்ட நீதிபரிபாலனம் மேற்கொள்ளப் பட்டதும், ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்த செயலாட்சித் துறை

மூலம் சட்ட திட்ட ஆட்சிக் கொள்கைகள் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதும், பிற்காலத்தில் இந்தியச் சமுதாய அமைப்பிற்கும் அமைதிக்கும் தேவையான அடித்தளத்தையும், அமைப்புக் கூட்டையும் (frame work) ஏற்படுத்திக் கொடுத்தன. இவை இன்றைய ஜனநாயகக் குடியரசாயுள்ள இந்திய அரசியல் மற்றும் ஆட்சி அமைப்புகளிலும் போற்றப்பட்டு வருவது, அன்று ஆங்கிலேயர் தமது கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின்கீழ் ஏற்படுத்திக் கொடுத்த அரசியலமைப்பு மற்றும் ஆட்சிச் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் நமக்கு உணர்த்துவதாகும்.

ஒரு நாட்டின் குடியாட்சியும் சட்டத்தின் ஆட்சியும் நல்ல முறையில் செயல்பட வேண்டுமாயின் அங்குத் தனிநபர் சுதந்திரம் போற்றிக் காக்கப் படவேண்டும். தன்னுரிமைப் பாதுகாப்பு இல்லையென்றால், நீதிநேர்மையற்ற முறையில், மக்களின் உயிர் உடைமை ஆகியவற்றிற்கு அச்சமும் அழிவும் ஏற்படுமானல் அங்கு கொடுங்கோல் ஆட்சியே நிலவ முடியும். இப்படிப்பட்ட ஒரு கொடுங்கோல் ஆட்சியை, எவரையும் எச் சட்டங்களுக்கும் நீதி முறைகளுக்கும் உட்படுத்தாது, அராசக வழியில் நடத்த நினைத்திருந்தால், அன்று கம்பெனியின் ஆதிக்கத்தின்கீழ் அந்நியரான ஆங்கிலேயர் அவ்வாறு செய்திருக்க முடியும். அவர்கள் அவ்வாறு செய்யாது, தன்னுரிமைப் பாதுகாப்புச் சட்டங்களை நன்முறையில் செயல்படுத்தி, தனிநபர் சுதந்திரம் மற்றும் உரிமைகளுக்கு அபாயம் ஏற்படாத வகையில் ஆட்சி நடத்திய நற்செயல் இந்திய அரசியலில் வரவேற்கப்படத் தக்க புதுமையாகவும் இருந்தது.

இந்திய நாட்டின் அரசியல் வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்து அவற்றில் நமது கவனத்தைச் செலுத்தும்பொழுது, குறிப்பிடத் தக்க ஒவ்வொரு காலத்திலும் பேரரசிலும் அவற்றின் அரசியல், அவற்றில் அப்பொழுது அரியணைச் சிறப்பைப் பெற்றிருந்த தனிநபரான ஓர் அரசனையோ அல்லது அரியணை அதிகாரத்தைப் பெற்றிருந்த ஒரு சில நபர்களையோ சுற்றிச் சுழல்வதாகவே அமைந்திருந்தது என்பது நமக்குப் புலனுகும். எனவேதான், மௌரியப் பேரரசு என்பதைப்பற்றி எண்ணும்பொழுது சந்திரகுப்த மௌரியர் அல்லது அசோகர் என்றும், அவர்களது அமைச்சவை ஆட்சி என்றும்; சோழர்களின் அரசியல் என்றால் கல்லணை கட்டிய கரிகாலன், தஞ்சைப் பெருங்கோயில் எடுத்த இராசராசன், நன்செய் நிலம் செழிக்க வைத்த குலோத்துங்கன் போன்ற தனிநபர்கள், அவர்களது ஐம்பெருங்குழு, எண்பேராயங்கள் என்றும்; மராத்தியப் பேரரசின் அரசியல்

என்றால் மாமன்னன் சிவாஜி மற்றும் அவரது அஷ்டப் பிரதான் என்றும்; மொகலாயப் பேரரசிலும் அதன் அரசியலிலும் மையப் புள்ளிகளாக இருந்தவர்கள் அக்பர், ஔரங்கசீப் என்றும் நமக்கு நன்றாகப் புலப்படுகின்றன. அரசு என்றாலும் அரசாங்கம் என்றாலும் அஃது ஓர் அரசனையோ அல்லது அரசாள்வோரையோ குறிப்பதாயும், அவர்களோடு இணைந்து சுற்றிச் சுழல்வதாகவும் அமைந்திருந்தது இந் நாட்டின் வரலாறு காட்டும் அரசியல்பற்றிய அடிப்படையான செய்தியாகும். இப்படிப் பன்னெடுங்காலம் தொட்டு இந் நாட்டிலிருந்த பழக்கத்தில், சமுதாயத்தில் ஊறிப் போயிருந்த செய்தியில் போற்றத் தக்க மாற்றம் ஆங்கிலக் கிழக் கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின்கீழ் முதல் முறையாக ஏற்பட்டது. அரசனை வைத்து இனமறியப்பட்டிருந்த இந் நாட்டு அரசியல் அரசாங்கப்போக்கில் அடிப்படை மாற்றம் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின்கீழ் ஏற்பட்டது. ஆள்வோர் இனமறியப் படாத நிலையில், ஆள்வோரே அரசாங்கம் என்பது அகற்றப்பட்ட நிலையில், நிறுவனமுறையாக அரசாங்கம் என்பது ஆங்கிலேயரால் அமைக்கப்பட்டு, அதன்மூலம் இந் நாட்டு நிர்வாகச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனை இந்திய அரசியல் வரலாற்றில் ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்ட முதன்மையானதும் முக்கிய மானதுமான அரசியல் மாற்றம் எனக் கருதலாம். இதனால், நாட்டின் சட்டங்களின் பிடிகளிலிருந்து சலுகைகளைக் கோரி விதிவிலக்கைப் பெறமுடியாது என்ற நிலையும், சட்டங்களை மீறுவதால் தண்டனைகளை ஏற்காமல் தப்பித்துக்கொள்ள முடியாது என்ற நிலையும் இந் நாட்டில் நிலை நிறுத்தப்பட்டன. கிரேக்க நாட்டு அரசியல் தத்துவ ஞானிகளான பிளேட்டோவும், அரிஸ்டாடிலும் கி. மு. நான்காம் நூற்றாண்டிலேயே, ‘நல்லாட்சி ஒரு நாட்டில் நடைபெறவேண்டுமாயின், அந் நாட்டில் சட்டம் என்பதே முதன்மையானதாகவும் மூலப் பொருளாகவும் இறைமை இடத்தைத் தன்னகத்தே கொண்டதாகவும் இருக்கவேண்டும்’ என்று கூறினர். சட்டத்திற்கு அடுத்த நிலையில்தான் அரசை ஆள்வோர் இருக்கவேண்டும். சட்டத்தின் இறைமைக்குப் பிறகே மன்னனின் மாண்பு அமையவேண்டும். மாறாக மன்னனுக்கே முதல் இடம்; சட்டம் பிறகு என்ற நிலை இருக்குமாயின் அங்கு மக்களுக்கு வனவாசமும் அராசகமுமே வாழ்க்கைப் பயன்களாக இருக்கும். இதனை வழிவழியாக முடியாட்சியையும் வல்லாட்சி யையும் அரசாங்க முறையாகக் கொண்டிருந்த இந் நாட்டின் அரசியல் வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுகிறது. பன்னெடுங் காலம் மன்னராட்சி அரசாங்க அமைப்பைக் கொண்டிருந்த இந் நாட்டில், மக்கள் கசக்கிப் பிழியப்படும் கொடுங்கோன்மைச் செயல்பாட்டைத் தனது வழிமுறையாகக் கொண்டிருந்த இந்

நாட்டின் முடியாட்சி அமைப்பில், சட்டத்திற்கு மேலாக எவரும் எதுவும் இருக்கமுடியாது என்ற அரசியல் சித்தாந்தத்தையும், ஆட்சிக் கோட்பாட்டையும் நியதி முறையையும் ஆங்கிலேயர் ஏற்படுத்திக் கொடுத்தது, நாம் இன்றும் அவர்களுக்கு நமது கடப்பாட்டு உணர்ச்சியை உணர்த்த வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதையே எடுத்துக்காட்டுகிறது. இவற்றைப்பற்றி இங்குக் கூறுவது இந்தியாவிலிருந்த பழங்கால மன்னராட்சிகள் கொடுமையானவை, தீயவை என்று கூறுவதற்கு அன்று; மாறாக ஒரு மனிதன் அல்லது மன்னன்மூலமே முக்கியத்துவத்தைப் பெற்றிருந்த இந் நாட்டின் சட்டநிலை மாற்றப்பட்டு, சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின் காரணமாகவே ஆட்சியாளர்களும் மக்களும் முக்கியத்துவத்தைப் பெறமுடியும் என்ற நிலை, கம்பெனியின் ஆங்கிலேய ஆட்சியினால் 19ஆம் நூற்றாண்டில் இந் நாடு ஒருமித்த ஓர் அரசாங்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டதன்மூலம் நாம் பெற்ற நன்மையாகும் என்பதை எடுத்துக் காட்டுவதற்கே ஆகும். சட்டத்தின் இறைமை, தலைமை, வலிமை ஆகியவை இந் நாட்டில் நிறுவப்பட்டுச் செயல்படுத்தப்பட்டதால் புதியதொரு பாதையை நோக்கிச் செல்ல ஆரம்பித்த இந்திய அரசியல் மற்றும் அரசாங்கம் நன்மை பலவற்றைப் பெற்றது. அவற்றை வரலாற்றுச் செய்திகளின் துணையோடும் தகுந்த எடுத்துக்காட்டுகளோடும் விளக்கலாம்.

முஸ்லிம் மற்றும் மொகலாய இந்திய அரசியலில் அரசரே அரசாங்கம் மற்றும் ஆட்சி அதிகாரங்கள் யாவற்றின் இருப்பிடமாகவும், சட்டம் மற்றும் நீதி நியாயங்களின் பிறப்பிடமாகவும் இருந்தார். மாமன்னர் அக்பர் நல்லதை நினைத்து, நல்லதைச் செய்த நல்லரசராய் இருந்தார். எனினும், பேரரசின் இறைமையைப் பெற்றிருந்த அக்பரும் ஒருசில சமயங்களில் தீயனவற்றையும் கொடுங்கோல் செயல்களையும் செய்த குற்றத்திற்கு ஆளாகி இருந்தார் என்பதை, அவர் மொகலாயப் பேரரசைக் காத்துக்கொடுத்த பைராம்கானைச் சிறுமதியின் காரணமாகவோ, குறுமதியின் காரணமாகவோ சாகடித்ததும், ராஜஸ்தானில் உள்ள சித்தூரைத் தாக்கியபொழுது அவர்செய்த அட்டூழியங்களும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், இக் குற்றங்களுக்காக அவரை யாரும் நீதிமன்றத்தில் ஏற்றவில்லை. எத் தண்டனையையும் அவருக்குக் கொடுக்கவில்லை. அப்பொழுது, அன்றிருந்த அரசியல் தத்துவத்திற்கு ஒப்ப, அப்படிப்பட்ட ஒரு செயலை அல்லது நடவடிக்கையை எவரும் நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியாது. ஆனால், தமது பேரரசு இந்தியாவில் நிறுவப்படுவதற்கும், தமது செல்வச்செழிப்பும், கொழிப்பும் வளமடைவதற்கும் காரணமாய்

இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ்,அவர் செய்த சட்டம் மற்றும் அதிகார நிலை மீறிய செயல்களுக்காக இங்கிலாந்துநாட்டுப் பாராளுமன்றத்தில் அரசத் துரோகக் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டார். இவ் விரண்டு செய்திகளையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இந் நாட்டின் அரசியலும் அரசாங்கமும் எப்படிச் சட்டத் தலைமை அல்லது இறைமை எனும் பெரும்பாதையை நோக்கிப் புதிய வழியில் செல்லத்தொடங்கின என்பது வெளிப்படுகின்றது. இதனால் சட்டம் மற்றும் நீதிமுறைமைக்கு உட்பட்ட ஆட்சி இறைமையை நாம் இதற்குமுன் ஒரு சிறிதும் அறிந்திருக்கவில்லை அல்லது செயல்படுத்தி யிருக்கவில்லை என்றோ, அஃது ஆங்கிலேயரின் ஆட்சியால் நாம் பெற்ற பெருஞ்செல்வம் என்றோ கண்ணை மூடிக் கொண்டு கருத்து முடிவிற்கு வரக்கூடாது. ஏனெனில், பேராசிரியர் கிருட்டினசுவாமி அய்யங்கார் அவர்கள் கூறுவதுபோல் 'ஜூரி முறையின்மூலம் நீதிபரிபாலனத்தை மேற்கொள்வது தமது பிறப்புரிமை என்ற ஆங்கிலேயரின் வாதம் பொய்த்துப்போகும் படியாக, கி.பி 8, 9ஆம் நூற்றாண்டுகளிலேயே சோழப் பேரரசர்கள் சட்டத்திற்கும், நீதிக்கும் முதன்மை முக்கியத்துவத்தைக் கொடுத்து ஆண்டனர்.' அதற்கு முன்னரும்கூட, சங்க காலத்திலேயே திராவிட அரசியல் இத்தகைய சிறப்பினைப் பெற்றிருந்தது என்பது வெள்ளிடைமலை. மனுநீதிச் சோழன், சிபிச் சக்கரவர்த்தி, பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகியோருடைய அரசியலும் ஆட்சியும் இதற்குச் சான்று பகர்வனவாம். ஆனால், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்த குடியான தமிழினம், இப் பாரத நாட்டை ஆளமுடியாத நிலை தோன்றி விட்டது. அந்நியர்களின் படையெடுப்புக்கு இந் நாடு இரையாயிற்று. எனவே, தமிழினம் போற்றிக் காத்த சட்ட நீதிமுறை இங்கு மங்கி மறைந்திருந்தது; முற்றிலும் மண்மூடிப் போகவில்லை. வரலாறு திரும்பும்படியாக அச் செயல் ஆங்கிலேயரால் 18,19ஆம் நூற்றாண்டுகளில் புகுத்தப்பட்டுப் பின்பற்றப்பட வேண்டியதாக இந் நாட்டின் அரசியல் விதி இருந்தது போலும்! எனினும், வரலாற்றுச் செய்திகளோடு நம்மைப் பிணைத்துக் கொண்டு இதனை அணுகும்பொழுது, பின்வரும் செய்திகளை ஏற்க வேண்டியவர்களாகிறோம். 1857-ல் இந் நாடு முழுவதையும் பல வகைகளில் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்திருந்த ஆங்கிலேயர் தம் இச்சையாக, சட்ட நீதி முறைகளைத் தகர்த்தெறிந்து, அராசக ஆட்சியை மேற்கொண்டிருக்க முடியும். அதற்கான சூழ்நிலையும் வாய்ப்பும் அவர்களுக்கு இருந்தன. அதற்கேற்றாற்போல் அவர்களைத் தடுத்து நொடித்துப் போகும்படி செய்வதற்கான எதிர்ப்புச் சக்தியும் நம்மிடம் இருக்கவில்லை. எனினும், ஆங்கிலேயர் தமது கம்பெனியின் ஆட்சியின்கீழ்ச் சட்டத்தின் இறைமைக்கும், ஆட்சிக்கும் பல

நூற்றுண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை வழக்கில் புகுத்தி நிலைநாட்டிய செயல் போற்றப்படவேண்டியதேயாகும். கெடுதலானவர்களே ஆயினும் அவர்களின் நற்செயலை நன்றிப்பெருக்குடன் போற்றிப் பாராட்டுவது நமது பாரதத்தின் பாரம்பரியப் பண்பு. எனவே, கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் செய்துகொடுத்த நன்மையை நாம் மறப்பதற்கில்லை; மறுப்பதற்கும் இல்லை. சட்டத்தின் ஆட்சிமுறை ஆங்கிலேயரால் நிறுவப்பட்டதால் தனிநபர் தனித்தன்மையைப் பெற்றிருந்த இந்திய அரசாங்கம் பிரிட்டிஷ் ஆட்சி தொடங்க ஆரம்பித்தவுடன் மறைந்து போயிற்று.

எனினும், இந்திய நாட்டுச் சமுதாயப் பிரச்சினைகளில் அச்சத்துடனும், அதைரியத்துடனுமே பிரிட்டிஷ்காரர்கள் கவனத்தைச் செலுத்தினர். சதி அல்லது உடன்கட்டை யேறுதல், சிசுக்கொலை போன்ற அநாகரிகமான பழக்கங்கள் இந்துமதப் போர்வையின் கீழ்ப் பெருவழக்கில் இருந்தன. இத்தகைய அநாகரிகப் பழக்கங்களைத் தடுத்து ஒழிக்க வேண்டியதன் அவசியத்தைப் பல பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் உணர்ந்திருந்தனர். ஆனல், மதவாதிகளின் எதிர்ப்பைத் தமது நடவடிக்கைகள் தூண்டிவிட்டுவிடக்கூடும் என்று அஞ்சி முனைப்பான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்வதில் தயக்கம் காட்டியவண்ணம் இருந்தனர். எனினும், இராசாராம் மோகன்ராய் போன்ற நன்மக்கள் தகுந்த சூழ்நிலைகளையும், மக்களின் மனவெழுச்சியையும் உருவாக்கிக் கொடுத்ததன் பயனுக, பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தீரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது. இராசாராம் மோகன்ராய் போன்ற இந்தியச் சமுதாயச் சீர்திருத்த வாதிகளின் நல்லாதரவை வில்லியம் பென்டிங்க் பிரபு பெற்றிருந்த காரணத்தால் அவர் 1819ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உடன்கட்டை யேறுதலான ‘சதி’ எனும் சம்பிரதாயத்தை ஒழித்தார். இதனுல் பென்டிங்க் பிரபு தைரிய மிக்க ஆட்சியாளர் என்று சமூக, சமுதாயச் சீர்திருத்தவாதிகளினுல் வெகுவாகப் பாராட்டப்பட்டார்.

இராசாராம் மோகன்ராய் போன்ற இந்தியப் பெருமக்கள் மற்றும் சீர்திருத்த வாதிகளின் ஆதரவும் அனுசரிப்பும் இருந்த காரணத்தினுலேயே வில்லியம் பென்டிங்க் பிரபுவும் அவருக்குப்பின் வந்த சில தலைமை ஆளுநர்களும், பல சமுதாயச் சீர்திருத்தங்களை இங்குச் சட்ட முறையாக மேற்கொள்ள முடிந்தது. இராசாராம் மோகன்ராயின் காலம் 1774 முதல் 1833ஆம் ஆண்டு வரையாகும். தந்நிகரற்ற பெரும் சிறப்புகள் பலவற்றைப் பெற்றிருந்த இந்தியர்களுள் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பத்தரைமாற்றுத்

தங்கமாக இராசாராம் மோகன்ராய் இருந்தார் என்றால் அது மிகைப்பட்ட கூற்றாகாது. இந்திய நாட்டில் நவ நாகரிகப் புதுமைப் பாங்குகளும், புதுமைக் கருத்துகளும், கோட்பாடுகளும், சமய நம்பிக்கைத் துறையில் தற்காலப் பாணியும், வழிமுறைகளும் பேணப்படுவதற்கு அவர் பெருங்காரணமாய் இருந்தார். உயர் சாதிக் குடும்பத்தில் பிறந்த இவர் ஏற்புடைய சமய உறுதி என்னும் மரபுக் கோட்பாடுகள் தம் மனத்தில் தங்காத நிலையைப்பெற்றிருந்தார். சாதி, மத சமயச் செய்திகளில் சமரசப் பெருநோக்கை இவர் கொண்டிருந்தார். எனவே, உலகேற்புடைய பிரார்த்தனைக் கூடமாக அமையும் பொருட்டுப் பிரம்ம சமாஜத்தை ஸ்தாபித்தார். உயர்மதியும், அறிவும், ஆற்றலும் ஆன்மிக அமைதியும் கொண்டிருந்த இவர் உலக மதங்கள் யாவற்றிலும் மக்களுடைய நல்வாழ்விற்கான சிறப்பான அம்சங்கள் இருப்பதை உணர்ந்தார். தமது சமயப் பெருநோக்கை, சமரச சன்மார்க்க நோக்கை, வெளிப்படுத்தும் வகையில் இயேசு கிறித்துவின் புகழை வெளிக்கொணருமாறு ஒரு புத்தகத்தை எழுதினார். இதன்மூலம் கிறித்துவ மதச் செய்திகளும் நியதிகளும் இந்துமதக் கலாசாரத்துடன் தேவையான அளவிற்கு ஒன்றிப்போகும் சூழ்நிலை உருவாயிற்று. இவருக்குப் பல கிறித்தவ நண்பர்கள் இருந்தனர். கிறித்தவ சமயப் பரப்பு நிறுவனங்களிடமும், இறையருள் கட்டளைப் பணியாளர்களிடமும் (missionaries) இவருக்கு மிக்க ஈடுபாடுகள் இருந்தன. அந்நிய மதத்தவர்களான கிறித்துவர்கள், இராசாராம் மோகன்ராய் மதச்செய்திகளில் கொண்டிருந்த பெருமதிப் போக்கைக் கண்டு வியந்ததோடன்றி, அவர்களில் சிலர் இந்துமதத்திற்கு எதிராகத் தேர்ச்சியான உளப்பாங்கையும், மனநிலைச் சார்பையும் அவர் கொண்டிருந்ததாகவும் தவறாக எண்ணினர். ஆனால், இராசாராம் மோகன்ராயோ இந்துமதத்தின் சிறப்பையும், உச்சநிலை உயர்வையும் அவர்களுக்கு எடுத்துக் காட்டியதோடன்றிச் சிறிதும் தயவு தாட்சண்யம் இன்றி அவர்கள் இந்து சமயச் செய்திகளில் பெற்றிருந்த பேரறிவீனத்தை வெளிப்படுத்தினார். எனவே, நமது வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்து சமயத்தின் சிறப்பையும் பாரம்பரியத்தையும் காத்து, அதே நேரத்தில் நமது நாகரிகத்தின் உயர்வும் சிறப்பும் விரிவடையும் வகையில் பிற நாகரிகங்களில் இருந்த நல்லவையும், உயர்வானவையுமான கருத்துகளையும், நியதிகளையும் போற்றினார். உண்மையிலேயே ரொமைன் ரோலாண்ட் (Romain Roland) என்னும் ஃபிரெஞ்சுப் பேரறிஞர் கூறுவதைப்போல், 'இராசாராம் மோகன்ராய் தனித்தன்மையும் சுதந்திரத்தன்மையும் கொண்ட ஆஸ்திக வாதியாகவும், பகுத்தறிவு வாதியாகவும், ஒழுக்கத்தின்

பெருமையாளராகவும் இருந்தார்.[1] இராசாராம் மோகன்ராய் கல்வித்துறை வித்தகராகவும் இருந்தார். எனவே, இவர் மேலை நாட்டுப் பாணியில் ஆங்கிலக் கல்வி முறை இங்கு புகுத்தப்பட்டுப் பெரிதும் பின்பற்றப்படவேண்டும் என்ற பெருநோக்கையும் கொண்டிருந்தார். அதே நேரத்தில், அஃதாவது 19ஆம் நூற்றுண்டின் தொடக்க காலத்தில், கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியாளர்களும் ஆங்கிலத்தின்மூலம் கல்வியை இந் நாட்டில் வெகுவாகப் பரப்பவேண்டும் என்று கருதினர். ஆனுல், ஓர் அந்நியமொழி தம்மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது என்ற எதிர்ப்பை இந்தியர்கள் வெளிப்படுத்திவிடுவார்களோ என்ற ஐயத்தினுலும் அச்சத்தினுலும் அலைக்கழிக்கப்பட்டு, தீவிரத்தையும் தைரியத்தையும் காட்டமுடியாமல் ஆங்கிலேயர் அரை மனத்துடன் காரியங்களை மேற்கொள்ளலாயினர். கல்வி, படிப்பு ஆகியவற்றைப் பொருத்தவரை, பன்னெடுந் தொன்மைக் காலத்திலிருந்தே இந்திய நாடு அரச ஆதரவைப் பெற்றுவந்துள்ளது. 19ஆம் நூற்றுண்டிலும் பெற்றிருந்தது. ஆனுல், இந் நாட்டில் அரசியல் நிலையற்ற தன்மையும், அரச பரம்பரையின் ஆதரவற்ற தன்மையும் இருந்ததால் நாட்டின் தேசீயக் கல்விமுறை தேக்கத்தையும் வீழ்ச்சியையும் சிதைவையும் கொண்டிருந்தது. ஆனுல், மின்டோ, ஹேஸ்டிங்ஸ் போன்ற கூர்மதி ஆட்சியாளர்கள் இந் நாட்டில் நடத்தப்பட்டு வந்த கல்வி நிறுவனங்கள் யாவும் காலத்திற்கும், நல்வாழ்க்கைத் தரத்திற்கும் ஒவ்வாத பழமைக் கோட்பாடுகளின் அடிப்படையில் நடத்தப்பட்டு வந்ததையும் அவற்ருல் ஏற்பட விருந்த தீமைகளையும் நன்கு உணர்ந்தனர். எனவே, கல்வித் துறையிலும், 'பழையன கழித்துப் புதியன புகுத்தித்' தேசீய அளவில் தேர்ச்சியான முன்னேற்றங்களை ஏற்படுத்தவேண்டும் என்று விழைந்தனர். உதாரணமாக 1824ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பம்பாயின் ஆளுநராக இருந்த மௌன்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் இந்தியாவில் நடைபெற்ற பிரிட்டிஷ் ஆட்சி, நாட்டின் கல்விச் சீரமைப்பிலும் தேர்ச்சியிலும் தனது கவனத்தைச் செலுத்தாது உள்ளது என்றும், இதனுல் மக்களின் திறமை ஊற்றுகள் உலர்ந்துவிடக்கூடிய ஆபத்து தோன்றியுள்ளது என்றும், தமது நாட்டைப்பற்றிய படிப்பையும் செய்திகளையும் கூட மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய நாட்டம் அகன்றுவிடக்கூடிய ஆபத்து உள்ளது என்றும் தமது சுருக்கக் குறிப்புரையில் எழுதினுர். மேலும், பயனுறுதி மிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலொழிய மேற்கூறிய நலிவுகளைத் தடுத்து நிறுத்

[1] Romain Roland,-The life of 'Ramakrishna'-p. 103

தவும், மக்களின் கல்வி அறிவு போன்றவற்றை மாண்புறுமாறு செய்யவும் முடியாது என்றும் எச்சரிக்கையான முறையில் தமது சிறு குறிப்புரையில் எழுதினர்.

19ஆம் நூற்றுண்டின் தொடக்க காலத்திலேயே கல்வி முறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படத் தக்க வகையில் நாட்டு நிலவரங்களும் மாறியிருந்தன. புதிய கல்வி முறைகளை மேற்கொள்ளக்கூடிய தன்மையைப் பெற்றிருந்த நிலையிலும் இந் நாடு இருந்தது. ஆனால், நாட்டில் தோன்றியிருந்த மாற்றங்களுக்கும் நிலவரங்களுக்கும் ஏற்ப எத்தகைய கல்வி முறை இந்தியாவிற்கு உகந்ததாக இருக்கக்கூடும் என்பதைத் தீர்மானிப்பதில் ஆங்கிலக் கல்வி முறை ஆதரவாளர்களுக்கும் (anglicists), கீழ்த்திசைக் கல்வி முறை ஆதரவாளர்களுக்கும் இடையே (orientalists) கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. இவர்களிடையே ஆங்கில மரபாளர்கள் அரசாங்கத்தினிடமிருந்தும், சமயப் பரப்பாளர்களிடமிருந்தும் கற்றறிந்திருந்த ஒரு சில வகுப்பாரிடமிருந்தும் வலிவு மிக்க பேராதரவைப் பெற்றனர். எனவே, வில்ஸன், பிரின்ஸெப் போன்ற கீழ்த்திசைக் கல்வி முறை ஆதரவாளர்களின் வாதங்களும் முயற்சிகளும் தோல்வியைக் கண்டன. அதே நேரத்தில், இந்தியர்களும் கல்வி முறையில் ஒரு மாற்றம் தேவை என்பதை உணர்ந்தனர்; மாற்றத்தைப் பெரிதும் விரும்பினர். இந் நாட்டு மக்கள் பெற்றிருந்த இவ் வுணர்வை 1814ஆம் ஆண்டிலேயே ஹேஸ்டிங்ஸ் பிரபு தலைமை ஆளுநராக இருந்த பொழுது அறிந்திருந்தார். மேலும், 'சுதேசி மக்கள் (native people) ஆங்கிலத்தைக் கற்றறிந்து கொள்வதற்குப் பேரவாவினைக் கொண்டிருந்தனர்' என்பதையும் கண்டறிந்து அதைத் தம் மேலதிகாரிகளுக்கு அறிவித்தார். மேலும், இந்தியர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் பணித்துறையில் சேர்ந்து பயன்பாட்டைப் பெற வேண்டுமாயின் அவர்கள் ஆங்கில மொழியையும், அறிவையும் பெற்றிருக்க வேண்டியது மிக அவசியம் என்றும் கருதப்பட்டது. அவ் வியக்கத்திற்குப் பேருக்கத்தைக் கொடுத்து, கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கத்தில் பதவிகளையும், வேலைகளையும் பணி நிலைகளையும் இந்தியர்கள் பெறுவதற்குச் சம வாய்ப்புகளை உத்தரவாதம் செய்யும் வகையிலும் 1833-ல் இயற்றப்பட்ட பட்டயச் சட்டம் உயர்ந்த செயல் தூண்டுதலைக் கொடுத்தது.

ஒரு நாடு நல்லவர்களையும் வல்லவர்களையும் பெற்றிருக்க வேண்டுமாயின், அதன் அரசும் அரசாங்கமும் அவற்றின் வழியே வெளிப்படும் நிர்வாகமும் திறமையானவர்களால் நடத்தப்பட வேண்டுமாயின், அந் நாட்டில் ஏனையோரைக் காட்டிலும் ஆசிரியர்

களும், போதகர்களும் உயர் அந்தஸ்து நிலையில் வைக்கப்பட வேண்டும். இது வரலாறு ஏற்றுக்கொண்டுள்ள உண்மை நியதி; அரசியல் தத்துவம் நல்கியுள்ள பெரும்படிப்பினை. இதனை எவரும் மறுப்பதற்கில்லை. நம்மை ஆண்ட ஆங்கிலேயரும் இதனைப் புறக் கணிக்கவில்லை. எனவே, இங்கு ஆட்சிப் பொறுப்பையும், அதிகா ரத்தையும் கொண்டிருந்த ஆட்சியாளர்களைத் தவிர, இங்கிலாந்தி லிருந்த சார்லஸ் கிராண்ட் (Charles Grant), வில்லியம் வில்பர் ஃபோர்ஸ் (William Wilber Force) போன்ற செல்வந்தர்களும், செல் வாக்கும் அதிகாரமும் கொண்டிருந்த பலரும் இந்திய நாட்டின் சமூக சமுதாயக் கேடுகள் ஒழிய வேண்டுமாயின், அங்கு ஆசிரியர் களும் போதகர்களும் ஆற்றவேண்டிய பணி மிகப் பெரியதாக இருக்கவேண்டும் என்று உணர்ந்தனர். சார்லஸ் கிராண்ட் என்பவர் கம்பெனியின் மேலிடத்து இயக்குநர்கள் குழுவில் பெருஞ் செல்வாக்கு மிக்க உறுப்பினராய் இருந்தார். எனவே, இவர் கிழக் கிந்தியக் கம்பெனியின் கொள்கைக் கட்டளைகளைத் தீர்மானிக்கும் தலைமை இடத்தின் இயக்குநர்களைத் தமது கருத்திற்கும் சொல் லிற்கும் செவிமடுக்க வைத்துத் தம் இந்திய ஆட்சியாளர்கள் மூலம் தருந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செய்ததில் அரும் பணியாற்றினர். வில்லியம் வில்பர் ஃபோர்ஸ் கிறித்துவ மதப்பிர சாரப் பற்றுளராகவும் இருந்தார். இவ் விருவரும் அரச நிறுவனத் தால் 1833-லும், அதற்குப் பிறகும் புதுப்பிக்கப்பட்ட, பட்டயங் களின்கீழ் இங்கிலாந்து நாட்டிலிருந்து ஆசிரியர்களையும் போதகர் களையும் அரசாங்க ஆதரவுடன் இந்தியாவிற்குச் சென்று புதுக் கொள்கைகளையும் சமயச் சிறப்புச் செய்திகளையும், இன்னோரன்ன பலவற்றையும் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட அயராது உழைத்தனர். சட்டமுறையாகத் தேவையான வசதிகளும் அவர் களுக்குச் செய்து கொடுக்கப்பட்டன. இவற்றின்மூலம் இந்திய மக்களின் பழமைப் பற்றுகள் மற்றும் சம்பிரதாயப் பழக்கங்களில் தமது இயற்கையான வாழ்க்கை வழியைவிட்டுப் பயன் தரத்தக்க வகையில், பயனுறும் திட்டங்கள்மூலம், மாற்றம் பெறும்படியான செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக, வில்லியம் கேரி என்பவர் (William Carey) மேலை நாட்டுப் பாணியில் கல்கத்தா விற்கு வடக்கே பதினறு கல் தொலைவிலுள்ள செராம்பூர் என்னும் இடத்தில் பெரியதொரு கல்வி நிலையத்தை அமைத்தார். இராசா ராம் மோகன்ராய், வங்கத்தில் தலைமை நீதிபதியாய் இருந்த சர் ஹைடு ஈஸ்ட் (Sir Hyde East) ஆகியோரது ஒத்துழைப்புடன் டேவிட் ஹேர் (David Hare) என்பவர் கல்கத்தாவில் பெரிய தொரு வித்தியாலயத்தை ஸ்தாபித்தார். இவ் வித்தியாலயமே பின்னர்க் கல்கத்தாவின் மாநிலக் கல்லூரியாக மலர்ந்தது. டேவிட் ஹேர் மேலை நாட்டுக் கல்விமுறையைச் சமயச் சார்பற்ற (secular)

தன்மையுடன் பெரிதும் பரப்பினுர். இதற்கு இராசாராம் மோகன்ராய் தமது நல்லாதரவைப் பெரிதும் நல்கினுர்.

மேற்சொன்ன செய்திகளுக்கு ஏற்பச் சீர்த்திருத்தச் செயல்கள் பல மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த பொழுது, 1829ஆம் ஆண்டில், கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை இடத்து நிர்வாகத்தினரும், இந்திய அரசாங்கத்தினரும் புதிய கல்விமுறை இந்நாட்டில் ஆணித்தரமாக வேரூன்றவேண்டும் என்று முடிவு எடுத்தனர். 1829ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினெட்டாம் நாளன்று கம்பெனியின் இயக்குநர்கள் ஐரோப்பிய இலக்கியம் மற்றும் அறிவியல் கலைகளில் இந்தியர்கள் படிப்பும் பாண்டியத்தியமும் பெற்றேயாகவேண்டும் என்ற தமது பெருவிழைவைக் கம்பெனியின் பம்பாய் அரசாங்கத்திற்கு எழுதினர். அதற்கான கல்விச் சாதனங்கள் இந்தியர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் எடுத்தியம்பி இருந்தனர். இவற்றின்மூலம் கம்பெனியின் இந்தியச் சிவில் அரசாங்கத்தில் உயர்பதவிகளைச் சுதேசி மக்கள் பெறுவதற்கான தகுதிகளை அவர்கள் பெறமுடியும் என்றும் எடுத்துக்காட்டி யிருந்தனர். வில்லியம் பெண்டிங்க் தலைமை ஆளுநராக இருந்த பொழுது 1835ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் ஏழாம் நாளன்று தமது சுருக்கக் குறிப்புரையில் (minute), 'பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தினர் ஐரோப்பிய இலக்கியத்தையும், அறிவியலையும் சுதேசிக் குடியினரிடம் தேர்ச்சியுறச் செய்வதைக் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். மேலும், கல்விச் செயல் நோக்கங்களுக்காக ஒதுக்கிவைக்கப்படும் நிதிகள் யாவும் ஆங்கிலக் கல்வி ஒன்றுக்கு மட்டும் நன்முறையில் செலவிடப்படவேண்டும்' என்ற செய்தியைத் தெரிவித்திருந்தார். மேற்கூறியவாறு தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங்க் தமது அரசாங்கத்தின் உறுதிப்பாடான குறிக்கோளை (objective) அறிவித்திருந்த அதே சமயத்தில், மெக்காலே தமது சுருக்கக் குறிப்புரையில் மேலை நாட்டுக் கல்வி முறை இந்திய நாட்டில் புகுத்தப்படுவதற்கு உகந்ததன்று என்று குறித்திருந்தார். இதனுல் சிறு சலசலப்பு ஏற்பட்டது. எனினும், அவர் மேலை நாட்டுக் கல்வி முறையையும் ஆங்கில மொழியின் அத்தியாவசித்தையும் எடுத்துரைக்கத் தவறவில்லை. இந்திய மொழிகள் பலவற்றின் இலக்கியச் செல்வங்கள். சிறப்புகள், ஆகியவைபற்றியும், இந்தியக் கலாசாரத்தைப்பற்றியும் ஏதும் அறிந்திராததாலேயே மேற்கண்ட சர்ச்சைக்கு இலக்கான கருத்தை மெக்காலே அறிவித்திருந்தார். மெக்காலே போன்றவர்கள் இந்தியமொழி, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றைப் பற்றி, ஏளனக் கருத்துகளைக் கூறியிருந்ததும், அரைகுறையான

கல்வித்தரம் கொண்டிருந்த மத நிறுவனங்களின் செயல்களும் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தைத் தான் மேற்கொள்ள வேண்டிய கல்வி பற்றிய கொள்கையைத் தீர்மானித்து முடிவெடுக்கத் தூண்டின. தான் எடுத்த கொள்கை முடிவின்படி பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் இளநிலை முதல் பல்கலைக் கழகப் பட்டப் படிப்பு வரை ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக விளங்கும் படிசெய்தது. இதனால் ஆங்கில மொழியில் தேர்ச்சியான அறிவைப் பெறுவது கம்பெனியின் இந்தியப் பணித்துறையில் நுழைந்து வெற்றி வாய்ப்பைப் பெருக்கிக்கொள்வதற்கான அனுமதிச் சீட்டாகக் கருதப்பட்டது. இவற்றின் பயனாகவும் ஈர்ப்பின் காரணமாகவும் கம்பெனியின் அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளினாலும் 1857-ல் இலண்டன் பல்கலைக்கழகத்தின் அமைப்பையொட்டி சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. இவ்வாறு நம் நாட்டுத் தேவைகளுக்கும், மரபுகளுக்கும் முரண்பட்ட வகையில் அமைந்த மேலை நாட்டுக் கல்விமுறை முழுமூச்சுடன் புகுத்தப்பட்ட செயல் ஆரம்பத்தில் இந்நாட்டு மக்களால் வரவேற்கப்படவில்லையாயினும், கல்வித்தரமும், கல்வி வளர்ச்சியும் சீரான வழியில் முன்னேறிச் செல்ல இது வழிவகுத்தது. இதிலிருந்த ஒரு குறை யாதெனின் இந்திய மக்களின் மனத்தையும் உணர்வையும் சரியாக அறிந்து கொள்ளாமலும், புரிந்துகொள்ளாமலும் புதிய கல்வி முறையை அவர்கள் அவசரத்துடன் திணித்ததேயாகும். மேலை நாட்டு முறையோடு கீழை நாட்டுத் தேவைகளையும் சூழ்நிலைகளையும் கூர்ந்து ஆராய்ந்து அதற்கேற்ப ஒரு புதிய கல்வி முறையை வகுத்துப் புகுத்தியிருந்தால், கம்பெனியினரின் ஆட்சிப் பயனாய் இந்தியர்கள் பெற்ற கல்வி முறையில் பல குறைபாடுகள் இருந்ததைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், அத்தகைய முயற்சியைக் கம்பெனியின் அரசாங்கம் ஏனோ மேற்கொள்ளவில்லை, மாறாக, கீழை நாட்டு முறைக்கு முக்கியத்துவம் கொடுக்காது தமது மேலை நாட்டு முறையையே ஆங்கிலேயர் பரப்பினர்.

குறைபாடுகள் எத் தன்மையைக் கொண்டிருந்த போதிலும், எதிர்ப்புகள் எப்படியிருந்த போதிலும் ஆங்கிலேயரின் கம்பெனி அரசாங்கத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட மேலை நாட்டுக் கல்வி முறையானது, இந்திய மக்களிடையே தேசிய ஒற்றுமை உணர்வு வளர்வதற்குப் பேருதவி புரிந்தது. இக் கல்வி முறையின் மூலம் உலக விவகாரங்களில் இந்திய நாடும் மக்களும் இடம் பெறும் பயனும் கிடைத்தது. இதனை நாம் நன்றிப் பெருக்குடன் ஏற்றுக் கொண்டே யாகவேண்டும். இந் நாட்டு அறிஞர்கள் ஆங்கில மொழியைக் கற்றுணர்ந்து, அதன்மூலம் மக்களிடையே ஒற்றுமை

யையும் விழிப்புணர்ச்சியையும் நன்முறையில் வளர்க்க ஆரம்பித்தனர். தமது தாய்த் திருநாட்டைப்பற்றிய பேராவல்களையும், நாட்ட விழைவுகளையும், புது இலட்சியங்களையும் (ideals) பற்றி மக்கள் சிந்திக்க ஆரம்பித்தனர். இவர்கள் மக்கள் உரிமையை மாண்புடன் எடுத்துரைக்கும் ஐரோப்பியப் புரட்சி இலக்கியங்களை ஆவலுடன் படித்து, மனித குணநலன்களின் புனிதத்தன்மையை மக்களிடையே பரப்பினர். மேலும், அராசகம் மற்றும் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக மக்கள் திரண்டெழுந்து புரட்சி செய்ய வேண்டியதின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும்பற்றி மக்களுக்குப் போதிக்கலாயினர். 19ஆம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில் அறிவுசால் இந்தியப் பெருந்தகைகளின் கவனத்தை ஈர்த்தது பயன்பாட்டுத் தத்துவ ஞானியான[1] J. S. மில் என்பவரின் இலக்கியங்களாகும். இவரது தத்துவத்தின்படி ஒரு நாட்டில் அமைக்கப்படும் அரசாங்கம் மக்களின் அரசாங்கமாக இருந்தால்தான் அது பெயர்ச் சிறப்பையும், பொருள் சிறப்பையும் கொள்ளமுடியும் என்பதும், ஒன்றுபட்ட ஒரு மக்களின் அரசாங்கத்தின்மீது மற்றொருவர் அல்லது அந்நியர் ஆதிக்கம் செலுத்தும் நிலை இருக்குமாயின் அஃது உண்மையான மக்கள்அரசாங்கமாக இருக்காது என்பதும் புனிதத்தன்மை வாய்ந்த அரசியல் கோட்பாடுகளாக இந்திய அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்திய மக்களின், குறிப்பாக அறிஞர்களின் மனத்தைக் கவர்ந்த பெருமை ரூசோ, ஜெரிமி பெந்தாம், மாண்டெஸ்கோ ஆகியோரின் அரசியல் இலக்கியப் படைப்புகளைச் சாரும். 'கொடுங்கோல் ஆட்சிக்கு நேர் எதிரிடையானதே சுதந்திரம்' என்னும் மாண்டெஸ்கோவின் கருத்தும், 'கொடுங்கோலாட்சியின் வேர்கள் அறுத்து ஒழிக்கப்படவேண்டும்' என்ற ரூசோவின் புரட்சி உரையும், 'சட்டம் மற்றும் சட்டம் இயற்றுவோரின் முயற்சியும் குறிக்கோளும் மக்களின் நலனையே அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்' என்ற பெந்தாமின் கருத்துரையும் இந்திய அறிஞர்களால் வரவேற்கப்பட்டு அவற்றின் அடிப்படையிலேயே, மக்களின் நடவடிக்கைகள் அமையவேண்டும் என்று அவர்கள் எண்ணிச் செயல்பட ஆரம்பித்தனர். இவ்வாறு மேனாட்டுக் கல்வி முறை, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கத்தால் இந் நாட்டில் பின்பற்றப்பட்டதால் புதியதொரு மலர்ச்சியும் வளர்ச்சியும் தோன்றின.

மேலைநாட்டுக் கல்விமுறை இந் நாட்டில் அறிமுகப்படுத்தப் பட்டதால் தோன்றிய மலர்ச்சி பெரிதும் விரிவடையக் காரணமாய் இருந்தது அச்சுக் கூடங்களும், செய்தித்தாள்களும் நிறுவப்பட்ட

[1] Utilitarian Philosopher.

தாகும். அச்சுச் சாதனங்களின் பயனுய்ப் பெரிய அளவில் நூல்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதால் இதுகாறும் ஒரு சிலரே பெறக்கூடிய அரும்பொருளாய் இருந்த கல்வியும் எழுதிப் படிக்கக் கூடிய ஆற்றலும் பெரும்பாலோர் பெறக்கூடிய பலனுக அமைய ஆரம்பித்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரின் முற்றுரிமைப் பொருளாக இருந்த கல்வி, பெரும்பாலான மக்கள் பகிர்ந்து கொள்ளக்கூடிய நற்பொருளாக மாறத் தொடங்கிற்று. தமது அறிவை விசாலமாக்கிக்கொள்ள இந்தியர்கள் என்றுமே பின் வாங்கியதில்லை. எனவே, பெரும்பாலான மக்களின் மத்தியில் கல்வித்தாய் களிநடம் புரிய ஆரம்பித்தாள். போர்வாளை விடப் பேனமுனை சக்திவாய்ந்தது என்பது பழமொழி. அது பெருமளவில் இந்தியாவில் 19ஆம் நூற்றுண்டிலேயே மெய்ப்பிக்கப்பட்டது. எனவே, அச்சுச் சாதனங்கள், செய்தித்தாள்கள் ஆகியவற்றின் மூலம் மக்கள் புதியதொரு சக்தியைப் பெற்று, செவ்வனே சிந்தித்துச் செயல்படக்கூடிய நிலை தோன்றிற்று. இவற்றல் அறிவு பல வழிகளில் பலரால் விசாலமாக்கிக் கொள்ளப்பட்டதோடு, அவ் வறிவு மக்களைப் புதிய சமூக அரசியல் தூண்டுதல்களையும், நாட்ட விழைவுகளையும் பெறும்படி ஊக்குவித்தது. புதிய சமுதாய, அரசியல் அறிவையும் நோக்கையும் பெருக்கிக்கொள் வதற்குச் செய்தித்தாள்கள் துணைபுரிந்ததோடன்றி, இந் நாட்டைப் பற்றிய செய்திகள் யாவற்றையும் அவை வெளியிட்டு, மக்களது சிந்தையும் செயலும் பக்குவப்படுவதற்குப் பேருதவி புரிந்தன.

அச்சுச் சாதனங்களும் செய்தித்தாள்களும் இந் நாட்டு மக்களின் அரசியல் அறிவும் பொது அறிவும், பக்குவப்பட்டு விரிவடைவதற்குப் 'பேருதவி புரிந்த போதிலும், அவை மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருந்தன. கம்பெனியின் அரசாங்கம், பத்திரிகைச் சுதந்திரத்தைக் குறுகிய எல்லைக்குள் செயல்படும்படியாக வைத்திருந்தது. மன்ரோ, எல்பின்ஸ்டன் போன்ற பெருமதி ஆட்சிப் பெருந்தகைகள்கூடச் செய்தி, பத்திரிகைச் சுதந்திரத்தை கட்டுப்பாடற்ற நிலையில் பேண வேண்டும் என்று கருதவில்லை. ஆனல், மெட்காஃப் என்பவர் இதற்கு விதிவிலக்காய் இருந்தார். இவர் இந்தியச் செய்தி, பத்திரிகைத் துறைகள் கொடுங்கோன்மையான ஒழுங்கு விதிமுறை களுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததை ஒரு சிறிதும் விரும்பவில்லை. இவர் தமது ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்ளவேண்டிய வாய்ப்பைப் பெற்றவுடன், 1835ஆம் ஆண்டில் கொடுங் கோன்மைக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகளினின்று செய்திப் பத்திரிகைத் துறையை விடுவித்தார். இவரது அரும்பணியின் காரணமாகச் செய்தித்தாள்கள் எல்லாச் செய்திகளையும் தயக்க

மின்றி வெளியிட்டதோடு, பல பொருள்கள்மீது கருத்துரைகளைத் (comment) தாங்கியவண்ணம் எளிமையாகவும், சுதந்திரமாகவும் விநியோகிக்கப்பட்டு, மக்கள் கைகளில் புரண்டு தவழக்கூடிய நல்வாய்ப்பைப் பெற்றன. மெட்காஃப் அவர்களின் மேன்மையான இச் செயல் நம் நாட்டின் அரசியல் வரலாற்றில் பெரு முக்கியத்துவத்தை ஏற்படுத்திக் கொடுத்ததென்றால், அது மிகையாகாது. ஒரு நாட்டின் அரசாங்கம் நல்ல முறையில் செயல்படவேண்டுமென்றால், அது நாட்டு மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பளித்து, அவர்களின் பொதுக் கருத்தை (public opinion) உருவாக்குவதோடு, அதன் செல்வாக்கிற்கும் அக்கறைக்கும் உட்பட்டிருக்க வேண்டும். இச் சிறப்பான பணிகளைச் சுதந்திரமாகச் செயல்படும் செய்தித்தாள்களே முனைப்புடன் ஆற்ற முடியும். இதனைச் சில ஆங்கிலேயரும் உணர்ந்திருந்தனர்; மெட்காஃப் போன்றோர் மதித்துக் காக்கவும் செய்தனர். எனவே, தம்மைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்த மக்கள் இந் நாட்டைப்பற்றிய, இந் நாட்டு நடப்பு விவகாரங்களைப்பற்றிய செய்திகள் பலவற்றையும் படித்துச் சிந்தித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்வதற்கான வாய்ப்புகள் பலவாய்ப் பெருகின. செய்தித்தாள்கள் மக்களது எண்ணத்தையும், கருத்துகளையும் சீரான வழிகளில் உருவாக்கித் திரட்டி, அவற்றை இந் நாட்டையே அக்கறைக்கு உள்ளாக்கும் வலிவுள்ள ஒரு சாதனமாக ஆக்கிக் கொடுத்ததால், தேசீய ஒருமைப்பாடு உறுதிப்படுவதற்கு அவை உதவின.

தன்னுறுதியுடன் செயலாற்றும் இயல்பையும், ஆங்கிலத்தில் தெளிவாகப் பேசக்கூடிய ஆற்றலையும் இந்திய மக்கள் பெறுவதற்கான சாதனங்களையும், அச்சு மற்றும் செய்தித்தாள்களின்மூலம் இந் நாட்டு மக்களுக்குக் கொடுத்த பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் தனது அறிவும், ஆற்றலும் மிக்க பணியாளர்கள்மூலம் இந் நாட்டின் பழங்காலக் கலாசாரப் பண்புகள் மறுமலர்ச்சி பெறுவதற்கும் துணைபுரிந்தது. பிரிட்டிஷ்காரர்கள் இந் நாட்டிற்கு வருவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, இந் நாடு உலகின் மற்ற நாடுகளால் அறியப்பட்ட நாடாகவே இருந்தது. இந் நாட்டின் கலாசாரம், பண்பாடு போன்றவை பழங்காலக் கிரேக்க உரோமானிய நாடுகள்வரை பரவியே இருந்தது. ஆனால், பின்னர் அந்நியப் படையெடுப்புகளுக்கும் வேறு பல இன்னல்களுக்கும் ஆளான காரணத்தால் இந் நாட்டின் கலாசாரம், பண்பாடு, இலக்கியம் போன்ற அருஞ்செல்வங்கள் மங்கி மறைந்திருந்தன. பிற நாடுகளோடு ஒட்டி வாழமுடியாமல், எட்டித் தனிமையாக இருக்கவேண்டிய நிலை இந்திய நாட்டிற்கு இடைக் காலத்தில் இருந்ததால் இந் நாட்டின் மொழி, மக்கள், கலாசாரம்,

இலக்கியம் போன்றவைமீது தவறானதும் அருவருக்கத் தக்கதுமான கருத்துக் கோட்பாடுகளை அந்நியர் கொண்டிருந்தனர். இத்தகைய தவறான கருத்துகளை அந்நியர் மனத்திலிருந்து அகற்றும் அரும் பணியை வில்லியம் ஜோன்ஸ், சார்லஸ் வில்கின்ஸ், ஹென்றி தாமஸ் கோல்ப்ருக், நாதேனியல் ஹால் கெட், H. H. வில்ஸன் போன்றோர் ஏற்றனர். இவர்கள் அந்நியர்களே ஆயினும் இந் நாட்டின் மொழி, இலக்கியம் போன்றவற்றை, இந் நாட்டின் அறிஞர்களே தமது புருவங்களை உயர்த்தும்படியாகப் படித்துப் பாண்டித்தியம் பெற்றனர். சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் ஒரு மொழி வல்லுநர்; மாமேதை. இவர் இந் நாட்டின் முதல்தரமான இலக்கிய நலம் வாய்ந்ததாக அன்று இருந்த சமஸ்கிருத மொழியைப் படித்துப் பாண்டித்தியம் பெற்றார்; சாகுந்தலம் போன்ற சமஸ்கிருத இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும் அரும்பணி ஆற்றினார். இந்திய நாட்டின் பழமை நாகரிகத்தை நிறுவன அடிப்படையில் படிப்பிக்கும்பொருட்டு 1784ஆம் ஆண்டிலேயே வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆதரவுடனும், வில்கின்ஸ் ஹால் கெட் போன்றோரது ஒத்துழைப்புடனும் 'ஆசியக் கழகம்' (Asiatic Society) என்னும் நிறுவனத்தை ஸ்தாபித்தார். வில்லியம் ஜோன்ஸ் மொழி வல்லுநராக மட்டுமன்றி, ஒரு திறமை வாய்ந்த சட்ட வல்லுநராகவும் இருந்தார்; சட்ட நூல்கள் பலவற்றையும் இந் நாட்டினருக்கு எழுதிக் கொடுத்தார்.

சர் வில்லியம் ஜோன்ஸைப் போலவே சர் சார்லஸ் வில்கின்ஸ், ஹென்றி கோல்ப்ருக், வில்ஸன் போன்றோர் இத் துறையில் அரும் பணி ஆற்றினர். சமஸ்கிருத மொழியின்மீது மையல்கொண்டு பித்துப்பிடித்த நிலையை அடைந்தவர் சர் சார்லஸ் வில்கின்ஸ் என்னும் அறிவுப் பெருந்தகையாவார். இவரது உதவியின்றித் தாம் சமஸ்கிருத மொழியைக் கற்றறிந்திருக்க முடியாது என்று வெளிப்படையாக சர் வில்லியம் ஜோன்ஸ் கூறினார். இத்தகைய ஆற்றலும் சிறப்பும் பெற்றிருந்த சர் சார்லஸ் வில்கின்ஸ் பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இதற்கு அருமை யான ஒரு முகவுரையை வாரன் ஹேஸ்டிங்ஸ் எழுதிக்கொடுத்தார். அரசியல் மற்றும் ஆட்சிச் செயல்களில் வாரன் ஹேஸ்டிங்ஸ் எப்படிப்பட்டவராக இருந்தபோதிலும், இந்திய நாட்டின் உண்மையான பெருமையையும் புகழையும் அதன் மொழி மற்றும் கலாசாரச் சிறப்பையும் மூடி மறைக்கும் பணியில் அவர் ஈடுபட வில்லை. 'கடமையை ஆற்று; விளைவைப்பற்றிச் சிந்திக்காதே' என்னும் தாரக மந்திரங்கள் பலவற்றைக் கொண்டுள்ள பகவத் கீதையின் சிறப்பையும், புகழையும் வாரன் ஹேஸ்டிங்ஸ் உணர்ந் திருந்ததைப்போல், வேறெந்த அந்நியரும் உணர்ந்து வெளிப்

படுத்தி யிருப்பாரா என்பது ஐயமே. இந் நாட்டின் தொன்மை இலக்கியச் செல்வங்களான வேதங்களைப்பற்றிப் பல கட்டுரைகளை ஆங்கில மொழியில் எழுதிய பெருமை ஹென்றி கோல்ப்ரூக்கைச் சாரும். இவர் இந்துச் சட்டத்தை (Hindu law) மூலத்திலிருந்து அதிகாரபூர்வமான முறையில் நம்பத் தத்க வகையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். நாதேனியல் ஹால்கெட் என்பவரும் இந்துச் சட்டத் தொகுப்பைப் பெர்ஷிய மூலத்திலிருந்து மொழி பெயர்த்திருந்தார். மேலும், இவர் சமஸ்கிருதம், பாரசீகம், அராபியம், லத்தீன், கிரேக்க மொழிகளின் சொற்களுக்கு இடையே இன உறவை ஏற்படுத்தி வெளிப்படுத்தினர். இவரது முயற்சியே தற்காலக் கலை, இலக்கியப் பற்றுர்வத்திற்கும், மொழி நூல் வளர்ச்சிக்கும் (philology) ஆர்வத் தூண்டுதலைக் கொடுத்துள்ளது. இத்தகைய ஆராய்ச்சிகள் ஆங்கிலேயர் மட்டுமன்றி ஃபிரெஞ்சுக்காரர்கள் முதலான பிற அந்நிய அறிஞர்கள் பலராலும் மேற்கொள்ளப்பட்டன. வில்ஸன் என்னும் அறிஞரும் இலக்கிய இலக்கணம் போன்றவற்றில் பாண்டித்தியம் பெற்று, அருமையான படைப்புகளை உருவாக்கினர்; சமஸ்கிருதத்தை மட்டுமன்றித் தமிழ், வங்க மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் படித்துப் பாண்டித்தியம் பெற்று அவைகளைப் பிற அந்நிய மொழிகளில் மொழி பெயர்த்தார். கால்டுவெல், டாக்டர் G. U. போப், ராபர்ட்-டி-நோபிளி, சீகன் பால்கு, கிரால் போன்ற பெருந்தகைகள் தமிழ்மொழிக்கும் இலக்கியத்திற்கும் ஆற்றிய தொண்டை எண்ணிப் பார்க்கும்பொழுது அந்நியர்கள் இந் நாட்டின் மொழி, இலக்கியம் போன்ற பலவற்றின் பாரம்பரியச் சிறப்பை எப்படிப் பாதுகாத்துத் தேர்ச்சியுறச் செய்தனர் என்பதும், தமது அருந் தொண்டின்மூலம் இந் நாட்டின் தொன்மைச் சிறப்பையும், பெருமையையும் உலகறியச் செய்யக் காரணமாய் இருந்தனர் என்பதும் அங்கைச் செங்கனியாய் நமக்கு விளங்குகின்றன. இவற்றல் இந்திய நாட்டிற்கும், மேலை நாடுகளுக்கும் மொழியின் காரணமாகச் சீரான உறவு ஒன்று ஏற்பட்டது.

இதுகாறும் சொல்லப்பட்ட செய்திகளைத் தழுவிய அந்நியரின் தொண்டின் காரணமாக 18ஆம் நூற்றுண்டின் முடிவில் இந்தியச் சிந்தனையைப்பற்றி அறிந்திருக்கும் இனிய நிலையை ஐரோப்பாக் கண்டம் பெற்றது. இந்தியாவைப்பற்றி ஐரோப்பியர்கள் நன் முறையில் அறிந்துகொள்வதற்கு அந்நியர் ஆற்றிய தொண்டும், அதனல் நாம் பெற்ற பலன்களும் அளவிட முடியாதவை. ஜெர்மானியர்கள் உள்பட ஐரோப்பியர்கள் பலரும் இந்திய மொழிகளிலும், இலக்கியங்களிலும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இந் நாட்டுத் தத்துவங்களின் சிறப்பை உலகறியச் செய்தனர்.

அந்நியர்கள் தத்தம் நாடுகளில் இந்திய மொழிகளில் தலை சிறந்து விளங்கிய சமஸ்கிருதப் பாடங்களில் அக்கறையையும், ஆவலையும் கொள்ளுமாறு செய்யப்பட்டனர்.

இங்கிலாந்து நாட்டில் மக்களைச் சமஸ்கிருத படிப்புகளில் அக்கறையும் ஆவலும் கொள்ளுமாறு தூண்டியவர் அறிவுசால் பேராசிரியர் மாக்ஸ்முல்லர் ஆவார். இவர் ஐம்பது தொகுதிகளைக் கொண்ட கீழை நாடுகளைப்பற்றிய புனிதப் புத்தகங்களைப் பிரசுரித்து அவற்றின்மூலம் இந்திய வேதங்கள், தத்துவங்கள், நாகரிகம் போன்றவற்றின் சிறப்பை வெளிப்படுத்தினர். இவர் இருக்கு வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தார். இத்தகைய அருஞ்செயல்களை அமெரிக்க நாட்டிலும் கூட எமர்ஸன், விட்டியர், தோரோ போன்றோர் மேற்கொண்டனர். இவர்தம் செயல்கள் இந்து மதம் மட்டுமன்றிப் புத்த, ஜைன மதங்களின் சமய இலக்கியங்களில் பொதிந்துள்ள தத்துவங்களையும் சீர்மிகு கருத்துகளையும் மேலைநாட்டு உலகம் அறிந்து, சிந்தித்து, உலக அறிவு செழுமையாகி விரிவடைய உயர்துணை புரிந்தன. மேலைநாட்டு மொழிகளில் பிரம்மா, குரு, கர்மா, மகாத்மா, நிர்வாணு, ஸ்வாமி, வேதாந்தா, யோகா போன்ற எண்ணிறந்த சொற்கள் ஆளப்பட்டன. இப்படிச் சொல்லாட்சிப் பெருக்கத்தை அந்நிய மொழிகளுக்கும் கொடுக்கக்கூடிய வகையில் இந்திய இலக்கியங்களில் மேல் நாட்டவர்கள் செய்த ஆராய்ச்சி எல்லோருக்கும் நன்மை பயப்பதாய் இருந்தது. இவற்றல் மேலை நாட்டு அறிஞர்களும் சிந்தனைச் சிற்பிகளும் தாம் எவ்வளவுதான் அறிவியல் சாதனைகள்மூலம் புகழைப் பெற்றிருந்தாலும் அவற்றின் மூலம் கீழை நாட்டு இலக்கிய அறிவை அழுத்திவிட முடியாது என்பதை முற்றிலும் உணர்ந்தனர். இத்தகைய உணர்வே வெகு விரைவில் இந்தியாவை உலக அரங்கில் உரியதோர் உயர்ந்த இடத்தைப் பெறும்படி செய்தது.

கம்பெனி அரசாங்கத்தால் விளைந்த கெடுதல்கள்

ஆனல், இதுவரை கூறப்பட்ட செய்திகள் யாவும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களில் ஒரு பக்கத்தைப்பற்றிய நல்ல செய்திகளாகும். அதே நேரத்தில் அதன் மறுபக்கம் தீமைகளைக் கொண்டதாய் இருந்தது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின் காரணமாக இந் நாட்டின் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் இருந்ததா என்றல், இல்லை என்றுதான் கூற வேண்டும். இந் நாடு பிரிட்டனின் அரசியல் இறைமைக்கு ஆட்படுத்தப்பட்டதின் பயனக நமது பொருளாதார அக்கறைகள் மதிப்பிட முடியாத இன்னலுக்கும் சுரண்டலுக்கும் ஆளாக்கப்

பட்டன. இந் நாட்டின் வரலாற்றில், முதன் முதலாக இந்தியா ஒரு காலனியாக அல்லது குடியேற்ற நாடாகப் பயன்படுத்தப் பட்டது ஈடற்ற ஒரு பெருங்குறையாக இருந்தது. இந் நாட்டின் வறுமையையும் ஏழ்மையையும் தடுத்து நிறுத்தாமல், நமது இயற்கை வளங்கள் பலவற்றை அந்நிய நாடும் மக்களும் நுகர்ந்து கொழிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டன. பசி, பட்டினி, பஞ்சம் போன்ற வறுமைத் துன்பங்களில் இந் நாட்டு மக்கள் உழன்று கொண்டிருந்ததை உதாசீனம் செய்து இங்கு ஆளவந்தோர், தாம் ஆண்ட காலம் எவ்வளவு குறுகியதாக இருந்தபோதிலும், செல்வங்களையும் சொத்துகளையும் முடிந்த அளவிற்கு எடுத்துச் சென்றனர். அவர்கள் இந்தியாவைச் செல்வக் களஞ்சியம் என்று கருதித் தமக்கு மட்டுமன்றி, அவர்கள் அமைத்துக் கொடுத்த அரசாங்கம் மற்றும் ஆட்சி நிறுவனங்களை நடத்தத் தேவையான செல்வங்களையும் இங்கிருந்தே பெற்றனர். வெல்லெஸ்லி பிரபு தலைமை ஆளுநராக இருந்தபோது, தமது கம்பெனியின் அரசாங்க அதிகாரிகள் இங்குப் பணியாற்றிய காலத்தில், செல்வங்களைச் சேகரித்துக் கொள்வதற்குத் தேவை யான சாதனங்கள் யாவும் செய்து கொடுக்கப்படவேண்டும் என்றும், அவ்வாறு சேர்த்த செல்வங்களையும் பொருள்களையும் தமது பணிக்காலம் முடிந்தவுடன் தமது தாய் நாட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும் என்றும் கொள்கையை வகுத்து மேற்கொண்ட செயல் இந் நாட்டின் செல்வங்கள் அந்நியரான ஆங்கிலேயரால் எவ்வாறு சூறையாடப்பட்டன என்பதையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய அனுமதி கம்பெனியின் ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது பதிவு செய்யப்பட்ட நிலையில் இருக்கவில்லையென்றாலும், அது நடைமுறையில் இருந்த கம்பெனியின் கொள்கையாக இருந்தது. எனவேதான், 3½ ஆண்டுக் கால இந்தியப் பணிக்குப் பிறகு தமது தாய்நாடு திரும்பிய மெக்காலே என்பவர் 25,000 பவுன்களுக்கு ஈடான செல்வத்தை இங்கிலாந்துக்கு எடுத்துச்செல்ல முடிந்தது. இந் நாட்டின் செல்வம் ஆதாயக் கொள்ளைப் பொருள்களாக ஆங்கிலேயரால் அனுபவிக்கப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டதை உறுதிப்படுத்தும் வகையில் பின்வரும் செய்திகளையும் எடுத்துக் கூறலாம்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் தலைமை ஆளுநராக இருந்த சமயத்தில் தமது ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களில் மக்களுக்கு நன்மையைச் செய்யக்கூடிய பேருள்ளத்தைப் பெற்றிருந்தார். இவருக்கு இந் நாட்டின் செல் வத்தை வேட்டையாடிச் சூறையாடவேண்டும் என்ற வேட்கை

இருக்கவில்லை. ஆனால், கம்பெனியின் அரசாங்கத்தில் பணியாற்றிய இவரது சகாக்களான பார்வெல், ஃபிரான்சிஸ், கல்கத்தா நீதி மன்றத்தின் உச்ச நீதிபதியாக இருந்த எலிஜா இம்பே ஆகியோர் அடித்த கொள்ளைக்கு அளவே இல்லை எனலாம். தமது ஆறுண்டுக் காலப் பணிவாழ்வில் பார்வெல் சேர்த்த செல்வத்தின் மதிப்பு 80,000 பவுன்களாக மதிப்பிடப்படுகிறது. ஃபிரான்சிஸும் ஏறத்தாழ அதே அளவிற்கான செல்வத்தைச் சம்பாதித்தார். இச் செல்வம் அவர்கள் இந் நாட்டை விட்டுச் சென்றபொழுது எடுத்துச் செல்லப்பட்டதாகும். அவர்கள் இருவரும் பெருஞ் சூதாடிகள்; குடியர்கள். ஒரே சமயத்தில் 40,000 பவுன்களை இழக்கக்கூடிய வகையில் பார்வெலும், 20,000 பவுன்களை ஒரே ஆட்டத்தில் இழக்கக்கூடிய வகையில் ஃபிரான்சிஸும் பெருஞ் சூதாடிகளாக இருந்தனர். இப்படிச் சூதாட்டங்களிலும், களியாட்டங்களிலும் அவர்கள் இழந்ததுபோக, எஞ்சியிருந்த சேமிப்புச் செல்வத்தையே மேற்சொல்லப்பட்ட அளவிற்கு எடுத்துச் சென்றார்கள் என்றால், அவர்கள் எவ்வளவு பணத்தையும் செல்வத்தையும் இந் நாட்டில் சம்பாதித்திருப்பார்கள் என்பதை எண்ணிப்பார்க்க முடியவில்லை. ஆனால், அவர்களையெல்லாம் கோடீஸ்வரர்களாக்கக் கூடிய நிலையில் இந் நாட்டின் நிதி மற்றும் பொருளாதார வசதிகளும் வளங்களும் செழித்திருந்தன என்பதை மட்டும் நம்மால் எண்ணிப்பார்க்க முடிகிறது; அவர்களை மன்னிக்க முடியாத மனப்போக்கை நாம் பெறுவதையும் உணரமுடிகிறது. எலிஜா இம்பே வாரன் ஹேஸ்டிங்ஸின் பள்ளித்தோழரும், ஆத்ம நண்பரும் ஆவார். இவர் கல்கத்தா நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தபொழுது வாரன் ஹேஸ்டிங்ஸைத் திருப்திப் படுத்தும் வகையில், மகாராஜா நந்தகுமாரைத் தூக்குத் தண்டனைக்கு உள்ளாக்கிய அநியாயக் கொடுமைக்கும், நீதி கொலைபாதகத்திற்கும் காரணமாக இருந்தவர். சர் ஜேம்ஸ் ஸ்டிபன் என்பவர் கூறுவதுபோல், 'எலிஜா இம்பே எவராலும் மதிக்கத்தகாத அருவருப்பான மனிதருள் ஒருவராய்த் திகழ்ந்தார்'. நீதியை நிலைநாட்ட வேண்டிய இவர் நீதிநெறிமுறை யற்ற வழி களில் காண்ட்ராக்ட் ஒப்பந்தத்தைப் பர்த்வான் மாவட்டத்தி லிருந்து பெற்றுப் பெரும் பொருள் சேர்த்தார். பிகாட் (Pigot) என்பவர் சென்னை இராசதானியின் கவர்னராய் 1774-ல் இருந்தார். இவர் கர்நாடக நவாபிடமிருந்து இலஞ்சம் அல்லது கையூட்டாக 1,200,000 பவுன்களைப் பெற்றார் என்று டென்னிஸ் கின்கெயிட் (Dennis Kincaid) என்பவர், 'இந்தியாவில் பிரிட்டிஷாரின் சமுதாய வாழ்க்கை' என்னும் நூலில் குறித்துள்ளார். இவரைப் போலவே, வெளித்தோற்றத்தில் நல்லவராய்க் காட்சி யளித்த வின்ச் எனும் அதிகாரி இருநூறு ஆயிரம் பவுன்களை இலஞ்

சமாகப் பெற்ருர். இப்படி இராபர்ட் கிளைவ், பென்பீல்ட் போன்ரேர்களையும் உள்ளிட்ட ஆங்கிலேய அதிகாரிகள் பலரும் இந்திய மக்களை வறுமைக்கு ஆளாக்கி இங்கிருந்து அடித்துச்சென்ற செல்வம் ஏராளம். பணம், செல்வம் ஆகியவற்றின் மோகத்திற்கு ஆளாகாத எவருமே இருக்கமுடியாது. 'பணம் என்ருல் பிணமும் வாய் திறக்கும்' என்பதற் கொப்ப ஆட்சி அதிகாரிகளை நம்பி ஆண்டவனின் சேவகர்களாகப் பணியாற்றிய மதகுருமார்கள்கூட இந்த இச்சைக்கு இலக்காயினர். முனைப்பாகக் கூறவேண்டுமாயின் ஏனையோரைக் காட்டிலும் இவர்களே பணம், பொருள் ஆகிய வற்றை எல்லா வழிகளிலும் பெறுவதற்கு முண்டியடித்துக் கொண்டு முன் நின்றனர். இவர்கள் இங்குச் சேகரித்த பணத்தின் மதிப்பைப்பற்றிக் கூறும்பொழுது கேயி (Kaye) என்னும் ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்ருர். 'தமது கம்பெனியினுல் கொடுக்கப் பட்ட ஊதியத் தொகைகள் மற்றும் படிகள் (allowances) முதலிய வற்றின்மூலம் கம்பெனியினர் செல்வங்களை இங்கிருந்து திரட்டிச் சென்றிருக்க முடியாது என்று கூறத் தேவையே இல்லை. திருச் சபையின் பணியாட்களான மதகுருமார்கள் தமது சமயப் பிரசாரத் தொழிலேயும், இருந்தோர், இறந்தோர் ஆகியோரின் ஆத்ம அமைதிக்காக உழைத்ததையும் தவிரப் பணம் திரட்டும் குணமற்ற தொழிலேயும் கொண்டிருந்திருக்க] வேண்டும். தமது மதத் தொழிலைக் கருவியாகக் கொண்டு, அரசாங்கத்தின் அனுமதி அதிகாரத்தைத் துணையாக வைத்துக்கொண்டு, அவர்கள் மதிப்பிட முடியாத பணத்தைப் பறித்தனர்.[1] 'இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டவேண்டும் என்ற ஊழல் மிக்க அக்கறை மற்றும் அவா இங்கு மட்டுமன்றி எங்கும் பரவியிருந்தது.' அதனுல்தான் இலஞ்சக் கையூட்டுகள்மூலம் பணம் சேர்க்கும் ஆசைக்கு யார்க் திருச்சபையின் உயர் மதகுருவும் பலியாகி யிருந்தார். இவரது மகன் மார்க்காம் (Markham) என்பவர் வாரன் ஹேஸ்டிங்ஸ் தலைமை ஆளுநராக இருந்தபோது பனரஸில் நாட்டுப் பிரதிநிதியான காப்பரசு ஆட்சியாளராக (resident) இருந்தார். யார்க்கின் தலைமை மதகுரு தனது மதச் செல்வாக்கைப் பயன்படுத்தி வாரன் ஹேஸ்டிங்ஸ்மூலம் மார்க்காம் ஆண்டொன்றுக்கு 3000 பவுன்களை இலஞ்சக் கையூட்டுகளாப் பெறுவதற்கு அனுமதியைப் பெற்ருர். இப்படிப்பட்ட புனிதமான வர்களே இந்தியர்களைப் புனிதமற்ற காட்டுமிராண்டிகள் என்று கருதினர்.[2]

1 'The administration of East India company' - Kaye, p. 630—31

2 'British social life in India' - Dennis Kincaid, p. 108

இங்கிருந்த கம்பெனியின் ஆட்சியாளர்கள், பணியாளர்கள் போன்றவர்களேயன்றி, பிரிட்டனிலிருந்த ஆட்சி வகுப்பினரும் வர்த்தக வகுப்பினரும்கூடத் தமது பணப்பசிக்கு இந்திய நாட்டின் செல்வத்தையே பசைமிக்க இரையாகக் கருதினர். இந் நாட்டிலிருந்து பிரிட்டனுக்கு இடம் பெயர்க்கப்பட்ட சொத்து, செல்வம் ஆகியவற்றின் கொள்ளளவைத் (volume) தீர்க்கமாக மதிப்பிட முடியாது எனினும் வில்லியம் டிக்பி (William Digby) என்னும் ஆசிரியர் சில மதிப்பீடுகளை எடுத்துக்காட்டியுள்ளார். இவரது மதிப்பீடுகள் பல ஆசிரியர்களாலும் மேற்கோளாகக் காட்டப்பட்டு, செல்வச் செழிப்பிலிருந்த இந் நாடு வறுமைக்கு உள்ளாகும்படி அந்நியர்கள் அடித்துச்சென்ற செல்வங்களின் அளவின் பரிமாணத்தை மதிப்பிடும்படி செய்துள்ளன. பேராசிரியர் டிக்பி அதிகார பூர்வமான புள்ளி விவரங்களின் அடிப்படையில் வர்த்தகத்தின் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் ஆங்கிலேயர் இங்குச் சம்பாதித்த பணத்தின் மதிப்பைப்பற்றிப் பின் வருமாறு கூறுகின்றார். 'பிளாசிப் போர் முதல் வாட்டர்லூ போர் வரையிலான காலத்தில் ஆயிரம் மிலியன் பவுன்களை இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்று இங்கிலாந்து நாட்டு வங்கிகளில் ஆங்கிலேயர் முதலீடு செய்தனர். இதன் அடிப்படையில், மேற்சொன்ன இரண்டு போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு இடம் பெயர்க்கப்பட்ட பணத்தின் மதிப்பு ஆண்டொன்றுக்கு 17·2 மிலியன் பவுன்களாக இருந்தது.' மேற்சொல்லப்பட்ட அளவில் இந் நாட்டின் செல்வமும் பணமும் எளிதாக இங்கிலாந்திற்கு இடம் பெயர்வதற்குக் காரணமாகப் பல செய்திகள் இருந்தன. இந்திய மக்கள் கம்பெனி அதிகாரிகளின் ஆட்சிக் காலத்தில் எதற்கும் விலை கொடுக்கவேண்டியிருந்தது. பெருஞ்செலவினம் மிக்க சிவில் மற்றும் இராணுவ நிர்வாகத்தை மதிப்பும் அதிக ஊதியமும் மிக்க பதவிகளைக் கொண்டிருந்ததின்மூலம் நடத்த வேண்டியிருந்தது. அத்தகைய பதவிகளுக்கு இந்தியர்களல்லாத பிரிட்டிஷ் மக்களைப் பெருமளவில் நியமித்துச் செலவினங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதுமட்டுமன்று; நம்மை ஆண்டோர் அவர்களது சுயநலத்தின் காரணமாக மேற்கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டுப் போர்களுக்கும் நாமும் நம்மவர்களுமே செலவு செய்யவேண்டியிருந்தது. இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே நடைபெற்று வந்த நிதி நடவடிக்கைகளையும், பணப் பரிமாற்றங்களையும், பட்டுவாடாக்களையும் (financial transactions) பற்றி அறிந்து கொள்ளக்கூடிய நல்வாய்ப்புகளைப் பிரிட்டிஷ் பாராளுமன்ற மேலவையான பிரபுக்கள் அவையின் தலைவராயிருந்த எல்லன்பரோ பிரபு பெற்றிருந்தார். இவர் 1842-ல் இந்தியாவின் தலைமை ஆளுநராகப்

பதவி யேற்ருர். இவர் முன்னமேயே இந்திய நிதி விவகாரங்கள் பற்றிய நுணுக்கங்களையும் நெளிவு சுளிவுகளையும் அறிந்திருந்த தாலும், தமது தாய் நாட்டின் கருவூலம் இந்தியப் பணத்தின் மூலம் நிரம்பி வழியவேண்டும் என்ற வேட்கையைக் கொண்டிருந்த தாலும் மேற்கொண்டு இரண்டு முதல் மூன்று மிலியன் பவுன்கள் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு அனுப்பப்படவேண்டும் என்று தீர்மானித்தார். ஆனல், உண்மையில் மூன்று மிலியன் பவுன்களுக்கும் மேலாகவே ஒவ்வோர் ஆண்டும் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டு வந்தது என்பதை 1848ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பொது மக்கள் அவையின் பொறுப்புக் குழுவின்முன் பக்ஸா (Bagshaw) என்னும் பாராளுமன்ற உறுப்பினர் எடுத்துக் காட்டினர். இதன்மூலம் எல்லன்பரோவால் தீர்மானிக்கப்பட்ட மூன்று மிலியன் பவுன்களும், முன்னரே நாம் அறிந்துள்ள $17\frac{1}{2}$ மிலியன் பவுன்களுடன் சேர்த்து இருபது முதல் இருபத்தைந்து மிலியன் பவுன்கள் வரை ஒவ்வோர் ஆண்டும் இந்திய நிதி வருவாய் களிலிருந்து கம்பெனியின் இந்திய ஆட்சிச் செலவுகள் என்னும் தலைப்பின்கீழ் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டு வந்தன. இதுமட்டு மன்றித் தனிப்பட்ட ஆங்கில நபர்கள் ஒவ்வோர் ஆண்டும் இந் நாட்டில் திரட்டிய செல்வங்களை அதிகரித்தவண்ணம் இருந்தனர். இதன்மூலம் பிரிட்டனின் மூலதனம் ஒவ்வோர் ஆண்டும் வெகுவாக அதிகரித்தவண்ணம் இருந்தது. இப்படி ஆங்கிலேயர் பெற்ற வருவாய்களின் பெரும்பகுதி – ஆண்டொன்றுக்கு $13\frac{1}{2}$ மிலியன் பவுன்கள் – நிலவருவாய்களிலிருந்து பெறப்பட்டது. 'இந் நாட்டின் வேளாண்மைத் துறை ஆங்கிலேயருக்கு அள்ளிக் கொடுத்த பணம் அளவிட முடியாததாக இருந்தது என்று துணிந்து கூறலாம்' என்பதைப் பேராசிரியர் ரோமேஸ் டட் (Romesh Dutt) என்பவரின் 'விக்டோரியா காலத்து இந்தியமக்களின் பொருளாதார வரலாறு' என்னும் பனுவல் பறைசாற்றுகின்றது.

பன்னெடுங்காலம் இந் நாட்டின் தேசீயப் பொருளாதாரத் திற்கு ஸ்திரத் தன்மையைக் கொடுத்து வந்தவை கைத்தொழில் களும் குடிசைத் தொழில்களுமே ஆகும். இவைகளும் ஆங்கிலே யரின் ஆட்சிப் பயனய் நலிவுற்றன; நசிந்தன. ஏனெனில், தொழிற் புரட்சியின் காரணமாகப் பொருள்களின் உற்பத்தி இங்கிலாந்தில் பெருகியது. தொழிற்சாலைகள் பல தோன்றின. இவ் வுற்பத்திப் பெருக்கத்திற்குத் தேவையான கச்சாப் பொருள்களைக் குறைந்த செலவில் நிறைந்த அளவில், இங்கிருந்து ஆங்கில வணிகர்கள் பெற்றுச் சென்றனர். நமது கச்சாப் பொருள்களின்மூலம் தயாரிக்கப்பட்ட பொருள்கள் இந் நாட்டில் நிறைந்த அளவில், உயர்ந்த விலையில் கொண்டுவந்து விற்கப்பட்டன. பொருளாதார

ஆக்கிரமிப்பிற்கு எல்லா வகைகளிலும் உட்பட்ட, ஒரு காலனியாக, தமது உற்பத்திப் பொருள்கள் விற்கப்படுவதற்கான ஓர் அங்காடி யாக இந் நாட்டை ஆங்கிலேயர் பயன்படுத்தினர். இப்படி இந்தியாவை ஓர் அங்காடியாக அவர்கள் பயன்படுத்துவதற்குக் காரணமாக இருந்தது ஆங்கிலேயர் மேற்கொண்ட காலனி அரசியலாகும். காலனி அரசியலின் தத்துவத்தின்படி ஒரு நாடு மற்ருெரு நாட்டில் ஆதிக்கத்தைச் செலுத்தும்பொழுது அந் நாட்டையும் நாட்டவரையும் எம் முன்னேற்றத்திற்கும் உள்ளாக்காத அடிபணிந்த நிலையில்தான் வைத்திருக்கும். சாதாரண ஒரு வீடு, நிலம் போன்ற சொத்தைப் போலவே காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஒரு நாடும் கையாளப்படும். இதன் மூலம் ஏகாதிபத்திய வல்லரசு உருவாக்கப்பட்டுச் செயல்கள் மேற்கொள்ளப்படும். காலனி ஆதிக்கத்திற்கும், ஏகாதிபத்தியத் திற்கும் ஆட்பட்டுள்ள ஒரு நாட்டின் மூல வள ஆதாரங்கள் யாவும் அந் நாட்டை ஆள்வோரின் நலனுக்கே பயன்படுத்தப்படும். ஆளப்படும் மக்களின் நலனை ஆள்வோர் சிறிதும் சிந்தித்துக்கூடப் பார்க்கமாட்டார்கள். இவை யாவும் காலனி அரசியல் கோட் பாட்டின் பொதுவான சில முக்கிய அம்சங்களாகும். இவற்றிற்கு ஒப்பவே ஆங்கிலேயரும் தமது அமெரிக்கக் காலனிகளில் வாழ்ந்த மக்களின் நலனில் அக்கறை காட்டாது, அவற்றின் மூல வள ஆதாரங்கள் யாவற்றையும் தமது சுயநலத்திற்கே பயன்படுத்தினர். இதன் காரணத்தினலேயே அமெரிக்கக் காலனிகளைஅவர்கள் இழக்க வேண்டியதாயிற்று. இதே நிலை அயர்லாந்திலும் இருந்ததாலேயே, தெற்கு அயர்லாந்தை விட்டும் ஆங்கிலேயர் வெளியேற வேண்டி யிருந்தது. காலனி முறையான அரசியல் நடைபெறும் ஒரு நாட்டில் அரசியல் பொருளாதார அடக்கு முறைகளும் நாட்டை ஆள்வோரால் கட்டவிழ்த்து விடப்படும். இவற்றின் விளைவாக அந் நாட்டில் புரட்சிகளும் கலகங்களும் தோன்றி இறுதியில் சுதந்திரம் நிலை நாட்டப்படும். இவற்றையெல்லாம் வரலாற்றின் மூலம் படிப்பினையாக உணர்ந்திருந்தும் ஆங்கிலேயர் அறவழி யற்ற அரசியலையும் ஆட்சியையும் இங்கு நடத்தினர். இதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை.

முன்ஞெரு இடத்தில் எடுத்துக்காட்டியதுபோல் ஆங்கிலேயர் அமெரிக்கா, அயர்லாந்து ஆகிய நாடுகளில் தமது காலனிகளை இழந்திருந்ததாலும், தமது பொருள்கள் ஏராளமாகவும் சரளமா கவும் விற்பனை செய்யப்பட்டு வந்த அமெரிக்க, அயர்லாந்து அங்காடிகளை இழந்திருந்ததாலும், தொழிற் புரட்சியின் பயனுய் இங்கிலாந்தின் பொருள்களின் உற்பத்தி பெருகியிருந்ததாலும், தமது அரசியல் ஆதிக்கம் வளர்ந்தவண்ணம் எவ் வெதிர்ப்பும்

இல்லாமலிருந்ததாலும் இந்திய நாட்டிலும் தமது செல்வ நிலையைச் சீர்ப்படுத்திக்கொள்ளும் வகையில் சுயநலத்தோடு, சுதேசி மக்கள் மற்றும் சுதேசிப் பொருளாதார நிறுவனங்கள் ஆகியவற்றின் நலன்கள் நசிக்கப்படும் வகையில் காலனி முறையான ஆதிக்க ஆட்சியை மேற்கொண்டனர். பெரும்பாலும் அரசியல் மற்றும் வரலாற்றுப் படிப்பினைகள் பொய்த்துப் போவதில்லை. எனவேதான், அமெரிக்காவிலும், அயர்லாந்திலும் ஆங்கில ஆட்சிக்கு ஏற்பட்ட கதி இந்தியாவிலும் 1947-ல் ஏற்பட்டது. இவ் வரலாற்றுப் படிப்பினை இந்தியாவிற்குத் திரும்புவதை நாம் காண 1857க்குப் பிறகு ஏறத்தாழ 90 ஆண்டுக்காலம் காத்திருக்க வேண்டியிருந்தது. இவ் விடைப்பட்ட காலத்தில் ஆங்கிலேயரின் கம்பெனி ஆட்சி இங்கிலாந்தின் அரச நிறுவனத்தின் கீழான நேரடி ஆட்சியாக மாற்றம் பெற்று நடைபெறலாயிற்று. எனினும்,இந்திய நாடு, மற்றும் மக்களின் அக்கறைகளை ஆங்கிலேய அக்கறைகளுக்குக் கீழ்நிலைப்படுத்திச் சுரண்டல் மயமான ஆட்சியை நடத்தியதனின்றும் ஆங்கிலேயர் விலகி இருக்கவில்லை.

இங்கிலாந்திலிருந்து நெடுந்தொலைவில் இருக்கும் இந்தியாவை முற்றிலும் அந்நியர்களான ஆங்கிலேயர், குறிப்பாக கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியாளர்கள் ஆண்டபோது, அவர்களால் இந் நாட்டு மக்கள் நல்லமுறையில் அரசியல் மற்றும் ஆட்சிமுறைப்படி நடத்தப்படுவார்கள் என்று எவரும் எதிர்பார்த்திருப்பார்களே யாயின் அஃது ஏளனத்திற் குரிய எண்ணமாகத்தான் இருந் திருக்கும். எனவே, இந் நாட்டில் நடைபெற்ற கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரிட்டிஷ் ஆட்சியின் மூலகாரணம் இந் நாட்டின் செல்வங்கள் மற்றும் இயற்கை வளங்கள் யாவற்றின்மீதும் தமது முழுமையான கட்டுப்பாட்டு ஆதாயத்தைப் பெறுவதாகவே இருந்தது. இதன் விளைவாக இந்தியத் தொழில் நிறுவனங்களும் தொழிற்சாலைகளும் பிரிட்டிஷ் தொழிற்சாலைகளுடன் போட்டி யிட்டுச் செயல்களை மேற்கொள்ள முடியவில்லை. இந் நாட்டு உற்பத் திகள் குறையலாயின. கைத்தொழில் மற்றும் குடிசைத்தொழில்கள் மறைய ஆரம்பித்தன. பற்றுக்குறையும் பஞ்சநிலையும் தாண்டவ மாடத் தொடங்கின.அம் மாதிரி சமயங்களிலெல்லாம் ஆங்கிலேயர் கப்பல்கள்மூலம் தமது பொருள்களை இறக்குமதி செய்து, மக்களின் திசையைத் திருப்பி அவர்களின் கருத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, தமது அரசியலையும் ஆட்சியையும் நடத்தினர். இந் நாட்டில் நிலவிய பஞ்சம், பற்றுக்குறை போன்றவற்றையும் பயன் படுத்திக்கொண்டு அவர்கள் தமக்குச் சாதகமான அரசியல் மற்றும் ஆட்சியை நடத்தினர். பஞ்சம், பற்றுக்குறை போன்றவற்றால் பரிதவித்த மக்களுக்கு ஏதோ சன்மானம் அளிப்பதைப்போல்,

தன்மானமுள்ள ஆட்சியை அவர்கள் நடத்தியதைப்போல், ஆங்கிலேயர் வேதனை மிக்க அரசியலை நடத்தினர். நாட்டின் பல கோடிமக்களுள் நூற்றுக்கணக்கான ஒரு சிலரே இத்தகைய அரசியல் மற்றும் ஆட்சியின் மாண்பையும் பண்பையும் பற்றி அறிந்திருந்தனர். நூற்றுக்குத் தொண்ணூறுபேர் கல்வி யறிவைப் பெறுதோராய் இருந்த மக்களிடம் 'அன்புகொண்டவன் ஆங்கிலேயன்' என்று எண்ணும்படியான மாயையை அவர்கள் தோற்றுவித்தனர். ஆனால், உண்மைச் செய்திகள் வேறுவிதமாக இருந்தன.

ஏற்றமிகு பொருள்களை உற்பத்தி செய்துகொண்டிருந்த இந்நாடு, ஆங்கிலேயரின் இறக்குமதிப் பொருள்களை நம்பியிருக்க வேண்டிய நிலைக்கு இறக்கப்பட்டுவிட்டது. இந்தியாவின் மஸ்லின் துணி என்றால் எகிப்திய நாட்டில் வரலாற்றுத் தொன்மை மிக்க பழங்குடி மக்களுக்கும் தெரிந்திருந்தது. இப்படிக் கடல்கடந்து அந்நிய நாடுகளிலும் தனது உற்பத்திப் பொருள்களின் சிறப்பை உயர்வாகப் பதியவைத்திருந்தது இந் நாட்டின் வரலாறு காட்டும் செய்தியாகும். கிழக்கிந்தியக் கம்பெனிகூட, குறிப்பிட்டுச் சொல்லும் அளவில் பல ஆண்டுகள் இந்தியத் துணிகளை ஐரோப்பியச் சந்தைகளில் விற்றுப் பெரும் இலாபம் சம்பாதித்தது. இப்படிப் பல சிறப்புகளைப் பெற்றிருந்த இந்திய நெசவு மற்றும் குடிசைக் கைத்தொழில்களும், பொருள்களும் கிழக்கிந்தியக் கம்பெனியின் காலனிமுறை ஆட்சி நியதியின் காரணமாக நலிந்தன. தொழிற் புரட்சியின் விளைவாக லங்காஷயர் நெசவுத் தொழிலில் ஏற்றநிலை பெற்று மலிவாகவும், ஏராளமாகவும் துணிகளை உற்பத்தி செய்து இந்திய நாட்டில் விற்பனைக்கு அனுப்பியது. நலிந்த நிலையில் இந்தியக் கைத்தறிகள் இருந்தன. மலிந்த நிலையில் இங்கிலாந்தின் மில் துணிகள் இந் நாட்டில் மண்டிப் பெருகின. இவற்றுக்கிடையே அறிந்தோ, அறியாமலோ மக்களுக்கு ஏற்பட்டுவிட்ட அந்நியத் துணியின்மீதான மோகம் இந் நாட்டின் கைத்தறிப் பொருள்கள் மற்றும் அவற்றை உற்பத்தி செய்து வந்த நிறுவனங்கள் யாவும் நசித்துப்போகக் காரணமாயிற்று. பொருளாதார ரீதியாக இந் நாட்டின் நிலை எத்தகைய வீழ்ச்சியையும், நலிவையும் பெற்றது என்பதைப் பின்வரும் விவரங்கள் நமக்கு மேலும் எடுத்துக்காட்டுவனவாகும்.

'திட்டமான நீளத்துடன் நெய்யப்பட்டு இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு 1814-ல் அனுப்பப்பட்ட துணி, மணிகள் மற்றும் ஐவுளி ரகங்களின் எண்ணிக்கை 1,266,608 ஆக இருந்தது. இவ்வெண்ணிக்கை 1835-ல் 306,086 ஆக வீழ்ச்சியுற்றது. 1814-ல் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட

துணிகள் 8,18,208 கெஜங்களாக இருந்தன. இது 51,777,277 கெஜங்களாக 1835-ல் உயர்ந்தது. இருபத்தோர் ஆண்டுகளில் இத்தகையதொரு மாற்றம் ஏற்பட்டு, அது பின்னர் மேலும் மேலும் ஆங்கிலேயருக்கு அனுகூலமாக ஏற்றம் கொண்டதாய் இருந்தது. அதனால்தான் இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏறத் தாழ 7000 மிலியன் கெஜங்கள் இங்கிலாந்திலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்பட்டன. இந்த அளவிற்கு ஒரு நாட்டின் துணிமணிகள் உலகச் சந்தைக்கு இன்று அனுப்பப்படு கிறதா என்பதே ஐயத்திற்குரியது. ஆனால், ஆங்கிலேயர் அன்று இந்தியாவில் மேற்கொண்ட துணி மணி வர்த்தகத்தின் அளவு அவ்வாறு இருந்தது என்பதில் ஐயமில்லை. அதனால், இந் நாட்டின் தொழிற்சாலைகள் அழிந்துபோயின என்பதில் வியப்பில்லை. அன்று கிழக்கு வங்கமாகவும் பின்னர்ப் பாகிஸ்தானின் ஒரு பகுதியாயும் இருந்து, இன்று சுதந்திர நாடாயுள்ள பங்களா தேசத்திலுள்ள டாக்கா, மற்றும் பம்பாய் போன்ற இந்தியப் பிரதேசங்களில் இருந்த ஜவுளித் தொழிற்சாலைகள் இருக்கும் இடம் தெரியாமல் எருக்கு முளைத்துப் போய்விட்டன.’

இந் நாட்டின் தொழில் துறைப் பொருளாதாரம் நசிந்ததோ டன்றி, வேளாண்மைப் பொருளாதாரமும் கம்பெனியின் ஆட்சியின் காரணமாக நலிவடைந்தது. அன்றும் சரி, இன்றும் சரி, இந்தியா ஒரு விவசாய நாடு. எனவே, தமது கம்பெனியின் ஆட்சியின்கீழ் ஆங்கிலேயர் இந்திய விவசாயப் பொருளா தாரத்தில் தேர்ச்சியையும், முன்னேற்றத்தையும் கொடுக்கக்கூடிய வகையில் முனைப்பும் பயன்பாடும் மிக்க செயல்களை மேற்கொண் டிருக்க வேண்டும். ஆனால், இதிலும் கம்பெனியின் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் கனிவற்ற செயல்களை மேற்கொண்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின் முக்கிய வருவாய் விவசாயத்தின்மூலமே பெறப்பட்டது. ஒவ்வொரு நாளும் அரசாங்கத்தின் தேவைகளும் செலவினங்களும் அதிகரித்த வண்ணம் இருந்தன. இவற்றிற்கெல்லாம் தேவையான நிதியினை நிலவருவாய்களின்மூலமே கம்பெனியின் ஆட்சியினர் பெற்றனர். பல மாநிலங்களில் கம்பெனியின் அரசாங்கம் இரயத்துவாரி முறையை அமுல் செய்திருந்தது. இதனால் விவசாயிகள் பேரின்ன லுக்கும் வறுமைக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தனர். ஏனெனில், அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையே நேரிடையான தொடர்பு ஏற்பட்டிருந்த போதிலும், இரயத்துவாரி முறையினால் விவசாயிகள் தாங்க முடியாத அளவிற்கு நிலவரியைச் செலுத்த வேண்டியவர்களாய் இருந்தனர். மேலும், அரசாங்கத்தினால் நிலவரி அவ்வப்பொழுது அதிகரிக்கப்பட்டும் வந்தது. தாங்க

முடியாத நிலவரித் தொல்லையின் காரணமாக வறுமையில் உழன்று கொண்டிருந்த இந்திய விவசாயிகள் கடன்காரர்களாயினர். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் தமது நிலங்களை இழந்த சிறு விவசாயிகளின் எண்ணிக்கை 1852-ல் மிக அதிக மாயிற்று. கடன் தொல்லைகளைச் சமாளிக்கக்கூடிய நிலையில் இருந்த விவசாயிகள்கூட வணிகப் பயிர்களைப் (commercial crops) பயிரிடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாயினர். உணவுத் தானியங்களின் உற்பத்தி குறையலாயிற்று. அன்றாடத் தேவைப் பொருள்களை இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு இந் நாட்டின் வேளாண்மைப் பொருளாதாரம் பின்னேற்றம் அடைந்தது. இந்த நிலையிலும் இங்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்கு ஈடாக வணிகத் தானியங்களும், உணவுத் தானியங்களும் வெகுவாக ஏற்றுமதி செய்யப்பட வேண்டியதாயிற்று. பலதரப்பட்ட நுகர்வுப் பொருள்களை இந் நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்திருக்கலாம்; அல்லது அவற்றின் உபயோகத்தை விட்டுவிடும்படி செய்திருக்கலாம். ஆனால், கம்பெனியின் அரசாங்கம் அவ்வாறு செய்யவில்லை. மாறாகக் கோடிக்கணக்கான இந்திய மக்கள், கிழக்கிந்தியக் கம்பெனி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையின் காரணமாக அரைப்பட்டினியால் செத்துக்கொண்டிருந்தனர். இன்றும் ஆங்கிலேயர், பேரரசி விக்டோரியாவின் ஆட்சிக் காலத்தை வரலாற்றுச் சிறப்பு மிக்க காலம், பொற்காலம் என்றெல்லாம் புகழ்ந்த வண்ணம் உள்ளனர். அத்தகைய விக்டோரியாப் பேரரசியின் காலத்தில்தான் திக்கெட்டும் மக்கள் திண்டாடும் நிலை அவரது பட்டயத்தின் பரிவோடு இயங்கிவந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கத்தின்கீழ் இங்கு இருந்தது. மேலும், இந் நாட்டில் பஞ்சங்கள் பல தோன்றின. மக்கள் பஞ்சைகளாய்ப் பராரிகளாய்ப் பரிதவித்தனர். 1837, 1860, 1869, 1874, 1877 ஆகிய ஆண்டுகளில் எண்ணிப் பார்க்கமுடியாத அளவிற்குத் தீய விளைவுகளைக் கொண்டதாய் இந் நாட்டில் பஞ்சங்கள் தோன்றின. பஞ்சம், பிணி, சாக்காடு ஆகியவற்றுக்கு உட்பட்டிருந்த இந் நாட்டு மக்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கப் பொருளாதாரக் கொள்கையின் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டமெனும் கொடுந் துன்பத்திற்கும் ஆளாயினர். அந்நியப் போட்டியின் காரணமாக இருந்த தொழிலையும் இந்தியத் தொழிலாளர்கள் இழந்தனர். அதே நேரத்தில் இச் சமூகம் வரிகளைமட்டும் தவறாமல் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டியிருந்தது.

ஆங்கில மொழியின் அறிமுகம், அதன்மூலம் கல்வி வளர்ச்சி, மோட்டார், ரயில்போன்ற போக்குவரத்துச் சாதனங்கள் கொடுக்கப்பட்டமை போன்றவை, ஆங்கிலேயர் ஆட்சியினால் இந்திய நாடு

பெற்ற முன்னேற்றங்கள் என்று பெருமிதம் கொள்வோர் பலர் இன்றும் உள்ளனர். ஆனால், இவை யாவற்றுக்கும் பின்னால் ஆங்கிலேயரின் இராச தந்திரமும், சுயநலமும் மிக்க அரசியலும் பதுங்கியிருந்தது என்பதை நாம் இங்கு அறிந்துகொள்வதில் தவறில்லை. அடிப்படையான எண்ணம் எதுவாக இருந்த போதிலும், ஆங்கிலமொழிக் கல்வியின்மூலம் கம்பெனியின் அரசாங்கத்திற்குத் தேவையாயிருந்த எடுபிடி ஆட்களையும், எழுத்தர்கள், குமாஸ்தாக்கள் போன்றோர்களையும் அவர்கள் மலிவாக இங்கு உருவாக்கிக்கொள்ள முடிந்தது. ஆங்கிலமொழி, அதன் வழியில் அமைக்கப்பட்ட கல்வி முறை ஆகியவற்றின்மூலம் வரலாறு மற்றும் பாரம்பரியச் சிறப்பு மிக்க பாரத நாட்டுப் பண் பாடும், கலாசாரமும் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டன. ஆங்கில மொழியினால், அதன் கல்வி முறையினால் நாம் இன்று பல பலன் களையும் பெற்றிருக்கிறோம். என்றாலும், அன்று இந்தியர்களை அடிமைகளாக்க ஆங்கிலேயர் மேற்கொண்ட சாதனமாகவே அவை இருந்தன.

அடுத்து, இருப்புப் பாதைகள் பல கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயரால் போடப்பட்டன என்பது உண்மை. அவற்றின் பலனாய் இன்று நாம் சென்னையிலிருந்து புதுடில்லிக்கு விரைவில் செல்லக்கூடிய வசதிகளைப் பெற்றுள்ளோம். ஆனால், அன்று பல இடங்களுக்குத் தமது படைக்கலங்களை அனுப்பவும், பல மூலைகளிலிருந்து பொருள்கள் பலவற்றைத் திரட்டி நிறைவுடனும் விரைவுடனும் ஏற்றுமதி நிலையங்களுக்கு அனுப்பவும் அவர்களுக்கு அவை மிகத் தேவையாய் இருந்தன. பல தொழிற்சாலைகளைக் கம்பெனியின் அரசாங்கம் இங்கு அமைத்தது என்பதிலும் ஐயமில்லை. ஆனால், அவை சுதேசித் தொழிற்சாலைகளை நசுக்கிய தோடன்றி, அவற்றின் உடமையாளர்களாகவும், நிர்வாகிகளா கவும் பிரிட்டிஷ்காரர்களே இருந்தனர். எனவே, 'ஆதாயம் இல்லாமல் செட்டியார் (வியாபாரி) ஆற்றில் இறங்கமாட்டார்,' எனும் நம் நாட்டுப் பழமொழிக்கொப்ப எங்கும், எதையும் சுயநல ஆதாய நோக்குடனேயே கம்பெனியின் அரசாங்கமும் ஆட்சியாளர் களும் மேற்கொண்டனர். அவர்களால் புகுத்தப்பட்ட தந்தி, போக்குவரத்துச் சாதனங்களும் இந்த ஆதாய நோக்கையே அடிப் படையாகக் கொண்டிருந்தன. கம்பெனியின் அரசாங்கம், இந் நாட்டின் வேளாண்மைப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் வகையில், வளம் மிக்க முதலீடுகளைச் செய்து செயல்களை மேற் கொண்டிருக்குமாயின் இந் நாட்டு மக்களுக்குத் துன்பம் நேர்ந் திருக்காது. ஆனால், பிரிட்டிஷ் மூலதனத்திற்குப் பெரும் பலன் பயக்கும் பாதுகாவலான இடமாக இந்தியா கருதப்பட்டு, அம்

மூலதனப் பாதுகாவல் பலனையும் பயன்பாட்டையும் கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் சுவைத்துத் திளைத்தனர் ஆங்கிலேயர். ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட, தொழில் நுட்ப அறிவும் யுக்திகளும் இன்று நமக்குப் பல பயன்களைக் கொடுத்தாலும், அன்று அவற்றைத் தமது நலன், இலாபத்தை முன் நிறுத்தியே அவர்கள் புகுத்தினர் என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. இவை யாவற்றின் காரணமாகவும், வேடர்கள் விரித்த வலையில் சிக்குண்ட ஏதுமறியாப் பிராணிகளைப்போல் நாம் இருந்தோம்; வறுமைப் பஞ்சத்தால் வதைப்பட்டோம்; அடிமைகளானோம்; ஆளக்கூடிய தகுதியிருந்தும் வாய்ப்பு இல்லாதிருந்தோம்.

அரசியலிலே அடிமைகளாகவும், அரசாங்கம் மற்றும் உயர் ஆட்சிப் பதவிகளில் வாய்ப்பற்றவர்களாகவும், பொருளாதாரத்தில் முதுகெலும்பு ஒடிந்தவர்களாகவும், சமுதாயச் சிக்கல்களில் சீரழிந்தவர்களாகவும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின்கீழ் நம்மவர் இருந்தனர். இதனால், தேசீய சுதந்திரத்தை இந்நாட்டு மக்கள் இழந்திருந்தனர். செல்வத்தாலும், பணத்தாலும், அரசியல் ஆதிக்கம் மற்றும் ஆட்சியாலும் கொழுத்திருந்த ஆங்கிலேயர் கம்பெனியின் அரசாங்கத்தினால் தம்மை இனத்தாலும் உயர்ந்தவர்கள் என்று கருதி இந் நாட்டு மக்களைக் கேவலமாக நடத்தினர். ஆங்கிலேயரிடம் காணப்படும் அருவருப்பான பண்புகளில் இதுவும் ஒன்று. உலகத்தை உய்விக்க ஆண்டவனால் படைக்கப்பட்டவர்களென்ற இறுமாப்பான எண்ணம் அவர்களுக்கு இருந்தது. அதனால்தான் அவர்கள் ஆண்ட அமெரிக்கா, அயர்லாந்து போன்ற நாட்டின் மக்களைக்கூட அவர்கள் கேவலமாக நடத்தினர். இப் பண்பிற் கொப்ப இந்தியர்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. அதனால்தான் இந்தியர்களைத் 'தாழ்வானவர்கள், நயநாகரிகமற்றவர்கள் (vulgar), அறிவற்றவர்கள் (ignorant), முரட்டுத்தனமானவர்கள் (rude), பழக்கப்பட்டவர்களாயினும் மதிநுட்பமற்றவர்கள்'[1] என்று வெல்லெஸ்லி பிரபு வர்ணித்ததாக ஸ்பியர் என்னும் பேராசிரியர் தமது நூலில் நமது மனம் புண்படும்படியாக எழுதிச் சென்றுள்ளார். 'இந்துஸ்தானத்தின் ஒவ்வொரு குடிமகனும் ஊழல் பேர்வழியே' என்று காரன் வாலிஸ் கருதிச் செயல்களை மேற்கொண்டதாக டாக்டர் ஸ்பியர் எழுதியுள்ளார். இந்தியப் பாரம்பரியத்தை, பண்பாட்டுச் சிறப்பை, மக்களின் பண்பு சீலத்தை அறிந்திராத பரங்கியரை விதியின் காரணமாக அடிபணிந்திருந்த இந்தியர்களை இழிவாகக் கருதிய ஆங்கில ஆட்சியாளர்களை, மனித

1 Dr. J. G. Spear 'The Nabobs' p. 145

இனத்தின் பரம்பரையான மேதகையாளர்கள் என்றும், பண்புச் சீலர்கள் என்றும் மெக்காலே என்பவர் எழுதியிருப்பது வேடிக்கை யாக இருக்கிறது. அத்தகைய பண்பை, நோக்கை, மக்களை நடத்தும் மாண்பைப் பெற்றிருந்த ஆங்கிலேயர், இந்தியர்களை அவர்களது இனிய நாடாம் இந்தியாவிலேயே அவர்களது உரிமை களையும், சலுகைகளையும் இழக்கும்படியாகச் செய்திருந்தது ஆச்சரியமில்லை.

'தனது கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின்மூலம் பிரிட்டானிய அமைதி (Pax Britannia) இந் நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி, பாதுகாப்பு போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்தது' என்று மன்ரோ என்னும் பேராசிரியர் கூறியுள்ளார். இவரது இக் கூற்றை நாம் மறுப்பதற்கில்லை. ஏனெனில் பல வாருகச் சிதறுண்டு கிடந்த இந் நாட்டை ஒன்று திரட்டி, ஒருமித்த ஓர் அரசின்கீழ் அவர்கள் கொண்டுவந்தனர். ஆனல், பேராசிரியர் மன்ரோ கூறுவதைப்போல், 'பிரிட்டானிய அமைதி இந்தியர்களை அமைதியில் செழித்தோங்கும் ஒரு சாதாரண மிருக அரசாகத் தாழ்த்தியது. மக்கள் மாக்களாக அமைதி, ஒழுங்கு ஆகிய வற்றின் பெயரில் மதிப்பிழக்குமாறு கம்பெனியின் அரசாங்கம் செய்தது. எனவேதான். மால்கம் (Malcolm) போன்ற பெரியோர் களும் மற்றும் பல கற்றறிந்த ஆன்றேரும், 'பிரிட்டிஷ் ஆட்சி ஒருகாலும் மக்களின் நல்லாதரவைப் பெறக்கூடிய வகையில் புகழைச் சம்பாதிக்க முடியாது' என்று உணர்ந்தனர். ஜான் வில்லியம் கேயி என்பவர் எடுத்துக் காட்டியுள்ளதுபோல் 'கம்பெனியின் ஆட்சியாளர்கள் உயர்நிலை மனப்பாங்கைப் பெற்று இந்தியர்களைத் தொடர்ந்து ஏளனமாக நடத்தி வந்தனர். ஆட்சிக் கொடுமையின் காரணமாக அல்லது அதிகாரப் பிரயோகத்தின் காரணமாக, ஆங்கிலேயரைக் கண்டு இந்தியர்கள் அஞ்சினர். எனவே, அவர்களை மதிக்கவோ அல்லது அவர்கள்மீது அன்பு செலுத்தவோ முடியாத நிலையில் இந்தியர்கள் இருந்தனர்.'[1] 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' என்பது புறநானூறு காட்டும் புகழ் மிக்க செய்தியாகும். சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு நாட்டில் அரசாட்சி செய் வோர் தமது மக்களுக்கு நல்லவற்றைச் செய்யவேண்டும்; தாம் செய்திருக்கும் சட்ட திட்டங்களை நல்லெண்ணத்தோடு செயல் படுத்தவேண்டும் என்றெல்லாம் புறநானூறு எடுத்துக் காட்டியது. இத் தத்துவத்திற் கொப்பக் கம்பெனியின் அரசாங்கம் உள் நோக் கங்களைக்கொண்டு சட்டங்கள் பலவற்றையும் செயல்படுத்தியதா

[1] 'The administration of East India Company.'—John William kaye P. 423 - 424

என்பதை நாம் எண்ணிப் பார்க்கும்பொழுது நமக்கு ஏமாற்றமே கிட்டுகிறது. கம்பெனியின் அரசாங்கத்தில் எப் பதவியையும் வகிக்கக்கூடிய நிலையில் பல சட்டங்கள்மூலம் இந்தியர்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. எடுத்துக் காட்டாக 1833ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பட்டயச் சட்டத்தில் கம்பெனியின் அரசாங்கத்தில் தகுதி பெற்ற இந்தியர்கள் யாவரும் எப் பதவியையும் உரிய முறையில் பெறலாம் என்று தெளிவான சொற்களில் உறுதியாகக் கூறப்பட்டது. ஆனால், இத்தகைய வாக்குறுதிகளை வினைப்பயன் பெறும்படியாகச் செயலாக்கம் செய்ததில், கம்பெனி அரசின் நோக்கங்களும் காரியங்களும் உருப்படியில்லாமல் பலனற்றதாய் இருந்தன. ஏட்டளவில் நல்லதைச் செய்வதாக சட்டங்களைச் செய்து நடைமுறையில் மக்கள் பயன்படும்படியான நல்லதைச் செய்யவேண்டும் என்ற நல்லெண்ணமோ, ஆவலோ, உள் நோக்கமோ சிறிதும் கம்பெனியின் ஆட்சியாளர்களுக்கு இருக்கவில்லை. மேலும் கிழக்கிந்தியக் கம்பெனியினால் உருவாக்கப் பட்டிருந்த பணித்துறை, உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்த ஒப்பந்தப் பணித்துறையாக இருந்தது. இதனால், கம்பெனியின் பணித்துறையில் சிறிய பதவிகளை ஏற்றிருந்த ஒரு சில இந்தியர் களும் குறிப்பிட்ட ஒரு பதவி நிலையில் தேங்கிக்கிடக்க வேண்டி இருந்தது. பதவி உயர்வுச் சலுகைகள் பரவலாக்கப்படவில்லை. மாறாக, ஒரு சில பதவிகளிலிருந்து இந்தியர்கள் சிலர் திருப்பி அழைக்கப்படவேண்டும் என்று கம்பெனியின் தலைமை இடத்து இயக்குநர்கள் மன்றம் 1834ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் ஆட்சி ஆணைமூலம் அறிவித்தது. இதற்குக் காரணமாக இந்தியர்கள் உடன்படிக்கைக்கு உட்பட்ட கம்பெனியின் பணித்துறையைச் சார்ந்திருந்தனர் என்பது மட்டுமின்றி, அவர்கள் பெற்றிருந்த தேசியத் தகுதிகள் பெரும் பதவிகளை வகிப்பதற்குத் தேவை யானவையாகவோ, பொருத்தமானவையாகவோ இருக்கவில்லை என்று எடுத்துக்காட்டியது. உண்மையிலேயே, இந்தியர்களைத் தமது பணித்துறையில் உயர்ந்த நிலைகளில் உட்காரச் செய்ய வேண்டும் என்று கம்பெனியின் ஆட்சியாளர்கள் கருதியிருந்தால் அல்லது அத்தகைய உயர்ந்த உள் நோக்கத்தைக் கொண் டிருந்தால், உரிய தகுதிகளையும் யோக்கியதாம்சங்களையும் இந்தியர்கள் பெறுமாறு அவர்களை உன்னதமாய் உருவாக்கி யிருக் கலாம். ஆனால், மேலே கூறியது போன்று கம்பெனியின் ஆட்சி யாளர்களின் உள் நோக்கமே உயர்ந்ததாக இருக்கவில்லை. எனவே, ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ்த் தாம் எத்தகைய முன்னேற்றத் தையும் பெறமுடியாது என்றும், கம்பெனியின் மிருக அரசின்கீழ்த் தாம் எப்பொழுதும் உருகி உளையத்தான் வேண்டும் என்றும் இந்தியர்கள் எண்ணியதில் தவறில்லை.

இந் நாட்டை ஒரு குடையின்கீழ், ஒருமித்த ஓர் அரசின்கீழ்க் கொண்டுவந்து, இந் நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பைக் கொடுப்பதைத் தவிர வேறெந்த முன்னேற்றமும் செய்ய வேண்டியதில்லை என்று கம்பெனியின் ஆட்சியாளர்கள் கருதிச் செயல்களை மேற்கொண்டனர். ஆனால், மனிதன் உணவைமட்டும் உண்டு வாழ்வதில்லை. உண்டி, உடுக்கை, உறையுள் ஆகியவற்றோடு, நாடு சிறக்கும் நல்ல பணிகளை மேற்கொள்ளல்; பெருமையும் புகழையும் ஈட்டல்; பணித்துறையில் வெற்றிக் கொடியை நாட்டல்; சுய கௌரவத்தைக் காத்துப் போற்றல் போன்ற யாவற்றோடும் ஒரு மனிதன் நல்வாழ்க்கையைப் பெற்று வாழவேண்டும். மேற்சொல்லப்பட்ட உணர்வுகள் இயற்கையாக மக்கள் மனத்தில் மலரும்படியாக வாய்ப்பு வசதிகளை எந்த நல்ல அரசும் அரசாங்கமும் தன் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஆனால், இத்தகைய வாய்ப்புகளையும் உணர்ச்சிகளையும் பெறக்கூடிய மதிப்பு மிக்க வசதிகள் கம்பெனியின் அரசாங்கத்தின்கீழ் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. நாட்டுப் பாதுகாப்பு ஒன்றுதான் கம்பெனியின் ஆட்சியினரால் இங்கு நிலைநிறுத்தப்பட்டது. அரசு எத்தன்மைத் தாயினும், அதனைச் சார்ந்து அமையும் அரசாங்கம் எவ் வகையில் அமையினும், அவ் வரசாங்கத்தின்மூலம் வெளிப்படும் நிர்வாகம் நாட்டுமக்களின் நல்லாதரவை அடித்தளமாகக் கொண்டிருக்காவிடில், அது சிதைந்து சின்னாபின்னமாகி விடும் என்பது அரசியலின் அடிப்படைத் தத்துவமும் வரலாற்றுச் செய்திகளும் காட்டும் படிப்பினைகளாகும். ஆனால், கிழக்கிந்தியக் கம்பெனியினால் அமைக்கப்பட்ட அரசு பாதுகாப்பு அரசாக (security state) இருந்தது. அது மக்களை மாக்களாக மதித்த மிருக அரசாக இருந்தது. நாட்டையும் மக்களையும் கொண்டுதானே இறைமையுடன்கூடிய அரசு அமைய முடியும். இதற்கு மாறாக, ஆங்கிலேயர் இந் நாட்டு மக்களுக்குப் பொறுப்பேற்காது, நேரிடையாகவும் மறைமுகமாகவும் தமது வல்லாட்சி மிக்க அரசையும் ஆட்சியையும் இந்திய நாட்டில் நடத்தியதும், சுதேசி அரசர்களைத் தமது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு இயக்கிவந்ததும், ஒப்பந்தப் பணித்துறையைப் பின்பற்றியதும் கம்பெனியின் அரசாங்கத்தின்மீது மக்கள் என்றென்றும் மனக் கசப்பையும் வெறுப்பையும் நிலையாகக் கொண்டிருக்குமாறு செய்தன. இந்திய மக்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் ஆட்சியாளர்கள் பெற்றிராததாலும் மக்கள் ஏமாற்றங்களையும், வெறுப்பையும், மனக்குறைகளையும் பெற்றிருந்ததாலும் அவை வெடித்துப் புரட்சி தோன்றக்கூடிய நிலை 19ஆம் நூற்றாண்டின் மையப் பகுதியில் உருவாகியிருந்தது. புரட்சி என்னும் தீ எரியவும் ஆரம்பித்து விட்டது. அப் புரட்சித் தீ கம்பெனியின் ஆட்சிக்கு எதிராகக்

காட்டுத் தீப்போல் பரவ வெகுகாலம் பிடிக்கவில்லை. ஏனெனில், எரியும் தீயில் எண்ணெய் வார்ப்பதைப்போல் டல்ஹௌசியினால் பின்பற்றப்பட்ட அரசின் கொள்கை அமைந்திருந்தது. 'விடுபாட்டுக் கோட்பாடு' (Doctrine of Lapse), 'அச்சுறுத்தி அரசை அபகரித்தல்', 'போரைத் தழுவித் தனது ஆக்கிரமிப்பை நிலை நிறுத்தல்' போன்றவற்றைத் தழுவிய டல்ஹௌசியின் நெறியற்றதும்; தீர்க்கமற்றதுமான ஆட்சிக்கொள்கை நாட்டில் அமைதியின்மையை அதிகப்படுத்தியது. இதனால் கம்பெனியின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டிருந்த இந்திய இளவரசர்களும் அவர்களைச் சார்ந்திருந்த உயர்குடி, சிறுகுழு ஆட்சியினரும்கூடத் தங்களது எதிர்காலத்தைப்பற்றி நம்பிக்கை யற்று அஞ்சிய நிலையில் பகைமையையும் குரோதத்தையும் வெறுப்பையும் கொண்டிருந்தனர். இவை யாவற்றையும்விடக் கம்பெனி அரசாங்கம் கடைப்பிடித்த மதக்கொள்கை புரட்சி என்னும் சூறாவளிப் புயலை வெகு விரைவில் சீற்றத்துடன் வீசும்படி செய்யலாயிற்று. பிரிட்டிஷ்காரர்களின் மதநோக்கு பின்வருமாறு அமைந்திருந்தது. ஆரம்பத்தில் இந்தியர்களின் மதச்செய்திகளிலும், சமுதாயச் சம்பிரதாயங்களிலும் ஆங்கிலேயர் தயக்கத்துடனேயே தலையிட்டுச் சீர்திருத்தங்களைச் செய்தனர். ஆனால். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களில் ஒரு சாரார், குறிப்பாக வில்லியம் பென்டிங்க் பிரபுவுக்குப் பின்வந்தோர், இராசாராம் மோகன்ராய் போன்ற இந்திய அனுதாபிகளும் ஆதரவாளர்களும்கூடப் பெருஞ்சினம் கொள்ளக் கூடிய வகையில் இந் நாட்டில் கிறித்தவ மதம் ஆழமாக வேரூன்றும்படியான செயல்களை மேற்கொள்வதில் ஈடுபட்டனர். இந்தியர்களைக் கிறித்துவர்களாக மதமாற்றம் செய்வதன் மூலமும் இந் நாட்டைப் பிரிட்டிஷ் பேரரசின் பாதுகாவல் மிக்க ஒரு பகுதியாகக் கொண்டிருக்க முடியும் என்று அவர்கள் கருதினர். எனவே, வாரன் ஹேஸ்டிங்ஸ், மன்றோ, மௌன்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன், வில்லியம் பென்டிங்க் போன்றோர் விடுத்திருந்த எச்சரிக்கைகளையெல்லாம் மறந்து தமது கம்பெனியின் அரசாங்கத்திலும் கல்வி நிறுவனங்களிலும் மதச் செய்திகளைப் புகுத்தலாயினர். கிறித்துவ மதப் பிரசார நிறுவனங்கள், மிஷன்கள் போன்றவை தமது மதப் பிரசாரப் பணியைப் பெருவாரியாகத் தீவிரமாக்கி முடுக்கிவிட்டன. மேலும், அவை இந்து மதத்தையும் அதனைச் சார்ந்திருந்த நீதிநெறி முறைகள், பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள் போன்றவற்றையும் பெரிதும் தாக்கிப் பழித்தன. இவற்றைக் கண்டு பொறுக்கமுடியாத இந்திய மக்கள் மனக் கொதிப்பை அடைந்து, வெறுப்புக்கொண்டு வெகுண்டு எழுந்தனர். இராசாராம் மோகன்ராய் கிறித்துவ மிஷன்கள் செய்துவந்த பிரசாரங்களைப் பெரிதும் சாடி எதிர்த்தாக்குதலைத் தொடுத்து

தோடன்றி அவற்றிற்கு எச்சரிக்கைகளையும் விடுத்தார். ஆனால், இராசாராம் மோகன்ராய் போன்ற நல்லறிஞர்கள் விடுத்த எச்சரிக்கைகள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தன.

கேளாச் செவிகளுடன், மாளா மதவேட்கையுடன் கம்பெனியின் அரசாங்க ஆட்சியாளர்கள் இராணுவத் துறையிலும் மதத்தைப் புகுத்தினர். ஒரு கையில் பதவிகளுக்கான உத்தரவுகளை வைத்துக்கொண்டு, மறு கையில் கிறித்தவ மத வேதநூலான விவிலியத்தைப் (Bible) பிடித்துக்கொண்டு அதன்மீது சத்தியங்களையும் வாக்குறுதிகளையும் சிப்பாய்களிடம் பெற்றனர். விவிலிய நூலின்மீது சத்தியம் செய்து கிறித்தவமத நம்பிக்கையுடன் அவர்கள் கம்பெனியின் அரசாங்கத்திற்கு நேர்மையாக உழைக்க வேண்டும் என்று கோரப்பட்டனர். அவ்வாறு செய்ய மறுத்த படைவீரர்கள் பலரைப் பன்றிகள், நீக்ரோக்கள், இழிவான கறுப்பர்கள் என்றெல்லாம் அழைத்துக் கம்பெனியின் இராணுவஅதிகாரிகள் அவமானப்படுத்தினர். இவற்றைப் பொறுக்க முடியாத சிப்பாய்கள் தென்புலத்து வேலூரில் 1806ஆம் ஆண்டிலும் வடபுலத்து பரத்பூரில் 1824ஆம் ஆண்டிலும் கலகங்களில் ஈடுபட்டனர். ஆனால், அக் கலகங்கள் வெகுவிரைவில் அடக்கப் பட்டு விட்டன. எனினும், தாம் பின்பற்றிய மதக்கொள்கையின் காரணமாகக் கம்பெனியின் அரசாங்கமும், ஆட்சியும் முடிவு காலத்தை நெருங்கிக்கொண்டிருந்தன என்பதை ஆங்கிலேயர் நினைத்தே பார்க்கவில்லை. அதனால் தான் 1857-ல் சிப்பாய்க் கலகம் வெடித்தது.

பெரும்புரட்சி-படை வீரர் கலகம்

1857-ல் தோன்றிய சிப்பாய்க் கலகம் முதல் இந்தியச் சுதந்திரப் போர் என்றும், தேசீயப் புரட்சி என்றும் பலரால் பலவாக விளக்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க சிப்பாய்க் கலகத்தின் தோற்றத்திற்கான காரணங்கள் பல இருந்தன. சிப்பாய்க் கலகத்தின் தன்மையைப்பற்றிப் பலர் பல விதமான கருத்துகளைத் தெரிவித்திருந்தபோதிலும், சிப்பாய்கள் அல்லது படை வீரர்கள் மேற்கொண்ட கலகமும் மற்றவர்கள் தொடுத்த புரட்சித் தன்மையான எதிர்ப்பும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டனவாகவும் உயர்ந்த இலட்சியங்களை அடைவதற்கான நோக்கத்தைக் கொண்டனவாகவும் இருக்கவில்லை. இக் கலகத்தில் மக்களுக்கு நேரிடையான பங்கும் இருக்கவில்லை. ஆனால், அவர்களால் போற்றப்பட்டு வந்த பல இளவரசர்களும் தலைவர்களும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியாளர்கள் மேற்கொண்ட

காரியங்களால் வெறுப்புணர்ச்சியையும் புரட்சி மனப்போக்கையும் கொண்டு மனக்கொதிப்புடன் கலகத்தில் பங்கேற்றனர். பாமர மக்களின் தலைவர்களுக்கும், கலகத்தில் ஈடுபட்ட சிப்பாய்களுக்கும் இடையே கூட்டுறவும் ஒத்துழைப்பும் ஒருமித்த மனப்போக்கும் இருக்கவில்லை. நாம் முன்னரே கண்டுள்ளதுபோல் கம்பெனியின் அரசாங்கம் பல சமுதாயச் சீர்திருத்தங்களை மேற்கொண்டிருந்ததும், அதன் விவேகமற்ற கொள்கைகளும், குறிப்பாக டல்ஹௌசியின் ஆட்சிக் கொள்கைகளும் மிகுந்த வெறுப்புணர்ச்சியையும், எதிர்ப்புணர்ச்சியையும் தோற்றுவித்திருந்தன. கம்பெனியின் கொள்கைகளை மூர்க்கத்தனமாக எதிர்க்கும் வகையில் திடீரென்று தோன்றிய புரட்சியாகவே இஃது இருந்தது. இப் புரட்சிக்கான காரணங்கள் பலவற்றில் முக்கியமானதும், உடனடியானதுமானதும் சிப்பாய்களின் மனப்போக்கும் எதிர்ப்புமேயாகும். கம்பெனி அரசாங்கத்தின் இராணுவத் துறையில் பணியாற்றிய சிப்பாய்களுள் பெரும்பாலோர் இந்து மதத்தினராகவும் முஸ்லிம் மதத்தினராகவும் இருந்தனர். இவர்களுக்குத் தத்தம் மதங்களில் மிகுந்த பற்றுதல் இருந்தது. மேலும், இவர்கள் கடல்வழிப் பயணத்தைப்பற்றி அறிந்திராதவர்களாவும், அவற்றை விரும்பாதவர்களாகவும் இருந்தனர். 1856ஆம் ஆண்டில் கம்பெனியின் அரசாங்கம் படைக்கு வீரர்களைச் சேர்க்கும் பொதுப் பணிச் சட்டம் (General Service Enlistment Act) ஒன்றை இயற்றியது. இச் சட்டத்தின்மூலம் இந்தியாவிலோ அயல் நாட்டிலோ படை வீரர்கள் பணியாற்றவேண்டும் என்ற கட்டாயம் புகுத்தப்பட்டது. தத்தம் மத நம்பிக்கைகளின் அடிப்படையில் இந்தியச் சிப்பாய்கள் கடற் பயணங்களை மேற்கொள்வதை விரும்பவில்லை. எனவே, மேற்கூறிய சட்டத்தின்மூலம் தம்மீது சுமத்தப்பட்ட கட்டாயத்திற்கு எதிராகச் சிப்பாய்கள் திரண்டெழுந்தனர். மேலும், இந்துக்களுக்குப் பசு கடவுளுக்கு இணையான புனிதப் பிராணியாகும். முஸ்லிம்களுக்கோ பன்றி அறவே விரும்பப்படாத பிராணி. மதத்தின் அடிப்படையில் பசு, பன்றி ஆகியவற்றைப் பற்றிய நம்பிக்கைகளும் உணர்ச்சிகளும் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களான சிப்பாய்களின் மனத்தில் வேரூன்றி இருந்தன. இச் சமயத்தில் ஒரு செய்தி வெளிப்பட்டது. அஃதாவது, அப்பொழுதுதான் என்பீல்ட் துப்பாக்கிகள் (enfield rifles) அல்லது சுழல் துப்பாக்கிகள் என்னும் புது வகையான துப்பாக்கிகள் வந்திருந்தன. இச் சுழல் துப்பாக்கிகளைக் கொழுப்புத் தடவப்பட்ட தோட்டாக்களைப் பயன்படுத்துவது மூலமே கையாள முடியும். தோட்டாக்கள் துப்பாக்கியினுள் செலுத்துமுன் அவற்றை வாயால் கடித்துக் கிழிக்கவேண்டும். ஆனால், அக் குண்டுகளும் அவற்றின் பொதியுறைகளும் பசு

பன்றிகளின் கொழுப்பினுல் தடவப்பட்டிருந்தமையால் அவை இந்து, முஸ்லிம் படை வீரர்களின் மத உணர்ச்சிகளைப் பொங்கி எழும்படி செய்தன. ஏனெனில், கொழுப்பு தடவப்பட்ட குண்டுகளைக் கையாள்வதற்கு இந்துமதச் சிப்பாய்கள் ஆட்சேபித்தனர். அருவருப்பின் காரணமாக அவற்றைக் கையால் தொடக்கூட விரும்பவில்லை முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த சிப்பாய்கள். கொழுப்புக் குண்டுகளுக்கு எதிரான சிப்பாய்களின் எதிர்ப்பு மதச் செய்திகளின் காரணமாக நியாயமானதாகவே இருந்தது. ஆனுல், சிப்பாய்களின் மத உணர்ச்சிகளுக்கும், அவர்களின் மனக் குமுறல்களுக்கும் ஆட்சியினர் மதிப்பளிக்கவில்லை. எனவே, சிப்பாய்களின் புண்பட்ட மன உணர்ச்சிகள் இறுதியாக 1857ஆம் ஆண்டு சனவரித் திங்கள் கல்கத்தாவிற்கு அருகில் உள்ள டம் டம் (Dum Dum) என்னும் இடத்தில் தீப் பிழம்புகளாக உருவெடுத்தன. ஏனெனில், அழுகி நாற்றம் எடுத்திருந்த தோட்டாக்களைப் படைவீரர்கள் பயன்படுத்த மறுத்தனர். எனினும், கம்பெனியின் ஆங்கில உயர் இராணுவ அதிகாரிகள் சிப்பாய்களைக் கட்டாயப்படுத்தியவண்ணம் இருந்தனர். இக் கட்டாயத்தையும், மனக் குமுறல்களையும் பொறுத்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டவுடன் 1857ஆம் ஆண்டு மேத் திங்கள் பத்தாம் நாளன்று மீரட் என்னும் இடத்தில் சிப்பாய்கள் அதிகாரிகளுடன் கை கலந்தனர். இதில் பல பிரிட்டிஷ் அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த ஆரம்பநிலை வெற்றி உணர்ச்சியுடன் கிளர்ச்சிக்காரர்கள் டில்லியை நோக்கிப் புறப்பட்டனர். அங்கு இந்தியக் கோட்டைக் காவற்படையினரும் கிளர்ச்சிக்காரர்களுடன் ஒன்று சேர்ந்தனர். இக் கிளர்ச்சிக்காரர்கள் ஊர் பேர் தெரியாத நிலையிலிருந்த மொகலாயப் பேரரசர் பகதூர்ஷாவைப் புரட்சித் தலைவராக நியமித்தனர். கம்பெனியின் ஆட்சி விளைவுகளால் பாதிக்கப்பட்டிருந்த பாமரக் கும்பலும், புரட்சிப் படைவீரர்களுடன் சேர்ந்துகொண்டு மீரத், டில்லி, கான்பூர், ஜான்ஸி ஆகிய இடங்களில் பல நாசங்களைச் செய்தனர்.

புரட்சிச் சிப்பாய்களுடன் சேர்ந்த பாமர மக்கள் குறிக்கோளற்றவர்களாகவும், அமைப்பு முறைக்கு உட்படாதவர்களாகவும் இருந்தனர். படைவீரர்களின் புரட்சியும் பாமர மக்களின் கிளர்ச்சியும் ஆரம்பத்தில் சிறு வெற்றிகளைப் பெற்றிருந்த போதிலும், அவை முன்கூட்டித் திட்டமிடப்படாமல் விவேக மற்றவையாய் இருந்ததால் பிசு பிசுத்துப் போகவேண்டிய தலைவிதியையும் எளிதில் நசுக்கப்பட்டுவிடக்கூடிய தன்மையையும் பெற்றன. எனினும், பாமர மக்களின் சார்பாகப் பேஷ்வா நாளுசாகிப், ஜான்ஸிராணி இலக்குமிபாய், ஜகதீஸ்பூரைச் சேர்ந்த குன்வார்சிங்,

நேர்மையும் தீரமும் கொண்டிருந்த ஆஸிமுல்லா எனப்பட்ட நாஞுசாகிப்பின் தளபதி, சூழ்ச்சி அல்லது தந்திரப்போர் முறையில் சிறந்து விளங்கிய தாந்தியாதோபி ஆகியோர் கம்பெனியின் ஆட்சிக்கு எதிராக அணிவகுத்து நின்றனர். ஆனுல், இவர்கள் புரட்சியில் ஈடுபட்டதற்குச் சொந்தக் காரணங்களும் சில இருந்தன. எடுத்துக்காட்டாக, பேஷ்வா பாஜிராவுக்குக் கம்பெனியின் அரசாங்கத்திஞல் கொடுக்கப்பட்டு வந்த ஒய்வு ஊதியம் நிறுத்தப் படாமல் அவரது வளர்ப்பு மகனை நாஞுசாகிப்பிற்குத் தொடர்ந்து கொடுக்கப்பட்டிருக்குமாயின் நாஞுசாகிப் புரட்சியில் ஈடுபட்டிருக்க மாட்டார் என்று கொள்ளலாம். தனிப்பட்ட முறையில் இந்திய இளவரசர்களுக்கும் கம்பெனியின் ஆட்சிக்கு எதிராக மனத் தாங்கல்கள் ஏற்பட்டிருந்தன. அவர்கள் தம் மனத்தாங்கல்களை நேர்மையாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்தினர். ஆனுல், அவற்றை ஆட்சியாளர்கள் உதாசீனம் செய்தனர். எனவே, அவர்கள் கம்பெனியின் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக வாளேந்திப் போர்க்கொடியை உயர்த்த வேண்டியவராயினர். ஜான்ஸிராணி ஆங்கிலேயருடன் செய்திருந்த உடன்படிக்கைகளுக்கு ஒப்ப மேற் கொண்ட நேர்மையான முயற்சிகள் பல. தமது மதிப்புக்குக் குறைவு ஏற்படாத செயல்களை ஆங்கிலேயர் மேற்கொள்ளவேண்டும் என்று ஜான்ஸிராணி அவர்களிடம் மன்ருடியதும் உண்டு. ஆனுல், ஜான்ஸிராணியின் உண்மை உள்ளத்தை ஆங்கிலேயர் உணர வில்லை; அவருடைய உணர்ச்சிகளுக்கு மதிப்பும் அளிக்கவில்லை. ஜான்ஸிராணியின்மீது ஆங்கிலேயர் ஐயப் பார்வையையே இறுதி வரை கொண்டிருந்தனர். எனவே, தமது முறையீடுகளுக்கும் மன்ருடுதல்களுக்கும் மதிப்பில்லை என்று முடிவுகட்டிய பின்னரே ஜான்ஸிராணியும் வெகுண்டெழுந்தார். பெண்ணேயாயினும் மண்ணுளும் தகுதி படைத்திருந்த ஜான்ஸிராணி இறுதிவரை ஆங்கிலேயருடன் போரிட்டுப் போர்களத்தில் மாண்டார். இப்படிப் பாமர மக்களின் தலைவர்களாய் இருந்தவர்கள் புரட்சியில் ஈடுபடப் பலகாரணங்கள் இருந்தன. எனினும், படைவீரர்களும், பாமரத் தலைவர்களும் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் புரட்சியின்மூலம் கொடுத்த சவால், இறுதியில் தோல்வியைத் தழுவியது.

பெரும் புரட்சியின் தோல்விக்கான காரணங்கள்

இந்தியச் சிப்பாய்களும் பாமரத் தலைவர்களும் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக மேற்கொண்ட புரட்சியும் சவாலும் தோல் வியைத் தழுவப் பல காரணங்கள் இருந்தன. 1857-ல் இந்தியப் படைத்துறையில் 2,38,000 படைவீரர்கள் இருந்தனர். இவர் களில் 38,000 பேர் ஐரோப்பியச் சிப்பாய்கள். ஏனையோர் இந்தியச் சிப்பாய்களாவர். எண்ணிக்கையில் அதிகமானவர்களாயிருந்தும்

இந்தியச் சிப்பாய்கள் இறுதியில் இடுப்பொடிந்தவர்களாயினர். வங்கத்திலிருந்த இராணுவந்தான் இப் புரட்சியில் பெரும்பாலும் நாசத்திற்கு உள்ளாகியது. எனினும், வங்கத்து இராணுவப் படையினரும் முழு மனத்துடனோ, உணர்ச்சி மிக்க முழு தீரத்துடனோ கலகத்தில் ஈடுபடவில்லை. அவர்களின் புரட்சியையும் ஆற்றலையும் நல்வழிப்படுத்தக்கூடிய வகையில் தலைமையும் அவர்களுக்கு இருக்கவில்லை. மேலும், இந்தியச் சிப்பாய்களில் சீக்கியர்களாகவும், கூர்க்காக்களாகவும், பஞ்சாபி முஸ்லிம்களாகவும் இருந்த படைவீரர்கள் முழுமனத்துடன் கம்பெனியின் அரசாங்கத்திற்கு ஆதரவாகப் போரிட்டனர்.

அடுத்து, அரசாங்கத்திற்கும் அமைதியின்மைக்கும் சட்ட ஒழுங்குச் சீர்கேட்டிற்கும் வட இந்தியாவின் பெரும் பகுதிகளே ஆட்பட்டு, புரட்சியில் ஈடுபட்டிருந்தன. பஞ்சாப், காஷ்மீர், ராஜஸ்தான், தென்னிந்தியா, பம்பாய் மாநிலம் ஆகியவற்றை உள்ளிட்ட நாட்டின் பிற பகுதிகள் ஆச்சரியத்தை யூட்டும் வகையில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான சவாலாக எழுந்திருந்த இப் புரட்சிக்கு ஆதரவைக் காட்டவில்லை. அவை புரட்சிக்கு விருப்பையோ வெறுப்பையோ காட்டாது, கவலையற்றுச் சார்வு எதிர்வு அற்றவையாய் இருந்தன. கம்பெனியின் ஆட்சிக்கும் அரசாங்கத்திற்கும் நேர்மையுடன் போரிட்ட படைவீரர்களுக்கும், பிரிட்டிஷ் சிப்பாய்களுக்கும் வலிவூட்டும் வகையில் சென்னை, பம்பாய், சிலோன் ஆகிய இடங்களிலிருந்து சிப்பாய்கள், கலகமும் புரட்சியும் நடந்த இடங்களுக்கு மிகவும் இக்கட்டாயிருந்த அச் சமயத்தில், அனுப்பப்பட்டனர். அப்பொழுது சீனுவில் இருந்த எல்ஜின் பிரபு கூட ஒரு படையை இந்தியக் கம்பெனிக்கு உதவியாக அனுப்பி வைத்தார். எனவே, பிரிட்டிஷ்காரர்கள் எளிதில் புரட்சியை அடக்கி இழந்த இடங்களைத் திரும்பப் பெற முடிந்தது என்பதில் ஐயமோ ஆச்சரியமோ இருக்கமுடியாது. எனவேதான், புரட்சியாளர்களின் வலிவு மிக்க கோட்டையாயிருந்த டில்லியையும், அதன் மன்னரான பகதூர்ஷாவையும் முறையே கைப்பற்றவும், சிறைப்படுத்தவும் ஆங்கிலேயரால் முடிந்தது. 1858ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இருபத்து ஏழாம் நாளன்று பகதூர்ஷாவின்மீது ஆங்கிலேயர், தமது அரசாங்கத்திற்கு எதிரான போரில் ஈடுபட்ட செயலுக்காக டில்லியிலேயே வழக்கைத் தொடர்ந்து அவரை நாடு கடத்தினர். நாடு கடத்தப்பட்ட பகதூர்ஷா பர்மாவிலுள்ள பெகு (Pegu) எனும் இடத்தில் தமது எஞ்சிய காலத்தை 1862 வரை கழித்து இறந்தார்.

பாமர மக்கள் மேற்கொண்ட கிளர்ச்சியும் நல்ல அடித்தளத்துடன் அமையப் பெறவில்லை. ஒருமித்த ஒன்றித்த உளப்

பாங்குடன், உயரிய கொள்கைப்பற்றுடன் பாமர மக்களின் எதிர்ப்புணர்ச்சியைத் திரட்டி நல்வழிப்படுத்தியதில் இந்தியப் புரட்சித் தலைவர்கள் தோல்வி கண்டனர். அத் தலைவர்களில் ஒரு சிலரைத் தவிர, ஏனைய யாவரும் தனிப்பட்ட முறையில் கம்பெனியின் ஆட்சியால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர்; மனம் வெதும்பிக் காழ்ப்புணர்ச்சியுடன் இருந்தனர். அவர்கள் தமது வெறுப்பையும் மனக் குறைகளையும் நிவர்த்தி செய்து கொள்ள ஏதுமறியா மனத்தில் ஆங்கிலேயரின் ஆட்சியினால் மேற் கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களால் நாட்டுமக்களின் சமுதாய, பொருளாதார வாழ்க்கையில் தோன்றி வந்த மாற்றங்களைப்பற்றி அச்சத்தைத் தோற்றுவிக்கும் வகையில் பிரசாரங்களை மேற்கொண் டனர். பிற்காலத்தில் ‘வெள்ளையனே வெளியேறு’ என்று ஒரே கொள்கை, செயற்பாடு போன்றவற்றின்மூலம் நாட்டு மக்கள் யாவருடைய திறமை, வலிமை, ஆதரவு ஆகியவற்றைத் தேசியத் தலைவர்கள் திரட்டி நல்வழிப்படுத்தி, செயல்படுத்தியதைப் போலவும், ‘சாதி சமய ஏற்றத் தாழ்வுகள் அற்ற ஒரு சமுதாயத்தை நீதியின் அடிப்படையில் ஏற்படுத்துவதே நமது நோக்கம்’ என்று மக்களைப் பக்குவப்படுத்தி ஒருமித்த நிலையில் அவர்களுடைய சக்திகளை நல்வழிப்படுத்தி, ஆக்கப் பாதையில் இன்றைய தலைவர்கள் அழைத்துச் செல்வதைப் போலவும், 1857ஆம் ஆண்டில் மக்களைத் திரட்டி ஒரே குறிக்கோளில் ஒரே பாதையில் செல்லக்கூடிய ஆற்றலை இந்தியப் புரட்சியின் தலைவர்கள் பெற்றிருக்கவில்லை. அவ்வாறான ஆற்றலைப் பெற்றிருந்த ஒரு சிலரும் அத்தகைய போக்கில் செயல்படாது போயினர். புரட் சியின் தலைவர்களிடையே நோக்க ஒருமைப்பாடும், செயல் ஒற்று மையும் இருக்கவில்லை. இதனால் இந்தியத் தேசியக் குணநலனும், தன்மையும் கீழ்மட்ட நிலையை அடைந்தன. புரட்சித் தலைவர்கள் ஒன்றுபட்டு நெருங்கி உழைக்கக்கூடிய உளப்பாங்கைப் பெற்றிருக்க வில்லை. அவர்களிடையே கருத்து ஒற்றுமையும் நிலவவில்லை. அவர்கள் தம்முள் ஒருவர் மற்றொருவருக்கு எதிராகப் போட்டி, பொறாமைகளையும் அரசியல் சூழ்ச்சிகளையும் மேற்கொண்டிருந் தனர். உண்மையிலேயே, புரட்சியின் தோல்விக்கு இவையே முக்கிய காரணமாகும். ‘ஒற்றுமையே பலம்’ ‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கின் நம்மனைவர்க்கும் தாழ்வே’ என்னும் பழமொழிகளின் உண்மையை ஏனோ அவர்கள் உணர்ந் திருக்கவில்லை. அவர்கள் தம்மிடையே கொண்டிருந்த கருத்து வேற்றுமைகளும் பொறாமைகளும் எத்தகைய கேடான விளைவுகளை, தாம் மேற்கொண்டிருந்த பொதுக் குறிக்கோளான கம்பெனியின் ஆட்சியை அகற்ற முற்பட்ட புரட்சியின்மீது ஏற்படுத்தும் என்பதைச் சிறிதும் சிந்தித்துப் பார்க்கவேயில்லை.

எனவேதான், ஆங்கிலேயரின் அகந்தைகொண்ட கம்பெனி ஆட்சியை இந் நாட்டை விட்டு விரட்டியிருக்கக்கூடிய வலிவையும் பொலிவையும் 1857ஆம் ஆண்டின் புரட்சி பெற்றிருக்கவில்லை.

பிரிட்டிஷ் உயர் இறைமைக்கு எதிராக மனத்தாங்கல்களையும் குமுறல்களையும் பல இந்திய அரசர்கள் பெற்றிருந்தபோதிலும் அவர்கள் இப் புரட்சியில் ஈடுபடாமல் ஒதுங்கியும் இருந்தனர். மேலும், கம்பெனியின் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு நேர்மையைக் காட்டும் வகையில் தமது ஆதரவையும் உதவியையும் சில அரசர்கள் நேரிடையாகக் கொடுத்தனர். ஹைதராபாத் நிஜாம், சிந்தியா, ஹோல்ஹார், தெயிக்வார், இராஜ்புதனத்து அரசர்கள், மைசூர் மற்றும் திருவாங்கூர் மகாராஜாக்கள், பாட்டியாலா, ஜிந்த் ஆகியவற்றின் சீக்கிய அரசர்கள் ஆகியோர் நிலையான உறுதியுடன் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் தாம் கொண்டிருந்த உறவுகளைப் பேணிப் பாதுகாத்தவண்ணம் ஆதரவைக் காட்டினர். குவாலியரும், ஹைதராபாத்தும் மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தன. எனினும், அவை பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு ஒத்துப் போகக்கூடிய போக்கையே 1857-ல் மேற்கொண்டன. பேராசிரியர் P.E. இராபர்ட்ஸ் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளது போல், 'சிந்தியா ஆங்கிலேயருக்கு எதிரான புரட்சிக் கொடியை உயர்த்தி இருப்பாரேயானால், மராத்திய அரசர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிரான வலிவு மிக்க எதிர்ப்பைக் காட்டிப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தியிருக்கக் கூடும். ஆனால், இந் நாட்டின் துரதிர்ஷ்டம் அல்லது ஆங்கிலேயரின் அதிர்ஷ்டம் அவ்வாறு நடைபெறவில்லை. ஏனெனில், மகாராஜா சிந்தியாவின் பிரதம அமைச்சராயிருந்த சர் தினகர் ராவ் என்பவரும், நிஜாமின் அறிவுரை ஆலோசகராயிருந்த சர் ஜாலர்ஜங் என்பவரும் தத்தம் அரசர்கள் கம்பெனியின் பிரிட்டிஷ் இராச்சியத்திற்கு எதிரான வழியில் செல்லாமல் அவ்வரசுக்குத் தமது நேர்மையையும், நேசத்தையும் காட்டும்படியாகப் புரட்சிச் செயல்களில் ஈடுபடக்கூடாது என்று அறிவுரை கூறினர்.'[1] இதனால் பன்முனைத் தாக்குதல் ஏற்படுவதும், அதனை ஆங்கிலேயர் சமாளிக்க முடியாமல் போயிருக்கக்கூடியதுமான புரட்சியின் தன்மையும் போக்கும் கிட்டாது போயின.

'1857-ல் ஏற்பட்ட படைவீரர் கலகம் என்னும் பெரும் புரட்சி ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்களால் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்ட முதல் பெரும் அரசியல் துணிவு அல்லது முயற்சி'

[1] 'History of British India under the company and Crown.' by P. E. Roberts, p. 378.

என்று பலர் கருதுகின்றனர். இத்தகைய முக்கியத்துவம் அப் புரட்சிக்குக் கொடுக்கப்பட்டுப் பேசப்படுகின்றது. ஆனுல், ஆயுதப் புரட்சியின்மூலம் தாம் இழந்திருந்த சுதந்திரத்தைத் திரும்பப் பெறு வதற்கான வாய்ப்பு நம்மவர்களுக்கு ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் ஆட்சிக் காலத்தில் இருந்தது. ஆனுல், அது முறியடிக்கப்பட்டது. 1857-ல் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராக எழுந்த சக்திகள் அப்பொழுதே தோன்றியிருக்குமாயின், ஒரு வேளை இந்தியர்களின் கனவு நனவாகி இருக்கக்கூடும். மாருக, பிரிட்டிஷ் இராணுவத்தின் பலம் ஒருவாறு அறியப்பட்டிருந்த நிலையிலும், தமக்குள் வேற்று மைகளையும், பூசல்களையும் மேற்கொண்டிருந்த நிலையிலும் கலகக் காரர்கள் புரட்சியில் ஈடுபட்டது காலம் கடந்து மேற்கொண்ட செயலாகவே இருந்தது. ஆங்கிலேயருக்கு எதிராக முனைப்பான சவாலையும் புரட்சியையும் சந்தித்துச் சமாளித்து வெற்றி பெறக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்த மராத்தியப் பேரரசு கலைக்கப் பட்ட பின்னரும், 1814-1815ஆம் ஆண்டுகளில் தோன்றிய நேபாளப் போர் மற்றுமொரு பெரிய வாய்ப்பை இந்திய அரசு களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இப் போரில் வளர்ந்த வண்ணம் இருந்த பிரிட்டிஷ் சக்திக்கு எதிராக இந்திய அரசுகள் ஒரு தலைமையின்கீழ்த் திரண்டிருக்குமாயின் ஆங்கில ஆதிக்கத்தை முறியடித்திருக்கக்கூடும். இன்றைக்கும் தமது வீரதீரச் செயல் களால் சிறப்பைப் பெற்றிருப்பவர்கள் நேபாளத்துக் கூர்க்காக் களாவர். இத்தகைய சிறப்பைப் பெற்றுள்ள கூர்க்காக்களின் இராணுவம் 1714–15-ல் நடந்த போரில் பன்னீராயிரம் சிப்பாய் களையே கொண்டிருந்தது. எனினும், அந்த இராணுவம் ஆங்கிலப் படையினரை நடுநடுங்குமாறு செய்தது. இத்தகைய இராணுவத் தோடு சுதேசி அரசுகளின் இராணுவங்களும் தாய்நாட்டுப் பற்றுடன் ஆங்கிலேயருடன் எதிர்த்துப் போராடி இருந்தால் வெற்றிகண்டிருக்க முடியும். நேபாளப் போரில் பிரிட்டிஷ் இராணுவத்திற்கு ஏற்பட்ட அச்சம், இன்னல்கள், ‘ வெற்றிபெற முடியுமோ முடியாதோ’ என்று ஆங்கிலேயர் கொண்டிருந்த பயமான நிலை போன்ற பல செய்திகளை மெட்காஃப் என்னும் ஆசிரியர் கூறியிருப்பதை J. W. கேயி தமது பனுவலில் அழகுபட எடுத்துரைத்துள்ளார். அந்நியரான ஆங்கிலேயரைப் புறமுது கிட்டு ஓடிவிடும்படி செய்யக்கூடிய வாய்ப்பும் வலிமை வசதிகளும் இருந்தன. இதனை நன்கு உணர்ந்திருந்த நேபாள அரசர், இரஞ்சித்சிங், சிந்தியா போன்ற சுதேசி அரசர்களை உதவி நல்கி நாட்டைக் காக்கும் நற்பணியில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுத்தார். ஆனுல், அவரது வேண்டுகோள் இந்தியச் சுதேசி அரசர்களின் மதிப்பைப் பெறவில்லை. தேடிவந்த நல்வாய்ப்பை அவர்கள் உதறிவிட்டனர். எனவே, நேபாள அரசர் தனித்து

நின்று ஆங்கிலேயருடன் போரிட்டு வெற்றி தோல்வியைத் தழுவாமல் நேச உடன்படிக்கை ஒன்றிற்குக் கம்பெனியின் அரசாங்கத்தை உட்படுத்தினர். அன்றுமுதல், இந் நாட்டை விட்டுச்சென்ற தமது ஆட்சிக் காலத்தின் கடைசி கட்டம் வரை நேபாளத்துடன் போரிட முனையாது, அதனைத் தனித்ததோர் அரசாகவே பிரிட்டிஷ் பேரரசு வைத்திருந்தது எத்தகைய அருமையான வாய்ப்பை இழந்துவிடும்படியான அரசியல் குருமதியை அல்லது தேர்ச்சியற்ற அரசியல் அறிவை, இந்திய அரசர்கள் பெற்றிருந்தனர் என்பதையே நமக்கு எடுத்துக்காட்டு கிறது. இத்தகைய அரசியற் குருமதியும் நலிவான தேசீயத் தன்மையும் 1857லும் மிகுந்திருந்தன. எனவேதான், வலிமையை நாம் பெற்றிருந்தபோதிலும் எளிமையாக ஆங்கிலேயரால் தோற் கடிக்கப்பட்டுவிட்டோம்.

1814 - 1815-ல் நேபாளப் போர் நடந்தபொழுது ஆங்கிலே யரின் ஆதிக்கமும் வலிமையும் 1857-ல் இருந்ததைப்போல் ஆழமாக வேரூன்றியும் வலிமை மிக்கதாகவும் இருக்கவில்லை. எனவே, 1857-ல் தோன்றிய புரட்சி 1814 - 1815-ல் தோன்றி யிருக்குமாயின் இந் நாட்டின் வரலாறும், அரசியலும் கண்டிப்பாக மாறியிருக்கும். ஆனால், இது நடைபெறவில்லை. 1815 முதல் 1857 வரையிலான இடைப்பட்ட நாற்பத்திரண்டு ஆண்டுகள் இந் நாட்டின் சோதனைமிக்க காலமாக இருந்தது. இக் காலத்தில் தான் இந் நாட்டின் பொருளாதாரநிலை வெகுவாக மோசம் அடைந்தது. சுதேசி அரசர்களின் இராணுவ பலம் வெகுவாக நலியத் தொடங்கிற்று. படுவேகத்துடன் வளர்ந்துகொண்டிருந்த அல்லது பரவிவந்த பிரிட்டிஷ் பேரரசையும் அதன் உயர் இறைமை அரசியல் சக்தியையும் எதிர்த்துச் சமாளிக்கக்கூடிய போதுமான சாதனங்கள் சுதேசி அரசர்களுக்கோ பாமர மக்களுக்கோ கிடைக்கவில்லை. அதே நேரத்தில் புதியதொரு நாகரிகத்தைத் தனது செல்வச் செழிப்பின் காரணமாக இங்கிலாந்து நாடு தோற்று வித்து, மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு ஓர் உதாரணமாகத் திகழ ஆரம்பித்தது. ஐரோப்பிய நாடுகள் பிரிட்டனின் உயர் நிலையைப் போற்றியதோடன்றி, அதன் காலனி ஏகாதிபத்தியத்தை ஏற்ற வண்ணமும் இருந்தன. எனவே, 19ஆம் நூற்றுண்டின் துவக்க காலத்திலிருந்து தனது பலம் படுவேகமாக வளர்ந்து, பரவி வரும் வாய்ப்பு வசதிகளை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசு பெற்றிருந்தது. அதே நேரத்தில், நம்மவர்கள் ஆக்கமும் ஊக்கமும் இழந்தவர்களாயும், ஒற்றுமை யுணர்ச்சியையும், மிகத் தீவிரமான நாட்டுப்பற்றையும் கொண்டிராதவர்களாயும், போர்த்திற முறைகளை அறிந்திராதவர்களாகவும், தெளிவான அரசியல்

அறிவைப் பெற்றிராதவர்களாகவும், 'ஆங்கிலேயன் இந் நாட்டிற்கே எதிரி; மக்களினத்தை அடிமையாக்கும் அவலச் சின்னமே பிரிட்டிஷ் இந்திய அரசு' என்ற பொது நோக்கைக் கொள்ளாதவர்களாகவும், சஞ்சலபுத்தி படைத்தவர்களாகவும் இருந்தனர். காலத்தின் கோலம் பலவாறாக அமைந்ததால் 1857-ல் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கவேண்டிய அரசியல் பெரும் வெற்றி கிடைக்காமல் போய்விட்டது. ஒருகால் எல்லோரும் ஒன்று கூடி ஒரு தலைமையின் கீழ்ப் பன்முனைத் தாக்குதல்களை நடத்தி வெற்றியைக் கண்டிருந்தாலும், ஆங்கிலேயர் தாம் பெற்றிருந்த வலிமை, வள ஆதாரங்கள், மற்ற வசதிகள் பலவற்றின் துணையோடு இந் நாட்டைத் தாக்கித் திரும்பப் பெற்றிருப்பர். எனவே, 1857ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்திய அரசியலை அகற்றுவதற்குப் பொருத்தமான காலமாக அமையவில்லை. அந்நியரான ஆங்கிலேயரை இந் நாட்டின் அரசியல் மற்றும் ஆட்சிப் பாதைகளிலிருந்து முற்றிலும் அகற்றி இருக்கவேண்டுமாயின் அதனை 1814 - 15-ல் நடந்த நேபாளப் போரின்மூலமே செய்திருக்க வேண்டும். அது தவறிவிட்டது. எனவே, 1857க்குப் பிறகு, மேலும் தொண்ணூறு ஆண்டுகளுக்கு மண்ணும் இறைமையும் ஆட்சி அதிகாரமும் சில மாற்றங்களுடன் ஆங்கிலேயரிடமே தங்கி இருப்பதை இந் நாட்டவர்கள் சகித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. இதனால், இனிய சுதந்திரத்தைச் சுவைப்பதற்கு 1947 வரை இந்தியர்கள் காத்திருக்க வேண்டிய அரசியல் தலைவிதியை 1857-ல் பெற்றுவிட்டனர். மற்ற ஐரோப்பிய நாடுகளில் பல விதமான அரசியல் கோட்பாடுகளும் தத்துவங்களும் தோன்றி மக்களின் அரசியல்அறிவு தேர்ச்சியுற்றிருந்ததைப்போல் இந் நாட்டில் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் எவையும் இருக்கவில்லை. அவ்வாறு தோன்றிய ஒரு சிலவும் அரசியல் தத்துவங்களாக உருவெடுக்காமல், சமயக் கோட்பாடுகளாகவும் சம்பிரதாயப் படிப்பினைகளாகவுமே அமைந்தன. இது மற்றுமொரு குறை. அரசியல் ரீதியாகப் பேரறிஞர்களும் பெருந்தலைவர்களும் கர்ம வீரர்களும் நாட்டு மக்கள் யாவரையும் தலைமை தாங்கி நடத்திச் செல்லக்கூடிய நல்லவர்களும் வல்லவர்களும் 1857க்குப் பின்னர் தான் தலையெடுத்துச் செயல்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனவே, அரசியல் ரீதியாக முழுமையான தேசீய உணர்ச்சி தோன்றி, தேசீய இயக்கங்களும் சுதந்திர இயக்கங்களும் 1857க்குப் பிற்பட்ட நூறாண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

'சிப்பாய்க் கலகமெனும் பெரும்புரட்சி இந் நாட்டு மக்களில் பெரும்பாலோர் விரும்பிய மாற்றத்தையும், சுதந்திரத்தையும்

கொடுக்கவில்லை யென்றாலும், மக்கள் மனத்தில் தேசீய உணர்ச்சியையும், சுதந்திரத்தைப் பெறவேண்டும் என்ற ஆர்வத்தையும் தோற்றுவிக்கக் கூடிய சுதந்திரப் போராக அமைந்தது' என்று டாக்டர் பட்டாபி சீதாராமையா, சாவர்க்கர், அசோக்மேத்தா போன்ற நல்லறிஞர்கள் விரிவாக எடுத்தியம்பியுள்ளனர். இக் கலகம் அல்லது புரட்சி எப்படிப்பட்டதாக இருந்திருப்பினும், அதன் தோல்விக்கான காரணங்கள் எவையாக இருந்தபோதிலும், அதன் தோல்வியைக் கண்டு துவளாத மனத்தை இந் நாட்டின் நல்லறிஞர்கள் பலர் பெற்றிருந்தனர். பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கம் தேசீய மக்களுக்கு நல்லவற்றைச் செய்ய முடியாத குறைகள் பலவற்றைக் கொண்டிருந்தபோதிலும், 1857-ல் இந் நாட்டில் நிலவிய நிலவரங்களை மனத்தில்கொண்டு பார்க்கும் பொழுது, பிரிட்டிஷ் அரசாங்கமே ஒரு வகையில் அப்பொழுது விரும்பத்தக்கதாகவும் ஏற்புடையதாகவும் இருந்தது என்றும் கூறலாம். ஏனெனில், தேசீய சுதந்திரத்தைப் பெற்று விடவேண்டும் என்ற கிளர்ச்சி ஆர்வத்துடனும், ஆரவாரப் போராட்டங்களுடனும் செயல்களை இந்தியர்கள் பிற்காலத்தில் மேற்கொள்வதற்குத் தகுந்த வாய்ப்புகளையும், சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியதாய் அது மேலும் தொடர்ந்து நீடிக்க வேண்டியதாயிற்று. ஒருகால் சிப்பாய்க் கலகம் இந்தியர்களுக்கான வெற்றியாய் அமைந்திருப்பின், பகதூர்ஷாவோ அல்லது நானாசாகிப்போ இந்தியாவின் பேரரசராக வந்திருக்கமுடியும். ஆனால், அவர்கள் எந்த விதத்திலும் இந் நாட்டின் பொருத்தமான அரசர்களாக இருந்திருக்கமுடியாது. ஓரளவிற்கு அரசியல் விழிப்புணர்ச்சியையும், ஆக்க உணர்ச்சிகளையும் பெற்றிருந்த இந்திய மக்கள் யாவரையும் ஓர் இறைமையின்கீழ் ஒருமித்த ஓர் அரசாங்கத்தின் துணைகொண்டு கட்டிக் காக்க வலிவையும், பொலிவையும் அவர்கள் பெற்றிருந்தார்கள் என்று துணிந்து கூறுவதற்கு இல்லை. 1857-ல் இந் நாட்டில் தோன்றியிருந்த புதியதொரு தேசீய உணர்ச்சி உந்தலுக்கு ஒப்பவும், புதுமைக் கோட்பாடுகளுக்கு ஒப்பவும், பகதூர்ஷா, நானாசாகிப் போன்றவர்களைப் போலல்லாது, பெருவழி நோக்கையும், பெருமதிப் போக்கையும் கொண்ட புதிய தலைவர்களை இந் நாடு பெறவேண்டிய அரசியல் தேவை எழுந்தது. இந் நாட்டு மக்களையும் அவர்களின் உள்ளார்வப் பெருநோக்கையும், இலட்சியங்களையும் பிரிட்டனின் எல்லா இராணுவச் சக்திகள் யாவும் திரண்டு வந்தாலும்கூடத் தோற்கடிக்க முடியாதவகையில் அரசியல் ரீதியாக, மக்களை நாட்டு உணர்ச்சியுடன் நயமான வழிகளில் தயார்செய்து, தலைமை தாங்கி ஆட்சியை நடத்தக்கூடிய திறமை பெற்ற பெருந்தலைவர்களையும், அருந்தொண்டர்களையும் இந் நாடு பெற வேண்டியிருந்தது.

அதற்கு முன்னரே கூறியதுபோல், நாம் மேலும் பல ஆண்டுகள் காத்திருக்கவேண்டிய அவசியம் இருக்கவே செய்தது. எனவே, 1857-ல் நடைபெற்ற படைவீரர் புரட்சி நம் நாட்டவரின் சார்பில் தோல்வியைக் கண்டதால் நாம் எவ்வித ஆயாசத்தையும் அல்லது மன உளைச்சலையும் பெறத் தேவையில்லை. அடிப்படையான அரசியல் கோட்பாடுகளைச் சார்ந்து அரசையும் அரசாங்கத்தையும் அமைத்துவிடுவதால் மட்டும் ஒரு நாட்டுமக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிட முடியாது. அவ் வரசையும், அரசாங்கத்தையும், அவற்றுக்கு உயிரையும் இயக்கச் சக்தியையும் கொடுக்கக்கூடிய மக்களையும் நன்முறையில் நடத்திப் பேணிப் பாதுகாக்கக்கூடிய நல்லாட்சியாளர்கள் மிகமிகத் தேவையாகும். திறமையிருந்தும் நல்லாட்சியாளர்களாக இந்தியர்கள் உருவாக்கப்பட்டிராத சமய மாக 1857ஆம் ஆண்டு இருந்தது. கம்பெனியின் அரசாங்கத்தின் உயர்பதவியைப் பெற்றிருந்த இந்தியர்கள் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவில் ஒருசிலரே இருந்தனர். எனவே, நல்லாட்சித் தேவையின் நியதியிலும், அத்தகைய நியதி நம்மவர்களான இந்தியர்கள் மூலம் செயல்படுத்தப்படுவதிலும் பற்றுக்குறையையும் பெற்றிருந்த நிலையை 1857-ல் இந் நாட்டில் நிலவிய அரசியல் நிலவரம் நமக்கு அறிவிக்கின்றது. எனவே, 1857-ல் எந்த நிலவரங்கள் நிலவும் வகையில் படைவீரர் புரட்சி முடிவுற்றிருந் ததோ அம் முடிவின் தன்மை குறித்து நாம் வருந்தத் தேவையில்லை. எதிர்காலத்தில் இந்தியர்கள் பெறவிருந்த அரசியல் மற்றும் ஆட்சி ரீதியான அனுபவங்கள், பயிற்சிகள், வளர்ந்து திரட்டப்பட வேண்டிய மக்களின் ஆதரவு, ஆக்க சக்தி ஆகியவற்றை மனத்தில் கொண்டு பார்க்கும்பொழுது 1857-ன் படைவீரர் புரட்சி தோல்வியை நமக்குக் கொடுத்தது, ஒரு விதத்தில் நல்லதாகவும் அமைந்தது என்று கொள்ளலாம். ஏனெனில், படைவீரர் புரட்சி யின் முடிவின் பயனாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி முடி வுற்று பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடி ஆட்சியின்கீழ் இந் நாடு கொண்டுவரப்பட்டது. இதனால், புதியதோர் அரசியல் மற்றும் ஆட்சிப் பாதையை நோக்கி, மக்களின் பிரதிநிதித்துவ நிறுவனங் களைத் தோற்றுவித்து, விரிவுபடுத்தி அவற்றின் துணைகொண்டு, ஸ்தல சுயஆட்சியுடன் இந் நாட்டின் அரசியலும் அரசாங்கமும் நடப்பதற்குப் பச்சைக் கொடி காட்டப்பட்டது. எனவே, இந்திய அரசியல் மற்றும் அரசாங்க வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்த படைவீரர் புரட்சியின் முடிவின் முக்கியத்துவத்தை நாம் பெருங்குறையாகக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், பிற்கால இந்தியத் தேசீய இயக்கம் மற்றும் சுதந்திரப் போராட்ட அரசியலுக்கான ஆணிவேர் இதனால் அமைந்துவிட்டது.

ஆனுல், 1857-ல் தோன்றிய புரட்சியும் பாமர மக்களின் கிளர்ச்சியும் அடக்கி ஒடுக்கப்பட்ட விதம் சிந்திக்கும் ஆற்றல் பெற்றிருந்த இந்தியர்கள் யாவரையும் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புணர்ச்சியுடனும் செயல்களை மேற்கொள்ளவேண்டும் என்ற படிப்பினையைக் கொடுத்தது. காட்டுமிராண்டித்தனமாக இராணுவ அடக்கு முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டதன் மூலமும், ஈவிரக்கமின்றி அடித்து நொறுக்கப்பட்டதன் மூலமும் புரட்சி அடக்கி ஒடுக்கப்பட்டது. 1857-ல் இந்தியாவில் தோல்வியைத் தழுவி இந் நாட்டை மேலும் ஆளக்கூடிய வாய்ப்பை ஆங்கிலேயர் இழந்திருப்பார்களேயானுல் இங்கிலாந்து நாட்டின் செல்வமும் சிறப்பும் இருக்குமிடம் தெரியாமல் போயிருக்கும். எனவே, அவற்றை எப்படியும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற வெறிப்போக்கில், தறிகெட்ட நிலையில் அடக்குமுறைகளைக் கையாண்டு பெரும்புரட்சியை அடக்கியொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் கம்பெனியின் ஆட்சியாளர்களுக்கு இருந்தது. எனவே, ஜான் நிக்கல்ஸன் போன்ற இராணுவத் தளபதிகள் புரட்சியாளர்களை உயிருடன் சித்திரவதை செய்யவும், தீயிலிட்டுத் துன்பப்படுத்தவும், கொலை செய்யவும் அஞ்சவில்லை. புரட்சியாளர்களின் மனைவி மக்களைக்கூடக் கொளுத்திக் கொலை செய்யவேண்டும் என்று ஒரு சட்டமே இயற்ற வேண்டும் என்று கிஞ்சித்தும் மனிதாபிமான உணர்வின்றி அந்நியர் சிலர் வேண்டுகோள் விடுத்ததாகப் பேராசிரியர் கேயி எழுதியுள்ளார்.[1] ஆட்சியாளர்கள் புரட்சியாளர்மீது பழிவாங்கும் உணர்ச்சியைக் கொண்டிருந்ததோடு, அதனை வலுவாக்கும் செயல்களை மேற்கொள்வதிலும் முனைந்தனர். இக் கொடுந்தன்மையை விளக்கிய வகையில் இலண்டனிலிருந்து வெளிவரும் டைம்ஸ் (Times) எனும் செய்தித்தாள், 'நீதி, மனிதத்தன்மை, நம்நாட்டு மக்களின் பாதுகாவல், மதிப்பு ஆகிய யாவும் கம்பெனியின் அதிகாரிகள் பலர் டில்லியில் கொலையுறுவதற்குக் காரணமாயிருந்த புரட்சியாளர்கள் சிறிதும் ஈவு இரக்கமின்றி மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்; அவர்கள் பீரங்கி, துப்பாக்கிகள்மூலம் சுட்டுத்தள்ளப்பட வேண்டும்' என்று எழுதி பிரிட்டிஷ்காரர்களின் மனத்தில், ஏதுமறியா இந்திய மக்கள்மீது பழி வாங்கும் தன்மையை மேற்கொள்ளுமாறு செய்யத் தூண்டியதை இங்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆனுல், 1857-ல் படைவீரர் புரட்சி நடந்தபொழுது தலைமை ஆளுநராக இருந்த கானிங் பிரபு அவ்வளவு கொடூரமானவராக இருக்கவில்லை. யாவரையும் மன்னிக்கும் மனப்பான்மையைக் கொண்டவராக இருந்தார்.

1 'A History of the Sepoy War in India,' J. W. Kaye, Vol. II p. 401

என்றென்றும் ஆங்கிலேயரும் இந்தியர்களும் மறக்க முடியாத துயர நினைவுகளை யாவருடைய மனத்திலும் பதித்திருக்குமாறு படைவீரர் புரட்சியின் முடிவு அமைந்திருந்தது. இம் முடிவு ஆட்சியாளர்களான ஆங்கிலேயரை இந்தியர்களின் அரசியல் நாட்ட விழைவுகளுடன் இணங்கிப் போகாத புதிய ஆட்சிக் கொள்கையை உடனடியாக மேற்கொள்ளும்படி செய்தது. அத்தகைய கொள்கை வாரன் ஹேஸ்டிங்ஸ், மன்ரோ, மால்கம், மௌன்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் போன்ற பெருமக்கள் விழைந்து போற்றியிருந்த கொள்கைக்கு முரண்பட்டதாய் இருந்தது. இந்திய மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சிக்கும் நாட்ட விழைவுகளுக்கும் இடம் தராது இணங்கிப் போகாத கொள்கையைப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மேற்கொள்ளத் தொடங்கியது, இந் நாடும் மக்களும் அளந்து கூறக்கூடிய கால வரையறைக்குள் சுதந்திரத்தைப் பெற்றுவிடமுடியும் என்ற நம்பிக்கையைத் தகர்த்தெறிந்தது. 1857ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்திய வாழ்க்கை முறையினின்றும் முற்றிலும் ஒதுங்கி நின்றவர்களாய், இனத் திமிருடன் தம்மை ஓர் உயர் வர்க்கத்தினராய்க் கருதிக்கொண்ட நிலையில் ஆங்கிலேயர் தமது அரசாங்கத்தையும், ஆட்சியையும் இந் நாட்டில் நடத்தத் தொடங்கினர். இவற்றால் இந் நாட்டு மக்களின் அரசியல் வாழ்க்கையில் முனைப்பான பல மாற்றங்கள் தோன்றலாயின.

சிப்பாய்க் கலகம் என்னும் படைவீரர் புரட்சிக்குப் பிறகு செய்யப்பட்ட ஏற்பாடுகளும், உடன்படிக்கையும் இந் நாட்டை ஆங்கிலேயர் தமது ஆதிக்கத்தைவிட்டு அகன்றுவிடாதபடி மீண்டும் வென்று பிடித்ததையே (reconquest) எடுத்துக்காட்டுவனவாய் அமைந்தன. படைவீரர் புரட்சியால் ஏற்பட்ட அரசியல் விளைவுகளில் முக்கியமான ஓரிரு செய்திகளை இங்கு எடுத்துக்காட்ட வேண்டியது மிக்க அவசியமாகும். முன்னோர் இடத்தில் குறிப்பிட்டுள்ளதைப்போல் படைவீரர் புரட்சியின் பயனாய்ப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப்பட்டது. கம்பெனியின் இயக்குநர்களும் ஜான் ஸ்டுவர்ட் மில் போன்ற அறிஞர்களும் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் போராடிக் கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப்படக்கூடாது என்று முயன்றனர். ஆனால், 'வர்த்தகச் செயல்களும், அரசியல் மற்றும் ஆட்சிச் செயல்களும் ஒருசேர ஓரிடத்திலோ, ஒரு குழுவினரிடமோ, அல்லது ஒரு நிறுவனத்திடமோ இருந்தால் அஃது அரசியலில் அழிவையே ஏற்படுத்திக் கொடுக்கும் என்று பிளேட்டோ பன்னெடுங் காலத்திற்கு முன்னரே தமது குடியரசில் எழுதியிருந்தார். அச் செய்தியின் முக்கியத்துவத்தை உணர்ந்த நிலையில் பிரிட்டிஷ் அரசாங்கம் கம்பெனியைக் கலைத்து இந்திய

அரசாங்கத்தைத் தனது அரசு நிறுவனத்தின்கீழ்க் கொண்டுவந்தது. 1833ஆம் ஆண்டிலேயே கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப் பட்டிருந்த வர்த்தக உரிமைகள், அதனிடமிருந்து அகற்றப்பட் டிருந்தன. எனவே, சட்ட ரீதியாக வர்த்தகம் செய்யும் உரிமைகள் பிடுங்கப்பட்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனி மேற்கொண்டு தொடர்ந்து இருந்ததானது சட்டத்திற்கு முரணானதாகவும், ஒழுங்கற்றதாகவும், பொதுநிலை திறம்பியதாகவும் இருந்தது. 1833ஆம் ஆண்டுக்குப் பிறகு மேற்கொண்டு தொடர்ந்து 24 ஆண்டுகள் கம்பெனியின் அரசாங்கம் அனுமதிக்கப்பட்டது பொருத்தமற்றதாகவே இருந்ததால், கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப்பட வேண்டியது அவசியமாக 'இருந்தது. மேலும், கிழக் கிந்தியக் கம்பெனியின் ஆதாயக் கொள்ளை முறையான ஆட்சி முற்றிலும் அழித்து ஒழிக்கப்பட வேண்டியதாகவும் இருந்தது. 1858-ல் பேரரசி விக்டோரியா இந்தியர்களின் உரிமைகளுக்கு உரிய மதிப்பை அளிக்கும் வகையில் ஒரு பிரகடனத்தை வெளி யிட்டார். அதற்கு ஒப்ப அதே ஆண்டில் பிரிட்டிஷ் பாராளு மன்றம் உரியதொரு சட்டத்தைச் செய்து, கி. பி. 1600 முதல் 1857 வரையிலான 257 ஆண்டுகள் உயிர் பெற்றிருந்த கிழக் கிந்தியக் கம்பெனியைக் கலைத்து, 1858 முதல் இந்தியாவை இங்கிலாந்தின் அரச நிறுவனத்தின் நேரடியான ஆட்சி மேலாண் மையின்கீழ்க் கொண்டுவந்தது. இயக்குநர்கள் மன்றம், கட்டுப் பாட்டு வாரியம் ஆகியவையும் கலைக்கப்பட்டு அவை செயல்படுத்தி வந்த அதிகாரங்கள் யாவும் இந்திய அரசுக்கான செயலர் என்னும் உயர் அதிகாரி ஒருவரது ஆட்சி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இச் செயலர் பிரிட்டிஷ் காபினெட் என்னும் அமைச்சரவையின் உறுப்பின ராயும் இருந்ததால் இவர் 15 உறுப்பினர்களைக் கொண்டதாய் அமைக்கப்பட்ட தனது ஆட்சிமன்றத்தின் துணையோடு எடுக்க இருந்த அல்லது மேற்கொள்ளவிருந்த இந்திய விவகாரங்கள் யாவற்றிற்கும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பேற்க வேண்டியவராகவும் ஆக்கப்பட்டார். இச் செயலரின் ஆட்சி மன்றத்தின் உறுப்பினர்களில் பெரும்பாலோர் இந்திய விவகாரங் களில் மிகுந்த முன் அனுபவத்தைப் பெற்றவர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் இந்தியாவில் நல்லரசாங்கத்தை அமைப்பதற் கென இயற்றப்பட்ட 1858ஆம் ஆண்டின் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது. படைவீரர்கள் மேற்கொண்டு எவ்வித கிளர்ச்சியும் புரட்சியும் மேற்கொள்ளாதபடி பிரிட்டிஷ் இந்திய இராணுவம் சீரமைக்கப்பட்டது. இதன்படி வங்கத்து இராணு வத்தில் சம எண்ணிக்கையுடைய பிரிட்டிஷ் சிப்பாய்களும் இந்திய சிப்பாய்களும் பதவியில் அமர்த்தப்பட்டனர். பம்பாய், சென்னை

ஆகிய இராசதானிகளின் இராணுவங்களில் பிரிட்டிஷ் மற்றும் இந்தியச் சிப்பாய்களின் வீதம் 1:2 என்று நிர்ணயிக்கப்பட்டது. இந்திய பீரங்கிப்படை தடை செய்யப்பட்டு அகற்றப்பட்டது. இப்படி இந்திய இராணுவப்படை என்ற பெயருடன் சீரமைக்கப் பட்ட இராணுவத்தில் இந்தியச் சிப்பாய்களால் மேற்கொண்டு எவ் விதமான கலகமோ, புரட்சியோ ஏற்படக்கூடாது என்று தமது நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட பிரிட்டிஷ் சிப்பாய்களின் எண்ணிக் கையைத் தேவையான அளவில் உயர்த்தியதன்மூலம் போர்த் திறம் மிக்கவர்கள், போர்த்திறமற்ற இனத்தவர்கள் (இந்தியச் சிப்பாய்கள்) என்ற பொய்ம்மையான கோட்பாட்டின் அடிப்படை யில் இராணுவத்தைச் சீரமைத்து அதன்மூலம் அறிவும் திறமும் மிக்க இந்திய வகுப்பினர் இராணுவப் படைகளின் துணையை நாடுவதினின்றும் தடுக்கப்பட்டனர். இப்படி இராணுவ வலிவை வைத்துக்கொண்டு, பல நூற்றுண்டுகள் இந் நாட்டை மேற் கொண்டு ஆளவேண்டும் என்ற கனவுக் கோட்டையை ஆங்கிலேயர் மேற்கொண்டனர். ஆனுல், மக்கள் சக்திக்கு எதிராக எத்தகைய இராணுவ வலிமையும், சக்தியும் வெற்றி கண்டதாக சரித்திரம் கிடையாது. எனவே, ஆங்கிலேயரின் கனவுக்கோட்டை வெகு விரைவிலேயே தாக்கப்படலாயிற்று. இறுதியில் ஒரு நூற் ருண்டைக்கூட எட்டிப்பிடிக்க முடியாத நிலையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கோட்டை தகர்த்தெறியப்பட்டது. அதற்கு உறுதுணை புரிந்தது ஆர்வக் கிளர்ச்சி பெற்ற பிற்கால இந்திய அரசியல் விழிப்புணர்ச்சியும் தேசீய இயக்கச் செயல்களும் சுதந்திர இயக்க நடவடிக்கைகளும் ஆகும்.

1858ஆம் ஆண்டின் சட்டத்தின்படி அரசாங்க அதிகார மாற்றமும் இராணுவச் சீரமைப்பும் செய்யப்பட்ட போதிலும் இந்திய இளவரசர்களைப் புறக்கணித்துத் தமது ஆட்சியை - தமது பேரரசு அரசியலை - ஏகாதிபத்திய ஆட்சியை - நடத்தமுடியாது என்பதையும் ஆங்கிலேயர் உணர்ந்திருந்தனர் - பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்திருந்தது. எனவே, இந்திய இளவரசர்களின் மதிப்பு உயர்ந்ததில், அல்லது உயர்வானதாக பிரிட்டிஷ் அரசாங்கம் கருதியதில் வியப்பேதுமில்லை. எனவே, பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய இளவரசர்களின் அரசியல் எக் காரணம் கொண்டும் அழிக்கப்பட மாட்டாது என உறுதியைக் கொடுத்தது. 1860-ல் டல்ஹௌசியினுல் பின்பற்றப்பட்ட விடுபாட்டுக் கொள்கை முற்றிலும் கைவிடப்பட்டு, கம்பெனி அரசாங்கத்தின் கடைசி தலைமை ஆளுநராகவும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடியான ஆட்சியின்கீழ்க் கொண்டு வரப்பட்டிருந்த பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் வைஸ்ராய் அல்லது அரசப் பிரதிநிதியாய்

பதவி ஏற்றிருந்த கானிங் பிரபு 160 இந்திய இளவரசர்களுக்குப் பட்டயங்கள் அல்லது ஆணைப் பத்திரங்களை அல்லது கொடைப் பத்திரங்களை (sanads) வழங்கினார். மேற்கொண்டு பதினேழு இளவரசர்களுக்குக் கொடைப் பத்திரங்களான ஆட்சியுரிமைப் பத்திரங்கள் 1890-ல் கொடுக்கப்பட்டது. இவ்வாறு கொடுக்கப் பட்ட கொடைப் பத்திரங்கள் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத் திற்கும், இந்திய இளவரசர்களுக்கும் இடையே எத்தகைய உடன் பாடுகளை வலியுறுத்தின என்பது தெளிவாக விளக்கப்படவில்லை யென்றாலும், அவையாவும் 1947 வரை பிரிட்டிஷ் பேரரசில் புறக் கணிக்கப்படவில்லை. ஏனெனில், பிற்காலத்தில் அரசியல் சுதந்திரத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினின்றும் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் இந்திய தேசீய உணர்ச்சி யும், இந்திய அரசுகளும் பிரச்சினைகளும் அல்லது சிக்கல்களும் இரண்டறக் கலந்திருந்தன. தமது, நேரிடையான ஆட்சிப் பிடிக்கும், எல்லைகளுக்கும் உட்பட்டிருந்த இந்திய இராசதானிகளைப் பொறுத்தவரை அரசியல் ரீதியான அந்தஸ்து கொடுக்கப்பட்டதில் எவ் வின்னலும் இருக்கவில்லை. ஆனால், பிரிட்டிஷ் உயர் இறைமை அதிகாரத்திற்கு உட்பட்ட நிலையில், அதனை ஏற்றுக்கொண்ட நிலையில் தத்தம் அரசுகளில் ஆட்சி அதிகாரங்களைப் பெற்ற இந்திய இளவரசர்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்தஸ்தில் வேறுபாடுகள் இருந்தன. எவ்விதமான அந்தஸ்துகளைப் பெற்றபோதிலும் இந்திய இளவரசர்கள் தத்தம் ஆட்சி மன்றங்களிலும், தர்பார் களிலும், பிரிட்டிஷ் துணைக் காப்பரசின் ஆளுநர் ஒருவரைப் பெற்றிருக்க வேண்டிய நியதிக்கு உள்ளாயினர். இதன்மூலம் ஒற்றுத் தன்மை வாய்ந்த அரசியல் நெறியை அல்லது ஆட்சிப் போக்கை ஆங்கிலேயர் மேற்கொண்டனர் என்றாலும் தவறில்லை. இப்படிப் பட்ட செயலும் இந் நாட்டில் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தேசியம் மற்றும் சுதந்திர இயக்கங்களுக்கான தேவையையும், இயக்கச் சக்தியையும் கொடுப்பதாக அமைந்து, இந் நாட்டின் அரசாங்கம் மற்றும் அரசியல் வாழ்க்கையில் புதியதொரு வழியை தோற்றுவிக்கவே செய்தது.

21. அரசாங்கப் பொறுப்பு கம்பெனியிடமிருந்து அரச நிறுவனத்திற்கு மாற்றப்படுதல் (1858ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டமும் அரசியாரின் பிரகடனமும்)

ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்ட 1773ஆம் ஆண்டு முதல் 1857ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், பிரிட்டிஷ் இந்தியா கம்பெனியின்கீழ்க் கொண்டிருந்த அரசியலமைப்பு மற்றும் நிர்வாக முறையின் வளர்ச்சியைப் பற்றிச் சென்ற சில அதிகாரங்களில் நாம் ஆராய்ந்துள்ளோம். அச் செய்திகளைக் கூர்ந்து நோக்கின் அவற்றில் மிக அதிகமான முறைகேடுகளும், ஒழுங்கற்ற பல அம்சங்களும் ஏற்பாடுகளும் இருந்தன என்பதை நாம் நன்கு உணரமுடியும். இக் குறைபாடுகளின் காரணமாக, மேற்சொல்லப்பட்ட காலத்தில் செய்யப்பட்டிருந்த கம்பெனியின் இந்திய அரசுகளைப் பற்றிய அரசியலமைப்பு, ஆட்சிமுறை ஆகியவை இனியும் செயற்பாட்டில் மேற்கொள்ள முடியாதநிலை இருந்தது. எனவே, கம்பெனியின் இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சி முறையில் புரட்சிகரமான மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது தவிர்க்கப்பட முடியாத தேவையாக இருந்தது. இத் தேவையைத் தனது தரமிக்க சேவையாகப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் கருத்தில் கொண்டு, உரிய காரியங்களை மேற்கொள்ள அரசியல் கோட்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த காரணங்கள் யாவை? இவ் வினாவிற்கான விடையை எடுத்தியம்பினால்தான், 1858-ல் மேற்கொள்ளப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தின் தன்மையை நாம் சரியாக எடை போட முடியும்.

1857-ல் நடைமுறையிலிருந்த கம்பெனியின் இந்திய அரசியல் அமைப்பு மற்றும் ஆட்சிமுறை, இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியால் பெறப்பட்டிருந்த அல்லது அபகரிக்கப்பட்டிருந்த இந்தியப் பிரதேசங்கள்மீதான இறைமையை பிரிட்டிஷ் அரசு

நிறுவனத்திடம் ஒப்படைத்திருந்தது. ஆனால், நடைமுறையில் அவற்றின் உடைமையும் சட்டப்படியான உரிமையும், அவற்றின் வருவாய்களும் நிர்வாகமும் கம்பெனியின் பொறுப்பின்கீழ் விடப்பட்டிருந்தன. இவ்வாறு செய்யப்பட்டிருந்த பிரிவினையும், பாகுபாடும் அரசியல் நியதிக்குப் பொருந்தாதனவாய் இருந்தன. பிரிட்டிஷ் இந்திய அரசைப்பற்றிய சட்ட முறையிலான இறைமை (De Jure Sovereignty) பிரிட்டிஷ் அரச நிறுவனத்திடம் இருக்க, அதன் நிகழ் முறையிலான அரசியல் அதிகாரம் (De Facto Political Power) கம்பெனியிடமே இருந்தது. இத்தகைய மெய்ப்பாட்டுநிலை ஓர் அரசின் இறைமை, அரசியல் அதிகாரம் ஆகியவற்றின் அடிப்படையான அரசியற் கோட்பாட்டு நியதிகளையும் தேவைகளையும் பொய்ப்பிப்பதாக இருந்தது. எனவே, பிரிட்டிஷ் அரசியல் வல்லுநர்களும், அறிஞர் பெருமக்களும் இந்தியாவைப் பற்றிய சட்ட முறையிலான இறைமை மட்டுமன்றி, அதன் நிகழ் முறையான அரசியல் அதிகாரமும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்திற்கு மாற்றப்படவேண்டும் என்று எடுத்தியம்பினர். இதன் மூலம், ஒரு நாடு அல்லது ஓர் அரசைப்பற்றிய அரசியற் கோட்பாட்டுத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு, அவை பிரிட்டிஷ் இந்தியாவிற்கும் பொருந்துமாறு அனுமதிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

நாடாளும் இறைமை, அந் நாட்டில் மேற்கொள்ளப்படும் வர்த்தகத்தின் உரிமை ஆகிய இரண்டும் அரச கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டுள்ள தனிப்பட்ட ஒரு நிறுவனத்திடம் கொடுக்கப்படுவதென்பது அரசியல்கோட்பாட்டிற்கு ஏற்றதாகாது. ஆனால், கம்பெனியிடம் இந்திய வர்த்தக உரிமை, ஆட்சி அதிகாரம் ஆகியவை கொடுக்கப்பட்டிருந்ததால், மேற்சொல்லப்பட்ட அரசியல்கோட்பாட்டிற்குப் பொருந்தாத செயல் இங்கு நிலவரத்திலிருந்தது. அது முன் நிகழ்வு ஆதாரமற்றதாகவும், பின் உதாரணமாக மேற்கொள்ளப்பட முடியாததாகவும் இருந்தது. மேலும், அது நல்ல நிர்வாக அடிப்படை நியதிகளுக்கு முரணானதாகவும் இருந்தது. எனவே தர்க்க முறையற்றதும், ஏற்றுக் கொள்ளத் தகாத பண்புடையதுமான கம்பெனியின் ஆட்சி முறை அகற்றப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசியல் மேதைகளால் உணரப்பட்டு அறிவுறுத்தப்பட்டது. எனினும், மேற்சொல்லப்பட்ட குறைபாட்டை அகற்ற திறமையோ, விருப்பமோ பிரிட்டிஷ் அரச நிறுவனத்தாருக்கு இல்லாதிருந்தமையின் அவர்கள் கம்பெனியின் இந்தியக் காரியங்களுக்கான நிர்வாகத்தைப் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்திருந்தனர்.

மேற்சொல்லப்பட்ட முயற்சியின் காரணமாகவே 1833, 1853 ஆகிய ஆண்டுகளில் இயற்றப்பட்ட சட்டங்களின் செய்திகள் அமைந்திருந்தன. 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்க் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த வணிக முற்றுரிமை பெரிதும் குறைக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டது. அதன் விளைவாகச் சீனநாட்டுடன் தேயிலை வர்த்தகம் தவிரப் பிறவற்றிலும் கம்பெனி பெற்றிருந்த பொதுவான வணிக முற்றுரிமை குறைக்கப்பட்டு, பிரிட்டிஷ் குடிமக்கள் யாவருக்கும் அவ்வுரிமை கொடுக்கப்பட்டது. இதன்மூலம், இந்தியாவில் கம்பெனி பெற்றிருந்த வணிகம் மற்றும் ஆட்சிப்பணிகளின் ஐக்கியம் பறிக்கப்படுவதற்கான முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனை அடுத்து, 1853ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்க் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த வணிகச் சலுகைகள் யாவும் அகற்றப்பட்டு, அஃது ஒரு நிர்வாக அமைப்பாக மட்டும் இந்தியாவில் இயங்கும்படி செய்யப்பட்டது. இந்நோக்கின் அடிப்படையிலேயே கம்பெனிக்கான சாசனம், எப்பொழுதும் வழங்கப்பட்டதைப்போல் இருபதாண்டுகளுக்கு என்று இல்லாமல், பாராளுமன்றம் விரும்பும் காலம் வரையில் புதுப்பிக்கப்பட்டு வழங்கப்பட்டது. 1853ஆம் ஆண்டுச் சட்டத்தின்மூலம், தான் என்றும் அல்லது எப்பொழுதும் கம்பெனியின் அரசாங்க ஆட்சிப் பொறுப்புகளை மேற்கொள்ளுவதற்கு உகந்த வகையில் பொருத்தமான பல ஏற்பாடுகளைப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் செய்திருந்தது. கம்பெனியின் இயக்குநர்களின் எண்ணிக்கையை 24-லிருந்து 18 ஆகக் குறைத்து, அப் பதினெண்மருள் அறுவரை அரச நிறுவனத்தின்மூலம் நியமித்து, அவற்றின்மூலம் தனது பிடியை பிரிட்டிஷ் அரசு உறுதிப்படுத்தியது. மேலும், இயக்குநர்களுக்கு இதுகாறும் வழங்கப்பட்டிருந்த ஆதாய முற்சலுகைகளை அறவே நீக்கவும் செய்தது. இவற்றால் கிழக்கிந்தியக் கம்பெனியே கலைக்கப்பட்டு அதன் இந்தியப்பிரதேசங்கள் வருவாய்கள், அஃது இந்தியக் காரியங்கள்மீது பெற்றிருந்த மேலாண்மைக் கட்டுப்பாடு ஆகிய யாவும் வெகுவிரைவில், பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடிப் பொறுப்பின்கீழ்க் கொண்டுவரப்படுவதற்கான மிக வலிவான அடித்தளம் அமைக்கப்பட்டது. அப்படிப்பட்ட நிலையில்கூட, தனது ஆளுகைக்கு உட்பட்டிருந்த இந்தியப் பிரதேசங்களை நிர்வகித்து மேலாண்மை செய்யக்கூடிய வாய்ப்பையும் பொறுப்பையும் 1873 வரை கிழக்கிந்தியக் கம்பெனி பெற்றிருக்கக்கூடும். ஆனால், கம்பெனியின் தலைவிதி வேறுவிதமாக அமைந்து, படைவீரர் கலகம் எனப்படும் முதல் இந்திய விடுதலைப்போர் இந்தியாவில் தோன்றி, கம்பெனி ஆட்சியின் முடிவுக்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் அரசியல் வாதிகளுக்கும், மேதைகளுக்கும், பிரிட்டிஷ்

பொது மக்களுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுக்கும்படியாய் அப் போரின் விளைவுகள் அமைந்தன. அவை பின்வருமாறு:

படைவீரர் கலகம் எனப்படும் முதல் இந்திய விடுதலைப் போரின் காரணங்களும் தன்மையும் எப்படிப்பட்டவையாயிருந்த போதிலும், அதன் விளைவுகள் பல உண்மையான செய்திகளை வெளிப்படுத்தின. அவற்றுள் முதலாவதும் முக்கியமானதும் யாதெனின் கம்பெனி ஒரு கூட்டுப்பங்கு நிறுவனமாக இருந்த தோடு மட்டுமன்றி, அரசியல் அதிகாரமும் படைத்த ஓர் அமைப் பாகப் பொதுநிலை திறம்பி, மிகவும் பொருந்தாத் தன்மையைப் பெற்றிருந்ததைப் பிரிட்டிஷ் பொதுமக்களும், அரசியல் மேதை களும் உணரும்படி தெளிவுபடுத்தியதாகும். அப்பொழுது இங்கிலாந்தின் பிரதம அமைச்சராக இருந்த பால்மர்ஸ்டன் பிரபு (Lord Palmerston) பாராளுமன்றத்தின் பொதுமக்கள் அவையில் மறக்க முடியாத ஒரு பேருரையை நிகழ்த்தி, அதன்மூலம் கிழக் கிந்தியக் கம்பெனி பெற்றிருந்த தன்மையின் பெருங்குறையை அறிவித்து, கம்பெனியின் இரட்டை அரசாங்க முறை முற்றிலும் அகற்றப்படவேண்டும் என்று வலியுறுத்தினர். அரசியல் கோட்பாட்டின்படி, ஒருவரிடமோ அல்லது ஒரு நிறுவனத் திடமோ அரசியல் அதிகாரம், ஆட்சிப் பொறுப்பு ஆகியவற்றோடு வணிக வர்த்தகச் செயல்களும் ஒருசேர கலந்திருத்தல் கூடாது என்பதை வலியுறுத்தி, அவை எவ்வாறு கிழக்கிந்தியக் கம்பெனி யிடம் தங்கியிருந்தன; மேலும், கிழக்கிந்தியக் கம்பெனி அரசியல் மற்றும் ஆட்சிக் காரியங்களில் எவ்வாறு பொறுப்பற்று இயங்கி வந்துள்ளது என்பவற்றை யாவருடைய மனத்திலும் படும்படி அவர் தெளிவுபட எடுத்துக்கூறினர். பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையைக் கொண்டுள்ள ஒரு நாட்டில், அதன் அரசாங்கம் மேற்கொள்ளும் நிர்வாகப் பணிகள் யாவும் அமைச் சவைப் பொறுப்பிற்கும், பாராளுமன்றப் பொறுப்பிற்கும், பொது மக்கள் பொறுப்பிற்கும் உட்பட்டனவாய் இருக்கவேண்டும் என்பது இன்றும் பேணப்படும் நியதிகளாகும். ஆனல், இன்றிருப் பதைப் போல் அன்றும் ஜனநாயக அமைப்பு முறையைக் கொண் டிருந்த இங்கிலாந்து அரசின் அடைக்கலப் பொருள்களாக அறிவிக் கப்பட்ட இந்தியப் பிரதேசங்கள், மற்றும் நிதி வருவாய்கள் ஆகிய வற்றை நிர்வாகம் செய்யும் அதிகாரம் பிரிட்டிஷ் அரச நிறுவனத் திற்கோ அல்லது அதன் பாராளுமன்றத்திற்கோ பொறுப்பேற்கா திருந்த ஒரு வணிக நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும், கம்பெனியின் மூல நிதியில் பல பங்குகளைப் பெற்றிருந்த காரணத்தினுல், இந்தியர்களுடன் எந்த உறவையும் மேற்கொள் ளாதவர்களாய் இருந்த கம்பெனியின் பங்குதாரர்களால் தேர்ந்

தெடுக்கப்பட்டவர்களாகவும், அரச நிறுவனத்தால் முற்றிலும் நியமனம் செய்யப்படாதவர்களாகவும் இருந்தவர்களின் கையில் இந்திய அரசும், ஆட்சியும் கடுவன் கையில் சிக்கிய மலர் மாலை யாக இருந்தன. எனவே, மந்தியின் கையில் சிக்குண்ட மாலையைப் போல், சின்னாபின்னம் ஆகிய நிலையில், கம்பெனியின் கைகளில் சிக்குண்டு கசக்கிப் பிழியப்பட்ட நிலையில் பிரிட்டிஷ் இந்தியா பரிதாபகரமான நிலையில் இருந்தது என்று பால்மர்ஸ்டன் பிரபு பறைசாற்றினார். மேலும், கம்பெனியின் பிரிட்டிஷ் இந்திய ஆட்சிச் செயல்களை மேற்கொள்வதற்கென அமைக்கப்பட்டிருந்த இரட்டை அரசாங்கமுறை சிக்கல் மிக்கதாகவும், மிகவும் வசதி அற்றதாகவும், சுற்றி வளைத்துக் காரியங்களை ஆற்றக்கூடிய குறை பாட்டுத் தன்மையுடையதாகவும் இருந்ததை அவர் எடுத்துக் காட்டினார். பாராளுமன்றத்தினர், கட்டுப்பாட்டு வாரியத்தினர், கம்பெனியின் இயக்குநர்கள், மற்றும் இந்தியத் தலைமை ஆளுநர் ஆகியோரிடையே இந்திய அரசாங்கத்தைப் பற்றிய பணிகளுக் கான பொறுப்பு ஒருமித்து ஒன்றுபடுத்தப்படாமல், எவராலும் எளிமையாக உதாசீனப்படுத்தப்படும் வகையில் பிரிட்டிஷ் இந்தியாவின் அரசாங்கப் பணிகள், அவற்றிற்கான பொறுப்பு ஆகியவை அரசியல் மற்றும் அரசாங்க நல்லாட்சி நியதிகளுக்குப் புறம்பாக, எங்கும் எதிலும் நலிவைத் தரும் வகையில், வலிவும் பொலிவுமின்றிப் பிரிக்கப்பட்டிருந்ததை அல்லது துண்டாடப் பட்டிருந்ததை அவர் தெள்ளென விளக்கினார். எனவேதான், 'பிரிட்டிஷ் அரசிற்கே இழிவையும் கெட்ட பெயரையும் தேடித் தரும் வகையில், கம்பெனியின் ஆட்சியினரால் காரியங்கள் மேற் கொள்ளப்பட்டு, பெருங்கலகம் ஒன்று தோன்றும் அளவிற்குக் கம்பெனியின் இந்திய நிர்வாகம் பாரறியுமாறு சீரழிந்திருந்தது' என்று, உண்மை நிலையை விளக்கி மேன்மையான வாதத் தையும் பேருரையும் பால்மர்ஸ்டன் பிரபு மேற்கொண்டார். சுருங்கக் கூறின், 1857-ல் இந்தியாவில் நடந்த நிகழ்ச்சிகள் பிரிட்டிஷ் மக்களின் மனச் சாட்சியைப் பெரிதும் கிளர்ச்சியுறுமாறு செய்து, கிழக்கிந்தியக் கம்பெனி உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும் என்ற உள்ளுணர்ச்சியையும் உணர்வையும் உறுதியாக ஏற்படுத்திக் கொடுத்தன. இவற்றின் விளைவாக, படைவீரர் கலகத்தின் உடனடியான பிற்பயனாக ஏற்பட்டதே 1858-ல் இந்தியாவில் நல்லரசாங்கத்திற்கென பிரிட்டிஷ் பாராளுமன்றத் தால் இயற்றப்பட்ட சட்டமாகும். இச் சட்டத்தின்மூலம் பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதேசங்கள் மற்றும் வருவாய்கள் கம்பெனியின் பொறுப்பிலிருந்து அகற்றப்பட்டுப் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடியான பொறுப்பின்கீழ்க் கொண்டுவரப் பட்டன. அது முதற்கொண்டு, நாம் சுதந்திரத்தைப் பெற்ற

1947ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் வரை பிரிட்டிஷ் அரசரால், அவரது பெயரில் இந் நாடு, அந்நியரான ஆங்கிலேயரால் ஆளப்பட்டது.

அடுத்து 1853ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்ச் சட்டமன்றமாக இந்தியத் தலைமை ஆளுநரின் ஆட்சிமன்றம் செயல்படுவதற்கும் வகைசெய்யப்பட்டிருந்த போதிலும், அச் சட்டமன்றத்தில் இந்தியர்கள் எவரும் உறுப்பினர்களாக நியமிக்கப்படவில்லை. இதனுல் இந்தியர்கள் மனத்தில் புரட்சிக்கனல் தோன்றி 1857-ல் வெடித்துச் சிதறியது என்று இங்குமட்டுமன்றி, இங்கிலாந்திலும் பெரும்பாலோரால் உணரப்பட்டது. மேலும், பிரிட்டிஷ் இந்தியாவை ஆட்சி செய்துவந்த அரசாங்கத்திற்கும் அவ் வரசாங்கத்தின் அரவணைப்புக்கு உட்பட்டிருந்த மக்களுக்கும் இடையே பெருத்தமான உறவுகளோ, தொடர்புகளோ இருக்கவில்லை. இதனுல் மக்களின் விருப்பங்களையும் மனக்குறைகளையும் அறிந்து, அவற்றை அகற்றும் முறையில் கம்பெனியின் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் செயல்படவில்லை. இவையாவும் மக்கள் மனத்தில் கொதிப்பையும் எதிர்ப்பையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தின. இதனைப் படைவீரர் புரட்சி தெள்ளத் தெளிய வெளிப்படுத்தியது. எனவே, இந்தியர்களை அனுசரித்து அவர்களுடைய அரவணைப்புடன் ஆட்சியை நடத்துவதற்கான ஒரு கொள்கையையும், இந்திய அரசாங்கத்தின் புதிய அமைப்பையும், நியதியையும் பிரிட்டிஷ் அரசாங்கம் மேற்கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டது. எனவே தான், 1861-ல் இந்தியக் கவுன்சில்கள் சட்டம் இயற்றப்பட்டு, அதன்மூலம் சுதேசி மக்களான இந்தியர்கள் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கப் பொறுப்புகளிலும், சட்ட ஆக்கப்பணி போன்ற காரியங்களிலும் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டது. இச் செயல் ஏற்படக் காரணமாயிருந்தது 1857ஆம் ஆண்டுப் புரட்சியேயாகும். அவ்வாறு இல்லாது போயிருக்குமாயின், 1858-ல் இந்தியாவின் நல்லரசாங்கத்திற்கான சட்டம் இயற்றப்பட்டதும், கம்பெனியின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த இந்தியப் பிரதேசங்கள், வருவாய்கள் போன்றவை பிரிட்டிஷ் அரசின் நேரடிப் பொறுப்பின்கீழ் வருமாறு செய்யப்பட்டிருந்த உயர்வான மாற்றமும், அவற்றைத் தழுவிப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பலவகையான அரசாங்கச் சீர்திருத்தங்கள், நிர்வாக மாற்றங்கள், சட்ட ஆக்கங்கள் போன்ற யாவும் காலத்தாலும் அவற்றின் தன்மையாலும் வெகுவாகத் தள்ளிப் போடப்பட்டிருக்கலாம். எனவே, 1857ஆம் ஆண்டுப் புரட்சியின் விளைவுகளின் முக்கியத்துவத்தை அரசியல் கோட்பாட்டுக் கண்ணேக்கில் ஆராய்வதுதான் பொருத்தமுடையதாகும்.

இந்திய பிரிட்டிஷ் உறவுகளும் (Indo-British relations) இந்திய மக்களிடம் பிரிட்டிஷ் அரசாங்கம் மேற்கொண்ட போக்கு ஆகிய வையும் சீர்செய்யப்படும் வகையில் 1857ஆம் ஆண்டுப் புரட்சியின் விளைவுகள் அமைந்தன. இவ் விளைவுகளின் சிறப்பை நாம் அறிய வேண்டுமாயின் 1820ஆம் ஆண்டிற்குப் பிறகு இங்கிலாந்து நாட்டில் நிலவிய அரசியல் சூழ்நிலையை நாம் சிறிது அறிந்துகொள்ள வேண்டுவது மிக்க அவசியமாகும். 19ஆம் நூற்றாண்டின் துவக்கம் முதல் ஏறத்தாழ 1860ஆம் ஆண்டு வரை அரசியலில் முற்போக்குக் கொள்கைகளும், கோட்பாடுகளும் இங்கிலாந்தில் தோன்றி வளர்ந்து, அவ் வளர்ச்சிக்கு ஏற்பத் தேர்ச்சியான பல அரசியல், மற்றும் அரசாங்க ஆட்சிக் காரியங்கள் மேற்கொள்ளப்பட்டன. 1832-ல் சீர்திருத்தச் சட்டமொன்று இயற்றப்பட்டு, அதன் பயனாய் பிரிட்டிஷ் பொதுமக்களவை ஜனநாயக மயமாக்கப்பட்டுச் செயல் முறைகள் பல மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஜனநாயகம் எனப்படும் மக்களாட்சி ஒன்றைத் தவிர, வல்லாட்சியோ (autocracy), செல்வராட்சியோ (plutocracy) செல்வாக்கைப் பெற்றிருக்க முடியாதபடி அந் நாட்டின் அரசியல் தத்துவம் நிர்ண யிக்கப்பட்டது. இம் முற்போக்கான திட்டத்தைத் தொடர்ந்து அடிமை யொழிப்பு, தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கான கம்பெனிச் சட்டங்கள், தானியச் சட்டத்தின் (Corn Law) நீக்கம், கல்வி வளர்ச்சிக்கென வழங்கப்பட்ட அரசின் மானியம் போன்ற முற்போக்கான காரியங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. அப்பொழுது தனது ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த கனடாவில் பொறுப்புள்ள அரசாங்கம் நிறுவப்படுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. மேலும் டர்ஹாம் பிரபு, ஹாப்டன் போன்ற செல்வாக்கு மிக்க அரசியல் மேதைகள், பிரிட்டிஷ் காலனிகளில் நல்லாட்சியும் நிர்வாகமும் நடைபெற வேண்டுமாயின், அங்குள்ள மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றே ஆகவேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். இப்படித் தனது உள் நாட்டு அரசியல் மற்றும் அரசாங்கச் செயல்களில் முற்போக்கான கொள்கைகளை இங்கிலாந்து நாடு பேணிவந்ததால், அத்தகைய முற்போக்கு உணர்ச்சி பிரிட்டிஷ் இந்திய விவகாரங்களிலும் பேணப்பட வேண்டும் என்ற நியாய உணர்வு எல்லோர் மனத்திலும் மேலோங்கியிருந்தது. இவ் வுணர்வின் பிரதிபலிப்பாகவே 1833, 1853 ஆகிய ஆண்டுகளில் இயற்றப்பட்ட சாசனச் சட்டங்களில் கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப்படுவதற்கான முகாந்திரமும், இந்திய அரசாங்க ஆட்சிச் செயல்களில் இந்தியர்களும் இடம் பெறும்படி சில ஏற்பாடுகளும் காணப்பட்டன. இவற்றின் பயனாகவே, இந்திய மக்களின் கல்வி,மற்றும் அறிவுத் தேர்ச்சிக்கு என நூறாயிரம் ரூபாய்கள் கம்பெனியால் ஒதுக்கி வைக்கப்படவேண்டும்

எனவும், கிறித்தவ மிஷினரிகள் செயல்பட வகை செய்யப்பட வேண்டும் எனவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்பதை நாம் இங்கு மீண்டும் நினைவில் கொள்ளவேண்டும். அதேசமயம், மேற்கத்திய முற்போக்கு நோக்கும் வாழ்க்கைப் போக்கும் உகந்த முறையில் ஏற்றுக்கொள்ளப்படும் வகையில், பிரிட்டிஷ்காரர் களின் முயற்சிகளுக்கு இராசாராம் மோகன்ராய் மற்றும் பிரம்ம சமாஜத்தின் பல தலைவர்கள் போன்றோர் ஆதரவைக் காட்டினர். எனினும், முற்போக்குவாதம் என்னும் பெயரில் அந்நியர்களான ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட முயற்சிகள் யாவற்றுக்கும், கண் மூடித்தனமான ஆதரவையும் அரவணைப்பையும் இந்தியத் தலைவர் கள் தந்துவிடவில்லை என்பதையும், கம்பெனியின் இந்திய அரசாங்கம் நல்லரசாங்கமாக யாவரது ஆதரவையும் பெறும் வகையில் இயங்கி வந்தது என்பதையும் நாம் முடிவுகட்ட வேண்டியதில்லை.

மற்றொரு விதத்தில், இந்தியாவில் தோன்றிய பெரும் புரட்சியின் விளைவு, இந் நாட்டில் பிரிட்டிஷ்காரர்கள் மேற் கொள்ள ஆரம்பித்திருந்த முற்போக்கான காரியங்களிலும் நோக்கிலும் மாற்றத்தைச் செய்வதாய் இருந்தது. உரிய காரணங் களின் அடிப்படையில், உயர்வான நோக்கின் அடிப்படையில், அவநம்பிக்கை மற்றும் தோல்விச் சுமையின் தாங்கொணாத பளு ஆகியவற்றின் காரணமாக இந் நாட்டவர் புரட்சியை மேற் கொண்டனர் என்னும் அடிப்படையான உண்மை நிலையைப் புரிந்து கொள்ளாது, பிரிட்டிஷ் இந்திய ஆட்சியினர் மனமாற் றத்தைக் கொண்டனர்; ஒரு முறை புரட்சியைச் செய்தவர்கள், மேலும் புரட்சியைச் செய்யலாம் என்று எண்ணி மக்களை அடக்கி ஒடுக்கும்படியான காரியங்களை மேற்கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தனர்; இந்தியர்கள்மீது அவநம்பிக்கை கொள்ள முற் பட்டனர்; இதுகாறும் காட்டிவந்த இரக்க உணர்ச்சியை மேலும் காட்டத் தயங்கலாயினர். 1857ஆம் ஆண்டுப் புரட்சி இந்தியர் களால் மேற்கொள்ளப்பட்ட படுபாதகப் பாவச்செயல் என்று கருதப்பட்டது. அத்தகைய பழி பாவச் செயல் இனி இந்தியர் களால் மேற்கொள்ளப்பட முடியாத வகையில் தகுந்ததொரு திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்று ஆங்கிலேயர் எண்ணினர். உண்மையில் 1857-க்கு முன் இந்திய அரசாங்கத் திற்கும், மக்களுக்கும் இடையே பேணப்பட்டு வந்த சுமுகநிலை படிப்படியாகக் குறையலாயிற்று. அன்பின் அடிப்படையை அகற்றி அதிகாரத் தோரணையில், ஆட்சி ரீதியாக, பிரிட்டிஷ் ஆட்சியினர் இந்தியர்களுடன் தொடர்பைக் கொள்ளலாயினர். இவற்றால், தம் இந்திய நண்பர்களின் அன்பு, அறிவுரை,

ஆலோசனை ஆகியவற்றை ஆங்கிலேய ஆட்சியினர் இழக்க முற்பட்டு, இனத் துவேஷத்தையும் பொறாமையையும் மேற் கொள்ளலாயினர். இத்தகைய போக்குகள் 1857ஆம் ஆண்டுப் புரட்சியின் விரும்பத்தகாத விளைவாகத் தலைதூக்கியதால், 'கிழக்கு கிழக்குதான், மேற்கு மேற்குதான், அவ் விரு திசைகளில் வாழும் மக்கள் எக்காலும் ஒன்று சேரமுடியாது' என்று கிப்லிங் என்பவர் மன அங்கலாய்ப்புடன் எழுதினார். இத்தகைய, விரும்பத் தகாத போக்கு அகற்றப்பட வேண்டுமாயின் கம்பெனியின் ஆதிக்கத் தர்பாரும் பகதூரும் முற்றிலும் கலைக்கப்பட்டு அகற்றப் படவேண்டும் என்று கருதினோர் ஏராளம் ஏராளம்! எனவே, 1858-ல் இந்திய அரசியல் மற்றும் அரசாங்கத்தில் அடிப் படையான புதியதொரு மாற்றம் செய்யப்படும் வகையில் ஒரு சட்டத்தை பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்ற வேண்டிய தாயிற்று.

இந்தியர்களைப் பொறுத்தவரை, அவர்கள் நியாயமான தமது புரட்சி எவ்வாறு ஈவு இரக்கமின்றிக் கொடூரமாகக் கொடுங்கோன் மையுடன் பிரிட்டிஷ்காரர்களால் அடக்கப்பட்டது என்பதைச் சிறிதும் மறக்க முடியாதவர்களாய் இருந்தனர். புரட்சியின் காரணமாகக் கைது செய்யப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டிருந்த இந்தியக் கைதிகள்மீது சட்ட முறைப்படியான எவ் வழக்கையும் தொடராது ஆங்கிலேயர் அவர்களைக் கொன்று குவித்தனர்; மனிதத் தன்மையற்ற முறையில், மிகக் காட்டுமிராண்டித்தனமாக ஏதுமறியாச் சாதாரணக் குடிமக்களைகூடக் கொன்று குவித்தனர். ஆங்கிலத் தளபதி நீல் (Neil) என்பவனின் தலைமையில் ஆங்கிலச் சிப்பாய்கள் இந்தியக் கிராமங்களைச் சூறையாடி எரித்து அழித்தனர். இப் பாதகச் செயல்களை நம்மால் இன்றும் ஏற்றுக்கொள்ள முடிய வில்லையே? அன்று, நம்மவர்கள், நம் நாட்டவர்கள், நம் இனத்த வர்கள் எவ்வாறு ஏற்றுக் கொண்டிருக்க முடியும்? அல்லது தாங்கிக் கொண்டிருக்க முடியும்? அவர்கள் எப்படித்தான் ஆங்கிலேய ஆட்சியினரிடமும் அதிகாரிகளிடமும் அன்பையும் உறவையும் கொண்டிருக்கத்தான் முடியும்? எனவே, தற்பொழுது நம் கவனத் திலுள்ள புரட்சியின் விளைவு காரணமாக, நம்மை ஆண்ட ஆங்கி லேயருக்கும், அவர்களால் ஆளப்பட்ட நம்மவர்க்கும் இடையே பிளவும் விரிசலும் மிக விரிவடைந்தன. இந்தியப் பெரும் புரட்சிக்குப் பிறகு ஆங்கிலேயர் மேற்கொண்ட அட்டகாசச் செயல் களின் காரணமாக 1833, 1853 ஆகிய ஆண்டுகளின் சட்ட ஏற்பாடுகளின்கீழ்ப் பொறுப்புள்ள தன்னாட்சி அரசாங்கத்தை ஆங்கிலேயர் ஏற்படுத்திக் கொடுப்பார்களென்றோ, இந்தியர்கள் அதனைப் பெறமுடியும் என்றோ நம்பிக்கை வைக்கமுடியாத நிலை இருந்தது.

இதுகாறும் சொல்லப்பட்ட செய்திகளே யன்றி 1857-க்குப் பிறகு, ஆங்கிலேயர் இந் நாட்டைவிட்டு வெளியேறும்படி விரட்டப்பட்ட காலம் வரை, செயல்பாட்டில் இருக்கும்படியான சில விளைவுகளையும் இப் புரட்சி தோற்றுவித்தது. இந் நாட்டு மக்கள் இந்துக்களென்றும் முஸ்லிம்களென்றும் பிரிவுண்டிருந்தனர். எனினும் அவர்கள் ஒற்றுமையாக நின்று பெரும்புரட்சியை மேற்கொண்டனர். எனவே இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பிளவை உண்டாக்கி, அவர்களிடையே ஒற்றுமையை நீக்கி வேற்றுமையை வளர்ப்பதன்மூலம், மிக்க அதிகாரத்தைக் கொண்டிருந்த சிறுபான்மையினரான ஐரோப்பியர்களின் நலனையும், அக்கறையையும் பாதுகாக்கமுடியும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்து தீர்மானித்தது. தம் முயற்சிகளில் வெற்றியைக் காண வேண்டுமாயின் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நிலவி வந்த ஒற்றுமை உணர்ச்சியையும் நட்புறவையும் நீக்கியே இனிச் செயல்படவேண்டும் என்று பிரிட்டிஷ்காரர்கள் ஆயத்தமாயினர். இதனைக் கருத்தில் கொண்டே இந்திய இராணுவத்தை ஆங்கிலேயர் மாற்றி அமைத்தனர். இதுகாறும் இந்துக்கள், முஸ்லிம்கள், ஜாத்துகள், சீக்கியர்கள் போன்ற இந்தியச் சிப்பாய்கள் பலர் பலவாறுய்க் கலந்திருந்த நிலையில் சாதி, குழு, சமூகம் ஆகிய வற்றின் அடிப்படை ஏதும் இல்லாமல், இந்திய இராணுவம் அமைக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும், பெரும்புரட்சியின்போது இந்தியச் சிப்பாய்கள் பலரும் ஒற்றுமை உணர்ச்சியை வெளிப்படுத்தினர். எனவே, அத்தகைய உணர்ச்சி மேலும் தலைதூக்குவதைத் தடுக்கும் வகையில் சிப்பாய்கள் அவர்களின் மதம் அல்லது சாதி மற்றும் அவர்கள் பணிபுரியுமாறு வழங்கப்பட்டிருந்த மாநிலம், சமூகம் ஆகியவற்றால் பிரிவு உணர்ச்சியையும் வேற்றுமையையும் பேணுமாறு, பிரித்தாள்வதையே நோக்கமாகக் கொண்டு பிரிட்டிஷ்காரர்கள் செயல்பட்டனர். சுதேசி மக்களைச் சுதேசி மக்களே-இந்தியர்களை இந்தியர்களே-இனி எதிர்க்குமாறு, தன் விரலைக் கொண்டு தன் கண்ணையே குத்திக்கொள்ளும்படியான கொள்கையை வகுத்துக் காரியங்களை ஆற்றினர். இக் கொள்கையின் பிரதிபலிப்பும், அதன் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்ட இந்திய இராணுவத்தின் செயல்களும் இந் நாடு சுதந்திரம் அடையும் வரை இருந்தன. இவ்வாறு இராணுவ அமைப்பு மட்டுமன்றி ஏனைய ஆட்சிச் செயல்களிலும், சமுதாயக் காரியங்களிலும்கூட ஒரு சமூகத்தினரை மற்றொரு சமூகத்தினர்மீது ஏவி விட்டு, அவர்களைச் சமயத்திற்குத் தகுந்தாற்போல், தமது ஆதாயத்தையே கருத்தில் கொண்டு அமிழ்த்தியும், ஊக்குவித்து ஆதரித்தும் காரியங்களை ஆற்றும் கொள்கையை ஆங்கிலேயர் கடைப்பிடிக்கலாயினர். இக் கொள்கையின் இனிமையற்ற விளைவுக்குத் தனிமையாக்கப்-

பட்டு முதற்படியாக அமைந்தது முகமதிய சமுதாயமாகும். மிகச் சாதுரியமாக, திறமையுடன் இராணுவத்திலும் நிலையான இந்திய பணித் துறைகளிலும் முகமதியர்களைச் சேர்த்துக்கொள்ளாமல் வெளிப்படையாகப் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் ஒதுக்கி வைத்தது. பின்னர் இந்தியர்கள் விஷயத்திலும் பாரபட்சப் போக்கை பிரிட்டிஷ் இந்திய அரசு அரசியல் மற்றும் ஆட்சிப் பழக்கமாக மேற்கொண்டது. இவையெல்லாம் இந்து முஸ்லிம் பிரச்சினையையும் அதனை அரவணைத்து மேற்கொள்ளப்பட்ட பிற் கால அரசியலையும் அவற்றின் வாக்கு போக்குகளையும் நிர்ண யித்தன. இந்து முஸ்லிம் வேற்றுமைக்கு வித்தூன்றி அதனை வளர்த்து, அதனையே பகடைக் காயாகக் கொண்டு பூசல்களையும் பிரச்சினைகளையும் உருவாக்கி, அவற்றைச் சமாளித்துச் சட்ட அமைதியைப் பராமரிக்கும் காரணத்தைக் காட்டித் தமது அரசியல் மட்டுமன்றி அரசாங்கத்தையும் அதன் செயல்களையும் நீண்ட கால அனுபவப் பொருள்களாக ஆங்கிலேயர் இந் நாட்டில் மேற் கொண்டனர். எனவே, இந்திய அரசியல் மற்றும் அரசாங்கத்தின் வரலாற்றுப் பாதையில், முதல் இந்திய விடுதலைப்போரின் விளைவு ஒரு திருப்பு முனையாக அமைந்தது என்பது பொருளற்ற வாத மாகாது.

பிரிட்டிஷ்காரர்களின் ஏகாதிபத்தியமும் அடக்குமுறையும் முனைப்பான முடிவையும் வெற்றியையும் தழுவும் வகையில், அவர் களுக்குத் துணைநின்ற சில இந்திய எட்டப்பர்களும் இருந்தனர். பாட்டியாலா, ஜிந்த் (Jind), நபா (Nabah) ஆகிய சுதேசி அரசுகளின் அரசர்கள் நேரிடையாகவும், மறைமுகமாகவும் பிரிட்டிஷ்காரர் களுக்கு உதவிகளைச் செய்து, பெரும் புரட்சி அடக்கப்பட்டதற்குத் துணை புரிந்தனர். அதே சமயம் இந்தியத் தலைமை ஆளுநராக இருந்த டல்ஹௌசி பிரபுவின் இடம் பிடிக்கும் கொள்கையால் அடங்கா ஆத்திரத்தையும், மனக்கொதிப்பையும் கொண்டவர் களாகத் தம் அரசுகளை இழந்திருந்த இந்திய அரசர்கள் பலரும் இருந்தனர். அவர்களுக்கு ஆதரவைக் காட்டி நாட்டுப்பற்றுடன், தேசாபிமானத்துடன் பக்கபலமாய் மக்களும் இருந்தனர். இவற்றை யெல்லாம் பெரும்புரட்சி முடிந்தவுடன் பிரிட்டிஷ் அரசினர் உணர்ந்திருந்தனர். எனவே, சுதேசி அரசர்களுடன் சுமுகமான நட்புறவுகளை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்ற கட்டாயத் திற்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருந்தனர். எனவேதான், இந்தியச் சுதேசி அரசுகள், மற்றும் மக்கள் ஆகியோரது உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்து, இனிமேற்கொண்டு நாடு பிடிக்கும் காரியத்தை, இந்தியாவில் ஆங்கிலேயர் மேற்கொள்ளமாட்டார்கள் என்ற உறுதியையும் அப்பொழுது பிரிட்டிஷ் பேரரசியாய் இருந்த

விக்டோரியா மகாராணி ஒரு பிரகடனத்தின்மூலம் அளித்தார். அதன்மூலம் பிரிட்டிஷ் அரச நிறுவனம் இந்தியர்களின் உரிமைகள், மேன்மை, அந்தஸ்து மதிப்பு ஆகியவற்றை இனி எஞ்ஞான்றும் பேணிப் பாதுகாக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கிடையில், கம்பெனியின் இந்திய அரசாங்கத்தைக் கலைத்து, இங்கிலாந்தின் நேரடியான ஆட்சிப் பொறுப்பைப் புகுத்தும் வகையில் பால்மர்ஸ்டன் பிரபுவின் அரசாங்கத்தால் காரியங்கள் மேற்கொள்ளப்படலாயின. இம் முயற்சியின் முதற்படியாகத் தமது சட்ட வரைவைப் பால்மர்ஸ்டன் பிரபு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தினர்.

கம்பெனியைக் கலைத்து, அதன்வசமிருந்த இந்திய அரசாங்கத்தை பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் பொறுப்பிற்கு அல்லது அதன் நேரடியான ஆட்சிக்கு மாற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த பால்மர்ஸ்டனின் சட்ட வரைவு பின்வரும் செய்திகளையும், ஏற்பாடுகளையும் பாராளுமன்றத்தின் கவனத்தின் முன் வைத்தது. 1857-ல் நடந்த பொதுத்தேர்தலில் வெற்றிகண்டு பெரும்பான்மை பலத்துடன் பிரதம அமைச்சராக பால்மர்ஸ்டன் பதவியேற்றிருந்தார் என்பதை இங்கு நாம் கவனத்தில் கொள்வது நல்லது. ஏனெனில் அப்படி ஒரு வெற்றியையும் பலத்தையும் பெற்றிருந்தும் கூட வெகுவிரைவில் அவரது அரசாங்கம் கவிழும்படியாயிற்று. எனினும், தமது குறுகிய பதவிக்காலத்தில் பால்மர்ஸ்டன் பிரபு தமது சட்ட வரைவில், பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்டிருந்த இரட்டை அரசாங்கமுறை அழிக்கப்பட்டுக் கம்பெனியும் கலைக்கப்படவேண்டும் என்று கோரினர். மேலும், எண்மரை உறுப்பினராகக் கொண்டு இலண்டனிலிருந்தபடி செயல்படும் ஒரு தலைவருடன்கூடிய ஓர் ஆட்சிமன்றத்தை அமைத்து, அதன்மூலம் இதுவரை கட்டுப்பாட்டு வாரியமும், இயக்குநர்கள் மன்றமும் ஆற்றிவந்த இந்திய அரசாங்கம், மற்றும் ஆட்சிச் செயல்களைக் கண்காணித்து இயக்கிக் கட்டுப்பாடு செய்யவேண்டும் என்று கோரப்பட்டது. அம் மன்றத்தின் உறுப்பினர்களாகக் கம்பெனியின் இயக்குநர்களையும், கம்பெனி அல்லது அரச நிறுவனத்தின்கீழ் இந்தியாவில் பணிபுரிந்திருந்தோரையும் நியமிக்க வகை செய்யப்பட்டது.[1] இத்தகைய ஏற்பாடுகளுக்கு எதிர்ப்பைத் தெரிவித்துக் கம்பெனி கலைக்கப்படக்கூடாது என்ற கோரிக்கையைக் கம்பெனியினர் விண்ணப்பித்தனர். அவ்வாறு கம்பெனி கலைக்கப்படக்கூடாது என்பதற்குப் பல காரணங்களைத் தமது விண்ணப்பத்தில் காட்டியிருந்தனர். ஜான் ஸ்டுவர்ட்மில் போன்ற சில அரசியல் தத்துவ ஞானிகளும், கம்பெனியின் கோரிக்கைக்குத் துணை நின்றனர். எனினும், கம்பெனியின் கோரிக்கை நிரா

கரிக்கப்பட்டு, மேற்சொல்லப்பட்ட செய்தி சாராம்சங்களைக் கொண்டதாய்ப் பால்மர்ஸ்டனின் சட்ட வரைவு 1858ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு விவாதிக்கப்பட்டது. அம் மசோதா சட்டமாக்கப்படும் நிலையை எய்துமாறு இருமுறை விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றின் காரணமாகப் பால்மர்ஸ்டன் பிரபு பதவியிலிருந்து விலகவேண்டியதாயிற்று, எனவே, பால்மர்ஸ்டனின் இந்தியச் சட்ட வரைவு சட்டமாக நிறைவேற்றப்படாமல் போய்விட்டது. எனினும் அச் சட்ட வரைவில் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டிருந்த அடிப்படையான தேவை நிராகரிக்கப்படவில்லை.

எனவே, பால்மர்ஸ்டனை அடுத்து டெர்பி பிரபு என்பவர் இங்கிலாந்தின் பிரதம அமைச்சராகப் பதவியேற்றபின் புதியதொரு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டு, இந்தியாவின் நல்லரசாங்கத்திற்கான 1858ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1858ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17ஆம் தேதியன்று சில தீர்மானங்களைப் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் அவை நிறைவேற்றியிருந்தது. அவற்றை உள்ளடக்கி மேற்சொல்லப்பட்ட மாசோதா பாராளுமன்றத்தின் இரு அவைகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பின்னர் அரச முத்திரையுடன் சட்டமாகச் செயற்பாட்டிற்கு வந்தது. இனி அச் சட்டத்தின்மூலம் செய்யப்பட்ட இந்தியாவின் புது அரசாங்கத்தைப் பற்றிய பல ஏற்பாடுகளையும், அவற்றின் அரசியலமைப்பு முக்கியத்துவத்தையும் நாம் ஆராயலாம்.

1858ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் அம்சங்கள்

75 பிரிவுகளைக் கொண்டிருந்த 1858ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம், இனிமேற்கொண்டு இந்தியா, பிரிட்டிஷ் அரசியாலும். அவரது பெயரிலும் ஆளப்படும் என்று தனது அடிப்படையானக் குறிக்கோளை வெளிப்படுத்தி, இந்திய ஆட்சிப் பொறுப்பைக் கொண்டிருந்த தாயக அரசாங்கத்தில் பின்வரும் மாற்றங்களைச் செய்தது.

இச் சட்டத்தின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப்பட்டு, இதுகாறும் கம்பெனியின் இயக்குநர்கள், மற்றும் பாராளுமன்றக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றால் மேலாண்மையும் நிர்வாகமும் செய்யப்பட்டு வந்த பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் மற்றும் அதன் வருவாய்கள் ஆகியவற்றைப் பற்றிய அதிகாரங்களும் கடமைகளும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேரடிப்

பொறுப்பின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இயக்குநர்கள் மன்றமும் கட்டுப்பாட்டு வாரியமும் கலைக்கப்பட்டு இந்தியக் காரியங்களைக் கவனிப்பதற்கென ஓர் அரசு செயலரை (Secretary of State for India), நியமனம் செய்ய இச் சட்டம் உதவியது. மேலும், அவருக்கு உதவி புரிய 15 உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆட்சி மன்றமும் அமைக்கப்பட்டது. அந்த ஆட்சிமன்றம் இந்தியக் கவுன்சில் அல்லது இந்திய ஆட்சிமன்றம் (Council of India) என்று பெயரிடப்பட்டது.

இந்தியக் கவுன்சிலின் 15 உறுப்பினர்களுள் எண்மர் அரசு நிறுவனத்திஞல் நியமிக்கப்படவும், எஞ்சிய எழுவர் பதவியைத் துறக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்களால் தேர்ந் தெடுக்கப்படவும் வகை செய்யப்பட்டது. மேற்சொன்னவாறு நியமனத்தின் மூலமும் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலமும் இந்திய ஆட்சிமன்றத்தின் உறுப்பினர்களாகப் பணிபுரிய வாய்ப்பைப் பெறு வோரில் குறைந்தது ஒன்பது பேர்களேனும் பத்து ஆண்டுகளுக் கேனும் இந்தியாவில் வாழ்ந்தவர்களாகவோ, இந்திய அரசாங் கத்தில் பணிபுரிந்தவர்களாகவோ இருக்கவேண்டும் என்றும் இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டது. மேலும், அப் பெரும்பான்மை உறுப்பினர்கள் தாம் நியமனம் செய்யப்படுவதற்கு முன் பத்தாண்டு களுக்குமேல் இந்தியாவைவிட்டு வெளியேறி யிராதவர்களாகவும் இருக்கவேண்டும் என்றும் கட்டாய மாக்கியது. இக் கட்டாய விதிகளின்மூலம் இந்திய அரசாங்கத்திலிருந்து பதவி ஓய்வு பெற்றிருந்த அதிகாரிகளைக் கொண்டதாய் இந்திய ஆட்சிமன்றம் அமைந்திருக்குமாறு செய்யப்பட்டது. இந்திய அரசு செயலரின் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் பதவிகளில் எதிர்காலத்தில் தோன்றும் காலி ஸ்தானங்கள் அரச நிறுவனத்திஞலேயே நிரப்பப்பட வேண்டும் என்றும் இச் சட்டம் இயம்பிற்று. இந்திய அரசு செயலரின் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் யாவரும் நன்னடத் தையைக் கொண்டிருக்கும் காலம் வரை பதவிகளை வகிக்கலாம் என்று இச் சட்டம் கூறி, அவர்களைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ருல் பாராளுமன்றத்தின் இரு அவைகளின் கோரிக்கையின் அடிப்படையில் அரச நிறுவனம் அவர்களைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்றும் எடுத்தியம்பியது. மேலும், ஆண்டொன்றுக்கு 1,200 பவுன்களை இந்திய ஆட்சிமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் ஊதியமாகப் பெறவும் இச் சட்டம் வகை செய்தது. ஆனல், அவ்வாறு வழங்கப்படும் ஊதியத் தொகைகள் யாவும் இந்திய வருவாய்களிலிருந்தே வழங்கப்படவேண்டும் என்று கூறியது. இப் பதினைந்து உறுப்பினர்கள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அமரவும், வாக்கெடுப்புகளில் கலந்துகொள்ளவும் அனுமதிக்கப்படவில்லை.

ஆனால், இந்திய அரசு செயலர்மட்டும் பிரிட்டிஷ் அமைச்சவை உறுப்பினர்களுள் ஒருவராக இருந்து, அதன் காரணமாகப் பாராளுமன்றத்தில் அமர்ந்து வாக்கெடுப்பில் கலந்துகொள்ள இச் சட்டத்தின்மூலம் அனுமதிக்கப்பட்டார். மேலும், அவரது பாராளுமன்றக் காரியங்களில் அவருக்குத் துணை புரிய ஒரு பாராளு மன்றச் சார் செயலாளர் (Parliamentary under Secretary) நியமிக்கப்பட்டார்.

இந்திய ஆட்சிமன்றக் கூட்டங்கள் யாவும் அரசு செயலரின் தலைமையில் நடக்கவேண்டும் என்று இச் சட்டம் ஏற்பாட்டைச் செய்தது. இம் மன்றத்தின் தன்மையை விளக்கும் வகையில் இச் சட்டம் கீழ்வரும் சில செய்திகளைக் கொண்டிருந்தது. அவற்றின்படி இந்திய ஆட்சிமன்றம் ஓர் ஆலோசனை மன்றமாகவே செயல்படவேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டது. மற்றப்படி, எந்த ஒரு பிரச்சினையையும் தானே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும் அதிகாரம் இம் மன்றத்திற்குக் கொடுக்கப்படவில்லை. எனவே, அரசு செயலரால் அனுப்பப்படும் செய்திகள் அல்லது பிரச்சினைகள்மீது தனது கருத்துகளைக் கூறவேண்டியதையே அது கடமையாகக் கொள்ளவேண்டும் என்று விளக்கப்பட்டது. எனினும், பணத்திற்கான பிணை அல்லது ஈடுகளைப் பிறப்பித்தல், சொத்து அடைமானம், சொத்து விற்பனை, பண ஒதுக்கீடு, நிதி ஆகியவை பற்றிய செய்திகளில், தமது மன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் விருப்பங்களுக்கும் முடிவுகளுக்கும் உடன்பட்டு, இந்திய அரசு செயலர் காரியங்களை ஆற்றவேண்டும் என்ற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது. மற்றப்படி தமது மன்றத்தின் முடிவுகளை உதறித் தள்ளக்கூடிய அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு செயலரோ, அல்லது மன்றத்து வேறெந்த உறுப்பினரோ அவரது கருத்தையும் வாதங்களையும் மன்ற நடவடிக்கைகளின் நிகழ்ச்சிப் பதிவுகளில் (minutes of the proceedings) குறிக்கவேண்டும் என்றும் கூறப் பட்டது. இதன்மூலம், இந்திய அரசு செயலரின் ஆட்சிமன்றக் கருத்துகளையும் முடிவுகளையும் பாராளுமன்றமும் கவனிக்க வகை செய்யப்பட்டது.

இங்கிலாந்திலிருந்தபடி இந்திய அரசாங்கத்தின் காரியங்களை மேற்கொள்ளும் வகையிலும், இந்திய அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரத்தை நடத்தவும் அரசு செயலரின் ஆட்சிமன்றம் வாரத் திற்கு ஒருமுறை செயலரின் தலைமையில் கூடவேண்டும் என்று இச் சட்டம் கூறிற்று. அவ்வாறு கூடும்பொழுது இந்தியாவிற்கு அனுப்பப்படவிருக்கும் ஒவ்வொரு கட்டளையையும் செய்திப்

போக்குவரத்தையும் மன்றத்தின் முன் செயலர் வைக்கவேண்டும் என்று வகை செய்யப்பட்டது. அத்தகைய கட்டளை அல்லது செய்திப் போக்குவரத்தின்மீது தமது கருத்தைப் பதிவுசெய்வதற்கு உறுப்பினர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இம் மன்றம் கூடிக் காரியங்களை மேற்கொள்ளுவதற்குத் தேவையான குறை வெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்தாகவும் நிர்ணயிக்கப் பட்டது. இவ்வாறு கூடி முடிவெடுக்கும் தமது மன்றத்தின் பெரும் பான்மை விருப்பங்களை அரசு செயலர் ஒதுக்கித்தள்ள நேருமாயின் அதை, அவ்வாறு அவர் செய்வதற்கான தமது காரணங்களை எழுத்துமூலமாகப் பதிவு செய்யவேண்டும் என்று கூறப்பட்டது.

அவசரத் தேவையின் நிமித்தம் இந்தியாவிற்கு அரச ஆணைகளை (despatehcs) தமது மன்றத்தைக் கலந்து ஆலோசிக்காமல் அனுப்பு வதற்கும் இச் சட்டம் அரசு செயலருக்கு அதிகாரத்தை வழங் கியது. ஆனால், அச் செய்தியை அவர் பின்னர் மன்றத்திற்கு அறிவிக்கவேண்டும். எனினும், போரையோ அமைதியையோ இந்திய அரசுகள் அல்லது இளவரசர்களுடன் மேற்கொள்வது பற்றிய உடன்படிக்கைகள், கொள்கைகள் ஆகியவை குறித்துத் தமது மன்றத்தைக் கலந்து ஆலோசிக்காமல் இரகசியமானவை என்று குறிப்பிட்டு அரச ஆணைகளை அனுப்புவதற்கான அதிகாரம் அரசு செயலருக்கு வழங்கப்பட்டது. இரகசியத்தின் காரணமாக மேற்சொல்லப்பட்ட அரச ஆணைகளைப் பற்றிய செய்திகளைப் பின்னர்த் தமது மன்றத்திற்கு அறிவிக்கவேண்டிய தேவையில்லை என்று மேற்சொல்லப்பட்ட செய்திகள் குறித்து மட்டும் அவருக்கு விலக்கு அளிக்கப்பட்டது. இதைப்போலவே, இந்தியத் தலைமை ஆளுநர் மற்றும் சென்னை, பம்பாய் மாநிலங்களின் ஆளுநர்கள் ஆகியோரால் 'இரகசியம்' என்று குறிப்பிடப்பட்டு அனுப்பப்படும் அஞ்சல் விடுக்கைகளை அரசு செயலர் தீர்மானமாக அல்லது தெளிவாக அனுமதித்தாலன்றி அவரது மன்ற உறுப்பினர்கள் பார்க்கக்கூடாது என்று இச் சட்டம் ஏற்பாட்டைச் செய்தது.

தமது ஆட்சிமன்றத்தின் அலுவல்கள் பாங்குற நடைபெறத் தேவையான குழுக்களை அமைத்துக்கொள்ள இந்திய அரசு செயலருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. மேலும், இலாக்காக்கள் வாரியாகப் பணிகளைப் பகிர்ந்தளிப்பதற்கும், அவ்வாறு பகிர்ந் தளிக்கப்பட்ட பணிகளைத் தகுந்த முறையில் இயக்கி ஆள்வதற்கும் அதிகாரங்கள் அவருக்குக் கொடுக்கப்பட்டன.

அடுத்து, அரசு செயலரின் ஊதியம் மற்றும் அவரது அலுவலகச் செலவினங்கள் யாவும் இந்திய வருவாயிலிருந்து கொடுக்கப்படவும் இச் சட்டம் வகை செய்தது. இந்தியக் கணக்

கீடுகளைக் குறித்தும் இந்தியாவின் ஆக்க ரீதியானதும் தார்மீக ரீதியானதுமான வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவை குறித்தும் ஒவ்வோர் ஆண்டும் ஓர் அறிக்கையைத் தயாரித்துப் பாராளு மன்றத்திற்கு அதனைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று அரசு செயலர் பணிக்கப்பட்டார். இவ் வறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீது விவாதங்களை மேற்கொள்ளுவதன்மூலம் இந்திய விவகாரங்கள் குறித்துத் தனது முழுமையான கவனத்தைச் செலுத்துவதற்கான வாய்ப்பு வசதிகள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குச் செய்து கொடுக்கப்பட்டன.

இந்தியாவின் தலைமை ஆளுநரும், மாநிலங்களின் ஆளுநர்கள் யாவரும், பிரிட்டிஷ் அரச நிறுவனத்தால் மட்டுமே நியமனம் செய்யப்படவேண்டும் என்று இச் சட்டம் நிலைநிறுத்தியது. ஆனால், மாகாணங்களின் துணை ஆளுநர்களைப் பொறுத்தவரை மேதகு பிரிட்டிஷ் அரசர் அல்லது அரசியின் ஒப்புதலுடன் இந்தியத் தலைமை ஆளுநர் அவர்களை நியமிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டார். தலைமை ஆளுநர் மாநில ஆளுநர்கள் ஆகியோரது ஆட்சிமன்றங்களின் உறுப்பினர்கள், தமது ஆட்சி மன்றத்துடன் கூடிய இந்திய அரசு செயலரால் நியமிக்கப்பட இச் சட்டம் அனுமதித்தது.

இச் சட்டத்தின்மூலம் இதுகாறும் கம்பெனியின் கண்காணிப் பின் கீழிருந்த இராணுவம் மற்றும் கடற்படைகள் யாவும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடிப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டன. மேலும், தவிர்க்க முடியாத பேரவசியம் இல்லாமல் அந்நியப் படை யெடுப்பை அடக்கவோ அல்லது முறியடிக்கவோ, அன்றி வேறெந்த இராணுவச் செயற்பாட்டிற்கோ இந்தியாவிற்கு வெளியே, இந் நாட்டின் படைகளைப் பாராளுமன்றத்தின் முன் அனுமதியைப் பெறாமல் பயன்படுத்தக்கூடாது என்றும் இச் சட்டம் ஏற்பாடு செய்தது.

இறுதியாக, இதுகாறும் கம்பெனி அனுபவித்து வந்த முற் சலுகைகள் யாவும் இந்திய அரசுக்கான செயலர் மற்றும் இந்திய அரசாங்கத்தினர் ஆகியோரிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட ஒப்பந்தப் பணித்துறைகளுக்கான நியமனங்கள் யாவும் பகிரங்கப் போட்டி முறையின்மூலம் இந்திய அரசு செயலரால் வகுக்கப் படும் விதிகளுக்கு ஒப்பச் சிவில் பணித்துறை ஆணையர்களின் (civil service commissioners) உதவியுடன் செய்யப்படவேண்டும் என்றும் அரசு செயலாளரின் நிறுவனம் இங்கிலாந்தில் மட்டு மன்றி இந்தியாவிலும் வழக்கைத் தொடர்வதற்கோ அல்லது

வழக்கு தொடரப்படுவதற்கோ உரிய ஒரு நிறுவனமாகவும் (corporate body) காரியங்கள் ஆற்றப்பட வகை செய்யப்பட்டது.

இதுகாறும் சொல்லப்பட்ட செய்திகள் யாவற்றையும் தனது அம்சங்களாகவும் ஏற்பாடுகளாகவும் கொண்டிருந்த இந்தியாவின் நல்லஅரசாங்கத்திற்கான 1858ஆம் ஆண்டின் சட்டம் ஒரே ஒரு மூலக் குறிக்கோளைக் கொண்டிருந்தது. அம் மூலக் குறிக்கோள் யாதெனின், இந்திய அரசாங்கத்திற்கான முழுப் பொறுப்பையும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடிப் பொறுப்பிற்கு மாற்றி, இந்தியப் பேரரசின் நேரடியான கண்காணிப்பை ஒரேயொரு செயலாட்சி நிறுவனத்தின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்பதாகும். அந் நிறுவனம் இந்திய அரசுக்கான செயலரின் நிறுவனமாகும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் பேரரசி விக்டோரியாவின் பிரகடனம் பின்னர் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது.

இச் சட்டத்தைப் பற்றிய ஒரு திறனாய்வு

இந்திய அரசியல் மற்றும் அரசாங்க வரலாற்றில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி முடிவுற்று, பிரிட்டிஷ் அரச நிறுவனம் இந் நாட்டின் அரசாங்க பரிபாலனம் மற்றும் நிர்வாகப் பொறுப்புகள் ஆகியவற்றைத் தனது நேரிடை ஆளுகையின்கீழ் மேற்கொள்ளுமாறு செய்த 1858ஆம் ஆண்டின் சட்டம் வெகு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அச் சட்டத்தின்மூலம் பெறப்பட்ட நன்மைகள் பலவாகும். பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம், மற்றும் நிர்வாகக் காரியங்களை இதுகாறும் மேற்கொண்டு வந்த தலைமை இடத்து அமைப்பு பல இன்னல்களுக்கும், குழப்பங்களுக்கும் ஆளாகியிருந்தது. இயக்குநர்கள் மன்றம், கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவை குறித்து, அவ்வப்பொழுது பல மாற்றங்களும் சீர்திருத்தங்களும் செய்யப்பட்டபோதிலும் அவ் விரு அமைப்புகளுக்கிடையே கருத்து வேறுபாடுகளும், பொருத்தமற்ற இழு பறி நிலையும் நிலவியவண்ணம் இருந்தன. இதனால் இந்திய அரசாங்கக் காரியங்கள் செவ்வனே, இடர்ப்பாடின்றி மேற்கொள்ளப்படுவது மிகக் கடினமாய் இருந்தது. 1858ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் அவ் விரு அமைப்புகளும் அகற்றப்பட்டு, அவற்றின் இடத்தில் ஆட்சிமன்றத்துடன் கூடிய இந்திய அரசு செயலாளர் பதவி அல்லது நிறுவனம் அமைக்கப்பட்டது. மேலும், அவருக்கு இந்திய விவகாரங்களை மிக முனைப்பாகவும், பயனுறுதி மிக்கதாகவும் கட்டுப்படுத்தி ஆட்சி புரிவதற்குத் தேவையான அதிகாரங்களும் கொடுக்கப்பட்டன. இதனால் பிரிட்டிஷ் இந்திய அரசின் அதிகார அடிப்படை மிக வலுவுள்ளதாக அமைக்கப்பட்டது.

அடுத்துப் பிரிட்டிஷ் இந்தியாவைப் பற்றிய பொறுப்பேற்று, இங்கிலாந்திலிருந்தவாறு செயல்பட்ட இரட்டை அரசாங்கமுறை இச் சட்டத்தின்மூலம் அகற்றப்பட்டதாலும், அதன் கட்டுப்பாடு முழுவதும் பிரிட்டிஷ் அமைச்சரவையின் உறுப்பினராயிருந்த இந்திய அரசு செயலருக்கு மாற்றப்பட்டதாலும் அவரைக் கொண்ட ஆட்சிப் பொறியின்மூலம் 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பெருவழக்கிலிருந்த புதுமை அரசியல் உணர்ச்சியும், கோட்பாடுகளும், நியதிகளும் இந் நாட்டிலும் அறிமுகப்படுத்தப் பட்டுச் செயலாற்றப்படுவதற்கான நன்மை கிட்டிற்று. இதனாலேயே இதுகாறும் வணிகர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த இந்திய அரசாங்கம், ஆட்சி, அரசியல் போன்றவை நேர்மையான அரசியல் வாதிகள் மற்றும் ஆட்சி அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும்படி செய்யப்பட்டன. பிரிட்டிஷ் அரசாங்கத்தில் அயல்நாட்டு அலுவலகம் (Foreign Office), குடியேற்ற அலுவலகம் (Colonial Office) போன்றவை முதன் முதலாக அமைக்கப்பட்ட முயற்சியும் செயலும் இதற்குச் சான்று பகரும்.

இயக்குநர்கள் மன்றத்தின் உறுப்பினர்கள் பெரும்பாலும் இந்தியாவிற்கு வருகை புரியாதவர்களாகவும், இந்தியாவைப் பற்றி அதிகம் அறியாதவர்களாகவும் இருந்தனர். கட்டுப்பாட்டு வாரியம்கூட பிரிட்டிஷ் இந்திய அரசாங்கச் செயல்களில் முழுக் கவனத்தையும் செலுத்திச் செயல்படும் நிறுவனமாக இருக்கவில்லை. இவ்வாறு, பொருத்தமற்றவர்களை உறுப்பினராய்க் கொண்டு, இந் நாட்டின் நல்லாட்சிக்குப் பொருந்தாத அமைப்புகளாய் அவை இருந்ததால் வருந்தத்தக்க காரியங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இக் குறைபாடுகள் யாவற்றையும் நீக்கி, இதுகாறும் கூறப்பட்ட செய்திகளுக்கு ஏற்ப பிரிட்டிஷ் இந்தியாவின் நல்ல அரசாங்கத்திற்கான ஏற்பாடுகளை இச் சட்டம் ஏற்படுத்திக் கொடுத்தது. இந்தியப் பிரச்சினைகளில் முன் அனுபவமும் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றிருந்தவர்களைக் கொண்டே இனி அரசாங்கக் காரியங்கள் ஆற்றப்படுவதற்கு வழி வகை செய்யப் பட்டது. இதுவே இச் சட்டத்தினால் இந் நாடு பெற்ற நன்மை ஆகும்.

இந்திய அரசாங்கத்தின் நிர்வாகமும் பொறுப்பும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தால் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு, பிரிட்டிஷ் பேரரசியின் பிரகடனத்தின்மூலம் இச் சட்டம் வகை செய்ததால், அப் பிரகடனத்தின்மூலம் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்திற்கும், சுதேசி அரசுகளுக்கும் இடையே உறவு நிலைகள் சீராக்கப்பட்டன. பேரரசியின் பிரகடனத்தின்மூலம் இந்திய

இளவரசர்களுக்கும், இந்திய மக்களுக்கும் பெரும் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. அவற்றின்படி இந்தியாவின் எச் சுதேசி அரசும் இனி பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தினால் எவ் வழியிலும் அபகரிக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழி கொடுக்கப்பட்டது. இச் சத்திய வாக்குகளும் உறுதிமொழிகளும் கடைசிவரை மீறப் படவில்லை என்று இங்குக் கூறும்பொழுது இச் சட்டத்தினால் இந்திய அரசியலும் அரசுகளும் அரசாங்கங்களும் பெற்ற நன்மையை நாம் குறைத்து மதிப்பிடுவதற்கு இல்லை. இந்திய மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் அவர்களின் பொதுநலம் மற்றும் மேம்பாடு பற்றியவையாய் இருந்தன. ஆனால், அவை பெரிதும் பேணப்படவில்லை. இஃது ஒரு பெருங்குறையே யானும், அப் பெருங்குறையின் காரணமாக இந்திய மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சியைப் பெற்றுத் தேசீய இயக்கத்தையும், அரசியல் போராட்டங்களையும் மேற்கொள்வதற்கான நன்மையைச் செய்தது. எனவே, இதுகாறும் சொல்லப்பட்ட செய்திகளின் காரணமாக இந்திய அரசியலில் மறுமலர்ச்சியையும், விழிப் புணர்ச்சியையும் தோற்றுவித்து, புதியதொரு சகாப்தம் இந் நாட்டு மக்களின் வாழ்க்கை வரலாற்றில் உதயமாகும் உன்னத மான நன்மையை இச் சட்டம் உலகம் அறியுமாறு ஏற்படுத்திக் கொடுத்தது. புத்தம்புது ஆவல்கள் மக்கள் மனத்தில் தோன்றி, அவர்களின் குறிக்கோள்களும். நாட்ட விழைவுகளும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, எல்லோரது கவனத்தையும் செயலையும் ஈர்க்கும் வகையில் புதியதோர் அத்தி யாயம் இந்திய அரசியலில் துவங்கிற்று.

1858-ல் பிரிட்டிஷ் இந்தியா ஒரு பேரரசாக மாறி, பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடிப் பொறுப்பிற்கு மாற்றப்பட்ட போதிலும், அவ்வாறு செய்யப்பட்ட மாற்றம் முறையளவிலானதாய் (formal) இருந்தது. ஆனால், அது புரட்சிகரமான மாற்றமாய் அமையவில்லை. அவ்வாறு செய்யப்பட்ட மாற்றம் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தின் அமைப்பை ஒழுங்குபடுத்தும் வகையில் இருந்ததே அன்றி, அதன் சாராம்சத்தில் மாற்றங்களைப் பெரிதும் செய்யவில்லை. இதனைப்பற்றிக் கூறும்பொழுது ராம்சே மூர் (Ramsay Muir) என்னும் பேராசிரியர் பின்வருமாறு எழுதி யுள்ளார். 'இந்தியப் பேரரசை பிரிட்டிஷ் அரச நிறுவனத்திற்கு மாற்றம் செய்தது மேலெழுந்தவாரியாகக் காணப்படுவதைப் போல் முக்கிய மாற்றமாக இருக்கவில்லை. ஏனெனில், பெரும் பாலும் கிழக்கிந்தியக் கம்பெனி, பிரதேச உரிமையையும் இறைமையையும் இந்தியாவில் பெறத் தொடங்கிய காலம் முதற் கொண்டே கம்பெனியின் காரியங்கள்மீது தனது கட்டுப்பாட்டை

தளர்ச்சியில்லாமல் அரச நிறுவனம் அதிகரித்தவண்ணம் இருந்தது.' எனவே, 1858-ல் இதுகாறும் பிரிட்டிஷ் பாராளு மன்றத்தால் இயற்றப்பட்டிருந்த சட்ட திட்டங்கள், ஒழுங்கு முறைகள் ஆகியவற்றால் இந்தியா ஆளப்பட்டது. இந்தியத் தலைமை ஆளுநர், இயக்குநர் மன்றத்தின் பணியாளர்கள் போன்ற யாவரையும் உள்ளிட்ட பிரிட்டிஷ் இந்திய அரசின் நிர்வாகிகள் யாவரும், வாரியத் தலைவர்மூலம் பிரிட்டிஷ் பாராளுமன்றத் திற்குப் பொறுப்பேற்றவர்களாய் இருந்தனர். ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்ட காலம் முதல் 1853ஆம் ஆண்டின் சாசனச் சட்டம் இயற்றப்பட்ட வரையிலான எல்லாச் சட்ட ஆக்கங்களும் இயக்குநர்கள் மன்றத்தின் அதிகாரங்களைப் படிப்படியாகக் குறைத்து, அம் மன்றம் 1858-ல் பெயரளவில் மட்டும் செயல் படும்படியான வலிமையற்ற ஒரு நிறுவனமாக இருந்தது. ஆரம்பத்தில் கம்பெனியின் வணிக முற்றுரிமை பெரிதும் குறைக்கப் பட்டு, பின்னர் அதன் வர்த்தகக் காரியங்கள் யாவும் முழுமையாக நீக்கப்பட்டன. 1858ஆம் ஆண்டுக்கு முன்னரே இந்தியத் தலைமை அதிகாரிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நியமன நபர்களாக (nominated) இருந்தனர். மேலும், அவர்களின் தொகுதிநிலை, பதவி வரிசை, அவர்கள் பெறவேண்டியிருந்த நிர்வாகப் பயிற்சி போன்ற யாவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப் பட்டவையாய் இருந்தன. இவற்றில் எந்தவிதமான புதுமை யையோ, புரட்சிகரமான மாற்றத்தையோ இச் சட்டம் செய்ய வில்லை. அதே காரியங்கள் வாரியம் மற்றும் இயக்குநர்கள் மன்றம் இல்லாமல், இந்திய அரசு செயலரால் மேற்கொள்ளப் படுமாறு செய்யப்பட்டது. எனவே, இச் சட்டம் செய்த மாற்றம் முறையணைந்ததாக இருந்ததேயன்றிப் புரட்சிகரமானதாக இருக்கவில்லை. ஒரு சில நிர்வாக மாற்றங்களை மட்டும் செய்து, நடைமுறையிலிருந்த பழைய பிரித்தாளும் பொறுப்பு முறையே இச் சட்டத்திற்குப் பிறகும் தொடர்ந்தது. நடைமுறையிலிருந்த பழைய முறையின்படி இயக்குநர் மன்றம் இந்திய அரசாங்கக் காரியங்களுக்கான துவக்க உரிமையைப் பெற்றிருந்தது. இயக்கு நர்கள் செய்யும் காரியங்களை ஏற்கவோ மறுக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ, சீராயவோ வாரியத் தலைவருக்கு அதிகாரம் இருந்தது. அவ் வதிகாரம் 1858ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட திட்டத்தின்படி அரசு செயலருக்கும் அவரது இந்திய மன்றத்திற்கும் மாற்றப்பட்டது. முன்பு வாரியத் தலைவர் பெற்றிருந்த அதிகார அந்தஸ்து நிலை இந்திய அரசு செயலரின் கீழ் மேற்கொண்டு தொடரப்பட்டது. எனவே, 1858ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட மாற்றம், புத்தம் புதிய தான ஒரு திட்டம் என்று சொல்வதற்கில்லை. 1853ஆம் ஆண்டுச்

சட்டத்தின்கீழ், 1858ஆம் ஆண்டுக்குப் பிறகும்கூடச் செயல் பாட்டில் இருக்கும்படியான காரியங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. எனவே, டாட்வெல் கூறுவது போன்று, 1858-ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டம் இதுகாறும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் விழிப்புணர்வுடன் ஆற்றிவந்த காரியங்களுக்குச் சட்ட வடிவைக் கொடுத்து அவற்றிற்கான ஒரு தீர்வைத்தான் கொடுத்ததே ஒழிய, அது புதுமையாகக் கண்டு பிடிக்கப்பட்ட தகுமுறைத் திட்டமாய் (expedient measure) அமையவில்லை. எனவே, 1858ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட மாற்றமும் அமைப்பும் 1784-ல் இயற்றப்பட்டுச் செயற்பாட்டிலிருந்த பிட் இந்தியச் சட்டத்தின் செயல்முறையின் இயற்கையானதும் தவிர்க்க முடியாததுமான முடிவை உறுதி செய்தன. அதன் விளைவே அரச நிறுவனத்தின் நேரடி ஆட்சிக்குக் கம்பெனியின் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தின் பொறுப்பு மாற்றப்பட்டதாகும்.

இந்தியாவின் நல்லரசாங்கத்திற்கெனச் செய்யப்பட்ட 1858ஆம் ஆண்டுச் சட்டச் செயற்பாட்டின் பின் விளைவை முன்னிறுத்திப் பார்க்கும்பொழுது அச் சட்டத்தினால் செய்யப் பட்ட மாற்றம் முறையணைந்த, இயற்கையான மாற்றமாய் அமைந்தது என்பதைப் பின்வரும் செய்திகளின் மூலமும் நாம் அறியலாம். 1773ஆம் ஆண்டு முதற்கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனியின் காரியங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான உரிமையையும் அதிகாரத்தையும் பிரிட்டிஷ் பாராளுமன்றம் பெற் றிருந்தது. எனினும், அஃது இந்திய நிர்வாகத்தின்மீது தனது தொடர்ச்சியான கவனத்தையும் தலையீட்டையும் செய்யவில்லை. அதற்கான வாய்ப்பை அவ்வப்பொழுது சாசனச் சட்டங்களைப் புதுப்பித்த பொழுதே பெற்றது. அதுவும் முனைப்பாய் இருக்க வில்லை. அப்படியிருந்தும் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின் மீது பிரிட்டிஷ் அரசு கொண்டிருந்த உரிமையை அல்லது பொறுப்பை முழுமையாக உதாசீனம் செய்துவிடவில்லை. அத்தகைய உரிமையும் பொறுப்பும் முறையணைந்த சட்ட அமைப்புக் கூட்டிற்கு முழுமையாக்கப்பட்டிருக்கவில்லை. அம் முழுமையாக்கச் செயல் சட்ட ரீதியாகக் கம்பெனியின் இந்திய அரசாங்கம் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடிப் பொறுப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டதன்மூலம் 1858-ல் செய்யப்பட்டது. எனினும் 1858-ஆம் ஆண்டுக்குப் பின்னரும்கூட இந்திய அரசு செயலர் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் குறித்துச் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை விவாதிக்கும் சமயங்களில் மட்டுமே இந் நாட்டு விவகாரங்களில், பாராளுமன்றம் முனைப்பற்ற அக்கறையைக்

காட்டுவதாய் இருந்தது. தான் கொண்டிருந்த அயர்லாந்து பிரச்சினையின் காரணமாகவும், உள்நாட்டுக் குழப்பங்கள் காரண மாகவும் இன்னோரன்ன பலவற்றாலும் 1858ஆம் ஆண்டுக்குப் பிறகும்கூடத் தனது நேரடிப் பொறுப்பின்கீழ் இந்திய அரசாங் கமும் நிர்வாகமும் வந்திருந்தும்கூட, யாவரும் எதிர்பார்த்த அளவில் காரியங்கள் ஆற்றப்படவில்லை. அதற்கு வெகுகாலம் பிடித்தது. மேலும், இந்தியக் காரியங்களும் நிர்வாகமும் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவையாய் மேற்கொள்ளப்பட்டு வளர்க்கப்பட வேண்டும் என்று ஆங்கிலேயரால் கருதப்பட்டது. இதனால் இந்திய விவகாரம் குறித்து, அல்லது அதன் பிரச்சினை யைப்பற்றிப் பொது மக்களின் கருத்தையும் அறிவையும் அனுமானித்துச் செயல்படும் போக்கையும் எந்த அரசியல் கட்சியும் மேற்கொள்ளவில்லை. அவ்வாறு மேற்கொண்டாலும், பிரிட்டனின் உள்நாட்டு அரசியலில் எந்த இலாபத்தையும் பெற முடியாது என்பதையும் பிரிட்டிஷ் அரசியல் கட்சிகள் உணர்ந் திருந்தன. மேலும், இந்திய அரசாங்கப் பொறுப்பு இந்தியாவி லிருந்தபடியே யன்றி இங்கிலாந்திலிருந்தவாறு மேற்கொள்ளப்பட லாகாது என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கருதியது. இதனால் பிரிட்டிஷ் இந்திய அதிகாரிகளால், இந்தியாவில் காலம், இடம் ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்பச் செய்யப்படும் காரியங்களை ஆதரித்து அனுமதிக்கும் போக்கை பிரிட்டிஷ் அரசாங்கம் 1858ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்ததைப் போலவே 1858க்குப் பின்னரும் மேற்கொண்டது. இவை யாவும் இந்திய நிர்வாகத்தின் மீது சுமத்தப்பட்ட பாராளுமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாடு யாவரும் நினைத்ததைப்போல் முனைப்பாய் இருக்கும்படி செய்து விடவில்லை.

இதுகாறும் கூறிய செய்திகளைத் தவிர, வேறு சில குறைபாடு களும் இருந்ததைப் பலர் எடுத்துக்காட்டியுள்ளனர். இந்திய அரசு செயலர், மற்றும் அவரது ஆலோசனை மன்ற உறுப்பினர் களைப் பொறுத்தவரை, முன்னவர் மிக அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டவராயினும், தமது மன்ற உறுப்பினர்களின் ஆலோசனையை உதாசீனம் செய்யக்கூடியவராகவும் இருந்தார். அரசியல் மற்றும் அரசாங்கக் கோட்பாட்டு ரீதியாக அவர்மீது போதுமான செல்வாக்கையும் தடைகளையும் செலுத்தக்கூடிய வகையில் இந்திய அரசு செயலரின் மன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. அம் மன்றத்திற்குத் துவக்க உரிமை கொடுக்கப்படவில்லை. அத்தகைய மன்றத்தைப் புறக்கணித்து, இரகசியமாகச் சில காரியங்களை அரசு செயலர் மேற்கொள்ள வகை செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒரு கணக்கீட்டு நிறுவன

மாக அரசு செயலரின் மன்றம் செயல்படுமாறு செய்யப்பட்ட போதிலும், அவர்களின் ஊதியங்கள் யாவும் இந்திய வருவாய்களிலிருந்து கொடுக்கப்பட்ட போதிலும், இந்திய அரசாங்க பரிபாலனத்திற்கென அமைக்கப்பட்டிருந்த அம் மன்றத்தில் உடனடியாக இந்தியர் ஒருவர்கூட நியமனம் செய்யப்படவில்லை. அதற்கு வெகுகாலம் பிடித்தது. அதுமட்டுமன்றி இந்தியச் சிவில் பணித்துறையிலும், இதுகாறும் வழக்கிலிருந்த பழைய முறையே பின்பற்றப்பட்டது. அப் பணித்துறையில் தகுதியும் திறமையும் கொண்டிருந்த இந்தியர்கள் நுழைவதற்குக்கூட வெகுகாலம் பிடித்தது. இந் நாளைய சட்ட மன்றங்களுக்கு ஈடான பிரதிநிதித்துவ மன்றங்கள் (Representative Institutions) அமைக்கப்பட இச் சட்டம் வகை செய்யவில்லை.

இவ்வாறு பல குறைபாடுகளை 1858ஆம் ஆண்டுச் சட்டமும் அதன் செயல்பாடும் பெற்றிருந்த போதிலும், அதனுல் பெறப்பட்டிருந்த பல நன்மைகளின் காரணமாகவும் 1858க்குப் பிறகு வெகு விரைவில் இந் நாடு தழுவிய அரசியல் விழிப்புணர்ச்சி, அரசியல் வளர்ச்சி, தேசிய இயக்கம், ஆகியவற்றிற்கெல்லாம் வழி கோலியதாலும், இந்திய அரசாங்கம் மற்றும் அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்புமுனையாக இச் சட்டம் அமைந்துள்ளது என்று நாம் திட்டவட்டமாகக் கூறலாம். இதற்குத் துணைபுரியும் வகையில் 1858ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் முதல் நாளன்று விக்டோரியா பேரரசியால் வெளியிடப்பட்ட பிரகடனம் அமைந்தது. பொதுவாக, இந்திய மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட சாசனமாகக் கருதப்படும் அரசப் பிரகடனத்தின் செய்திகள் பின்வருமாறு:

அரசப் பிரகடனம் (Royal Proclamation)

இந்தியாவின் நல்லரசாங்கத்திற்கான சட்டம் 1858ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நிறைவேற்றப்பட்ட போதிலும், இந்திய அரசாங்கத்தைப் பிரிட்டிஷ் நிறுவனம் தனது நேரடிப் பொறுப்பில் ஏற்றுக் கொள்ளுமாறு விக்டோரியா பேரரசி தனது பிரகடனத்தை அதே ஆண்டு, நவம்பர்த் திங்கள் முதல் நாளன்று பிறப்பித்தார். அப் பிரகடனம் அலகாபாத்தில் கூட்டப்பட்ட தர்பாரில் (darbar) அப்பொழுது இந்தியாவில் தலைமை ஆளுநராக இருந்த கானிங் பிரபுவால் அறிவிக்கப்பட்டது. அத் தர்பாரில் சுதேச மன்னர்களும் மக்களும் குழுமியிருந்து, பேரரசியின் பிரகடனத்தை அறிந்து ஏற்றனர். அப் பிரகடனத்தின்மூலம் செய்யப்பட்ட அறிவிப்புகளும், கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் பின்வருமாறு:

இதுகாறும் மாட்சிமை தங்கிய கிழக்கிந்தியக் கம்பெனியால் பிரிட்டனின் அடைக்கலப் பொருளாக நிர்வகிக்கப்பட்டு வந்த இந்தியப் பிரதேசங்களின் அரசாங்கம் பிரிட்டிஷ் அரசு நிறுவனத்தின் நேரடிப் பொறுப்பின்கீழ் உறுதிப்பாட்டுடன் மாற்றப்பட்டது.

இதுகாறும் தலைமை ஆளுநராய் இருந்துவந்தவர் இனி இந்தியாவின் அரசப் பிரதிநிதி மற்றும் தலைமை ஆளுநராக (Viceroy and Governor General) செயல்படுமாறு பதவிநிலை வழங்கப்பட்டார். மேலும், கானிங் பிரபு இந்தியாவின் முதல் அரசப் பிரதிநிதி மற்றும் தலைமை ஆளுநராகப் பெயரிடப்பட்டு அறிவிக்கப்பட்டார்.

கிழக்கிந்தியக் கம்பெனியால் அல்லது கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரத்தின்கீழ் இந்திய அரசர்களுடன் செய்யப்பட்டிருந்த ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் யாவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தினுல் ஏற்றுக் கொள்ளப்படுவதோடு, அவை நேர்மையாகப் பின்பற்றப் படும் என்ற உறுதிமொழி இந்திய அரசர்களுக்குக் கொடுக்கப் பட்டது. இதைப் போலவே இந்திய அரசர்களும் இருக்க வேண்டும் என்று கோரப்பட்டனர். மேலும், இந்தியச் சுதேசி அரசர்களின் உரிமைகள், மதிப்பு, மாட்சி ஆகிய யாவும் ஆங்கிலேயரால் என்றும் மதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

எந்த இனம், வகுப்பு ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாயினும் இந்திய மக்கள் பிரிட்டிஷ் பிரஜைகள் எனஅனுசரிக்கப்பட்டு நடத் தப்பட உறுதியளிக்கப்பட்டனர். இதனுல் பாரபட்சமின்றிக் கல்வி, பணியாற்றுவதற்கான திறமை, நேர்மை ஆகியவற்றின் தகுதிகளுக் கொப்ப இந்தியர்கள் பிரிட்டிஷ் இந்தியப் பணித்துறைகளில் பதவிகளை வகிக்க உத்தரவாதம் அளிக்கப்பட்டனர். மதத்தின் காரணமாக வேற்றுமை அகற்ற, சகிப்புத் தன்மை பிரிட்டிஷ் அரசாங்கத்தினுல் இந்தியாவில் எஞ்ஞான்றும் மேற்கொள்ளப்படும் என்றும், பாரபட்சமற்ற சமத்துவ சட்டப் பாதுகாவல் பேணப் படும் என்றும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

இந்திய மக்கள் பெற்றிருந்த சொத்துரிமை, நிலவுரிமை ஆகிய வற்றின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து இனிச் சட்டங்கள் இயற்றப்பட்டு நிர்வாகம் நடத்தப் படும் என்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டது. உள்நாட்டுப் பாது காவலைச் சீராக்கி நிலைநிறுத்தி, அமைதியான முறையில் இந்திய தொழில் வளத்தைப் பெருக்கி, பொதுப் பயன்பாட்டுக் காரியங்

களைத் தேர்ச்சியுறச் செய்து, இந்திய மக்கள் யாவரும் அவற்ருல் பயன்பெறுமாறு இந்திய அரசாங்கம் நிர்வகிக்கப்படும் என்று இப் பிரகடனம் கூறியது. ஏனெனில், இந்தியர்களின் சுபிட்சத்தில் இந் நாட்டை ஆள்வோரின் வலிமையும், அவர்களின் மனநிறைவில் பாதுகாவலும், இந்தியர்களின் நன்றியறிதலில் ஆங்கிலேயரின் சிறந்த ஆட்சி வெகுமதியும் அமையவேண்டும் என்பதை அப் பிரகடனம் ஆணித்தரமாக அறிவித்தது. இந்திய மக்கள் நல்லரசாங்கத்தின்கீழ் நல்வாழ்வு பெறுவதற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் யாவும் உலகாளும் உய்யவன் ஆசியுடன், யாவர் மனத்திலும் நல்லெண்ணங்களை அல்லது விருப்பங்களை வித்தூன்ற வேண்டும் என்றும் விக்டோரியா பேரரசியின் பிரகடனம் சொற்சிறப்பும், பொருட்சிறப்பும் கொண்டிருந்தது. அஃது இந்திய மக்களால் பேரார்வத்துடன், அவர்களுக்கே உரிய நேர்மையுடன் பெரிதும் வரவேற்கப்பட்டது. ஆனால், இப் பிரகடனத்தின்மூலம் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் பல ஆங்கிலேயரால் உண்மையாகவும், முழுமையாகவும் கடைப்பிடிக்கப்படவில்லை. எனவேதான், இந்தியாவின் பிற்கால அரசியல் மற்றும் அரசாங்கங்கள் பல சோதனைகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

22. கம்பெனியின் இந்திய அரசாங்கம், ஆட்சிப்பொறி ஆகியவை 1857-ல் பெற்றிருந்த முடிவு நிலையும் வளர்ச்சித் தன்மையும்

இந்திய அரசாங்கம் மற்றும் ஆட்சிக் காரியங்களை நிர்வகிக்கும் பொறுப்பு கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் அரச நிறுவனத்திற்கு 1858ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. அம் மாற்றம் செய்யப்பட்டதற்கான காரணங்களையும் நிகழ்ச்சிகளையும் நாம் அறிந்துள்ளோம். எனினும், 1858-க்குப் பிறகு இந்திய அரசியல், அரசாங்கம் போன்றவை பெற்ற வளர்ச்சித் தேர்ச்சிகளை அறிந்து கொள்ளுமுன், 1857ஆம் ஆண்டில் இந்திய ஆட்சிப்பொறியும் முறையும் எத்தகைய வளர்ச்சியைப் பெற்று, எவ் வமைப்பு நிலையைப் பெற்றிருந்தன என்பதை ஈண்டு எடுத்தியம்ப வேண்டியது வெகு முக்கியமாகும்.

1773ஆம் ஆண்டின் ஒழுங்குமுறைச் சட்டம், 1784ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பிட் இந்தியச் சட்டம் ஆகியவை அமைத்துக்கொடுத்த அடித்தளங்களின்மேல் 1833ஆம் ஆண்டின் சாசனச் சட்டம் வலிவானதும் உயர் அதிகாரக் குவிப்பு முறையைக் கொண்டிருந்ததுமான ஆட்சிமுறையை இங்கு நிறுவியது. இவ்வாறு உருவாக்கப்பட்டிருந்த இந்திய அரசாங்கக் கட்டுமானத்தில் ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநர் உச்ச ஆட்சி அதிகாரியாக இருந்தார். மாறுகக் கூறின், தலைமை ஆளுநருடன்கூடிய உச்ச ஆட்சிமன்றம் இந் நாட்டில் கம்பெனியின் ஆளுகை, இறைமை மற்றும் ஆட்சி அதிகாரம் ஆகியவற்றின்கீழ் வந்திருந்த எல்லாப் பிரதேசங்களுக்குமான உச்ச நிர்வாக நிறுவனமாக அல்லது செயலாட்சி கேந்திரமாக (Supreme Executive Authority) இருந்தது. கம்பெனியின் ஆட்சிப் பரப்பின்கீழ் வந்திருந்த பிரிட்டிஷ் இந்தியப் பிரதேசங்கள், ஆட்சிக் குறிக்கோள்கள் மற்றும் நிர்வாக நலன் குறித்துப் பல்வேறு பகுதிகளாகப்

பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றில் சில, மாநிலங்கள் (Presidencies) என்றும் பல, மாகாணங்கள் (Provinces) என்றும் அழைக்கப் பட்டன. சென்னை, பம்பாய், வங்கம் ஆகியவை மாநிலங்கள் எனப்பட்டன. சென்னை, பம்பாய் ஆகிய இரு மாநிலங்களும் ஆட்சி மன்றத்துடன்கூடிய ஆளுநர்களின் பொறுப்பின்கீழ் இருந்தன. இந்தியத் தலைமை ஆளுநரின் ஆட்சித் தலைமையிடமாக வங்கம் இருந்தது. எனினும், வங்கத்தின் உள்நாட்டு நிர்வாகத் தைக் கவனிப்பதற்கு ஒரு துணை ஆளுநர் நியமிக்கப்பட்டிருந்தார். இதைப்போல் ஆக்ராவும் (Agra) ஒரு துணை ஆளுநரின் பொறுப் பின்கீழ் இருந்தது. அஸ்ஸாம், பஞ்சாப், நாக்பூர், ஆஜ்மீர் போன்ற பல இடங்கள் தலைமை ஆணையர்களைக் கொண்டிருந்த மாகாணங்களாய் இருந்தன. (Chief Commissioner's Provinces). மாநிலங்களுக்கும் மாகாணங்களுக்கும் இடையிலும், மாநில ஆளுநர் மற்றும் மாகாணத் துணை ஆளுநர் அல்லது தலைமை ஆணையர் ஆகியோருக்கு இடையிலும் அரசாங்க ஆட்சி ரீதியான சில வேறுபாடுகள் பேணப்பட்டன. மாநில ஆளுநர்கள் தத்தம் மாநிலங்களில் ஆட்சிமன்றங்களைக் கொண்டு செயல்பட்டனர். ஆனால், துணை ஆளுநர்களும் தலைமை ஆணையர்களும் தமது மாகாணங்களில் ஆட்சிமன்றங்களைக் கொண்டிருக்கவில்லை. மாநில ஆளுநர்கள் இந்தியத் தலைமை ஆளுநரின் இயக்கம், மேற்பார்வை, கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு உட்பட்டவர்களாய் இருந்த போதிலும். மாநில ஆளுநர்கள் இங்கிலாந்திலிருந்த இயக்குநர் களோடு நேரிடையாகத் தொடர்பைக் கொண்டிருக்கும் சலுகை யைப் பெற்றிருந்தனர். இதனால் கம்பெனியின் இந்திய மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்கள்மீது செலுத்தி வந்த கட்டுப் பாடு பல சமயங்களிலும், பெரும்பாலான காலங்களிலும் பலவீனமாய் இருந்தது. மேலும், மாநில ஆளுநர்கள் மற்றும் அவர்தம் ஆட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் யாவரும் பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் அனுமதியுடன் இயக்குநர்கள் மன்றத்தால் நியமிக்கப்பட்டனர். ஆனால், மாகாணத் துணைஆளுர்களும், தலைமை ஆணையர்களும் ஆட்சி மன்றத்துடன்கூடிய இந்தியத் தலைமை ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டனர். எனவே, இவர்கள்மீது தலைமை ஆளுநரும் அவரது ஆட்சிமன்றமும் செலுத்திய இயக்கக் கட்டுப்பாடும், மேற்பார்வையும் கட்டுக் கோப்பானதாகவும் வலிவானதாகவும் இருந்தன. தத்தம் ஆட்சி மன்றங்களைப் பொறுத்தவரை அவற்றின் நோக்கத்தையும், கருத்தையும் புறக்கணித்து அல்லது ஒதுக்கித் தள்ளிச் செயல்படு வதற்கான அதிகாரமும் அனுமதியும் வழங்கப்பட்டிருந்தனர். இதனால் பல இன்னல்களும் சிக்கல்களும் ஏற்பட்டதும் உண்டு. ஆனால், இத்தகைய இன்னல்கள் துணை ஆளுநர்களைக் கொண்டி

ருந்த மாகாணங்களிலும், அவ்வப்போது அபகரிக்கப்பட்டுப் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட தலைமை ஆணையர்களின் மாகாணங்களிலும் இருக்கவில்லை. மேலும், கம்பெனியின் பிரிட்டிஷ் இந்தியா முழுவதும் 1857-ல் அதிகாரக் குவிப்பு முறைக்கு இலக்காகி இருந்த ஒற்றை அரசாங்க நெறியின்கீழ்ச் செயல் பட்டதாய் இருந்தது.

இந்திய அரசாங்கத்தின் அமைப்பு, ஆட்சிமுறை, நிதிக்கட்டுப் பாடு ஆகியவை உயரிய நிலையில் ஒரே மையம் நோக்கி ஒருமுகப் படுத்தப்பட்டிருந்ததைப்போல், கம்பெனியின் இந்திய இராணுவ மும் மிகுதியாக ஒருமுகப்படுத்தப்பட்டிருந்தது. அந்த இராணுவம் தனிப்பட்ட மூன்று செயற்படு பிரிவுகளாக (separate commands) பிரிக்கப்பட்டிருந்தது. அவை சென்னை, பம்பாய், வங்கம் ஆகிய மூன்று மாநிலங்களில் முறையே தத்தம் முதற் பெரும் படைத் தலைவர்களைப் பெற்று இயங்கின. எனினும், வங்க இராணுவத்தின் முதற் பெரும் படைத்தலைவர் இந்தியாவின் முதற் பெரும் படைத் தலைவராகச் செயல்பட்டார். இதனுல் அவர் ஒரு மாநிலத்திற்குச் செல்ல நேர்ந்தபொழுது அம் மாநிலத்தின் முதற் பெரும் படைத் தலைவரின் இடம், பணி ஆசியவற்றைப் பற்றிக்கொண்டு செயல் படும் அனுமதியைப் பெற்றிருந்தார். இத்தகைய இடம், மற்றும் அதிகாரம், பணி ஆகியவற்றை ஒரு மாநிலத்தில் பற்றிக்கொள்ளக் கூடிய அதிகாரம் அலுவல் நிமித்தம் வருகை புரிந்த தலைமை ஆளுநருக்கும் இருந்தது. மேற்சொல்லப்பட்ட இராணுவ ஏற்பாட்டின்மூலம் இராணுவ ஒற்றுமை இந் நாட்டில் பேணப் பட்டது. சென்னை, பம்பாய், வங்கம் ஆகிய மாநிலங்களிலிருந்த தனித்தனியான மூன்று இராணுவங்களைத் தவிர பிரிட்டிஷ் அதிகாரிகளின்கீழ் இந்தியப் பட்டாளங்களைக் கொண்டிருந்த படைப் பிரிவுகளும் (contingents) அமைக்கப்பட்டிருந்தன. இப் படைப் பிரிவுகள் பல இந்திய அரசுகளின் தலைநகரங்களில் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகளின் கண்காணிப்பு, பொறுப்பு ஆகியவற்றின்கீழ் நிறுத்தப்பட்டிருந்தன. இவற்றின்மூலம் கூடுதலான இராணுவ பலத்தைக் கம்பெனியின் இந்திய அரசு பெற்றிருந்தது.

கம்பெனியின் இந்திய நிர்வாக வேலையை மேற்கொள்வதற் கென ஒரு சிவில் பணித்துறை உருவாக்கப்பட்டிருந்தது. அப் பணித்துறையினருக்கு வழங்கப்பட்டுவந்த ஊதியம் கவர்ச்சி மிக்க தாய் இருந்தது. இது 1857-ல் நிலவிய நிலையாகும். 1765ஆம் ஆண்டில் திவானி உரிமையைப் பெற்றதன் விளைவாய்க் கிழக் கிந்தியக் கம்பெனி அரசியல் மற்றும் ஆட்சி அதிகாரங்களை

மொகலாயப் பேரரசரிடமிருந்து பெற்றது என்பதை நாம் அறிவோம். அப்பொழுது,–அஃதாவது 1765-ல்,–கம்பெனியின் இந்தியச் சிவில் பணியாளர்களின் எண்ணிக்கை மிகச் சிறியதாக இருந்தது. மேலும், அப்பொழுது அப் பணியாளர்கள் எவ் விதமான பயிற்சியையும் பெற்றிருக்கவில்லை. அவர்களுக்கு வழங் கப்பட்டுவந்த ஊதியமும் வெகு குறைவாக இருந்தது. ஆனால், தமது வருவாய்களை நிறைவு செய்து கொள்ளும் வகையில் அல்லது பற்றுக்குறையை நிரப்பிக்கொள்ளத் தனிப்பட்ட வர்த்தகத்தை மேற்கொள்ளவும் வெகுமதிகளையும் பரிசுகளையும் பொருளாகவோ, பணமாகவோ பெற்றுக்கொள்ளவும் அவர்கள் அனுமதிக்கப்பட் டிருந்தனர். இதனால் ஊழலும் இலஞ்ச லாவண்யங்களும் குடி கொண்டதாய்க் கம்பெனியின் நிர்வாகம் இருந்தது. இத் தீமையை அகற்றி நிர்வாகத் தேர்ச்சியைத் தோற்றுவிக்கும் வகையில் இராபர்ட் கிளைவ் முயன்றார்; நிர்வாகச் சீர்திருத்தங்கள் பலவற்றையும் மேற்கொண்டார். இவற்றின்படி கம்பெனியின் பணியாளர்களை ஒரு புதிய ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கைக்கு உள்ளாகுமாறு கட்டாயப்படுத்தினார். இவ் வொப்பந்தத்தின் மூலம் கம்பெனியின் சிவில் பணியாளர்கள் தனிப்பட்ட வர்த்த கத்தை மேற்கொள்வதில்லை என்றும், சட்டமுறை யற்ற வெகுமதி களையும் இலஞ்சப் பொருள்களையும் பெறுவதில்லை என்றும் ஒத்துக் கொண்டனர். இதன் காரணமாகவே கம்பெனியின் ஒப்பந்தப் பணித்துறைகள் (covenanted services) என்று பின்னர் அழைக்கப் படலாயின. ஒப்பந்தப் பணித்துறைகள் உருவாக்கப்பட்டதால், கம்பெனியின் பணியாளர்கள் பெற்ற இழப்புகளை ஈடு செய்யப் புதிய திட்டத்தையும் இராபர்ட் கிளைவ் தயாரித்தார். ஆனால், அத் திட்டம் கம்பெனியின் இயக்குநர்களால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. இதனால் நிர்வாக ஊழல் அதிகரித்தது. வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்த சீர்திருத்தங்களும் பயனளிக்கவில்லை.

ஆனால், காரன்வாலிஸ் பிரபு வங்கத்தின் தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றபின் நிர்வாகச் சீர்திருத்தங்கள் பலவற்றைப் புகுத் தினார். கம்பெனிப் பணியாளர்களின் ஊழல் படைத்த வழக்கங் களையும் காரியங்களையும் தடுத்து நிறுத்தும் நோக்கில் அவர் கம்பெனிப் பணியாளர்களின் ஊதியங்களைக் கணிசமாக உயர்த் தினார். மாவட்ட ஆட்சியாளர்களின் ஊதியம் மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாய் என்று அவரால் உயர்த்தப்பட்டது. மேலும், இவ் வூதியத்தின் அளவை மிஞ்சும் வகையில் அவர்கள் திரட்டிய நிதி அல்லது வருவாய்களின் அடிப்படையில் தரகுக் கட்டணத்தைப் (commission) பெறவும் அவர்களுக்கு அனுமதியை வழங்கினார். ஆட்சி அமைப்பில் பதவி உயர்வுகள் யாவும் முதுநிலை நியதியின்

(principle of seniority) அடிப்படையில் வழங்கப்படுவதற்கு அவர் வகை செய்தார். மேலும், மாவட்ட ஆட்சியாளர்களின் வருவாய் திரட்டும் வேலையை அவர்கள் பெற்றிருந்த வழக்குத் தீர்ப்பு வழங்கும் பணியிலிருந்து (adjudication) பிரித்தார். கம்பெனியின் உயர் பதவிகள் யாவும் ஐரோப்பியர்களுக்கென்று ஒதுக்கப் பட்டன. மேலும், சிறு குற்றங்களையும் தவருன நடத்தை களையும் சட்டப்படி குற்றஞ்சாட்டக்கூடிய தீய செயல்களையும் (misdemeanours) தடைப்படுத்தும் வகையில் சிக்கல் மிக்க ஒழுங்கு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1793ஆம் ஆண்டுச் சட்டம் காரன்வாலிஸ் பிரபு சீர்திருத்தங்களை நிலையான அடிப்படையில் செயல்படுமாறு செய்தது. மேலும், அச் சட்டம் கம்பெனியின் பணித்துறைகளில் தோன்றும் காலியிடங்களில் (vacancies) அதன் சிவில் பணியாளர்களே அவ்வப்பொழுது நியமிக்கப்பட வேண்டும் என்று வகை செய்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் தோன்றும் பதவிக் காலி ஸ்தானங்களில் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்த சிவில் பணியாளர்களே அவ்வப்பொழுது நியமிக்கப்படவேண்டும் என்றும் அச் சட்டம் வகை செய்தது. நாம் ஏற்கெனவே அறிந் துள்ளதைப்போல் கம்பெனியின் சிவில் துறைப் பதவிகள் யாவும் தரம் செய்யப்பட்டு வகைப்படுத்தப்பட்டன. மேலும், 1793ஆம் ஆண்டின் சட்டம் குறைந்தது மூன்ருண்டுகளுக்கேனும் இந்தியா வில் வாழ்ந்திராத கம்பெனியின் எவ் வதிகாரியும் ஆண்டு ஒன்றுக்கு 500 பவுன்களுக்கு அதிகமாக ஊதியத்தைப் பெறக் கூடாது என்றும் விதித்தது. இது மட்டுமன்றி, ஆண்டொன்றுக்கு முறையே 1,500 பவுன்கள், 3,000 பவுன்கள், 4,000 பவுன்கள் ஆகிய தொகைகளை ஊதியமாகக் கொண்டிருந்த பதவிகளுக்கு முறையே ஆருண்டுகள், ஒன்பது ஆண்டுகள், பன்னிரு ஆண்டுகள் பணி புரிந்திருந்தாலொழிய எவரையும் அப் பதவிகளுக்குப் பதவி உயர்வு (promotion) செய்யக்கூடாது என்றும் வகை செய்யப் பட்டது.

மேற்சொல்லப்பட்ட அம்சங்களைக் கொண்டதாய் அமைக்கப் பட்டிருந்த 1793ஆம் ஆண்டுச் சட்டத்தின் சிவில் பணித்துறைத் திட்டம் கம்பெனியின் இயக்குநர்கள் பெற்றிருந்த ஆதாய முற் சலுகையைக் குறைத்தது. கம்பெனியின் இந்திய உயர் பதவி களுக்குத் தேவையான நபர்களைத் தாமே நேரிடையாக நியமனம் செய்து வந்த அதிகாரத்தை இயக்குநர்கள் இழந்தனர். அவர்கள் கம்பெனியின் பணித்துறைகளுக்கான எழுத்தர்களை (writers) மட்டுமே அனுப்பிவைக்க முடிந்தது. மேற்சொல்லப்பட்ட விதிகள் அந்தப் பணித்துறைத் திட்டம் எங்கு அமுலிலிருந்ததோ அங்குமட்டும் செயல்படுத்தப்பட்டன. இயக்குநர்களின் பதவி நியமனச் சலுகைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்த போதிலும்,

கம்பெனியின் இந்தியப் பணித் துறையைச் சேர்ந்த எவ் வதிகாரியையும் அலுவலரையும் திருப்பி யழைப்பதற்கென அவர்கள் பெற்றிருந்த அதிகாரம் அவர்களிடமிருந்து நீக்கப்படவேயில்லை. எவ்வாறாயினும், கம்பெனியின் இந்தியப் பணித்துறைகளில் பலவிதமான புதுமைகளும் சீர்திருத்தங்களும் ஒழுங்குமுறைகளும் கட்டுப்பாடுகளும் புகுத்தப்பட்டு அனுசரிக்கப்பட்ட போதிலும் உயர் பதவிகளை இந்திய மக்கள் பெறக்கூடிய நிலை இருக்கவில்லை. 'மேற்சொல்லப்பட்ட திட்டம் வெகு சாமர்த்தியமாக இந்தியர்கள் கம்பெனியின் உயர் பதவிகளில் நுழைய முடியாதபடி ஒதுக்கி வைத்திருந்தது. இக் குறைபாடு, 1833ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தில் வகை செய்யப்பட்ட சமத்துவ ஏற்பாடுமூலம் நீக்கப் பட்டது. ஆனால் அதுவும் ஏட்டளவிலேயே நின்று எப் பயனையும் அளிக்காது போயிற்று. பின்னர், 1853ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ்ப் பகிரங்கப் போட்டித் தேர்வுகளின்மூலம் பிரிட்டிஷ் குடிமக்கள் மட்டுமன்றி இந்தியர்களும் ஆட் சேர்ப்புச் (recruitment) செய்யப் படுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், இவ் வேற்பாடும் விளைவாற்றல் மிக்க பலனைக் கொடுக்கவில்லை. ஐ. சி. எஸ் (I. C. S) போன்ற பெரும் பதவிகளைப் பெறுவதற்கான தகுதியும் திறமையும் இருந்தும்கூட, அவற்றை நம்மவர்கள் பெறமுடியாத இடர்ப் பாடுகள் இருந்தன. அதே சமயம் இந் நாட்டைப்பற்றிய பல வகையான அறிவும், பொருத்தமான. போதுமான பயிற்சியும் பெறாத ஐரோப்பியர்கள் உயர் அதிகாரிகளாகப் பல மட்டங்களில் நியமிக்கப்பட்டனர். இக் குறைபாடு வெல்லெஸ்லி பிரபு தலைமை ஆளுநராக நியமனம் செய்யப்படும்வரை நிலவியது.

வெல்லெஸ்லி பிரபு வங்கத்தின் தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றபின், கல்கத்தாவில் ஒரு கல்லூரியை ஸ்தாபித்தார். அக் கல்லூரியில் கம்பெனியின் இந்தியப் பதவிகள் பலவற்றுக்கு நியமிக்கப்படும் ஐரோப்பியர்கள் யாவரும் இந்திய மொழிகள், சட்டம் மற்றும் வரலாறு ஆகியவற்றை மூன்றாண்டுகளுக்குப் படித்துக் கற்றுணரவேண்டும் என்று ஓர் ஏற்பாட்டைச் செய்தார். ஆனால், வெல்லெஸ்லி பிரபுவால் ஆரம்பிக்கப்பட்ட கல்கத்தா கல்லூரி உடனடியாக மூடப்பட வேண்டியதாயிற்று. ஏனெனில் வெல்லெஸ்லியின் திட்டத்தை இயக்குநர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனால், அவர்கள் இங்கிலாந்திலிருந்த ஹெய்லிபரி என்னும் இடத்தில் ஒரு கல்லூரியை 'ஆரம்பித்தனர். அக் கல்லூரியில் இந்தியாவிற்கு எழுத்தர்களாக அனுப்பப்படுவதற்கு முன் அப் பதவிகளுக்கென இயக்குநர்களால் நியமிக்கப்பட்டோர் நான்கு பருவங்களுக்குத் தங்கிப் படிக்கவேண்டும் என்று வகை செய்தனர். இந்த ஏற்பாடும் எவ் விந்தியரும் கம்பெனியின் சிறிய பதவிகளில்

கூட நுழைய முடியாதபடி தடுத்தது. இயக்குநர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த முற்சலுகை முற்றிலும் நீக்கப்பட்டபின். 1858-ல் ஹெய்லிபரி கல்லூரி மூடப்பட்டது. அதன்பின் இந்தியப் பணித்துறைகளுக்குச் செய்யப்பட்ட எல்லா ஆட் சேர்ப்பும் பகிரங்கப் போட்டித்தேர்வின் முடிவுகளின் அடிப்படையிலேயே செய்யப்படலாயிற்று. இந்தியச் சிவில் பணித்துறைக்கு முன்னேற்றமானதும் முனைப்புடையதும் முழுமையானதுமான கல்வியைப் பெற்றிருந்த இளைஞர்களை ஈர்ப்பதைத் தனது குறிக்கோளாகப் பகிரங்கப் போட்டித் தேர்வுமுறை கொண்டிருந்தது. ஆனால், நாம் முன்னரே அறிந்துள்ள காரணங்களால் அப் போட்டித் தேர்வுமுறை நம்மவர்களுக்கு நம் நாட்டில் உயர் பதவிகளைப் பெற்றுத் தருவதாய் இருக்கவில்லை. கம்பெனியின் இந்திய உயர் பதவிகளுக்கான போட்டித் தேர்வுகள் இங்கிலாந்தில் மட்டுமன்றி இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட பின்னரே இந்தியர்கள் பயன் பெறமுடிந்தது. அச் சமயத்திலும் கூட 33 சதவிகிதப் பதவிகள் மட்டுமே பகிரங்கப் போட்டித்தேர்வுகளின் முடிவுகளின், அடிப்படையில் நிரப்பப்பட்டன. மேற் சொல்லப்பட்ட பலன் 1893ஆம் ஆண்டிற்குப் பின்னரே நமக்குக் கிடைக்கப்பெற்றது.

நீதி நிர்வாகப் பொறுப்பை மேற்கொள்ளப் பல மாகாணங்களில் பலவகையான நீதிமன்றங்கள் இருந்தன. வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்கத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டபின், இராபர்ட் கிளைவினல் மேற்கொள்ளப்பட்டிருந்த வங்கத்து இரட்டை அரசாங்கமுறை நீக்கப்பட்டுக் கம்பெனியே திவானி அதிகாரங்களைப் பெற்று இயங்கிற்று. அதன்பின் வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்கத்து நீதி நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். அவற்றின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் சிவில் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கத் திவானி அதலத் நீதிமன்றங்களும், குற்றவியல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்க பௌஜ்தாரி அதலத் நீதிமன்றங்களும் நிறுவப்பட்டன, இத் தீர்ப்பு மன்றங்களிலிருந்து மேல்முறையீட்டைச் செய்துகொள்ள சாதர் திவானி அதலத், சாதர் பௌஜ்தாரி அதலத் என்னும் இரு உயர்நீதி மன்றங்கள் வங்க மாநிலம் முழுவதையும் தனது வழக்கெல்லைப் பிராந்தியமாகக் கொண்டு செயல்பட்டன. இவற்றுள் சாதர் திவானி அதலத் சிவில் வழக்குகளுக்கான மேல்முறையீட்டு நீதிமன்றமாகவும், சாதர் பௌஜ்தாரி அதலத் குற்றவியல் வழக்குகளுக்கான மேல்முறையீட்டு நீதிமன்றமாகவும் இருந்தன. சாதர் திவானி அதலத் ஆட்சி மன்றத்துடன்கூடிய ஆளுநரால் தலைமை வகிக்கப்பட்டுச் செயல்பட்டது. சாதர்

பெதிலேஜ்தாரி அதலத் தனிப்பட்ட ஓர் அதிகாரியைத் தலைவராகக் கொண்டு ஆட்சி மன்றத்துடன்கூடிய ஆளுநரின் பொதுவான மேற்பார்வையின்கீழ்ச் செயல்பட்டது. பின்னர்ச் சாதர் திவானி அதலத்தின் பணிப்பளு அதிகரித்ததால் ஆட்சி மன்றத்துடன்கூடிய ஆளுநரின் நீதிபரிபாலன வேலையை அவரிடமிருந்து பிரித்துவிடுவது நல்லதென்று முடிவெடுக்கப்பட்டது. அதன் பேரில் 1801ஆம் ஆண்டு, இதுகாறும் ஆட்சி மன்றத்துடன்கூடிய ஆளுநர் கவனித்து வந்த தீர்ப்பு மன்றப் பணியைக் கவனிப்பதற்கு என மூன்று நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். பின்னர், அவர்களின் எண்ணிக்கை நான்காக உயர்த்தப்பட்டது. 1773ஆம் ஆண்டு, கல்கத்தாவில் உச்ச நீதிமன்றம் ஒன்று ஒழுங்குமுறைச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது. இந்தியர்களைக் கம்பெனிப் பணியாளர்களின் கொடுமை மற்றும் அழிவுச் செயல்களிலிருந்து பாதுகாக்கும் குறிக்கோளுடன் கல்கத்தாவின் உச்ச நீதிமன்றம் நிறுவப்பட்டது. 1800, 1823 ஆகிய இரு ஆண்டுகளில் முறையே சென்னையிலும், பம்பாயிலும் தனித்தனியே உச்ச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. இவ்வாறு உயர் மட்டத்தில் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் அவை இந்தியர்களுக்கு மனநிறைவைக் கொடுக்கும்படியான தீர்ப்புகளை வழங்கிச் செயல்படவில்லை. அவை ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையே இன வேற்றுமையைப் பெரிதும் பேணின. 1857-ல் அந் நீதிமன்றங்கள் பெற்றிருந்த ஆட்சி எல்லைகளும், செயற் பரப்புகளும் பெரிதும் விரிவடைந்திருந்தன.

வங்கத்து மக்களைப் பொறுத்தவரை, சிவில் முறையான வருவாய் அல்லது நிதி திரட்டும் பணிகளையும் வழக்குகளில் தீர்ப்பு வழங்கும் நீதி முறையான பணிகளையும் வங்க மாநில ஆட்சியாளர்கள் ஒருசேரப் பெற்றிருந்ததால் அம் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகி இருந்தனர். அத்தகைய நிர்வாக முறையால் தோன்றிய இன்னல்களிலிருந்து வங்கத்து மக்களை விடுவிக்கும் நோக்கில் காரன்வாலிஸ் மேற்சொல்லப்பட்ட இரு வகையான பணிகளை ஆட்சியாளரிடமிருந்து பிரித்து, அப் பணிகளைக் கவனிப்பதற்குத் தனித்தனியான அதிகாரிகளை நியமித்தார். ஆனால், அவ் வேற்பாடு பின்னர் இயக்குநர்களின் உத்தரவின்பேரில் நீக்கப்பட்டு, மறுபடியும் மாவட்ட ஆட்சியாளர்களிடம் அவ் விருவகையான பணிகளும் ஒப்புவிக்கப்பட்டன. இதனால் மாவட்ட ஆட்சியாளருக்கு வருவாய் முறையான நிர்வாகப் பணிகளோடு நில உரிமைகள் மற்றும் வாரம் (land rights and rent) பற்றிய வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரமும், குற்றவியல் 'நீதி பற்றிய அதிகாரங்களும் (Magisterial Powers) கொடுக்கப்பட்டன.

இதன் காரணமாகவே, இன்றும் வழக்கத்திலுள்ள மாவட்ட ஆட்சியாளர் மற்றும் மாஜிஸ்ட்ரேட் (District Collector and Magistrate) என்னும் பதவி நடைமுறைக்கு வந்தது. அதே சமயம் மாவட்டச் சிவில் மற்றும் செஷன்ஸ் என்னும் குற்றவியல் தீர்ப்பு மன்றமும் (District and Sessions Court) நடைமுறைக்கு வந்தது. பின்னர், மேற்சொல்லப்பட்ட முறை நாடு முழுவதிலும் பின்பற்றப்பட்டது. மேலும் பெரும்பான்மையான மாவட்டங்களில் உதவிக் குற்றவியல் நீதிபதிகளும் (Asst. Sessions Judges), உதவி ஆட்சியாளர்களும் (Asst. Collectors) நியமிக்கப்பட்டனர். ஐரோப்பிய மாஜிஸ்ட்ரேட்டுகள் மற்றும் மாவட்டக் குற்றவியல் நீதிபதிகளையும் தவிர இந்திய மாஜிஸ்ட்ரேட்டுகளும் அமின்களும் முன்சீப்களும் நீதி பரிபாலனத்தைக் கவனிக்க நியமிக்கப்பட்டிருந்தனர். உதவி அல்லது துணை ஆட்சியாளர் பதவி 1833-லும், துணை மாஜிஸ்ட்ரேட்டின் பதவி 1843-லும் சட்டப்படி உரியதான அல்லது உடன்பாடான பதவிகளாக்கப்பட்டன. இவை மட்டுமின்றி இணை மாஜிஸ்ட்ரேட் பதவியும் பின்னர் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது. மாவட்ட ஆட்சியாளர்களின் வருவாய்ப் பணிகளை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்துவதற்கும், வருவாய் வழக்குகள் பற்றிய உச்ச நீதிமன்றமாகச் செயல்படுவதற்கும் ஒரு வருவாய் வாரியம் முதலில் வங்கத்திலும், பின்னர் பிற மாநிலங்களிலும் அமைக்கப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட வருவாய் வாரியங்கள் இன்றும் இந்திய மாநிலங்களில் செயல்பட்டு வருகின்றன.

கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் பலவகையான நீதிமன்றங்கள் செயலில் இருந்தமையால் அவற்றால் பரிபாலனம் செய்யப்பட்டு வந்த சட்டம் சிக்கலும் குழப்பமும் மிக்கதாய் இருந்தது. அச் சட்டம் அன்று நிலவரத்திலிருந்த இங்கிலாந்து நாட்டின் பொதுச் சட்டம் (Common Law of England), பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்தியாவிற்கென இயற்றியிருந்த சட்டங்கள், தலைமை ஆளுநரால் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறைகள், மற்றும் இந்து, முகம்மதியச் சட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. எத் தலைப்பின்கீழ் எச் சட்டம் செயலில் மேற்கொள்ளப்பட்டது. அல்லது செயற்பாட்டில் இருந்தது என்பதை உறுதிப்படுத்துவது வெகு கடினமாய் இருந்தது. இத்தகைய சட்டத்தின் நிச்சயமற்ற தன்மையும் சிக்கலும் 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் இந்தியச் சட்ட ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படுவதற்கான அத்தியாவசியத்தையும், தேவையையும் ஏற்படுத்திக் கொடுத்தன. பின்னர் 1853ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் ஆங்கிலேயர்களைக்கொண்டு இங்கிலாந்திலிருந்து காரியங்களை

ஆற்றும்படியாக மற்றும் ஒரு சட்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டு, அதன்மூலம் சீரான நீதி பரிபாலனத்திற்குத் தேவையான சட்டத் தொகுப்பும் தயாரிக்கப்பட்டது.

இங்கு நமது கவனத்தில் கொள்ளவேண்டிய மற்றொரு செய்தியும் உண்டு. வங்காளம், சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்கள் மற்றும் பிற மாகாணங்களின் அரசாங்கங்களை இயக்கிக் கட்டுப்படுத்திக் கண்காணித்து மேற்பார்வை செய்வதற்குரிய அதிகாரமும், பொறுப்பும் எந்த அளவில் ஆட்சி மன்றத்துடன் கூடிய தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், தலைமை ஆளுநர் ஒரு கொடுங்கோலராகச் செயல்படவில்லை. அவர் இங்கிலாந்திலிருந்த கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம் ஆகியவற்றின் உச்ச அதிகாரத்திற்கும் மேலாண்மைக்கும் கட்டுப்பட்டவராக ஆக்கப்பட்டிருந்தார். கம்பெனியின் இந்திய அரசும் பிற உடைமைகளும் பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆளுகைக்கும் பொறுப்பிற்கும் மாற்றப்படுவதற்குமுன் இந்திய அரசாங்கக் காரியங்கள் யாவும் இரண்டு நிலையங்கள் அல்லது கேந்திரங்கள் மூலம் பரிபாலித்து நிர்வகிக்கப்பட்டு வந்தன். அவை வாரியத்தையும் மன்றத்தையும் கொண்ட இலண்டன் மாநகரிலிருந்த கம்பெனியின் தலைமை இடமும், கல்கத்தாவைத் தலைநகராகக் கொண்ட ஆட்சி மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநரின் மைய அரசும் ஆகும். இவ் விரு கேந்திரங்களுள் ஒன்றான இந்தியாவின் கம்பெனி ஆட்சிமுறை எப் பண்புகளுடன், 1857-ல் இருந்தது என்பதை ஓரளவு இதுகாறும் சொல்லப்பட்ட செய்தியின்மூலம் அறிந்துள்ளோம். இதைப்போல 1858ஆம் ஆண்டிற்குமுன் இங்கிலாந்திலிருந்த தலைமை இடத்து அரசாங்கம் எப்படிச் செயல் பட்டது என்பதையும் சிறிது அறிந்து கொள்வது இன்றியமை யாதது ஆகும். அப்பொழுதுதான் 1858-ல் நடைபெறவிருந்த அரசாங்கம் மற்றும் ஆட்சி மாற்றத்திற்கான காரணங்களையும் பிறவற்றையும் நாம் அடுத்த அதிகாரத்தில் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

நாம் ஏற்கெனவே அறிந்துள்ளதைப்போல் ஆட்சிமன்றத் துடன்கூடிய இந்தியத் தலைமை ஆளுநர், இங்கிலாந்திலிருந்த கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம் என்னும் இரு வெவ்வேறான அதிகார நிறுவனங்களுக்குக் கட்டுப்பட்டவராய் இருந்தார். மாறாகக் கம்பெனியின் இந்திய அரசாங்கத்தின்மீது முழுமையானதும் வலுவானதுமான கட்டுப்பாட்டை வாரியமும் மன்றமும் செலுத்தி இந் நாடு ஆளப்பட்டதால் 1773ஆம் ஆண்டு முதல் 1858ஆம் ஆண்டு வரையிலான காலம் இரட்டை

அரசாங்கக் காலம் (Period of Dual Government) என்று டாட்வெல், ஏ. பி. கெயித் போன்ற அறிஞர்களால் குறிக்கப் பட்டுள்ளது. கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர் மன்றம் ஆகிய இரண்டனுள் கட்டுப்பாட்டு வாரியமே வணிக முறையான வற்றைத் தவிரப் பிற எல்லாக் காரியங்களிலும் மிக்க அதிகாரத் தையும் உயர் பொறுப்பாண்மையையும் பெற்றிருந்தது. எனினும் இயக்குநர்கள் மன்றமும் ஒரு முக்கிய அமைப்பாக இருந்தது. ஏனெனில், இயக்குநர்கள் மன்றம் நெடுநாள்வரை பதவி நியமனம் செய்து வந்த சிறப்புச் சலுகையையும், கடைசிவரையில் எவ் வதிகாரியையும் இந்தியாவிலிருந்து திருப்பி அழைக்கக்கூடிய அதிகாரத்தையும் பெற்றிருந்தது. அவற்றை அது பல சமயங் களில் முனைப்பாகச் செயற்படுத்தவும் செய்தது. மேலும், இந்திய அரசாங்கம் ஆட்சி போன்ற பலவற்றில் தேர்ச்சியான அறிவையும் அனுபவத்தையும் பெற்றிருந்தவர்களைத் தனது உறுப்பினர் களாகக் கொண்டிருந்தது. எனவே, இயக்குநர்கள் மன்றத்தை எவரும் எளிதாகப் புறக்கணித்துக் காரியங்களைச் செய்ய முடிய வில்லை. இந்தியாவைப்பற்றிய ஆவணங்கள் பதிவுருக்கள் யாவும் கிழக்கிந்திய இல்லம் (East India House) என்னும் இடத்தில் காக்கப்பட்டன. அந்த இல்லத்தில் இயக்குநர்களால் நியமிக்கப் பட்டிருந்த திறமையும் தேர்ச்சியும் மிக்க உதவியாளர்கள் இருந் தனர். அவர்கள் இந்தியாவைப்பற்றிய ஆவணங்கள் யாவற்றை யும் கவனமாகவும் தேர்ச்சியாகவும் அறிவாற்றலுடனும் ஆராய்ந்து, சம்பந்தப்பட்டவர்களுக்குத் தேவையான செய்தி களைத் தயாரித்துக் கொடுப்பதைப் பணியாய்க் கொண்டிருந்தனர். கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் இயக்குநர்கள் மன்றத்திற்கும் இடையே போட்டா போட்டி நிலை பன்னெடுங்காலம் நிலவி வந்தது. இப் போட்டா போட்டியில் பல சமயங்களில் கட்டுப்பாட்டு வாரியம் தோற்றதும் உண்டு. எனினும், கட்டுப் பாட்டு வாரியத்தின் ஆற்றலும் பயனும் அதன் தலைவர் பெற்றி ருந்த தனிப்பட்ட தகுதி, திறமை ஆகியவற்றைச் சார்ந்ததாய் இருந்தது. அவர் அதிகாரமும் செல்வாக்கும் மிக்கவராய் இருந்த போதும் பிரிட்டிஷ் அமைச்சரவையில் ஓர் உறுப்பினராக இடமளிக்கப்பட்டபோதும், அவர் இயக்குநர்களை மிக எளிதாகக் கட்டுப்படுத்தி மேலாண்மை செய்ய முடிந்தது. எந்த ஐயப் பாட்டிற்கும் இடமில்லாத வகையில் இரகசியக் குழுவின்மூலம் ஆட்சிச் செய்திகளை அனுப்பவும், இந்தியாவிலிருந்து அனுப்பப் படும் அஞ்சல் விடுக்கைகளைப் பெறவும் சட்டரீதியாக வகை செய்யப்பட்டிருந்தது. இரகசியக் குழுவின் மூலம் இயக்குநர் களுக்கு அறிவிக்காதபடி காரியங்களை மேற்கொள்ள வாரியத் தலைவருக்கு வசதி இருந்தது. எனினும், நடைமுறையில் வாரியத்

தலைவரும் மன்றத்தலைவரும் ஒன்று கலந்து ஆலோசித்துச் செயல் பட்டனர்; பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டனர். இவ் விருவரும் கலந்தாலோசித்து உடன்பாட்டைக் கண்ட பிறகே முறையான சட்ட வரைவுகளும் பிறவும் (formal drafts) இயக்குநர்கள் மன்றத்தால் தயாரிக்கப்பட்டு, வாரியத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஒருவரை மட்டுமல்லாமல் சிலரைக் கொண்ட தாய், சில ஆணையர்களைக் கொண்டதாய் ஒரு வாரியமாகக் கட்டுப்பாட்டு வாரியம் முழுமையாகச் செயல்படவில்லை. அதன் பணிகள் யாவும் அதன் தலைவர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட காரியங்களாகவே இருந்தன. எனவேதான், 1841ஆம் ஆண்டு முதல், தலைவர் ஒருவரைத் தவிர வேறெந்த உதவி ஆணையர்களும் வாரியத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்படவில்லை. அம் மன்றத்தின் வேலை முழுவதையும் அதன் தலைவரே மேற்கொண்ட வராய் இருந்தார். அவருக்குத் துணைபுரிய ஒரு செயலாளர் மட்டும் இருந்தார். அச் செயலாளர் தம் தலைவரின் நிமித்தம் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் அவையில் அமர்ந்து காரியங் களை ஆற்றினர்.

கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர்கள் மன்றம் ஆகிய வற்றைத் தவிரக் கம்பெனியின் இந்திய அரசாங்கக் காரியங்களில் அல்லது நடவடிக்கைகளில் கட்டுப்பாட்டையும் மேற்பார்வை யையும் பிரிட்டிஷ் பாராளுமன்றமும் மேற்கொண்டது. இந்திய அரசாங்கக் காரியங்கள் மற்றும் அவற்றைப் பரிபாலித்து வந்த ஆட்சி அமைப்புகள் ஆகிய யாவற்றின்மீதும் தனது உச்ச அதிகாரத்தைச் செலுத்துவதாய் அஃது இருந்தது. கம்பெனியின் சாசனத்தை உரிய காலத்தில் புதுப்பிக்க அதிகாரம், உரிமை ஆகியவற்றைப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் மட்டுமே பெற்றி ருந்தது. இந்திய அரசியல் அமைப்பை நிர்ணயிக்கும் அதிகா ரத்தைப் பாராளுமன்றமே பெற்றிருந்தது. மேலும், அவ்வப் பொழுது சட்டங்களை இயற்றி இந்தியர்களுக்குப் பொருத்தமான காரியங்களை மேற்கொள்ளும் அதிகாரத்தையும் பாராளுமன்றம் பெற்றிருந்தது. இவ்வாறு உச்சநிலையானதும் இறுதியானதுமான அதிகாரத்தைப் பாராளுமன்றம் பெற்றிருந்தபோதிலும், அஃது இந்திய விவகாரங்களில் உறுதியானதும் தொடர்ச்சியானதுமான அக்கறையைக் கொண்டிருக்கவில்லை. எப்பொழுதாவது, இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை கம்பெனியின் சாசனச் சட்டத்தைப் புதுப்பிக்கும் வாய்ப்பு வந்தபொழுதே கம்பெனியின் இந்திய அரசாங்கத்திலும் ஆட்சிக் காரியங்களிலும் அக்கறை காட்டிற்று. மேலும், கம்பெனியின் வணிக அக்கறைகள் குறையக் குறையப் பல சூழ்நிலைகளின் காரணத்தால் பாராளுமன்றம் எப்பொழு

தாவது இந்தியக் காரியங்களில் காட்டி வந்த அக்கறை மேலும் குறையலாயிற்று. தனது மேற்பார்வையை இந்தியக் காரியங்கள் மீது மேற்கொள்ளத் தேவையான ஓர் அமைப்பைப் பாராளு மன்றம் பெற்றிருக்கவில்லை. இந்திய விவகாரங்களைக் கவனிப் பதற்கெனத் தனிப்பட்ட ஓர் இலாகாவும் இருக்கவில்லை. வாரியத் தலைவர் மற்றும் அவரது சிப்பந்திகளின் ஊதியங்கள் யாவும் இந்திய வருவாய்களிலிருந்து கொடுக்கப்பட்டமையாலும், அவை பாராளுமன்றத்தினுல் நிறைவேற்றப்படும் நிதிநிலை அறிக்கையில் இடம் பெருதவையாய் இருந்ததாலும் இந்திய விவகாரங்களைப் பற்றி விவாதிப்பதற்கென அதிகமான சந்தர்ப்பங்களைப் பாராளு மன்றம் பெறவில்லை. வரி வாய்தாக்கள் இந் நாட்டில் திரட்டப் பட்டதும் செலவழிக்கப்பட்டதும் ஆட்சிமன்றத்துடன்கூடிய இந்தியத் தலைமை ஆளுநரின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த மையால், அத்தகைய செயல்களும் பாராளுமன்ற விவாதங்களில் இடம் பெறவில்லை. இவற்றையெல்லாம் மீறி எவரேனும் சிலர் கம்பெனியின் இந்திய விவகாரங்கள் குறித்துப் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினுலும், அக் குரல் கேளாக் குரலாகவே இருந்தது. எனவே, இந்திய விவகாரங்களைப் பொறுத்தவரை, கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களும் பிறவும் பிரிட்டிஷ் மன்னரின் அடைக் கலப் பொருள்களாக அறிவிக்கப்பட்ட பின்னரும்கூட, பிரிட்டிஷ் பாராளுமன்றம் மந்தமாகவும், உறக்க நிலையிலும் இருந்தது. இந்த உறக்க நிலையிலிருந்து பிரிட்டிஷ் பாராளுமன்றம் எழுப்பப் படுமாறு முதல் இந்திய விடுதலைப் போர் எனப்படும் படைவீரர் கலகம் நாம் முன்னரே அறிந்துள்ள செய்திகளுக்கு ஏற்ப இந் நாட்டில் வெடித்தது.

23. இந்தியச் சுதேசி அரசுகளுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இடையே பேணப்பட்ட உறவு நிலைகள் - பொதுப் படையான கண்ணோட்டம்

ஆண்டவனால் படைக்கப்பட்ட உலகங்கள் மூன்று. அவற்றுள் ஒன்றான, நாம் வாழும் ஆழிசூழ் இப் பூமி, பல நாடுகளைக் கொண்டுள்ளது. அந் நாடுகளுள் சில புவியியல் ரீதியாக ஒழுங்கான அமைப்புகளைக் கொண்டவையாய் உள்ளன. எவரும் எளிதாக ஊடுருவி வரமுடியாதவாறு வடக்கே பெரும் மலைச் சுவரையும், கடல்களால் சூழப்பட்ட ஏனைய முப்புறங்களையும் கொண்டுள்ள இந்திய நாடு அத்தகைய சிறப்பு மிக்க நாடுகளுள் ஒன்றாகும். வரலாற்றுப் புகழையும், தொன்மைக் கலாசாரச் சிறப்பையும் கொண்டிருப்பது நமது உயிரினும் இனிய இந்திய நாடு. வரலாற்றுக் காலந்தொட்டு, பண்பாட்டு ஒற்றுமைப் பாரம் பரியத்தைப் பேணி வந்துள்ள மக்களைக் கொண்டுள்ள நாடு இது. ஆனால், கலாசார, பண்பாட்டு ஒற்றுமையைத் தனது முத்திரைப் பொருளாகக் கொண்டுள்ள இந் நாட்டில் அரசியல் ஒற்றுமை நிலவியது கிடையாது. எனவேதான், எண்ணற்ற சுதந்திர அரசு களைக் கொண்டிருந்ததாய் இந் நாட்டின் அரசியல் வரலாறு அமைந்திருந்தது. அசோகன், சமுத்திரகுப்தன் போன்ற மாமன்னர்கள் தம் பேரரசுகளை உருவாக்கி இந் நாட்டை ஆண்ட பொழுதும்கூட, அவர்களின் பேரரசுகள் எனப்படும் சாம்ராச்சி யங்கள் பலதரப்பட்ட சுயாட்சி அரசுகளைத் தம்மகத்தே கொண்ட வையாய் இருந்தன. அச் சுயாட்சி அரசுகள் (Autonomous States) தத்தம் அரசர்களின்கீழ், பேரரசரின் உயர் இறைமையை (suzerainty) ஏற்றுக்கொண்டு, நேர்மையுடனும் திறமையுடனும் இயங்கின. அவை தமது அயல் நாட்டுக் கொள்கையைப் பேரரசரின் இராசதந்திர நடவடிக்கைகளுக்கு உட்பட்டவையாய்க் கொண்டு பேரரசரின் போர்ச் செயல்களின் பங்குபெற்றன. அவை

பேரரசருக்கு ஒவ்வோர் ஆண்டும் கப்பத் தொகையைச் செலுத்து பவையாயும் இருந்தன. எனினும், ஏனைய செய்திகளிலும் அம்சங் களிலும், தத்தம் உள்நாட்டைப் பொறுத்தவரையிலும் அவ் வரசுகள் யாவும் இறைமை பெற்றவையாய் இருந்தன. அவ் விறைமை, பேரரசர் விரும்பும் காலம்வரை நீடிப்பதாயும் இருந்தது. ஆனால், பேரரசரின் பலமும், அதிகார நிலையும் வலிவிழந்த பொழுதும், பலவீனமான பொழுதும் சார்நிலை அரசர்கள் யாவரும் தத்தம் சுதந்திரத்தை நிலைநிறுத்தினர். இவை அவ்வப்பொழுது நடைபெற்று வந்த கதையாக இந் நாட்டின் வரலாறும் அரசியலும் இருந்தன.

வலிமையுள்ள மாமன்னர் ஒருவர் இருக்கும்போது கூடி நிற்பதும். அவர் நலிவைப் பெற்றவுடன் தமது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தி ஒடித் தனித்து நிற்பதுமான கதை மாமன்னர் ஔரங்கசீப் இயற்கை எய்தியவுடன் திரும்பவும் இங்கு நிகழ்ந்தது. ஔரங்கசீப்பின் இறப்பிற்குப் பிறகு அவருடைய உயர் இறைமைக்கு உட்பட்டிருந்த மொகலாய வைசிராய்களும் (Viceroys) ஏனைய சார்நிலை அரசர்களும் தமது சுதந்திரத்தை நிலைநிறுத்த முற் பட்டனர். சரிந்து வந்த மொகலாய சாம்ராச்சியத்தில் தமக்கு எனச் சிற்றூர்களையும், பேரூர்களையும் அமைத்துக் கொள்ளும் பணியில் அரசியல் சந்தர்ப்பவாதிகள் வரிந்துகட்டிக்கொண்டு காரியங்களை ஆற்றினர். இத்தகைய சூழ்நிலையின் விளைவால், கிழக்கிந்தியக் கம்பெனியினர் இந் நாட்டில் அதிகாரத்தைப் பெற்ற பொழுதும், தமது அரசியல் சக்தி நிலையைத் திரட்டி நிறுத்த முற்பட்டபோதும் எண்ணற்ற, சிறுசிறு ஆட்சித் தலைவர்களுடன் உறவுகளையும் ஈடுபாடுகளையும் கொள்ள வேண்டியிருந்தது. அவற்றின் பயனாய், படிப்படியாய் அவர்கள் யாவரையும் தனது ஆதிக்கப் பிடியின்கீழ்க் கம்பெனியின் அரசாங்கம் கொண்டுவந்தது. தனது அரசாங்கம் மற்றும் ஆட்சி கலைக்கப்பட்டு, அவை பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடி ஆளுகைக்கு மாற்றப்பட்ட 1858-ல் ஃபிரெஞ்சுக்காரர்கள் வசமிருந்த பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனும் போன்ற இடங்களையும், போர்த்துக்கீசியர் வசமிருந்த கோவா, டாமன், டையூ போன்ற இடங்களையும் தவிர்த்து எஞ்சியிருந்த இந்திய மண்ணில் மூன்றில் இரண்டு பங்கு, ஆங்கிலேயரின் உடைமைகளாய் இருந்தன. எஞ்சி யிருந்த பிரதேசங்கள் இந்திய இளவரசர்களின் ஆளுகைக்கு உட்பட்டவையாய் இருந்தன. ஆங்கிலேயரின் உடைமையாய் இருந்த பகுதிகள் 'பிரிட்டிஷ் இந்தியா' என்றும், ஏனைய பகுதி 'இந்தியரின் இந்தியா' (Indian India) என்றும் அழைக்கப்பட்டன. இந்திய இளவரசர்களின் வசமிருந்த இந்தியப் பிரதேசங்கள்

பிரிட்டிஷ் இந்தியாவின்பாற்பட்டவையாய் இருக்கவில்லை. அதன் மக்களும் பிரிட்டிஷ் குடிமக்கள் என்று கருதப்படவில்லை. ஆனால், இந்திய இளவரசர்கள் யாவரும் பிரிட்டிஷ் ஆட்சியை உயர் ஆதிக்க வீறிறைமைச் சக்தியாக (paramount power) ஏற்றுக் கொண்டவர் களாக இருந்தனர். இவ் வரசர்கள் யாவரும் பிரிட்டிஷ் பேரரசி யாருக்குக் கடப்பாடுடையவர்களாய், நேர்மையைக் காட்டும் சத்திய சீலர்களாய் இருந்தனர். பிரிட்டிஷ் இந்தியாவைப் பொறுத்தவரை அஃது ஒரே நிர்வாக அலகாகப்[1] பேணப்பட்டது. ஆனால், இந்தியர்களின் இந்தியாவோ பெரிய அரசுகள், சிறிய அரசுகள், நிலமானிய அடிப்படையில் அமைந்த அரசுகள், வல்லாட்சி நிலவிய அரசுகள், முற்போக்குக் கருத்துகளைப் பேணி வளர்த்த அரசுகள், நவநாகரிகப் பண்புகளைக் கொண்ட அரசுகள், இன்ன பிற அரசுகள் ஆகியவற்றின் தொகுப்பாகக் காட்சி யளித்தது. இவ்வாறு 'பிரிட்டிஷ் இந்தியா' 'இந்தியரின் இந்தியா' என்ற பாகுபாடு 1947வரை நிலவிப் பின்னர் மறைந்தது. இதற்கு இடைப்பட்ட காலத்தில், அஃதாவது கம்பெனியின் ஆட்சி முடிவுற்ற காலம் வரை கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இந்தியரின் அரசுகளுக்கும், இடையே நிலவிய அரசியல் முறையான உறவுகளை இவ் வதிகாரத்தில் நாம் ஆராயலாம்.

லீவார்னரின் பாகுபாடும் திட்டமும் (Leewarner's Scheme)

பிரிட்டிஷ் இந்தியா மற்றும் இந்தியரின் அரசுகள் ஆகிய வற்றிற்கு இடையே நிலவிய உறவுகளைப்பற்றிய ஆராய்ச்சி செய் துள்ள லீவார்னர் என்னும் ஆசிரியர் அவற்றை முக்காலப் பகுப்பிற் குள்ளாக்கியுள்ளார். இவரது பொது மதிப்பாய்விற்கு உட்பட்ட காலம் 1757 முதல் 1919 வரையிலான காலமாகும். காலத்தால் மட்டுமன்றி ஆங்கிலேயரால் பேணப்பட்ட கொள்கையின் துணை கொண்டும் பிரிட்டிஷ் இந்தியாவிற்கும் இந்தியரின் இந்தியா விற்கும் இடையே நிலவிய உறவுகளை மூவகையாகப் பகுத்துள்ளார். அவை 1757 முதல் 1813 வரையிலான 56 ஆண்டுக் காலங்களில் பேணப்பட்ட 'சுற்றரண் காப்புக் கொள்கை' யைத் (Ring Fence Policy)[2] தழுவிய உறவுமுறை; 1813 முதல் 1857 வரையிலான நாற்பத்து நான்கு ஆண்டுகளைத் தழுவிய காலத்தில் பேணப்பட்ட தனிமைச் சார்பு நிலைக் கொள்கையைத் (Subordinate Isolation) தழுவிய உறவுமுறை; 1858 முதல் 1919 வரையிலான ஒன்றிப்புச் சார்பு நிலையைத் (Subordinate Union) தழுவிய உறவுமுறை என்பவையாகும், இவற்றுள் முதல் இரண்டு கொள்கைகளும்

1 'The British India was treated as a single administrative unit.'

2 இதனைத் தலையிடாக் கொள்கை என்றும் கூறலாம்.

காலக் கட்டங்களும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்காலத்தில் நிலவியவையாகும். லீவார்னரால் செய்யப்பட்டுள்ள இப் பகுப்பு விரிவானதென்று (comprehensive) கூறமுடியாது. அதேபோல் அவர் அடிப்படையாய்க் காட்டியுள்ள பிரிட்டிஷாரின் கொள்கையும் மிக விரிவானதாகவும் சம்பந்தப்பட்ட காலங்களில் அவை எப் பிறழ்ச்சியும் இல்லாமல் பேணப்பட்டவையாயும் இருக்கவில்லை. ஏனெனில், பிரிட்டிஷார் இந்தியரின் அரசுகளுடன் கொண்டிருந்த உறவுகளின் தன்மை, பிரிட்டிஷ் அரசியல் சக்தியும், அதிகாரச் செல்வாக்கும் ஏற்றம் கொண்டதற்கு ஒப்ப மாற்றம் கண்டதாய் இருந்தது. மேலும், குறிப்பிட்ட ஒரு கட்டத்திலோ அல்லது காலத்திலோ ஆங்கிலேயர், கம்பெனியின் அதிகாரிகள் இந்திய அரசுகளுடன் பேணிய உறவுமுறைகளில் குறிப்பிட்ட ஒரு கொள்கையைக் கண்டிப்பான நிலையில் பின்பற்றவும் இல்லை. உதாரணமாகச் சில வேளைகளில் அவர்கள் ஆக்கிரமிப்பாளர்களாகவும், வேறு சில வேளைகளில் இந்திய அரசுகளின் உள் விவகாரங்களில் தலையீட்டைச் செய்யாதவர்களாயும் இருந்தனர். அப்படிப்பட்ட சமயங்களில்கூடக் கொள்கைப் பிறழ்ச்சியைப் பேணியது உண்டு. எனவேதான், சமாதானக் கொள்கையை அமைதி காக்கும் நோக்கத்தை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுத் தலைமைத் ஆளுநர்களாக அனுப்பப்பட்ட காரன்வாலிஸ், வெல்லெஸ்லி, ஹேஸ்டிங்ஸ் பிரபு போன்றோர் தமக்குப் பணிக்கப்பட்ட கொள்கையைப் புறக்கணித்தவர்களாய் முன்னேக்குக் கொள்கையுடன் பிரிட்டிஷ் பேரரசை உருவாக்கும் ஆக்கிரமிப்புச் செயல்களில் ஈடுபட்டனர். பெரும்பாலும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றி, சமாதானத்தையும் போரற்ற அமைதியையும் அரவணைத்தவர்களாய் இருந்த சர் ஜான் ஷோர், சர் ஜார்ஜ் பார்லோ ஆகியோர் சில வேளைகளில் இந்திய அரசுகளில், முனைப்பான தலையீட்டைச் செய்தனர். எனினும், பொதுப்படையாகக் கொள்கை அடிப்படையில் பிரிட்டிஷார் செயல்பட்டமையால், லீவார்னரின் பகுப்புத் திட்டத்தின் அடிப்படையில் இவ் வதிகாரத்தின் செய்திகளைப் பின் வருமாறு நாம் விளக்கலாம்.

'சுற்றரண் காப்புக் கொள்கை' அல்லது 'நடுநிலைமையுடன் கூடிய தலையிடாக் கொள்கை' (1757-1813)

1757ஆம் ஆண்டுக்கு முற்பட்ட துவக்க காலத்தில் ஆங்கிலேயர் கொண்டிருந்த உறவுநிலை இந்தியச் சுதேசி அரசுகளைச் சார்ந்த வண்ணமும் அவ் வரசுகளின் கனிவான அனுமதிகளுக்கு ஏங்கி நின்றதாயும் இருந்தது. அப்பொழுது ஏறத்தாழ 560 இந்தியச் சுதேசி அரசுகள் ஆங்கிலேயரின் அக்கறைச் செல்வாக்கு மண்டலத்திற்கு அப்பாற்பட்டவையாய் இருந்தன. பிளாசிப் போர் நடந்த

காலம் தொட்டு மின்டோ பிரபுவின் ஆட்சி முடிவுற்ற காலம்வரை, அஃதாவது 1757 முதல் 1813 வரையிலான 56 ஆண்டுக் காலங்களில் கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய அரசுகளின் விவகாரங்களில் தலையீட்டைத் தவிர்த்து நடு நிலைமையான உறுதியானதும் நிச்சயமானதுமான நடுநிலைக் கொள்கையைப் பின்பற்ற எத்தனித்தது. இக் கொள்கையையே 'சுற்றரண் காப்புக்கொள்கை' என்று லீவார்னர் விவரித்துள்ளார். 1757-ல் நடந்த பிளாசிப்போரில் ஆங்கிலேயர் வெற்றிகண்டதன் பயனாய், அவர்களின் அதிகாரம் வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்களில் நிலை நிறுத்தப் பட்டது. 1764-ல் நடந்த பக்ஸார் போரில் பெற்ற பெரு வெற்றியின் காரணமாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இட ஆர்ஜிதங்கள் இந்திய மண்ணில் அதிகரித்தன. எனினும், தனது கைவசமிருந்த பிரதேச உடைமைகளைப் பத்திரமாகவும், பாதுகாவலுடனும் பராமரித்துக் கொள்வதைக் கம்பெனியின் இந்திய அரசாங்கம் தனது அடிப்படை நோக்கமாய்க் கொண்டிருந்தது. சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் காரணமாக வெற்றியைத் தழுவியிருந்த போதிலும் அன்று கிழக்கிந்தியக் கம்பெனி பலம் மிக்க நிலையில் இருக்கவில்லை. இதனுல் இந்திய அரசுகளின் உள் விவகாரங்களில் அநாவசியமாகத் தலையிடும் நிலையிலும் கம்பெனியின் இந்திய அரசாங்கம் இருக்கவில்லை. இந்தியச் சுதேசி அரசுகளை முறியடித்துத் தோற்கடிக்கக்கூடிய வலிமையையும் வள ஆதாரங்களையும் கம்பெனி பெற்றிருக்கவில்லை. மேலும், ஆங்கிலேயருக்கு ஈடுகொடுக்கும் வகையில் மராத்தியர்கள், ஃபிரெஞ்சுக்காரர்கள், ஹைதராபாத் நிஜாம், மைசூரின் திப்புசுல்தான் ஆகியோர் சக்தி மிக்கவர்களாக இருந்தனர். அத்தகையோரின் சக்திபடைத்த அரசுகளுக்கிடையே தானும் ஒரு சக்தியாகக் கிழக்கிந்தியக் கம்பெனி இருந்தது. எனவே, கூடுமானவரை போர்களைத் தவிர்த்து, இந்திய அரசுகளுடன் சமநிலையைப் பேணி, சமத்துவத்தின் அடிப்படையில் நேச உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் நிலையில் ஆங்கிலேயர் இருந்தனர். ஏதேனும் ஒரு காரணத்தின் அடிப்படையில் இந்திய அரசுகளுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொண்ட பொழுதெல்லாம் சம அந்தஸ்தின் அடிப்படையில் கிழக்கிந்தியக் கம்பெனி உறவுமுறையைக் கையாண்டது. இதனை வேறுவிதமாய்க் கூறவேண்டுமாயின், தமது இந்தியப் பிரதேசங்களை உள்ளடக்கியவாறு ஒரு சுற்றரணை உருவாக்கிக்கொண்டு அதற்குப் பிறர்மூலம் எப் போர் ஆபத்தும் ஏற்படாவண்ணம் பாதுகாத்து அதனுள் பத்திரமாகவும் பாதுகாவலுடனும் வாழ்வதைக் கம்பெனியினர் குறிக்கோளாய்க் கொண்டனர். இக் கொள்கையின் அடிப்படை நோக்கமாகவும், தேவையாகவும் இருந்தது அவர்களுடைய பிரதேசங்களின் தற்காப்பும் சுய

பாதுகாவலும் ஆகும். எனவே, 1813ஆம் ஆண்டு வரை கூடுமான வரை போர்களேயும். இடர்மிக்கதும், போரில் ஆழ்த்தக்கூடியது மான நேச உடன்பாடுகளேயும் ஒப்பந்தங்களேயும்கூட மேற் கொள்ளுவதை ஆங்கிலேயர் பெரிதும் தவிர்த்தனர். அதே சமயம் கட்டாயத்தின் பேரில், சந்தர்ப்பச் சூழ்நிலே நிர்ப்பந்தத் தின்பேரில் தமது பிரதேசங்களேயும், இட ஆர்ஜிதங்களேயும் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டும், தாம் ஏற்கெனவே செய்திருந்த உடன்படிக்கைகளின் நிமித்தம் தமது சகாக்களின் அரசுகளேயும் பிரதேச உடைமைகளேயும் காக்கும் பொருட்டும் போரிடும் காரியத்தைக் கம்பெனியின் இந்திய அதிகாரிகள் மேற் கொண்டனர். 'வலுச் சண்டைக்குச் செல்வதில்லே, அனுவசிய மாகத் தம்மீது தொடுக்கப்பட்ட சண்டையை விடுவதில்லே' என்னும் கொள்கை எல்லேக்குள் தம்மை உட்படுத்திக்கொண்டவர் களாய்க் கம்பெனியினர் தமது உறவுகளே இந்திய அரசுகளுடன் பேணியவர்களாய் இருந்தனர். இத்தகைய கொள்கையைப் பின் பற்றிய காலத்தில் கம்பெனியினர் அதனேப் பல சமயங்களில் மீறியதும் உண்டு. எனினும், கூடுமானவரை தமது சக்திக்கு ஏற்றவாறு கம்பெனியினர் சுற்றரண் காப்புக் கொள்கையை 1813 வரை பெருமளவில் பின்பற்ற முயன்றனர்.

இராபர்ட் கிளேவ் முதல் காரன்வாலிஸ் வரை பேணப்பட்ட உறவு முறைகள்

கம்பெனியின் இந்தியப் பிரதேசங்களின் தலேமை அதிகாரி களாக இராபர்ட் கிளேவ் முதல் காரன்வாலிஸ் வரை ஆட்சி புரிந்த வர்களின் காலம் 1765 முதல் 1799 வரையிலான 34 ஆண்டு களாகும். இக் காலத்தில், அன்று நிலவரத்திலிருந்த கம்பெனி யின் அதிகார அக்கறை, செல்வாக்கு ஆகியவற்றின் நிலே பெரிய தொரு மாற்றத்திற்கு இலக்காகும் வகையில் சில நிகழ்ச்சிகள் நடந்தன. அவை முக்கியமாக மூன்ருகும். 1765ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் கிழக்கிந்தியக் கம்பெனி மொகலாயப் பேரரசரிடமிருந்து திவானி உரிமையைப் பெற்றது முதல் முக்கிய நிகழ்ச்சியாகும். இரண்டாவது, வங்கத்தில் நடைபெற்ற அரியா சனப் போர்களில் தமது அரசியல் சாதுரியத்தை அல்லது சூழ்ச் சியைக் கையாண்டு தமக்கு வேண்டியவராய் இருந்த மீர் ஜாபரை ஆங்கிலேயர் நவாபாக நியமித்தது இரண்டாவது முக்கிய நிகழ்ச்சி யாகும். இவற்றைத் தவிர பக்ஸார் போரின் முடிவில் ஃபிரெஞ்சுக் காரர்களே அவர்கள் முறியடித்தது அடுத்த முக்கிய நிகழ்ச்சியாகும். இவற்றின் காரணமாக முக்கியத்துவம் வாய்ந்த இந்தியச் சக்தி களுள் ஒன்ருக மாறியதோடன்றி, இங்குத் தனது உச்ச நிலேயைப் (supremacy) பெற்றுத் தனது செல்வாக்கைத் திரட்டிச் சேர்க்கக்

கம்பெனி போராடியது. கம்பெனியின் அதிகாரிகள் போட்டிகளை மேற்கொள்ளவும் செய்தனர். எனவே, கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய நிர்வாகத்தின் தலைமை அதிகாரியாய் இருந்த இராபர்ட் கிளைவ் 1765-ல் இரண்டாம் முறையாக வங்கத்து ஆளுநராகப் பதவி வகித்தபொழுது, கூடுமானவரை போர்களைத் தவிர்த்துச் சுதேசி அரசுகளுடன் கம்பெனியின் நிமித்தம் பல உடன்படிக்கை களைச் செய்துகொண்டார். அத்தகைய உடன்படிக்கைகளுக்கு ஆளானவர்கள் மராத்தியர்களும் அயோத்தியின் நவாபும் ஆவர். அன்றிருந்த நிலையில் அயோத்தியை இராபர்ட் கிளைவ் அடித்து, அடக்கித் தம் வயப்படுத்தி யிருக்கமுடியும். அதற்கான உந்தலையும் ஊக்கத்தையும் அவரது இராணுவத் தளபதி கிளைவிற்குக் கொடுக் கவும் செய்தார். எனினும், இராபர்ட் கிளைவ் அயோத்தியின் நவாபாய் இருந்த ஷூஜா-உத்-தௌலா என்பவரிடம் சமநிலையைப் பேணி ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்ட செயல் அடக்க மானதாகவும், நேர்மையானதாகவும், முன் யோசனையுடன்கூடிய தாகவும் இருந்தது. உறுதியான ஒற்றுமை, பரஸ்பர நேசம் ஆகிய வற்றின் அடிப்படையில் அயோத்தியுடன் அவர் உறவைக் கொண்டதால், அயோத்தியை வங்கத்தில் இருந்த ஆங்கிலேயர் மற்றும் இந் நாட்டின் உட்பகுதியிலிருந்த மராத்தியர் ஆகியோருக்கு இடையே ஓர் இடைத் தடுக்கு அரசாக அல்லது நடு நிலை அரசாக (Buffer State) அவரால் அமைக்க முடிந்தது. இதன் பயனாக ஆங்கிலேயருக்கும், மராத்தியருக்கும் இடையே பொருத்த மற்ற காலத்திலும் சூழ்நிலைகளிலும் போர்கள் தோன்றுவதை அவரால் தடுக்க முடிந்தது. இத்தகைய கொள்கையைப் பின்பற்றி யிராமல் அயோத்தியைப் பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு பகுதியாக அவர் சேர்த்திருப்பாரேயானால் அதனால் அதன் பாதுகாப்புப் பொறுப்பும், இராணுவச் செலவினச் சுமையும் கம்பெனியின்மீது தாங்கமுடியாத அளவில் சுமத்தப்பட்டிருக்கும். இப்படி, இராபர்ட் கிளைவ் இந்திய அரசுகளுடன் போரைத் தவிர்த்து, ஆக்கிரமிப்பை அரவணைக்காது நேச உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொண்ட செயல் கிழக்கிந்தியக் கம்பெனியின் தன்மையையும் நிலையையும் விளக்கி விவரணம் செய்த குறிக்கோளைக் கொண்டிருந்தது. 'இரா பர்ட் கிளைவிற்குப் பின்னால் வாரன் ஹேஸ்டிங்ஸ், காரன்வாலிஸ் ஆகியோர்கூட ஆரவாரம் மிக்க ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின் பற்றவில்லை. அவர்கள் இந்திய அரசுகளின் உள் விவகாரங்களில் முனைப்புடன் தலையீட்டைச் செய்யவில்லை. எந்த ஓர் இந்திய அரசின் மீதும் தமது மேலாண்மையை ஏற்றி நிலைநிறுத்தவும் முற்படவில்லை. அதே சமயம் இந்திய அரசுகளின் தகாத செயல்களின் காரண மாகவோ, எரிச்சலூட்டும் நன்னயமற்ற காரியங்களாலோ பொறுக்க முடியாத நிலையில் ஆக்கிரமிப்புச் செயலில் அவர்கள்

ஈடுபடலாயினர்.'[1] ஆனால், சூழ்ச்சியாக அவர்கள் தம்மைப் போர்க் காரியங்களில் ஈடுபடுத்திக் கொண்டனர் என்பதும் உண்மையே. இவ் வுண்மைக்கு வாரன் ஹேஸ்டிங்ஸின் காரியங்கள் சான்று பகர்வனவாயிருந்தன.

காரன்வாலிஸைப் பொறுத்தவரை அவர் ஒரு சமாதானப் பிரியராகவும், தலையிடாக் கொள்கையின் தகைமையாளராகவும் இருந்தார். இந்திய அரசுகளுடன் சமாதானக் கொள்கையை எஞ்ஞான்றும் பின்பற்றக்கூடிய உறுதியான உள்ளத்தைக்கொண்டவராகவும் அவர் இருந்தார். மேலும், 1784-ல் இயற்றப்பட்ட பிட் இந்தியச் சட்டம் கம்பெனியின் இந்திய அரசாங்கம், இந்தியச் சுதேசி அரசுகளுடன் போரிடவோ, அவற்றை ஆக்ரமித்து ஆர்ஜிதப் படுத்தவோ கூடாதென்று விதித்திருந்தது. கம்பெனியின் தலைமையிடத்து அரசாங்கம் தனது இந்திய அதிகாரிகள் இந்தியாவில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றவேண்டும் என்றும் பணித்திருந்தது. அதே சமயம், இந்திய அரசு ஒன்றால் அல்லது அரசுகளால், தாம் முன்கூட்டித் தாக்கப்பட்டிருந்தால் அதன் பேரில் உரிய நடவடிக்கைகளையும் உறவு முறைகளையும் இந்திய அரசுகளுடன் மேற்கொள்ளுவதற்குக் கம்பெனியின் இந்திய அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனவே, பெருமளவிற்குக் காரன்வாலிஸ் நேச உறவுகளை மேற்கொள்ளுவதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தார். எனினும், தம் உடைமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டபொழுதும், தற்காப்பின் பொருட்டும் தவிர்க்க முடியாத சூழ்நிலையின் காரணமாக, தேவையின் நிமித்தம், காரன்வாலிஸும் அவரது இந்தியச் சகாக்களும் மூன்றும் மைசூர்ப் போரில் ஈடுபட்டுத் திப்பு சுல்தானைத் தோற்கடித்து அவரது நிலங்களில் பாதியைப் பெற்றுப் பகிர்ந்து கொண்டனர். மூன்றும் மைசூர்ப் போர் உண்மையிலேயே பிரிட்டிஷ் தேசத்தின் விருப்பம், மதிப்பு, கொள்கை ஆகியவற்றிற்குப் புறம்பானதாகவே கம்பெனியின் இந்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அது தவிர்க்கப்பட முடியாததாகவும் இருந்தது. எனவேதான், தமது தலையிடாக் கொள்கையைக் காரன்வாலிஸ் காலத்தில் ஆங்கிலேயர் தவிர்க்க வேண்டியிருந்தது. இதைப்போலவே வெல்லெஸ்லியும் நான்காம் மைசூர்ப்போரிலும் இரண்டாம் மராத்தியப் போரிலும் சுற்றரண் காப்புக் கொள்கைக்கு எதிராக ஈடுபாடுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மற்றப்படி தமது தற்காப்பிற்கு ஆபத்தில்லாதிருந்த பொழுது ஹைதராபாத், அயோத்தி ஆகியவற்றுடன் பழைய உடன்படிக்கை

1 Lee Warner – 'Indian States.'

களைப் புதுப்பித்துக்கொள்ளவும், தேவையான புதிய நேச உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளவும் அவர் தயங்கவில்லை. எனினும், வெல்லெஸ்லியின் ஆட்சிக் காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இந்திய அரசுகளுக்கும் இடையே பேணப்பட்டு வந்த நடுவு நிலைமையுடன்கூடிய தலையிடாக் கொள்கை வெகுவாக நெகிழ்ச்சியுற்றுப் புறக்கணிக்கப்பட்டது. அதற்கான காரணங்களையும் பிறவற்றையும் அறிந்துகொள்ளுமுன் இவருக்கு முன் வங்கத்துத் தலைமை ஆளுநராயிருந்த சர் ஜான்ஷோர் என்பவரது அரசாங்கத்தின்கீழ் இந்திய அரசுகளுடன் நிலவிய உறவு நிலையினை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

சர் ஜான் ஷோர் சமாதான வாதியாகவும் போரற்ற அமைதி காணும் தலைமை ஆளுநராயும் இருந்தார். எக் காரணத்தைக் கொண்டும் தமது அரசாங்கம் இந்தியச் சுதேசி அரசுகளில் தலையீட்டைச் செய்யக் கூடாது என்று பிடிவாதமாக இருந்தார். எனவே, கம்பெனியின் மதிப்பிற்கு இறக்கம் நேரும் என்று கருதப்பட்ட போதிலும் அவர் இந்தியச் சுதேசி அரசர்களுடன் போர்களை மேற்கொள்வதைக் கண்ணியமாகத் தவிர்த்தார். உதாரணமாக, கம்பெனியினர் 1790-ல் ஹைதராபாத் நிஜாமுடன் ஒரு நேச உடன்படிக்கையைச் செய்திருந்தனர். அவ் வுடன்படிக்கையின்படி நிஜாமிற்குப் பிறரால் ஆபத்து நேரும்பொழுது அவருக்குச் சகல உதவிகளையும் செய்யவேண்டிய கடமை ஆங்கிலேயரான கம்பெனியின் அரசாங்கத்தினருக்கு இருந்தது. அப்படிப்பட்ட நிலவரம் இருந்தபொழுது ஹைதராபாத் நிஜாமை மராத்தியர் தாக்கினர். 1795-ல் குர்த்லா (Khurdla) என்னும் இடத்தில் மராத்தியரும் நிஜாமும் போரிடவும் செய்தனர். அப்பொழுது பழைய உடன்படிக்கையின்படி நிஜாமின் உதவிக்குச் சென்றிருக்க வேண்டிய சர் ஜான்ஷோரின் கம்பெனியின் அரசாங்கம், 'இரு சுதேசி அரசர்களுக்கிடையே நடைபெறும் உள்நாட்டுச் செயலில், தான் தலையிடக்கூடாது' என்ற கொள்கைக்கு ஏற்ப, நிஜாம் கம்பெனியின் உதவியை நாடிய பொழுதும்கூட எத் தலையீட்டையும் உதவியையும் செய்ய மறுத்தது. இதன் விளைவாக ஹைதராபாத் நிஜாம் மராத்தியரால் வெகு எளிதாகத் தோற்கடிக்கப்பட்டார். மேலும், தமது பெரும் நிலப்பரப்பையும் அவர் மராத்தியரிடம் இழந்தார். இதனால், வெறுப்புற்ற நிஜாம் தமது அரசிலிருந்த பிரிட்டிஷ் படைகளை அகற்றி ஃபிரெஞ்சுக்காரர்களை இராணுவ அதிகாரிகளாகவும், பயிற்சியாளர்களாகவும் நியமித்தார். இச் செயல் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஒப்பந்தத்தைப் பேணாத போக்கை வெளிப்படுத்தி அதன் மதிப்பை வெகுவாகக் குறைத்தது.

சுற்றரண் காப்புக் கொள்கையின் பிறழ்ச்சியும் வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டமும் (Deviation from the Ring Fence and Wellesley's Subsidiary Alliance)

முன்னரே கூறியது போன்று, வெல்லெஸ்லி பிரபு இந்தியாவில் கம்பெனி அரசாங்கத்தின் ஆட்சித் தலைமையை ஏற்ற பின்பு ஆங்கிலேயரால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சுற்றரண் காப்புக் கொள்கை பிறழ்ச்சியையும் மாற்றத்தையும் பெற்றது. இதற்கு அடிப்படையாக மூன்று காரணங்கள் இருந்தன. 1799ஆம் ஆண்டு முதல் 1809ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஏற்கெனவே முறியடிக்கப்பட்டிருந்த ஃபிரெஞ்சுக்காரர்கள் மீண்டும் தலை தூக்கியவர்களாய் இந்தியச் சுதேசி அரசர்களைத் தமது செல்வாக்கு வலையில் பிடிக்க முற்பட்டனர். இதனால், கம்பெனியின் இந்திய அரசாங்கம் அச்சுறுத்தலுக்கு ஆளாயிற்று. இதனைத் தவிர்க்க வேண்டும் என்றும், தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் வெல்லெஸ்லி உறுதி பூண்டார். இது முதற் காரணமாகும். அடுத்து, தலையிடாக் கொள்கை விரும்பிய பலனைக் கொடுக்காததாய் இருந்தது என்று அவர் எண்ணினார். இவற்றைத் தவிர அடிப்படையான உள்ளாவல் ஒன்றையும் வெல்லெஸ்லி கொண்டிருந்தார். அதன்படி, அவர் இந்திய அரசுகளைச் சார்பு நிலை பெறுபவையாய், அவற்றின் அந்தஸ்தையும் நிலையையும் குறைத்து, அவை பிரிட்டிஷ் சக்தியை என்றென்றும் சார்ந்திருக்குமாறு செய்யவேண்டும் என்று தணியாத ஆர்வத்தைக் கொண்டிருந்தார். மேலும், பிரிட்டிஷார் இழந்திருந்த அமெரிக்கக் காலனிகளுக்கு ஈடுசெய்யும் வகையில் இந்தியாவில் அதிக இடங்களைத் தமது ஆளுகை, மற்றும் அக்கறைச் செல்வாக்கின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்ற உறுதிப்பாட்டை வெல்லெஸ்லி கொண்டிருந்தார். எனவே, அவர் சுற்றரண் காப்புக் கொள்கையைக் கைவிட்டார். அதற்குப் பதிலாக உயர் வீறிறைமை நியதியை அவர் உருவாக்கி, அதனை இந்திய அரசுகளின்மீது திணித்தார். இதன்படி, கம்பெனியின் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் உயர் வீறிறைமை படைத்த நிறுவனமாக இந்திய அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்படும்படி ஒரு கொள்கையை வகுத்தார். அக் கொள்கையே துணைப்படைத் திட்டம் என்பதாகும். இத் திட்டத்திற்கு ஏற்ப இந்திய அரசுகளுடன் கம்பெனியின் அரசாங்கம் உறவுகளையும் நேச உடன்படிக்கைகளையும் மேற்கொண்டது. துணைப்படைத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகப் பின்வருவனவற்றை வெல்லெஸ்லி உருவாக்கினார். அவற்றின்படி கம்பெனியின் இந்திய அரசாங்கத்துடன் நேச ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும் இந்திய அரசுகள் தத்தம் பிரதேசங்களிலிருந்து ஆங்கிலேயருக்கு எதிரிகளெனக் கருதப்பட்ட பிற ஐரோப்பியர்களை வெளியேற்றிவிடவேண்டும்.

அடுத்துக் கம்பெனியுடன் உடன்படிக்கை கொள்ளும் அரசுகள் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உயர் வீறிறைமையை ஏற்றுக்கொண்டு அதற்குச் சார்பு நிலையில் அமைந்து ஒத்துழைப்பை வழங்கவேண்டும். கம்பெனியின் உச்ச ஏற்ற நிலையை ஏற்றுக் கொள்ளும் காரணத்தால் இந்திய அரசு ஒன்றின் தலைவர் அல்லது இளவரசர் ஏனைய இந்திய அரசுகளின் தலைவர்களுடனும், அரசுகளுடனும் எவ் வுறவையும் உடன்படிக்கைகளையும் கொள்ளக் கூடாது என்பதைத் தனது அடுத்த அம்சமாக வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டம் கொண்டிருந்தது. ஏதேனும் ஒரு காரணத்தால் தம்முள் பரஸ்பர உறவையோ உடன்படிக்கை களையோ மேற்கொள்ள வேண்டியிருந்தால் கம்பெனியின் அரசாங்கம் அறிந்து ஏற்றுக்கொண்ட நிலையில்தான் மேற்கொள்ள வேண்டும். அடுத்துத் தமக்கிடையே தோன்றும் பிணக்குகளையும் சச்சரவுகளையும் கம்பெனியின் அரசாங்கத்தை நடுவராகக் கொண்டு தீர்த்துக்கொள்ளவேண்டும்; அவற்றில் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் அளிக்கும் தீர்ப்பை இரு சாராரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் வலியுறுத்தப்பட்டது. பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்துடன் ஒப்பந்த உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் இந்திய அரசுகள் பிரிட்டிஷ் படைகளைப் பயன்படுத்திக், கொள்ளவேண்டும். அதற்கு ஈடாகக் குறிப்பிட்ட ஒரு தொகையைக் கப்பமாக பிரிட்டிஷாருக்குச் செலுத்த வேண்டும்; அல்லது அத் தொகைக்கு ஈடான நிலங்களை அல்லது இடங்களைக் கம்பெனியின் அரசாங்கத்திற்கு அவர்கள் கொடுக்கவேண்டும். பிரிட்டிஷ் படைகள் தேவையில்லை என்று கருதுவோர், பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள்மூலம் படைகளைக் கண்காணித்துக் கொள்ள வேண்டும். இப்படிக் கட்டாயமான பல அம்சங்களைக் கொண்டிருந்த துணைப் படைத்திட்டக் கொள்கையை வெல்லெஸ்லி தற்காப்புக்கு என்றும் இந்திய அரசுகளைச் சார்புப்படுத்தவேண்டும் என்றும் இரு நோக்கில், சமய சந்தர்ப்பங்களுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு இந்திய அரசுகளுடன் உறவுகளைப் பின்பற்றினர்.

ஒரு கல்லைக் கொண்டு இரண்டு மாங்காய்களை அடிப்பதைப் போல் ஆங்கிலேயரைத் தவிரப் பிற ஐரோப்பியர்களின், குறிப்பாக ஃபிரெஞ்சுக்காரர்களின் அரசியல் செல்வாக்கை ஒடுக்கி, தாம் ஏற்றம் காணுவதை முடுக்கிவிடுவதும், தமது கிடுக்கிப்பிடியில் சிக்கிக்கொள்ளுமாறு இந்திய அரசுகளை மடக்கிக் கொள்ளு வதுமான இரு பெரும் நோக்கங்களையும் பயன்களையும் வெல்லெஸ் லியின் துணைப்படைத் திட்டம் கொண்டிருந்தது. இக் கொள்கைத் திட்டத்தைச் செயலாக்கம் செய்ததில் வெல்லெஸ்லி தனது புத்தி சாதுரியத்தையும் சூழ்ச்சித்திறனையும் கையாண்டார். எனவேதான்,

சர் ஜான் ஷோரின் காலத்தில் ஃபிரெஞ்சுக்காரர்களை அணுகியிருந்த நிஜாமை வெல்லெஸ்லி தம் வயப்படுத்தித் துணைப்படைத் திட்டத்தின்கீழ் ஹைதராபாத்தைக் கொண்டு வந்தார். இதற்குப் பிறகு ஹைதராபாத்தும், அதன் நிஜாமும் ஆங்கிலேயர் பிடியிலிருந்து தப்பித்துச் செல்லவில்லை. 1799-ல் மேற்கொள்ளப்பட்ட இவ் வுடன்படிக்கையின் பயனாய் ஹைதராபாத் நிஜாம் துணைப் படைத் திட்டத்தின் அம்சங்கள் யாவற்றையும் பின்பற்றிக் கப்பத்தையும் செலுத்தலானார். இவற்றிற்கு ஈடாக, நிஜாமிற்கு உள்நாட்டு இறைமை (Internal Sovereignty) கம்பெனியின் அரசாங்கத்தினால் உத்தரவாதத்துடன் கொடுக்கப்பட்டது. அடுத்து, அயோத்தியின் நவாபைப் புதியதோர் உடன்படிக்கைக்கு, கட்டாயத்துடன் உட்படுத்தி, அதன் பயனாய் ரோகில்கண்டையும் செழிப்பு மிக்க பள்ளத்தாக்குப் பிரதேசத்தையும் வெல்லெஸ்லி பெற்றார். தம்முள் வேற்றுமைகளையும் பிணக்குகளையும் கொண்டிருந்த மராத்தியர்களை, குறிப்பாக வலிமைபெற்றிருந்த பேஷ்வாவைத் துணைப்படைத் திட்டத்தின்கீழ் பஸ்ஸீன் உடன்படிக்கையின்மூலம் வெல்லெஸ்லி கொண்டு வந்தார். இதனால், வலிமை பெற்றிருந்த மராத்திய அரசில் என்றென்றும் பிரிட்டிஷ் துணைப்படை இருக்குமாறு செய்யப்பட்டது. இதற்கு ஈடாகப் பேஸ்வாவிடமிருந்து கம்பெனியின் அரசு 26 இலட்ச ரூபாய்களுக்கு ஈடான மராத்தியப் பிரதேசத்தையும் சூரத்தின் உரிமையையும் பெற்றது. இப்படிச் சுற்றரண் காப்புக் கொள்கையைக் கைவிட்டு இந்திய அரசர்களுக்கு வலை விரித்து, கம்பெனியின் நிலையை உயர் வீறிறைமை பெற்றதாய் உயர்த்திய வெல்லெஸ்லி 1805ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரு சில ஆண்டுகள் பதவியில் நீடித்திருந்தால் தமக்கு இணையாக ஆக்கிரமிப்பை வேறெவரும் செய்திருக்க முடியாது என்று எண்ணும்படி இந்திய அரசுகளுடன் உறவு முறைகளை அமைத்திருப்பார்; எண்ணற்ற இந்திய அரசுகளை எண்ணிப் பார்க்க முடியாதபடி அடிமை அரசுகளாகவும் மாற்றியிருப்பார். ஆனால், அவர் கம்பெனியின் மேலிடத்து அரசாங்கத்தால் திருப்பி அழைக்கப்பட்டுவிட்டார். எனினும், இவரது அரசாங்கத்தின் கீழ் இந்திய அரசுகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை ஊன்றிக் கவனித்தால் அவை யாவற்றையும் வெல்லெஸ்லி கோட்பாட்டு ரீதியான சமத்துவ உணர்ச்சியின் அடிப்படையில் மேற்கொண்டார் என்பது விளங்கும்.[1] என்பதை K. M. பணிக்கர் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும், பணிக்கரின் கருத்துப்படி பரப்பில் பெரியவையாயிருந்த இந்திய அரசுகளுடன் சமத்துவத்தையும் சமநிலையையும் பேணி அவற்றிற்கு உள்நாட்டு

1 K. M. Panikkar, The evolution of British policy towards Indian States

இறைமையைக் கொடுத்து வெல்லெஸ்லி உறவு நிலையை மேற் கொண்டார். ஆனால், பரப்பாலும் பிறவற்றாலும் சிறியவையா யிருந்த இந்திய அரசுகளை பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்திற்குச் சார்பு நிலையாய் இருக்குமாறு அவர் செய்தார் என்பதிலும் ஐயமில்லை.

1805ஆம் ஆண்டு முதல் 1813ஆம் ஆண்டு வரை திரும்பவும் பேணப் பட்ட தலையிடாக் கொள்கை

வெல்லெஸ்லிக்குப் பிறகு தலைமை ஆளுநர்களாக இரண்டாம் முறையாக இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட காரன்வாலிஸ், சர் ஜார்ஜ் பார்லோ, மின்டோ பிரபு ஆகியோர் சுற்றரண் காப்புக் கொள்கையை முனைப்புடன் பின்பற்றினர். இவர்கள் ஆட்சிக்கு வந்த எட்டாண்டுக் காலத்தில் நெப்போலியப் படையெடுப்புகளும், ரஷிய ஃபிரெஞ்சுப் படையெடுப்பும் இங்குத் தோன்றுவதற்கான அறிகுறிகளும் அச்சமும் இருந்தன. எனவே, இந்திய அரசர்களைத் தமது அரவணைப்பில் கொண்டிருக்கவேண்டிய அவசியத்தினால் அவர்கள் மனத் தாங்கலையும் உளைச்சலையும் பெறும்படியான உறவு முறைகளைப் பேண ஆங்கிலேயர் முற்படவில்லை. மாறாக, இந்திய அரசர்களின் இறைமையை மதித்து, தேவையான சங்கதிகளில் வெல்லெஸ்லியால் செய்யப்பட்டிருந்த உடன்படிக்கைகளை இரத்து செய்தும் தகைமையுடன் உறவுமுறைகளைப் பேணினர். இந்திய இளவரசர்களுக்கிடையே சமரசம் செய்துவைக்கும் காரியங்களைக் கூட அவர்கள் மேற்கொண்டனர். மராத்திய சிந்தியாவுக்கு இராசபுத்திர அரசுகளைத் திருப்பிக் கொடுத்து, இராஜஸ் தானத்தில் அவர் சுதந்திரமாக இயங்கிக் காரியங்களை ஆற்றிக் கொள்ளவும் உத்தரவாதம் அளித்தனர். எனினும், 1809-ல் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் பாட்டியாலா, நபா (Nabha), ஜிந்த் (Jind) ஆகிய அரசுகளின் இளவரசர்களின் வேண்டுகோளுக்கு இணங்கப் பஞ்சாபில் தலையிட்டு அதன் அரசராயிருந்த இரஞ்சித் சிங்கை லாகூர் உடன்படிக்கைக்கு உட்படுத்தி மேற்சொன்ன மூன்று இந்திய அரசுகளைத் தமது பாதுகாவலின்கீழ்க் கம்பெனியின் தலைமை ஆளுநர்கள் கொண்டுவந்தனர். மற்றப்படி, இந்த எட்டாண்டுக் காலத்தில் சுற்றரண் காப்புக் கொள்கையைச் சார்ந்தே தலையிடாக் கோட்பாட்டின் தன்மைக்கு ஏற்ப இந்திய அரசுகளுடன் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் தனது அரசியல், மற்றும் பிற உறவுகளை வெகுவாகக் கொண்டிருந்தது.

1757 முதல் 1813 வரையிலான ஐம்பத்தாறு ஆண்டுக் காலத்தில் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்திற்கும் இந்தியச் சுதேசி அரசுகளுக்கும் இடையே நிலவிய உறவுமுறைகள் பரஸ்பர நேச

உணர்வின் அடிப்படையிலும், சமத்துவ நியதிக்கு ஒப்பவும் அமைந் திருந்தன என்பதை அறிந்துள்ள நாம், 1813 முதல் 1857 வரையிலான இரண்டாவது கட்டத்தில் தனிமைச் சார்பு நிலைக் கொள்கையைத் தழுவியதாய் அவை அமைந்திருந்தன என்பதை இனிக் காணவேண்டும். நாடு பிடித்தல் (annexations), நேச ஒப்பந்த உறவுகள் (alliances) என்ற இரு குறிக்கோள்களை மையமாக வைத்து இதுகாறும் தமது அரசியல் மற்றும் பிற உறவு முறைகளையும் நிலைகளையும் கையாண்டுவந்த பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் 1813-க்குப் பிறகு வேறுபாதையில் செல்லலாயிற்று. அப் பாதையின் முடிவு கம்பெனி அரசாங்கத்தின் இறுதி முடி வாகவும் அமைந்தது.

தனிமைச் சார்பு நிலைக் கொள்கை (1813 — 1857).

1813 முதல் 1857 வரை கம்பெனியின் இந்திய அரசாங்கத் தினுல் பேணப்பட்ட கொள்கை தனிமைச் சார்பு நிலைக் கொள்கை என்பதாகும். இக் கொள்கை வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தின் கொள்கை நியதிகள் ஆகியவற்றை விரிவாக்கம் செய்வதாயிருந்தது. ஆனுல், அதனை அணுகிச் செயல்படுத்தியதில் அடிப்படையான ஒரு மாற்றம் இருந்தது. வெல்லெஸ்லியால் பின் பற்றப்பட்ட துணைப்படைத் திட்டமும் நேச உடன்படிக்கைகளும் இந்திய உடைமைகளைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள் வதைக் குறிக்கோளாய்க் கொண்டிருந்தன. ஆனுல், 1813-க்குப் பிறகு துணைப்படைத் திட்டத்தை மையமாகக் கொண்டு இந்திய அரசுகள் யாவற்றையும் தமக்குக் கீழ்நிலைப்படுத்தி, அதே நேரத்தில் தாம் தனித்து நின்று கம்பெனியின் அரசாங்கத்தினர் உறவு முறைகளைப் பின்பற்றினர். இந்தியா முழுவதும் பிரிட்டிஷாரின் உயர் வீறிறைமை அதிகாரத்தை நிலைநிறுத்தி, அதை யாவரும் உணர்ந்து ஏற்றுக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்துவதைத் தலைமை ஆளுநர்கள் தமது நோக்கமாகக் கொண்டனர். இவற்றிற்கு ஏற்ப ஹேஸ்டிங்ஸ் பிரபு 310 இந்திய அரசுகளை பிரிட்டிஷ் வீறிறைமை அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவந்தார். அவ் வரசுகள் யாவும் கம்பெனியின் இந்திய அரசாங்கத்திற்குச் சார்புநிலை பெற்றவையாய், அவை கம்பெனி அரசாங்கத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளுக்கு இணங்கி, பிரிட்டிஷ் பகர ஆளுநர்களைத் தத்தம் அரசுகளில் மேற்பார்வையாளர்களாகக் கொண்டு தனித்து நின்று காரியங்களை மேற்கொள்ளுமாறு செய்யப்பட்டன. இப்படித் தனிமைச் சார்பு நிலைக்கு ஒப்ப, இந்திய அரசுகள் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்க்கப்படாமல் கட்டுப் படுத்தப்பட்ட சுதந்திரத்தின் கீழும் இறைமையின் கீழும் செயல் படுமாறு செய்யப்பட்டன. 1818-ல் கிழக்கிந்தியக் கம்பெனி உயர்

வீறிறைமை பெற்ற சக்தியாக நிலைநிறுத்தப்பட்டது. அதன்பின் பரஸ்பர நேசத்தின் அடிப்படையிலும் விட்டுக்கொடுக்கும் பாங்குடனும் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் இந்திய அரசுகளைச் சார்பு நிலைக் கூட்டுறவுடன் தமக்குள்ளாகவும், கம்பெனியின் அரசாங்கத்துடனும் உறவுகளை மேற்கொள்ளும் வகையில் மாற்றத்தைப் பெற்றன. ஹேஸ்டிங்ஸ் பிரபுவினால் இந்திய அரசுகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் இந்திய அரசுகளை பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தின் அனுமதியும் உதவியும் இன்றி எவ்விதமான போர்களையும், சமாதான நடவடிக்கைகளையும் தம்முள் செய்துகொள்ள முடியாதவாறு தடைப்படுத்தின. மேலும், தமது புற இறைமையை (External Sovereigaty) இழக்குமாறு செய்தன. இவற்றையன்றி இந்திய அரசுகள் ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் தலையீட்டிற்கும் ஆளாயின. ஹேஸ்டிங்ஸ் பிரபு மைசூர், நாக்பூர், அயோத்தி போன்ற இந்திய அரசுகளின் உள் விவகாரங்களில் தலையிட்ட செயலை இதற்கான உதாரணமாகக் கூறலாம். ஆனால், அவரும் அவரது கம்பெனியின் அரசாங்கமும் இந்திய அரசுகள் பலவற்றின் உள் விவகாரங்களில் செய்த தலையீட்டின் தன்மை சம்பந்தப்பட்ட அரசுகளின் பலாபல நிலைக்கும் செல்வாக்கிற்கும் ஒப்பப் பலதரப்பட்டதாக இருந்தது. இப்படிப் பலவகையில் ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் இந்திய அரசுகளுடன் மேற்கொண்ட உறவுமுறைகள் பின்னர் ஏகாதிபத்தியக் கொள்கையைக் (Imperial policy) கம்பெனியின் அரசாங்கம் பின்பற்ற வழி வகுத்துக் கொடுத்தன. இவ்வாறு ஹேஸ்டிங்ஸ் பிரபுவால் உருவாக்கி மேற்கொள்ளப்பட்ட உறவுக்கொள்கை அவருக்குப்பின் வந்த கம்பெனியின் அதிகாரிகளால் நாடு முழுவதும் பரவலாக்கப்பட்டும் நீட்டிக்கப்பட்டும் பின்பற்றப்பட்டது. ஆம்ஹெர்ஸ்ட் பிரபு (Amherst) இக் கொள்கையைப் பர்மா வரை விரிவுபடுத்தினார். அவருக்குப் பின் வந்த வில்லியம் பென்டிங்க் அமைதி காணும் சீர்திருத்த வாதியாக இருந்த போதிலும், ஆக்கிரமிப்பு ஏகாதிபத்தியக் கொள்கையை இந்திய அரசுகளிடம் பின்பற்றினார். இதன் பயனாக இவர் கச்சார் (Cachar), மைசூர், குடகு ஆகிய அரசுகளில் தலையிட்டு அவற்றைப் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்த்தார்; பென்டிங்கிற்குப் பிறகு தலைமை ஆளுநராய் ஆட்சி புரிந்த ஆக்லாண்ட் என்பவர் இந்தூர், அயோத்தி ஆகிய அரசுகளை எச்சரிக்கும் தொனியில் அவற்றின் நிர்வாகக் காரியங்களில் தலையிட்டார். இதனால், இந்திய அரசுகளின் சாதாரண அன்றாட நிர்வாகத்தில்கூடக் கம்பெனி அரசாங்கம் தலையிடும் நிலை உருவாகியது. இவருக்குப் பின்வந்த எல்லன்பரோ பிரபு பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்துடன் இந்திய அரசுகளைச் சேர்த்துக்கொள்வதையும் அவற்றை அச்சுறுத்து

வதையும் தமது கொள்கையாக மேற்கொண்டார். இத்தகைய உறவுமுறைப் போக்கின் காரணமாக சிந்து (Sindh) என்னும் இந்திய அரசு பிரிட்டிஷ் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது

டல்ஹௌசியும் இந்திய அரசுகளும்

பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்திற்கும் இந்திய அரசுகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுவந்த புதிய உறவு முறைக்கொள்கை டல்ஹௌசி தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றவுடன் வெகு மூர்க்கத்தனமாகப் பின்பற்றப்பட்டது. இவரது நடவடிக்கைகளில் இந்திய அரசுகள் வெகு விரைவில் பிரிட்டிஷ் இந்தியாவுடன் இணைக்கப்பட்டுவிடவேண்டும் என்ற ஆர்வம் வெளிப்பட்டது. அச்சுறுத்தல் (Intimidation), போர்களைத் தொடுத்தல், விடுபாட்டுக் கொள்கையை (Doctrine of Lapse) பிரயோகித்தல் ஆகிய மூன்று செயல்முறைகளைப் பின்பற்றி வாய்ப்பு கிட்டியபொழுதெல்லாம் இந்திய அரசுகளை அவர் பிரிட்டிஷ் இந்தியச் செல்வாக்கு மண்டலத்திற்குக் கொணர்ந்தார். விடுபாட்டுக் கொள்கையின்படி சட்டப்படியான வாரிசுகளைப் பெருது இறந்துபோகும் இளவரசர்களின் இந்திய அரசுகள் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்க்கப்பட்டன. இக் கொள்கையின்படி சாதாரா, நாக்பூர், ஜான்ஸி போன்ற அரசுகள் பிரிட்டிஷ் இந்தியாவில் சேர்க்கப்பட்டன. இதனை அடுத்து, இந்திய இளவரசர்கள் தமது அரசுகளில் நிர்வாகச் சீரழிவைத் தடுக்கமுடியவில்லை என்பதைக் காரணங்காட்டி அவற்றில் தலையிட்டுத் தேவையானுல் அத்தகைய அரசுகளைப் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்ப்பதையும் தமது கொள்கையாக டல்ஹௌசி பின்பற்றினுர். இதன் பயனுக அயோத்தி, பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்க்கப்பட்டது. பேஷ்வாவும், கர்நாடக நவாபும் இதுகாறும் அனுபவித்து வந்த பெயரளவிலான இறைமையை (Titular Sovereignty) இழக்குமாறு செய்யப்பட்டனர். எனினும், கம்பெனி அரசாங்கத்தின் பாதுகாவலுக்கு உட்பட்டிருந்த நேச அரசுகளின் விஷயத்தில் விடுபாட்டுக் கொள்கையைச் செயல்படுத்துவதை டல்ஹௌசி பெரிதும் தவிர்த்தார். ஆனுல், அவற்றின் உள் விவகாரங்களில் அவற்றின் அரசர்கள் சுயமாகச் செய்வதற்கு ஒன்றுமில்லை என்னும் அளவிற்குத் தலையீட்டைச் செய்து அவற்றைத் தம்வயப்படுத்தி வைத்திருந்தார். இத்தகைய கொள்கைப் போக்கின் காரணமாக 1857-ல் பேராசிரியர் கூப்லாண்ட் அவர்கள் கூறுவதுபோல் நேபாளத்தைத் தவிரப் பஞ்சாபையும் உள்ளிட்ட இந்திய அரசுகள் யாவும் பிரிட்டிஷ் இந்தியாவின் உயர் வீறிறைமைச் சக்திக்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாறு டல்ஹௌசி இந்திய அரசுகளுடன் மேற்கொண்ட அரசியல் மற்றும் அரசாங்க ரீதியான உறவு முறைகள் இந் நாட்டு

இளவரசர்கள் புரட்சியையும் பெரும் போராட்டத்தையும் மேற்கொள்வதற்கான தலையாய காரணமாக அமைந்தன. நாம் முன்னரே அறிந்துள்ளதைப்போல் 1857-ல் தோன்றிய பெரும் புரட்சியின் விளைவாகக் கம்பெனியின் அரசாங்கம் கலைக்கப்பட்டு பிரிட்டிஷ் அரச நிறுவனத்தின் நேரடியான ஆளுகைக்கு உட்படுமாறு இந்திய அரசுகள் மாற்றநிலையைப் பெற்றன.

இப்படிச் சுற்றரண் காப்புக் கொள்கை, துணைப் படைத்திட்டம், தனிமைச் சார்பு நிலைக்கொள்கை, டல்ஹௌசியின் வினையாற்றல் மிக்க ஏகாதிபத்திய இணைப்புக் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசாங்கத்திற்கும் இந்திய அரசுகளுக்கும் இடையே உறவு முறைகள் அமைந்து இறுதியாக இந்திய அரசுகள் யாவும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டன.

24. அரசுப் பணித்துறைகள், செய்தித்தாள்கள் ஆகியவைபற்றிய கம்பெனி அரசாங்கத்தின் கொள்கை (சுருக்கக் குறிப்பு)

கம்பெனியும் இந்திய அரசுப் பணித்துறைகளும் (Company and the Public Services)

ஒரு குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பெறும் அரசாங்கம் அல்லது ஒரு நிறுவனம் எதுவாயினும் அது உரிய நிர்வாகப் பணியாளர்களையும் அதிகாரிகளையும் கொண்டிருத்தல் இன்றியமையாததாகும். மேலும், அத்தகைய பணியாளர்களைப் பற்றிய பணித்துறைகள் பணிவரையறைகள் போன்ற பலவும் ஒரு நாட்டில் உருவாக்கப்பட்டிருத்தல் மிக அவசியமாகும். இந்திய நாட்டின் அரசுப் பணித்துறைகள் பற்றிய வரலாறு கிழக்கிந்தியக் கம்பெனி சாதாரண ஒரு வணிக நிறுவனமாகச் செயல்படத் துவங்கிய காலத்திலேயே ஆரம்பமாயிற்று. தனது ஆரம்ப காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி நான்கு வகையான பணியாளர்களைக் கொண்டிருந்தது. அவர்கள் எழுத்தர்கள் (writers), வேலை பழகுவோர் (apprentices), உரிமைப் பேராட்கள் (factors), இளநிலை மற்றும் முதுநிலை வணிகர்கள் (junior and senior merchants) என் போராவர். கம்பெனியின் பணியாளர்கள் யாவரும் கம்பெனியின் இயக்குநர்களால் பணிகளுக்குச் சேர்க்கப்பட்டனர். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இளைஞர்களே எழுத்தர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டனர். அவ்வாறு சேர்க்கப்பட்டோர் முதுநிலை நியதியின் அடிப்படையில் பதவி உயர்வுகளைப் பெற்றவர்களாய் இருந்தனர். கம்பெனியின் ஆரம்பகால இந்தியப் பணியாளர்களுக்கு வெகு குறைவான ஊதியங்கள் கொடுக்கப்பட்டன. எனவே, தங்களது குறைந்த வருவாயை ஈடுகட்டிக் கொள்ளும் பொருட்டுத் தனிப்பட்ட முறையில் சுய வர்த்தகத்தை மேற்கொள்ள அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். மேலும், கம்பெனியின் இந்தியப் பணியாளர்களுக்கு இலவசமான குடியிருப்பு

களும் (free quarters), சிறு படித்தொகைகளும் (allowances) கொடுக்கப்பட்டன. இந்த ஏற்பாடு சிறிது காலம் வரையில்தான் நன்முறையில் செயல்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி பிளாசிப் போரின் விளைவாக வங்கத்தில் ஓர் அரசியல் சக்தியாக மாறியவுடன் பணித்துறைபற்றிய நிலவரங்கள் சீரழியத் தொடங்கின. வங்கத்துச் சுதேசி அரசாங்கத்தையும் நிர்வாகத்தையும் வெளிப்படையாக மீறி வெறித்தனமான தனிவர்த்தகத்தில் ஈடுபட்டுப் பெருஞ்செல்வத்தைக் கம்பெனியின் பணியாளர்கள் ஈட்டினர். இலஞ்சம், ஊழல், திறமையின்மை ஆகிய தீமைகளும் கொடுமைகளும் வங்கத்தில் மலியலாயின. எனவே, இவற்றை அகற்றி நிர்வாகச் சீர்திருத்தத்தைத் தோற்றுவிக்குமாறு 1765-ல் வங்கத்து ஆளுநராக இராபர்ட் கிளைவ் இங்கு அனுப்பப்பட்டார்.

இராபர்ட் கிளைவ் இந்தியாவை வந்தடைந்த பொழுது கம்பெனியின் பணித்துறையினர் அடங்காமைக்கு, கீழ்ப்படியாமைக்குப் பெயர் பெற்றவர்களாய் இருந்தனர். எனவே, நாம் ஏற்கெனவே அறிந்துள்ளவாறு கிளைவ் வங்கத்து நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். கம்பெனியின் பணியாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் யாவரையும் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுமாறு கட்டாயப்படுத்தினர். இதன் பயனாய் அமைக்கப்பட்டதே ஒப்பந்த சிவில் பணித்துறை (covenanted civil service) என்பதாகும். இதன்படி கம்பெனியின் பணியாளர்கள் வெகுமதிகளைப் பெறுதல், தனிப்பட்ட வர்த்தகத்தை மேற்கொள்ளுதல் ஆகியவற்றைக் கைவிடுமாறு செய்யப்பட்டனர். ஆனால், தமது குறைந்த வருவாய்களை ஈடுசெய்து கொள்ளும் வகையில் உப்பு வியாபாரத்தை மேற்கொள்ளுவதற்கான திட்டத்தை அவர் வழங்கினர். ஆனால், இராபர்ட் கிளைவினால் உருவாக்கப்பட்ட திட்டம் கம்பெனியின் இயக்குநர்களால் நிராகரிக்கப்பட்டது. எனவே, கம்பெனியின் பணித்துறையில் இராபர்ட் கிளைவினால் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் விரும்பிய பலனைக் கொடுக்கவில்லை. இதனால் கம்பெனியின் பணியாளர்கள் மனச்சாட்சி யற்றவர்களாய், ஆதாயக் கொள்ளையடிக்கும் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

1772-ல் வங்கத்துத் தலைமை ஆளுநராக வாரன் ஹேஸ்டிங்ஸ் பதவியேற்ற பின் சில பணித்துறை ஒழுங்குமுறைகளைப் புகுத்தினர். சுங்கத் தீர்வைகளைக் குறைத்துக் கம்பெனியின் பணியாளர்கள் நடத்தி வந்த தனிவர்த்தகத்தின் ஒழுங்கீனங்களைத் தடைசெய்யும் முயற்சியில் அவர் ஈடுபட்டார். ஆனால், இவரால் எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் கம்பெனியின் பணித்துறையைச் செம்மையாக்க

வில்லை. கம்பெனியின் பணித்துறைகளில் சீரிய மாற்றங்களும் சீர்திருத்தங்களும் பணிவரையறைகளும் காரன்வாலிஸ் அவர்களால் மேற்கொள்ளப்பட்டன.

கம்பெனியின் பணித்துறைகளைப் பற்றிய பிரச்சினைகளை வெகு கவனமாக ஆராய்ந்து அவற்றின் ஒழுங்கீனங்களுக்குக் கம்பெனியின் பணியாளர்கள் பெற்றுவந்த குறைந்த ஊதியங்களும் அவர்கள் மேற்கொண்டிருந்த தனி வர்த்தகமுமே உரிய காரணங்களாய் இருந்தன என்பதை அறிந்து, அக் காரணங்களை அல்லது ஒழுங்கீனங்களை அகற்றித் திறமையும் நேர்மையும் மிக்க சிவில் பணியாளர்களை உருவாக்கும் முயற்சியைக் காரன் வாலிஸ் மேற்கொண்டார். கம்பெனியின் சிவில் பணித்துறைகளில் அவர் பின்வரும் சீர்திருத்தங்களைச் செய்தார். கம்பெனியின் பணியாளர்கள் தனி வர்த்தகத்தை மேற்கொள்ளக்கூடாது என்று தடை செய்தார்; அத் தடையை மீறியவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை விதித்தார். அதே சமயம் கம்பெனிப் பணியாளர்களின் ஊதியங்களை வெகு கணிசமாக உயர்த்துமாறு தமது மேலிடத்து இயக்குநர்களை ஊக்குவித்தார். இந்த ஊக்கத்திற்கு ஆரம்பத்தில் தமது ஆதரவைக் காட்டவில்லை என்றாலும் இறுதியாக இயக்குநர்கள் காரன் வாலிஸின் யோசனையை ஏற்றுக் கொண்டனர். கம்பெனியின் திறமை மற்றும் சிக்கனத்தின் பொருட்டு இவர் இயக்குநர்களின் நண்பர்கள், உறவினர்களுக்கு என்று உருவாக்கப்பட்டிருந்த ஊதிய மிகு. உம்பள மானியப் பதவிகள் (sinecure posts) பலவற்றை அழித்தார்;, மேலும், தேவையற்ற சிப்பந்திகளைப் பதவியிலிருந்து நீக்கி, பொருத்தமற்ற நபர்களைப் பதவிகளில் நியமிக்கவும் மறுத்தார். அடுத்துக் கம்பெனியின் பணித்துறைகளிலிருந்த உயர் பதவிகள் யாவற்றையும் ஆங்கிலேயருக்கு என்றே ஒதுக்கி வைத்தார். ஏனைய சார்நிலைப் பதவிகள் இந்தியர்களுக்கு என ஒதுக்கப்பட்டன. இத்தகைய சீர்திருத்தங்களைக் காரன்வாலிஸ் செய்தது உயர்ந்த செயலாக இருந்த போதிலும், கம்பெனியின் உயர் பணித்துறைகளுக்கு இந்தியர்கள் நியமனம் செய்யப்பட முடியாதவாறு இவர் செய்த ஏற்பாடு பெருத்த ஏமாற்றத்தை இங்கு ஏற்படுத்தியது. இதனால், இந்தியப் பணித்துறைகளில் இன வேறுபாடு நுழையலாயிற்று.

கம்பெனியின் இந்தியப் பணித்துறைகளில் சொல்லத் தக்க வகையில் செம்மையான சீர்திருத்தங்கள் சில வெல்லெஸ்லியினால் மேற்கொள்ளப்பட்டன. கம்பெனியின் இந்தியப் பணித்துறைகளில் வேலைக்கு அமர்த்தப்பட அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் இளைஞர்களுக்கு, அவர்கள் பதவிகளை ஏற்குமுன், அவர்களுக்குத்

தேவையான நிர்வாகப் பயிற்சியைக் கொடுக்கும் அடிப்படையில் கல்கத்தாவில் கல்லூரி ஒன்றை வெல்லெஸ்லி நிறுவினார். இக் கல்லூரியில் இந்திய மொழிகள், சட்டம் மற்றும் வரலாறு குறித்து மூன்றாண்டுக் காலப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இக் கல்லூரி 1854ஆம் ஆண்டு வரை செயல்பட்டது. வெல்லெஸ்லியின் உந்தலின் காரணமாக இயக்குநர்கள் மன்றம் ஹெய்லிபரி என்னும் இடத்தில் கிழக்கிந்தியக் கல்லூரி என்னும் நிர்வாகக் கல்லூரி ஒன்றையும் நிறுவியது. இக் கல்லூரி 1858ஆம் ஆண்டுவரை செயல்பட்டு இங்கிலாந்திலிருந்து இந்தியப் பணித் துறைகளுக்கு ஆள்சேர்ப்புப் செய்யப்பட்ட இளைஞர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளைக் கொடுத்து வந்தது.

மேற்கூறிய செய்திகளைத் தொடர்ந்து, நாம் முன்கூட்டியே அறிந்திருப்பதற்கு ஏற்ப 1833ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தின் 87ஆவது பிரிவின்மூலம் இன வேற்றுமை நீக்கப்பட்டுச் சட்ட ரீதியாக இந்தியரும் கம்பெனியின் இந்தியப் பணித்துறையில் நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும், இச் சட்ட ஏற்பாடு விரும்பிய பலனை எள்ளளவும் இந்தியருக்குக் கொடுக்க வில்லை. இதனை அடுத்து, கம்பெனியின் ஒப்பந்த சிவில் பணித் துறையைப் பகிரங்கப் போட்டித் தேர்வுகள்மூலம் பரிபாலிக்க 1853ஆம் ஆண்டின் சாசனச் சட்டம் முனைப்பான ஏற்பாட்டைச் செய்து கொடுத்தது. இத்தகைய ஏற்பாடு 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்டிருந்த போதிலும் அது நடைமுறைக்கு உள்ளாக்கப்படாமல் இருந்தது. எனவே, 1853ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்த் தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப் படையில் கம்பெனியின் பணித்துறைகளில் இந்தியர் பங்கு பெற வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. ஆனால், இத் தேர்வுகளுக்கென உருவாக்கப்பட்டிருந்த பாடத் திட்டங்களின் தன்மையும், தேர்வுகள் நடத்தப்பெறும் இடமாக இலண்டன் மாநகரம் நிர்ணயிக்கப்பட்டிருந்ததும், திறமையைப் பெற்றிருந்தும்கூட 1869 வரை எவ் விந்தியரும் பதவிகளைப் பெறமுடியாத நிலையைத் தோற்றுவித்தது. 1869 லிருந்து அப்படிப் பதவிகளைப் பெற்ற இந்தியரும் எண்ணிக்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய வகையில் வெகு சிலராகவே இருந்தனர். 1858-ல் பிறப்பிக்கப்பட்ட அரசப் பிரகடனத்தில் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் இடையே பதவி நியமனங்கள் குறித்துப் பேணப்பட்ட வேற்றுமைகள் நீக்கப் பட்டு, அவர்களிடையே சமத்துவத்தைப் பேண உறுதியளிக்கப் பட்டது. அதன்பின் அரச நிறுவனத்தின் நேரடி ஆட்சியின்கீழ் இந்தியச் சிவில் பணித்துறைகள் ஏற்றத்தையும் வளர்ச்சியையும் பெறலாயின. அத்தகைய ஏற்றமும் எளர்ச்சியும் இந்தியப் பணித்

துறைகள் பெறுவதற்குத் துணைபுரியும் வகையில் அரசியல் சூழ் நிலையும் தேசிய இயக்கமும் தோன்றின. மேலும், கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் கல்வித்துறையிலும் படிப்படியான சீர்திருத் தங்கள் பல சட்ட ஆக்கங்களின்கீழ்ச் செய்யப்பட்டுப் பள்ளிகளும், கல்லூரிகளும் இந் நாட்டின் பல இடங்களிலும் துவக்கப்பட்டன. 1813ஆம் ஆண்டுவரை கல்விப் பணியை அரசாங்கப் பொறுப்பாகக் கம்பெனி ஏற்றிருக்கவில்லை. அந் நிலை 1813ஆம் ஆண்டுக்குப் பிறகு தோன்றிற்று. கல்விப் பணிக்கென அரசாங்கம் நிதி ஒதுக்கும் வழக்கம் பின்னர் தோன்றிச் சீரான வளர்ச்சி பல துறைகளில் ஏற்பட்டது. இறுதியாக வில்லியம் பென்டிங்க், இராசாராம் மோகன்ராய் ஆகியோர் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக ஆங்கிலக் கல்வி முறை இங்கு நிலைநிறுத்தப்பட்டது. இப்படி ஏற்பட்ட கல்வி வளர்ச்சியினால் இந்தியர்கள் பெற்ற முன்னேற் றத்தையொட்டி அவர்கள் இந்தியப் பணித்துறைகளில் பெற்ற பதவிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

கம்பெனியின் அரசாங்கமும் செய்தித்தாள்கள், அச்சகம் ஆகியவற்றின் வளர்ச்சியும்

முன் ஓர் அதிகாரத்தில் தேவையின் நிமித்தம் கூறப்பட்டிருக்கும் செய்திக்கு ஒப்ப ஆங்கிலேயரின் ஆட்சியினால் இந் நாடு பெற்ற பலன்கள் பலவற்றுள் அச்சு மற்றும் செய்தித்தாள்கள் அறிமுகப் படுத்தப்பட்டது முக்கியமான தொன்றாகும். ஆங்கிலேயர் இந் நாட்டிற்கு வருவதற்கு முன் அச்சுச் செய்தித்தாள்கள் எவையும் இங்கு இருக்கவில்லை. செய்தித்தாள்களைப் பதிப்பித்துச் செய்திகளை வெளியிடுவதில் உள்ள மதிப்பையும் முக்கியத்துவத்தையும்பற்றி இந்திய மக்கள் உணர்ந்திருக்கவில்லை. ஆங்கிலேயர் இங்கு வந்து மாநிலப் பெருநகரங்களில் குடியேறியவுடன் அவர்களுடன் இந் நாட்டவர் பெற்ற உறவின் காரணமாகச் செய்தித்தாள்களும், சஞ்சிகைகளும் (journals) வழக்கில் வந்தன. அச்சுச் செய்திப் பிரசுரத்தை முதன் முதலாக மேற்கொண்டவர் ஹிக்கி (Hicky) என்னும் ஆங்கிலப் பெருந்தகை யாவார். இவர் 1780-ல் வங்காள அரசிதழ் (Bengal Gazette) என்னும் வார இதழை முதன் முதலாகப் பதிப்பித்து வெளியிட்டார். இந்தியாவில் முதன் முதலில் அச்சடிக்கப்பட்ட செய்தித்தாளாக அஃது இருந்தது. தான் பதிக்கப் பட்ட ஆரம்ப காலத்திலேயே வெகுவான ஆதரவை வங்காள அரசிதழ் பெற்றது. இதனை அடுத்துக் கல்கத்தா அரசிதழ், இந்திய உலகம் (Indian World) என்னும் செய்தித்தாள்கள் வெளியிடப் பட்டன. ஆனால், இச் செய்தித்தாள்கள் இந்திய மக்களிடையே செய்திகளையும், அறிவையும் பரப்புவதற்கென வெளியிடப்பட வில்லை. மாறாக அவை ஆங்கிலேயரால் ஆங்கிலமொழியில் பதிப்

பிக்கப்பெற்றுக் கட்டுப்படுத்தப்பட்டவைகளாக இருந்தன. மேலும், அவை ஆங்கிலமொழியில் அச்சடிக்கப்பட்டு ஐரோப்பியர், மற்றும் ஆங்கிலோ இந்தியர் ஆகியோரின் பொழுதுபோக்கிற்கென வெளியிடப்பட்டன. எனினும், பத்திரிகைகளின்மூலம் பலதரப்பட்ட மக்களுக்கிடையே பிரசார சாதனம் மேற்கொள்ளப்பட அப் பத்திரிகைகள் வழியமைத்துக் கொடுத்தன.

வாரன் ஹேஸ்டிங்ஸும், காரன்வாலிஸும் தலைமை ஆளுநர்களாக இருந்த காலத்தில் துவக்க நிலையிலிருந்த செய்தித்தாள்களின் சுதந்திரம் அவர்களால் ஆதரிக்கப்படவில்லை. அவர்கள் பத்திரிகைச் சுதந்திரத்தை அறவே விரும்பவில்லை. ஏனெனில் பத்திரிகைச் சுதந்திரம் அனுமதிக்கப்படுமாயின் அல்லது ஆதரிக்கப்படுமாயின் அவை பல செய்திகளையும் கருத்துகளையும் வெளியிட்டு அவற்றால் பிரிட்டிஷ் இந்திய அக்கறைகள் அச்சத்திற்கும் ஆபத்திற்கும் கண்டனங்களுக்கும் உள்ளாகிவிடும் என்று கருதினர். வாரன் ஹேஸ்டிங்ஸின் அரசாங்கக் கொள்கையின்மீது ஹிக்கி தமது வங்காள அரசிதழில் குறைகண்டு தாக்கிச் செய்திகளைப் பிரசுரித்தார். வாரன் ஹேஸ்டிங்ஸ் பெருத்த கோபத்தையும் வெறுப்பையும் கொண்டு வங்காள அரசிதழ் செய்தித்தாளைத் தடைசெய்ததோடு, அதன் வெளியீட்டு ஆசிரியரான ஹிக்கியைக் கைதும் செய்தார். இதனால் 1782-ல் வங்காள அரசிதழ் செய்தி நிறுவனம் முற்றிலும் மூடப்பட்டது. இதைப் போலவே 'இந்திய உலகம்' எனும் செய்தித்தாளின் ஆசிரியராய் இருந்த டுயன் (Duane) என்பவர் காரன் வாலிஸ் ஆட்சியில் பல தொல்லைகளுக்கு உள்ளாக்கப்பட்டார். இவர் தமது செய்தித்தாளில் காரன்வாலிஸைப் பற்றிய அருவருப்பான கட்டுரைகளை எழுதிப் பிரசுரித்தார். எனவே, காரன்வாலிஸ், இவரது செய்தித்தாளைத் தடைசெய்ததோடு அவரை இந்தியாவைவிட்டு வெளியேறுமாறு கட்டளையைப் பிறப்பித்தார். இப்படிக் காரன்வாலிஸின் ஆட்சிக் காலம் வரை, இந்தியச் செய்தித்தாள்களின் நிலை கேவலமாக இருந்தது.

பத்திரிகைகளின் தணிக்கையும் ஒழுங்கான அச்சகச் சட்டங்களும்

வெல்லெஸ்லி பிரபு தலைமை ஆளுநராக 1798-ல் இந்தியாவில் பதவி யேற்றபின் இந் நாட்டில் அச்சகம் மற்றும் செய்தித்தாள்கள் பற்றி ஒழுங்கான சட்டங்கள் பல இயற்றப்படும் காலம் ஆரம்பமாயிற்று. அவ் வமயம் ஃபிரெஞ்சுக்காரர்களின் ஆபத்து மீண்டும் தலைதூக்கியிருந்ததால் இதுகாறும் ஒழுங்கற்றிருந்த அச்சகம் மற்றும் செய்தித்தாள்கள் பற்றிய செய்திகளையும் காரியங்களையும் ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும் என்று அவர் உணர்ந்தார். இதனால் அவர் பெரும்பயன் தரத்தக்க ஐந்து ஒழுங்குமுறைகளை

இயற்றினர். இவற்றின்படி செய்தித்தாள்கள்மீது முழுமையான அரசாங்கத் தணிக்கை (censorship) சுமத்தப்பட்டது. மேலும், செய்தித்தாள்கள் பிரசுரிக்க வேண்டிய செய்திகள், மற்றும் அவற்றின் நடத்தை குறித்து அடிப்படையான சில விதிகள் அவ்வொழுங்குமுறைகள்மூலம் நிர்ணயிக்கப்பட்டன. உதாரணமாக, வார ஓய்வுத் திருநாளன்று (Sabbath day) எச் செய்தித்தாளும் வெளியிடப்படக் கூடாது என்று விதித்தார். மேலும், அரசாங்கத்தின் தணிக்கையையும் அனுமதியையும் ஏற்றுக் கொண்ட பின்னரே ஐரோப்பியப் போர்களைப் பற்றிய செய்திகள் பிரசுரிக்கப்பட வேண்டும் என்றும், இவ்வொழுங்குமுறைகள் மீறப்படுமாயின் சம்பந்தப்பட்ட பத்திரிகை உரிமையாளர்கள் தண்டிக்கப்பட்டு நாடு கடத்தப்படுவர் என்றும் வெல்லெஸ்லி செய்தித்தாள்களைப் பற்றிய சட்டரீதியான ஒழுங்குமுறையை உருவாக்கினர்.

வெல்லெஸ்லிக்குப் பிறகு மின்டோ பிரபுவின் ஆட்சிக் காலத்தில் கண்காணிப்பான கட்டுப்பாடு செய்தித்தாள்களின்மீது மேற்கொள்ளப்பட்டது. இவர் கடுமையான தடைகளை விதித்ததோடன்றி அத் தடைகளை மீறிய பத்திரிகை ஆசிரியர்களைக் கடுமையாகத் தண்டித்தார். எனவே, இவரது காலத்திலும் செய்தித்தாள்கள் கம்பெனியின் அரசாங்கம் மற்றும் நிர்வாகம் குறித்து மேலெழுந்தவாரியாகவும், பொதுப்படையாகவும் திறனாய்வு மேற்கொள்ள முடியாதபடி சுதந்திரத்தை இழந்து அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. இதனால் மிகச் சாதாரணமாகப் பிரசுரித்த அரசாங்கத்தைப் பற்றிய செய்திகள் குறித்துப் பத்திரிகை ஆசிரியர்கள் அவ்வப்பொழுது கம்பெனியின் அரசாங்கத்திற்குத் தமது வருத்தத்தைக் கூறி மன்னிப்பும் கோரியவர்களாக இருந்தனர். இவ்வாறு அரசாங்க அலுவலகத் தணிக்கைக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்த செய்தித்தாள்கள் ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் தலைமை ஆளுநர் ஆட்சிக்காலத்தில் சுதந்திரத்தைப் பெற்றன.

வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் அரசை விமரிசனம் செய்யும் பத்திரிகைகளின் பணிப்பாங்கில் பெருமதிப்பைக் கொண்டவராய் ஹேஸ்டிங்ஸ் பிரபு இருந்தார். செய்தித்தாள்களின்மீது விதிக்கப்பட்டிருந்த தேவையற்ற தடைகளையும் கட்டுப்பாடுகளையும் அவர் சிறிதும் விரும்பவில்லை. எனவே, அவர் செய்தித்தாள்களின்மீது சுமத்தப்பட்டிருந்த தணிக்கையை அறவே நீக்கினர். எனினும் முன் ஜாக்கிரதையுடன்கூடிய திட்டமாகச் சர்ச்சைக்குரிய சங்கதிகளைச் செய்தித்தாள்கள்

பிரசுரிக்கலாகாது என்று சில விதிகளை வெளியிட்டார். அப்பொழுது சென்னையிலும் செய்தித்தாள்கள் பிரசுரிக்கப்பட்டு வந்தன. சென்னை அரசாங்க ஆளுநரும் பத்திரிகைகளின்மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளை நீக்கினர். 1818-ல் கம்பெனியின் இந்தியத் தலைமை அரசாங்கத்தால் சில ஒழுங்குமுறைகள் பிறப்பிக்கப்பட்டன. அவற்றின்படி இங்கிலாந்திலிருந்த கம்பெனியின் மேலிடத்து இந்திய அதிகாரிகள் பிறப்பிக்கும் உத்தரவுகள், இந்திய நாட்டில் தலநிர்வாகம் குறித்து மேற்கொள்ளப்படும் அரசியல் ஈடுபாடுகள் அல்லது பரிமாற்றங்கள், தலைமை ஆளுநர், மற்றும் மாநில ஆளுநர்கள், அவர்தம் ஆட்சி மன்ற உறுப்பினர்கள்; நீதிபதிகள், கல்கத்தாவிலிருந்த மேற்றிராணியார் ஆகியோரது அலுவலகப் பொது நடத்தை ஆகியவை பற்றிய விரும்பத் தகாத செய்திகளைப் பிரசுரிக்கக் கூடாது என்று பத்திரிகை ஆசிரியர்கள் தடைப்படுத்தப்பட்டனர். மேலும், இந்தியர்களின் மனத்தில் அவர்களது மத உணர்ச்சிகள் புண்படுமாறும், மதத்தின் காரணமாக அச்சத்தையும் சந்தேகத்தையும் கிளப்புமாறும் விவாதிக்கப்படும் வகையில் செய்திப் பிரசுரங்களை மேற்கொள்ளலாகாது என்றும் பத்திரிகை ஆசிரியர்கள்மீது கட்டுப்பாடு சுமத்தப்பட்டது. மற்றப்படி, பிற விஷயங்களை மக்களது அறிவு வளர்ச்சிக்கும் சிந்தனைக்கும் துணைபுரியும் வகையில் செய்தித்தாள்களில் பிரசுரிக்கத் தடையற்ற அனுமதி வழங்கப்பட்டது. ஹேஸ்டிங்ஸ் பிரபுவால் பின்பற்றப்பட்ட முற்போக்கான பத்திரிகைப் பிரசுரக்கொள்கை இந்திய மொழிகள் பலவற்றில் செய்தித்தாள்கள் பிரசுரிக்கப்பட வழி வகுத்தது.

ஆடம்ஸ், ஆமெர்ஸ்ட் ஆகியோர் பின்பற்றிய அடக்குமுறைக் கொள்கை

ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் காலத்தில் சுதந்திரத்தைப்பெற்ற பத்திரிகைகளும் அச்சகங்களும் ஆடம்ஸ் (Adams), ஆமெர்ஸ்ட் ஆகியோருடைய காலங்களில் அடக்குமுறைக்கொள்கைக்கு இலக்காயின. தமக்களிக்கப்பட்டிருந்த சுதந்திரத்திற்கு உட்பட்ட நிலையில் செய்தித்தாள்கள், நாட்கள் செல்லச் செல்ல நெகிழ்ச்சிப் போக்கை மேற்கொண்டு செயலாற்றின. இதனால் கம்பெனியின் இந்திய அரசாங்கங்களின் குற்றங் குறைகள் பெருமளவில் பிரசுரிக்கப்பட்டன. மேலும், அவை தமக்கெனப் புதியதொரு பாங்கையும், நடத்தை முறையையும் வகுத்துக்கொண்டன. உதாரணமாகக் கல்கத்தா சஞ்சிகை (Calcutta journal) எனும் செய்தித்தாள் தலைமை நீதிபதி, சென்னை மாநில ஆளுநர், மற்றும் கம்பெனியின் உயர் அதிகாரிகள் பலரைப்பற்றித் துணிச்சலுடன்,

ஆனால், கண்ணியமற்றவகையில், செய்திகளைப் பிரசுரித்தது. இதனால் வெகுண்டெழுந்த ஆடம்ஸ் என்னும் தலைமை ஆளுநர் கனிவானதும், முற்போக்குடையதுமான பத்திரிகைக் கொள்கையை அனுமதிக்கக்கூடாது என்று முடிவெடுத்து, அடக்குமுறையான கொள்கையைப் பின்பற்றினார். இதனால் உரிமங்களைப் (licences) பெற்ற பின்னரே செய்தித்தாள்களை எவரும் பிரசுரிக்க முடியும் என்ற விதியை உண்டாக்கினார். மேலும், அரசாங்கத்தினால் வழங்கப்படும் உரிமங்களை எந்தச் சமயமும் இரத்து செய்வதற்கான அடக்குமுறையான நடவடிக்கை ஆட்சியினரால் மேற்கொள்ளப் பட வகைசெய்தார். இதன்மூலம், தமது விருப்பங்களுக்கும் எண்ணங்களுக்கும் மாறாகச் செய்திகளைப் பிரசுரிக்க முடியாத அடக்குமுறையான கொள்கைக்குச் செய்தித்தாள்கள் உட்படுத்தப் பட்டன. இவற்றையொட்டி, ஆடம்ஸ் மேற்சொல்லப்பட்ட காரணத்திற்காக் கல்கத்தா சஞ்சிகையின் ஆசிரியராயிருந்த பக்கிங்ஹாம் என்பவர்மீது மிகக் கடுமையான நடவடிக்கையை எடுத்தார். ஆடம்ஸைப் போலவே, அவரையடுத்து ஆட்சி புரிந்த ஆமெர்ஸ்ட் பிரபுவும் அடக்குமுறையான கொள்கையைப் பின்பற்றினார். இவரது கருத்திற்கும் விருப்பத்திற்கும் மாறாக செய்திகளைப் பிரசுரித்த காரணத்தால் கல்கத்தா செய்திப் பட்டியல் (Calcutta chronicle), பம்பாய் அரசிதழ், ஸ்டேட்ஸ்மேன் (Statesman) போன்ற செய்தித்தாள்கள் அடக்குமுறைக்கு உள்ளாயின.

ஆமெர்ஸ்ட் அவர்களுக்குப் பிறகு வில்லியம் பென்டிங்கின் தலைமை ஆளுநர் ஆட்சிக்காலத்தில் இந்தியச் செய்தித்தாள்கள் எவ்விதமான அடக்குமுறைகளுக்கும் உள்ளாக்கப்படவில்லை யென்றாலும், தனிப்பட்டமுறையில் முற்போக்கு வாதியாகவும், சீர்திருத்த வாதியாகவும், இருந்த பென்டிங் செய்தித்தாள்களை ஊக்குவிக்கும் வகையில் முயற்சிகளை எடுப்பதில் தவறினார். ஆனால், இவரை அடுத்துத் தலைமை ஆளுநர் பதவியை வகித்த சார்லஸ் மெட்காஃப் என்பவர், தமது ஓராண்டுக்கால நிலைபேறில்லாப் பதவிக் காலத்தில் மிகத் துணிச்சலுடன் இந்தியச் செய்தித்தாள்கள் மீது இருந்த தடைகளையும் அடக்குமுறைகளையும் நீக்கினார். இதனால் இந்தியச் செய்தித்தாள்கள் புத்துணர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் பெற்றன. ஆனால், இவரது செயல் கம்பெனியின் மேலிடத்து அதிகாரிகளால் விரும்பப்படவில்லை. இதனால் அவரை நிலைபேறு மிக்க இந்தியத் தலைமை ஆளுநராக அவர்கள் நியமிக்கவில்லை. எனினும், இந்தியர்களின் மகிழ்ச்சிக்கும் நன்றியுணர்ச்சிக்கும் அவர் பாத்திரமானார்.

1857-ல் 'படைவீரர் கலகம்' என்னும் பெரும் புரட்சி நடந்த சமயத்தில் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் இந்தியச் செய்தித் தாள்கள் மற்றும் அச்சகங்கள்மீது வலிமையான கட்டுப்பாட்டைச் செலுத்த முற்பட்டது. எனவே, 1857-ல் உரிமச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இதன்படி செய்தித்தாள்கள், அச்சகங்கள் ஆகியவற்றின் உடைமையாளர்கள் யாவரும் ஆட்சிமன்றத்துடன் கூடிய தலைமை ஆளுநரிடமிருந்து உரிமங்களைப் பெற்ற பின்னரே காரியங்களை மேற்கொள்ளவேண்டும் என்ற கட்டாயம் விதிக்கப் பட்டது. மேலும், ஆட்சிமன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநர் சூழ்நிலைகளின் தேவைகளுக்கு ஒப்பத் தேவையான நிபந்தனைகளைச் (conditions) செய்தித்தாள்களின் உரிமையாளர்கள்மீது திணிக்கவும், அச்சிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் செய்தித்தாள்களின் புழக்கத்தின்மீது சில தடைகளை விதிக்கவும் இச் சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டார். இத்தகைய தடைகளும் கட்டுப் பாடுகளும் ஓராண்டிற்கே செயலில் இருக்கும் என்று இச் சட்டம் அறிவித்த போதிலும், அவை 1865 வரை நடைமுறையில் இருந்தன. எனினும், இவற்றோடு எதிர்நீச்சல் போட்டு இந்தியச் செய்தித்தாள்களும் அச்சகங்களும் மேன்மேலும் வளர்ச்சியைப் பெற்றன.

மேற்கோள் நூற்பட்டியல்

(BIBLIOGRAPHY)

ALFRED LYALL, *British Dominion in India.*

ALEXANDROWICZ, C. H., *Constitutional Development of India.*

ANDERSON, P., *The English in Western India.*

ANDERSON AND SUBEDAR, *The Development of Indian Policy* (1818—58).

BANNERJEE, A. C., *Indian Constitutional Documents* (I Volume)

BASU, B. D., *Rise of the Christian Power.*

BASU, DURGA DAS, *Commentary on the Constitution of India.*

BEARCE, C. D., *British Attitude Towards India.*

BLUNT, SIR EDWARD, *The Indian Civil Service.*

BOSE, S. C., *The Indian Struggle.*

CHESNEY, G. M., *Indian Polity.*

CHIROL VALENTINE, *Indian Unrest.*

COUPLAND, R., *The Indian Problem.*

COUPLAND, R., *Britain and India.*

COURTENAY ILBERT, *The Government of India.*

COWELL, H., *History and Constitution of Courts and Legislative Authorities in India.*

DODWELL, H. H., *The Cambridge History of India, Vols. V & VI.*

GRIFFITH, P., *British Impact on India.*

HORNE, *The Political System of British India.*

KAYE, SIR JOHN, *The Administration of the East India Company.*

KEITH, A. B., *A Constitutional History of India.*

MASANI, R. P., *British in India.*

MAJUMDAR, R. C., *British Paramountcy.*

MUKHERJI, P., *Indian Constitutional Documents.*

O' MALLEY, L. S. S., *The Indian Civil Service.*

PANNIKAR, K. M., (1) *Relations of Indian States.*
„ (2) *Evolution of british Policy towards Indian States.*

PUNNIAH, K. V., *The Constitutional History of India.*

RAMSAY MUIR, *The Making of British India.*

PALANDE, M. R., *An Introduction to Indian Administration.*

ROBERTS, P. E., *History of British India.*

ROBSON, W. A., *The British Civil Service.*

PHILLIPS, *East India Company.*

SINGH, G. N., *Land marks in Indian Constitutional and National Development.*

TARA CHAND, *History of the Freedom Movement in India. Vol I.*

THOMPSON and GARRATT,—*Rise and Fulfilment of British Rule in India.*

க. த. திருநாவுக்கரசு, 'ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு'. (Vincent Smith, Oxford History of India - தமிழாக்கம்.)

Report on Indian Constitutional Reforms, 1918. (Paras 32,36, 294).

The Imperial Gazetteer of India.

K. மோகன்ராம், 'முதல் விடுதலைப்போர்'.

இல. தியாகராசன், 'பொதுத்துறை ஆட்சி இயல்' - பாகம் I & II.

கலைச்சொற்கள்

A

Abdication — ஆட்சித் துறப்பு
Ability — திறமை, ஆற்றல்
Abject — இழிந்த
Abjure — கொள்கையை மறு
Abolish — ஒழி, நீக்கு, கலை
Abomination — வெறுத்தல்
Abrogation — ஒழித்துக்கட்டுதல்
Absolutism — வரம்பின்மை
Absorb — ஏற்றுக்கொள், சேர்த்துக்கொள்
Academy — கழகம்
Acceptance — இணக்கம், ஏற்பு
Access — நுழைவுரிமை
Accession — பதவி அல்லது ஆட்சியேற்பு
Accident — தற்செயல் நிகழ்ச்சி
Accomplishment — ஈடேற்றம்
Account — கணக்கிடு
Accountability — பொறுப்பு
Accounts — கணக்குகள்
Accredited — சான்றுபெற்ற
Accustom — பழக்கப்படுத்து
Acculturation — பண்பாட்டினைப் பரப்பல்
Acquiesce — உடன்படு
Acquire — கைப்பற்று
Act — சட்டம், நடி
Active — ஆற்றலுள்ள
Action — நடவடிக்கை
Activity — காரியம், செயல்

Act of Settlement	—	அரசுரிமை நிர்ணயச் சட்டம்
Act of Supremacy	—	மேலாதிக்கச் சட்டம்
Act for the good Government	—	நல்லரசாங்கத்திற்கான சட்டம்
Actual Ruler	—	உண்மையாக ஆள்பவர்
Adaptation	—	தழுவல்
Addition	—	சேர்க்கை
Additional member	—	அதிகப்படியான அல்லது மேற்படியான உறுப்பினர்
Adequate	—	தேவையான
Adjudge	—	தீர்ப்புக்கூறு
Adjudication	—	வழக்கில் தீர்ப்புவழங்கல்
Adjournment	—	(கூட்டத்தை) தள்ளிப் போடுதல், ஒத்திவைத்தல்
Adjustment	—	சரிக்கட்டல்
Adjutant	—	படைத்துறைப் பணியாள்
Adhoc	—	தற்காலிக
Administer	—	நிர்வகி, செயலாட்சிசெய்
Administration	—	ஆட்சி, நிர்வாகம்
Administrative Authority	—	நிர்வகிக்கும் அதிகாரி
Administrative Board	—	நிர்வாக வாரியம்
Administrative Council	—	ஆட்சிமன்றம்
Administrative Court	—	ஆட்சித்துறைத் தீர்ப்புமன்றம்
Administrative Law	—	ஆட்சித்துறைச் சட்டம்
Administrative Powers	—	ஆட்சி அதிகாரங்கள்
Administrative Purpose	—	நிர்வாகக் குறிக்கோள், ஆளுகைநோக்கம்
Administrative Procedure	—	நிர்வாக நடைமுறை
Administrative Process	—	ஆட்சிச் செயல்முறை
Administrative Relations	—	ஆட்சி உறவுகள், நிர்வாகத் தொடர்புகள்
Administrative Report	—	ஆட்சி அறிக்கை
Administrative Service	—	நிர்வாகப் பணித்துறை
Admiralty	—	கடற்படை இலாக்கா
Admiralty Court	—	கடற்படைத் தீர்ப்புமன்றம்
Admission	—	அனுமதி
Adoption	—	தத்துஎடுத்தல்
Adulation	—	புனைவுப்புகழ்ச்சி
Adult Franchise Adult Suffrage	—	வயதுவந்தோர் வாக்குரிமை

Adultery	— கூடா ஒழுக்கம்
Advancement	— மேம்பாடு, முன்னேற்றம்
Advantage	— நன்மை
Advent	— வருகை
Adventure	— துணிகரச் செயல்
Adversary	— பகைவன்
Adverse	— தீங்கான
Advise	— அறிவுரைவழங்கு, கருத்தளி
Advisory body	— அறிவுரை அமைப்பு
Advisory Committee	— ஆலோசனைக் குழு
Affairs	— காரியங்கள்
Affirmative	— உடன்பாடுடைய
Agenda	— நிகழ்ச்சி நிரல்
Agent	— ஏஜண்ட், செயலி
Agreement	— உடன்படிக்கை
Aggrandisement	— தன்நலம் பெருக்கிக்கொள்
Aggression	— ஆக்கிரமிப்பு, வலியத் தாக்குதல்
Alderman	— நகரமுதுவர்
Alienation	— உரிமைமாற்றம், பராதீனம்
Alignments	— வரிசைப்பாடு
Allegation	— குற்றச்சாட்டு
Allegiance	— விசுவாசம், பற்று
Alliance	— நேச உடன்படிக்கை
All India Services	— அனைத்திந்தியப் பணிகள், பணித்துறைகள்
Allocation	— ஒதுக்கம், பங்குப்பிரிவினை
Allocation of funds	— நிதி ஒதுக்கம்
Allocation of Seats	— இடங்களை ஒதுக்கல்
Allowance	— படிப்பணம், அனுமதி
Ambassador	— தூதர்
Amboyna Massacre	— அம்பாய்னு படுகொலை
Amendment	— திருத்தம்
Amenities	— வசதிகள்
American War of Independence	— அமெரிக்கச் சுதந்திரப்போர்
Ammunitions	— போர்த் தளவாடங்கள்
Ammusement	— கேளிக்கைக் களியாட்டம்
Amnesty	— குற்றமன்னிப்பு
Anarchy	— ஆட்சிக்குலைவு, அரசியற் குழப்பம், அரசுக்கேடு

Anachronism	—	பொருத்தக்கேடு
Ancestors	—	முன்னோர்
Ancient	—	தொன்மை, பழங்கால
Anglican	—	இங்கிலாந்தின் அரசியல் ஏற்புடைய
Anglicise	—	ஆங்கிலமயமாக்கு
Anglicists	—	ஆங்கிலக் கல்விமுறை ஆதரவாளர்
Anglo-Indians	—	ஆங்கிலோ இந்தியர்
Anglomania	—	ஆங்கிலப்பித்து
Anglophobia	—	ஆங்கிலேய வெறுப்பு
Annexation	—	நாடுபிடித்தல், வல்லிணைப்பு
Annual	—	வருடாந்திர
Annulment	—	ரத்துசெய்தல்
Anomalous	—	ஒழுங்குமீறிய
Antecedent	—	முன்நிகழ்வு, முன் உதாரணம்
Anti-Colonisation	—	குடியேற்ற எதிர்ப்பு
Anti-democratic	—	ஜனநாயகத்திற்குப் புறம்பான
Answerable	—	பதிலளிக்கும் பொறுப்பு வாய்ந்த
Appointment	—	பதவியில் அமர்த்தல்
Appeal	—	மேல் முறையீடு
Appellate Court	—	மேல் தீர்ப்பு மன்றம்
Apportionment	—	பங்கீடு
Appropriate	—	பொருத்தமான, உரிய
Appropriation Bill	—	நிதி ஒதுக்க மசோதா
Approval	—	ஒப்புதல், ஏற்பு
Arbitrary	—	எதேச்சையான, கொடுங்கோலான
Arbitration	—	நடுவர் தீர்ப்பு
Aristocracy	—	உயர்குடி ஆட்சி
Armed forces	—	போர்ப்படை
Army Act	—	போர்வினைச் சட்டம், இராணுவச் சட்டம்
Articles	—	ஷரத்துகள்
Artisan	—	கைவினைஞர்
Ascendancy	—	ஆதிக்க ஏற்றம்
Assemble	—	கூடுதல், கூட்டுவி, திரட்டு
Assembly	—	(மக்கள்) மன்றம், அவை
Assets	—	இருப்புமுதல்

Assent	— இணக்கம்
Assert	— உரிமையை வற்புறுத்து
Association	— சங்கம்
Assize Court	— குறிப்பிட்ட காலத்தில் அமரும் நீதிமன்றம்
Assurance	— உறுதி
Attorney-General	— அரசின் வழக்குரை தலைவர்
Audit	— தணிக்கை
Austrian War of Succession	— ஆஸ்திரியவாரிசு உரிமைப்போர்
Authority	— அதிகாரநிலை, ஆணை
Authoritarianism	— அதிகாரத்துவம்
Autocracy	— வல்லாட்சி, தனி வல்லாட்சி, தன்னரசு
Autonomy	— சுயாட்சி
Award	— தீர்ப்பு, பரிசு

B

Background	— பின்னணி
Historical Background	— வரலாற்றுப் பின்னணி
Bail	— பிணையம், பிணை
Balance of Power	— வல்லமைச் சமநிலை; அதிகாரச் சமநிலை
Balance of Trade	— வர்த்தகச் சமநிலை
Ballot	— இரகசிய வாக்கீட்டுத் தேர்தல்
Ballot paper	— வாக்குச் சீட்டு
Bank	— வங்கி
Bankruptcy	— திவால், நொடிவு
Baron	— பெருமான்
Barriers	— தடைகள்
Basic Law	— ஆதாரச் சட்டம்
Basis	— அடிப்படை
Battle	— யுத்தம்
Bench Court	— பெஞ்ச் கோர்ட்டு; குற்ற விசாரணை நீதி ஆயம்
Bench of Judges	— நீதிபதிகளின் அவை
Bengal Tenancy Act	— வங்கத்துக் குடிவாரச் சட்டம்
Beneficiary	— பயனடைபவர்
Behaviour	— நடத்தை
Administrative behaviour	— ஆட்சி நடத்தை

Betrayal — துரோகம், நம்பிக்கைமோசம்
Bias — ஒருதலைச் சார்பு
Binding — பிணைக்கும், கட்டுப்படுத்தும்
Bible — பைபிள், விவிலியம்
Bicameral Legislature — ஈரவைச் சட்டமன்றம்
Biennial — ஈராண்டுக்கு ஒருமுறையான
Bifurcation — இருகூறாக்குதல்
Bill — மசோதா
  Detailed Bill — விவரமான மசோதா
  Dunda's Bill — டுன்டாஸின் மசோதா
  Finance Bill — நிதி அல்லது பணமசோதா
  Fox's India Bill — ஃபாக்ஸின் இந்திய மசோதா
  Money Bill — பண மசோதா
  Pending Bill — முடிவாகாத மசோதா
Bishop — மதகுரு, மேற்றிராணியார் பிஷப்
Bishopric — சமய ஆட்சி அலுவலகம்
Black Hole Tragedy — இருட்டறைத் துயர நிகழ்ச்சி
Board — வாரியம்
Board of Control — கட்டுப்பாட்டு வாரியம்
Board of Revenue — வருவாய் வாரியம்
Bonafide — நல்லெண்ணத்தில்
  Malafide — தீய எண்ணத்துடன்
Boon — உரிமைப்பேறு
Breach — உடைப்பு
Breach of Contract — ஒப்பந்த முறிவு
Breach of peace — அமைதிக் குலைவு
Breach of privilege — உரிமை மீறல்
Breach of trust — நம்பிக்கைமுறிவு, நம்பிக்கை மோசம்
Bribe — கையூட்டு, இலஞ்சம்
British — பிரிட்டிஷ்
British concerns — பிரிட்டிஷ் அக்கறைகள்
British Dominion — உரிமைபெற்ற பிரிட்டிஷ் குடியேற்ற நாடு
British troops — பிரிட்டிஷ் படைகள்
British East India Company — பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி
British Parliament — பிரிட்டிஷ் பாராளுமன்றம்
British India — பிரிட்டிஷ் இந்தியா

British Indian Government — பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம்
British Indian Politics, Polity — பிரிட்டிஷ் இந்திய அரசியல்
British Indian Possessions — பிரிட்டிஷ் இந்திய உடைமைகள்
British Institutions — பிரிட்டிஷ் நிறுவனங்கள்
British Policy — பிரிட்டிஷாரின் கொள்கை
Budget — வரவுசெலவுத்திட்டம், நிதிநிலை அறிக்கை, பட்ஜெட்
Budget discussion — பட்ஜெட் விவாதம்
Budget Proposals — பட்ஜெட் கருத்துருக்கள்
Buffer State — இடைத்தடுப்புநாடு, நடுநிலை அரசு
Bull — ஆணை
Papal Bull — போப்பின் ஆணை
Butchery — கொடுவதை
Bureau — நிலையம்
Bureaucracy — அதிகாரவர்க்கம்
Bye-Law — துணைச்சட்டம்
Bye-Pass — புறக்கணி

C

Cabinet — அமைச்சவை
Cabinet Government — அமைச்சவை ஆட்சி, அரசாங்கம்
Cadre — பணி அமைப்பு, தரம், நிலை
Camp — தங்கல், முகாமிடல்
Camping Officer — முகாமிட்டு மேற்பார்வை செய்யும் அலுவலர்
Cancel — நீக்கு, ரத்துசெய்
Cancellation — விலக்கம்
Contonment — பாளையம், பாசறை இராணுவநகரம்
Canvass — ஆதரவுதேடல்
Cape — முனை
Cape of the good hope — நன்னம்பிக்கை முனை
Capital — மூலதனம், தலைநகரம்
Capital punishment — மரணதண்டனை
Carnatac Wars — கர்நாடகப்போர்கள்
Carte-Blanche — வரம்பிலா உரிமை

Cartridge	—	தோட்டா, துப்பாக்கிக் குண்டு, கொழுப்புக்குண்டு
Caste disabilities	—	சாதிக் குறைபாடுகள் அல்லது தடைகள்
Casting Vote	—	விருப்ப வாக்குச்சீட்டு, முடிவு கட்டும் வாக்கு, நிர்ணய ஓட்டு
Category	—	தரம், வகுப்பு, வகை, இனம்
Catholics	—	கத்தோலிக்கர்கள்
Censure	—	கண்டனம்
Central Government	—	மைய அரசாங்கம், நடுவண் அரசு
Central Executive	—	மைய அரசின் செயலாட்சிப் பிரிவு
Central Legislature	—	மையச் சட்டமன்றம்
Centralisation of Powers	—	அதிகாரக் குவிப்பு
Decentralisation of powers	—	அதிகாரப் பரவல்
Centrifugal forces	—	பிளவுபடுத்தும் சக்திகள்
Centripetal conditions	—	ஒருமைப்படுத்தும் நிலவரங்கள்
Ceremony	—	வைபவம், சடங்கு
Cession	—	ஈதல், (நாட்டைப்) பிரித்துக் கொடுத்தல்
Chairman	—	அவைத்தலைவர்
Deputy Chairman	—	துணைத்தலைவர்
Challenge	—	சவால்
Charter	—	பட்டயம், சாசனம்
Chiefs	—	குறுநிலத் தலைவர்கள்
Chief Commissioner	—	தலைமை ஆணையர்
Chief Commissionership	—	தலைமை ஆணையரகம்
Chief Executive	—	தலைமை நிருவாகி
Chief Justice	—	தலைமை நீதிபதி
Church	—	கிறித்துவக் கோயில்
Circular	—	சுற்றறிக்கை
Circumlocutous	—	சுற்றிவளைத்துக் காரிய மாற்றும்படியான
Circumnavigate	—	உலகைச் சுற்றிக்கப்பலோட்டு
Circumstances	—	சூழ்நிலைகள்
Citizens	—	குடிமக்கள்
Citizenship	—	குடிமை
Civil	—	உரிமையியல், சிவில்

Civil case — சிவில் வழக்கு
Civil Court — சிவில் தீர்ப்புமன்றம்
Civil service — சிவில் பணித்துறை
Civil War — உள்நாட்டுப் போர்
Clarification — தெளிவு, விளக்கம்
Classification — பாகுபாடு, தரம் வகுத்தல்
Classified — பாகுபடுத்திய
Clauses — கூறுகள்
Code — விதித்தொகுப்பு
Codification — சட்டத் தொகுப்பு
Coercion — நிர்பந்தம், வலுக்கட்டாயம்
Collection of Revenues — வரித்தண்டல், நிதிவசூலிப்பு
Collective responsibility — கூட்டுப் பொறுப்பு
Collectivism — பொதுவுடைமை, கூட்டுடைமைவாதம்
Communalism — வகுப்புவாதம்
Communal electorate — வகுப்புவாரித் தேர்தல் தொகுதி
Colonization — குடியேற்றம்
Colony — குடியேற்றநாடு, காலனி
Command — கட்டளை
Commander — படைத்தலைவர்
Commander-in-chief — முதற்பெரும் படைத்தலைவர் அல்லது தளபதி
Commercial monopoly — வணிக முற்றுரிமை
Commission — ஆணைக்குழு, கமிஷன், தரகு
Commissioner — ஆணையாளர்
Committee — குழு, கமிட்டி
  Ad-hoc Committee — அதற்கென அமைந்த குழு, தற்காலிகக் கமிட்டி
  Advisory Committee — அறிவுரைக் குழு
  Select Committee — பொறுக்குக் குழு
Commissioned Officer — ஆணைபெற்ற படை அதிகாரி
Common Law — பொதுச் சட்டம், நாட்டு மரபுச் சட்டம்
Communication — செய்தியறிவிப்பு
Company — வணிகநிலையம், கம்பெனி
  Joint Stock Company — பங்குமுதலீட்டுக் கம்பெனி
Compensation — ஈடு
Competence — திறமை

Competition — போட்டி
  Open Competition — பகிரங்கப் போட்டி
Comprehensive — விரிவான
Compromise — இணக்கம்
Concept — கருத்துப்படிவம்
Concession — சலுகை
Condemnation — கண்டனம்
Condition — நிபந்தனை
Conditions of Service — பணிவரையறைகள்
Confederation — கூட்டிணைவு, நெகிழ்ச்சிக் கூட்டரசு
Confeict — முரண்பாடு, போராட்டம்
Conservative — பழமைப்பற்று, கன்சர்வேடிவ்
Consolidation — ஒன்று திரட்டல்
Constituency — தேர்தல் தொகுதி
Constitution — அரசியல் அமைப்புச் சட்டம்; அரசியல் நிர்ணயச் சட்டம்
Constitutionalism — அரசியல் அமைப்புச் சட்ட முறைமைக்குட்படுகை
Context — சூழ்நிலை
Contingents — படைப்பிரிவுகள்
Contradiction — முரண்பாடு
Control — கட்டுப்பாடு
Convention — வழக்காறு, மரபு
Co-operation — ஒத்துழைப்பு, கூட்டுறவு
Co-ordination — ஒன்றிப்பு, ஒருங்கிணைப்பு
Corporation — கூட்டுநிறுவனம், கார்ப்பரேஷன், மாநகராட்சி
Corruption — ஊழல்
Council — சபை
  Legislative Council — சட்டசபை, சட்டமேலவை
  Executive Council — செயலாட்சி மன்றம்
Court — நீதிமன்றம்
Court of Cutchery — கச்சேரி முறைமன்றம்
Court of Proprietors — உடைமையாளர் மன்றம்
Court Martial — படை நீதிமன்றம்
Choultry Court — சத்திரச்சாவடி
Collectors Cutchery — தண்டல் நாயக முறைமன்றம்
Court of Directors — இயக்குநர்கள் மன்றம்
Court of Quarter sessions — காலாண்டு மீயுயர் நீதிமன்றம்

Civil Court — சிவில் கோர்ட்டு, தீர்ப்பு மன்றம்

Criminal Court — குற்றவியல் தீர்ப்பு மன்றம்

Sessions Court — அமர்வு நீதிமன்றம்

High Court — உயர் நீதிமன்றம்

Superme Court — உச்ச நீதிமன்றம், தலைமை நீதிமன்றம்

Covenant — ஒப்பந்தம்

Covenanted civil service — ஒப்பந்தச் சிவில் பணித்துறை, உடன்படிக்கைக்குட்பட்ட பணித்துறை

Crisis — நெருக்கடி

Criterion — அளவுகோல்

Criticism — திறனாய்வு

Crown — அரச நிறுவனம், அரசு

Culture — பண்பாடு

Cumulative effect — திரண்ட பயன்

Curriculam — பாடத்திட்டம்

Custom — சம்பிரதாயம், வழக்கம்

Customs duty — சுங்கவரி

D

Damage — இழப்பீடு

Deadlock — முட்டுநிலை, முடக்கம்

Debate — சொற்போர், விவாதம்

Decency — நற்பாங்கு

Sense of decency — நேர்மை உணர்வுத் தகைமை

Decentralisation — அதிகாரப் பரவல், பன்முகப் படுத்தல்

Decide — முடிவுசெய்

Decipher — விளக்கு

Decision — முடிவு, தீர்ப்பு

Declaration — உறுதிமொழி, விளம்பல்

Declaratory Act — விளம்புவகைச் சட்டம்

Decree — ஆணை

Decline — மறு, சரிவு

Defacto — நிகழ்முறையில்

Defects — குறைபாடு, குறை

Defence — காப்பு, மறுப்புரை

Defiance — கீழ்ப்படியாமை

Definition	—	வரையறை, பொருள் விளக்கம்
Defraud	—	மோசடிசெய்
Degrade	—	தாழ்த்து
Dejure	—	சட்ட முறையில்
Delegated	—	ஒப்படைவு
Delegation of powers	—	அதிகார ஒப்படைப்பு
Demarcation of powers	—	அதிகார எல்லை வரையறுத்தல்
Democracy	—	மக்களாட்சி, குடியாட்சி, ஜனநாயகம்
Demotion	—	பதவி இறக்கம்
Denial	—	மறுப்பு
Department	—	இலாகா, துறை
Dependency	—	சார்பு நாடு
Despatches	—	ஆட்சிச் செய்திகள்; அஞ்சல் விடுக்கைகள்
Despotism	—	கொடுங்கோன்மை
Development	—	வளர்ச்சி, முன்னேற்றம், பெருக்கம்
Devolution	—	அதிகாரம் வழங்கல்
Dictatorship	—	சர்வாதிகாரம்
Diplomacy	—	அரசியல் தந்திரம், திறப்பாடு
Direction	—	இயக்கம், இயக்கல்
Directives	—	இயக்கக் கட்டளைகள்
Directors	—	இயக்குநர்கள்
Discretionary powers	—	யுக்த அல்லது விருப்ப அதிகாரங்கள்
Disintegration	—	சிதைவு, சீர்குலைவு
Dispute	—	சச்சரவு, தகராறு
Disqualification	—	தகுதியின்மை
Dissent	—	இணங்கமறு
Dissolution	—	(சபையைக்) கலைத்தல்
Divine right theory	—	தெய்வீக உரிமைக் கோட்பாடு
Divided sovereignty	—	பிளவுண்ட இறைமை
Dividend	—	ஊதியப் பங்கு
Division of powers	—	அதிகாரப் பங்கீடு
Diwani	—	திவானி, வரிவசூலிக்கும் திவானி உரிமை
Doctrine	—	கோட்பாடு, கொள்கை

Doctrine of lapse — அவகாசியிலிக் கொள்கை, நாடிழக்கும் கோட்பாடு
Documents — ஆவணங்கள்
Domestic policy — உள்நாட்டுக் கொள்கை
Domicile — குடியிருப்புரிமை
Domination — ஆதிக்கம்
Dominion — குடியேற்ற உரிமை நாடு
Double Government of Bengal — வங்கத்து இரட்டை அரசாங்கம்
Draft — வரைவு
Draft Bill — வரைவு மசோதா
Drawbacks — குறைகள்
Dual Control — இரட்டைக் கட்டுப்பாடு
Duty — கடமை, அலுவல், தீர்வை, வரி

E

East Indies — கிழக்கிந்தியத் தீவுகள்
East India Company — கிழக்கிந்தியக் கம்பெனி
Ecclesiastical — சமயத் தொடர்பான
Effect — பயன்
Effective — பயனுறுதிமிக்க, முனைப்பான
Efficiency — திறமை
Election — தேர்தல்
Electorate — வாக்காளர் தொகுதி
Emergency powers — நெருக்கடி அதிகாரங்கள்
Empire — பேரரசு, சாம்ராச்சியம்
Emperor — பேரரசர்
Empower — அதிகாரமளி
Enactment — சட்டம், சட்டம் செய்தல்
Enfield Rifle — சுழல் துப்பாக்கி
Estimate — மதிப்பு, மதிப்பீடு
Epoch — முக்கியக் காலக்கட்டம்
Equality — சமத்துவம்
Era — சகாப்தம்
Europeans — ஐரோப்பியர்கள்
Exchequer — கருவூலம்
Chancellor of the Exchequer — கருவூலவேந்தர்
Executive — செயலாட்சி, செயற்குழு, நிர்வாகத் துறை
Execution — நிறைவேற்றம்

Ex-officio	—	அலுவல் நிமித்தம்
Expedition	—	படையெழுச்சி
Expert	—	வல்லுநர்
Exploitation	—	சுரண்டல்
Extraordinary Members	—	சிறப்பு உறுப்பினர்
Extraordinary Powers	—	சிறப்பு அதிகாரங்கள்
Extrajudicial	—	சட்ட, நீதிமுறைக்குப் புறம்பான
Extremism	—	தீவிரவாதம்
Evaluation	—	மதிப்பீடு

F

Factor	—	வணிகப்பேராள், காரணி
Factory	—	பண்டகசாலை
Farmers of Revenue	—	வருவாய்க் குத்தகைக் காரர்கள்
Favourable	—	அனுசரணையான
Favouritism	—	தனிச்சலுகை, ஒருதலைப் பற்று
Federalism	—	கூட்டாட்சி, கூட்டரசு
Feudalism	—	நிலமானிய முறை
Feudatory	—	திறை அரசு
Fiscal	—	வரியைப்பற்றிய
Finance	—	நிதி
Flexible	—	நெகிழ்ச்சியான
Force	—	வன்முறை, பலாத்காரம், சக்தி, படை
Formal	—	முறையணைந்த
Informal	—	முறையணையா
Forerunner	—	முன்னோடி
Fore shadow	—	முன்னறி குறிகாட்டு
Foundation	—	கால்கோள், அடித்தளம், அஸ்திவாரம்
Frame work	—	அமைப்புக் கூடு
Franchise	—	வாக்குரிமை
Franks	—	பறங்கியர்
French Revolution	—	ஃபிரெஞ்சுப் புரட்சி
Fraternity	—	சகோதரத்துவம்
Freedom	—	சுதந்திரம், உரிமை
Freedom of the Press	—	பத்திரிகைச் சுதந்திரம்
Free trade	—	தடையிலா வணிகம்

Functions — பணிகள்
Functional — செயல் சார்ந்த
Functionary — செயலர்
Fund — நிதி
Fundamental — அடிப்படையான
Fundamental Right — அடிப்படை உரிமை

G

Gazette — அரசிதழ், கெஜட்டு
Gazetteer Imperial — பேரரசுச் செய்திச் சுவடி
General — பொது, ஜெனரல், படைப் பெருந்தலைவர்
Generation — தலைமுறை
Genuine — உண்மையான
Genesis — தொடக்கம்
Glorious Revolution — மாண்புறுப் புரட்சி
Govern — பரிபாலி, ஆட்சிசெய்
Governance — பரிபாலனம்
Governor — ஆளுநர்
Lieutenant Governor — துணை ஆளுநர்
Government — அரசாங்கம்
Self Government — சுயாட்சி
Governor General — தலைமை ஆளுநர், கவர்னர் ஜெனரல்
Governor General in Council — மன்றத்துடன்கூடிய தலைமை ஆளுநர்
Grade — தரம்
Gradual — படிப்படியாக
Grants — மானியங்கள், கொடை
Grants-in-aid — உதவிக் கொடை
Gratuity — பணிக் கொடை
Grievances — (மனக்) குறைகள்
Guarantee — பொறுப்புறுதி, உத்திரவாதம்
Guardian — காப்பாளர்
Guidance — வழிகாட்டல்
Gubernatorial — ஆளுநர் அல்லது கவர்னருக்கு உரிய

H

Habeas Corpus — ஆளுரிமைக் காப்பு

Habeas Corpus Writ of — ஆளுரிமைக் காப்புக் கட்டளை, ஆட்கொணர் ஆணை
Hall-mark of Culture — பண்பாட்டு உயர்மாற்றுக்குறி
Harem — அந்தப்புரம்
Harmonious — இசைவான
Head quarters — தலைமையிடம்
Head of the State — அரசின் தலைவர்
Heads of departments — துறைத் தலைவர்கள்
Heinous crime — கொடுங் குற்றம்
Hereditary — வழிவழியாக, பரம்பரையான
Heritage — மரபுரிமை
Heterogeneous — பலவகைப்பட்ட
High seas — ஆழ்கடல்
High treason — அரசழிம்பு, பெருந் துரோகம்
Hierarchy — படிநிலை அமைப்பு, படிவரிசை, அதிகார வரிசை
Hindustan — இந்துஸ்தானம்
Hindu Law — இந்துச் சட்டம்
His Majesty's Government — மாட்சிமைதங்கிய அரசரின் அரசாங்கம்
Her Majesty, the Queen Empress — மாட்சிமைதங்கிய அரசிப் பேரரசி
Homogeneity — ஒரே சீரான அமைப்பு, ஓரினத் தன்மை
Home Government — தாய்நாட்டு அரசாங்கம், தலைமை இடத்துத் தாயக அரசாங்கம்
Hostilities — பகைமைச் செயல்கள்
House of Commons — பொதுமக்கள் அவை, காமன்ஸ் சபை
House of the People — மக்கள் சபை
House of Lords — பிரபுக்கள் அவை
Humanitarianism — மனிதாபிமானம்

I

Idea — கருத்து, எண்ணம்
Ideal — உயர் இலட்சியம்
Idealism — இலட்சியவாதம்
Illegal — சட்டத்திற்கு முரணான
Illegitimate — முறையற்ற
Immigration — குடியிறக்கம், குடிபுகல்

Immunity — சட்ட விலக்களிப்பு
Impartial — நடுநிலை, பாரபட்சமற்ற
Impeachment — அரசியல் துரோகக் குற்றச் சாட்டு, மன்பகைக் குற்ற விசாரணை
Imperial — பேரரசுக்குரிய
Imperium — ஏகாதிபத்தியம்
Implementation — நிறைவேற்றம்
Implied powers — பொதிந்துள்ள அதிகாரங்கள்
Improvement — மேம்பாடு, முன்னேற்றம்
Incapacity — திறமையின்மை
Incoherent — முன்பின் தொடர்பற்ற
Independence — விடுதலை, சுதந்திரம்
India office — இந்திய அலுவலகம்
India House — இந்திய மன்றம்
Indianisation — இந்திய மயமாக்கல்
Indian Councils Act — இந்தியச்சட்டசபைச்சட்டம், இந்தியக் கவுன்சில்கள் சட்டம்
Indian Civil Service — இந்திய சிவில் பணித்துறை
Indian Administration — இந்திய நிர்வாகம்
Indian National Congress — இந்தியத் தேசியக் காங்கிரஸ்
Indian unrest — இந்தியக் கலக்கம், அமைதி இழந்த இந்தியா
Infiltration — ஊடுருவல்
Infanticide — சிசுவதை
Inheritance — வழியுரிமையாகப் பெறல்
Initiative — துவக்க உரிமை
Infunction — தடைக் கட்டளை
Insecurity — பாதுகாப்பின்மை, நிலை பேறற்ற
Institution — நிறுவனம்
Intimidation — அச்சுறுத்தல்
Integrity — நேர்மை
Interference — தலையீடு
Interlopers — அத்துமீறி நுழைவோர்
International Law — பன்னாட்டுச் சட்டம்
Inter State — மாநிலங்களுக்கிடையே
Ipso Facto — அது காரணமாகவே
Irregularities — முறைகேடுகள்

Irresponsible — பொறுப்பற்ற
Isolated — தனித்த, தனிப்படுத்தப்பட்ட

J

Joint Responsibility — கூட்டுப் பொறுப்பு
Joint Session — கூட்டு அமர்வு
Journals — செய்தி இதழ்கள்
Jesuits — ஏசு சங்கத்தார்
Jingoism — குறுகிய அல்லது போலி நாட்டுப்பற்று
Judge — நீதிபதி
Judge Advocate — வழக்குரை நடுவர்
Judgement — தீர்ப்பு
Judicial proceedings — நீதிமன்ற நடவடிக்கைகள்
Judicial review — நீதிப் புனராய்வு
Judiciary — நீதித் துறை
Junior — இளநிலை
Jurisdiction — அதிகார எல்லை, ஆட்சிவரம்பு
Jurist — சட்ட இயல் அறிஞர்
Jury — தீர்ப்புச் சான்றுளர் ஆயம்
Justice of the Peace — அமைதி காண் நீதிபதி
Justification — நியாயம் காட்டல்

K

Kazi — முகமதிய குரு, காசியார்
King — மன்னன், அரசன்
King's Council — அரசர் ஆலோசனைச் சபை
King-in-Council — ஆட்சிமன்றத்துடன் கூடிய மன்னர்
Kingdom — அரசு

L

Lacuna — குறைபாடு
Laissez-Faire — அரசின் தலையிடாக் கொள்கை
Land mark — முதன்மைப் பொருள்
Land revenue — நில வருவாய், நில வரி
Land Tenure — நில உரிமை முறை
Law — சட்டம்
Law and Order — சட்டம் மற்றும் அமைதி

Leadership — தலைமை

Legal — சட்டஞ்சார்ந்த

Legal Sovereignty — சட்டமுறையான இறைமை

League — சங்கம்

Lease — குத்தகை

Legislation — சட்ட ஆக்கம், சட்டம் இயற்றல்

Legislative function — சட்டமியற்றும் பணி

Legislative Assembly — சட்டப் பேரவை

Legislative Council — சட்டசபை, சட்டமேலவை

Legislature — சட்டமன்றம்

Letter patent — பற்றுத் திருமுகம், உரிமைப் பட்டயம், அரசுப்பட்டயத் தனியுரிமை

Liabilities — பொறுப்புகள்

Libel — அவதூறு

Liberalism — முற்போக்குவாதம்

Liberals — முற்போக்குவாதிகள்

Liberty — உரிமை

Licence — உரிமம்

Licensing power — அனுமதிக்கும் அதிகாரம்

Limit — வரம்பு, எல்லை

Limitation — காலக்கெடு

Lingua franca — பொதுமொழி

Literary development — இலக்கிய வளர்ச்சி

Local Institutions — ஸ்தல நிறுவனங்கள், உள்நாட்டு ஆட்சி நிறுவனங்கள்

Local Self-Government — ஸ்தல சுய ஆட்சி, தன்னாட்சி அரசாங்கம்

Local Officer — ஸ்தல அதிகாரி

Lords — பிரபுக்கள்

Lord Chancellor — சான்சலர் பிரபு

M

Machine — இயந்திரம், பொறி

Machine Administrative — நிர்வாக இயந்திரம், ஆட்சிப் பொறி

Magistrate — மாஜிஸ்டிரேட், குற்றவியல் நீதிபதி

Majority — பெரும்பான்மை, மெஜாரிட்டி

Malafide	—	தீயஎண்ணத்தில்
Management	—	மேலாண்மை
Mandamus, Writ of	—	செயலுறுத்தும் நீதிப் பேராணை
Mandate	—	அதிகாரக் கட்டளை
Manoeuvre	—	தந்திரம்
Mayor	—	நகரத்தந்தை, மேயர்
Mayor's Court	—	நகரத்தந்தை தீர்ப்பு மன்றம்
Market	—	அங்காடி, சந்தை, மார்க்கெட்
Means	—	சாதனங்கள்
Means of Communication	—	போக்குவரத்து வசதிகள்
Meeting	—	கூட்டம்
Member	—	உறுப்பினர்
Member, ordinary	—	சாதாரண உறுப்பினர்
Law Member	—	சட்ட உறுப்பினர்
Merchants	—	வர்த்தகர்கள், வியாபாரிகள்
Maritime Supremacy	—	கடலாதிக்கம்
Military	—	இராணுவம், படைத்துறை
Company's Military Service	—	கம்பெனியின் இராணுவப் பணித்துறை
Minimum Qualification	—	குறைந்தபட்சத் தகுதி
Minister	—	அமைச்சர், மந்திரி
Prime Minister	—	பிரதம அமைச்சர்
Council of Ministers	—	அமைச்சரவை
Ministerial Responsibility	—	அமைச்சுப் பொறுப்பு
Ministry	—	அமைச்சகம்
Minority	—	மைனாரிட்டி, சிறுபான்மையோர்
Minutes	—	நிகழ்ச்சிக் குறிப்புகள்
Minute Book	—	நிகழ்ச்சிக் குறிப்பேடு
Minute of Dissent	—	மாறுபாட்டுக் கருத்துக் குறிப்பு
Misbehaviour / Misconduct	—	தீய நடத்தை
Miscarriage of justice	—	நீதிப் பிறழ்வு
Misdemeanours	—	ஒழுக்கக் கேடுகள்
Missionaries	—	மிஷனரிகள், சமயப் பரப்புக் குழுவினர்
Modern India	—	நவீன இந்தியா
Monarchy	—	முடியரசு

Monopoly	— முற்றுரிமை
Commercial monopoly	— வணிக முற்றுரிமை
Moral	— ஒழுக்கம், தார்மீகம்
Moral control	— தார்மீகக் கட்டுப்பாடு
Moral progress	— ஒழுக்க, தார்மீக வளர்ச்சி
Moral support	— மன ஆதரவு
Morale	— மனவொழுங்குறுதி
Motion	— தீர்மானம்
Movement	— இயக்கம்
National Movement	— தேசிய இயக்கம்
Multi National State	— பல்லின நாட்டரசு
Municipality	— நகராட்சி, முனிசிபாலிட்டி
Muslim Law	— முஸ்லிம் சட்டம்
Mutiny	— கலகம்
Sepoy Mutiny	— படைவீரர் கலகம், சிப்பாய்க் கலகம், (முதல் விடுதலைப் போர்)

N

Nation	— நாடு, தேசம், நாட்டினர்
Nationalism	— தேசியம், தேசியஉணர்வு, நாட்டுணர்ச்சி
Nationality	— நாட்டினம், தேசிய இனம்
National feeling	— தேசிய உணர்வு
Natives	— சுதேசியினர்
Native chiefs	— சுதேசித் தலைவர்கள்
Native princes	— சுதேசிச் சிற்றரசர்கள், நாட்டுச் சிற்றரசர்கள்
Native rule	— சுதேசி ஆட்சி
Native States	— சுதேசி அரசுகள்
Navy	— கடற் படை
Naval battle	— நாவாய்ப் போர்
Naval power	— நாவாய் வலிமை
Navigation	— நீர்வழிச் செலவு, கடற் பயணம், கப்பலோட்டுதல்
Negative vote	— மறுதலைவாக்கு, எதிர்மறை ஓட்டு
Neutral	— நடுநிலை
Newspapers	— செய்தித்தாள்கள்
Nizam	— நிஜாம்

Nizamat — நிஜாமத்
No confidence — நம்பிக்கையின்மை
Nominal Executive — பெயரளவிலான செயலாட்சி
Null and Void — முற்றிலும் செல்லாது

O

Oath — உறுதிமொழி
Obligation — கடப்பாடு
Occidental — மேற்குலகுக்குரிய
Office — அலுவலகம்
Officer — அதிகாரி, அலுவலர்
Oligarchy — சிறுகுழுவாட்சி, (செல்வந்தராட்சி)
Operation — செயற்பாடு
Opposition, the — எதிர்க்கட்சி
Ordinance — அவசரச் சட்டம்
Ordinary member — சாதாரண உறுப்பினர்
Organisation — அமைப்பு
Oriental — கீழைநாடுகளுக்குரிய
Original jurisdiction — நேரடிஆய்வு அதிகாரம்
Over-lordship — ஆதிபத்தியம்
Over-rule — ஒதுக்கித்தள்ளு
Over-riding power — மீறும் அல்லது தள்ளும் அதிகாரம்

P

Paramount — தலையாய
Paramountcy — உயர்வீறிறைமை, தலைமை அதிகார நிலை
Paramount Power — உயர் வீறிறைமைபெற்ற சக்தி, தலைமை அதிகாரச் சக்தி
Pardon — மன்னிப்பு
Parity of votes — சமவாக்கு நிலவரம்
Parliament — பாராளுமன்றம், நாடாளு மன்றம்
Partition — பிரிவினை
Party — கட்சி
Party Government — கட்சிமுறை அரசாங்கம்
Passive resistance — சாத்வீக எதிர்ப்பு
Passive loyalty — முனைப்பற்ற பற்றுறுதி

Patriotism — நாட்டுப்பற்று
Patronage — ஆதரவு, முற்சலுகை, பேராதரவு
Pax Britanica — பிரிட்டானிய அமைதி
Peace — அமைதி
Penalty — தண்டனை
Pension — ஓய்வூதியம்
Permanent — நிலையான
Permanent Revenue Settlement — சாசுவத நிலவரித் திட்டம், நிலையான நிலவரி ஏற்பாடு
Persecution — துன்புறுத்தல்
Personnel — பணியாள் தொகுதி
Persuasion — இணங்கச் செய்தல்
Phantom ruler — வீரியமற்ற ஆட்சியாளர்
Policy — கொள்கை
Policy of Association — உடன் இணைத்துக் காரிய மாற்றும் கொள்கை, கூட்டாலோசனைக் கொள்கை
Politics — அரசியல்
Political awakening — அரசியல் விழிப்புணர்ச்சி
Poltical Party — அரசியல் கட்சி
Political Traditions — அரசியல் மரபுகள்
Position — நிலை
Positive action — திட்டமான நடவடிக்கை
Positive terms — நேர்முனைச் சொற்கள்
Power — ஆற்றல், அதிகாரம், சக்தி
Powers of Patronage — ஆதரவு அதிகாரங்கள்
Practice — செய்முறை
Preamble — முகப்பு, அணிந்துரை
Precedent — முன்நிகழ்வு ஆதாரம்
Prerogative — தனிச் சிறப்புரிமை
Presidency — மாகாணம்
President — தலைவர்
Press — அச்சு, செய்தித்தாள், அச்சகம்
Pressure groups — செல்வாக்குக் குழுக்கள், அக்கறைக் குழுக்கள்
Principality — சிற்றரசு நாடு, குறுநில அரசு
Principle — நியதி
Privy Council — அரசப் பேரவை, பிரிவி கவுன்சில்

Lord Privy Seal — முத்திரைநாயகம்
Problem — பிரச்சினை, சிக்கல்
Procedure — நடைமுறை
Proceedings — நடவடிக்கைகள்
Process — செயல்முறை
Proclamation — பிரகடனம், பேரறிக்கை
Progress — முன்னேற்றம், தேர்ச்சி
Promotion — பதவி உயர்வு
Proposal — கருத்துரு
Propriety — பொருத்தம், ஒழுங்கு
Protege — காப்புப்படுநர்
Province — மாகாணம்
Provincial Government — மாநில, மாகாண அரசாங்கம்
Public opinion — பொதுமக்கள் கருத்து
Purpose — நோக்கம், குறிக்கோள்

Q

Qualification — தகுதி
Quasi judicial — நீதிமன்ற முறைபோன்ற, நீதிமுறைப் போல்வு
Quasi legislative — சட்டமன்ற முறைபோன்ற, சட்டமுறைப் போல்வு
Query — வினா
Quorum — குறைவெண் வரம்பு, கோரம், தேவையான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை
Quota — வீதப்பங்கு

R

Race — இனம், மக்களினம்
Racial superiority — உயரினத் தன்மை
Radicals — தீவிரவாதிகள்
Radicalism — தீவிரவாதம்
Raison d' etre — இருப்புக் காரணம்
Rapacious — கொடுங்கொள்ளையிடும்
Rapproachment — இணைந்துற வாழல்
Rationalism — பகுத்தறிவுக் கோட்பாடு, முற்போக்கு அறிவுடைவாதம்
Raw materials — மூலப்பொருள்கள், கச்சாப் பொருள்கள்

React	— எதிர்த்துச் செயலாற்று
Reaction	— எதிர்விளைவு
Reactionary	— பிற்போக்காளன், பிற்போக்கான
Recall	— பதவியிலிருந்து திருப்பி அழைத்தல், மீட்பு
Recognition	— ஏற்பு
Reconciliation	— இணங்கச் செய்தல், சரிக்கட்டுதல்
Record	— பதிவு, பதிவுக்கட்டு
Recruitment	— ஆட் சேர்ப்பு
Red tapism	— கால தாமதத்தைத் தோற்றுவிக்கும் சிவப்பு நாடாமுறை
Re-establish	— திரும்ப நிலைநாட்டு
Reference	— ஆதாரம், குறிப்பிடல்
Referendum	— குடியொப்பம்
Reform Movement	— சீர்திருத்த இயக்கம்
Refuse	— மறுத்தல்
Refute	— தவறெனக் காட்டு
Regal	— அரசனுக்குரிய
Regain	— திரும்பப்பெறுதல்
Regime	— ஆட்சிமுறை, ஆட்சிக்காலம்
Regency Government	— காப்பாளர் அரசாங்கம்
Regiment	— படைப்பகுதி
Regionalism	— வட்டாரத்துவம்
Register	— பதிவுசெய்,பதிவேடு
Regulations	— ஒழுங்குமுறைகள்
Regulated Company	— ஒழுங்குபடுத்தப்பட்ட கம்பெனி
Reign of terror	— பயங்கர ஆட்சி
Reinforcement	— படைவலுப்பெருக்கு
Remedy	— தீர்வு, பரிகாரம்
Renaissance	— மறுமலர்ச்சி
Repeal	— சட்ட இரத்து
Report	— அறிக்கை
Representation	— முறையீடு
Representative	— பிரதிநிதி
Representative Government	— பிரதிநிதித்துவ அரசாங்க முறை
Representative Institutions	— பிரதிநிதித்துவ நிறுவனங்கள்

Republic — குடியரசு
Repudiation — நிராகரிப்பு
Reservation — (இட)ஒதுக்கம்
Resident — காப்பாளர்
Residuary Powers — எஞ்சிய அதிகாரங்கள்
Resign — இராசினாமா செய்தல்
Resolution — தீர்மானம்
Reply — பதில்
Removal — நீக்கம்
Responsible — பொறுப்புள்ள
Responsible Government — பொறுப்புள்ள அரசாங்கம், ஆட்சி
Responsive — (மக்கட் குரலுக்கு) செவிசாய்க்கும், வளைந்துகொடுக்கும், இணங்கிச் செல்லும்
Restoration — முன்னிலை மீட்சி
Returns — பலன்கள்
Revenue administration — நிதி திரட்டும் நிர்வாகம்
Revenue settlement — வருவாய் நிர்ணயம்
Review — மறுநோக்கு, புனராய்வு
Revision — மறுஆய்வு
Revisionists — திருத்த வாதிகள்
Revival — புத்துயிர்
Revocation — அதிகாரத்தைப் பறித்தல்
Revolt — கலகம்
Revolution — புரட்சி
Rights — உரிமைகள்
Ring-fency Policy — சுற்றரண் காப்புக்கொள்கை
Rivalry — கடும்போட்டி
Royal absolutism — மன்னர் சர்வாதிகாரம்
Rule of Law — சட்டத்தின் ஆட்சி, சட்ட ஆதிக்கம்

S

Sacredness of property — சொத்தின் புனிதத்தன்மை
Sadar-Diwani Adalat — சாதர் திவானி அதாலத்
Salary — சம்பளம்
Sanad — ஆணை, கொடைப்பத்திரம், பட்டயம்
Sanction — ஒப்பளிப்பு, அனுமதித்தல்

Scheme	—	திட்டம்
Scope	—	எல்லை, நோக்கம்
Scrutiny	—	கூர்ந்தாய்தல்
Searching problems	—	சோதனைமிக்க பிரச்சினைகள்
Seat	—	இடம், இருக்கை
Secret Committee	—	இரகசியக் குழு
Secretary	—	செயலர், செயலாளர்
Secretary of State for India	—	இந்தியாவுக்கான அரசுச் செயலர் இந்தியா மந்திரி
Security	—	பாதுகாப்பு
Separation of Powers	—	அதிகாரப் பிரிவினை
Selection	—	தேர்வு
Sentiment	—	உணர்ச்சி
Service	—	பணி, பணித்துறை
Seniority	—	முதுநிலை
Session	—	கூட்டத்தொடர், அமர்வு
Settlements	—	குடியேற்றங்கள்
Sheriff	—	மாநகர மணியக்காரர், ஷெரீப், கொத்தவால்
Signature	—	கையொப்பம்
Significant	—	குறிப்பிடத்தக்க
Social Reforms	—	சமுதாயச் சீர்திருத்தங்கள்
Society	—	சமுதாயம்
Sovereignty	—	இறைமை
Territorial Sovereignty	—	இட இறைமை
Special case	—	தனி வகையாக
Special cases	—	தனிப்பட்ட வழக்குகள்
Special provision	—	தனி ஏற்பாடு
Sphere of influence	—	ஆதிக்க மண்டலம், அக்கறைச் செல்வாக்கு மண்டலம்
Spice Islands	—	நறுமணத் தீவுகள், இலவங்கத் தீவுகள்
Spiritualisation in Politics	—	அரசியலில் ஆன்மீகம்
Spoils	—	ஆதாயக் கொள்ளைப் பொருள்கள்
Standard	—	தரம்
Standard of life	—	வாழ்க்கைத் தரம்
State	—	அரசு
Statesman	—	அரசியல் மேதகை
Statesmanship	—	அரசியல் வல்லமை, அரசியல் மேதகைமை

Statute — சட்டம்
Statutory Powers — சட்டபூர்வ அதிகாரங்கள்
Stock — இருப்பு, மூலதன இருப்பு
Strangle hold — ஆதிக்கப்பிடி
Structure of the Government — அரசாங்கக் கட்டுமானம்; அமைப்பு, கட்டுக்கோப்பு
Subject — பிரஜை, இனம்
Subject Country — அடிமைப்படுத்தப்பட்டுள்ள நாடு
Submissive rule — பணிவான, அடக்கமான ஆட்சி
Subordinate — சார்நிலை
Subordinate Isolation — தனிமைச் சார்புநிலை
Subordination — கீழ்ப்படிதல்
Subsidiary Alliance — துணைப்படைத் திட்டம்
Succession — வழியுரிமை
Successor — வழித்தோன்றல்
Superintendence — கண்காணிப்பு
Superior — மேல்நிலை வாய்ந்த
Supersede — ஒதுக்கித் தள்ளு, மீறிச் செயல்படு
Supervision — மேற்பார்வை
Supplementary questions — துணைக் கேள்விகள்
Supreme Court — உச்ச நீதிமன்றம், தலைமை நீதிமன்றம்
Suspicion — சந்தேகம்
Suspension — சிறுகாலப் பதவி நீக்கம், தாற்காலிக நீக்கம்
Suzerainty — மேலாதிக்க இறைமை
System — முறை

T

Talent — தனித்திறமை
Target — இலக்கு
Tariff — சுங்கவரி
Tax — வரி
Taxation Policy — வரி விதிப்புக் கொள்கை
Technique — உத்தி; நுணுக்க, நுட்பச் செயல்முறை
Tension — கொந்தளிப்பு
Tenure — பதவிக்காலம்

Term of office — பணிபுரி காலம்
Territory — நாடு, நாட்டின் பகுதி
Test — தேர்வு, சோதனை
Theory — கோட்பாடு
Timelimit — காலக்கெடு
Timid boldness — சாந்தமான வீரம்
Titular — பெயரளவிலான
Trade — வர்த்தகம்
Toleration — சகிப்புத் தன்மை
Tradition — மரபு
Training — பயிற்சி
Transfer of Power — அதிகார மாற்றம்
Treason — அரசழிம்பு, இராசத்துரோகம்
Treaty — உடன்படிக்கை
Trial — வழக்கு விசாரனை
Tribunal — தீர்ப்பாயம், டிரிபியூனல்
Trust — நம்பிக்கை, நம்பகம், நம்பகப் பொருள்
Turning Point — திருப்ப முனை, திரும்பு கட்டம், திருப்பம்
Tyrannical rule — கொடுங்கோன்மையான ஆட்சி

U

Unanimous — ஒருமுகமான
Unavoidable — தவிர்க்கமுடியாத
Un conditional — நிபந்தனையற்ற
Un Constitutional — அரசியலமைப்புக்குப் புறம்பான, அல்லது பிறழ்ச்சியான
Unification of India — இந்திய ஐக்கியம்
Uniform — ஒருபடித்தான, ஒரே மாதிரியான
Unit — அலகு, யூனிட், பகுதி
Unitary State — ஒருமுக அரசு
United Company — ஐக்கியமாக்கப்பட்ட கம்பெனி, ஒருமுக வணிக நிறுவனம்
Universal — உலகேற்புடைய, முழு மொத்தமான
Upper House — மேல் சபை

Utilitarianism	— பயன்பாட்டுத் தத்துவம், பயன்கருது தத்துவம்
V	
Vacant seats	— காலி ஸ்தானங்கள், காலி இடங்கள்
Vacuum of Power	— அதிகாரச் சூனியம், வெற்றிடம்
Valid reason	— நியாயமான காரணம்
Vary	— வேறுபடு
Vested interests	— சார்ந்த நலங்கள், உரிமைக் கும்பல்கள்
Veto	— தடுப்பாணை, மறுப்பாணை
Veto Power	— மறுப்பதிகாரம்
Viceroy	— வைசிராய், அரசப் பிரதிநிதி
View point	— நோக்கநிலை, காணும் அடிப்படை, நோக்கு
Violation of law	— சட்ட மீறல்
Virtue	— நற்பண்பு
Volunteer Corps	— தொண்டர்படை
Vote	— வாக்குச் சீட்டு
Voting right	— வாக்களிக்கும் உரிமை
W	
War	— போர்
War indemnity	— போர் இழப்பீட்டுத் தொகை
War of Independence	— சுதந்திரப் போர்
War of Succession	— அரியாசனப் போர், வாரிசுரிமைப் போர்
Warrant	— சான்றாணை, வாரன்ட்
Ways and means	— வழிவகைகள்
Western Education	— மேற்கத்தியக் கல்வி முறை
Withholding Power	— நிறுத்திவைக்கும் அதிகாரம்
Work load	— பணிச்சுமை
Writ	— நீதிப்பேராணை, கட்டளை, ஆணை
Writ of Prohibition	— தடை ஆணை
Wrongful	— முறையற்ற
Z	
Zamindari System	— ஜமீன்தாரி முறை
Zone	— மண்டலம்